நல்லாப்பிள்ளை
ஸ்ரீ மகா பாரதம்

இரண்டாவது

பி. நா. கி. பிரதர்ஸ்,
சென்னை.

உ

கணபதிதுணை.

மகாபாரதம்.

நல்லாப்பிள்ளையவர்களியற்றியது.

இரண்டாவது.

இஃது
திரிசிரபுரம்
அமிர்தம்பிள்ளை குமாரராகிய
எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
அ. சுந்தரநாதபிள்ளை அவர்களால்
பரிசோதித்து,

மதுரைஜில்லா சிவகங்கை ஸப்டிவிஷன்
சிறுவயல்ஜமீன்தாரவர்களாகிய
முத்துராமலிங்கத்தேவர்
அவர்களால் அச்சிட்டதை,
ஷியார் பௌத்திரர் மைனர்
ஸ்ரீமான் முத்துராமலிங்கத்தேவரவர்கள்
கார்டியன்
பிர்மஸ்ரீ கோபாலையரவர்கள் உத்திரவின்படி

சென்னை, பிடாரித்தாங்கல்
நாராயணசாமி முதலியார் குமாரர்
சிதம்பரமுதலியாரவர்களது
வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகன சகாப்தம் ௧அ௩௪-ல் நிகழும்
விரோதிகிருதுஹு மிதுனரவி.
1911.
இதன் விலை ரூபா-15.

ஆறுவது,

வீட்டுமபருவம்.

அண்டகோசவடுக்குரைத்தசருக்கம்.

* மேவருஞானனந்தவெள்ளமாய்விதித்தோனுதி
மூவருமாகியந்தமூவர்க்குமுதல்வனுகி
யாவரும்யாவுமாகியிறைஞ்சுவாரிறைஞ்சப்பற்ப
ரேவருமாகிநின்றசெங்கண்மாலெங்கள்கோவே. (க)

சேயனமொலிக்குங்கஞ்சத்தேமலர்வாவிசூழ்ந்த
தூயநன்னுடனுண்டுசுருதிநூல்தேர்ந்தவைசம்
பாயனர்புகன்றவெல்லாமகனுறப்படுத்திமீட்டுங்
காயனலுமிழ்செங்கண்ணுன்கருணேர்கலுழ்ந்துசொல்வான். (உ)

மெய்த்தவவேடந்தானேர்மேனியாயெடுத்தவாபோற்
சுத்தவான்கருணையாலென்றுயரறத்தோன்றுங்கோவே
பொய்த்தவறுறையுளானும்பொய்யிலாமெய்மையானு
மெத்திறத்தமரிழைத்தாருளவெலாமியம்புகென்றான். (௩)

வாங்கியசிலைவில்வேந்தேமற்றிதுகாறுங்கூறும்
பாங்கெலாமுரைப்பராதிபஞ்சகமென்றேமேலோர்
தீங்கறவினிமேல்வான்போர்செய்தபஞ்சகத்தினீத்த
காங்கயனியற்றலெல்லாங்கழறுதுங்கேண்மினென்றான். (௪)

கற்றவர்பலருங்கல்லாக்கயவருமிரண்டுபற்று
மற்றவர்பலருங்காணுமரிதனையெதிராமுன்னங்
கொற்றவர்பலருங்காலைக்கடன்முறைகுறித்துமுற்றி
யுற்றடிவணங்கிமீண்டுமுறுபடையேந்திநின்றார். (௫)

ஈங்கிவைநிகழமுன்னரீன்றவர்போரிற்செல்லத்
தாங்கியதுயரத்தோடத்தினபுரியளித்தசெம்மல்
வீங்கியதோள்கள்வாடவிளைவதேதென்றுமாழ்கி
யாங்கவன்பிதாவைச்சிந்தைசேர்த்தினனவனும்வந்தான். (௬)

மருங்குறநின்றவேதமாதவனடியிற்றாழ்ந்து
தருங்கடனியற்றிமுத்தின்றவிசினிலிருத்திச்சொல்வா
னருந்தவரரசேமைந்தரமர்முயன்றகறலாலிங்
கிருந்திலன்செலவுந்தேறேன்விழிப்புலனிலாதசீரால். (௭)

என்செயலிருந்தவாறிங்கிதுவெனவரதனீசன்
றன்செயறவிராதுள்ளபடிதவிர்த்திடுமாறுண்டோ
வன்செயுமனத்தானேரும்போரினைவாய்ப்பநோக்கப்
பொன்செய்தோளரசேகண்கள்புலன்செயும்போதுகென்றான். (அ)

வற்கலைமுனிவன்கூறமாதிரங்கடந்தபேரோன்
சொற்குறிப்பதுமுன்கண்கள்பெற்றுளந்துணுக்குற்றேங்கிக்
கற்படுமலையும்பாருந்தருக்களுங்கணக்கினல்லோர்
சொற்படுமுயிருநோக்கித்தாதையைத்தொழுதுசொல்வான். (கூ)

பிறந்தநாளவதிதொட்டிப்பெற்றியாற்றொலைத்தேன்கால
மிறந்தகணொளியெய்தலென்பயனியலும்வெம்போர்ப்
பறந்தலைகாணவாற்றேன்பற்றுலகியலுநோக்கேன்
அறந்தவாமுனியேமுன்போலாவதேநேர்வதென்றான். (க௦)

தகைமைசான்முனியத்தன்மைதந்தபின்மகவைநோக்கி
யிகலுடைமுயற்சியாவுந்தெரிந்துனக்கியம்புமாற்றான்
புகாறுசஞ்சயப்பேர்புனைந்தவன்றனக்குஞான
மகல்விழியளித்தோநாடோறவன்சொலவுணர்தியென்றான். (கக)

தோற்றவர்வெல்வர்வென்றோர்தோற்பரீதுணருமாறன்
றேற்றபோதமையந்தோறுமிரங்கறேர்ந்திருத்தியென்றே
சாற்றியாதரங்கள்கூறித்தனையரைத்தெளியலாண்மைப்
பேற்றினையடைவோர்நீதிபிழைத்திடாதவரென்றோர்தி. (கஉ)

எனச்சிலமொழியுநல்கியிகல்பலமுகத்தாலேற்றோர்
மனக்கருத்தனைத்துந்தேறுமாறுடன்மெய்ப்பாலூறு
தினைத்துணையளவுமேதிசெறாவரஞ்சஞ்சயற்கு
முனித்தலையளித்துமீண்டுசூழல்போய்முன்னினானே. (கங)

பராசரனளித்தசெம்மலகன்றபின்பாரிற்றோன்றுஞ்
சராசரமனைத்துமேத்துஞ்சஞ்சயன்றன்னைநோக்கிச்
சுராசரர்பொருதவாபோற்சுதாசமர்முனையுஞ்சூழற்
கராசலமனையாயெங்கணென்றனன்கண்களில்லான். (கச)

நாவலந்தீவிலெல்லாநன்மையுமெய்துந்தீர்த்தம்
பூவலம்வந்தோரேத்துஞ்சிமந்தபஞ்சகமாம்பொய்கை
கேவலமன்றுபாங்கர்கிளர்குருக்கேத்திரத்தி
னாவலிற்பொருவார்சென்றாரிருதிறத்தவருமென்றான். (கரு)

நரபதிமீண்டுஞ்சொல்வானாவலந்தீவர்மாறுஞ்
சுரபதிமுதலாம்வானோர்பதிகளும்புணரிசூழ்ந்த
விரிபதப்பொழில்களேழுமுலகமும்விதிர்த்தவெல்லாஞ்
சிரபதியனையாயெற்குத்தெளிவுறப்புகறியென்றான். (கசு)

மையறுமகத்தோன்கேட்பவானைகைபுரிந்துநோக்கிப்
பொய்யறுமுளத்தோன்சொல்வான்புரவலர்பெருமகேண்மோ
செய்யவொண்மலரோன்செய்தவொருபிரமாண்டந்தேற
வொய்யெனவுணர்திமுன்னோருரைத்தநூன்முறையையென்றே. (௧௭)

வேறு.

முட்டையெனத்திகழ்வதண்டமந்தவண்டமுக்கூறுயேழ்பிலமோர்கூறுய் நிற்கு, மட்டறுமிப்புவியொன்றுமேலொன்றுகவகுப்பானமருங்குலகமாறுவைகு, மிட்டபுவியோருலகின்விருத்திநின்மாட் டிசைப்பதுகேளண்டமதிற்சுவர்கொண்டிப்பாற், கட்டளையாயிரவியெழுதிகிரிவெற்பின்கடலளவுமிரும்புவிநின் கருத்திற்கொள்ளே. (௧௮)

ஆழிமால்வரையகத்துட்சொன்னபூமியையிரண்டாங்கோடிகளோசனையாண்டிப்பாற், பாழிமால்வரையொன்றுசூழ்ந்துநிற்கும்பருப்பதத்துக்கப்புறத்திற்பரவைநன்னீர், தாழிலக்கமறுபதுடனுன்கதாகச்சாற்றுமோசனையகலந்தனக்கப்பாலிற், பூழிதருபுவிகடலின்றொகையேசொல்வர் புட்கரமென்றுரைத்த பெயர்புனையுந்தீபம். (௧௯)

அனையதீவினைவளையும்வரையொன்றிப்பாலதிற்பாதியோசனைபாலுததியிண்டு, புனைகொள்கிரவுஞ்சமெனுந்தீவுமெல்லைபுகல்கணக்குமத்தொகையேபொருப்பொன்றேங்குந், தனையகலிற்றதிவேலைபதினறென்றேசாற்றிலக்கயோசனையாந்தனக்குத்தீவ, நினைவுறுகோமேதகமத்தொகையேபாருணீணுகமதனைவளைந்திருத்தலோர்வாய். (௨௦)

நெய்பரவையோசனையெட்டிலக்கமாகுநிகரறுசான்மலித்தீவத்தொகையேயிப்பாற், பைவருமால்வரைவளையுமதற்கிப்பாலிற்பரவைசுரமாமிலக்கவகலநான்கா, முய்தருபாற்குசைத்தீவுத்தொகையேவெற்பொன்றேங்குமதன்குடபுறத்தினுததியிக்கு, மெய்வருமோசனையிலக்கமிரண்டாந்தீவம்விளங்கியசாமுகங்கடலின்விரிவாமன்றே. (௨௧)

அதனைவளைந்திடுமோங்கனீங்கியிப்பால்யாமுணருமுவர்க்கடலோசனையிலக்கம், புதனனையாயித்தரணிக்கன்றேநாவல்புனைந்தபெயரெனநூல்கள்புகலாநிற்கு, மிதனெல்லையோசனையோரிலக்கமாகுமிதற்குநடுப்பொற்பிறங்கலிந்தவண்ணம், பதுமனுறுமேருவின்முப்பாலுமோங்கும்பகர்சம்புத்தீவைநிகர்பகரவுண்டோ. (௨௨)

மேருமலைதனக்குமண்டச் சுவர்க்குங்கீழ்பால் விளங்கியதைம்பதுகோடி மேல்பாலஃதே, சேரும்வடதிசையுமந்தத்தொகையுமீட்டுங் தென்றிசையுமத்தொகையேதெரிப்பதோர்வாய், பாருருவுகிழுமண்டச்சுவர்க்காறைந்துபத்தாகுங்கோடியோசனையாமும்பர், சாருமண்டகோளகையினளவுமேருச்சயிலமுதற்கோடியன்பாற்சாற்றுமாறே. (௨௩)

பொன்மலைக்குத்தரநீலஞ்சுவேதவெற்புகல்சிருங்கமெனமூன்றுபொருப்புநிற்
நன்மைதருநிழக்கேமாலியவான்வைகுநனிமேல்பாற்கந்தமாதனமாநாகங் [கு
தென்புடையநிடதமுடனேமகூடந்திகழிமையமெனவரைகள்மூன்றுசேரும்
பன்மணிசேரட்டகுலகிரியாயாரும்பகர்வவிவையென்றுமனம்பற்றுவாயே. ()

வேறு.

சொன்னமாமலைக்குணக்கினிற்றூயமந்தரமாப்
பன்னுமோங்கலும்பராரையசினைகொண்மாமரமுந்
துன்னுநந்தனவனமுநற்பாலுறுசுனையு
மன்னுமும்பருமுனிவருமனங்கள்[illegible]றவே. (௨௫)

வியந்ததென்றிசைப்பாங்கரின்மேருமந்தரமும்
பயந்ததீவுடைப்பெயர்கொள்சம்புப்பணைத்தருவு
முயர்ந்தகன்றநற்சயித்திராதவவனமொன்று
மியைந்தமாமதுச்சுனையும்வாய்ந்தெழில்பெறவிளங்கும். (௨௬)

அனையமேருவின்மேற்றிசைசுபாரிசையரும்பேர்
புனையுநாகமும்புகழலர்சினைத்தருகடம்பும்
வனைவயிப்பிரப்பெயர்புனைவனமும்வன்கரும்பின்
சுனையும்வான்சுவைவிரதமாய்த்தூய்மையிற்றிகழும். (௨௭)

உத்தரத்திசைகுமுதமால்வரையுநீண்டுயர்ந்த
சுத்தமார்வடதருவுநற்றூய்சருவத்தோ
பத்திரப்பெயர்க்காவுநன்னீர்படர்சுனையு
மெத்திசைக்குமேம்படவிருந்திலங்குதலுணர்வாய். (௨௮)

ஆயிரங்கள்சோடசமெனுமோசனையாழ்ந்து
மாயிரும்புவிமேலுமவ்வண்ணமேவாய்த்துத்
தூயவத்தொகைக்கிரட்டிமீப்புகுந்துசுற்றென்ப
தாயிரங்கண்மீதோசனையுரைப்பர்பொன்னசலம். (௨௯)

சிகிரியென்னிலசேர்ந்தெழுந்துயர்ந்துமீச்சென்றே
பகருமுக்குவடுயர்ந்துறும்பங்கயன்றிருமால்
முகங்களைந்துளான்மூவர்க்குமுதன்மைசால்பதிக
ளகநெடுங்கலைமூன்றினுமாமெனவறிவாய். (௩௦)

எண்டிசைக்கணுமிந்திரன்முதலதிக்கிறைவர்
கொண்டவான்பதிவரன்முறையிருந்தொளிகூரு
மண்டர்சாரணர்சித்தர்கின்னரர்முதல்யாருங்
கொண்டலிற்பலகோடிவான்பதிகள்கொண்டிருப்பார். (௩௧)

உரைத்தமேருவின்கீழ்த்திசைமந்தரத்துயர்ந்த
மரத்தையாயிரயோசனையுளவெனமதித்தார்
விரித்தமாங்கனிவீழ்ந்திழிதேறலைமிசைந்தோர்க்
கருத்தியாலுயிர்ப்பையிரண்டியோசனைகமழும். (௩௨)

அணையதேறல்போய்ச்சேர்வதுசேதகநதியாய்ப்
புணையும்வான்பெயர்மேருமந்தரத்திடைபுகலு
நணையுநாவலீராயிரயோசனைநவில்வர்
சினைசெய்வான்கனியரசகுஞ்சரந்தைநேர்சிவனும். (௩௩)

கனிசிதைத்தெழுசாறுபோய்க்கலந்தமாநதிதா
னினியசம்புமாநதியெனவுணர்திமுன்னிசைத்த
புனிதமால்வரைமேற்றிசைசுற்றியேபுகுந்து
தனியகன்றுகிழ்த்திசைவயிற்சலதியிற்சாரும். (௩௪)

ஒலிசெய்தோடுமாநதிப்புளறுேய்ந்தபாங்கொருவர்
வலிசெயாடகமாதவர்மற்றதிற்பண்செய்
திலகவேயுடற்றிரிக்கினுமிசைத்தநீர்மாந்தி
நலமதெய்தினுமவர்க்கிலைப்பிணிதிரைநரையே. (௩௫)

மேருமேற்றிசைக்கடம்புயர்விருக்கமாயிரமாய்ச்
சாருமோசனைதழைத்ததுதண்மலர்த்தேற
லாருமேற்றிடமாநதியாய்ச்செலுமருந்திற்
சோருயிர்ப்புநூறேசனைநறுமணஞ்சூழும். (௩௬)

செம்பொன்மால்வரைக்கோர்வடதிசைப்பழுமரமீ
ரைம்பதோர்பஃதோசனையுயர்ச்சியாமதன்பாற்
பம்புறுங்கனிபணைதொறும்பால்தயிர்மதுநெ
யம்பொனுடைபூணிழிந்தளித்தாறுபோலகலும். (௩௭)

வேறு.

அம்புயத்தோன்முனமளித்தசாயம்புமனுவென்போனருந்தீவேழுந்
தம்புயத்தின்வலியாலுந்தவத்தாலும்புரந்தளித்துத்தனையராேனேர்
செம்புயர்த்தவிழியார்கட்கோவ்வொன்றுயெழுவருக்குந்தீவேழீந்தான்
சம்புயர்த்ததீவங்கிதிரனெனுமகன்புரந்தான்றனையர்தம்மில். (௩௮)

கல்லீரும்படைக்குரிசிற்காதலரொன்பதின்மரையுங்கவினுன்மிக்க
வல்லீருஞ்சுடர்மேனியணங்கினையுமீத்தவனியவர்க்குநல்கி
மல்லீருமிரும்புயத்தான்வனமடைந்தான்வன்புதல்வர்வகுத்தவிப்பா
ரெல்லீரொன்பதுகூறுயெய்துபுவிதனித்தனிகாத்திருந்தாரன்றே. (௩௯)

திரையெறியும்வடாதுகடற்கரைத்தெற்காய்மணிகொழிக்குஞ்சிருங்கவெற்பிற்
கொருவடக்காய்மேல்கிழ்வாரிதிதாவுமவனிகுருகண்டமாமாற்
புரைதவிருமச்சிருங்கவரைத்தெற்காய்ச்சுவேதமெனும்பொருப்புக்காறு
மிரணியநல்வருடமுயர்சுவேதமுதனீலகிரியிறுவாய்மன்னே. (௪0)

திரமியமாம்பெயர்வருடநீலகிரித்தெக்கணமாய்நெடியமேரு
வரைதனக்குவடக்குமுதனுற்றிசையுமிளாவிரதவருடமாகும்
விரவியகீழ்க்கடலிறுவாய்மாலியவானிடைபிருந்தேவிளங்குகின்ற
தரையதுபத்திரவருடந்தானென்பர்நூலுணர்ந்தசான்றோரம்மா. (௪௧)

கந்தமாதனமேற்காய்மேலைவாரிதிகிழக்காய்க்கருதுகின்ற
முந்துபுவிகேதுமாலவருடமெனவுணர்தியிப்பான்முகில்கண்டுஞ்சு
மிந்தநிடதக்கிரிக்குத்தெக்கணமாயேமவரைக்கிறுவாயாக
வுந்துபுவியரிவருடமேல்கீழ்வாரிதியளவுமுரைப்பர்மாதோ. (௪௨)

ஏமவரைக்கொருதெற்காயிமையவரைக்கணிவடக்காயிருந்ததெய்வப்
பூமிதனைக்கிம்புருடவருடமெனப்புகன்றாரப்பொருப்பின்றெற்கா
நாமமுயர்தென்கடற்குவடக்காகநாமிருந்தஞாலங்கண்டாய்
கோமுனிவர்பார்புகழப்பாரதமாம்வருடமெனக்குறிப்பதையா. (௪௩)

அழலுமிழ்வேற்காவுதவுநவமைந்தர்தம்பெயராலலைசூழ்பாரை
மொழிவர்நவகண்டமிதின் முறைதொகுத்தேனிதன்கணித மொழிதல்கேண் [மோ
குழுமியமாலியவானுங்குறிக்கந்தமாதனமுமுப்பான்மேவும்
வழுவறுநாலாயிரவோசனைநீளுந்தென்கோடிவடகோடாகி. (௪௪)

நிடதமொடுநீலவரையதனெல்லைநிகழ்த்தியமூவருடமாங்கு
வடதிசையினோர்வருடமொன்பதாயிரமாகவகுப்பரீண்டு
நிடதவரைத்தெக்கணத்திலுயர்வருடமொருமூன்றுநெறிவலோர்கள்
புடவியொருவருடமென்பதாயிரவோசனையென்றேபுகல்வர்மன்னே. (௪௫)

சிறந்தகுலகிரியாறுமொவ்வொன்றீராயிரமாமகலஞ்சென்னி
மறந்தவிருமோரயுதவோசனைமீதுயர்ந்திருக்கும்வருடமெட்டி
லுறைந்தவர்சாரணர்சித்தர்காந்திருவர்வரமிசைவதொன்றென்றேயா
மறைந்தமரர்ச்சனைபூசைபாரதத்தின்புரிந்துபயனருந்துவோரே. (௪௬)

வருடமெட்டிற்பயில்வோர்கட்காயுவயுதத்தின்மிசைவகுத்தவீரா
யிரவருடமொன்றேகாலயுதமதன்மீதஞ்ஞூறெனவேகோடிப்
பொருவறுமிப்பாரதத்திற்பயில்வோர்கள்விரைவின்முத்திபுகுதவேண்டித்
தருமாயுநீட்டாமற்குறுந்தொகைசெய்தமைத்ததெனத்தரித்ததாலோ. (௪௭)

அம்பொன்மலரொடும்வானின்றிழிந்தாடகைவரைபாய்ந்தணித்தாய்நின்ற
கும்பமுடிவகைகிண்டுநதிநான்குதிரையுததிகூடுமென்ப
ரிம்பர்குலகிரிமூன்றினகடுகிழித்திருநிலங்கண்டெய்தித்தென்பால்
சம்புநதிபுகுங்கங்கையாறதற்கேசான்றாகவறிதிமன்னே. (௪௮)

இயலுடையசரசுவதியமுனைகோதாவேரியெமுனைதுற்றும்
பயனுடைநன்மதைகவுசிதுங்கபத்திரைசரையுபாலிபெண்ணை
கயலுகளுங்காவேரிகிருட்டிணைதாம்பிரபருணிகங்கையாதி
நயனுலவுபலநதிசேர்பரதகண்டநிகராகுஞாலமுண்டோ. (௪௯)

வேறு.

வடமதுரைதென்மதுரைகாசிகாஞ்சிமாயைதுவாரகையவந்தியயோத்திமா ண்பிற், கடல்வளைகோகன்னமிராமேச்சுரந்தென்கயிலைவடவேங்கடம்பர்வதந் கேதாரம், தடமதில்சூழரங்கமணியாரூர்காழிசபைகுடந்தைசெகநாதஞ்சயன மற்று, மடல்குருக்கேத்திரமுதலாயுரைக்குந்தானமனந்தமரும்புனிதமிவண மென்றோர்வாய். (௫௦)

தலத்தாலுநதியாலுஞ்சிறப்பினாலுந்தவர்தானமருச்சனைசெய்தகைமையாலு, நலத்தாலுமிப்பாதம்புனிதமிந்தஞாலத்திற்குருபூமிபுனிதமாமாற், குலத்தோரெண்ணிறந்தவர்செய்மகத்தின்சாலைகோடிமீதுளவெற்றிகுறித்துமன்னர், சலத்தாலேயமர்விளைத்ததானமந்தத்தலம்பரசுராமனையேமுதலாந்தக்கோர்.

அத்தலமற்றவனென்னின்பாரதிப்பேரதைநதிக்குத்தெக்கணமென்றறிதியாங்குன், புத்திரருமைவரும்போர்தொடங்காநின்றூர்புகழரசேயெனவியந்துபுகலுகின்றூ, னித்தரையின்றாய்மையுமற்றுள்ளகண்டமிருநான்கினியற்கைகளுமிசைத்தாயேனை, யத்திரவான்சிலையினர்மூவிரண்டுதீவத்தணியியற்கைதெரித்தியெனவறைவதானுன். (௫௨)

நாவலந்தீவொன்றொழித்துந்தீவோரைந்துநதியேழும்வரையேழும்வருடமேழும், பாவலர்களுரைத்தடைவேமைந்தர்தோற்றிப்பார்புரந்தார்புட்கரமாப்பன்னுந்தீவின், காவலனுல்வரையளித்தானவர்தம்பேராற்கண்டமதுான்காகியிருந்ததென்றூற், பூவதனிற்பயிறருமானிடருக்காயுபுகலுவராயிரவருடம்பொழிலாறுக்கும். (௫௩)

புட்கரமாந்தீவுறைவோர்புண்டரீகன்பொற்பதம்பூசிப்பர்கிரவுஞ்சத்தீவோர், பெட்புறவேவருணனைப்பூசிப்பர்மீட்டும்பிலக்கமெனுந்தீவத்தோரொற்றையாழிக், கொட்புறுதேரிரவிதனைத்தொழுவர்சாகங்குறித்தபெயர்த்தீவுறைவோர்வாயுவான, கட்பயன்செய்கடவுடனைத்தொழுவர்திங்கட்கருதுவர்சான்மலித்தீவிற்பயிலுவோரே. (௫௪)

வானுயருங்குசைத்தீவில்வதிவோரங்கிவானவனைத்தொழுவரிந்தவளஞ்சார்தீவில், ஏனவிதிமுறைகடவுட்பூசைஞானமிருக்குமகமகத்தெளிவிங்கெல்லாமுண்டாற், றூனலதுசொன்னதலமமரர்வைகுந்தலமாகுமெனவுரைத்ததகுதிகேட்டு, மேனிகழும்புனர்ப்புமதலங்களாகவிளம்புமிவ்வடுக்குமினிவிரிப்பாயென்றூன். (௫௫)

வே று.

நராதிபனவ்வுரைநல்கநகைத்தே
சராசரமேத்தியசஞ்சயனேதும்
பராவருமிப்புவிபற்றுறவாழ்த
லராவரசோடுறுமட்டகயங்கள். (௫௬)

அப்புவனந்தெறவாடகர்வாழு
மெய்ப்புவனம்படுமீண்டதுதாழ்ந்தால்
ஒப்புறுமேழ்பிலமொன்பதிலக்கந்
தப்பருமோசனையென்றிதுசாற்றும். (௫௭)

ஏழ்பிலமேயுலகென்பரிதற்குத்
தாழ்புவிகூர்மதிமாண்டர்தரிப்பா
ராழ்தரினேழ்நிரையத்துளவெல்லை
வாழ்தருமங்கதைமாண்பினகன்றூல். (௫௮)

உருத்திரசங்கமுமும்பர்களேத்துங்
கருத்துறுகமடமுமாங்குளகண்டா
யருத்தியினிங்கிடினுங்குறுமையா
பெருத்துளகிழுறுபித்திகையண்டம். (௫௯)

பிருதிவினுநிபெருஞ்சுவரீருய்க்
கருதுவதைம்பதுகோடிகணக்கே
திருவருமோசனைமேலுளசிருங்
குருகுலமாமணிகேட்டிகுறிப்பின். (௬0)

வேறு.

மண்ணுலகமீதாகவாழுங்கணவுலக
மெண்ணமறுகுய்யகர்தானீங்கிதன்மேல்வீற்றிருப்பர்
பண்ணமருங்கால்கள்தசம்பயிலுமிடமங்கதன்மே
னண்ணுமெழுமுகிலியக்கமதன்மீதாய்நாடுதியால். (௬௧)

அவ்வெல்லேதனக்குமிசையம்பரத்திற்கிம்புருடர்
வெவ்வலிசேருங்கருடர்விஞ்சையர்களியக்கர்சித்தர்
பவ்வமென்னப்பலர்செறியும்பதியதற்குமேலாமாற்
செவ்விதிகழ்சுரநதிமேற்செல்லுமிடந்தேறுதியால். (௬௨)

இரவிபதமீதுலகுக்கோசனையோரிலக்கமதாம்
பரவுமதின்முப்பத்துமுக்கோடிப்பண்ணவர்கள்
விரவியுடன்வழிக்கொள்வர்மீதாகவெண்மதியின்
புரமாகுமோரிலக்கம்புகலியோசனைபுகுந்தால். (௬௩)

அதன்மேற்றாரகையுலகமிலக்கமதாமதனும்பர்
புதனுலகோரிலக்கமதாம்புகருலகமீரிலக்கம்
விதனமறுசேயுலகமீதாகவீரிலக்க
மீதனும்பர்குருவுலகமீரிலக்கமெனுநூலே. (௬௪)

சனியுலகமீரிலக்கமதன்மீதுதவஞ்சத்த
முனிவருலகோரிலக்கமுடிவதனிலருந்துருவன்
றனியிருந்தவுலகிலக்கஞ்சாற்றிடிலிப்புவலோக
மினியபதினைந்திலக்கமிரும்புவிக்கோசனைத்தொகையே. (௬௫)

சுவலோகமதன்மிசையேதொகையெண்பத்தைந்திலக்கங்
கவலையறக்கடந்திடவாகண்டலன்வாழிடமாமாற்
றவருதங்கதன்மிசைமார்க்கண்டரதிதவமுனிவ
ரிவருதேவீற்றிருக்குமக்கோலமிருகோடி. (௬௬)

சனலோகமதன்மீதுசார்தருமோரெண்கோடி
புனிதமுறும்பிதிர்தேவர்பொருந்துமிடனென்றுணர்வாய்
நனிதமிறுதவலோகமதன்மீதுகண்ணுவதாஞ்
சனகர்முதலியர்வாழ்வார்தலனுணர்திகூர்வேலோய். (௬௭)

அவ்வுலகினுன்னதமுமாறிரண்டுகோடியதா
மிவ்வுலகின்மீதயன்வாழ்ந்திருந்திடுசத்தியவுலக
மெவ்வமறுபதினாறுகோடியதாமிதனோடு
செவ்வியர்கூறியவுலகமேழுமுடிந்ததுதெரிவாய். (௬அ)

உம்பரயன்பதமாவதொருமூன்றுகோடியதாம்
வம்பவிழுந்துளவணிந்தோன்வாழ்பதமேன்முக்கோடி
நம்பனுறைசிவலோகநாற்கோடியாங்கதன்மே
லெம்பெருமவோர்கோடியேசிலண்டகோளகையே. (௬௯)

வேதமுனிவரருரைத்தவியனுலகநான்முறையே
யாதிபநின்றனக்குரைத்தேனையமறமனங்கோடி
ஈதலதுநூற்றெட்டாமுருத்திரர்களிரும்புவன
மீதிலங்கந்தரதிவம்பற்பலவிம்மேதினிமேல். (எ௦)

பம்பருவிசொரியேமகூடபருப்பதந்தெற்கா
யம்புவியிலிமையகிரிக்கடுத்தவடக்காயிருந்த
கிம்புருடவருடத்திற்கிரீசனுறைவெள்ளிமலை
நம்பியதிற்றவமியற்றிநரன்பாசுபதம்பெற்றான். (எக)

ஆழிவரைகொண்டிசையுமமரரிறைமுதலாய
வாழுமட்டதிசைக்கிறைவர்மன்னுபதியுளவாமாற்
றாழுமிருநிலந்தொட்டுச்சொற்றகோளகையளவும்
பாழிமொய்ம்பயோசனைதான்பஞ்சாசற்கோடியதே. (எ௨)

எனவுரைத்தசஞ்சயனையிருவிழியும்புலன்செய்யா
வினவயத்தனுயிருந்தவேந்தனதிசயித்தனைத்தே
முனிவரத்தாலுலகியற்கைமுற்றுமுணர்த்தினையன்றோ
வினியெய்திச்சமரிழைத்தல்யாதுமுணர்ந்திசையென்றான். (எ௩)

பொருஞ்சமர்வாய்புகுந்தவர்தம்புணர்ப்பனைத்துநினைப்பனைத்து
மரும்புனிதமனத்தோர்ந்தேயனுகியெனக்கறைதியென
இருஞ்சுடர்செய்பொலன்றேரானியம்பவொருப்பட்டெய்தி
மருங்கிரண்டாய்வகுத்திருந்தவாகினியைக்கண்ணுற்றான். (எ௪)

அண்டகோசவடுக்குரைத்தசருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள் - எ௪.

பகவற்கீதையுரைத்தசருக்கம்.

சொலற்கருமேழ்முகிற்குலங்கடும்புகளாய்த்தோற்றியவோ
நிலத்தினுளவரைக்குலங்கணெருங்கினவோநெடுந்தேரா
யலைப்புணரித்திரைகளெலாமரும்பரிகளாயினவோ
தலத்தினுளவுயிரனைத்தும்பதாதிகளிற்சார்ந்தனவோ. (௧)

செல்லுருடேர்த்தொகைபெரிதோசிந்துரத்தின்கணம்பெரிதோ
வல்லபரித்தொகைபெரிதோவயவீரர்தங்குழுவில்
வில்லுழவரணிபெரிதோவேற்படைஞர்கணம்பெரிதோ
சொல்லரும்வாட்படைபெரிதோயாதோவிப்படைத்தொடர்ச்சி. (உ)

காரணத்திற்கருமுகிலுங்காரியத்திற்காவலனு
மாரணத்திலிருபடைகட்கருமறலியாயினரோ
வாரணத்திண்புவிபனைத்தும்வாய்மடுத்தமாலகட்டிற்
கோரிணக்கமாண்புரைத்தற்குளவன்றேகுருபூமி. (ங)

வானுலவுதுகிற்கொடிகள்மாமுகிலினிரையாகி
மேனிகழ்கங்கையைப்பருகிவீசுமழைத்துளியனைத்து
மாநிலத்திற்படர்ந்திலகுமன்னர்குளிர்மதிக்குடையாற்
றானுநித்தசெங்கதிரோன்றண்கதிரோதெரியாவே. (ச)

வெங்கரிகள்பிளிறுமொலிவெவ்வாசியார்க்குமொலி
புங்கமணித்தேருருள்கள்பூண்டவொலிமுண்டபடை
யங்கையினருரப்புமொலியரும்பணைமாமுரசவொலி
யெங்குமிகுந்தெட்டாசையிபங்களயர்ந்தெஞ்சியவால். (ரு)

சண்டவுயிர்ப்பொலிமடங்கிச்சலதிகளும்வாய்புதைத்தே
யண்டமுகடும்பொதுளியமரர்களும்வெருவுற்றார்
கொண்டல்வண்ணன்றனஞ்செயனேகுரவர்கள்மூவரையாதி
மண்டலநாயகரிதழ்வாய்வைத்தவலம்புரியொலியால். (சு)

கார்முகங்களுறவளைத்துக்குதைமடுத்துக்கைதெரித்த
போர்மடங்கலனையார்கள்பொம்மன்றுறுமெழுமோதை
பேர்மடங்கலேழுததிப்பேரோதைசிறிதென்னப்
பார்முகமுமாதிரமுஞ்செவிடெய்தப்பரந்தனவால். (எ)

என்றுபலபலவாய்மையெடுத்தியம்பிச்சஞ்சயனுங்
குன்றுபுரைநெடுந்தேர்மேற்கொண்டிருந்தவலம்புரித்தார்
மன்றல்கமழ்மணிமார்பன்றனையெதிர்ந்துசிலமாற்ற
மன்றுபகர்ந்தணிதோறுமநிலனிற்சஞ்சரித்தனனால். (அ)

இவ்வண்ணமிவன்பயிலவிதுநிற்கப்பாண்டுதரு
மைவண்ணமேனியனுமாலுமொருதேரேறிப்
பொய்வண்ணமாசேனைபொலியவிருந்தவன்பொருபோர்
செய்வண்ணநினைத்துளத்திற்சிந்தித்தான்றெருமந்தே. (கூ)

வே று.

இவனமதுகுலக்குரவனிவர்சிலையாசிரியரிவரருகினேற்ற
தவவலிசேர்புதல்வரெமக்குயிர்த்தோழரிவர்பெரியதாதைமைந்தர்
புவனமணிமுடிமன்னர்சுற்றத்தாரிவருயிரும்போக்கியிந்தக்
குவலயமெலாம்புரக்குமாக்கத்திற்பழிப்பறுநல்குரவுநன்றே. (க0)

இத்துணையாருயிர்கள்செகுத்தோருயிரைப்புரப்பதெமக்கென்னேவின்ப
முத்தமமாங்கானுறைதலோராமற்போர்பொரவந்துற்றேமென்னக்
கைத்தலங்கள்விதிர்விதிர்ப்பமெய்சலிப்பவெயர்வரும்பிக்கவுழிகாலத்
தத்துறுதிண்சிலைசோரமனஞ்சோரத்தனஞ்சயன்றேர்த்தலத்திற்சோர்ந்தான்

கரியமுகிலவனுளத்திற்கண்ணியவாறனைத்தினையுங்கருதியார்க்குந்
தெரியவரிதாந்தனதுமாமாயையிவனுணர்தல்சிறிதோவென்னப்
புரியுமிளநகையோடுங்கருணைவிழிவழியொழுகும்பொலிவினோடு
மரியபலமொழிகளொடுமருச்சுனனையெடுத்தணைத்தொன்றறைவதானான். ()

அங்கர்காவலன்றனைக்கண்டஞ்சினையோவமர்பொருதவின்றிங்கெய்தித்
தங்கியசஞ்சத்தகர்க்குஞ்சத்திரவாகுவின்வலிக்குந்தாழ்வுற்றாயோ
திங்கண்முடியோன்வரங்கொள்சிந்துபதிவெந்திறலைச்சிந்தித்தாயோ
பங்குனவிங்கென்னோநின்னுளத்துன்பங்கரவாதுபகர்கவென்றான். (கங)

தாட்கமலநச்சினவர்தமக்களிப்போன்வழங்குமொழிதன்னெஞ்சார
வேட்கைசற்றுமிலனாகிவெறுத்திருந்தவில்விசயன்விளம்புகின்றான்
பூட்கைமதகுஞ்சரங்கள்பொம்மலெதிர்ந்தயர்தல்மண்ணிற்பொய்யின்றாமேற்
பேட்பினரைநினைந்தழிதலுண்மையுயிர்த்திருந்தவெலாம்பேசக்கேண்மோ. ()

எஞ்ஞான்றுமிறந்தவிதல்கடனுமென்றுணர்ந்தனனீண்டிறுதிக்கஞ்சே
னிஞ்ஞான்றென்னுளம்போழ்ந்ததிரக்கமஃதறத்தினொடுமிருந்ததன்றே
மெய்ஞ்ஞானந்தவம்விரதம்வேள்விமுதற்படுகருமம்வேந்தரானோர்க்
கஞ்ஞானநிலமிடையிட்டமர்புரிதலடுத்தவரையழித்தன்மன்னோ. (கரு)

ஆங்கவர்வெம்படைக்கலத்தானடுத்தநமதணிமுழுதுமழிந்துநம்பாற்
றாங்கவருபூபாலர்தனையர்பலருடனழிவர்தகுதியீதா
லோங்கியவிப்படையிரண்டுமொழிந்தாலெம்முயிரிருப்பதுளவோவுண்டே
லீங்குநிகழ்பழிபாவமிரண்டுமலாற்பெறும்பயனிங்கென்னோவம்மா. (கசு)

பொருதுகுலத்துரியவரைப்போக்கியிந்தநிலம்புரக்கும்புகழிற்கானிற்
சருகுநுகர்ந்துயிர்வாழ்தலறமாகுமிக்கதிதுதானேயென்னிற்
கருதுடலமிளமைசெல்வநிலையாவென்பவைபடிறேகண்டுபேய்த்தேர்
பருகுபுனலெனவிழையும்பரிசேயிங்கியாமுயன்றபான்மையெல்லாம். (கஎ)

செறுத்தவரெங்குலக்குரவர் தேசிகர்சுற்றத்தவராஞ் செய்போர்தம்மை,
யொறுத்திடுமாறலதென்னோ வுறுதியிசைந்திடுமின்ப வுண்டியாவ, தறக்கடை
மைப்பெருங்குரவர் குருதியினற்குழைத்ததுவே யன்னோவின்பம், வெறுத்த
னன்வேண்டிலனரும்போர்மேலடியேற்குய்யுமுறைவிளம்பாயென்றான். (கஅ)

ஆயோனங்குரைத்தவெலாமகத்தடக்கிமுகக்கமலத்தருட்டேன்பொங்க
மீயோங்குதிரடோளாற்றழுவியஞ்சலையமெலாம்விரைவினீங்கிப்
போயோடவோர்வாய்மைபுகலுவன்கேளென்றுமறைபுகல்வதானான்
மாயோனென்றும்பரொடுமுனிவரரும்பணிந்தேத்தும்வநசநாபன். (ககூ)

வே று.

மேவாருமின்றுகிளைமைந்தர்கணமித்திரத்தோ
ராவாருமின்றுமற்றயலாருமின்றுண்மையஃகிச்
சாவாருமின்றுகொல்வாருமின்றாழ்முறைதள்ளிவென்று
போவாருமின்றுமுன்வந்தோருமின்றழற்பொங்குவேலோய். (உ०)

வே று.

பகரும்பொருள்கடமக்கெல்லாம்பழையதவனைப்பூரணத்தை
நிகரிறன்மையுளவதனைநித்தியத்துவத்தைநிலைப்பேற்றை
நுகரும்புலனாலறிவரியநுண்மையறிவையறியாதே
யிகலிலழியுமெனநினைந்தாயாதோவழிவதிசையாயே. (உக)

கனலால்வேவாமாருதத்தாற்கலங்காவிலங்கேழ்கடற்பொங்கும்
புனலான்மாயாவசனிகளாற்பொள்ளாவிள்ளாவறிவதனை
யினியோருருவொன்றிலாததனையெங்குந்தானாயிருந்ததனைத்
தனிவான்படையாற்சேதிக்குந்தன்மையுளவோபுகலாயே. (உஉ)

வனையுங்கலைகள்பற்பலவாமாறிமாறியொன்றொன்றைப்
புனையும்படியோருடம்பகலவேறோருடம்பிற்புகுவதலா
னினையுமுண்மைக்கழிவுண்டோநீநானவனென்பதுமிரண்டு
வினையின்பயனுமூவிரண்டுவிதமுமுடற்கேவேறிலையால். (உங)

தந்தாரெவரேமைந்தர்தமைத்தனுவாதிகளாஞ்செயலிவற்கு
வந்ததெவராலவரிறந்தான்மருவுமிடமெவ்விடமாமோ
முந்துமுணரார்மேற்செயலுந்தெளியாரிடையேமுயன்றபடி
தந்தைதமராய்நினைத்திறந்தார்சலிப்பால்வினையாற்சார்ந்துழல்வோர். (உச)

உதிக்குமுடலம்பிராரத்தவினையாற்கடந்தோருளத்தைப்போற்
கதிக்குமறிவுதுயின்றியற்றுங்கருமந்தனதாய்க்காண்பதனல்
விதிக்கும்வினையின்பயன்றுய்க்கும்வேறாய்க்கருதிலெனைமேவுந்
துதிக்குந்தரத்தோய்மாமாயைதொலைத்தோருணருந்தூய்மையிதே. (உரு)

வே று.

பெற்றவர்யாவர்வந்துபிறந்தவர்யாவர்நேச
முற்றவர்யாவர்நண்பினுறுபவர்யாவர்நின்னுற்
கற்றநல்லறிவோயாதுங்கட்டலையென்றுகொண்டாற்
குற்றமென்பனதோன்றுவாங்கூறுதுமின்னுங்கேண்மோ. (உசு)

* மாயையென்றொருத்திதன்பான்மனமெனுமைந்தன்றோன்றித்
தூயநல்லறிவன்றன்னைத்தோற்றமின்றாக்கிவைத்தான்
றாயொடுதந்தைமக்கடாரமென்றிவர்பால்வைத்த
நேயமுமவன்றனாலேநிகழ்ந்ததோர்நினைவுகண்டாய். (உஎ)

✻ குயின்றவைம்பொறிவாய்நின்றுகுறித்தவைம்பொருளுந்தானே
யியின்றுமுக்குணங்களோடமறுவகைப்படைகளோடும்
பயின்றரசாளுமந்தமனமெனும்பகைவனுங்குத்
துயின்றபோதொளித்துநின்றதோன்றலுந்தோன்றுங்கண்டாய். (உஅ)

✻ அந்தநல்லறிவன்றன்னையறிந்தவரறிஞராவார்
தந்தையால்வகுக்கப்பட்டசராசரப்பொருள்கடோறும்
வந்தவான்றீம்பாலெய்போலுயிர்க்குயிராகிவாழும்
பந்தமதுணர்ந்துநேரேபார்க்குங்காற்பகையார்நண்பார். (உகூ)

✻ உம்பருமுனிவர்தாமும்யாவருமுணராவொன்றை
யிம்பரின்றுனக்குநானேயிசைவுறவுணர்த்தாநின்றே
னைம்பெரும்பூதத்தானுமமைத்தனவுடலம்யார்க்கு
நம்பனுமொருவனுள்ளேஞானியாய்நடத்துகின்றான். (௩௦)

ஒருவனேநடத்துமுண்மையோர்திநீயொருவராலும்
வருவதைவிலக்கிவாராவருவித்தல்கூடாவன்றே
பொருமுனைநீமேற்கொண்டுபுழுங்கிவெவ்வினைக்கீடாக
விருவினைதொலைத்தோனுடலெனமகிழ்ந்திருத்தியாவும். (௩க)

காலமுமிடனுங்கொற்றக்கருவியுமுடலஞ்சாயு
ஞாலமுமமைத்தவாறேநண்ணுவதன்றிப்போரிற்
கோலியவாற்றல்வல்லோர்கோறலாஞ்செயலுமுண்டோ
மாலுமேலாயுவின்றிமசகமுமுடல்விடாவே. (௩உ)

அம்முறைநிற்கமேனாளரசர்பேரவையினீவிர்
கைம்மறித்துரைத்தவாண்மைக்கட்டுரைபிழைத்துமீண்டான்
மும்மையுமிழந்துகீழிட்டளறெலாமூழ்கிமாழ்கி
வெம்மையிற்புலப்பாடன்றிப்பெறும்பயன்வேறுமுண்டோ. (௩௩)

ஆதலாற்பொரும்போர்மாற்றலரிதறனஃதேசெய்தா
லேதமொன்றெய்தாதென்சொலிருக்கெனக்கோடியையா
நீதனைவென்றுயென்னினிலமெலாம்புரப்பைமாண்டான்
மீதலம்புரப்பைவிண்ணோரெதிர்கொளவீடுமுண்டே. (௩ச)

கேசவனிந்தவாய்மைகிளத்தலுமனத்துங்கேட்ட
வாசவன்மகனுஞ்சிந்தைமயக்கறமகிழ்ந்துநோக்கிப்
பூசல்வண்டரற்றுந்தாரோய்பூதங்கடோறுநின்ற
வீசனெங்குளனிவ்வுண்மையேழையேற்கியம்புகென்றான். (௩ரு)

வேறு.

அம்புயமேனன்முகத்தோனுவேனும்வைகுந்தத்தரியாவேனு
மும்பர்தொழுகயிலாயச்சிலம்பின்மிசைவெள்விடையைபுகைத்துளேனும்
வம்பவிழுங்கடம்பணிசண்முகத்தேவுமடலயிராவதத்தினேனு
மிம்பர்சராசரப்பொருடோறிருந்துபயின்றிடுவேனும்யானேகண்டாய். (௩௬)

வாதராயணனாகிமறைகளெலாம்புகன்றேனாமதியிராவிற்
சீதநிலவுமிழ்வேனாஞ்செங்கதிராயிம்பர்வெயில்செறிவிப்பேனா
மாதவநாரதனாதிமாமுனிவராவேனாம்வருணன்வாயு
வேதமறுகனன்மறலியிருநிதிக்கோனாவேனாம்யானேகண்டாய். (௩௭)

எத்தேயத்தெத்திறத்தோரெவ்வருணத்தெவ்வுருவினென்னையாய்ந்தா
ரத்தேயத்தத்திறத்தார்க்கவ்வருணத்தவ்வுருவோடவர்நேராவேன்
முத்தேவர்முத்தொழிலுமுக்குணமுங்கடந்தமறைமுடியின்முத்தி
வித்தாகிநின்றதனிப்பரப்பிரமப்பரம்பொருள்யான்மெய்க்கொள்வாயே. (௩௮)

என்றுகரியவன்புகலவிந்திரன்சேயற்புதனாயாரும்யாவு
மொன்றுபடுநின்கோலமுணரும்வகைதெரித்தியெனவுரைத்தவாற்றா
னன்றுலகமோரடியானளந்தவுருவெனநிமிர்ந்தாழ்ந்தகண்டபித்தி
வென்றிகொள்கீழ்மேல்பிதிரப்பேரொளியாய்வெளிநின்றான்விசயன்கண்டான்

ஞானவிழியவன்றனக்குநல்கியபான்மையினாலேநாரனோக்கி
மோனமடைந்தற்புதனாயானந்தப்பெரும்புணரிமூழ்கிநின்றான்
வானவர்நான்மறைமுனிவரவனுருவின்மறைந்தலரின்மாரிதூவ
வேனையிருபகுதியுளோரென்கண்டார்முன்கண்டவியலேகண்டார். (௪௦)

தன்னிலையாங்கவனுணர்ந்ததன்மையறிந்தவ்வுருவந்தன்னைமாற்றி
முன்னிலையிற்றேர்கடவுதொழில்மூண்டுவாசவிவாண்முகத்தைநோக்கி
யென்னிலைநீயுணர்ந்தனையீண்டெவருணர்ந்தார்நீயுணர்ந்தவியற்கைமுன்னு
நன்னிலைசேர்பேரறிவோயானுணரநவில்கென்றானளினநாபன். (௪௧)

பிரமாண்டகோளகையையூடுருவப்பேரொளியாய்த்திகழ்ந்தபெம்மான்
சிரமாண்டமுடிவேந்திற்செறிந்திருந்துவினவுமொழிசெவிபுகாமுன்
கரமாண்டவிருபதத்தைவருடமுடித்தலையிறைஞ்சிக்கலுழிகாலத்
திரமாண்டவுடனடுங்கமொழிகுழறக்கண்டபடிதெரிப்பதானான். (௪௨)

வேதமுனிவரர்களொடும்விரிஞ்சிதனைநின்னுருவில்விரவக்கண்டேன்
மாதவனையைம்படைகொண்டலர்மாதோடொருபுறத்தின்மருவக்கண்டேன்
சீதமதிமுடித்தபிரான்றெரிவையொடுங்கணங்களொடுந்திகழக்கண்டேன்
சோதியழல்வேற்பெருமான்சண்முகத்தோடினிதமருந்துறையைக்கண்டேன்.

சொற்றபலதேவர்களுஞ்சுனாசியொடுநின்னுருவிற்றோற்றக்கண்டேன்
கற்றமறையுபநிடதம்வியாகரணமுள்ளவெலாங்கண்ணிற்கண்டேன்
செற்றமுறுதானவருஞ்சராசரமாம்பொருளனைத்துந்தெளியக்கண்டேன்
மற்றுமுளகுணமூன்றுந்தொழின்மூன்றுநிகழ்த்துமுறைமனங்கொண்டேனே

அரவநெடுந்துவசத்தோனரும்படைஞருடன்வந்தோரவரோடன்றி
விரவுமெமருஞ்சேனைமுழுதுமுனதொருவாயான்விழுங்கக்கண்டேன்
கரமனந்தமுகமனந்தங்கண்ணனந்தஞ்செயலனந்தங்கண்டேனம்மா
பரவனந்தம்விழிகளிலைநாவிலையானென்னினிமேற்பகர்வதென்றான். (௪௫)

அவ்வண்ணமுரைத்தவனுக்கருணல்கிநீகண்டவனைத்துஞ்சிந்தை
யுய்வண்ணமுறக்கோடியாரெனினுமுரைக்ககிற்றியுதிட்டிராதி
யைவருமுய்ப்பவரேனேரழிவரெனவுணர்தியறியாமைநீக்கி
வெவ்வலியோயாமுதித்தகாரியமேம்படவியற்றல்விதியாய்க்கோடி. (சசு)

வேறு.

* என்னைநீபுகலக்கேண்மோவெங்குமாயாவுமாகி
மன்னியபொருளும்யானேமறைக்கெலாமுடிவும்யானே
யுன்னையான்பிறிவதில்லையொருமுறைபிறிந்துமேனு
ணன்னிலாவெறிக்கும்பூணுய்நரனுநாரணனுமானேம். (சஎ)

* பின்னெருபிறப்பினுமேயிராமலக்குமப்பேர்பெற்றோ
மின்னெடும்பிறப்பினீயும்யானுமாயீண்டுநின்றோ
நின்னிடைமயக்குமிந்தநேயமுமொழிகவென்று
தன்னிலையவற்குக்காட்டித்தத்துவந்தெளிவித்தானே. (சஅ)

* ஆங்கவன்றெளிந்துதேறியறம்பொருளின்பமுற்றிப்
பாங்கினனின்னையெய்தும்பயனெனக்குரைத்தாயென்று
பூங்கடிக்கமலநாறும்பொன்னடிபோற்றியான்செய்
தீங்கெலாம்பொறுத்தியென்றுசெருச்செயுமாறுபூண்டான். (சகூ)

பஞ்சவரிடையிற்காளைபருவரலொழிந்துநின்ற
வெஞ்செருமுனையிற்றேற்றிவிரிவுறநிகழ்ந்ததெல்லாஞ்
சஞ்சயனுணர்ந்துதங்கள்தராபதிக்குரைத்தவாற்றூற்
செஞ்சுடர்வேலோய்நின்பாற்றெரித்ததென்றெடுத்துச்சொன்னன். (ரு०)

மாயையினகன்றமன்னன்மனநனிமகிழ்ந்துவைசம்
பாயனர்தம்மைப்போற்றிமற்றுளபரிசுகேட்பத்
தூயவன்மீட்டும்வெம்போர்புரிதருதொன்மையெல்லா
மாயவனுணருமாறங்கறைகுவான்றெடங்கினனே. (ருக)

பகவற்கீதையுரைத்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - கஉரு.

முதற்போர்ச்சருக்கம்.

---

* எந்தவெந்தயோனிபேதமெங்குமெங்குமுள்ளன
வந்தவந்தயோனிதோறுமாவியானதன்மையைச்
சிந்தையின்கணெருகணத்தினிகழுமாறுதேவர்கோன்
மைந்தனுய்ந்திடப்புகன்றவள்ளலருள்வணங்குவாம். (க)

செல்வமன்னர்மல்கிநின்றசெருமுகங்கடோறுமன்
னல்குகாளைவிழிபரப்பிநடுவணின்றகுரவரை
வெல்வதென்றுகொல்வதேவிரும்பொணுதுவெற்றியாம்
வல்விரைந்துபெறுதுமென்றுமறுகிநெஞ்சமாழ்கினன். (உ)

மாழ்கிநெஞ்சுதளரவையமொருவிவீமன்மாவலான்
ருழ்விறம்பியுடன்வரத்தனஞ்செயற்குடன்படுங்
காழ்கிளர்ந்தமேனியண்ணல்தேர்புகுந்துகைதொழா
ஆழ்கலந்தசிந்தைதங்குதிறலனைத்துமோதினன். (ங)

மாலுணர்ந்துகருணைபொங்கவதனநோக்கியங்கவர்
பாலுணர்ந்தபோதலாதுபகரும்வாய்மையிலையெனச்
சேலுணர்ந்தபழனநாடர்சேருமாறுசிந்தைசெய்
சாலுணர்ந்துதானுமைவர்தம்மின்முன்னரேகினர். (ச)

வேறு.

* பூண்டவெம்பரித்தேர்மீதப்பொய்யிலாமெய்யினனும்
பாண்டவர்தாமுமாகப்பகிரதிமைந்தன்றன்பா
லீண்டினனெய்திநீயேயிவருடன்மலையின்மற்றுன்
காண்டகுவெம்போர்வென்றுகளங்கொளத்தகுமோவென்றான். (ரு)

* மற்றவன்றருமராசன்மைந்தனேயவனிக்கெல்லாம்
கொற்றவனாகுமென்னைக்கொல்வதற்குபாயங்கேண்மோ
அற்றைவெஞ்சமரிற்சிறுமம்பையென்றொருத்திதானே
செற்றிடத்தவமுஞ்செய்துசிகண்டியாய்ப்பிறந்துநின்றாள். (சு)

* பன்னுசீர்யாகசேனன்குமரனைப்பத்தாநாளில்
என்னெதிரமரிற்காட்டில்யான்படையாவுந்தீண்டேன்
பின்னவன்வெகுண்டுசெய்யும்பெருமிதங்கண்டுமீண்டு
கன்னனைவெல்லநின்றகாளைகைக்கணையால்வீழ்வேன். (எ)

* நின்றனையருளொடாங்கேநீலமாமேனியாய்நீ
வென்றிமற்றிவரேயல்லால்வேறியாரெய்துகிற்பார்
என்றனனென்றபோதப்பிதாமகனிருதாள்போற்றி
நின்றவர்தம்மைக்கொண்டுசிலைமுனிநிலையிற்போனான். (அ)

* போயவர்குருவின்பாதம்போற்றிமுன்னிற்பச்செங்கண்
மாயவனவனைநோக்கிவாகையந்தாமஞ்சூட
நீயவர்க்களித்தியாகிலுண்டலானின்னைவையந்
தாயவர்தமக்கும்வேறலரிதெனச்சாற்றினனே. (கூ)

* மன்மகன்றருமன்வென்றுவையகமெய்தாநிற்பா
னென்மகனெனக்குமுன்னேயிறந்தனனென்றுவானில்
வின்மகபதியையொக்கும்வேந்தர்முன்சொல்லிற்சூரன்
றன்மகன்மகனேபின்னைச்சாபமென்றெடுக்கிலேனே. (க0)

* என்பெருஞ்சாபங்கைவிட்டியானெதிர்நிற்றலானுந்
தன்பெருஞ்சாபத்தாலுஞ்சமரிடைத்திட்டத்துய்மன்
வன்புடனெனக்குக்கூற்றாய்மலைகுவன்மலைந்தவன்றே
நின்பெருங்கருத்துமுற்றுமேகுவிர்நீவிரென்றான். (கக)

* முனிவனைவிடைகொண்டேகிமுகுந்தனுந்தாமுமுன்னந்
தனிவனந்திரிந்துமீண்டோர்தானையங்கானிற்புக்கார்
பனிவனநிறைந்தபொய்கைக்கரைநிழற்பரப்புந்தேமாங்
கனிவனமென்னபார்க்குமுதவிகூர்கருணைக்கண்ணார். (கஉ)

மற்றிவர்வரவுகண்டமாசுணக்கொடியோன்சேனை
கற்றவர்கற்றவண்ணங்கழறினர்மீண்டபின்னர்
பெற்றியிதென்றுதேறிப்பெருகுவர்க்கடலினார்த்தார்
செற்றமேயுணரார்கொற்றச்சேனையுமார்த்ததந்தில். (கங)

வருநிலத்துயிர்கள்செங்கண்மாலகட்டிருந்ததேய்க்குங்
குருநிலத்தடைந்தசேனையார்ப்பொலிகுறுகாமுன்ன
மிருநிலத்தரசர்வின்னாணொ றிதருமோதையோடிச்
செருநிலச்சரிதமெட்டுத்திகந்தமும்புக்கதம்மா. (கச)

பெருநிலந்தகருமாறும்பிலத்துளோரயருமாறுஞ்
சுருணிலவுமிழ்வான்மேயோர்துண்ணெனநடுங்குமாறுங்
கருதிலராகியாலகாலவெங்கனலிற்சீறிக்
குருநிலத்திரண்டுபாலாங்கொடும்படைபெயர்ந்ததன்றே. (கரு)

* கொற்றவர்தம்மையேழக்குரோணிவெஞ்சேனையோடும்
பற்றுடையசலமாகும்பான்மையால்வியூகமாக்கி
வெற்றிதந்தருள்கென்றேத்திவிந்தையைவணங்கிமாயோன்
சொற்றபின்றாசியோடுதூசிசென்றுற்றதன்றே. (கசு)

மிடலுடையழல்வேற்காவல்வேந்தர்கள்வேந்துங்கைம்மா
வடலுடையுதிட்டிரப்பேரண்ணலுங்கரங்கள்சாய்ப்ப
வுடலபிமானநீக்கியொலித்திருபடையுமேற்றார்
கடலிரண்டுடைந்தொன்றாயகாட்சியைக்கடுப்பமாதோ. (கஎ)

வேறு.

* புரசையானைப்பொருபரித்தேருடை
யரசன்மாத்துவசத்தனவாதலாற்
குரைசெய்வான்பணைக்குப்பைகள்யாவினு
முரசசாலமுழங்கினசாலவே. (கஅ)

* மலர்ந்தபற்பவனநிகர்பைந்துழா
யலங்கல்வித்தகனேந்தினவாதலால்
வலம்புரிக்குலம்வாழ்வுபெற்றேமெனச்
சலஞ்சலத்தொடுஞ்சங்கொடுமார்த்தவே. (கசு)

* சென்றுதேர்களுந்தேர்களுஞ்சேர்ந்தன
வென்றிவேழமும்வேழமுமூர்ந்தன
நின்றவாசியும்வாசியுநேர்ந்தன
வென்றிவீரரும்வீரருமேவினர். (உ०)

✻ பாரவாளமும்வாளமும்பாய்ந்தன
கூரவேல்களும்வேல்களுங்குத்தின
வீரசாபமுஞ்சாபமும்வீக்கின
தூரவாளியும்வாளியுந்தோய்ந்தவே. (உக)

✻ இட்டதார்முடிமன்னவரோடெதி
ரிட்டதார்முடிமன்னவரெய்தினர்
பட்டவர்த்தனர்பார்த்திபர்தம்முடன்
பட்டவர்த்தனர்பார்த்திபரெய்தினர். (உஉ)

✻ மந்திரத்தவர்தம்முடன்மாமதி
மந்திரத்தவர்வந்தமர்மோதினர்
தந்திரத்தவர்தம்மிசையேசெலத்
தந்திரத்தவர்சாயகம்வீசினர். (உங)

✻ மண்டலீகர்தமார்புறையாகவே
மண்டலீகர்தம்வாட்படையோச்சினர்
சண்டவார்சிலைச்சாமந்தர்வாங்கவே
சண்டவார்சிலைச்சாமந்தர்வாங்கினர். (உச)

வேறு.

பற்குனப்பெயர்மீளிவீடுமற்கெதிர்பாய்ந்தான்
றுர்க்குணத்தரசனுங்கரித்துவசனேரானு
னற்குணத்தினேன்மத்திரபதிக்கெதிர்நடந்தான்
விற்குணத்தெறிநகுலன்மைத்துனன்மிசைவெகுண்டான். (உரு)

ஏவுவல்லசாதேவனுஞ்சகுனியுமெதிர்ந்தார்
மேவுதிட்டத்துய்மனுங்குருவோடமர்விளைத்தான்
வாவுதேரினர்சுவேததுச்சாதனர்மலைந்தார்
கோவின்மாமுனைவிராடனும்பூரியுங்கொதித்தார். (உசா)

கலிங்கராசனுமியாகசேனனுமமர்கலந்தார்
வலங்கொள்குந்திபோசனும்பரித்தாமனும்வாய்த்தார்
சலங்கொளுத்தரனுங்கிருபனுமமர்தந்தா
ரலங்கலங்குரவிலக்கணனபிமனுநேர்ந்தார். (உஎ)

கொடுங்கடோற்கசனரும்பகதத்தனுங்குறித்தா
ரடுந்திண்சாத்தகிபூரிசிராவெதிரார்த்தார்
தொடங்குகேகயன்கிருதவன்மனுங்கணைதொடுத்தார்
திடங்கொள்சிதகன்சிகண்டிநேர்புகுந்தமர்செய்தான். (உஅ)

சோமதத்தர்காம்போதிமன்னனுங்கணைசொரிந்தார்
வாமசேரனுஞ்சோழனுமகதனைவளைத்தார்
தாமபாண்டியன்கத்திரதேவனைத்தகைந்தா
னுமவில்லரவானலம்புதன்முனைநயந்தான். (உகூ)

துருவதேயருஞ்சோர்விறுன்மாக்கனுஞ்சூழ்ந்தார்
குரிசிலுத்தமோசாயிகர்னனுஞ்சிலேகுனித்தார்
கிரிசெய்தோள்விடசேனனுமுதாமனுங்கிடைத்தார்
சரதசந்தனுமுக்கிரவேகனுந்தலைப்பெயர்ந்தார். (௩௦)

கொங்கர்சீனர்கள்சிங்களராரியர்குகுதர்
கங்கர்கோசலர்தமிழர்குண்டலர்கலிங்கத்தர்
வங்கர்மாளுவர்சோனகர்மத்தமாராட
ரிங்குமங்குநின்றவரெதிர்முனைந்தனரிகலி. (௩௧)

கண்டவான்முகிலூழியினுருமுகார்க்கையி
னெண்டிசாமுகஞ்செவிடுறவியற்றுபேரிகலாற்
கண்டவானவரற்புதமடைந்துகைகுலைத்தா
ரண்டகோளகைபிதிர்ந்ததென்றயிர்த்தனனயனும். (௩௨)

மறிந்துதாழ்வனவாசிகள்மாமதவேழந்
தறிந்துவீழ்வனதேர்நிரைதகர்வனசாற்றோ
மெறிந்தவேலினும்வாளினுங்கணையினுமிளைஞர்
துறந்தவாக்கையெத்தனைபலகோடியார்சொல்வார். (௩௩)

வேறு.

* முடியிழந்தநிருபர்முகந்தனு
விடிபடுந்தலைராகுவொடேயினு
ரடியிழந்தவராதபன்றேர்விடுந்
தொடிநெடுங்கைவலவனிற்றோன்றினர். (௩௪)

* பூபர்தங்கள்புயங்களுமார்பமுஞ்
சாபவெங்கணைதைத்துகுசோரியாற்
றீபமென்னவுஞ்செம்மலர்க்கோடுடை
நீபமென்னவுநின்றனராண்மையால். (௩௫)

* கையில்வாளிதொலைந்தபின்காய்ந்துதம்
மெய்யில்வாளிகள்வாங்கிவில்வாங்கினர்
பொய்யிலாமொழிப்பூபதிசேனையின்
மையிலாண்மையினர்சிலமன்னரே. (௩௬)

* வலக்கையற்றுவிழவுமனத்தொரு
கலக்கமற்றவெங்கார்முகத்தார்சிலர்
துலக்கெயிற்றுப்படைதொடுத்தார்தொடை
யிலக்கமற்றபடையிலக்காகவே. (௩௭)

* தாளிரண்டுடைச்சிங்கமன்னர்சமர்
வாளிரண்டொர்தொடையினில்வாங்கினர்
கோளிரண்டுமெனக்குறுகார்தடந்
தோளிரண்டுந்துணிந்தெதிர்வீழவே. (௩௮)

* ஓடிமுட்டலிற்றேர்களுடைந்தன
நாடிமுட்டலினுகங்கள்விழ்ந்தன
கூடிமுட்டலிற்கொய்யுளைமாய்ந்தன
வாடிமுட்டலினுள்களுஞ்சாய்ந்தவே. (ஙகூ)

* பற்றிநின்றொருவன்படைவாளெதி
ருற்றவன்றலைசிந்திடவோச்சினு
னற்றதன்றலைகொண்டவனுங்கணச்
செற்றவன்றலைசிந்திடவீசினுன். (சο)

* புங்கமெய்புதையப்புதையச்சிலர்
சிங்கமொத்துசெருக்களத்தாடினூர்
கங்கமிட்டபைங்காவணநீழலி
னங்கைகொட்டியலகைநின்ருடவே. (சக)

* வாளியாயிரந்தைத்தவழியெலா
மோளியாகவொழுகுங்குருதியாற்
ருளிலானடத்துந்தடந்தேருடை
மீளியாமெனநின்றனர்வீரரே. (சஉ)

* வெட்டினூரவர்மெய்பிற்படாமைநின்
றெட்டினூரிமைப்போதினிலோடியே
தட்டினுருடலைத்தழுவிக்கொடு
கட்டினூர்விழுந்தார்சிலகாளையர். (சங)

வே று.

* கொங்கர்போசலர்போசர்சிங்களர்குகுதராரியர்துளுவருங்
கங்கர்சோனகர்யவனர்சீனர்கலிங்கர்தத்தர்தெலுங்கரும்
வங்கர்கோசலர்தமிழர்குண்டலரொட்டர்மாளவர்மகதரு
மிங்குமங்குமணிந்துநின்றவரெதிர்முனைந்தனரிகலியே. (சச)

* விசயன்வெஞ்சிலைவீடுமற்கெதிரமர்தொடங்கலும்வெருவவெண்
டிசையுமொன்றவளைந்துகொண்டனரிருவர்தம்பெருஞ்சேனையு
மிசையெழுந்துகளாலிமைத்தனர்மேலைநாகரும்வெங்கழுத்
தசையநின்றுசுமந்திளைத்தனர்கீழைநாகருமடையவே. (சரு)

* உகவைதன்னெடுவீடுமற்குறுமுதவியாகமகிபனுஞ்
சகுனிசல்லியனிவரையும்பலதம்பிமாரையுமேவினுன்
மிகுகொடுஞ்சினவீமன்விந்தரனபிமனுதியர்விசயனுக்
கிகனெடும்படையரசனேவலினுதவியாம்வகையேகினூர். (சகூ)

* வன்பணைக்கொடிமீதுபன்னிருவாளிமெய்க்கவசத்தின்மே
லொன்பதிப்படியேவிவீடுமன்மெய்க்கடுங்கவுடற்றினுன்
வன்பரப்பொடுசகுனிசல்லியன்வந்ததம்பியரனைவரும்
பின்படப்பலகணைதொடுத்தனன்வருசதாகதிபிள்ளையே. (சஎ)

கன்னன்மெய்ப்புதல்வோர்கண்மூவிருகாளையர்க்குமுதலவன்
றன்னுடன்சமருரககன்னிகைதனையனின்றுமலேந்தனன்
வன்னிசாசரனலம்புதன்னெடுவருகடோற்கசனெண்ணிறு
னிங்கலம்புதன்றம்பியோடுகடோற்கசன்மகனேறினன். (சஅ)

* ஏசிலாதுயர்தன்பிதாவினெழும்பிதாமகனேறுதேர்
வாசிநாலும்விழத்தொடுத்தனன்வாளிநாலபிமன்னுவு
மாசிலாவிறலுத்தரன்றிறன்மத்திராதிபருடனுடன்
ருசிலாவடலப்புமாமழைசிந்தினன்முகிலஞ்சவே. (சகூ)

* வாவிமேல்வருபுரவிவீழவும்வலவன்வீழவுமற்றுளோ
ராவிவீழவுமவனெடுத்தவிலற்றுவீழவுமமர்செய்தான்
பாவியோடினிவில்லெடுப்பதுபாவமென்றொருபாரவே
லேவினானெதிர்சென்றுசல்லியனிவனும்வானகமேறினான். (ருo)

* இன்றுபட்டனன்மச்சர்கோமகனென்றுதங்களினேரலா
ரொன்றுபட்டுமிகைத்தெழுந்தனரூழிவாயெழுமுததிபோ
லன்றுபட்டகலக்கமப்படியைவர்தம்படையமரின்மேல்
வென்றுபட்டமணிந்தவாரணமென்னவந்தனன்வீமனே. (ருக)

‡ * தாமன்மேல்வரவரவுடைந்திடுதமமெனும்படிதண்டுடன்
வீமன்மேல்வரவரவுடைந்தனர்மேவலார்கள்வலம்புரித்
தாமன்மேல்வரவரவுகண்டுதரிக்கிலாதெதிர்சென்றனன்
காமன்மேலரனென்னநெஞ்சுகனன்றுகண்கள்சிவக்கவே. (ருஉ)

* செண்டினல் § வசுகிரிதிரித்திடுசென்னியென்னவெடுத்தகைத்
தண்டினாலெதிர்சென்றுதேரணிதறியவன்பொடுசாடினான்
மண்டினார்மணிமுடியும்வேழமும்வாசியும்படவன்கரத்
தண்டினான்முனைநின்றபன்னககேதுவோடமர்மோதினான். (ருஙு)

* மோதியாயிரபேதமாகமுனைந்துதங்களிலிருவருஞ்
சாதியாதனவில்லைமீளிமடங்கலேறனதன்மையார்
காதியாடமர்புரியுமேதினிகாவலன்குனிகார்முகஞ்
சேதியாவொருகைகொடேறியதேரெடுத்தெதிர்சிந்தினான். (ருச)

* ஆரழிந்தனவச்சழிந்தனவுருளழிந்தனவச்சிரத்
தேரழிந்துகொடிஞ்சியும்பலசின்னமானதுமன்னனும்
போரழிந்தனனென்றுசேனைபுறக்கிடாவருபொழுதினிற்
கூரழிந்ததெனக்குறித்தெதிர்நின்றகாவலர்கூடினர். (ருரு)

* பரித்ததேரொடுபருதியைச்செறிபருதிபோலிருபக்கமுந்
தரித்தவேலினர்தாரைவாளினர்தாமவில்லினராகவே
விரித்தவெண்குடைமன்னர்சூழ்தரவீமனிற்பதொர்மேன்மைகண்
டெரித்தநெஞ்சொடுவிரைவின்மைத்துனரானகொற்றவரெய்தினர். (ருசா)

‡ தாமன் - சூரியன். § வசுகிரி - பொன்மலை.

* எய்துமைத்துனரெய்துதெவ்வரொடெண்ணில்போர்செயவிண்ணிடைச்
செய்துபெற்றனதேரினின்றுமிழிந்துளானனிசீறினன்
மொய்திறற்பவமானனன்றுமுருக்குமுக்குவடென்னவே
கைதவப்படைமன்னர்மாமுடிசிதையவங்கொருகதையினல். (ருஎ)

* அம்பரத்தவர்கண்டுநின்றவரதிசயித்திடவானின்மே
லிம்பரிப்படிதெவ்வர்வெம்படையிரியவன்பொடுதிரியவே
தம்பிபட்டனனென்றுகொண்டெழுசாகரத்தெழுதழலெனத்
தும்பையுற்றுமிலேச்சியீசனளித்தவில்லொடுதோன்றினன். (ருஅ)

* சங்கினங்கள்முழங்கவும்பணைமுரசினங்கடழங்கவுந்
துங்கவெங்களிறிவுளிதேரொடுதானைமன்னவர்சூழவு
மெங்குநின்றனனெங்குநின்றனன்மத்திரத்தரசென்றுபோ
யங்குநின்றமகிபர்வெங்கிடவவனைமுந்துறவணுகினன். (ருகூ)

வே று.

* சல்லியனெனப்பெயர்தரித்துவருகோமுன்
வல்லியமெனத்தகுசிவேதனமர்வல்லான்
பல்லியமுழக்கியதெனப்பலவும்வீரஞ்
சொல்லியொருவர்க்கொருவர்தொடுசிலைகுனித்தார். (கூ0)

* ஒருவருமிவர்க்குநிகரில்லையெனவுற்றே
யிருவருமலைத்திடவிராசகுலராசன்
பருவரல்கொண்மத்திரபதிக்குதவியாகென்
றருவரையொடொத்தபுயராறுவரைவிடுத்தான். (கூக)

* தரணிபதிதம்பியர்கடானையொடுவந்தே
யிரணமுகமொன்றுமயிலோனெனவெதிர்த்தார்
திரணறைகொடார்புனைசிவேதனவரந்தக்
கரணம்வறிதாகும்வகைகணைபலதொடுத்தான். (கூ௨)

* முரண்டெதிருமன்னவர்முரண்கொள்சிலையோரொன்
றிரண்டுசிலையாகவொருவீரனிவையெய்தான்
றிரண்டுவருமன்னர்முடிசிந்தியுடன்மண்மேற்
புரண்டுவிழவாளிமழைதூவுபுயல்போல்வான். (கூ௩)

* தேரும்விசைகூரிவுளியுஞ்செறிபனைக்கைக்
காருமயில்வாள்சிலைதரித்துவருகாலாள்
யாரும்வெடிபூளைவனமென்னவொருதானே
யூருமொருதேரநிலமொக்குமெனநின்றான். (கூச)

* பட்டனவொழிந்துபலபடையுமிவனம்பிற்
கெட்டநிலைகண்டுரககேதனனுரைப்பத்
தொட்டவரிவில்லினெடுசூறையநிலம்போல்
விட்டபரிமாவிரதவீடுமனெதிர்ந்தான். (கூரு)

* மத்திரனைவிட்டமிசைவந்தமகிபதிமே
லத்திரமும்விட்டவனடற்சிலையறுத்தான்
சித்திரமெனும்படிதிகைத்தனன்விராடன்
புத்திரன்விடுங்கணைபொருதுபுலிபோல்வான். (சுசு)

* வீடுமனுமீளவொருவிற்கொடுசுவேதன்
சூடுமுடிவீழவொருசுடுகணைதொடுத்தான்
கோடுசிலைவாளிபலகொண்டிவனவன்றேர்
நீடுகொடியாடையைநிலத்துறவழித்தான். (சுஎ)

* பின்னையுமவன்றனிபிடித்துவருசாபந்
தன்னையுமிவன்பலசரங்கொடுதுணித்தான்
மின்னையுநகும்பகழிவீடுமன்வெகுண்டாங்
கென்னவமர்செய்வதினியென்றுதளர்வுற்றான். (சுஅ)

* தளர்ந்தநிலைகண்டுதுரியோதனனரும்போர்
விளைந்ததுசுவேதனுடன்வீடுமனிளைத்தா
‡ னிளந்தலையுறாதபடியேகுமினெனப்போய்க்
கிளர்ந்தமுடிமன்னர்பலர்கிட்டினர்விரைந்தே. (சுகூ)

* அந்தமுடிமன்னவரநேகரையுமுன்னம்
வந்தவழிமீளவும்வரும்படிதுரந்தான்
றந்தம்வரிவில்லுமணிதாரும்விடுதேருஞ்
சிந்தவெரிகால்வனசிலீமுகம்விடுத்தே. (எ0)

* வெவ்வனலநேர்குருராசனையும்வேறோ
ரைவரையுமேவினன்முனைந்தனர்களவருஞ்
செவ்வரைகள்போல்பவர்சிரங்களும்வளைக்குங்
கைவரிவிலுந்துணிபடக்கணைதொடுத்தான். (எக)

* கங்கைமகன்மற்றுமொருகார்முகம்வளைத்துச்
சிங்கமெனவப்பொழுதுறுக்கியெதிர்சென்றா
னங்கவனகைத்தொருதனம்புகொடுமீளப்
பங்கமுறவிற்றுணிபடுத்தியெதிர்நின்றான். (எஉ)

* ஆனபொழுதந்தரநெருங்கியமர்காணும்
வானவர்விராடபதிமைந்தனைமதித்தார்
வேனிலவன்மேனுதல்விழித்தவனளிக்குங்
கூனல்வரிசாபமிதுகொண்டனன்வரத்தால். (எங)

* ஏறனையவீடுமனிளைத்தபடிகண்டால்
வேறவனைவில்லவரில்வெல்லவுரியார்யார்
மாறுபடுவெஞ்சமரில்வஞ்சனையிலன்றிக்
கோறலரிதென்றனர்குலப்பகைமுடிப்பார். (எச)

---

‡ இளந்தலை - கீழ்மை.

* ஓகைநிகழெண்வகைவசுக்களிலொருத்த
னாகியநராதிபதியம்முறையறிந்தான்
வாகைவரிவில்லொழியவாளயில்களென்னும்
வேகமுறுவெம்படைகள்கற்றிலைகொல்வெய்யோய். (எரு)

* என்றெதிர்சிவேதனெடியம்புதலும்வெள்கிக்
குன்றுசிலைகொண்டவனளித்தசிலைகொள்ளான்
வென்றிவடிவாளுருவிமேலுறநடந்தா
னின்றவனும்வேறொருநெடுஞ்சிலைகுனித்தான். (எசு)

* வாளினெதிர்வெஞ்சிலைவளைத்தவயவீரன்
றோளிணையினொன்றுதுணியக்கணைதொடுத்தான்
காளையொருகைவிழவுமற்றையொருகையான்
மீளவும்வெகுண்டுசுடர்வாளினையெடுத்தான். (எஎ)

* எடுத்தவடிவாளினெடுமெண்ணில்பலபாணந்
தொடுத்துவருவீடுமனைமாமுடிதுணிப்பா
னடுத்துவருபோதவனுமற்றொருசரத்தா
னடுத்தகையுருமலவனல்லுயிர்கவர்ந்தான். (எஅ)

வேறு.

* பூழிபடநிலமசையப்பொற்சுண்ணங்கமழ்மேனிப்புதல்வன்வீழ
வாழிமொழிந்துளமகிழ்ந்தாரந்தரதுந்துபிமுழங்கவானோருள்ளா
ரூழிபெயர்ந்துலகேழுமுள்ளடக்கித்திசைநான்குமுகளித்தேறி
யாழிபரந்தார்ப்பனபோலார்த்தனவப்பெருஞ்சேனையரசரெல்லாம். (எகூ)

* உடைந்ததடந்தேருருள்களுகுகுருதிப்புனறோறுமும்பர்வானி
லடைந்தவயவருக்குவழியாயசுடர்மண்டலத்தின்சாயைபோலு
மிடைந்தகுடைகாம்பற்றுமிதப்பனவுங்கரியபுகர்வேற்கண்மாதர்
குடைந்தநறும்பரிமளச்செங்குங்குமநீரிடையெழுந்தகுமிழிபோலும். (அ0)

* வெங்கலங்கற்சடுங்குருதிவெள்ளத்துக்கொடியாடைமிதக்குந்தோற்றஞ்
செங்கலங்கற்புதுப்புனலில்விளையாடித்திரிகின்றசேல்கள்போலும்
பொங்கலங்கனிருபர்தலைபுனைமகுடத்துடன்கிடப்பப்பொறியார்வண்டு
தங்கலங்கல்வண்கனகசததளபங்கயமுகுளசாலம்போலும். (அக)

* எண்ணிழந்தகுருதிநதியிருமருங்குங்கரிபரியாள்கரைகளாகக்
கண்ணிழந்தபறையிடையேசெருகியகால்வாய்த்தலையின்கண்கள்போலு
மண்ணிழந்துபடுமரசர்மணிக்கலங்கள்பலசிந்திவயங்குந்தோற்றம்
விண்ணிழந்துபரந்தசெழுங்கடலிடையேமீனினங்கள்வீழ்வபோலும். (அஉ)

* பட்டநுதற்களியானைப்பாண்டவர்தம்படைத்தலைவன்பட்டானாகத்
தொட்டகழற்றடமகுடச்சுடர்வடிவாண்மகிபரெலாந்துணுக்கமெய்தி
விட்டபடங்கியல்பாடிவீடணைந்தார்வெயிலோனுமேல்பாற்குன்றிற்
கிட்டவவன்வடிவமுமிக்குருதியினாற்சிவந்ததெனக்கிளர்ந்ததம்மா. (அங)

* திருநெடுமான்முதலானதேர்வேந்தர்விராடனுழைச்சென்றன்மைந்த
ரிருவருமின்றொருபடியேவெஞ்சமரிலெஞ்சினரென்றிரங்கலையா
பொருமுனையில்வீடுமனைப்புறங்கண்டுநிருபரெலாம்பொன்றவென்று
விரகுடன்வாளெடுப்பித்தபிறகன்றோதொடுசரத்தால்வீழ்ந்ததென்றார். (அச)

* பேய்செய்தவரங்கனையபெருங்கானிற்றிரிவோர்க்குப்பெற்றகாதற்
றாய்செய்தவுதவியினுந்தகுமுதவிபலசெய்தாய்சமருடின்றுன்
சேய்செய்தவுயிருதவிதேவரெலாந்துதிக்கின்றார்செறிந்தோர்தம்மி
னீசெய்தபேருதவியார்செய்தாரெனவுரைத்தானெறிசெய்கோலான். (அரு)

* உன்னுயிர்போனீவளர்த்தவுத்தரன்றனுயிருமுருத்தெழுஞ்சிவேதன்
றன்னுயிரும்போரரசர்தாமிருந்துகொண்டாடச்சமரில்வீழ்த்தா
ரென்னுயிருநினதன்றியாரதினிச்சதுர்முகத்தோனீன்றபாரின்
மன்னுயிருக்குயிரனையாயெனவுரைத்தான்வளமலிசீர்மச்சர்கோமான். (அசு)

* முப்பொழுதுமுணர்கேள்விமுகுந்தனுடன்பாண்டவருமுடிசாய்த்தாங்க
ணெப்பொழுதுவிடிவதெனநினைதருமெல்லையின்வல்லேயிரண்டுபோரு
மப்பொழுதுகாண்டற்குவருகின்றானெனத்தடந்தேரருக்கன்வந்தான்
மைப்பொழுதுஞ்சிவேதனெதிர்மத்திரத்தான்வரூதினிபோன்மாய்ந்ததம்மா.

முதற்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - உகஉ.

இரண்டாம்போர்ச்சருக்கம்.

வானையாதிபூதராசிதோறுமாயமாயனை
ஞானமாதிமறையினுச்சிநண்ணிநின்றகண்ணனை
மோனமோர்முனிக்குழாமுணர்ந்தமுத்திவித்தினை
யானுழன்றபிறவிதீரவிருபதங்கடுதிசெய்வாம். (க)

* சோனைமேகமென்னவாளிதூவுதிட்டத்துய்மனைச்
சேனைநாதனாகிநீசெருச்செய்கென்றுசெப்பினன்
வானையாதியானபூதபேதமாகிமாயையா
யேனைஞானரூபியாகியாவுமாயவெம்பிரான். (உ)

* ஐவர்சேனையிங்கெழுந்ததங்கெழுந்ததடலுடைத்
தெவ்வர்சேனைவெகுளியோடெழுந்திரண்டுசேனையும்
பவ்வமோரிரண்டெழுந்துபடர்வதென்னவெருவருங்
கவ்வையோடுவந்துவெங்களத்திடைக்கலந்தவே. (ங)

* வெம்பராகம்வெளியிலுற்றெழுந்தபோதுவேழவிற்
சம்பராரிதகனகாளிலன்றெழுந்ததன்மையென்
றும்பரார்நடுங்கினாருருத்துவீழுமுருமென
விம்பரார்நடுங்கினாரிரங்குபல்லியங்களால். (ச)

* அளவின்மன்னரேறுதேர்களாறிரண்டுபத்துநூ
றிளவலோடுகசதுரங்கமங்களோடுமிடம்வரப்
பளகமன்னவெழுபதிற்றுப்பத்துநூறுதேரொடும்
வளவராதிமன்னரோடுநகுலராசன்வலம்வர. (ரு)

* மிடல்கொள்வாளமைச்சரோடுவிரைவின்வீரர்பின்வர
முடுகுசேனைபிமன்வீமன்விசயன்மாயன்முன்செல
நடுவுநால்வகைப்படும்பதாதியோடுநாயகன்
கடக ‡ நாதனுடனணிந்துநின்றனன்களத்திலே. (சு)

* மாடிரண்டுமெண்ணில்கோடிமன்னர்சேனைநிற்கவும்
பீடுகொண்டநேகமன்னர்பேரணிக்கணிற்கவுஞ்
சூடுதும்பைமண்டலீகர்தூசியாகநிற்கவும்
வீடுமன்மகிபரோடுநடுவண்வந்துமேவினன். (எ)

வீசுகொண்டலுடனெதிர்ந்துகோடையுந்திவீசவே
மூசுகொண்டலோரிரண்டுமுடுகிநின்றுபொழிவபோற்
றூசிநின்றவீரரோடுதூசிவீரர்வில்வளைத்
தாசுகங்கள்வீசவீசவந்தரம்புதைந்தவே. (அ)

* சொற்கையாதவாய்மைவல்லதுருபதன்குமாரனும்
விற்கையாசிரியனுமுற்றெதிர்ந்துதம்மில்வெகுளவே
பொற்கைவெஞ்சராசனம்பொழிந்தகோலிழிந்தவா
னுற்கையென்னவொருகைமாமுகங்களூடொளித்தவே. (கூ)

* வீரசாபமுடனுரைக்கும்வெய்யசாபம்வல்லவத்
தீரன்வாளியாலழிந்துசிலையுமேறுதேரும்விட்
டீரமாமதிக்குடைந்தவிருள்கொலென்னவேகினு
னூரவாரமுடன்மலைந்தவைவர்சேனையதிபனே. (க0)

* உடைந்துடைந்துசேனைமன்னன்வருதல்கண்டுருத்துவான்
மிடைந்தகொண்டலெனவதிர்ந்துவீமசேனன்வேலையைக்
கடைந்தகுன்றொடொத்ததேர்கடாவிவந்துமுனிவனோ
டடைந்தமன்னருட்கியோடவொருகணத்திலமர்செய்தான். (கக)

* உக்கிரமாகவீமன்வந்தவுறுதிகண்டநேகபோர்
விக்கிரமாமதத்தடக்கைவேழவீரர்தம்முடன்
வக்கிரசாபமழைபொழிந்துவடகலிங்கமன்னவன்
சக்கிரதேவன்முகிலெறிந்தவுருமெனத்தலைப்பெய்தான். (கஉ)

வேறு.

* கதிக்கடுந்தேரினின்றிழிந்துகாலிங்கர்
மதிக்குமும்மதகரிவந்தயானையுந்
துதிக்கைவன்கரங்களாற்சுற்றியெற்றினன்
விதிக்கொருவிதியனன்வீமசேனனே. (கங)

---

‡ கடகம் - சேனை.

✽ மின்பொழிபடையுடைமேவலாருட
லென்புகவிபங்களையெடுத்தெறிந்தனன்
தன்பெருந்துணைவனுந்தாமமாருதி
வன்புடன்பறித்தெறிவரைகளென்னவே. (கசு)

✽ வெம்பிமேல்வருதிறல்வீமன்மும்மதத்
தும்பிமேல்விழவிழத்தும்பிவீசுவ
பம்பிமேலெறிதருபவனனுற்கட
லம்பிமேல்விழவிழுமம்பிபோன்றவே. (கரு)

✽ வருகளிறொருகையால்வாங்கிவீசலிற்
பொருபணைமண்ணுறப்புதையவீழ்ந்தன
விரிதிரைநெடுங்கடல்விசும்புதூர்த்தநா
ளிருநிலமிடந்திடுமேனம்போன்றவே. (கசூ)

✽ கழலணிபொலங்கழற்காளைகைகளா
லெழுவெழுமதகரியெடுத்துவீசலின்
விழுவனவன்றிமேல்விசையிற்போவன
பழையதஞ்சிறகுடன்பறப்பபோன்றவே. (கஎ)

✽ புகலுறுகலிங்கர்கோன்போரில்வென்னிட
விகலுடனெடுத்தெடுத்திவனெறிந்தபோ
தகல்வெளிமுகடுறவதிர்ந்துமேலெழு
முகில்கள்வான்முகில்களைமுகப்பபோன்றவே. (கஅ)

✽ வென்னிடுகடகரிவீரன்வீமன்முன்
முன்னணிகலங்குறமுறிந்தவாறுகண்
டென்னிதுவெனமொழிந்தேறுதேரொடுந்
தன்னொருசிலையொடுந்தானுந்தோன்றினான். (கசூ)

✽ களத்திடைமடிந்தனகலிங்கன்வேழமென்
றுளத்தழல்கண்ணிணைசிவப்பவுந்திடத்
தளத்தரணிபரெனுந்தானையானைகள்
வளைத்தனமருத்தின்மாமடங்கறன்னையே. (உ0)

✽ கந்தடர்களிற்றுடன்கலிங்கபூபதி
மைந்தருஞ்சேனையும்பொருதுமாய்ந்தபி
னிந்திரனுற்சிறகிழந்தகுன்றுபோற்
சிந்தைநொந்துடன்றனன்சேனைமன்னனே. (உக)

✽ வீமனுந்தனதுதேர்மேல்கொண்டாங்கொரு
தாமவேலவன்புயத்தடத்திலோச்சினான்
மாமருமாலையான்றுனுமற்றவே
ரேமரமொன்றினாற்றுணித்துவீழ்த்தினான். (உஉ)

வேறு.

* ஓடுமிரதத்திவுளிநாலுமுடலற்றுவிழவோரோர்கணைதொட்டிரதமு
மீடுகுலையத்துவசம்வீழவனிகத்தவருமேகவெதிர்முட்டுதலுமே
நீடுவரையொப்பதொர்கதாயுதமெடுத்தனுகிநேர்படவடித்தனனரோ
வீடுமன்மனத்தனையதேர்வலவனைக்கடிதின்வீமனெனும்வெற்றியுரவோன். ()

* வேகமுடனிப்படியில்வீமனுமுடற்றியடல்வீடுமனொடொத்தமுதுபோர்
மோகரவிதத்தரசர்மாமகுடரத்னமுடன்மூளைகடெறிக்கவடியா
நாகமொடெடுத்திவுளிதேர்சிதறமுற்றவொருநாழிகையிலெற்றிவரவே
யாகவமுழுக்கவுருமேறெறிவதொக்குமெனவாரவமிகுத்ததறவே. (௨௪)

* மீளவும்வளைத்தசிலைவீடுமனதிர்த்தகுரல்வீமனொடுருத்திருவருங்
காளமுகிலுக்குமுகினேர்மலைவதொக்கவெரிகாலுநயனக்கடையினார்
மூளவெதிர்முட்டியெதிர்சேனையுநிலத்துதிரமோதுபொழுதத்துவெகுளா
வாளபிமன்வெற்றிவரிவார்சிலைகுனித்துவயவாளிகடொடுத்துவரவே. (௨௫)

* வார்சிலையைவட்டவடிவாம்வகைவணக்கியெதிர்மாறுபடவுற்றுவருவோ
ரோரொருவர்நெற்றிதொறுமோரொருவடிக்கணைகளூடுருவவிட்டுநகுவோன்
மேருவைவளைத்துநெடுவாசுகிபிணித்துமழைமேகநிகர்மெய்க்கணைதொடா
வாரழலின்முப்புரமுநீறெழநகைத்தவரவாபரணனொத்தனனரோ. (௨௬)

* மேவலர்விதப்படையும்வீடுமனுமுட்கும்வகைவீமனும்விறற்புதல்வனும்
பூவலயமுற்றுமெழுகாலவிறுதிப்பரவைபோலிகல்விளைத்தபொழுதிற்
கூவலினிலைப்புனலுமீதெழவொத்ததொருகோபமொடுசர்ப்பதுவசக்
காவலனுரைப்பவிருவோரையும்வளைத்தனர்கள்காவலரெனைப்பலருமே. (௨௭)

* தானவர்சமத்துமிருதோள்வலியுமற்றுமுனைதானைபுறகிட்டழியவே
வானவர்துதிக்கவயவாகைபுனையக்கடவுள்வாழ்வினிதளித்துவருவோன்
மீனவனெனத்தகையகாளையொடெடுத்தகதைவீமனைவளைத்தனரெனக்
கூனல்வரிவிற்பகழிதூவியிரதத்தின்மிசைகூவியவரைக்குறுகினான். (௨௮)

மாலையரனப்பொளிருமாமுடிதுளக்கியெரிவாணகைசெய்முப்புரமெனா
வேலைவடவைக்கனலினாலுலகுமுற்றுமழிவேகமெனவெற்றிநிருதன்
ஏலுமரசுற்றபதிநீறெழவடர்த்தனுமனேயெனவுருத்தடையலார்
நாலுவகையுற்றனிகவேலைசுவறிற்றரசனால்விடுபடைக்கனலினே. (௨௯)

* வீசுபகழித்துளியின்மேகமெனவிற்கொடிவன்மேலுறநடக்குமளவிற்
றேசுடையருக்கனெதிர்மூடுபனியொத்தரசர்தேரணிகெடச்சிதறினார்
மாசுணமணிக்கொடிமகீபதிபடைத்தலைவன்வார்சிலைவளைத்திலனெடும்
பாசறைபுகக்கடவினார்கடகளிற்றினணிபாய்பரியணிப்படைஞரே. (௩௦)

* வேலையமுதுக்குவருவானவர்களொத்தனர்கள்வீடுமன்முதற்படைஞரா
ராலநிகரொத்தனனனீகினிதொலைத்தொருதனுண்மைநிலையிட்டுவருவோன்
மேலினியிமைப்பொழுதுநாம்வெளியினிற்கிலிவன்மேலிடுமெனக்கருதினான்
போலெழுவயப்புரவியூருமிரதத்திரவிபோயுததியிற்சொருகினான். (௩௧)

* ஆதபனொளித்ததிசையோவொளிசிவந்ததறவாழ்குருதிமெத்துகையினன்
மாதிரமுமைக்கடலுமாநிலமுமுட்டவொருமாசறுசிவப்புவடிவா
யேதிலிருள்புக்குலவலாமிடமறக்கடலினேறனலியொத்ததிகலிப்
பாதகமிகுத்தகொலைவாளிருபர்தத்துமதுபாடிநகர்புக்கனர்களே. (௩௨)

* கூளிகள்செருக்கிநடமாடுகளம்விட்டரசர்கோமகனையுற்றளவிலே
வாளபிமனுக்குமொருதேர்விசயனுக்குநம்வருதினிபிறக்கிடுவதே
நாளைமுதுகிட்டவரையாருயிர்செகுத்திடுவனுனெனவுரைத்தனனிரா
மீள்வுமுதித்தனன்விரோசனன்முதற்பகலில்வீரர்விறலைக்கருதியே. (௩௩)

இரண்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - உசரு.

மூன்றும்போர்ச்சருக்கம்.

* தந்தமுறியிலவர்வைத்ததயிர்பால்வெண்ணெயெட்டாமற்
குந்தியுரலின்மிசையேறியிளங்கோவியர்முன்கூத்தாடி
நந்தன்மனையிலசோதையிருநயனங்களிக்கவிளையாடு
மைந்தனிருதாளொருநாளும்மறவாதாரேபிறவாதார். (௧)

* ஏலாவமரின்மூன்றுநாளிரண்டுபடையுந்திரண்டேறக்
காலார்திண்டோர்வீடுமனும்வகுத்தான்கடுங்காருடயூக
மேலாம்வென்றிப்பாண்டவர்தம்வெஞ்சேனையைக்கொண்டெஞ்சாமற்
றூலாவர்த்தசந்திரப்பேர்வியூகம்வகுத்தான்றுளவோனே. (௨)

* போரேதொடங்கியிருபடையும்புகுந்தபொழுதிலுகந்தொலைத்த
காரேதொடங்கிக்கார்கோள்வெங்கடுங்கால்கலிகொண்டார்ப்பனபோல்
வாரேதொடங்கும்பணைக்குலமுமணிக்காகளமுமுடன்முழங்கப்
பாரேதொடங்கியெவ்வுலகுமடைவேசெவிடுபட்டனவே. (௩)

* சொல்லார்கேள்விக்கங்கைமகன்றுரோணன்முதலாமதிரதரு
மெல்லாரிரதகயதுரங்கமேலாளுடனேகாலாளும்
வில்லான்முன்னூட்டமைத்துரந்தவீரன்றனையுஞ்சிறுபதத்தே
மல்லால்வஞ்சமல்லடர்த்தமாயன்றனையும்வளைத்தாரே. (௪)

* சூரர்க்கெல்லாமுதலெண்ணுந்துரியோதனனுந்தம்பியரு
மாரக்கவிகைக்காந்தாரர்முதலாயுள்ளவவனிபருஞ்
சேரத்திரண்டுகரிகளொருசிங்கம்வளைத்ததெனச்சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய்வளைத்தார்சமரம்விளைத்தாரே. (௫)

* வரத்தான்மறையாற்றும்பெற்றவரிசாபங்கள்பிடித்ததனிக்
கரத்தான்மறைந்ததவரவர்தங்கடைக்கண்படைக்கண்விரைந்துவிடுஞ்
சரத்தான்மறைந்ததகல்வானந்தரணிதலமச்சரந்துணித்த
சிரத்தான்மறைந்ததுகுருதிச்சேற்றுன்மறைந்ததிசைநான்கும். (௬)

* துவசம்பிளந்துதேருருந்துரகம்பிளந்துசுடர்மணிப்பொற்
கவசம்பிளந்துமார்பகமும்பிளந்தூடுருவக்கடோற்கசன்ரு
னவசந்திரமாமுனிவாளிதொடுத்தான்றெடுத்தநாழிகையி
னவசம்பிறந்துதம்பியர்முன்விழுந்தானொருவர்க்கழியாதோன். (எ)

* நாகந்துவசமெனவுயர்த்தோனடுங்காமுன்னநண்ணலரை
மாகந்தனிச்சென்றமர்கடந்துவருமைந்துடையோன்றிருமைந்தன்
வேகம்படநின்றொருசமரவேலான்மீண்டுமவ்வேந்தன்
பாகன்றனதுமருமத்திற்பாய்ந்தானவனுமாய்ந்தானே. (அ)

* விழுந்தான்வேலாற்றேர்ப்பாகன்வெஞ்சாயகத்தால்விறல்வேந்தர்
தொழுந்தாளரசன்றானுமுயிர்சோர்ந்தானென்னுந்தொனிகேட்டுச்
செழுந்தார்வாகைவிசயனையுந்திருமாலையும்விட்டொருமுனையா
யெழுந்தான்மந்தாகினிமைந்தனிளைத்தோர்தமக்கோரெயில்போல்வான். (கூ)

* வண்டாரலங்கல்வலம்புரியோன்மார்பந்தொளைத்தவாளிவழி
கண்டானெடுத்துத்தாழ்ந்ததிருக்கையாலணைத்துக்காற்றேரிற்
கொண்டானுவிதருமருந்துகொடுத்தானவனுங்கொடுத்தமருந்
துண்டானுண்டகணத்தினின்மீண்டுணர்ந்தானுலகேழுடையானே. (க0)

* மன்னன்றனையச்சந்தனுவின்மைந்தன்பெரும்பேரணிநிறுவிப்
பொன்னங்குன்றேயிவன்சிலையுமிவனேகாணும்புராரியென
மின்னுங்கழற்கால்வீமனுடன்வெம்போர்விளைத்துவிடலையராய்
முன்னின்றவரும்பின்னிடத்தன்முனைவாளியினால்வினைசெய்தான். (கக)

* மருமங்களினும்புயங்களினும்வதனங்களினுங்கண்களினும்
செருமும்படிவெங்கணைமாரிசிந்திச்சிந்திச்சிரந்துணித்துத்
தருமன்சேனைப்பரவையெலாந்தானேயாகித்தலைநாளிற்
பொருமந்தரமால்வரைபோலத்திரிந்தான்வெம்போர்புரிந்தானே. (கஉ)

* மலையொத்ததிருங்கடகளிறும்வயமாவணியுமான்றேருந்
தொலையத்தொலையயாவரையுஞ்சுடுவெங்கணையாற்றுரந்துதுரந்
தலையத்தரங்கமெறிகடல்வாய்வடவானலம்போலவனின்ற
நிலையைக்கண்டுங்காணான்போனின்றான்விசயனிகரில்லான். (க௩)

வேறு.

* கானெரிதுற்றெனவீடுமனிப்படிகாதிமலைந்திடவு
மானநினைத்திலைசாபமெடுத்திலைவாளிதொடுத்திலைநீ
யேனிதுனக்கெனமாயனுரைத்தவனேறிரதத்திழியா
வானதெனக்கினியாகவெனத்தனியாழியெடுத்தனனே. (க௪)

* ஆழியெடுத்தனன்வீடுமனைப்பொருதாவியழித்திடுவா
னூழிமுகக்கனல்போலெழுமப்பொழுதோடியருச்சுனனுந்
தாழிதனக்குமுன்வீடுகொடுத்தருடாளிணையைப்பிடியா
வாழியுனக்கிவனேவெதிர்வித்தகமாயவெனத்தொழுதான். (கரு)

* வாசவன்முற்பெறுகாளைதொழத்தொழமாறுபடச்சினவுங்
கேசவனிப்படிமேல்வருகிற்பதுகேவலமுற்றுணரா
நாசநமக்குறுகாலநணித்தெனநாடிநடுக்கமுடன்
றேசணிபொற்றடமேருவெனத்திரிதேரினைவிட்டிழியா. (௧௬)

* ஆரணகற்பிதமாதவவச்சுதவாழியிடைத்துயிலுங்
காரணசிற்குணரூபமலர்க்கொடிகாதன்மனத்துறையு
நாரணவற்புதவானவருக்கொருநாயகநிற்பணியும்
வாரணமுத்திவிசாலதலத்திடைவாழ்வுறவைத்தவனே. (௧௭)

* ஆவியழித்தனைதூணிலுதித்தடலாடகனைத்தலைநாண்
மாவலியைச்சிறுமாணுருவத்துடன்வார்சிறைவைத்தனையா
லேவிலரக்கனைவீழவடர்த்தனையானெரிலக்கெனவோ
நீவலியிற்சினமூளுமனத்தொடுநேமியெடுத்ததுவே. (௧௮)

* யானரகிற்புகுதாமலெனக்குயர்வானுலகைத்தருவா
னீநினைவுற்றதுபோனபிறப்பிலென்னீடுதவப்பயனே
யானுமினிப்பிறவாமலளித்தருளீசவெனப்பரவா
ஞானமனத்தொடுநாகுழறப்பலநாடியுரைத்தனனே. (௧௯)

* ஆரியனப்பொழுதாறினனிற்கவுமாடலருச்சுனனுந்
தாரைவடிக்கணையாயிரமுய்ப்பதொர்சாபம்வளைத்ததிரா
யாரெதிர்நிற்பினும்யாவர்தடுப்பினும்யானினியிப்பகலே
சேரமுருக்குவனேறுகெனத்தனதேர்மிசைபுக்கனனே. (௨௦)

மாயவன்முற்படுதேரினையுய்த்திடவானவருக்கிறைவன்
சேயவன்முக்கணனுகியெதிர்த்தவர்சேனைகள்முப்புரராய்க்
காயவனற்படுகானினிகர்த்ததுகாணவெவற்கெளிதே
தூயவர்கைக்கொடுவாள்விழிபொத்தினர்சூழ்கதிருட்கினவே. (௨௧)

* நீறுபடுத்தினன்மாமகுடத்திரணீணிலவைப்படையச்
சேறுபடுத்தினன்மூளைகளிற்றிசைசேர்குருதிப்புனலா
லாறுபடுத்தினனேரொருவர்க்கெதிராயிரம்வைக்கணையா
லீறுபடுத்தினன்வீடுமன்விட்டவர்யாவர்பிழைத்தனரே. (௨௨)

* வாயுவடிக்கணைவாசவன்வைக்கணைவாருணமெய்க்கணைசெந்
தீயின்வடிக்கணைதேவர்சுடர்க்கணைசேரவிடுத்தமையா
லாயமுனைப்படுதேரணிபட்டனவாளணிபட்டனவெங்
காய்கரிபட்டனபாய்பரிபட்டனகாவலர்பட்டனரே. (௨௩)

* நாடியொளித்தனர்சூழ்புனன்மத்திரநாடன்முதற்பலருங்
கூடியொளித்தனர்மாரதரிற்றிறல்கூறும்வயப்படையோ
ரோடியொளித்தனராடமரிற்றுரியோதனனுக்கிளையோர்
வாடியொளித்தனர்மாகதரொட்டியர்மாளவர்குச்சரரே. (௨௪)

கோகுலமுற்றவுரீறுபடுத்தியகோளரிகைத்திறல்கண்
டாகுலமுற்றனனுடரவக்கொடியாதிபனச்சுறுதேர்
பாகுலையச்சரமார்புருவப்படுபொன்மைதனிற்பெரிதா
யேகுதலிற்செயல்வேறறிகிற்றிலனேதுமிசைத்திலனே. (௨௫)

வேறு.

* பார்த்தனம்பினுன்மேவலார்படைப்பரவைசாயவேவிரவுகோவியர்
தூர்த்தனன்புடன்கண்டுவந்துதன்றெருக்கசேனையின்பக்கமெய்தினுன்
சேர்த்தவெம்பணைக்கொடிமகீபனும்வில்விநோதனுஞ்செல்வமைந்தனுங்
காத்துநின்றுதங்காவலன்றனைக்கொண்டுபாசறைகடிதினெய்தினர். (௨௬)

* வெஞ்சரத்தினால்விசயன்வென்றபோர்மிகுகளத்தின்வாய்விசையொடற்றன
குஞ்சரத்தின்வீழ்கைகளுகமேகுருதிவட்டமும்பரிதிவட்டமே
பஞ்சரத்தொடுந்திரியுமானையின்பக்கமெங்கணும்பட்டுமூழ்கிய
செஞ்சரத்தின்மேற்சிறகர்பண்டுவச்சிரமரிந்திடுஞ்சிறகர்மானுமே. (௨௭)

* கொற்றமன்னர்சென்னியினணிந்தபொற்கோளம்யாவையுந்தாளமாகவே
யற்றைவெஞ்சமத்தடலருச்சுனனுண்மைபாடிநின்றலகையாடுமான்
முற்றவெம்பிணக்குவையும்வேழமுமுடுகுவாசியுந்தேருமொய்ம்புறத்
துற்றகுன்றெனவொன்றுபட்டெழச்சொரியுமூளையாறருவியொக்குமே. (௨௮)

* பமரமும்மதக்கரிவிலாவின்வேல்பட்டவாய்நிணம்பறியநிற்பன
குமரன்வேலின்வாயனலமூர்தருங்கோடுடைத்தடங்குன்றமொக்குமா
லமரர்கோன்மகன்செங்கையம்பினுலற்றவீரர்தந்தலைகள்கவ்வியச்
சமரபூமிசேர்ஞாளிமானுடத்தலைவிலங்கினிற்றன்மைசானுமே. (௨௯)

* அன்றுவெஞ்சரத்தொடுதெறிந்தவாளரசர்சோரிமெய்ப்பட்டதாதலிற் [று
சென்றுசெங்கதிர்ச்செல்வன்வாருணத் திசையடைந்துவெண்டிரையின்மூழ்கி
னின்றருச்சுனன்பொரமறந்ததும்நெடியசெங்கண்மானேமிதொட்டதும்
பின்றைவில்லெடுத்தமர்மலைந்ததும்பேசினுன்மகீபதிபிதாமகன். (௩௦)

* தருமன்மாபெருஞ்சேனைதன்னுளார்தங்களாதரத்தொடுதனஞ்சயன்
பொருவிலாண்மையும்வீமன்மாமகன்பொருதவீரமும்புகழ்ந்துபாடினு
ரரவகேதனன்சேனைதன்னுளாரழிந்தமன்னருக்கழுதரற்றினு
ரிருவர்சேனையுங்கண்படாமலன்றிரவுபட்டதென்னென்றியம்புவாம். (௩௧)

* நென்னலங்கையிற்கொண்டதென்னையேநேமியாகவந்நீலமேனியா
னின்னமும்பொரத்தேடுமாகவத்தின்றுமென்றுகொண்டெண்ணியேகொலோ
தன்னெடுந்தனிச்சயிலமும்பொலந்தமனியத்தடஞ்சயிலமாகவே
மின்னெடுஞ்செழுங்கதிர்பரப்பினுன்வெய்யவேழ்பரித்தேர்விபாகரன். (௩௨)

மூன்றும்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௨௭௭.

நான்காம்போர்ச்சருக்கம்.

* தேடியவகலியைசாபந்தீர்த்ததா
ணீடியவுலகெலாமளந்துநீண்டதா
ளோடியசகடிறவுதைத்துப்பாம்பின்மே
லாடியுஞ்சிவந்ததாளென்னையாண்டதாள். (க)
* நற்பகலிடைவருநளினநாயகன்
பொற்பகலுறவொளிபுரியுநேமியான்
பிற்பகலணியையும்பிறங்குசேனையான்
முற்பகல்வியூகமேயாகமூட்டினான். (உ)
* கார்முகில்வண்ணனைக்கண்டகொணலார்
தாமுமவ்வியூகமேசமைத்துமுந்தினு
ரேமமோடெதிர்முனைந்திருவர்சேனையும்
போர்முரசெழவெழப்பொங்கியார்த்தவே. (ஙு)
வாரணகரத்தினன்மைத்துனன்றனைப்
பூரணகலைதெரிபுனிதன்முந்தின
னாரணச்சிலைமுனிதன்னையண்மினர்
காரணப்பகையெனப்புகலுங்காவலர். (ச)
* ஏழிருபுவனமுமேந்துமேருவைச்
சூழ்வனகிரிக்குழாஞ்சுற்றுமாறுபோற்
பாழியம்புயகிரிப்பவனன்மைந்தனை
வேழவெம்படையுடைவேந்தர்சூழவே. (ரு)

வே று.

ஆலாலமெனக்கதுவாவதிரா
மேலாள்விழவீமன்வெறுங்கைகளா
லேலாவுடலென்புகமோதவெறுந்
தோலாயினசிற்சிலதோலினமே. (சா)
* மேல்வாய்தமகையொடுமேலெழவுந்
தோல்வாயவைகீழ்விழவுந்துணியா
மால்வாரணம்வாய்கள்கழன்றனமுன்
னூல்வாயெனுகாமநலம்பெறவே. (எ)
* மதிவெண்குடைமாருதிவன்புடனே
குதிகொண்டொருகைகொடுகுத்துதலா
லதிர்சிந்துரவல்லூரமத்தனையு
மெதிர்சிந்துரமாகியிளைத்தனவே. (அ)
* உடலிற்றசையாவுமுடைந்துநெடுங்
குடலற்றுவிழும்படிகுத்துதலான்
மிடல்பற்றியவீமன்வெறுங்கைகளா
லடலத்திகளத்திகளாயினவே. (கூ)

* கந்தாவகன்மொய்ம்புறுகாளைபுயக்
கந்தாலமர்செய்துகலக்குதலிற்
றந்தாவளசேனைதரிப்பறவே
தந்தாவளமுற்றனசாயுறவே. (கo)

* வெவ்வாயுவின்மைந்தன்வெகுண்டொருதோள்
மொய்வாகுவில்வைத்தெதிர்மோதுதலாற்
கைவாலதிமெய்தலைகால்கள்கரந்
தவ்வாரணம்வாரணமாகியதே. (கக)

தம்பித்தனதாருடல்பேருயிருங்
கும்பித்தனவாயுகுமாரனிவ
னம்பொற்கரபங்கயமள்ளுதலிற்
றும்பிக்குலமாயினதும்பிகளே. (கஉ)

* மின்னாகமணிப்புயன்வெங்கதையான்
முன்னாகமலைந்துமுருக்குதலா
லெந்நாகமுநாகமெனும்படியே
மன்னாகவமெங்குமடிந்தனவே. (கங)

* கோடுங்கரமும்பறியக்குதிகொண்
டோடுங்குருதிப்புனலூடுடல
மூடும்படியாவருமூழ்குதலா
லாடுங்கயமாயினவக்கயமே. (கச)

* வீசுந்தமகைம்முதன்மெய்ம்முழுதுங்
கூசும்படிசிற்சில்குழம்புகளாய்
மூசுங்களபக்குலமொய்ம்பனுடற்
பூசுங்களபக்களிபோன்றனவே. (கரு)

* கிரியேயெனவந்தெதிர்கிட்டினபுன்
பொரியேயெனவானிடைபுக்கனபோ
ரரியேறனையான்வலிமைக்கவர்தங்
கரியேகரியல்லதுகண்டவர்யார். (கசு)

* இவ்வாறுவெகுண்டிவனெற்றுதலுங்
கைவாரணவேலைகலக்கமுறத்
தெவ்வாகியமன்னவர்தேர்களொடும்
வெவ்வாசிகடம்மொடும்வென்னிடவே. (கஎ)

* உடைகின்றமைகண்டுரகத்துவசன்
குடையுங்கொடியுங்குளிர்மாமுரசும்
படையுஞ்சிலதம்பியரும்பலரும்
புடைகொண்டுவரப்போனவன்மேல். (கஅ)

* வீமற்கெதிர்நின்றவன்வில்லறவுஞ்
சேமக்கவசஞ்சிதைவுற்றிடவு
நாமக்கணையேவினனாயகனா
மாமுத்தமதிக்குடைமன்னவனே. (௧௯)

* ஆறம்பினிலற்றரவத்துவச
நூறம்பகன்மார்பினுழைந்தனபின்
வேறம்புதொடுத்திலன்வீமனவன்
மாறம்புதொடுத்தனன்மற்றிவன்மேல். (௨௦)

* சிங்கக்கொடியற்றணிதேர்சிதைவுற்
றங்கத்தினுழைந்தனவம்புகளுந்
துங்கக்கடகத்திரடோள்புடையா
வெங்கட்கனல்வீமன்வெகுண்டனனே. (௨௧)

* நொந்தானிவனென்றுநுதிக்கதிர்வே
லந்தார்முடிமன்னரநேகருடன்
வந்தார்பலதம்பியர்மைத்துனருங்
கொந்தார்தொடைவீரகுமாரருமே. (௨௨)

* மலருங்குடைமன்னவர்வந்தமைகண்
டலருங்கொடிவாளரவோனருகே
பலருங்கரிதேர்பரியாளுடனே
சிலரும்புவிபாலர்திரண்டனரே. (௨௩)

வேறு.

* எதிர்ந்தார்மன்னரிருதிறத்துமொருவர்க்கொருவரிடையிடைநின்
றதிர்ந்தார்சிறுநாண்பேரொலியாலுடையாவல்லவகிலாண்ட
முதிர்ந்தார்போரிற்றெடுகணையான்முரட்டோடணிந்துமுடிதுணிந்து
முதிர்ந்தார்தத்தமுடனிலத்திலுயர்ந்தாராவியுயர்வானில். (௨௪)

* தாமத்தெரியல்வலம்புரியோன்றடந்தாமரைக்கைத்தனுத்தறியச்
சேமக்கவனப்பவனகதிப்பரிமானான்குஞ்சிரந்துணிய
மாமொட்டொடிந்துகொடிஞ்சியுடன்மான்றேர்சிதையமார்புருவ
நாமக்கணைகள்பலபடவில்லுகைத்தானின்றுநகைத்தானே. (௨௫)

* முன்னாளமரிற்கடோற்கசன்றன்முனைவெஞ்சரத்தான்மூழ்குவித்தான்
பின்னாண்மீளப்பிறைக்கணையாற்பிளந்தானவனைப்பெற்றெடுத்தோ
னென்னாவிரங்காமெய்ந்நடுங்காவெடுத்தாரணைத்தார்சகுனியுமப்
பொன்னார்தடந்தேர்ச்சல்லியனுமுதலாவுள்ளபூபாலர். (௨௬)

* தம்முன்றளர்ந்தநிலைகண்டுதரியாராகித்தம்பியர்க
ளெம்முன்பொருதற்கிசைவார்களிசைவீரென்றென்றிகல்கூறித்
தெம்முன்செவிகள்செவிடுபடச்சிறுநாணெறிந்துதேர்கடவி
முன்முன்கடிதிற்கணைபொழிந்தார்முகுந்தன்றடுத்தமுகில்போல்வார். (௨௭)

* வின்மேல்விசையிற்கடும்பாணமேன்மேனிறுத்திவேந்தரைப்பார்த்
தென்மேனிணைவென்றவரவர்பேரிரதந்துணித்துச்சிலைதுணித்துத்
தன்மேல்வந்ததம்பியரிற்றரியாதுடன்றவைவர்க்கு
மன்மேலெய்தவாளியெனத்தொடுத்தானேந்துவயவாளி. (உ௯)

* சேனாவிந்துசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்த
னுனாவீமவாகுவெனுமடல்வாணிருபரைவரையும்
வானாடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மையைவரையுங்
கானாள்கென்றகாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன். (உ௯)

* ஒருபால்வீமன்சிலைவிசயனொருபாலொருபாலபிமன்னு
வொருபானகுலன்சாதேவனொருபாலொருபாலுராகேச
னொருபாலரக்கன்பாஞ்சாலனொருபாலடலுத்தமபானு
வொருபாலுடன்றுபொரப்பொரவேயுடைந்ததரசன்பெருஞ்சேனை. (௩௦)

* விண்ணாடருக்காவெஞ்சமத்திலசுராதிபரைவென்கண்டோன்
மண்ணாளரசர்மகுடசிகாமணியேபோல்வான்மாமரபாற்
பண்ணார்பஞ்சகதிமான்றேர்ப்பகலோனன்னபகதத்த
னெண்ணார்துரக்கவரும்படையையஞ்சலென்றென்றெதிர்சென்றான். (௩௧)

* அலைகால்வெள்ளக்கருங்கடல்போலதிராநின்றவாகவத்தின்
மலைகால்பெற்றுவருவதுபோல்வருதிண்பணைக்கைமாமிசையான்
சிலைகால்வளைத்துத்தீவாய்வெஞ்சரங்கொண்டடையார்சிரங்கொண்டான்
கொலைகால்செங்கட்கரியநிறக்கூற்றன்றனக்குங்கூற்றன்னான். (௩௨)

* தாராரோடைத்திலகநுதற்சயிலம்பதினாயிரஞ்சூழ
வாராநின்றமதகயத்தின்வன்போர்வலியுமனவலியுஞ்
சேரார்வணங்கும்பகதத்தன்றிண்டோள்வலியுஞ்சிலைவலியும்
பாராநின்றகடோற்கசன்றன்படையின்றளர்வும்பார்த்தானே. (௩௩)

வேறு.

* ஆயபோதிலாயிரநூறுமதமாவு
மேயதீயகாலனையொக்குமேலாளுஞ்
சாயகம்முஞ்சாபமும்யாவுந்தானேயா
மாயவேடங்கொண்டவனோடுமலைவுற்றான். (௩௪)

* சங்கமுதத்தார்முரசார்ப்பமுழவார்ப்பப்
பொங்கும்பூழியாழிவறக்கும்படிபோதச்
சிங்கங்குன்றிற்செல்வதுபோலச்சிலையோடு
மெங்குந்தானும்வேழமுமாகியெதிர்சென்றான். (௩௫)

* மைபோலார்த்துமும்முறைதானமழைசிந்திக்
கைபோய்முட்டிக்கையொடுதத்தங்கால்வீசி
மெய்போல்வெம்போர்செய்தனவீரன்விறல்வேழம்
பொய்போனின்றவருபகதத்தன்போர்வேழம். (௩௬)

* நின்றார்நின்றபடிகடிதாகநெடிதோடிச்
சென்றார்கண்டசிந்துரம்யாவுந்தீயம்பிற்
கொன்றார்மற்றக்கொற்றவர்யாருங்கொலையுண்டார்
வென்றானன்றேவீமன்மகன்சேனையில்வீரர். (௩௭)

* ஆனதானவாகவமெங்குமானைப்போர்
போனபோனமைந்தர்பிழைப்பீர்போமென்றென்
றானமெய்தாதவ்விறைபோனானுயிரோடும்
போனகண்டகாய்க்கதிரோனும்புறமிட்டான். (௩௮)

* பூந்தண்மாலைப்பஞ்சவரானைப்போர்வென்று
சேர்ந்தசேர்ந்தமன்னவரோடுந்திறலோடுந்
தாந்தம்பாடிவீடுபுகுந்தார்தரையாளும்
வேந்தனோடும்பாசறைபுக்கான்வீடுமனே. (௩௯)

தம்பியர்பட்டாரென்றுளமாழ்குந்தனிவேந்தைப்
பம்பியமேகங்கதிர்வளைமாண்பிற்பலர்சூழ்ந்தா
ரம்புயநண்பன்றந்தவன்வந்தங்கவனோடுஞ்
செம்பிருகண்கடீயுகவேசிற்சிலசொன்னான். (௪௦)

ஏற்றவர்விண்போயேறவடர்க்குமெனைநீக்கி
மாற்றலர்நண்பன்வீடுமனைப்போர்வலிசெய்தா
யூற்றமுணர்ந்தாய்நும்பியரைவருயிர்வாழாத்
தோற்றனையையாசூழ்வினையாரேதுடைக்கிற்பார். (௪௧)

மன்னவர்மன்னன்பரவையில்வைகியவயவேந்தர்
பன்னருமாண்போர்யாரையுநோக்கிப்பகர்கின்றா
னென்னினிவீரமென்னைகுறிப்பதிகலைவர்
முன்னரினுந்துந்தேரினருண்டோமுனையம்மா. (௪௨)

எத்தனைமன்னராவியுலந்தாரிளையோர்கள்
சித்திரவில்லாரைவர்மடிந்தார்செயலென்னே
குத்திரமாயன்றேர்விடமேவுங்குனிசாபக்
கைத்திறலானையாருயிர்கொள்ளக்கருதீரே. (௪௩)

ஞாயிறுதித்துச்சாயுமுனலோநவிகிற்போ
ராயவருக்கென்வாழ்வனமுற்றுமமைவென்னக்
காய்கனல்கண்ணன்கூறியிருப்பக்கமழ்கங்கைச்
சேயவனோர்சொற்கூறினனாருந்தெளிவெய்த. (௪௪)

பற்றறுவில்லோடொப்பநரன்போர்பயில்போது
வெற்றிபுனைந்தோராருளராமேல்விற்கொள்வோர்
சொற்றனமன்றேயின்றுமுரைத்தோந்துயராழா
துற்றவரோடுமாளுதனன்றிவ்வுலகெல்லாம். (௪௫)

வெல்லவிருந்தேனுன்பதமென்பான்மீண்டெய்திற்
கொல்லவிருந்தேன்விசயனையானேகூரம்பாற்
சொல்லவிருந்தார்வானவர்காண்மின்சூழ்ந்தென்றான்
மல்லல்விருந்தோளம்புயநண்பன்மகனம்மா. (௪௬)

தார்முடிமன்னர்யாவருமோர்ந்துதகுமென்னப்
போர்முனைபுக்கேனீபெறவிற்றைப்பொழுதியேன்
சீர்முனைவென்றாயெனின்மகிழ்வோடுஞ்சேர்தீவன்
கார்முகம்வல்லாயெனிலெழுகென்றான்காங்கேயன். (௪௭)

கொற்றமுரைப்பாயாரமர்வெல்லுங்குறிதேறாய்
முற்றமுணர்ந்தோனேடிசைபல்கால்மொழிகின்றாய்
குற்றமதன்றோகோணிரைவிட்டுங்குலமானஞ்
சொற்றனைவெஃகாதென்றனனுங்கச்சுவத்தாமன். (௪௮)

சோமனுமெண்ணும்பாண்டுசிறார்துன்னலரென்ப
தாமனுவன்றாலாதிதொடர்ந்திவ்வமர்காறுங்
கோமனுளத்தைவேறுபடுத்திதகொலைநேர்ந்த
மாமனுநீயுந்துன்னலரென்றான்மறையாசான். (௪௯)

அவனிவனென்றென்னுண்மைபிழைத்தோராரேனும்
புவனியில்வாளாற்போக்குவனுவிபுகுந்தென்ன
தவனனளித்தோன்மூண்டெழவாண்டச்சுவத்தாமன்
சிவனெனவேயோர்வாள்கொடுசீறிச்சென்றேற்றான். (௫௦)

நன்றிதுநன்றென்றாரமுனைக்கொடிவேந்தன்
சென்றுதடுத்தேமீட்டுமிருத்தித்திறலோனைக்
கொன்றிடுசூட்சிக்கோர்முனைவெம்போர்குறிக்கொண்டீர்
வென்றிரமக்கேயாமெனநொந்துவெறுத்தானே. (௫௧)

மூவருமொன்றாய்மேவினும்வெம்போர்முனைமாறாக்
காவலனெம்மாற்போழ்தருமென்னக்கடனுண்டோ
மேவரும்வெம்போர்சூழ்ச்சியின்மாளும்வினையுண்டே
லாவனவென்றேவீடுமன்றன்பேரவைபுக்கான். (௫௨)

மற்றவராரும்போமெனமன்னன்விடைநல்கி
யுற்றனனற்றைச்செய்கைதெரிந்தோனுரைசெய்யப்
பெற்றவன்மைந்தரைவருலைந்தபிழையாலே
புற்றரவென்னவசனியில்வீழ்ந்தேபுலம்புற்றான். (௫௩)

* பூண்பாய்மார்பிற்புத்திரர்தம்மைப்பொலிவோடுங்
காண்பானவர்க்கண்டிலள்பெற்றகாந்தாரி
சேண்பாலெய்தச்சென்றனரோவென்றிருகண்ணீர்
தூண்பாலாகிச்சோர்தரவுள்ளஞ்சோர்வுற்றாள். (௫௪)

* கொன்னேகுந்திமைந்தரிருக்கக்கொலையுண்டீர்
முன்னேமுன்னுமுன்னமுடிந்ததின்றென்னு
மின்னேயென்னமெய்குலையாமண்மிசைவீழ்ந்தா
ளென்னேயென்னேயென்றிணையாநின்றென்செய்தாள். (௫௫)

* வீரூர்கற்பின்மின்னனையாளைவிறன்மைந்த
ரேரூமன்றிலேற்றவுமாமன்றென்னுதா
ளூருவன்பிற்கண்ணறைமன்னனொருதேவி
யாருவெள்ளத்துன்புறவன்றேயடிபிட்டாள். (௫௬)

* ஆளாய்மாய்ந்தவேந்தரிடங்தோறழுமோசை
கேளாவெப்போதேகுவமென்றக்கிளர்கங்குன்
மீளாவோடிற்றத்திசைவானோன்மிளிர்சென்னிச்
சூளாமணிபோல்வந்ததுகாலைச்சுடரம்மா. (௫௭)

நான்காம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௩௩௪.

ஐந்தாம்போர்ச்சருக்கம்.

---

* கருமாமுகிற்கோலநெஞ்சத்திருத்துங்கருத்தெய்துமே
லருமாதவன்றானுமவன்முத்திதருகைக்குமவனேகுருத்
தருமாலைமணநாறுதாளானைவண்டேறுதண்ணந்துழாய்
மருமாலைபுனைகின்றதிருமாலையல்லாதுவல்லார்கள்யார். (௧)

* வரசங்கமுந்தாரையுஞ்சின்னமும்பொன்மணிக்காளமு
முரசங்களுந்துந்துபியுமெங்குமெழவிம்மமுழவிம்மவே
கரைசிந்துதிரைசிந்துநுரைசிந்துவிரைசிந்துகணமென்னவே
யரசன்பெருஞ்சேனைவெள்ளம்புறப்பட்டதணியாகவே. (௨)

* விருதாயிரங்கோடிமுரசாயிரங்கோடிமேன்மேலெழப்
பொருதானையுடன்வந்தணைந்தார்புறந்தந்தபூபாலரும்
கருதாவரக்கன்கொடுந்தானையிறைவன்கடுந்தானையென்
றிருதானையும்போலவெதிருற்றவிருமன்னரிருதானையும். (௩)

* அரக்கர்க்குமுதல்வானளித்தோருமெமரின்றுமவர்போலுமைத்
துரக்கைக்குநின்றேனெனத்தெவ்வர்தம்மோடுசொல்லிற்றெனக்
குரக்குக்கொடித்தேரின்மிசையோடிவிசையோடுகூத்தாடவே
புரக்கைக்குநின்றோனுடன்செங்கண்விசயன்புறப்பட்டனன். (௪)

* அரனின்றனன்போலவவனின்றதேரொத்தவணிதேர்மிசைப்
பொரநின்றநதிமைந்தனொடுசென்றுமுனைநின்றுபொரவெண்ணியே
சரநின்றகுனிசாபவிசயன்றனைக்கொண்டுசெங்கங்குறித்
துரநின்றவவனெஞ்சுடைப்பாகன்மான்றேருகைத்தூரவே. (௫)

* ஊர்கின்றதேரோடியுயர்கங்கைமகனின்றவொருதேருடன்
சேர்கின்றவெல்லைக்கலிங்கேசர்முதலானதெம்மன்னர்போய்
நேர்கின்றவிசயன்றனுடன்மோதியவனேவுநெடுவாளிபட்
டேர்கின்றபுண்வாயில்வார்கின்றசெந்நீரினிடைமூழ்கினர். (௬)

* செல்லுங்கலிங்கேசரலையுண்டநிலைகண்டுசிவனென்றுபார்
சொல்லும்பெருஞ்செம்மல்பல்லங்களவன்மேற்றொடுத்தேவினான்
கொல்லுங்கொடும்பாணமவையைந்துவிசயன்கொதித்தேவினான்
வில்லுந்தன்வின்னாணும்விறலம்புமுடனற்றுவிடைகொள்ளவே. (௭)

* இவர்கொண்டசெற்றத்தொடிவ்வாறுபோர்செய்யவிகல்வீமனைப்
பவர்கொண்டநெடுவேலைபோல்வந்துமொய்த்தார்கள்பலமன்னருங்
கவர்கொண்டமுனைவாளியவர்மார்புதோறுங்கழன்றோடவே
தவர்கொண்டுசெற்றான்முன்னளகேசனமர்வென்றதனியாண்மையான். (௮)

* துச்சாதனன்றம்பிமார்மைந்தர்மற்றுஞ்சகுனிசல்லிய
னெச்சாபமுடிமன்னரும்பின்னருந்துன்னியெதிர்சீறினா
ரச்சாபமொன்றாலுமன்றவ்வவர்க்கம்பநேகந்தொடுத்
‡ துச்சாசனஞ்சொல்லிநின்றானவ்வடன்மன்னருடனோடவே. (௯)

* செருத்துப்புடைத்தோடிவருதம்பியர்க்கண்டுசெற்றத்துடன்
கருத்துப்புகைந்துட்கலங்கிக்கடைக்கண்கள்கனல்காலவே
மருத்துத்தருங்காளைநின்றானையின்றாவிமலைவேனெனா
வுருத்துத்தடந்தேரின்மிசைவந்தடுத்தானுரககேதனன். (௧௰)

* போராதநிலைநின்றுவன்போடுசாபம்பிடித்தெங்கணுஞ்
சோராதவயவாளியீரைந்துசேரத்தொடுத்தேவினா
னாராவமுடனிட்டகவசம்பிளந்தோடியாண்மைக்கெலாம்
வீராபிடேகஞ்செய்வயவீமனகன்மார்பின்மிகமூழ்கவே. (௧௧)

* ஈமந்தொறுஞ்சென்றுநடமாடுகழலையனெதிராய்வரும்
காமன்றனுடன்மேல்விழித்திட்டநுதலிற்கனற்கண்ணெனத்
தாமம்புனைந்தாரமணநாறுமார்பத்தடந்தோயவே
வீமன்றொடுத்தானொரெதிரம்புபார்மன்னன்மிடல்சாயவே. (௧௨)

வே று.

* ஓரம்பினுளைந்தேழுலகுடையானலமரவே
வீரம்புனைவீமன்குனிவில்லோடெதிர்நிற்கப்
போரம்பரவுலகாள்பவர்புகழ்பூரிசவாவந்
தீரம்புதொடுத்தானொருதேர்மேலினனிவன்மேல். (௧௩)

* இவனாண்மையைமதியாதெதிரெய்தானெனவெய்திற்
பவனாகதிபெறுதேரினனளினாபதியிளவ
லவனாருயிர்கவர்வேனெனவம்பொன்றுதொடுத்தான்
றவனான்மறைதெரிபூரிசவாவுஞ்சரம்விட்டான். (௧௪)

---

‡ உச்சாசனம் - கொலை.

*ஏணற்றுயர்வரைமார்பினரிருவோர்களுமொருவோர்
காணற்றெழிலரிதாமுறைகடிதிற்கணைதொடவே
நாணற்றனவெஞ்சாபமுநடுவற்றனவெனினுங்
கோணற்றனபுகல்வானொருகுறையற்றதவர்க்கே. (கரு)

* ஒருகேடகவுரைதேறினருளமேயெனவமரிற்
பொருகேடகநடவுங்கனபொற்றேர்மிசையிழியா
முருகேடவிழ்தார்மார்பினர்முனைவாளமிரண்டோ
டிருகேடகமிருகையினுமிருவோருமெடுத்தார். (கசு)

* படிவாயுடபதியுந்தினபதியும்பொருதெனவே
தொடிவார்கரதலமொன்றியதுறுதோலிடைமறையா
வடிவாண்முனையசையாவிசைவருசாரிகள்பயிலா
விடிவாய்முகிலதிராவெதிரெதிர்சீறினரிப்பால். (கஎ)

* தோலாதடலொடுசீறினதுரகத்தொடுதுரக
மேலாளொடுமேலாள்வரிவில்லாளொடுவில்லா
ளேலாமுடியரசோடரசிரதத்துடனிரதங்
காலாளொடுகாலாண்மதகரிமாவொடுகரிமா. (கஅ)

* நீடுங்கடகரியின்கரநிரையற்றனநதியா
யோடுங்குருதியின்வாளைகளெனவோடினவொருசார்
கோடுஞ்சிலையம்பிற்றலையரியுண்டனகுறைநின்
றாடுந்தொறுமுடனாடுவவலகைக்குலமொருசார். (ககூ)

* கோல்கொண்டவைசிலைகொண்டவைவாள்கொண்டவைகூர்வாய்
வேல்கொண்டவையவைதம்முடன்விழுகைத்தலமொருசார்
கால்கொண்டுகுசெந்நீர்விரிகளமோககனமதா
மால்கொண்டகரிக்கோடிளமதியாவனவொருசார். (உ௦)

* முந்நீர்தருபவளங்கொடுமுன்னஞ்சமைவனபோற்
செந்நீரின்மிதந்தோடுவதேராழிகளொருபா
னன்னீர்மழைபொழிசெம்புனனதிவாய்வருநுரைபோ
லந்நீரிடைபுகுமூளைகளலைபாய்வனவொருசார். (உக)

* வையாரயில்கணைதோமரம்வாள்கப்பணமுதலாங்
கையாயுதமுழுகுந்தொளைவழிசெம்புனல்கால
மெய்யாயிரவிதமாய்விழவெம்போரிடையிருபத்
தையாயிரமுடிமன்னவரகல்வானமடைந்தார். (உஉ)

* இவ்வாறுமுனைந்தாருயிருசேனையுமடிய
மைவானுலகிடமற்றதுவயவீரர்நெருக்கா
லவ்வானவர்தமதாலயம்வலம்வந்தவருக்கன்
செவ்வானுறுகுடபால்வரையிடமென்றதுசேர்ந்தான். (உங)

* எப்போதுமரும்போரினிலிதயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெம்புனல்கடலுண்டதுகால்வா
ரொப்போதுதலரியாரிருதிறமன்னருமொருவா
வப்போதனிகத்தோடுமகன்பாசறைபுக்கார். (உ௪)

* இரவென்றிருள்கெழுநஞ்சினிளந்திங்களெயிற்றோ
ரரவுண்டதுதான்மீளவுமிழந்தோனெனவருக்க
னுரவுங்குடதிசைசீனிறவுததிக்குளொளித்தோன்
விரவுங்குணதிசைவேலையின்மிசைவந்துகிளர்ந்தான். (உ௫)

ஐந்தாம்போர்ச்சருக்க முற்றிற்று.
ஆ செய்யுள் - ௩௫௬.

ஆறாம்போர்ச்சருக்கம்.

---

* கோயிலாளுடையபைங்கொண்டலார்கண்டுயில்
பாயலாய்வாழுநீபாக்கியஞ்செய்ததென்
றீயலாதுவமைவேறில்லெனத்தீயநின்
வாயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே. (க)

* பயிலுவெம்பாசறைப்பாண்டவரைவருந்
துயிலுணர்ந்தணிபசுந்துளபமாலடிபணிந்
தயிலுநஞ்சனையபோரடுகளங்குறுகினார்
சயிலவெங்கடகரித்தானையுந்தாமுமே. (உ)

* பகுத்தபல்லணிகளின்பான்மையக்குரோணியாய்
மிகுத்தவெஞ்சேனையாம்வெள்ளநீர்வேலையைத்
தொகுத்துவண்டிமிர்தொடைத்துருபதன்றிருமகன்
வகுத்தனன்புறமிடாமகரமாவியூகமே. (௩)

* போகமுந்தருமமேயானமெய்ப்புனிதனு
நாகவெங்கொடியுடைநாயகக்குரிசிலும்
வேகவெம்படையுடைவேந்தருஞ்சேனையு
மாகவங்குறுகினாராரவம்பெருகவே. (௪)

* பொருஞ்சமங்கருதியாள்புரவிதேர்போதகந்
தெரிந்துகொண்டீரிருதிசையினுஞ்செல்லவே
பெருஞ்சனந்தன்னையப்பீடுடைவீடுமன்
கிரிஞ்சமென்றுள்ளபேர்வியூகமுங்கட்டினான். (௫)

* இந்திரன்முதலியவிமையவர்தங்களா
லந்தரமிடனறவரவுளைந்தலமர
வந்துவந்திருபெரும்படைஞருமாறுபட்
டுந்தினார்முந்தினாரொட்டினார்முட்டினார். (௬)

* பரவிநால்விதவயப்படைஞருஞ்சூழவா
ளிரவிநான்வெம்பகையிருளினுக்கென்றுதன்
புரவிநான்மறையெனப்பூண்டதேர்தூண்டினன்
விரவினன்வீமன்மேல்விற்கையாசிரியனே. (எ)

* சிலைவரம்பெறுதலிற்றேசிகன்சிறவு
நிலைபெறும்புகழினனெஞ்சினஞ்சவிசெயா
மலையினும்பெரியதேர்வலவனும்புரவியுந்
தலையறும்படிசரந்தனுவளைத்துதையினன். (அ)

* சூழவெங்கசரததுரகதநிருபரை
வீழவெங்கணைகளான்மெய்துளைத்தளவிலே
தாழநின்றிலனெழிற்சல்லியன்றன்னொடே
தோழவின்றமர்செய்கென்றொருதிசைத்தோன்றினன். (கூ)

* வல்லைவெஞ்சமர்செயவல்லைநீவருகென
வில்லையுந்துணிசெய்துவெல்லவந்தவனையுந்
தொல்லைவெங்கரியெனத்தேரொடுந்தோண்மடுத்
தெல்லையம்புவியின்மேலெற்றினன்வீமனே. (கo)

* சல்லியன்றன்பெருஞ்சலிவுகண்டங்கையி
னெல்லியங்கனியினிநேரலாருயிரெனப்
பல்லியங்களுமெழப்பாந்தளம்பொற்கொடி
யல்லியந்தெரியலானங்குவந்தணுகினன். (கக)

* வெம்புயவீமன்மேல்வில்வளைத்தாயிர
மம்புகண்மாரிபோலார்த்தெழவீசினர்
தும்பையந்தார்முடிச்சூழ்படைமன்னருந்
தம்பியர்யாவருமாமனுந்தானுமே. (கஉ)

* தோன்றரித்துவசனுஞ்சோகமில்பாகனார்
வான்றடந்தேரொடும்வருகெனச்சென்றெதி
ரூன்றினன்மைந்தருமிளைஞருமுயிரையே
போன்றமைத்துனரும்வாணிருபரும்புடைவர. (கந)

* நின்றிருசேனையுநேர்படவேலினும்
வன்றிறல்வில்லினும்வாளினுமலைவுறக்
குன்றனதோளினரிருவருங்கொக்கரித்
தொன்றினர்வில்வளைத்தொருவருக்கொருவரே. (கச)

* அவனுமம்பிவனுரத்தழகுறவெழுதின
னிவனுமம்பவன்மணித்தோளின்மேலெழுதினன்
புவனமெங்கணுமிகப்பொறியெழப்போர்செய்தார்
பவனனுங்கனவியுநிகரெனும்பரிசினர். (கரு)

∗ வரத்தின்முன்பெறுகதைவன்மையும்வின்மையுஞ்
சிரத்தினின்றெண்ணவோர்பேர்பெறுஞ்சேவகன்
சரத்தினுங்கடுகுதேர்ச்சர்ப்பகேதனனையன்
றுரத்தின்வெங்கணைகள்பட்டுருவவில்லுதையினான். (௧௬)

∗ தான்விடுங்கணைகளிற்றம்பியர்தம்மையுந்
தேன்விடுந்தெரியலானெய்துபுண்செய்துபின்
னூன்விடும்படிதுளைத்துருவுபல்பகழியால்
வான்விடும்பேரையும்வானிலுய்த்தனனரோ. (௧௭)

∗ வாவருங்கவனமாக்கடுகுதேர்வலவர்போ
யேவருஞ்சிலைகள்போயிருபுயவலிமைபோ
யாவரும்பண்டுதாமிடுபுறமிட்டனர்
தேவருங்கண்டுவந்தலர்மழைசிந்தினார். (௧௮)

வேறு.

∗ ஏயவரிசிலைவீமனொடுபொருபோரிலெனைவரும்வென்னிட
மேயவிழியிலையாயபதிதருவீரர்பலரும்விகன்னனு
மாயமுதிர்சினமூளவிரைவுடன்மீளவரவபிமன்னுவுந்
தூயவரிசிலைவாளிகொடுதனதேர்கொடவிரெதிர்துன்னினான். (௧௯)

∗ மானவபிமனுஞானவிகனனைவாளிபலபலவேவமே
லானவிரதமுமாவும்வலவனுமாழிகளுமுடனற்றபின்
றானவிரதமுறுமல்விசையொடுதத்தியருகுறுசித்திர
சேனனெனுமிளையோனதணிபெறுதேரின்மிசைகடிதேறினான். (௨௦)

∗ மற்றையிளைஞருமைத்துனனுமதமத்தகயபகதத்தனுஞ்
செற்றவிகனனுமுற்றுமிவனொடுசெற்றியமர்பொருகிற்றினார்
வெற்றியபிமனும்விற்கையுடனவர்விட்டகணைகள்விலக்கிமார்
பெற்றுகணையனைவர்க்குமவரவரெய்த்துவிழவிழமொத்தினான். (௨௧)

∗ நெடியவரிசிலைநிமிரமுறைமுறைநெடியவிசையுடன்விசியுநா
ணிடியுமுகிலெனவகிலவெளிமுகடுடியவதிர்பெருநகையுடன்
கொடியவிகனனைமடியவவனுடல்கொடியகுடருகுகுருதிநீர்
வடியவிருபுயமொடியவுதையினன்வடியகணையொருநொடியிலே. (௨௨)

∗ மன்னர்மணிமுடிமன்னுகனைகழன்மன்னனிளவல்விகன்னனை
முன்னருறுகணைபின்னர்விழவிழமுன்னரமர்பொரமுன்னினான்
பொன்னசலநிகரன்னபுயவபிமன்னுவொருவனுமின்னுநா
மென்னவமர்பொரவின்னரனுகுவதென்னவெருவினர்துன்னலார். (௨௩)

∗ அன்றையமரினிலொன்றுபடவவரங்கமயர்வுறுபங்கமே
தென்றுமொழிவதுதந்தமனையுறவெந்தநிருபருமுந்தினார்
வென்றுபொருமுனைநின்றவபிமனைவிஞ்சுமுவகைகொணெஞ்சுடன்
சென்றுதழுவினரிந்துவரவெழுசிந்துவெனமகிழ்தந்தைமார். (௨௪)

* கோடுமுதலொடுவாளிகளினிறவீழ்வபலகடகுஞ்சரங்
காடுபடுதுளவோன்முன்வரவிடுகஞ்சன்மழகளிறெக்குமா
லோடுகுருதியினூடுவடிவொருபாதிபுதைதருமோடைமா
நீடுமுதலையின்வாயின்வலிபடுநீலகிரியைநிகர்க்குமால். (உரு)

* மாலுமதகடசாலநுதலுமருப்புமொருகையும்வதனமுந்
தோலுமொழியவுளானதசைபலபேய்கணுகர்தருதும்பிமா
நாலுமறைகளுமோலமெனவகல்வானமெனமுழுஞானமே
போலுமெனவொளிர்மேனியுடையவர்போர்வையுரியதள்போலுமே. (உசு)

* சேனையிபமுகமற்றுவிழுவனசென்றுதிசைவழிகவ்விவின்
போனவயவர்கள்படைகொடெதிரெதிர்பூசல்புரியிருபூதமுஞ்
சோனமழைமுகில்வாகன்முதலசுரேசர்தொழுதுதுதிக்கவே
யானைமுகவசுரேசனுடனமராடுமுதல்வனையொக்குமே. (உஎ)

* இமையமனுகினன்விசயன்மதலையையின்றைபமரினியுங்களுக்
கமையுமெனமுதலனிகமடையவுமணியுமவனிபர்நால்வருந்
தமையனெடுதமபதியினணுகினர்தங்கவிரைவொடுகங்குல்போய்ச்
சிமையமணுகினன்மீளாளனியிருள்சிதையவுதயதிவாகரன். (உஅ)

ஆறும்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகசெய்யுள் - ௩அஎ.

ஏழாம்போர்ச்சருக்கம்.

---

* உரலும்வேதமுந்தொடரநந்தகோனுடனசோதைகண்டிருகவாழ்வுகூர்
தரணிமீதுசெங்கையுமாமுழந்தாளும்வைத்துவைத்தாடுமாயனர்
விரவிநின்றமாமருதினூடுதாமெத்தெனத்தவழ்ந்தருளிமீளவும்
புரியுநீள்கடைக்கண்ணும்வண்ணமும்போற்றுவார்கண்மெய்புளகமேறுமே. ()

* இருவர்சேனையுஞ்சேனமன்னருமிகலியேபலதிசைகளெங்கணு
முரசமாதிவெம்பணேமுழங்கவேமுன்னைவெங்களம்பின்னுமெய்தினர்
மரகதாசலம்போலுமேனிமாமாயனச்சுமாசுணவியூகமுந்
தரணிகாவலன்றன்பிதாமகன்சகடவியூகமுந்தான்வகுக்கவே. (உ)

* மன்றனிம்பநாண்மாலைவேலினன்மாறன்மீனவன்வழுதிபஞ்சவ
னன்றுபஞ்சவர்க்காகவேயுடன்றந்தணற்குடைந்தஞ்சியோடினன்
றுன்றுமாயமால்யானைகொண்டுபோர்யானைமன்னரைத்தொலலமர்க்கணே
வென்றுகண்டவர்புறமவர்க்கிடான்மீளவந்தனன்வீமன்மைந்தனே. (௩)

* முகினிறங்கொண்மாமேனிமாயனார்முன்பிறக்கவேபின்பிறந்தவன்
புகுநிலந்தனிற்சற்றுநின்றிலன்பொருசுதாயுதன்போர்பொறுமையிற்
சகுனியும்பெருஞ்சேனைமுன்வரத்தக்கசல்லியன்றானுமோடவே
மிகுநிறங்கொள்பைந்தாமவாகைபோர்வென்றுசூடினன்வீமசேனனே. (௪)

* உயர்ந்தமேருவோடொத்திலங்குதேருலகளந்ததாள்வலவனூரவே
செயந்தன்மாபெருந்துணைவன்வன்பெருஞ்சேனைதன்னொடுஞ்சென்றுபற்றின
வியந்ததேரின்மேன்முப்புரங்களும்வென்றமீளிபோனின்றவீடுமனியைந்துபோரினுக்கெதிரவில்வலோரிருவர்விற்களுமெதிர்வளைந்தவே. [ன் (௫)

* ஒருவரெய்தவம்பொருவர்மேலுறுதோரொரம்பினுக்கோரொரம்புதொட்
டிருவரும்புகுந்தெய்தவல்லபமின்னதாகுமென்றுன்னலாகுமோ
வரிவில்வெங்கடகரியின்வந்ததாரகனுமாமயிற்குகனுமன்றியே
மருவுவெங்குரற்கொண்டல்வாகனும்வலனும்ராமராவணருமென்னவே. (௬)

* கரியணிக்குளெக்கரிகள்புண்படாகடவுதேரிலெத்தேர்கலக்குறு
பரிநிரைக்குளெப்பரிதுணிப்புறுபாகர்தம்மிலெப்பாகர்வீழ்கலார்
நரனும்வெற்றிகூர்வசுவுமுற்றபோர்நவிலுகிற்கினுநாகடுங்குமா
லிருதளத்தினுமிருவரம்பினுமேவுறாதபேரெந்தமன்னரே. (௭)

ஒருகையற்றபேரிருகையற்றபேருரனரும்புயந்தொளைவுபட்டபேர்
பெருகையற்றபேர்வலிகள்கெட்டபேரன்றிவெம்பிணக்குன்றொளித்தபேர்
வெருகையுற்றபேர்புறமளித்தபேர்வீரரேனையோராவிதுஞ்சினர்
சருகையொத்ததாங்கிருவர்வாகினிதழனிகர்த்ததால்வீரர்சாயகம். (௮)

* வேறுபோரினிப்பொருதல்வேண்டுமோவிசயன்வீடுமனென்னும்வீரர்தஞ்
சிறுபோரிடைத்திசையடங்கலுஞ்சிவந்தகோலமெய்க்கவந்தமாடுமாற்
கூறுபோர்பொரக்கருதிவெங்களங்கொண்டுதங்களிற்கொல்லலுற்றநா
ளாறுபோரினும்பட்டபேரினுமறுமடங்குபேரன்றுபட்டதே. (௯)

* பாரவாளினுங்கூரவேலினும்பகழிவாயினும்பட்டபட்டபோர்
வீரவானின்மேல்வழிநடத்தலான்மெய்தளர்ந்துவேதனைமிகுத்தபின்
சேரநீருநம்பாடியெய்துவீர்செருவினைந்ததிச்சேனையென்றுபோ
யாரவாரநீடாழியெய்தினுறழியொன்றுடைத்தேரருக்கனே. (௧௦)

வேலைபோன்றபுண்ணீர்சிவப்பினுமெய்க்கொள்பூண்கிளர்ந்துக்கசோதிகாளினு
மேலைவெம்பரிவேழவெம்பிணமேகசாலமேபோலுமாண்பினுந்
தோலைவெங்கரித்துணைமருப்பிளம்பிறைநிலாவெழத்தோன்றுபண்பினு
மாலைவந்தசெவ்வானகந்தனைமானநின்றதப்பாழ்பறந்தலை. (௧௧)

ஆகவத்தலைமேவுசோரிநீராழியாகநல்லரசர்மாண்டமெய்
மாகமுற்றமந்தரமதாகவெங்குடர்கள்வாசுகிமானமாட்டியே
சோகினந்தொடுஞ்சாகினிக்குழாஞ்சுரருமாசுரக்குழுவுமாய்மதித்
தோகையுற்றநல்லமுதெனக்கொழுநிணமருந்தலெங்கணுமொளிர்ந்தவே. ()

குடர்சரிந்தபுண்வழிமுகன்சொரிஇக்கூரெயிற்றுநாய்க்குரையுமோதையு
மடர்தரும்பெருந்தலைகழங்குகொண்டாடுபேய்மகள்பாடுமோதையும்
படர்தருங்கொடும்பகவதிக்கெதிர்பயில்பசாசுகைப்பவுரியோதையு
மிடர்செய்சம்புகந்துதிசெயோதையுமிறுதிவேலையேழனவொலித்தவே. ()

கழுகுகூகைகாகம்பருந்துவான்கதுவுதண்சிறைவிரவுபந்தரா
யுழுதவேலணியரசர்நால்வகையுண்டதோரணபாகராசியாய்ப்
பழுதில்கொள்ளிவாயலகைவெஞ்சுடர்பற்றிநிற்பவப்பரிசனங்களோ
டிழுதுபோலுளத்தரசன்விந்தையார்க்கிட்டமெய்விருந்தொத்ததக்களம். (கச)

சிவந்தசோரிபேரிகைகிழித்துளேசேர்தல்மாமுழவோதையாகவே
நவந்தயங்குவெம்பறவைவெஞ்சிறைநாதமோதுமேழ்தாளமாகவே
துவந்தமோடுவில்வீரராண்மைகடுதிசெய்பேரொலியிசைகளாகவே
கவந்தசாலமொன்கைகணிட்டவெங்களநடித்தகம்பலைகலித்தவே. (கரு)

இணைக்கரங்களிற்பிளந்தவெண்டலையேந்திமூளையுண்டெய்துபேய்ச்சிறுஅர்
பணைக்கைவேழராசிகளையீர்த்துநேர்படர்கொள்செம்புனற்சுழியினுழ்தலாற்
றுணைக்கைகொட்டியாயோடுமம்பிபோற்ருேன்றுதேர்தடுத்துன்றிவெம்பிண
வணைக்கணெற்றியாகுலமகற்றுபேரரவம்யாதினுமறுமடங்கரோ. (கசு)

சோரிகொண்டுகன்மாரியுப்பதுந்தோலின்மாற்றியேமாலினுர்ப்பதுஞ்
சாரிகொண்டிராவாரியும்பர்கோன்றனையரென்றுமற்சமரிழைப்பது
நாரிகொண்டுவிற்பாய்ந்துதேர்கண்மேனரனும்வெம்பிதாமகனுமென்பதும்
வாரிகொண்டமாமுனியடர்த்தநீண்மலைபுரந்தடாகினியினங்களே. (கஎ)

காலதூதரும்வானுளோர்களுங்காணவஞ்சினுர்போலகன்றபின்
சிலசாதனும்வீரசாதனுஞ்சிலைகொணுனெகிழ்த்தசைவுகொண்டனர்
சூலதோமரமுதலவெம்படைதொட்டவாகினியெட்டிமூடினுர்
மாலதாயதானவருமாகரும்வாய்த்ததொத்திருமன்மருங்குமே. (கஅ)

* வெங்களந்தனிற்பகன்மலைந்தபோர்மெய்விடாய்கெடக்கைவிடாதுபோய்த்
திங்களின்குலத்திருவர்தம்பெருஞ்சேனைமன்னரும்பாடியெய்தினு
ரிங்களந்தவாறப்புறத்துவானெல்லைதானளந்திந்தமன்னவர்
தங்கள்வெஞ்சமங்காணமாமணிச்சயிலமெய்தினுன்றபனன்மீளவே. (கசு)

ஏழாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகூ செய்யுள் - சO௯.

எட்டாம்போர்ச்சருக்கம்.

---

* பூத்தநாபியந்தாமரைப்பூவில்வந்துபல்பூதமுஞ்
சேர்த்தநான்முகப்புனிதனுமுனிவர்யாவருந்தேவரு
மேத்தநாலுவேதங்களுந்தேடநின்றதாளெம்பிரான்
பார்த்தன்மாமணித்தேர்விடும்பாகனுனதெப்பான்மையே. (க)

* நெருநலிப்பெருஞ்சேனையோநிலைதளர்ந்ததச்சேனையைப்
பொருநிலத்தினிற்புறமிடப்பொருதுமென்றுறக்கருதியே
வருநிலத்தெழுந்தூளியால்வானயாறுநீர்வற்றவுங்
கருநிலத்துளோர்காணவுந்தருமன்வந்தனன்சமரிலே. (உ)

* வென்றுபோனபோர்மேன்மையால்விலோதனப்பணிக்காவலை
னின்றும்வேறுமென்றக்களத்தெண்ணில்சேனையோடெய்தினன்
றுன்றுகங்கையின்றிருமகன்சூசியூகமுந்துளபமால்
வென்றிகூர்பெருஞ்சகடமாம்வெய்யயூகமுஞ்செய்யவே. (௩)

* தொலைவிலங்கழற்றுணைவரேதுணைவராகவெஞ்சூறைபோற்
கொலைவிலங்கையன்பிறைமுகக்கூரவாளியன்றேரினன்
மலைவிலங்குதோள்வீமனைவளைத்துவந்தெதிர்திளைத்தனன்
தலைவிலங்கலுக்கரசெனத்தகும்வலம்புரித்தாரினான். (௪)

* தும்பிமேன்மதத்திடைவிழுந்தும்பிபோல்விறற்றேன்றலுந்
தம்பிமாருமுற்றெய்தவெஞ்சாயகங்கண்மெய்தைக்கவே
வெம்பிவீமனுந்தன்சரம்விண்டலத்திலிவ்வேந்தனுக்
கெம்பிமாரிலன்றெண்மர்போயிடம்பிடிக்கவென்றேவினான். (௫)

* முந்தவன்றுசென்றுசுகன்மைந்தனுசுகமுழ்கவே
சுந்தரன்விசாலக்கனன்வீரவாசிபௌதண்டனு
மந்தமாமகோதரனுடன்மாகவிந்துவுமபயனுஞ்
சிந்தினார்களந்தன்னிலாதித்தகேதுவுஞ்சேரவே. (௬)

* அற்றகந்தரமுயிரினோடந்தரம்புகத்தள்ளவு
மிற்றபேருடம்பவனிமேலெடுத்தவில்லுடன்வீழவு
முற்றதம்பியர்மாய்தல்கண்டுள்ளுடைந்துபோயுரனுடைக்
கொற்றவன்பெருங்குருகுலக்குரிசினின்றழிக்குறுகினான். (௭)

* தன்பிதாமகன்செய்யதாடனதுமௌலிமேல்வைத்துநின்
றன்பிதாவின்மேலன்பினுலகமும்பியர்க்குதவுவா
யென்பிதாவுநீயாயுநீயென்றிருந்தனனெம்பிமார்
முன்பிதாமருத்தென்னுமம்முதல்வனான்முடிவெய்தினர். (அ)

* நீவினைத்தலைச்சேனையின்றலைவனாகிமுன்னிற்கவே
வீவெனக்குவேறில்லையென்றெண்ணினேனெனவேந்தர்வேந்
தோவியத்தின்மெய்யுணர்வழிந்துள்ளழிந்துகொண்டுரைசெய்தான்
வாவினித்திலமென்னவேமலர்ந்தகண்கணீர்மல்கவே. (௯)

வேறு.

* இரங்கனீசிறிதுமையவெறிபடைபெடுப்பதியாரு
முரங்கள்போயமரிற்சாகாதுய்ந்தனரோடவன்றே
சரங்களாலயிலால்வாளாற்றம்பகைசெகுத்தாமுஞ்
சிரங்கள்வேறுடல்கள்வேறாக்கிடப்பதேசெல்வமம்மா. (௧௦)

* இருந்தனம்படைத்தமக்களின்பமுமறனுமஞ்சார்
விருந்தெதிர்சிறிதுமஞ்சார்மேம்படவாழுமில்லோர்
பொருந்தியவிறப்பையஞ்சார்போதமெய்யுணர்ந்தமாந்த
ரருந்தவமுனிவரஞ்சாரரசருமடுபோரஞ்சார். (௧௧)

* இன்னமொன்றுரைப்பக்கேண்மோவிருசெவிக்கேருதேனு
முன்னரசாண்டவேந்தர்முறைமையிற்சிதைந்ததுண்டோ
மன்னவைதன்னினின்றமாசிலாவடமீன்போல்வா
டன்னிருகண்ணீரின்னமிவைகொலோதருவதம்மா. (௧௨)

* கால்வருகவனமான்றேர்க்கன்னனுங்கன்னபாக
மால்வருகவுழிவேகமாவலான்சகுனிதானு
நூல்வருபழுதில்கேள்விநம்பியுநீயுமிந்த
நால்வருங்குறித்தவெண்ணநாளையேதெரியுமையா. (௧௩)

* விதுரனும்வெஞ்சொலாற்றன்வில்லினையொடித்துநின்று
னதிரதனுலன்றியங்கர்கோனமரின்வாரான்
முதிர்படைவிசயன்வீமன்மூண்டமர்புரியுங்காலை
யெதிரினிநானுநீயுமல்லதிங்கிலக்குவேறுர். (௧௪)

* புரிந்தறம்வளர்க்குநீதிப்பொய்யிலாமெய்யனங்கே
செருந்தவிழ்துளபமாலைத்திருநெடுமாலுமங்கே
யருந்திறலமரிற்பொன்றுதங்கிருந்தவரையிங்கு
மிருந்தவர்காண்பதல்லால்யார்கொலோவிறக்கலாதார். (௧௫)

* விடுகநீகவலவேண்டாமேலுனக்குறுதிசொன்னேன்
முடுகவாளமரிற்சென்றுமுனைமுனைந்தாரையின்றே
யடுகமற்றென்றிலொன்றிலாங்கவர்தங்கள்கையாற்
படுகவாவென்றுதேர்மேற்சென்றனன்பரிதிபோல்வான். (௧௬)

* காயிருங்களிற்றின்மேலான்கடோற்கசக்காளைதானே
ராயிரம்வடிவாய்முந்தியரசர்பேரணியையெல்லாந்
தோயிருட்பிழம்போடுற்றசோனையம்புயலிற்றோன்றி
மாயிருவிசும்பிற்றூராகணமெனமாய்த்துவந்தான். (௧௭)

* ஒருபுடையிவன்போர்செய்யவொருபுடையுரககன்னி
யருளுடைமைந்தனெண்ணிலாயிரமுருவமாகி
யிருபுடையினும்போர்வேந்தரெலிகள்போலேங்கியம்பாற்
பொருபடையுருண்டுபோகப்பொருவில்வெம்பூசல்செய்தான். (௧௮)

* இப்பகன்முடியுமுன்னேயாரையுமுடிப்பனென்னுப்
பைப்பகன்மகுடமைந்தன்பலபெரும்படையுமாகி
யப்பகலடுபோர்செய்யவன்றமரழிந்துமாய்ந்த
மெய்ப்பகனிளவலந்தவீமன்மேல்வெகுண்டுவந்தான். (௧௯)

* என்னுடன்பிறந்தோன் றன்னையுதிட்டிரனிளவல்கொன்றான்
றன்னுடல்பிளப்பேனென்றுதானைவல்லரக்கரோடு
மன்னுடன்சொல்லிநிற்பான்வந்தெதிர்மலைந்தகாலை
மின்னுடைமுகில்போற்சென்றான்வீமனுக்கிளையோன்மைந்தன். (உ0)

* வலம்புரித்தாமவேந்துக்காகவேமலைவான்வந்த
வலம்புதனோடுஞ்சென்றாரடங்கலுமரக்கர்மாயக்
குலம்பழுதற்றமைந்தன்கொண்டபல்லுருவத்தோடும்
புலம்புறப்பொருதானந்தவரக்கனும்புறந்தந்தானே. (உக)

* அஞ்சினன்போனபின்னரரவினையடக்குமாய
வெஞ்சினக்கலுழனாகியுருமெனமீளவந்தா
னஞ்சினையுமிழும்வெவ்வாய்நாகங்களனைத்துமொன்றா
யெஞ்சினன்போலநின்றானிருதருக்கிறுதிசெய்தான். (உஉ)

* நின்றவன்றன்னையந்தநிருதனும்வடிவாளோச்சிக்
கொன்றனன்கொன்றானாகக்குருகுலத்தரசன்சேனை
வென்றனனரக்கனென்றுவிரிகடல்போலவார்த்த
தன்றவனடர்த்தமாயமார்கொலோவடர்க்கவல்லார். (உ௩)

வே று.

* பூஞ்சாயகன்கைப்பொருசாபம்பொசிந்துகண்ணுற்
றிஞ்சாறுபாயுஞ்செழுநீர்வயற்செங்நெல்வேலிப்
பாஞ்சாலநாடர்பலரும்படப்பாணம்விட்டார்
தாஞ்சாபம்வாங்கிமறைமைந்தனுந்தந்தைதானும். (உச)

* பட்டான்றனைவனெனக்கேட்டுப்பரிவுபொங்க
விட்டான்மணித்தேர்வளைத்தான்றனிவெய்யசாபந்
தொட்டான்பகழியபிமன்னுத்தொடுத்தலோடுங்
கெட்டாரரசன்பெருஞ்சேனையிற்கேடில்வேந்தர். (உரு)

* மைந்தன்களத்தின்மடிந்தானெனவாயுமைந்தன்
றந்தம்பறியுண்டெதிர்சீறியதந்தியென்ன
வெந்தங்கமுற்றுமனத்தீயெழமேனடந்தான்
சிந்தந்திகழவெழுதுந்திறற்சிங்கமன்னான். (உசு)

* சினத்தோடுநம்மேல்வருகின்றனன்செம்மலென்னா
வினத்தோடுசெல்லும்பிறைவாளெயிற்றேனமென்ன
மனத்தோடியைந்ததிருத்தம்பியரோடுமன்னர்
சனத்தோடும்வந்தானெதிர்சீறித்தரணிவேந்தன். (உஎ)

* திளைத்தாரரசர்திகிரிக்கிரியென்னவோடி
வளைத்தார்கனகவரைபோல்வருமன்னன்றன்னை
யுளைத்தாரனைவோர்களுமோரொருபாணமேவித்
தொளைத்தார்கிளைத்தார்விளைத்தாரமர்தூண்டுதேரார். (உஅ)

* எடுத்தானொருதன்சிலைவீமனுமெண்ணில்பாணந்
தொடுத்தானவர்மேலிமைப்போதையிற்சூழ்ந்துளோரைக்
கெடுத்தானரசற்கிளையோரெதிர்கிட்டிமீண்டும்
படுத்தானெழுவரிவன்வாளியிற்பட்டுவீழ்ந்தார். (உகூ)

* அறமிக்கசொற்குண்டலபோசனனுதியக்கன்
றிறமிக்கதீர்க்கநயனன்சிலைத்திம்மவாகு
மறமிக்கவேற்குண்டலன்குண்டலதாரன்மன்னூற்
றுறைமிக்ககேள்விக்கருடத்துசனனதோன்றல். (௩௰)

* இப்பேரெழுவர்சிரமேழுமெழுந்துதுள்ளி
மைப்பேரெழிலியகல்வானிடைவந்தவெல்லை
யொப்பேதெனவாசவன்கேட்டலுமோங்கல்விந்தை
கைப்பேரெழிற்பைங்கழங்கென்றனர்கண்டவானோர். (௩க)

* அறந்தந்தவாழ்க்கைமுடிக்கின்றனையாகிநீயு
மிறந்தந்தரத்திலினியேகுகவென்றுசீறி
மறந்தந்தசியக்கொடியோன்கொடிமாசுணத்தோன்
புறந்தந்தபோரிற்புறந்தந்தனன்போகலுற்றான். (௩உ)

* கந்தேயனையபுயவீமன்கணைகள்பட்டுத்
தந்தேரழிந்துபடுமன்னவன்றானையென்ன
மந்தேகரெல்லாமலைவுற்றுமடிந்துவீழச்
செந்தேரருக்கன்குடபாற்றிசைசென்றுசேர்ந்தான். (௩௩)

* தளவொத்தமூரற்றலமானைத்தருமன்மைந்தன்
வளமிக்கவெம்போர்க்களம்வென்றுவதுவைசெய்வா
னுளமுற்றளித்தகலன்போலுமுகுகலன்கள்
பிளவுற்றவேழநுதனித்திலப்பெட்டிபோலும். (௩ச)

* பூட்டற்றவில்லின்மிசைசோரிப்புனலின்வீரர்
வாட்டற்றவீரல்பலசுற்றிவயங்குதோற்றம்
வேட்டற்பொருட்டாற்புவிமானுக்குவேந்துசூட்டுஞ்
சூட்டற்றுமுற்றுங்குடர்வாசத்தொடையலற்றே. (௩ரு)

* குலமாநிருபர்குடர்சோருங்குருதிவெள்ளம்
பலமாநதிபோய்த்திரைவேலையிற்பாய்ந்ததோற்ற
நிலமான்விளிம்புசிவப்பேறியநீலவாடை
நலமாகமன்றற்குடுத்தென்னநவிலலாமே. (௩கூ)

* தன்பாடிபுக்கான்புறந்தந்ததரணிவேந்தன்
மின்பாடிலங்குங்கணைவெஞ்சிலைவீமனோடு
மன்பாடிபுக்கான்பெரும்போரிடைமாய்ந்தமன்னர்
தென்பாடிபுக்கார்குடிபுக்கதுசேர்ந்தகங்குல். (௩எ)

* அன்றேகளத்திற்பலியூட்டியவாண்மைவீர
னின்றேயிறந்தானிதற்குன்னியிரங்கலீரென்
றென்றேமொழியுமுரவோன்முதலவருக்குங்
குன்றேகவித்தகுடைக்கோவலன்கூறினனே. (நூஅ)

* உன்னிக்களத்திலுயிர்வீடுமுரகமைந்தன்
சென்னிக்கதிர்மாமணிசிந்தியசோதியெல்லாந்
தன்னிற்கவர்ந்தானென்பண்டையிற்றுமமேனி
மின்னிப்பரிதிகுணபாற்றிசைமேவினனே. (நூகூ)

எட்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகூ செய்யுள் - சசரு.

ஒன்பதாம்போர்ச்சருக்கம்.

* பேராறுமூழ்கிமறைநூல்பிதற்றிமிடறும்பிளந்துபிறவித்
தூராறுமாறுநினையாமலுங்கடொழிலேபுரிந்தசுமட
ரோராறுபேதசமயங்களுக்குமுருவாகிநின்றவொருவ
னீராறுநாமமுரைசெய்துமண்கொடிடுவார்கள்காணுமிமையோர். (க)

* முன்போருடைந்துதனதில்லடைந்தமுடிமன்னன்முன்னையிரவிற்
றன்போலுமாமனவனோடுகேடுதருதம்பியோடுகருதிப்
பின்போதில்வண்மையொழிவானையோடியமையென்றுபேசவவனு
மின்போலிறந்தவிளையோர்கள்பாடுவினவாவிருந்தபொழுதே. (உ)

* மாவில்லெடுத்தென்னிளையோர்கள்கந்தவகன்மைந்தன்முன்புசிவன்முன்
பூவில்லெடுத்தமதனனவாறுபுகல்கிற்பதல்லவனிகக்
கோவில்லெடுத்தென்மறைநாலும்வல்லகுருவில்லெடுத்தெனினிமே
னீவில்லெடுக்கிலனைவேமுமுய்துநினையாரும்வாகைபுனையார். (நூ)

* என்னுஞ்சொலண்ணல்செவியேறநெஞ்சமெரியேறவெய்தின்மொழிவான்
முன்னுந்தைதந்தையுரைசெய்தமேன்மையறியாய்கொலம்பொன்முடியாய்
தன்னுந்துதேரும்வரிவில்லுமுண்டுசரமுண்டுநாளையவனே
யுன்னுங்களத்திலவர்வானமாளவுலகாளுவிப்பனுனையே. (ச)

* விற்கவ்வுவாளியடலைவர்மீதுவிடலஞ்சிவீரரெதிரே
புற்கவ்வுமாகில்விரைவோடுகங்குல்புலராமுன்வந்துபொருவேன்
சொற்கவ்வையாகநினையற்ககொன்றுசுரர்நாடளிப்பனினியுன்
சிற்கவ்வைதீரவவருக்குநின்றதிருமாலினுக்குமெனவே. (ரு)

* துச்சாதனுமிம்மொழிசென்றுகங்கைசுதனுக்குரைக்கவெனவே
நச்சாடராவையணியானுமங்கொர்நொடியுற்றபோழ்தினடவா
வெச்சாபமன்னுமணியூகமானவிரதத்தனக்குடுவோ
ரச்சாணியானவவனுக்கிவன்சொலடைவேபுகன்றனன்ரோ. (சூ)

* பேரன்புகன்றமொழிகேள்விசெய்துபெரியோன்முகிழ்த்துநகையா
வீரம்புகன்றெனினிநானுமக்குவிசயற்செறுத்தன்முடியா
தீரந்துறந்தவொருநூறுபேரைமகுடந்துணிப்பலெனவே
நேரன்றவைக்கணுரைசெய்தவாய்மைநிறைவேறுநாளையுடனே. (எ)

* ஒருநாளுநீவிர்பொறுமின்களும்மையுலகாளுவிக்கவருவோர்
வருநாடொடங்கியமர்செய்துதெவ்வைமடிவிப்பர்சொன்னவகையே
குருநாடமற்றைவளநாடுமெய்திநமரோடியைந்துகுழுமிப்
பெருநாளிருந்துநனிவாழ்திரென்றுவிடைநல்கிவிட்டபிறகே. (அ)

* கண்ணுந்துயின்றுதுயிலும்முணர்ந்துசிறுகாலையுள்ளகடனு
மெண்ணுங்கருத்தின்வழியேயியற்றியிகன்மன்னர்சூழவரவே
மண்ணுங்குலுங்கவரையுங்குலுங்கவெழுதூளிமாதிரமுமால்
விண்ணும்புதைக்கவடலாகவத்தின்மிசைசென்றுபுக்குவிரகால். (கூ)

* நாகங்குறித்தகொடிமன்னர்மன்னைநடுவேநிறுத்தியடைவே
பாகங்கடோறுமொருகோடிமன்னர்பகதத்தனோடுநிறுவிப்
பூகம்பமாகவினமோடலம்பசனுமுன்புபோகவொருபேர்
யூகஞ்சருப்பதோபத்திரமாகவணிசெய்துமானவரவோன். (க0)

* நின்றானமர்க்கணவரங்குநிற்கவிவரிங்குநென்னனிருதன்
கொன்றானெனத்தன்மதலைக்கொரெண்மரெழுவோரைநீடுகொலைசெய்
தொன்றாகமன்னர்பலராவிகொண்டவுரவோனுமும்பர்பகைபோய்
வென்றானுமற்றையிளையோருமொன்றின்விரகற்றகோவுமுதலோர். (கக)

* மற்றுள்ளமன்னர்புடைபோதமுன்னர்மழைமேனிமாயன்வரவே
யுற்றுள்ளவீரரொடுசேனைநாதனணிநிற்கவொண்கொடியுமா
முற்றுள்ளவெங்குமெழுபூழிதுள்ளமுரசங்கடுள்ளமிகவுஞ்
செற்றுள்ளமேவுகனறுள்ளவந்துசெருவெங்களத்தினிடையே. (கஉ)

* செம்பற்பராகமுடிமாமதாணிசெறிதொங்கல்வாகுவலயம்
பைம்பற்பராகமலர்வல்லியோடுதிருமேனிசோதிபயில்வான்
வெம்பற்பராகவரையூகமாகமுறையாலணிந்துவெயில்கா
லம்பற்பராகபதியென்னநிற்கவமராடலுற்றபொழுதே. (கங)

வேறு.

* இந்திரனுமேனையிமையோர்களுநடுங்க
வந்தரமுமெண்டிசையுநின்றதிரவதிரா
வெந்திறலலங்கல்புனைவீமனுடன்மலைவான்
வந்தனனலம்பசன்வலம்புனைபுயத்தான். (கச)

* செருவில்வெருவாநிருதசேகரன்வயப்போர்
மருவுசுடர்வாளினுடன்வந்தநிலைகாணு
விரவிவருதேரனையதேரின்மிசையிழியா
வுருமுருமெனுவிரைவினோடியெதிர்வந்தான். (கரு)

* யாளியொரிரண்டிகல்புரிந்ததெனவிகலா
மீளிமையினாலும்வலியாலும்விறன்மிக்கோன்
வாளின்மிசைவாளதனைவைத்தடலரக்கன்
றோளிலொருதோளிலனுறும்படிதுணித்தான். (கசு)

* அற்றதிரடோடுணியவச்சமறவேநின்
றற்றுழியும்வாளுரகமென்னவுளனாகி
மற்றையொருதோளின்மிசைதட்டியினிமற்போர்
பற்றுகெனவீமனுடல்பற்றுபுகுந்தான். (கஎ)

* குத்துவர்திரிப்பரிருகுன்றனையதோள்கொண்
டொத்துவர்வயப்புலிகளென்னவுடனோடித்
தத்துவருரத்தொடுரமூழ்கமுதுதகர்போன்
மொத்துவர்சினத்தொடெதிர்முட்டுவர்சிரத்தால். (க௮)

* மல்வழியழிந்துபிறைவாளெயிறரக்கன்
வில்வலியறிந்திடுதுமென்றுவில்லெடுத்தான்
கல்வலியதோள்விடலைகன்றிவிலெடுத்தான்
றொல்வலியினோடிருவருங்கணைதொடுத்தார். (க௯)

* கணைகளவையொன்றினுடனொன்றெதிர்கடித்துப்
பிணைபடவிழுந்தசெயல்கண்டுநனிபேதுற்
றிணையிலதிவர்க்கினியிரண்டனிகினிக்கும்
புணையுமிவரென்றனர்புரந்தரனொடிமையோர். (உ0)

* மலையினையும்வாசுகியையும்பொருவுநாணுஞ்
சிலையுமறமேலொருசெழுங்கணைதொடுத்தான்
றலைவில்பகையானபகன்மார்புமிருதோளுங்
குலைகுலையுமாறுபலகுத்தினுயிர்கொண்டான். (உக)

* மந்தரமுமந்தரமுமென்னவமர்மலைவா
னந்தரமிதல்லவெனவந்தரநெறிப்போய்க்
கந்தரநெடுங்கிரிகரத்தினிலெடுத்துச்
சுந்தரன்வயங்குதிரடோடனிலெறிந்தான். (உஉ)

எறிந்தவரைபூழிபடவெண்ணில்கலைசிந்திச்
செறிந்தகிரவுஞ்சமடுசெவ்வயிலெனப்போ
ரறிந்தவரயிர்ப்பவயிலுய்த்தனனரக்கன்
மறிந்துவிழுமாமரமெனத்துணிவுபட்டான். (உங)

* எறியுமளவிற்குரிசிலிளவறிருமைந்தன்
குறியினெடுவெஞ்சிலைகுனித்தருகுநின்றான்
பொறியிலவன்வீசியபொருப்பொரணுவாகி
முறியும்வகைபல்பகழிமுகிலெனவிடுத்தான். (உச)

✻ வில்லபிமன்வெங்கணைகள்விசையோடவனெறியுங்
கல்லசலநீறுபடுவித்ததிறல்கண்டே
கொல்லவினிவேண்டுமெனவெய்யதொருகூர்வேல்
வல்லடலரக்கனகன்மார்பின்மிசைவிட்டான். (உரு)

✻ விட்டவடிவேலுருவவேலுருவுமுன்னே
பட்டவனும்வீழவிருபாலும்வருசேனை
முட்டவுமிவன்கணைமுனைக்கெதிரிலக்காய்க்
கெட்டனர்நிசாசரர்கள்கிரிகளெனவீழ்ந்தார். (உசா)

✻ ஆறுபடிநூறுபடியாயிரமரக்கர்
மாறுபடுபாடைவடமன்னரொருகோடி
யூறுபடவெங்கதைகொடன்றவனுடைக்கச்
சேறுபடுமூளைகடிறந்தனர்சிரத்தால். (உஎ)

✻ முற்பகலின்மைந்தனைமுருக்கியவரக்கன்
பிற்பகலில்வீழவடிவேல்கொடுபிளந்தான்
சொற்பகலிலானிள்வலென்றனர்துதித்தா
ரற்பகலிலாவுலகில்வாழமரரெல்லாம். (உஅ)

✻ காசியர்கள்சேதியர்கண்மாளவர்கலிங்கர்
பூசலிடையேழுபதினாயிரவர்பொங்கிக்
கேசவனடாவுகிளர்தேர்கெழுசுவேத
வாசியுடையான்விசயன்வாளியின்மடிந்தார். (உகூ)

வேறு.

✻ துரகத்தடந்தேர்த்தனஞ்சயன்கைவரிவெஞ்சாபஞ்சொரிகணையா
லுரகத்துவசன்பெருஞ்சேனையொருசாருடையவொருசாரிற்
சருகொத்தனிலகுமரன்கைத்தண்டாலுடையக்கண்சிவந்து
கருகித்திருகிமேனடந்தான்கங்காநதியாடிருமைந்தன். (ருo)

எழுந்தான்குரவனெனப்படைஞரிரிபோர்முகத்தினுதிட்டிரனுந்
தொழுந்தாளரசன்கரமமைத்துச்சூழ்வாகினியோடெதிர்தகைந்து
செழுந்தார்வாகைவில்வளைத்துச்செலுத்தும்பகழிமழையனைத்து
மழுந்தாதகற்றியவன்சிலையுமறுத்தானின்பமறுத்தானே. (ருக)

✻ பட்டக்களிற்றுப்பாய்புரவிப்பைம்பொற்றடந்தேர்ப்பாஞ்சாலர்
திட்டத்துய்மன்முதலானோர்சிகண்டியுடனேயெதிர்தோன்ற
வட்டக்கவிகைவீடுமனுமன்னற்கிளையகாளையரு
மெட்டுத்திக்குக்காவலருமவரோடெய்தியிகல்செய்தார். (ருஉ)

✻ வரிவெஞ்சிலைக்கைக்கௌரவர்க்குமுதலாமுதல்வன்வடிக்கணைக
டெரியுங்கணத்திற்றெரியாமற்றேருந்தாமுஞ்சிலர்பட்டார்
கரியுந்தாமுஞ்சிலர்பட்டார்கலுழ்வாய்மதுகைக்கால்வேகப்
பரியுந்தாமுஞ்சிலர்பட்டார்படாதாருண்டோபாஞ்சாலர். (ருரு)

* நீயுங்ககனங்குடியேறநின்பேருடலநீணிலத்திற்
றேயும்படிநிற்பொரநின்றேனென்றேசொல்லாயிரஞ்சொல்லிச்
சேயுந்தனக்குநிகரில்லாச்சிகண்டிகடுங்காற்சிலைவாங்கிக்
காயுங்கணைகட்கிலக்கானான்காமன்கணைக்குங்கலங்காதான். (௩௪)

* வில்லோன்சரங்கள்படநகைசெய்தவன்மேற்றனதுவில்வளையாத்
தொல்லோனின்றநிலைகண்டுதுச்சாதனன்றன்சுடுசரத்தால்
பல்லோர்வியப்பத்தங்கள்குலப்பகைவன்சேனாபதியிளவல்
செல்லோடணவுநெடுங்கொடியுந்தேருஞ்சிலையுஞ்சிதைவித்தான். (௩௫)

* இவனோவிலக்காமென்பகழிக்கென்பான்போலவெங்குலத்தி
லவனோசெங்கைச்சிலைவீழ்த்தானரசன்றம்பிக்கழிந்திவனுந்
தவனோதயத்திலிருளென்னச்சாய்ந்தானென்றுதனஞ்சயன்றன்
பவனோதயத்தேர்நடுவிட்டான்பணியார்தாமும்புறமிட்டார். (௩௬)

* பார்த்தன்கணையாற்பட்டவரைப்பங்கேருகத்தோன்பலகோடி
நாத்தந்திலனேயெண்ணுதற்குநாமார்புகலத்தேமாலை
மாத்தந்திகளும்புரவிகளுந்துணியத்துணியவழிசோரி
நீத்தந்தன்னால்வடவைமுகநெருப்பொத்ததுகார்நெடுவேலை. (௩௭)

* மன்னுஞ்சேனைபடக்கண்டவாட்சந்தனுவின்றிருமைந்தன்
பின்னுந்தனதுசிலையேந்திப்பேணாரெவரும்பின்காட்டத்
துன்னும்பகழிமழைபொழிந்துதுரக்கும்பொழுதுவிராடபதி
யென்னுங்குருசிறனக்கிளையோனிராமற்கிளையோனெனத்தக்கோன். (௩௮)

* பண்ணும்பரிமான்றேருடையான்படைத்தேர்மன்னர்பலர்சூழ
வெண்ணுஞ்சிலைக்கைச்சதானிகன்வந்தெதிரூன்றுதலுமெண்டிசையு
மண்ணுந்திகைக்கும்படிமலைந்தான்மன்பேருயிருக்காருயிருங்
கண்ணும்போல்வான்கருதலர்க்குக்கடுங்காலெழுப்புங்கனல்போல்வான். ()

* உற்றுச்சமரில்வில்லெடுத்தவுரவோன்றன்னையுடலோடு
மற்றுச்சென்னிவேறாகிவீழத்துணித்தேயம்பொன்றாற்
செற்றுக்கங்கைமகனிற்பச்சேராரோடத்தேரோனு
மிற்றுத்தெறித்தமகுடமெனவீழ்ந்தான்புணரிக்கிடையந்தோ. (௪௦)

* திலத்திற்சின்னப்படமுன்னஞ்சிவேதனுடல்கொண்டுயிர்செகுத்தான்
றலத்திற்கனகமுடிசிந்தச்சரத்தாலழித்தான்சதானிகனை
வலத்திற்றிகிரிதனையுருட்டுமான்றேர்மச்சத்தவனிபர்தங்
குலத்திற்கிவனேகூற்றென்றார்கூற்றுங்கொலையுங்கொலைவேலார். (௪௧)

* சேந்தநெடுங்கண்முரிபுருவத்திட்டத்துய்மன்சேனையொடுஞ்
சார்ந்தநிருபரைவரொடுந்தானுந்தன்பாசறையடைந்தான்
பாந்தளுயர்த்ததுவசனுடன்பைம்பொற்கவரிமதிக்கவிகை
வேந்தருடனும்போய்ப்புகுந்தான்றன்பாசறையில்வீடுமனும். (௪௨)

* சென்றபரிதியாயிரம்பொற்சிகரப்பொருப்புக்கப்புறத்து
நின்றவிருளேயிப்புறத்துநீங்காவண்ணங்குடியேற்றி
யொன்றவுலகமுற்றதுயி லுணர்த்துவான்போ லுதயமெனுங்
குன்றமிசைநின்றனைவரையுங்கரத்தாலெழுப்பக்குணக்கெழுந்தான். (சங)

ஒன்பதாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௬அஅ.

பத்தாம்போர்ச்சருக்கம்.

* வலியிலன்றுதந்தைசெற்றமைந்தனுக்குவந்தபேர்
நலிவெலாமகற்றுநாமநாலிரண்டெழுத்துடன்
பொலியுநாமமறைகள்சொன்னபொருள்விளக்குநாமமுன்
கலியனெங்கண்மங்கையாதிகண்டுகொண்டநாமமே. (க)

* தருமராசன்மதலைபஞ்சசயனநின்றெழுந்தபின்
கருமமானகாலையிற்கடன்கழித்துநேமியம்
பெருமனோடுசென்றுதக்கபெற்றிபேசிவெற்றியிற்
பொருமகீபர்சூழநின்றவிளைஞரோடுபோதவே. (௨)

* திரண்டுபல்லியங்கடேவர்செவிபுதைக்கவானிடைப்
புரண்டெழுந்ததூளிகண்புதைக்கமெய்பதைக்கவே
முரண்டொடங்குசேனைவந்துமுன்னர்நாளையூகமே
யரண்டொடங்குயூகமாகவாகவத்துளணியவே. (௩)

* வீடுமன்னெனுந்தடக்கைவீரமன்னும்வெஞ்சுடர்க்
காடுமன்னுபரிதியைக்கரங்குவித்திருந்தபின்
றேடுமன்வலம்புரித்துலங்குதாமநிருபனு
நீடுமன்னர்பலரும்வாயிலிருபுறத்துநிற்கவே. (௪)

* வனைந்திலங்குகழலுமுத்துவடமும்வாகுவலயமும்
புனைந்தசெம்பொன்மவுலியோடுபொற்பின்மீதுபொற்பெழ
முனைந்தடங்கவின்றநாமுடித்தும்வெய்யபோரெனு
நினைந்துதன்பனைப்பதாகைநீடுதேரிலேறினன். (௫)

* சுற்றமுறுதவில்லினன்றெருடைமிடைந்ததூணியன்
கொற்றவாகைவாளினன்கூரவீரவேலினன்
மற்றுமாயுதங்களோடுமன்னரோடும்வார்முர
செற்றுமாரவத்தினோடுபடுகளத்தினெய்தினன். (௬)

* தானுமுன்னணிந்தவாறுதானையைநிறுத்தியச்
சேனைமன்னன்வந்துநின்றநிலைமைகண்டுசெங்கண்மால்
வானினின்றிழிந்தகங்கைமைந்தனுக்குவானுலாம்
யானமின்றளித்தியென்றுவிசயனோடிசைக்கவே. (௭)

* போரினண்டர்பகையைமுன்புபொருதுவென்றவின்மையான்
முரிவெங்கொடிக்குரங்குமுன்னடக்குமேன்மையான்
வாரிதங்கொண்மேனியான்வனம்புகுந்துவருதலான்
யாருமின்றிராமனென்னவிசையநின்றவிசயனே. (அ)

* சிலைபதாகையிவுளிதேர்செழுங்கனலளித்தன
வலவன்யாரெனிற்குறிப்பொடென்னையாளவந்தநீ
தலமகிபரல்லதேவர்தானவரெதிர்ப்பினுங்
கொலைபடாமலேவர்போவர்குன்றெடுத்தகோவலா. (௯)

* எந்தையாகதுணைவராகதனயராகவெந்தைதன்
றந்தையாகநீயுரைக்கில்யாரையுந்தறிப்பன்யான்
முந்தையாரணங்களுக்குமுடிவினின்றபொருளையென்
சிந்தையாரமுற்றுவித்துவினையறுத்தசெம்மலே. (௧௦)

* என்றபோதுவந்துதேவவிரதனின்றவெல்லையிற்
குன்றமன்னதேர்கடாவியருகணைந்தகொற்றவ
ரொன்றுபட்டசேனையோடியாவரும்முடன்றுபோய்
நின்றசேனைநிருபன்மேனிரைத்துவாளிதூவவே. (௧௧)

* பலருமெய்தவாளிமெய்படப்படப்பனித்துநாப்
புலரநொந்துகங்கைமைந்தனிதயமும்புழுங்கினன்
மலருகின்றவார்பனிக்குடைந்துசாலமாழ்கிநீ
டலருமந்நிறமழிந்தவம்புசாதமென்னவே. (௧௨)

* துன்னிமித்தமும்பலதொடர்ந்துசெய்யவெய்யவா
மந்நிமித்தநன்னிமித்தமாகுமென்றகந்தெளிந்
துன்னிமித்திரர்க்குநாளுமுதவிசெய்யுமுறுதியோன்
வின்னிமித்தவாளியாலவ்வாளிகள்விலக்கினன். (௧௩)

* துருபதேயர்மகதநாடர்வெங்குலிங்கர்சோனகர்
கருநடேசர்சிங்களர்கடாரபூபர்கௌசலர்
தருமராசன்மதலைசேனைமுதுகிடச்சரங்கள்போ
யொருவர்போலவனைவர்மேலுமுருவவெய்துறக்கினன். (௧௪)

* முடிதுணிந்துபின்புவீழமுன்னடந்துடற்றுவா
ரடிதுணிந்துவிழவிருந்தலங்கல்வில்வணக்குவார்
கொடிதுணிந்துவிற்றுணிந்துகோறெடுத்தகையுடன்
றொடிதுணிந்துசோரிவெள்ளநதியினூடுசுழலுவார். (௧௫)

* மருத்தெறிந்தபூழியென்னவந்தவாமடங்குவா
ருருத்தெறிந்தவுருமினொந்தவுரகமென்னவுட்குவா
ரொருத்தரோடவென்னிதென்றநேகரஞ்சியோடுவார்
விருத்தன்வில்வளைத்தவாண்மைவிசயனுக்குமிசையுமோ. (௧௬)

வே று.

* வெம்புயவிசாலவடமேருவொரிரண்டுடையவீடுமனைநீடுமுனைவா
யம்புதமெழுந்துபொழிகின்றவழியோடிவருமனிலமெனவந்தனுகினர்
செம்பியனுமாகிருபனுஞ்செறிதுரோணனொடுசேயொடுசயத்திரதனுந்
தம்பியருமாமனுஞ்சயிந்தரொடுவெய்யபகதத்தனொடுசல்லியனுமே. (கஎ)

மனஞ்செய்வலிகூர்கசதுரங்கமபதாதியிரதத்துடன்வளைந்துபலருந், தனஞ்சயன்மடங்கவெதிர்சாபமும்வளைத்தெதிர் சரங்களுமுகைத்தமர்செய்தார், கனஞ்சலதிமொண்டுகொடெழுந்தனையவண்ணனொரு கார்முகம்வணக்கியொருநூ, றினஞ்சரமொரோர்தொடையிலேவியவரேவுசரம்யாவுமெதிரேவிலகினான்

* தேருதயபானுவெனநின்றவிசயன்றனெதிர்தெவ்வர்பனியென்னவகலத்
தாருதயமாநிருபர்வேலைசுவறத்தனதுதண்டுதனிகொண்டுகுதியா
வோருதவியின்றிமுடியோடவர்சிரங்களுமுடைந்துமுதுகிட்டுடையவே
மாருதசகாயனெனமாருதனெனக்கடவுண்மாருதசுதன்கடுகினான். (கக)

* ஏறிவருதேருடனெடுத்தெறிதருஞ்சிலரையிருபணைகள்பற்றியிறுகச்
சீறிவரும்யானையொடெடுத்தெறிதருஞ்சிலரையைந்துகதியுஞ்சிவணவே
மாறிவருவாசியொடெடுத்தெறிதருஞ்சிலரைவஞ்சினமும்வெஞ்சினமுடன்
கூறிவரும்வாளரசரேறியணிநின்றரதகுஞ்சரதுரங்கம்விழவே. (உ०)

* முந்துபடைவீரர்மிகநொந்துகதைவீமனெதிர்முதுகிடுதல்கண்டுமுனியா
வைந்துறழுநூறுபடியாயிரவர்வின்மையிலருச்சுனனையொத்தவடலோ
ருந்துரககேதனனுரைப்பபுகிலேழுமுடனூழியிறுதிப்பொழிவபோல்
வந்துவடிவாளிமழைசிந்தினர்பராக்கிரமவாசியிபமாவிரதரே. (உக)

* வெவ்வனமெரிக்கடவுளுண்டிடவணக்குமொரு வில்லியுமவ்வில்லொடெதிர்
யவ்வவர்தொடுத்துவிடுமம்புகளனைப்பலவுமவ்வகைதொடுத்துவிலகிக் [போ
கைவரிவிலற்றுநடுநாணினடுவற்றுவளர்கைத்தலமுமற்றுவிழவே
வைவரிவடிக்கணைகளேவினன்மணித்திகிரிவலவன்விடுதேரில்வருவோன். ()

* தருமன்முதலைவரையும்வென்றிடுதுமென்றுதுச்சாதனனொடைவரிளையோர்
பொருமுனையின்வீடுமன்முனின்றவர்களல்லதுபுகன்றநரபாலரெவரும்
ப்ருமமதமாபுரவிதேர்கொடுபறந்தனர்படாதவர்கெடாதகதையுஞ்
செருமுனைசராசனமுமுடையவிருவோருநனிசீறியமர்செய்தபொழுதே. (உங)

* விண்ணவரினுற்றெழுவர்கண்டுகளிகூரவிறல்வீடுமன்விருப்பினுடனே
கண்ணிணைநெருப்பெழவுடன்றினிநமக்குமிதுகாலமெனமாலைபுனையும்
வண்ணவரிவிற்றலைவணக்கிவிதமானபலவாளிகடெரிந்துதருமற்
கெண்ணுமிரதத்தலைவரனைவரையும்விட்டிலனிமைப்பொழுதினெய்தனனரோ.

* எத்தனைமுடித்தலைகளெத்தனைபுயக்கிரிகளெத்தனைகரக்கமலம்வே
றெத்தனையுடற்சுமைகளெத்தனையுறுப்பினிணமெத்தனைகொடிக்குடர்களு
மெத்தனைநிணத்தடிகளெத்தனைநரப்புவகையெத்தனையெலுப்புநிரைமே
லெத்தனைமணித்தொடைகளெத்தனைமலர்க்கழல்க ளிற்றனகளத்தினிடையே.

* விரிந்தனவுரங்களும்வெகுண்டனமனங்களும்விழுந்தனபசுங்குருதிநீர்
சொரிந்தனவெலும்புகளழிந்தனகொழுந்தசைநிமிர்ந்தனநரம்பின்விசியுஞ்
சரிந்தனபெருங்குடர்துணிந்தனசிரங்கடைதவழ்ந்தனநெடும்புருவமு
மெரிந்தனமுகங்களுமெழுந்தனசிரங்களுமிறந்தனர்கடுங்கணிளையோர். (௨௬)

வேறு

* சோமகரின்மச்சரிற்றென்னரிற்றுளுவரிற்றுருபதேயரில்வளவரிற்
றேமருவலங்கற்குலிங்கரிற்சேரரிற்சிஞ்சியரில்வெஞ்சமர்விடா
மாமகுடவர்த்தனரின்மண்டலிகரிற்பட்டவர்த்தனரின்மற்றிவ்வுரவோ
னேமருகணைக்கிலக்காகாதமன்னவர்களெம்மன்னரென்றுமொழிவாம். (௨௭)

வேறு.

* மேலெழுந்துதம்படையைநீடுகங்கைமைந்தனடு மேன்மைகண்டிரங்கி வெகுளா, ஞாலமுண்டசெம்பவளவாய்மலர்ந்துகொண்டிவனைநாமுரண்டொடங்கவிதுவே, காலமென்றுமன்றல்கமழ்கார்முகுந்தன்வெம்புரவிகால்கொள்சந்தனங்கடவவே, கோலவெஞ்சரங்களடைவேதெரிந்துகொண்டுசிலைகோலினன்றனஞ்சயனுமே. (௨௮)

* ஓதம்வந்தெழுந்ததெனமேகநின்றதிர்ந்ததெனவூழியும்பெயர்ந்ததெனவே
மாதிரங்களுஞ்செவிடுபோயகண்டமும்பொதுளிவாய்பிளந்ததண்டமுகடுஞ்
சிதரன்செழுந்துளபமாதவன்றயங்கருணசீதபங்கயங்கொடிருவி
னுதன்வெஞ்சமங்கருதியூதுகின்றசங்கின்முழுநாதம்வந்தெழுந்தபொழுதே. ()

* தூரியங்கறங்கநரபாலர்சங்கினங்களணி தோறுநின்றுநின்றுகுமுறத், தேர்களுந்துரங்கமொடுவேழமுங்கலந்துவருசேனைமண்டலங்களுடனே, பேர்பெறுஞ்சிகண்டிதலையாகமுன்புகொண்டுலகு பேருமன்றுமின்றுகொலெனப், போர்தொடங்கிவென்றிபுனைவீடுமன்றடங்கணெதிர் போயினன்றனஞ்சயனுமே. (௩௦)

* காதிவெங்கொடும்பகழியேவுதிண்சிகண்டிதலைகாணலுங்குனிந்துநகையா, வாதியம்பையின்றுபகைமீளவந்ததென்றுதனதாயுதந்துறந்துவிரைதேர், மீதுகங்கைமைந்தனொருதான்வெறுங்கைநின்றளவின் மேனடந்துசென்றுபொருதுச், சாதனன்சரங்கள்பலதூவினன்பரிந்தெதிரிசாபமுந்துணிந்துவிழவே. ()

* சாகநின்றிலன்றுருபதேயனெஞ்சமின்றிவரிசாபமின்றிவண்கொடிகடேர்
வாகமின்றிவந்தவழிமீளநின்றசந்தனுகுமாரனுஞ்சரங்கள்விடவே
யூகமும்பிளந்துசுரராசன்மைந்தன்முந்திரதமூருகின்றசெங்கணெடுமான்
மேகமுங்கருங்கடலுநீலமுங்கலந்ததிருமேனியுஞ்சிவந்ததறவே. (௩௨)

* போனதின்சிகண்டிதனைமீளவுங்கொணர்ந்துபொருபூசலுங்கடந்திரதமே
னீகிலஞ்சனின்கணையுமேவுகென்றுவெஞ்சமரினேர்நடந்துசென்றுவிசயன்
கூனலங்கிதந்தசிலைகோலியம்பொடம்புபலகூடநெஞ்சுழன்றுதையினான் [வே.
வேனிலம்புமுன்புதுதையாதிலங்குமம்பொன்வரைமேனியெங்கணும்புதைய

* தோளுநெஞ்சமுஞ்சிரமுமார்பமுந்தொடங்கிநிலைதோறும்வந்துவந்துருவவே
சாளரங்கொளங்கவழியோடுகின்றவிந்துமுகசாயகங்கைகொண்டுபிடியா, நாள
றிந்தெதிர்ந்துபொருவோனுமைந்தனன்றுமுதனுமமுஞ்சிகண்டியிவனெய், வா
ளியொன்றுமிங்கெமையுறுதனஞ்சயன்செய்பெருவாழ்வின்றென்றறிந்துமகிழா.

* நாமவெங்கொடுங்கணையினுமுநொந்தனஞ்சமரநாளுமின்றுமுந்தவினி
நீர், போமடங்கநுந்தமையனீள்பதம்பொருந்தியுறுபோரறிந்துகொண்டுபொ
ருவீ, ராமதன்றியென்செயினுமாவதொன்றுமின்றுதனியாண்மை * பொன்ற
லென்றருகுசேர், கோமடங்கரம்பியர்களாகிநின்றமைந்தரொடுகூறினன்பனங்
கொடியனே. (௩௫)

* கோடுகொண்டசெம்பவளநாதம்வந்துவந்துசெவிகூடமுன்புநின்றநிலையே
நாடிநெஞ்சழிந்துதிருநாமமன்புடன்றனதுநாகுழன்றுகொண்டுநவிலா
வோடுகின்றவம்பொழியநீடுடம்படங்கமுனையூரநின்றவம்பொரணையா
வீடுமன்கிடந்தகிடைதேவர்கண்டுவந்தனர்கண்மேல்விழுந்ததம்பொன்மலரே.

நாகநின்றழிந்தபுயல்போலவந்தரம்வழுவிஞாயிறிங்கடைந்ததெனவே
மாகமொன்றுயர்ந்ததறிபீறிமண்புகுந்தநரமாமடங்கலும்புரையவே
சாகரங்கொள்சந்தனுகுமாரனெஞ்சுவந்தரிகடாங்கணைசரம்புதைவதா
யாகவந்துடங்கொளிசெய்தேரிகந்தடைந்தனனிவார்வமிஞ்சரும்புவியரோ. ()

* போரிலெஞ்சினன்குருகுலேசனென்றுகண்டபுருகூதன்மைந்தனும்புனை
துழாய், வீரனுந்துனைந்துவருதேரினின்றிழிந்திருகண்வீழுமம்பினுன்முழுகி
னர், சேரவந்திரண்டுவகையாகிவெங்களங்குறுகுசேனையுந்திரண்டலறவே, யா
ருநெஞ்சழிந்தனர்கள்யாருநொந்துநைந்தனர்கள்யாருநின்றிரங்கினர்களே. ()

வே று.

ஆகமெங்குந்தங்குமம்பிலணைமேல்வீழ்வான்
யோகங்கொண்டேயுயிரையோடாவண்ணநிறுவி
மாகஞ்சூழுமிரவிவடபாலெய்துமளவு
நாகங்காணேனென்னஞானத்தோடேவைக. (௩௯)

* இங்குந்தருமன்முதலாவுள்ளமன்னரெவரு
மங்குந்துரியோதனனையாதியானவரசர்
பொங்குங்கனலாலுலகம்பொன்றுமன்றுபோலே
சிங்கமன்னான்பாதஞ்சென்னிமேற்கொண்டமுதார். (௪௦)

---

* பொன்றல் - பொன்றற்க.

* மறமும்வாகுவலியும்வல்வின்முதலைப்படையின்
றிறமுந்தேசும்வாழ்வுஞ்சீருங்கேள்விச்செலவு
நிறமுமுண்மையறிவுநெறியும்புகழுந்திகழ்பே
ரறமும்பொன்றுநின்னோடையாவந்தோவந்தோ. (௪௧)

தந்தையின்பமெய்தத்தவமேயின்பமாகச்
சிந்தைதெளியுஞானச்செல்வாசெஞ்சேவகனே
முந்தைமரபுக்கெல்லாமுதல்வாஞாலமுழுது
மெந்தையாளவைப்பாரினியார்கோவேயென்றார். (௪௨)

* அழுதமைந்தர்தம்மையஞ்சலென்றென்றாற்றி
யெழுதுதொல்லைவினையையாரேவிலக்குகிற்பா
ருழுதுவாளியுருவவுங்கண்முன்னர்வீழ்ந்தேன்
பழுதொன்றில்லையிதுவேபயனென்பவத்தாலென்றான். (௪௩)

செய்தபோரிலின்பம்யாதுகண்டுதேர்ந்தீ
ரெய்துதுன்பமன்றியில்லையின்னுமஃதே
கைதவங்கள்விட்டுக்கலந்துநீவிர்முன்போற்
பொய்தவிர்ந்துநாடுபுரந்திருத்திரென்றான். (௪௪)

மாகவாரிதந்தைமைந்தனுறுதிகேட்டுப்
போகவாரிதரவும்புனிதர்நன்றீதென்றார்
சோகவாரிமூழ்கத்துணிந்தநாகத்துவசன்
மோகவாரிவேண்டென்முடிவேனமருளென்றான். (௪௫)

புற்றராவதுவசன்புகன்றவாய்மைகேளாச்
செற்றமொன்றுமுணராச்செல்வன்சிறியநகைசெய்
திற்றைஞான்றுமுடிவையெவரேவிலக்குகிற்போர்
மற்றையூழின்முறையேமதியாய்வருவதென்றான். (௪௬)

தேயாவாண்மைக்கொருவன்றிண்டோளரசைநோக்கிச்
சாயாவெனதுசென்னிதாழ்வுதவிர்ப்பாயென்ன
வாயாதரும்பஞ்சணைகள்வருவித்தளிப்பமறுத்தே
மாயாதென்னேவெல்வீர்மதியிலாதீரென்றான். (௪௭)

* சரத்தின்சயனம்பஞ்சசயனங்களினுமினிதென்
சிரத்தின்றாழ்வுதீர்ப்பாய்திண்டோள்விசயாவென்ன
வரத்தின்பயனுனுயிரைநிறுத்துமன்னன்மகிழ
வுரத்தினம்பான்முடியையுயரும்வண்ணமுயர்த்தான். (௪௮)

* கோயிற்றருமன்செய்யக்கூர்வெஞ்சரமேயணையா
நோயிலயர்வுமெய்யினுழையக்காலநோக்கி
வீயின்முத்தியில்லையென்னவிருந்தான்விருந்தாய்ச்
சேயின்முதியகேள்வித்தெள்ளாரமுதநுகர்வான். (௪௯)

கற்றவறிவோய்நாயேன்கல்லாப்பிழையையறிவார்
சொற்றபின்சொற்பலவுந்துதியாய்கோடியான்செய்
குற்றமனைத்துஞ்சிந்தைகொள்ளேலென்றுபணிந்தான்
பெற்றகண்கள்கலுழிபிறங்கவங்கர்பெருமான். (௫௦)

ஆராவமுதம்புரைவானவனைத்தேற்றிநின்சொற்
கூராவத்தரதரிற்குறித்தென்சிலைகைக்கொண்டே
நேரார்முனைபோய்க்கலந்தானின்னைவெல்வாருண்டோ
பாராள்விப்பதரசைப்பயனுங்கடனுமென்றான். (௫௧)

* சொரியுங்கண்ணீர்துடைத்துத்துரியோதனனைநோக்கி
வரியுஞ்சாபக்கன்னன்மன்னர்க்குருமேறன்னான்
றெரியுங்காலத்தவனைச்சேனைத்தலைவனுக்கிப்
புரியும்போருநாளைப்புரிமினென்றுபுகன்றான். (௫௨)

சிலையாசிரியன்கிருபன்சேயோன்முதலானவர்பாற்
கலையாவன்பிற்பலசொற்கரைத்தேயரசைக்காட்டி
யலையார்நிருபர்பல்லோர்க்கருளாதரங்கள்கூறி
நிலையார்பாடிசேர்மினீவிரென்றேவிடுத்தான். (௫௩)

* இன்றுன்மைந்தன்பட்டானென்றுதந்தைக்கிசைப்பான்
சென்றுபரிதிமேலைத்திக்கினெல்லைசேர்ந்தா
னன்றுவருணனன்பாலமுதசெந்நீராறாய்
மன்றவெங்கும்பரந்ததொக்குஞ்செக்கர்வானம். (௫௪)

* பாண்டுமன்னன்புதல்வர்படையும்பாடிபுக்க
தாண்டுபாடிபுக்கதரவத்துவசன்படையு
மீண்டுமுதல்வன்பட்டதெந்தைக்குரைமினென்று
தாண்டுமான்றேர்மைந்தன்சஞ்சயனைவிடுத்தான். (௫௫)

* முனியுநகரிற்சென்றுமுகுராதனனுக்குரைப்பக்
கனியுமன்பின்வெள்ளங்கண்ணீராகிச்சொரிய
வினியென்மைந்தர்க்குறுதியில்லையென்றென்றிரங்கிப்
பனிவெண்மதியங்கண்டபங்கயம்போலானான். (௫௬)

* மண்மேல்விழுந்தானெழுந்தான்மானம்போனதென்றான்
கண்மேலெற்றியின்றேகண்ணுமிழ்ந்தேனென்றான்
விண்மேலுள்ளோர்செல்வம்வீறுபெற்றதென்றான்
புண்மேலயிலுற்றென்னப்புலர்ந்தான்முதல்வன்புதல்வன். (௫௭)

பாடுதங்குஞ்சுபலன்பாவைமண்மேல்வீழ்ந்தே
நாடுசிந்தைகொண்டென்சிறுவர்தம்மைநலிந்தே
வீடுசிந்தைகொண்டவிமலன்றனையுஞ்செற்றார்
கூடுசிந்தைபொல்லாக்குந்திமைந்தரென்றாள். (௫௮)

மின்னார்மேனித்திருவும்வேந்துந்துயருங்கூர
வன்னார்தம்மைத்தேற்றியவர்மீண்டுய்ப்பவெய்திப்
பொன்னார்தெரியன்மார்பன்பொருபோர்ப்பாடிபுக்கான்
றன்னாருலகிற்பிறவாத்தூயோன்சூதசுதனே. (ருகூ)

* செங்கணரவக்கொடியோன்சேனாபதியாய்நாளை
யிங்குமுனையினிற்பார்யாரென்றெண்ணுமெல்லை
யங்கர்பூபன்யானேயமரிற்றலைவனாகி
கங்கைமைந்தன்சொன்னபரிசேகாப்பனென்றான். (சூ0)

* தானாதிகனேநீவெஞ்சமரிற்சேனைத்தலைவ
னாலரசாய்நிற்பார்யாரென்றவனைவிலக்கி.
மீனார்கொடியோன்றன்னைவென்றவேதக்கொடியோய்
சேனாபதியாகென்னான்றீவாய்நாகக்கொடியோன். (சூக)

* சிலையாசிரியன்வேந்தர்வேந்தன்சேனைக்கெல்லாம்
தலையாய்மன்னர்யாருந்தன்னைவந்துசூழக்
கொலையார்பகழிவெள்ளமார்பந்தோறுங்கோத்துத்
தொலையாவெம்போர்தொலைக்கத்துணிந்தானெவருந்துயின்றார். (சூஉ)

* வருணன்மைந்தன்பாடுவருணற்குரைத்துமீளத்
தருணமைந்தன்விசயஞ்சதமகத்தோன்கேட்ப
விருணிறைந்தகங்குலேங்கிமுன்னேயோட
வருணன்பொற்றேர்தூண்டவருக்கன்குணபாலடைந்தான். (சூ௩)

பத்தாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ருருக.

வீட்டுமபருவம் முற்றிற்று.

ஏழாவது,

துரோணபருவம்.

பதினொன்றாம்போர்ச்சருக்கம்.

* காயமும்புலனுமந்தக்கரணமுமாகியெல்லாத்
தேயமும்பரந்துநின்றுமீளவுஞ்சித்துஞ்சுத்த
மாயமுமாகிநீங்கிவருபெருஞானானந்த
மாயவெம்பெருமானென்னையாண்டருளாழியானே. (௧)

கடங்கலுழ்பணைக்கையானைக்காவலகருத்திற்கொள்கென்
றடங்கலும்புகன்றவைசம்பாயனர்க்காண்மைவெம்போர்
மடங்கலையனையானன்பால்வணங்கியானந்தவாரி
தொடங்கருள்விழியோனாகவிவ்வுரைவகுத்துச்சொன்னான். (௨)

பற்பலருறுதிகூறப்பழித்தமர்பயின்றுந்தேறாச்
சர்ப்பகேதுவையோமேலைவிதியையோசலிப்பதென்னா
வற்புதநீரனாகியகங்குழைந்தப்பாற்செய்கை
யுற்பவமொழியநாயேற்குணர்த்தெனவுரைப்பதானான். (௩)

* பகிரதிமைந்தன்சேனாபதியெனப்பத்துநாளு
மிகல்புரியியற்கையெல்லாமியம்பினமினிமேலந்தத்
துகளறுகேள்விவேள்வித்துரோணவாசிரியன்செய்த
புகலருமைந்துநாளைப்பூசலும்புகலலுற்றாம். (௪)

வேறு.

அடுத்தகதிரவனுதிக்குமுன்மனமலைத்ததுயர்துலையகற்றவாய்ந்
தெடுத்தகடன்முறைபயிற்றியமர்புரியிடத்தையணுகினரிருட்குழாங்
கெடுத்தசுடர்முதலணித்தவிதரணிகிளர்த்துமரசருள்கணித்தனா
யுடுத்தகடனிலமதித்தமதுகைமனுவப்பொடணுகவுரைப்பரால். (௫)

கொற்றவமர்முனைகற்றநரனெதிர்நிற்கவலகுருபுத்திரன்
பெற்றநதிசுதனொப்பிலதிரதர்பெற்றிபுகழ்சிலைவிக்கிரமன்
பற்றலரையடுமுக்கிரநரகரிபட்டபினரெவர்திக்கெனா
வெற்றிநிருபர்நடுக்கமுறவருமித்திரசுதனைநெருக்கினார். (௬)

அட்டகுலகிரியொத்தபுயனவரச்சமகல்வுறவித்தினந்
தொட்டவனைநிகர்செப்பவமர்முனைசுற்றிவிறல்தருவிப்பன்யா
னிட்டமுடனுறுமிச்சையுளமுறைவைப்பதெவனெனநற்சொல்சொற்
றெட்டின்விசுவனிருக்கையணுகினனிச்சையொடுதொழுதர்ச்சியா. (௭)

பரதகுலமணிவிரதநிலையிடுபரமமுனியுனைவதைசெய்தோர்
புரதகனனெதிர்சுரர்களெனவமர்பொருதுமணிமுடியிடறுவேன்
சரதமொழியிதுமனனிலருளொடுதருதிவிடையெனவிரவிசேய்
வரதனடிமிசைதொழலுமவனிவன்மகிழவொருமொழியுரைசெய்தான். (௮)

அரவமெழுதியதுவசநினையிகலதிகனெனவுளநிலைசெய்தான்
பரவவனிபர்மகிழவிமையவர்பரிதிவருதிசைபனியைநேர்
விரவநரனொடுபொருதுமகிழ்பதிவிருதுநிலையிடல்விறலலாற்
குரவனுயிரடுகொடுமைபுகல்வதுகொலைசெய்சமர்வயினெறிகொலோ. (௯)

தரணிநிருபர்கள்பறவைகனிதருதருவையணுகுறுதகையென
முரணினலசினருனதுசிலைநிழன்முடுகவிதையளிபுனலினீ
யரணியுறுகனலடவிபொடியுறவடருமுறைபெரிதிகல்செய்தே
பரணிபுலவர்கள்பகரமகிபதிபரவையுலகுறநிலைசெய்வாய். (௧௦)

என்றுபலமுறைசொன்னமொழிசெவியெய்தவிருபுயம்விண்ணுறத்
துன்றுநனிவிடைகொண்டுமணியணிதொங்கன்மவுலிபுனைந்தனன்
மன்றல்கமழ்சிலைகொண்டுதினகரன்மைந்தனணிபெறுமங்கமோ
டின்றுசமரமுடிந்ததெனவுமியம்பவமர்முனைதுன்னினான். (௧௧)

படகவொலியொடுகுடைகள்கொடியொடுபரவுநிருபர்கள்குழுவுடன்
கடககசரததுரகவயவர்கள்கனககிரிவளைகடல்பொரத்
தடகமலவிழிபொறிகளெழநுதல்வெயர்வுதரகுணவொளியுடன்
விடவனலினெழுதகுதிசினமெழவிசையிரதமிசையணுகினான். (௧௨)

புடவிமுழுதொருகவிகைநிழலிடுபுரசையரசவனெதிர்புகுந்
தடவிதிரிகுனர்சமருன்வயமொழிலரசுபுரிபவரெவர்கொலோ
தடவியுணர்முறைபலப்லுளவிகறவிர்தியெனநனிதழுவினான்
கடவிவருரதமொருவிமறுகியகமலமலிதரல்கவினவே. (௧௩)

உற்றவிளவலுமித்திரனுமனமொத்தசகுனியுமொத்துணர்ந்
தற்றநதிசுதனொப்பமுனைதருமக்கிரனெவனெனவிற்குரு
வெற்றியுதவுசமத்தனெனவொருமித்தவனையணுகிப்பணிந்
திற்றைமுதலுயிரிற்றகுரவனிலெற்றுசமர்புரியொப்பிலாய். (௧௪)

தனுவின்மறையுணர்நிபுணநினையெவர்தனுவினெதிர்புயவலியுளோர்
மனுவின்முறையுறுநிருபர்விழியிமைமறலியொளிர்தரல்புரையநின்
கனிவிலுறவிகல்புரிதறகுமெனவவனுமிளநகைகசியவே
பனுவலமரருமுலகநிருபருமகிழவொருமொழிபகருவான். (௧௫)

கரியநிறமுகிலுருமையுறழ்தருகடியசிலைதருகணைகளா
லெரியவெழுபுவிககனமுடைபடவிபமதலறிடவமரர்பூச்
சொரியவிகலினர்நெரியவொருகொடிதொலையுமுனர்பொருதிடவலே
னரியதிலையுனதனிகமுணர்தரவதிபனெனுநெறிபுரிகெனா. (௧௬)

புனிதநதிதருபுனலுமறுகலர்பொருள்கள்பலகொடுவழிபடா
வினிதின்மறையவர்மறைகண்மொழிதரவெழில்கொண்மணிமுடிநிறுவியே
மனிதவரிபதமலர்கள்சிரமுறவணையுமரசனைமகிழ்வொடே
முனிதனுளம்வெயின்மெழுகினுறவரமுதவவருளுதுமொழிகெனா. (கஎ)

ஐயவரமருள்செய்வையெனிலறனன்றுதருமொருமைந்தனை
வெய்யவிகலழிவெய்துபொழுதுகவர்ந்துதருதல்விரும்பினேன்
செய்யவிதுகடனென்னமறைமுனிதிண்மைபலமுறைசிந்தியா
மையலிதுமுடிவெய்தலரிதெனமன்னனொடுசிலபன்னினான். (கஅ)

அலகிலடலினர்முடிகள்பொடிபடவமர்செய்தொருகுடைநிழலிலே
யுலகுபுரிதரவுதவுகெனவரனொருசொல்புகல்வதுதவிரநீ
யிலகுமுரசுயர்துவசனுயிரொடுமெதிரினிடவரமியலலாற்
சலசனுதவியவுயிரலரியிலிதருமனெனுமொழிசரதமே. (ககூ)

கலைகளுணர்வினிலயனுமெதிரிலிகருணைதரிலரிநிகரிலி
சிலைகொள்செருவினிலரனுநிகரிலிசெருநர்வயமுறலெளியவே
மலைகொள்புயன்விதிவலியிலொருகெடுமதியிலெனதுகைவயமுறிற்
கொலைகொளழலயிலுழவநினையுளகொடுமைபகருதிபுரிவதே. (உ௦)

வேறு.

ஆராதபெருங்காதலுளத்தோன்சொல்வா னணிமுரசகேதனனாருயிரைநீக்கிற்
றீராதமுனிவதனாலுகாந்தகாலத்தீயாகினானமதுசேனைமுற்றும் [ன்றூற்
பேராதபடிதொலைக்குமதனாற்காய்ந்துபிறைக்கணையால்யாமவரைப்பிளந்துசெ
றோராதசுடராழிமாயோன்வைத்த சூட்சிதவிர்த்தரசுபெறவளிக்குந்தூயோய்.

ஆதலினாலுதிட்டிரனையுயிரினோடுமசைத்தவரிலவனொடுசூதாடிவென்று, போதலினிக்கானிலெனத்துறக்கிலேதும்புகலாதுதுணைவருடன்புகுவரின்றே, காதலிலாழ்குலவரசருடனேகூடிக்களத்துலகநீடூழிகாப்பன்யானே, மீதலாஞ் சலிபுரியுமுரவோய்நாயேன்விரும்பியகோளிதுவென்றும்விமலன்சொல்வான்.

ஆரணமாமுனிநகைசெய்தரசன்பேதை யறிவினுக்காற்றாதலசியறைந்த வாக்கின், காரணமும்வழுவாமல்வேறோர்வாய்மை கருதிமுதற்காண்டவங்கட் டழித்தகாளை, நாரணனால்வெலற்கரியகாலகேயர்நமனூரிற்குடியிருக்கவைத்த வெற்றி, மாரணனங்கிருப்பவிதுமுற்றுமென்றேவகுக்கிலனென்சிலைத்திறலா ன்மதிக்கொள்மன்னோ. (உங)

கைதவங்கள்பலகோடிகருத்தினாலுங் காமசரங்கனற்கண்ணனெதிர்பட் டாற்போற், செய்தவங்களுடையார்பாற்செல்லாதென்றுதேறாமலாறாகாச்செ யலுட்கொண்டாய், பொய்தவறுமுரையானைக்கருத்தின்வண்ணம்போரிலசை த்தெய்துவன்புராரியோடு, செய்துசமர்வல்லபனன்றருகுறோனேற்றெளிதியிது மன்னவெனத்தெளிவித்தானே. (உச)

விருத்தமறைமுனிபுகன்றபான்மைகேட்டுவேந்தனொடுதம்பியரும்விரைந்துபொங்கிக், கருத்துமுடிந்துதிட்டிரன்கைபுக்கவாபோற்கரங்குவித்தேழ்கடலொலித்தாலென்னவார்த்திட், டுருத்திருபா லுடனெய்தக்கன்னனுதியுரவோர்கள்புடைசூழமுரசமார்ப்பச், செருத்தனிவெங்களத்துலகம்பொன்றுங்காலஞ் செறிந்ததெனவேதமுனிசேர்ந்துநின்றான். (உரு)

இச்செயல்களொற்றர்பணிந்துரைப்பக்கேட்ட விகன்முரசக்கொடியுடையானிளைஞரோடு, மச்செயல்களறிவித்துநரனைநோக்கி யரசனுக்குவரனளித்தவாசானெய்தின், முச்சுடருந்தெறுமானிமுனைந்தாலன்றிமுடிக்கரிதாங்தேசிகனுமுறைமைநோக்கி, யச்சமுறலெனையகறலாவிகோடற்கடுத்தசரம்விடுவனம்பான்மையாராரே. (உசு)

எனவுரைப்பநரன்மொழிவானிராசராசனிருந்துநினைத்திடுங்கருமமிதுவேயன்றி, தனுமறைத்தேசிகனுலுமாகாமூன்று தகுதிபடுமவர்க்கேனுமாகாகண்டாய், மனனிருத்துகெனமீண்டுமென்றனுவி வைத்திருப்பவுனைக்கவரவசமோவாசா, னினியவுயிர்கைக்கொள லுநினைக்கைவிட்டேயிருத்த லுமிங்கெனக்கொன்றுயுணர்தியெந்தாய். (உஎ)

மண்ணுலகம்பொடியாகிக்கடல்களேழும்வற்றிவடவாமுகமுஞ்சிதைந்துநீறாய், விண்ணுலகுந்தடுமாறிக்கதிர்கால்சாய்ந்துமேருவரைசுழன்றரவுமெலிவெய்தாவோ, பண்ணுலவும்பிலத்தோரின்வானுளோரிற்பாரினரினினைக்கவர்வான்படர்ந்தனுான்றி, னெண்ணமறவிருத்தியுனக்கினிதினென்று னிகலாழிதரித்தபிரானிதயம்போல்வான். (உஅ)

குற்றமறுபற்குனப்பேர்கொண்டகாளைகுரைத்தபசுங்கொண்டலெனக்குறித்தவாய்மை, வெற்றிமுரசுயர்த்தகொடிநிருபன்கேளாவீங்கிருதோளோங்கியகல்விண்ணைப்போர்ப்ப, பெற்றியமாமுரசினொடுபடகமார்ப்பப்பிறங்குகசரததுரகவுவரிசூழக், கொற்றமிகுசாமரைநின்றசையத்தேர்மேற் கொண்டெழுந்தானிளைஞரொடுங்குருகுலேசன். (உகூ)

வேறு.

* சென்றனன்கங்கைமைந்தன்றினகரன்மைந்தன்செல்லா
நின்றனன்றுரோணன்மைந்தனீடமர்முனைந்துசெய்யான்
வென்றனமினிநாமென்றுமெய்ம்முகில்வண்ணன்சொல்லக்
குன்றனகுவவுத்தோளார்வெங்களங்குறுகினாரே. (௩௦)

* மாதனத்தளகையாளுமன்னெனவானிற்பாக
சாதனக்கடவுளென்னத்தகும்பெருந்தாணிவேந்தன்
சேதனப்படைஞரோடுஞ்சேனையின்காவலான
வேதாந்குருவினொடும்வெங்களம்வந்துசேர்ந்தான். (௩௧)

* மதியிலாவிசும்புஞ்செவ்விமணமிலாமலருந்தெண்ணீர்
நதியிலாநாடுஞ்செம்பொன்னரம்பிலாநாதயாழு
நிதியிலாவாழ்வுந்தக்கநினைவிலாநெஞ்சும்வேத
விதியிலாமகமும்போன்றவீடுமனிலாதசேனை. (௩௨)

* பகடுதேர்புரவிகாலாள்பலவகைப்பட்டசேனை
சகடமாவியூகமாகவகுத்தனன்றனு நூல்வல்லான்
றிகடருகவுஞ்சயூகமாகவேதிட்டத்துய்மன்
றுகடருசாதுரங்கம்யாவையுந்தொகுத்துநின்ருன். (௩௩)

* படையுடையிருவர்சேனுபதிகளும்பனிவெண்டிங்கட்
குடையுடைநிருபர்சூழவருதினிக்குழாங்கள்சூழ
நடையுடைத்தடந்தேருந்திராகரும்பணிக்கும்வண்ணந்
தொடையுடைவாளிமாரிசோனையம்புயலிற்பெய்தார். (௩௪)

வையகம்புகழுங்கும்பசம்பவன்வலிமீக்கொண்டு
செய்யகட்கடையோனுகிப்பலசிலீமுகங்கள்போக்கி
மையறுபாண்டுமைந்தர்வாகினிபிளந்துசிந்தி
வெய்யவன்மத்தியானமேவுதல்கடுப்பநின்ருன். (௩௫)

மாயவனிரதமுய்ப்பவந்தபற்குனனைச்சூழ்ந்து
காயனுமிழுங்கண்ணன்கன்னன்போர்புரிந்தபோதி
லேயவெண்டிசையுங்கம்பித்திரவியுநடுங்கிவிண்ணிற்
றூயவரிமையானுட்டம்பொத்தினர்துணைக்கரத்தால். (௩௬)

* மருத்துவர்மைந்தர்தம்மிளவலும்வலியசூது
கருத்துடன்பொருதுவென்றமாமனுங்கலந்துதம்மி
லொருத்தரையொருத்தர்வேறலரிதெனவுடன்றுவேகச்
சரத்தொடுசரங்கள்பாயச்சராசனம்வாங்கினுரே. (௩௭)

* ஒருகணைதொடுத்துப்பாகனுயிர்கவர்ந்துயர்த்தகேது
விருகணைதொடுத்துவீழ்த்தியிரதமாத்தொலையநான்கு
பொருகணைதொடுத்துவஞ்சன்பொருவறுமார்பிலாறு
வருகணைதொடுத்துவாகைமிலைந்தனன்வஞ்சமில்லான். (௩௮)

* உகுநிணச்சேற்றிலூன்றியோடுதற்குன்னுவான்போற்
சகுனியத்தேரினின்றுமிழிந்துகைத்தண்டமேந்த
நகுலனுக்கிளையோன்ருனுநகுமணிவலயத்தோண்மேல்
மிகுதிறற்றண்டுகொண்டேவென்னிடப்பொருதுமீண்டான். (௩௯)

* மதாசலமகுடமான்றேர்வாம்பரிவயவர்வெள்ளப்
பதாதியெம்மருங்கும்போதப்பார்த்திபர்நிழலிற்போதப்
பிதாமகனிறந்தானென்றுபேதுறுநிருபன்போந்து
சதாகதிமைந்தனேடுந்தாக்கினன்றபனன்போல்வான். (௪௦)

* அரிக்கொடியரியேறன்னனரவவெங்கொடியுமற்று
வெருக்கொள்பேரரவமன்னன்வில்லுமுனற்றுவீழ
வெரிக்கணையேவிச்சூழ்ந்ததரணிபரெதிர்ந்துவேந்தர்
கரிக்குலமிவுளித்திண்டேர்மடியவெங்கணைகடொட்டான். (௪௧)

* பல்லியமுழங்கமன்னர்படப்படப்பரித்தேரோடும்
வில்லியருணேவேந்தன்வென்னிடும்விரைவுகாணுச்
சொல்லியவிற்கைவாயுசுதனுடனுருமேறென்னச்
சல்லியன்முனேந்துவீரசாயகமேவினுனே. (சஉ)

* தம்முனேடுடன்றுவந்தசல்லியகுமாரன்றன்னே
யெம்முடனெதிர்ப்பையாகிலிமைப்பொழுதிகல்செய்கென்று
வெம்முனேகடந்தபொற்றேர்வெஞ்சிலேநகுலன்றேன்றி
யம்முனேகவந்தமாடவவனெடும்போர்செய்தானே. (சங)

* மோகரித்தொன்றிரண்டுமூன்றுநாலேந்தம்பேவிப்
பாகனேச்சிலேயைப்பொற்றேர்ப்பதாகையைப்பரியைவீழ்த்தி
யாகமுற்றுருவவெய்தானருச்சுனனிளவன்மாறுப்
போகமத்திரத்தார்கோவும்புறந்தந்துபோகலுற்றுன். (சச)

* சையமோரிரண்டுதம்மிற்பொருதெனத்தடங்தேருந்தி
வெய்யவன்மகனும்வீரவிராடனுமெதிர்ந்தவேலே
வையகங்கம்பமுற்றுமாசுணநடுங்கமென்மே
லெய்யும்வெங்கணேயால்வானத்தெல்லேயுமறைந்ததன்றே. (சரு)

* துருபதயாகசேனநிருபனுந்தும்பைசூடி
வருபகதத்தனென்னுமடங்கலேறனேயகோவு
மொருபகன்முழுதுந்தங்களுக்கமுமுரனுந்தேசும்
பொருபடைவலியுங்காட்டிப்போதகப்பூசல்செய்தார். (சசு)

* துன்றுவெங்கழற்காற்சோமதத்தனுஞ்சூழ்ந்துநின்ற
வன்றிறல்வேந்தர்தாமும்வாளமர்புறந்தந்தோட
வன்றுவீடுமனேவென்றவாண்டகைசிகண்டியென்பா
னின்றுபோர்செய்தவீரமெம்மனேர்க்கியம்பலாமோ. (சஎ)

வேறு.

* தேர்த்திரள்பரித்திரள்கரித்திரள்சேனேயின்
கோத்திரள்புடைவரக்குடைவரக்கொடிவரப்
பார்த்திவன்மதலேயும்பார்த்தன்மாமதலேயுந்
தூர்த்தனர்விசும்பையுந்தொடுத்தனர்தொடைகளால். (சஅ)

* மொய்கணேபிற்படமுந்துதேருந்தவும்
பெய்கணேகணேயுடன்பின்னிமுன்வீழவு
மெய்கணேயபிமனுமிலக்கணக்குமரனுங்
கைகணேதரநெடுங்கார்முகம்வாங்கினுர். (சகூ)

* இன்சிலேமதனவேளெனவருங்குமரனவ்
வன்சிலேவில்லிதான்மகிழ்வுறுங்குமரனே
நன்சிலேநடுவுறநாணெடுந்துணியவே
தன்சிலேகொண்டுவெஞ்சாயகமேவினுன். (ருO)

* அற்றவிற்றுணிகளாலரியையும்பாகையுஞ்
செற்றனன்சென்றனன்றேரொடுந்தேருகக்
கொற்றவர் நூற்றுவர்க்குரியவக்குமரனைப்
பற்றினனுயிரொடும்பாண்டவர்குமரனே. (ருக)

* வீயினல்வென்றபோர்வில்லியைக்கண்ணுதற்
றீயினல்வென்றவன்றிகழ்தருஞ்சிந்தையோன்
காயினன்வார்குழல்கைப்படுத்தெதிருறப்
போயினனவனெடும்பொன்னெடுந்தேரின்மேல். (ருஉ)

* முந்துவாளபிமனம்மூரிவிற்குமரனை
யுந்துதேர்மீதுகொண்டோடலுமொருபுடைச்
சிந்துபூபதிசெயத்திரதன்வன்செயமுற
வந்துவெங்குனிசிலைவாளியிற்றகையவே. (ருங)

* மடங்கலைவளைவதோர்சிலம்பிநூல்வலையெனத்
தொடங்கியமன்னவன்றேளுரந்தொலைந்தபின்
றிடங்கொடோளங்கர்கோன்முதலியதேர்மன்ன
ரடங்கவந்தபிமனுமொருவனேடமர்செய்தார். (ருச)

* வந்தவர்வந்தவர்வானுதனிலைதொறுஞ்
சிந்துரத்தூளியாற்றிலகமிட்டனனெனக்
கொந்துறுகணைமுனைக்குருதிநீர்மல்கவே
வெந்திறல்வில்லின்வென்கண்டனன்வீரனே. (ருரு)

* சென்றதேர்யாவையுந்தன்னெருதேரினல்
வென்றுமாமன்னவன்மகனையுமீதுகொண்
டன்றுபோம்வெஞ்சிலையாண்மைகண்டபிமனை
வன்றிறற்சல்லியன்வந்துமுன்வளையவே. (ருசு)

* சித்திரபானுவிற்சிறிமுற்செல்லுமம்
மத்திரராசனைவருகநீவருகவென்
றத்திரகாவிரண்டவன்முகத்தடசினன்
மித்திரர்செல்வமாம்விசயன்மாமதலையே. (ருஎ)

* தோளிரண்டினூடுதைத்தொளைபடப்பாகன்மேன்
மீளவுங்கொடியதோர்வீரவேலேவின
னீளவெங்கதையுடனீள்வரையிழிதரும்
யாளிபோற்சல்லியனிரதம்விட்டிழியவே. (ருஅ)

* வன்புடனபிமன்மேன்மற்றவன்வருதலு
மன்புடன்கண்டுபேரனிலன்மாமதலைபோ
யென்புடன்புயநெரிந்தினமணிமகுடமு
முன்புடன்சாயவேதண்டினன்மோத்தினன். (ருகூ)

* தலக்கணேசல்லியன்வீழ்தலுந்தந்தையோ
டலக்கணுற்றடியனேனுண்மையென்னுமெனக்
குலக்கணியானவிற்குமரனின்றயர்தலு
மிலக்கணகுமரனுந்தனதுதேரேறினன். (சு௦)

* தரையில்வீழ்சல்லியன்றன்னையுந்தனதுபே
ரிரதமேலேற்றியவ்விலக்கணக்குமரனுங்
குரிசிலையன்றுயக்கொண்டுபோயினனரோ
கிருதவன்மாவெனுங்கிளர்முடிநிருபனே. (சுக)

* பொரும்பொருமுனைதொறும்புண்ணியன்சேனையிற்
பெரும்பெருந்தரணிபர்பேறுடன்வேறலா
லரும்பெருங்கொடியின்மேலரவவேறெழுதினன்
றிரும்பினன்பல்வகைச்சேனையுந்தானுமே. (சுஉ)

வேறு.

* தண்டேகொண்டுவீமனெனுஞ்சண்டபவனந்தாக்குதலாற்
றிண்டேரென்னப்பட்டவெலாஞ்சிதைகின்றதுகண்டிதயம்வெரீஇப்
பண்டேயுள்ளவோராழித்தேரோடொளித்துப்பரிகளுடன்
கொண்டேயருக்கனவ்வளவிற்குடபான்முன்னீர்குளித்திட்டான். (சுந)

* சென்றநிருபர்புறநாணத்திண்டோளபிமன்முதலான
வென்றிநிருபர்குழூஉக்கொண்டுவிறலார்சேனைவேந்தருடன்
மன்றல்கமழுந்துழாய்மவுலிமாலுந்தாமும்பாடிமனை
யொன்றியினிதிற்கண்டுயின்றாருரனுந்திறலுமுடையோரே. (சுச)

* பானாளளவுந்துயிலாமற்பாந்தட்டுவசன்றனக்குயிர்நண்
பானார்பலரும்வாள்வேந்தரமைச்சர்பலருமிளையோருஞ்
சேனாபதியுஞ்சூழவிருந்தபிமன்கையிற்றிருமைந்தன்
றானுடைமரிலகப்பட்டதாழ்வுக்கிரங்கியுளநொந்தார். (சுரு)

* தனுவேதத்தின்கேள்விக்குஞ்சதுர்வேதத்தின்வேள்விக்குஞ்
செனுவேயுன்னையல்லதினிச்செய்துமுடிக்கவல்லவர்யார்
மனுவேயனையவுதிட்டிரனைநாளைச்சமரின்மற்றிதற்கோ
ரனுவேயென்னவகப்படுத்தினல்லாற்செற்றமறாதென்றான். (சுசு)

* பெற்றோன்றனினுஞ்சதமடங்குவலியோன்வீமன்பின்னிற்கப்
பொற்றேர்விசயன்முன்னிற்கப்பொரும்போர்முனையிற்போருதவி
யற்றோர்போலவில்வலியாலறத்தோன்றன்னையகப்படுத்தன்
மற்றோர்பிறப்பிற்றெரியாதிப்பிறப்பின்முடிக்கமாட்டேமால். (சுஎ)

* செவ்வாய்வைக்கும்வலம்புரிக்கைத்திருமால்செம்பொற்றேரூர
வெவ்வாய்வாளிவில்விசயன்மெய்மைத்தருமனணிநின்ற
வவ்வாயிமைப்போதணுகாமற்காப்பாற்சிலருண்டாமாகி
லிவ்வாய்நாளையகப்படுத்தித்தரலாமென்றானெழின்மறையோன். (சுஅ)

* திகத்தராசன்முதலாகச்சஞ்சத்தகரிற்சிலமன்ன
ருகத்திற்கடையிற்கனல்போல்வாரொருவர்க்கொருவருரைமுந்திச்
சகத்துக்கொருவனெனும்விசயன்றம்முற்குதவிசெய்யாமன்
மகத்திற்சனிபோல்வளைக்குவம்யாமெனவஞ்சினமும்பலசொன்னார். (௬௯)

* அருளேவடிவுகொண்டனையோனருகங்கமரிலனுகாம
லுருளேரிரதத்தருச்சுனனையொருநாண்முழுதுந்தகைந்திலமேன்
மருளேகொண்டுகுடிவருந்தமனுநூல்குன்றிவழக்கழியப்
பொருளேவெஃகுமரசரைப்போற்புகுவேம்யாமுநரகென்றார். (௭௦)

* மறனிற்சிறந்தபுயவலியால்வரைபோன்றனிலன்மைந்தனெனப்
புறநிற்பானைத்தம்முனிடைப்போகாவண்ணந்தகைந்திலமே
லறனிற்கொண்டதன்மனையாளமளித்தலத்தினமுதிரங்கப்
பிறனிற்றேடும்பெரும்பாவிபெறும்பேறெமக்கும்பேறென்றார். (௭௧)

* கன்றால்விளவின்கனியுதிர்த்தோன்கடவுந்திண்டேரவனுக
வன்றாட்டடக்கைமாருதியேயாகவமரின்மறித்திலமே
லென்றுநாளைமுனிபோரினெந்நன்றியினுஞ்செய்ந்நன்றி
கொன்றார்தமக்குக்குருகுலத்தார்கோவேயாமுங்கூட்டென்றார். (௭௨)

* இவ்வாறுரைத்தவேந்தர்க்குவேண்டுஞ்சிறப்புச்செய்தகற்றிக்
கைவார்சாபமுனிவரன்றன்கழற்கால்வணங்கியேகுகெனச்
செவ்வாய்மலர்ந்துமானத்தாற்றிறலால்வாழ்வாற்செகத்தொருவ
ரொவ்வாவரசன்றன்கோயிலடைந்தான்விபுதர்க்கொப்பானே. (௭௩)

* கங்குற்சிலைநூன்முனிவனுடன்கழற்காலரசன்பணித்தமைகேட்
டங்குத்தரியாதிவன்கரத்தேயருள்கூர்நெஞ்சனகப்படுமென்
றிங்குத்துயில்வார்யாவரையுமிருபாளையத்தினிடந்தோறுஞ்
சங்கக்குரலாற்றுயிலெழுப்பித்தபனன்குணபாற்றான்சேர்ந்தான். (௭௪)

பதினொன்றாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௭௪.

பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்.

---

* பொய்யாததவமுனிபின்போயருளித்தாடகைதன்
மெய்யாவநிகரென்னவெஞ்சரத்தாலழுத்தியபின்
மையாழிமுகில்வண்ணன்வாங்கியனபூங்கமலக்
கையாலுமொருசாபங்காலாலுமொருசாபம். (௧)

* அற்றராபதிகருதியாசானோடுரைத்தவெலா
மொற்றராலக்கணத்தேயுணர்ந்தமுரசக்கொடியோன்
மற்றராவணைதுறந்தமாயனுக்கும்விசயனுக்குஞ்
சொற்றராபதநெருங்கத்தொடைத்தும்பைபுனைந்தானே. (௨)

கருங்களவின்கனிவண்ணன்கனைகழற்கால்வேந்தரொடும்
பெருங்களஞ்சென்றெய்தியபின்பேணார்கள்வெருக்கொள்ள
விருங்களிறுதேர்பரியாளிருமருங்கும்புடைசூழ
வருங்கலிகொள்வருதினியைமண்டலமாவகுத்தானே. (௩)

பின்னிறுத்திமாருதியைப்பேரணியிற்பலவகையா
மன்னிறுத்தியிருபாலுமருத்துவர்மைந்தரைநிறுத்தி
மின்னிறுத்துநெடுவாளிவிசயனையுங்குமரனையு
முன்னிறுத்திநடுநின்றான்முரசநிறுத்தியகொடியோன். (௪)

இப்பான்மற்றிவர்நிற்பவிரவுரைத்தமொழிப்படியே
தப்பாமற்றிகத்தகுலத்தலைவனுஞ்சஞ்சத்தகருந்
துப்பார்வெஞ்சிலைத்தடக்கைத்துரோணன்முதலனைவோரு
மப்பால்வந்தணிமகரவியூகம்வகுத்தணிந்தாரே. (௫)

காரணிபோற்பொருப்பணிபோற்காற்றணிபோற்களிற்றணியுந்
தேரணியும்பரியணியுந்திரிகத்தகுலபதியு
நாரணகோபாலரெனுநராதிபரும்வாள்விசயன்
காரணமாவறைகூவிக்கடுங்கொடுங்கார்முகம்வளைத்தார். (௬)

ஆர்த்துவருமவர்நிலைகண்டரசனைநீரிமைப்பொழுது
காத்திடுமினெனநின்றகாவலரோடுரைசெய்து
கோத்தருமன்பணித்ததற்பின்கோதண்டமுறவாங்கிப்
பார்த்தனுமன்றவரெதிர்போய்ப்பலவாளிமழைபொழிந்தான். (௭)

தூளியேயண்டமுறத்தூர்த்துமுதலகல்விசும்பை
வாளியேதூர்க்கும்வகைமலைவாங்குசிலைவாங்கி
யாளியேறனையானுமவனிபருங்கவந்தமுடன்
கூளியேநடமாடக்கொடுஞ்சமரம்விளைக்குங்கால். (௮)

கொடித்தலைவேற்சயத்திரதன்சவுபலன்குண்டலன்முதலா
முடித்தலைவாளடனிருபர்முப்பதினாயிரர்சூழ
விடித்தலைமாமுரசியம்பவிபதுரகப்படைசூழக்
கொடித்தலைமான்றடந்தேரான்குனிசிலையின்குருவந்தான். (௯)

வந்தகுருக்குருகுலமாமன்னுடன்போர்புரிவதன்முன்
பந்தமுறப்பாஞ்சாலர்பற்பதினாயிரர்சூழ
முந்தவயப்பணைமுழங்கமுழங்கொலிநீரொலிப்பதுபோ
லந்தமுனிக்கெதிர்நடந்தானவர்சேனாபதியே. (௧௦)

இருவர்பெருஞ்சேனையுமுற்றெதிரெதிராயுதமேந்தி
யொருவரொருவரைவேறற்கொண்ணாதவமருடற்றச்
செருவிலரியேறனையான்றிட்டத்துய்மனும்வெகுண்டு
பொருசிலைவெங்கணைபொழிந்தான்போர்வேந்தர்பலர்மடிந்தார். (௧௧)

* துன்முகனைப்புறங்கண்டு துன்மருடன்முனைசாய்த்துக்
கன்முகமாங்காந்தாரர்கலிங்கர்கவுசலர்நிடதர்
புன்முகராயினைத்தோடப்பொருதழித்தான்பொருதழிந்த
மன்முகவெம்பெருஞ்சேனைமறையவன்பாலடைந்தனவே. (கஉ)

* மறைவாய்வெஞ்சிலைமுனிவன்வருநினிதன்னிலையழிந்து
குறைவர்வந்தமைகண்டுகோதண்டமெதிர்வாங்கித்
துறைவாய்வெங்கனல்போலுந்துருபதன்கைச்சிலைதுணியப்
பிறைவாய்வெங்கணைதொடுத்துப்பிறைமுடியோனெனச்சென்றான். (கங)

* சத்தியகேதுவின்சாபஞ்சரமொன்றாலிரண்டாக்கிச்
சித்திரவெஞ்சிலையாண்மைச்சிகண்டியையுஞ்சிலையறுத்திட்
டுத்தமோசாமுதலாவுள்ளகொடுந்திறல்வேந்தர்
தத்தமுயிருடன்போகத்தானையெலாமடிவித்தான். (கச)

* தாண்டியவெம்பரிநகுலசாதேவர்வென்னிட்டார்
பாண்டியனுமுதுகிட்டான்பாஞ்சாலர்புறமிட்டா
ரீண்டியவெங்களத்தவிந்தாரெத்தனையாயிரம்வேந்தர்
தூண்டியவெம்பரிநெடுந்தேர்த்துரோணன்கைத்தொடையாலே. (கரு)

எடுத்தசிலைதனக்கொருவனெனுஞ்சோழன்முனையழிந்தான்
வடுத்தவிர்சீர்மச்சத்தார்மன்னவனும்புறந்தந்தா
னடுத்தகுலக்களியானையஞ்சனபற்பனுமிரிந்தான்
கடுத்தமுகத்தொடுதுரோணன்கலந்தழிக்குங்கணைமழையால். (கசு)

வேறு.

* வடுத்தருவெஞ்சிலீமுகமும்வணக்குகொடுஞ்சராசனமு
மெடுத்துமனங்கதுவுசினமெழுப்பவெழுந்தோர்நொடியி
னடுத்தகைவின்வானவருநடுக்குறுவெம்போர்முனையி
லடுத்தனர்வன்றபோதனனுமடற்றருமன்குமாரனுமே. (கஎ)

* அதிர்த்தனசங்கசாலமுதலனைத்துவிதங்கொள்காகளமு
முதிர்த்தனவண்டகோளமுறவொலித்துடுவின்குழாமுழுதும்
விதிர்த்தனசெங்கைவாளொடயில்விழித்தனகண்கடீயுமிழ
வெதிர்த்தனதங்கள்சேனைகளுமெதிர்ப்படுமைந்தர்போர்பொரவே.: (கஅ)

* மதித்துமதங்களேழினுமெய்வனப்புறுகொண்டன்மானுவன
கதித்துநெடுங்கைவீசியுடுகணத்தைமுகந்துவாருவன
மிதித்துரகன்பணாமுடிகள்விதிர்த்துவெகுண்டுலாவுவன
கொதித்திருகண்களாலுமெரிகொளுத்தினகும்பவாரணமே. (கக)

* வரைக்குலமென்றுகூறிடினவ்வரைக்குவயங்குநேமியில
நிரைக்குநெடும்பதாகையிலநிறத்தகொடிஞ்சியாதியில
வுரைப்படவுந்துபாகரிலவுகைத்ததுரங்கராசியில
விரைத்துவிரைந்துலாவலிலவெனச்செருமண்டுதேர்பலவே. (உ0)

* உகத்தின்முடிந்தநாளலையொடொலித்தெழுசங்கவேலையென
மிகப்புகைகொண்டுவானுலகும்வெடித்திடமண்டுதேயுவென
நகச்சிகரங்கள்சாயவெதிர்நடப்பனசண்டவாயுவென
விகற்செய்துசெம்பராகமிசையெழுப்பினதுங்கவாசிகளே. (௨௧)

* விளைத்தனர்தொந்தமாகவமர்மிகைத்தனர்தந்தம்வீரமுட
னுளைத்தனர்சிங்கசாபமெனவுறுக்கினர்சென்றுமேன்முடுகி
வளைத்தனர்கொண்டவார்சிலைகள்வடித்தசரங்களானுழுது
திளைத்தனர்வென்றிகூரும்வகைசெருக்களமெங்குமாடவரே. (௨௨)

* மிகைத்தனர்தும்பைமாலைமுடிமிலைச்சினரின்றுசானுமென
நகைத்தனர்தங்கடேருமெதிர்நடத்தினர்சண்டவேகமொடு
பகைத்தனரங்கம்யாவுமிசைபடப்படநஞ்சுகால்பகழி
யுகைத்தனரற்றையாடமரினுதிட்டிரனுந்துரோணனுமே. (௨௩)

* சினத்துமுனைந்தபோரில்வருசிலைக்குருவின்பதாகையற
மனத்தினுமுந்துமாதுணியவயத்துடனுந்துபாகன்விழ
வனைத்துருளுஞ்சதாவியிடவடுக்குறநின்றதேரழிய
வினைத்தொடையைந்துபூபதியுமிமைப்பொழுதின்கணேவினனே. (௨௪)

* தனித்துமலைந்தபோரிலெழுதலத்தரசன்கைவாளிகளி
லனைத்தும்விளைந்துநாணொடுவிலறத்துணியுண்டதாகவமுன்
முனிக்குலமென்றுமாதிமறைமுதற்குருவென்றுமேன்மையுற
வினிக்கணையொன்றுமேவுகிலமிளைப்பறவஞ்சலேகெனவே. (௨௫)

* அறத்தின்மகன்றனுண்மையினையழித்துயிரெஞ்சிடாவகைதன்
மறத்தொடுகொண்டுபோவலெனமதித்தெதிர்வந்தசாபமுனி
திறத்தினிவன்கையேவுபலசெயித்ததுகண்டுநாணிமெலி
வுறத்தளர்சிந்தையோடுதனதுடற்சுமைகொண்டுபோயினனே. (௨௬)

வேறு.

* தருமன்மைந்தனுடன்மலைந்துசமரிலஞ்சியோடியுங்
கருமமன்றுபடநினைந்தகலசயோனிபின்னையு
முரண்மிகுந்துடற்றவேகொன்முந்தவோடவேகொலாம்
விரைவுடன்சினங்கடாவவேறொர்தேரிலேறினன். (௨௭)

* தங்கண்மன்னனம்முனைத்தனித்துவென்றவின்மையுந்
துங்கவென்றியின்றியேதுரோணனாரழிந்தது
மங்குளங்கனன்றுமீளவணிகொடேரினனதுஞ்
சிங்கமென்னவருகுநின்றசிறுவர்கண்டுசீறியே. (௨௮)

* முந்திமுந்திமச்சராசனோடுசேனைமுதல்வனுங்
குந்திபோசனுதியானகுலமகீபர்யாவரும்
வந்துசூழவேழமீதுவயமடங்கல்செல்வபோ
லந்தவேதமுனியையோடியக்கணத்தில்வளையவே. (௨௯)

* கன்னனுதிசகுனியாதிகலிங்கதேசனுதியா
மன்னனுதியாகவங்குமரையவன்பெரும்படை
தென்னனுதிநகுலனுதிதிட்டத்துய்மனேடபி
மன்னனுதியாகவிங்குதிட்டிரன்வருதினி. (௩௰)

* நின்றசேனைமன்னர்தாமுநின்றவந்நிலத்திடைச்
சென்றசேனைமன்னர்தாமுமெங்கணுஞ்செருச்செய்தா
ரென்றுகூறியெதிருரைத்தல்யாவருக்குமுடிவுரு
தொன்றுநூறுசின்னமாவுடைந்ததோரொருடலமே. (௩௧)

* வேல்விதத்தும்வாள்விதத்தும்வில்விதத்தும்விடுநெடுங்
கோல்விதத்துமுடிதுணிந்தகொற்றமன்னர்சற்றலார்
நூல்விதத்துமிக்ககேள்விநோன்சிலைக்கைம்முனிபடைக்
கால்விதத்துரததுரங்ககயவிதத்துவயவரே. (௩௨)

* குத்துவார்படைக்கலங்கள்கொண்டுமற்குறிப்பினுன்
மொத்துவாரிரண்டுதேருமுட்டவிட்டுமொய்ம்பினு
லொத்துவார்களிற்றினின்றுமொருகளிற்றின்முதுகுறத்
தத்துவார்துரங்கமங்கடாரையாகவேறுவார். (௩௩)

கொற்றவாளின்முடியிழந்தகுறையுடம்புவாளுடன்
கற்றசாரியோடுமக்கணக்கறிந்துபுகழுவா
ரற்றகால்களற்றகைகளாயுதங்களாகவே
யெற்றுவார்படைக்கலனிழந்துநின்றவீரரே. (௩௪)

* உங்கள்சேனைகெட்டதென்றுதிட்டிரன்றிறத்துளார்
திங்களன்னகும்பயோனிசேனைதன்னையிகழுவா
ரெங்கள்சேனைகெட்டதுங்களிறைவன்வின்மையாலெனத்
தங்கள்சேனையந்தணன்றளர்ந்ததற்கிரங்குவார். (௩௫)

* சொன்னவாறுகுறியுமுள்ளதுரகதந்துணிந்தன
கன்னவாறுசொரிமதக்களிற்றினங்கள்வீழ்ந்தன
பின்னவாறுபட்டனபிறங்குதேர்பதாதிக
ளின்னவாறுபட்டனவெனக்குறித்தியம்பொணு. (௩௬)

* இருதளத்துநின்றமன்னரிருவராகவிகலியே
யொருதளத்துமன்னரென்னவொத்துநின்றுடற்றினுர்
பொருதளத்தினிங்ஙனின்றுபோர்புரிந்தபொழுதிலே
வருதளத்தொடுதவினுன்மருத்துவீமன்மைந்தனே. (௩௭)

* நிருதகன்னிமகனுநேமிநீலவண்ணன்மருகனுங்
கருகிநெஞ்சழன்றுவந்தகாவன்மன்னர்யாவருஞ்
சுருதியன்னதூமொழித்துரோணன்மேனடக்கவே
பரிதிகண்டபனியெனப்பகைத்தளம்பறந்ததே. (௩௮)

* பறந்துபோய்நெடும்பணிப்பதாகைபானுடைய்தினுர்
பிறந்துபோய்வளர்ந்தபின்பிறப்புணர்ந்தபெருமனுந்
துறந்துபோயவிதுரன்முன்றுணித்தவில்லெனத்துணிந்
திறந்துபோனமன்னரன்றிநின்றமன்னரெவருமே. (௩௯)

* வதிட்டனுந்துதிக்கும்வாய்மைவரிசிலைக்கைம்முனிவனோ
டுதிட்டிரன்புரிந்தபோருரைக்கவேயுணர்ந்துளான்
‡ பதிட்டிதம்பிறந்ததின்றுபாண்டவர்க்குஞாலமென்
றதிட்டமொன்றுமுணர்கலானுமனிலவேகமாயினன். (௪0)

* விட்டவிட்டரததுரங்கவேழவாகனத்தொடுந்
தொட்டதொட்டசிலையொடுந்துணிந்துவெங்களத்திடைப்
பட்டபட்டநிருபர்தங்கள்பாடுகாணவெண்ணியோ
முட்டமுட்டவேகுகென்றுதன்படைக்குமுந்தினன். (௪௧)

* முந்தவந்தமன்னனுமுரண்கொள்வாகையரசரும்
வந்தவந்தசேனையும்வகுத்தணிந்துமுனையவே
யந்தவந்தமுனைகடோறுமந்தவந்தவீரர்மெய்
சிந்தவந்துடற்றினன்சிலைத்தடக்கையபிமனே. (௪௨)

* சிந்திவாளிமழைகளோடுசிலைவளைத்துமுடுகுதே
ருந்திவாரிமேகமென்னவமர்செய்தானுமொருவனே
யந்திவானமொத்ததுற்றகுருதிநீரிலக்களந்
தந்திவாசிதேர்களோடுடைந்ததெண்ணிறுனையே. (௪௩)

* ஏறுதேரழிந்துசாபமிற்றுமுற்றுமின்றியே
வேறுதேருமின்றிநின்றுவில்லெடுத்தவேதியன்
கூறுதேருதிட்டிரன்குனித்தவிற்குடைந்துபின்
னூறுதேர்தனைப்புரக்கநொய்தினிற்கழறினன். (௪௪)

* முனியுமேனையானைதேரின்முடுகிவந்தநிருபருங்
குனிசிலைக்கையபிமன்வெங்கணைக்குவென்கொடுக்கவே
யினிநமக்குநல்லகாலமென்றுசிறியெய்தினன்
றனிதமிக்கசலதமன்னசதமகன்சகாயனே. (௪௫)

வேறு.

* அதிதவளமத்தவாரணமுமுதலமுதமதனத்திலாழிமிசைவரு
மதகளிறுசுத்தமாகவிவனுமமகபதியெடுத்தகார்முகமுமவ
னெதிர்தரவெடுத்தசாபமிவனுடனிகல்செயநினைக்கயாவருளரென
விதமுறவகுத்தயானையணியுடன்விருதுபகதத்தராசனுதவவே. (௪௬)

* இருபதுபதிற்றுநூறுகளிறுளவிவனினுமிகுத்தவீரர்கடவுவ
சொருபதுபதிற்றுநூறுமழகளிறவமையெனமிக்கவாகுவலியினன்
முருகனெனவெற்றிநேமிமுகிலெனமுரணவுணருக்குவாழ்வுகெடவுயர்
சுரபதிதனக்குவாழ்வுவரும்வகைசுரருலகளித்ததோழனிவனரோ. (௪௭)

---

‡ பதிட்டிதம் - நிறுத்தப்பட்டது.

* எழிலணிதடக்கைமேருகிரிநிகரிபசிரமதைக்கமோதியுருமென
மொழியுறவதிர்த்துநீடுபுயகிரிமுறைமுறைதடிக்கவேகமொடுபுகை
பொழிசினமனத்தின்மூளவிரொளிபுனைநுதல்வெயர்க்கவாயுகதியென
விழிவழிநெருப்புவீழவிரைவுடன்விறன்மிகுகளத்திலானபொழுதிலே. (௪௮)

* பொருதுபுறகிட்டசேனையிவன்வருபொலிவொடுபுறக்கிடாதுதிருகின
வரவினையுயர்த்தகோவுமிளைஞருமவனிபருமொத்துமீளமுடுகினர்
முரசெழுதுபொற்பதாகைநிருபனுமுதலமர்செகுத்தவாகையபிமனு
மிருகைமலர்கொட்டியாடியெதிர்கொளவிருபடையுமுற்றபூசல்வினையவே. ()

* நிசிசரனெடுத்தவாதிகயிலையுநிகரலவிதற்கெனுமுன்வருகரி
விசையுடனடத்திவீமனெவணவன்விறன்முடிதுணித்துமீள்வனினியென
வசைபலபிதற்றிவேகமுடன்வரும்வலியபகதத்தன்வாகுகிரிகளை
யொசிதரவளைத்துமார்புசுழிதரவொருகைகொடுகுத்திவாயுகுமரனே. (௫௦)

* கதைகொடுபனைக்கைவீசியெதிர்வருகடகரியினெற்றியோடையணியொடு
புதைபடவடித்துமீளவிசையொடுபுரவியிரதத்தின்மீதுகுதிகொள
விதயமலர்செற்றமூளவிவனவனெதிர்சிலைவளைத்துவாளிநிரைபட
வுதையவுதைபட்டவாளிதனதுகையுயர்கதைபுடைத்துவீழமுனியவே. (௫௧)

* ஒருவரையொருத்தர்வேறலரிதெனவொருபடிசெருச்செய்தாலுமினியென
விருவருமெடுத்தசாபமொலிபடவெதிரெதிர்தொடுத்தவாளிநெடுமழை
யொருவருடலத்தின்மூழ்கிமுனையுறவுருவுதொழிலற்றுநூலின்முறைமையி
னிருவரும்விலக்கவோடிவிலகினவெதிரெதிர்கடித்துவானமறையவே. (௫௨)

* மகரிகைமருப்புநாலுமுளவெனில்வலியகுணதிக்கில்வாரணமுமெதிர்
நிகரலவிதற்குநாமுமுரைசெயினிலையுடையசுப்பிரதீகமிதன்வலி
பகரிலிபமெட்டுநாணுமெதிரெறிபடைகளுணர்வுற்றபோரிலெரிவரு
புகர்முககரக்கபோலமதகரிபொருதொழிலுரைக்கலாகுமளவதோ. (௫௩)

* கரிகளையெடுத்துவானினிடையிடைகரநுதிகொடெற்றுநீடுபிறைநிக
ரிருபணைமருப்பினாலுமவரவரெதிரெதிருடைக்குநேமியிரதமு
முரனுடையசித்திரவாலதிகொடொருபடிபுடைக்கும்வாசிவிழவிழ
வரவபயமிட்டுவீழநடையபிலடிகொடுதுகைக்கும்வீரரணியுமே. (௫௪)

* அமர்செய்பகதத்தனாலுமவன்விடுமருவிமதவெற்பினாலுமணிகெழு
தமபடையிளைத்ததாகவிறலொடுதருமனுணர்வுற்றுவேறொர்திசையினி
லிமிர்முரசெற்றுபூசல்புரிதருமிளையவனடத்துதேரின்வலவனை
நிமலனையனைத்துமானவொருவனைநினையினன்மனத்தினோடுபரவியே. (௫௫)

வே று.

நெரிபட்டெலும்புதகைவகிர்பட்டுரந்தலைகடொழிபட்டுநின்றபடைஞர்
பரிபட்டுவெங்கரிகடுணிபட்டொழிந்திரதபருதிப்பெருங்கிரியெலா
மெரிபட்டவண்சருகுமிடிபட்டவெவ்வரவுமினன்முற்படும்பணியையுஞ்
சரிபட்டிரிந்துபலதிசைபுக்கொதுங்கினர்கள்சபதத்தடைந்தமர்செய்தோர். ()

வினையற்றுமுன்புகுததிரிகத்தனுஞ்சவர்செய்விரகற்றுவெந்தறலொடு [ய்ப்
முனையற்றுடன்சமர்செய்சமசத்தகன்பெயர்கொள்முகில்வர்க்கமென்னவருமெ
புனையுற்றருங்கவசமுடியற்றருஞ்சிலைகள்பொழியுக்கிரவெங்கணைகளாற்
சினையற்றுயர்ந்தகருமுறிபட்டியங்குலவைசிவணத்திரிந்தமர்செய்தான். (ருஎ)

இசைகெட்டுவெண்பரிகடுணிபட்டுடைந்திரதமிகல்கெட்டுமண்டிவருகால்
விசைகெட்டுரும்படைகள்கரமற்றிடங்கடொறும்விசிகக்குலந்துருவவே
திசைகெட்டழிந்தவருமுயிரற்றுலைந்துகுருதியினுட்கிமங்கினபெருந்
தசைகெட்டெலும்புருவினுயிருப்பநின்றவருநான்முறப்படுந்தலைவரே. (ருஅ)

நினைவுற்றபொழுதெழுதுமுரசுற்றகொடிநிருபனியமித்தபடிதரியலார்
முனைமட்கவமர்பொருதுசெயமுற்றியுவகைபெறு முகிலொத்தவடிவினெடுமால்
புனைவிற்கையடுபகழிதிசைசுற்றுமறையநனிபொழிகொற்றவிசயனுடனே
வினைமுற்றியுயர்தருமனுடனிற்றையரியவமர் விளைவுற்றதெனவுரைசெய்தான்.

ஒருபத்தொடுறழொருபதுறழ்பத்தொடுறழொருப துடைபெட்டுவிருதருயிர்கீ
தெரிவித்தபகழிகொடுமடிவித்துவலிமையொடுசிலைவெற்றியுறவமர்செய்தாய்
முரணற்றதிவணினியுன்னுயிரொத்ததமையனெடுமுனைபுக்குவிரைவினனுகா
வரையொத்தகளிறுடையபகதத்தனுயிர்கவரவருகிற்றிநொடியிலெனவே. (சுய0)

* அரியொத்தபரிகடவிமனமொத்தவிரதமிசையமரர்க்குமுதல்வன்மகனே
டெரிபற்றிவருமனிலமெனவெற்றிவரிவளையுமிதழ்வைத்தவ்வொருநொடியிலே
கிரிமுற்றுமரிவதொருகிளர்வச்சிரமெனவுதயகிரியுற்றபரிதியெனவே
கரிசுற்றும்வரவிகடகரடக்கைம்மலையில்வருகணைவிக்கிரமனையணுகினன். ()

* அனிலத்தின்மதலையொடுவயிரத்துமலையுமுனையமர்விட்டுமுகிழ்நகைசெயா, வினியிற்றையமரிலரிதெளிதொட்டியெதிர்பொருதலெனமத்தகரியின்மிசையான், மனமுற்றுமழல்கதுவமொழிமுற்றுமிடிநிகரவலிபட்டசிலையைவளையா, மினலொத்தகணைபலவும்வசையற்றபுகழுடையவிசயற்குமிசையுதவினன்.

* அவன்விட்டசுடுகணைகள்கொடிமர்க்கடமுநடுவணறவெட்டியதிதவளவெங்
கவனத்தின்முடுகியடுபரிகொத்தியுடவிவிடுகவசத்தைமறையவுருவிச்
சிவனுக்குமலரிலுறைபிரமற்குமுணர்வரியதிகிரிக்கைவலவனையுமிச்
சவனத்தின்மிகுதுயரமுறுவிக்கவவசமிகுதளர்வுற்றதனுவிசயனே. (சுய௩)

* உரமிக்கதனுசிலைகுனிவித்துமதியின்வகிருவமிக்குமடுபகழியால்
வரமிக்கதவளநிறமதவெற்பையெதிர்கடவிவருவெற்றியவனிபதிதன்
கரமுற்றசிலைகவசமறவெட்டிவிடுகணைகள்கணைவிட்டுவிலகவவனுஞ்
சரம்விட்டொரயில்விசயனிரதத்தின்வலவன்மிசைதமரத்தினுடனெறியவே.()

* எறிகுற்றவயிலசுரருயிர்செற்றவயிலதனையெதிர்முட்டவிடுபகழியிற்
றறிவித்துமகபதிதன்மகன்முக்கணிறைவனொடுசரியொத்துமுறுவல்புரியா
வெறிமத்தகரடமுகபடமொத்தபுகர்கொண்முகவிகடக்கைம்மலையணியெலா
முறியத்தன்வரிவிலுமிழ்முனைபட்டபகழிமழைமுகில்வர்க்கமெனமுடுகினான்.

* அணிகெட்டுமதகரிகள்கரமற்றுவிழமுதியசிரமற்றுவிழவருகுதாழ்
மணியற்றுவிழநெடியகுடரற்றுவிழமுழைகொள்வயிறற்றுவிழவுடலெலாந்
துணிபட்டுவிழவிசிறுசெவியற்றுவிழவலியதொடையற்றுவிழமகரிகைப்
பணிபெற்றபணிகளொடுபதமற்றுவிழவுழுதுபடுவித்தபலபகழியே. (சுசு)

* பெயர்பெற்றகரிவயவர்பிணமிக்கவமரினிடைபிறகிட்டுமுறியுமளவே
சயசக்கிரதரனையிவன்வழிபட்டபொழுதுதருதழலுக்கிரமுடையதொருவேல்
வயமுற்றசிலைவிசயனுடலத்தினெறிவதுதன்வடிவத்திலுறவுதவினா
னயர்வுற்றவுணர்வினலமெனமுத்திமுதல்வனெனவருகுற்றரதவலவனே. ()

பருமித்தகளிறுவிடுபகதத்தனெறியுமுதுபகைசெற்றுவருகொடியவேன்
மருமத்தினிடைமுழுகுபொழுதத்திலதுபுதியமணிவர்க்கமிகுதொடையலாய்
நிருமித்தபடிதனதுபுயவெற்பின்மிசையொளிரநிகரற்றகருணைவடிவைக் [தார்.
கருமத்தின்முதலையிமையவர்சித்தமொடுதொழுதுகரையற்றபொழுதுரைசெய்

கனலொத்தவிருவிழிகள்பொறிகக்கவிதுபுரிதல்கருமத்தினியல்கொலெனவே
மனனொத்தநான்முளவுதரவெற்றிநெடியமுகில்வருமுக்கிரமுடையசுடர்வே
லனலொத்துமலைபடைஞர்மிசையுய்க்கினுயிர்கவருமவையற்றகான்மிசைவிடிற்
புனலொக்குமகபதிதன்வரமுற்றதுணர்துமுனைபுரையுற்றதிலையிதனினே. ()

இதுநிற்கயமனைநிகர்பகதத்தனுயிர்கவரவிதுபக்குவமெனவிசயனோ
டுதரத்தின்முழுதுலகுகுடிவைத்தபுயலுரைசெய்துறுதிக்கண்விடுபகழிதா[ளா
னிதயத்தினுடனருளவுயர்வச்சிரன்மதலைதொழுதிருபொற்கைமலர்கொடுகொ
வதிரத்தனெதிர்களிறுபொரவிட்டநொடியிலவனகலகத்தினுருவவிடவே. (எ௦)

* பரிதத்தவருமிரதமிசைதத்தவெதிர்முடுகுபகதத்தனுடன்முழுதுநீ
டெரிதத்தியுகுவதெனவுகுவித்தகுருதிநதியிடைதத்தவலிகெழுவுதோட்
கிரிதத்தமகுடமொடுதலைதத்தவொருரசதகிரிதத்திவிழுவதெனவே
கரிதத்தமறியலகைகடைதத்தியுவகையொடுகளமுற்றுநடநவிலவே. (எக)

வேறு.

* பகதத்தனும்பட்டவனூர்ந்தபகடும்பட்டுப்புடைசூழச்
சிகரக்கிரிபோலணிநின்றசேனைக்களிறும்பட்டமைகண்
டிகலிற்பொழிகார்வெஞ்சிலைக்கையிமையோர்தலைவன்குமரனையும்
புகழ்தற்கரியபாகனையும்புகழாரில்லைப்பூபாலர். (எ௨)

* விருதுஞ்சங்கும்பல்லியமுமேன்மேலதிரவிற்போரிற்
பொருதின்றவனைக்கொன்றன்றிப்போகோமென்னப்புடைசூழ்ந்தார்
மருதுஞ்சகடும்விழவுதைத்தவலவன்கடவவாயுவெனக்
கருதும்புரவித்தேரூருங்கழற்காவலன்மேற்காந்தாரர். (எங)

* காந்துதறுகட்காந்தாரர்கடுவெங்கனல்போற்கண்சிவந்தங்
கேந்துஞ்சிலையாற்கணைமழைபெய்தெழிலிக்கணம்போலெதிரூன்றிச்
சாந்தும்புழுகுங்கமழ்வாகுச்சகுனிதனயர்தலைப்போரிற்
சேர்ந்தன்றிறந்தார்விடசெயனுஞ்செயனுமெனும்போர்ச்செயவீரர். (எச)

* சஞ்சத்தகர்விண்குடியேறத்தானேயடர்த்தான்பகதத்தன்
விஞ்சைக்கடவுள்சிகரநிகர்வேழத்துடனேவிழப்பொருதான்
வஞ்சச்சகுனிமைந்தரையுமலைந்தான்விசயன்வடிக்கணையா
லெஞ்சப்பொருதநரபாலர்க்கிலக்கேதன்றங்கிதெண்ணுதற்கே. (எரு)

என்றேபலருமிரிந்திரங்கவிற்றபுதல்வர்க்குளமுருகி
குன்றேயனையதேர்கடவிக்கோலிச்சிலையைக்கணைமழைகள்
சென்றேசொரிந்தான்சகுனியுமத்தேருஞ்சிலையும்பாகுமறுத்
தொன்றேகணைமார்புறவிடுத்தானும்பர்க்கொருவனுயர்மைந்தன். (எசு)

சொரியுஞ்சோரியுடன்மறைப்பத்தொலையாநாணம்விழிமறைப்ப
விரியுமாமன்றனைநோக்கியென்னேநொந்தாய்முதலவையிற்
புரியுஞ்சூதன்றிதுகொடும்போர்புகுமாறறிந்துய்குதியென்று
னரியூரிரதமிசையிருந்தவரியின்புதல்வனடல்வல்லோன். (எஎ)

* இங்கிப்படிபோருடன்றெழுந்தசகுனியிவன்கையெரிகணையாற்
பங்கப்பட்டவரசொழியப்படாதவரசர்பலரோடுஞ்
சிங்கத்தனியேறெனச்செம்பொற்றேர்மேனின்றதருமனுடன்
புங்கப்படையாலமர்புரியப்புகுந்தான்மதுகைப்புலிபோல்வான். (எஅ)

* சோரத்துடனீபொருதடர்த்தசூதன்றிவைமெய்தொளைத்துருவும்
வீரப்பகழியுனையிவற்றால்வெல்வேனெனப்போர்வில்வாங்கி
யீரக்கருணைமுகத்தண்ணலெய்தானவற்றுக்கெட்டாமற்
பேரப்பேரத்தேர்கடவிப்பின்னிட்டவர்க்குமுன்னிட்டான். (எகூ)

* உடனேவந்துபொருநிருபரொருவர்க்கொருவருதிட்டிரன்கை
விடநேர்கணையாலேவுண்டுவிளிந்தாரொழிந்தார்வெஞ்சமத்திற்
கடனேதமக்கென்றார்புகுந்தார்காலைச்செந்தாமரைமலர்ந்த
தடநேரென்னநிறம்பெற்றதப்போதந்தச்சமபூமி. (அ௦)

* ஆசாரியனுந்திருமகனுமடல்வேலங்கர்பெருமானுந்
தூசாருரகக்கொடிநெடுந்தேர்த்துரியோதனனுந்தம்பியரும்
வீசாநின்றமாருதம்போன்மேல்வந்தடுத்தவீமனுடன்
கூசாதெதிர்ந்துவெம்பகழிகோத்தார்விசும்பைத்தூர்த்தாரே. (அக)

* கெடுமோகருடனுரகர்க்குக்கிரிவெஞ்சரபந்தனையரிக
ளடுமோசக்கிரபாணியுடனமருந்துவரோவசுரேசர்
நெடுமேருவின்முக்குவடொடித்தானேயப்புதல்வன்பேருடலிற்
படுமோதொடுத்தபகழிபருப்பதஞ்சேர்மழைபோற்பாறினவே. (அ௨)

* பொல்லாவவுணர்வைகியமுப்புரநீறெழவன்றரன்வளைத்த
வில்லாமென்னவலியவிறல்வில்லொன்றெடுத்துவிறல்வீம
னெல்லாமன்னவருமூர்ந்தவெல்லாவிரதங்களுமிமைப்பின்
வல்லானெறிந்தபம்பரம்போற்சுழலும்படிகால்வளைத்தானே. (அ௩)

* ஒன்றுமுதலாப்பலபகழியோரோர்தொடைபிற்றொடுத்தேவி
யன்றுமுறைமையுடன்மலைந்தவரசருடலந்தொறுமூட்டி
யின்றுமுதலாயோதனத்திலேலேறுமென்னும்படியாகக்
கொன்றுமுதற்பின்வருமுரகக்கொடியோன்மனமுங்கொதிப்பித்தான். (அ௪)

* கொதித்தானரசனெனவரிவிற்குனித்தாரிளைஞர்குனித்ததுகண்
டதிர்த்தான்வீமன்றன்கணையாலறுத்தான்வில்லுமணிநாணும்
விதித்தான்வரினும்வீமனுடன்விற்போர்புரிதலரிதென்று
மதித்தார்தம்முனினைத்ததெல்லாமுடிக்குஞ்சமரவரிவில்லார். (அ௫)

* நின்றார்நின்றபடிகொடித்தேர்நிருபன்றனையுமிளைஞரையும்
வன்றாள்வரிவிற்குறுவினையுமைந்தன்றனையுங்கன்னனையும்
பொன்றாழ்மார்பிற்பலபடைக்கைப்பூபாலரையுங்கொல்லாமற்
கொன்றான்வாயுகுமரன்றன்கோலாகலவெங்கொடுங்கணையால். (அ௬)

இளைத்ததடையப்பெருஞ்சேனையினிநாமொன்றுக்கீடாகோம்
வளைத்தசிலையோடிவனிற்கமாயன்றன்னோடவனிற்கத்
தொளைத்தகணையாற்றுரோணன்வலிதொலைத்தோனிற்கமலைந்திவரைத்
திளைத்தலரிதென்றக்களத்திற்பொன்றாவரசர்சென்றாரே. (அ௭)

* பெரும்பேரறத்தின்றிருமகவைப்பிடிப்பானெண்ணிமுடிப்பான்போற்
பொரும்போரரசருடன்வந்தபொற்றேர்முனியும்புறம்போனான்
பரும்பேருரகக்கொடிவேந்தன்பட்டான்மிகவும்பரிபவமென்
றரும்போரரசர்களித்தாடவவருந்தம்பாசறையடைந்தார். (அ௮)

* காரிற்குளிர்ந்துகுழைந்தசெழுங்கானம்பூத்ததெனக்கவினிற்
பாரிற்பிறந்துசிறந்தவிந்தப்பன்மாநிறத்தபரியனைத்தும்
போரிற்புகுந்துமடிந்ததற்குப்புறந்தஞ்சிப்போவான்போற்
றேரிற்றுரகங்கொண்டோடிக்குடபாலடைந்தான்றினகரனும். (அ௯)

வே று.

* அறந்தந்தமைந்தற்கும்வீமற்கும்விசயற்குமபிமற்குமே
புறந்தந்தவயவீரரெல்லாருமரசன்புறஞ்சார்பிருந்
திறந்தந்தயூகத்துவாராதமன்னர்க்கிரங்காவழா
மறந்தந்தவேழத்துடன்பட்டபகதத்தன்வலிகூறினார். (௯0)

அரியானதிபராசிகண்டஞ்சுமோநின்றனனிவில்லுடன்
சரியானவில்லுண்டுகொல்லைவர்மீதன்புதவிராமையாற்
புரியானையறன்மைந்தன்முனிவென்றுகவராதுபுறகிட்டனென்
றெரியானசினமூளவரசன்வெறுத்தானிருக்கோனையே. (௯௧)

* மன்னர்க்குமன்னன்றன்முன்வைகுமுனிதன்னைமதியாமனீ
நென்னற்கலங்காமலுரைசெய்தவுரையின்றுநிலையானதே
கன்னட்பெயர்க்காளைமறையந்தணர்க்கென்னகட்டாண்மையுண்
டென்னச்சிரித்தான்வணங்காதவர்க்கென்றுமிடியேறனான். (௯௨)

* தெருமந்தசிந்தைச்சிலைக்கைக்குருக்கண்சிவப்பேறவே
யுருமுந்திகைக்கக்கொதித்தங்கர்பதியோடுறக்கூறுவான்
கருமந்தவாவிற்றிறற்கன்னனேயல்லகழன்மன்னரிற்
றருமன்றன்முன்னிற்கவல்லார்கள்யாரித்தளந்தன்னிலே. (௯௩)

* இன்றல்லநாளைக்குமாநின்னவைக்கண்ணிருந்தோர்களிற்
சென்றல்லலுறமோதியறன்மன்னனைத்தங்கள்சிலையாண்மையால்
வென்றல்லதணுகாதவீரர்க்குவிடைநல்குவிறன்மன்னநீ
நன்றல்லவீரத்திலோரஞ்சொலுவதென்றுநனிசீறினான். (௯௪)

* வில்லாண்மையாவர்க்குமின்றென்றனைப்போலமிகுவஞ்சினஞ்
சொல்லாமலறன்மைந்தனைப்போர்மலைந்துங்கடோளாண்மையால்
வல்லாரினிக்கொண்டுவம்மின்கள்வந்தாலிம்மண்ணென்றுமோ
வல்லாதவுலகிற்குமிருநாலுதிக்கிற்குமவன்வீரனே. (௯௫)

* எம்போலவரிவில்லெடுத்தெய்யயார்வல்லரெனும்வீரரும்
வெம்போரில்வந்தாலொரணுவுக்குநில்லாதுவிளிகிற்பரால்
வம்போதியென்பேறுவல்லாண்மைபுனையந்தவில்லாளிகூ
றம்போடிராமன்கையடலம்புமுவமிக்கிலதிபாவமே. (௯௬)

* கொத்தொத்தகொடையொத்தவளவொத்தசிறகொத்தகுதையொத்தவொன்
றொத்தொத்துமுனையோடுமுனைதத்திவிழுமாறுடன்றேவினான்
றத்தொத்தபுரவித்தடந்தேர்மனென்னோடுசாதித்ததும்
வித்தொத்ததென்வாளியவன்விட்டவடிவாளிவிளைவொத்ததே. (௯௭)

* வன்மைக்குவயவீமன்வின்மைக்குமுகிலூர்திமகனன்றிவே
றின்மைக்குமாவிந்தைகிரிகன்னிகரியென்பரெம்மன்னரும்
வின்மைக்கும்வன்மைக்குமிளையோரையனையாரைமிகவெண்ணலாந்
தன்மைக்குநிலையானதருமற்குநிகர்யார்தனித்தெண்ணவே. (௯௮)

அதிர்வார்களதிர்மின்களதிரப்பொரும்போரிலறன்மைந்தனோ
டெதிர்வார்களுண்டாகிவிக்கங்குல்சென்றாலினிக்காணலா
முதிர்வாய்மையாலென்னபயனென்னவெஞ்சாபமுனியேகினான்
கதிர்வார்முடிக்கோவுமரசர்க்குவிடைதந்துகண்டுஞ்சினான். (௯௯)

* மகதத்தரிற்சூரசஞ்சத்தகரிலுள்ளமகிபாலரும்
பகதத்தனுந்துள்ளியெதிர்வந்தகாந்தாரபதிமைந்தருந்
தகதத்தவெனவெங்களத்தாடுவிழவென்றதனுவேதியுஞ்
சுகதத்தமுறவோடவென்றோர்களுங்கண்டுயின்றார்களே. (௧௦௦)

* நிலையானவயவீரருந்தேவராய்நின்றநிலைகண்டுவெண்
கலையானிரம்புஞ்செழுந்திங்களேகக்கடைக்கங்குல்வா
யலையாழிமுழுநீலவுறைநின்றுமாணிக்கவணியாழிபோ
லுலையாதவொளிகொண்டகதிராயிரத்தோனுமுதயஞ்செய்தான். (௧௦௧)

பன்னிரண்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.
ஆக செய்யுள் - ௧௭௫.

பதின்மூன்றாம்போர்ச்சருக்கம்.

* சங்கையிலாவகையமபடராலுயிர்தளர்பொழுதத்தருகே
மங்கையர்சூழவிருந்தழுதுள்ளமயக்கினும்யான்மறவேன்
கங்கையுநான்மறையுந்துளவுங்கமழ்கழலிணையுந்திருமா
லங்கையின்மீதொளிர்சங்கமுநேமியுமஞ்சனமேனியுமே. (௧)

* நஞ்சவியாளமுயர்த்தபதாகைநராதிபனேவலினால்
விஞ்சவருதினிமன்னர்திரண்டனர்விசயனைமேவிடுவா
னெஞ்சவராலழிவுண்டதபோதனனெருநலினுங்கடுகிப்
பஞ்சவர்கோமுதல்வன்றனைவன்பொடுபடைபொரவெண்ணினனே. (௨)

* இலக்கணமைந்தனுமைந்துடைமன்னவனிளைஞருமெம்முனையுங்
கலக்குறவென்றகலிங்கருமுட்படுகாவலர்பற்பலருஞ்
சிலைக்கைவயம்பெறுசிந்துநராதிசெயத்திரதன்சிரமா
நிலக்கணெழுந்துகள்வானிடைசென்றிடநின்றனர்பேரணியே. (௩)

கருதியகன்னனலம்பனினம்படுகைப்படைமத்திரர்கோன்
றருதிறலச்சுவத்தாமனையாதியர்தாமொருகருணிகையாய்
வருதிசைமன்னவர்கிருபனையாதியர்மற்றதினகவிதழாய்ப்
பொருதிறல்வல்லசுதாயுவையாதியர்புறவிதழாய்நிறுவி. (௪)

சதுமறைவல்லவனெண்ணறுதேரொடுதந்திகள்வெம்பரியாள்
முதுமறைநூன்முறைவைத்துவெலற்கருமொய்ம்புடைமன்னனுடன்
மதுமலர்தும்பையணிந்துறுமம்பரவாணர்நடுக்கமுறப்
பதுமவியூகம்வகுத்தனன்மீட்டொருபான்மையியற்றினனே. (௫)

* அக்கரம்யாவுமுணர்ந்தசிலைக்குருவாசுரர்சேனைநடுச்
சுக்கிரனார்நிகரென்னவகைப்படுதூசியின்மாமுறையே
யெக்கரமும்படைகொண்டெழுசேனையையெயில்கள்வளைப்பனபோற்
சக்கரயூகம்வகுத்திரதத்திடைசயமுறநின்றனனே. (௬)

* ஒப்பறுபோரினில்வாகைபுனைந்தவுதிட்டிரனன்றடையார்
தப்பறவென்னியவென்னமுனார்ந்தனஞ்சயனுக்குமுரைத்
தப்பறுகோடையில்வெங்கதிரோனெனவாகவரீடளவித்
துப்புறுசிந்தைமகீபர்வருந்தினிருழநடந்தனனே. (எ)

* ஈரிருதேரினர்மூவகையானையரெண்ணறுமாமிசையோ
ரோரிருநாலுடையையிருபூமியிலுள்ளபதாதியுடன்
பாரிருநாலுதிசாமுகமும்படையோடுபரந்துவரும்
பேரிருமானவருந்தினியின்றிரள்பேசுறலாமளவோ. (அ)

* வருபடைதன்னைநிறுத்திவிதம்படமகரவியூகம்வகுத்
தொருபகல்யூகமுமிப்பகலுக்கினியொப்பலவென்றிடவே
குருபதியுந்திருமாலுமதிக்கவணிந்தடுகோளரிபோற்
றுருபதன்மைந்தனுநின்றனனந்தரதுந்துபிமீதெழவே. (கூ)

* இத்தகவாகவணிந்திருசேனையுமெதிர்முனையும்பொழுதின்
முத்தகவெண்குடைமன்னவனேவலின்முற்பகலின்படியே
மத்தகமாமுதலாகியநான்மைவருந்தினிதன்னொடுசஞ்
சத்தகர்வந்தறைகூவவெகுண்டுதனஞ்சயனேகினனே. (க0)

* மால்விடுதேர்மிசையான்வரிசாபம்வளைத்ததுமல்லிகல்வெங்
கோல்விடுபூசலும்வில்லுடனேபொழிகொண்டல்வியப்பெனலா
மேல்விடுதேர்களும்யானையும்வாசியும்வீரருமெய்யுருவிக்
கால்விடுதாரையெழுஞ்சருகென்னவுடைந்தனர்கையறவே. (கக)

* பட்டவரெத்தனையாயிரர்நின்றுபடாமலுயிர்ப்புடன்வென்
னிட்டவரெத்தனையாயிரரஞ்சலினேகுகவென்றமர்வாய்
விட்டவரெத்தனையாயிரர்தங்குலமேன்மையும்வெந்திறலுங்
கெட்டவரெத்தனையாயிரரன்றுகிரீடிதொடுங்கணையால். (கஉ)

* ஓரொருடம்பினிலாயிரமாயிரமுற்பலவாளிபடத்
தாரைபடும்படிபொழிமுகிலொத்தனர்சமர்முனையிற்றரியார்
மாரனையங்கமெரித்தருள்கண்ணுதல்வடிவமெனும்படியே
பாரொருபாதிசிவந்ததுமேனிபரந்தெழுசோரியினல். (கங)

* இந்திரன்மாமகனிங்கிவர்தம்முடனிம்முறைபோர்புரியச்
சந்திரசூரியமண்டலமொத்தணிதானையிரண்டுமுனைந்
துந்தியவேலையினுந்திகணுலுடையுந்திரதத்திடைபோ
யந்தனன்மேல்வரிசாபம்வளைத்தனனவர்படைத்தலைவன். (கச)

* நூலொடுசாபம்வளைத்தவன்மற்றிவனெய்தினுகைத்தவடிக்
கோலொடுகோன்முனையற்றுவிழத்தொடுகுனிசிலைநாணழியச்
சேலொடுசேல்பொருசீலமெனும்படிதேர்களிரண்டுமணிக்
காலொடுகால்பொரவன்றுவசத்தொடுகவசமழித்தனனே. (கரு)

* அருமுனியாதிவதிட்டனுமன்குலவாதியுமந்தணனும்
பெருமுனிதானுமுடற்றியபோர்சிலர்பின்பொருதாருளரோ
வொருமுனியேழ்கடலுங்கரமொன்றிலொடுக்கினன்மன்னனைமேல்
வருமுனிவென்றனன்முனிவருடன்பொரவல்லவர்யார்புவிமேல். (கசு)

* வந்தெதிர்முட்டுதலுந்தனதேரினைமாறுபடத்திருகிச்
சிந்தையுமானமும்வீரமும்விட்டொருசெயலறவென்னிடலுந்
தந்திரநாதனுடைந்தனனென்றிருதானையின்மன்னவரு
மந்தணனுண்மையும்வன்மையும்வின்மையுமன்றுதுதித்தனரே. (கஎ)

* வேதியன்விட்டசரங்களினொந்துவெரீஇவருமன்னவனைத்
தாதவிழ்பொற்றெருடைமார்பிலணைத்துயர்தருமனுரைத்தருள்வா
னீதவறிற்பினையார்நிலைநிற்பவர்நிருபர்சிகாமணியே
மோதியிளைத்தனையாறுகெனப்பலமுகமன்மொழிந்தனனே. (கஅ)

* தன்னெதிர்மாமயிலோனெனநின்றதனஞ்சயன்மாமகவைப்
பொன்னெதிர்பேரொளியருள்வடிவாகியபூபதிவருதியெனு
நின்னெதிர்போரினினிற்பவர்வேறிலர்நேமிவியூகமுநீ
முன்னெதிராவமர்புரிபொழுதன்றிமுரண்குலையாதினியே. (கக)

* என்னைவளைத்திடனென்னலுடன்றுவெனிட்டவிலாசிரியன்
மன்னைவளைத்தொருசக்கரயூகம்வகுத்தெதிர்நின்றனனு
னின்னையளித்ததராபதிதன்னையுநின்னையுமேயொழியப்
பின்னையெடுத்தவிலோடெதிர்சென்றுபிளந்திடவல்லவர்யார். (உ0)

மாதுலனுந்தைபுயங்கள்விசும்புறமாருதியுஞ்சமரிற்
காதுறுதம்பியருங்களியெய்தவருந்திசைகாவலர்தன்
போதுறுசிந்தையலர்ந்தெழவொன்னலர்பொம்மலிரிந்தகல்வான்
மீதுறவென்விழிகாணவடர்த்தல்விரும்பினனீண்டெனவே. (உக)

சொற்றதராபதிவாசகம்வந்துதுணைச்செவியெய்துமுனங்
கற்றபடைத்திறன்மைந்தன்மகிழ்ந்துகளித்திதுகூறினனால்
பற்றலர்தங்குழுவசனிதனிற்பொடிபடுமரவினமெனவே
வெற்றிமலைந்துமிலைச்சுவன்வாகைவிரைந்துதவாய்விடையே. (உஉ)

என்றுகுறித்திருகுன்றமெனப்புயமொன்றவிசைச்சுதனு
நின்றனன்விற்கதைகொண்டவன்முற்புகநேமியுடைத்திடுநீ
வன்றிறலிற்பலமன்னரொடிக்கணம்வருதுமினிப்பிறகே
சென்றுசிதைக்குதிசக்கரமென்றுதெழித்தனன்மாமுகில்போல். (உங)

தந்தைதனக்கொருமுன்பனுரைத்ததுசிந்தைதரித்திலனுய்க்
கந்தனெனத்தனிசென்றுசிதைத்துவரும்பரிசேகருதி
மைந்தனிருப்பவளித்தவருக்குவருத்தமுறுதெனவே
சுந்தரமிக்கவனும்பலசொற்றுயர்தும்பைமிலைந்தனனே. (உச)

* புல்லுகவென்றனன்மார்புறவன்பொடுபுல்லியிமைப்பொழுதிற்
செல்லுகவென்றனன்வன்சமர்த்திடைசென்றுமிகப்பகையைக்
கொல்லுகவென்றனனின்புயமேவருகொற்றவைதன்னருளால்
வெல்லுகவென்றனனன்றுதுரோணனைவென்றபெருந்தகையே. (உரு)

வேறு.

* மூத்ததாதைதன்னேவலிற்கழன்முளரிகைதொழுதானுறச்
சேர்த்தநாணுடைவில்லன்வெய்யதெரிந்தவாளியன்முதுகுறக்
கோத்ததூணியன்வாண்முதற்பலகொற்றமுற்றியபடையினன்
பார்த்தன்மாமகனிரதமீதுயர்பரிதியாமெனவேறினான். (உசு)

* வீரவார்கழல்கழலின்மீதுவிளக்கமார்பினில்வெண்ணிலா
வாரமாலைதுலங்கமாசுணவலயம்வாகுவிலழகெழச்
சேரவானமதிருளகற்றுமிரண்டுசெஞ்சுடரென்னவே
சாரமாமணிகுண்டலங்கள்வயங்கமௌலிதயங்கவே. (உஎ)

நுண்மைபெற்றசிறப்பின்முப்புரிநூலிருந்துரமொளிரவே
யெண்மைபெற்றசுமித்திரப்பெயர்வலவனுக்கிதியம்பினான்
வண்மைகற்றவநான்மறைக்குருமைந்தனாதியர்மறமுனை
யின்மையிற்பொடிபடவிரைந்தணிதேர்செலுத்துதியென்னவே. (உஅ)

உலகமூன்றுநிறுத்திவென்றவனுந்தையிங்கிவர்முனைபுகி
னலகிலாவலிமெய்யடங்கலுமாசுகந்தெறமீள்வனாற்
பலகலைக்கரைகண்டவேதியர்பரிதிமைந்தனையாதியா
யிலகுமெண்ணிலர்நிருபர்நீதனியெய்துவென்றுறலெளியவே. (உகூ)

வகுத்தயூகம்பேதமம்பரவாணருக்குமுகப்பெருத்
தொகுத்ததேசிகனாதியோருயிர்சோர்வுறுருனதம்பினாற்
செகுத்தலாதிலைவெற்றியென்கொனீசெல்வதென்றுதெருட்டினான்
பகுத்துணர்ந்தசுமித்திரப்பெயர்பன்னுதேர்விடுவலவனே. (ஙo)

பற்குனப்பெயராளிதந்தபராக்கிரமன்சிறுநகைசெயா
விற்குணத்தொனியால்வெருக்கொளும்வேலையேழுமடங்கலுஞ்
சற்குணத்தவர்மூவர்வென்னிடுதகையர்போர்முனைதாவில்யா
னெற்குணர்த்தரிதமரர்நாதனுமிவனுமென்முனைபுகுவரோ. (ஙக)

ஆலகாலமுமொக்கும்வெங்கனலாகியாரையுமடுகினுஞ்
சூலபாணியெதிர்ந்தஞான்றுதொலைந்ததில்லைகொல்வலவனீ
சாலவின்மையரெனவுரைத்தவர்தபுதல்கண்டுநகைக்கவே
கோலவாசுகமுய்ப்பனின்மதிகொள்கெனப்பலகூறினான். (ஙஉ)

ஆடல்வெஞ்சிலைவல்லகாளையறைந்தவாசகமுட்கொளா
வேடலர்ந்தபுயத்தினானையிறைஞ்சியன்பொடுகிஞ்சுகக்
காடலர்ந்ததெனச்சிறந்துகவிப்பதாகையெடுத்ததேர்ப்
பாடலங்கள்செலுத்தினான்முனைபற்றிநின்றவருட்கவே. (ஙங)

* இனஞ்செய்கேண்மைகொடுருபதேயனுமெண்ணில்கோடிமகிபருங்
கனஞ்செய்தூரியமெழவெகுண்டெறிகாலெனும்படிகைவரத்
தினஞ்செய்நாதனடாவுதேர்நிகர்தேர்விரைந்துசெலுத்தினுன்
றனஞ்செயன்றலைநாண்முயன்றதவம்பலித்தனதன்மையான். (௩௪)

தூரியங்கள்கறங்கவந்தரதுந்துமிக்குலமதிரவே
யாரியங்கள்தெரிந்தவானவரஞ்சியெஞ்சவனற்றுளிக்
காரியங்குபுராரிகொண்டுறுகற்சிலைக்கிணைகார்முக
நாரியங்குலியிற்றெறித்தனன்மாதிரங்கணடுங்கவே. (௩௫)

* ஓதைகொண்டணிநின்றசக்கரயூகமன்னருரந்தொறுங்
கோதைதங்குகரத்துவில்லுதைகூரவாளிகுளிக்கவே
சீதைகொன்கனுமேவலாருயிர்தென்புலத்திடுதன்பெருந்
தாதையுந்தரமெனவிமைப்பிடைதாவுதேரினனேவினன். (௩௬)

* அச்சுதப்பெயர்மாதுலன்புகலரியமந்திரமன்பினே
டுச்சரித்தொருநொடியினிற்பலகோடிபாணமுடற்றினு
னெச்சிரத்தையுமெய்ப்புயத்தையுமிடைதுணித்தலினடையமுன்
வச்சிரத்தவனுரைசெய்சக்கரமாறிலாவணிபாறவே. (௩௭)

* மல்லலம்புயவபிமன்வெஞ்சரமழையனைத்தையுமாலெனப்
பல்லவெங்கணைகொடுவிலக்கிமுனைந்துவந்தெதிர்பற்றினுன்
வெல்லவந்ததுரோணமாமுனிவிறலழிந்ததுகுருவெனுஞ்
சொல்லழிந்ததுவில்லழிந்ததுதேரழிந்ததுதொடைகளால். (௩௮)

அணங்குழந்திடுவில்வலாரியனருகுநின்றவருதினிக்
கணங்குலைந்துசிதைந்துபாங்கர்கலந்துநேமிபுகுந்துளான்
வணங்குவிற்பொழியப்புமாரிவகுத்தநேகமுகந்தொறும்
பிணங்கள்செய்தனனல்வகைப்பெயர்பெற்றசேனையனைத்துமே. (௩௯)

கடல்கிழித்துறுகலமெனப்பலகாவன்மன்னரைநேமியா
னுடல்கிழித்திகனிலமனைத்தினுமோடுதேர்புரிசாரிகை
மிடலகத்தினுமுதவுசாயகவிபரிதத்தினுமெய்தொறு
மடலகற்றினனசுரருக்கெதிராறுமாமுகனுகியே. (௪௦)

வேறு.

மறந்தருதனஞ்செயன்மகன்கொடுங்கணை
திறந்தருவபவர்செஞ்சிரங்கடள்ளுத
லறந்தருமுலவைவாழாடகக்கிரி
நிறந்தருசிகரிகணீக்கலேற்குமே. (௪௧)

அச்சுதப்பெயரினன்மருகனுடவர்
கைச்சிலையொடுபுயங்காதிவீழ்த்துத
லுச்சியங்கிரிச்சிரமும்பர்நாயகன்
வச்சிரத்தகற்றியபான்மைமானுமே. (௪௨)

உத்தரைநாயகன்வியூகமன்னவர்
தந்துவாம்பரியொடுந்தகர்ந்துவீழ்த்துதல்
மித்திரன்கதிதபவிந்தமோங்குநாள்
கைத்திறற்குறுமுனிகலைத்ததேய்க்குமே. (சங)

சுபத்திரைதருமணிசுடர்செய்வாளிக
ளிபத்திரளுடல்களூடுருவியேகுதல்
நபத்துயர்கிரவுஞ்சநாமவெற்பினை
விபத்துறவுருவியவேலைமானுமே. (சச)

மகபதிமகன்மகன்வயிரவான்கணை
செகபதிபுரவியின்றிரளைத்தீய்க்குதல்
நகபதிநிகர்புயனலக்ககாய்கனற்
ககபதிகாண்டவங்கொளுவல்காட்டுமே. (சரு)

மண்டலவில்லிதன்வான்கொடுங்கணை
கண்டதன்சத்திரக்காடுநீக்குதல்
பண்டிராவணன்கொடைப்பரப்பைவாளியாற்
றுண்டமாயிராகவன்றுணித்ததொக்குமே. (சசு)

புயவளக்கெதிரிலான்புங்கவங்களாற்
கயரதுரகமாக்கடலைத்திக்குத
லியலடலிராமனன்றேவுமம்பினாற்
பயில்கடலுயிரெலாம்பட்டதொக்குமே. (சஎ)

துதித்ததேரபிமனுந்தூயநன்மர
புதித்தவன்வாகினியுகுத்துலாவுதல்
கதித்தபாற்கடறனைக்கடவுளோரெலா
மதித்தமந்தரமெனும்வரையினொயதே. (சஅ)

அடைந்தவராருயிரனையகாளைதான்
கடைந்தவான்கணைகளாற்கலக்கவாகினி
யுடைந்தணிசிதைந்துயிருகுத்தல்வாரணங்
குடைந்தநீருறுபசுங்குவளைபோலுமே. (சகூ)

முரசுகாகளங்கொடிமுடிகளங்கதம்
வரிசிலைபரிசைவேல்வாள்கள்வீழ்த்துத
விரைபுயல்கோள்கள்மீனென்பயாவுமிங்
குரைபெறவழுவிவந்துதிர்வதொக்குமே. (ரு0)

இன்னணம்பெருஞ்சமரியற்றிமாற்றலர்
தன்னணிகெடுத்துதிரங்கள்சார்தொறும்
பன்னியநதிகளுமடுவும்பற்பல
துன்னிடவுச்சவான்சுடரிற்றோன்றினன். (ருக)

வேறு.

கண்டுசோர்ந்துளங்கனலெழவிழிப்பொறிகதுவ
மண்டுபற்கறித்திருகரமெற்றிவானுதல்கள்
விண்டுவேர்வுறச்சிரித்தனன்கொதித்தனன்வெறுத்தான்
வண்டுசூழ்தருவலம்புரியலங்கல்வேன்மன்னன். (௫௨)

சிறந்தபற்குணற்குதித்தவோர்சிறுவனுசுகத்தின்
மறந்தனிற்பொடிபட்டதென்வாகினியென்று
லறந்தவாதவரென்சொல்வாரென்சொல்வாரடலோ
ரிறந்ததென்பெயரம்மவோவெனமுனிந்தெழுந்தான். (௫௩)

மிலைச்சுதும்பையன்மிடைபெருந்தூணியன்மேரு
மலைச்சுவில்லினன்வாளராவுபர்பதாகையினன்
கொலைச்செய்பேரணிக்கொற்றவர்தமையெலாங்கூவி
யுலைக்கெழுங்கனலுயிர்ப்பினன்கரமெடுத்துரைத்தான். (௫௪)

பரிதிமைந்தனுங்கிருபனும்பாய்பரித்தாமன்
குருதிவேற்சயத்திரதனுமத்திரர்கோவும்
பொருதிறற்கிருதவன்மனும்பூரிசராவுந்
தருதிறங்கொடுச்சாதனன்முதலதம்பியரும். (௫௫)

சோமதத்தனுஞ்சகுனியுஞ்சுதாயுவும்போர்வாய்
நாமதத்தனுமலம்பனுநற்புலிமுகனு
மேமதத்தனுமச்சுவசேனனுமின்னுந்
தாமதத்தரசரிற்பலரடைந்தனர்தாழ்ந்தார். (௫௬)

வந்துவெம்படைமன்னவர்திரண்டதுநோக்கி
முந்துமிச்சுதன்முனையிவர்க்கெளிதுகொலென்னு
வந்தணன்விரைந்தனுகினனியாவருங்குழுமிச்
சிந்தைதீயெழச்சுபத்திரைச்சியத்தைவளைந்தார். (௫௭)

காரிலங்குருமேறெனநாணொலிகாட்டிச்
சீரிலங்குறுசிலைதொறுஞ்சிலீமுகம்பொழிந்தார்
நேரிலங்குறுவம்புதசாலங்கணெருங்கி
யோரிலங்குறுமேருவிற்றுளிப்பதையொப்ப. (௫௮)

எய்தபல்லவமெத்தனையாயிரமெதிர்ந்தோர்
செய்தசேவகமெத்தனையாவரேதெளிந்தோர்
பொய்தவிர்ந்தவன்புங்கவத்தழித்துடல்புதைத்தான்
மொய்தருங்கணைமூன்றுமூன்றியாவர்க்குமுறையே. (௫௯)

பட்டவானவர்மார்புறச்சோரிநீர்பாயக்
கெட்டழிந்தனரியாவருமாரியன்கிடைத்து
மட்டில்வான்கணைபொழிந்தவன்விடுங்கணைமழையாற்
சுட்டநெஞ்சினன்மீண்டனன்புறந்தராத்தூயோன். (௬௦)

வேறு.

* தந்தைவென்னிடுமுன்னர்முப்புரதகனனேநிகர்மகன்மிகச்
சிந்தைகன்றிவெகுண்டுதேரொடுசென்றுகால்வளைசிலையினா
லுந்துகின்றசிலீமுகம்பலவகைமுகங்களிலுருவவே
முந்தினானவனப்புமாரியின்முழ்கினானுடன்முற்றுமே. (௯௧)

* கன்னனென்றுலகெண்ணும்வீரனுமொய்ம்புடன்பலகணைகள்வான்
மின்னொழுங்கொருகோடியென்னநிறுத்திமெய்யுறவீசினா
னன்னவன்பகழிக்குலங்களநேகமோகரமாகையா
லென்னவெஞ்சமமினிநமக்கெனவேறுதேருடனேகினான். (௯௨)

* கிருபமாமுனிதானுமேதகுகிருதவன்மனுமோர்புறத்
திருவராண்மையுநிலைபெறும்படிசென்றுதூவினரேவினா
லொருவனேயிவனிவனெடுத்ததுமொருசராசனமம்பிலே
வெருவியோடினர்தங்களோரிருவில்லுமற்றுவெறுங்கையே. (௯௩)

* சகுனியுந்திருமகனுமற்றுளதமருமேலிடுதானையோ
டிகனெடுங்களம்வென்றுகொள்குவமென்றுவந்தெதிரணுகினார்
மகன்விழுந்தனன்மார்பின்மூழ்கியவாளியொன்றினின்மற்றுளார்
மிகநடுங்கியொடுங்கியோடினர்வீழுமன்னர்கள்வீழவே. (௯௪)

* வின்முகந்தெழுவாளிவாளிவிலக்கவந்தவிகன்னனுந்
துன்முகன்றலையாகமற்றுளதுணைவருஞ்சமர்துன்னினார்
நன்முகம்பெறுவிசயன்மைந்தனுநானுமக்கெதிரன்றுநீர்
பின்முகம்படவோடியின்றுயிர்பிழையுமென்றுரைபேசினான். (௯௫)

வல்லியம்புகுமாறுதேரொடுவந்துவெஞ்சிலைவாங்கியே
சல்லியன்பொரவுடன்முனைந்தெழுதம்பியாருயிர்மங்கினான்
கல்லியங்குசராசனத்தொடுகவசமும்பொடிசெய்தலான்
வல்லியைத்துதிசெய்துமீண்டனன்மேவலார்க்குருமேறனான். (௯௬)

* மற்றுமற்றுமுனைந்துவந்துமலைந்தவெஞ்சினமன்னர்மெய்
முற்றுமுற்றுமிவன்கைவாளிகண்முனைபுதைந்திடமூழ்கலா
லிற்றவிற்றபடைக்கலங்களுமெய்த்தவெய்த்தபதாதியு
மற்றவற்றவிதங்களாகியுமாகியேகினரடையவே. (௯௭)

கண்டுதேசிகனற்புதத்தொடுகாசினிக்கொருநாயகன்
குண்டலந்திகழ்செவிகளூடுபுகும்படிக்கிதுகூறினான்
மண்டுபோர்புரிகிருபனாகியமைத்துனர்க்கெதிர்வாண்முகங்
கொண்டுமாமுகிலசனியஞ்சவகத்திலன்புகுழைப்பவே. (௯௮)

தந்தைமாருடன்பிறந்தவர்தாமுமாதுலர்வர்க்கமும்
வந்தமன்னரனேகரும்புடைமருவின்மூவுலகென்படுஞ்
சந்தனஞ்சிலையொன்றுகொண்டுதனித்துவந்திதுபுரிபவன்
கந்தனோவின்முகுந்தனோமுனைசவ்யசாசிகுமாரனே. (௯௯)

என்னமன்னவர்மன்னனவ்வுரையிருசெவிக்கிசையாமலே
வின்னலந்தெரியரசிற்றலைமைப்படுந்தனுவேதிநீ
துன்னுமிச்சிறியோனையாற்றருலைத்திடாதுதுதிப்பதே
எந்நலத்தினுமிக்கதென்றிசையெய்துகன்னனெடுமைசெய்தான். (எ0)

மீளவும்பகர்வானுணர்ந்துளவேந்தர்நீவிர்விரைந்தெழுந்
தாளவம்பரம்வந்தமைந்தனையத்தன்முன்புகுதாதிவண்
மாளனுஞ்சுடர்வாளிகொண்டுயிர்மாற்றுமின்சிலையாரியன்
காள்வெங்கணைவின்மைநம்பிமயங்கலீர்கடிதென்னவே. (எக)

சீற்றமிக்குநிலஞ்செய்மன்னிதுசெப்பவொப்பறுதிறலினோர்
காற்றடம்பவொலித்தெழுந்தகடற்குநேர்படுகாட்சியார்
சாற்றுமுன்னர்புகுந்துளாரைமடக்கிநின்றிதுசாற்றினன்
தோற்றமிக்கவள்சூழ்ந்தநூண்டுகிறெட்டகாளையப்பினால். (எஉ)

மன்னன்வாகினிபுக்குமீளவருஞ்சுபத்திரைமைந்தனை
யுன்னுமுன்னுயிருண்பன்யாவருமுதவிவேண்டிலனொருவிலா
லங்நரன்றிருமாலொடித்துயராலிறப்பருஞ்செருப்
பின்னரில்லைமுடிந்ததென்றுபிதற்றிநீண்முனையேறினன். (எங)

தொட்டுவாளியநேகமாயிரமொருவில்கொண்டனல்சொரியமுன்
பட்டுநின்றவனைச்சுபத்திரைபாலனெய்ந்தடல்வாளியால்
விட்டசாயகநூண்டுகட்படவீட்டியேமுனைவில்லையு
மட்டுமேனியிலாயிரங்கணையுய்ப்பவீழ்ந்தனனவசமாய். (எச)

மாறிலாதவறன்குமாரனைமன்னர்பேரவைதன்னினீ
யீறிலாதகொடுஞ்சொல்கூறினையென்பருன்னுயிருண்பல்யான்
ஊறிலாதவன்வஞ்சினந்தவறுறுமெனக்கருதியுதவினேன்
தேறிலாய்கடிதேகுகென்றுதெழித்திலானொருசெம்மலே. (எரு)

வில்லுமற்றுதிரங்கள்சோரவிளம்பிவந்தபராக்கிரமச்
சொல்லுமற்றுயிர்சோர்ந்ததேரொடுசூதனுங்கொடுபோகினன்
கல்லுமுட்குமுடற்பருத்தமருப்பிணைக்களிறென்னினும்
வெல்லுமற்புதமன்றுவாளரியென்பதொத்தனன்வீரனே. (எசா)

தம்பிவீழ்ந்தனனென்றுசிந்தைதளர்ந்துமன்னனைநோக்கியே
செம்பினுந்தறுகண்சிவந்துசிதைத்துமைந்தனைவீட்டுவன்
வன்பினுலெனவந்துதேரினடுத்துவெஞ்சிலைவாங்கினன்
கும்பிவெம்பிமடங்கறந்திடுகுருளையைப்பொரமேவல்போல். (எஎ)

நூறுநூறுகடுங்கொடுங்கணைநொய்தினேவலுமங்கவன்
வேறுவேறுபடத்துணித்தொருவிசிகமார்புபுதைத்தலா
லாறுபோலுதிரங்கள்சிந்தவயர்ந்துவீழ்ந்தனனங்கர்கோ
னேறுதேரொடுகொண்டுபோயினனிரதமுய்த்திடுவலவனே. (எஅ)

தம்முனங்குதளர்ந்தகண்டுதரிக்கலாதசினத்தனாய்
வெம்முனைக்கனிலெனப்திறனிசைமேவிராதையளித்தவன்
கைம்முகிற்சிலைகோலிவாளிசெலுத்தல்கண்டொருகணையினா
லிம்முடித்தலைதுணிவுசெய்தனனெதிரிலாவிறலபிமனே. (௭௯)

மானமன்னனுமேலையோர்களும்வந்துபோர்பொருதுடலெலா
மோனவாளிகுளிப்பவென்னிடுமுதல்வருக்குமுன்னிடுதலிற்
றானதண்டமுணர்ந்தமாமுனிபின்றொடர்ந்திதுதக்கதோ
வீனமன்றுகொல்சிறுவனைத்தெறலின்றியோடுதலென்னவே. (௮௦)

தூயவன்றனைநோக்கவாற்றலநாணம்வந்துதொடங்கலாற்
றேயவேந்தனிரிந்தவம்முனைசென்றுசென்றுசிறப்பினாற்
காயடுங்கணையுய்த்தமன்னவர்கயரதங்கடுரங்கமென்
றாயவாகினிசருகையொத்தனனனலமொத்தனனபிமனே. (௮௧)

* இளையவன்றனிமதலைதெவ்வரிளைக்கவிப்படியிகல்செயத்
தளையவிழ்ந்தவலங்கன்மீளிசமீரணன்றிருமதலைபோய்,
வளையவன்சிலைமன்னவன்கழன்மலர்வணங்கிவணங்கலா
ருளையவந்தமர்முடுகிநின்றமைகண்டுசோகமொடுரைசெய்தான். (௮௨)

* தோலநேகமநேகநேமிதுரங்கமங்களநேகநீள்
வேலநேகமநேகம்வாள்வரிவில்லநேகவிதம்படக்
காலநேகமெழுந்ததொத்தமராடுகின்றகளத்திடைப்
பாலனேகடிதேகிவெம்முனைபயிலுவானொருபாவமே. (௮௩)

* எனக்குநீவிடைநல்குகென்றவனிருபதந்தொழுதியாரினுந்
தனக்குநேர்தனையல்லதில்லெனவெல்லவல்லதோர்தண்டினான்
மனக்குநேர்வருதேரினன்பலமண்டலீகருமன்னருஞ்
சினக்குழாமுறுசேனையும்புடைசூழவன்றெதிர்செல்லவே. (௮௪)

* சாயையொத்தெழுசேனையோடெதிர்தடவிமன்குலவடவியிற்
றீயையொத்துவிளங்குமாருதிசென்றுமண்டியதிசையெலா
மாயையொத்தொருவடிவுமின்றிவகுத்தசக்கரமண்டல
மீயையொத்ததுகளுழனொத்தனனீறிலாவரியேறனான். (௮௫)

* கலிங்கர்சோனகர்மகதர்கன்னடர்கங்கர்கொங்கணர்கௌசலர்
தெலுங்கராரியர்துளுவர்பப்பரர்சீனர்சாவகர்சிங்களர்
குலிங்கர்மாளவர்களமரொட்டியர்குகுரர்கொப்பளர்கூபகர்
புலிங்கசாலமெனச்சதாகதிபுதல்வனோடுறுபோர்செய்தார். (௮௬)

* பொருதபற்பலபாடைமன்னவர்பொன்னிலங்குடிபுகுதவே
விருதவித்தகனுடன்வரும்பலபாடைமன்னவர்வெட்டினா
ரொருதிறத்தசிலீமுகங்களுறுக்கியோடியுடன்றநா
ளிருதர்பட்டதுபட்டிறந்தனர்நேமியுட்படுநிருபரே. (௮௭)

* மண்டுகொண்டலின்மிகவதிர்ந்துமருத்தின்மைந்தனுருத்தெழுந்
தண்டுகொண்டுவியூகமாகியசக்கரத்தையுடைத்தலால்
விண்டுகொண்டுமுருக்குமாருதிமீளவந்தனனுமெனக்
கண்டுகொண்டனன்வெஞ்சினக்கனனின்றுகாய்தருகண்ணினன். (௮௮)

வேறு.

* நபமுகின்முழங்கியேறியிடிவிடநடுநடுங்கிமாயுமரவென
வுபரியெழுகின்றசியம்வரவரவுடையுமிபசங்கமோடுவனவென
வபிமனொருவன்கையேவினமபடையடையநெளிகின்றதாயபொழுதினில்
விபினமிசைமண்டுதீயொடனிலமும்விரவுமியல்பந்தவீமனணுகிலே. (௮௯)

* சகுனியுடன்விந்துபூரிமுதலியதரணிபரடங்கவேகிமகிபதி
மகன்மகனெடுங்குருதபடியெதிர்வளைமின்வருகந்தவாகன்மதலையை
விகனனுமடங்கல்போலுமிளைஞரும்விருதர்பலருந்துரோணன்மதலையு
மிகன்மலையிலிந்தநாழிகையிலிவரிருவரையும்வென்றுகோறலெளிதரோ. (௯௦)

* எனவுயர்புயங்ககேதுவுரைசெயவிவனைவிடைகொண்டுவீரரனைவரு
முனைபடவணிந்துகாலமுகிலெனமுரசினமுழங்கவோடியெதிரெதிர்
கனலெனவெகுண்டுசேனைபலபலகசரததுரங்கராசியுடன்வர
வனிலகுலமைந்தனனபதியொடுமபிமனொடுவந்துபோரின்முடுகவே. (௯௧)

* விழிமலர்சிவந்துகோலமதிநுதல்வெயர்வரவிரண்டுதோளுமுறைமுறை
யழகுறவிளங்கமூரனிலவுடனணிமகரகுண்டலாதிவெயிலெழ
முழவினெடுசிங்கநாதமெழவெழமுடுகியெதிர்சென்றுமோதியவரவ
ரெழில்வடிவமெங்கும்வாளியுதையினனிரதமிசைநின்றவாயுமதலையே. (௯௨)

* மணிமுடிசிரங்களோடுதறிபடவலயமொடணிந்ததோள்கடறிபட
வணிகழலொடுந்துதாள்கடறிபடவயிலொடுகரங்களானதறிபட
நணியவிரதங்கள்சாயவிவுளிகணடுவறவளைந்தசாபமுதலிய
துணிபடவழிந்துமீளநடவினர்துவசபுயகன்பதாதிநிருபரே. (௯௩)

செருமுகமழிந்துசாலவுடனொறுஞ்சிலகணைகள்பீறிமாறிவெஞ்சினம்
வெருவொடுதளர்ந்துபோனநிருபரைமிகவசைமொழிந்துபோதநகைசெய்தே
கருகிமுகநெஞ்சுகோபவனல்கொடுகதுவினமனங்கள்செய்யநிறமுற
வருகுவருசிந்துராசதிலகனோடபரிமிதவின்சொலாகவுரைசெய்தான். (௯௪)

* விசயன்மகனுந்தன்மீதுவரும்வரும்விருதருடலங்கள்யாவுநிரைநிரை
தசைகுருதியென்புமூளையிவையிவைதரணிமிசைசிந்திவேறுபடவிழ
வசையவிரதங்கடாவிவளைதருமணிசிலையுமம்புமாகிமுனைமுனை
திசைதொறுநடந்துசீறரவியெதிர்திமிரபடலங்களானவடையவே. (௯௫)

* இருவரெதிரும்பொருமன்முடுகியவிருபடையுநொந்துமீளவவனிபன்
வெருவொடுதளர்ந்துபோனநிருபரைமிகவசைமொழிந்துபோதநகைசெய்து
கருகிமுகனெஞ்சுகோபவனல்கொடுகதுவிநயனங்கள்சேயநிறமுற
வருகுவருசிந்துராசதிலகனோடபரிமிதமின்சொலாகவுரைசெய்தே. (௯௬)

* மறனுடையைசெம்பொன்மேருகிரிநிகர்வலியுடையையென்றிகூருமரசிய
லறனுடையைபஞ்சபாணனெனவடிவழகுடையைநின்றிசேனையரசரி
னிறனுடையைதிங்கள்சூடிவியனதிநிறைபுனல்பரந்துலாவுமவுலியர்
திறனுடையமன்றனாறுமலரடிதெளிவொடுபணிந்தஞானமுடியினை. (கூஎ)

* வயவிசயனின்றதேர்கடவிவரும்வலவன்மருகன்றனோடுவரைபுரை
புயமுடையதண்டவீமனுறிலிருபொருநரையுமின்றுபூசல்பொரவரி
தயலிவரகன்றுபோகிலமர்பொரவறவுமெளிதுண்டுபாயநுதலெரி
நயனனருள்கொன்றைமாலைதனையிவர்நடுவிடிலிரண்டுபாலுமகல்வரே. (கூஅ)

அரனருள்வரங்கொடேகிமுனைபடுமனிலகுமரன்றனோடுமரசரைப்
பரவைநிகர்நம்பதாதியவனிபர்பலருடன்வளைந்துகோலியமர்செயச்
சரவணைபிறந்தசோதியிவனெனச்சமர்புரிதரும்பிரதாபவபிமனை
யுரனுடையலங்கல்வீரர்பலர்கையாலுயிர்கவரநின்றுசாலவுறுதியே. (கூகூ)

எனவிவன்மொழிந்தபோதிலவனிவனிணையடிவணங்கிவாயுமதலையோ
டினமுறவரும்பதாகையரசரையிரவுமறைகின்றகாறுமுறவிடே
னுனதுநினைவெஞ்சிடாதவபிமனையுயிர்கவர்வனென்றுதேறவுரைசெய்தே
பனிமதியணிந்தவேணியொருவனைப்பரமனைநினைந்துசாலவுருகியே. (க00)

தொழுதனனலங்கல்சூடுமொருசிலைதுதைசரநெருங்குதூணிநிறுவினன்
பழுதறுநெடும்பதாகையுறுமராப்பணமணியணிந்ததேரிலணுகினன்
கெழுதகுமுனைந்ததேயநிருபருங்கிளர்கசதுரங்கராசிவயவரு
மிழுதுகுகொடுஞ்சுவாலைநிகரெனவிருபுறம்வளைந்துசூழவெதிரவே. (க0க)

அறன்மகனுணர்ந்துதானுமனிகமுமவனோடுதொடர்ந்துமேவுமளவையிற்
றிறனுடையசிந்துராசதிலகனுஞ்சிலைகொடுபுயங்கவாளிசொரிதலா
னிறனுறுமுரங்களாகமுருவிமெய்நிறைநதிபரந்துசோரிசொரியவே
மறனறவயர்ந்துசாலவெருவினர்வயமலதுணர்ந்துருதமகிபரே. (க0உ)

கருதரியகந்தவாகன்மதலையுங்கசரததுரங்கராசிபொடிபட
விருதுவிலுதைந்தவாளிசொரிதரவிறலொடுவிரைந்துமேவவதுதெரிந்
தொருதனியறன்குமாரனிரதமுமுயர்பவனன்மைந்தனூருமிரதமும்
பொருதசிலையுந்தனாதுகணைகளாற்பொடியுரமுனைந்துமீளிகுறுகினான். (க0ங)

கதையொடுமடங்கிமாயனிளவறன்கதிர்மணிநெருங்குதேரினணுகினன்
துதைதருசரங்களோடுமுலவைதன்சுதனறன்மகன்பொருதுதிருகினன்
றதையுறுமிடும்பிகாதன்மகனோடுந்தனையர்களிரிந்துசாலவெருவினர்
விதைவிவர்சொரிந்தவாளியவனதின்விளைவெனமுனைந்துமாரிபொழியவே. ()

துருபதனையைந்துவாளிகளிலவன்சுதனையுமிரண்டுதூயகணைகளி
னிருபர்பலர்தங்கடேசும்வலிகளுநிலைதளரவென்றுமாயனிளவலை
யொருபதுசரங்கள்மார்புபுதைதரவுதையினன்முகுந்தனேடியுணர்வுரு
விருபதமிகுந்தசேமமனதினனிகலுடையசிந்துராசகுமரனே. (க0ரு)

அரனருள்வரந்தனுண்மைநிலையிடவமரருமயங்கவாசைசெவிடுற
வுரனெடுமலைந்தகாலையசனிமுன்புரகரிலடங்கவேவுகணைகளா
னரனவண்விரைந்துருதகொடுமையுநவமெனுமகன்றனதுகடுமையுந்
திரனுறுமுளங்கள்போழவிவர்வனசெருமுனையமிழ்ந்துளார்களெவருமே. ()

இவனையிவனுந்திமீளுமகிபதியிரவிசுதனுந்தனேயவிளைஞரும்
பவனகதிகொண்டதேர்கண்முதலியபலபடைஞருந்தன்சேனைமுதல்வனும்
புவனமடவந்தவூழியனலெனப்புரதகனனன்றியாவர்நிகரெனத்
தவனனெனநின்றவீரவபிமனைத்தனையனுகிமஞ்சுபோலவளையவே. (க௦எ)

விருதுகடறிந்துசாபநடுவறமிகுகவசம்விண்டுதோள்கணெறிபடத்
திருமுடிபுனைந்ததூயசிரமறத்திசைதிசைபறிந்துதேர்கள்பொடிபடக்
கருதுடலடங்கவாளிபுதைதரக்கதைகளயில்சிந்திவீரர்துணிபடப்
பொருதிறலறிந்ததேயநிருபரைப்புகழ்கெடமுனைந்துளானவபிமனே. (க௦அ)

* அரன்முடியணிந்ததாமமிதுவெனவடிகொடுகடந்துபோகவெருவுவர்
பரவைநிகர்நம்பதாதியவனிபர்பலருடன்வளைந்துகோலியமரிடை
வரமுறவணங்குநாளிலருள்செய்துமனமகிழமங்கைபாகனுதவிய
வுரனுடையதண்டினாலிவ்வபிமனையுயிர்கவர்தலின்றுசாலவுறுதியே. (க௦கூ)

* எனவிவன்மொழிந்தபோதிலவனிவனிணையடிவணங்கியாதுநினைவினி
யுனதுநினைவெஞ்சிடாமலபிமனையுயிர்கவர்வனென்றுதேறவுரைசெய்து
கனகதருமன்றன்மாலையெனவொளிர்கடியிதழியந்தண்மாலைபரமனை
மனனுறவுணர்ந்துநாவினிகழ்தருமறையொடுவளைந்துவீழவெறியவே. (கக௦)

* எறிதொடையல்சங்கபாணிமருமகனிகலுமமர்வென்றுமீளுமளவையி
னெறியிடைவிலங்கிவாளகிரியெனநிமிர்வுறவளைந்துசூழவருதலு
மறிவுடனிறைஞ்சியாதிபகவனதணிமுடியலங்கலாகுமடையலர்
முறியவினிமண்டுபோரிலமர்செய்துமுடிதுமெனவந்துமீளமுடுகவே. (ககக)

வேறு.

* ‡ பரிசனகுமாரன்விடு, மெரிகணைகளான்முடுகு
தரியலர்பதாதிபடை, நெரியவருகாலையிலே. (கக௨)

* விறலபிமனின்றகள, முறுதுமினியென்றுநனி
குறுகலும்விலங்கியது, நறையிதழியந்தொடையே. (ககஙு)

* இன்றமரின்யாருமுயிர், பொன்றிடினுமீசனணி
கொன்றைகடவேனெனமுன், னின்றனனராதிபனே. (ககச)

* முந்துவடிவாளமரின், வந்தனுகுவான்மதலை
நிந்தனைகொலாமிதென, நொந்துசிலகூறினனே. (ககரு)

* இந்தமதுமாலையிடை, தந்தபிமனுருயிரை
யுந்திவிடவோவெளிது, சிந்துபதிசேவகமே. (ககசு)

---

‡ பரிசனன் - வாயு.

* விரகுபடவெப்பொழுது, முரணமர்தொடக்கும்வலி
யுரகதுவசற்கொழிய, வரசரிலெவர்க்குளதோ. (ககஎ)

* தன்மகனையுஞ்சமரில், வன்மையொடுகொன்றொழிய
மன்முனைதிரண்டிடினு, மென்மகன்மடிந்திடுமோ. (ககஅ)

* என்றிதழிமாலைதனை, நின்றுதொழுதன்பினொடு
சென்றனனிடிம்பனைமுன், வென்றதிறல்வீமனுமே. (ககக)

* மாலைகடவாமல்வரு, பாலனரசர்க்குநடு
வேலைவடவைக்கனலி, போலொளிரநின்றனனே. (கஉ0)

* யாளியெனநின்றவய, மீளியைவளைந்துபல
வாளிகள்பொழிந்தனர்கள், கூளிகணடஞ்செயவே. (கஉக)

* பற்பலருமர்த்தரதர், விற்பலவணக்கியெதிர்
சொற்பொலிவயப்பகழி, சிற்சிலதொடுத்தனரே. (கஉஉ)

* பெய்கணையடங்கவிவ, னெய்கணைவிலக்கியிட
மொய்கணையனந்தமவர், மெய்கணையவுந்தினனே. (கஉங)

* கன்னனுமடங்கலபி, மன்னுவுமுடன்றுமுனை
முன்னிரதமுங்கடவி, மன்னமர்தொடங்கினரே. (கஉச)

* அங்கர்பதிதேரிலிவன், வெங்கணைகணுவிட
மங்குலெனநாலுதுர, கங்களும்விழுந்தனவே. (கஉரு)

* தொடுத்தசிலைகோலியவ, னெடுத்தசிலையுங்கொடியு
நடுத்தறியவெட்டிமுனை, கெடுத்தனனனந்தரமே. (கஉசு)

* இரவிமகனோகுதலு, மரவதுவசன்றுணைவர்
விரவினர்வளைந்துதம, புரவியணிதேர்படவே. (கஉஎ)

* விட்டவிரதத்தினொடு, வட்டவரிவிற்குரிசி
லொட்டகணைதைக்கவவர், கெட்டுமுதுகிட்டனரே. (கஉஅ)

* சுகனிகர்துரோணனொடு, மகன்விசயன்மைந்தனெதிர்
முகனமரில்வந்துபுர, தகனனெனநின்றனரே. (கஉக)

* நிற்குநிலைகண்டுவரி, விற்களும்வளைத்தனர்க
ளுற்கைகளினூறுபல, பொற்கணைதொடுத்தனரே. (கங0)

* வருகணைவிலக்கியெதிர், பொருகணைகளாலே
யொருவனெரிமைப்பொழுதி, லிருவரையும்வென்றான். (கஙக)

* தேர்முகமிழந்துமிரு, கார்முகமிழந்தும்
போர்முகமிழந்துமவர், நேர்முகமிழந்தார். (கஙஉ)

* துன்முகனுமன்றமரின், முன்முனமர்செய்தே
வன்மிகமறிந்ததென, நன்முடிதறிந்தான். (கஙங)

* சித்திரவில்வீரனெனு, மத்திரர்பிரானும்
புத்திரரிலாதியுரு, மித்திரனும்வந்தார். (கஙச)

* வந்தபிமனேடமரின், முந்தியிருவோருஞ்
சிந்துகணைமாரிகளி, னந்தரமறைத்தார். (கஙரு)

* அவரவரெடுத்தவிரு, தவருநடுவெட்டா
விவர்கணைவிலக்குவன, கவர்கணைதொடுத்தான். (கஙசு)

* மைந்தனெருவாளியினி, லந்தரமடைந்தா
னெந்துபலவாளியொடு, தந்தைபுறகிட்டான். (கஙஎ)

* வென்றபிமன்வாளமரி, னின்றநிலைகண்டே
யொன்றுபடமாவிரதர், சென்றனருடைந்தே. (கஙஅ)

* கெட்டவர்களின்னரென, முட்டவுரைக்கொண்ணு
பட்டவரநேகரிவன், விட்டகணையாலே. (கஙகூ)

வே று.

* முற்சக்கிரயூகம்பிளப்புண்டபின்முன்பினேடும்
பொற்சக்கிரமென்னவெறித்தாமம்பொலிந்துசூழ
விற்சக்கிரமாகமணித்தேரினின்மீதுநிற்பான்
கற்சக்கிரமாகடுவூர்செங்கதிரொடொத்தான். (கசய)

* வடாதுந்தெனுதும்பரராசர்வகுத்தநேமிக்
குடாதுங்குணுதுமவற்றுட்படுகோணநான்கும்
விடாதுந்தேரின்மிசையெங்கும்விராயபோது
சடாதுங்கமௌலிப்புரசூதனன்றன்னையொத்தான். (கசக)

* வின்மைந்துகொண்டுதகுவோர்தமைவென்றவீர
னன்மைந்தனுக்குமுதுகிட்டனரென்றுநாணி
மன்மைந்தரெண்ணில்பதினயிரர்வந்துசூழத்
தன்மைந்தனையுமுடனேவினன்சர்ப்பகேது. (கசஉ)

* மேல்வந்தவேந்தன்மகனும்பலவேந்துமூழிக்
கால்வந்துவேலைக்கடறன்னைக்கலக்குமாபோ
னூல்வந்தகொற்றச்சிலையாசுகநொய்தினேவி
மால்வந்தகைக்குன்றனையானைமுன்வந்துசூழ்ந்தார். (கசங)

* முன்முன்புமுந்திப்பலரேவியமூரிவாளி
தன்முன்புதூவுமலர்போலிருதாளில்வீழ
வின்முன்புடையோனெருவில்லின்விசித்தவம்பாற்
பின்முன்புபட்டபலகோடிபிறங்குசேனை. (கசச)

நாடித்தெரிந்துபுகலற்கருநாமவேந்தர்
வாடித்திகைத்துநிலைகெட்டுமடங்கியோடச்
சாடித்தனித்தேர்விடுசாரதிதன்னைநோக்கி
யோடிப்பிழைத்தாரிவரென்னவவனுரைத்தான். (கசரு)

ஆயாதவாய்மையான்பலகூறினனாங்குநின்கை
யோயாதவண்மைமமராற்றியுடைந்ததூகம்
வீயாதிருந்தபடைக்கிரதந்தனிமீடனன்றே
தேயாதவாண்மைக்கொருவரொவ்வாவயச்சிங்கமன்னாய். (௧௪௬)

துணைபுகுநங்கையர்தங்களைத்துச்சனற்றோளணைந்தோ
னணைபுகுநீர்படவாற்றல்பெற்றாற்றமறைந்துநின்றான்
கணைபுகுமார்பரலாரிலையிக்களங்கண்டுமென்னே
யிணைபுகுவாரறுதோளாண்மையாண்டகையேகினன்றே. (௧௪௭)

அம்முனைபுக்குவடர்த்தெதிரேற்றவராவிபொன்ற
வெம்முனைகாட்டிநின்றந்தையரின்புறமேவலென்னா
மைம்முகிலைப்பொருதேர்விடுசாரதிகூறமைந்தன்
றெம்முனையென்னனுமார்த்தினிநீவிடுதேரையென்றான். (௧௪௮)

ஓடுந்தனித்தேர்களேபரமாமலையுச்சியேறி
நாடுந்தனிச்செம்புனன்மாநதிநீந்தியம்பின்
காடுங்கடியநிணச்சேறுகடந்துசெல்லக்
கோடுந்தனிமாமதியுடையான்குழுக்கொண்டெதிர்ந்தான். (௧௪௯)

முனைகெட்டழிந்துபலமன்னருமுன்னரெய்தி
வினைகெட்டவேந்தன்மகனும்புடைமேவிநிற்ப
வனைகெட்டமானின்மிசைபோம்வயமாமடங்கிப்
புனைகெட்டவேழமிசைதாவுதல்போலமீண்டான். (௧௫0)

காரற்றுவீழ்ந்தபடியொண்சிலைகையுமற்றுத்
தேரற்றுவாசிகொடியற்றொருதேயவேந்தன்
பேரற்றுவீழ்ந்தான்விடசேனன்பெயர்ந்தவானி
னூரற்றுவீழுமொருவயக்கோளெனவொருவனம்பால். (௧௫௧)

இடைபட்டுநின்றதிறல்வேந்தரிலெண்ணமின்றித்
தொடைபட்டமேகமிதென்னப்பதாதியர்தோன்றலேற்ப
மிடைபட்டதாரோன்கணையொன்றின்மிலைந்தசென்னி
யுடைபட்டுவீழ்ந்தானுருமுறக்கற்பிளவுற்றதேபோல். (௧௫௨)

தன்றந்தைவீழவதுகண்டுதரிக்கலானாய்
மன்றந்தமைந்தனெதிரெய்தமடித்துவீழ்த்தான்
மின்றந்தவாளிபலகோடிவிடுத்துரப்ப
வென்றந்ததன்றேர்தனிமுனையேறியவேந்தர்சேனை (௧௫௩)

பொய்ப்பட்டமன்னனணிமுரிந்தோடப்பொறாதுபொங்கி
யெய்ப்பட்டமைந்தருமன்றொருமைந்தனுமெய்தியார்ப்ப
மெய்ப்பட்டசிந்தையராருயிர்போன்றுவிளங்குமைந்தன்
கைப்பட்டகோலக்கணைமாரியிற்கால்கள்சாய்ந்தார். (௧௫௪)

வே று.

* அரவுயர்த்தவன்மதலையொடட லுடையரசர்புத்திரரானவருமெழுபரி
யிரவிபொற்கதிர்கெறுதலினிரிதருமிருளெனத்திசைதிசைதொறுமுதுகிட
வுரனுடைப்பணைமுழவுறழ்திணிபுயனொருசமர்த்தனுமொருதனியிரதமும்
விரவிமுற்பொருகளமழகுறும்வகைவிறல்வயப்புலியெனவெதிர்முடுகவே. ()

* வளையமுத்துதிர்விழியுடைவரிசிலைமதனன்மைத்துனனவனிபர்பலரையு
மிளையெனப்புறமிடவமர்பொருதபினிளையவித்தகனெதிருறவருகலு
முளையெயிற்றிளநிலவெழவகல்வெளிமுகடுடைப்படுதொர்நகைசெய்துகடவின
னுளவயப்பரியிரதமுமிரதமுமுரனொடொத்தினவுருள்களுமுடையவே. ()

* ரகுகுலத்தவனிளவலுநிசிசரரிறையளித்தருளிளவலுமிருவரு
நிகரெனத்துணைவிழிகடைநிமிர்தரநெறிகடைப்புருவமுமிகமுரிதர
முகிலிடித்தினவெழுகடல்களுமிகமொகுமொகுத்தெனவனிலமுமனிலமு
முகமுடித்தெனமுறைமுறைபலபலவுளாயெடுத்தனரொருவரொடொருவரே.

* ஞெலிமரத்தினுமனனெரியெழவெழநிருபர்விட்டனகசரததுரகமு
மெலிவெழப்பிறகிடவுநின்னொருதனிவிறல்குறித்திரதமுமெதிர்கடவினே;
யொலிபடுத்தெதிர்வரின்விரிசுடரெதிருலவுவிட்டிலினுயிரழிகுவையென
வலியுறுத்தினனவனிபன்மதலையைவலியவச்சிரன்மதலைதன்மதலையே. (கடுஅ)

* இவனுமப்பொழுதெதிரொலியெனநனியிகலருச்சுனன்மதலையையுனதுயி
ரவனியர்க்கெதிர்கவருவனொருநொடியளவையிற்பொருதெனமுனையனுகினன்
சிவன்வளைத்தபொன்மலையினும்வலியினசிலைவளைத்தனரிருவருமெறிதரு
பவனன்மைக்கடல்வடவையின்முனிதருபவனமொத்ததுபடுகளமுழுதுமே. ()

* துரகதத்துடல்கெழுமினசிலகணைதுவசமற்றிடவிரவினசிலகணை
யிருவர்நெற்றியுமெழுதினசிலகணையிருபுயத்திடைசொருகினசிலகணை
யரணியொத்தெரிகதுவினசிலகணையகன்முகட்டையுமுருவினசிலகணை
முரணிலக்கணகுமரனுமபிமனுமுடிகியிப்படிமுரணமர்புரியவே. (கசுo)

* மழைமுகிற்குலநிகர்திருவடிவினன்மருகன்முட்டியுநிலையுமெய்வலிமையு
மழகுறத்தொடுகணைகுருபதிமகனவயவத்தினிலடைவுறமுழுகின
கழல்களற்றனவிருதொடைநழுவினகவசமற்றதுகரமலர்புயமுடன்
முழுதுமற்றனவொளிவிடுநவமணிமகுடமற்றதுமுகிழ்நகைமுகனொடே. ()

வே று.

* இலக்கணகுமரன்வெங்கானெரித்தவன்குமரனேவா
லலக்கணுற்றுவிமாய்ந்தானமரிடையென்றுகேட்டுக்
கலக்கணீர்சொரியநின்றுகண்ணிலிகுமரன்வெம்பி
வலக்கணோர்முனிவரோடுமன்னவரோடுஞ்சொல்வான். (கசுஉ)

* மன்னவர்மைந்தரோடென்மைந்தனைக்கொன்றமைந்தன்
றன்னையுமிமைப்பிற்சென்றுசயமுறச்செகுத்திலீரேற்
பின்னையிவ்வரசும்வேண்டேன்பெருமிதவாழ்வும்வேண்டே
னென்னுயிர்தானும்வேண்டேனென்றனனிராசராசன், (கசுங)

* தனித்தனியரசரெல்லாந்தாளிணைபணிந்துபோற்றிப்
பனித்துயர்பொன்றிவீழப்பார்த்தன்மாமகனையின்னே
குனித்தவின்னிமிராவண்ணங்கொடுஞ்சமர்க்கொன்றிலேமே
லினித்தனுவென்றுபோரிலெடுக்கிலேமிறைவவென்றார். (கசுச)

* குன்றவில்லவனையொக்குங்குமரனும்பகைகளாறும்
வென்றவின்முனியுமற்றும்வேந்தராயருகுதொக்கு
நின்றவில்விருதர்யாருநிருபன்மாமதலையாவி
பொன்றவில்வளைத்தோன்றன்னைப்புலிவளைந்தென்னச்சூழ்ந்தார். (கசுரு)

* போரொருமுகத்தாலன்றிப்பொருப்பொன்றிற்புணரியேழுங்
காரொருமுகமாய்மொண்டுகணக்கறப்பொழியுமாபோற்
றேரொருவளையமாகச்சென்றுதிண்சிலைகள்கோலி
யோரொருவீரர்கோடியாசுகமுடற்றினரே. (கசுசு)

* தரணிபரெய்தவெய்தசரங்களைச்சரங்களாலே
முரணறவிலக்கிப்பாதமுடியளவாகவந்தக்
கரணமும்புலனுமெய்யுங்கலங்கியக்கணத்தில்யாரு
மரணமென்றுன்னவல்வில்வளைத்தனன்வளைவிலாதான். (கசுஎ)

* ஆகவந்தன்னின்முந்தமனுகுலத்தரசன்பட்டான்
கேகையன்குமரன்மாய்ந்தான்கிருபன்வில்லொடிந்துமீண்டான்
மாகதக்குருசிலோடுமகுடவர்த்தனரநேகர்
நாகமுற்றனர்கள்கோடிநரபதிகுமரர்வீழ்ந்தார். (கசுஅ)

* சிலையழிந்தவரநேகர்தேரழிந்தவரநேகர்
தலையழிந்தவரநேகர்தாளழிந்தவரநேகர்
நிலையழிந்தவரநேகர்நெஞ்சழிந்தவரநேகர்
துலையழிந்தவரநேகர்தோளழிந்தவரநேகர். (கசுகூ)

* இனைவருஞ்சகுனிமைந்தரெழுவருந்துணைவருள்ளா
ரனைவருமாவிமாளவமரழிந்தவனும்போனான்
றனைவரும்புரவித்தேர்த்துச்சாதனன்றுணைவரோடு
முனைவருமளவிற்பாலன்முனைவெரீஇமுதுகுதந்தான். (கஎ0)

* காவலருடைதல்கண்டுகன்னனையரசன்பார்த்துக்
கேவலமல்லவிப்போர்கிரீடிவந்திவனைக்கூடி
னீவலையாகிற்சென்றுநேர்மலைந்தடர்த்தியென்னக்
கோவலன்மருகன்றன்னைக்குறுகினன்கொடையான்மிக்கோன். (கஎக)

* மன்முரிகுவவுத்திண்டோள்வாசவன்பேரன் றன்னோ
டன்முரியிரவிமைந்தனருஞ்சமர்விளைத்தகாலைச்
சென்முரிந்தென்னவேறுதேர்முரிந்தெடுத்தவாகை
வின்முரிந்துள்ளந்தானுமிகமுரிந்துடைந்துமீண்டான். (கஎஉ)

* தேறினன்றேறித்துச்சாதனன் றருஞ்செம்பொற்றேரி
னேறினன்மீளவில்லுமெரிகணைபலவுங்கொண்டு
தூறினனபிமன்செங்கைத்தொடைகளாலெதிர்த்தலஞ்சி
மாறினன்முகமுந்தேரும்வரிவில்லுமழிந்துமன்னோ. (கஎங)

* தூண்டினன்மேலாளாகித்துணைபரித்தடந்தேர் தூண்டி
மீண்டனன்காலாளாகிவிளிந்தனன்றெளிந்துமீளத்
தாண்டினபரித்தேர்தேடிச்சாபமுந்தேடிநெஞ்சாற்
பூண்டனன்பொருவான் றன்கைப்பொருகணைப்புயங்கம்போல்வான். (கஎச)

* விற்குனித்திரவிமைந்தன்விடும்விடுங்கணைகள்பட்டுப்
பற்குனன்மைந்தன் றிண்டேர்ப்பரிகளும்பாகும்பட்டு
முற்குனித்தெய்தவில்லுமுரிந்ததுமுரித்தேரு
நிற்குனன்னிலைமைகுன் றிநேமியுநெரிந்ததன்றே. (கஎரு)

பின்னுறக்கன்னனின் றுபெருஞ்சிலைதுணிப்பமைந்தன்
முன்னுறநின் றசேனைமுதல்வர்கள்பகழிதன்னாற்
றன்னுறுதேருமச்சுமாழியுந்துரகதத்தோ
டந்நிலைபாகும்வீழ்த்தாராயிரவிரதர்மன்னோ. (கஎசு)

குண்டலமொளிகள்காலவிருபுயங்குன் றினீட
மண்டலவுதையபானுவெனமணிமகுடமின்னப்
புண்டரநுதலுந்தேசும்பொலிந்தவாண்முகம்வில்வீச
விண்டலத்துயர்ந்துவாளோடவனிமேல்விரைந்துபாய்ந்தான். (கஎஎ)

உரையிழிந்திடுதற்கஞ்சாதுயிர்பரிந்திடுவான்வந்தோர்
தரையிழிந்திடத்தேர்சாய்த்ததன்மையால்வன்மைவல்லோன்
திரையிழிந்தெய்துங்காலத்தீயெனச்சிறிப்புக்கான்
வரையிழிந்திபங்கடாவுமடங்கலங்குருளைபோன்றே. (கஎஅ)

* தன்னையத்தனயன்செய்ததாழ்வெலாந்தனயன் றன்னைப்
பின்னையத்தந்தைசெய்துபின்னிடாதசைந்துநிற்ப
முன்னையபுரவித்தேருமொய்த்தவெஞ்சிலையுமின்றி
மின்னையொத்திலங்கும்வாளோடவனிமேல்விரைந்துபாய்ந்தான். (கஎகூ)

* வாளொடுபரிசையேந்திமண்டலம்பயிற்றியிற்றை
நாளொடுதுறக்கமெய்தயந்தனனின் றவீரன்
றோளொடுபுரையுஞ்செம்பொன்மேருவைச்சுடரோனகக்
கோளொடுசூழ்வதென்னச்சுழற்றினன்குமரரேறே. (கஅ०)

வே று.

* தேர்போனதுபரிபோனதுசிலைபோனதுசிறுவன்
பேர்போனதினிச்சென்றமர்புரிவோமெனநினையாக்
கார்போனனியதிராவிதம்மடியாவெறிகடல்வாய்
நீர்போலுடன்மொய்த்தார்வெருவுற்றேமுடியநிருபர். (கஅக)

விரியோதையுடன்சூழ்தருமவர்விண்குடியேறப்
புரியோதனமுனைவென்றமைபொருவின்முனிகருதா
வரியோமெனுமறையாலுடனம்பாயிரமெய்தான்
வரியோவிடுகழலானவைவாள்கொண்டுதுணித்தான். (கஅஉ)

* சொரியுங்கணைமழையேவுதுரோணாரியன்வில்லும்
பரியுங்கெடவிரதத்தொடுபாகும்பலபலவாய்
முரியும்படிவடிவாள்கொடுமோதாவமர்காதா
விரியுஞ்சுடரெனநின்றனன்விசயன்றிருமகனே. (கஅங)

* ஒருக்காலழிதேரன்றியுமுருளாழிகடேர்மே
லிருக்காலவர்முக்காலவரெக்காலுமழித்துப்
பெருக்காற்றணிசெய்தொத்தவிர்பிள்ளைப்பிறையனையான்
செருக்கானகைசெய்தான்வரிசிலையாசிரியனையே. (கஅச)

* முன்னுஞ்சுருதியினுலுயர்முனிவீரனைமுனியாப்
பின்னும்பனிவரைபோலொருபெருந்தேர்மிசைகொள்ள
மன்னுஞ்சிலைகுனியாமுனைவடிவாள்பலவுதிரா
மின்னும்பிறைமுகவாளியின்வீழும்படிவிட்டான். (கஅரு)

* பேணாருயிர்பருகும்பசிபெட்பப்பகுவாய்வெங்
கோணாகநிகர்த்தோன்வடிவாண்மண்குறுகாமுன்
பூணார்பரிசையுமெண்ணறுபொடிசெய்துதுணித்தான்
மாணார்கணைபலவுய்த்திகன்மார்த்தாண்டனனித்தோன். (கஅசு)

விருதோடமர்புரிகாளையர்விரைமாமலர்மடுவா
யொருதோளொடுபொரநிற்பதொரிகல்வாரணமொத்தான்
கருதோகையொடளகாபதிசுதர்நற்கதிபெறமுன்
மருதோடடியிணைசாடியமாயன்றிருமருகன். (கஅஎ)

* தன்மாதுலன்முதனூலுரைதருமந்திரமொன்று
லென்மாமணியுருவொன்றினையெறிசக்கரமாக்கிக்
கன்மாரிவிலக்குங்கிரியெனமேல்வருகருதார்
வின்மாரிவிலக்காவதுகொண்டியாரையும்வீழ்த்தான். (கஅஅ)

* ஒருகையினிலுருநேமிகொடோடித்திசைதோறும்
வருகையினிலெறிவான்முனிவாரீசனையொத்தா
னிருகையொருவரைமண்ணிலிறைஞ்சாமுடியிறைவன்
பொருகையனையவர்கையறவிரகோடெதிர்பொருதே. (கஅகூ)

கரிசிந்தினபரிசிந்தினகதிர்மாமணிநேமிக்
கிரிசிந்தினதிறல்வல்லவர்கிளர்மேனிகடோறு
மெரிசிந்தினபடிசிந்தியெழுஞ்சோரியிழுக்காற்
றரிசிந்தியிரிந்தார்குருபதிதந்திரமுறுவோர். (கசூ௦)

சிலைவேதியனவனல்கியசிறுவன்கதிர்மகவோ
டிலைவேலினர்பலமன்னரினித்தாழ்க்கலமென்றே
கொலைமீதுறுகசகேசரிகொளுநேமிதுணித்தார்
மலைமீதெழுமுகில்கால்பொருமழையன்னசரத்தார். (கசூக)

தேரிற்றிகிரியைமாப்பமுகத்தேசொடுதிருகிப்
பாரிற்றிகழ்தனவெங்கதைபற்றித்திசைமுழுதுங்
காரிற்பிளிறொலியோடுருமெனநக்கெதிர்கருதார்
போரிற்புலியெனவந்துபுகுந்தான்முனைபொரவே. (கசூஉ)

எடுத்தான்முகிலஞ்சும்புவியெற்றிற்பிலமதிரு
மடுத்தார்சிதைவுறுசெய்கையறிந்தோதுவராரே
தடுத்தார்புரவித்தாமனைவருதேரொடுதரையிற்
படுத்தானவனுயிர்கொண்டுபறிந்தோடினனன்றே. (கசூஙு)

நரபாலருமடுபோர்வலிநாற்சேனையுமோடச்
சுரபாலனன்மகனீந்தருள்சுதன்வெங்கதைசுற்று
வரபால்வளையிதழ்வைத்தனனரிநாதம்வகுத்தான்
சரபாவளியிபமென்னுயிரெனவேபடைசாய்த்தான். (கசூச)

* துச்சாதனன்மகன்மன்னர்தொழுந்துச்சனியென்னும்
நச்சாடரவனையானினிநானேபழிகொள்வே
னிச்சாயகமொன்றாலெனவெய்தானவன்முடியோ
டச்சாயகம்வடிவாள்கொடறுத்தானடலபிமன். (கசூரு)

தொடையார்சிலைபரிதேரொடுகதையால்வலிதுலைவோ
னிடையேயொருகதைகொண்டிவனெதிர்வந்துதடுப்பக்
கடையாரழலெனவோங்கியகடுங்காலனுமஞ்சப்
புடையாவவனொடுபற்பலவகையேசமர்பொருதான். (கசூசு)

வே று.

* ஒருவனம்படைத்தலைவர்களெவரையுமொருகைகொண்டடற்றிகிரியின் விழவெதிர், பொருவதென்கொலிச்சிறுவனொடொருபடிபொழுதுசென்றதெப் பொழுதமர்முடிவது, வெருவருந்திறற்றரணிபர்களிவிவன்விளியவென்றிடத்த குமவரிலரினி, யருளுடன்சயத்திரதனையழையெனவவனும்வந்துபுக்கனனொரு நொடியிலே. (கசூஎ)

* அருகுநின்றகொற்றவர்களுமவரவரரியதிண்டிறற்குமரருமமரிலுன்,ம ருகனும்படப்பொருதனன்மகபதிமகன்மகன்றனைப்பசுபதியருளிய, வுருகெழு

ங்கதைப்படைகொடுகவருதியுயிரையென்றெடுத்துரைசெயவரசனை, யிருகை
யுங்குவித்தருளுடன்விடைகொளு மெழில்கொள்சிந்துவுக் கொருதனிமுதல்
வனே. (கசூஅ)

* உரகவெங்கொடித்தரணிபனலமருமுள்மகிழ்ந்திடக்கதிபலபடவரு
துரகதம்பிணித்தணிகொளிரதமிசை துவசமுந்தொடுத்தட லுடைவலவனை
விரைவுடன்செலுத்துகவெனவுரைசெய்துவிழிசிவந்துசிற்றிளமதிபுனைதரு
கரகவண்புனற்சடைமுடியவனடிகருதிநின்றெடுத்தனனொருகதையுமே. ()

* மறலிதண்டெனக்கொலைபுரிதொழின்மிகவலியதண்டுகைக்கொளுமளவி
னிலிவன், விறல்புனைந்தகைத்திகிரியையொழியமுன்வினையழிந்துபற்றலர்முது
கிடவிழு, திறல்விளங்குபொற்கதைகொடுவிரைவொடு திருகிநின்கதைக்கிதுக
தையென்னவுரை, யுறவிளம்பியப்பொருகளமுழுவதுமுருமெறிந்ததொத்துவகை
யொடதிரவே. (உ00)

* சினவுசிங்கமொத்திருவருமுறைமுறைதிருகிவெஞ்செருப்புரிதலினெழுமொ
கனல்வனைந்துசுட்டனிலமுமெறிதருகடலதிர்ந்தெனக்கனமதிர்வனவென [வி
மினல்பரந்தெழத்திசைகளின்முடிவுற வெடிகொளண்டபித்தியுமுடைதரவெழ
மனமழன்றுபொற்கிரிநிகர்தமபுயவலிமைகொண்டடற்றினர்வயமலியவே. ()

* உரியசிந்துவுக்கரசனதிருபுயமொடியவென்புநெக்குடன்முரிதரவுட [ற
னெரியவெங்குடர்க்கொடிநெடுவளையமு நிமிரவன்றுருடைப்புடைமிடைநடையு
வரியகண்கனற்பொறியெழமணிமுடியழகழிந்துபொற்பிதிர்படவுதிர்பட [வே.
வெரியெழுஞ்சினத் தொடுதனதொருகையி னிலகுதண்டமிட்டிகலுடனெறிய

* வசையறும்புகழ்க்குருகுலதிலகனை மருதிரண்டொடித்தவர்திருமருக
னை, விசயன்மைந்தனைப்பனைமுகின்மிசைவருவிபுதர்தங்குலத்ததிபதிபெயர
னை, யசைவில்வன்றிறற்பகைமுனைநிருபரை யடையவென்றகட்டழகுடையபி
மனை, யிசைகொள்சிந்துவுக்கரசனுமொருகதையிருகைகொண்டெடுத்திகலுட
னெறியவே. (உ0ங)

* கரமிழந்தமற்றொருகரமிசையொருகதைகொள்வெஞ்சினக்களிறனையவனிவ
னிரதமுந்தகர்த்துறுகதியுடன்வருமிவுளியுந்துணித்தெதிர்முனைவலவனை
முரணுடன்புடைத்துணிதுவசமும்விழமுதுகுகண்டபிற்சரபமதெனும்வகை
யரன்வழங்குபொற்கதையுடனவனியிலவனுமுன்குதித்தடலுடன்முனையவே.

* பதயுகங்கனொத்தியவலிபலகணபணபுயங்கர்பற்பலமுடிசிதறின [ன
வெதிர்கொடண்டமொத்தியவலிதிசைகளி லிபமுநின்றுமெய்ப்பிடியொடுசிதறி
கதியில்வந்தசித்திரமெனமுறைமுறைகதுவிமண்டலித்தொருபகன்முழுவது
மதிசயம்படப்பொருதனரெதிரெதிரபிமனுஞ்சயத்திரதனுமமரிலே. (உ0ரு)

* உலைவிறண்டினிற்பரிசனன்மதலையு முவமையின்றெனப்பகழியின்மழைபொ
சிலையின்வன்றொழிற்றிறலுடைமகபதிசிறுவனுந்தனக்கெதிரிலனினியென [ழி
மலையும்வெஞ்சமத்தொருதனிமுதுபுயவலிமைகண்டுபொற்புறுகழலபிமனை
யலைநெடுங்கடற்றரணிபரனைவருமமரருந்துதித்தனர்முகடதிரவே. (உ0சு)

* கழுகுபந்தரிட்டனமிசைவிசைபொடுகழுதினங்களிட்டனபலகரணமு
மெழுகவந்தமிட்டனபலபவுரிகளிருபுறங்களிட்டனவெதிரழிபடை
யொழுகுசெம்புனற்குருதியின்வருநதியுததியுஞ்சிவப்புறும்வகைபெருகலின்
முழுகியெஞ்சியிட்டனசுழியிடையிடைமுகிலின்வெங்குரற்கசரததுரகமே. ()

* முறைமையின்றியெத்தரணிபர்களுமெதிர் முடுகவந்துமுற்றெறுதலின
வரவர், பொறையழிந்துகெட்டனைவரும்வெருவொடுபுறமிடும்படிக்கொருதனி
பொருதபி, னிறைவலம்புரித்தொடைகமழ்புயகிரிநிருபதுங்கன்மைத்துனனு
ளம்வெருவர, வறைபெருங்கதைப்படைகொடுவலியுறவமர்புரிந்திளைத்தனன
டலபிமனே. (௨௦௮)

மறமெழுந்தசெவ்விழிகளுமிளநகைமருவுசுந்தரவதனமுமிருகுழை
நிறமெழுந்தணிமகுடமுமொளிதரநிலமடந்தைதன்மிசைதுயில்தருதலி
னறமெழுந்தசிந்தையினிளவறன்மகனபிமனங்கிறந்திருகனலளவையுந்
திறமெழுந்தமன்னவராருகணைகிலர்திருகியுய்ந்தெழுந்துயிர்கொளுமென்பதால்

* இவன்மயங்கிமெய்த்தளர்வுடன்மெலிவுறுமிறுதிகண்டினித்தெறுவதுக
டனென, வவனிகொண்டபற்குனன்மதலையையவனருகுவந்தடுத்தணிபுயவலி
கொடு, சிவனையஞ்செழுத்துரைசெய்துதொழுதொருசிகரதண்டம்விட்டெறித
லினெறிதரு, பவனனன்றுகுத்தினகிரியெனவிசைபடவிழுந்ததப்பருமணிமகு
டமே. (௨௧௦)

* தலைதுணிந்துதத்திடவிழவிவனொருதனதுதிண்கையிற்கதைகொடுதரியல
னிலையறிந்துபுக்குரனுறவெறிதலினெரிநெரிந்ததத்தரணிபனுடலமு
மலைமறிந்ததொத்தபிமனதுடலமுமகிதலந்தனிற்றரியறவிழுதலி
னலையெறிந்துமைக்கடல்புரளுவதெனவரவம்விஞ்சியிட்டதுகளமடையவே. ()

வேறு

உலகனைத்துங்கதிர்பரப்பிமாலைதனிற்றினகரன்சாய்ந்தொடுங்கலென்ன
விலகியகானகமுழுதுமுருக்கியதீகொதிப்பாறியிருந்தலென்ன
வலகறுவாகினிபிளந்தங்கதிரதரைப்புறங்கண்டவரியேறன்னான்
நிலவுமிழுமிளம்பிறைவான்வழுவிவிழுந்தெனக்கிடந்தானிலத்தினம்மா. (௨௧௨)

* மாயனுந்திருமாமன்றனஞ்சயனுந்திருத்தாதைவானோர்க்கெல்லா
நாயனும்பிதாமகன்மற்றொருகோடிநராதிபராநண்பாய்வந்தோர்
சேயனுமபிமனுவாஞ்சயத்திரதன்கைப்படுவான்செயற்கைவெவ்வே
றுயநாளவனிதலத்தவ்விதியைவெல்லும்வகையார்வல்லாரே. (௨௧௩)

எண்ணீர்மையுடையாசானிரவிசுதன்பலகோடியேமத்தேரோர்
மண்ணீர்மைதவிர்ந்திகலியொருபுதல்வனுயிர்மாய்த்தார்வசையஞ்சாதே
தண்ணீர்மைப்பேரளியுஞ்செங்கோலுமனுமுறையுந்தவிர்ந்ததென்றே
கண்ணீரைமிகமல்கக்காவலர்பற்பலர்கரைந்துகழறலுற்றார். (௨௧௪)

* சேடன்முடிநெளியவருசெம்பொற்றேரழிவதோவந்தோவந்தோ
கேடகம்வாளணிவலயக்கிளர்புயத்தோளறுவதோவந்தோவந்தோ
கூடகவெங்கதையொன்றாற்சிந்துபதிகொல்வதோவந்தோவந்தோ
வாடமரிலருகொருவர்வாராமலிருப்பதோவந்தோவந்தோ. (உகரு)

* கன்னனையுந்தேரழித்தான்கந்தனிலும்வலியனேயந்தோவந்தோ
மன்னவரைவருமிருக்கமைந்தனுயிரழிவதேயந்தோவந்தோ
பொன்னுலகோர்வியந்துருகிப்புந்தியினுன்மலர்பொழிந்தாரந்தோவந்தோ
வன்னநெடுந்துவசனிவற்காயுமிகக்கொடுத்திலனேயந்தோவந்தோ. (உகசு)

* சரமறுத்தான்வில்லறுத்தான்றேரறுத்தான்கொடியறுத்தான்சமரபூமி
யுரமறுத்தான்முதற்பொருதவுதயதினகரன்மைந்தனுடன்றுசீறிக்
கரமறுத்தானடுப்பொருதகார்முகத்தின்குருவிசயன்காளைதன்னைச்
சிரமறுத்தான்பின்பொருதசயத்திரதனிவன்வீரஞ்செப்பலாமோ. (உகஎ)

* எட்டானைத்தம்பமுடன்சயத்தம்பநாட்டியபோரிறைவன்மைந்தன்
பட்டானென்பதுகேட்டுத்திருகினார்முதுகிட்டுப்பறந்தவீர
ரொட்டாமற்செயிரமரிலுயிரிழந்ததன்புதல்வற்குருகுஞ்சோகம்
விட்டான்வெஞ்சமரமினிவென்றோமென்றுட்கொண்டான்வேந்தர்வேந்தன். ()

* ஓரிரண்டுவயவர்முனைந்துடன்பொருதலுலகியற்கையொருவன்றன்மேற்
போரிரண்டுபுறமும்வளைத்தொருகோடிமுடிவேந்தர்பொருதுகொன்றார்
தேரிரண்டுகிடையாதகுறையன்றேகளத்தவிந்தான்சிறுவனென்றென்
றீரிரண்டுபெயரொழியமற்றுள்ளாரழுதிரங்கியென்பட்டாரே. (உககூ)

* தாள்விசயம்பெறமுனைந்துசக்கரயூகம்பிளந்துதானேநின்று
வாள்விசயன்றிருமதலைவானோரும்வியந்துரைக்கமாய்ந்தானென்று
வேள்வியினாலுண்மையினாற்றிண்மையினாற்றண்ணளியால்விறலாற்பன்னூற்
கேள்வியினான்மிகுந்தெவர்க்குங்கேளானவுதிட்டிரனுங்கேட்டானன்றே. ()

* பிறந்ததினமுதலாகப்பெற்றெடுத்தவிடலையினும்பீடுந்தேசுஞ்
சிறந்தனையென்றுனைக்கொண்டேதெவ்வரைவென்றுலகாளச்சிந்தித்தேன்யான்
மறந்தனையோவெங்களையுமாலையினல்வளைப்புண்டுமருவார்போரி
லிறந்தனையோவென்கண்ணேயென்னுயிரேயபிமாவின்றென்செய்தாயே. ()

* தேனிருக்குநறுமலர்த்தார்ச்சிலைவிசயனிருக்கவரைத்திண்டோள்வீமன்
றானிருக்கமாநகுலசாதேவர்தாமிருக்கத்தமராய்வந்து
வானிருக்கின்முடிவானமரகதமாமலையிருக்கவாழ்வானெண்ணி
யானிருக்கவினையறியாவிளஞ்சிங்கமிறப்பதேயென்னேயென்னே. (உஉஉ)

* நின்றனையேயெனைக்காத்துநீயேகென்றியானுரைப்பநெடுந்தேரூர்ந்து
சென்றனையேயிமைப்பொழுதிற்றிகிரியையுமுடைத்தனையேதெவ்வரோட
வென்றனையேசுயோதனன்றன்மகவுடனேமகவனைத்தும்விடங்காலம்பிற்
கொன்றனையேநின்னுண்மைமீண்டுரைக்கக்கூசினையோகுமரரேறே. (உஉங)

* உனக்குதவியொருவரறவொருதனிநின்றமருடற்றியொழிந்தமாற்றந்
தனக்குநிகர்தானனதனஞ்சயனுங்கேட்கினுயிர்தரிக்குமோதா
னெனக்கவனிதரவிருந்ததித்தனையோமகனேயென்றென்றுமாழ்கி
மனக்கவலையுடனழிந்துமணித்தேரின்மிசைவீழ்ந்தான்மன்னர்கோவே. ()

* சங்கலாரிடைவளைத்தசக்கரத்தையுடைப்பதற்குத்தமியேனெய்தி
யங்குலாவருமிரதத்தரசரையுந்தொலைத்துன்னையடுப்பான்வந்தேன்
பங்கெலாமரகதமாம்பவளநிறப்பொருப்புதவும்பைம்பொற்கொன்றைத்
தொங்கலாற்கோறுவித்தசூழ்ச்சியையின்றறிந்திலனேதோன்றலேநான். ()

* மின்னுமவிடித்ததெனவீழ்த்தபொலங்தொடையாலும்விடையோனீந்த
பொன்னூர்வெங்கதையாலுமல்லதபிமனையமரிற்பொரவல்லார்யார்
தன்னுண்மைநிலைநிறுத்திச்சங்கமுழக்கியவீரசிங்கசாப
வென்னுனையிறந்துபடவின்னமுநானிவ்வுயிர்கொண்டிருக்கின்றேனே. (௨௨௬)

* எடுத்தபடையனைத்தினுக்குமெதிரில்லையெனக்கலைகளெல்லாமுன்னே,
யடுத்ததுகண்டையாநின்னுருயிர்க்குக்கரைந்துகரைந்தையுற்றேன்யான், விடு
த்தபெருந்திருத்தாதைவிழிகளிப்பப்பகைவென்றுமீளாதென்னைக், கெடுத்த
னையேபிழைத்தனையென்றினியொருவர்வந்துரைக்கக்கேளேன்கொல்லோ. ()

* என்றென்றுவீமனுந்தன்னிளையோருமழுதரற்றவிறந்தோன்வீர
நன்றென்றுதளமிரண்டினரபாலர்பலர்திரண்டுநவிலாநிற்ப
வன்றென்றுமனமருளூற்றபிமனடுதலைக்குன்றையடுத்துமேலைக்
குன்றென்றுதடுமாறிப்பின்னையும்போய்த்தனதுதடங்குன்றுசேர்ந்தான். ()

சிந்துபதியபிமனுயிர்தீர்ந்ததுகேட்டிரவிவிழுஞ்செயலுநோக்கி
யுந்துதமதனிகமுடனுறமீண்டானுதிட்டிரனுமுரவோர்யாரும்
வந்துயிரைக்களத்துகுத்துமடங்குடல்களெனப்புகுந்தார்மருவுபாடி
யிந்துமுடித்தவன்வரத்தாலிபமடங்கல்களைவென்றதெண்ணியெண்ணி. (௨௨௯)

மைத்துனனையெதிர்தழுவிவலம்புரித்தார்க்கொடுமன்னன்மைந்தராரும்
பொய்த்திறந்ததுன்புணரான்போரபிமன்படுமகிழ்வாற்புயங்கள்விம்ம
வித்தகவெஞ்சிலைக்குருவுமேனையருமுடன்வரப்போய்விளங்காநின்ற
குத்திரவெம்பாசறையிற்குறுகினன்மேனிகழ்வொன்றுங்குறிக்கலாதான். ()

இதுநிற்கவிராடனுடனியற்றுருபதன்குமரனேனைவேந்தர்
மதுநிற்குமலர்மாலைமாயனிளவலையாதிவயவராரும்
விதுநிற்கவுடன்வளையுந்தாரகையிற்புடைசூழ்ந்துவெம்மையாற்ற
வெதுநிற்குமினியுலகினெறியெனவேயுதிட்டிரனின்றிரங்குமேல்வை. (௨௩௧)

செய்யசடைமுடிப்பொலிவுமரவுரியுங்கமண்டலமுந்திகழவோரேழ்
வையமெலாம்புகழ்ந்தேத்தும்வாதராயணனெதிரேவருதலோடும்
பொய்யறுநல்லுளத்தோனுமேனையருமெழுந்தெதிர்போய்ப்பணிந்துபோற்றி
மையறுநற்றவிசிருத்திவழங்குகடனியற்றியவன்மருங்குசூழ்ந்தார். (௨௩௨)

அடுத்ததிறலினர்தமக்கங்காசிபுகன் றறன்மகனையருளானோக்கித்
தொடுத்துனதுமனத்துன்பமென்னையெனவபிமனுயிர்சோர்ந்தவாய்மை
யெடுத்துரைப்பமேலவிதியிவ்வண்ணம்புரிந்ததலாலெவரேகொல்வோர்
தடுத்தரியபுலன்களைநல்லறிவுவழிசெலுத்துநறுந்தாரோயென்றான். (உ௩௩)

ஆயுவெனுமோர்கணக்காலுயிரனைத்துமிறந்தவியுமதற்குமுன்பின்
மாயுமெனமதித்திடுதலுளகொல்லோவயனமைத்தவாறிங்காமாற்
காயுமுமதொருமதலைகாதியனைவரையுமடல்காட்டிவீட்டித்
தேயுவெழுவொருவீரத்தெரிவைமணஞ்செய்துகெதிதிளைத்தான்மன்னே. ()

மகங்கள்பலபலவியற்றிவான்றவங்கள்புரிந்தான்கள்வழங்கித்தங்க
ளகங்களறன்வழுவாமனெடுங்காலம்பயின்றவற்குமனுகாப்பெற்றி
நகங்கொள்புயத்தீருமதுசிறுவனனுகினனிதினுகன்மையாதோ
வுகங்கள்பலவொழியினுமாங்கவன்பெற்றவுயர்கதிகட்கொழிவின்றுமால். ()

குலத்துரிமையிறந்தவற்குக்கோடாமைவாடாமைவென்கொடாமை
சலத்துரிமைதவிராமையுடலணங்குகாணுமைதக்கதாமா
விலத்துரிமையுடையரசர்நிகழ்த்தியவாறனைத்துமுணர்நிருபவென்ன
நலத்துரியவறன்காளைதுன்பமெனுமனலவித்துநவில்வதானுன். (உ௩௬)

ஏழுலகுபுரந்தவனுமூவுலகுபுரந்தவனுமிமையோரேத்த
வாழுலகுபுரந்தவனுமிருந்தியற்றுமரசியலின்மாய்ந்தாரன்றே
தாழுலகின்மானிடருமேனையுயிர்களுமவராற்றவிர்க்கவேண்டி
லாழுகலகிறுவுதலாங்கவர்க்கரிதன்றவர்நினைப்பென்னுரைப்பாயென்றான்.

ஆரணமாமுனிபுகல்வானவனிமுழுதொருகவிகைநிழலிலாண்ட
வாரணநன்மனுமுதலோர்மாற்றரிதாமிம்மிருத்துமாயையென்றே
பூரணநல்லறிவினிடைப்பொருத்துதிபோங்கொருகாதைபுகல்வன்வாயுங்
காரணமீயுணரும்வகையெனவெடுத்தான்முக்குறும்புங்களைந்தமேலோன். ()

வேறு.

பவளநிகர்வாயிதழ்படைத்தகலைமாதைத்
துவளுமறைநாவிடைசுமந்துடையதூயோன்
கவளமதயானைபரிகாசினிபடைத்தே
திவளுமுயிர்கல்கின்முறைப்படிசிருட்டி. (உ௩௯)

நல்குமுயிர்நாடொறுமிகுந்துபுவியெங்கு
மல்குவதலாலிறுதிவாய்த்திலமதித்தே
பொல்குபுகொசிந்தவிடையோர்புவிமடந்தை
வெல்கழல்கொளந்தணனைமேவியிதுசொல்வாள். (உ௪0)

சொற்பமலவாருயிர்சுமக்கவரிதாநின்
கற்பனையிலென்னையிதுகாதுமுறையென்ன
வுற்பவமியற்றுமவனோர்ந்துதடுமாறி
நிற்பவவனிந்திரியமுய்த்தனனிலத்தில். (உ௪க)

ஆலமெனவேயுயிரடும்பரிசுகண்டே
யோலமெனவேமறைகளோருமுமைநாதன்
சூலமெனமூன்றுவிழியோடுமெதிர்துன்னிச்
சீலமெனநின்றபிரமற்கிதுதெரித்தான். (உசஉ)

காசினியளித்தவனுநீயுயிர்கலக்கின்
மாசினியெவற்குறுமறுத்திடுதியென்னப்
பேசினமடக்கொடிபெரும்பரமகற்ற
வாசிநடையாவிரகறைந்திடுதியென்றான். (உசங)

நின்னிலெழுவீரியநிலத்திலொருபெண்ணைய்
முன்னுறவழைத்தவண்முடிக்கும்வகைகூறிற்
றன்னிலைமைகூடுமெனவோதுபுதணைந்தான்
மன்னிலவிருந்தசடைமாமுடிபுனைந்தோன். (உசச)

சூத்திரமுணர்ந்துயிர்துரந்தகனறன்னை
மாத்திரைதவிர்ந்திடுமுன்மங்கைவடிவாக்கித்
தீர்த்தனருகாய்நிறுவினன்பகர்செகத்திற்
சாத்தவமிருத்துவெனுநாமமதுதந்தே. (உசரு)

அன்னவளைநீயுயிரடங்கலும்வதைத்தே
மன்னுதொழிறந்திடுதியென்னலுமறுத்தாள்
முன்னவனவட்கினிமைபேசிவிடமுந்தி
நன்னிலமதிற்பெரிதுநாடவமுயன்றாள். (உசசு)

தண்கமலமீதிலுறைதந்தையெதிரெய்திப்
பெண்கொடிதனக்கினியபெற்றிகளளித்து
மண்கடைபிறக்குமுயிர்மாற்றுதொழிறந்தே
னெண்கருதிலைக்கடிதியற்றினிதினென்றான். (உசஎ)

வாசமுறுமாமலரிணையடிவணங்கி
நேசமுறுபெண்கொடிநினைத்திதுகுறித்தாள்
பாசமுறுநல்லுயிர்படுந்துயரிரங்கா
நாசமுறுவிக்கும்வகைநான்றுணிகிலேனே. (உசஅ)

தாயழவரும்புதல்வர்தானழவளித்தோன்
போயழவருந்துணைவிபொங்கியழவெண்கண்
டீயெழமுனிந்துயிர்செகுத்தவனிவாழேன்
மீயழலினிற்றனதுமெய்விடுவனென்றாள். (உசகூ)

வல்லியையுவப்பொடுமதித்திதுகுறிப்பான்
சொல்லியவுனக்கொருதுவக்குமிலைநின்னை
வல்லவர்துதிக்குமுறைவைத்தனன்வழக்கிற்
புல்லியபடிக்குயிர்பொறுத்தகலுமாறே. (உருo)

ஆயுமுறையாகவுடனேபிணியனேகஞ்
சேயவுடலிற்கதுவல்செய்வனதனாலே
மாயுமுயிரென்றுனைவழக்கமுறுவிப்பன்
றீயதலீயிதுசெலுத்தெனவுரைத்தான். (உருக)

அன்றுமுதலாயுவினையற்றமுறநோக்கி
நின்றிடுமரும்பிணிகணோரலர்களாகி
வென்றிடும்விழுங்குமதைவேறொருயிர்மாறு
வின்றிஃதெலாமவளியற்றுதொழில்கண்டாய். (உருஉ)

அவ்வணமமைந்தனண்மிருத்தெனுமணங்கு
செவ்வணன்முதற்றனிசிருட்டியனிருந்தா
னிவ்வவனியின்பரமகற்றிவண்மகிழ்ந்தா
ளெவ்வுயிர்களேனுமழிவெய்தலிலருண்டோ. (உருங)

எண்ணரியகொற்றவருமேற்றவிமையோரு
மண்ணுலகுமன்னுயிருமாறுதல்வழக்கே
தண்ணலரிருந்தவனுமாயுமுறைதாழ்ந்தா
னண்ணுமுடல்விட்டெனநவின்றதுணராயோ. (உருச)

ஆகவிதனாலெவருமாயுவையடர்த்தென்
னாகமிசைமண்ணின்மிசைநண்ணினர்களின்றுற்
சோகமினிநீங்குனதுதோன்றல்கதிபுக்கான்
பாகனொடுமென்றிதுபணித்தனன்வியாதன். (உருரு)

வேறு.

சுருதிதேர்ந்தவனுரையெலாந்தூயவன்றேர்ந்து
கருதிவாசகமீளவுங்கட்டுரைத்திட்டான்
குருதிவேற்சுவணெட்டிவீய்ந்தெழுந்ததுகுறிப்பா
ரொருதிறத்தினுமுய்ந்தவரிலையெனவுரைத்தாய். (உருசு)

என்னையென்றவனிருகரமுகிழ்த்துரைசெய்த
மன்னைநோக்கியேவகுத்தனன்காலமூன்றுணர்ந்தோன்
முன்னையோதியமிருத்துவுமுடிவுகாலத்திற்
றன்னையெய்தினுந்தவிர்வுறுதிடைபுகிற்றவிரும். (உருஎ)

அனையவன்பெருங்காதையைமொழிகுவனறத்தின்
றனையகேட்டியென்றருள்விளித்தாபதனுரைத்தான்
மனையறம்பழுதாமெனமாற்றியோரிரண்டு
வினையனீங்கியவிமலனையளித்தருண்மேலோன். (உருஅ)

அகம்பழுத்தசஞ்சயன்முறையறந்தவாவண்ணஞ்
செகம்புரந்தனன்சந்ததிசெறிந்திலாமையினான்
மகம்பயிற்றிநாரதனருள்வாய்மையாற்பன்னா
டகம்பரன்வழிபாடுசெய்திருந்திடுநாளில். (உருகூ)

கருதுநாள்பலகழிந்தபின்காவலனன்பாஞ்
சுருதிதேர்ந்தநாரதனருந்துணையடிசூடி
யொருதினந்தனக்குதித்திலன்சிறுவனென்றுயிர்த்தான்
மருதிடந்தவன்றனைநிகர்மாமுனிசொல்வான். (உசுo)

கருத்திலுள்ளவாறுரைக்குதியவ்வணங்கலந்த
வொருத்தனன்மகவுதவுவனென்னலுமோர்ந்து
பெருத்ததேசுநல்வலியுநல்விரணியப்பேறு
மருத்தியாயுளபுதல்வனையளித்தியென்றிரந்தான். (உசுக)

அன்னவாசகப்படிமகவனுகுமென்றறைந்து
சொன்னவீணைமாமுனிதனதிருக்கைபோய்த்தொடர்ந்தான்
மன்னவன்றனித்தேவிதனுதரத்தில்வாய்த்துக்
கன்னலிற்படுதரளமொத்துதித்தனன்காளை. (உசுஉ)

உதித்தவன்மலஞ்சொரிதருகனகங்கண்டுவரி
மதித்தமந்தரமெனப்பொலிவெய்தலுமகிழ்ந்து
கதித்துறுஞ்சுவணடியெனவவன்பெயர்காட்டி
விதித்தநற்செயல்புரிந்துகந்திருந்தனன்வேந்தன். (உசுந)

பொய்யறும்பெருங்குதலைவாயரசிளம்புதல்வன்
மையறும்பிறைவளர்ந்தெனவளர்ந்தருமறைகள்
செய்யநற்கலைதெளிவுறுநாள்களிற்றிருடுங்
கையர்வந்தருங்காளையைக்கவர்ந்தனர்கரவில். (உசுச)

நிரந்தரந்தருமாடகமெனுமொழிநிலத்திற்
றிரந்தரும்படியொலித்தலாற்சிறுவனைவதைத்து
வரந்தருங்கொலைவயிறுகீண்டுறுகுடர்மாற்றிக்
கரந்தரும்பெருந்திரவியநேடினர்காணர். (உசுரு)

வாசிதேர்கலாரப்பெரும்புதல்வனைமண்ணில்
வீசியேகினர்வேந்தனுமைந்தனைநேடிக்
கூசியெங்கணுந்திரிதலிற்களேபரங்கொணர்ந்தார்
காசியம்புனற்கரைதனிற்பரிசனர்கண்டே. (உசுசு)

வெய்துயிர்த்திளமைந்தனைவேந்தனுநோக்கிச்
செய்தரக்கனன்முறைப்படிவிதிவழான்செறித்து
மெய்தரக்கடனியற்றியேமீளவுநகர்போய்
வைதிகக்கடல்கண்டவன்மாளிகைபுகுந்தான். (உசுஎ)

அழுதுதேவியுந்தானுமாயருந்துயர்படிந்தே
பழுதுவந்ததென்றுகுலப்படுமொலிகேளா
விழுதுநேர்சடைநாரதன்விரைந்தெதிரடைந்தான்
றெழுதுமைந்தனுக்கடுத்தவாறனைத்தையுஞ்சொன்னன். (உசுஅ)

ஞானவேதியனவனிருநயனநீர்மாற்றிப்
போனவாருயிர்மீளுமோபொருமனீயென்னத்
தானகன்றிலாப்பெருந்துயர்தணிவுறவவற்று
மோனமாமுனியோர்பெருந்தன்மையைமொழிவான். (உசுகூ)

வேறு.

உற்பலவாள்விழியுமையாள்கணவன்வந்தேயுபயதிருட்டியினோக்கவும்பர்க்கெல்லா, மற்புதமாம்படிபாலெனய்தயிர்களொரேழாழியெனப்பெய்துமகமெண்ணின்முற்றிப், பற்பலவாடகங்கணவமணிகளொரேழ்பருப்பதம்போற்குவித்துமறையோர்கட்கீந்த, நற்பரமஞானியுலகுயிர்காத்தோம்புநரபதியாமருத்துவிறந்ததுகேளாயோ. (உஎ௦)

வருடைகமடங்கள்கராமலவன்மேனிமாழைமழையாண்டாண்டும்வருணனல்கப், பொருடனிலிச்சைப்படுவோர்க்குதவியெண்ணில்புரவிமகமுதலானபயின்றுமண்மே, லருடருமாருயிரனைத்துங்காத்துநல்கியறந்திறம்பாதமரருநான்மறையோர்யாரும், புருடசிலாக்கியனென்னுஞ்சுகேத்திரப்பேர்புனைந்தநரபதியிறந்தபுணர்ப்போராயோ. (உஎக)

கழைசுளிகிம்புரிக்கோட்டுக்கரடவெங்கட்களிறயுதங்கதிசாதிகுணங்கள்வண்ணம், பிழையுணராப்பரியிலக்கமானகோடிபெண்மைவழாமடந்தையர்களனந்தநல்கி, விழைவுறவானவர்க்கெல்லாமகங்களாற்றிவேதியர்க்குமாதுலர்க்குநிதிகண்மேன்மேன், மழைமுகில்போனிரந்தரமுஞ்சொரியுநங்கன்வானகத்திற்சார்ந்தகதைகேட்டிலாயோ. (உஎஉ)

சொரியுமழைத்துளிக்கேனுமிலக்கமோர்ந்துதொகுத்திடினுமவனுதவுந்தூயவான்கட், குரியதொகைபுகலரிதேழ்தீவுந்தன்றேரோட்டியரிகளைவாட்டியுயிர்களிட்டிப், பரியின்மகமுதலாயவேள்விநூறும்பரமனருள்பொருள்கொண்டேபயிற்றியாருஞ், சரியிலையிங்கிவர்க்கென்னவுலகமாண்டதராபதியாஞ்சிபியிறந்ததாழ்கேளாயோ. (உஎங)

தன்றந்தைவாய்மைபுரந்திடுவான்வையந்தணந்துவரியுலகுணரச்சேதுமுற்றி, வென்றந்தேயசுரரெலாமாயவாளிவிடுத்தீரேழாண்டகற்றியயோத்தியெய்தி, முன்றந்தபல்லுயிருந்தான்றந்தாற்போன்முறைதவறுநெறிகாத்துமகங்களாற்றி, மின்றந்தவழல்வேலோர்பணியவாழ்ந்தவேந்தனிராமனுமிறந்தவிதந்தேறாயோ. (உஎச)

மூதாதைமார்கதியினெய்தவேண்டிமுடிகவிகைதுறந்துதவமுற்றிக்கங்கை [க்கி
மாதாவினுலகோம்பக்கொணர்ந்ததன்பேர்வாய்த்தபகீரதியெனவேமண்ணிலா
மீதானத்தவர்க்கெல்லாமகங்களோம்பிவிருந்தாற்றிக்கரிபரிதேர்மாதரான்கள்
பூதானமுதலாயெண்ணிரண்டுநல்கிப்புரந்தபகீரதனெங்கேபுகலாய்மன்னே.()

கந்திருவர்தமக்கிறைவர்கானம்பாடக் ககனவரம்பையர்பரதநடனங்காட்ட, வந்தமரர்புடைசூழமுனிவராசிவழங்கியருந்துதிசெய்யப்புரவிமேதந், தந்துபலமுடித்ததற்பின்ருெடுத்துவிட்டசடிலமகவானிரம்பத்தந்துமண்மே, லந்தணற்குப்பலபொருளும்வழங்கிவேந்த ரடிதொழவாழ்திலீபனெங்கோ வறைகிலாயே. (௨எசு)

அறனுயருந்தந்தைவயிற்றுதித்தங்கிராருண்டின்முடிபுனைந்திரவிபதிவுகானுங், திறனுடையவுலகனைத்துங்கவிகைநீழற்செறித்துலகினுள்ளவர்கட்கன்னஞ்சொன்ன, நிறனுடையாடகக்கிரிபோற்குவித்தேதானநிரந்தரமீந்தரிமகங்கவிராயசூய, மறனுடனேபலபுரிந்துநீதிகாத்தமாந்தாதாவெங்கடைந்தான்வகுத்திடாயே. (௨எஎ)

சுராசுரர்களடுபோரிற்சுரர்க்குத்தானுந்துணைப்படையாய்வயமளித்துப்புவிமேல்வாழுஞ், சராசரங்கடழைக்கமனுநீதிகாத்துத்தகுமக்கினிட்டோமம்வாசபேயம், விராவுமயமேதமுடனிராயசூயம்விளங்குதிரிராத்திரபவுண்டரீகந், தராபதிகண்மெச்சுமுறைபுரியயாதிதானெங்கேயானுணரச்சாற்றுவாயால். ()

பலதேயங்காத்தளித்தவேந்தராரும்படையெடுத்திங்கிவனுடமர்புரியுங்காலே, மலதேகம்பொருள்செய்யானடுபோர்முற்றிமன்னரெலாந்தனைவணங்கவாகைசூடி, நிலதேவர்களிக்கவநிதிகனல்கிநின்மலவானவர்க்கவிகணோர்ந்துகேழ்ழ், பிலதேவரும்வியப்பவகிலங்காத்தபிரானம்பரீடனெங்கேபேசுவாயே.()

ஓரிலக்கமடமாதர்குயந்தோய்ந்தெண்ணிலோர்குமரர்தமைநல்கியுவப்பினுலே, சீரிலக்கமறச்செங்கோல்செலுத்துநாளிற்சிறுவரெலாந்தனித்தனியேயயமேதங்கள், நேரிலக்கமறமுடிப்பநிதிகளார்க்கும்நிரம்பும்வகைதந்துலகினேராரென்னப், போரிலக்கமுன்னவனுக்கதிகனென்னப்புவிபுரந்தவிந்தனெங்கேபுகலுவாயே. (௨அ௦)

வெங்கனல்வானவனடியைவிரும்பிநோற்றுமேலவன்முன்னின்றளவில்வியந்துநாளு, மங்கையரைத்தொடாதுறுதிசாந்தம்வாய்மைவலியொடுநற்றுனமவன்வரத்திற்பெற்றே, கங்கைதனைத்தொழுதுமுப்பத்தாறுகாதங்கரையதனிற்சாலைபுரிந்தறங்களாற்றி, யங்குவடவிருக்கமுடன்கயையுந்தன்பேராற்படைத்தகயனெங்கேயறைதிமன்னே. (௨அக)

தினமிருபத்தைந்துசகத்திரம்பூதேவர்செயவமுதுமீதேவரசேர்ந்துநாளுங், கனன்முகத்தினுருவோடுமவிகடுய்ப்பக்காவலர்கள்பணிந்தேவல்கேட்பவெண்ணில், தனமருத்திபெறவுதவியெவருஞ்செய்யச்சத்திரயாகம்பயின்றுபுகழ்கைக்கொண்ட, மனமிகுத்தமகிமையினினேராவாய்மையந்தித்தேவானெங்கே வகுத்திடாயே. (௨அ௨)

என்னுமரும்புலிசிங்கஞ்சரபமாதியெதிர்ந்தவெலாம்பிடித்தேறியிழிந்து தூய, கன்னுவர்தம்பியினமதில்வளர்ந்துஞாலங்கைக்கொண்டுகாளிந்திகங்கையோடு, நண்ணுசரச்சுவதிநதிக்கரையினெய்தி நாடோறுஞ்சதமகமும்பயின்று மண்ணும், விண்ணுமகிழ்ந்திடப்பரதனெனப்பேர்கொண்டவெந்திறல்வாய்மையைநீவினவிலாயோ. (உஅ௩)

மேடுபடுபுவிநோக்கித்தாழ்வுநோக்கிவிரைந்துதனித்தேருருளாற்சமானமாக்கிக், காடுபடுமிடங்களெலாநாடுண்டாக்கிக்கனகிரிகள்கோமுகம்போற்கவினநீக்கி, யேடுபடுநறுந்தெரியல்விண்ணோர்க்கெல்லாமியற்றிமகநவநிதியுமிரந்தோர்க்கீந்து, தோடுபடுவிதனதுபெயராற்கூறத்தோன்றுபிருதுவுமுடலஞ்சோர்ந்திலானே. (உஅ௪)

செய்யவிழியருச்சுனன்றன்றுதைதமேனிசிதைத்தனனென்றுலகினுளதேயவேந்தர், பொய்யெனவேதுணித்தகற்றியுலகுமுற்றும்புரந்துமறைகாசிபற்கேதானநல்கி, மெய்யுறுகாசினியெனும்பேர்புவிக்கிநல்கிவிறன்மகங்கள்பலபுரிந்துவிடுத்துநீத்த, மையறுகூர்மழுவாளிவிதிவசத்தால்மாய்ந்தானேன்மீண்டெழுந்துவருமோசொல்லாய். (உஅ௫)

ஒன்றுரைப்பக்கேளுலகினுருவுண்டாமேலொழிவுண்டென்றுணர்திநென்னுயிர்நீத்தோர்கட், கின்றுதமதுயிர்நீப்போரிரங்குந்தன்மையென்னேயென்றறியமுனியெடுத்துத்தேற்றக், துன்றவிருகரங்கள்முகிழ்த்தரசன்சொல்வான்சொற்றநராதிபர்க்குநிகர்சொல்வதாற்றேன், குன்றனையாய்க்கரவருயிர்கொள்ளமைந்தன்கொடுநரகோபுகுவனெனக்குலேகின்றேனே. (உஅ௬)

என்னவவனியம்புதலும்வீணைவல்லோனிதுகருத்தேனின்மகவையீவனென்று, பன்னியகன்றெருகடிகையகலாமுன்னம்பாழ்நிரையத்துறுமவனைமீட்டுநல்க,மன்னனுளமகிழ்ந்தவனைவணங்கிப்போற்றிமாநிலமற்புதமடையவாழ்ந்தானந்தக், கன்னன்மதனிகர்புதல்வன்வரைந்தெண்ணில்லாக்கனல்வளர்த்துப்புரந்துபுவிகதிசேர்ந்தானே. (உஅ௭)

ஆதலினுலிவ்வுலகிற்றுன்பமன்றியணுகாதுநல்லின்பமகிலத்துள்ளோர்,மீதலமேகருதுதலக்கருத்தின்வண்ணமேவலெளிதன்றெவர்க்குமபிமனிந்தப், பூதலமேற்புகழ்நிறுத்திக்கிடையாவின்பப் புணரியடைந்தனன்வான்மேற்பொருமலென்னே, காதன்மறுத்துறுவதுவேநன்மையென்றுகட்டுரைத்தான்மட்டுரையாக்கருணைக்கண்ணன். (உஅ௮)

இதுநிற்கவொன்றுரைப்பக்கேண்மோமுன்னமிமையமாதுடனீசன்கைலைநீங்கித், துதிநிற்குங்கணநாதர்மறைகளோதிச்சூழ்ந்துபல்லாயிரக்கோடியாதுகாப்ப, மதுநிற்குமலரம்பிகாவனத்தின்வந்துசராசரவுருவின்மருவுங்காலை, விதுநிற்கும்வேணியனைக்காணுமாறுவிரவினுன்றருவாதமுனிவனுங்கே.(உஅ௯)

வந்தவனையெதிர்தகைந்துதுவாரபாலர்மழவிடையோனருள்கிடைப்பதரி தின்ஞான்று, சுந்தரனேயின்றகன்றநாளேமேவிற்சோதியினைக்காண்பைபோ கென்றுநெஞ்சம், நந்தவுரைத்தவர்பதினுயிரும்பாரினரருருவாகெனச்சாபநல் கவாக்கை, வெந்துவீழ்ந்ததுவுணர்க்தேமங்கைபாகன்விடைமீதுவந்தெதிரேவி ளங்கக்காணு. (உகூ௦)

மாலயனுலறிவரியகடவுட்டாளென்வான்றவத்தால்வாய்த்ததெனவணங்கி ஞனுக், காலமுறுகளத்தையனுசிகூறியருண்முனியேயிவற்குறுகணகற்றுயெ ன்னச், சூலமுறுகரத்தோனேயிவருக்குற்றதுன்பமானிடவுருவிற்றெலைத்து ப்பின்னர், சேலயிலினயனத்தாள்பங்காவைகுந்திருவடியையடைவரெனச்செ ப்பினனே. (உகூக)

ஆயபோதினிலயுதந்துவாரபாலரரவதுவசன்மரபிற்புதல்வராகிச், சேயபு கழிலக்கணனேமுதலவாகச்செனித்தனராணுற்றுவர்க்குத்தேவிமார்பாற், கா யுமழுக்கரத்தினனாருளாலிந்தக்காண்டீபன்புதல்வனபிமன்னுவாகித், தூயவ ரைத்தொலைத்திவன்முற்பதமேபோந்தான் றுன்பமுறுதுயர்க்கடனீதுளேயலெ ன்றுன். (உகூஉ)

ஆயோனங்குரைத்தவெலாமகத்துட்கொண்டேயரியவிதிமுறையிதுவே யாமென்றுசைப், பேயோடத்திழிந்தவனுயிருப்பவந்தப்பெரியோனுமவனைவி டைபெற்றுமுற்றுங், காயோடுகனிகமழும்விபினஞ்சேர்ந்தான்கருதரியோனெ னப்புகல்வேன்கனிட்டனேடு, மாயோனுமணுகிலெனவுயிர்த்திருந்தான்மற்ற வர்தஞ்செயலினிமேல்வகுக்கலுற்றும். (உகூஙூ)

வே று.

* இங்நிலத்தவனிபாலரிவ்வகையிரங்கியேங்கத்
தென்னிலத்தெதிர்ந்துளாரைத்தென்னிலந்தன்னிலேற்றி
பெங்நிலத்தினுந்தன்ஞண்மைக்கெதிரிலாவிசயன்றுனு
மங்நிலத்தகன்றுமீண்டானுற்றவாறறிவுருதான். (உகூச)

* போனதுவருவதெல்லாம்புரையறவுணருகிற்கு
மானதிர்கனகத்திண்டேர்வலவனுமதுரைமன்னன்
றேனதிர்கடுக்கைமாலேயிடுசயத்திரதன்றன்ஞ
லானதுங்குறித்துவானேரரசையுங்குறிக்கலுற்றுன். (உகூடு)

* பாசறையனுகுமுன்னம்பாசடைப்பதுமம்போல
மாசறவிளங்குமேனிவண்டுழாயலங்கன்மூர்த்தி
யாசறுவரிவிற்காளேயங்கையுமருகுநீங்காத்
தேசறுபடைகள்யாவுமொழித்தனன்றீமைதீர்ப்பான். (உகூசு)

உன்னிமித்திரற்குநல்குமுரானுடையொருவன்பொற்றேர்
மன்னிமித்திரனேடேகும்வழிதொறுவழுவிலாத
நன்னிமித்தங்கள்காண்பதொழிந்துமெய்நடுங்குமாறு
துன்னிமித்தங்கள்கண்டுதுளங்கிலான்மனமருண்டான். (உகூஎ)

மாலையங்கடனியற்றிமைத்துனன்முகத்தைநோக்கி
வேலையாங்கொலிக்குமென்னவிளங்குநம்பாடியின்று
மேலைமாமுனிவரின்றிவிளங்கொளிவிளக்கமின்றிச்
சாலைதாழ்ந்திருப்பதென்னோவுணர்கலன்சார்ந்ததென்றான். (உகூஅ)

அரசர்மாட்டென்னோபெற்றிமைந்தருக்கென்னோவாற்றன்
முரசுயர்கொடியோற்கென்னோதுணைவருக்கென்னோமுண்ட
திரைசெறிசெவியிற்கேட்பதெவ்வுரையோவென்றேங்கி
நிரைசெறிதிமிரமோங்குநெடியபாசறைபுகுந்தார். (உகூகூ)

தேரிழிந்தரசன்மன்றன்மண்டபஞ்சேர்ந்துநாளும்
பாரிழிந்தெய்துமுன்னர்படர்தருமபிமற்காணான்
போரழிந்தங்கணுவிபொன்றினனுங்கொலென்ன
வேரழிந்தவனிசாயாவிருக்கமொத்திதனைச்சொன்னான். (௩௦௦)

எத்திறத்தவரும்வந்தீண்டிருப்பவாருயிரினெண்ணும்
புத்திரனபிமனில்லாப்புன்மையென்புகல்வீரென்னச்
சித்திரம்பொரித்ததென்னயாவருந்திகைப்பதோர்ந்து
வித்தகனுயிர்த்துமைந்தன்விளிந்தனனெனத்தெளிந்தான். (௩௦க)

வீழ்ந்தனன்புவிமேல்மீளவெழுந்தனன்விளங்குவைவேற்
போழ்ந்தபோன்றுதரத்தூடுபொருங்கனலெழுந்துதாவத்
தாழ்ந்தனனுற்றறன்கைத்தலங்களான்முகத்தினெற்றி
வாழ்ந்தவாழ்விதுவோமண்மேன்மாய்ந்தையோமகனேயென்றான். (௩௦உ)

மீளவுமருங்கினின்றவேந்தரைவெகுண்டுநோக்கிக்
காளவெங்கனலிற்சிறிக்கண்கணீர்கழலுப்போரின்
மாளவங்கபிமன்மீண்டிராருயிர்க்குறுதிவாய்ப்ப
நீளவிங்கும்மையொப்பாராருளர்நிலத்தினென்றான். (௩௦௩)

இத்திறலரசராருமிருந்துமென்னுயிரினேய்ந்த
புத்திரனொருவன்றன்னைக்காக்கலீர்பொருமாறென்னே
கைத்தலப்படையென்வில்லென்கணைகளென்முடியென்பூணென்
முத்தணிகுடையென்வென்றிமொழிகளென்முனையெனென்றான். (௩௦௪)

இன்னனபலவும்பன்னியெரிதருவிழியோனாகி
முன்னவன்றன்னைநோக்கியாவர்கொன்முடித்தோரென்னப்
பொன்னுலகின்றமைந்தற்கெதிருரைபுகலவஞ்சி
மன்னவரயர்ந்துநிற்பவுதிட்டிரன்வகுக்கலுற்றான். (௩௦௫)

தென்றிசைநீயுமாலுஞ்சேர்ந்தபின்செய்தயூகம்
வென்றுறப்புகுதல்கூடாவாற்றினல்விளங்குமைந்தன்
றன்றிறலுணர்ந்தபண்பாற்செல்கெனச்சாற்றியுய்த்தே
னின்றவன்செய்தவீரமென்கொலோவுரைப்பதையா. (௩௦௬)

சக்கரம்பிளந்துட்புக்குச்சாலவாசிரியன்கன்னன்
மிக்கவிற்கிருபன்வேந்தர்வேந்தனல்விவுளித்தாமன்
புக்கனரஞ்சியோடிப்புறந்தரப்பலகாலாற்றித்
தக்கநற்ருனைநான்குந்தரைப்படவரைத்துநூறி. (ருoஎ)

இலக்கணன்பதாதிவேந்தரிருவர்மத்திரத்தோன்மைந்தன்
சுலக்கணமகதன்மைந்தனுதியர்துஞ்சவீட்டி
யலக்கணுற்ருருமஞ்சவடர்த்தருந்துச்சனிப்பேர்
விலக்கருந்திறலான்றண்டால்வீழ்ந்தனனவனிலத்தே. (ருoஅ)

புகுந்தனனேமியென்றுயாவருமுடனேபோந்து
பகுந்தமர்புரியும்போதிற்பரமன்றன்வரத்தினலே
மிகுந்திறற்சிந்துவேந்தன்றடுத்தெமைமேவவொட்டா
னகுந்திறலெல்லாங்கண்டானுயிறுசாயுமட்டும். (ருoகூ)

ஆதலிற்பெரும்போராளிக்கருந்துணையுதவலின்றி
மீதலம்புகுந்தானென்றேவேந்தரைவெறுப்பதென்னக்
காதலங்கடலுளாழ்ந்துசோகவெங்கனற்குன்றேறிப்
பூதலம்பாய்ந்துமாள்வான்போலுயிர்ப்படங்கிவீழ்ந்தான். (ருக0)

* வித்தகனுரைத்தமாற்றம்விசயன்றன்செவிக்குத்தீக்கோ
லொத்திருபுறனும்வேவவுள்ளூறச்சுட்டபோது
புத்திரசோகமென்னுநஞ்சினுற்பொன்றினுன்போ
லத்திடவறிவுசோரவவனிமேலயர்ந்துவீழ்ந்தான். (ருகக)

* அயர்ந்தனன்வீழமாலுமண்ணலுமாலிசோரப்
புயந்தழீஇயெடுத்துவாசப்பூசுநீர்தெளித்துமாற்றிப்
பயந்தருநெடியவேழம்பலபுகக்கலங்குந்தெண்ணீர்
கயந்தெளிவுற்றதென்னக்கண்மலர்ந்தழுகலுற்ருன். (ருகஉ)

* போரினிற்றுணைவரோடும்புயங்கேதனனைவென்று
பாரெனக்களித்திநீயேயென்றுளம்பரிவுகூர்ந்தே
னேருனக்கொருவரில்லாய்நீகளம்பட்டாயாகி
லாரினிச்செருக்கவல்லாரைவருக்குரியகோவே. (ருகங)

* சக்கரம்பிளந்தவாறுந்தரியலருடைந்தவாறுந்
துக்கரமானகொன்றைத்தொடையலால்வளைத்தவாறு
மெய்க்கரந்துணிந்தவாறுமீண்டுருத்தடர்த்தவாறு
முக்கரமுடனென்முன்னேயோடிவந்துரைசெய்யாயோ. (ருகச)

* பன்னகவரசன்பெற்றபாவைமாமதலைதன்னை
முன்னுறமுனையிற்ருேற்றேன்மூர்க்கனேன்முடியாதுண்டோ
வுன்னையுமின்றுதோற்றேனுன்னுடன்ருெடர்ந்துவாரா
தின்னமுமிருந்ததையாவென்னுயிர்க்கிறுதியுண்டோ. (ருகரு)

✻ கதிரவனுதிக்குமுன்னேகண்டுயிலுணர்த்தியென்னை
யதிரமர்க்கோலங்கொள்வானறிவுறுத்துரைக்கவல்லாய்
முதிரமர்முருக்கிமீண்டேனித்தனைப்போதுமுன்போ
லெதிர்வரக்காண்கிலேனிங்கில்லையோவென்செய்தாயோ. (௩கசு)

✻ தந்திரமியாவுமின்றித்தனித்துநீதானேபோர்செய்
தந்தாமமையுமென்றிவ்வகலிடந்துறந்தவையா
மைந்துடனம்மைக்காணமகன்மகன்வருகின்றானென்
றிந்திரனேவவுன்னையிமையவரெதிர்கொண்டாரோ. (௩கஎ)

✻ தோழிந்தெடுத்தவில்லுஞ்செங்கதிர்வாளுமின்றி
யோருதவியும்பெறுமலொழிந்துயிரழிந்தமைந்தா
போரமருடற்றிநீயப்பொன்னகரடைந்தபோதுன்
பேரமராண்மைகேட்டுப்பிதாமகனென்சொன்னானே. (௩கஅ)

✻ மற்புயக்குன்றமோங்குமைந்தனேமருவலாரைப்
பொற்புறப்பொருதநீயப்பொன்னுலகடைந்தகாலை
யற்புதப்படைகள்வல்லாயபிமனேயமரருருங்
கற்பகக்காவும்வானிற்கங்கையுங்காட்டினாரோ. (௩கசு)

✻ வளைத்தவின்னிமிராவண்ணம்வாளியான்மாவுந்தேருந்
துளைத்துமுன்காலாளாகத்துரோணனைத்துரந்தவீரா
திளைத்தவெஞ்சமரினெந்துதனஞ்சயன்சிறுவன்மேனி
யிளைத்ததென்றிந்திராணியின்னமுதூட்டினாளோ. (௩உ0)

வே று.

✻ என்னமகவான்மகனிரங்கினனரற்ற
முன்னவர்கள்பின்னவர்கள்முறைமுறைபுலம்பச்
சென்னிகரம்வைத்தனைவருங்கலுழிசெய்ய
வன்னபொழுதாரணமளித்தமுனிவந்தான். (௩உக)

புல்லறிவுளார்கள்துயர்பூந்துறினிரங்கிச்
செல்லறிவினன்மையுறினேமகிழ்தல்செய்வோர்
நல்லறிவுளோர்க்கிவையிரண்டுமொருநாமங்
கல்லறிவுகொண்டுகரையார்கலுழ்கிலாரே. (௩உஉ)

✻ தாயரொடுதந்தையர்கடாரமொடுதனையோர்
தூயதுணைவோர்களொடுசுற்றமெனநின்றோர்
மாயையெனும்வல்லபமயக்குறுமயக்கா
லாயவுறவல்லதவரார்முடிவிலாதார். (௩உ௩)

✻ வந்துபிறவாதமனையில்லைமுலைமாறித்
தந்துபரியாமலொழிதாயர்களுமில்லை
புந்தியுணர்வற்றவர்புலம்புறுவதல்லா
லிந்தவுலகத்தறிஞர்யாதினுமயங்கார். (௩உச)

* உம்மையினும்யாருறவுணர்ந்திலமினிப்போ
மம்மையினும்பாவருறவாவரெனவறியே
மிம்மையினிகழ்ந்தவுறவித்தனையிரங்கன்
மும்மையுமுணர்ந்துவருமூதறிவினீரே. (கூஉரு)

வென்றுபெறுமாறுபலவேந்தர்முனர்பெற்ரு
னின்றுபெறுமாறுசிலநீள்பகலிலுற்ரு
னன்றுபெறுநற்கதியுநாண்மைபெறுமைந்த
னின்றுபெறிலென்னையவனுக்கழுதிரங்கல். (கூஉசு)

எனச்சிலமொழிந்தவரிரங்கலகல்வித்தே
மனத்தினிதுறக்கரியமானிறுவவீரன்
றனித்துயரகன்றுவிழியிற்பொறிதயங்கச்
சினக்கனலெழுந்ததகல்வானினர்தியங்க. (கூஉஎ)

அந்தணர்கள்வாளரசராருமறிவெய்த
விந்தமொழிகூறுவனிருந்துணர்மினின்று
வந்துதவியாகவருவாரைவலிமாற்று
முந்துசிலையோனைமுடிதள்ளுவன்முனைந்தே. (கூஉஅ)

* சிந்துபதியாகியசெயத்திரதனைத்தே
ருந்தமரினூயுருமேறெனவுடற்ரு
வந்திபடுமவ்வளவினுவிகவரேனேல்
வெந்தழலின்வீழ்வனிதுவேதமொழியென்ருன். (கூஉகூ)

* இன்றபிமன்வாளமரிலின்னுயிரிழக்கக்
கொன்றவனைநாளையுயிர்கோறல்புரியேனேன்
மன்றிலொருசார்புறவழக்கழிவுரைக்கும்
புன்ருெழிலர்வீழ்நரகுபுக்குழலுவேனே. (கூகூ0)

* மோதமரினென்மகன்முடித்தலைதுணித்த
பாதகனைநானெதிர்ப்படப்பொருதிலேனேற்
ருதையுடனேமொழிதகாதனபிதற்றும்
பேதைமகனெய்துநெறிபெற்றுடையனுவேன். (கூகூக)

* சேயனையவென்மதலைபொன்றவமர்செய்தோன்
மாயமுடிசிந்திவயவாகைபுனையேனேற்
ருயர்பசிகண்டுகனிதன்பசிதணிக்கு
நாயனையபுல்லருறுநரகிலுருவேனே. (கூகூஉ)

* வஞ்சனையிலென்மகனைமாளுமுறைசெய்தோ
னெஞ்சமெரியுண்ணவமர்நேர்பொருதிலேனேற்
றஞ்செனவடைந்தவர்தமக்கிடர்விளைக்கு
நஞ்சனையபுல்லர்கணடக்குநெறிசேர்வேன். (கூகூகூ)

* வினையிலென்மகன் றனுடல்வேறுசெய்வித்தோனைக்
குனிசிலையினுனையுயிர்கோறல்புரியேனேன்
மனைவியயலான்மருவல்கண்டுமவள்கையாற்
றினையளவுமோர்பொழுதுசிவித்தவனுவேன். (௩௩௪)

* இன்னணமிருந்தவர்கள்யாவருநடுங்க
மன்னவையிலன்றுபலவஞ்சினமுரைத்துத்
தன்னருகிருந்தவர்தருஞ்சிலைகுனித்தே
நன்னரனகண்டமதிர்நாணொலியெடுத்தான். (௩௩௫)

சத்தமெழுமேழ்கடல்கடாமுமுறைதேவ
தத்தமுமுழக்கியதனஞ்செயனின்முன்னே
பத்தணிகறங்கியதுபாஞ்சசனியப்பேர்
வைத்தவனைபச்சைமுகில்செம்பவளவாயில். (௩௩௬)

நற்றுணைவருத்றநரபாலர்வனைாதம்
பற்றலர்முகங்கெடவியங்கியதுபாரா
முற்றுணருதிட்டிரன்முகுந்தனைவணங்கிப்
பெற்றியிதுகேளெனவகன்றினிதுபேசும். (௩௩௭)

வேறு.

* வடிசுடர்வாளினன்மொழிந்தவஞ்சினப்
படிசெயத்திரதனைப்படுத்தல்கூடுமோ
பொடியனலிவன்புகிற்புகுந்துநால்வரு
மிடிபொருமரவெனவிறத்தறிண்ணமே. (௩௩௮)

* முப்பதுகடிகையின்முரண்டுமொய்ம்பனைத்
தப்பறக்கொல்லுவனென்றுசாற்றுமா
லப்பெருஞ்சேனையிலவனையுள்ளுறத்
துப்பரவணிந்திடிற்றுன்னலாகுமோ. (௩௩௯)

* எஞ்சின்மற்றெறன்செயலென்னுமெல்லையி
னஞ்சலென்றறன்மகனவலமாற்றினன்
கஞ்சவான்பொய்கையிற்கராவின்வாய்ப்படுங்
குஞ்சரந்தனக்கருள்கொண்டன்மேனியான். (௩௪௦)

அக்கணத்தெழுந்தபேரொலிகளம்பரந்
தொக்கவானவர்செவிதோறும்பாய்தலாற்
புக்கவோமடங்கலென்றயிர்த்துப்போகிசெய்
மிக்கவஞ்சினமெனமீளத்தேறினர். (௩௪௧)

படவராவிலோதனனிருந்தபாசறை
கெடவராநிருபர்கள்பலருங்கேட்டுழித்
திடவராகத்தைநேர்செம்மல்பாடுகேட்
டடவராநின்றனனரனென்றஞ்சினர். (௩௪௨)

மீண்டுமெவ்வேந்துடைவாய்மைமேற்கொளாத்
தூண்டுமொன்கயரதவயவர் துன்னினார்
பாண்டுநந்தனர்மிசைபடரினேற்றெதிர்
காண்டுதும்போரெனக்கலிக்குமூற்றத்தார். (௩௪௩)

வாரணன்மகன்றன்வஞ்சினங்கண்மற்றெலாஞ்
சாரணருரைத்திடத்தனிமனக்கொடே
காரணவியற்சயத்திரதன்காவலன்
றோரணம்புனையவைசார்ந்துசொல்வனால். (௩௪௪)

என்னையேநாளைவந்திரவிசாயுமுன்
சென்னியேதுணிக்கவஞ்சினஞ்செய்தானரன்
பின்னையேனிருப்பதிங்கென்னைபெற்றியோ
சொன்னையேலிக்கணமகல்வன்றாரவே. (௩௪௫)

தேன்செயுந்தொடையலார்மூவர்சேரநின்
றான்செயும்பக்ழிகளுதைந்துகாக்கினும்
வான்செயுமகபதிமைந்தன்வாக்குறத்
தான்செயும்வஞ்சினந்தப்புமேகொலாம். (௩௪௬)

என்றிவன்வெருவொடுமியம்பும்வாசக
மன்றவன்கேட்டலுநகைசெய்தாருயிர்
பொன்றிடாதுன்னையான்காப்பன்போரிடை
வென்றிவேலினைரோடெனவிளம்பியே. (௩௪௭)

ஆரியன்கிருபன்மத்திரத்தனங்கர்கோன்
சீரியவிவுளியந்தாமன்சீரரும்
பூரிசராமுதற்புனிதர்காப்பவிக்
காரியமுடிவதேகனற்கண்ணுற்குமே. (௩௪௮)

அன்னவனுனைச்சிரமகற்றவாற்றலன்
பன்னியகனலுறப்படிதலுண்மையே
யென்னினிவெருவுனக்கிருத்திபோயென
மன்னவர்மன்னவன்மறுக்கநீக்கினான். (௩௪௯)

அரக்கெனச்சிவந்தகண்ணங்கர்கோனொடுந்
துரக்கும்வெங்குனிசிலைத்துரோணன்றன்னொடும்
பரக்கும்வெண்டிரைக்கடற்பாரெலாமுடன்
புரக்கநின்றவன்சிலபுகல்வன்மீட்டுமே. (௩௫௦)

கொடிநெடுஞ்சேனையைக்கூறுசெய்துநீர்
கடிகைமுப்பதுமுடன்காக்கவல்லிரேல்
வடிவுடைசிந்துமாமுகனுமுய்குவன்
வெடியனல்குளித்திடும்விசயன்றானுமே. (௩௫௧)

நாளையோர்பகலுமேநமக்குவெய்யபோர்
காளையரனைவருங்காமின்காமினென்
ருளையுமடுகளிற்ருழிமன்னவன்
வேளைபுக்கவரிலும்வீழ்ந்துவேண்டினன். (௩௫௨)

திசைபுகழ்விசயனுநீயுஞ்செஞ்சிலை
விசைதருமாசுகவிஞ்சையாவது
மிசைவுறயான்றரவெய்தினீரவ
னசைவிலனுதலாற்புகழ்வராருமே. (௩௫௩)

பாகுதேர்சாயகம்படுவிற்றாணிகள்
வாகுறக்கொண்டுநீமலையவல்லையே
லாகுலமழுந்துமீண்டைவர்வாகினி
கோகுலமடங்கவும்புகழ்வர்கோடிநீ. (௩௫௪)

ஈதலாற்பார்த்தனுமெய்திமாற்றெணப்
போதவியூகமொன்றுண்டுபெட்புறக்
கோதிலாதியற்றியான்காப்பன்கொற்றவர்
காதலாற்றுச்சனைகணவன்றன்னையே. (௩௫௫)

தேவருக்காயினுந்தேறுநாயகர்
மூவருக்காயினுமுடியுமேகொலாந்
தீவரிக்கொடுஞ்சிலையோடுசேர்ந்தியான்
ருவரித்திடுமுனைவெல்லுந்தன்மையே. (௩௫௬)

தேயுநின்றெழக்கணைசெலுத்துமாற்றலான்
மேயவின்முனைக்கெதிர்மேவின்றென்னினு
மாயுமவ்வணிமருங்கிருத்தலன்றியே
போயுறல்சிந்துமன்புதல்வற்கேற்பதே. (௩௫௭)

தனுமறைதேர்ந்துகார்முகமுந்தாங்கியே
மனுமுறைக்குலத்தியல்வழாதவண்மையோர்
துனியுறிற்பகைஞரைத்துணித்தல்சாதலென்
றினிதுறப்புகுவர்தம்முயிர்க்கிரங்கலார். (௩௫௮)

மணிமதிலரனெனமன்னுஞ்சேனையை
யணிபடநிறுத்தியாமளவுங்காப்பன்யான்
பணிவுறபுண்ணியபாவமுற்றுவ
துணிவுறத்தெரியுமோதும்பைமாலையாய். (௩௫௯)

முப்பதுகடிகையின்மொழிந்தவஞ்சினந்
தப்பதுபடாதெனிற்றனஞ்செயன்சிலைக்
கொப்பதொன்றில்லைமற்றுரைத்தவாறலா
லப்பதுமாசனன்றனக்குமாகுமோ. (௩௬௦)

மல்லினன்மல்லரைமலேந்தமாலனற்
புல்லினனென்னினுஞ்சிந்துபூபனே
வில்லினல்வெல்லரிதென்றுமீளவுஞ்
சொல்லினன்மாமறைத்துரோணசாதனே. (௩சக)

கோப்பலருடன்பலகூறிக்கொற்றமுன்
ஞுப்பகல்புகன்றவனவான்பகற்
ருப்புலிநிகர்சயத்திரதன்றன்னுயிர்
காப்பல்யானென்றனன்கதிரின்மைந்தனே. (௩சஉ)

அன்மருடிமிரமெய்தளர்வுநாளையிற்
றென்மமருடற்றுவேற்சிந்துபூபனைக்
கன்மருடிகிரியிற்காப்பன்யானெனத்
துன்மருடணனெனுந்துணைவன்சொல்லினன். (கசா௩)

விரற்படுகோதைவல்வில்லின்வல்லவர்
குரற்படச்சேவகங்கூறுகிற்பரோ
வுரற்புரைகறையடியோடையானையாய்
சரற்புயல்பெய்யுமோதனிமினில்லதே. (௩சச)

பொருதொழில்விதம்படப்புரிந்தகாலேயில்
விருதர்களிருவரும்வேறல்கூடுமோ
வொருதனிபொருதுமென்றுரைக்குமுண்மையுங்
கருதலர்வின்மையுங்காண்டிகாவலா. (௩சரு)

என்றுசேனுபதிமகனியம்பின
னின்றுகாவலர்களுநிசிபுலர்ந்துழிச்
சென்றுபோர்பலமுனேசெலுத்தியாரையும்
வென்றுமீளுதுமெனவிடைகொண்டாரரோ. (௩சசா)

இவ்வணநிகழ்ந்தனயாவுமொற்றரா
னுய்வணமுணர்ந்தவனுணர்ந்துரைத்தனன்
மைவணமேனிமாமாயனுதியாங்
கைவணநிருபர்கள்காதினேறவே. (௩சஎ)

வரைபுரைகார்முகில்வண்ணனுங்குறு
திரைபுரைகருணேவாளரசர்சிந்தைகண்
டுரைபுரைகுதுமெனவுன்னியோதினன்
கரைபுரைவிசயனுங்கன்னமேற்கவே. (௩சஅ)

ஆரியனவன்மகனங்கர்கோனடு
வீரியசல்லியன்சகுனிவேந்தர்கோன்
பாரியசிலேயுடைக்கிருபன்பற்பல
காரியவேந்தருங்காப்பதுண்மையே. (௩சகூ)

பன்னியபெருந்திறற்படைவலாளரை
யுன்னிவென்றல்லதாண்டொருவன்மாமுடி
சென்னிவீழ்த்திடலரிதொருபகற்செலா
முன்னரிவ்வஞ்சினமுடிக்கவல்லமோ. (௩௭௦)

என்றுகேசவன்சொலவிருந்தமன்னவ
ரின்றுநீயருடருகென்னிலீதெலாம்
வென்றுமூவுலகையும்வெற்றிகொள்வனிக்
குன்றுறழ்புயனெனக்கொற்றங்கூறினர். (௩௭௧)

வாளரிபுரைசிலைவலித்தனஞ்சயன்
காளமாமுகிற்கிறுகழறன்மேயினான்
வேளடுவிழியினானருளுமீட்டடைமை
யாளுநின்னருளுமுண்டுளகொலையமே. (௩௭௨)

வாசவன்காக்கினுமறலிகாக்கினும்
பூசுரன்காக்கினும்புனிதர்காக்கினும்
தேசணிமணிமுடிச்சிந்துபூபதி
நாசமெய்துதற்கொருநடுக்கமில்லையே. (௩௭௩)

காண்டிவமெடுத்தவிற்கண்ணன்சாரதி
பாண்டவமத்திமன்சமர்செய்பார்த்திபன்
பூண்டவிவ்வஞ்சினம்பிழைப்பிற்பொய்த்திடா
தாண்டுறுமேகொலாங்கதிர்களீயனே. (௩௭௪)

சற்பகேதனனருகுறுந்தராதிபர்
விற்புனைவேதியர்வின்மைதேறுவே
னற்புறப்புகலினுமவருமென்புய
வெற்பினையுணர்குவர்விமலநாதனே. (௩௭௫)

எனச்சிலபுகலவாங்கெழிலிமேனியான்
றனிச்சிலைவல்லபந்தருமென்றன்புடன்
மனச்சினத்தெழுமுரைமாற்றிமற்றுளோர்க்
கினிச்செலுந்துயில்வதற்கென்றுநல்கினான். (௩௭௬)

முரசுயர்கொடியினான்முதலநால்வருக்
குரைசெயத்தகுவசொற்றுறையுட்போக்கியே
விரைசெறிதாரினான்விசயனோடுபோ
யுரைசெறிசுபத்திரையுறையுளெய்தினான். (௩௭௭)

மித்திரக்கனல்வருமின்னுமச்சநாட்
டுத்தரையொடுமிருந்துயிர்க்கும்பாவைமுன்
வித்தகனெய்தலும்விம்மிமைம்முகி
லொத்திருவிழிகலுழ்ந்தரற்றலோங்கினாள். (௩௭௮)

வேறு.

மாருடுபோரிலுனையுந்தையேவமதியாதுசென்றவனிகஞ்
சேருடியென்னின்மகிபாலர்சென்னிசிதைவித்தெழுந்தவுதிர
மாருடிவென்றதிறலிங்கனைத்துமடலவரோடுபுகலத்
தாருடுதேரின்மிசைவந்துருதுதாழ்த்தாயிதென்னமகனே. (௩எகூ)

நாராயணற்குமருகாகிவின்மைநவில்வாசவிக்குமகவாய்ப்
பாராயணத்துநிகரற்றவிஞ்சைபடைகற்றுணர்ந்ததிறலோய்
போரார்களத்தினிடைமானுடங்கள்பொருதாவிகொண்டதுனையோ
வேராவிடுக்கண்வினைதானியற்றிவினியாரைநோவன்மகனே. (௩அ0)

மறனும்பிழைத்துன்வலியும்பிழைத்துவருமன்னர்மன்னுதுணையின்
திறனும்பிழைத்துனதிராதசிந்தைதெளிவும்பிழைத்ததெனினும்
புறனுநினைக்குமகனுநிகர்த்தபொறையானளப்பில்புகழா
னறனும்பிழைத்ததெனிலித்தரைக்கணதிபாவியான்கொன்மகனே. (௩அக)

வருந்தாதியக்கர்நகர்கட்டழித்துமணிமாலனுவிகவரும்
பெருந்தாதைநிற்கவொருகோடிவேந்தர்பெயர்கொண்டுநிற்கவுனைவிட்
டிருந்தாரைநோவதறனன்றுமுன்செய்வினைபோலெதிர்ந்தெண்ணிலராய்க்
குருந்தாவிகொள்ளைகொடுபோனதீயகொடியோரைநோவதறனே. (௩அஉ)

இனியென்னைசெல்வமினியென்னையின்பமினியென்னைவீரமிகல்செய்
தினியென்னைவெற்றியினியென்னையூற்றமினியென்னைவாழ்க்கையிசையாப்
பனியென்றுதன்மையுறவந்தமன்னர்படவென்றுமாண்டுபடையிற்
றனியென்னைவைத்தெனுயிர்போலகன்றுதகவானடைந்தமகனே. (௩அ௩)

வல்லாண்மைபெற்றகுடியிற்பிறந்துமகிநாதர்வந்துபணியும்
வில்லாண்மைவேந்தர்குடியிற்புகுந்துபலரோடுலாவிமகிழ்வாற்
சொல்லாண்மையோடுமெதிரற்றிருந்ததராகிக்குகந்ததுணைநீ
யில்லாமையாலொர்தமியாயினேனெனென்னெதிர்வந்திலாய்கொன்மகனே. ()

எனவிம்மிவிம்மியிளையாள்வருந்தவெரிதந்தகன்னிகவல
மனனெந்துமச்சவளநாடன்மங்கைவனசங்கனற்கணுறல்போ
னனிதுன்பமெய்தவகல்வானுமண்ணுமுருகாநவஞ்செய்பொழுதிற்
புனல்கொண்டெழுந்தபுயல்வண்ணனின்சொல்புகல்வானிரங்கல்விடவே. ()

சலவண்மைபொன்றவுரையார்கண்மன்னர்குடியிற்றரித்தமடவார்
குலவண்மைகுன்றமகவுக்கிரங்கனலனேவதைத்தகொடியோர்
பலவண்மைபொன்றிவிழவென்றிகொண்டுபடர்வோமெதிர்ந்தபகல்வாய்
நிலவண்மைநீரினனுகாகொல்பேதைநினைவோடழுங்கலறனே. (௩அகூ)

வந்தார்துதிக்கவிமையோர்களிப்பமகிபாலர்சோதிமுடிகள்
பந்தாடிமாய்ந்துபெறுமாறுருதபதமெய்தினுன்மகனீ
நொந்தாலுநெஞ்சுதடுமாறியோடினுவலுங்கனற்கணுடலம்
வெந்தாலுமுய்ந்துவருவார்கொலாவிவிதிவந்தழைக்கவிளிவோர். (௩அஎ)

வெல்லத்தகாததிறல்வீரனுன்னைவிழைவிற்கைபற்றுமிறைவன்
சொல்லத்தகாதுன்மகனுண்மைமண்ணிலினிநன்மைதுய்ப்பதெவனோ
செல்லத்தகாதமருகிக்குரைத்திதெருளெய்தவென்றுதெளிவிற்
றல்விற்றராதிபதிதம்பியோடுமரிமீண்டுசோலையணுகா. (௩௮௮)

வின்மைக்கொருத்தனெனநின்றகாளைவிரைவாண்முகத்தில்விழியா
நன்மைக்கொருத்தன்வழிபாடுபாதியிரவின்கணுளநிகழ்வோய்
வன்மைக்கருத்துவழுவாதுபோதுமதியாதிருந்துதுணிபோ
டென்மைச்சிரத்தினிடைமுற்றினீசனிதையங்களிக்குமெனவே. (௩௮௯)

கோடாதசிந்தையுரவோனிசைந்துகுசநீரளைந்துகுறுகி
வாடாதமாலையொடுதூபதீபமகிழ்சந்தனுதிபலவுந்
தேடாதுகொண்டுதனதாவியொற்றதிரிமேனியாகவரியை
நாடாதுகொண்டுவழிபாடுமுற்றியரனுமமெண்ணினவிலா. (௩௯0)

அப்பெற்றிகண்டுமகிழ்வெய்திமாலுமறைவானிரண்டுபொருளு
மிப்பெற்றியொன்றதெனவன்புதேறவெதிர்விப்பன்மீதினிடுபூ
வைப்பெற்றியோடுதவருதுகோடிமதியென்றுகூறிவரிவிற்
கைப்பற்றியங்கொர்குசைகொண்டுமேய்ந்தகடிமன்றலின்கணுகி. (௩௯௧)

மலர்நந்தமாதிதிசைநான்குமுய்த்துவகையாயுதங்கணடுவட்
பலர்பாதுகாப்பவிருகண்முகிழ்த்தல்பயனென்றிருத்திநரனைச்
சிலர்வந்துசூழவவணீங்கியங்கொர்திடர்நேடிவந்துதிருமா
லலர்சூழுமன்றன்மிசைவைகியன்பிலணிதாரகற்கிதறைவான். (௩௯௨)

வேறு.

பாண்டவர்க்குதவிசெய்பரிசினீண்டினேன்
காண்டவந்தழற்கிடுகாளைவஞ்சின
மாண்டகச்சிந்துவின்மன்னைமாய்க்குத
லீண்டிதுமுடிவதோரெளிமைப்பாலதோ. (௩௯௩)

விசையனிற்போர்முனைவென்றியின்றெனிற்
றிசையுறத்திகிரிகொண்டெதிர்ந்துதேர்புகுந்
தசைவறயாரையுமடர்த்துநீக்குவன்
வசையெனக்கெய்தினுமெய்தமாண்புளாய். (௩௯௪)

காலையில்விசயனும்யானும்போர்க்கள
வேலையினடைகுதும்வெய்யபோர்முனை
யாலையிற்கரும்புபட்டணிகள்சிந்திடப்
பாலையிற்கிழத்திகண்பனிப்பவாற்றுதும். (௩௯௫)

பற்குனனினைத்தனனென்னிற்பண்புளாய்
தற்கணங்குறிக்குதும்பாஞ்சசன்னியம்
விற்கதையாழிவாண்முதலமேற்கொடு
சொற்குமுன்றேர்கொடுவருதிசூதனே. (௩௯௬)

என்றுமால்பன்முறையியம்பிச்சூதனோ
டன்றுமாலிராப்பொழுதகற்றிவைகினன்
குன்றுபோலியபுயன்குசைகொள்பாயன்மேற்
சென்றுவஞ்சினக்கனல்செறுப்பத்துஞ்சினன். (ஙகூஎ)

சோகவெங்கனலொடுதுரக்குமாருத
மாகவஞ்சினமதிமயக்குமார்வத்தான்
மாகவிந்திரன்மகன்றுயிலமற்றவன்
ருகவெங்கனவின்மால்சார்ந்துளானரோ. (ஙகூஅ)

அங்குநற்றூரகனோடௌாவினோ
னிங்குவந்தருச்சுனற்கெதிர்தலேற்றமோ
பொங்குமிவ்வுலகெலாமகட்டிற்பூத்ததிற்
றங்குமன்னுயிர்தொறுந்தவழும்பெற்றியான். (ஙகூகூ)

கண்டவல்விசயனுங்கருத்திற்சோகநீத்
தண்டர்நாயகனிணையடிகள்சென்னிமேற்
கொண்டபினின்குறைதீர்ப்பன்கூறென
முண்டகநாபியான்மொழியக்கூறினன். (சOO)

வென்றியிற்றிகழ்தருவேதவேதியன்
றன்றுநாளைச்சமர்சுமந்துதோன்றினுஞ்
சென்றடற்சிந்துநாட்டரசைத்தேறவே
கொன்றுமீட்டெய்துதல்கொண்டகொள்கையே. (சOக)

கட்டுரைத்தனவெலாங்கமலக்கண்ணினன்
மட்டுறைத்திருசெவிமடுத்துமைந்தநீ
தொட்டுரைத்திடும்படியருமைதுன்னுதல்
விட்டுரைத்தனனினிவிரைந்துமேவுதி. (சOஉ)

துயிலொழிதோன்றனீமேவிற்றெல்லையோன்
கயிலையம்பொருப்பிணைக்கண்டுமீளவும்
வெயிலெழுவதன்முனேமேவுவோமென
வயிலணியாழியானவனோடேகினன். (சOஙு)

நீலமுற்றியமலையிரண்டுநீணிலாச்
சீலமுற்றியமலைதேடிச்சேறல்போ
லாலமுற்றியகளத்தையன்வெள்ளியங்
கோலமுற்றியமலைகுறுகினாரரோ. (சOச)

நிறைமதிநிகரெனநிறத்தவெள்ளியம்
பொறைமலைதிசைதொறும்பொழியும்வாணிலா
நறைமலரிதழிசேர்நாதன்வார்சடைப்
பிறைமதிநிலவினும்பிறங்கவீசுமால். (சOரு)

அங்குளவிடாகத்தனேகமாயிரம்
பொங்கழலுமிழ்விழிப்புயங்கமாமணி
யெங்கணுமிருளறவிலங்குசோதியாற்
கங்குலும்பகலவன்கரங்கள்கட்டுமால். (௪௦௬)

மீரதருக்களுந்தழைக்கநின்றமுன்
னாரதனதியோர்கவிற்றுநாதயாழ்
பாரதவமர்புரிபச்சைமாமுகி
லாரதர்விடாயைவந்தாற்றுகின்றதால். (௪௦௭)

சங்கரன்மணிவரைச்சாரன்மாருதத்
திங்களினிலவுமிழ்செக்கர்வானின்மேற்
கொங்கவிழ்செழுமலர்க்கொன்றைவாசமுங்
கங்கைநுண்டிவலையுங்கலந்துவீசுமால். (௪௦௮)

வாழ்தருவெள்ளிமால்வரைமருங்கெலாந்
தாழ்தருமருவிகள்சரியும்பான்மைக
ளாழ்தருமாதவரருந்தித்தேக்கியே
வீழ்தருமானந்தவெள்ளமேய்க்குமே. (௪௦௯)

சுருதிகளோசையுந்துதிக்குமாதவர்
தருதிறலோசையுமொலிக்குந்தன்மையாற்
பரிதிசூழ்வெள்ளியஞ்சயிலம்பாரின்மேன்
மருதிடர்தவன்றுயில்வாரிபோன்றதே. (௪௧௦)

கோலமூன்றுடைப்பவக்குழகன்வாழ்மலை
காலமூன்றினுந்தொழக்கடவுளோருறல்
சீலமூன்றகனறுந்தேனைநாடியே
ஞாலமூன்றளிக்குலம்பாய்தலொட்டுமே. (௪௧௧)

தாயினுமினியவன்வரையிற்றண்ணுமை
யாயிரமாயிரமதிரும்பேரொலி
போயருஞ்சேடனூர்பொதுளுமேருவில்
வாயுவன்றியற்றுபேரொலியைமானுமே. (௪௧௨)

மன்னியவுயிர்தொறுநடஞ்செய்வானெதிர்
கன்னியரசைந்துகைகாட்டுங்காட்சிகள்
மின்னலங்கொடிநிலைத்துலவைவீசலாற்
றன்னுடறுளங்குறுந்தகைமைசாலுமே. (௪௧௩)

கற்பனைகடந்தகண்ணுதல்களித்துறு
வெற்பிடையுறவொளிவிளங்குமாலைய
முற்படுசுருதிநூன்முடிவுணர்ந்துள
சிற்பரர்பேரொளிச்சிந்தைமானுமே. (௪௧௪)

பாயிரமாறெழுத்துரைத்துப்பண்ணவ
ராயிரநாமமும்புகழுமாரவ
மாயிரும்பாற்கடன்மதித்தஞான்றெழு
தூயபேரரவம்வந்தொன்றும்பாங்கெலாம். (சகரு)

இன்னணமெண்ணிலவெதிர்ந்துமாமகிழ்
துன்னிடவாலயச்சூழன்முன்னினர்
நன்னர்நாரணர்நனிநிலாவெழத்
தன்னருங்காந்தமொத்துருகுந்தன்மையார். (சகசு)

ஆயிடையண்ணலாங்கமர்ந்தபேரவை
மாயிருங்கதிரொளிமல்கவெண்ணிலாக்
காயிருந்தரளநற்றவிசிற்கண்கள்மூன்
றேயநாயகனிருந்திலங்கநோக்கினர். (சகள)

சிமையமாயிரங்கள்சேட்செல்லவோங்கிய
விமையமாதொருபுறத்திருப்பவிண்ணவர்
சமையமோர்ந்தடிக்கடிதாழ்ந்துபோற்றிடக்
கமையுறுமுனிவர்தங்கணத்துளான்றனை. (சகஅ)

ஆயிரம்படவராநிழலனார்தரு
சேயசெஞ்சடைமுடிதிகழ்ந்துளான்றனைத்
தூயநற்குழையொளிதுன்னவாணகை
மாயிரும்பிறையொடுமலையுமாண்பனை. (சகசு)

தவிசிடையோர்பதந்தயங்கவோர்பதங்
குவிமுயலகன்மிசைகொண்டுளான்றனைப்
புவிபுகழ்துகிர்வரைபோன்றுளான்றனைச்
சுவையமுதனையவெண்டோளினான்றனை. (சஉ0)

புலியதளாடையாப்புனைந்துளான்றனை
யொலியெழுசுருதியா லுணர்வுறான்றனை
மலிபுனல்வறழ்ந்தசூழ்மழைகண்டாலென
வலியவான்றவத்தினர்வந்துநோக்கினர். (சஉக)

புரநகையாலெரிபுராரிதன்முன
நரனெடுநாரணரனுகியன்பினூற்
சரணபங்கயமுறத்தாழ்ந்துபன்முறை
கரனுறமுகிழ்த்திதுகழறன்மேயினர். (சஉஉ)

பொங்கராவெயின்மணிப்பூணும்பூணுநின்
னங்கராகமுமுகந்தணியும்வேணியாய்
சங்கராமேருவெஞ்சாபமாக்கிய
செங்கராசிவசிவாதேவதேவனே. (சஉங)

விண்ணுடைத்திரிபுரம்வெந்துநீறெழப்
பண்ணுடைச்செய்தழல்பரப்புமூரலா
யெண்ணுடைக்காமனையெரித்தபேரழற்
கண்ணுடைக்கடவுளேகாலகாலனே. (சஉச)

தருவதுமுயிரெலாங்காக்குந்தன்மையு
முருவறவொழித்தலுமுன்றனுடலே
கருவராதொழிந்தவர்கருத்திற்கண்டதே
ஞெருவனேயெம்மனோர்க்குரைக்கற்பாலதே. (சஉரு)

நித்தனேநிமலனேநிகழ்நின்னுமனே
யத்தனேயடியவர்க்கெளியவண்ணலே
பித்தனேயாதியந்தங்கள்பேசொணு
முத்தனேயுயிர்தொறுமுலாயமுன்பனே. (சஉசு)

என்றுபற்பலவுரையெடுத்துக்கூறியே
நின்றுளநெக்குநெக்குருகிநேயமோ
டொன்றுகண்ணருவிகளுகுத்தனேக்கியே
யன்றுமாபதியவர்க்கருள்செய்தானரோ. (சஉஎ)

வே று.

துதிக்குநாராரணர்சுவாகதம்வினவி
விதிக்கரியவன்குமுதமெல்லிதழ்திறப்பக்
கதிக்குமுதலேயுனதுகண்ணருளினுலே
மதிக்குறுசுவாகதமுளோமெனவகுத்தார். (சஉஅ)

இவ்விரவினிங்குவருகாரணமியம்பி
னவ்வரமளிக்குதுமெனச்சிவனறைந்தான்
மைவரைநிகர்த்தவர்மலர்க்காமுகிழ்த்தே
கைவரையுரித்தவன்முனின்றிதுகரைத்தார். (சஉகூ)

முன்னர்தருவாளியின்முனைக்கெதிரிலாத
பன்னருநிசாசரர்படப்பொருதுவென்றோ
மின்னுமதன்முட்டிநிலையாவுமுறையாலே
மன்னர்படைவெல்லுமுறைவாய்ப்பவருள்கென்றார். (சஙo)

கொத்திதழியந்தொடைபுனைந்தகொடியங்க
னத்தகைபுரிந்திடுமாண்டொருதடத்திற்
சித்திரவிலோடுகணைசேர்த்துளமுனோர்நா
ளுத்தமர்கள்சென்றுகொடுவம்மினெனவுய்த்தான். (சஙக)

நல்லடியர்பற்பலர்நடக்குநெறிகாட்ட
வில்லுறுபுனற்றடமடுத்தனர்விரைந்தே
சொல்லரியமாமணிசுமந்தபடநாக
மொல்லெனவிரண்டழலுகுத்ததுகயத்தில். (சஙஉ)

புயங்கமலவண்ணலிடுபோர்விலிதுவேயென்
றியங்கியிவர்நீர்நியமமேசநமுடித்து
நயங்கிளருருத்திரமொரேசதாவின்றூர்
வயங்குசிவன்முன்றினிருவாள்விழிகள்போல்வார். (சஙங)

அங்கரவிரண்டுமறைவாகியடல்வில்லும்
வெங்கணையுமாகநாரணர்விரைந்தே
சங்கரவெனும்பெயர்த்தனிக்குடிலையோடு
மிங்கிவர்புகன்றவையெடுத்தினிதின்மீண்டார். (சஙச)

நன்னதிபுனைந்தசடைநாதனருளுய்ப்பச்
சன்னிதியில்வைத்தனர்தவப்பிரமசாரி
கொன்னதிகரித்தசிலைகொண்டுகுணமாட்டி
மின்னதிகரித்தமுனைவாளியும்விசித்தான். (சஙரு)

அவ்வளவின்முட்டிநிலையாவதுமுணர்ந்தே
மைவரைநிகர்த்தபுயன்வன்னியைவணங்காச்
செவ்வணனருட்கொடுசெலுத்துமறைகாதி
னுய்வுறவுரைத்தனனரன்பெரிதுவப்ப. (சஙசா)

பற்பலரைவாட்டியிகல்பாரதமுடித்தே
வெற்றிபுனைவீரெனவிளம்பியருணல்க
மற்றிவர்மகிழ்ந்துசிலைவாளிபுனலுய்த்துப்
பற்றறுபுராரியருகெய்தினர்பணிந்தார். (சஙஎ)

செங்கதிரனந்தமொருதிக்கெழுவதேய்க்குந்
தங்குவடிவும்பவளவாயுமிருதாளு
மங்கலம்பொருந்துவிழியன்னையழகோடும்
புங்கவர்பிரான்மதலைபுந்திகுடிவைத்தான். (சஙஅ)

நீலமுகின்மேனியிடைநீட்டுமலர்யாவு
மாலகளன்மீதவையவங்களினெதிர்ந்தே
வோலிடுபுராரியுமுராரியுமுணர்ந்தோர்க்
கேலுறவொரேபொருளெனும்படிதெளிந்தான். (சஙகூ)

முன்னர்படைவேடனெனமுன்னுறுதல்கண்டான்
பின்னரணியேற்றில்வருபெற்றியுமுணர்ந்தா
னன்னையொடும்த்தனுறுபேரவையறிந்தா
னன்னரனலாதெவர்கொனற்றவமிழைத்தோர். (சச0)

மங்குனிகர்வண்ணரிருவோரையுமனத்துட்
சங்கரன்மகிழ்ந்துவிடைதந்திடவணங்கிப்
பொங்குகடலொத்தருள்புகழ்ந்தனரகன்றூர்
தங்குபுனிதான்றணவுகன்றனையதக்கோர். (சசக)

மாலுலவுமாலையமும்வான்முழுதளந்த
கோலமுயர்நன்னிலைகொள்கோபுரமுமன்பாற்
சாலவலமாகநனிசார்ந்துவரைநீங்கி
யேலவகல்வான்விசையினேகினர்விரைந்தே. (சசஉ)

ஆசறைகிலாதுபுவியின்கணனுகித்தம்
பாசறைபுகுந்தனர்களிப்பரிசனைத்துந்
தேசுறநரன்கனவுகண்டதிசயத்தோ
டேசறவுணர்ந்தனனிருந்துயிலகன்றே. (சசங)

முட்டிநிலைசெப்புமறையாவுமுறையாலே
கிட்டுநனவின்கணுமுறுங்கிருபைகாணு
மட்டிலரனுமமலர்வாயுறமொழிந்தான்
றிட்டியினெதிர்ந்தவொளிசிந்தையகலாதோன். (சசச)

மாலும்வயமீறிரதசூதனெடுவாய்மை
சாலுறவுரைத்திடுமியற்கைதவிர்குற்றே
காலைதருதன்கடன்முடித்திடுகருத்தா
லேலவொருபொய்கையருகெய்தினனகன்றே. (சசரு)

இங்கிதுநிகழ்ந்தபரிசேகுமறன்மைந்த
னங்கிரவுதீருமளவுந்துயிலிலானுய்ப்
புங்கவர்களுமமுரைசெய்துபுலரிக்கட்
டங்குகடன்முற்றினனறந்தவறிலாதோன். (சசசா)

அங்கவர்கள்சிந்துபதியைத்தனிபுரந்தா
ரிங்கிவர்துணித்திடுமிகற்சபதமேற்றார்
தங்குதலறன்கொலெனவேழ்பரிகடாவுஞ்
செங்கதிரவன்கடிதுதேரின்மிசைவந்தான். (சசஎ)

பதின்மூன்றும்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - சுஉஉ.

பதினான்காம்போர்ச்சருக்கம்.

---

* அரியதன்கலைவாண்மதியமுங்கொதிகொளாலமுந்தனதிடத்தடக்கி
யுரியவொண்கங்காநதிக்கொருபதியாயுரைபெறுமுயர்மகோததியிற்
பரியதிண்சிலையோடம்பெலாமுகந்துபற்குனப்பொருப்பிடைப்பொழியுங்
கரியவண்புயலைக்கைதொழுமவரேகருவிலேதிருவுடையவரே. (க)

* காலையாதபனைத்தருமன்மாமதலைகைதொழுகடன்முடித்தருளிச்
சாலையார்தழல்செய்வேள்வியந்தணர்க்குத்தானமுந்தகுவனவழங்கி
மாலையாமிரவிற்றனஞ்சயன்மொழிந்தவஞ்சினம்வழுவறமுடிப்பான்
வேலையாரரவப்பலபணைமுழங்கவேந்தவைபோந்துவீற்றிருந்தான். (உ)

பொலன்றருமிளையோர்மூவருமிடும்பிபுதல்வனையாதியாஞ்சிறுவர்
கலன்றருமுடலாரனைவருஞ்சேனைக்காவலன்றுருபதன்முதலா
நிலன்றருமரசர்யாவருமனுகிநிருபனைவணங்கிவீற்றிருந்தார்
வலன்றருகலைகணிறைந்தமாமதியைவளைந்தநாட்கோட்களின்மான. (௩)

அமலவேதியர்களாசியுமரசராண்மையுஞ்செவிமடுத்திருந்த
விமலவேந்தெதிரில்வணங்கிமீண்டெழுந்துவிறலுடைவாயில்காப்போர்கள்
நிமலமாதவன்வந்தனனெனவுரைப்பநிறைகதிர்கண்டபாங்கலருங்
கமலமாமலரொத்தெழுந்துறத்தழுவிக்கலந்தனரிருவருந்தவிசில். (௪)

தாத்தகிபுனைவோனெனும்பெயர்மருவார்சமர்முனைபுனைதருவின்மைச்
சாத்தகியுருவின்சாயையிற்றிருமாறன்னுடன்றவிசிருந்ததற்பின்
கூத்தகிச்சிரத்தினியற்றினோன்றனக்குமுரசுயர்கொடியினான்புகன்றான்
மாத்தகிகனலாற்காண்டவமழித்தோன்வஞ்சினமுடித்திடும்வாய்மை. (௫)

அக்கணங்காலைக்கடன்முடித்திமையோர்க்கரியவனடிமலர்தொழுது
மைக்கணின்மடமான்றிருவடிபுனைந்துமாதவனுமங்களேத்தி
முக்கணனருள்செய்புட்டிலுஞ்சிலையுமுறைப்படிதொழுதெடுத்ததற்பின்
மிக்கணங்குழலும்வேந்தவைபுகுந்துதம்முனைத்தொழுதுவீற்றிருந்தான். (௬)

அகம்புறனிரண்டுமொருமையேநிகழ்நல்லறன்மகனவன்றனைநோக்கி
முகம்புனைகலையுந்தேசுமின்றுனக்குமும்மடங்குயர்ந்துளதென்னோ
நகம்புரைதோளாயுரைக்குதியென்னநகையொடுமான்முகநோக்கிச்
சகம்பொதுளியவெண்குடையினான்றனக்குத்தம்பிகட்டுரைத்தனன்மன்னோ.

கயிலையின்புடைசென்றண்ணலாரருள்கள்கைக்கொளுமியற்கையுமீண்டு
மெயில்வளைநகரியடைந்ததுமீசனியலருட்செய்கையுநம்பாற்
பயிலுமிப்பெருமான்றனக்கணிமலர்கள்பரமன்மேலிருந்தவப்பரிசு
மயிலுமிழ்படையாரனைவருங்கேட்பவறைந்தனனறந்தவாவனுசன். (௮)

இவ்வகைத்திருமாலுடன்புகுந்தடைந்தவியலெலாங்கனவுறநிகழ்ந்த
தவ்வளவன்றுபெற்றபேறனைத்துமனுகியதென்வயினென்னச்
செவ்விகொண்முகங்கடேசினிற்பொலிந்துதிண்புயஞ்சேட்செலவோங்கி
யுய்வகையடைந்ததெனச்சிவனுமமோதினரார்த்தனருகந்தார். (௯)

வரைபுரைபுயத்தான்மீளவும்புகல்வானின்னினுமாதவனுதவுந்
திரைபுரையருளுக்கிலக்கமேதையாதெளிவிலேமேதுகண்டுரைப்போங்
குரைபுரைபுயலாற்குளிர்வுறுமுயிர்களுயிர்களாற்கொண்டலுக்குளவோ
நிரைபுரைகைம்மாறெனப்பலதுதித்தானிருபன்மாதவற்கிதுமொழிவான். (௧௦)

ஐயநீயெமக்காவணங்குழந்தண்ணலணிவரைக்கெய்திமீண்டதுவோ
பொய்யெனுமிடையாட்காடையீந்ததுவோபுரவலன்செய்ததீங்கனைத்து
மெய்யடாவண்ணங்காத்ததோயாதோவிளம்புவதெனப்பலமொழிந்து
கையடையாகவிசயனைத்திருமால்காமுறவளித்தனன்கருதி. (௧௧)

மாயவன்புகல்வான்வருந்துரேஸிரவிமாறுமுன்ரூறுபாய்மான்றேர்த்
தியவன் றன்னைமுடிதுணித்துன்பாற்சேருதுங்காணவீண்டெனனத்
தாயவன்புடனுத்தரம்பலநடத்தித்தார்புனைவேந்தரோடெழுந்து
பாயவன்புரவித்தேர்மிசைபுகுந்தார்படையெழுபராகம்விண்படர. (கஉ)

* அடைந்தவரிடுக்கணகற்றுதற்கெண்ணியாடகப்பொருப்பினூற்கடலைக்
கடைந்தமுதளித்தகருணையங்கடலேகடும்பரிச்சயந்தனங்கடவ
மிடைந்தொளியுமிழும்வேற்படைத்தடக்கைவீமனுமினைருரும்பலரும்
குடைந்திருபுறமுங்கைவரமகவான்மைந்தனுமமர்க்களங்குறுகி. (க௩)

* சோனையம்புயலிற்கணைதொடுபதாதிதுரகதந்துரகதத்தடந்தேர்
யானையென்றுரைக்குநால்வகையுறுப்புமிராசமண்டலநிலையாகத்
தானையங்கடலைமிடலுறவகுத்துத்தாமுதற்பேரணியாகச்
சேனையின்பதியாமைத்துனனின்ரூன்றேவரும்யாவரும்வியப்ப. (கச)

அணிந்தமாமகுடம்வில்லிடக்குழைகளாழ்பிலத்திருளையுந்துரக்கத்
திணிந்தகாண்டீவமேருவையிகழத்தேர்தனிற்சுவேதவாசிகள்விண்
டணிந்தமாருதத்தைநகவொருவலவன் றண்புயலேழையுமருட்டத்
துணிந்தெழுவிசயன்சேனையங்கடன்மேற்றுன்னுறுவடவைபோற்றிகழ்ந்தான்

இத்தகையிவரீண்டிவ்வணநிற்பவிரவெலாந்துயிலுருதிருந்து
வித்தகவிரவிதோன்றுமுன்னெழுந்துவேதியன் றன்கடனாற்றி
யெத்தகையினருஞ்சூழ்தரச்சமர்செயெல்லைசார்ந்தெழுகடல்பெயர்வ
தொத்தெழுபடையைப்பலமுறைபிறித்தேயூகமாக்கினன்மறையுணர்ந்தோன்.

மூன்றியோசனையிற்சூசியாம்வியூகமுறைப்படியானைதேர்பரியா
லூன்றிடவமைத்தானதன்றொகையுரைப்பவுவர்ச்சதுர்த்தசசகத்திரமாந்
தோன்றுதேராறுபதாயிரமிலக்கந்துரகதம்பத்திலக்கமதா
மேன்றெதிர்பதாதியிவைக்கிடைநடுவேயிருத்தினன்சிந்துராசனையே. (கஎ)

மித்திரன்புதல்வனச்சுவத்தாமன்வின்முனைக்கிருபனேரில்லா
மத்திரத்தரசன்பூரிசராமெய்வலிவிடசேனன்மற்றிவரை
யத்திறலாசைப்புரப்பவராக்கியருச்சுனனன்றுமாமறலி
யித்திசைநோக்கற்கென்னுமாற்றலனென் றியம்பவாங்கவன்மகிழ்ந்திருந்தான்.

பச்சிமதிசையிலணிபடநான்குபடையுறுப்புடன்வகுத்ததனை
யிச்சைகொள்பதுமவியூகமதாக்கியிகலுடைக்கிருதபன்மாவு
மச்சமிலடற்காம்போசனுமாதியரசரெண்ணிறந்தனர்தம்மை
நிச்சயங்காமினெனப்புகன் றமைத்தானிறைவுறுசிலைமறைநெறியால். (கக)

* பாப்புவெம்பதாகைப்பார்த்திவன்பணியாற்பத்திரண்டியோசனைப்பரப்பிற்
றிப்புறஞ்சூழநடுவணிற்பதுபோற்செயத்திரதனையிடைநிறுவிக்
கோப்புறப்பரிதேர்குஞ்சரம்பதாதிகூறுநான்முறையணிநிறுத்திக்
காப்புறத்திசைகளெட்டினுநெருங்கக்காவலர்யாரையுநிறுத்தி. (உ0)

* அணிகளொன்றுதந்தாலவகைவியூகமாக்கியச்சேனையின்சிரத்து
மணிமுடிபுனைந்துவைத்தெனவலங்கல்வலம்புரிமார்பனைநிறுத்திப்
பணிவுறுமவுணர்பதாகினிவகுத்தபார்க்கவனிவனெனப்பயில்போர்த்
துணிவுடன்பஃறேர்ச்சூழ்வரச்சகடதுண்டத்துநின்றனன்றுரோணன். (உக)

வாசியிலிபத்திற்றேரிலெண்பட்டமன்னரும்வரிசிலைவாள்வே
லூசியினுழையாவண்ணநற்பதாதியோரிரண்டிலக்கமும்போர்ப்பத்
தேசிகனமைத்தவணிமுகத்தனுகான்சென்றுநற்றுரோணன்முன்புகுந்து
தூசியினின்றுன்வஞ்சினமுரைத்ததுன்மருடணனெனும்பெயரோன். (உஉ)

பற்றலன்மேவிலிரவிபோமளவும்பகழியாலவன்றனைமுனைந்து
பெற்றவிவ்வியூகம்புகாவணநிறுவல்பெரிதுமெங்கடனெனமேற்கொண்
டுற்றநற்கிருதவன்மனுந்துச்சாதனனுமெண்ணுதற்கரிதாய
வெற்றிநாற்படையுஞ்சூழ்தரத்தூசிமேவினர்தேவரூர்வெருள. (உங)

சக்கரமுசுண்டிக்கப்பணங்கவணற்சத்திதோமரமெழுத்தண்டு
செக்கரங்கொலைவாண்மழுவுமுங்கொழுநற்சிலைமுதற்பலபடைத்திரள்க
ளெக்கரங்களினுங்கொண்டவர்குப்புற்றெறிபடைவிதிர்த்தினியெவரே
திக்கரமுறவந்தேற்பவரென்னத்தெழித்தனர்பழித்தனர்சிறந்தோர். (உச)

மந்தணமிருந்தகங்குலின்முதனுண்மன்னொடுசொல்லியவகையே
யந்தணனணிந்தவிரகினைவிமானத்தமரருமதிசயித்துரைத்தார்
சந்தணிகடகவாகுநீள்சிகரிசயத்திரதனையொருபகலிற்
கொந்தனலுருமேய்தனஞ்சயன்பொருதுகோறலேயரிதெனக்குறித்தே. ( )

ஆழ்தடம்புணரியொலியும்வாய்மடங்கவாரவத்துடனுறுமணிகண்
டேழ்தடக்கிரிகளிணையலவென்னுமிருபுயத்தொருபெருமடங்கல்
வாழ்தடங்கண்ணனிளவலைத்தன்றேர்மீதுறவைத்திதுபகர்ந்தான்
றுழ்தடந்தேர்மேலிருந்தவேதியன்றன்றனுவலியிருசெவிதணித்தே. (உசு)

வேந்தர்கள்வேந்தன்றனக்கிவனமதுவேந்தனைக்கவர்தருவின்மை
போந்தரவரங்கணல்கினன்வருவான்போர்க்கினிவஞ்சினம்புரப்பான்
சாந்தணிதோளாயானவ்வாகினியுட்சார்ந்திடிற்றனுமறையவனை
யோய்ந்துறத்துரக்கும்வல்லபமுனக்குண்டொருவராருனைநிகர்வலியோர். ( )

சிந்துபூபதியைக்கோறலுமரசைக்காத்தலுஞ்செயிலிரண்டிதனு
ளுந்துநம்மரசைக்காத்தலுன்கடன்மற்றென்றுமெங்கடனெனவுரைப்பக்
கந்துறழ்களிற்றோன்மகிழ்ந்திதுபுரிவன்கருதலையாதுநீகடிதே
முந்துறப்புகுந்துமுருக்குதிசிந்துமுதல்வனையெனச்சிலமொழிந்தான். (உஅ)

மற்றவன்மீண்டுதனதுதேர்புகுந்தான்மருங்கினிற்றேர்மிசையிருந்த
கொற்றவன்றனக்குமாருதிதனக்குங்குவித்திருகரங்கணண்புடைய
சுற்றமன்னவர்க்குஞ்சேனையின்பதியாந்தோள்வலிமைத்துனன்றனக்கு
முற்றவைபுகன்றுங்கவருடாங்கியும்பர்நாயகன்மகனுவந்தான். (உகூ)

* செய்த்தலைக்கயலும்வாளையும்பிணங்குஞ்செழும்புனற்சிந்துநாட்டரசைக்
கைத்தலத்தடங்கும்பொருளெனக்காத்துக்காவலர்நின்றபேரணிகண்
டுத்தமோசாவுமுதாமனுமுதலோரோரிருபுறத்தினுஞ்சூழ
வித்தகவலவன்செலுத்திடத்தடந்தேர்விசயனவ்விளைஞர்மேனடந்தான். (ஙம)

வேறு.

பூவதத்தறப்போர்வருபுரவலன்சேனைக்
காவதத்துறமுருக்கியகனலெனக்கறுத்துத்
தாவதத்துவாம்பரித்தடந்தேர்மிசைதரித்தோன்
றேவதத்தமுமுழக்கினன்சிலையுநாண்டெறித்தான். (ஙக)

முருக்குமூழிவெந்தீயினைமூட்டியவுலவை
பெருக்குமாறெனப்பாஞ்சசன்னியப்பெயர்பெற்ற
தருக்குவெள்வளைகுறித்தனன்மாதிரந்தகர்ந்து
குருக்குமாரருள்ளவரெலாமாகுலங்கொள்ள. (ஙஉ)

புவிக்கொடித்துயர்போக்கிடவுதித்தவன்பொருவில்
கவிக்கொடித்தடந்தேர்விடுகண்ணனைநோக்கித்
தவிக்கொடிப்படைதாங்கவந்திருந்ததுன்முகன்றன்
செவிக்கொடிக்கயத்தணிமிசைச்செலுத்தெனத்தெழித்தான். (ஙங)

மாண்டகும்பெருமாதவனன்றெனமதித்துத்
தூண்டினன்றடந்தேரினைத்தோன்றலுஞ்சிலைகொண்
டீண்டுவான்கணையேழ்முகில்பொழிவதொத்திறைப்ப
வாண்டவன்படைநான்குநின்றழிந்ததாலாவி. (ஙச)

வீடுசேனைகண்டொருதனித்தேரவன்மிசைபோய்
நீடுதன்சிலைகோலியேபலகணைநிரப்ப
வேடுகொண்டதார்வினெரிக்கணைகளாலிரதம்
பீடுசிந்திமெய்பிளப்புறத்துன்முகன்பெயர்ந்தான். (ஙரு)

தக்கவாசியுமிரதமும்வலவனுந்தக்கோர்
மிக்கவெஞ்சிலைவிலோதனம்வில்லொடுஞ்சிதைத்துப்
பக்கமாயிரம்பகழிதோய்ந்துதிரநீர்பாய
வக்கணந்துரந்தானவனோடினனழிந்தே. (ஙசு)

தனியினெய்துறுதபனனையொருதனித்தடுத்த
பனியினுயவன்வென்னிடுபரிசினைநோக்கித்
துனியினுயதுச்சாதனன்றேன்றினன்றொடுத்தா
னினியிவ்வாசுகமெவர்தொடுப்பாரெனவியம்ப. (ஙஎ)

தொடுத்தவாளியுமாங்கவன்சிலையையுந்துணித்துக்
கெடுத்துவாகினிபவனுடையுடலெலாங்கிளர
மடுத்தவான்கணையருவிசோர்வரையெனலாக்கி
படுத்ததேரையும்போக்கலுமவன்வெருண்டகன்றான். (ஙஅ)

வையமேழுடையான்றனதிளவறன்மானம்
பொய்யதாக்கியேபோற்றினனுருயிரிப்பாற்
செய்யதாமரைக்கண்ணனங்குனார்ந்துதேர்செலுத்தப்
பெய்யுமாமுகின்மேனியான்வாகினிபிளந்தான். (௩௯)

கரங்களெத்தனையெத்தனையாயிரங்கால்கள்
சிரங்களெத்தனையெத்தனையாயிரஞ்செழுந்தோ
ளுரங்களெத்தனையெத்தனையாயிரமுடல்கள்
சரங்களிற்றுணிந்துதிர்ந்தனநரன்செயுஞ்சமரில். (௪௦)

கரிகள்பட்டனபட்டனகந்திருவங்க
ளெரிகள்பட்டனபட்டனவெழின்மணிநெடுந்தேர்
நெரிகள்பட்டனநெடுந்தசைநரம்பொடுசெந்நீர்
சொரிகள்பட்டனநதிதொறுஞ்சுழித்தனசுழிகள். (௪௧)

அனையகாலையிற்கிரீடியுந்தன்மனமழன்று
முனையழிந்துபோம்வேந்தர்வேந்திளவல்பின்முடுகி
வினையமோர்ந்துளாய்வென்கொடுத்தோடுதலைவனே
நினையவோடினுமுளகொலோவுய்குதனிசுழ்த்தாய். (௪௨)

சூதுமுன்பொருதினத்தெமைத்துரும்பினின்மதித்துக்
கோதுறும்பலகொடுமொழிகுறித்ததுமறந்து
காதுவெஞ்சமர்முனையிடைக்கலங்கிவென்னிடுதல்
போதுமோபுயவலியெங்ஙனுகுத்தனைபுகலாய். (௪௩)

அன்பிறந்தவனியிலுயிரனைத்தையுமழிக்க
முன்பிறந்தவன்றன்னையுமுடித்துநீமுடிந்து
பின்பிறந்தவர்தம்மையும்பெயரறக்களைவோ
யென்பிறந்ததின்றுயிர்க்கினியேகலைமன்னே. (௪௪)

என்றுகூறியோரிருகணைவென்னிடையேற
வன்றுபோக்கினன்வன்றிறலருச்சுனனென்போன்
கொன்றுநீக்குவமினன்றுகொறிருகியுங்குறியான்
சென்றுதேசிகனிருந்துழியடைந்தனன்றியங்கி. (௪௫)

நீலமேனியனங்கொருதேரின்மேனின்ற
கோலவெஞ்சிலையாரியனருகுறக்குறுகி
யேலவெங்கரமுகிழ்த்தெனக்கெந்தையுமரியுஞ்
சாலுமுன்பனுநீயுமோர்தன்மையாந்தக்கோய். (௪௬)

உரவித்தாழ்கரன்சேயினுக்குவமையென்றுரைக்கும்
புரவித்தாமனும்யானுமொன்றுய்மனம்பொறுத்தென்
றிரவிக்கொத்தவனியம்பியீண்டினிவிடையெனலும்
விரவித்துய்மறைவேதியன்சிறுநகைவிளைத்தான். (௪௭)

தயித்தியக்குழுவகற்றுறச்சக்கரப்படையோ
னயிர்ப்புறுதுறுமாறெனவணிபடமோதி
யுயுத்தவெங்களம்புகுவைநீயுடன்றெனையுடற்றிச்
செயித்தலாதுசெல்கலையெனத்திறற்சிலைவளைத்தான். (சஅ)

வேறு.

* சென்றவத்தனஞ்சயற்குமுனைகுலைந்தசேனைவாய்
நின்றவத்துரோணனுக்குநீடுபோர்விளைந்ததா
லொன்றொடொன்றுதாகதங்களுருமின்மிஞ்சியதிர்வுறக்
குன்றுகுன்றொடுற்றெனக்கொடிகடேர்குலுங்கவே. (சகூ)

* முட்டியாலுநிலையினாலுமொய்ம்பினாலுமுராணுறத்
தொட்டவில்லுநிமிர்வறத்தொடுத்தவின்மையாலுமுன்
கிட்டியாசிரியனுங்கிரீடியும்பொரப்பொரப்
பட்டதில்லையிருவர்மேலும்விட்டவிட்டபகழியே. (ருO)

* தேரிரண்டுமிடம்வலந்திரிந்துசூழவரமுனைந்
தோரிரண்டுதனுவும்வாளியோரொர்கோடியுதையவே
காரிரண்டெதிர்ந்துதம்மின்மலைவுறுங்கணக்கெனப்
போரிரண்டுவீரருக்குமொத்துநின்றபொழுதிலே. (ருக)

* இகல்செய்வெஞ்சிலைக்கைவீரவிங்கிலந்தனக்குநின்
பகைவனின்றவந்நிலப்பதிற்றிரண்டியோசனை
புகலுகின்றபொழுதுசென்றதென்றவட்பொருமன்மா
லுகளுகின்றபரிகொடேரையுள்ளுறச்செலுத்தினன். (ருஉ)

* எதிர்த்ததேர்விழித்திமைக்குமளவின்மாயமிதுவெனக்
கதித்துரங்கவிசையினோடுகஞ்கரந்துகழிதலு
மதிர்த்தடர்ந்துபின்றொடர்ந்தடுத்தபோதருச்சுனன்
கொதித்துவந்தகுருவொடம்மதிருகின்றுகூறுவான். (ருங)

* ஐயநின்னொடமர்திளைத்தலமருக்குமரிதுநின்
செய்யபங்கயப்பதங்கள்சென்னிவைத்தசிறுவன்யான்
வெய்யவென்சொல்வழுவுறாமல்வேண்டுமென்னமுறுவலித்
தெய்யவந்தமுனியுமாறியேகுகென்றியம்பினான். (ருச)

* ஈசனால்வரங்கள்பெற்றவிந்திரன்றன்மதலைகாம்
போசனாதியெண்ணின்மன்னர்பொருதழிந்துவெருவியுட்
கூசநாலுபாலுநின்றநின்றசேனைகொன்றுபோய்ப்
பாசநாமவணியினின்றவீரரோடுபற்றினான். (ருரு)

* முன்னர்முன்னர்வந்துவந்துமுனைகடோறுமுந்துறு
மன்னர்தந்தம்வில்லும்வேலும்வாளும்வென்றிவாளியிற்
சின்னபின்னமாகவெய்துசெல்லுமத்தனஞ்சய
னின்னதன்மையானெனவியம்பவல்லர்யாவரே. (ருசூ)

கிருதவன்மனேடுயர்ந்தகிளருமன்னரெதிருறப்
பொருதபோதுகன்னலொன்றுபோயதென்றுமான்முனிந்
தொருதனிச்சிலைக்கையானையுன்னலாதுகொல்கென
விருதனேர்சரந்தொடுத்துவீரன்மார்பிலேவினன். (ருஎ)

பட்டயர்ந்துதேரின்மீதுவீழ்தல்கண்டுபச்சைமால்
கட்டயங்களைத்துரந்துகவிகொடேரைமுடுகலுங்
கெட்டயர்ந்ததுருள்களாலனேகசேனைகிளர்கணை
விட்டயர்ந்திறந்ததெண்ணிலாதசேனைவெள்ளமே. (ருஅ)

* சரந்தொடுத்தவயவரைச்சரத்தினிற்றனித்தனி
யுரங்குளிக்கவாகுவீழவுதரமூழ்கவொளிமுடிச்
சிரங்களற்றுமறியவென்புசிந்தவாய்கடுளைபடக்
கரந்துடிக்கவிருபதங்கடறியவேகலக்கினன். (ருகூ)

* கலக்கமுற்றுவில்லிழந்துகவனமாவிழந்துமே
லிலக்கமற்றகளிறிழந்துகொடிகொடேரிழந்துபோ
யுலக்கவிட்டளக்கர்வாயுலம்பவோடுகலமெனத்
துலக்கமிக்குவருதல்கண்டுசுரருநின்றுதுதிசெய்தார். (சுo)

கலங்கிவீழ்ந்தகிருதவன்மன்மீளவுங்கனன்றெழுந்
தலங்கல்வேலுதாமனேனையவனெடுங்கொடுங்கனற்
சலங்கொள்வாளியான்மலைந்துதகுதிகொண்டுகொடியபோ
ரிலங்கவேயியற்றினுனிரண்டுகன்னல்காறுமே. (சுக)

* தனஞ்சயன்றருங்கொடுஞ்சரங்கள்வந்துசார்தலான்
மனந்தளர்ந்திளைத்தபின்னர் * வருணராசன்மாமகன்
கனன்றெழுந்துசேனையோடுவந்துகார்முகங்குனித்
தினங்கொள்வாளியேவினனெதிர்ந்தபோரிலீறிலான். (சுஉ)

* ஈறிலாதவீரன்வந்தெதிர்த்தகாலைவீரரின்
மாறிலாதவிசயன்விட்டமறைகொள்வாளியாவைஃுஞ்
சேறிலாதசெறுவில்வித்தசெந்நெலென்னவவனுடற்
பேறிலாமன்முனையுறப்பிளந்துகீழ்விழுந்தவே. (சுங)

* விழுந்தவாளிகண்டுபின்னும்விசயன்மூரிவிற்குனித்
தழுந்தவாளியொன்றுபத்துநூறுவன்பொடடசினு
னெழுந்தவாளிவாளியால்விலக்கவேவியாசுகங்
கழுந்ததாகவவனெடுத்தகார்முகங்கலக்கினன். (சுச)

* முகங்கலங்கமெய்கலங்கமுடிகலங்கமூரிமார்
பகங்கலங்கமற்றெருர்தண்டருச்சுனன்றன்மேல்விட
நகங்கலங்கவுருமின்வந்ததததனையும்பார்நாயகன்
சகங்கலங்கவேற்றனன்றனுதுமெய்பினகவே. (சுரு)

---

* வருணராசன்மகன் சுதாயு.

* ஆகவத்தில்விசயனுய்யவையன்மெய்யிலறையுமுன்
மோகரித்தெறிந்ததெவ்வன்முடிதுளங்கிமண்மிசைச்
சோகமிக்குவிழுதல்கண்டுதூரகாரியாதலான்
மாகமுற்றவமரர்செம்பொன்மலர்பொழிந்துவாழ்த்தினர். (சுசு)

* வாழிவாழிகுந்திமைந்தன்வலவன்வாழிவாழியே
வாழிவாழியவனியுய்யவந்தநாதன்வாழியே
வாழிவாழிகாளமேகவண்ணன்வாழிவாழியே
வாழிவாழிவாசுதேவன்வாழிவாழிவாழியே. (சுஎ)

வேறு.

* என்றியாவருந்துதிசெயவிரகினாலெதிர்த்தகாவலன்றன்னைக்
கொன்றபோதுதன்னுயிர்பெறுதனஞ்சயன்கொண்டல்வண்ணனைப்போற்றி
நின்றன்மேனியிலெறிகொடுங்கதைபடவெறிந்தவனெடுவானிற்
சென்றமாயமொன்றிருந்தவாறடியனேன்றெரியுமாறுரையென்ன. (சுஅ)

* பன்னவாதையென்றொருத்திதாய்தந்தையும்படுதிரைப்பரவைக்கு
மன்னவன்றரப்பெற்றனன்பலபெரும்படையொடும்வலிகூரத்
துன்னுநாமமுஞ்சுதாயுமற்றொருவராற்றோற்றுயிரழிவில்லான்
முன்னிராயுதன்மிசையிவன்படையுறின்முடிவுறும்வரம்பெற்றான். (சுகூ)

* எறிந்தவெங்கதைகொன்றிடும்படைக்கலனெடுத்தவருடற்பட்டா
லறிந்துநானிடையேற்றலினவனுயிரழிந்ததென்றருள்செய்தான்
பிறிந்தயோனிகளனைத்துமாய்முதலுமாய்ப்பெருமிதமறந்தீண்டுச்
செறிந்தவர்க்கொருசகாயனாயருந்துயர்தீர்த்திடுந்தேர்ப்பாகன். (எ0)

நகஞ்சிதைந்துவீழ்திறனெனச்சுதாயுவாம்நாமவேந்துடல்வீழ
வகங்கலங்கியற்புதமடைந்தியாவருமாகுலப்படுமேல்வை
முகம்புழுங்கினனெறிந்தனன்கரங்களம்முனைபுகுந்தமர்செய்தா
ளிகம்பரந்தெரிசுதீக்கணப்பெயருடையெதிரிலாக்காம்போசன். (எக)

தெருண்டசிந்தையனவன்விடுகணைகளைச்சிதைத்தவன்றேர்ப்பாய்மா
மருண்டுசிந்திடமாய்த்துமுன்றருங்கணைமார்பிடையழுத்திப்பின்
வெருண்டுலைந்திடவோர்கணையக்கணம்விசினானுயிர்வீந்தாங்
குருண்டுமண்மிசைவீழ்ந்தனனேங்கலொன்றுலவையான்விழல்போன்றே. ()

இறந்துநீங்கலுஞ்சுதீக்கணன்முரணுடையியற்சதாயுவும்வென்றி
மறந்தவானயுதாயுவுமுனைந்துபோர்வகுத்தனரதுபோழ்திற்
சிறந்தவிந்திரன்மகன்பிறைக்கணைகளிற்சென்னிவேறுடல்வேறாய்த்
திறந்துவீழ்தலாற்புரவலன்பெரும்படைதிகைத்ததாலுயிர்ப்போங்கி. (எங)

வீழ்ந்தவேந்தர்தஞ்சிறுவர்கள்பெருவலிவிறலுடைநியதாயுத்
தாழ்ந்திடாததீர்க்காயுவென்பவரெதிர்தாக்கிவாளிகளுய்ப்ப
வாழ்ந்தபேரறிவுடையவனத்தனோடடைமினென்றம்பேவிப்
போழ்ந்தகாலையிலிருவருமொருகணப்போதினிற்களப்பட்டார். (எச)

வேந்தர்வேந்திதுநோக்கியேகலிங்கர்தம்விறற்படைமீதேவக்
காந்துகண்ணுடைக்கழைசுளிகந்தடுகரடவெங்களியானை
பூந்தராதலநடுக்குறவெண்ணறுபொருப்பெனக்கொடுசார்ந்தே
யேந்தலாமொருமடங்கலைவளைத்தனரெண்ணறுமிகன்மன்னர். (எரு)

யவனர்சோனகர்பப்பரர்மிலேச்சரெண்ணிறந்தவருடனெய்தித்
தவனனுட்கிடவார்த்தருங்கணைமழைசராசனந்தொறுமுய்ப்பக்
கவனவெண்பரித்தேர்மிசைவருமொருகாளைபுன்னகையோடும்
பவனசாயகமேவினன்பூனையிற்பட்டதப்பரிவாரம். (எசு)

கரங்களற்றனமத்தகம்பிளந்தனகாற்றுணிந்திடலோடுஞ்
சிரங்களற்றனகுடர்சரிந்தனபலசிந்துரகடகங்க
ளுரங்களற்றனதெறித்தனதலைகள்கையுற்றவெம்படையோடு
மரங்களற்றெனவற்றனர்மிலேச்சர்தம்வாகினிமடிவெய்தி. (எஎ)

எண்ணிறந்தவர்பொடிபடமுடியுடையிந்திரன்கணையேவப்
புண்ணிறந்துநாற்படைகளுமரும்பொடிபட்டதங்கெதிர்ப்பட்டோர்
மண்ணிறந்துவீழ்ந்தவரலாதுள்ளவர்மடுக்கரையழிநீர்போ
லுண்ணிறைந்துகளச்சமொடோடினரும்பருநகைசெய்தார். (எஅ)

* கடிகைமுப்பதுஞ்சிந்துவுக்கரசனைக்காக்குமாறறைகூவி
யிடியிடித்தெனப்பல்லியமார்த்தெழவெழுகடற்படையோடும்
படிநடுக்குறப்பணிக்குலநெளித்திடப்பட்டவர்த்தனருள்ளார்
முடிதரித்தவரனைவருந்திரண்டொருமுனைபடவெதிர்சென்றார். (எகூ)

* பரிதியால்வளைப்புண்டசெம்பரிதியிற்பற்குனன்றனுவாங்கித்
தெரிசரங்களோரொருவருக்காயிரஞ்சிரமுதலடியீரு
நெரிதரும்படிதொடுத்துவெங்கொடிபரிநேமிதேர்பலகோடி
கரிகளுந்துணிபடப்படமலைந்தனன்கடிகையொன்றினின்மாதோ. (அ0)

* போரில்வெவ்விடாய்தணிவுறக்களத்தினிற்புறங்கொடுத்தவர்சோரி
நீரின்மூழ்கியுங்கழுகிடுகாவணநீழலாறியுஞ்சென்றார்
தேரில்வாசியிற்களிற்றில்வந்தவர்களிற்சேவடிசிவப்பேற
யாரியார்குதித்தோடுதலொழிந்தவரெறிபடைவீழ்த்திட்டே. (அக)

* நின்றுபட்டனர்தனித்தனியமர்புரிநிருபர்முந்துறவோடிச்
சென்றுபட்டனர்சேனைமண்டலிகர்வெஞ்சினம்பொழிசிறுசெங்கட்
குன்றுபட்டனபட்டனநவகதிக்குரகதக்குலம்யாவு
மன்றுபட்டவர்க்குறையிடப்போதுமோவநேகநாளினும்பட்டார். (அஉ)

வேறு.

கதந்தணந்துவீழ்களிற்றினம்பரியினங்களத்தின்
மிதந்தசொரியிற்றேருருளோடினவியப்ப
வதந்தரும்பலவயவர்தங்களேபரமலைத்து
விதந்தரும்பலவுதிரவாறுவரிபோய்விரைந்த. (அந)

கவந்தமாடினவெண்ணறக்கலித்தனகழுகின்
றுவந்தமெய்ப்புயவொலியெனவொலித்தனதுணங்கை
நிவந்தசோருகளலகைகளார்த்தனநிலமுஞ்
சிவந்தவான்றுகில்புனைந்ததொத்ததுகொடுஞ்செருவாய். (அச)

அனையகாலையிற்பொருதிறல்வல்லவரனேகர்
முனையவந்துவந்தாவிதீர்ந்தகலுமம்முரணிற்
கனைபொலன்கழற்காலைவிந்தானுவிந்தப்பேர்
புனையுஞ்சிரியிருவர்வந்திவனுடன்பொருதார். (அரு)

முன்னவன்றனைமூன்றருங்கணைகளான்முடித்தான்
பின்னவன்பெருங்கதைகொடுபேரழற்கதுவி
மன்னிமேவலுமவனையோர்வாளியாலுடலஞ்
சின்னமாக்கினன்தேவதத்தமுமுழக்கினனே. (அசு)

வேறு.

* வெவ்வாசிநெடுந்தேர்மிசைநிமிராவரிவிற்கொண்
டிவ்வாறமர்புரிவேலையிலெழுசெங்குருதியினா
லவ்வாடரவுடையானழியாயோதனமந்திச்
செவ்வானகமெனவந்துசிவப்பேறியதெங்கும். (அஎ)

* முருகாரிருசிறைவண்டினமுளரிப்புதுமலர்விட்
டருகார்பொழினிழலூடணியலர்நாண்மலருறவே
யிருகாலமுமுக்கால்விடுகைம்மாரியிருக்கா
லொருகாலருமறையோர்விடுபதநண்ணினனுதயன். (அஅ)

* விரவார்முனையடுதேர்நுகவெவ்வாசிகள்புனலுண்
டுரவாவிடிலோடாதினியென்றையனுரைப்ப
வரவாபரணன்றந்தருளருமாமறைவருணச்
சரவாய்வரவெய்தானவணெழலுற்றதோர்தடமே. (அகூ)

* ஆழம்புணரியினும்பெரிததினும்பெரிதகலஞ்
சூழெங்கணும்வண்டாமரைதுறையெங்கணுநீலங்
கீழெங்கணுநெடுவாளைவரால்பைங்கயல்கெண்டை
வாழுங்கரையருகெங்கணும்வளர்கின்னரமிதுனம். (கூ0)

* ஒருபால்வளர்போதாநிரைகருநாரைகளொருபா
லொருபாலுளமகிழ்நேமிகளன்றிற்குலமொருபா
லொருபான்மடவன்னம்புனலரமங்கையரொருபா
லொருபாலிருபாலுந்தவழொளிநந்துறைபுளினம். (கூக)

* தலமாமகளுந்தித்தடநிகரானதடங்கண்
டுலமாறுகொளிருதோள்வலியுடைவள்ளலுரைப்பக்
குலமாமணியனையான்விரைதேர்நின்றெதிர்குதியா
வலமானதுரங்கங்களைவள்வார்விசிநெகிழா. (கூஉ)

* குவளைப்பரிமளமேவியகுளிர்வாரிபருக்கிப்
பவளத்துவர்வாயாரிருபாதங்கைவிளக்கித்
தவளக்கிரியொருநாலெனமேன்மேலொளிர்தருபே
ரிவுளிக்குமிளைப்பாறவிளைப்பாறினனிப்பால். (கூங)

* அப்பாலிவனுடனேபொருமனிலத்தெதிர்சருகோ
டொப்பாயுளம்வெருவெய்தியுடைந்தோடியவீரர்
தப்பாரொருவருமின்றடுசமரந்தனில்விசயன்
கைப்பாய்கணையோர்நொந்தனர்கழன்மன்னவவென்றார். (கூச)

* துரியோதனனவர்சொல்லியசொற்றன்செவிசுடவே
யரியோடெதிர்பொரவஞ்சியவடல்வாரணமனையா
னெரியோடியபுரியென்னவிளைத்தாரணவேள்விப்
பெரியோனடியெய்திச்சிறுமையினாலிவைபேசும். (கூரு)

* அதிரேகவிறற்பற்குனனம்போடெதிரம்பிட்
டெதிரேறியவம்மன்னரிலெம்மன்னர்பிழைத்தார்
கதிரேகிடுமுன்றுச்சளைகணவன்றலைகடிதிற்
பிதிரேறுவதல்லாததுபிழைப்பிப்பவரிலையால். (கூசு)

* காணாதவிடத்தாண்மைபுறக்கூறுவர்கண்டா
லேணாடமர்முனைதன்னிலிமைப்போதெதிர்நில்லார்
நாணாதுமுன்வென்னிட்டிடுநஞ்சேனையடங்கச்
சேணாடுறுமின்றேயொருசெயல்கண்டிலமையா. (கூஎ)

வெருவாதுறையுனையாருயிரடுவோரெனவின்மை
யொருவாதுரைசெய்தாயெனதிளையாள்பதியுன்னாற்
பொருவாகினியுடையுக்கினனினியென்னைபுரப்பாய்
மருவார்மொழிவழுவாவசைமதிகொண்டதுபோலாம். (கூஅ)

பெரியோனுரைபிசகானெனவுய்த்தேனிதுபெற்றே
னரியோர்மிசையன்பாலிஃதறைகைதவமறியேன்
கரியோரடுமுனையிற்றலைகாட்டாதகருத்தோ
யுரியோரெவருனையல்லதுனக்காரெதிரையா. (கூகூ)

* குனிநாணுடைவரிவிற்படைவிசயற்கெதிர்குறுகித்
தனிநானவனுயிர்கொள்ளுதறவிர்கிற்குதலல்லான்
முனிநாயகவேறோர்விரகில்லைத்திருமுன்னே
யினிநாடியடும்போர்விரைவொடுகாணுதியென்றான். (க௦௦)

* முனியுந்தரணிபனோதியமுறைகொண்டிதுபகர்வான்
றனிகொண்டுளமழியாதொழிதுணிவுற்றனைமுதலே
வினியஞ்சியிளைத்தென்னுதலெண்ணத்தினுமன்றா
லனிகங்களழிந்தாலுமுனாண்மைக்கழிவுண்டோ. (க௦க)

* உரனுல்வருதேரொன் றினி லுற்றுரிருவரையும்
நரநாரணரிவரென்பர்கண் ஞானத்தினுயர்ந்தோ
ரரனுர்திருவருளான்முனையடல்வாளிகள்பலவும்
வரனுலுயர்மறையும்பிறர்மற்றுர்நனிபெற்றுர். (க௦உ)

* தவரோடவர்நின்றுல்விதிதானுந்தரமல்ல
னெவரோவவனெடுபோர்பொருமிருதோள்வலியுடையோ
ருவரோணைதநிறத்தோனவன்விரைதேர்நனியூர்வா
னவரோடினியமர்வெல் லுதலாராயினுமரிதால். (க௦ஙு)

* அதிகம்பகைதமரோடுறலாகாதெனவாசற்
கெதிர்நின்றவையிடையேயவசையேதேதுபுகன்றாய்
விதுரன்றனதுளநொந்திடவில் லுந்துணிசெய்தாய்
மதியின்றிறமறிவோர்மொழிவழிவந்திலைமன்னே. (க௦ச)

கற்புக்கொருமடமங்கைகலங்கத்துகி லுரிவித்
தற்புக்கொருவரைவேந்தரவைச்சார்பினிகழ்ந்தாய்
வெற்புக்கிணைபுயரோடனன்மின்னன்றுவகுத்த
சொற்புக்குயிரடுகின்றதுதுயரென்னினிமன்னே. (க௦ரு)

முன்சொல் லுமுகந்தோறுமுடித்தேறுதலரிதென்
றென்சொல்லினுறக்கேட்டனையென்னேபொருள்கொண்டாய்
மன்சொல்வதுகொள்ளாய்விதிவசமாயினைகுரவன்
றன்சொல் லுமுருத்தாயெமையென்னேவலர்தருதல். (க௦சு)

கன்னன்சவுபலனுதியர்வலிகண்டுகளித்தாய்
தன்னந்தரமுனராதிவரொடுவெஞ்சமர்தந்தாய்
பன்னுந்துணைபலகோடிபடைத்தாய்விறல்கொள்ளா
தென்னெம்மையொறுக்குஞ்செயலெத்தன்மையினுமோ. (க௦எ)

முரசங்கொடிகொண்டோனைமுனைந்தேகொணர்கென்றங்
கரசின்புடையுரைசெய்தனையதைமுற்றுறுமாறு
யிரதங்கண்முதற்பல்படையோடிங்ஙனிருந்தென்
சரதம்புரைபவரோடமர்தருவோருளதகையால். (க௦அ)

மாசென்றுமடங்காதுமதிக்கொண்டுவலத்தா
வீசென்றமர்புரிவாயெனினிவெல்பவருண்டோ
காசென்னவபிர்த்தேகடன்மிசைவந்தெழுகதிரின்
றேசென்னவிளங்கும்மணிமகுடம்புனைதிறலோய். (க௦கூ)

* மன்னுகவமதியாவிறல்வயவன்றனைவிசயன்
றன்னுலொருபகலேயுயிர்தவிர்வித்திடலாமோ
மின்னுர்வடிவேலாயினிவிதியின்செயலென்னே
வென்னுவொருகவசந்தனையிவன்மேனியிலிட்டான். (கக௦)

* பங்கேருகனயிராவதபதிகேட்பவலித்தா
னங்கிரசனதுபெற்றனனவனென்கனைலித்தா
னிங்கேழ்வரைமேலெய்தினுமுருமெய்தினுமெற்குஞ்
செங்கேழ்வலியுளசாலிகையிதுவென்றுதெருட்டி. (ககக)

மடமைக்கொருவருநேரறுமன்னன்றனையுய்ப்ப
விடமைக்கனலெனவாகுமிளிர்ந்தேநனிசென்றார்
கடமைப்படியறன்முன்றருகாளைக்கெதிர்காத்த
திடமைப்புயல்வில்லோடுறுமுனிசெய்கைதெரிப்பாம். (ககஉ)

வேறு.

வில்லுந்தானும்வெம்படையோடும்விரைதேர்மேற்
செல்லுங்காலித்தீயெனவொன்னார்திரடாவக்
கல்லுந்தாழுந்தோளுடைவெங்காவலரோடும்
வெல்லும்வம்மினென்றெதிரேற்றான்விறல்வேந்தன். (ககங)

வெஞ்சினமூற்றந்தந்திடவாசில்விறல்வேந்தன்
வஞ்சினமூற்றங்கொண்டெதிர்வோன்மேல்வருபோதி
லஞ்சினவெங்குமார்த்தனசேனைபணையார்வ
மஞ்சினமென்னத்தங்களில்விண்ணோர்மயக்குற்றார். (ககச)

கரியொடுவேங்கைக்கரியெதிர்மோதக்கதிமாறுப்
பரியொடுவேகப்பரியமர்காதப்பலபொற்றேர்க்
கிரியொடுதங்தேர்க்கிரிபொரவேதக்கிணறேய்க்கு
மரியொடெதிர்ந்தானவர்கள்சேனாபதியம்மா. (ககரு)

வெம்பியவீமன்றன்னைவிகன்னன்முதலாமன்
றம்பியர்போர்த்தார்மைந்தர்களைவர்தமையேற்றான்
வம்பவிழ்தொங்கல்வாகுலிகப்பேர்மதிவேந்த
னம்புயநாபன்பின்னெதிர்துச்சாதனனார்த்தான். (ககசு)

மருத்துவர்மைந்தரொடுசகுனித்துன்மதிசார்ந்தான்
கருத்தினலம்பனிடும்பிமகன்போர்க்கண்ணுற்றான்
றிருத்தியசோமதத்தனெனும்விற்றிறல்வல்லோ
னொருத்தனெனுந்திண்சிகண்டியுடன்போருற்றானே. (ககஎ)

விண்ணுறைவோருங்கண்கள்புதைத்தார்விரிவேலை
மண்ணுறைவோருங்கண்கள்புதைத்தார்வருமம்பாற்
கண்ணுறைசேனைசிந்திமடங்கிப்பலகாத
மெண்ணுறவாவிபொன்றிவிழுந்ததிகல்செய்தே. (ககஅ)

எற்றவரெங்கும்பேரமர்முற்றியிடரெய்திச்
சீற்றமுமாண்மைத்தன்மையும்விட்டேதிறல்கெட்டுக்
காற்றினுமுந்திக்கைச்சிலையாசான்கடைபோந்தார்
கூற்றுறழ்வேலாரிருவர்முனைந்தார்கொதிப்பெய்தி. (ககக)

சேனையின்மன்னரிருவருமேகச்சிலைவாங்கிச்
சோனைசொரிந்ததெனக்கணை தூர்த்தார்சொலவல்லார்
வானைமறைத்தவர்விடுவாளிமடிவெய்துந்
தானைமறைத்தன்னவர்வெம்போர்த்தலமம்மா. (கஉ௦)

செய்யவர்கண்கடையுகவெம்போர்செயுமெல்லை
யெய்யின்மயங்காக்கொற்றவரில்லையிதுகண்டே
மையறுதிட்டத்துய்மனெடுத்தவரிவில்லைப்
பொய்யெனவாசான்போக்கினனென்னில்பொடியாக. (கஉக)

கார்முகமிற்றதென்றுளமுன்னூன்கடிதேதன்
போர்முகமுற்றும்வாள்கடிதேந்திப்பொருமாசான்
றேர்மிசைகுப்புற்றேபரிகான்குஞ்சிதைவித்தான்
பார்முகனிற்குன்றாடுருமெய்தும்படிவத்தான். (கஉஉ)

கண்டுசினத்துக்காய்கணையொன்ருற்கதிர்வாளுங்
கொண்டுறுவெற்றிக்கேடகமுந்தீக்கொளுவித்தான்
மண்டுவயம்போர்வன்மையொடெல்லாவலியுந்தான்
பண்டுதவத்திற்பெற்றதுபோலப்பயிலாசான். (கஉங)

வேறு.

அரும்பலகையொடுவாளதம்படப்
பெரும்புலியென்விவனிற்கும்பெற்றிகண்
டிரும்படையுடனிடைபுகுந்தழைத்துப்போய்த்
தரும்படைபுகுந்துளான்கண்ணன்றம்பியே. (கஉச)

கதச்சிலையாரியன்கனன்றுகைம்மிகு
விதச்சிலைபொழிகணைமேவுமாரியாற்
சதச்சிலைகுறித்ததோட்சாத்தகிப்பெயர்
மதச்சிலைமீளியைவளைத்தவேல்வையில். (கஉரு)

அன்னவன்சேனைநாயகனைத்தேர்மிசை
துன்னவுய்த்தொருதனித்தேரிற்றேன்றினன்
கொன்னவில்லருஞ்சிலைகோலிச்சாயக
மின்னலினனேகமெங்கெங்கும்வீசியே. (கஉசு)

இருவர்தந்தேர்களுமெதிர்முகங்களிற்
பொருதுறவருதுமுன்புவனமெங்கணும்
வெருவினர்நடுங்கினர்விபுதர்மற்றிவர்
பொருவருசிலைமழைபொழியும்பொற்பினல். (கஉஎ)

ஆயிரம்பிறைக்கணையரசனுத்திடக்
காயிரும்பிறைக்கணையனையகாட்சிகொண்
டேயநல்லந்தணனெய்துநீக்கியோர்
சாயகமவனுரமுறத்தந்தானரோ. (கஉஅ)

தன்னுரம்புதைதரவேவினேன்றனைப்
பின்னுரங்கணைகளாற்பிளந்துபின்னருந்
துன்னுதேர்சாரதிதுரகமாதிக
ணன்விலப்படுத்தினனுமவேவினான். (கஉகூ)

மீட்டொருதேர்மிசைகொண்டுவேதியன்
பாட்டளிதுதைதரும்பதுமநாபனிற்
பூட்டருந்தம்பிகைச்சிலையைப்போக்கினான்
மீட்டுமோரம்பினாற்றேரும்போக்கினான். (கஙஂ)

விற்றுணிபடலுமவ்வேந்தன்மீட்டொரு
பொற்றடஞ்சிலைகொடுவேறோர்தேர்புகுந்
துற்றனன்கடுங்கணையோரோர்கோடிமெய்
பற்றிடத்துரந்தனன்பரிதியஞ்சவே. (கஙக)

சுழன்றனமாதிரஞ்சுழன்றதம்பரஞ்
சுழன்றனவாசிகள்சுழன்றதெண்கொடேர்
சுழன்றனவிழிமலர்சுழன்றகார்முகஞ்
சுழன்றிருவிருதர்போர்தொடுத்தவேல்லையே. (கஙஉ)

அந்தணன்வின்மையுமரசின்வின்மையுங்
கொந்தணரமரருங்கூறிநின்றனர்
முந்துணர்படைவலோர்மொய்ம்புளார்முனைச்
சந்தமோர்ந்தம்மவோவெனப்பலசாற்றினர். (கஙங)

துதிதருமியற்கையாற்றுரோணன்சிறியே
மதிதருமழலினுமழலின்வான்கணை
சதிதருமொருவன்மேற்சாரவேவினான்
பொதிதருவடவையங்கனலிற்புக்கதே. (கஙச)

பாய்ந்தனவிண்மிசைபரந்ததெண்டிசை
காய்ந்தனநால்வகைச்சேனைகையற
வீய்ந்திடமுருக்கிமேன்மேவுமாற்றல்கண்
டாய்ந்தவன்வருணநல்லம்பையேவினான். (கஙரு)

அவிந்ததங்கனலெலாமகிலம்வெவ்வழற்
றவிர்ந்ததுகணையிரண்டடற்றித்தாழ்ந்ததற்
சிவந்தகட்கடையினர்சீற்றமிக்குபு
கவந்தமாடச்சமர்காதும்போதினே. (கஙசா)

வீசியகணைவலிவின்மையின்வலி
மாசறுபுயவலிமதிநற்காழ்வலி
தேசிகனோர்ந்துதன்சிரந்துளக்கினன்
பேசருஞ்சாத்தகிப்பெயர்கொள்வானையே. (கஙஎ)

அக்கணநகுலசாதேவஞ்திய
ரொக்கலின்மன்னவரோடிச்சூழ்தர
முக்கணனனையவன்முனைவிடுத்தணி
யுக்கிடவவர்கள்மேற்கணைகளோச்சினன். (கருஅ)

அங்கவர்முறிதரவரன்குமாரனும்
புங்கவனெதிர்தலும்பொருதகாலையி
லெங்கணுநடுங்கியதேவுமம்பினாற்
றங்குமாநிலமெலாஞ்சலித்ததங்கிலே. (கருகூ)

எடுத்தவான்சிலைதனையிசைகொள்வான்கணை
தொடுத்திருதுணிபடத்துணித்தகற்றினன்
மடுத்தமாமகங்களுமறமுமாமறைக்
கடுத்தநன்னெறிகளும்வளர்க்குமாண்டகை. (கச௦)

வேறொருவிரகொடுவேதவேதியன்
மாறடுபதாகையுந்தேரும்வாசியுங்
கூறுகூறாகவேதுணித்துக்கொற்றமர்
தேறியசிலையையுந்துணிசெய்தேறினன். (கசக)

மற்றொருதேர்மிசைப்பாய்ந்துவள்ளலுங்
கொற்றமார்நெடுஞ்சிலைகொண்டுதோன்றியே
பற்றலருயிர்கவர்சத்திபற்றினன்
வெற்றிகொண்முனியுயிர்வீட்டுமென்னவே. (கசஉ)

பரந்தவானவர்களும்பாரில்வேந்தருங்
கரங்களாற்கண்புதைத்தயிர்க்குங்காலையிற்
புரந்தவாண்டகைபதம்போற்றிவீசினா
விரந்தமாமகலிடநிறுவுநீதியான். (கசங)

கரிந்ததுபுவியெலாங்ககனமீவெளி
யெரிந்ததுமாதிரமெங்கும்பொங்கழற்
சொரிந்ததுவேதியன்கணையிற்றுண்ணென
விரிந்ததுகுருவின்மேல்விடுத்தசத்தியே. (கசச)

கண்டனனந்தணன்கமலத்தோன்படை
கொண்டனன்விடுத்தனன்குறுகுஞ்சத்திமே
லெண்டிசைப்பாலருங்கலங்கவேற்றமா
மண்டழற்பொதுளுறமாய்த்துவீழ்த்தவே. (கசரு)

சத்தியங்ககறலுஞ்சாபவாரியன்
மெய்த்திறற்சத்திகள்விஞ்சிமீளவு
மத்திரமைந்திவனங்கத்தேவினன்
கைத்திறல்விற்றிறல்பலவுங்காட்டியே. (கசசு)

இறந்துளானுதிட்டிரனிறப்பிலானெனிற்
சிறந்தவன்கைப்படச்சிக்கினனென
வறந்தவாதவரெலாமயிர்க்குங்கூர்ங்கணை
மறந்தவாவறன்சுதன்வாளிமாய்த்தவே. (கசஎ)

கொதித்தருமறையவன்கொண்டசாபமு
மதித்தெழுதேரையும்வாளியாற்றுணித்
துதித்தெழுதினகரனெப்பத்தோன்றலும்
பதித்திரட்கொருவனும்பாரிலாயினன். (கசஅ)

படையறக்கரங்களிற்பாரிற்றேரின்மே
னடையறநிற்றல்கண்டவனைநண்ணிலன்
கடையிருகனல்விழிகருணை துன்னிட
விடைநிகர்படைஞர்மேன்மீண்டுதூறினன். (கசகூ)

இருக்குணர்வேதியன்மீண்டவேல்வையிற்
கருத்துணரிளவறன்கனகத்தேர்மிசை
யருக்கனிலனுகியேயண்ணலம்முனைச்
செருக்களமகன்றனன்றிகழவென்பவே. (கருo)

அறந்தவாதவற்கொருபகைவந்தாற்பினு
மறந்தவாதென்பதுசாதம்வஞ்சினத்
திறந்தவாவேதியன்செய்ததண்ணளி
நிறந்தவாதிதுவெனவமரர்சீட்டினர். (கருக)

ஆயிடைநகுலனுமணிவிகன்னனு
மாயிரும்பேரமர்மலைந்தகாலையிற்
றூயவரற்புதமெய்தித்தொல்புவி
மேயமன்னுயிரெலாமிகச்சலித்ததே. (கருஉ)

மாவலன்றுன்முகனோடுவெந்துசா
தேவனங்கருஞ்சமர்செய்தகாலையிற்
காவலர்வெருக்கொளத்தேருங்காய்கணை
யேவுவன்சிலையுமற்றிரியல்போயினன். (கருஙா)

துன்முகனிரிதரத்தோன்றன்மீளவும்
வின்முனைத்திரிகத்தர்வேந்தன்மைந்தனை
வன்முனைவாளியால்வானிலேற்றினன்
மன்முனைக்கிவனொருமறலியென்னவே. (கருச)

கதாயுதனொருபுடைகலிக்குந்தந்தையிற்
பதாசலப்பருப்பதம்பாரியங்கல்போற்
சதாவமர்முற்றியேதிரியுந்தன்மையான்
மதாசலஞ்சுமந்தபார்வருந்தலாயதே. (கருரு)

சலம்படுமாருதிதனையனக்களத்
தலம்பனோடமர்புரியார்வமெம்மனோர்
புலன்படவுரைக்குதலரிதுபொற்கிரி
நிலந்தனிலிரண்டமர்புரிதனேர்ந்ததே. (கடுசு)

அந்தணனிவ்வணமழலிற்பொங்கியே
வந்திவணமர்புரிவாறியம்பினுஞ்
சந்தனமாதவனூரத்தாழ்வறு
முந்தமர்முனைபவன்முதன்மைகூறுவாம். (கடுஎ)

வேறு.

* இட்டபொற்கவசத்தினோடெழுந்தனனிராசராசனுமுள்ள
பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்களும்பலபடைஞருங்கூடி
யெட்டிபத்தின்வெஞ்செவிகளுஞ்செவிடுறப்பல்லியமெழுந்தார்ப்ப
முட்டவிட்டனர்தனஞ்சயனின்றமர்முனையில்வேன்முனையொப்பார். (கடுஅ)

* சென்றசென்றவெஞ்சேனைகளிளைப்பறத்தேவதத்தனில்வந்த
மன்றலந்தடம்பொய்கைநீர்பருகியப்பொய்கையின்வளநோக்கி
யென்றுநாணுகர்புனலிதுவன்றுநல்லின்னமுதிதுவென்பார்
தென்றலந்தடஞ்சோலையின்கரைதொறுஞ்சென்றுதம்விடாய்தீர்வார். (கடுகூ)

* மத்தவாரணங்கொண்டுசெந்தாமரைவனங்கலக்குறுவிப்பார்
தத்துபாய்பரிநறும்புனலருத்துவார்தாழுநீர்படிகிற்பார்
கைத்தலங்களிலளியினமெழுப்புவார்காவிநாண்மலர்கொய்வா
ரெத்தலத்தினுமித்தடத்திம்மலர்ப்பரிமளமிலையென்பார். (கசுo)

* இன்னவாறுதம்மிசைமொழிந்தியாவருமிபதுரங்கமத்தோடு
மன்னவாவியைவளைத்தனர்கடல்வளைபாழிமால்வரையென்னத்
துன்னுமாமணித்தேரினின்றிழிந்துதன்சுவேதமாநீரூட்டு
மன்னுவார்கழன்மகபதிமதலையவ்வருதினிக்கடல்கண்டான். (கசுக)

* கண்டபோதுமுன்காண்டவமழித்தவன்கடவுள்வாவியினன்னீ
ருண்டவாசியைத்தேருடன்பிணித்துவில்லோரிமைப்பினின்வாங்கி
வண்டுழாய்மதுமாலையாய்வளந்துமேல்வரும்வருதினிதன்னை
யண்டரூர்புகவிட்டபின்றேரின்மேலாகுமாறருளென்றான். (கசுஉ)

* கன்றுசிந்தையன்சோபவெங்கனல்பொழிகண்ணினன்காலாளாய்
நின்றுதேரினுங்களிற்றினுமாவினுநிரைநிரைத்தரங்கம்போற்
சென்றவீரரைத்தனித்தனிசரத்தினாற்சிதைவுடற்குன்றாகக்
கொன்றுசூழ்தரக்குவித்தனனரிமணிக்குன்றுதானெனநின்றான். (கசுங)

* கைதவன்குலக்கன்னிகேள்வனுமொருகணைக்குவெங்கணையாக
வெய்தவெங்கணையனைத்தையும்விலக்கிமேலெய்துபார்த்திபருள்ளார்
வெய்திநேமியுந்தேரொடுகொடிகளும்வில்லும்வாசியும்வீழக்
கொய்துபற்பலபவுரிவந்தனன்விறற்குன்றவில்லியையொப்பான். (கசுச)

* தேரினின் றவர்பாரினின் றவன்மிசைவிடுங்கணைத்திரண்மின்னுக்
காரினின் றுபாதலமுறவுரகர்மேற்கனன் றுவீழ்வனபோன்ற
பாரினின் றவன்றேரினின்றவர்மிசைவிடுங்கணைபாதாளத்
தூருநின் றருக்கனைவிழுங்கிடவெழுமுரகரேறினையொக்கும். (கசடு)

வே று.

* சேணிலத்தின்மிசைநின் றமர்தொடங்கினவர்தேர்களிற்றனதறிந்தன நெடுந்துவச, நாணியற்றனவொடிந்தனநடஞ்சிலையுநாகமுற்றவரொழிந்தனரிரி ந்தனர்க, ணீணிலத்தின்மிசைநின் றுசமர்வென் றவனுநேமிவச்சிரமகுடம்புனை கொடிஞ்சியுடை, யேணிலத்திவுளிமுந்தமுனையுந்திரதமேறியிட்டனன்முகுந் தனுடனின்புறவே. (கசசு)

* ஏறியிட்டிவன்விரைந்திரதமுங்கடவியேகலுற்றபினியம்பலதழங்கியெழ
வேறுபட்டமருடைந்தவர்களுந்திருகிமேலிடச்சகுனியுந்துணைவரும்பொதுள
வாறிரட்டிரதகுஞ்சரதுரங்கமுளனுகியிப்படிபெரும்படையுடன்றுநனி
சூறியிட்டனன்வலம்புரியலங்கல்புனைதோளிலெப்புவனமுந்தனிசுமந்தவனே.

வார்சிலைக்குருவணிந்தணிதருஞ்சகடவாகினிக்கடலடங்கலுமகன் றுபொ ரு, போர்சிலைக்கொருவரென் றறுவர்நின் றமுனைபோயுறக்கதுவமுன்னரிடைவ ந்தணுகி, யோர்சிலைக்கிரிவளைந்திடவிரண்டுவிழியூடுறக்கனல்பொழிந்திடமுனை ந்தனர்கள், நேர்சிலைக்கொருவரில்லையெனுமன்னரெதிர்நீள்குவட்டினைநெடுங்க டல்பொரும்பரிசரோ. (கசஅ)

* யோதனத்திவன்வந்தெனெதிரின் றளவுயோசனைக்குமிடைநின்றிலன் முனைந்துசமர், மோதுகைக்குநினைவுண்டுகொலெதிர்ந்துமிகமோகரித்துவருகி ன்றமைவிளங்குகிலம், யாதுபெற்றனநெடுஞ்சிலைகொல்வெங்கணைகொலேதம ற்றகவசங்கொலிரதங்கொலென, மாதவர்க்கிடைவணங்கியிதுவென்கொலென வாசவக்கடவுண்மைந்தனுரைதந்தனனே. (கசகூ)

* ஈசனப்பொழுதுணர்ந்தருளிவென் றிவரியேறுவிற்குரியபற்குனனுடன்பழை
வாசவற்கயன்வழங்குகவசந்துவசமாசுணற்கருளினன்கலசசம்பவனு [ய
மாசுகத்தினிலொழிந்துபலதுங்கமுனையாயுதத்தினிலழிந்திடுவதன் றதனை
நீசெகுத்திடுதியென்றுதுரகங்களையுநேர்படக்கடவினன்கதிவிதம்படவே. ()

* கானகத்தினிடைமண்டிபெரியங்கிதருகார்முகத்தின்வலிகொண்டுமுனை வெஞ்சமரின், மேனடக்குமவர்தங்கண்மகுடங்களினுமேருவொத்துயர்புயங்க ளினுமுந்தியினு, மானனத்தினுமமிழ்ந்துருவிவெம்பரிதி யாயிரக்கிரணமும்பு டைபரந்ததென, வானகத்துவெளியின் றியணிபந்தரிடவாளிவிட்டனன்மனஞ் செய்துதனஞ்சயனே. (கஎக)

* நாகெறித்தன துரங்கமநெடுஞ்சிலைகளுணியற்றனவுடைந்தன தடந்திகிரி
பாதமற்றனமதங்கயவிதங்கள்பொருபாகர்பட்டனர்மறிந்தனநெடுந்துவச [ச
மோதுதற்கெதிர்முனைந்தவர்சிரங்கள்பொழி மூளையிற்களமடங்க லுநெகிழ்ந்தர
ராதபத்திரமழிந்தனவிவன்றனுடனுதரத்தொடுசரந்தொடவியைந்தவரே. ()

* ஆரமர்க்கண்மிகநொந்திரவிமைந்தனெடிதாகுலத்துடனிருந்தனன்விரி
ந்தமணி, வார்கழற்சகுனியுந்துணைவருந்தமுகமாறியிட்டனர்மறிந்தனர்கலிங்
கர்பலர், சீருடைக்கிருதனுங்கிருபனும்பழையசேதிவித்தகனுமஞ்சினரொடுங்
கினர்கள், பூரிபட்டிலனெருங்கியணிநின்றுபொருபூபர்பட்டனரொழிந்தவர்பு
றந்தரவே. (கஎங)

* தேவருக்கரசனுந்துகனபந்திநிகர்தேரிடைப்பணிநெடுங்கொடிதொடங்
கியெழ, மாவுகைத்துவலவன்றிறலுடன்கடவமாமுகக்கண்மகுடந்திகழவன்று
பெற, காவன்மெய்க்கவசமுந்தனிபுனைந்துசிலைகால்வளைத்தவிர்பெரும்பிறைமு
கஞ்செய்கணை, தூவியுற்றெதிர்முனைந்தனன்வளைந்தவொளிதோய்கழற்றரணி
மண்டலதுரந்தரனே. (கஎச)

மேகமொத்ததிருமன்னுடலினுங்கவனவேகமுற்றபரிதன்மிசையினும்பு
வித, மாகருக்கிறைவன்மைந்தன்மிசையும்பழையவானரத்துவசகம்பமிசையு
ங்குருகு, சாகரத்தொலிதருஞ்சகடுருண்டெழுபதாசலத்தின்மிசையுங்கணைக
டந்துபல, கோகனக்கணையினங்கரிசெழுங்கையுறுகோறுணித்தனனுலம்பொ
ருபெரும்புயனே. (கஎரு)

* கோமகக்குரிசின்முந்தவிடுமம்புபலகோறுெடுத்தெதிர்விலக்கிவிசயன்றன
து, நீமுகக்கணையநந்தநிலையொன்றின்முனேசேரவிட்டனன்விழுந்தபொழுதந்
தவிறன், மாமணிக்கவசமெங்குமுடனுஎன்றியொருமால்வரைப்புயவினுண்டு
விவிழுந்தபரி, சாமெனத்தலைமழுங்கியவையொன்றுமிவனுகமுற்றிலவசைந்தி
லனசஞ்சலனே. (கஎசு)

* வீரன்விட்டனசரங்களவனுென்கவசமேலுறப்படுதலின்றிவிழுகின்றநி
லை,யோரிமைப்பினிலறிந்திரவிதன்கணையையோதுநற்சுருதிபன்னுமுறைகொ
ண்டரிய, தேரினிற்பொலியநின்றிருகைகொண்டுநனிசீறிமெய்ப்படவெறிந்தன
னெறிந்தளவில், வார்சிலைக்குருவின்மைந்தனதுகண்டதனைவாளியிற்றுணிபடு
ம்படிமலைந்தனனே. (கஎஎ)

* வாகைநெட்டயிறுணிந்திடலும்வேகமுடன்மானிரைத்திரதமுங்கடவி
வந்துமுத, லாகவத்தினிலுடைந்தவரடங்கமுனையாயெதிர்த்தொருமுகம்பட
நெருங்கிமிக, மோகரித்துவருகின்றசெயல்கண்டமரர்மூவருக்கரியவன்கழல்ப
ணிந்துபரி, தாகமுற்றமர்தொடங்கவுமறந்துகமழ்தாருருச்சுனனுயங்கினனனந்
தரமே. (கஎஅ)

* கோமணிக்குமாலுகந்துபுரவின்கணுயர் கோவலற்குநடுநின்றுமுன்வளர்ந்தமுகில், காமனுக்குரியதந்தைசமரம்பொருதுகாதன்மைத்துனனயர்ந்தநிலைகண்டுபல, தாமரைக்குளொருதிங்களெனவங்குலிகொடாழ்தடக்கைகளிரண்டொருமுகம்பயில, மாமணிக்குலமணங்கமழ்செழும்பவளவாயில்வைத்தனனலம்புரிவலம்புரியே. (கஎகூ)

* நாகர்பொற்றருவையம்புவியிலன்றுதருநாதன்வச்சிரவலம்புரிமுழங்குகுரன், மேகமொக்குமெனவெண்டிசையெறிந்துபொருவேலையொக்குமெனவெங்கணுமெழுந்தபொழு, தாகமுற்றுநெகிழ்ந்துபுளகம்புரியவாதரத்தெழுகடுஞ்சினமடிந்தவிய, மோகமுற்றுறவதிர்ந்துவருமண்டலிகர்மோளைபட்டதுகொலண்டமுகடுஞ்சிறிதே. (கஅ0)

* பானிறப்புரவியுந்திரதமுங்கடவு பாகன்மற்றவர்மயங்கியதுணர்ந்தருளி, மேனிலத்தரசனன்றுகவசங்கடறிவேல்கொடுத்ததுளவெண்ணையயர்வெய்தலென், மானவச்சிரன்மகன்கடிதுவந்துபெருவாழ்வுபெற்றனமெனும்பரிவினன்றறிவின், ஞானபத்தியொடெழுந்துவலம்வந்துதிருநாண்மலர்ப்பதம்வணங்கியதுகொண்டனனே. (கஅக)

* மாறுபட்டிவனையின்றுயிர்கவர்ந்துவிடின்மாருதத்தின்மகன்வஞ்சினமழிந்துவிடு, மூறுபட்டுவெருவும்படியிரிந்தமரிலோடுவிப்பதுபெருந்தகைமையென்றுகொடு, நூறுபட்டமகவின்றலைவனெஞ்சமிகநோதகக்கடிதெறிந்தனனெறிந்தளவி, னீறுபட்டதுபெருங்கவசம்வந்தவழிநேர்படத்திருகினன்சமரினின்றிலனே. (கஅஉ)

* ஆறுபத்திருபதைம்பதுபெரும்பகழியாகவிட்டவரிவன்சிலையும்வெம்பரியு, மேறுபைத்தலைநெடுந்துவசமும்புதியவேழுதட்டிரதமுந்துணிசெய்தங்கருகு, சீறுதற்குவருதிண்குருவின்மைந்தனொடுதேரருக்கன்மகனுஞ்சகுனியும்பலரும், வீறுகெட்டிரிபதங்கொடுவிரைந்துசெலமீளவிட்டனன்முனெண்டிசையும்வென்றவனே. (கஅங)

வேறு.

* வேர்த்தெதிர்விசயன்வென்றகளத்தி
லார்த்தெதிர்வந்தோரார்கொல்பிழைத்தா
ரேத்தியபதினெண்பூமியினெண்ணும்
பார்த்திபர்பற்பலவாயிரர்பட்டார். (கஅச)

* தம்பியருந்துச்சாதனன்முதலோ
ரம்பிலழிந்துதம்மாருயிருய்ந்தா
ரென்பெருமான்றன்னெறிகணையேவ
வம்பரமுற்றதனைவருமுற்றார். (கஅரு)

* மாரதர்மாய்ந்தாரதிரதர்வீய்ந்தார்
சாரதிகளும்வன்றலைகளிழந்தார்
நாரதன்முதலோர்நாகரநேகர்
பாரதமின்றேபற்றறுமென்றார். (கஅசு)

நீடியசிலைவாணோர்போர்வல்லோர்
தேடியுமுலகிற்றேர்கிலமென்றூர்
கோடியர்போர்செய்கொற்றமுனைக்க
ணூடியபொய்கையழைத்தனனென்பார். (கஅஎ)

எண்ணறவாசியினைப்பகல்விக்கு
மண்ணனுடன்பொரலறிதுகொலென்பார்
கண்ணனிவன்றேர்கடவமுனஞ்செய்
புண்ணியமென்னேபுகலுதிரென்பார். (கஅஅ)

ஓர்முகவாளிகளாருயிருண்டும்
பார்முகமெய்தாதிதுபழுதென்பார்
நேர்முகமானவர்நீள்வலிதேய்ந்தாற்
போர்முகமெவ்வகைபுக்குதுமென்பார். (கஅகூ)

சிந்துவினுதன்சீருயிர்க்காக
வந்துளமன்னர்யாவர்மறுப்போ
ரிந்திரசூனுவினிச்சிறுபோதிற்
சந்தமுடித்தலைதள்ளுவனென்பார். (கசூ0)

* இத்தவிதத்தாலிறைவர்கள்கூறப்
பைந்துளவோனும்பார்த்தனுமாகச்
சிந்துமகிபற்றேடிமணித்தே
ருந்துருமெல்லையுற்றதுரைப்பாம். (ககூக)

* வள்ளல்குறித்தவலம்புரிநாதத்
தெள்ளமுதஞ்செவியுள்ளுறுபோதின்
மூள்ளணிகின்றமுரசமுயர்த்தோன்
தள்ளுறுநெஞ்சிற்சங்கையனுனன். (ககூஉ)

* தன்றுணைநின்றசாத்தகியைக்கூய்
வென்றிடுபோரினில்விசயனிளைத்தா
லன்றிமுழக்கானதிர்வளையையன்
சென்றறிகுதிநீயென்றுரைசெய்தான். (ககூங)

* கண்ணுறநில்லார்கடவுளர்முதலாம்
விண்ணவரேனும்விசயன்முனிந்தான்
மண்ணிலெதிர்க்குமன்னவர்யாரோ
தண்ணளிநெஞ்சுந்தருமமுமிக்கோய். (ககூச)

நின்னணிகாவற்கென்னைநிறுத்திப்
பின்னணிமீதுபெயர்ந்தனனும்பி
மன்னணியான்போய்வரவில்வெறுக்கும்
பொன்னணிமௌலிப்புரவலரேறே. (ககூரு)

என்றுகுறித்தான்சாத்தகியேசிற்
குன்றுநிகர்த்தகொடும்புயனேதுஞ்
சென்றுணர்வாய்நீசேனையினாத
னின்றணிகாக்குவனென்றுநிரைத்தான். (கசுசு)

* வன்கட்டிண்டேர்மன்பலநிற்க
வென்கட்டடந்தானின்னுரையென்னு
மன்கட்டாரோன்மலரடிவீழ்ந்தான்
றன்கட்டாண்மைத்தம்முனொடொப்பான். (கசு௭)

* என்றறன்மைந்தனேவறலைக்கொண்
டன்றொருதேர்மேலதிரதரோடுஞ்
சென்றனன்வெய்திற்சாத்தகிதேவர்
துன்றியசெருவிற்றாசிபிளந்தே. (கசுஅ)

* விருதணிமுந்தவிளங்கியகொற்றக்
கிருதனையாதிக்கேழலொடொப்பா
ரொருதனுவுங்கொண்டூர்பரிமாவு
மிரதமும்வில்லுமிமைப்பிலழித்தான். (கசுகூ)

* பன்முகநூறுயிரவர்பரித்தே
ரன்மிகநூறுயிரவரழிந்தார்
மன்மதவேங்கைமலைமிசைவீரன்
றன்முன்மலைந்தான்றூர்ச்சலசந்தன். (உ00)

* தார்ச்சலசந்தன்சாத்தகியென்னுங்
கார்ச்செலவாயகாய்கணைமழையாற்
போர்ச்சலமில்லாப்புகர்மலையோடு
மேற்சலமெய்திவெங்கனலானான். (உ0க)

* நாட்டமில்லாதநரபதிமைந்த
ரீட்டமதாகவீரிருவோர்கள்
கூட்டம்பெய்யக்கொடியவரோடும்
வேட்டம்போனவெங்களிறொத்தார். (உ0உ)

* யாரும்போரிலெளிவரவீரஞ்
சாருஞ்சாபந்தன்னொடுநேமித்
தேருந்தானுஞ்சென்றிடுவோனைக்
கூருஞ்சாபக்குருவெதிர்கண்டான். (உ0௩)

வேறு.

* ஏகலேகலென்னுடனமர்புரிகலாதினியென்
றுகுலம்படத்தகைந்தனனடற்சிலையாசான்
மேகவண்ணனுக்கிளவலும்வேதியருடன்போர்
மோகரிப்பதுதகுதியன்றெமக்கெனமொழிந்தான். (உ0௪)

* இருவருந்தமதிருசிலைகளுமெதிர்குனித்தா
ரிருவருங்கொடும்பகழியுமுறைமுறையெய்தா
ரிருவரும்பரிவாரமாண்டுளவெலாமிழந்தா
ரிருவரும்பெரும்பொழுதமர்திளைத்தனரிளைத்தார். (உ0ரு)

* இளைத்துவேதியனிற்பமன்னவனிளைப்பாறி
யுளைத்தடம்பரித்தேரினைவலவனின்றூர
வளைத்தவில்லொடுமன்னணிகலக்கிமேல்வருவோன்
கிளைத்தபல்பெருங்கிரணனில்வயங்கொளிகிளர்ந்தான். (உ0சு)

அனையகாலையிலருச்சுனற்குடைந்தரவுயர்த்தோ
னினையுமுன்னரின்வேதியனிகழ்த்தமர்காண்பான்
முனையினெய்தினன்சாத்தகிமொய்ம்பினைநோக்கி
வினையமுன்னியேதடுத்தனன்வேந்தர்களோடும். (உ0எ)

சிறினன்பெருந்தேர்மிசைவருமொருசெம்மல்
தூறினனெதிர்தொடுகணையாயிரந்துரந்து
நூறினன்படைநான்கினைநொய்கழலரசன்
மாறினன்முகமிவனொடுபோரெவர்வல்லோர். (உ0அ)

அரவவெங்கொடியறுத்தெறிந்தாழிகளழித்து
விரவுவெஞ்சிலைதுணித்தொருபாகையும்வீழ்த்திக்
கரவறிந்தவனுடலெலாங்கணைகளாலழுத்திப்
பரவநின்றனன்சாத்தகிபடைவலியோடும். (உ0கூ)

தேரைநீங்கிமாநிலமிசையிருபதஞ்சேப்ப
நீரைநீங்கியதாமரையெனச்செருநிலத்திற்
போரைநீங்கிவெள்ளிடையுறவோடினன்புலவர்
பூரைநீங்குறுதார்த்தனர்புனிதனுநக்கான். (உக0)

கண்டுதன்மனங்கனலெழக்கிருதவன்மப்பேர்
கொண்டகாவலன்குறுகிவான்சிலைதனைக்கோலி
மண்டுகாய்கணைபரப்பினன்சாத்தகிமாற்றி
யண்டிவாளிகளழித்தனனிரதமேலயர்ந்தான். (உகக)

* யானைதேர்பரிவீரரென்றெண்ணருநிலத்துத்
தானையோடுதுச்சாதனனடுத்தெதிர்தடுத்தான்
சோனைமேகமொத்திவன்பொழிதொடைகளாற்கலங்கிப்
பூனைபோலழிந்திருபதஞ்சிவப்புறப்போனான். (உகஉ)

நாமவேதியனண்ணுறுசார்பினையணுகத்
தாமமார்பினன்றம்பியைக்கண்டுளந்தாங்கி
வாமமேவியதேரொடுவரிசிலையளித்துக்
கேமமேயிதுகாறுமைத்துனற்கெனக்கிளத்தி. (உகஙு)

கணங்கொள்பேரவைப்புறந்தனிலருந்ததிக்கற்பி
னணங்கையீர்த்தனான்றிருந்தநின்னிருபுயவாற்ற
லிணங்குமிவ்வமர்க்களத்தினிற்கண்டிலமென்றே
குணங்கொள்வேந்தருக்கெமனெனவுதித்தெழுங்கொடியோய். (உகச)

சுலபவில்வலிச்சாத்தகியோடுபோர்தோற்றுப்
பலருநக்குறப்பரிபவமுளவெலாம்பட்டீ
ருலவைகாதலன்றனஞ்சயனுற்றபோர்முனையிற்
புலவுவேலினேயென்செயவிருந்துளீர்புகலாய். (உகரு)

விரதபூடணனுரைத்தசொற்றடுத்தவிவ்விதத்தாற்
சரதந்துஞ்சுத லுய்வதுதரித்துளீரென்னிற்
பிரதைதந்தவற்கவனிபாதியும்பெறவழங்கி
வரதன்றாண்மலர்வணங்குதிர்போந்தினிமன்னே. (உகசு)

என்றுபற்பலகூற லுநாணமாமிடர்ப்பட்
டொன்றுமோதிலனிருந்திலன்மீண்டுசென்றுற்றான்
வென்றுசாரதிதேர்விடவில்லொடுசெம்பொற்
குன்றுபோ லுயர்சாத்தகிகுறுகிடுமேல்வை. (உகஎ)

மன்முகங்களும்வாகினியரற்றவுங்கொண்டு
துன்முகன்றடுத்தாயிரத்தாயிரந்துதைந்த
பன்முகம்படுவாளிகள்பரப்ப லுந்தனது
வின்முகந்தெழுகணைகளால்விலக்கினான்மீளி. (உகஅ)

தேரும்பாகுமற்றுடலெலாஞ்சிதைவுறவீழ்ந்து
சோருமவ்விறற்றுன்முகன்றனக்கிதுசொன்னான்
காருமஞ்சியகைச்சிலைக்கணைமழைபெய்து
சேருமுக்கிரசிங்கமொத்தெதிர்பொருந்திறலோன். (உககூ)

மின்னைப்பேரவைசெறித்தநாள்வீசியதந்தை
தன்னைப்போல்பவன்சாற்றியவஞ்சினந்தவறு
துன்னைப்போற்றியதாருயிரோடுதியென்றான்
பொன்னைப்போலொளிரரிக்கொடிபொறுத்தபூந்தேரோன். (உஉ0)

நீங்கினானவனீங்குமுன்னேமியம்பொருப்பைப்
பாங்கினல்வளைகடலெனப்பப்பரர்யவனர்
தாங்குவில்லொடுதராபதியேவலாற்றடுத்தார்
வீங்குதோள்வலிமிலேச்சராயுள்ளபோர்விறலோர். (உஉக)

கிட்டினானிவன்கேழ்கிளர்நெடுஞ்சிலைவளைத்துக்
கொட்டினானநற்கொடுங்கணையாயிரங்கோடி
முட்டினாரெலாமிறந்தனர்முனையழிந்தகன்றோர்
கட்டினார்பிணச்சேதுசெல் லுதிரமாங்கடற்கே. (உஉஉ)

அங்கண்மாநிலஞ்சிவப்புறவாரமர்திளைத்து
மங்குல்வண்ணனுக்கிளையவன்வருஞ்செயல்பாரா
வெங்குநின்றவரெறிபடையிருநிலத்தரசர்
வெங்கண்யானைமுன்கேழலொத்தருஞ்சமர்விளைத்தார். (உஉங)

இடையில்வந்துவந்தெதிர்ந்தவர்யாரையுங்கடந்து
புடைவருந்தினகரற்கணிநிழலெனப்போர்த்தத்
தடையறும்படிதருக்குடன்மும்மதந்தருபோ
ரிடநடந்தெனநடந்தனனரனிருந்துழியே. (உஉச)

பின்னருங்கொடிமுரசுடைப்பெருந்தகைவருந்தி
முன்னநின்றதேரார்வாயுவின்மகன்முகநோக்கி
மன்னரென்படும்வருதினிவாரிதிநாப்ப
ணென்னராயினரும்பியுமெம்பெருமானும். (உஉரு)

தகலருந்திறற்சாத்தகிதன்னையும்விடுத்தேன்
பகலுமேற்றிசைபட்டதுபாஞ்சசன்னியமும்
புகலுகின்றபோர்முகத்ததிர்குரலெழும்பொம்ம
லிகல்வலம்படாீயுமங்கேகுகவென்றான். (உஉசு)

தம்பிகூறுவானந்தணனெதிர்ந்துபோர்தாவிப்
பம்புபேரொலிச்சேனையோடுனைமுனைப்படுத்தி
வம்பினேகுதல்மறங்கொலோவறங்கொலோமாற்று
ரெம்பிமுன்பொருமியற்கையரெவர்கொலோவென்றான். (உஉஎ)

ஐயகேட்டிநம்மைத்துனனுளனவனுகிச்
செய்யவாற்றல்கள்செலுத்துமாறெளிதலசென்று
மெய்யரோரிருவரையுநீவிழியுறநீக்கி
மய்யனீங்கிடச்சிங்கநாதஞ்செவிமடுப்பாய். (உஉஅ)

தெருளுமென்னுடைச்சிந்தையென்றறன்மகன்செப்ப
விருளில்சிந்தையனிகலுடைவேந்தருக்குரைத்து
மருளின்மைத்துனன்வாய்மைசாலுறுதியுங்கொண்டு
வெருளிலாதவன்வேந்துரைசிரங்கொடுவிரைந்தான். (உஉகூ)

சொன்னவாசகம்பிற்படமுற்படத்தொழுது
தன்னெடொத்ததோள்வலியுடைத்தரணிபரநேகர்
மன்னுநால்வகைப்படையொடுந்திரண்டிருமருங்கும்
பின்னுமுன்னுமொத்துடன்வரப்போயினன்பெரியோன். (உஙO)

கலிங்கர்மாகதர்மாளவர்கவுசலர்கடாரர்
தெலுங்கர்கன்னடர்யவனர்சோனகரொடுசீனர்
குலுக்கராரியர்பப்பரர்குகுதரைமுதலோர்
விலங்கினர்களைவின்னுறவிலக்கிமேல்விரைந்தான். (உஙக)

* உரகவெங்கொடியுயர்த்தகாவலன் றனக்கிளையோர்
துரங்கமாதிகொள்பலர்பெருஞ்சேனையிற்சூழ்ந்தோ
ரிரங்குமாகடற்பெருகிடவிறுதியிலிரையுந்
தரங்கநேரெனவிடையிடைதனித்தனிதகைந்தார். (உகூஉ)

* முல்லைமல்லிகையுற்பலங்குமுதமாமுளரி
பல்லவாளையிற்சூலமென் றினமுதற்பகழி
யெல்லையில்லனவிடையறுவகைதொடுத்தெதிர்ந்தார்
வில்விதங்களில்யாவையும்பயின் றகைவிறலோர். (உகூஙூ)

* விந்தன்விந்தரன்சுசருமன்சுசப்சனன்முனையிற்
றந்தவாசியுந்தேர்விடுபாகருந்தாமு
மந்தரந்தனிற்றலைகள்போய்முகிலினையலைப்பச்
சிந்துசோரியைப்பெருங்கடலலைத்திடச்சிதைந்தார். (உகூச)

* போர்க்குமுந்துறுபோரினன்குண்டலபோகி
தீர்க்கலோசனன் றிண்டிறற்சித்திரசேனன்
மார்க்கநேர்படவிலங்கிமாமறலிமேல்வரினுந்
தோற்கலாதவர்மூவருந்தம்முயிர்தோற்றார். (உகூடு)

* ஆயுவற்றவர்சுயோதனனிளவலாமெழுவர்
வாயுபுத்திரன்வாளியாலொருவயின்மடியச்
சாயலுற்றதுசடக்கெனத்தரணிபர்வியூகந்
தேயுவொத்திவன்சேறலுந்திறலுடையவர். (உகூசு)

வேறு.

* ஏகுகின்றதுகண்டுபெருங்கடலேழுமொண்டுவிழுங்கியதிர்ந்தெழு
மேகமம்புபொழிந்தெனவெங்கணும்வீசுமம்புவிரைந்துவிரைந்திட
வூகமின்றுபிளந்துதனஞ்சயனேடிவன்கைபுகுந்திடினம்படை
யாகுலம்படுமென்றுதடஞ்சிலையாரியன்சமரந்தனின்முந்தவே. (உகூஎ)

* ஆதியந்தணன்வந்ததுகண்டிகலானிலன்சினமின்றிநலம்பெறு
நீதியன்றுனுடன்பொரவென்பதுநீபெருங்குருநின்பதமென்றலை
மீதுகொண்டனனென்றுவணங்கவும்வேதியன்கைமிகுந்துபுகுந்தெதிர்
மோதியம்புதெரிந்தனன்வன்றிறல்முறிவெஞ்சிலையுங்குனிகொண்டதே. ()

* வீரனென்றுமொழிந்திலன்வந்துமுன்வீழ்சரங்கள்விலங்கிவயம்புனைத்
தேரினின்றுமிழிந்துநடந்தெதிர்சேரவந்துசெழுஞ்சிலையின்குரு
வூருகின்றவயங்கிரதந்தனையோரிரண்டுகரங்கொடுவன்புடன்
வாரியுந்தவெறிந்தனன்வண்புயல்வானினின்றவரஞ்சியொதுங்கவே. (உகூகூ)

* நாகவிந்தம்வளர்ந்துகிளர்ந்ததுநாகமொன்றியதென்றுநடுங்கிட
மேகபந்திகலங்கவெழுந்ததுமீளவம்புவியின்கண்விழுந்தது
பாகனங்கனெரிந்ததுதிர்ந்ததுபாரமுந்துளைவிண்டனமண்டுருள்
வேகவெம்பரியுந்தலைசிந்தினவேதியன்றனதென்புமொடிந்ததே. (உசо)

* விழவிங்குமவன்றனைவென்றிவன்மேனடந்துழியெண்டிசையும்புடை
சூழவந்துவளைந்தனரந்தகர்தூதர்தங்களிலும்பெருவஞ்சக
ரேழுமண்டலமும்புதையும்படியேவுகின்றதரங்கநெடுங்கட
லூழியும்பெயர்கின்றதெனும்படியோதைவிஞ்சியுடன்றுசினங்கொடே. (உசக)

* காரிலைந்துமடங்குபுலம்பினகாகளஞ்சுரிசங்குமுழங்கின
பேரியம்பினகொம்புதழங்கினபேரியங்கள்பெயர்ந்துகறங்கின
பூரியும்பொருதஞ்சியவந்தியர்பூபனும்புறமன்றிடவெங்கணை
மாரிசிந்திமலைந்தனன்வெஞ்சமர்மாறமுன்பவனன்றிருமைந்தனே. (உசஉ)

ஓடியெஞ்சியொடுங்கினர்வந்தவரோதைகொண்டொலிதந்தருள்மைந்தனு
நீடிவிஞ்சுபுயங்கணிமிர்ந்துறநீலவண்ணனருந்துணைவன்புகல்
நேடியங்கிருசந்தனமுங்கிரிநேரிரண்டுபெயர்ந்தெனவந்தன
வாடியஞ்சினனஞ்சரவன்கொடிமானிலந்தருமன்னவர்மன்னனே. (உசங)

ஆடும்வெம்பணிகாலும்வளைந்திடவாசைவெங்கரிபோதமெலிந்திட
பாடைமன்னவர்மேனிகலங்குறபாரடங்கவிகாரமியங்கிட
நீடுதண்கடலூடுபடுங்கலநீர்கிழிந்துறமேவல்புரைந்திட
வோடிவந்ததுமாருதிசந்தனமோதவண்ணருலாவிடவுன்னியே. (உசச)

தேரிரண்டுமருங்குறல்கண்டனர்தேவர்சங்கமுழங்கிமகிழ்ந்தனர்
தூரிரண்டுபுயங்களினுங்கொடுதாரதிபன்பணியென்பதுணர்ந்தனர்
காரிரண்டுபுனைந்தவர்கண்கள்கதாயுதங்களிதுன்னிவிரைந்துதன்
னேரிரண்டுகரங்கொடுசங்கமுமூதினன்றுணைவன்செவியுண்ணவே. (உசரு)

மூவரின்சுடரின்பெயர்கொண்டுளமூன்றுமென்னவிளங்கமுனைந்தணி
மேவரும்படைதுன்னிவளைந்தனவீரசங்கமுழங்கினவிண்படு
தேவருந்தமதுள்ளமயங்குறதீவிரங்கடெரிந்துபுகுந்தனர்
மாவருந்தொழினந்தன்மகன்பதமானனெஞ்சில்வணங்கிவிலங்கியே. (உசசு)

* மாசுணந்தலைநொந்துசுழன்றனமாதிரங்கண்மருண்டுகலங்கின
வீசுதெண்டிரையம்புவெதும்பினமேலையண்டமும்விண்டுபகிர்ந்தது
பூசலின்கணுடன்றுகழன்றவர்போர்தொடங்கிநினைந்துபுகுந்தபி
னாசுகன்குமரன்றனுடன்பொருமாதபன்குமரன்சமர்முந்தவே. (உசஎ)

* கோபம்விஞ்சினர்விஞ்சைவரம்பெறுகூர்சரங்கடெரிந்தெதிர்கொண்டனர்
சாபமுங்குனிதந்தெதிருந்தினர்தாரைவெம்பரிதங்கிரதங்களு
நீபமெங்குமலர்ந்தெனமண்டுசெங்நீர்பரந்தெனநின்றுமுனைந்தெழு
பூபர்தங்களுடம்புசிவந்தனபூரமெங்குமலைந்துபுரண்டவே. (உசஅ)

* மாருதன்புதல்வன்றொடுமம்பினின்மாவிரண்டுமிரண்டும்விழுந்தன
சோரும்வன்றுவசந்துணியுண்டனசூதனுந்தலைசிந்தினன்முந்திய
தேருமுந்தியுமுந்துகள்கொண்டனசேமவெங்கவசந்துளைவிஞ்சிய
தாரைவெண்குடையம்புலியும்பிறைபானதஞ்சலினெஞ்சுமழிந்ததே. (உசகூ)

வேறு.

* அழிந்துகன்னனுங்கால்விசையினிலிவனம்பினுக்கெட்டாம
லழிந்துபோதல்கண்டடல்விடசேனனவ்வள்ளலுக்கெதிரோடி
யிழிந்துதன்பெருந்தடமணித்தேரின்மேலேற்றலுமிவனேறிக்
கழிந்தநீர்க்கணைகோலுவான்போலவன்கண்ணெதிருறச்சென்றான். (உரும)

* சென்றுமீளவுமிருவருமெதிர்ந்துவெஞ்சிலையமர்புரிபோழ்திற்
குன்றுபோனெடுந்தேருருண்டுகள்படக்குலைந்துவென்கொடுத்தோடக்
கன்றினாகவெங்கொடிபவன்மீண்டுபோய்க்கைச்சிலைக்குருமுன்னர்
நின்றுநெட்டுயிர்ப்புடனிதுபகர்ந்தனனீள்விழியழல்கால. (உருக)

அனலுருத்துவந்தணியெனுங்கானகமடர்த்திடுமைவாய்ந்து
கனலொலித்தெழவிழுதுகைத்துலவைபாற்கலிக்குமாறெனக்காற்றின்
றனையனோடுசாத்தகிரானுடனுறத்தகைந்திலாயினியென்னே
முனைமுகத்துறச்சிந்துவுக்கிறைமகன்முடிவதற்கயிர்ப்பின்றே. (உருஉ)

அந்தமாமுனைபெய்திலையிங்கிருந்தாவதெனினியேனும்
வந்துகாத்திடென்மைத்துனனுயிரெனமன்னர்கோவுரைசெய்யச்
சிந்தைதீயெழவோரிருகண்களுந்தீயெழவிதுசொற்றான்
கொந்தளாவுவேலுழவருமிருசெவிகொண்டுதுய்த்திடவாசான். (உருங)

கன்னனங்குளன்சௌபலனங்குளன்காரிகைதுகிலுரிட்ட
மன்னனங்குளானீயுளாயாவரோமைத்துனனுயிருண்போ
ரின்னதன்றியானிங்கிராவிடிற்படையாவும்வந்திகன்மோதும்
பின்னரெவ்வணங்காப்பதித்தகையலாற்பின்னுமொன்றுளகேண்மோ. (உருச)

வருத்தமெய்தவுமீளவுமாற்றலன்வாய்க்குமாறிவனுற்றென்
விருத்தனெய்தினும்விதிவழிமுடிவலால்விலக்கவென்றரத்துண்டோ
கருத்துமாற்றலுமுறுதியுந்தவிர்கிலைகாணுதிபோயென்றான்
யருத்தியோகநான்மறையொடுசிலைமறையாசறவுணர்ந்தோனே. (உருரு)

மீண்டுவேந்தனும்வந்தனனென்றியிடைவிசயனைநனிநேடித்
தூண்டுதேரினர்தூணியர்வான்சிலைதுன்னுகைத்தலத்தோராய்
மூண்டவெஞ்சினத்துத்தமோசாவுடனுதாமனுமுறைபோத
வாண்டுவான்சிலைவளைத்தனரவர்மிசையவரெதிரார்த்திட்டார். (உருசு)

போர்விளைந்ததக்கணந்தனிலவர்கடேர்ப்புரவியுமியற்பாகும்
பாரளைந்திடப்படுதலுமவரொருபருத்தவான்கதைபற்றித்
தார்விளைந்ததிண்புயனுறுமாழியந்தடங்கொடித்தேர்வீழ்த்தார்
கூர்வளைந்துகாலுறநடந்தேகினன்கொடியகோற்கோவேந்தன். (உருஎ)

திருகிமற்றிவரிரண்டுதேர்வயவர்மெய்சிந்தியங்கவர்தேர்மேற்
பரிதியிற்செறிந்தேகினரிருவரும்பற்குனன்மருங்குற்றார்
கருகிவாண்முகமத்திரத்தவன்றருக்கிர்மணித்தேரேறி
யருகினெய்தினன்சிந்துபூபதிதனக்கரவுயர்கொடியோனே. (உருஅ)

வள்ளுகிர்ப்பெரும்புலியெனச்சீறியேமற்றொருபெருந்தேர்மேற்
கொள்ளவண்டிமிர்தெரியலாறுதபன்குமரன்மீளவுமெய்தி
வெள்ளவான்பெருங்கருணையுமன்னுயிர்க்கெதிர்ந்தவர்வெருவெய்தக்
கள்ளவன்றழற்சீற்றமுஞ்செறியிருகண்ணினுன்முன்சென்றான். (உடுகூ)

சேந்தகண்ணினன்முப்பதுகூர்ங்கணைசெலுத்தியார்த்திடமாற்றிப்
பூந்தராதலம்புகழ்ந்திடவீமனப்பொற்கிரிச்சிலைவீட்டி
யாய்ந்தபாகனல்லாருயிர்போக்கினனங்கர்கோனயிலொன்று
வேந்தர் துண்ணெனவிசினன்வீமன்மேன்மேவியதிறல்கண்டான். (உகூ0)

துண்டமெட்டுறச்சத்தியைத்துணித்தொருதொல்லைவான்கணைபோக்கி
மண்டலந்திகழ்தேரொடுமிவுளியுமாய்த்துமீளவும்வாளி
புண்டரஞ்செறிநுதலிடையமிழ்த்தலும்பொங்குசெம்புனல்காலத்
தண்டபாணிவென்கண்டிளநகைதரச்சாய்ந்தனன்கதிர்தந்தோன். (உகூக)

வேந்தர்வேந்தன்மற்றதையுணர்ந்தாற்றலான்வெகுண்டுதுற்சயனென்னு
மாய்ந்ததம்பியையேவினன்வீமன்மீதவனமர்புரிபோதிற்
பாந்தள்கண்ட ‡ தார்க்கியனெனவோர்பெரும்பகழியாலுயிருண்டான்
மாய்ந்தவன்செயல்கண்டுகாவலனுடன்கன்னனுமனநொந்தான். (உகூஉ)

மீளவேறொருதேர்மிசைபுகுந்தொருவெற்பெனச்சிலைகோலிக்
காளவெங்கனற்கதுவுகட்கடையினன்கன்னனேழிருவாளி
மூளவெஞ்சினமெய்தனன்மொய்ம்புறமுனிந்துவாளிகண்மூன்று
தாளதாமரைநாயகன்மைந்தன்மேற்சமீரணிசெலவுய்த்தான். (உகூங)

உய்த்தவாளிகளூரனுறக்குளித்தலுமுதையபானுவின்மைந்தன்
மெய்த்தடந்தனித்தேரொடுமீண்டனன்வேந்தர்வேந்தநோக்கிக்
கைத்தலம்புடைத்தருகுறநின்றதுன்முகன்றனைக்கடிதேவ
மித்திரன்சுதன்கண்ணெதிரவனுயிர்வீட்டினன்விறல்வீமன். (உகூச)

* மன்னர்மன்னவன்மீளவுமைவரைமாருதிமிசையேவ
முன்னர்வந்தவரைவரும்படப்படமூண்டுபோர்மதியாமன்
மின்னுதுன்மருடனொடுதுன்மதன்விசயனேசெயன்மாலி
யென்னவன்பெயர்கொண்டுளோர்தமைக்கணையேவிவிண்ணகஞ்சேர்த்தான்.

ஐவர்மன்னிளந்தம்பியர்மாய்தல்கண்டாதபன்றிருமைந்தன்
கைவரும்பெருங்கார்முகம்வளைத்தெதிர்கடாவினன்கடும்பொற்றேர்
செய்வராலுகள்நீர்வளநாடுடைப்பாண்டுவின்றிருமைந்தன்
பொய்வராமொழிபற்பலபுகன்றெதிர்பொருதனன்புலிபோல்வான். (உகூகூ)

இருவருஞ்சமர்ப்போர்வருமிடையிடையிசைபெறுநடைநான்கும்
பொருவருஞ்சமர்வீமனைச்சூழ்ந்துசூழ்ந்தவன்சிலைபொழியம்பாற்
பெருமிதந்துறந்துயிரிழந்தெண்ணறப்பிணமலையாய்வீழ
மருவரும்பெருஞ்சோரிபோய்க்கடலொடுமாறுகொண்டதுமன்னே. (உகூஎ)

‡ தார்க்கியன் - கருடன்.

அனையகாலையிலிருவருமெதிரெதிரடுத்துவான்சிலைகோலி
முனைகொள்வாளிகளெய்தனவெய்தனமுறிந்துவீழ்ந்தனவெங்கு
மினையவாறுபோர்செய்தனரெனுமொழியெவர்கொலோபுகல்கிற்போர்
வினையின்மீளவுந்தேரழிந்தோடினன்விபாகரன்றருமைந்தன். (உசுஅ)

இழிபுநோக்கிலனேந்தல்சித்திரவிசித்திரன்சித்திராக்கனோடேனை
வழுவில்சாருசித்திரன்சித்திரச்சரன்சித்திராயுதன்சித்திரவன்மன்
‡ எழுவர்தம்பியர்தங்களையேவினனெண்டிசாமுகமுட்கப்
பழுதிலாதுபோர்பயின்றவன்கணைகளாற்பட்டுமாய்ந்தனர்மன்னோ. (உசுகூ)

* தாளிலோடியகன்னனன்மன்னவன்விடுதம்பியர்விழநோக்கித்
தோளிலோடிடவீமன்மேலொருபெருந்தோமரந்தனையேவ
வேளிலோடியவ்வீமனுக்கெதிர்செலவேலைமேல்விடுவெவ்வேற்
கோளிலோடியகுரிசிலைக்கணைகளாற்கோளழிந்ததுமன்னோ. (உஎ0)

தோமரந்துணிவெய்தலுமிரவிசேய்வேறொருதேர்துன்னிச்
சாமரங்கொடைதுவசநன்முரசொடுதயங்கநற்சிலைதாங்கிக்
காமரும்புயலசனிமாமழைபொழிகாட்சியிற்கணைதூண்டிப்
பாமரஞ்சிறிதேனுமில்லவனெதிர்பற்றினான்பற்றாக. (உஎக)

தேரிரண்டுநல்வலம்புரியிடம்புரிதிரிதரச்சிலைநாண்கள்
காரிரண்டெழுமொலியொடுபொருவரக்கடலொலிகளைமாற்ற
நேரிரண்டுவிற்பொழிகணைவிசும்பொடுநிலனெலாங்கனல்காலப்
போரிரண்டுநாழிகைபடப்பொருதனர்புலவரற்புதமுற்றார். (உஎஉ)

தோளிணைம்பதுந்தேரின்மேலிருபதுந்துரகமீதொருநான்கு
மீளவெஞ்சிலைமலையின்மீதொருபதுவிசிகமுய்த்தனன்கன்னன்
மீளிசிந்தனைசெய்கிலனவையெலாம்விலக்கியங்கவன்மார்பில்
வாளியைம்பதுமூழ்குவித்தனனடல்மாருதியெனும்பேரோன். (உஎங)

மல்வலிக்கிவன்வான்கதைக்கிவனெனுமாற்றமுண்டெனினந்தோ
வில்வலிக்கிவனேயலதிலையெனவேந்தரற்புதமுற்றார்
கல்வலிப்புயக்கன்னனுற்றலவன்கணைகளாற்பிளவுண்டு
சொல்வலித்தடந்தேர்கொடியொடுசிலைதுணிந்துமண்மிசைநின்றான். (உஎச)

தேறிமற்றொருவிற்கொடுவீமன்மேற்சீற்றவெங்கணையேவிக்
கூறிவெற்றிகண்மானிலத்தேரின்மேற்கொண்டமர்புரிபோதிற்
சீறியக்கணத்தரசர்கட்கரசனுந்திண்புயமலைவாடி
நீதியற்றியங்கவனுயிரடுமெனநினைந்தெழுவரையுய்த்தான். (உஎரு)

வீமன்மீதமர்புரிகுவான்புகுந்தனர்வெய்யசத்துருசேயன்
வாமசத்துருமித்திரன்சுதேகன்மாமதனனற்றருவென்போ
னேமசித்திரபானுநீள்விகருணனெனும்பெயர்கொண்டோர்கள்
தாமவிற்குனித்தருங்கணைமழைகளாற்றரணியைமறைத்தாரே. (உஎசு)

‡ எழுவருள் செய்யுளில் கூறப்படாதவன் சித்திரதரனென்போன்.

ஏறுதேரழிந்திவுளிகடுளிந்துபாகிற்றுவெங்கொடியற்று
நீறுபோன்றுநற்கவசமும்பொடிபடநெடுஞ்சிலைதுணிவாகி
மாறுவேறிலாவாயுவின்காதலன்வரிசிலையுறவாங்கு
மாறுவெஞ்சரத்தாலுவர்மாண்டனரொருவிகருணனல்லாதோர். (உஎஎ)

வேறு.

* பகருமுன்னவர்பட்டபின்பைங்கழல்
விகருணன்பொரவெஞ்சிலைவாங்கலும்
புகலும்வஞ்சினம்பொய்க்கினுநின்னுட
னிகல்செய்யேனெம்பியேகுகென்றானரோ. (உஎஅ)

* சுடுவுரைக்கனலன்னதுச்சாதனன்
வடுவுரைக்கவுமன்னுறைமன்றிடை
நடுவுரைக்குநன்னாவுடையாயுனைக்
கொடுவுரைக்கணையேவினுங்கொல்லுமோ. (உஎகூ)

* பாரறிந்துபழிக்குட்படாதநின்
னேரறிந்தும்பொரநெஞ்சியையுமோ
போரறிந்துபொருகவென்றானெடுஞ்
சீரறிந்தவர்செய்ந்நன்றிகொல்வரோ. (உஅ௦)

* வீமனிப்படிச்சொல்லவும்வேரியந்
தாமமுற்றதடவரைத்தோளினன்
மாமணிச்சிலைவாங்கியவ்வீமன்மேற்
றிமுகக்கணையுஞ்சிலசிந்தினன். (உஅக)

* எம்முனோர்களெனைவருமுங்கையில்
வெம்முனைக்கணையால்விளிந்தேகவு
மும்முன்யானொருவேனுமுய்வேன்கொலோ
வம்மின்வார்சிலைவாங்குகென்றேதினன். (உஅஉ)

* மிகநகைத்தும்வெறுத்துந்திரிபுர
தகனனொத்தசமீரணன்மாமகன்
முகனுறச்சென்றுமூரிவில்வாங்கிமே
லிகனிறக்கணையேவினனென்பவே. (உஅங)

* ஏவினுலிருவீரரும்வெஞ்சம
மேவினார்மெய்படாமல்விலக்கினர்
கூவினாரறைகூவிப்பொருதிளைத்
தோவினார்தமையேநிகரொத்துளார். (உஅச)

* மின்னைபொத்தவிறற்படைமாருதி
பின்னைவிட்டபிறைமுகவார்கணை
யன்னைசித்தமலமரப்பின்னவன்
றன்னைவெற்றிமகுடந்தடிந்ததே. (உஅரு)

* கோவிகன்னன்கொலப்படப்பற்பல
ராவிகன்னமறைகணையாலறப்
பாவிகன்னன்பதைக்கவென்றேகினான்
மேவிகன்னகம்போற்புயவீமனே. (உ௬ரு)

சதுரனெய்தசரங்களிற்றம்பிமா
ருதிரமுன்னவனூற்றமடங்கினான்
விதுரன்வேந்தவைகேட்கவிளம்பிய
மதுரவாய்மைமதித்துமறுகியே. (உ௬எ)

வேறு.

தனதுகண்ணெதிர்தம்பியரழிந்தபின்றபனன்மைந்தனுநொந்து
கனதுரங்கநற்றேர்புகுந்தெய்தியக்காவலன்முகநோக்கி
யுனதுதம்பியர்ச்செற்றவன்முடித்தலைபொடித்திலேனெனிலின்னே
யெனதுபுன்றலையவன்கையிற்கொடுப்பனென்றிருஞ்சிலைகொடுநொந்தான். ()

குனித்தசாபமுந்தொடுத்தசாயகங்களுங்குவவுமால்வரைத்தோளுந்
துனித்தநெஞ்சமுமுரித்தனபுருவமுமெரித்தகண்களுந்தோன்றப்
பனித்தவேர்வொடும்போருடனெழுமொருபவனன்மைந்தனைத்தாவி
யினித்தராதலமுரககேதனனதென்றுரைபெறவிகல்செய்தான். (உ௬௯)

ஆற்றையொத்தனன்கால்வழியளைபுகுமாமையையடன்மள்ளர்
சேற்றையொத்துநித்திலமெடுத்தெறிதருஞ்செல்வநீர்க்குருநாடன்
காற்றையொத்தனன்வலியினாற்காயெரிகதிரவன்றிருமைந்தன்
கூற்றையொத்தனன்பிறப்பிலேதுவக்குளார்குணங்களுங்கொள்ளாரோ. ()

சேறல்வண்டிமிர்தொடையலான்றினபதிசிறுவனைமுகநோக்கி
யாறல்வெஞ்சமத்தென்னுடன்முதலமர்புரிந்தனையானாலும்
வேறலென்கடனின்னைமன்னவையின்முன்விளம்பியவசனத்தாற்
கோறலெம்பிதன்கடனெனவரிசிலைகுனித்தனன்கொடித்தேரோன். (உ௯க)

இலக்கமற்றவெங்கணைகளாலிருவருமெதிரெதிரமராடிக்
கலக்கமுற்றபின்றினகரன்மதலையக்காற்றின்மைந்தனைச்சீறி
யலக்கணுற்றிடப்பலபெருங்கணைதொடுத்தவன்விடுங்கணையாவும்
விலக்கிவச்சிரத்தேரும்வெம்புரவியும்விற்றுவசமும்வீழ்த்தான். (உ௯உ)

வீழுமுன்னரிற்சேமவான்றேர்மிசைவீமனெய்திடமீண்டு
மாழருங்கணைபலவிடுத்தகனையுமாற்றநன்னிலத்தேர்மேற்
றாழுநின்றொருதண்டுகொண்டெறிந்தனன்றடங்கிரிசார்ந்தென்ன
வூழினெய்தலுங்கன்னனத்தேர்கழிந்தோடினானுயர்வற்றே. (உ௯௩)

தேரினன்றிருமைந்தனேறியதனித்தேரும்வாசியுஞ்சிந்தி
யூரவந்தவெம்பாகனுந்தலைபிளந்துக்கபின்சிலையோடும்
வீரனும்பெருந்தேர்புகுந்தெய்திடவீமன்வாள்விழிசேந்து
பாரவாளுடன்பலகைகொண்டிரதமேற்பெரும்புலியெனப்பாய்ந்தான். (உ௯௪)

இம்பர்கார்முகமெறிதரநோக்கினனிகன்முனைக்கொடிதாங்குங்
கம்பவேதிகைப்பூழையிற்கரந்தனன்கதிரவன்றிருமைந்தன்
வம்பவிழ்ந்ததார்வாயுவின்மதலையுங்காண்கிலான்மடங்காமு
னம்பினாலுடலழுந்தினான்கன்னனேருருவிசார்வரையாக. (உசுரு)

அனந்தரஞ்சொரிகணைகளால்வாளுடன்பலகையுமறுத்தாற்றி
முனந்தருங்கொடுஞ்சேவகன்மெய்யெலாமூழ்குவித்திடவாற்று
தினந்தரும்பரியிபக்களேபரங்களையெடுத்துமுன்னுறைப்போர்த்தே
மனந்தரும்பெருங்கனலொடுநின்றனன்மாருதிநிலத்தம்மா. (உசுசு)

உந்துதேரிலாதொருபடைக்கலமிலாதொருதனிநின்றானைச்
சந்தனந்திகழ்கன்னனென்பவனெதிர்தாவிவிற்குதைதன்னை
யந்தமீளிதன்னகடுறவூன்றியிவ்வாசகமறைகுற்றான்
குந்திதன்வரநினைந்தகங்குளிரமேற்கொதிதருபுனல்போன்றே. (உசுஎ)

பகடுபோன்றுகான்றிரிந்துபல்பண்டமும்பயனுறச்சுவையோடு
மகடுறார்த்துமீயியங்குதலுணர்குவையமர்பொரலுணர்வாயோ
முகடுபற்றுவான்பெறவெனினிற்றியுய்ந்திடவெனின்முனையாழிச்
சகடுருட்டுதேர்த்தனிநரநாரணர்தம்முழிப்போதென்றான். (உசுஅ)

ஆய்ந்தமித்திரன்புத்திரனிவ்வணமறைந்தகன்றிடவீமன்
றேய்ந்தபொற்பிறையுருவெனப்புயவலிசிந்திவான்கதையேந்தி
மாய்ந்தநற்களேபரமலைகடந்துமாதவனொடுநரன்மேவு
மேய்ந்தவத்தலங்குறுகினான்சாத்தகியிகலெடுத்துரைசெய்வாம். (உசுகூ)

வேறு.

* தேவரும்பரவுமாற்றற்சிலைவலான்சீற்றக்கைம்மாத்
தாவருமரியேறென்னச்சந்தனங்கடவிச்செல்ல
மேவருஞ்சமரினெஞ்சிவிசயனுக்குடையவேந்தர்
யாவருந்திரிகிவந்தாங்கெதிரெதிரடர்ந்துசூழ்ந்தார். (௩௦௦)

சேவினான்புரங்கண்மூன்றுஞ்செற்றனாளென்னச்சென்று
தாவினான்சிலையைக்கோலித்திசைதொறுஞ்சரங்கள்தாழ்வற்
றேவினான்படைகணான்குமிறந்தவிற்றடங்கையார்க்கு
நாவினாலடங்காவீரமியற்றினானவையிலாதோன். (௩௦க)

விரிந்தனவுரங்களென்புகரம்பொடுமிதந்துமேலாய்
நெரிந்தனகரங்கள்கால்கடுணிந்தனகுடர்கள்நீளச்
சரிந்தனபிளந்துசென்னிதணிந்தனமூளைமண்மேற்
சொரிந்தனசோரிநேரிற்றேன்றியபடைஞர்க்கம்மா. (௩௦௨)

கையுறுகரியுந்தேரும்பரிகளுங்காதிச்செல்லு
மெய்யுறுமுளத்தினானைவீமன்மாமகனாற்போரிற்
கையுறநொந்துமீண்டவலம்புதன்கண்ணிற்காணு
மையுறுமுளங்கறுப்பவாள்விழிசிவந்துமீண்டான். (௩௦௩)

பொருப்படுதோளினானைக்கணைகளாற்புயமுமார்பு
மொருப்படவுருவவெய்தானரக்கன்மற்றொருவன்வாளி
நெருப்படப்பலகாலேவியவன்சிலைநீறுப்போக்கிச்
செருப்படவவன்கைவாளியனைத்தையுஞ்சிதைத்தான்மன்னோ. (ரு௦ச)

கார்முகமழிந்துவெய்யவலம்புதன்கணைகள்போழப்
போர்முகமழிந்துபோனபொழுதினிற்றுரோணன்செய்த
பார்முகவியூகபந்திசிதைந்திடுபரிசுபாரா
நேர்முகமாகிவந்தானிகழ்பூரிசராவென்போனே. (ரு௦ரு)

நின்னையிக்கணத்தினாவிநீக்குவனேகலென்று
முன்னைநற்றடந்தேரோச்சிமுனைதலுமுளரிநாபன்
பின்னையப்பெருமான்வம்மின்பிடர்விதியுந்திற்றென்னத்
தன்னையொப்பவரிலானைத்தாக்கினனூக்கமுள்ளான். (ரு௦சு)

சாத்தகிதானும்பூரிசராவும்வெஞ்சாபம்வாங்கிக்
கோத்தனர்பகழிசென்றுகுறுகினதேருந்தேருஞ்
சேர்த்தனர்மலைந்தகாலைத்தேர்பரிசிலைகள்பாகு
மார்த்தரைப்படலுஞ்சீறிவாளுரீஇமண்மீதார்த்தார். (ரு௦எ)

உருமுடனுருமிற்றென்னவிருவருமுடற்றுங்காலை
பொருமுனைவிஞ்சநோக்கிப்புண்டரீகக்கண்மாயன்
செருமுனைதெரியக்காட்டிச் * சீடனைக்காத்தியென்னக்
கருமுகிலனையமேனிக்காவலன்கட்டுரைத்தான். (ரு௦அ)

இருவருமுனைந்தபோரிலிளைத்தவற்குதவியாகிப்
பொருவதுகடனன்றீண்டும்புகும்படைக்கலன்கண்மாற்றும்
பெருவலிசெயலுமோராதுரைத்தனைபெற்றசெங்கை
திருமணிமார்போய்நாயேற்கிரண்டன்றோசெப்பாயென்றான். (ரு௦கூ)

நசையறத்துணைவந்தாரைமருவலர்நலியநோக்கி
யிசையறவுதவிகூராதிருப்பதோதருமமோரெண்
டிசையுறவடுத்துமோதுஞ்செருவினுந்திறல்குன்றானை
விசையனென்றுரைப்பதப்போர்க்குரியநீவிளம்புமாறே. (ருக௦)

தாழ்த்துறேலவனையம்பாற்றடிந்திடென்றகிலமெல்லா
மாழ்த்துறவகட்டிற்கொண்டோனறைந்திடநரனுட்கொண்டு
காழ்த்தகூர்வயிரவாளிகார்முகஞ்செறித்துவானோர்
வாழ்த்துபோர்வலியினார்தம்வாளமர்நோக்கினானே. (ருகக)

மல்லலந்தடந்தோண்மாயனிளவலைமற்போர்வென்று
கல்லலம்புயத்திற்பாதச்சுவடுறக்கடகக்கைவாள்
கொல்லவஞ்சென்னிமீதிலோச்சினனெதிரிகொற்ற
வில்லலங்கணையால்வாளுந்தோளுடன்வீழ்த்தினானே. (ருகஉ)

---

* சீடன் - சாத்தகி.

அருச்சுனன்கணையாலிற்றதாமெனவுணர்ந்துவேத
முருச்சொலும்வாயானின்னோடுடன்றிலனென்னையோர்பாற்
செருச்சுனையெய்துபோதுதுணித்தனைசெங்கைநன்றே
கருச்சுடரனையநீயதருமத்துக்குடன்பட்டாயோ. (௩௧௩)

ஆரியனமரர்கோமானலகறுமுயிர்படைக்குங்
காரியமுதல்வர்வாக்காற்கற்றதோகமலநாபன்
சீரியவாய்மைகொண்டுசெறித்ததோதெளிவிலாரில்
வீரியமாசுசூழவென்செய்தாய்விசயவென்றான். (௩௧௪)

தனிச்சிலையாண்மைப்பூரிசராவிவைமொழியத்தக்கோ
னினிச்சிலமொழிவதென்னேயெமக்குயிர்த்துணையாய்வந்தோர்
பனிச்சுயிர்துறத்தனோக்கியுதவினேன்பழிப்பதாமோ
முனிச்சுனக்குதவானும்மன்முதல்வரைவெறுத்திமுன்போய். (௩௧௫)

இங்கிதுநிற்கநென்னவிளஞ்சிறுகுதலைமாறாப்
பொங்கபிமன்னுவாற்றும்போரினீயிருந்ததின்றோ
வங்கிதுதருமம்பாவமெனவுரைக்கறிகலாதாய்
தங்கியிக்கணத்திலேனுமுரைத்தனைசாலும்மேன்மை. (௩௧௬)

என்றுபற்பலவாம்வாய்மையெடுத்தெடுத்தியம்பிநேரிற்
சென்றுகையொன்றிலாதசிறுவனையறிவனோக்கி
நன்றுநங்குலத்துக்கெல்லாமறலியாய்நேர்ந்தவேந்தன்
பொன்றியினரகினாழ்வன்புகுதிநீகதியினென்றான். (௩௧௭)

நயம்புனைமொழியுட்கொண்டுநலம்புனைபடைமேல்வீழ்ந்து
சயம்புனையாவிநீக்குந்தன்மையனாதனோக்கி
வயம்புனையிளவல்சிறிவாளினாற்சென்னிவீழ்த்தான்
கயம்புரைநரனுநாராயணனுங்கைகவித்துநில்லரன். (௩௧௮)

தடிந்தவன்றன்னைவீழ்த்துத்தாளுறநடந்துசென்று
மடிந்துவீழ்பிணக்குன்றேறிவாரிதியுதிரநீந்தி
முடிந்திடாக்கருமமுற்றுமுதல்வர்நின்றுழிபோய்ச்சார்ந்தான்
கடிந்துமீண்டெய்துமாற்றற்காற்றின்மாமகனைக்கண்டார். (௩௧௯)

அன்னவனிவர்கள்கேட்பவாரமற்றிறலிற்சொற்ற
கன்னனதுரையனைத்துங்கறழலும்விசயன்கேட்டு
முன்னர்தன்னிழிபுநோக்காதுரைத்தனன்முடிவதோரா
னென்னுனக்கெழுதல்சிற்றமெனக்கலாதெனமறுத்தான். (௩௨௦)

புனைவனமாலையானைப்போற்றியேசோமதத்தன்
றனையனாலாற்றன்மாய்ந்ததன்மையென்னிவனுக்கென்ன
முனைவரிவின்மைகற்றமுகிலூர்திமைந்தன்கேட்பத்
தனைநிகரிலாதமுட்டாட்டாமரைக்கண்ணன்சொல்வான். (௩௨௧)

முந்தையோர்ஞான்றெம்மன்னைவிதியுளிமுடிக்கவெய்து
மெந்தையார்வசுதேவப்பேரேந்தலச்சுயம்வரத்தில்
வந்தநாள்சோமதத்தன்மாறுகொண்டமரிற்றோற்று
னிந்தநற்சாத்தகிப்பேரிறைவன்மூதாதைக்கையா. (௩௨௨)

ஆங்கவனடவியேகியரன்வழிபாடுமுற்றிப்
பாங்கினலவனைவெல்லும்படிவரமளித்தியென்ன
நீங்கியதநேகமாண்டுநின்மகன்சினியென்றோதும்
பூங்குலநிருபன்மைந்தன்றனைவெலும்போதியென்றான். (௩௨௩)

அண்ணலாரருள்கொண்டுற்றதன்மையாலடர்த்தானென்று
கண்ணனங்கெடுத்துரைப்பமூவருங்களித்துட்கொண்டார்
எண்ணுமுனிரவிற்சொற்றமொழிப்படியிரதசூதன்
விண்ணவன்றேர்கொணர்ந்தான்வெள்வளையோசைகேட்டே. (௩௨௪)

அறன்றருகுமரன்மீளவமர்த்தலத்தியாவற்கேனு
நிறனுடையாழிப்பொற்றேர்நேருறவேண்டுமென்னத்
திறனுடையுளத்திற்கொண்டுதேரிரண்டுய்த்தான்மேவ
மறனுடையிருவரத்தேர்வரவினர்மகிழ்வினேடும். (௩௨௫)

முத்தொழிற்கிறைவரானேர்மூவருமெதிர்ந்ததென்னச்
சித்திரத்தேர்கடாவிச்செங்கனலுமிழுங்கண்ணர்
கைத்திறல்காட்டியோரெண்டிசாமுகங்கலக்கிச்சூழ்ந்தார்
மித்திரற்குதித்தமைந்தன்றனைமழைமேகமொப்பார். (௩௨௬)

பொற்றடந்தேரினின்றோன்பொருசிலையேந்திச்சீறி
மற்றிவற்கெதிர்வந்துற்றான்மார்த்தாண்டனளித்தசெம்மல்
பற்றலர்க்கிடியேறன்னபற்குனனவனைநோக்கி
யுற்றவர்பலருங்கேட்பவோர்மொழிவிளம்பலுற்றான். (௩௨௭)

வேறு.

ஏறலுங்குறைதலுமுயிர்கட்கெய்தல்போல்
வேறலுந்தோற்கலும்வீரர்தன்மையாந்
தேறல்சற்றின்றிவெந்திறலிலாரில்விண்
கூறலுங்குணங்கொலோகுடிப்பிறப்பிலாய். (௩௨௮)

எத்தனைகாலமிங்கேகினுபவ
னுத்தமனுனைவசையுரைத்ததுண்டுகொல்
கைத்திறன்மறந்தவக்கணத்தினுணிலா
தித்தகைமனஞ்சுளிவியம்பல்போதுமோ. (௩௨௯)

கய்தவத்தபிமனைக்கார்முகந்துணித்
தெய்தவத்தன்மையாலினியமர்த்தலைச்
செய்தவத்துறுவிடசேனன்சென்னியைக்
கொய்தகற்றுவனிதுன்னுளத்திற்கோடியால். (௩௩௦)

பின்னருமெவரெவர்பேதித்தோரவர்
சின்னபின்னம்படப்புரிவன்றேறுகென்
றன்னவனறைந்துகண்சிவந்ததிர்த்துவிற்
கன்னன்மெய்புதைதரக்கணைகளோச்சினன். (௩௩க)

கன்னனும்பற்பலகணையின்மாற்றியே
பின்னரும்பலகணைபெய்யப்பூழிசெய்
துன்னருங்கொடிதுணித்தூரவுவிற்றறித்
தந்நிலைதருக்கினனுடல்வில்வலான். (௩௩௨)

சிந்துவுக்கரசனைத்தேடிச்சாத்தகி
யுந்துதேர்வீமனுமுடனடைந்திட
முந்தினன்றனஞ்சயன்முனிவன்கல்வியாற்
றந்தபேரணிசிதைவெய்துந்தன்மையால். (௩௩௩)

கண்டனன்வலம்புரிகமழலங்கலா
னண்டினன்கன்னனையயவீமனம்
விண்டனையெனிலொருகணத்தில்வீந்திடு
மண்டலச்சிந்துநாட்டிறைவன்மைந்தனே. (௩௩௪)

செங்கதிரினிச்சிலபொழுதிற்றீர்ந்திடு
மிங்கினியவ்வளவெதிர்ந்துகாப்புறிற்
பங்குனன்கனற்படும்பாண்டுதந்தவ
ரங்கவனோடுமுற்றுவிபொன்றுவார். (௩௩௫)

வருத்தமற்றெய்துநம்மருங்குவெற்றிநீ
யொருத்தனேகாப்பவனுனக்குறுந்துணை
குருத்தனையனும்விடசேனனுங்கொடு
மிருத்துநேர்கிருபன்மத்திரனுமேவவே. (௩௩௬)

ஈண்டுநீசிந்துநாட்டிறைவன்மைந்தனை
மாண்டுறுவகையமர்மலைந்துகாத்திடிற்
பூண்டபேரவனியும்புகழுமாற்றலு
மீண்டுநின்மருங்கலாதெவரைமேவுமே. (௩௩௭)

என்றிறையியம்பலுமிரவிதந்தவ
னன்றவற்கிவ்வுரையறையலாயினன்
வென்றிகொள்வீமனுன்மெலிந்ததென்னுட
லின்றெனினரனுயிரிருக்குமேகொலாம். (௩௩௮)

ஆயினுமியானுளவமரிற்சிந்துவி
னயகனுயிர்கொளக்கருதினண்ணுத
லேயினுமெளியவேயீசற்காயினுந்
தீயினும்புலிங்கங்கள்சிதறுஞ்செங்கணாய். (௩௩௯)

காணுதிநீயெனக்கன்னன்கூறியே
வாணுதல்வெயர்வெழவரைகணுணுறக்
கோணுவிற்குணவொலிகுமுறித்தேரின்மே
லேணுறத்தோன்றினனெவருஞ்சூழவே. (௩௪௦)

வேறு.

கரிகளெத்தனைதேர்களெத்தனைகண்டுளோர்கள்கலக்குறும்
பரிகளெத்தனைவயவர்வந்தெறிபாசமெத்தனைவீசுறுங்
கிரிகளெத்தனைகுலிசமெத்தனைசிலர்சிலைக்கணைமுனைதொறு
மெரிகளெத்தனையயில்களெத்தனையிசையயார்கணக்கிடுவதே. (௩௪௧)

சக்கரங்கதைதோமரங்களுலக்கைசத்திகண்முத்தலை
மிக்கசூலமடற்கலப்பைவிளங்குமங்குசமுசலமற்
றெக்கரங்களினுங்கொணர்ந்துதிசாமுகந்தொறுமெறிதலாற்
புக்குவென்றதனஞ்சயன்கணைமும்மடங்குபொலிந்ததே. (௩௪௨)

கரங்களற்றனதேர்கள்வீழ்ந்தனகால்களற்றனமாமுடிச்
சிரங்களற்றனகுடல்சரிந்தனசேமமார்புகிழிந்தன
நரங்களிற்றனபற்றெறித்தனநல்லெலும்புகிழிந்தன
சரங்களிற்றலைபிளவுகொண்டனதகுபதாதியர்தொகுதியே. (௩௪௩)

சிந்துரங்கள்சிதைந்துவீழ்ந்தனசிந்துதேயமுதித்தெழுங்
கந்துகங்கண்மறிந்தழிந்தனகம்பநுண்கொடிகொண்டதே
ரந்தரங்களெறிந்தபந்தினலைந்துருண்டழிவாயின
விந்தைநின்றுநடஞ்செய்சந்தனவீரகோளரியேவினல். (௩௪௪)

கொடிகளெத்தனைகுடைகளெத்தனைமுடிகளெத்தனைகுருமணித்
தொடிகளெத்தனைபணைகளெத்தனைதொங்கலெத்தனையங்கதப்
படிகளெத்தனைகவரியெத்தனைகவசமெத்தனைபார்த்தனற்
பொடிகளெத்தனைபட்டுவீழ்ந்தனபுவியில்வாளிகடுருவியே. (௩௪௫)

ஞாலமுறனுடையானுமத்திரநாதனும்விடசேனனுஞ்
சீலநற்குருமைந்தனும்பொருதிறலறிந்துளகிருபனுங்
கோலமுற்றிருபுறநெருங்கவனேகர்மன்னர்கொதித்துறக்
காலனைப்பொரவல்லநெஞ்சொடுகன்னன்வந்தெதிர்துன்னினன். (௩௪௬)

முக்குணங்களுருப்பொலிந்தெனமூவருஞ்சிலைகோலியே
மைக்கடுங்கணையுய்ப்பவெட்டிபமாதிரங்கடிரிந்ததாற்
புக்குநின்றவருய்த்தவாளிகள்புணரிநுங்கியெழுந்துமேற்
றெக்கவானவர்மகுடமீதுபுலிங்கராசிசொரிந்தவே. (௩௪எ)

அனையகாலையின்மாலுரத்தினுமமரர்கோன்மகன்மெய்யினும்
வினையணிந்தெனவைம்பதொண்கணைபுகுதவெய்தனனிரவிதன்
றனையனங்கதுகண்டுமீளிதனிப்பிறைக்கணையொன்றவன்
முனையழிந்தயர்வெய்திமார்பிடைமூழ்குவித்தனனென்பவே. (௩௪அ)

தைத்தவாளிகள்பொருள்செயாரிருதனுவுமண்டலமாகவே
யுய்த்தவாளிகளிருவர்மார்பினுமுருவவெஞ்சமர்புரிதல்கண்
டத்தடஞ்சிலையூடுகன்னனையாவிகொள்ளுமிதென்னவோர்
குத்திரம்படுகணைதொடுத்தனனிசைகொள்கோபதிகுமரனே. (௩சகூ)

அந்தவாளியையந்தரந்தனிலந்தணன்றருகந்தனோர்
மைந்தனுண்டுகள்கண்டனன்பிறைமாமுகக்கணையொன்றினு
லிந்திரன்றனயன்பெரும்புயமெங்குமூழ்கியெழுஞ்செசீர்
சிந்தியெஞ்சவுதைந்துளான்கணைதிண்பதிக்கொருசிறுவனே. (௩௫௦)

ஏனைவீரர்விடுஞ்சரங்களுமிரவிசேய்விடுகணைகளு
மானவீரர்மடுத்தெறிந்திடுவன்படைக்கலமாரியுந்
தானைநான்குமொருத்தன்விட்டசரத்தில்வீந்துகுறைந்ததால்
வானையாதாரமுற்றுளோருநிலத்துளோருமதிக்கவே. (௩௫க)

குருவின்மைந்தனுயர்கேசரிக்கொடிகுலகிருபனிட்டவிடபக்கொடி
பொருவிலங்கர்பதிகச்சையங்கொடிபுரக்குமைந்தன்மயிலின்கொடி
வெருவின்மத்திரன்மதாசலங்கொள்கொடிவேந்தர்வேந்தனுரகக்கொடி
கருவிதங்குகணையிற்றுணித்தனனுறுங்கவிக்கொடிகதித்துளான். (௩௫௨)

வெய்யவன்புதல்வனங்கையிற்சிலையைவீட்டியோர்கணையினூர்த்தெழுந்
தெய்யவந்தவர்முகங்கடோறுமுனைவாளிகொண்டுவிறலெழுதினன்
பெய்யவந்தபுயலென்னவங்கர்பதிபின்னுமோர்சிலைகுனித்தவன்
மெய்படங்கலுமழுத்தினன்விசிகமின்னலென்னவுவமிக்கவே. (௩௫௩)

கன்னநீயெனதுகைக்கணைத்திறல்கள்காண்டியென்றுநானேவவு
மின்னநீயெனதருங்கணைக்கடுமையோர்தியென்றுதிரிதாவவும்
பன்னருஞ்சமர்விளைந்ததங்கவர்பரித்தகாவலரணிக்கெலாம்
பின்னர்நின்றுசரமாரிதூவினன்முனைச்செய்சிந்துபதிபெற்றவன். (௩௫௪)

இன்னபான்மையவர்துன்னுபோதிலிமையோர்களுயகனளித்தவன்
கன்னலொன்றகலலுங்கொதித்துமுனைகாதுநீள்வயிரவாளியா
னன்னலஞ்செறிவிபாகரன்புதல்வனறைகமழ்ந்தபுயனூட்டினன்
முன்னயர்ந்திரதமீதிலாயினன்முனிந்துளான்முனிவன்மைந்தனே. (௩௫௫)

அங்கண்மாநிலமும்வானுமஞ்சவிகலாசுகங்கள்பலவேவியே
வெங்கண்மாகபதிமைந்தன்மேனிமுழுதுந்துளைத்திருவர்மேனியும்
புங்கவங்கள்போதுளசெறித்தொருபுராரிமைந்தனெனவம்புயச்
செங்கண்மாலுளுவுகோறுணித்தனனெவர்க்குமுந்துபடுசிலையினன். (௩௫௬)

மைந்தன்வின்மைநிலைகண்டுவாசவிவயக்கொடுங்கணைகளேவியே
முந்துவிற்றுணிவுசெய்துரங்கண்மிசைமோதுகாலையயர்வாகினன்
சிந்துதேசபதியைப்புரக்கவிடசேனன்வந்துசிலைகோலியே
புந்துசாயகமளப்பிலாதனசொரிந்துபேரமருடற்றினன். (௩௫௭)

நெட்டிலைச்சரமனைத்தும்வாளிகளின்றுமீறுறவியற்றியே
கட்டழித்துவலவன்றனைப்படுகளத்திலிட்டொருகடுங்கணை
யெட்டிபங்களுநடுக்கமெய்தவவனேமமார்பிடையழுத்தினான்
விட்டகன்றிலன்முனைந்திலன்சமர்விலங்கிநின்றனன்மயங்கியே. (௩௫௮)

கைத்திறற்கிருபனோடுகாவலனுமிளையகாளையரனேகரு
மத்திரற்கொருவனும்பெருஞ்சமர்மலைந்துதேர்சிலைமுரிந்துமார்
மத்திரம்பொதுளவுதிரவாரிகடிதவனியைப்பொதுளவோடினார்
பொத்தினன்முனையினேனையோருடறுணிந்துவீழ்ந்திரியல்போதவே. ()

பனியைவென்றகதிரவனெனப்பரிகொடேரில்வந்தடுபராக்கிரமன்
முனிவுகொண்டுவருபொழுதுசிந்துபதிமுனைகொடேர்மிசையெழுந்துவிண்
டனிலியங்குறுவராகவெங்கொடிதனைத்தெரிந்தொருசரங்கொடே
யினியழிந்தனனெனத்துணிந்தனனெதிர்ந்தமன்னவர்தியங்கவே. (௩௬௦)

இரவிமைந்தனவன்மைந்தனற்கிருபனேசின்மத்திரனிகர்ச்சிலை
புரவியின்பெயர்கொடாமனாரழல்புயங்ககேதுவினையாதியாய்
விரவிநின்றவரிரிந்துபோனவருமீண்டுவந்துறநெருங்கலாற்
பரவிவெய்யவனைநோக்கிவாசவிபசுந்துழாய்முகிலைநோக்கினான். (௩௬௧)

வண்ணவேழ்பரியுகைத்ததேர்மறையவந்ததந்திபடுமாலையிங்
கெண்ணமென்னையிவரோடருஞ்சமரியற்றிவேறலமைவில்லையால்
விண்ணவன்கதிர்மறைப்பன்மாயையினில்விள்ளுமிச்சமர்விரைந்துநீ
துண்ணெனக்கணைதொடுத்தவன்றலைதுணித்தியென்றரிதொகுக்கவே. ()

ஒக்குமென்றுறுதிபற்குனன்றனியுவந்துசிந்தைபலகணைகளாற்
பக்கநின்றவர்முனைக்கண்வந்தவர்படப்படப்பொருதுபாரெலா
முக்கணன்கடையுகத்தில்வந்தெழுமுறைக்குநேரெனநடுங்கவே
தக்கதக்கபடிபுரியுமெல்லையரிசெய்ததண்ணளியியம்புவாம். (௩௬௩)

வேறு.

பாராழியவலமறப்பாண்டவர்தமிடர்தீரப்பார்த்தன்வாழப்
பேராழியரவணையும்பெருமிதமுமுடன்றுறந்துபிறந்தமாயோ
னோராழியெழுபரித்தேருடையானைமாய்கையினாலொளிக்கத்தன்கைக்
கூராழிபணித்தலுமக்களம்போலுஞ்சிவந்தகனகுடபாலெங்கும். (௩௬௪)

அயத்திரதமிடப்பசும்பொனாவதுபோலருச்சுனனாலறினாராக
நயத்திரதமொழிக்கீதைநவின்றபிரான்மயக்கமொருநாள்செய்வான்றன்
வயத்திரதமறைந்ததெனவலம்புரித்தாரவன்சேனைமன்னரார்த்தார்
செயத்திரதன்பயமொழிந்துசிரநீட்டிச்சிவந்தகுடதிசைநோக்குற்றான். ()

எண்சிறந்தமகன்றலையைநிலத்திட்டான்றலைதுகளாகென்றுநாடித்
தண்சுமந்தபஞ்சகமென்றொருமடுவிலவன்றாதைதருப்பிக்கின்றா
னெண்சரங்கொண்டிவன்றலைமற்றவன்கரத்திற்போய்விழவுமுடற்றுகென்று
திண்சயங்கொள்விசயனுக்குச்சிந்துபதிதனைக்காட்டித்திருமால்சொன்னான். ()

வரத்தினின்முன்பெறுசாபம்வாங்கிவிசயனுஞ்சிந்துமகிபன்மௌலிச்
சிரத்தினிலெய்தலும்பாசுபதமேகித்துணித்தலுமச்சிரம்வீழாமற்
சரத்தினைமேன்மேலேவித்தடத்திருந்துதருப்பிக்குந்தாதைதன்பொற்
கரத்திடையேவீழ்த்தானவன்றலையைநிலத்திட்டக்கணத்தின்மாய்ந்தான். ()

முன்பட்டானருக்கனெனவறுபட்டானறுபட்டுமுடிவிற்சிந்து
மன்பட்டான்மாமாயன்மாயமிதென்றறியாமன்மகன்போய்ப்பட்ட
பின்பட்டானவன்றந்தையினிப்பட்டாரெவருமெனப்பிழைப்பட்டான்போ
லென்பட்டானரவுயர்த்தோனெரிப்பட்டான்விசயனெனுமெண்ணந்தீர்ந்தே. ()

கன்னசவுபலர்முதலாங்காவலருஞ்சுயோதனனுங்கரந்தான்வெய்யோன்
சொன்னமொழிபிழைத்தான்வெஞ்சுவேததுரகதனெனமுன்றுள்ளியார்த்தா
ரன்னபொழுதெம்பெருமான்மாயவிருட்டடனுழியகற்றிநோக்க [ன்.
வின்னமொருபனைப்பொழுதுண் டெனவிருந்தானெழுபரித்தேரிணையிலாதோ

விரியோதநெடுங்கடலில்வீழ்வதன்முன்வெகுண்டுரகன்விழுங்கினனோ
வெரியோடிமகனிறக்குமெனமகவான்மறைக்கமுகிலேவினனோ
கரியோன்கைத்திகிரியினன்மறைத்தானோவிருள்பரந்தகணக்கிதென்னோ
பெரியோர்கடிருவுள்ளம்பேதித்தாலெப்பொருளும்பேதியாதோ. (௬௭௦)

தனிக்குடங்கையடங்குகனியெனவிருந்தசயிந்தவனைத்தரணிதோன்ற
பனியடங்குபரிசேபோற்பாசுபதக்கணையாலேபார்த்தன்வென்றான்
இனியடங்கிற்றரவநெடுங்கொடியவன்றன்புகழ்ப்புவியினிகழ்வுற்றென்றார்
நனிமுடங்குகொடுமரங்கொண்டணிமுடங்காப்பலபாடைநாடர்மாதோ. ()

உக்கிரதத்தனிவலவனுபாயத்தால்வருணன்மகனுயிரைமாய்த்தான்
மந்திரமொன்றறிவித்துமணிக்கவசம்பொடியாகமடிவித்திட்டான்
றந்திரமெய்மயங்கிவிழத்தன்சங்கமுழக்கினன்றபனன்மாற
விந்திரசாலமுஞ்செய்தானிந்திரன்சேய்வெல்லாமல்யார்வெல்வாரே. (௬௭௨)

முடையடுத்தநவநீதத்தொடுவுண்டுகட்டுண்டுமுதனுணைக்
குடையெடுத்துமழைதடுத்துவஞ்சனைக்கோர்கொள்கலமாங்கொடியபாவி
படையெடுத்துவினைசெய்யேனெனப்புகன்றமொழிதப்பிப்பகைத்தபோரி
னிடையெடுத்துநேமியினல்வெயின்மறைத்தானின்னமிவனென்செய்யானே.

ஒற்றைநெடுந்திகிரியினன்மறைவதன்முன்னைவரையுமுடன்றுமோதிச்
செற்றிடுதல்யான்படுதறிண்ணமெனச்சேனையொடுஞ்சூழ்ந்துசென்றான்
கொற்றவனதுரைகேட்டுக்கொடிநெடுந்தேர்நரபாலர்சபதங்கூறி
மற்றவரோடொருகணத்துவம்மினெனத்தனித்தனிபோய்மலையலுற்றார். ()

ஆறுடுபெருஞ்சோரியலையெறியுங்களத்தினிடையடுத்தமூவர்
சேறுடுதேர்பொதுளிச்செந்தழல்கால்வெங்கணைகடிசைகள்போர்ப்ப
மாறுடுவபவர்தமைவானகத்தினுறப்போக்கிமலைந்தார்முன்னர்
நீறுடுதிருமேனியொருவனொடுசமர்வென்றநிமலவீரன். (௬௭௫)

மூன்றுகணையுரம்போழமுடிந்தவன்போற்கிருபனெனுமுனியயர்ந்தா
னூன்றுசிலைப்பரித்தாமனொருகணையால்வென்னிட்டானுரககேது
தோன்றுநரபாலருடன்றேரிழந்துவில்லிழந்துதோற்றுமீண்டா
னேன்றுமுனைபுகுந்திலன்மற்றிரவிசுதனிருந்திடத்தேயிரியலானான். (௩எசு)

ஒன்னலரைவென்கண்டுமுவந்திலன்பற்குனன்கிருபனுயர்ந்ததேர்மேற்
பொன்னசலமெனவயர்ந்தபுலமையினானுளந்தளர்ந்துபுலராநின்ற
வந்நிலைகண்டவன்றனக்கோரயிர்ப்பிலையென்றெடுத்துரைத்தாங்கவனைப்புல்கி
பன்னுகுருவாகினிவென்றனையுனக்கார்நிகரென்றான்பச்சைவண்ணன். (௩எஎ)

நின்னருளால்வென்றதலாலென்னுணர்வேன்யானென்றுநிருபன்கூற
வன்னவனுக்கினியுனதுமுன்னவன்பாலேகவெனவறைந்துதேறி
மன்னர்புகழ்சாத்தகியும்வாயுமதலையுமிரண்டுமருங்குதுன்னத்
தன்னனையவுத்தமோசாவினுடனுதாமனொடுந்தருக்கின்மீண்டார். (௩எஅ)

ஆடியவான்கவந்தநிலையரியகளேபரங்கணிலையலகைவெள்ளம்
பாடியபேரோசைநிலைபருந்தொடுபல்பறவைநிலைபரவையேபோற்
கூடியசெம்புனலினிலையாய்ந்தாய்ந்துதுரோணனொடுகுறிக்கும்வெம்போர்
நீடியபோரரவமுறுநிலத்தினுதிட்டிரனெதிர்போய்ப்பணிந்துநின்றார். (௩எகூ)

கதிர்கண்டதாமரைபோற்கவினமுகஞ்சிந்துபதிகழிந்தசெய்கை
யெதிர்வந்தோர்மொழிந்திடக்கேட்டிருசெவியூடமுதூறலெய்திற்றென்னச்
சதிர்தங்குமிருபுயங்கள்சேட்செல்லவிருவரையுஞ்சார்ந்துபுல்கிப்
பிதிர்கொண்டபெருமானுக்களவின்முகமனும்புகன்றான்பீடமிக்கான். (௩அ०)

வாயுமதலையைத்தழுவிமாமனிளவலையணைத்துமருங்கினின்ற
காயுமிழுங்கனற்கணையாரிருவருக்குமினிதுரைத்துக்கண்ணனோடு
நேயமுறப்பலவாய்மைநிறத்துவயம்புனைந்தனுகுநின்னைநோக்கத்
தூயதவம்புரிந்துளதென்கண்களெனவினிதிருந்தானறத்தின்றோன்றல். ()

வென்கொடுத்தபுவிவேந்தன்விறலழிந்தபடைஞருடன்மீண்டும்போந்து
முன்கொடுத்தமணிக்கவசமுனிவனிருந்தணிசமர்வாய்முனையினெய்தி
மின்கொடுத்தமுடிச்சிந்துவேந்தனிறந்ததுதெரியவிளம்பிநின்றா
னென்கொடுத்துமுடியாதாரிருக்கதலங்கேட்டபொழுதிலையென்றோனே. ()

சிந்துபதிதலைதுணிந்துசெனிப்பித்தோனுடனிறந்தசெயல்களெல்லா
மந்தணன்கேட்டரசனொடுசிலவுரைத்தானறம்வெல்லும்பாவந்தோற்கு
மெந்தவிதத்தினுமென்பதுணர்ந்தாய்கொண்மூதாதையிசைத்ததெல்லா
நந்தன்மகன்புகன்றதெலாமிகழ்ந்தினைஞர்பகர்ந்தவுரைநாட்டிநின்றோய். ()

உன்னைவெறுப்பதுந்தகுதியன்றெதுவுமூழ்முறையென்றுணர்ந்தோமிப்பா
லென்னைவெறுத்தென்னபயனெய்திநமைவென்றவரையிகலிற்சாடி
முன்னைவெறுப்பினைத்தவிர்வோம்வருதிரெனமன்னவனுமுசிப்புநீங்கித்
தன்னைநிகர்த்திடுகல்வித்தரணிமகனருகடுத்துச்சாற்றலுற்றான். (௩அச)

ஆரணவில்லாசிரியனணியணிந்துகம்படையோடைவர்மீதிற்
காரணவிற்றெழிலியற்றுமாறுகக்கட்டுரைத்தான்காலைப்போதிற்
பூரணவாகினியணிந்துதனஞ்சயன்வந்தெய்தாமற்புரிந்தோமென்ற
சீரணிதேசிகன்வாய்மையெவ்வண்ணந்தெளிவதெனச்செப்பினானே. (ருஅரு)

வட்டவரிவிற்குருவால்வஞ்சனையின்றவன்கற்றவாற்றல்வெம்போ
ரொட்டிமுனைந்தனன்விசயனூழ்வலியால்யாவரையுமுற்றங்கொண்டான்
கட்டழல்கால்வனத்துய்த்தோங்கடுவருந்தச்செய்தோமிற்கனலுக்கிட்டோம்
பட்டனரோபாண்டவர்மற்றொருவரையும்வெறுப்பதுமோர்பழிப்பேயன்றோ.

செப்பியவாசகப்படிபோர்செய்துணர்தும்விதிவழியிற்றீர்ந்தோரின்று
வெப்பறவாண்டகைக்குரைத்துவேதியனுமேனையரும்படைகளுன்கு
மெய்ப்புவனநிற்குமெனப்புடைபெயரப்பணைமுழங்கவெழூந்துசூழ்ந்தான்
முப்புவனந்தனதுபெயர்முறைநிறுவிக்கதிர்பரப்புமுதல்வன்மைந்தன். (ருஅஎ)

சிற்றவனலகமுளச்சிதறுபொறிவிழிகாட்டத்தூமஞ்செய்யோன்
காற்றுயிற்பினெடுமேவக்கலைதெரிவிலாசிரியன்கட்டுரைத்தான்
மாற்றலரைவென்றுசமரமுடித்தலவர்கரத்தான்மடிதலன்றிப்
போற்றுமினிப்பாசறையிற்புகுதேனென்றருஞ்சபதம்புகன்றான்மன்னோ. ()

கந்தனிவனெனுமதலைகவினுறுவாண்முகநோக்கிக்கருதலாரா, முந்துறவிற்பாஞ்சாலர்முடித்தலைகள்சிதைத்தடுவன்முனைவாயாவி, யுய்ந்தனருண்டெனிலவரைமுடிப்பதுனக்கருங்கடனென்றுளங்கொளென்றான், றந்தையுயிர்க்கழிவுண்டென்றுணரான்வெந்திறற்றனையன்றலைமேற்கொண்டான். (ருஅசு)

மீண்டடைந்தார்போர்தரவென்றிருதோள்கள்சேட்செல்லவிரைந்துமுந்திப்
பாண்டவருமவரோடுபடைத்துணைவந்துளவேந்தர்பலருந்தொக்குத்
தூண்டிரதமுதலாயபடைநான்குந்தமைச்சூழத்துன்னிநின்றார்
காண்டவமுன்னழற்கிந்தகாளையுநின்றனன்மாயன்கடவுதேர்மேல், (ருசுக)

துணைவொலியுநிணவொலியுஞ்சோரிநதிப்பெருக்கொலியுங்கவந்தந்துன்று
பிணவொலியும்பேய்ச்சிறார்பேச்சொலியுஞ்செவியெய்தாதடங்கிப்பெட்பார்
குணவொலியுந்தேருருள்கள்குரைப்பொலியும்பரியொலியுங்கொடுங்கைவேழக்
கணவொலியுமாளொலியும்பாண்டவர்தஞ்செவிதோறுங்கலித்ததாலோ. ()

வேறு.

இருவர்படைகளுமெதிருமிடையினிலெழுதுமரவுயர்கொடியினன்
வெருவலினியுயிரொழிவனிவனெனவிறல்கொடுணிவுடனணுகியே
மருவுமுரசுயர்கொடிகொளிறையொடுமதுகையுழுவையின்மலைதல்கண்
டுருவுகொடுபகலிரவுமுறுவதையுவமைவிபுதர்களுரைசெய்தார். (ருசுஉ)

புரவிபுரவியைமுடுகவலவர்கள்பொதுளவெதிரெதிர்புனைகொடேர்
விரவியிருசிலைகுனியவதிலெழுமிதமில்விபரிதகணைகள்விண்
பரவியுலகொடுகடலும்வரைகளுமயர்வுபடவமர்பயிறலா
லிரவிகுலபதியசுரனெடுபொருமிகலினிணைகுரிமையிலார். (ருசுரு)

பொருதுபொழுதினிலறனின்மகனனல்பொதுளுகணைகொடுசமர்செய்தோன்
விருதுகொடிசிலையிரதமிவுளிகள்விரவுவலவனைமுதலெலாங்
கருதுபொடிபடவிகல்செய்தொருகணைகனகவரைநிகர்புயமிசைக்
குருதிபொழிதரவுருவவிடுதலுமயர்வுகுருகினனிரதமேல். (௩௯௪)

உய்வதிலையெனவெய்துமுனைஞர்கலங்குமமையமுயிர்ப்புறு
மய்யமறவெழுமுன்னரரசருமங்கர்பதியுமுனைந்துளார்
கைவிலொடுமறன்மைந்தன்வரமிசைகந்துகணைபலசிந்தியே
செய்வதெதுவெனவஞ்சவிவனமர்செய்துதிறமைசிறந்துளான். (௩௯௫)

கண்டுசிலைமுனையண்டர்வெருவிருகண்கள்பொறியழன்மண்டவத்
தண்டுமிடையெதிர்கொண்டுசிபியமர்தந்தககனமடைந்தனன்
பண்டுதுருபதன்மைந்தனருளியபஞ்சசரனிகருஞ்சுதன்
விண்டுபலவமரின்கணணிதருவிண்ணிலணுகினனென்பவே. (௩௯௬)

சுருதிமுனிதருகணைகளளவறுதுரகமதகிரிபிரதமால்
விருதுபொடிபடமுடுகிவரவரவிறல்கொள்சமிரணியொருபுடை
பரிதியெனவொளிதிகழிரதகசதுரகமுதலியபனியையொத்
தொருதனிகன்முனைகெடவுமடுகணையுதவியொலியொடுதிரியவே. (௩௯௭)

வேறு.

துருபதனுஞ்சாத்தகியுந்துருபதன்மைந்தனுங்கூடித்தொட்டசாபக்
குருவுடனேபோர்செய்யத்தம்பியருஞ்சுயோதனனுங்கொற்றவேந்த
ரொருபதினாயிரவரும்போய்வீமனுடனுடற்றியவனூர்ந்ததேரும்
வரிசிலையுமழித்தார்பின்னங்கவனும்வெங்கரத்தால்வன்போர்செய்தான். ()

பரியெடுத்துப்பரியெற்றிப்பரித்தேராற்றேரெற்றிப்பணைக்கைவேகக்
கரியெடுத்துக்கரியெற்றிக்காலாளாற்காலாளையெற்றிப்போரிற்
கிரியெடுத்துவிரிவாழிகடைந்ததடந்தோளிருடிகேசனென்ன
வரியெடுத்தகொடிவிடலைதோள்வலியாலுழக்கியரிநாதஞ்செய்தான். (௩௯௯)

நிருபர்தொழுங்கனைகழற்காற்றிறல்வேந்தன்றம்பியரினெடும்போதாக
விருவர்புறங்கொடாமலெதிரிருதோளின்வலிகாட்டவிருவரோடு
மொருவரொருவரையறியாவண்ணமிவனொருவனுமேயுடன்றுசீறிப்
பொருதவிருதனையுமடற்சூசிதனையும்வானிற்போக்கினனே. (௪௦௦)

எல்லவருங்கண்டிருப்பவிகலரசன்றம்பியரோரிருவர்வீமன்
கல்லவிரும்புயவலியாற்களப்பட்டுஞ்செருமுனைஞர்கலக்கமெய்திக்
கொல்லவருமறலியிவனுருவாகிப்பாண்டவர்பாற்குறுகிற்றென்ன
வல்லவரும்போரழிந்துபுறந்தந்தாரிவருடனார்மலைவோரென்றே. (௪௦௧)

சோமதத்தனெனப்பெயர்கொள்தோள்விடலைசாத்தகிநேர்துன்னிநின்று
தாமதத்தாற்சிலமொழிந்துதனையனுயிருண்டதற்குத்தரியானாகி
மாமதத்தகைவேழமடங்கன்மிசைபுகுந்ததெனமலையலானன்
றீமதத்தகொடுங்கணைகடிசையெட்டும்போர்த்திடவோர்சிலைகைக்கொண்டே.

ஒழித்ததுபொயுன்மகனையொழிப்பதனைமெய்யென்றேயொருவில்வாங்கி
விழித்ததிசைகனல்கதுவவிழியானும்பலவிசிகம்விரைவினுய்ப்பத்
தெழித்திருவருஞ்சமர்செய்திறனோக்கிச்சகுனியொடுசேனைநான்கும்
பழித்தனியேசுமங்கநரபாலன்விடத்தமக்கினியான்பக்கஞ்சேர்ந்தான். (௪௦௩)

தேயாதபோராண்மைத்திட்டத்துய்மனும்பலருஞ்சென்றுசேர்ந்து
காயாதகடுங்கணைவிற்சாத்தகிக்குத்துணையானார்ககனமெங்கு
மோயாதகனன்மலியவுடன்றிடும்போதரியிளவனூற்றவம்பாற்
சாயாதமுடிசாயவயர்ந்தனன்றேரினிற்சோமதத்தனென்போன். (௪௦௪)

மெய்சோர்ந்துவீழ்ந்திடலும்விரகறிந்ததேர்வலவன்விலக்கித்தன்றேர்
பொய்சேர்ந்திடாவரசனிருந்துழியிற்கொடுபோனான்பொருதசேனை
கய்சோர்ந்துபடைசோர்ந்துகார்முகங்கள்சோர்ந்துமழைசொரிவதேய்க்கு
மெய்சோர்ந்துவென்கொடுத்துமீண்டார்மற் றொருகணத்தினிளையோர்க்கம்மா.

ஆர்ப்பரவத்தொடுமெய்துமடலானையயத்தாமனேறநோக்கிப்
போர்ப்புலியிற்சினங்கதுவப்புயவலிசிந்துவனென்றேபுகுந்தவெல்லை
தோற்பதுணராவலிசேர்மாருதிதன்சுதன்விரைந்துதுன்னியானே
யேற்பதிவனுடனென்றேயிடையடுத்தான்படைநான்குமிரியல்போக. (௪௦௬)

விலக்கரியபுயவலியானடுத்ததுகண்டரவுயர்த்தவேந்தனோடுங்
கலக்கறுதோள்வலியரசர்பலரெய்தியார்கலியிற்கலித்துச்சூழக்
குலக்கிரிவான்கடன்மதித்தகொள்கையெனத்தாக்கியிவன்கொதித்தல்காணா
விலக்கமறுகொடித்தேரார்வென்கொடுத்தார்தனிநின்றானிவுளித்தாமன். ()

இகலிடும்பன்மருமகனுந்திருமகனுங்குருமகனோடெதிர்ந்துபல்கா
லகலிடமுஞ்சேறுகவமரருடனசுரரைப்போலமர்செய்காலை
பகலுடனேரிருள்பகைத்தாற்பலிக்குமோவஞ்சனபற்பனையப்போதிற்
புகலிடம்பொன்னுலகாக்கிப்போக்கினானொருகணையாற்புரவித்தாமன். (௪௦௮)

மகன்பட்டசினங்கதுவவரைபுரைதோட்கடோற்கசன்மால்வரைகள்வீசி
யகன்பட்டநுதல்வேழமன்னான்மேலெறிந்தெறிந்திட்டார்த்தகாலை
குகன்பட்டர்தனக்குரியகோமுனிவன்மாமைந்தன்வீமன்கையிற்
பகன்பட்டபாடெல்லாம்படுத்தியொருகதாயுதத்தாற்படியில்வீழ்த்தான். ()

தேறியவன்மீண்டெழுந்துதிட்டத்துய்மப்பெயரோன்றேர்மேற்போந்து
மாறியருஞ்சமரியற்றிவலிகாட்டுமுகந்தோறுமறையோன்மைந்த
னூறியவன்படைகலங்கநுண்டுகளிற்படுத்தியொருநொடியிற்றீமை
யூறியமர்திருதரெலாமுயர்வானமடைவித்தானிடியேறொப்பான். (௪௧௦)

அக்கணத்தின்முதல்வந்தச்சோமதத்தனெனும்பெயரோனாறித்தேறி
மிக்கபடையொடுந்திருகிச்சாத்தகிமேல்வந்துறலும்வீமனெய்திப்
புக்கழல்கான்முனைவயிரப்பேரத்திரமோச்சினன்மீண்டும்பொன்றினான்போற்
றக்கவிரதத்தயர்ந்தான்றரணிபராயுளவேந்தர்தலைபனித்தார். (௪௧௧)

மைந்தனவசப்படுதல்கண்டாற்றான்சிலைவாங்கிவாகுலீகன்
செந்தழல்கான்முனைவாளிசெலுத்துதலுமவையனைத்துஞ்சிதைத்தூக்கி
வந்தமாருதிவேறோர்வான்கணையையுய்த்திடமற்றவன்றன்சென்னி
சிந்தியதக்கணம்படைஞரஞ்சியகன்றனரொடுங்கித்திசைகடோறும். (சகஉ)

அதுநோக்கியாற்றலராயரவுயர்த்தோன்றனக்கிளையோர்பதின்மராண்டு
விதுநோக்குந்தாமரையின்விளங்குமுகங்குறுவெயர்வுமிளிரச்சென்று
மதுநோக்குந்தாரானைவனைந்துகணைபலபொழிந்தேயாவிமாய்ந்தா
ரிதுநோக்கிச்சமரொழிமின்சமரொழிமின்சமரொழிமினென்பார்போன்றே.()

காரினுக்குநிகர்கரத்தான்சமபூரன்காமனுயரனுவிகடன்கருதுநாபன், போரினுக்குமரியன்ன தண்டதரன்புகழ்சேனு பதிவிச்சனியல்சுபாகு, வேரினுக்கு மொருவனெனு மன்னன்பூண்ட விருதெனவேகளத்தவிந்தார் வீமன்கையாற், பாரினுக்குப்பொறைதவிரவுதித்தவீரபார்த்திபராயுளவேந்தர்நகைபயின்றார்.

அந்தமுனையவன்வெல்லவந்தணன்றன்றிருமதலைகுந்திபோசன்
மைந்தரிருவரையிரண்டுவடிக்கணையான்மடிவித்தான்மாயோன்வண்கைச்
செந்திகிரிதனிலடங்கிமுடங்கியதன்கிரணத்தின்சிறுமைநாணி
யுந்துதிரைச்சிந்துவினிலோராழித்தேரோனுமொளித்திட்டானே. (சகரு)

வேறு.

இசையினும்பெருகநன்றெனத்தனதியற்கையான்மிகவளர்த்திடும்
வசையிலுங்கரியவிருள்பரந்துழிவயங்குதீபநெடுவாளியா
னிசியினும்பொருவனென்றுதெவ்வரைமுனேர்நடந்தனனெருங்குவிண்
ணசையினும்புவியுமசையினுஞ்சமரிலசைவிலாததிறலாண்மையான். (சகசு)

பகலிராவரவழைத்தனன்பகைவர்பாகனென்றுபடுபகலையவ்
விகலிராவரவழைத்தனன்கொலெனவண்டகூடமுறவிருளறத்
திகலிராவொலியுமாய்விளக்கினமெடுக்கவென்றுகடிதேகினான்
றகலிலாததொர்மனத்தினான்வலியதனதனேநிகர்தனத்தினான். (சகஎ)

பொங்கியாடரவெழுந்தனேகவிதமானதென்றரசர்புகலுமா
றங்குவாளரவுயர்த்தகோனினைவறிந்தளப்பரியவாகவ
மெங்குமானைபரிதேர்கடோறுமொளிர்தீபகாளமுமெடுக்கவே
சங்குதாரையெழநின்றனன்றருமன்மதலைதம்பியர்கடமரொடும். (சகஅ)

கருதிவாகைபுனைவிசயன்மேல்விசயகன்னன்முந்தியமர்கடுகினான்
கிருதவன்மனெனும்விருதன்மாமுரசகேதனன்றனொடுகிட்டினான்
சுருதிமாமுனிதுரோணனும்பழையதிட்டதுய்மனொடுதுன்னினான்
பொருதுமாய்வனெனவீமனோடெதிர்புயங்ககேதுமிகுபோர்செய்தான். ()

சல்லியன்பெருகுசல்லியத்தொடுசதானிகன்றனொடுபோர்செய்தான்
வல்லியம்புனைகடோற்கசன்றனொடுபோர்செய்தான்முனிவன்மைந்தனு
மெல்லியங்குசுடரினுமணிச்சுடர்களெழுமடங்கொளியெறிக்கவும்
பல்லியம்பலமுழங்கவுந்தரணிபாலரிப்படிபகைக்கவே. (சஉ0)

உருவியோடுகணைவில்லும்வாளுமயிலொத்துலாயபடைவீரருங்
கருவிதங்குபணைவேழம்வாசியிரதங்களூர்ந்தகழல்விருதரும்
வெருவிலாதிருதிறத்துமாடமர்விளைத்திடுஞ்செயல்சுராசுரர்
செருவினும்பெரிதுறவெழுந்ததுதிசாமுகம்பொதுளுகம்பலை. (௪௨௧)

நின்றருந்தபனனேகினனினியெனக்குவாசிகொடிநீடுதேர்
முன்றருங்கனலிலொளியெழுந்ததெனமுரணழிந்திடமொழிந்துபோர்
மின்றருங்கணைகளால்விழப்பொருதுவெயிலவன்சுதனைவிரைவுடன்
பின்றரும்படிதுரந்தனன்றனுசர்பின்னிடப்பொருதுபெற்றியான். (௪௨௨)

ஒருவன்வாகுவலியாலும்வார்சிலையுதைத்தவாளிவலியாலுமொண்
குருதிபொங்கவடுதருமனுந்தபனகுலகுமாரர்நிகராயினான்
கிருதவன்மனெனவருநராதிபதிகேட்டுமாவிரதம்விட்டுவா
ணிருதர்சேகரனொடுவமையாயினனெடுங்களத்திலெதிர்நின்றிலான். (௪௨௩)

கிருதன்வென்னிடுதல்கண்டராவெழுதுகேதனம்புடைபெயர்ந்ததேர்
நிருபனுந்துசிலையாரியற்கதுநிகழ்த்துமுன்னெதிரின்மேவினா
னிருதனுக்கிரிகள்வளையவாளிபலவெய்துகைவலியிழந்தபின்
குருதனித்தனிதொடுத்தனன்சுரர்கொடுத்தவாளிகளனைத்துமே. (௪௨௪)

தருமனங்கவர்கடந்தவாளிகடனைச்செலுத்தியவைவென்றபின்
குருவனந்தமுனமம்புயத்திறைகொடுத்தவாளிதனையேவினான்
வருமுகங்கொள்வடவானலம்புடைபெயர்ந்ததொத்தணுகுமாறுகண்
டொருவனுங்கமலவூர்திதன்கணையினுய்த்துவென்றனன்மதிக்கவே. (௪௨௫)

வேதகாரணனரும்பெருங்கணைவிலங்கலுஞ்சுருதிவேதியன்
மாதராதிபருடன்பெருஞ்சமர்மலைந்துவென்னிடுமடங்கினான்
வாதகாளையொடுபோரிழந்தவலிமன்னர்மன்னவன்வருந்தியே
சூதகாளையெதிர்துன்னிநின்றிதுதொடுத்துரைத்தனன்விருப்பினால். (௪௨௬)

ஒலிந்தியங்குமடலைவரேவுகணையூற்றமிக்குயர்வலத்தினான்
மெலிந்தடங்கியதுநம்பெரும்படைவிலங்கலம்புயவினோதநீ
வலிந்தருஞ்சமர்முகங்கடோறுமுனைவின்மைநாட்டுதறுவாயிதே
நலிந்துமாற்றலரைவிண்ணிலேற்றுகெனநளினநண்பன்மகனோதுவான். ()

வரவுமென்னெதிர்புறங்கொடாதவொருமாற்றலாருமுளரோவமர்
பொரவும்வல்லனடலைவராவியதுபோக்கியிப்புவனநின்வயின்
றரவும்வல்லனினியானிருப்பவொருசஞ்சலங்கொளலையென்னலும்
பரவுமங்கருகிருந்தநற்கிருபமுனிபொருதுசிலபன்னினான். (௪௨௮)

வல்லைவல்லைசிலவாய்மைசொல்லவடன்மாற்றலாரையடவல்லையோ
குல்லைசூடியுமுடன்பிறந்தவர்குலச்சிறார்சிறுதுகொற்றவ
ரெல்லைகொன்றபடைபாவுமின்றிநரனேகன்வந்தமரின்மோதுநாண்
முல்லைபாயர்நிரைவிட்டுவென்னிடுமுதன்மையோயிவணறைந்ததே. (௪௨௯)

என்றுகூறவிறலங்கர்பூபதியெனக்குநேர்கொனரனென்னமுன்
சென்றுகண்களழல்சிந்திமற்றொருவர்செப்பினாவினையொறுப்பனா
னின்றுநீபுகவுரைத்தலாலிதுபொருத்துளேனினியிசைத்திடின்
வென்றியோய்பழையவின்மையாசிரியனென்றுபார்த்திலன்விளம்பினேன். ()

எனதுவின்மைசுரர்புகழ்வரிவ்வுலகிலெவருளந்தனில்வியந்திடார்
மனதுபாண்டவரிடத்திருந்தபடியாலுரைப்பதிதுமாண்பெனத்
தனதுசிந்தையழல்கதுவநின்றிதுதயங்குகன்னனுரைசெய்யவே
புனிதமொன்றுசிலையாரியன்றருபிரதாபமைந்தனிதுபுகலுவான். (௪௩௧)

நின்னில்வல்லவர்களில்லையென்றுநினைநீபுகழ்ந்திடுவையென்னினும்
பன்னிலேனையரைநாவிறுக்கும்வலியாதுகொண்டுகொல்பகர்ந்துளா
யுன்னிநீநரனைவெல்லவல்லனலனென்றுபன்முறையுரைத்துளேன்
சொன்னசொல்வழுவுருதுசிங்குவைதுணித்தியென்றெதிர்தொடங்கினான். ()

கண்டுகாவலன்விரைந்துசென்றிடைகலந்துநின்றுபலகல்வியுட்
கொண்டுநின்றவர்கணீவிர்சிந்தைகள்கொதித்துமாறுபடுகொள்கையால்
விண்டுதீர்ந்ததெனதரசுமாண்மையுமெதிர்ந்தமேவலரைவெல்லவோ
மண்டுசீற்றமுடனொருவருக்கொருவர்மலையவோவிவணடைந்ததே. (௪௩௩)

இருவராரியருநீயுமத்திரனுமிரவிகான்முளையுமென்னுயிர்க்
கருகுசாருமுயர்பூதமைந்துமெனவாதரித்துறுதிகொள்வன்யான்
செருவினீவிர்பலபேதமானவுரைசெப்பநீதிகொலெனப்புகன்
றொருவிவாளியுயிருண்மினென்னவிரவிக்குகந்தமகனேறினான். (௪௩௪)

வாளமாகவில்வளைத்துமாகபதிமைந்தன்வாளிரவிமைந்தனைக்
கோளமானகுடையிரதம்வாசிசிலைகொடிமுருக்கியமர்கொள்ளவே
மீளமீளவுமழிந்தழிந்தவனொர்வேலினாலெறியவேலையுந்
தூளமாகவடிவாளியாலெதிர்துணித்துவன்பொடுதுரக்கவே. (௪௩௫)

புறமிடுஞ்செயலுணர்ந்தராவெழுதுபுனைகொடிக்கதிபனொருதனி
நிறமிடுஞ்சதரனொடுபொரும்படிநினைந்துதன்னுயிரைநீக்கவே
மறமிடுந்துணிபுகொண்டுசேறலுமறைக்கடற்கிருபமாமுனி
யறமிடுந்தனதுமருகனுக்கிவையறைந்துளானருடயங்கவே. (௪௩௬)

வீறியங்குவடவானலத்தின்மிசைவிட்டில்வந்துவிழுமேன்மைபோ
லாறியங்கிவிதையத்தனேகவருகாயிருத்தலழகன்றுநாஞ்
சேறியங்குமுனைசேர்துமென்னவிதுசெம்மையென்றிரதமுந்தினா
னீதியங்குமுடலந்திவண்ணனருள்கண்டிருந்ததவநெஞ்சினான். (௪௩௭)

முன்னர்சென்றதனிமன்னர்மன்னவன்முகங்குறித்துநரன்மொய்யமர்
பன்னுதற்கருதியாமுடிக்குதுமிருந்துகண்டருள்பணிக்கெனப்
பின்னர்நின்றினிதுகூறுவானுனதுபெற்றதாதையவன்மீதிலன்
புன்னுமாதலினுனக்குவெஞ்சினமுதிப்பதில்லையிவையுறுதியே. (௪௩௮)

சினமியங்கவொருமுனைபுகுந்துசிலைகோலிநின்றனையெனிற்செறுர்
வனமியங்கவகல்வானியங்கவலதேரெறிந்துபொருமாண்பினோர்
கனமியங்குபரிவாசவன்றனயனைத்துணிப்பதொருகணிதமோ
மனமியங்குநிலையுரைசெய்தேனெனவயம்பெருமகிபனுரைசெய்தான். (௪௩௯)

பாசமன்புறவுஞற்றினுருமிகல்பட்டகாலையவைபொருள்செயார்
நேசமின்றியமர்செய்துமாய்வர்வலிநிறைவுளாறையுமுரைப்பராற்
பூசலின்கணெறியாம்வலாரிதருபுதல்வன்வின்மைதெரிபுலமையா
னாசமெய்துமுயிரென்றுபேரளிநயந்துகூறுநனியெந்தையே. (௪௪௦)

சொல்லவாய்ந்துபலசெய்கைநற்குரவர்தூய்மையாதலினுரைக்குமிவ்
வெல்லையவ்வுரைகளன்பினோதுமுரையென்றுகொள்ளலைவிரைந்தியான்
வல்லபோர்புரியினுங்கெடாவிதிவலத்தினுரையடவாய்க்குமோ
செல்லுமிந்தமுனையுணர்தியென்றுமுனிசிறுவனுங்கிரதமுந்தினான். (௪௪௧)

ஏமவார்சிலைகுனித்துநாணொலியெடுத்துகாந்தவிடியேறெனத்
தூமவான்கணைதொடுத்தநேகவிதமாகமாரிமழைசொரிதல்போல்
சேமமேவுபடையைவர்வாகினிசிதைந்துவீழ்தரவியற்றினான்
னாமனுமமுடையானிருந்தபலதரணிநாயகர்மதிக்கவே. (௪௪௨)

சிந்துரங்கள்பலபலவிழுந்தனசிறந்தவான்பரிசிதைந்தன
வுந்துதேர்நிரைதகர்ந்துவீழ்ந்தனவுருண்டுமாய்ந்தனர்கள்படைஞரும்
வந்துவந்துபலதேயவேந்தரமர்மலையலாற்றலர்மடங்கினார்
தந்ததின்கரையழிந்தபாங்கர்புனல்சாரவோடுமியனேரவே. (௪௪௩)

எங்குமெங்குமொருவன்கொடுங்கணைகளெய்தியெய்தியுயிருண்ணல்கண்
டங்கிருந்தமர்புரிந்தசேனைமுதலாயநாயகனிறந்துதன்
புங்கவங்களழலிற்செலுத்தியெதிர்போயருஞ்சமர்தொடங்கினான்
றங்குகேசரிதனைச்செருக்கவருதகுகொடும்புளினமானவே. (௪௪௪)

புவியடங்கலுமயங்கவிண்ணிலுறுபுலவர்நெஞ்சுதளர்வெய்திடக்
குவிதருங்கிரிகள்பொதுளவாசைநிலைகொண்டவெங்கரிகள்பிளிறவே
யவிசொரிந்தகனலிற்பொருந்துசினமிதையமூளவமராற்றினார்
நவியவெங்கரனுமவனரும்பகைநயந்தகாவலனுமென்னவே. (௪௪௫)

நின்னையாருயிரகற்றுவேனினிநினைக்குமுன்னெனவமர்க்கெலாந்
தன்னையேயலதிலாதநற்றுரகதாமனின்றுபலசாற்றலா [யைப்
னுன்னையென்கணையில் விண்ணிலேற்றுவனிவ் வொல்லையிற்பொருது நுந்தை
பின்னையாவிகவர்வேனெனச்சிலவுரைத்தனன்கனல்பிறந்துளான். (௪௪௬)

அனையகாலைமுனிமைந்தனுக்குமிகலரசனுக்குமுறுதுணையதாய்
முனையினெய்தினரனேகமன்னவர்முகங்கண்மாறியவர்மீண்டபின்
வனைகருங்கழலிரண்டுவீரருமடுத்துவார்சிலையுதைத்திடுங்
கனைவலங்கணைகளாலழிந்ததுகளத்திரண்டுபடைமுழுதுமே. (௪௪௭)

ஏறுதேருமிவுளிக்குலங்களுமெடுத்தசாபமுமகற்றலா
லூறுதங்குமுடலோடகன்றுபினுபூற்றுவெற்றிவரிவிற்கொளா
வேறுதேர்மிசைபுகுந்துவேதியன்விளங்கரிக்கொடியைநீக்கினான்
கூறுமைவர்படைநாயகப்பெயர்கொள்கொற்றவீரர்கள்குடாரனே. (சசஅ)

நாமவெங்கணைகள்பின்னுமேவியவனற்கொடுஞ்சிலைதுணித்தருந்
தாமவாசிகொடிதேரழித்தருகுசார்ந்துளாரையுயிருண்டுவெங்
காமன்மேனிமிசைமுனிவுகொண்டவிழிகண்ணுநற்கிணைகடுப்பவே
தூமவெங்கணையினனலிலங்கமதுசுட்டனன்முனிசுதாகரன். (சசகூ)

வெந்துமேனியயர்வெய்தினான்விடலைவேறொர்தேரின்மிசைபாகர்கொண்
டுந்தினாரிரதமுனைமடங்கியவனுய்ந்துமீளுமுனரோடைநீ
டந்திதேர்கள்பரியாள்களோடிருவர்தகுமருத்துவர்குமாரர்வந்
தந்திவானகமெனச்சிவப்பெழவமர்க்கொடுந்தலமுனைந்துளார். (சரு0)

முனிவுபட்டெழுவிபாகரற்கெதிரின்மொய்த்தெழுந்துலகைமூடுவெம்
பனியையொத்திருவர்காலிலோடவடுபகழியோச்சிமுனிபச்சைமா
றனியினுய்க்குமொருதேரின்மீளியெதிர்தாவவங்கவனுமேவினா
னினிமணிப்பணியுயர்த்துளானதுலகென்றியாவருமியம்பவே. (சருக)

ஊதைபட்டழல்சொரிந்துகாந்தவுருமென்னவாளிகளுகுத்துறுங்
கோதைபட்டகரவேகமுங்கணைகுறிக்கும்வேகமுநிலைக்கவே
வாதைபட்டுயிர்களஞ்சியெஞ்சவடன்மன்னர்சிந்தைகடுணுக்குறத்
தாதைபட்டமிவருக்கடுக்குமெனவிருவருஞ்சமர்தரிக்கவே. (சருஉ)

ஞாலமுற்றுமுடையானுமெய்க்குருவுநாடியற்புதமிதாமெனக்
கோலமுற்றருகுசார்ந்தபோதுபுனல்கொண்டமேகமனையானுநற்
சீலமுற்றகுருவின்புறந்தனதுதேர்செலுத்தவமராயினார்
காலமுற்றெழுமுருத்திரற்குநிகர்காளையேறிமுனைகாதவே. (சருங)

கற்றவிஞ்சைநிலையிட்டகாவலனுமாரியன்றனொடுகருதொணாப்
பெற்றியோடமரியற்றவங்கொருபெருங்கிரிக்குநிகர்தேர்மிசைச்
சுற்றுறுந்தரணிபாலரோடுவருசோமதத்தனெதிர்துன்னியே
கொற்றமிஞ்சுகயினனீகமோடமர்குறித்துளானழல்கொதிக்கவே. (சருச)

மாலினுக்கிளையவன்கொடுங்கணையில்வாசிநான்குரசிதக்கொடி
மேலையிற்றனுமுதற்கொடுள்ளவைவிலக்கியாருயிரைவீட்டினான்
காலினுக்கினியகாளைதன்கணைகலந்துவாகினிகலக்கலால்
வேலினுக்குவரிபட்டபாடுறவிளங்கிநின்றதனிவெள்ளமே. (சருரு)

பூரியென்றுபெயர்கொண்டபூபதிபொருதசாத்தகியுடன்பெருந்
தேரினின்றமருடற்றியோர்கணைசெறுப்பவாருயிரகன்றனன்
பாரினின்றமகபதியைநேருமறன்மைந்தனோடமர்பயிற்றியே
சீரினின்றநிருபக்குலங்கள்வலிசிந்தியங்கிரியல்போயினார். (சருசூ)

* முன்சதாகதிமுருக்கமேருகிரிமுடிமுரிந்தெனமுரண்கொள்போர்
வன்சதானிகன்வளைந்தவிற்கணையின்மத்திரத்தலைவன்மனமுரிந்
தென்செய்தான்விரைவிலோடினான்விற லிடிம்பிமைந்தன்முனிமைந்தன்மேன்
மின்செய்தாரையயிலேவினானவன்விரைந்துதேரின்மிசைவீழவே. (சஙுஎ)

செங்கதிர்க்கினியமைந்தனோடுசகதேவன்வாளமரியற்றியே
யங்கடற்சிலைதுணிந்துசந்தனமழிந்தபின்னர்வடிவாளொடுந்
தங்குநற்பலகைகொண்டெழுந்தருகுசாருமுன்னர்துணிசெய்தனன்
றுங்கமுற்றகதையயில்களாழிகொடுதோன்றியென்றுமுனைதொக்கவே. ()

யாவுமம்பினிலனேகநுண்டுகளியங்குமாறுபுரிவித்தவன்
மேவுதன்கணையினாலழுத்தமெலிவெய்தினின்றளவில்விற்குதை
தாவுதன்னிளவன்மீதுறுத்திமதிதங்குகுந்திவரமுன்னியே
நாவுரம்பெறவிகழுந்துபோதியிளிநரன்மருங்கெனமடங்கினான். (கடுக)

* தானைகாவலனுமுந்துறப்பொருதரணிமன்னவரனேகருஞ்
சேனைகாவலனையோடவோடவொருதெய்வவாளிகொடுசீறினா
ரானைதேர்புரவியாளொடுற்றெதிரணிந்தமன்னவர்களனைவரு
மேனைமன்னவர்தமக்குடைந்துமுதுகிட்டுமன்னனருகெய்தினார். (சசுO)

அனையகாலையிருவிழிபுலிங்கமுறவடல்செய்வெஞ்சினமகன்றெழ
முனையினின்றிரவிமைந்தனங்கணிமுகந்தொறுங்கரமமைத்துநற்
றனையனுந்துணைவரும்பெயர்ந்துவரவொருகணத்தினரிதந்தவன்
வினையுறுஞ்சமரினெய்தியாவிகொடுமீள்வனென்றிரதமேறினான். (சசுக)

வே று.

உதையற்கிணையுரைசெய்பவனொருவெஞ்சிலைகைக்கொண்
டிதையத்தினிகர்க்கும்புவிமன்னற்கிதிசைத்தான்
விதையொத்துளகணைகொண்டுனதடலாரைவெகுண்டேன்
சுதையுற்றகல்வானேகுதநுணிவோருதியெனலும். (சசுஉ)

அக்காலையிலவனும்பலவடன்மன்னருமனுகப்
புக்கான்முனைபணையார்ப்பொலிபுயலார்ப்பொலியென்ன
மிக்காகளமணிசங்கொடுவிருதெண்ணிலமுழங்கத்
தக்காரினியென்னுமிகலென்றேதளர்வுறவே. (சசுங)

கடைபட்டெழுகணைகொண்டுறுகாலாந்தகனென்ன
விடைபட்டெழுகுணவோதையொடெழுவானெதிர்வேந்தர்
மிடைபட்டமடிந்தார்பலர்வென்னிட்டனரேனோர்
மடைபட்டெழுநறைசேர்புயன்றன்மைந்தைமதித்தே. (சசுச)

கன்னன்சிலையொன்றுன்வலியுளகாவலர்கைவிற்
சின்னம்படலாமென்னிலினிச்செய்திறமென்னே
முன்னின்றமர்புரியாதிதுமுறையோவெனமாயன்
றன்றெனண்செவியுறவோதலுமதுதம்பிதரித்தே. (சசுரு)

விடுதேரவனுயிர்கொள்குவனெனவோதவிலக்கி
யடுகோளரியுடனேதினனலர்நாயகிகணவன்
றெடுகெங்குலிலசுரேசர்கடுணிவாரவரொடுபோர்
மடுவானவர்புகுதாரிதுமதிகொள்குவைவலியோய். (சகூகூ)

இப்பெற்றியினவனெய்தினனிவனேடிகல்பொழுதன்
றப்பெற்றியுணர்ந்தோனவனுடனேற்றலடுத்தோன்
கைப்பற்றியசிலையானயில்கதைநேமிவலத்தான்
மைப்பற்றியவுடன்மாருதிமகன்மேவுகவென்றான். (சகூஎ)

முன்னேச்சிலசதவேந்தரைமொழியாதுமுகுந்தன்
றன்னேத்துதிசெய்தானெனவிருதோள்கடயங்க
மின்னேப்பொழிபுயல்போல்பவரிருதாண்மிசைவீழா
மன்னேத்தொழுதெருவைக்கொடிவதிதேரினிலானுன். (சகூஅ)

விடையேறெனவருமன்னவர்பலர்சூழவிரைந்தே
படையோடெதிருறவந்தொருசிலைகொண்டுபணித்தே
கடையேறியகணேகோடிகலந்தெங்குமுரப்பிப்
புடையேறியசுடர்முன்றருபுதல்வன்றனேவளையா. (சகூகூ)

அணிமன்னவர்படைநூறியனேகங்கணேயுதையத்
திணிதோளவனிவனேந்தியசிலையைத்துணிசெய்தான்
பணியேந்தியகொடியானெடுபலர்சிந்தைமயங்கத்
துணிபோடொருகதைகொண்டுதுரந்தானெருவனுமே. (சஎ0)

தாழாவலிகண்டாய்ந்துசடாசூரனளித்தோன்
பேழார்வலியுடனேயிடைபெயர்ந்துற்றமர்செய்தான்
காழார்கதையினும்வாளினுமிகல்செய்திருகைப்போ
ரூழாமுறைசெய்தாரிருவருமும்பருமுட்க. (சஎக)

பொருகாலேசினத்தாலலம்புதநாமவலத்தோன்
பெருகாழ்வலியுடையானெருதாள்கொண்டுபிடிப்ப
வொருகாவலன்முடிமீதினுறுத்தித்தரைவீழ்த்தே
யிருகாலிருபிளவாகவியற்றிச்சிரமொடித்தான். (சஎ௨)

குருநாயகனணிதேர்மிசைகொண்டோடியெதிர்ந்தே
வருநாயிறுதந்தோனேயிவ்வணமாய்க்குதுமென்னச்
சருகாயதைய்டன்மாருதமெறிபான்மைதயங்க
விருதோடணிபுறமிட்டனர்வேந்தன்படையதிபர். (சஎ௩)

தனவாகினிபிரியாவகைதனுவின்னிலைகாட்டி
முனவாகினியொடுவந்தவன்முரிச்சிலைவளையா
மினவாகினிலங்கக்கணேமூன்றெய்தனன்ஃறலின்
மனவாகினிவருகாளேமறுத்தான்சிலைவளைத்தே. (சஎச)

வேறு.

இவரிலங்குசமரிவ்வணம்புரியவிராசராசனுடனியாவருங்
கவருமாறிதுமருண்டுநோக்கினர்கலித்தவாகினிகலங்கியே
யுவரியின்புடையுதித்தகாளவிடமொத்துலாவியகடோற்கசன்
றுவரிலங்குபுயவலிதுதித்தனர்சொலற்கருங்ககனவாணரே. (சஎரு)

* அன்னபோதினிலனேகநூறுபதினாயிரந்திறலரக்கரோ
டின்னவாறெனவுரைக்கவேநிகரிலாததிண்டிறலலாயுதன்
கன்னசௌபலர்தமக்குநண்பனிருள்கங்குலோர்வடிவுகொண்டென
மன்னர்யாவரும்வெருக்கொளச்சமரின்மன்னர்மன்னனடிமன்னினான். (சஎசு)

* இன்றிராவிடியுமுன்னம்வெஞ்சமர்துரந்தபஞ்சவரையெஞ்சிடக்
கொன்றுபார்முழுதுநின்னதாகவுயர்வானுளோர்பதிகொடுப்பன்யா
னென்றுகோடிசபதம்புகன்றெதிரெடுத்ததீபமுமிருண்டிடச்
சென்றுபற்குனனுடன்முனைந்துவலிசிந்திவீமனெதிர்சீறினான். (சஎஎ)

வேறு.

* பணைத்திருபுயக்கிரிவளரமாற்றலர்பயப்படவயப்படுபயனினூற்றுவர், து
ணைப்பெறுமனச்சினமுடுகநாக்கொடு சுழற்றுகனெருப்பெழ நிருதர்பார்த்திப,
னிணைப்பிறையெயிற்றிள நிலவினூற்செறியிருட் கிழிதரப்பகைமுனையிலேற்கு
மு, னணைத்திருபுறத்தினும்வருமிராக்கதரதிர்த்தனரெதிர்த்தனரமரைநோக்
கியே. (சஎஅ)

* இருட்கிரியெனத்தகுகரியதோற்றமுமெயிற்றினினிரைப்பிணமுடைகொ
ளூற்றமு, முருக்கலர்வெருக்கிடுமருணநாட்டமுமுகிற்குரலிளைத்திடமுதிரும்
வார்த்தையு, மருட்படுகருத்திடைகதுவிசீற்றமுமதக்கடகளிற்றதின்மதமுமா
ய்ப்புடை, நெருக்கினர்தருக்கினர்விறனிசாசரர்நிமிர்த்தனர்வடிக்கணைசிலைகள்
கோட்டியே. (சஎகூ)

* அருக்கனைமறைத்தவர்கடவுதேர்த்தலையருச்சுனன்முதற்பலதுணைவர்
சாத்தகி, செருக்குடையமைத்துனர்குமரர்காத்திடுசெருக்களம்வெருக்கொள
வளையுமாத்திரை, மருச்சுதன்வளைத்ததொர்தனுவினாற்சிலவடிக்கணைதொடுத்த
லுமிரதமேற்பட, துருத்தனும்வளைத்தனனெடிதுகாற்சிலைதொடுத்தனனிலக்க
றுதொடைகள்வாய்க்கவே, (சஅ௦)

* மருச்சுதன்வடிக்கணையமரர்மாற்றலன்வடிக்கணைதடுத்தும்வல்லிரதமா
ற்றியும், விருப்புடன்விருதணிதுவசம்வீழ்த்தியும்விறற்பரிகளைத்துணிதுணிக
ளாக்கியு, முரத்தொடுசெலுத்தியவலவன்மாத்தலையுருட்டியுமணிச்சிலையொடிய
நூக்கியு, மிருட்டொளியுடற்பலமுழைகளாக்கியுமிமைப்பொழுதினிற்றிறன்ம
டியமாய்த்ததே. (சஅக)

✻ நிலத்திடைகுதித்தனன்வடவைபோற்பெருநெருப்பெழவிழித்தனனெடிய மூச்சுடன், வலத்துயரலப்படைநிசிசரோத்தமன்வரைத்திரளெடுத்தெதிர்முடு கியோச்சலு, முலப்புயனிமிர்த்தொருகதையினுற்றன துரத்துடனடித்தவை பொடிகளாக்கிய, திலக்கமில்சுரர்க்கிடமுதவுகோத்தரியெழிற்குவடொடித்தவ னுதவுகூற்றமே. (சஅஉ)

✻ பரத்துவசனுக்குறவுரியகோத்திரிபரிச்சுடரொளிப்பெயர்முனிகுலோத்த மன், மரித்தனனெனப்பிறையயில்கொடோச்சியமணிச்சிறுபொருப்பினைநிகர் கடோற்கச, னெரித்தலையரக்கனேடெதிரியாய்ச்சமரெனைத்தருமருச்சுதன் முனைதல்கீழ்த்தொழி, லுரத்துடன்மலைத்திவனுயிரைமாற்றுவனுருத்தென வுடற்றினனுறுதிதோற்றவே. (சஅங)

✻ இடிக்குரலெனத்தலையுரகர்சாய்த்தனரெதிர்க்குரலெழுப்பினகுலசிலோச் சயம், வெடித்ததுமுகட்டுயர்கடகமேற்றலைவிபத்தெனவிபத்திரள்வெருவுதாக் கின,துடித்தனரியக்கரொடமரராத்தியர் துணுக்கெனவிழைத்தனர்திசைகள்கா ப்பவ, ரடிக்கடிபடித்துகள்பரவைதூர்த்தனவரக்கனுமரக்கனுமமரிலார்க்கவே.

✻ சிரித்தனருருத்தனராணுவின்மோட்டுடல்சிறுத்தனர்பெருத்தனர்மதனி னேக்கின, ரெரித்தனரிரித்தனரருக்கன்மேற்படவெடுத்தனர்படுத்தனர்புடவி கிழ்ப்பட, முரித்தனர்கிரிக்கொடுமுடிகளாற்சினைமுரித்தனர்மரத்தனர்துணிக ளாற்கடி, துரித்தனர்துவக்குறநெரியமேற்பழுவொடித்தனரிளைத்தனருருவம் வேர்க்கவே. (சஅரு)

✻ சிலைப்படையயிற்படைதெளியும்வாட்படைதிறற்பலபடைக்கலவலிமை காட்டியும், வலப்படவளைத்துமல்வலிமைகாட்டியும்வலத்துறுகனற்சினவிழிகள் காட்டியு, முலைப்படுகனற்பொறியுருகடோற்கசனுடற்றியவரக்கரையொருவர் போற்பொரு, தலப்படையரக்கனதுயிரைமாய்த்தனனடற்புயத்துடறனைத் தரையில்வீழ்த்தியே. (சஅசு)

✻ புரத்தினையெரித்தவர்கயிலைமாக்கிரிபுயத்தினிலெடுத்திசைபுனைபராக்கிர மன், வரத்தினில்வனத்திடைதிரியுநாட்சிலமனித்தரோடெதிர்க்கவும்வயிரியா ற்றில, னுருத்துடன்மருச்சுதனுதவிராக்கதனெருத்தனுமெனைப்பலருடனு மேற்றெதிர், துரத்தலின்மரித்தனனிவனெனுப்பலதுதித்ததிசெயித்தனர்சுர ரும்வாழ்த்தியே. (சஅஎ)

வேறு

✻ அன்றுகங்குலிற்பலபதினுயிரமரக்கரோடலாயுதன்றன்னைக்
கொன்றுவெம்பணிக்கொடியவன்சேனையைக் குரங்குகொள்கோதைபோற்கல
யொன்றுபத்துநூருயிரங்கோடியாமுருவுகொண்டிவுளிதேர்களிருள் [க்கி
சென்றிமைப்பொழுதளவையினெவர்களுந்தென்புலமடையுமாசெற்ருன். ()

வேறு

* சண்டமாருதமாயெழுந்திடுமொருகாற்சலதியாயெழுந்திடுமொருகாற்
கொண்டலாயுதகம்பொழிந்திடுமொருகாற்குன்றமாயுயர்ந்திடுமொருகான்
மண்டுபாவகனுயெரிந்திடுமொருகால்வல்லிருளாய்வருமொருகால்
பண்டுதான்வல்லமாயைகளனைத்தும்பயிற்றினன்மாருதிபயந்தோன். (௪அகூ)

* இம்பர்வாளரக்கனிைத்தொடுபிணந்தின்றிடங்கொள்வாய்கொடுமடுத்தில னேற், றும்பிமாபரிமாவீரரென்றிவர்மெய்துணித்தலிற்சொரிந்தவெஞ்சோரி, யம்புராசிகளிலண்டகோளகையினடங்குறுவண்டமும்பிளந்திட், டும்பர்வாரி யையுங்கலக்குமேமிகவுமுண்மைநாமுரைசெயும்பொழுதே. (௪கூ௦)

* கட்செவியெழுதுங்கொடியுடைக்கொடியோன் கன்னனைக்கடைக்கணித் தருளி, விட்சுரபதிவர்தன்றனக்களித்தவேலினல்வீமன்மாமகனை, யுட்செறி சினமும்வலிமையுமுயிருமுடனழித்தும்பரூர்புகுதப், புட்செறிதொடையாய் கோறெனவிரைவிற்புகைந்துநாப்பொறியெழப்புகன்றான். (௪கூக)

* புகன்றபோதருக்கன்புதல்வனுமாயப்போரிதுகங்குலிப்பொழுதே, யகன் றிடுமகன்றலிவனுயிர்பிறிமேதாரம்பினுலகற்றுவித்திடலா, மிகன்றபோர்முனை யினனையிவ்வடிவேலெறிந்துநானிமையவர்க்கிறைவன், மகன்றனுருயிர்கொன் றனதுவெண்கொடைக்கீழ்வைப்பனிவ்வையகமென்றான். (௪கூ௨)

* என்றலுமரசன்யாமுமெம்படையுமிரவிடைப்பிழைக்கரீயிவனைக்
கொன்றுபோர்பொருதுசிலைவிசயனையுங்கொல்லுதியெனமனங்கொதித்துக்
கன்றலுமவ்வேலக்கணத்தவன்மேற்காலவெஞ்சூலமொத்தெறிந்தான்
றென்றலுநிலவுங்காருமொத்தருகிற்சேர்ந்தவரிடரெலாந்தீர்ப்பான். (௪கூ௩)

* எறிந்தவேல்பகைவன்மார்பகந்தொளைத்திட்டிந்திரனிடத்துமீண்டெய்த
மறிந்தமால்வரைபோலரக்கனுமுகம்பார்மருங்குறவிழுந்துயிர்மடிந்தான்
செறிந்தருகணைந்தசேனையும்பயந்தோர்சிந்தையுஞ்செயலறக்கலங்க
வறிந்தவர்க்கன்றியறியொணுவையனவர்துயரகற்றுமாறுரைத்தான். (௪கூ௪)

* இந்தவேல்கவசகுண்டலங்கவர்நாளிந்திரனிரவிமைந்தனுக்குத்
தந்தவேலதனையாவர்மேல்விடினுந்தப்பறத்தெறுமவன்வரத்தா
லுந்தவேலமரில்விசயன்மேற்றொடுக்குமுரகவம்பினுக்குயிருய்ந்தா
லந்தவேலிவன்மற்றெறிவதற்கிருந்தானற்றலாற்கூற்றினுங்கொடியோன். ()

* அலப்படையவனுமநேகமாயிரம்பேரரக்கரும்விளியுமாறடர்த்தோ
னுலப்படையவுந்தானுய்யவுமரசனுரைத்தலாலோச்சினனிவன்மேல்
வலப்படமுனையிலின்றுமக்கவனிவழங்கினன்கன்னனேயென்றான்
குலப்படவரவின்முடியின்மேனடித்தகூத்துடைக்கோவியர்கூத்தன். (௪கூ௬)

* தருமனுமருத்துமடன்மருத்துவருந்தவர்மருத்துவான்மகனைப்
பெருமையம்வலியுகல்வினைப்பயத்தாற்பெற்றனமெனவுறத்தழுவி
யருமையினளித்தமகவுடைச்சோகமாற்றியங்குவகையரானர்
கருமமுமுலகத்தியற்கையுமுணர்ந்தோர்கலங்குதலுறுவரோகலங்கார். ()

* இராவணன்படுபோர்க்களமெனக்கிடந்தவிந்தவெங்களத்திடைமீண்டு
மராவுயர்துவசனாணையால்வரிவில்லாரியனனிகினியுடன்போய்
விராடனும்பாகசேனனுமுதலாம்வேந்தரோடெதிர்ந்தமர்மலைந்து
தராதிபர்பலரோடவ்விருவரையுஞ்சரங்களாற்சிரங்களைத்தரித்தான். (சகூஅ)

* துருபதன்மடிந்தவெல்லையிற்றிட்டத்துய்மனும்வெகுள்டுளஞ்சுடப்போ
யிருபதமரசர்முடிகமழ்முனியையேன்றுவஞ்சினமெடுத்துரைத்தான்
பொருதவெம்முனையிலெந்தையையென்முன்பொன்றுவித்தனையுனைநானை
நிருபர்தம்மெதிரேநின்மகன்காணநீடுயிரகற்றுவனென்றே. (சகூகூ)

* மாமணிமகுடந்துணித்தனனெவரும்வணங்குதாண்முனியெனவயிர்த்துக்
காமனையழுகுங்கந்தனைவிறலுங்கவர்ந்தவெங்கார்முகவீரன்
சோமனைவகிர்செய்தனையவெம்முனையதொடைகளாற்சுரும்புசூழ்கமலத்
தாமனைமுதுகுகண்டனன்முன்னந்தயித்தியர்முதுகிடத்தக்கோன். (ருoo)

* பூத்தகிக்குலமுமால்வரைக்குலமும்புகரிபக்குலங்களும்புகழக்
காத்தகிலமுந்தன்பெயரினைநிறுவுங்கதிர்மகன்றருவிடசேனன்
கோத்தகில்புழுகுசந்தனங்கமழுங்கொடும்புயத்தணிதருந்திருத்தார்ச்
சாத்தகிமுன்சென்றம்முனைக்காற்றாதரியெதிர்கரியெனத்தளர்ந்தான். (ருoக)

சகுனியும்பரிவிலருந்திறற்கொருவன்சமரிடையொருவருநிகரா
நகுலனோடரும்போர்செய்துசெய்தனிகானியுயர்சிலைகொடியிரத
மிகுதுணையரசருடனெலாமுகுத்துமீண்டுகால்சிவப்புறப்போனான்
புகுமிடந்தனக்குவானலாதிலையென்றுன்னிமுன்புணர்ப்புளம்போழ. (ருo௨)

ஆயிடைநிசியென்றரையிடையாமமகன்றுறவரசர்கள்பலரு
மேயினர்பதாதிவருக்கமுந்துயிலால்விழிமலர்கூம்புதலாலுங்
காயிடையேதிகழித்தலுந்தமையேகாதலுங்கருதலரெனச்செந்
தீயிடைச்சினத்தாற்றமதுவாகினியைச்செலுத்தலுமிகுத்தவச்செருவில். ()

அன்னதையுணர்ந்தவருச்சுனன்புயலினார்ப்பெனவகங்குரனீட்டி
மன்னவர்துயிலால்வருந்தினர்கங்குன்மாய்ந்துசெங்கதிர்வருமளவுந் [ன்
துன்னியகொடும்போர்தவிருமென்றிரண்டுதொகுதியோர்தமக்குறச்சொன்னா
முன்னமேதுறந்தாரிருதிறத்தவருமுராரிமைத்துனன்பெயர்வாழ்த்தி. (ருoச)

பாசறையடையேனெனப்பெருஞ்சபதம்பற்றியபான்மையாற்கங்குற்
றேசறமீண்டுஞ்சமர்செய்வானிருந்ததேசிகன்முதற்படுந்திறலோர்
வீசறையிரதமீதினும்பட்டவேழமீதினும்பரிக்குலத்தின்
றாசறைக்கலினமீதினுந்துயின்றார்பதாதியர்நிலத்தின்மேற்றுயின்றார். (ருoரு)

பாண்டவர்திலதனவ்வணந்தாமும்பதாதியுஞ்சமர்நிலத்திருப்ப
மாண்டவர்தமக்குத்துயரமுமிருந்தோர்மாய்வுறுகருமமுமுன்னி
மீண்டிலனிருந்தான்சுயோதனனிப்பால்விண்ணவர்மண்ணவர்வியப்ப
மூண்டவக்கங்குன்முகமழிந்தகன்றுமுளரிவாண்முகமலர்த்தியதால். (ருoசு)

* முற்பொழுதொருபொற்றிகிரியான்மறைந்ததாழ்வறமுளெரிமுகத்தி
லற்பொழுதடைந்தவாயிரஞ்சுடருமநேகநூறுயிரஞ்சுடராய்
நற்பொழுதிதுவென்றியாவரும்வியப்பநாகராலயம்வலம்புரிந்து
பிற்பொழுதலற்றைக்கவர்ந்துசென்றுதயப்பிறங்கலிற்பிறங்கினன்பெரியோன்.

பதினான்காம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ககஉக.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்.

* சித்தசித்தொடீசனென்றுசெப்புகின்றமூவகைத்
தத்துவத்தின்முடிவுகண்டசதுமறைப்புரோகிதன்
கொத்தவிழ்த்தசோலைமன்னுகூரநாடர்நெஞ்சிலே
வைத்தமுத்திநாதனன்றிவானநாடர்முதல்வன்யார். (க)

* எடுத்ததீபவொளியுமேனையிருளுமேகவேழுமாத்
தொடுத்ததேரருக்கர்சோதிதொழுதுதங்கடொழின்முடித்
தெடுத்தகோபமுளநின்றிரண்டுசேனையரசருங்
கடுத்துளங்கறுத்துவெய்யகண்சிவந்துகடுகினர். (உ)

* நாலுசாபநிலையும்வல்லநரனும்வீமநகுலனும்
நாலுபாதமானசேனைநாதனுஞ்சிரங்களாய்
நாலுகூறுசெய்துதானுநரனுமுந்தநடவினா
னாலுவேதமுடிவினுக்குமாதியாயநாரணன். (ங)

* வாலவீமனென்றுபார்மதித்தவாண்மைமன்னனுஞ்
சூலபாசபாணிதன்னொடொத்தசோமதத்தனு
மாலகாலமெனவுறுத்தடர்ந்தபோரின்முந்துறக்
காலனூரிலேகினர்கிரீடியேவுகணைகளால். (ச)

* என்முனென்முனென்றுமன்னர்யாரும்வில்வளைக்கவே
முன்முனின்றுயாவரோடுமூரிவில்வணக்கினான்
வின்முனெண்ணவில்லுமில்லைவெஞ்சமத்துமற்றிவன்
றன்முனெண்ணவீரரில்லையெனவருந்தனஞ்சயன். (ரு)

* ஈரிரண்டுமுகனும்வந்தெதிர்ந்தசேனைவீரர்க
ளீரிரண்டுபேரும்வேறுவேறுவென்னிடப்புடைத்
தீரிரண்டொர்தொடையில்வாளியேவியேவியிகல்செய்தா
ரீரண்டுமையிரண்டுமானவிஞ்சையெய்தினர். (சா)

* புந்திகூர்துரோணனுக்கியாவரும்புறந்தரக்
குந்திபோசனெண்ணிலாயிரங்குறித்ததேர்களோ
டுந்திமீளமுடுகியந்தமுனிவனோடுடன்றபோ
தந்திவானமொத்ததம்மவமர்புரிந்தவாகவம். (எ)

* குருவொடுற்றடர்ந்துகுந்திபோசன்விற்குனிக்கவே
வருசமத்துமத்திரன்றன்மருகனோடுமுடுகினன்
முரண்மிகுத்தகோபவங்கிமூளவந்தமாளவன்
கருநிறத்தனந்தசாயியிளவலோடுகடுகினன். (அ)

* முனிவன்மைந்தனிந்திரன்றன்மைந்தனோடுமுடுகினன்
றினகரன்றன்மதலைகாலின்மதலையோடுசீறினன்
றனுவின்விஞ்சுவேதனோடுசகுனிபோர்தொடங்கின
னினியகண்டமுஞ்செறுக்குமிறுதிகாலமென்னவே. (கூ)

* எந்தவெந்தமன்னர்தம்மிலிருவராகியமர்செய்தா
ரந்தவந்தவீரர்செய்தவாண்மைசொல்லுமளவதோ
முந்தமுந்தவென்றுவென்றுமோகரித்ததெவ்வர்தாம்
வந்தவந்தவழிமடங்கநின்றதவ்வருதினி. (க0)

* தேயுவாளிவருணன்வாளிதேவர்வாளிதிண்மைகூர்
வாயுவாளிமுதலனைத்துவாளியாலுமலைதலா
லாயுநூன்முனிக்குடைந்ததன்புமிக்கதந்தையுந்
தாயுமாகிமண்புரந்ததருமன்விட்டதானையே. (கக)

வேறு.

* குருவுமக்குருகுலேசன்கொற்றவெஞ்சேனைதானும்
பொருகளங்கொண்டுவாகைபுனைந்துதானின்றபோதி
லொருவரையொருவரொவ்வாவும்பர்மாமுனிவர்யாருந்
துருவனுமுவமைசாலத்துரோணனைவந்துசூழ்ந்தார். (கஉ)

* மகத்தியன்மரீசியாதியெழுவருமலயச்சார
லகத்தியன்முதலாவுள்ளவனைவரும்வருதல்கண்டு
செகத்தினினிறைந்தகேள்விச்சிலைமுனியெதிர்சென்றேத்தி
முகத்தினுலிறைஞ்சிநிற்பமொழிந்தனர்மொழிகள்வல்லார். (கங)

* மறைகெழுநூலுந்தேசுமாசிலாத்தவமுஞான
முறைவருமுணர்வுமல்லான்முனிவரர்க்குறுதியுண்டோ
துறைகெழுகலைகள்வல்லாய்துன்னலர்ச்செகுக்கும்போரு
நிறைதருவலியும்வாழ்வுநிருபர்தம்மியற்கையன்றே. (கச)

* தொடுகணைவில்லும்வாளுந்துரகமுங்களிறுந்தேரும்
விடுகவெஞ்சினமும்வேண்டாவின்னுலகெய்தல்வேண்டுங்
கடுகநின்னிதயந்தன்னிற்கலக்கமற்றுணர்வினென்று
படுகவென்றுரிமைதோன்றப்பகர்ந்தனர்பவமிலாதார். (கரு)

* ஆனபோதாசானெஞ்சிலருமறையந்தத்துள்ள
ஞானமும்பிறந்துபோரிலாசையுநடத்தலின்றித்
தூநலந்திகழுஞ்சோதிச்சோமியமடைந்துநின்றான்
யானமும்விமானமல்லாலிரதமேல்விருப்பிலாதான். (கசு)

* கோடையால்வற்றிமீண்டுங்கொண்டலானிறைந்ததெண்ணீ
ரோடையாமென்னநின்றோன்முன்னரேயுரைத்தவார்த்தை
மாடையாலிந்திரநீலமணிவரைவளைத்தாலன்ன
வாடையானறிந்துசொற்றவவதியீதென்றுகொண்டான். (கஎ)

✻ கடல்வடிம்பலம்பநின் றகைவதன் றன்னேடோதிச்
சுடுகனலளித்த திட்டத் துய்மனையவன்மேலேவி
வடிவுரைமறந் துஞ்சொல்லாமன்ன றன்மைந்தனோடு
மடியவரிடுக்கண்டீர்ப்பானுமுறையருளிச்செய்வான். (கசு)

✻ மந்தரமனையபொற்றேரூன்மாருதிமாளவக்கோ
னிந்திரவன்மாமேற்சென் றெரிகணைதொடுத்தபோரி
லந்தரமடைந்ததையவச்சுவத்தாமாவென் னுஞ்
சிந்துரமதனைவேறோர்திசைக்களிறெருப்பதன்றே. (கக)

✻ மதலைபேரெடுத் துப்போரின்மடிந்தவா றுரைத்தபோதே
விதலையனுகிப்பின்னைவில்லெடான்வீ தறிண்ண
முதலமர் தன்னிலந்தமுனிவரன்மொழிந்தமாற்ற
நுத லுதிரீயேசென் று நுவ லுதிவிரைவினென்றான். (உ0)

✻ வையினல்விளங்குநேமிவலம்புரிவயங்குசெம்பொற்
கையினனந்தனுளன்கைய றல்புகன் றகாலை
மெய்யினல்வருத்த தன்னமெய்புடைவேந்தன்கேட்டுப்
பொய்யினலாள்வதிந்தப்புவிகொலோவென் றுநக்கான். (உக)

✻ அண்ணியகிளையுமில் லுமரும்பெ றன்மகவுமன்புந்
திண்ணியசீருமிக்கசெல்வமுந்திற லுந்தேசு
மெண்ணியபொருள்கள்யாவுமியற்றியதவமுமேனைப்
புண்ணியமனைத் துஞ்சேரப்பொய்மையாற்பொன் றுமன்றே. (உஉ)

✻ என் றுகொண்டினங்கொள்கோவினிடர்கெடவெழிலியேழுங்
குன் றுகொண் டடர்த்தமாயன்கூறவுமறுத் துக்கூறக்
கன் றுகொண்டெறிந் துவெள்ளிற்கனிநனியுதிர்த் துவஞ்சம்
வென் றுகொண்டவனுமீளவிளம்புவனென்பமாதோ. (உங)

✻ உம்மையின்மறுமைதன்னி லுறுபயனிரண்டும்பார்க்கி
னிம்மையில்விளங்கும்யார்க்குமவரவரியிற்கையாலே
மெய்ம்மையேயொருவர்க்குற்றவிபத்தினைமீட்குமாகிற்
பொய்ம்மையுமெய்ம்மைபோலப்புண்ணியம்பயக்குமாதோ. (உச)

✻ வல்லவரனந்தகோடிமறைகளின்படியேயாய்ந்து
சொல்லியவறங்கள்யாவுநின்னிடைத்தொக்கவாறு
புல்லியபொய்யொன்றென்னும்பொருபெருநெருப்புக்கீர
மில்லைநீயொன் றுமெண்ணுதியம்புதியிதனையென்றான். (உரு)

மனங்கொளானசுவத்தாமாவாரணஞ்சென் றதென்பன்
கனங்கொளாமெய்யவென்னக்காளிமேற்கால்வைத்தாடி
யினங்கொளாமுன்பின்னுகவெடுத் துரைத்திடுவாயாகிற்
சினங்கொளான்முனிவன்றானுமெண்ணமுந்திண்ணமென்றான். (உசு)

✻ போரறமலைந்துவென் றுபோதத்தாற்பவங்களேழும்
வேரறவெல்லகிற்பான்வீடுறநின் றவெல்லை
வாரறவயமாவோட்டிவயங்குதேர்கடவிச்சென் று
பேரறன்மைந்தனுவிற்பிழையறப்பேசுவானே. (உஎ)

* அத்தனேயடுவல்லாண்மையச்சுவத்தாமாவென்னு
மத்தவாரணத்துக்கையோமாருதிசிங்கமானு
னெத்தனைகோடிசேனையிக்களத்திறந்ததிந்த
வித்தகன்மலைந்துசெற்றவிரதையென்சொல்வதென்றான். (உ௯)

* தீதிலானுரைத்தமாற்றஞ்செவிப்படுமளவினெஞ்சிற்
கோதிலானெடுத்தவில்லுங்கொடியவெங்கணையும்வீழ்த்திப்
போதிலானிறந்தான்போலும்புதல்வனென்றினைதலின்றி
யேதிலான்போலநின்றான்யார்கணும்பந்தமில்லான். (௩௰)

முக்குறும்பகலநின்றமுனிவரன்சிரமீதுச்சி
புக்குபுவிளங்குசோதியெழுந்துமீப்பொலிந்துதோன்றித்
தொக்குவானவர்களோடும்விண்ணின்மேற்றுன்னல்கண்டார்
மைக்குவடனையமாலுமைவருமறிவிலாரும். (௩௦)

* முள்ளியனுளக்கோயின்முனிநடுத்தலையைமுன்னங்
கிள்ளியபினாகபாணிகிரீசனோடொத்தவீரன்
றுள்ளியபரித்தேர்த்திட்டத்துய்மனதம்புசென்று
தள்ளியதப்போதந்தத்தவமுனிதலையையந்தோ. (௩௧)

நிலம்படுபுகழுந்தேசுநேயமுநீங்குமென்னுக்
குலம்படுவிசயனோடிமாற்றியுங்குறிக்கொளாது
வலம்படுமொருவன்வாளிமாமுனிதலையைவீட்டச்
சலம்படுவிழிகள்சேப்பவெகுண்டனன்றனுவலானே. (௩௨)

வேறு.

* பட்டனன்வாசபதிநிகர்சேனுபதியென்னக்
கெட்டதுநாககேதனன்வீரங்கிளர்சேனை
தொட்டவில்லாண்மைத்துரகத்தாமாவெதிரோடிக்
கட்டழல்வேள்வித்தந்தையிறந்தகளங்கண்டான். (௩௩)

* கண்டான்வீழ்ந்தானம்முனிபாதங்கமழ்சென்னி
கொண்டான்மோதிக்கண்பொழிநீரிற்குளித்திட்டான்
வண்டார்சோரமண்ணுடல்கூரவன்னஞ்ச
முண்டார்போலவெண்ணமழிந்தானுளநொந்தான். (௩௪)

* வன்பின்மிக்கவீடுமனுன்னைமன்னுகென்
றன்பினிப்பாராளவுமன்றேயருள்செய்தான்
முன்பினெண்ணவுவமையிலாதாய்முடிவாயோ
வுன்பின்வந்தேனுன்னையொழிந்துமுய்வேனே. (௩௫)

* வில்லாய்நீவெம்போர்முனைவெல்லும்விறலாய்நீ
சொல்லாய்நீதொல்வேதியருட்குந்தொழிலாய்நீ
வல்லார்வல்லகலைகளனைத்தும்வல்லானே
யெல்லாமின்றேபொன்றினவுன்னோடெந்தாயே. (௩௬)

என்றிளமைந்தன்சோகமுறும்போதிகல்வேந்தன்
சென்றிருகண்ணிற்கலுழிதுடைத்தாரருள்செய்யக்
குன்றனையானைக்கொன்றவனாரோகுரியென்று
னின்றவனுக்குமாதுலனோதுநிகழ்வெல்லாம். (௩௭)

வேறு.

* கற்கொண்டுகன்மழைமுன் றடுத்தகண்ணன்கற்கறித்துப்பன்முறித்துக் கழறந்தானு, முற்கொண்டவிரதமறந்தியாருங்கேட்பமுரசுயர்த்தோன்பொய் சொன்னான்முடிவிலந்தச், சொற்கொண்டுவெறுங்கையனுமளவிற்றிட்டத்துய்ம னெனநின்றகுருத்துரோகிகொன்றான், 'விற்கொண்டுபொரநினைந்தாலிவனைய ல்லவிண்ணவர்க்குமெந்தைதனைவெல்லலாமோ. (௩௮)

எனவுரைப்பமனமறுகித்துன்பநீக்கி யெழுந்துகொழுந்திடுசீற்றமேறவே ற, கனகற்குமருட்டாதைவெறுங்கைநின்ற காலமுணர்ந்தழித்தவனோடைவ ர்தம்மை, யினமுறச்சென்றொருகணையானுயிரைமாய்ப்ப னெய்தியுணருதியர சேயென்றுகூறி, வனமியக்கமுறுமரியேறென்னமீண்டான் மறைநான்குமுண ர்ந்தசிலைவரதன்மைந்தன். (௩௯)

சீராரும்பரிமாவுங்கடமாவுஞ்செழுந்தேரும்பதாதிகளுந்திரையிற்பொங் கிப், பாராளுமரசனுடன்மருங்கிற்சூழப்பணையொலியெண்டிசைபோர்ப்பத்து வசமோங்கக், காராருஞ்சிலைநாணினொலியாலாசைக் கரிகளெட்டுந்துணுக்குற வோர்தேர்மேற்சார்ந்தான், போராருமுலகனைத்தும்பொன்றுங்காலம் புகுந்த தெனவமரரெல்லாம்நடுங்கமாதோ. (௪0)

பரித்தாமனிவ்வண்ணமனுகனோக்கிப் பாண்டுதருமுதற்குமரன்பசுந்து ழாயின், வரித்தாமப்புயனெடுமால்வதனம்பாரா வருமகவாற்றுயர்விளைதலுள வோவென்ன, வெரித்தாமத்தொருமுதல்வனருள்கைக்கொண்டோனிமையவர் கள்படைக்கலங்களெல்லாம்வாய்த்தோ, னுரித்தாமத்தந்தைபிரிவாற்றாதேற்று னுள்ளபடிமுடிவதஞ்சேலொருவவென்றான். (௪௧)

நெடுஞ்சிலையுங்கடுங்கணையுங்கைவிட்டும்பர் நேயமுறப்பூரணத்திற்கலந்த சோதிக்,கிடுஞ்சடலச்சபந்துணித்தகொடியபாவியெமக்குவசையளித்ததலாலெ ன்னோபெற்றான், கொடுஞ்சிலையாண்மைப்புதல்வனுலகாலங்கொதித்தெழுந்த தெனவந்தானுயிர்கைக்கொள்வா, னடுஞ்சமனுமெதிர்குறுகற்கரிதேயன்றோ யாதினிமேற்செயலென்றானரிதந்தோனே. (௪௨)

சரோருகமாமலர்த்தாமத்துரோணன்சென்னிதனைமாற்றத்தழன்மகத்தி னுதித்தோனன்றோ, புரோகிதனென்றுன்னுவதுதகவோபோரிற் பொருகணை யாலெண்ணிறந்தோருயிரைமாய்த்த, வரோதயனையுயிரழித்தல்வசையோகங் கை மகனுயிரைநீயழித்தாயறனுங்கொல்லோ, விரோதமிதுபகர்ந்ததெனக்க ண்கள்சேப்பவிளம்பினான்றுருபதப்பேர்வேந்தன்மைந்தன். (௪௩)

பாஞ்சாலர்குலமனைத்துந்துரிசறுத்தபாவகாரியைத்துணித்தபரிசுகேட்டு, நிஞ்சாததுயருழந்துவருஞ்சேய்தன்போர் நேருமுனையான்புகுவனீவிர்நின்மி ன், பூஞ்சாயகங்களினால்வெல்வேனன்றேற் பொன்றுவன்மற்றிரண்டன்றிப்பு குதலுண்டோ, மாஞ்சாறுபாயவயற்றலைச்செஞ்சாலி வளநாடர்காண்பரெனம றுத்துச்சொன்னான். (௪௪)

கங்கைமகன்றனைச்சிகண்டிசெறுத்தானீயே கைவிலாசிரியனுயிர்ககனஞ் சேர்த்தா, யிங்கிருவர்நீவிர்பெரும்பழிக்குட்பட்டீரிந்திரன்சேய்கொன்றனனெ ன்பதுவோநீதி, கொங்கவிழும்பசுந்தாரார்முன்னர்நீயேகுறித்ததனாற்பொறு த்தேன்மற்றொருவர்சொன்னாற், றங்கியனுவென்படுமென்றுருத்துக்கண்கடழ லெழச்சாற்றினன்வனசனுபன்றம்பி. (௪௫)

பூரிசராவலதுகரந்துணித்தபோரும்புரந்தரனுந்தைக்கினியநண்பனுன, நேரில்சராசனவலியான்பகதத்தப்பேர்நிருபனைநீவதைத்ததுவுமறனேயன்றே, வாரிசபைந்தாமனுயிர்த்திட்டத்துய்ம்மன்வதைத்ததுவோகொடும்பாவமாயதென்றான், பாரிசமோதேரினுறுநரனைநோக்கிப்பலகுவடுபொடிபடச்செய்பவனன் மைந்தன். (சசு)

நல்வினையுந்தீவினையுஞ்செய்தேனென்றோர்நற்பயனைப்பிறவிதொறுந்துய்ப்பாமண்ணில், வெல்வர்கடவுளைநினைந்தங்கவர்பால்விட்டோர்வினையிரண்டுமிது வேதமுலிப்பமாமாற், கொல்வதெலாந்தீவினையேயெனினும்வேள்விகுறித்துயிரைக்கொன்றலைப்போன்கொண்டல்வண்ணன், சொல்வதுகொண்டியற்றலெலாம்புனிதமென்றான்றொல்லையறக்கடவுளருள்தோன்றன்மன்னே. (சஎ)

மாறுடுகொடும்போரிற்பலரைக்கொன்றவயவனுக்கன்றேசுவர்க்கம்வைத்ததெல்லாந், தேறுதுபுகன்றதுவென்றுவரிவண்ணன்றேசிகனென்றுற்றுதுசெப்புகின்றான், ஆறுகநலனுகமுடிந்துதீர்ந்ததொழிலினுக்கென்னெண்ணமெதிர்துன்னுமைந்த, வீறுடிமகனையானிவனைவெல்லுநீர்மைகுறித்திலரென்றானீலவண்ணன். (சஅ)

பொய்க்கோலவுடலெடுத்தோமென்றுந்தேரேரும்பொருவிறந்தோயுனதருளேவலியாக்கொன்டோ, மெய்க்கோலமொழியிதுவேயென்னவேந்தன்விளங்கியவாண்முகனேக்கிமுறுவல்பூத்துக், கைக்கோலக்களிற்றெருடுதேர்பரிகள்காலாட்கடல்சூழப்பணைமுழங்கத்துவசம்போற்ப, மைக்கோலமுகிலனையதிருமால்சென்றான்மன்னரெல்லாமருங்குறவாசவிதன்னேடும். (சகூ)

காலமுகிலசனிமழைபொழிந்தாலென்னக்கண்களழற்பொறியுதவமண்டு சீற்றப், பாலவிழியுருத்திரன்போலடைந்தவேதப்பரித்தாமனரசனுக்குப்பரிவினேடு, மாலநிகராயவரிகணைகைக்கொண்டானருந்தவத்தாலெந்தையதையென்பாலீந்தான், சீலமிகுமக்கணையைத்துரந்தொன்னுரைச்செறுப்பனெனப்பலவாய்மைசெப்பினனே. (ருo)

இப்புதல்வனவ்வாய்மையியம்பல்கேளாவினியுனதுவொள்வேலிராசராசன், முப்புவனநிற்கரிதென்றெடுத்துக்கூறமொய்ம்பிரண்டுஞ்சேட்செல்லமுன்னரேகி, யெப்புதல்வருடனும்விறற்குந்திமைந்தன்யாவரையுஞ்சென்னிதுணித்தியாகசேனன், மெய்ப்புதல்வன்றலையுமறமலேவேனென்னுவில்வளைத்தான் சொல்வளையாவேதநாவோன். (ருக)

* மாற்றரியமறையொடுநாராயணன்றன்வாளிதொடுத்தலுமந்தவாளியூழிக், காற்றெறிபோடெழுந்ததெனக்கார்கோண்மொண்டுகாரேழுமதிர்ந்ததெனக்கனன்றுபொங்கி, யேற்றரிபோற்குழாங்கொண்டவயவர்தம்மையெய்தியபோதனைவருந்தம்மிதயமொன்றிச், சாற்றரியவூர்திதணந்திடுமினென்றுதானுமிழிந்தரிசெங்கைத்தலைமேற்கொண்டான். (ருஉ)

பாகசாதனன்மதலையானேன்றெய்வப்பாகனுடன்படையொடுதேரொருவிப்பின்னு, மேகமேயெனவிரைவிற்றங்கள்சேனைவேந்தையெல்லாஞ்சென்றெய்திவில்வாள்வேலும், வாகனுதியுமகற்றிநின்மினென்னமாருதமைந்தனையொழிந்தோர்மண்ணின்மீது, யோகஞானிகளாகியனைத்துளோருமொருவரைப்போனிராயுதராயொடுங்கிநின்றார். (ருங)

பாருருவித்திசையுருவியண்டகூடம்பாதாளத்துடனுருவிப்பரந்துசீறி, யோரொருவருடலின்மிசைமயிர்க்காறோறுமோரொருவெங்கணையாய்வந்துற்ற காலை, நேரொருவர்மலையாமற்றருமன்சேனைநிருபரெவர்நிராயுதராய்நிற்றல்கண்டு, பேருருவமுனிமைந்தன்றொடுத்தவாளிபெரும்படைகொண்மாருதிமேற் பெயர்ந்ததாலோ. (௫௪)

காற்றின்மதலையுந்தனதுதடந்தேருந்திக்கண்சிவந்துமனங்கருகிக்கால்வில் வாங்கிக், காற்றமெனவெதிர்சென்றுமுனிவன்மைந்தன்கொடுங்கணையைமதியாமற்கடுங்கணையன், வேற்றுருவங்கொடுகனவிமுதலாயுள்ளவிண்ணவர்தம்பகழிகளாய்மென்மேல்வந்த, மாற்றரியபகழிகளையொன்றுக்கொன்றுமாறானபகழிகளான்மாற்றினானே. (௫௫)

மூச்சினாலடியுண்டுங்கடுங்கட்கோபமுதுகனலாலெரியுண்டுமுனைகொள்வாளி, யோச்சினாலொடியுண்டுங்குனித்தவிற்காலுதையினாலுதையுண்டுநெடுநாணோசை, வீச்சினாலறையுண்டுங்கடகவாகுவெற்பினாலிடியுண்டும்வெகுளிகூரும், பேச்சினால்வெருவுண்டுபடாததுண்டோ பேரனிலன்மகனாலப் பெருமாள்வாளி. (௫௬)

தாள்வினையாலெனைப்பலபல்வினைசெய்தாலுந்தப்பவொண்ணாவிதிபோலத்தடந்தோள்வீமன், றோள்வலியால்விலக்கவுமத்தொடைபோய்வாசத்தொடையிடைமார்பகமெய்தச்சுராரிதோள்கள், வாள்வலியாலரிந்தபிரான்கையில்வில்லும்வாளியும்வாகனமுமுடன்மாற்றுவித்தா, னாள்வலியார்தமைச்சிலராற்கொல்லலாமோநாரணசாயகமிகவுநாணிற்றம்மா. (௫௭)

திருவினாயகன்கணைதன்மருங்குசேரச்சீறியிதழ்பதைப்பவனற்கணையையுய்த்தான், பொருவிலாமுனிகுமரனந்தவாளிபொங்கிவடவானலம்போற்புவியும்விண்ணும், வெருவியாசைகளெட்டும்வெதும்பக்குப்பைவெம்புலிங்கசாலங்கள்சொரிந்துமேவப், பொருவிலாவம்புயத்தோன்கணையால்வென்றான்புரமூன்றுமெரித்தவனைப்பொருதுவென்றோன். (௫௮)

வேறு.

* விட்டவெம்பகழிநாணிமீளுதலும்வில்லின்வேதமுணர்முனிமகன்
வட்டவெஞ்சிலையும்வாளியின்புதையுமாற்றியாற்றலொடுதேரழிந்
தொட்டிலாமறைமந்திரங்கணெறியுண்மையென்பதிவைபொய்ம்மைவா
னிட்டமானவர்கள்பக்கபாதமுளரென்றுமீண்டனன்முனிந்தரோ. (௫௯)

பட்டவேழமதமுற்றடைந்ததொருபான்மைபோலமுனிவோடிவன்
கிட்டவெஞ்செருமுகந்துறந்துபுகுதன்மைகண்டுகிளர்நகையொடு
முட்டவன்பினொடுசேயனானெதிர்வியாதனென்றுரைகொண்முனிவரன்
றொட்டதண்டுமிதியடியுமாகியுயர்சுருதிவாய்மையொடுதோன்றினான். (௬௦)

* நின்றசாபமுனிமைந்தன்வந்தமுனிநிருபனைப்பரமனிகரெனச்
சென்றுகைதொழுதுபரசிடப்பரிவுதீர்கருத்தினொடுசெப்பினா
னன்றுபோரிலழியாகசேனன்மகனழலினூடுவருசாபமும்
வென்றிவாகைபுனைவிசயனோடுகருமேகவண்ணன்வருவிதியுமே. (௬௧)

* வரத்தினாலுனதுதந்தைபோரினின்மடிந்ததன்றியொருவயவர்தஞ்
சரத்தினாலவனைவெல்லவல்லவர்தராதலத்தின்மிசையில்லையா
லுரத்தினால்விறன்மயூரவாகனனையொத்தவீரவினியுள்ளறச்
சிரத்தினாலரனையடிவணங்கியிடர்தீருமாறுநனிசிந்தியாய். (௬௨)

மூதராமிசைநடித்தமாலைநிகர்மொழிதருஞ்சடைமுடித்தசிர்
வாதராயணருரைப்பவீசனருண்மதலையிங்கிதுநிகழ்த்தினான்
போதராவெமதுதந்தையண்ணலருள்வண்ணமெய்மையதுபூண்டுளோ
னீதலாலெனதுசிந்தையுற்றகுறையின்னமுண்டெனநிடத்தினே. (௬௩)

மந்திரங்கள்மறையொன்றுவானவர்வழங்குசாயகமுமொன்றுகைத்
தந்திரங்களுமிலக்குமொன்றிதுதனஞ்சயற்குறுதிதருதல்போ
லெந்திறத்தினிலுகைப்பதின்றிவலியெய்துபோரின்முனைசோரலாற்
சிந்தியாமறைதிறம்புமாறுசமர்தீர்ந்துமீண்டதெனும்வாய்மையே. (௬௪)

கேட்டமாமுனிகிளத்துவானுலகுகெழுமுமாருயிர்படைத்தனு
னாட்டமூன்றுதிகழ்செம்பொன்மேருவிலிநற்பதத்தையுணர்தன்மையான்
வாட்டமற்றதவமுற்றிநின்றதனிமாதவர்க்கெதிரணைந்துநீ
வேட்டதென்னையெனவீசனுக்கிவன்வணங்கிநின்றிதுவிளம்புவான். (௬௫)

கமலனாலுயிர்கள்கற்பனைப்படுதொகைக்கெலாந்திதிகவிக்கவென்
றமலவெற்கருளளித்துளாயுலகினடலுளார்சிலரியாவதோ
சமரினாலுரியதீமையோருடறித்துவீட்டியறமாக்கவே
நிமலநீயருள்சுரக்கவேண்டுமெனநீறுபூசியிதுகூறினான். (௬௬)

அனையதன்மைவரமீந்தனங்கொடுமையாவர்மாட்டினுறுமாங்கவர்
வினைவல்வில்வலிபயன்செயாமறையின்மேவுவாளிகளுமேதகத்
துணையடைந்துபொருவோர்வரங்கள்வலியாவுமுன்றனுழைபுக்கநீ
முனையின்வென்றுதருமம்புரந்துதிதிமுற்றுகென்றிறையகன்றபின். (௬௭)

அச்சுதன்றனதுபச்சைமேனியிலளித்துநாரணனுநானுமென்
றிச்சகந்தொழவரக்கரானவரையென்றும்வாட்டியமரேசரை
யிச்சையாலினிதுகாக்குமங்கவர்களிருவருக்கரியகொண்டலுங்
கச்சவெண்கரியெருத்தமீதுபொலிகடவுணாதன்மகனிவனுமே. (௬௮)

விரவொலிப்புனன்முடித்தசெஞ்சடைவினோதனன்றருள்வரத்தினாற்
கரவுடைக்குருகுலத்திருஞ்சமர்கடக்கவந்துதையமுற்றுளார்
பரவியிப்பிறவிதனிலொருத்தன்வழிபாடுமுற்றுமிதையத்தினார்
வெருவலற்கவர்மடங்கலொத்துமுனைவெய்தின்வெல்வரிதுமேன்மையே. (௬௯)

ஆதலிற்கணையனைத்துமங்கவர்கருத்தின்வண்ணமுறுமாமெனக்
காதலொத்தொருவர்காதல்கைக்கொண்முனிகட்டுரைப்பவிருகைதொழா
மீதியற்கையிதுவாமெனிற்பெருமவேதனாதனருண்மேவுமென்
சேதனப்படைகள்வீரமற்றசெயலேதுமற்றிவர்திறத்தினே. (௭௦)

துட்டருக்கிவர்கடொலைவிலாற்றலரெனுஞ்சொறாய்மையருடன்னுநற்
சிட்டருக்குமிஃதொக்குமோவெனமருத்துரைத்தவொருசிறுவனுக்
கிட்டமுற்றமறைசொற்றவன்புகல்வனிராசராசனுயர்கைதவம்
பட்டழிக்குமவனுடனிருந்தபடிபற்றியென்றிதுபணிக்குவான். (௭௧)

தூய்மைமைந்தவிதுகேட்டியங்கவர்கடோகைபாகனையிலிங்கமா
மாயபேருருவினுன்னுவார்நினதகத்தினல்லுருவினுய்குவா
யேயபேதமுனரிற்சகத்திரமிலிங்கமேயதிகமாதலாற்
சேயனுயவர்குறித்தவாறுமிகுசெம்மையாமெனவியம்பலும். (எ௨)

தன்னகங்கொணிலையோர்ந்துரைத்தமுனிதாளில்வீழ்ந்திதுதரிப்பனென்
றன்னவன்சொலவமர்க்கண்மேவியரவக்கொடிக்கதிபன்வீழ்ந்தபின்
றுன்னுநல்வனமதிற்றொடர்ந்தணைதிரூழ்வனென்றுருதிசொற்றபின்
மன்னர்மன்னனடல்வாகினிச்சமரமாமுனைக்கணுறுவித்தனன். (எ௩)

மீண்டுவேதமுரைசெய்ததூயமுனிவிண்டுவோடுமொருதேரின்மேற்
பாண்டுதந்தவனிருத்தல்கண்டருகுபற்றிநிற்பவர்தாழ்ந்தெழுந்
தாண்டுபூசனைவியற்றிநின்றனர்களாரியன்சிறுவனேதுசொற்
றாண்டுதேர்வலவனுக்குரைத்தருகுதுன்னிநிற்பாரனேதுவான். (எச)

எந்தவாளியிவனேவினும்பிறரையெய்துபோதுவிழிமூன்றுடன்
வந்தவோர்புருடன்மூவிலைப்படையின்வாய்த்துமாற்றலரைமோதுவா
னிந்தவண்ணமெனதேவுதோறுமெதிர்வேனிதென்னையெனவீசனீ
சிந்தையூடுகருதென்றுகூறியருள்செய்துமாமுனியகன்றுளான். (எரு)

குன்றுபோலுயர்கொடுஞ்சிலைப்படைஞர்கூடிமீளவமர்மோதலாற்
றுன்றுகின்றபடைநான்குமாவிபலசோர்ந்துசோர்ந்துதுணிவாயின
ரின்றுமன்றளவுசெற்றதிற்றசமடங்குசெத்தனர்களின்றென
நின்றுவெம்பரிதிநிற்றலஞ்சிநெடுநீலவேலையின்மறைந்ததே. (எசு)

* இருள்பரந்ததினியமையுமிற்றையமரென்றுதன்றுகழலிட்டதா
ளருள்பரந்தவிழியரனின்மைந்தனடுசேனைபாசறையடைந்தபி
னுருள்பரந்திரததுரககுஞ்சரபதாதியோடுகடிதோடினன்
மருள்பரந்ததனிநெஞ்சனுகியடன்மன்னர்மன்னனெனுமன்னனே. (எஎ)

வில்லிமாநகருளானிசைத்தசெயுள்வீறுமைந்துசதமெழுபதும்
புல்லிநாலினுடனுலுமென்பர்புதிதாகநல்லயனுமம்முறை
சொல்லியொன்பதினிரட்டிசெய்யுளுமுரைத்தனன்வடசொறமிழதா
வில்லிலாசிரியபருவமுற்றுமருள்வேதநாயகர்சொல்வேதமே. (எஅ)

பதினைந்தாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௬௨௭௭.

துரோணபருவம் முற்றிற்று.

எட்டாவது,

கன்னபருவம்.

பதினாறாம்போர்ச்சருக்கம்.

* மாதுலனாகியுமேதிலனாகியும்வஞ்சன்கஞ்சன்வரவிட்ட
பூதனைதன்னுயிர்முலைபொழிபாலொடுபோதரவுண்டபுயல்வண்ணா
மாதவயாதவவாசவகேசவமாயாவாயாமதுசூதா
வாதியுமந்தமுமாகியநின்புகழல்லாதுரையேனடியேனே. (௧)

இங்கிதுசிலைமுனிசமர்பருவமதெனவிருக்குணர்முனிகூறிடக்கேட்ட
சங்கையில்செனமேசயனெனுமரவொன்றுடொழுதன்போடிதுகூறும்
புங்கவர்புகழுந்தவமுனியீண்டிப்புரவலர்சமரிற்செயலெல்லா
மெங்குறைதீரமேனிகழ்வோதென்றேத்திடமற்றவனெடுத்தானே. (௨)

* கங்கைமகன்சிலையின்குருவென்பவர்காதிமலைந்தேகையற்று
றிங்கினியென்னுயிர்நண்பனையல்லதுவெல்லவல்லோரிலரென்றே
யங்கர்பிரானைவருந்தினியின்பதியாகென்றருள்செய்தவனோடும்
வெங்களமுற்றனனஞ்சுமிழுங்கொடிவேகநாகவிறலோனே. (௩)

* சொற்றவருததுரோணனைமௌலிதுணித்ததிட்டத்துய்மனுங்
கொற்றவரைவருமற்றுளபூபரும்வைனதேயக்கொடியோனு
முற்றெழுகசரததுரகபதாதிகளானசேனையுடனேசென்
றிற்றையருஞ்சமம்வெல்லுதலெங்கடனென்றுதுன்றியெதிர்கொண்டார். (௪)

* கற்கியும்வண்டினமொய்க்கமதம்பொழிகரியுந்தேருங்காலாளும்
பொற்கொடியுங்குடைவர்க்கமுமாலையுமுன்னுளரென்னும்பூபாலர்
நிற்குநிலந்தொறுநிற்குநிலந்தொறுநின்றுநின்றுவினைசெய்ய
மற்கெழுதிண்புயவர்க்கன்மகன்பெருமகரன்வீகம்வகுத்தானே. (௫)

* பானுவின்மைந்தன்முனைந்துமகீபதிமைந்தன்சேனாபதியானான்
போனவருஞ்சமர்போகதனித்தனிபொருதுவேறும்போரென்றே
சேனையின்மன்னவர்யாவரும்வெம்பரிமாவின்மேலுந்தேர்மேலும்
யானையின்மேலுமிருந்தவரவ்வவர்தம்மோடம்மவிகலுற்றார். (௬)

* நாமமிரண்டொடுபத்துடைநாயகனவிலவெஞ்சேனையினாதன்
மாமருகொற்றவருந்தினிவேலையைமருவாரஞ்சிவெருவெய்த
நேமிவியூகமதாகவகுத்திடைநின்றுபோர்செய்நிலயத்தில்
வீமன்வயம்புனைதேரினைவிட்டொருவெம்போர்வேழமேல்கொண்டான். (௭)

* அடிக்கைகனத்துமதம்பொழியானையினளவும்புகராலழகெய்தி
மடிக்கினுமன்னுறுகையதுசெந்நிறவாயதுதேயாமதிதன்னை
யொடித்திருபக்கமும்வைத்தெனமகரிகையொன்றியொன்றியொன்னார்மெய்
யிடிக்குமருப்பதுபுன்னையினுண்மலரென்னுஞ்சிரதிருகண்ணும். (௮)

* நிலகமுமோடையுமிலகுறுநெற்றியதாலவட்டச்செவியாலே
பலதிசைமாருதமுய்ப்பதுசெம்புகர்பட்டின்றொழிலிற்பயில்கிற்ப
துலகினைமேல்கொளுமவனிதெனக்களியூறியதாலங்குலமொத்துக்
குலவியமத்தகமொத்தகழுத்திலுயர்ந்ததம்பொற்குவடென்ன. (௯)

* உரத்திவின்முச்சுழியுடையதுதாள்வலிகற்றூணொப்பென்றுரைசெய்யுந்
தரத்ததுவெண்மையிறத்தநகத்ததுதண்ணந்துளவனிலையொத்த
திரத்தினதாமைகிடந்தவெனும்புறவடியதங்கந்தின்னென்றே
யுரத்ததுநல்லுதரத்தஇளங்கமுகொத்ததம்மவாலதி. (௧௦)

* தூணும்விலங்குமுறிப்பதுபாகுபரிக்கோல்யாவுந்தூரத்தே
காணினுநின்றுகொதிப்பதுதன்னிழல்கண்டுசீறுங்கருத்தது
நீணடமுதலியதொழிலொருநாலுநிரந்ததுமேருநிகரென்னச்
சேணுயர்போதரவெழுமுழமுடையதுதெவ்வரஞ்சுமவ்வேழம். (௧௧)

* ஆசிலருந்திறலாசுகன்மைந்தனுமாண்மைக்கெண்ணுமடல்வீரன்
காசினரேசனுமேழுயர்வெம்மதமாரிசிந்துங்கரிமேலோர்
தூசியின்முந்தமுனைந்துமுனைந்திருதோளுந்தோளும்போர்செய்ய
வாசவரோரிருவோரிருகார்மிசைமலைவதென்னமலைவுற்றார். (௧௨)

வேறு.

* அங்குசம்வார்த்தைவன்றாளடைவினிற்பயிற்றியேனை
வெங்கதிநடையோடோட்டம்விதமுறவிரைவிற்காட்டி
யங்கசாரியினானன்னூலறிஞர்கொண்டாடவூர்ந்து
செங்கையிற்சிலையுங்கோலித்தீவிழித்துடன்றுசேர்ந்தார். (௧௩)

* கோடுகைமுதலாவொன்பதுறுப்பினுங்கோறல்வல்ல
நீடுயர்மாவுமாவுநெருப்பெழமுனைந்துசீறி
யாடவர்தாமுமெண்ணிலம்புமாமழைகளேவிச்
சேடனுமமரர்கோவும்வெருக்கொளச்செருச்செய்தாரே. (௧௪)

* ஆசுகன்குமரன்வல்விலாசுகம்பொறாமலஞ்சிக்
காசிபன்கேமதூர்த்திகாயகிலொன்றுவாங்கி
விசிபக்காலைமார்பிலெறிதலும்வீமனேவொன்
றேசிலவ்வேலுந்தெவ்வன்யானையுந்துணியவெய்தான். (௧௫)

* கேமனக்கரியினின்றுங்கிரியினின்றிழியுமாளி
யாமெனத்தரணியெய்தியடல்வயிர்த்தண்டொன்றேந்தி
வீமனன்றூர்ந்தவெங்கைவெற்பினைப்புடைத்துவீழ்த்தான்
பூமருதாரினானும்பூவின்மேற்சுரும்பிற்பாய்ந்தான். (௧௬)

* கரியமர்க்கொருவரானவிருவருங்காலினின்று
பரியவக்கதைப்போர்வல்லபார்த்திவர்பலருங்காணக்
கிரியொடுகிரிசெய்பூசலிதுவெனக்கிளக்குமாறு
புரிவிலார்பொருதபோர்மற்றியாவரேபுகலவல்லார். (கஎ)

* தண்டொடுதண்டமேந்திச்சாரிகைபலவுங்காட்டிக்
கொண்டலின்முழக்கிதென்னக்குரைகடலொலியீதென்னக்
கண்டவர்க்கன்றிகேட்டோர்க்குரைப்பருங்கணக்கிற்றாக்கிக்
கொண்டுவன்காயமொன்றாற்கேமனைவீமன்கொன்றான். (கஅ)

* எறிந்ததண்டமரிற்கேமனிறந்தனனென்றபோழ்தின்
முறிந்ததுவேலைஞாலமுழுதுடைநிருபன்சேனை
யறிந்தெதிருன்றிவென்றியாண்டகைக்கன்னன்மீளப்
பிறிந்தபல்லணியுமொன்றப்பேரணியாக்கிநின்றான். (ககூ)

* பேரணிகலஞ்சேர்மார்பன்பேரணியாக்கிநின்ற
போரணிமிக்கசேனைப்பொலிவுகண்டொலிகொள்வண்டார்த்
தாரணியலங்கன்மௌலித்தருமன்மாமதலைசேனை
யோரணியாகக்கூடியுடன்றெதிர்நடந்ததன்றே. (உ0)

வேறு.

* மகரிகையுமிருபணைகளும்விரிநுதன்மருவுகலனொடுமினலெனவொளிவிட
விகலியளிமுரலிருகவுளினுமுடனிழியுமதமழைகுமிழிகளெழவெழ
வலகமுடையனமுதுகிருபுடையினுமணியுமணிகணகணவெனுமதிர்வொடு
ககனமுகிலெனவுயர்வடிவுடையனகதியின்விததியின்முடுகினகரிகளே. (உக)

* நிறனின்மிகுவனநவமணிகளினியனெடியகொடுமுடிநிகர்வனமகுடமு
மறையுமருவியையுவமைகொள்சவரமுமடவிநிகரெனவசைவுறுதுவசமு [ன
முறையினறைகமழ்தொடைபடுமலர்களுமுடுகுமிடனுடைமுழைகளுமுடைய
விறகர்கொடுபலமலைதிரிவனவெனவிகலியிசைபெறநடவினவிரதமே. (உஉ)

* அடல்கொள்வலிமையில்விரைவினினுயர்வனவகிலபுவனமுநொடியினிில்வருவன, பொடியின்மிசைவெளிதுகடரவிடுவன புணரியிடையலையலையொடு பொருவன, விடவிபடுபடைமடிதரநிமிர்வனவிரியுநறுமலர்கமழ்முகவுயிரன, படியிலொருபடிநிலையறுகதியனபவனமெனநனிபரவினபரிகளே. (உ௩)

* அரியவிலையனவணிகலனடையவுமறலின்முழுகினதருநவமணியென
வரிவின்முதலியபலபடைகளுமுடல்வலியசெலவுறுபவனசகுலமென
நெரியவருவனவகைபடுமிடலணிநிமிரவெழுவன்நிரைகெழுதிரையென
விரிவினளவறுசலநிதிநிகரெனவெகுளிமிகுகதிகடுகினர்விருதரே. (உச)

* முரசுகரடிகைகிணைதுடிபெருமரமுருடுபடுபறைமுதலியகருவிக
ளரசவரிவளைகொடுவயிரெழுகுழல்ரவவிருதுகண்முதலியகருவிக
ளுரைசெய்கருவிகண்முழுவதுமெழுவக்கயுலகமுடிவுறவுகவிறுதியிலெழு
க்கரைசெய்கடலெனவெறிவளியெனமிசைகளுலியுருமெறிகனமெனவதிரவே.()

* எறியுமுரசமுமெரிவிழியுரகமுமெழுதுகொடியுடையவரிருபடையினும்
வெறிகொண்மதமலைகளுமதமலைகளும்விசயமிகுவனவிரதமுமிரதமு
நெறிகொணவகதியிவுளியுமிவுளியுநிருதர்குலநிகர்விருதரும்விருதரு
நறியதொடைமுடிநிருபருநிருபருநடலையமரிடையடலுடனடவவே. (௨௬)

இரவிமதலையுமிரவிதன்மதலையரிருவர்மதலையுமிருவருமெதிரெதிர்
புரவிமிசைவிசைபடவலமிடநிகழ்புரிவினுடனமர்பொருபலகதிகளி
னரவினதிபதிமுடிகெழுசுடிகையினருணமணிவெயிலவனியிலெழநனி
பரவியிருள்வரநிரைநிரையெழுதுகள்பகல்செயொளிவெயில்பருகினசெருகியே

* அசைவிறுடையடிகசைகுசையுரநினைவறியுமுணர்வினவளமையுமுடையன
வசையில்சுழியனபழுதறுவடிவினவருணமொளிகுரன்மனவலிமிகுவன
விசைகொள்பலகதியினும்விரைவுறுவனவிபுதர்குலபதிவிடுபரிநிகர்வன
விசைகளொருபதுதிசைகளுமெழுதியவிறைவரிருவருமிசைகொளுமிவுளியே.

* முடியுமொருகவிகையுமிருகவரியுமுதிருமெரிவிடமுரணரவெழுதிய
கொடியுமுடையவனெலுவலுமுரசுயர்கொடியிலெழுதியகுருபதியிளவலு
நெடியவரிசிலைநிலைபெறவளையவுநிமிரவிடுகணைநிரைநிரைமுடுகவு
மிடியிலெழுமடியதிர்குரல்விளைபவுமிவுளியமர்கடிதிகலொடுபுரியவே. (௨௯)

* நகுலன்விடுகணைவிதரணகுணபதிநடவுகுரகதநடையயில்குரமற
விகலும்வரிசிலைநடுவறவடமறவிடுகவசமறவெழுதருமிருபுய
சிகரிபுதையவுமுரமுழுகவுநுதறிலகமெனவொளிதிகழவுமலைதவின்
மகிழ்வுசினமெனுமிருகுணமுடன்மனமறுகநிலனிடைவலனுறவிழியவே.(௩0)

* இழியுமளவையின்வினையுடைவலவனெறிரதம்விரைவொடுகொடுவரவிரிகதிர்
பொழியுமிளவெயிலிரவிமுனுதவியபுதல்வன்விறலொடுபுகுதலுமுயர்பரி
யொழியநகுலனுமொருதனிரதமிசையுபரிசரரெனவுரனொடுபுகுதர
விழியின்மணிநிகர்வலவனும்வலவனும்விசையகுரகதம்விசையொடுகடவவே.()

* கடவுமிரதமுமிரதமுமுருள்கதிகடுகவருதலுமிருவருமிருசிலை
யடாவளைவுறநொடியினிலெயிறுடையயில்கொள்பகழிகளளவிலசிதறினர்
புடவியுறவகல்வெளிமுழுவதுமிவர்பொழியுமழையெழுபுயன்மழையெனவிழ
வுடலமுகுகுருதியினனையினருகுதவிசெயவருதரணிபருருளவே. (௩௨)

* இருவர்பரிகளுமுரனுறமுழுகினவிருவர்வலவரும்விழவெரிகதுவின
விருவரிரதமுமழியமுன்முடுகினவிருவர்துவசமுமறவிசைகடுகின
விருவர்சிலைகளுநடுவறமருவினவிருவர்கவசமுமிடையிடைகெழுமின
விருவர்கவிகையுமறிதரவருடினவிருவருடலமுமெழுதினகணைகளே. (௩௩)

வேறு.

* கன்னனும்பரிநகுலனுந்தமகாலினின்றிடவே
பின்னரும்பொருபாகர்தந்தபிறங்குதேர்மிசையார்
முன்னரம்புதொடுத்தபோரினுமும்மடங்குபொர
மன்னர்யாருமதிக்குமாறுதொடங்கினாரமரே. (௩௪)

* அல்லிநாண்முகையம்புயங்களலர்த்துநாதன்மகன்
சொல்லினாலுயராயுள்வேதியர்சுதனையின்றமரிற்
கொல்லினாதவறுங்கொலென்றொருகோலினாலழியா
வில்லினாலழியாநடக்கெனமீளவிட்டனனே. (௩௫)

* நின்றமாநகுலற்குவன்றுணையாகிநின்றிடலான்
மன்றன்மாலைவிசாலமார்பினன்மகதபூபனையும்
வென்றிவேன்முருகற்குநேர்புகல்விடதான்றனையுங்
கொன்றுவாசவன்மைந்தன்மாமுனைகுறுகவேகினனே. (௩௬)

* மடங்கன்மேலெழுமதமுமேலிடவருபணைக்கரிபோல்
விடங்கொள்சாயகவில்லிசென்றுதன்விற்குனித்தடுபோர்
தொடங்குமுன்பலர்வில்லெடுத்தவர்சொல்லும்வில்லியவன்
றிடங்கொண்மார்பினிலம்பிரண்டுதெரிந்துவிட்டனனே. (௩௭)

* அருணவெங்கதிராயிரத்தவனன்பினாலுதவுங்
கருணனுஞ்சிலபகழியோரிருகண்ணர்மார்பில்விடா
வருணமும்பெயரும்பிறிந்திலர்மனனுமொன்றெனவே
தருணவாணிலவெழநகைத்துரைதந்துபோயினனே. (௩௮)

* அன்றுபோர்புரிசேனையின்பதியானவீரனைநீ
யின்றுபோயினிநாளைவாவெனவினிதியம்பினனால்
வென்றிகூர்வரிவின்மையாலடல்வெவ்வரக்கரைமுன்
கொன்றகாளையையொத்தபேரிசைகொண்டவாண்மையினான். (௩௯)

* அல்லியம்புயமனையகண்ணினனநுசனுங்குனிவிற்
சல்லியன்பெயரெனவிளங்கியதானைமன்னவனும்
பல்லியங்கடுவைப்பநீடுபணைப்பகட்டுடனே
வல்லியம்பொருமாறெனப்பொரமாறிலாரொருபால். (௪0)

* மாரனுக்கிளையாமலம்பையைமாதவத்துவிடுந்
தீரனுக்குமொர்வாளிகொண்டுசெலுத்துதேருடைவெஞ்
சூரனுக்கெதிராகிமேனிதுளக்கமெய்தியதோள்
வீரனுக்குமிகுத்தபேரமர்விளையவேறொருபால். (௪௧)

* முழுதுணர்ந்தருண்முனிவரன்புகன்மும்மைவண்டமிழும்
பழுதறும்படிதெளிந்தேரேறியபலகையொன்றுடையான்
வழுதியுந்தனிமதிநெடுங்குடைமன்னன்மாதுலனும்
பொழுதுசென்றிடுமளவும்வெஞ்சமர்புரியவேறொருபால். (௪௨)

* குரவர்சொற்கண்மறுத்துவன்பொடுகொண்டபாருடையா
னரவுயர்த்தவனுக்கனந்தரமானதம்பியுடன்
கரவுசற்றுமிலாதசிந்தையன்வாயுவேககதிப்
புரவிவித்தகனிளவல்சென்றமர்புரியவேறொருபால். (௪௩)

* வேரியம்புயன்வேதம்யாவையும்வில்லின்வேதமும்வல்
லாரியன்றருகடவுண்மைந்தனுமனிலன்மைந்தனுமே
தூரியம்பலகோடிகோடிதுவைப்பவெஞ்சமரே
காரியம்பிறிதில்லையென்றுகலந்துமோதினரே. (சச)

* சுரருலோகமகிழ்ந்தணைந்ததுரோணன்மாமகன்மேல்
வருசதாகதிமகனைநாலிருவாளியேவிவெகுண்
டிரதநேமிகுலைந்துசூதனொடிவுளிநாலும்விழப்
பொருதுபிறினன்முற்பயந்தபுராரியேயனையான். (சரு)

* மீளமற்றொருதேரிலேறியவீமன்வெஞ்சினமேன்
மூளமற்புயகிரிதடித்திடமூரிவில்வளையா
வாளமொப்பெனமற்றவன்கொடிவாசிபாகொடுதேர்
தூளமுற்றிடமுதுகிடும்படிதொட்டனன்கணையே. (சசு)

* கருதிவாய்த்ததுபோரெனுமெய்களித்தகைகயனுஞ்
சுருதிகீர்த்தியுடன்மலைந்துதொடங்கினாரொருபாற்
கிருதபார்த்திவனுடன்மலைந்துசிகண்டிகெட்டனன்மா
விரதமேற்கொடியாடைவீழ்தரவேகினானொருபால். (சஎ)

* தருமபூபதிசேனையின்பதிசாபவாசிரியன்
கிருபனோடுமலைந்துவெஞ்சமர்கெட்டுமீடிரதம்
புரவிபாகுதரித்ததிண்சிலைபொன்றவன்றுயிரோ
டரிதுபோயினன்வேள்வியாகுதியங்கிவாய்வருவோன். (சஅ)

* திங்களைத்தலையாகமன்னவர்செப்புமாமரபோர்
தங்களிற்பகையாகிவானவர்தானவர்க்கெதிரா
யெங்களுக்கெழுபாரடங்கலுமென்றுபோர்புரியும்
வெங்களத்தினியற்கையெங்ஙன்வியந்துகூறுவதே. (சகூ)

வேறு.

* இற்றகைகால்செறிகளமுழுதுங்கழுகிட்டனகாவணமே
யுற்றதுகொள்ளலகைக்குலம்வெங்களமுரைபெருகாவணமே
வெற்றுடன்மன்னர்சரிந்தகுடைக்கண்விரிந்தனசாமரமே
கொற்றமிகும்பறையோசையழிந்துகுலைந்தனசாமரமே. (ருo)

* மின்புயல்வாய்விரிகின்றனவொத்தனவிரிநுதலோடைகளே
யென்புறவூறிவிழுங்கடதாரையினேயினவோடைகளே
முன்புடைவாலதிசெற்றதுவெம்புகர்முகமுழுகுஞ்சரமே
வன்புடைமால்வரைமறிவனபோலமறிந்தனகுஞ்சரமே. (ருக)

* பட்டமணிந்தநுதற்கிடையேவிழுதும்பிகள்பட்டனவே
தொட்டியுடன்பொருசமர்முனைசிறியதும்பிகள்பட்டனவே
வெட்டியறன்புதல்வன்றன்வருதினிவென்றுகளித்தனவே
யிட்டகுமண்டையபேய்ப்பிணமிக்கவவென்றுகளித்தனவே. (ருஉ)

எற்றவும்வார்கணை தைக்கவுமைக்கணிமுந்தனமாமுழவே
வெற்றிகிடைப்பினுநீடதிபாதகம்வெம்மறமாமுழவே
மற்றிரடோள்வரைவயவர்சிரங்கதிர்வாளினதோளினவே
துற்றவரூதினியின்பரிதேரினவாளினதோளினவே. (ருங)

* பழுதறவீழ்படைமன்னவர்பேருடல்பற்பலவம்பினவே
பொழிகுருதிப்புனன்மூழ்கினர்மேனிபுலாலினவம்பினவே
தழல்விழிவாரணவீரர்முடித்தலைதடிவனசக்கரமே
யழலுமிழ்வாளிகள்சுற்றினமீளவுமாவனசக்கரமே. (ருச)

* முழுகியவாளிகள்குழுமியவீரர்முகத்தினவெண்ணிலவே
விழிவழிதீயெழமுறுவல்பரப்பவிரித்தனவெண்ணிலவே
யுழைமழைவீழ்வனபலபடையெங்குமுகிழ்ந்தனவெவ்வெயிலே
யழிவில்வரூதினிசூழ்வெயிலுக்கெதிராவனவெவ்வெயிலே. (ருரு)

* சரமழைகாவலர்தங்கண்மனேவனசம்புகமேயினவே
யிரைகவர்புள்ளினொடுள்ளுறவாவனசம்புகமேயினவே
வரைசிறகற்றுவிழுந்தனவென்னமறிந்தனவாரணமே
யருகுநடிப்பனவலகைகள்பாடுவயாமளவாரணமே. (ருசா)

* செயிருடையாடவர்சோரிபரந்துசிவந்ததுபாரிடமே
வயிறுபெருங்குருதிச்சுனையாகவளர்ந்தனபாரிடமே
பயிலமறைத்தனபாறுபருந்தொடுபலகமுகந்தரமே
யெயிறுடைவாளிதுணிப்பவிழுந்தனவெத்தனைகந்தரமே. (ருஎ)

ஆவமொடொத்தனவாடவர்நெஞ்சுகளாகியபோதகமே
பூவலையத்துடலாருயிர்வானிடைபுக்கனபோதகமே
மேவுநரிக்குவிளைந்தனவீரர்தம்வீழ்தலையோதனமே
நாவலருக்குமுரைப்பரிதந்தரனந்தலையோதனமே. (ருஅ)

* உம்பலநேகமிளம்பிடியென்னவொடிந்தனகோடுகளே
செம்புனல்யாறிருபக்கமும்வீழ்குறைசெய்தனகோடுகளே
தும்பிகளாலறையுண்டனகொற்றவர்சூழ்மனவம்புயமே
வெம்புகர்வாளிலழிந்தனமால்வரைவிதமனவம்புயமே. (ருசு)

* தாள்வலியாடவர்சிரமுருளும்படிதைத்தனசாயகமே
யாழ்குருதித்தடமொத்தனவவரவரவ்வுடல்சாயகமே
யேழ்புயல்வானமிருண்டிடவெங்குமெழுந்தவிருந்துகளே
வீழ்பசியாலுழல்பேயொடுபாரிடமிக்கவிருந்துகளே. (சா0)

* செய்கடலாமெனவந்துசிவந்தகவந்தமலைந்தனவே
கைகொடுகால்கொடுதம்மின்வெகுண்டுகவந்தமலைந்தனவே
யைவகையானகதிக்குரநாலுமழிந்தனவாசிகளே
மெய்வகையாலிவைகூறெறிகோலெறிவீரர்கைவாசிகளே. (சாக)

* தாரைகளொற்றைகள்வங்கியநீள்வயிர்சங்கமுழக்கினவே
யோரிமையிற்சிலயானைதுரங்கமசங்கமுழக்கினவே
சேரவளைத்தவிலொன்றொருகோடிசிலீமுகமேவினவே
வீரருயிர்ப்புடல்விட்டரமங்கையர்மெய்ம்முகமேவினவே. (௬௨)

* பொருகடலொத்தபெருங்குருதிக்கடல்போதவிரைந்தனவே
விரைவுறுதேவர்விமானம்விசும்பிடைபோதவிரைந்தனவே
கருமுகின்முட்டினபட்டவர்கட்கனல்காலுமரும்புகையே
சுரிகையொடற்றுவிழுந்தனமங்கையர் துனியிலரும்புகையே. (௬௩)

* கடகரியேனமொடொத்தனவம்பொடுபோனகரத்தனவே
புடவியின்மீதுறைநிறைமதியம்பலபோனகரத்தனவே
படுதிறல்வேலவர்கண்மணிசென்றுபறித்தனவாயசமே
யடுபணையானையின்வெங்குடர்சென்றுபிடுங்கினவாயசமே. (௬௪)

* அணிதொடைதேன்மதுகரநிரைசாலவருந்தவிளைத்தனவே
மணிமுடிபாரமுறப்பலநாகம்வருந்தவிளைத்தனவே
கணைபலவீரர்முகத்தனதோளனகண்ணனமார்பனவே
நிணமொடுமூளைநெடுங்குடர்பூதநிரைக்கணமார்பனவே. (௬௫)

வெஞ்சமருற்றமுடித்தலைமன்னவர்வீரமறிந்தனவே
நெஞ்சுருமென்னமுழக்குபதாதியர்நிலனுமறிந்தனவே
வஞ்சரவீரர்கரத்துடனெய்வரவாள்கடறிந்தனவே
மஞ்சுலவும்பொருவானவரூரைமடிந்துமறிந்தனவே. (௬௬)

வே று.

* பேராண்மைசெய்சேனாபதிபின்னிட்டிடுமுன்னே
தேராண்மையும்வில்லாண்மையுமுடையானெதிர்செல்லத்
தாராரகல்வரைமார்பினர்சஞ்சத்தகர்தாமு
நாராயணகோபாலருமணியாகநடந்தார். (௬௭)

* சட்கோணநெடுந்தேர்மிசைவருசத்தியசேனன்
புட்கோவெழுதியசீர்பெறுபொன்னங்கொடிவலவ
னுட்கோடுகள்மறுகும்படிசுடுதோமரமொன்றான்
முட்கோலுடன்வடமுஞ்சிதைவுறமோதினன்முரணால். (௬௮)

* புடையுண்டுளமுருகிப்புயல்போல்வண்ணனகைத்துத்
தொடையுண்டமலர்த்தும்பைசுமக்குந்திரடோளா
ருடையுண்டதொர்கடலாமெனவோடும்படியவர்மேற்
றடையுண்டதடந்தேரினைவிட்டான்முனைதரவே. (௬௯)

* சென்றுடமர்புரிசேனையுடன்சித்திரசேனன்
வன்றாள்வலிமிகுமந்திரபாலன்றனைவானோர்
தன்றாதையளிக்கும்பலசரத்தால்விழமோதிக்
கொன்றான்மிடல்வழுவாதகுரக்குக்கொடியுடையோன். (௭௰)

* முன்னாண்முதனூலினுமுனைதோறுமுடற்றித்
தன்னாவுயிர்கவராதவர்சஞ்சத்தகர்யாரும்
நன்னாரணகோபாலருநாகங்குடியேறப்
பொன்னாண்வரிசிலைகோலினன்மாலோனுயிர்போல்வான். (எக)

* சஞ்சத்தகர்கண்ணான்றருதனையோர்பலரடைவே
யெஞ்சப்பொருதனன்வெஞ்சிலையிமையோர்பதிமகனென்
றஞ்சிக்களமுழுதுங்கழுகாடக்குறையாடக்
குஞ்சத்தொடுகுடைவீழ்தரமுதுகிட்டனர்கூடார். (எஉ)

* முதுகிட்டவர்துரியோதனன்முனைவீழ்தலுநூறைம்
பதுகற்கியுநாலாயிரம்விகடப்பொருபகடும்
மதுகைப்படுதேராயிரமுங்கொண்டெதிர்வந்தா
னெதிர்கைப்படவொருமன்னருமில்லாவமர்வல்லான். (எங)

* குருமித்துநடக்கின்றனனிவனோடுகொடுங்கா
ருருமிற்பொருகுவமென்றுளமுகளித்தெழமுனைமே
னிருமித்துநடந்தான்மனுநீதிக்கொருநிலையான்
றருமத்தினதுயிரென்றுரைதக்கோர்சொலமிக்கோன். (எச)

வேறு.

* துனைவெங்கபோலவிகடகடஃதுரகம்பதாதியிரதமளவில
வெனநின்றசேனைமுடுகியயில்சிலையெறிதுங்கவாளொடிகலியெழுவெதிர்
குனிசங்குதாரைவயிர்கண்முதலியகுனில்கொண்டுசாடுபுரைகண்முதலிய
தனிதங்கொண்மேகமெனவுமலைபொருதமரங்கொள்வேலையெனவுமதிரவே. ()

* கதிகொண்டசேனைநடவவெழுதுகள்ககனஞ்சுலாவியனிலகதியுற
முதிரண்டசூரகிரணமிருளெழமுகில்பஞ்சபூதவடிவுபெறவிய
னதிவண்டலாகவமரருறைதருநகரம்பொன்வீதிபுழுதியெழமுழு
மதியங்கண்மாசுகழியநிரைநிரைவளரண்டகூடமுகடுமதிரவே. (எசூ)

* குதிகொண்டவாசிவயவர்பலரொடுகுதிகொண்டவாசிவயவர்குறுகினர்
துதிவெங்கைவேழமறவர்பலரொடுதுதிவெங்கைவேழமறவர்துதையின
ரதிர்சண்டவேகவிரதர்பலரொடுமதிர்சண்டவேகவிரதரணுகினர்
பொதிவெம்பதாதிவிருதர்பலரொடுபொதிவெம்பதாதிவிருதர்பொதுளவே. ()

* புரிசெம்பொனேமிவிசையொடிருகிரிபொருவன்புபோலநவமணியினொளி
விரிதந்தசோதிபடலமிகுவனமிசைகொண்டதேர்கள்கடவவலவர்க
ளெரிசெங்கணாகவரசுமுரசமுமெழுதும்பதாகைநிருபரிருவரு
முரிதந்தசாபமுடுகுபகழியின்முகிறங்குவானமுழுதுமறையவே. (எஅ)

* அறன்மைந்தன்வாளியடையநயனமிலவன்மைந்தன்வாளிவிலகவிரகுடை
விறன்மைந்தன்வாளியடையவிரகிலிவிடுபுங்கவாளிவிலகமுறைமுறை
மறமும்பொருதசினமுமிருபுயவலியுந்தவாமலரிதுபொருதபி
னிறமொன்றுமேழுபகழிமுழுகினநிருபன்மன்மார்புகுருதிபொழியவே. (எகூ)

* விரிகின்றநீலகிரியிளவெயில்விழுகின்றதாரையனையவழகொடு
சொரிகின்றசோதியுடையமகிபதிசுளிவின்றிமீளவொருகைநொடியினின்
முரிகின்றநீடுபுருவநிகரெனமுனைகின்றசாபமுரியவிரைவொடு
தெரிகின்றகோல்கண்முழுகியறனருடிருமைந்தன்மார்புகுருதிபொழியவே. ()

* மருமங்கள்சோரிவடியவிருவருமலைகின்றபோதின்மதுகைநிலையொடு
தருமன்குமாரனைகைகொடவனிபர்தலைவன்குமாரனுரகதுகவசமு
மருமந்ததேரும்விசயவலவனுமடல்கொண்டுபாய்புரவியுமழிவுற
வருமஞ்சநாணியெறியுமொலியெழவொளிவிஞ்சுநாலுபகழியுதையவே. (௮௧)

* இழிதந்துமீளவிமையமனையதொரிரதங்கடாவியெதிரியுரனிடை
யழிதந்துமீளவயில்கொண்முனையதொரயில்கொண்டுவீசியெறியுமளவையின்
மொழிதந்தவேலின்முனையுமொடிவுறமுரிவுண்டுகீறிவழியில்விழவெதிர்
பொழிதந்ததாலொர்பகழியறனருள்புதல்வன்கைவாகைபுனையும்வரிவிலே. ()

* பிளவுண்டுவேல்விழுதலின்மகிபதிபிழைகொண்டவேழமனையமெலிவின
னுளநொந்துநாணியுருளுமிரதமுமுடைதந்துபோருமொழியும்வகைசில
கிளரம்புவீசியொருபவளமுதுகிரிநின்றதாகுமெனமுனிலைபெறு
வளமைந்தன்வாய்மையுரைசெய்தனன்மிசைவருமும்பர்யாருமிதயமகிழவே.

* அளிவந்தமாலையரசரவையிலுனதிவஞ்சமாமனவனிகவர்வுற
வெளிவந்தசூதுபொருதவிரகரிதெளிதின்றுபூசலெனமுன்விரவினை
யொளிவிஞ்சுதேருமுடையபடைகளுமுடையுண்டுநீயுமுறுதிதவறினை
தெளிவென்பதாசுமிலதுன்மனமுறுசெருவென்றவீரமமையுமமையுமே. (௮௪)

* அனிலன்குமாரனரசரசரனியெனநுசன்சொல்வாய்மைபழுதுபடுமென
வுனையின்றுகோறலொழிவதலதுநினுரமென்கொலாதுமெனதுகணையெதிர்
புனைதும்பைமாலைசருகுபடவெழுபொடிமண்டவோடிமறைகவிரைவுட
னினியெங்களாண்மையுரைசெய்தெதுபயனெதிர்வந்துநாணையணிகவிகலியே. ()

* முதிர்குந்திபோசன்மகடன்மகனிவைமொழிதந்தபோழ்துபெருகமுறு
வல்செய், ததிருஞ்சுயோதனனுமொருயர்கதையவன்மன்றன்மார்பினுரனெ
டெறிதர, வெதிர்சென்றுநீதிநிருபனுறுமவனெறிதண்டுகூறுபடவுமெறிபவன்,
விதிருண்டுபாரில்விழவுமொருதனிவிறலுந்துவேல்கொடுருவவெறியவே. ()

வேறு.

* சூழ்ந்ததுவிதிகொல்பாகுந்துரகமுந்தேரும்வீழ
வீழ்ந்தனன்வேந்தர்வேந்தன்மெய்தவாவேந்தன்வேலாற்
றாழ்ந்ததுநமதுகொற்றமெனநடுத்தரிப்பொன்றின்றி
யாழ்ந்தபைங்கடலோடொப்பானடுத்தனனங்கர்கோமான். (௮௭)

* முற்படுதினத்திற்றந்தைமுடிந்தமெய்வருத்தத்தோடு
கற்படுபுண்ணின்மீளத்தடிபடுகணைக்கிற்றுக
வெற்படுதடந்தோள்வேந்தன்வீழ்ந்தனனென்றுவெய்தி
னெற்படுபரிதியென்னத்தோன்றினனிவுளித்தாமா. (௮௮)

* வேட்டவெங்களிறேறுடொப்பான்மேதினிக்கரசன்விற்போர்
பூட்டறுபுரவித்தேரும்பொன்றியபுலனுமாகி
யோட்டமிறுனேயான்கைவேலினுளுடைந்தமாற்றங்
கேட்டனனவர்க்குமுன்னேகிருபவாசிரியன்வந்தான். (௮௯)

* காப்புடைபொற்றைநேமிக்காவலன்றுமமார்பி
னுப்புகல்வாய்மையான்றனுண்மலர்ச்செங்கைவைவேல்
கோப்புறவீழுமுன்னர்க்கொதித்தெழுமனத்தனுகித்
தாப்புலிபாய்ந்ததென்னச்சல்லியன்றானும்வந்தான். (௯௦)

* எப்பெருஞ்சேனையோடுமெக்குலவேந்தும்வந்து
தப்பருங்கொற்றவேற்கைத்தருமனேவனைந்தகாலே
யப்பெருந்தானைதன்னிலருச்சுனனுதியானவ
வொப்பருந்தரணிபாலரிவற்கும்வந்துதவினுரே. (௯௧)

* இருபடையரசுந்தம்மிலீரிரண்டங்கமாகி
வருபடைகொண்டுநின்றுவல்லவாபூசுறுக்கிப்
பொருமரவுடைப்பதாகைப்பூபதிதனையுங்கொண்டாங்
கொருபடைகைக்கொளாமலொன்னலருடைந்துபோனர். (௯௨)

வீமனுமிளைஞராயுள்வேதியரளித்துளோருங்
காமனுக்குதித்தவல்விற்கைத்திறற்கொருவனேடுஞ்
சோமனன்மரபினீதிதொல்புகழ்விளக்கும்வாய்மைத்
தாமனுஞ்செருக்கிமீண்டார்தம்பெருந்தானையோடும். (௯௩)

* அருக்கனுந்தருமன்மைந்தனுண்மையுநிலையுங்கண்டு
வெருக்கொளுநிருபரென்னமேற்றிசைவேலைமூழ்கிச்
சுருக்கமில்கங்குற்காலஞ்சென்றபின்சுதன்மேலன்பு
பெருக்கவுண்டாகமீண்டுங்குணகடற்பிறந்திட்டானே. (௯௪)

பதினாறும்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௩௦௧.

பதினேழாம்போர்ச்சருக்கம்.

---

* ஈரொருபிறப்பிலொருசிறுகுறளாயாவருந்தேவரும்வியப்பக்
காரொருவடிவுகொண்டெனச்சென்றுகாவல்கூர்மாவலியளித்த
நீரொருகரத்தில்வீழுமுன்றரங்கநீனிறமகரநீருடுத்த
பாரொருகணத்திலளவிடுங்கமலபாதனுர்நாதனுர்நமக்கே. (௧)

* அற்றைவெஞ்சமரிலமர்முனைந்தாற்றுதழிந்துபோமவனிபர்பலரு
மற்றைநாளலகில்புவனமுமின்றேமடியுமென்றனைவருமயங்க
வொற்றைவெண்சங்கும்பல்வகைப்பறையுமோதவான்கடலெனவொலிப்பக்
கற்றைவெண்கவரிகால்பொரத்தனிப்பொற்கவிகைநீழலிற்களங்கலந்தார். (௨)

* எண்ணிருதினத்திற்பட்டபல்படையுமீண்டுமீண்டெழுந்தனவென்ன
வண்ணமோரளவில்வாசியுந்தேருமதசயிலமும்பதாதிகளும்
விண்ணமண்ணகமுந்தெரிவுறாவழக்கின்வெங்களமுழுவதுங்கஞல
வண்ணலந்தடக்கைக்கெதிரிலாவண்மையாண்டகையரசுடனடைந்தான். (௩)

* சென்னியின்மகுடமணிவெயிலெறிப்பத்திருக்குழைமணிவெயிலெறிப்ப
மன்னியபொலம்பூண்மணிவெயிலெறிப்பவனைகழன்மணிவெயிலெறிப்பத்
தன்னைமுன்பயந்தோன்றன்னினும்வடிவந்தயங்குசெஞ்சுடர்வெயிலெறிப்பக்
கன்னனன்றிருந்தவழகினையாரேகண்டுகண்களிப்புறாதொழிந்தார். (௪)

* ஒருங்களப்பரியபதாகினிக்குழாமுமுயிர்க்குயிரானதம்பியரு
மருங்களக்கனிகொள்வண்ணனுந்தானுமறனருளறனுடையரசன்
பெருங்களப்பரப்பினணிபெறவணிந்துபேருலகுய்யுமாறிருண்ட
கருங்களத்தவனைக்காசினித்தேர்மேற்கண்டெனக்காணுமாநின்றான். (௫)

* நின்றவக்குரிசிலருச்சுனன்றேர்மேனின்றருணீலமேனியனை
மன்றலந்துளபமாலைமாதவனைவழிபடுமவர்க்குவான்றுணையைத்
தன்றடங்கண்ணோடுதயமுத்தரும்பத்தாளிணைமுடியுறவணங்கி
யின்றைவெஞ்சமரிலிரவிதன்சேய்வானெய்துமோவியம்புதியென்றான். (௬)

* இத்தினமிரவிசிறுவனும்விசயனேவினாலிறந்திடுநாளைத்
தத்தினபுரவித்தேர்ச்சுயோதனனுஞ்சமீரணன்றனயனான்மடியு
மத்தினாபுரியுமீரிருகடல்சூழவனியுநின்னவாமென்றான்
சித்தினதுருவாயகண்டமுந்தானுஞ்செய்யகட்கருணையந்திருமால். (௭)

* செங்கண்மாலுரைத்தவின்சொலாரமுதஞ்செவிப்படச்சிந்தனைதெளிவுற்
றெங்கண்மானமுந்தொல்லாண்மையும்புகழுநீயலால்யார்நிலையிடுவார்
வெங்கண்மாசுணத்தோன்வஞ்சனைக்கடலின்வீழ்ந்தழுந்தாவகையெடுத்தின்
றங்கண்மாநிலமுந்தந்தனையெனப்பேரறத்தின்மாமகனிவையுரைப்பான். (௮)

* பொங்கழற்சிந்தைச்சுயோதனன்கங்கைப்புனல்விளையாட்டிடைப்புதைத்த
வெங்கழுமுனையில்விழாமலோரளியாய்வீமனுக்காருயிரளித்தாய்
பைங்கழலரசரவையினில்யாமும்பார்த்திருந்தலமரப்பயந்த
நங்கழலனையாணாணமுந்துகிலுநோக்கினைகாக்குநாயகனே. (௯)

* கானகமருங்கின்மேவலன்பனியாற்கடும்பசியுடன்வருங்கடவுண்
மானவமுனிவன்றுபமுஞ்சாபவருத்தமுமுறுவகையொழித்தா
யானொருபொருளாத்தூதுசென்றருளியெதிரிலாவிதுரன்வெஞ்சிலையும்
பானுவின்மதலைகவசமுமகற்றிப்பரிந்துபல்வினைகளும்புரிந்தாய். (௧௦)

* அஞ்சியோவன்றியருள்கொலோவறியேனுகவத்தடுதொழின்மறந்த
வெஞ்சிலைவிசயற்குள்ளவாறுணர்த்திமீளவும்பொரும்படிவிதித்தாய்
வஞ்சினமறந்துநேமியுந்தரித்துவலம்புரிகுறித்துமூதாதை
துஞ்சிடவமரிற்சிகண்டிசெய்தவத்தின்றொடர்பயன்வழாவகைதுரந்தாய். (௧௧)

* ஒருபகல்விசயன்மார்பமூடுருவவொழுகுவெங்கடத்தொருத்தன்மேல்
வருபகதத்தனெறிந்தவேலுன்றன்வண்டுழாய்மார்பகத்தேற்றாய்
பொருவகையரசர்பலர்படவபிமன்பொன்றியபொழுதுசெந்தழலி
னிருபதமுனியால்விழாவகைவிலக்கிநிசியில்வெண்கயிலையுங்கண்டாய். (கஉ)

* வருணன்மாமதலைவாசவன்மதலைமார்பினிலெறிந்தவெங்கதையைக்
கருணையான்மருமம்புதையவேற்றந்தக்காளைகையறும்படிகண்டாய்
தருணவாணிருபர்மயங்கிவீழ்தரவெண்சங்கமுமுழக்கிநேமியினு
லருணனுதபத்தைமறைத்திரவழைத்தாங்கபிமனுக்கரும்பழிகொண்டாய். ()

* ஏவருஞ்சாபப்பண்டிதன்புதல்வனேவியவேலினல்பாங்கள்
வீவருந்தன்மையறிந்துவாகனமும்விறற்படைகளுமொழித்திட்டாய்
மூவருமொருவராகிநின்றருளுமூர்த்தியேபார்த்திவர்பலருந்
தேவருமுனைரார்நின்செயலெனமால்சேவடிகளின்முடிசேர்த்தான். (கச)

* கண்ணனுங்கருணைக்கண்ணனையிறைஞ்சிக்கைகளாற்றழுவியைவிருநீ
ரெண்ணருமமரிலிறக்கிலீரஞ்சலென்றுபசாரமுமியம்பிப்
பண்ணுறுந்தடந்தேர்ச்சேனையின்பதியைப்பார்த்தணிவகுக்கெனப்பணித்தா
னண்ணலந்திட்டத்துய்மனுந்தெவ்வரஞ்சிடும்படியணிவகுத்தான். (கரு)

வேறு

* ஐவர்பதாகினிவெள்ளமணிந்தவாகண்டடுவிறற்கோனெடுவிற்கையங்க ர்கோமான், பைவருமாசுணக்கொடியோன்றன்னைநோக்கிப்பரித்தடந்தேர்நர பாலர்பலருங்கேட்கக், கைவருபல்படைக்குமொருவீரரொவ்வாக்கட்டாண்மை யரசேயிக்களத்திலின்றே, கொய்வருதார்ப்புயப்பகைவர் சிரங்களெல்லாங்கு றையுடலங்கூத்தாடக்கொய்வேனென்றான். (கசு)

* கார்ப்பாகசாதனன்றன்மகனுக்கெல்லாக்கலகமுஞ்செய்வஞ்சனையேகற் றகள்வன், றேர்ப்பாகனுய்நின்றானவனுக்கொப்பார்தேவருலகினுமில்லைதிசை களெல்லா, மார்ப்பாகமோதிவருங்கவனமாநெஞ்சறிவானும்போரில்விரகறிவிப் பானும், பேர்ப்பாகாய்த்தேர்கடவுசெயல்வல்லானும்புனைதாமச்சல்லியனேபு வியிலென்றான். (கஎ)

* அவனின்றென்மணிநெடுந்தேர்கடவுமாகிலருச்சுனனுக்கடலாழிய்வனே யன்றிச், சிவன்வந்துதேர்விடினுங்கொல்வேனந்தத்தேர்நின்றாரிருவரையுஞ்செ ங்கோல்வேந்தே, பவனன்சேய்முதலானதுணைவரோரோர்பகழிமுனைதனக் காற்றார்பரவையாடைப், புவனங்களனைத்தையுநின்குடைக்கீழாக்கிப்புரிதிறல் வாகையுநினக்கேபுனைவிப்பேனே. (கஅ)

* நஞ்சோற்றம்பெறநுகர்வுற்றிருண்டகண்டர்நற்றெண்டர்வடிவமெனந ண்ணும்வெண்ணீற், றஞ்சோற்றுமடற்கைதைகமழுங்கானலகன்குருநாட்டரி யேறேயானின்றீம்பால், வெஞ்சோற்றேடினிதருந்தியமுதருந்தும்விண்ணவர் போலிந்நெடுநாள்விழைந்துவாழ்ந்தேன், செஞ்சோற்றுக்கடனின்றேகழியே னுகிற்றிண்டோள்கள்வளர்த்ததனற்செயல்வேறுண்டோ. (கக)

* ஒருருமொருகுலமுமில்லாவென்னையுங்கள்குலத்துள்ளோரிலொருவனாக்கித், தேருருமவர்மனைக்கேவளர்ந்தவென்னைச்செம்பொன்மணிமுடிசூட்டியம்புராசி, நீருரும்புவிபாலர்பலரும்போற்றநின்னினுஞ்சீர்பெறவைத்தாய்நினக்கேயன்றி, யேருருங்கதிர்முடியாயுற்றபோரில்யார்க்கினியென்னுயிரளிப்பதியம்புவாயே. (௨0)

* கன்னனிவையெடுத்துரைப்பமகிழ்ந்துகேட்டுக்காந்தாரன்றிருக்குலத்துக்கன்னியீன்ற, மன்னர்பிரானிமைப்பொழுதிற்பழுதிலாதமத்திராசனையெய்திமதுகசாலங், தென்னதெனவெனமுரலுஞ்செவ்விமாலைத்திருத்தோளாயானென்றுசெப்பினாலவ்,வின்னுரைகேட்டொருவரநீநல்கல்வேண்டுமென்னாணையெனக்கரங்கொண்டிறைஞ்சினானே. (௨௧)

* செறுத்தவர்தம்பெருவாழ்வுமுயிருமாற்றிச்சேர்ந்தவர்கள்புரிந்தபெருந்தீமையெல்லாம், பொறுத்துலகமுழுதாளுந்திகிரியோயான்பொருளாகவொருவரநீபுகலுவாயேன், மறுத்துரையேனுரைத்தருளென்றுரைத்தானந்தமத்திரபூபனுமிவனுமருவலாரைக், கறுத்தமழைமுகில்வெளுக்கக்கருகுமேனிக்கண்ணனைப்போலெங்களைநீகாத்தியென்றான். (௨௨)

* வாவுமாமணிநெடுந்தேரரசர்க்கெல்லாம்வாய்ப்பானநீயெனையும்புரப்பதன்றி, யேவுமாதொழில்புரிந்துன்குடைக்கீழ்வைகுமென்போல்வாருனைப்புரத்தலிசைவதொன்றோ, தேவுமாய்மானுடமாய் முற்றுமற்றுஞ்செப்புகின்றபலகோடிசராசரங்கள், யாவுமாய்விளையாடுமாதிமூர்த்தியாதவனுக்கியானெதிரோவெதிரிலாதாய். (௨௩)

* நேர்செலுத்துந்தனிச்செங்கோலுடையாயாதுநினைவுனக்கென்றவன்வினவநிருபன்றானுந், தார்செலுத்தும்பெருஞ்சேனைசூழநின்றசல்லியனைமுகநோக்கித்தனஞ்சயற்குத், தேர்செலுத்துமுகுந்தனைப்போனீயுமின்றுதேரிரவிமகன்றிண்டேர்செலுத்தினல்லாற், போர்செலுத்தியைவரையும்வென்றுவாகைபுனைதனமக்கரிதென்றுபோற்றினானே. (௨௪)

* புல்லியசொன்மதியாமலென்னைநோக்கிப்புகன்றனையாற்புன்மேயும்புல்வாய்க்கென்றும், வல்லியமாப்பணித்ததொழில்புரியினன்றோமத்திரத்தான்கன்னனுக்குவலவனாவான், சொல்லியநாவென்படுமற்றொருவன்சொன்னாற்சுயோதனனாதலிற்பொறுத்தேன்சொன்னதென்று, சல்லியன்மாமனங்கொதித்துப்புருவங்கோட்டித்தடங்கண்ணுமிகச்சிவந்தான்றறுகணானே. (௨௫)

* சதுர்விதத்தேர்வீரருக்குந்தடந்தேரூருஞ்சாரதிதன்றனயனுக்குத்தடந்தேரூர்தன், மதுமலர்த்தார்வலம்புரியாயிழிவன்றோநீமதித்தவிறற்கன்னனுக்குமெனக்குமிப்போ, தெதிர்மலைக்குஞ்சேனைதன்னையிருகூறாக்கியிகல்புரிந்தாலென்கூற்றைப்பிரியவென்றக், கதிரளித்தோன்கூற்றினையுமஃதித்திலேனேற்கடவுன்றேரவற்கென்றுகனன்றசொன்னான். (௨௬)

* பூந்தராதலமுழுதுமதித்தவாண்மைப் பேர்வேந்தேயுனைப்போலப்புக ழேபூண்டு, வேந்தராயமர்க்களத்திலதிசயித்தவீரரானவர்க்கிதுதான்மேம்பா டன்றோ, மாந்தராயெக்கலையும்வல்லார்க்கன்றி வாசிநெடுந்தேரூரவருமோவெ ன்றென், றேந்தராவெழுதியபொற்கொடியோன்சொல்லியிறைஞ்சுதலுமுடன் பட்டானென்செய்வானே. (உள)

வேறு

மன்னர்மன்னன்வகுத்துரைத்தசொன்மாறிவேறொருவகைசொலற்
கென்னதேயறமென்றுஞுடியிசைந்தகாலையுணர்ந்தவன்
றன்னகங்கொடளர்ச்சிரீக்குதலுன்னியோர்கதைசாற்றினான்
முன்னமெம்பெருமானிசாசரர்முப்புரம்பொடிசெய்ததே. (உஅ)

தாருகாசுரனென்பவன்றருதனையர்வித்துவமாலியுந்
தாருகாக்கனுமறிவுநீடியதன்மைசேர்கமலாக்கனுந்
தாருகாமுடியங்கதங்கடணந்தருந்தவமாயினர்
தாருகாவனமருகுசாரவிருந்தயன்றனையுன்னியே. (உகூ)

எண்ணிலாததினந்தவங்களிழைத்திருந்தவர்முன்னரிற்
றண்ணிலாவுமிழ்மூரலோடுசரோருகன்றனிசாரலுங்
கண்ணிலாதவர்பெற்றவாறுகளித்துமூவருமோடியே
விண்ணிலாதவர்கோடியென்னவிளங்குவானைவணங்கினர். (௩௦)

ஏதுவேண்டியருந்தவங்களிழைத்துளீருமதெண்ணமீண்
டோதுமென்னவுலப்பிலாவரமுதவுகென்னமறுத்தவ
னீதுகூறுதல்கடனதன்றுசெனித்துளோர்களியாவரே
மீதுளோரிலிறப்பிலாமைவிலக்கினோர்கள்விளம்புவீர். (௩௧)

உருவமுண்டெனிலழிவுமுண்டவையொன்றுநிற்கவுவப்பினாற்
றருவதேனையதுரைமினென்றுசரோருகத்தன்விளம்பலுந்
திருவளந்தருமுலகமூன்றினுமிஞ்சிமுன்றுசிறந்திடும்
பெருவளஞ்செறியும்புரங்களோர்மூன்றுநல்குதிபெற்றியோய். (௩௨)

மண்ணிலிஞ்சியிரும்பிலந்தரமல்குவெள்ளியினேமமே
விண்ணிலாகவுடன்செலுங்கதிவேண்டியெய்தவிலக்கரும்
பண்ணினல்குதியொருவன்மூவெயில்பண்புகூட்டியொரேகணைக்
கண்ணிமைக்குமுனந்தொடுத்தடுகாலமீறிதுகடமையே. (௩௩)

இந்தவண்ணமளிப்பதேவரமென்றுமூவரிறைஞ்சிடக்
கந்தவண்ணமலர்ப்பெருந்தகைகட்டுரைப்படிநல்கியே
வந்தவண்ணமறைந்துளானிவர்வாழ்த்திமீண்டுமயன்றனக்
கந்தவண்ணமுரைப்பமற்றவனுசின்மூவெயிலாக்கினான். (௩௪)

பரவருந்தனிநகரமூன்றுபடைத்துநல்வளனுளவெலாந்
தரவருந்தவமுனமிழைத்தவர்தக்கநற்றிருவெய்தினர்
குரவருந்தவமுனிவருந்தலைகுனியமூவுலகும்புரந்
திரவருஞ்சுடர்முடியினர்பலவின்பமெய்துறுமிடையினில். (௩௫)

உதித்தமைந்தர்தவங்கடந்துலகேழும்வெல்லவுமொன்னலார்
மதித்தவாளியினூன்மடிந்தவர்பதின்மராயெழுவண்மையுங்
கதித்தநான்முகனூலடைந்துகலந்துளார்மலமூன்றையும்
விதித்ததீவினையின்குழாமிகுவிப்பதொத்துவிளங்கவே. (௩௬)

ஆடலஞ்சிலையாண்மையாலுமடுத்ததோள்வலியானுமவ்
வேடலங்கல்புனைந்தவேதியனீந்தசீர்வலியானுநற்
பாடலங்கரிதேர்பதாதிகள்பரவையிற்பொலிவெய்திட
நீடலங்கல்விளங்குமார்புடைநிருதராயினருலகெலாம். (௩௭)

கண்டுதேவர்நடுங்கிநெஞ்சுகலங்கிமாமுனிவோரொடும்
பண்டுகோபதியோடுசாரதைபதியையெய்திவிளம்பலும்
விண்டுவன்புடையவரொடுங்குடிதேகியோர்ந்திதுவிமலனுட்
கொண்டுவென்றிடினன்றிவேறொருகொள்கையின்றெனவேகினர். (௩௮)

ஈசன்முன்செலவஞ்சியஞ்சியிருந்தருந்தவமியாவருந்
தேசினின்றுபயிற்றினர்சமைதேவமானசகத்திர
மாசனங்கடவந்துறந்துமைமணவன்வாழ்கயிலாயமா
மாசினல்வரையெய்தியாண்டகையருள்கொடாங்கவையண்மினர். (௩௯)

வாடுசூழ்மழைகண்டதென்னவணங்கியன்புபரந்தெழுந்
திடுகூறருபங்கயத்தனிருக்கனந்தமெழுத்தெடுத்
தாடுகூத்துடையான்பெரும்புகழாழ்ந்தநாவொருநான்கினும்
விடுகூடியதென்னவின்பம்விளங்கநின்றுவிளம்பினன். (௪௦)

மெய்யர்மெய்யின்விளங்கிநின்றனைவேதநூனெறியிற்செலாப்
பொய்யர்பொய்வழிபொய்த்துநின்றனைபொய்ம்மைமெய்ம்மைபுணர்ப்பிலா
வையரையமகற்றிநின்றுயிராகவாண்டனையாதுகொ
னெய்யர்நின்னைமதித்தரேரைநுவல்பிரபஞ்சநிகர்க்குமே. (௪௧)

காலமாயினைகதிர்களாயினைகடவுளோரொடுமுனிவராய்
ஞாலமாயினைவேதமாயினைநாகநீர்கனல்வாயுவாங்
கோலமாயினையுயிர்களாயினைகுணமுமாகிமுத்தொழில்வலோர்
மூலமாயினைபேதமாயினைமுத்தியாயினையத்தனே. (௪௨)

கண்டுளார்சிலர்காண்கிலார்சிலர்கருதுவேதவழிப்படி
கொண்டுளார்சிலர்கொள்கிலார்சிலர்கூடுமன்புகுறிச்செயற்
பண்டுளார்சிலரின்றுளார்சிலர்பாசநல்வினைதீவினை
விண்டுளார்சிலர்வில்கிலார்சிலர்நீடாத்துவிதங்களே. (௪௩)

என்றுபற்பலகூறிமாறியிறைஞ்சியெண்கணுமீருக
வன்றுநிற்கும்விரிஞ்சிமான்முதலாயினூர்முகநோக்கியே
யின்றுநீவிரடைந்தகாரணமேதுகூறுமினஞ்சலென்
றென்றுமற்றவனேதினுனிவருவகைபூத்தனராடியே. (சச)

தாருகன்றருதனேயர்மூவர்தவத்தினின்றகருத்துணர்ந்
தோருகந்தனின்முன்னர்சென்றனனுனதருட்செயலுக்தலாற்
பாருகந்தவரெயில்கண்மூன்றெடுபற்றலாரமற்றெலாஞ்
சீருகந்துகுறித்தவண்ணமளித்தூனேனிதுசெய்கையே. (சரு)

அனையவாசுரருலகமூன்றுமடக்கிவானவரடிதொழப்
புனையும்வாகையர்விஞ்சினூர்மறைபுனிதவேள்விகள்பொய்த்ததா
லுனையலாதவர்தம்மைவெல்பவருளர்கொனின்னடியோமெலாஞ்
* சுனையவங்கவரைத்தடிந்தறநிறுவலென்றுதுதித்துளார். (சசா)

அஞ்சொல்பங்கினனருள்சுரந்தமரேசருக்கிதுகூறுவா
னஞ்சுராசுரரடியர்யாவருநம்புமோர்பதிநாமனு
னெஞ்சுவானவருக்கிதங்கினியற்கையன்றிகன்மூளுமின்
வஞ்சர்தாழவுமக்கெலாம்புயவலியளிக்குதுமென்னலும். (சஎ)

அஞ்சலித்தடிதாழ்ந்தெழுந்தரிதையநின்கலையாற்றிலே
மெஞ்சலிற்றவவலியெலாமெமதீந்துளோமெமையாளுவாய்
வஞ்சரைப்பொடிசெய்தகற்றுதன்மாண்பலால்வசையாகுமோ
தஞ்சமுற்றனமென்றடித்துணைசென்னிசூடினர்சாலவே. (சஅ)

மாலையாதியர்வந்திரந்திடவள்ளலன்புளசிந்தையான்
வேலைவெவ்விடமொத்துளாரையொறுப்பதுன்னியிருப்பிலிக்
காலைநீவிரிருந்துபாசுபதம்பெறுந்துறைகருதுமென்
றூலயன்றுபதேசமீந்தனனவருமத்தவமாற்றினூர். (சகூ)

வேறு.

ஆண்டுபற்பலவாயிரமமரர்நின்றிழைத்த
வேண்டுநற்பசுபதவிரதத்தினில்வியர்து
மாண்டுநீறெழமுவெயில்பொடிப்பனீர்வருந்தா
தீண்டுநேர்குதிர்தேரொடுசிலைமுதலென்றூன். (ருo)

அய்யன்வாய்மைகொண்டமரராண்டருமறையிசைத்த
செய்யவாய்மையாற்செகதலச்சக்கரந்திருத்தி
வய்யமாக்கினர்கடலெலாந்துகில்களாவகுத்துப்
பெய்யுமேழ்முகிலரம்பையந்தருக்களாப்பிறித்தார். (ருக)

இருபெருஞ்சுடருருள்களாக்கடாகமேற்குடையாத்
தருபெருங்கிரித்தொகுதிகளச்செனுந்தரமாக்
கருதுதேர்க்குளவுறுப்பெலாங்கடவுளராகித்
திருவுலாவியதேரினைச்சமைத்தனர்சிறப்பால். (ருஉ)

---

* சுனைதல்-வாடல்.

மறுவிலாமறைநான்குநல்வடங்களாப்பிணித்து
நிறுவியேசமையங்களாறையும்பரிநிரப்பித்
தெறுவிலாப்பெருங்குடிலைமுட்கோலெனத்திருத்தி
யறிவினீண்டவம்புயத்தனைப்பாகனாவமைத்தார். (௫௩)

மேருமாமலைவலியையோர்வில்லதாத்திரட்டி
யோருஞ்சேடனைநாரியாப்பொறித்துலகளந்த
காருலாவுடல்விண்டுவைக்கணைவடிவாக்கி
நேருமங்கிமாருதமுனையிறகதாநினைத்தார். (௫௪)

வாய்த்தனையதேரென்னலுமால்விடைப்பாகன்
சாய்த்தநீள்சடைதுளக்கியித்தேர்விடுந்தகையோ
ராய்த்தரென்னினுமதிகருக்கலான்முடியாதாற்
றோய்த்தவாசகங்கேண்மினென்றிவையிவைசொன்னான். (௫௫)

சுலவுவெம்பரியிதையுமுந்தோன்றறன்வலியு
நிலவுகாலமுமிடனுநற்றுணைவலிநிகழ்வு
முலவுவெம்பகைவலிமையுமோர்ந்தவன்கண்டோர்
வலவனுமவனனையவன்வாய்ப்பதெவ்வண்ணம். (௫௬)

அடுத்தவாண்டகையாருயிர்மானநற்றேசு
கொடுத்தவாய்மைநற்புயவலிகொற்றமற்றெல்லா
மெடுத்தநூனெறியுணர்வுபூண்டிவுளிசேர்தனித்தேர்
விடுத்தவன்வலியுளனெனினுளதலால்வீயும். (௫௭)

ஆயவாய்மையாற்சாரதிக்கமைந்துளாராரென்
றேயநாயகன்வினவலுமெண்கணானென்னத்
தூயதேயெனப்புகன்றிளந்தோகையோடணுகி
நேயவேற்றின்மேற்றோன்றினனீள்வரையொருவி. (௫௮)

ஆங்குநின்றவானவரெலாமார்த்தடிவணங்கத்
தாங்குபெற்றநீத்தோரடிதரிக்குமுன்பிரத
நீங்கலுஞ்செயல்கண்டருணீரினாலுறுத்தித்
தேங்கமழ்ந்ததாரண்ணல்வீற்றிருந்தனன்றேர்மேல். (௫௯)

துடிகறங்கிடத்துந்துமியார்த்தெழக்கணங்கள்
பிடிநெருங்குறமைந்தர்கண்மருங்குறப்படரக்
கடிகையொன்றின்முற்கலந்தனன்மூவெயில்கருதி
யிடியினேறராக்குழுவினேரெய்தல்போன்றீசன். (௬௦)

உலகமூன்றினுமோங்குமூவெயில்களோரிடத்தி
னிலகினன்றிவீவெய்திடாரெனநினைந்தெடுத்த
கலகவெஞ்சிலைவளைத்துநாண்பூட்டுமுன்கருதார்
விலகிலாவெயின்மூன்றுமுன்விரவிநின்றனவே. (௬௧)

வளைத்தவெஞ்சிலைதாங்கினேன்மால்கணைசெலுத்தி
யிளைத்தநாண்ணிடைபங்கர்பார்த்திளநகைவிளைப்பத்
திளைத்தழூவெயிற்றீமலிந்தொருகணஞ்செலாமுன்
றொளைத்ததீமையோர்மாய்ந்தனர்சாம்பராயொழிந்தே. (௬௨)
மீண்டுநாயகன்வெள்ளிமால்வரையினைவிரவி
யாண்டுவானவரகமகிழ்ந்தடிதொழவருள்செய்
தீண்டுநம்பதத்தென்றுவிட்டுமையொடுமிருந்தான்
வேண்டுவோர்கடாம்வேண்டியவுருவமாம்விமலன். (௬௩)
முருகிருந்ததாரெந்தைக்குமார்க்கண்டர்மொழிய
வருகிருந்தியான்கேட்டவாறுனக்கெடுத்தறைந்தேன்
குருகிருந்ததண்சோலைசூழ்மத்திரர்கோவே
பெருகிருந்தவவலியுளோர்க்கமைவதப்பெற்றி. (௬௪)
தேர்விடுந்தொழிலெளிதெனச்சிந்தனைசெய்யே
லார்விடுந்தொழில்வல்லவராயனுநீயும்
பேர்விடும்படிபெற்றுளீரெனப்பலபேசிக்
கார்விடுந்துளிக்கணைவலான்மீளவுங்கழறும். (௬௫)
கன்னனுக்கியான்கடவுதேர்த்தொழிலினனுன
தென்னநற்பயனெனக்கொளேலிரவிதன்மதலை
தன்னையொப்பிலாத்தடக்கையான்கவசத்தோடுதித்தோன்
சொன்னநற்சுடர்மேனியன்சொல்வழாநிலையான். (௬௬)
காரணத்தினுற்சவ்வியசாசியையுயிர்கவர்வா
னாரணர்க்கிணையாகிவந்துதித்தவனாளும்
பூரணத்தனிஞானமார்புகழ்மழுவாளி
யாரணத்துடனளித்ததேசான்றிதற்கையா. (௬௭)
தாவுறும்புகழ்தருசமதக்கினிதந்த
கோவுறுந்தவமுயன்றநாட்கொடியிடைப்பாகன்:
பூவுறுஞ்சடைபொலிதரவிடைமிசைப்புகுந்து
மேவுறும்பரிசென்னெனவேதியன்புகன்றான். (௬௮)

வேறு.

மாகத்தேவருமிரவிமதியையாதிவந்தவழிமன்னரெந்தைவலியைச்சாய்த்தார், நாகத்தேடவிழ்மாலைமுடியோயிந்தநரபாலர்பலரையும்நான்வெல்லுமாறு, தாகத்தேனினதருளிற்கணையும்வில்லுந் தனிவலியுமருள்செயெனத்தாழ்ந்துபல்கா, லாகத்தேவடிதனதுமுடிமேற்சேர்த்தானந்திவண்ணன்றருதுமெனவகன்றுபோனான். (௬௯)

அன்புபெரிதுளம்போர்ப்பமீட்டுமந்தவருந்தகைநற்றவமாற்றிநிற்குங்காலத், தின்புறுபச்சைக்கொடியோடலைநாதனெய்தியிவன்றவம்வியந்துவியந்துமார்பிற், றுன்பமறவெடுத்தணைத்துத்தொழுதான்றன்னைத்தோகையுடன்மகிழ்ந்துருகித்துதித்தபின்னர், மன்படுமாறுளநினைந்துமழுவையீந்தான்மறையொடுவான்படைகளெலாமற்றுந்தந்தான. (௭௦)

பெற்றபெரும்பேறொருவர்பெற்றோரின்றுபெரிதுபெரிதெனவிமையோர் பேசநல்கிக், கற்றவன்போய்க்கயிலைமலையடைந்தானிப்பார்க்கருதுபரசுராமனெனக்கதிர்த்தோர்கூறப், பற்றலரைவென்றுபெயர்படைத்தகாளைபடைமாண்புவெறுத்தரியதவஞ்செய்நாளிற், கொற்றமிகுகன்னனிடையனைத்துமீந்தான்கொடுங்கதிர்தந்தவனாகக்குறித்துமன்னோ. (எக)

பற்பலவுந்தெரிந்தமுனியிராமனார்வோன்பயந்தவனேயெனிலருள்செய்தளிக்குமோதா, னற்பவமாருணர்ந்தவர்நீயிழிபாயுன்னேலுயர்ந்தகுலனாநம்பிலுன்னாலின்று, விற்பரிதிமகன்புகழுமெனதுவாழ்வுமேம்படவுமகபதிதன்றோன்றல்வீந்து, பொற்புவியாளச்செலவுமடுத்ததுன்பாற்புகன்றதொழிலெவர்க்கெளிதேபுகலக்கேண்மோ. (எஉ)

* செங்கோலமலரிலிருந்தனைத்துநல்குந்திசைமுகத்தோனறம்வளர்க்குஞ்செல்வப்பாவை, பங்கோனுக்காகமறைப்புரவிபூண்டபரித்தடந்தேர்கடவுதனிப்பாகனானான், பொங்கோதப்பாற்கடலோனிவனென்றியாரும்புகலுகின்றவசுதேவன்புதல்வன்வந்து, வெங்கோபவிசயனுக்குச்சூதனானான்விசயனுமன்றுத்தான்றேர்விரைவிலூர்ந்தான். (எங)

இகழ்விதுவென்றுளங்கொள்ளேலுயர்ந்தோர்செய்கையிதுவென்றேகருதிமற்றிரவிமைந்த, னகழ்கின்றவிசயனுயிர்கொண்டானென்னிலமரரெலாமரசரெலாநின்னாலென்பார், புகழ்நின்பாலன்றியெவர்க்குளதிவ்வாழ்வும்புவியுமெனதுயிருமுனதென்றுபோற்ற, மகிழ்தருசிந்தையனாகிமத்திரேசன்மணிமுடிப்பூணொருவிமதிவலவனானான். (எச)

* மகபதிதன்மகனுக்குவசுதேவன் றன்மகன்பாகனானதுபோல் வயங்குசோதிப், பகலவன்றன்மகனுக்குநிகரிலாண்மைப்பல்விதப்போர்ச்சல்லியன்றேர்ப்பாகனானான், புகலரியதும்பையுடன்வெற்றிவாகைபுனைந்திடுமிக்கணத்தில்வலம்புரித்தார்வேந்த, னகலுததியுடைபாடையவனிமுற்றுமவனதினியெனவார்த்ததரசன்சேனை. (எரு)

* பெற்றிழந்தகவசமுங்குண்டலமுமீளப்பெற்றனன்போலடலருக்கன்பெற்றபிள்ளை, மற்றையணிவிரன்முடக்கவிணையிலாதமத்திரபூபனைத்தழுவிமணித்தேரேற்றப், பற்றலர்நெஞ்சலம்வருமாறவனும்பாகன்படிவங்கொண்டமர்க்கமைந்தபரிகள்பூட்டி, யுற்றவடிக்கயிறுடனேயுளவுகோல்கொண்டூர்ந்தனனலருணனுக்கேயுவமைசால்வான். (எசு)

* பணிநிறுத்தியெழில்பெறும்பொற்பதாகையானைப்படாதொழிதம்பியரோடும்பார்க்கவன்போ, லணிநிறுத்திக்கிருபனையுமடுபோர்செய்யுமரசரையுமிருமருங்குமணிகளாக்கி, நுணிநிறுத்திச்சகுனிமுதலானோர்தம்மைநுவலருநாளுடுபதத்துநடுவண்வான, மணிநிறுத்திவைத்ததெனப்பவளமேருவரைநின்றதெனநின்றான்வண்மைவல்லான். (எஎ)

வேறு.

* அந்தணர்பரிசின்மாக்களவனிபர்முதலோர்யார்க்குஞ்
சிந்தைகள்களிக்கத்தானதியாகமுஞ்சிறப்புநல்கிக்
கந்தனேர்வதனமாகியவதரித்தன்னகன்னன்
சந்தணிகுவவுத்தோளான்சல்லியன்றனக்குச்சொல்வான். (எஅ)

* மேகவாகனன்பாற்பெற்றவெயிலவனியமத்தங்கி
யாகியமுனிவற்கீந்தவரும்பெருஞ்சாபம்பெற்றே
னுகவெம்பகழிபெற்றேனரனற்கொத்தவுன்னைப்
பாகனுமாகப்பெற்றேன்பாக்கியம்பலித்தவாறே. (எகூ)

* எனக்கெதிர்விசயனல்லதில்லையவ்விசயனென்பான்
றனக்கெதிரென்னையன்றித்தரணிபர்யாருமில்லை
மனக்குநேரானதோழன்மகிதலமுழுதுமாளக்
கனக்குரற்களிற்றேயின்றுகாண்டியென்னாண்மையென்றான். (அ0)

* என்றலுமத்திரேசனிளநகைசெய்துநீநின்
வென்றியும்வலியுங்கற்றவின்மையும்விளம்பவேண்டா
மொன்றொடொன்றிரண்டுதேருமுருளுடனுருள்கள்கோத்துச்
சென்றெதிர்மலைந்தபோதுன்சேவகந்தெரியுமென்றான். (அக)

* ஒருவரையொருவரொவ்வாவுரனுடைவீரர்நீங்க
ளிருவரும்பொரும்போர்தோறுமியாங்களும்பாங்காய்நின்றேம்
வெருவரன்மறந்துமில்லாவிசயனையொருபோதத்துந்
திருவரும்வண்மையோய்நீசெயித்திடக்கண்டிலேமால். (அஉ)

* வயிர்த்திருவோருஞ்சொன்னவஞ்சினமுடிக்குமாறுஞ்
செயிர்த்திடமிற்றைப்பூசறெறியுமோதெரிந்ததில்லை
யயிர்த்தனமென்றுதேரூரண்டகையுரைப்பநீண்ட
வுயிர்ப்பினனாகிமீண்டுமுத்தரமுரைக்கலுற்றான். (அங)

* இந்திரன்மகனுக்கென்னைபெதிரில்லையென்றுநின்ற
தந்திரபாலர்முன்னேசல்லியவிகழ்தல்வேண்டா
மந்திரவாசித்திண்டேர்வல்லையேலூர்வதன்றி
வெந்திறல்விளைக்கும்வெம்போர்வினைக்குநீயார்கொலென்றான். (அச)

வல்லியமனையான்சொற்றவாசகஞ்செவிசாராமுன்
சல்லியன்கொதித்துப்பொங்கித்தகுதியான்வலியுளோரைப்
புல்லியவல்லியோர்வென்றிபுனைவரோபுனைவனென்று
சொல்லியமொழியொப்பாமோவவனையார்துதிசெயாதார். (அரு)

காலகேயரைநிவாதகவசர்முக்கோடியோரை
நீலகேசரப்பொற்றோனீள்கணையொன்றால்வென்று
தாலகேதனனையாதியரசருஞ்சுரருந்தம்மில்
வாலகேசரியென்றேத்தவருஞ்செயலுணர்ந்திலாயோ. (அசு)

மாண்டவமுனிவரோடுவானவர்பலரும்வானி
னீண்டவம்முகில்களேழுந்தைமுனிந்துநொந்துப்
பாண்டவநடுவன்றன்னைவனைந்தநாட்படுத்துவென்று
காண்டவமதித்துமீண்டகாதைநின்செவிப்படாதோ. (அஎ)

அத்திரசாபம்வல்லோய்நீயருகிருப்பவாண்டுன்
மித்திரன்றன்னைப்பற்றிவிசித்தடற்சிறைசெய்தேகுஞ்
சித்திரத்தேரினானைத்தகைந்தொருதேரிற்சென்று
குத்திரநெடும்போர்வென்றுமீட்டமைகுறிக்கொளாயோ. (அஅ)

வருபெருந்தேருமாவுங்கரிகளுங்கடலைமானப்
பொருபெருந்திறலோரோம்பப்போய்நிரைகொண்டபோரிற்
றரும்பலமுடையகாளைசார்ந்தணிமச்சனாட்டி
னொருபெருங்களத்தில்வென்றான்மீட்டவாறுட்கொளாயோ. (அகூ)

பற்பலவரும்போர்தோறும்பண்ணவர்பெருமான்மைந்தன்
பொற்புறுபுகழுநின்பொற்புபவலியழிவுமன்றிச்
சொற்பிறிதிலையார்மாட்டுந்தோன்றநீயீண்டுமஃதே
வெற்பெனின்வயிரவாண்முனென்கொலோவிளைப்பதம்மா. (கூ0)

வேந்தர்தம்பெருமானெம்பால்மேவுநண்பதனானின்றேர்ப்
போந்தரும்புரவிதூண்டியுறுதிகள்புகலாநின்றேன்
பாய்ந்தெதிர்சென்றுயென்னிற்படுவதற்கையமின்று
லாய்ந்துனக்குடுத்தவாறேபுரிதியார்விதிபிழைத்தோர். (கூக)

என்றிவன்புகலக்கன்னனெரியெழவிழித்துநோக்கி
நன்றிதேபுகன்றவாய்மைநானவன்முன்னரெய்தி
வென்றிகொண்டெய்துமாற்றல்வியப்பன்றுவிரிநீர்வைப்பி
னன்றிமற்றுன்போல்வாருக்கடுப்பதென்றியாரேசொல்வார். (கூ௨)

சராசனவிசயனுவிகொளத்தழலுமிழும்வாட்க
ணராசனமறியவாய்த்தேன்யாதவனுப்தலுய்க்கிற்
கராசலம்புரந்தகாளைத்தனதுயிர்கழலாவண்ண
மிராசனந்தன்னேகாப்பதெண்ணமேபெரிதென்னெஞ்சம். (கூ௩)

உலகெலாமொருங்குகூடிவிசயனுக்குதவினாலு
மலகிலாவீசனேவந்தவன்றனித்தேரூர்ந்தாலும்
பலகலைவானோர்கற்றபரிசெலாந்தடுத்தேற்றாலுங்
குலகிரித்தேரோனாவிகொள்வதற்கையமின்றே. (கூச)

காலமுமிடனுநோக்குங்கருத்தினர்காயுந்தோறுஞ்
சீலமும்வலியுங்காட்டாராதலிற்றப்பிநின்றேன்
கோலமுங்குணமுநீயுட்கொண்டிலாய்கொடியைபோலு
ஞாலமும்விசும்புமுட்குமெனைநவைநவின்றதென்றான். (கூ௫)

ஆங்கவன்மொழிந்தமாற்றமுணர்ந்தறிவகன்றபாகன்
றீங்கறப்புகல்வானின்கைத்திறலெவரறிகிலாதார்
வீங்கலர்ப்புயத்தான்சிந்துவேந்தனைப்புரந்தனான்று
பூங்கதிருலகமூன்றும்புகழ்ந்ததுநினையேபோலும். (௯௬)

பெருமுனைச்சுவேதவாசிப்பெருங்கவித்துவசத்தேரோ
னுறுமுனைசென்றுபோர்செய்துற்றுளாய்வென்றியென்னிற்
குறுமுயற்கரியைவெல்லுங்கொடுங்கரியரிமாவெல்லுந்
தெறுமுழைபுலியைவெல்லுங்கலுழனைத்தியராவே. (௯௭)

வளத்தவாவலிகைக்கொண்மேராளத்தோடருபுன்காகம்
விளைத்தவாதியற்றிவிண்மீதுயர்ந்திடவேகமாய்ந்து
களைத்துடறவறிவீழ்ந்தகாதைபோலாயிற்றன்றோ
விளைத்திடாவலியுளான்மேனீயமர்க்கெய்தும்பெற்றி. (௯௮)

எனப்பலபுகலக்கன்னனியம்புவானிவன்றன்செய்கை
மனத்தினன்புடையான்போன்றுமாற்றலர்க்குறுதிசூழ்ந்தான்
புனற்கொடுநாடனென்பதுணர்ந்தனன்பொங்கிப்புன்சொ
வினிப்புகன்றனையேல்வாளாலெறிவன்றேர்விடுதியென்றான். (௯௯)

* வலியுடைத்தேரோன்சொன்னவாசகம்வலவன்கேட்டுக்
கலியுடைத்தடந்தேர்விட்டுக்காலினின்றுடைவாள்வீசி
யொலியுடைப்புரவித்திண்டேருனக்குநானூரும்வாறே
வெலியுடைப்பூசல்பூசைக்கெதிர்ப்படிலென்படாதோ. (௧௦௦)

* உருமுருவென்னச்சீறியுடன்றபின்புதையன்காதன்
மருவுறுமைந்தன்றானும்வாளொடுமெண்ணிற்றாவி
யிருவருமிரண்டுகாயமிகலுமுன்னுரககேது
வெருவுறுஞ்சிந்தையோடும்வெய்திற்போய்விலக்கினனே. (௧௦௧)

* மூளும்வெஞ்சினத்தைமாற்றிமுரணறவிவர்கடம்மை
மீளவுந்தேரிலேற்றிவெஞ்சமர்விளைமினென்றான்
மாளவும்பாண்டுமைந்தர்வையகமுழுதுந்தானே
யாளவுங்கருதியெல்லாவரசையுமழிக்குநீரான். (௧௦௨)

* வனைகழற்கிருதவன்மன்வரிசிலைக்கிருபன்றானே
தனைநிகர்சகுனித்தாமாச்சாலுவன்றிகத்தராச
னினையபொற்றடந்தேர்வேந்தர்யாவருமெண்ணில்சேனைக்
கனைகடலோடுஞ்சூழ்ந்துகன்னனைக்காத்துநின்றார். (௧௦௩)

* நின்றவக்கன்னன்றன்னைநெஞ்சுறமகிழ்ந்துநோக்கி
வென்றனம்பூசலின்றேவிசயனுந்தாதைதன்பாற்
சென்றிடுமென்றுதேறிச்செப்பினன்சிற்சின்மாற்ற
மன்றலஞ்சுரும்புமாறுவலம்புரிமாலையானே. (௧௦௪)

* சதமகன்மகன்றேர்ப்பாகன்றன்வயிற்கேண்மைவிஞ்சி
விதுரனுமமர்செயாமல்வெஞ்சிலையொடித்துப்பின்னும்
யதுகுலத்தலைவனனவிராமனுந்தானும்பாரி
னதிமுதற்றீர்த்தம்யாவுமாடுவானயந்துபோனன். (கoரு)

* கங்கைதன்வயிற்றிற்றேன்றித்தாதைதன்காதறீர்ப்பா
னெங்களுக்கரசும்வாழ்வுமிருநிலமுழுதுந்தந்து
வெங்களத்துதையன்போலவீடுமன்களத்தையெல்லாஞ்
செங்களப்படுத்திமீண்டுந்தேவரிலொருவனுனன். (கoசு)

* கரிமுகக்கடவுளன்னகடும்பரித்தாமாவென்னுங்
குரைகழற்றுணைத்தாட்சிங்கக்குருளையைப்பயந்ததாதை
யருமறைக்கயனையொப்பானடற்சிலைக்கரனையொப்பான்
றிருவருட்கரியையொப்பான்றிருத்தகுவீடுசேர்ந்தான். (கoஎ)

* சாயலாற்சிறந்ததோகைச்சாமளத்தடம்புள்ளூர்திச்
சேயலாற்றேவர்வாழ்வுதேவருக்கியாவரீந்தார்
நீயலாற்சமரிலென்னைநிலையிடற்குரியாருண்டோ
தோயலாற்பயந்தகாதற்சூரனையனையசூரா (கoஅ)

* மித்திரரென்றுநோக்காதென்னுடன்விளைந்தநண்பான்
மத்திரநிருபன்மைந்தன்வந்தெனக்குதவியானன்
குத்திரனல்லன்செம்மைக்கொள்கையன்மறையின்மிக்க
வத்திரசாலம்வல்லானவனெடாரமர்செய்கிற்பார். (கoகூ)

* என்மொழிமறுமவின்றுனிரதசாரதியுமானு
னன்மொழியன்றிவேறுநவைமொழிநவிறறேற்றுன்
றன்மொழியுறுதியாவுந்தருமெனக்கைக்கொளாமற்
புன்மொழியாடினும்மிற்புலப்பதுபுன்மையன்றே. (ககo)

* இதயமும்வலியுந்தேயத்தியற்கையும்வினையும்பற்பல்
கதிகளுமுணர்ந்துபூனுங்கற்கிகடெரிந்துபூட்டி.
வெதிரிதன்விசயங்கூறலிடிக்குநண்பாதல்வெம்போர்
முதிரிடங்காலமெண்ணல்சூதற்குமுறைமையன்றே. (ககக)

அடுத்தசொற்றவருன்னுமலிருவருமன்புபூண்டின்
றெடுத்தகாரியத்தைமுற்றியெனைநிலைநிறுத்துவீரேற்
றெடுத்தமேதினியும்பானுந்துணைவருமுமதுசெங்கை
வடுத்தவிர்கனியாமென்னமன்னவன்புகன்றுவிட்டான். (ககஉ)

வேறு.

அலங்கலுழலரிசேயருட்கனேக்கினல்
விலங்கலும்புயமுடைப்பாகின்மேவிய
நலங்கிளரொருவனைநோக்கிநன்மொழி
நிலம்பெறப்பலபுகன்றிவைநிகழ்த்தினன். (ககங)

தொல்லையான்மகேந்திரவிலங்கற்றுன்னிய
வெல்லைதீர்மழுப்படையிராமன்பாங்கர்போய்க்
குல்லைமாமுடியினுன்குரைகழற்பணிந்
தொல்லையாங்கவனருளுதவவைகுநாள் (ககச)

எக்குலமெனவவன்வினவவேழையான்
புக்குயர்மறைக்குலம்புகன்றுநிற்றலு
மிக்கவன்விருப்பமேதென்னவின்மையே
தக்கதென்றன்னவனெருள்செய்தன்மையான். (ககரு)

கற்றனன்சிலைமறைக்கணக்கில்வான்கணை
பெற்றனனளப்பிலமீண்டும்பேரரு
ளுற்றவனயன்கணையுதவிமாமறை
சொற்றனன்விண்ணுளோர்துயரமெய்தவே. (ககசு)

இந்திரனியற்கையானியற்றுகைதவ
மந்திரவுருவினுன்மடியுறங்குபோ
தந்தரமென்கவானகழ்ந்ததோரளி
சுந்தரநெடும்புவிகுருதிதோயவே. (ககஎ)

துளங்கிடினுண்டகையுறக்கஞ்சோருமென்
றுளங்கொடுபொறுத்தனுன்றெருவனுண்டுணர்ந்
திளங்கதிர்மேனியானென்னைநோக்கியவ்
வளம்படநிகழ்வெலாமுணர்ந்துமாண்பினுல். (ககஅ)

இத்தகைவேதியற்கிசைவதன்றுநீ
யெத்திறத்தவனெனவச்சமெய்தியான்
வித்தகனடிதொழுதுண்மைமேவர
வத்தகைக்குரைத்தனனவனுணர்ந்தபின். (ககக)

வேதியற்கல்லதுவிளம்பொணுவயன்
போதியற்கணைநினக்களித்தபுன்மையா
னேதலுற்றதுதனக்குனக்குமிக்கணை
பூதலத்தமர்த்தலைபொய்க்கவென்றனன். (கஉ௦)

கைதவம்புகன்றவக்காட்சியாலுனக்
கெய்துபோர்முனைதொறுமறவியெய்துமென்
றுய்தருநாவினுனுரைத்துவிட்டனன்
செய்தவத்தொருவனீசிந்தைகோடியால். (கஉக)

இன்னுமோர்சாபம்வந்தெய்திற்றுங்கது
பன்னுவன்மீண்டியான்பார்புரக்குநா
ளுன்னுமோர்தினத்தெழுமுவகைபொங்கிட
மின்னுநற்றேர்மிசைமறுகின்மேவலும். (கஉஉ)

மன்னர்கோன்கொடுமையோவையகம்புகழ்
துன்னலர்நன்மையோசொல்வதென்கொலோ
வன்னதேருருளகட்டனுகியான்றரு
சென்னிறக்கன்றுயிர்சிதைந்துவீழ்ந்ததே. (கஉ௩)

வேறு.

காலத்தேசினங்கதுவுகூற்றென
வாலத்தியெனவாரழற்கணன்
கோலத்தேசினங்கொட்புற்றுங்கொரு
ஞாலத்தைவடைந்தேயெதிர்நண்ணினன். (கஉ௪)

கருதுமான்குழக்கன்றைச்சிதைத்தனை
விருதுமேவலர்தின்னுடல்வெங்கணை
பொருதிவ்வண்ணஞ்சிதைக்கவப்போரிற்றே
ருருள்கண்மண்ணிற்புதையவென்றோதினன். (கஉ௫)

உரைத்தசாபமொழிசெவியூடுற
விரைத்தடங்கித்தொழுதருள்வேதியன்
கரைத்தமாற்றக்கனலையவிக்குமா
திரைத்தபன்முறைநன்சொலியம்பினேன். (கஉ௬)

ஆன்களாயிரமாயிரமாள்கொடேர்
மான்களாயிரமாயிரம்வண்கரி
மீன்களார்புனன்மேதினிமுற்றுமெங்
கோன்கணேதருவேன்குறைதீர்கெனு. (கஉ௭)

மற்றுநீதருவான்பொருளானுயி
ரற்றவான்குழக்கன்றுய்ந்தனுகுமோ
சொற்றவண்ணந்தவிராநின்சூழ்வினை
யிற்றிதொன்றுமென்றந்தணனேகினன். (கஉ௮)

ஆண்டுபெற்றவரும்பெருஞ்சாபமு
மீண்டுதேசிகனீந்தவிடர்ச்சொனு
மூண்டுதாமெனின்முற்றுவர்நற்றவப்
பாண்டுதந்தவரென்னுமோர்பற்றலர். (கஉ௯)

என்னைவெல்பவரில்லைவிண்ணோர்களின்
மன்னைவென்றவரின்மதுசூதனு
முன்னையிந்திரன்மைந்தனுமூண்டபோர்
பின்னைநோக்குதியென்றிதுபேசியே. (க௩0)

ஆய்ந்தமத்திரநாதனையாதரந்
தோய்ந்தசிந்தையனல்லுரைசொன்னபின்
காய்ந்தகட்பரிதூண்டினன்காவலர்
சாய்ந்திடாமனந்துண்ணெனச்சல்லியன். (க௩க)

செய்யவாள்விழியார்புடைசேர்தர
வையமீமிசைமாமுரசார்த்திட
மையிலாவெள்வளையொலிபொங்கிட
வெய்யவன்மகன்வில்லொடுந்தோன்றினன். (கரு௨)

வேறு.

* என்னமன்னர்மன்னவன்முகம்புகுந்திருவருக்குநல்லுரையெடுத்துரைத்
தந்நிலத்திலேநிற்கவல்விரைந்தறன்மகன்படைக்கதிபனென்றுமுன்
சொன்னதிண்டிறற்றுருபதேயனுஞ்சோமகேசராயுள்ளசூரருங்
கன்னனின்றவம்முனையினெஞ்சினுங்கடுகுதங்கடேர்கடவினர்களே. (கருரு)

* சென்றவீரருஞ்சிலைகள்கால்பொரத்திண்சிலீமுகஞ்சேரவேவினர்
நின்றவீரருந்தனுவளைத்துமேனெடியசாயகநிமிரவீசின
ரொன்றமாநிலம்பொன்றமீதெழுந்தோதமூர்வதொத்தம்பரஞ்சின
ரன்றையாகவந்தனினிகழ்ந்தபோராரையாரையென்றதிசயிப்பதே. (கருச)

* ஏறுதேரழிந்திவுளிமாவழிந்தேவுபாகழிந்தெண்ணிலெண்ணிலார்
நூறுநூறுகோனுழையமெய்யெலாநொந்துதுஞ்சினுர்முந்துபோர்செய்தார்
வேறுவேறுபல்கோடிவீரர்கண்மேருவொப்பதோர்வில்வளைத்திடச்
சூறைமாருதம்போல்விபாகரன்சுதனடாவுதேர்சூழவந்ததே. (கருரு)

* முட்டவந்துதம்பின்கொடாமன்மேன்முன்கொடுத்துமாமுனைகொள்வாளியிற்
பட்டொழிந்தவவ்விருவர்சேனையின்பதிகளுஞ்சயம்படவுடற்றினர்
விட்டபாணம்வந்திருவராகமும்வெளியடைக்கவேவில்வளைத்தபின்
றிட்டத்துய்மனுங்கன்னனுக்கழிந்தேறுதேருடன்றேறியோடினன். (கருசு)

* சோமகேசரிற்பட்டொழிந்தவெஞ்சூரர்தம்முடன்றுரோணசூதனன்
காமபாணமேயெனவிலக்கருங்கணைகண்மெய்யறக்கைகழன்றபின்
ஞமமார்முடித்தம்முனேவலிற்றன்னையொத்ததோள்வீரர்தம்மொடும்
வீமசேனன்மற்றவரைவென்றபோர்விசயசேனன்மேல்வெய்தினெய்தினன்.

* காவினல்வருங்காளைமைந்தனுங்கதிரினல்வருங்காளைமைந்தனு
மாவினல்வருங்களிறுவாசிமாமன்னுதேரெனும்வாகனத்தினர்
வேலினலெறிந்தமருடற்றியும்வெய்யவாளினல்வெட்டிமுட்டியுங்
கோவினலெறிந்துருவவெற்றிவிற்கோலியுங்களங்குறுகினர்களே. (கருஅ)

* மைந்தர்போர்விதங்கண்டுகெண்டுதார்மருவுமம்புயத்திருவருங்களித்
துந்துமாநெடுந்தேரிரண்டும்வந்துள்ளமானதேரொத்துலாவவே
யந்தரம்புந்தந்தும்பராரெலாமஞ்சியோடுமாறப்புமாரியுஞ்
சிந்தவெண்டிசாமுகமுமண்டமுஞ்செவிடுபட்டிடச்சிலைவணக்கினர். (கருகூ)

* செல்வணக்கிமேல்கீழெனும்பெருந்திசையிரண்டினுந்திகழும்விற்கள்போல்
வில்வணக்கியவ்விருவருப்பொரும்வெஞ்சமத்தில்வீமனையுரத்தினு
மல்வணக்குதோளினுமிலக்கிலாவாளியேவினனேளியாகவே
கல்வணக்கிமுப்புரமெரித்தமுக்கண்ணினன்வலக்கண்ணளித்துளான். (கச0)

* வலக்கணுனசெஞ்சுடரிடக்கணும்வாகுவுந்துடித்தாகுலத்துடன்
கலக்கணீர்பொழிந்திணையும்வேலையிற்கனற்படும்புணிற்றடிபடுங்கணைக்
கிலக்கணந்தவாவிமன்வாளியீரிரண்டுநாவிரண்டெண்ணிரண்டினு
லலக்கணெய்தவெய்தனனுதாரிதன்னணிகணீடுதோளாகமெங்குமே. (௧௪௧)

* வேதமாகிநின்றவனையெய்தபோர்வில்விமுன்னவன்சல்லியன்றனோ
டோதினனிவற்கெம்பிவெஞ்சினமொழியுமென்றுகொண்டுயிர்வழங்கினேன்
சூதனுகிநீவந்துதேர்விடுந்தொலைவிலாதபோர்வலியையன்றியே
யாதுகூறலாம்வன்மைவின்மைதான்யாதெனவிமைப்போதிலேகினான். (௧௪௨)

வேறு.

* அங்கர்குலநரபாலனும்வாழ்வுடையங்கர்களுமுனைசாய்தராவூழியின்
மங்குனிகர்பலகோல்விடுவீமனுமைந்தரனைவருமாறடுகாலையில்
வெங்கைவரிசிலைகால்பொரயாரினும்விஞ்சுதிறல்விடசேனனெனுவரு
செங்கணவன்வசுதேவன்முனுளருள்சிங்கவரசிளையானெடுசீறியே. (௧௪௩)

* குன்றிலருவிகள்போன்மததாரைகள்கொண்டகடதடவாரணமாமிசை
சென்றுசிலகணையேவினரோரிருசிந்துகிரணதிவாகரராமென
வின்றுவயலுழுவீர்புதுநீர்வருமென்றுவரிமணலேகுறிகூறிட
வன்றுவருகுடகாவிரிநாடனுமம்பொன்வரிகழன்மாகதர்கோவுமே. (௧௪௪)

* திண்சிலையினெடுநாணொலியோடணிசிஞ்சிதமுமெழமாவிளையோனிணை
வண்புயமும்வியன்மார்பமுமூடுறவன்புபெறுபலவாளிகளேவலு
நண்பொடவனிவனேறியதேர்கொடிநன்புரவிகுடைபாகிவைவீழ்தர
வொண்பிறையின்முகமானசிலீமுகமொன்பதுதைதயினன்வாகுவுமார்புமே. ()

* கங்கைநதியிடைவேயொடுபாகடர்கம்பநிகளமதாசலநீருண
வங்கமறிகடல்சூழெழுபார்வலம்வந்தமனுகுலசோழனைமாகத
னங்கையரிளமாமுலைதோய்புயமந்திவெயினிகர்சோரியின்மூழ்குற
வெங்கணழலுதிராவதிராவெதிர்மின்கொலெனவிணைவாளிகளேவவே. (௧௪௬)

* வஞ்சிமதுரைபுகாருடையான்வடமண்டலிகர்திறைவாரியநேரியன்
விஞ்சிமுனைதொறும்வாளசுரேசரைவென்றபொழுதடல்வானவர்கோனரு
ளஞ்சுபொழியெரிகாலொருகோல்கொடுநம்பர்சிலைமலைபோலவனேறிய
குஞ்சரமும்விழமாகதர்கோனுயிர்கொண்டுதிருகினன்வார்சிலைகோலியே. ()

* அண்டர்குலபதியாம்விடைவாகனனம்பொனடிமலர்நாறிடுசேகர
னெண்டிசையுமதுநீதிசெய்கோலினனெங்குமொருகுடையாலிடுநீழலன்
மண்டுகிரணசிகாமணிமோலியன்வண்டுமதுநுகர்தாதகிமாலையன்
மிண்டுமுதுபுலியேறுபதாகையன்வென்றிவளவனையார்நிகர்வீரரே. (௧௪௮)

வேறு.

யாதேவலென்றுபலமன்னருமீண்டவிப்பார்
மீதேவல்கொள்ளும்விறற்சென்னிகைவில்லின்வன்பான்
மோதேவுபட்டுமுகமாறிமகதர்கோமான்
சாதேவன்விழமுதுகிட்டதுதானைவெள்ளம். (௧௪௯)

* புறமிட்டதானைநிலைகண்டுபொருதுசோதி
நிறமிட்டவிற்கைத்துரோணன்மகனெஞ்சுகன்றி
மறமிட்டவாளிபலதூவிவருதனேக்கி
யறமிட்டசிந்தையரசன்றனநுசர்தம்மில். (௧௫௦)

* இன்றேமுடிப்பன்வினையென்றிரண்டிங்கிரநீலக்
குன்றேநிகர்ப்பத்திருமாலொடுங்கூடிநிற்பான்
சென்றேயதிரப்பரித்தாமனைச்செங்கையம்பால்
வென்றேயிமைப்பின்வெறுங்காலினின்மீளவிட்டான். (௧௫௧)

* துரியோதனன்றனிளையோரிற்சுதக்கணப்பேர்ப்
பெரியோன்முறிந்தபெருஞ்சேனையின்பின்புநின்றோன்
பரியோடுமான்றேர்ப்பரப்போடும்பதாதியோடுங்
கரியோடுமூழிக்கனலென்னக்கனன்றுவந்தான். (௧௫௨)

* முகிலின்சிலையிற்சிலைகோலிமுனைகொளம்பு
பெகுலந்தொடுத்துவருகாளையைப்பெட்பினேக்கி
நகுலன்சிறிதுநகைசெய்துநகைசெய்வாளி
யகிலந்தொடுத்தாங்கவன்றன்னையுமஞ்சுவித்தான். (௧௫௩)

* மட்டுப்படாமல்வருதெவ்வர்மலையினின்றே
தட்டுப்படாதின்றெமரானவர்தானையென்னுப்
பட்டுப்படாதவடிவேனரபாலர்சூழ
முட்டுப்படாதமுரட்கன்னன்முனைந்துசென்றான். (௧௫௪)

* பாஞ்சாலரிற்கேகயரிற்பலபாடைமாக்க
ளாஞ்சார்பினில்வந்தடைந்தோர்களிலன்றுபோரின்
மாஞ்சாரொழிந்தபலமன்னருஞ்ஞூழவண்டு
பூஞ்சாறருந்துநறுந்தார்கள்புனைந்ததோளான். (௧௫௫)

* மன்னன்றருமன்றிருமைந்தன்மலையவந்த
கன்னன்கருத்துங்கடுஞ்சேனையுங்கண்டுமேற்போய்ப்
பொன்னம்பொருப்போரிரண்டென்னவெம்பூசல்செய்தா
ரின்னந்தமக்குத்தமையன்றியெதிரிலாதார். (௧௫௬)

* உதையன்புதல்வன்பெருஞ்சேனையுதிட்டிரன்கைக்
குதையம்பில்வீழ்ந்தாரினையோரெனக்கூறதேற்று
ரிதையம்பழுதிலிவன்சேனையவன்கையம்பா
லுதையுண்டுவீழ்ந்தாருரைத்தாலுமுரைக்கலாற்று. (௧௫௭)

* பொற்பூசலென்னவிருசேனையும்போரின்மீண்டு
மற்பூசல்செய்யவொளிசெய்யுமம்மன்னர்தம்மின்
முற்பூசலம்பிற்பிளந்தண்டமுகடுவிள்ள
விற்பூசலெய்திப்புரிந்தார்விலின்வேதம்வல்லார். (௧௫௮)

* கொலையம்புமாளாமணியாவமுங்கொண்டசெங்கைச்
சிலையுங்கிரிகளிரண்டென்னத்திரண்டதோளு
நிலையுங்குறிப்புஞ்சிறுநாணொலிநின்றவாறு
மலையுந்திறலும்புகழ்ந்தண்டரும்வாழ்த்தினாரே. (௧௫௯)

* தாழுங்குறித்துக்கரைசெய்யுந்தரங்கவேலை
யாழும்புராசியெழுபார்தனியாளநிற்போன்
சூழும்பொன்மாலைத்துணைத்தோள்களினெட்டுமார்பி
னேழும்புமெய்தானிருள்காயுமிரவிமைந்தன். (௧௬௦)

* தன்றோளுமார்புஞ்சரமூழ்கவெஞ்சாபம்வாங்கி
நின்றோனைவாய்மைநிலைநின்றநிருபரேறு
வன்றோளுறநாண்வலித்தோரிருவாளியேவிச்
சென்றோரிமைப்பிற்புறங்கீறிச்சிலையும்வீழ்த்தான். (௧௬௧)

* வேறோர்வரிவில்வெயிலோன்மகன்வெய்தின்வாங்கி
நூறோடுநூறுதொடுத்தேவுநுதிகொளம்பாற்
கூறோரிரண்டுபடயாரையுங்கொன்றபோழ்தி
னூறோடிவிட்டதடையாருடலற்றசோரி. (௧௬௨)

* சாதேவன்றண்டதரன்றண்டகன்சித்திரதேவன்
றீதேதுமில்லாத்திறற்சாதேகிசித்திரகீர்த்தி
தாதேறுதார்த்தம்பியரோடிகற்றண்டநாதன்
மீதேறுதேருந்தகர்ந்தொண்சுடர்வில்லுமற்றார். (௧௬௩)

* முன்சேனையோடும்வலியுற்றுமுனைந்துகொற்ற
மன்சேனாநாதன்பொழிவாளிமழையின்மூழ்கித்
தன்சேனாநாதன்முதல்யாருந்தளர்தல்கண்டு
நன்சேனானுமுடன்சூழநடக்கலுற்றான். (௧௬௪)

பொருதோள்வலியோனெதிரூன்றிடப்பொங்கியங்கர்
பெருமானெதிர்மேவலுங்காவலன்பெட்பினேவக்
கிருபாசரியன்கிருதன்பலகேண்மைவேந்தர்
தருதார்ப்புரவித்தருதாமனுஞ்சார்ந்துமொய்த்தார். (௧௬௫)

பகனுக்கொருகூற்றெனத்தோன்றியபவனன்மைந்த
னகனுக்கரிதாஞ்சிலைக்கைநரனநுசர்நந்தன்
மகனுக்கிளையான்பலவேந்தரும்வந்துகஞ்ச
முகனுக்குறுதிபெறவேயமர்மூண்டுநின்றார். (௧௬௬)

பற்றார்பலரும்பலகோடிபகழியுய்ப்ப
விற்றார்விறலோர்துணிசெய்தவர்மீதினேவி
யுற்றார்புரமூன்றடுநாளெனவோசைபொங்கி
நற்றாரமரர்பெரிதுட்கினர்ஞாலமென்னே. (௧௬௭)

பரிபட்டனபட்டனயானைகள்பாரில்வைய
நெரிபட்டனபட்டனர்வீரர்கள்நீண்டமார்பிற்
சொரிபட்டனசெங்குருதித்திரடோய்ந்தகான
மெரிபட்டனவென்னவுகாந்தமிதென்னமன்னோ. (௧௬௮)

கரமெத்தனையெத்தனைகால்கள்கவித்தசெம்பொற்
சிரமெத்தனையெத்தனைதோள்கள்சிதைந்துவீழு
முரமெத்தனையெத்தனைமண்ணிடையுற்றதென்றுற்
சரமெத்தனையெத்தனையோரொருதனுவினம்மா. (௧௬௯)

இவ்வாறிருபாலுளசேனையுமிறைவர்யாரும்
வெவ்வாய்முனைசேர்கணையேவியும்வேறுவேறு
கைவ்வாய்ப்படையானெதிர்மோதியுங்காதுபோழ்திற்
செவ்வானகமாமெனஞாலஞ்சிவந்ததன்றே. (௧௭௦)

ஆடுங்கொடிமாமதவெங்கரிதேரயங்கள்
வீடும்வயவருடலீர்த்துமிகுந்தசோரி
நாடுங்கடந்துகடலூடுறுநதிகள்பாய
வோடுங்கலமும்புலால்நாறியதுததியெங்கும். (௧௭௧)

பொய்பட்டமன்னுமிளையோரொடுபோந்துவீமன்
மெய்பட்டுறுவப்பலகோடிவிசிகமுய்த்தான்
மைபட்டமேனிமுனைவீரனைவளைந்துசூழ்ந்து
கைபட்டசஞ்சத்தகர்கிட்டினர்கணைகளுய்த்தே. (௧௭௨)

ஏனோருமெய்துதிறலோரையெதிர்ந்துபோரிற்
றானோருமாறுபொரநால்வகைத்தானைசூழக்
கோனேர்வரிவிற்கொடுதோன்றினன்குறித்துநின்ற
வானோர்வெருவத்தடந்தேர்மிசைவாய்மைவல்லான். (௧௭௩)

வேறு.

* கிருபனென்றெண்டிசையும்வரிசிலைக்குரைசெய்முனிகிருதவன்மன்சிந்தைவிரகுடைச்சகுனியெனு, நிருபரங்கங்கடொறுநிரையினிற்றளையுருவநெடியவம்பைம்பதறுபதுபடப்படமுடுகி, முரண்மிகுந்திண்கடவுண்முரசுடைக்கொடிகொளணிமுகிலின்வந்தண்டர்குலமுதல்வனத்தனுவினோடு, தரணியின்கண்சமரமலைவதொத்திரதமிசைதருமன்மைந்தன்பரிதிபுதல்வனைக்குறுகினனே. ()

* தருமன்மைந்தன்பரிதிபுதல்வனைக்குறுகியிருசரமவன்செங்கைவரிசிலைதுணித்திடவுமெதி, ரிருசரந்துன்றியுயர்கொடியறுத்திடவுமுடனிருசரஞ்சென்றுதனியிரதமொட்டிடறிடவு, மொருசரம்பொங்குதிறல்வலவன்மெய்ப்புதைதரவுமொருசரந்திண்கவனதுரகதத்தரனுறவும், வரமிகுந்துங்கதனுவினைவனைத்தெரிகொள்சிலவடிசரங்கொண்டவனதிருபுயத்தெழுதினனே. (௧௭௫)

* வடிசரங்கொண்டவன திருபுயத்தெழுதியபின் வடகலிங்கங்குருமகத மொட்டியமுதல, படிதொறுந்தங்கள்குடைநிழல்பரப்பியவரசர்பலருடன்பைம் பொன்முடிமகுடவர்த்தனர்பலரு, மிடிமுழங்குங்குரலினதிபயத்தொடுபிலனி லிழிபுயங்கங்களெனவொருவருக்கொருவர்நடை, யடிதளர்ந்தஞ்சலியுமுதுகுமி ட்டவரொழியவடையவன்றும்பர்பதிகுடிபுகப்பொருதனனே. (கஎசு)

* அடையவன்றும்பர்பதி குடிபுகப்பொருதுதன தணிகொள்சங்கம்பவள விதழின்வைத்தருளுதலு, முடையுமண்டந்திசைகள்செவிடுபட்டிடுமமரருலகு பொன்றும்பணிகள்பிலமுமுற்றுறவிடியு, மிடைவழங்குந்தரணிவளர்சனத்தொ டுமடியுமெனமுழங்கும்பெரியவரவமெக்கடலுமெழு, கடையுகங்கண்டவடவை யின்முகத்தெரிகனலிகதுவிமண்டும்பவனனெலியினிற்கடுகியதே.! (கஎஎ)

* கதுவிமண்டும்பவனனெலியினிற்கடுகியணிகவசமுங்குண்டலமுமகபதி க்கருள்குரிசில், சதுர்முகங்கொண்டதொருகனகமொட்டிரதமொடுசதுர்விதந் தங்குகதியிவுளியொப்பறவடசி, மதுபமொன்றும்புதியதெரியன்மத்திரநிருபவ லவனுந்தும்பொழுதிலதனின்மிக்கெழுமடியு, மதிரவெங்குந்தனதுவளைமுழக்கி னினயரவறனின்மைந்தன்சமரமுனைமுகத்தணுகினனே. (கஎஅ)

* அறனின்மைந்தன்சமரமுனைமுகத்தணுகியவனகலமுந்திண்புயமும்வ் டிசுடர்ப்பகழிபல, வுறவுமஞ்சங்கண்முடியுருளையற்றிரதநடுவுடையவுந்துங்கவரி சிலைகுணத்துடனறவு, மறம்விளங்கும்பரிகடுணிகள்பட்டிடவும்விறல்வலவனங் கஞ்சிதறியுரனிலுற்றனமுதுகு, பறியவுந்தண்டுமுரசெழுதுபொற்றுகிலினெடு பரியவுஞ்சண்டதனுவுறவளைத்தனனிவனே. (கஎகூ)

வேறு.

* இவனுமவனைப்புயமுமுரமுமுழுகத்துவசமிடியமணிமொட்டிரதமொடி யவரிவிற்றுணிய, நவநடைவயப்புரவிவிறல்வலவன்மெய்ப்புதையநகுசரநிரைத் தொருவினடுவுறவணக்கினபி, னவனுமிவனைப்பிறகுபொருதுமுன்மலைத்தபடிய டையவுமழித்தனனிவ்வடன்மிகுகளத்திலென, வுபநிடதவித்துமுதல்வனிபரெ னைப்பலருமுரமுமவர்கற்றகலையுறுதியுமுரைத்தனரே. (கஅ௦)

* உறுதியுடன்மற்றொரதமிசைகொளுமுதிட்டிரனுமொருகையில்வயச்சி லையுமொருகையில்வடிக்கணையும், விறலினெடெடுத்தெதிர்செல்பொழுதருண் மிகுத்தமொழிவெயிலவனளித்தருளும்விதரணகுணக்குரிசின், மறமுறவிடுத்த கணைபொடியுறவியற்றியவன்மதுமலருரத்தைவழிவழிதுளைபடுத்துதலி, னெறி படைவிடுத்திரதமிசையுறவிளைத்துமுதுகிடவறன்மகற்கிரவிமகனிவையுரைத்த னனே. (கஅக)

* உரையுடையைகற்றகலையுணர்வுடையைதக்கமதியுளமுடையைமிக்கதி ளையுறவுடையைசத்தியகுண, வரையுடையையெத்திசையும்வழுவறவளர்த்தபு கழ்வரிசைகொளறத்தினைஞர்வழிபடுமதிப்புடைய்ய, தரைமுழுதுமுத்தநிலவு மிழ்குடைநிழற்றவொருதனிநனிபுரக்குமுயர்தலைமைபெறுகிற்றிபகை, கரை யழியவுற்றபொழுதுயிர்கொடுபுறக்கிடுதல்கடனலவுனக்குநிலைகருதியணிநிற்றி யெனவே. (கஅஉ)

* கருதியணிநிற்றியெனவுறுதிசமரத்துரைசெய்கருணனைமதித்துமிகுகரு ணையவனிற்பவளவில், விருதர்தலையற்றுருளவிருதர்மதவத்திகளின்விரிதலைக ளற்றுருளவிறலிவுளிமெய்த்துணிய, விரதம்வயிரச்சுருளைமுடிகொடலையற்றுரு ளவிருபுறமுமுட்டிவிறலொருகதைகொடெற்றியெதிர், பொருசமர்முருக்கிவ ருபுரையில்பவனக்கடவுள் புதல்வனெனிமைப்பொழுதின் முதல்வனையடுத்தன னே. (க௯௩)

வேறு

* முதல்வன்வெந்நிடுதல்கண்டுமுடியுடைவேந்தரோடும்
விதலையில்வயிரநெஞ்சின்வீமன்வந்துறலுங்காலின்
புதல்வனைப்பொருதுவேறலரிதெனப்பொலம்பொற்றேரோன்
மதலையைநோக்கிப்பாகன்வன்பகைதோற்றச்சொன்னான். (க௯௪)

* காமனேயென்னநின்றகன்னன்விற்கையில்வாங்கி
வீமனேயாகவென்றிவிசயனேயாகவெற்றித்
தாமனேகாண்டியிற்றைச்சமரிலென்றழல்வாயொற்றைத்
தூமநேர்பகழிக்காற்றூர் தூண்டுதியிரதமென்றான். (க௯௫)

* என்னுமுன்மருத்தின்மைந்தனிரதமேல்வரிவில்வாங்கிக்
கன்னனதுரையும்வில்லுங்கணத்திடைச்சிதைந்துவீழ
முன்னொருவாளிதொட்டானெதிரியுமுரண்விலொன்றாற்
பன்னிருவாளிமீளிமார்பிடைப்பரப்பினானே. (க௯௬)

* பாய்ந்தவப்பாணந்தன்னைப்பாணியாற்றிமிர்ந்துவீமன்
காய்ந்தவாளனையதாரைக்கடுங்கொடும்பகழியொன்றா
லேய்ந்ததேருக்கன்மைந்தனிதயத்துமூழ்குவித்தான்
வேய்ந்ததாரவனுந்தேரின்மிசையயர்வுற்றுவீழ்ந்தான். (க௯௭)

* வீழ்தலுமன்னர்மன்னன்வெம்படைவெந்நிட்டோட
வாழ்வறவீழ்ந்தோன்றன்னைமத்திரத்தலைவன்றேற்ற
வேழ்பரித்தேரோன்மைந்தனெழுந்துபின்சாபம்வாங்கிச்
சூழ்படைவீரர்யாருந்துஞ்சிடத்துணித்திட்டானே. (க௯௮)

* கைத்தலவண்மைவேந்தன்கார்முகம்பொழிந்தவம்பா
லெத்தனைநிருபர்மாய்ந்தாரெண்ணுதற்கியாவர்வல்லார்
பத்திகொள்சாதுரங்கப்படைஞர்பாஞ்சாலர்தம்மிற்
செத்தனரெழுவர்சிங்கசேனனையுள்ளிட்டாரே. (க௯௯)

* சேனையுமுறிந்துவீமசேனனுமுதுகிட்டோடக்
கானமர்துளவோன்கண்டுகடும்பரிநெடுந்தேர் தூண்ட
யானைமேற்சிங்கஞ்செல்வதென்னவந்தெய்தியிட்டான்
வானவர்க்கரசன்மைந்தன்மைந்துடைவரிவில்லோனே. (க௱௦)

* சென்றவன்சேனைதன்னினிருபருஞ்செருச்செய்கிற்பா
னின்றவன்சேனைதன்னினிருபருநேர்ந்தகாலை
யென்றவன்மதலையேவுமிமையவர்தெவ்வையோட
வென்றவனேவுந்தம்மில்விசும்பினைவேய்ந்தவாலோ. (க௱க)

* இரவிதன்மதலைக்காகவிமைத்தகண்விழிக்குமுன்னர்ப்
புரவியந்தாமாவென்னும்பூசுரன்றேரிற்றோன்றி
யரவணிச்செல்வன்மெய்யுமருச்சுனன்மெய்யுஞ்செக்கர்
விரவியவானமென்னவெஞ்சரம்புதைவித்தானே. (௧௯௨)

* விசயனும்வெகுளூற்றந்தவேதியன்வில்லுந்தேரு
மசைவுறமுடுகியெய்தானவனுமற்றிவனைவேறோர்
குசையுடைப்புரவித்தேருங்குனிவருஞ்சிலையுங்கொண்டு
நிசியினையருக்கன்போலநிலைதளர்ந்திடுவித்தானே. (௧௯௩)

* தளர்ந்தவத்தளர்ச்சிகண்டுதனஞ்சயன்றன்னைத்தேற்றிக்
கிளர்ந்தடர்புரவித்தாமாக்கேவலமல்லனையா
பிளந்திடிங்கிவனையென்னப்பிறைமுகப்பகழியொன்று
ளம்புகத்தொடுத்தான்பாகனுரைமுடிவதன்முனம்மா. (௧௯௪)

* எய்தவப்பகழியொன்றுலீசன்மாமதலைமாழ்கி
வெய்துயிர்த்திரதமீதுவீழ்ந்தனன்வீழ்ந்தோன்றன்னைக்
கைதவச்செயலினுன்றுச்சாதனன்கண்டுமுன்னைச்
செய்தவப்பயன்போல்வந்துதேரொடுங்கொண்டுபோனான். (௧௯௫)

* போனவப்புரவித்தாமாப்புரிந்துபோர்தொடங்குமெல்லைச்
சேனைகனன்கினேடுஞ்சித்திரவாகனனென்னு
மீனவன்வழுதிமாறன்வெண்மதிமரபில்வந்தோன்
வானவர்முதல்வன்சென்னிவரிவளையுடைத்துமீண்டோன். (௧௯௬)

* சென்றெதிருன்றிவெவ்வேற்சேயனன்றேரின்மேலும்
வன்றிறல்வலவன்மேலும்வாம்பரிமாவின்மேலுந்
துன்றியகணைகளேவித்தொடுசிலைதுணித்துவீழ்த்தா
னன்றவன்செய்தவீரமரசரிலார்செய்தாரே. (௧௯௭)

* வேறொருதேர்மேற்கொண்டுவிதிதருமரபினேனுஞ்
சீறிவெங்கணைகளூறுதெரிந்தொருசிலையும்வாங்கிக்
கூறியசெஞ்சொலோடுகுறித்தெதிர்கொண்டவைகை
யாறுடையவனையஞ்சவருஞ்சமருடற்றினனே. (௧௯௮)

* அந்தணனேவையெல்லாமவனிபனவ்வவ்வம்பான்
முந்துறவிலக்கித்தங்கண்மூவகைத்தமிழும்போலச்
சிந்தையிற்குளிக்குமாறுசிலீமுகமூன்றுவிட்டான்
றந்தையைமுதுகுகண்டோன்றனயனுக்கிளைக்குமோதான். (௧௯௯)

காலினூற்றுகைத்துவேலைக்கனைகடலேழுமுன்னாள்
வேலினூற்சுவற்றுங்கொற்றவெங்கயல்விலோதவீரன்
மாலினூற்பொருகைவேழம்வாசிதேர்பதாதிமாயக்
கோலினூற்சுவற்றினனக்குறுகலார்சேனைவெள்ளம். (௨௦௦)

* சங்கரனருளால்வந்தசதுர்மறைக்குமரன்மீளப்
பொங்கழற்கடவுளென்னப்பொருசிலைவெய்தின்வாங்கி
மங்குல்போற்பொழியும்வாளிமழையினலழிந்ததந்தோ
செங்கயனெடும்பதாகைத்தென்னவன்செம்பொற்றேரே. (உ0க)

* சிங்கவேறனையானந்தத்தேரினின்றிழிந்துமுன்னர்
தங்கண்மால்வரையில்வைகுந்தமிழ்முனிதன்னைப்போலப்
பொங்குவெண்டரங்கமுந்நீர்ப்புணரிகளேழுஞ்சேர
வெங்கையால்வாருங்கொற்றவேழமாமேற்கொண்டானே. (உ0உ)

* மலையினிற்பிறந்தவாரமணங்கமழ்வடிவிற்றங்க
ளலையினிற்பிறந்தவாரமழகுறவணிந்தகோமான்
கொலையினிற்சிறந்தகோட்டுக்குஞ்சரங்கொண்டுமீண்டுஞ்
சிலையினிற்குருவின்மைந்தன்றேரொடுஞ்செருச்செய்தானே. (உ0௩)

* மோதிமத்தாரைமாருக்கைம்முகமுகுத்தசெக்கர்ச்
சோதிமத்தகவெங்குன்றின்றழைசெவித்துளங்குகாற்றாற்
சாதிமைத்துரோணன்மைந்தன்றனித்தடந்தேரிற்கொற்ற
வோதிமப்பதாகையாடையப்புறத்தொடுங்கிற்றம்மா. (உ0ச)

* கூற்றெனக்கொண்டலென்னக்குரைகடலென்னச்சூறைக்
காற்றெனக்கொடியகோபக்கடும்பெருங்கரடமாவி
னூற்றெழுமதங்களேழுமொழுகிமண்ணுடைந்துதாழுஞ்
சேற்றிடைப்புதைந்ததந்தச்சேயனுன்றேரின்காலே. (உ0ரு)

* மறையவன்செம்பொற்றேரைவளைந்துமண்டலங்களோட்டிப்
பிறைமுகக்கணையாலந்தண்பிறைக்குலவழுதியெய்ய
நிறைவயப்புரவித்தாமானேருறவிலக்கித்தன்கை
யறைசிறைப்பகழியொன்றாலானையைவீழ்வித்தானே. (உ0சு)

* பாண்டியன்கைவில்லோடும்பதாதியாய்ப்பகழிசிந்தி
யீண்டியவிவுளித்தாமனிருதடந்தோளுமார்பும்
வேண்டியவாறுசோரிவீழ்தரப்பொருதபின்னர்த்
தூண்டியதுரோணன்மைந்தன்றேருடையொன்றாற்றானும்வீழ்ந்தான். ()

* பட்டனன்முனிவன்கையிற்பஞ்சவனென்றுவேந்தர்
கெட்டனர்முரசந்தீட்டுங்கேதனன்சேனையுள்ளார்
தொட்டனர்வரிவில்வாளிதொடுத்தனரடுத்துமேன்மேல்
விட்டனர்வேந்தர்வேந்தன்சேனையில்வேந்தருள்ளார். (உ0அ)

வேறு.

* விற்கையாரியன்மகன்விசும்பின்வீழ்தரு
முற்கையாமெனவிடுமொளிகொள்வாளியாற்
கொற்கையானிறந்தபின்கோழியானெனுஞ்
சொற்கையாமனுகுலத்தோன்றறோன்றினன். (உ0சூ)

* தேரின்மேனின்றுநீசிறுகட்செம்புகர்க்
காரின்மேல்வீரனைக்கணையிற்காய்வதே
பாரின்மேலார்கொலிப்பாதகஞ்செய்தார்
நீரின்மேலெழுத்தெனநிலையிலாண்மையாய். (உக0)

* ஆர்ப்பனமறைமொழிந்தனைவர்பாவமுந்
தீர்ப்பனவேள்விகள்செய்வதன்றியே
கூர்ப்பனபலபடைகொண்டுபோர்செயப்
பார்ப்பனமாக்களும்பாரில்வல்லரோ. (உகக)

* தாதையைக்கொன்றவெஞ்சாபவீரனைக்
கோதைவிற்கணைகளாற்கொன்றிலாதநீ
யூதையிற்சருகுபோலோடலல்லதை
மோதயிற்படைகொடுமுனையவல்லையோ. (உகஉ)

* என்றுசின்மொழிமொழிந்திவுளித்தாமன்மேற்
றுன்றுவில்வளைத்தனன்சோழபூபதி
குன்றுடன்குன்றபர்குறிக்குமாறுபோற்
சென்றுசென்றடுத்தனதேருந்தேருமே. (உக௩)

* இருவர்செங்கரங்களுமிரண்டுகால்களு
முரனுறப்பிணித்தநாணோசைவீசவு
மருவுபொற்றோளுறவலியின்வாங்கவும்
விரைவுடன்வளைந்தனவில்லும்வில்லுமே. (உக௪)

* புகலருமறையவன்புராரியாதியாந்
திகழொளியிமையவர்சிறப்பினீந்தன
விகன்முனைமுனையுறவெதிர்ந்துதள்ளவே
யகல்வெளிபுதைத்தனவம்புமம்புமே. (உக௫)

* சுரருலகெய்தியதுரோணன்மைந்தனை
யிருகணைபுயத்தினுமிரண்டுமார்பினு
மொருகணைநுதலினுமுருவவேவினான்
மருவிரிதாதகிவாசமாலையான். (உக௬)

* பிறைமுடிச்சடையவன்பிள்ளைவள்ளுகிர்
விறலுடைப்புலிக்கொடிவீரன்மெய்யெலாம்
புறவினுக்கீர்ந்தநாட்போலமேல்விடுந்
திறலுடைவாளியாற்சிவப்பித்தானரோ. (உக௭)

* துளவணிமுடியவன்றுள்ளுகன்றினால்
விளவினையெறிந்தெனவீரவேலினால்
வளவனும்வெகுண்டுபின்மயூரவாகன
னிளவலையெறிந்தனனெவருமஞ்சவே. (உக௮)

* உருத்திரன்றூதுவினுற்பவித்தவக்
கருத்துடைமுனிவன்மெய்கலங்கிவீழ்தலுந்
திருத்தகுசகுனியுஞ்சிற்சில்வேர்தரும்
வருத்தமோடெடுத்தவன்வருத்தமாற்றினர். (உ௧௯)

* அவனொடுமீளவந்தபயன்றன்னொடு
கவனமான்றேருடைக்காவன்மன்னவர்
சிவனொடுமமர்பொருந்தெவ்வரென்னவே
துவனிசெய்முரசெழத்துன்றுபோர்செய்தார். (உஉ௦)

* துன்மருடணன்மகன்சுவாகுதுன்முகன்
வின்மகன்சுவாதுவாள்வெயில்விபாகரன்
றன்மகன்றிருமகன்சங்கனென்பவர்
மன்மகார்பலரொடுமடிந்துவீழவே. (உஉ௧)

* பண்ணகவிசையளிபாடுதண்டலைக்
கண்ணகன்காவிரிநாடன்கைக்கணை
மண்ணகநெருக்குறமலைந்தமன்னரை
விண்ணகமிடனறவிரைவினேற்றவே. (உஉஉ)

* முன்னியசிலைமறைமுனிவன்மைந்தனுந்
தன்னிகரிலாவிறற்சகுனியாதியாத்
துன்னியநிருபருந்தொல்லமர்க்குநீ
சென்னியென்றவன்புகழ்செப்பிமீளவே. (உஉ௩)

மற்றொருசார்முனைமடங்கிச்சூழ்தரு
செற்றலர்பலபெருந்தேரினுற்றலர்
கொற்றவில்விசயனைச்சூழ்ந்துகூன்சிலை
பற்றுசஞ்சத்தகர்கணைபரப்பினர் (உஉ௪)

கொடுங்கணைபற்பலகோடியேவலு
மடுங்களிற்றெதிரரியேறுபோல்பவன்
விடுங்கணைப்பலகொடுவிலக்கிமாய்த்தனன்
றொடுங்கழல்வார்சிரந்தோளுந்தாளுமே. (உஉ௫)

வேறு.

காலற்றனர்கரமற்றனர்முடியற்றனர்கவினர்
வேலற்றனர்வில்லற்றனர்விறலற்றனர்புரிமுந்
நூலற்றனர்நொடியற்றனர்தேரற்றனர்நுதிவெங்
கோலற்றனர்பாகற்றனர்கொடியற்றனருரவோர். (உஉ௬)

கரமற்றனமதயானைகள்பணையற்றனகதிமான்
குரமற்றனவுரமற்றனகுதிகொண்டெழுவயவர்
சிரமற்றனபுயமற்றனதிறலோடணிவானோர்
புரமற்றனவிடமற்றனபுகவேயிகன்முனையே. (உஉ௭)

வஞ்சத்திறலுடையோர்பலபதினுயிரவயவர்
சஞ்சத்தகரணிதேரொடுதரைவிழவடர்த்தான்
மஞ்சொத்தநிறத்தான்விடுமொருதேர்மிசைவருமோ
னெஞ்சிக்களமுனைநின்றிலரிரிகுற்றனரன்றே. (உஉஅ)

சஞ்சத்தகரகலத்தனுசனாவாட்டியசிலையான்
கஞ்சக்கதிர்மகன்மீதழல்கதுவுங்கணைபலகொண்
டஞ்சத்திசைசெவிடெய்தவடுங்கார்முகவொலியோ
டெஞ்சிப்படைகெடவந்தனனிகல்வெல்லநினைந்தே. (உஉகூ)

ஒல்லாதவர்முனைசென்றிவனெய்தாமுனமோடி
வெல்லாதினிமீளோமெனவிறன்மத்திரைபுதல்வர்
நில்லாதுபுகுந்தார்கணைநெடுந்தார்முனைபோழ்ந்தார்
வல்லான்கதிர்மகனோடுறுவயவாகினிமடிய. (உஙo)

பரிவீழ்த்தனர்கரிவீழ்த்தனர்படகங்கள்தடந்தேர்
நெரிபொற்கொடிகுடைசாய்த்தனர்நேரார்திரள்விண்ணோர்
புரியெற்றியிரண்டேறரிபோன்றெய்துதல்கண்டே
கரியேற்றதெனச்சாய்ந்தனர்கன்னன்புடைவந்தோர். (உஙக)

கண்டானிகலடலாயிரகிரணக்கதிர்தந்தோன்
கொண்டான்சினமிருகண்கனல்குடிகொள்ளமுனைந்தே
வண்டார்தொடைமலர்மார்பினரணிசேனைகண்மாய்த்துப்
புண்டாரைகளுதிரஞ்சொரிதரவேகணைபோக்கி. (உஙஉ)

தோளுந்தனிமார்புந்துளைதுன்னிச்சிலைதுணிய
நீளுங்கொடியொடுதேரறநிமிராவரிவிற்கொண்
டாளுங்கடையெனுநால்வகையனிகத்தொடழித்தான்
மீளுந்திறனன்றால்விறல்வேறில்லெனமீண்டார். (உஙங)

இருமைந்தருமிகன்மாறியிரிந்தோடியகாலை
யொருமைந்தருநிகராவலியுடையானிகலுன்னிப்
பொருமைந்துகொடுங்கோலொடுபுக்கானைவிலக்கிப்
பெருமைந்துடைவலவன்கதிர்மகனோடிவைபேசும். (உஙச)

முன்னந்தருமனைவீமனைமுதபோரினில்வென்று
பின்னுஞ்சிறுவரைவென்றனையெனினும்புகழிலையாற்
றுன்னுஞ்சுடர்முடியானொடுபொருபோர்வலிசொல்வார்
மன்னுந்திறலினராகையின்மடங்கென்றுதடுத்தான். (உஙரு)

குந்திக்குதவியவாய்மையுமிருசாரதிகுறியுஞ்
சிந்தித்தவர்தமைவிட்டெழுபுரவித்தடந்தேரோ
னந்திக்குமுன்னுறுகாலமடைந்தானெனவார்த்து
முந்திப்பலமுடிமன்னர்முகஞ்சாயமுனைந்தான். (உஙசு)

திசைமுற்றுமளந்தோடவெறிவானளவிடுவ
நசைவுற்றரவுலகேகுவனிமண்டுருவுவனேர்த்
தசைதொக்குடலுறுமேவுவகழல்காலுவகிரிசாய்
வசையற்றுலவைவீர்கதிர்மகனல்குறுகணைகள். (உ௩எ)

இடிபட்டனபலகுன்றுகளெரிபட்டனகான
மிடிபட்டனகடனீர்முகில்வெடிபட்டனவகிலம்
பொடிபட்டனவின்னுடெழுபுகைபட்டனவென்று
றடிபட்டனரிவரென்றுரைதருவாரெவர்புவிமேல். (உ௩அ)

மெய்விட்டவர்பலர்மாமழைநிகர்வில்லொடுபதறி
யெய்விட்டவர்பலர்தத்தமதிசையோடுயர்மானங்
கைவிட்டவர்பலரற்புதமிதுவென்றுகழிந்தார்
பொய்விட்டறநிலையிட்டவன்விடுநற்புரவலரே. (உ௩௯)

இவ்வாறிவனமர்மோதலுமெதிருன்றவநிலராய்
மைவ்வாள்வரைபோல்வானுமைழவந்தேவிழநகையாப்
பைவ்வாளரவனையான்கனல்படுகண்ணுடுபரிமான்
செவ்வான்மணிமகவுக்கெதிர்செல்லும்படியுய்த்தான். (உ௪0)

கனல்கான்றிடுகட்காளைகடுஞ்சாயகமெங்கும்
புனல்வீழ்மழையுறையென்பதுபோலச்செறிதரலு
முனலொன்றிலராயங்கவனுடன்மேவியவுரவோ
ரனல்கான்றிடுமொருகாண்டவவனமாயினரம்மா. (உ௪க)

அக்காலையினிரவிக்குரியானேடருச்சுனனும்
புக்கானெதிர்பொருதாரிருசிலைவண்மைகள்புகழ
வக்காழ்கணைபலவங்கவனடன்மெய்யுறவிட்டான்
மிக்கானிவனையுமவ்வணம்விசிகம்புதைவித்தான். (உ௪உ)

வயவீரர்கள்பொருசெங்கணைமழையாலுலகலறப்
புயவீரர்கள்பலவாயிரபுத்தேளுலகேற
மயவீரையுமெழுநாகமுவானுஞ்சலிப்பெய்த
வயமாகரிதேர்சிந்திடமலைநேர்சிலைகுனிய. (உ௪௩)

ஓராயிரமடல்வாளிகளொருவன்மிசையொருவன்
பாராதொருகணமெய்துமுன்விடுமாறுகள்பாரா
தாராயிரபுயமுள்ளவனொடுபோர்புரிதக்கோ
னேராமெனமுடிமன்னர்கள்இவர்நீள்வலிபுகழ்வார். (உ௪௪)

வேறு.

* மாயாசரகூடமறைத்திடலால்வலையுட்படுவீரமடங்கலெனச்
சாயாபதிமைந்தனுநின்றனன்மெய்தளர்வுற்றனனின்றதனஞ்சயனு
மேயாவிதுவென்கொன்முனைந்துபொராதெழுதோவியமாயினையென்றுவிறற்
காயாமலர்வண்ணன்விளம்புதலுங்கவிவெங்கொடியோனிருகைகுவியா. ()

* வன்போர்புரிவெங்கணையங்கர்பிரான்மறனாலுயர்பேரறனார்குமரன்
றன்போலவிளங்கினனாதலினென்றனுவுங்குனியாதுசரங்கள்செலா
வன்போடியதுள்ளமெனக்கினிமேலவனோடமர்செய்தலுமிங்கரிதால்
வென்போகுவனென்றலுமேயிறைவன்விசையோடிரதத்தினைமீளவிடா. ()

* முகில்வண்ணனும்வாசவன்மாமகனுமுரசக்கொடிமன்னவன்முன்புசெலப்
பகலின்பதிமைந்தனையின்னமுமிப்பகல்சாய்வதன்முன்புபடுத்திலையா
லிகலெங்ஙன்முடித்திடுநின்கையில்வில்லிதுவென்னவிலென்றுதிருத்தமையன்
புகலுஞ்சொலவன்செவியிற்புகவேபுண்மேலயிலுற்றதுபோன்றதுவே. ()

முன்னோன்பரிதாபமுழந்திடயான்முனைவென்றனனென்செயனன்றிதனா
மன்னாகவநின்றருள்வீமனையும்வருதம்பியர்மற்றுளமன்னரையுந் [ர்
துன்னாரெதிர்நின்மினெனப்படையைத் துணைசெய்துயர்தோன்றறுரந்திடுதே
மின்னார்படைமீளியடைந்தனனவ்விறல்வேந்தனிருந்துழிவெவ்விரைவில். ()

வந்தார்நரநாரணரென்றலுமுன்மகிழ்வோங்கவெழுந்தெதிர்வந்திரவி
தந்தானைமுடித்திவர்மீண்டுளரித்தகையேயலதென்னுளதென்றுபகுத்
துந்தாவருளோடுமிருப்பவவருறுதேரினிழிந்துவணங்கிடலுஞ்
சந்தார்புயமூடுறவேதழுவித்தருவான்மொழிதம்பியைநோக்கியரோ. (௨௪௯)

கனலுக்குறுகாண்டவமீந்ததனாற்ககனத்தவர்தங்களைவென்றனையாம்
புனலுற்றவர்யாரையுமாய்த்தமையாற்பொருமாசுரகண்டகனாயினையா
லினனுக்குரியானையழித்தனையின்றெழுபாரரையும்வென்றனையென்னவுமைத்
துனனுக்கிதுரைத்தனனேழ்புயலின்றோற்றக்கவின்மேனிதுழாய்கமழ்வோன்.

வெய்யோன்மகனோடமர்மோதியிவன்விசிகங்களினேர்ந்துவிலங்கினன்விற்
கையோனுனதின்னலுணர்ந்துனையேகாண்பானெனமாலுரைகன்னமுறச்
செய்யோனழல்கக்கியகண்களுலத்தினனாதனளித்ததிறற்குரிசின்
மெய்யோவுயிரோடுளனென்பதெனாவிசையன்முகனோக்கிவிளம்புறுவான். ()

மேனாண்முதலித்தினமாமளவும்விறலங்கர்பிரானையொரேகணையால்
வானாளவிடுப்பனெனப்புகலும்வாய்வண்மைகுறைந்திடவந்தனையாற்
பூனாயகர்சிந்தைகளென்படும்விட்புலவோருளமென்படுமென்படுமுட்
கானார்முனிவோருளமென்படுமிக்கடல்சூழ்புவிநன்னெறிகாவலனே. (௨௫௨)

கற்றாய்சிலைமாமறையங்கிதருங்கவினாரிரதஞ்சிலையாவமெலாம், பெற்றாயு
லகுண்டவன்மாவிடுவோன்பிறைவேணியனோன்கணையேந்தினையா, லுற்றாய்
கவிவெங்கொடியென்பெறவோவுரையாயிகலஞ்சுதலுள்ளுறுமேற், சொற்றாவ
தென்வஞ்சினமெஞ்சலிலாத்தொல்லாண்மையர்வாய்த்துளசூதவையில். ()

மிகலுந்திரலோரிலையென்றனைநான்வியவாவமரெற்றெனவிண்ணவர்முன்
பகலின்பதிமைந்தனையின்னமுமிப்பகல்சாய்வதன்முன்புபடுத்திலையா
லிகலெங்ஙன்முடித்திடுநின்கையில்வில்லிதுவென்னவிலென்றுதிருத்தமையன்
புகலுஞ்சொலவன்செவியிற்படலும்புண்மேலயிலுற்றதுபோன்றனனே. ()

பரிதிக்குரியானொடுநீமுதலாய்ப்பவனன்சுதனெம்பியர்நால்வருநொங்
தரிதிற்றனியேனுமதாருயிர்கொண்டகல்வுற்றதறிந்துமருட்பயிலாய்
கருதிப்புகலாதெனையோர்சுமடன்கணிதத்தினிகழ்ந்ததுகாரியமோ
விருதிற்றிடினுஞ்சிலையைப்பழிசெய்ம்மேவாரிலையென்றனன்வில்விசயன். ()

* கூரார்முனைவாளிகொளிச்சிலையைக்குறையென்னெதிர்கூறினரம்புவிமே
லாராயினுமாவிசெகுத்திடுமாறிதுவஞ்சினமாதலினிப்பொழுதே
தாராவகைமாலையுதிட்டிரனைத்தலைகொள்வனெனத்தனுவுங்குனியா
வாராவெகுள்கின்றகிரீடியைநீவருகென்றுதழீஇமதுசூதனனே. (உருசு)

நன்றேயிதுநின்னெறிவஞ்சினமேநழுவாதுபுரப்பையெனிற்பிறர்பா
லன்றேயலதாண்டகையாந்துணைமாட்டாமோவறனுங்கதுதேறுகுணக்
குன்றேயொருபான்மைகுறிப்பனெனக் குடையாமலையைக்குறிகொண்டுகுழக்
கன்றால்விளவின்கனிசாடவெறிகல்லாக்கொள்கரும்புயலோதிடுமால். (உருஎ)

வாராய்மகவானருள்காரணனேமறைதேர்முனிகௌசிகனென்றுரைசெய்
பேரார்பவனோர்புனிதத்தலனிற்பிடியாதுமடஞ்செய்திருந்துபவஞ்
சாராதுதவந்தருநாளிலவன்சரதம்புகறன்மையினாலுலகோர்
நேராரினிவாய்மையினென்னவவனிலமீதுபெருந்தவனீடுறுநாள். (உருஅ)

அருகிற்பதியூடொருவன்பொருள்சோர்வாய்ந்தேகரவிற்கொடுசோரர்சிலர்
உருகித்தொழுவான்மடமெய்தியபோதுற்றார்நகர்காவலரோடியவர்
வெருவிப்புனிதன்விபினத்தினிடைவேறோர்புடைவெய்தின்மறைந்திடலாற்
பொருகைப்படையோரவர்பின்றொடர்வோர்புனிதன்றனைவந்துவினாவுதலும்.

பொய்யாமொழியேபுகலும்பெருமான்பொய்யென்றுகரந்துபுகன்றிலனாய்க்
கையாலவருற்றவிடம்புகலக்கண்டேவருகாவலர்கள்வரையாங்
கெய்யாலுயிர்மாய்த்தவர்முன்கவருமீழங்கொடுபோயினரிப்புனிதற்
குய்யாநரகெய்தியதென்றுரவோருரைசெய்வதுணர்ந்திலையோவுரையாய். ()

பொய்யேயெனினும்பலர்துன்பமறப்புகலிற்சரதத்தினுமிக்கதுவா [தாஞ்
மெய்யேயெனினுமொருவர்க்கதனான் மெலிவென்னில்விளம்பியபொய்ம்மைய
செய்யேலிதுநின்னுடைவஞ்சினமிச்செருவூடலதென்றுசெறுத்தனது
கையோசிலைவாங்கினையண்ணன்மிசைக்கருதாததினெய்தியதாம்வினையே. ()

* குரவோர்களைநீயெனினுங்கொலையிற்கொடிதென்றுயர்கேள்வியர்கூறுவரா
லுரவோனையுமம்முறைகொன்றதனோடொக்குஞ்சிலபுன்சொலுரைத்திடுவா
யிரவோர்தமதின்முகம்வண்மையினாலிதயத்தொடுகண்டுமகிழ்ந்துபெரும்
பரவோதநெடுங்கடல்சூழ்புவியிற்பரிதாபமொழித்தபனிக்குடையோய். ()

* என்னாவுரைசெய்தலுமஞ்சியிளைத்திருகைகொடிறைஞ்சிநராதிபனைத்
தன்னாவிசையாதனசிற்சிலசொற்றளர்வோடெதிர்நின்றுதனஞ்சயனுஞ்
சொன்னானதன்மாமகனோருரையுஞ்சொல்லாமலினித்துறவெய்துவனென்
றன்னாவிரைவோடிரதத்தினிழிந்துயர்கானடைவானுணர்வுற்றனனே.(உசாங)

* நரநாரணர்சென் றுநராபதிதானவினத்தில்விழுந்தொருநாயகமா
வரனுமவனைப்புனைதேர்மிசையேவைத்துத்துனிமாறிடுமாறுரைசெய்
தானுமெனநீயணிநின் றிடயாமனலம்பெனவோடியிமைப்பிடைமுப்
புரமேயகமாயதயித்தியரிற்பொருவோனுயிர்கைக்கொடுபோதுவமே. (உ௬௪)
என்றேபலவாய்மைவிளம்புதலாலிகலாவிழிதண்ணளிபொங்கியிடக்
குன்றேயெனவேபுயமோங்கிடநீர்குறுகிப்படைவென் றினிமேவுமென
நின்றேபுகலச்சரணங்கடலைநிலைசெய்துநரன்றெழுதேயரியோ
டொன்றேயெனுமாறிரதம்புகவாங்குயராசியளித்தனனுத்தமனே. :(உ௬௫)
* விடைகொண்டனமென் றுவணங்கிநிலாமதியம்பகலேயொளிவிட்டதெனக்
குடைகொண்டுநிழற்றவிரண்டருகுங்குளிர்சாமரமாருதமார்புபொரப்
புடைகொண்டுமகிபர்திரண்டுவரப்புனைதேர்மதமாபுரவித்திரள்கைப்
படைகொண்டபதாகினிமுன்பின்வரும்படியேகினர்மாதவபற்குனரே. (உ௬௬)
செல்லுந்திருமானரனேடினிதாய்த்திறலொன் றுகுறித்தனனிச்செருவாய், வெல்லும்படியுன்னியடைந்தனனவ்வெய்யோன்மகன்மற்றவன்வென்றுதரச்,செல்லும்புவிதன்குடையின்கனெனத்தெளிவற்றசுயோதனன்வாய்த்துடையான், மல்லும்புனைகுன் றுநிகர்க்குமென மருவார்புகழ்தோள்பெறுவாள்வலியோய். (உ௬௭)
கருதும்பலகைதவமானவெலாங்கன்னன்செயலென் றுணர்காவலர்முன்
பெருஞ்சூதினில்வென் றுமையாயிழையைப் பிழைசெய்திடுஞான்றிவனேதிய
லரிதென் றுமறத்தலுனக்குரியோரரசன்றெழும்பாயினராதலிலோர் [சொல்
புருடன்றனையிங்கிவரிற்பெறநீபோதாயெனுமாறுபுயத்துணையோய். (உ௬௮)
அக்காலையைவெவ்வரவக்கொடியோனழுதெஞ்சமுனைந்துயிர்வவ்வுதலே
தக்கோர்கடனென் றுரையாடலுமத்தழலாயதுகண்கடனஞ்சயனும்
புக்கோடிமுனைந்திடுமாறுவயம்பொதுளப்படையூடுபுகுந்துலவை
மிக்கானெனுமைந்தனையன்மிழுனேன்பரிநாமம்விளம்பவியந்தனனே.:(உ௬௯)
அவன்முன்செலமற்றிருதம்பியருமணிபின்செலயாதவர்கோனிளைஞன்
கவனந்திகழ்மாவுறுதேரின்மிசைக்களியோடொருவான்புடைகாப்பவருட்
டவமாமுனிவன்றலைகொண்டருளுந்தனிமீளியிடம்புரிதான்கதுவச்
சிவன்வாளசுரேசரைவெல்லவெழுந்திறலென்னவலாரிமகன்செலுமுன். ()
கதைகொண்டவனோர்பெருவிற்கொடுவான்கணையெண்ணில்விடுத்திரவிக்குறியோன், றதைவாகினியுள்ளவெலாம்வடவைத்தழலென்னவடர்த்தணிசிந்திடலாற், குதைதங்கியவில்லுடையாரிவனேகூற்றென் றுகுலைந்தனர்கொற்றவர்மெய், புதையும்படிசாரிகைசூழ்ந்தடலாற்பொலிவெய்தியதாய்ந்துபொருமலரோ. (உ௭௧)

வே று.

* சோனமேகஞ்சொரிவதுபோற்றுச்சாதனனுந்தம்பியரும்
வானுடேறவழிதேடிவருவார்போலவெருவாமன்
மேனுண்மொழிந்தவஞ்சினங்கண்முடிப்பானின்றவீமனெதி
ரானுவாளிமழைதூவியடல்வெஞ்சிலையோடடுத்தாரே. (உ௭உ)

* உருத்தின்றரசரைவரையுமுடனேகொல்வனெனவெண்ணிக்
கருத்தின்படியேவிரைந்தோடுங்கவனப்புரவிக்காற்றேரிற்
செருத்தின்பணைகண்முழங்கவருசெங்கோன்மன்னற்கிளையோனை
மருத்தின்புதல்வன்கண்டுமழைமுகில்போலெதிர்வாய்மலர்ந்தானே. (௨௭௩)

* துச்சாதனனேயுனைப்போலுஞ்சூரருளரோசூரரெலா
மெச்சானின்றார்வேத்தவையுண்மேனாள்நீசெய்திறலாண்மை
யச்சாரிதப்போர்க்குமுனக்கார்வேரெதிருண்டம்மவிரைந்
திச்சாபோகமாகவிருந்தின்றேமறலிக்கிடுநாளே. (௨௭௪)

* இன்றேவுன்றன்சென்னிதுணித்திழிசெம்புனலிற்குளித்திடுநா
ளின்றேவனலின்வந்துதித்தாளிருளாரளகமுடித்திடுநா
ளின்றேதாகங்கெடநாவுக்கிசைந்ததண்ணீர்பருகிடுநா
ளின்றேமொழிந்தவஞ்சினங்களெல்லாம்பயன்பெற்றிடுநாளே. (௨௭௫)

* வென்றேயவனிமுழுதாளும்வீரோதயனின்றம்முனையுங்
கொன்றேநாளையமரரெதிர்கொள்ளக்கடிதின்வரவிடுவ
னின்றேநீபோயிடம்பிடிப்பாயெண்ணுவெண்ணமெண்ணிமன்றி
லன்றேகலகம்விளைத்தென்றுமழியாவரசையழித்தோனே. (௨௭௬)

* வீமன்கருத்தோடிவைமொழியவேறுத்தரமற்றொன்றின்றி
யூமன்றனைப்போலவனிற்கவுடனேயிளையோரொன்பதின்மர்
நாமம்பெறுகோலோரொருவர்நாலுலாகநடந்தவழி
தூமங்கிளரவொருகணத்திற்றொடுத்தாரெதிர்வந்தடுத்தாரே. (௨௭௭)

* தொடுத்தார்தொடுத்தகணையனைத்துஞ்சூரன்றானுந்தன்கணையாற்
றடுத்தான்மீளவோரொருவர்க்கோரோர்பகழிதனுவாங்கி
விடுத்தானவருமிரதமிசைவீழ்ந்தார்வீழ்ந்தவீரரைவந்
தடுத்தார்விரைவிலகல்வானத்தழகார்காதலரம்பையரே. (௨௭௮)

* உயிர்க்காருயிராந்தம்பியர்களோரொன்பதின்மர்வீமன்கைச்
செயிர்க்காய்கணையாற்சிரந்துணிந்துதேர்மேல்வீழச்சினங்கதுவிப்
பயிர்க்காமாரிபொழிந்துவருபருவப்புயல்போற்பாவனனை
மயிர்க்காறொறுமம்பினஞ்சொருகிமன்னற்கிளையோன்மலைந்தானே. (௨௭௯)

* தன்மேலுரககேதனனுக்கிளையோன்றொடுத்தசரங்களெல்லாங்
கன்மேன்மேகத்துளியென்னக்காய்ந்தானவற்றைக்கடிதுதறி
மன்மேற்கொண்டபுயமுறவில்வாங்கிக்கொடும்போர்வாளிபல
மென்மேலெய்தானெதிர்ப்பட்டால்விடுமோபின்னைவிறல்வீமன். (௨௮0)

* தூவாநின்றவேவனைத்துந்துச்சாதனன்றன்றொடைபிழையா
வேவால்விலக்கியேழுகணையெய்தானெய்தகணையேழு
மாவானவற்றின்றலைநான்குமடங்கற்கொடியுமணித்தேரு
மேவாநிருபன்மலர்த்தடக்கையில்லுந்துணியவீழ்த்தனவே. (௨௮௧)

* இத்தேரழியவேமெருருதேரேறிப்பரவையிடைச்சுழன்ற
மத்தேயனையசிலைவாங்கிமன்னற்கிளையவயமீளி
யத்தேரழியக்கொடிவலவன்வயமாவனைத்துமற்றுவிழப்
பத்தேயெய்தாங்கிணைவாளிபகைவன்புயத்திற்படவெய்தான். (உஅஉ)

* காரிற்கரியகுழறீண்டிக்கலையன்றுரிந்தகழற்காளை
பாரிற்குதித்தோரதிபாரப்பைம்பொற்கதையாற்பவனன்றன்
றேரிற்புடைக்கத்தேர்சிதைந்துசிந்திற்றவனுஞ்சிலைமாற்றிப்
போரிற்சிறந்தகண்டமுடன்புவிமேற்பாய்ந்தான்புலிபோல்வான். (உஅங)

வேறு.

* இருவரும்புயங்களினப்பிமொத்தினரிகல்புரிந்துதண்டிறுகப்பிடித்தனர், மருவியொன்றொடொன்றனல்கக்கமொத்தினர்வலமிடங்கொண்மண்டலமுற்ப யிற்றின, ரருகுசென்றுசென்றடிவைத்தடுத்தனரகலநின்றுநின்றொரிமைப்பி ன்முட்டினர், திருகுவெஞ்சினத்திடியொத்துரப்பினர்திசையின்மண்டிபக்கிரிசி ந்தியிட்டவே. (உஅச)

* வெகுளிகொண்டுகொண்டெதிர்கொக்கரித்தனர்விசையுடன்கிளர்ந்துய ரக்குதித்தன, ருகவைவிஞ்சவெங்கதையைச்சுழற்றினருயர்விசும்பெறிந்தொ ருகைப்பிடித்தனர், முகமலர்ந்துநின்றதிரச்சிரித்தனர்முதிரவஞ்சினம்பலகட் டுரைத்தனர், மகிபர்கண்டகண்டவர்சித்தமுட்கிடவரையிரண்டுவெஞ்சமர்கற் பதொக்கவே. (உஅரு)

* இகலிவெங்கொடுங்கதையொத்துமொத்தொலியிடியின்வெங்கொடுங்கு ரலொத்தொலித்தன, மகிதலம்பிளந்ததுசர்ப்பவர்க்கமும்வயிறழன்றுநஞ்சுகள் கக்கியிட்டன, திகிரியந்தடங்கிரிபக்குநெக்கதுசெவிடுகொண்டயர்ந்ததுதிக்கயக் குல, முகடுவிண்டதண்டமுமப்புறத்துறமுகில்களும்பெருங்குகைபுக்கொளித் தவே. (உஅசு)

* விழிகளுஞ்சிவந்தனநெற்றியிற்பொறிவெயரும்வந்தரும்பினவிப்பிமுத் தென, மொழிகளுங்கிளம்பினநெட்டிடிப்பெனமுரிமுரிந்தவன்புருவச்சிலைத்து ணை, யெழிலுடன்பரந்திறுகித்தடித்தனவிமையமந்தரங்களொடொத்தபொற் புய, மழியுமங்கமென்றொருசற்றிளைத்திலரமரிலன்றருங்கதையிட்டடிக்கவே.

* எதிர்மலைந்துவெஞ்சமரிப்படிக்கிவரிரிதலின்றிமொய்ம்புறவுத்தரிக்கவு, முதரநெஞ்சுரம்புயமெய்க்கழுத்தென வுரைசெயங்கமொன்றினுமுற்றுறைத்தி ல, கதைகளும்பிளந்தொடிபட்டெடுத்தனகரதலங்களுங்கருகிச்சிவந்தன, முதிர் சினங்கொளுந்தலின்முற்றும்விட்டிலர்முரணுடன்றொடங்கினர்முட்டியுத்தமே.

* விரல்களைந்தையுஞ்செறியக்குவித்தொளிமிகுநகம்புதைந்திடவுட்புதைத் திரு, கரதலங்களுஞ்சிகரப்பொருப்பிடைகரியகொண்டன்மண்டுருமொத்திடித் திட, வருளுடன்சிறந்தறனுற்றகொற்றவனநசனுந்தயங்குரகத்தனிக்கொடி, நி ருபர்தம்பெருந்தகைமுற்கனிட்டனுங்கிளைவுடன்கலந்தெதிர்குத்தியிட்டபின். ()

இரவிதந்தநன்மகனற்பணிக்கொடியிறைவனண்பர்தம்பியர்விற்குருச்சுதன், கரவிருந்தநெஞ்சொடுபட்டவர்த்தனர்களமவிந்திடும்படிகற்றியற்றுரு, துரனுறுங்கொடுஞ்சகுனிக்குமற்றுமங்குறுபுயங்கொள்கொற்றவர்கட்குநற்செவி, விரவநின்றுவிண்குமுரிற்றெனப்பலர்வெருவநின்றுரைத்தனன்வெற்றிமுற்றவே. (உ௬௦)

இவனையின்றுகொன்றெமன்முற்செலுத்தவனிடரொழிந்தகன்றிடவைத்தல்கற்றவர், புவனமெண்ணவுண்டெனிலுற்பவிப்பதேபுகழ்மையென்னவெண்டிசையிற்குறித்திடத், தவனன்மைந்தன்முற்படுகொற்றவிக்கிரமந்தவறிநெஞ்சுகண்புனல்கக்கநிற்றலாற், பவனன்மைந்தனன்றவனிற்சரித்தனன்பகடனந்தமொன்றரியொத்திசைப்பவே. (உ௬௧)

* அனிலன்மைந்தனென்றுரைபெற்றகொற்றவனரசன்முந்துதம்பியைமத்தகத்திடை, கனல்கொளுந்தவந்ததிரத்தகர்த்திருகவுணெரிந்துவண்செவியுட்கரக்கவு, முனைசிதைந்துரம்பெறுபற்றெறிக்கவுமொழிகளுந்தளர்ந்தனமுற்றொளிக்கவு, மினலினுஞ்சிவந்தொளிமிக்கவற்புதவிழிபிதுங்கவும்பெருகக்கலக்கியே

* பதயுகங்களங்குலிதொட்டுறுப்புளபலவுமென்புடன்றசைபற்றுவிட்டறவிதவிதம்படும்புடைபட்டிடிப்புறவிசிநரம்புசந்துகளிற்றெறித்திட மதுகையந்தடம்புயவெற்பறப்பலவரையுடன்பொருந்தியநற்கழுத்தற முதுகிலுங்கவின்பெறவுற்பவித்தெனமுகனையும்புறந்திருகத்திருப்பியே. ()

* மயிர்கரங்கள்கொண்டிறுகப்பிடித்தெதிர்வரவிழுந்திடும்படிபற்றியிட்டுடலயிர்படுங்கடுந்தரையிற்றுகட்படவடியிரண்டினுஞ்சரியத்துகைத்தெழு [றை
செயிருடன்பெருந்தொடைதொட்டிழுத்தணி திகழுரம்புகுந்தவுணக்குலத்தியுயிர்கவர்ந்தசிங்கமொடொப்புறத்தனதொளிசிறந்தனன்கடிதுக்கிரத்தொடே.

* உகிரரெனும்பெரும்பெயர்பெற்றசொட்டைகளுருவியெங்கணும்புதைபட்டுரத்தலம், வகிரவுங்கொடுங்குடர்வட்டமற்றுகுவயிறுதொங்கவுங்கிழிவித்தபிற்செறி, துகிருடைந்தசெம்பவரொத்தநெட்டுடல்சொரிதருஞ்செழுங்குருதிப்பெருக்கிடை, பகிரதன்றருங்கடவுட்டுறைப்புனல்படியுமும்பர்தம்பரிசிற்குளிக்கவே. (உ௬௫)

வேறு.

* மன்னற்கிளையோனைவாட்டருமனுக்கிளையோன்
றுன்னப்பிளந்துசுரருலகமேற்றுதலுங்
கன்னற்குமற்றுள்ளகாவலர்க்குநில்லாமல்
வென்னிட்டதம்மன்னன்வீரப்பெருஞ்சேனை. (உ௬௬)

* வண்டாரவாரமருதநறும்பூந்துளபத்
தண்டார்முடியோனும்விற்கைத்தனஞ்சயனுங்
கண்டாரவர்முதலாங்காவலருங்கைகலந்தார்
வெண்டாரகைபரந்தவிண்ணொத்ததாகவமே. (உ௬௭)

* வேகமிகுஞ்செந்தீயின்மேனுளவதரித்த
தோகைகுழலுந்துகிலுமுடன்றொட்டனவென்
ருகமுறப்பிளந்தவாண்டகைமீண்டவ்வீரன்
பாகமுறுகைவிரல்கள்பத்துந்துணித்தானே. (௨௯௮)

* தண்ணீர்நிகரெனத்துச்சாதனன்றன்மெய்யிலிழி
புண்ணீர்பருகப்புகுவோனையாவருக்குங்
கண்ணீர்வரத்தடுத்தான்காணுங்காலெத்திறத்தும்
வெண்ணீர்மையில்லாதமேகந்தனைப்போல்வான். (௨௯௯)

* குடியாமலக்குருதிகொப்பளித்துவாகை
முடியாநின்றென்னென்னைமுற்றினனென்றுங்கட்
படியாளுஞ்செங்கோன்மைப்பார்த்திவருக்கெல்லாங்
கொடியார்மடங்கலெனக்கூத்தாடிநின்றார்த்தான். (௩௦௦)

* துன்பமுறுந்துன்னீதித்துச்சாதனன்போர்செய்
தொன்பதின்மர்தம்பியரோடும்பரூர்புக்கானென்
றன்புடையதம்முனடிவீழ்ந்தகங்கரித்தான்
வன்புடையதாதையினுமிக்கவலியோனே. (௩௦௧)

தாளாண்மைவல்லதனிமாருதிக்கெதிர்போய்
மீளாதுநின்றனைநின்மேன்மையிவண்கண்டனனால்
வாளாண்மைவல்லமகவான்றருபுதல்வன்
றோளாண்மையெங்ஙன்றொலைப்பாய்தொலைவோயே. (௩௦௨)

குரவர்மொழிகளுளங்கொள்ளாதுணைவியந்திவ்
வரவகெடுந்துவசனுருயிர்போய்த்தானென்றே
விறலியினிக்கருதும்வென்றியினுந்தம்முயிர்தம்
முரனுடையவாள்கொண்டொறுத்திடினுந்தாழ்வின்றே. (௩௦௩)

தேரிற்பொலியுந்திரடோள்வலியரசர்
காரிற்கலுழுமுரைக்காற்றின்மகன்றோற்றமுனைப்
போரிற்புகமாட்டாதஞ்சினார்போற்றியெனும்
பாரிற்பரந்தமொழிபற்றுதோகூறுயே. (௩௦௪)

* மேல்கொண்டுபாண்டவர்தம்வெஞ்சேனைசூழ்ந்திடவு
மால்கொண்டவர்போலமாண்டாயெனக்கழறிக்
கால்கொண்டதிண்டேர்கடாவினான்கையுளுவு
கோல்கொண்டான்கன்னனுமக்கூற்றுக்கெதிர்கூறும். (௩௦௫)

* வேந்தனனையவிறற்றம்பிவீமன்கை
மாய்ந்ததினைகண்டுமனந்தளர்ந்ததல்லாது
கூர்ந்ததிறன்மத்திராத்தார்கோவேவெருவுமோ
பாந்தளெதிர்செல்லப்பறவைக்கரசென்றான். (௩௦௬)

* முன்னமமரின்முதுகிட்டமன்னரையு
மன்னவர்கண்மன்னனையும்வன்பேரணியாக்கிப்
பொன்னசலம்போலும்புனைபொற்கொடிநெடுந்தேர்க்
கன்னனெதிருன்றினன்காய்ங்கனல்போல்வான் (௩௦௭)

* சேனாபதியானதேர்த்துருபதேயனும்வான்
மீனுமெனப்பரந்தவேந்தருடனேதனக்குத்
தானுண்மைக்கொப்பாந்தருமனையுஞ்சேனையையு
மானாகமுட்கவகுத்தாங்கெதிர்நடந்தான். (௩௦௮)

* பாண்டவர்கள்சேனைமதிகண்டபவ்வமெனக்
காண்டவமன்றுண்டகனல்போனனிதருக்கி
மூண்டநிலைகண்டுமுதுகிடுதன்சேனையுடன்
மீண்டுமெதிருன்றுமல்வெய்யோன்மகனின்றான். (௩௦௯)

கண்டுபவனன்கடுங்கான்முனைதேர்மேற்
கொண்டுசிலைகுனித்துக்கொடுநாண்குதைபூட்டிப்
பண்டுகதிர்தந்தோன்பருவாலுற்றேங்கிடப்போய்
மண்டுபெரும்போர்மலைந்தான்மறமுயர்வான். (௩௧௦)

வீமனுடன்கன்னன்வெகுண்டெய்தவெம்புரவித்
தாமனொடுசஞ்சத்தகர்போயமர்தினைத்தார்
காமனொடும்பொருதக்காளையொடுகாவலர்மற்
றேமநெடுந்தேராரெதிர்ரெதிர்போர்மண்டினர். (௩௧௧)

* பொன்னார்முரசமுதற்போர்வெம்பணையாலும்
வின்னாணொலியாலும்விண்ணோர்செவிடுபடப்
பன்னுமபேதப்படையொளியாலும்பலபூண்
மின்னாலுங்கண்கள்வெறியோடிவிட்டனவே. (௩௧௨)

* யாமினியிலெவ்வுயிர்க்குமேற்றதுயின்மாற்றுவோன்
மாமதலைகோமதலைமான்றேர்விடசேன
னாமமணித்தேர்மேனகுலன்மேற்சென்றுசில
தாமமுனைவாளிதழற்பொறிபோற்சிந்தினனே. (௩௧௩)

* வெம்புரவித்திண்டேர்விசயற்கிளையோனுஞ்
செம்பதுமக்கையிற்சிலைநாணொலியெழுப்பிக்
கம்பமதமால்யானைக்கன்னன்மகனேவியகூ
ரம்படையவம்பாலறுத்தறுத்துவீழ்த்தினனே. (௩௧௪)

* அண்டர்பெருமானுக்கம்பொற்கவசமுடன்
குண்டலமுமீந்தோன்குமரன்கொடுங்கணையான்
மண்டுகனலருந்தவன்காண்டவமெரித்த
திண்டிறலோன்றம்பிதடந்தேர்க்கால்களையழித்தான். (௩௧௫)

* மற்றொருதேரேறிமருத்துவர்தம்மைந்தனுமக்
கொற்றநெடுங்கச்சைக்கொடியோன்றிருமைந்தன்
வெற்றிவிலோதனமும்வெஞ்சாபமுடனே
யற்றுவிழவெய்தானவனாண்மைக்காரெதிரே. (௩கசு)

* மீண்டவனும்வேறொருவின்மேருவெனவாங்கிப்
பாண்டவனைவீழும்படியெய்தான்வீழ்ந்தோனை
மூண்டவனற்செங்கண்முரண்வீமன்கொண்டேகக்
காண்டவநீருக்கினான்கண்டானவன்போரே. (௩கஎ)

* நன்றாண்டிகழ்மதியாநாகம்பருமத்தா
லன்றாண்டிரைமதியாவண்டர்க்கமுதளித்தோன்
முன்றாண்டியதேரிற்சென்றான்முனைவாளி
மின்றாண்டில்வீசிவிடசேனமீன்படுப்பான். (௩கஅ)

* தம்பிபடுந்துன்பந்தமையனையுங்காண்பனென
வெம்பிவெதிர்சென்றுவிடசேனன்வில்வாங்கிப்
பம்பிவருகொடித்தேர்ப்பார்த்தனையும்பாகனையு
மம்பின்மறைத்தானடலேறரியனையான். (௩கசு)

பாண்டுகுலமைந்தன்பகழிக்கருமேகந்
தூண்டுமுறுமிற்றுழனியெழப்போர்த்திடலாற்
பூண்டசிலையும்புரவித்தடந்தேரு
மீண்டுமழிந்தொருதேர்மேவினான்விடசேனன். (௩உ௦)

மற்றுமொருதேரேறிவண்ணக்கொடியசிலை
பற்றியெரிபரந்துப்பகழிமழைசிந்திடலாற்
புற்றரவுபோலுமழற்புங்கவங்கடானேவி
மற்றவன்மேற்றூவுசரமாரிதனைநீக்கியபின். (௩உக)

* வின்னானும்விற்பிடித்தவெவ்விரலும்வின்னடுவு
முன்னானதும்பைமுடித்தோன்முடித்தலையும்
பின்னாகவாங்கும்பிறையம்பும்பேரமரி
லொன்னார்முனைதடிந்தோனோரம்பினாலறுத்தான். (௩உஉ)

* வீழ்ந்தான்விடசேனன்வீரரெல்லாம்வெஞ்சமரிற்
றாழ்ந்தார்புறங்கொடுத்தார்தந்தைதடந்தேர்க்காலைச்
சூழ்ந்தார்சிலவீரர்தோலாதெதிர்நடந்து
வாழ்ந்தார்சுரராகிவான்மாதர்மெய்கலந்தே. (௩உ௩)

கரிகளோவன்னக்கவனத்துரகதத்தேர்க்
கிரிகளோசேனைக்கிளராழியோதவளப்
பரிகளொருநான்குறுதேர்பார்த்தன்கணைக்கனவி
லரிகளோடொன்றுசருகாயதடும்போர்ச்சூழல். (௩உச)

வேறு.

* சாய்ந்தனன்களத்தருச்சுனன்சரத்தினூற்றனயனென்றவற்றந்த
வேந்தனுங்கருத்தழிந்துதன்றேர்மிசைவிழ்ந்தனனவன்பொற்றே
ரூர்ந்தசல்லியன்றேற்றினன்பற்பலவுரைகளாலவ்வெல்லைப்
பாந்தளங்கொடிப்பார்த்திவனின்றுழிச்சென்றனன்பரித்தாமன். (ருஉரு)

* தப்பருஞ்சமர்விளைத்தனிர்நீயுமத்தருமன்மைந்தனுமென்றே
மெய்ப்பெரும்புகழ்புனைகுருகுலத்திடைவீடுமன்முதலான
வெப்பெருந்திறற்குரவருங்கிளைஞருமேனைமன்னரும்யாரு
மொப்பரும்பெருஞ்சாதுரங்கத்துடனுடன்றுயிர்மாய்ந்தாரே. (ருஉசு)

* வளையிலாதனமங்கலவிழவுநல்வரம்பிலாமரபுந்தொல்
விளைவிலாவரும்புலமுழுத்தீயிலாவேதியர்மனைவாழ்வுந்
துளையிலாமணிமுத்துமந்தண்புனற்றுறையிலாவளநாடுங்
கிளையிலாவரசியற்கையுநன்றெனக்கேட்டறிகுவதுண்டோ. (ருஉஎ)

* தும்பிமாபரிமாவுளதேருளசுருங்கினசுருங்காம
னும்பிமார்களிலிருந்தவர்தம்மொடுநுவலரும்பலகேள்வித்
தம்பிமாரொடுநம்முனைகிபவிறற்றருமன்மாமகனோடும்
பம்பிமாநிலம்புரப்பதேகடனெனப்பார்த்திவற்குரைசெய்தான். (ருஉஅ)

* ஆரியன்றிருமகனிவையுரைசெயவரசனுமவைகேட்டுக்
காரியம்புகல்வதுபுவியாட்சியிற்கருத்துடையவர்க்கன்றே
தூரியங்கறங்கமரிடையுடல்விழச்சுரருலகுயிரெய்த
வீரியம்பெறலெனக்கினிப்பயனெனவிளம்பினன்விறல்வேலோன். (ருஉகூ)

* முனிமகன்புகல்கட்டுரைமறுத்தபின்முனிவுறுவகைபோருக்
கினிமைகொண்டசொற்பலமொழிந்தவனொடுமிரப்பவருள்ளங்கைக்
கனியெனுங்கொடைக்கன்னனைத்தழீஇயவன்கண்ணுகுபுனன்மாற்றிப்
பனிநெடுங்குடைப்பார்த்திவனுவன்றனன்பார்த்தனதுயிர்கொள்வான். (ருரு0)

அலங்கன்மார்பினுய்நின்னுடையாற்றனீயறிகிலையுலகேழும்
விலங்கலேழுமேழ்கடல்களும்வெருவுநின்வெங்கணைப்படலத்தாற்
சலங்கொண்மாற்றலராற்றல்கண்டும்பியுந்தனையனுந்தபுமாற்றூற்
கலங்கனீயெனக்கூறினன்வலம்புரிகமழ்தருந்திணிதோளான். (ருருக)

* மலைகலங்கினுமாதிரங்கலங்கினுமாதிரங்களில்விண்ணோர்
நிலைகலங்கினுநெடுங்கடல்கலங்கினுநிலங்கலங்கினுஞ்சேடன்
றலைகலங்கினும்பேரவைமுன்றினுந்தளர்விலாதவர்கற்ற
கலைகலங்கினும்போர்முகத்தென்மனங்கலங்குமோகலங்காதே. (ருருஉ)

* என்மகன்றலையென்னெதிர்துணியவம்பேவியபுருகூதன்
றன்மகன்றலைதுணிப்பனிக்கணத்திலோர்சாயகந்தனிலென்று
மன்மகன்றனக்கிரதமூர்மத்திரன்மகன்றனக்குயர்வேள்வி
யின்மகன்றனக்குளமகிழ்ந்துரைத்தனன்வெயிலவன்மகனம்மா. (ருருரு)

படுதிவாகரன்சாயுமுன்விறலுடைப்பார்த்தனையரிதாய
கடுதிதாண்டவெங்கணையினால்வின்றுறல்காண்பனின்கைவண்மை
சடுதிகொண்டிகலரசர்கள்புகழ்ந்திடநடநெடுந்தேர்நேரே
விடுதியென்றனனவனிதுவிளம்பினன்விதரணன்றனக்கம்மா. (௩௩௪)

படியதிர்ந்தனசெம்புனன்மாரிகள்பயிலவன்பகர்கச்சைக்
கொடியில்வீழ்வனகொடிக்குலம்வானிடைகுரைவனபுயலின்றி
மடியிலேதிகன்முனைதொறும்புகைவனவாசமாலைகள்வாடிக்
கடியிலாதுபுன்புலால்கமழ்வனவிடந்துடிப்பனகாணாயோ. (௩௩௫)

தம்பிவெம்பரிக்குலமெலாங்கலுழ்வனசோகுகள்பலகோடி
வெம்பியாடினவோரிகூக்குரலினவிளங்கொளிமணிப்பூண்கள்
செம்பிரும்பெனத்தேசழிந்தனவுருட்டேரொலிதிசைபோரா
தம்பிவான்கடற்பெயர்வதொத்தனவின்மீன்விழுவனவறியாயோ. (௩௩௬)

இன்றுவெஞ்சிலைவிசையனோடிகலுமாறேகினையெனினம்பாற்
கொன்றுவீழ்த்துநல்சாதமித்தினமுயிர்கொண்டுமீண்டிடினாளை
வென்றுமாமுடிபுனைகுவைவேந்தனுக்குண்மையேகலையென்றான்
குன்றுபோலுயரிருதிணிதோளுடைமத்திரர்கோமானே. (௩௩௭)

ஒப்புவேறிலாக்கரதலவண்மையானுரகவெங்கணையேவிற்
றப்புமேகொலாந்தனஞ்சயன்றன்சிரந்தறுகண்மாமதவேழங்
கப்புறுந்தவவலியினைவியந்துகண்டரவங்கதிமீளிற்
செப்புநின்னுரைப்படிதிருகுவன்முனைசெலுத்துதிதேரென்றான். (௩௩௮)

உறுதியாங்கிவன்கொள்கிலனெனவுணர்ந்தொருதடந்தேர்ச்சூதன்
மறுகிமாவிலமறன்மகன்புரப்பநாள்வாய்த்ததென்றுளங்கொண்டு
குறுகலார்மனமுட்கவான்புரவிமுட்கோல்கொடுதனியுந்திப்
பெறுதிவென்றியென்றிரவிசேயுறுமனம்பின்செலத்தேர்தனையுய்த்தான். ()

வட்டமாகவில்வளைத்தனன்பகழிகண்மழையெனப்பலகோடி
தொட்டனன்பலதூரியங்கறங்கிடத்துன்னலார்முனைச்சேனை
யட்டனன்றிசையானைகள்கரடநின்றவனிவீழ்மதவாரி
கெட்டதிங்கெழுமோதையானெனிலுரைகிளத்துமாறெவனம்மா. (௩௪௦)

ஆயபோதினின்மடைதிறந்தொழுகுதேனலங்கருழ்புயவீரன்
மாயனூர்ந்ததேர்மிசைசிலைநாணொலிமடுத்துவாகினியோடு
மேயதம்பியரிருவருந்தம்முனுமெண்ணில்வேந்தருஞ்சூழ்க்
காயும்வெவ்வெயிற்கதிரவன்மகனெதிர்கதுவினன்கடிதம்மா. (௩௪௧)

கடலிரண்டெனக்காலவெந்தீயிருகவையெழுந்தனவென்ன
மிடலுறும்பெருஞ்சேனையையிருதிறல்வேந்தருமணியாக்கிப்
படலமேகராசியினுறுதுளியெனப்பலகணைமழைதூற்றி
விடலருஞ்சமர்விளைத்தனர்கலித்தனவின்னுமண்ணகமெங்கும். (௩௪௨)

அனையகாலையிலயனும்வானவர்களுமந்திவான்பிறைமௌலி
புனையமண்ணலும்புரந்தரனொடுமுயர்போதருவானோங்கி
நினையுமுன்னரிற்றிகழ்ந்தனர்விமானகோடிகள்பலநிரைமொய்ப்ப
வினைவல்கன்னனும்விசையனும்போர்புரிவின்மைகாணுதற்கம்மா. (௩௪௩)

வேறு.

தூயதாமரைத்தவிசினோன்சுடர்விழிப்பரமன்
சேயதாடொழுதையவிச்செருவினையொழித்து
நேயமாக்குதலருள்கொலோவெனமறைநிமலன்
றூயதண்ணளிச்சிறுநகைநிலவெழச்சாற்றும். (௩௪௪)

வேறு.

எறிந்தகல்விழாதேந்தியகரதலம்பிழைத்திடாதெனிலென்றே
வறிந்தநீசமரொழிக்குமாறினிச்செயலன்றெனவருள்செய்தான்
மறிந்தமான்மழுவேந்தியாருயிர்தொறுமல்கிநின்றவர்முன்செய்
செறிந்தநல்வினைதீவினைநெறிப்பயன்றுய்த்திடுஞ்செழுந்தாளான். (௩௪௫)

வாசவன்பணிந்தீசனையோர்மொழிவகுத்தனனடலாழிக்
கேசவன்விடுந்தேருறைதனஞ்சயன்கிளரொளித்தடமார்பிற்
றேசவன்சிலைக்கன்னன்மேவமரினிற்சேர்வதார்வயமென்றே
னேசவென்மனமையுறுமையநீநிகழ்த்தவேண்டுவதென்றான். (௩௪௬)

எடுத்தபோர்வலிக்கொருவனும்விசயனுக்கிடரறமேனாள்யாங்
கொடுத்தநல்வரமுளவவன்பெறும்வயங்கொடுங்கதிர்மகவாவி
விடுத்தகன்றுநற்கதிவழிப்படுமறம்விதரணம்வேளாண்மை
தொடுத்தசிந்தையனுதலினென்றருள்சுரந்தனன்பரந்தாமன். (௩௪௭)

அன்னதேயெனவானவராசிகளறைந்தனர்நரன்றேர்மேற்
பொன்னினன்மலர்பொழிந்தனர்மகபதிபுளகமோங்கினனிப்பாற்
கன்னனோடருச்சுனனுமப்பறந்தலைகடிதுநேர்ந்தடுபோர்செய்
துன்னுபேரொலியிவ்வணமெனவெவர்தொடுக்குநாவலர்மாதோ. (௩௪௮)

* சுரிமுகங்களிற்பேரியங்களிலெழுதுவனியாற்பகிரண்ட
நெரியுமென்றயனஞ்சினன்சேனையினெருக்கினலெனைத்துள்ள
கிரிகளுஞ்சரிந்திடுமெனவஞ்சினன்கிரீசனுங்கிளராழி
யரியுமஞ்சினன்றூளியாலலைகடலடைபவற்றிடுமென்றே. (௩௪௯)

* பரியுடன்பரிநெருங்கினநெருங்கினபடையுடன்படைமத்தக்
கரியுடன்கரிநெருங்கினநெருங்கினகடவுதேருடன்றேரும்
விரிநெடுங்குடைகுடையொடுநெருங்கினவிலோதமும்விலோதத்தோ
டரியெறிந்திடநெருங்கினவாடையுமாடையுமலமந்தே. (௩௫௦)

* பரியில்வீரரும்பரியில்வீரரும்வயப்படையெறிந்தனர்கொற்றக்
கரியில்வீரருங்கரியில்வீரருமமர்கடுகினர்காற்றோராங்
கிரியில்வீரருங்கிரியில்வீரருமெதிர்கிடைத்தனர்பதசாரித்
தெரியல்வீரருந்தெரியல்வீரருமுடன்செருப்புரிந்தனரன்றே. (௩௫௧)

✻ எடுத்தவேல்களும்வேல்களுமுனைந்தனவிலக்குறக்கொடும்பாணந்
தொடுத்தசாபமுஞ்சாபமும்வளைந்தனதொடியுடைக்கரசாலத்
தடுத்தவாளமும்வாளமும்பொருதனவங்குலிகளிற்சுற்றி
விடுத்தநேமியுநேமியுந்துணிந்தனவீரர்சென்னிகள்வீழ. (௩௫௨)

✻ அறன்மகன்பெருஞ்சேனையினிருபருமரவவெங்கொடியுடை
மறன்மகன்கொடுஞ்சேனையினிருபரும்வஞ்சினம்பலகூறித்
திறன்மிகுந்ததஞ்சேனையோடெதிரெதிர்சென்றுசென்றிடந்தோறு
முறமலைந்தனரொருவருக்கொருவர்தோளுரமும்வீரமுமொத்தோர். (௩௫௩)

வேறு.

✻ இளைஞரும்பெருஞ்சேனையுமிருபுடைநடக்கக்
கிளைஞர்யாவருநேமியங்கிரியெனச்சூழ
விளையும்வெஞ்சினவீமன்முன்போதரவிசயன்
வளைநெடுஞ்சிலைகணைமழைபொழிந்திடவந்தான். (௩௫௪)

✻ கிரிசன்மைந்தனுங்கிருபனுங்கிருதவன்மாவும்
வரிபொலங்கழற்சகுனியுமுதலியமறவோ
ரெரியும்வெங்கனற்கண்ணினரெயிலெனச்சூழத்
தெரியும்வாளிவன்சிலையுடைக்கன்னனுஞ்சென்றான். (௩௫௫)

✻ மல்வளைத்ததோள்வலியர்கள்வலனுறத்தத்தம்
வில்வளைத்தனர்விசையுடன்சிலீமுகந்திகிரிக்
கல்வளைத்தபார்தனக்கிடுகாவணம்போலச்
சொல்வளைத்திலர்தொடுத்தனர்தும்பையந்தொடையார். (௩௫௬)

வேறு.

✻ மருவருஞ்சுருதிகூறுநிலைநாளும்வழுவா
திருவருஞ்சிலைவணக்கியதுமெய்தவிரகு
மொருவருஞ்சிறிதுணர்ந்திலருகாந்தமெனவே
வெருவருஞ்செயலில்விஞ்சினர்கள்விஞ்சையருமே. (௩௫௭)

✻ ஒன்றொடொன்றுமுனையோடுமுனையுற்றுறவிழு
மொன்றொடொன்றுபிளவோடவிசையோடுபுதைய
மொன்றொடொன்றுதுணிபட்டிடவொடிக்குமுடனே
யொன்றொடொன்றிறகுகவ்வுமெதிரோடுகணையே. (௩௫௮)

✻ இடம்புரிந்திடில்வலம்புரியுமெண்ணின்முறையால்
வலம்புரிந்திடிலிடம்புரியுமண்டலமுமாய்
நடம்புரிந்துபவுரிக்கதிநடத்துமெதிரே
சலம்புரிந்ததிரமுட்டுமிருசந்தனமுமே. (௩௫௯)

✻ ஆசுபோமிவுளிமாகடவியாழியிரத
மூசுபோரிலொருவர்க்கொருவர்முந்தவிடலால்
வாசுதேவனையுமத்திரமகிபதியையுந்
தேசுவேறுதெறிகிற்றிலர்கடேவர்களுமே. (௩௬௦)

* மறமுமொத்தவழுவற்றசுழியொத்தவலிகூர்
புறமுமொத்தகதிபற்பலவுமொத்தபுகல்வா
ணிறமுமொத்தவுயரம்பருமைநீளமெனுமெய்த்
திறமுமொத்தவிருதேரில்வருதிண்பரியுமே. (௩௬௧)

* நிலையிரண்டினுறநின்றநிமலற்குநிகர்வோர்
மலையிரண்டினைவளைத்தெதிர்மலைந்தெனவே
யலையிரண்டெனவதிர்ந்துபொருமவ்விருவர்கைச்
சிலையிரண்டுநிமிராதுகணைசிந்தினர்களே. (௩௬௨.)

* தேவதத்தமுமுழக்கியுயர்தேவர்பலரா
லாவமெத்தும்வகைபெற்றபலவம்புதெரியா
மூவர்தத்தம்வடிவாமுதல்வன்மெய்ப்புதல்வன்மேற்
பூவின்மொய்த்தவறுகாலினிரைபோலவிடவே. (௩௬௩)

* பரிதியன்பொடுவழங்கியபராபரமெனும்
பெருவலம்புரிகுறித்துவிறலங்கர்பெருமான்
வரிநெடுஞ்சிலைவலாரிதிருமைந்தன்விடுதிண்
சரமடங்கவவர்தந்தசரமெய்துதறியா. (௩௬௪)

வே று.

* வெங்கோதைநெடுஞ்சிலையின்சிறுநாண்விசையோதையும்வெவ்விருதோதையும்வெண், சங்கோதையும்வண்பணையோதையுநால்வகையாகியதானைநெடுங்கடலின், பொங்கோதையுமண்டமுடைந்திடவப்புறமுற்றகலாதுசெவிப்படமற், றிங்கோதையெழுந்ததறிந்திலராவிமையாவிழியோர்முதல்யாவருமே. ()

* அங்கிக்கதிர்தந்தகொடுஞ்சிலைநாணரவக்கணையஞ்சவெறிந்துமிகச்
சங்கித்தடலங்கியளித்ததனிச்சரமேவினன்வந்துதனஞ்சயனும்
பொங்கிக்கனல்சாலமெழுந்தெனப்புகையும்படிபோயகல்வானதியின்
கங்கிற்பொறிவிட்டதுதாரகையின்கணமென்னவெழுந்ததுகாய்கனலே. ()

* இணையின்றியெழுந்தசுடுங்கனலாலிரதங்களும்வேன்முதலெப்படையுங்
கணையுஞ்சிலையுங்கவனப்பரியுங்கரியுங்கரியானவைகண்டியமன்
றுணைவன்றுணைவாகுவளர்ந்திடவுந்துணைவார்புருவங்கடுித்திடவும்
பணைவெங்குரல்கன்றிமுழங்கிடவும்பவ்வத்தரசன்றருபாணமெடா. (௩௬௭)

* பவ்வம்புனல்வற்றமுகந்துவலம்படவம்பரமூடுருவப்பரவா
வெவ்வம்புதமேழுமுடன்பொழியும்வெள்ளம்புரைவெள்ளமிகச்சொரியச்
செவ்வம்பரமொத்தகளத்திடையச்செய்யோன்மகன்வன்பொடுசீறிவிடு
மவ்வம்புநொடிப்பொழுதத்தறவோனநுசன்றழலம்பையவித்ததுவே. (௩௬௮)

* வாயுக்கணையேவினன்வானவர்கோன்மைந்தன்றிகழ்பேரொளிவான்மணியின்
சேயுற்றரகேசன்வழங்கியதிண்டிறல்வெங்கணையொன்றுதெரிந்தனனு
லாயுப்புறமிட்டுவிடப்பொருவோனரிவெங்கணையங்குமலைந்திடுவோன்
வீயுற்பலமாமுனைவெங்கணைமேல்வீசிப்பொருமுன்புவிழுங்கியதே. (௩௬௯)

* என்னம்புதனக்கெதிரில்லையெனுவிருளம்பினையேவினன்வில்விசயன்
கன்னன்கலையெட்டுடனெட்டுடைவெண்கதிரம்புதொடுத்தெதிர்கன்றினனுன்
முன்னம்புசிதைந்துசிதைந்தழியாமுகமாறியிமைத்துவிழிக்குமுனே
பின்னம்புதொடர்ந்துசெலச்செலவேபிலமூழ்கியதென்னபெரும்பிழையோ. ()

* மகவானருள்வாளிதொடுத்தனனம்மகவான்மகன்வாசிகளேழுடைவெம்
பகவானருள்வாளிதொடுத்தனனப்பகவானருடியாகபராயணனுந்
தகவாளியிரண்டுமுடன்கதுவித்தாமாதுயராதுசமம்பெறவே
முகவாய்கள்பிளந்தனமற்றுளபோர்முனைவாளியுமிப்படிமுட்டினவே. (௬௭௧)

உரகக்கொடிமன்னனுமேனையருமுனமொப்பமகிழ்ந்தணியோடுவலி
பரவத்திகழ்கின்றமையும்பகலோன்பயனிற்றருகாளையயிற்றுறுபோர்
முரணிற்றிறலுஞ்சிலைவீரன்விடுமுனைவாளிதுணிந்திடுமாறுமுணர்ந்
திரதத்தொடுசென்றருகெய்திரதற்கிவையோதினன்மாருதியேம்பலொடும். ()

வென்றுயசுரேசரைமூவுலகும்விசயம்பெறுநாமம்விளம்பிடவே
நின்றுயினன்மைந்தனுனக்கெதிராய்நிறைவாளிதுரக்கநினைந்திலைநீ
கொன்றுவியகற்றியவன்றலைகைக்கொள்வேனெனருங்கதைகொண்டுகணத்
தின்றுதுனவஞ்சினமும்பிழையாமெனநின்றனனெம்பியிதென்றிடவே. ()

ஆலுக்குளருந்துயில்கொள்வலவ்னவனுக்கிவனச்சமுறுந்தகையான்
போலுக்குவிருந்தனனுமலவேற்பொருமாறவனுக்குளவோவெனவுஞ்
சாலுக்கொருவோர்நிகரற்றவநீசமர்தாழ்த்துதல்காரணமன்றகல்கூர்
வேலுக்கிணையாகியவோர்கணையால்வீழ்த்தாயெனவுஞ்சொல்விளம்பினனே.

கொற்றத்தனுவீரர்சிகாமணியுங்கொவ்வைக்கனிவாய்நகைகோட்டிமனம் ,
பற்றக்கமலத்திலுறும்பகவன்பகழிக்குயர்பூசைபரித்தவனுப்
முற்றக்கடனின்றமரென்றுவிடமுகிலேழ்கடலேழ்புவியேழுமுடிந்
தற்றுச்செலுநாள்வடவைக்கனல்போலனல்வீசியடுத்ததயன்கணையே. ()

* உரமந்தரவெற்பினுமிக்கபுயத்துரவோனுளம்வெஞ்சினமூறியெழப்
பிரமன்கணையேவுதலுஞ்சமனுர்பின்னோன்முடுகிப்பிறைமாமவுலிப்
பரமன்கணையேவினனக்கணையப்பகவன்கணைநீறுபடுத்துதலிற்
சரமங்கவைவேறுதொடுத்திலர்கைத்தனுவுங்குனிவித்திலர்தார்முடியோர். ()

* இவ்வாறிமையோர்கள்வரங்களினுவிருவோர்களுமெய்தியமாமறைகூர்
வெவ்வாளிகளோடியுடற்றுதலால்வெஞ்சேனையடங்கமடங்கியபின்
மைவானளகந்திசைவாண்முகமாமலையாமுலைவாரிதிவண்டுகிலஞ்
செவ்வாறுபடுத்தலின்மேதினியாடிருமேனிபணிந்ததுசெவ்வணியே. (௬௭௭)

வேறு.

* மகபதிமைந்தனைமீளவுந்தினகரன்மகனுயிர்கொண்டிடவேணுமென்று
றுசின, மிகமிகவன்சிலைகோலிபொங்கிரிபலமிடைவனம்வெந்திடவோடியந்தர
மிசை,புகைகதுவும்படிசிறிவெம்பொறிவிடுபுரிதழன்மண்டியநாளிலம்பெனவரு,
மிகலுடைவெம்பகுவாய்கவைந்துடையதொரெழில்கொள்புயங்கனையேவவென்
றுசியே. (௬௭௮)

பரிமளசந்தனதீபமுங்கமழ்புகைபனிமலருங்கொடுபூசையும்பரிவுட
னருளிவணங்கியெடாவிடும்பொழுதினிலடல்வலவன்சிலகூறினன்பரிவொடு
விரிதுளபம்புனைமாயன்வஞ்சனையுளன்விசயனகன்றடமார்பகம்புதைதர
வுரகநெடுங்கணையேவுகென்றிடவவனுறுதிநினைந்திலனுதபன்குமரனே. ()

* மழுவுறுசெங்கையிராமனென்பவனருள்வரிசிலைகொண்டணிநாணிதன்
செவியொடு, தழுவுறமண்டலமாய்வளைந்திடமுதுதறுகணெடுஞ்சினமூளும்வெ
ங்கணையினை, யெழிலிமதங்கயவாகனன்றனயனதெழில்பெறுகந்தாமேதுணிந்
திடும்வகை, யழலெழுநெஞ்சொடுநாடிநின்றுதையினனளிமுரல்பங்கயநாயகன்
குமரனே. (௩அ௦)

அரவவணம்பரவாணர்கண்புதைதரவனல்விடமெங்கனுமோஇடவன்றுமிழ்ந்
திரவியுமஞ்சிடவாள்விழிவழிபொறிபெழவருகின்றதுகண்டுகாவலரெலாம்
விரவுதனஞ்சயனுவிபொன்றினனெனமிகமகிழ்கொண்டவராயினரங்கவர்
கரவறுசிந்தையுளானனிதங்கினோர்கருகிமுகந்தளர்வாயினராங்கணே. (௩அக)

* வலவனெனுந்திருமாலதன்றுணைகெழுவரவைய றிந்தணிதேரின்வன்றிகிரிக
ளிலகியவங்குலியாதிரண்டவனியிடைபுதையும்படிதாழநின்றிடுதலி
னலர்கதிர்தந்தருள்காளையம்பெனவிடுமரவுதனஞ்சயன்மார்பையுங்களையும்
விலகியவன்றனதாதையன்றுதவியவெயின்மகுடந்தனைமோதிவந்திடறவே. ()

* இடறியதிண்பணிவாளிபின்பறிதலுமெதிர்பொரவெஞ்சிலைகோலிநின்
றவனணி, பிடரினுமுண்டுகொல்பார்வையென்றிடவலிபெறநிலைநின்திருதோள்
களும்பரிவுற, வடவியின்வெந்துதன்வால்குறைந்திடவிடுமயின்முகவெங்கணை
யாலதன்பருமைகொ, ளுடலமிரண்டுடலாய்விழுந்தலமரவுதையினனும்பர்பிரா
னருள்குரிசிலே. (௩அ௩)

* பிறகுபுரிந்தெழில்கூர்தனஞ்சயன்விடுபிறைமுகவெங்கணையாலழிந்தி
டுபணி, திறலுடன்முன்றுணிசேருமைந்தலையொடுதிரியவும்வந்தெனையேவுகெ
ன்றலறவு, முறவொடுகுந்திவழாவரம்பெறுதலினுரைவழுவும்பெரிதாகுலம்புரி
யினு, மறுகணையொன்றுதொடேன்முனிந்தினியெனவரிகழலங்கர்குலாதிபன்
புகலவே. (௩அச)

* எரியிடைவெந்துடல்வாலுமுன்றறிதலினிடரறவுய்ந்திடநீபெரும்புகலெ
ன, விரைவொடுவந்தெனைவாளிகொண்டிடுகெனவிசயனைவென்றிடுமாறுளங்கரு
தவு, மொருதனிவெஞ்சிலைகால்வளைந்திலதுகொலொருபடியும்பிழைபோனதுன்
றொடையென, வரிகழலங்கர்பிரானைநொந்துரைசெய்துமறலியிடந்தனிலானத
ன்றுரகமே. (௩அரு)

வே று.

உதையத்தடஞ்சாரலுச்சிக்கணெழுபாநுவொளியென்னவே
ததையுற்றவுயர்கொற்றமுடிகையறக்குந்திதருகோமக
னிதையத்துறுங்கோவினிலைக்கோபுரம்போயிருந்தாலெனப்
புதைவுற்றதேர்மீதினெழுநின்றுளான்வென்றபுலிபோலவே. (௩அசு)

அக்காலைவெயில்காலுமொருசோதிமேல்வேலையாழ்ந்தேகுமுன்
றிக்காரமுழுத்திங்கள்குணவேலையெழுமாறுசெறியெய்தல்போன்
மைக்காளமுகின்மேனிநரனுக்குவேறொன்றுமணிமௌலிகொண்
டிக்காசினிக்காவலுனதென்றல்போற்சென்னிமிசையேத்தினான். (௩௮௭)

* நாகாயுதந்தப்பிநரனுய்ந்தபொழுதத்துநாகக்கொடிச்
சேகானநெஞ்சத்தவன்சேனையிற்றன்செருச்சேனையிற்
பாகார்கடாயானைநரபாலர்மகிழ்வோடுபரிவெய்தினா
ரேகாதசந்தன்னிலெக்கோளுநிகரென்னவிகலின்றியே. (௩௮௮)

* அருமார்பிலக்காகவெய்யென்னவெய்யாவகங்காரமும்
வருமாசுணந்தன்னைமறுகாலுமேவாமன்மறைசெய்ததும்
பொருமாறுநினைவற்றதுங்கண்டுநரனொத்தபோர்மீளியைத்
திருமாலொடொப்பானுமுளநொந்துநொந்தம்மசிலகூறுவான். (௩௮௯)

* என்னாலுமரிதித்தடந்தேர்விரைந்தூர்தலினியென்றுமற்
றுன்னாலுமரிதந்தவிசயன்றனுயிர்கொள்ளலுன்னித்தபோர்
பன்னாகதுவசற்குமரிதாலுனைக்கொண்டுபோராளுமா
றென்னாவிழிந்தானவன்றேரின்மிசைநின்றுமிசைநின்றுளான். (௩௯௦)

* என்றேயெழிற்குந்திவயினல்குதனியாளியிகலேறனான்
வன்றேர்செலுத்திப்பெரும்போர்முடிப்பிக்கவருசல்லியன்
றென்றேரிசைச்செவ்விநறைநாறுமலர்விட்டசிறைவண்டெனத்
தன்றேருமேல்கொண்டுதனிவில்லுமீளத்தரித்தானரோ. (௩௯௧)

வலிகொண்டவயமீளிவலவன்றனணிதேர்மடுத்தூர்ந்திடப்
புலிகொண்டனிகரும்புழைக்கைப்பகட்டோடுபொருமாறுபோற்
கலிகொண்டருங்கார்முகங்கோடிதூண்டிக்கனன்றெய்தினான்
வெலிகொண்டிருந்தோர்வியப்பெய்தவனல்வீசுவிசிகங்களே. (௩௯௨)

வெற்றித்திருக்கோதைவிழிநோக்கமிருதோளின்மிசைகொண்டுளோன்
பற்றிச்சிலைக்கெண்ணில்பகழிக்குலங்கொண்டுபாராடுபோர்
முற்றிக்கதிர்க்காளைமுனைவாளிபிளவெய்தமுனைகாட்டினான்
கொற்றப்பெரும்போர்மற்றவர்செய்ததெவரேகொல்குணிகூறுவோர். (௩௯௩)

அதிரும்பெரும்போரினிடைநின்றுமுகிலஞ்சவறைகுற்றனன்
முதிருஞ்சினக்கொற்றமுனிசாபமுறையாகமுனையேவினான்
கதிர்மைந்தனொண்டேர்நிலம்புக்கதெனும்வாய்மைவருங்காலனங்
கெதிருந்தடந்தேரினிகலாழிபுதைபட்டதிச்சொன்முனே. (௩௯௪)

* கதவாசிநடையற்றுவலியற்றுவரிவிற்கொள்கணையாவையும்
விதவாழிநிலனுற்றவிரைதேருமெய்வன்புமெலிவுற்றபின்
புதவாமன்மழுவாளியுரைசெய்தசாபத்தையுறவுன்னினா
னதவாமுரட்போர்தனக்கஞ்சுமோவென்றுமடலங்கர்கோன். (௩௯௫)

* இயற்கைப்பெருங்கொற்றவலியன்றியார்யாரிடத்தும்பெறுஞ்
செயற்கைப்படைத்திண்மைகைவந்திலாவெய்யசெய்யோன்மகன்
வெயர்க்கத்தனுதல்கண்சிவப்பேறமனம்வெம்பமண்மீதிழிந்
தயர்க்கச்சபித்தோனைவந்தித்துவேறோரடற்றேர்மேல். (௩௯௬)

வரிவிற்குனித்தெண்ணில்கணைமாரிபொழியங்கைவலபற்குனன்
புரிவிற்கையுடனின்றதினநாதன்மகன்மேனிபுழைபோக்கினான்
துரிவிற்செலுந்தோறுமுதிரங்கணிலமீதுசொரிதாரைவிண்
பரிவிற்செலுந்தாதைகிரணங்கள்கடலூடுபடலொத்ததே. (௩௯௭)

எத்தன்மையோரேனுமிரதம்புகாநிற்குமிடையேவுத
லுத்தங்கொலிதுவோநின்னுயராண்மையெனமீளவொருதேர்மிசை
சத்தந்தருங்கார்முகத்தோடுபுக்குத்தடங்கண்களாழ்ந்
தத்தஞ்செய்வானிற்சிவப்பேறவொருவாய்மையறைவானரோ. (௩௯௮)

மறைநீதியுடையோர்கள்வயமன்றியவமானமருவாரெனு
வறநீதிதனையெந்தனுயிருக்குளுயிராகவறநம்பினேன்
பிறநீதியினியென்னையான்பெற்றபேறின்றுகண்டீர்பெருந்
திறநீதிவழிநின்றகுரவீரினிச்சிந்தைதெளிமின்களே. (௩௯௯)

என்றானதற்கன்றுகன்றால்விளாவெற்றுமிசைமேனியான்
பொன்றாவருங்கொற்றமுடையான்றனிருகேள்விபொதுளச்சொனான்
வென்றாயெனிற்கொற்றமுடிசூடவருகாளைவிளைகைதவ
மின்றாகவத்தும்மைநலிகின்றதரமிங்ஙனென்செய்யுமே. (௪௦௦)

செய்தார்செயுஞ்சால்புசெறிவாரிதற்கென்னைதிருகுண்டுகொல்
வெய்தாயறந்தன்னைவழுவோதலெனவாங்குவீரன்றனிந்
தெய்தானனந்தங்கடுஞ்சாயகம்பண்டெதிர்ந்தோரெலா
மொய்தேர்கள்வயவாசிசிலைபாகுடன்சிந்திமுனைசாயவே. (௪௦௧)

* ஏறித்தன்வலவன்செலுத்தத்தடக்கையிலிகல்வில்லுடன்
சீறிக்கொடுஞ்சாயகங்கோடிமுகிலூர்திசேய்மேல்விடக்
காறிக்கனன்றக்கடுந்தேர்செலுத்துங்கரும்பாகனூர்
கூறிக்கொடுத்தாரருக்கன்குமரன்வன்மைகுறைகின்றதே. (௪௦௨)

* குறையற்றதன்வில்லைமகவற்குமாரன்குனித்தாசுகஞ்
சிறையற்றகிரிபோலநிற்கின்றதினகாரிசிறுவன்றன்மெய்
மறையத்தொடுத்தானுயிர்க்காலவிப்பான்மயிர்க்காறெறுங்
கறையற்றமதிபோலநிலவீனுமுத்தக்கழற்காலினான். (௪௦௩)

வேறு.

* எத்தலங்களினுமீகையாலோகைவாகையாலெதிரிலாவீரன்
மெய்த்தலமுழுதுந்திறந்துகுருதிவெயிலவன்கரங்கள்போலுகுப்பக்
கொத்தலரலங்கன்மகுடமுங்கவசகுண்டலங்களுமுருக்குலைந்துங்
கைத்தலமறந்ததில்லைவிற்குனிப்புங்கடுங்கணைதொடுத்திடுங்கணக்கும். (௪௦௪)

* அத்தவெற்பிரண்டுவிற்கிடையெனப்போயாதபன்சாய்தல்கண்டருளி
முத்தருக்கெல்லாமூலமாய்வேதமுதற்கொழுந்தாகியமுதல்வன்
சித்திரச்சிலைக்கைவிசயனைச்செருநீயொழிகெனத்தேர்மிசைநிறுத்தி
மெய்த்தவப்படிவவேதியனாகிவெயிலவன்புதல்வனையடைந்தான். (௪௦௫)

* தாண்டியதரங்கக்கருங்கடலுடுத்ததரணியிற்றளர்ந்தவர்தமக்கு
வேண்டியதருதிநீயெனக்கேட்டேன்மேருவினிடைத்தவம்பூண்டே
னீண்டியவறுமைப்பெருந்துயருழந்தேனியைந்ததொன்றிக்கணத்தளிப்பாய்
தூண்டியகவனத்துரகதத்தடந்தேர்ச்சுடர்தரத்தோன்றியதோன்றால். (௪௦௬)

* என்றுகொண்டந்தவந்தணனுரைப்பவிருசெவிக்கமுதெனக்கேட்டு
வென்றிகொள்விசயன்விசயவெங்கணையான்மெய்தளர்ந்திரதமேல்விழுவோ
னன்றெனநகைத்துத்தரத்தகுபொருணீநவில்கெனநான்மறையவனு
மொன்றியபடிநின்புண்ணியமனைத்துமுதவுகென்றலுமுளபகிழ்ந்தான். (௪௦௭)

* ஆவியோநிலையிற்கலங்கியதியாக்கையகத்ததோபுறத்ததோவறியேன்
பாவியேன்வேண்டும்பொருளெலாநயக்கும்பக்குவந்தன்னில்வந்திலையா
லோவிலாதியான்செய்புண்ணியமனைத்துமுதவினேன்கொள்கநீயுனக்குப்
பூவில்வாழயனுநிகரலனென்றாற்புண்ணியமிதனினும்பெரிதோ. (௪௦௮)

* என்னமுன்மொழிந்துகரங்குவித்திறைஞ்சவிறைஞ்சலர்க்கெழிலியேற
னையான், கன்னனையுவகைக்கருத்தினானோக்கிக்கைப்புனலுடன்றருகென்ன,
வன்னவனிதயத்தம்பின்வாயம்பாலளித்தலுமங்கையாலேற்றான், முன்னமோ
ரவுணன்செங்கைநீரேற்றுமூவுலகமுமுடன்கவர்ந்தோன். (௪௦௯)

* மல்லலந்தொடையனிருபனைமுனிவன்மகிழ்ந்துநீவேண்டியவரங்கள்
சொல்லுகவுனக்குத்தருதுமென்றுரைப்பச்சூரன்மாமதலையுஞ்சொல்வா
னல்லல்வெவ்வினையாலின்னமுற்பவமுண்டாயினுமேழெழுபிறப்பு
மில்லையென்றிரப்போர்க்கில்லையென்றுரையாவிதயநீயளித்தருளென்றான். ()

* மைத்துனனுரைத்தவாய்மைகேட்டையன்மனமலருகந்துகந்தவனைக்
கைத்தலமலரான்மார்புறத்தழுவிக்கண்மலர்க்கருணைநீராட்டி
யெத்தனைபிறவியெடுக்கினுமவற்றுளீகையுஞ்செல்வமுமெய்தி
முத்தியும்பெறுதிமுடிவிலென்றுரைத்தான்மூவருமொருவனாமூர்த்தி. :(௪௧௧)

* போற்றியகன்னன்கண்டுகண்களிப்பப்புணரிமொண்டெழுந்தகார்முகிலை
மாற்றியவடிவும்பஞ்சவாயுதமும்வயங்குகைத்தலங்களுமாகிக்
கூற்றுறழ்கராவின்வாயினின்றழைத்தகுஞ்சரராசன்முனன்று
தோற்றியபடியேதோற்றினான்முடிவுந்தோற்றமுமிலாதபைந்துளவோன். ()

* அமரரானவருமமரயோனிகளுமமருக்கதிபனானவனுங்
கமலநான்முகனுமுனிவருங்கண்டுகனகநாண்மலர்கொடுபணிந்தார்
சமரமாமுனையிற்றனஞ்சயன்கணையாற்சாய்ந்துயிர்வீடவுஞ்செங்க
ணமலநாரணனைக்காணவும்பெற்றேனென்றுதன்னகமிகமகிழ்ந்தான். (௪௧௩)

வேறு

* அருந்தழன்மாமகம்புரிந்துங்கடவுட்கங்கையாதியாம்புனல்படிந்துமனிலயோகத், திருந்துமணிமலர்தூவிப்பூசைநேர்ந்துமெங்குமாகியவுன்னையிதயத்துள்ளே, திருந்தநிலைபெறக்கண்டும்போகமெல்லாஞ்சிறுக்கியனைத்துயிருக்குஞ்செய்யவொண்ணுப், பெருந்தவங்கண்மிகப்பயின்றும்பெறுதற்கெட்டாப்பெரும்பயனின்றிருவருளாற்பெறப்பெற்றேனே. (சகச)

நீலநெடுங்கிரியுமழைமுகிலும்பவ்வநெடுநீருங்காயாவுநிகர்க்குமிந்தக்,கோலமும்வெங்கதைவாளஞ்சங்குநேமிகோதண்டமெனும்படையுங்குழையுங்காதும், மாலைநறுந்துழாய்மார்புந்திரண்டதோளுமணிக்கழுத்துஞ்செவ்விதழும்வாரிசாதக், காலமலரெனமலர்ந்தமுகமுஞ்சோதிக்கதிர்முடியுமிம்மையிலேகண்ணுற்றேனே. (சகரு)

* தருமன்மகன்முதலானவரியகாதற்றம்பியரோடமர்மலைந்துதறுகணாண்மைச்,செருவிலெனதுயிரனையதோழற்காகச்செஞ்சோற்றுக்கடன்கழித்தேன்றேவர்கோவுக், குரைபெறுநற்கவசமுங்குண்டலமுமீந்தேனுற்றபெருநல்வினைப்பேறுனக்கேதந்தேன், மருதிடைமுன்றவழ்ந்தருளுஞ்செங்கண்மாலேமாதவத்தாலொருதமியன்வாழ்ந்தவாறே. (சகசு)

* வான்பெற்றநதிகமழ்தாள்வணங்கப்பெற்றேன்மதிபெற்றதிருவுளத்தான்மதிக்கப்பெற்றேன், தேன்பெற்றதுழாயலங்கற்களபமார்புந்திருப்புயமுந்தைவந்துதீண்டப்பெற்றே, னூன்பெற்றபகழியினுலழிந்துவீழ்ந்துமுணர்வுடனின்றிருநாமமுரைக்கப்பெற்றேன், யான்பெற்றபெருந்தவப்பேறென்னையன்றியிருநிலத்திற்பிறந்தோரில்யார்பெற்றுரே. (சகஎ)

* என்றுமகிழ்வுறவணங்குமெல்லிமைந்தனின்புறவண்புறவினிலானிரையின்பின்போய்க், கன்றுகொடுவிளவெறிந்தகண்ணனன்றூனுங்கன்னனுக்குக்கட்டுரைப்பான்கடவுளாத, னன்றனதுகவசமுங்குண்டலமும்வாங்கவழைத்தேனுங்குந்தியைக்கொண்டரவவாளி, யொன்றொழியத்தொடாதவரங்கொள்வித்தேனுமுற்பவத்தினுண்மையுனக்குணர்வித்தேனும். (சகஅ)

* தக்ககன்றன்மகவானவுரகவாளிதனஞ்சயனைச்சதியாமற்சாய்வித்தேனு, மெய்க்கருணைநின்பொருட்டால்யானேயென்று மீண்டும்போய்த்தேர்வலவன்விசயற்கானு,னெக்கடலுமெக்கிரியுமெல்லாமண்ணுமிமையோருமானுடருமெல்லாமாகி, மைக்கணிளங்கோவியர்தண்டுகிலுநாளும்வரிவளையுமடநெஞ்சும்வாங்குமாலே. (சகக)

* பகலவன்றன்மதலைபைநீபகலோன்மேல்பாற்பவ்வத்திற்படுவதன்முன்படுத்தியென்ன, விகல்விசயனுறுதியுறவஞ்சரீகமெனுமம்பாலவனிதயமிலக்கமாக, வகலுலகில்வீரரெலாமதிக்கவெய்தானந்தவாசுகமுருவியப்பாலோடித், தகலுடையார்மொழிபோலத்தரணியூடு தப்பாமற்குளித்ததவன்றூனும்வீழ்ந்தான். (சஉ௦)

* கருடனதுதிருத்தோளிற்கண்டகோலக்கண்ணினுநெஞ்சினுநிற்கக்கருணையாதி, புருடனதுதிருநாமந்தனதுநாவிற்போகாமனனிவிளங்கப்புதைந்துவாளி, வருடமுடல்குளிர்விக்கச்செம்பொற்றேர்மேன்மன்னரெலாம்புடைசூழவையங்காக்குங், குருடன்மகனருகிருந்துசோகங்கூரக்குற்றுயிரினுடன்கிடந்தான்கொடையான்மிக்கோன். (சஉக)

* அணையார்தம்படைக்கடலினருநிலைக்குக்கரையேறலானகோலப்
புணையாயெத்திறங்களினும்பகிராமனூற்றதெலாம்புகலத்தக்க
துணையாயென்னுயிர்க்குயிராந்தோழனுமாகியவுன்னைத்தோற்றேனாகி
யிணையாருமிலாவரசேயாரைக்கொண்டரசாளவிருக்கின்றேனே. (சஉஉ)

* சூழ்வேலையுலகாளுஞ்சூட்சியுமிப்பெருஞ்செல்வத்துவக்குநெஞ்சால்
வீழ்வேனோவைமராடவீமனொடுதலைநாளில்விளைந்தசெற்றந்
தாழ்வேனோவுனையொழிந்துந்தம்பியரையொழிந்துமினித்தனித்துநானே
வாழ்வேனோவாழ்வேயென்மனவலியேவருகின்றேன்வருகின்றேனே. (சஉங)

எனத்தளர்ந்துசுயோதனன்பேரிரக்கமுறவிழுந்தரற்றவிருந்தவேந்தர்
மனக்கொண்டவருத்தமுடன்வலியிழந்தோமெனக்கலுழமத்திரேசன்
கனக்கொண்டல்விற்றிறங்கள்கட்டுரைப்பவுயிர்த்திருந்துகாந்தாரத்தோ
னினத்தரசைநனிதேற்றியுடன்கொண்டுசெலப்புகுந்தாரிருக்கும்பாடி. (சஉச)

வனச்சடையோனம்புயத்தோன்வலாரிமுதல்வானவர்கள்வானினின்றோர்
தனித்தமதுசார்படைந்தார்தனஞ்சயன்கைக்கணையாலேதரையில்வீழ்ந்த
வினக்கொண்டன்முழங்குவபோனந்தரதுந்துமிமுழங்கவிமையோரார்ப்ப
கனற்கொண்டகதிர்புதல்வன்பாடறிந்துமூழ்கியதாற்கடலினூடே. (சஉரு)

வேறு

முந்தியெதிர்பொருவிசயன்வெற்றிகண்டுமுனைப்படைஞர்புடைசூழ்ந்து
மொய்ப்பமொய்ம்பு, விந்தவரையெனவோங்குவீமன்மேவவிறலிளைஞர்புடைசூ
ழத்திருமாலோடு, மந்திபடுவதன்முன்புபடகமார்ப்பவறன்மகன்பாலடைந்து
தொழுதாசிபெற்றுப்,புந்திமகிழ்வுறப்பொருபோரனைத்துஞ்சொற்றார்புளகமெ
ழுந்ததுதோள்கள்பொறையறக்கம்மா. (சஉசு)

தம்பிவரைத்தோணோக்குந்தனுவைநோக்குந்தடஞ்செந்தாமரைக்கண்ண
ன்வதனநோக்கும், வெம்பியவஞ்சினநோக்கும்பரிதிதந்தோன்விறனோக்குமற
நோக்கும்விளைவுநோக்குஞ், செம்பிருந்தவிழிநோக்குந்தவத்தைநோக்குந் திற
லரசர்பெருமான்கைதவங்கணோக்கு, நம்பியிராவணியுயிர்கொண்டெய்துஞான்
றனிமகிழ்ந்தவிராமனிலுமேம்பல்பூத்தான். (சஉஎ)

* முந்தியெதிர்பொரும்விசயன்றொடுத்தகோலான்முடிசாய்ந்தின்றைவரு
க்குமுன்றோன்வீழ்ந்தா, னந்திபடுவதன்முன்னேயாவிபோமென்றசரீரியெடு
த்துரைப்பவன்னையான, குந்திதனதுளமுருகக்கண்ணீர்சோரக் குழல்சரியப்
போர்க்களத்துக்கோகோவென்று, வந்திருகைதலைபுடைத்துத்தலைநாளீன்றம
கவின்மேல்வீழ்ந்தழுதாண்மன்னோமன்னோ. (சஉஅ)

* என்றேயென்றுதையுழைக்கன்னிமாடத்தெழிலிரவிதிருவருளாலீன்
றேனின்ற, வன்றேபொற்பெட்டகத்திற்கங்கையாற்றிலாமுறையாலுனைவிடுத்
தேனருளிலாதேன், வென்றேமண்கவர்தருமன்மதலைக்காவிமித்திரனானதுகே
ட்டுன்விரங்கேட்டு, நன்றேயென்றவப்பயனென்றுன்னிவாழ்ந்தேனாகமுநீயர
சாளகடக்கின்றாயே. (சஉகூ)

ஓரைஞ்சுபேறுளராலறந்தவாதவுதிட்டிரனுதியருரகக்கொடியோனுதி, யீரைஞ்சுபதின்மருளர் தம்பிமார்களிங்கிதங்களறிந்தடைவேயேவல்செய்யப், பாரஞ்சுமொருகுடைக்கீழ் நீயேயாளும்பதமடைந்தும்விதிவலியாற் பயன்பெறுமற், காரஞ்சுகரதலத்தாயந்தோவந்தோகடவுளர்தம்மாயையினுற்கழிவுற்றுயே.

உறுகணீ்யானீமாய்வதுணர்ந்திடாதேயுறுதிபெறமனவலித்திங்குரகவானி, மறுகணீநீதொடாதவரம்பெற்றேனும்பிமாருயிரைப்புரந்தளிக்குமாறும் பெற்றேன், பெறுகடியகொடும்பாவியிவளென்னுமற்பெற்றதாயெனவென்னைநினைந்தோர்கோடி, யறுகணீமன்னவர்மதிப்பச் சிதைந்துசிந்துமளவையினுமுறைவழுவாதறங்காத்தாயே. (௬௧)

துதிபெற்றவாசவனுக்குயிர்நேரானதொடுகவசமகிழ்ந்தளித்தோய்தொன்மைநின்னை, விதிபெற்றேன்வளர்த்தெடுக்கத்தவம்பெறாதவெறுவலியேற்கென்னுளதாம்வீரரெய்தாக், கதிபெற்றமாலரசன்பின்போதாமற்கண்டிருந்தேனின்றிருந்தேன்கல்லிற்றிண்மை,மதிபெற்றகொடியேற்குன்கரத்தாற்றுநீர்வழங்குகடன்முறைபெறுதன்மகனேயென்றுள். (௬௨)

என்றென்றேயமர்க்களத்தினின்றவேந்தர்யாவருங்கேட்டதிசயிப்பவேங்கியேங்கி, யன்றன்போடெடுத்தணைத்துமுலைக்கணூறலமுதூட்டிநேயமுடனணித்தாவின்ற, கன்றெஞ்சவினைந்தினைந்துமறுகாநின்றகபிலையைப்போலென்பட்டாள்கலாபம்வீசிக், குன்றெங்குமிளஞ்சாயன்மயில்களாடுங்குருநாடன்றிருத்தேவிகுந்திதேவி. (௬௩)

வேறு.

* பேரறத்தின்மகன்முதலாம்பிள்ளைகளைவருந்தம்மைப்பெற்றபாவை
யார்கயற்கண்புனல்சொரியவழுகின்றகுரலினைக்கேட்டாழியானை
யோரிமைப்பில்வினவியிடவுள்ளபடியுரைத்ததற்பினுருமேறுண்ட
கூரெயிற்றுநாகம்போற்குலைகுலைந்துதம்முனைப்போய்க்குறுகினுரே. (௬௪)

வீழ்ந்துபுரண்டலறிவிழிகளிலொழுகுபுனலினுடன்றேறிமுற்றுந்
தாழ்ந்துயிர்கள்தள்ளாடவாழியானுடனரசர்சலதிசூழ
வாழ்ந்தசுடர்மீண்டதுபோலாயிரமாயிரந்தீபமயலோரேந்த
வாழ்ந்தஞான்றினுமெய்தாவளமடைந்தோனுடல்கிடந்தவரப்பிற்சார்ந்தார். ()

பொய்ப்பட்டகொடியிடையாள்புனக்கிளிபோற்புதல்வன்மிசைப்புரண்டுவாய்விட், டெய்ப்பட்டபுனமான்போலிரங்குமிடத்தணுகுதலுமெதிர்ந்துநின்றுள், மைப்பட்டதிருமேனிமாயனுடனைவருங்கான்மலர்மேல்வீழ்ந்து, மெய்ப்பட்டதம்மனைமாமுகநோக்கியறன்புதல்வன்விளம்புமன்றே. (௬௬)

* கன்னியிளம்பருவத்திலரியமாவெனுங்கடவுள்காதல்கூர
மன்னியமந்திரமெமக்குமின்றளவுமுரைத்திலையான்மறந்தாய்கொல்லோ
பின்னியசெஞ்சடைக்குழலாயிதென்னபேரறிவுபெற்றதாயி
னன்னியர்நன்றுயிருந்ததிப்படியேபிழைப்பிப்பதறிந்திலேமே. (௬௭)

* வைற்றிருந்தவிழியினளாயுனைப்பயந்தாண்மனமறுகவுயிராய்நின்ற
காற்றிருந்தவிடந்தேடிக்கணைபலவுமுடல்குளிப்பக்கன்றுவின்று
கூற்றிருந்தபதிதேடிக்குடியிருக்கநடந்தனையோகொற்றவேந்தாய்
விற்றிருந்திங்கைவேமுமடிவருடப்புவியாளவிதியிலாதாய். (சஙஅ)

* வைன்றெடுத்தவயவாளியெத்தனையாயிரந்தொடுத்தேனுரகத்தானீ
தான்றெடுத்தகடுங்கணைக்குத்தப்பினேனெனமகிழ்ந்தேன்சஞ்சரீகந்
தேன்றொடுத்தமலரலங்கற்றினநாதன்சேயேநின்றிருமார்பத்தில்
யான்றொடுத்தநெடும்பகழியெனைக்கெடுப்பதறிந்திலேனென்செய்தேனே. ()

* யாயுரைத்ததல்லாதுவேறுரைத்ததசரீரியென்னுந்தேவின்
வாயுரைத்ததின்றளவுங்கேட்டிலேன்கேட்டனமேல்வாட்டமுண்டோ
பேயுரைத்துத்தாலாட்டமுலைப்பாலோடுயிருண்டபித்தாவீண்டை
நீயுரைத்தபிறகறிந்தோமெம்முனையின்றெமைக்கொண்டேநேர்செய்தாயே. ()

* ஆடகனைப்புதல்வனைக்கொண்டழிப்பித்தாயிலங்கைநகர்க்கரசையன்று
வீடணனைப்பகையாக்கிக்கிளையுடனேவீழ்வித்தாய்வேலைசூழ்ந்த
நாடறியப்புகுந்தெமக்குநாயகமாங்கன்னனையுநரன்கையாலே
யீடழியப்பொருவித்தாயிமையோர்கள்வல்லவிரகியார்வல்லாரே. (சசக)

* இவ்வகையேதிருத்தமையனிணையடிக்கீழ்வீழ்ந்தலறியாயுந்தாமு
மைவரும்போய்த்தம்பாடிவீடடைந்தாராகுலத்தாலழிந்தநெஞ்சார்
பைவருமாசுணத்துவசப்பார்த்திவனைக்கொண்டேதம்பாடிபுக்கார்
தைவருதிண்சிலைத்தடக்கைச்சகுனிதனைமுதலானதரணிபாலர். (சசஉ)

இக்காதையுரைத்தவெல்லாங்கன்னபருவப்பெயராமென்றுகூறி
முக்காலமுணர்வைசம்பாயனர்சொற்றிடவுலகமூன்றுந்தன்பே
ரெக்காலங்களுஞ்செனமேசயனென்னவீற்றிருந்தவிறைவன்கேட்டுத்
தக்கானையடிதொழுதுவிழிவழியேபுனல்கலுழச்சாற்றலுற்றான். (சசங)

மாவின்வலிதேரின்வலிமதயானைவலிவாளின்வலியுண்டேனுந்
தேவின்வலியொன்றிலவேலென்பயனித்திறத்தறிவுதெளிந்தேனிப்பாற்
பாவின்வலியோகன்புகழ்பாரதர்தஞ்செயல்களெல்லாம்பகர்வாயென்னப்
பூவின்வலிந்தொழுகுநறுந்தேனேபோற்புனிதமுனிபுகல்வதானான். (சசச)

இன்னணம்வைசம்பாயனிசைத்திடுநற்கதைத்தமிழாலீட்டினான்முன்
சென்னன்மரைகமழ்நாடன்வில்லிபுத்தூரிறைவன்முந்நூற்றிருமுப்பானுங்
கன்னல்தருமொழிநல்லான்கவிசதமென்பதுநவமாங்கன்னபருவஞ்
சொன்னதிருவகைசதமைந்துடனூற்பத்தொன்பதுவாச்சொல்வர்மாதோ. ()

பதினேழாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - களசகூ.

கன்னபருவம் முற்றிற்று.

உ

ஒன்பதாவது,

சல்லியபருவம்.

பதினெட்டாம்போர்ச்சருக்கம்.

* மீனுமைகோலநெடுநரசிங்கமாகிநிலம்விரகாலளந்தகுறளா
யானுதுசீறுமழுவல்வில்லுவெல்லுமுனையலமுற்றசெங்கையவராய்
வானுடர்வந்துதொழமண்ணுடர்யாவரையுமடிவிக்கவந்தவடிவாய்
நானுவிதங்கொள்பரியாளாகிநின்றருளுநாராயணாயநமவே. (க)

* சிதையத்தன்மைந்தனையடுந்தன்மைகண்டுமொருசெயலின்றிநீடுதுயர்கூ
ரிதையத்தனுகியகல்பகலோன்மறித்தவுணரெதிரஞ்சுமாறுபொருதா
னுதையத்தடங்கிரியுமொளிபற்பராககிரியொப்பாகவீசுகதிரிற்
புதையப்பரந்தவகலிருளுந்துரந்துரகர்புவனத்தினூடுபுகவே. (உ)

* கண்டுஞ்சலின்றியிரவிருகண்ணிலான்மதலைகண்ணீர்மூழ்கியெவரைக் [போ
கொண்டுஞ்செகுத்து முனைமுடிவிப்ப தென்றுயர்சகுனியொடுமெண்ணியிருள்
புண்டுஞ்சுகித்துமலர்மதுவொன்றுசாதிமுதலொண்போதுவிட்டுஞிமிறும்
வண்டுஞ்சுரும்புமரவிந்தத்தடத்துவரவருவோனைவந்தனைசெய்தான். (ங)

அக்காலையிற்சிலைவலிக்காகுமிக்கவரிலச்சாணியொத்தகிருப
னிக்காளைபக்கலினிதுற்றேயுரைத்தனனினிப்போர்முடிக்கநினையே
லுக்கார்வலிக்கொருவருற்றுயினித்தமியனெப்பார்புவிக்குளுலவை
நற்கான்முளைக்குமொருவிற்காளைக்குமுனையேகேனலங்கொள்புகழோய். ()

நின்றந்தையுந்தமருநின்றுயருந்தநியைநேர்வாளுமாகுலமுற
வென்றந்தருஞ்சமரினேர்ந்தாவிதுஞ்சிவிடன்மேம்பட்டதன்றுலகெலா
முன்றந்தபரிசாகவவரோடுமுறையாளல்கடனுகுமான்
மின்றந்தவேல்வென்றியோயானுறச்செய்வன்மீள்கென்னவே. (ரு)

விதியுந்துசெயலாளியவ்வாய்மைகொள்ளாதுவெம்போரிலக்காகவான்
றுதியுந்தவிழலன்றிவாழேனெனக்காவிதுறந்தாரையுணர்வீர்பலர்ச்
சதியுந்தவென்னுவிபெரிதோவெனச்சொற்றடுத்தெய்தினன்முன்னையூழ்
மதியுந்துமாவின்கண்வசையுந்தமொழியுந்துமடமன்னவன்பின்னரும். (சு)

* தொல்லாண்மையெந்தைமுதுதந்தைக்குமைந்துறுதுரோணற்குமண்ணி
னிகர்வே, றில்லாதவண்மைபுனைவெயிலோன்மகற்குமுடனெண்ணத்தகுந்திற
லினன், வில்லாண்மையாலும்வடிவாளாண்மையாலுமயில்வேலாண்மையாலுமம
வனே, யல்லாதுவேறுசிலரிலரென்றுசல்லியனையதியாதரத்தொடழையா. (எ)

* நீயேயெனக்குயிருநீயேயெனக்குளமுநீயேயெனக்குநிதியு
நீயேதுணைப்புயமுநீயேவிழித்துணையுநீயேயனைத்துநிலையு
நீயேமுனைச்செருவிலதிரதரின்மாரதரினிகரற்றகோவுமதனு
னீயேமுடித்தியெனதெண்ணத்தையென்றுவகைநிகழாவியந்துபுகழா. (௮)

* மன்பட்டவர்த்தனருமணிமகுடவர்த்தனருமுறையால்வணங்கவொளிகா
னன்பட்டமுந்தனதுகையாலணிந்துபடைநாலுக்குநாயகமெனு
மின்பட்டவோடைநுதலிபராசன்வன்பிடரின்மிசைவைத்துகந்தனனரோ[வே.
வென்பட்டதப்பொழுது குருசேனைமெய்ப்புளக மெழவொண்கண் முத்தமெழ

* சேனாபதிக்குவரிசைகள்யாவுநல்கியுயர்தெய்வீகமதானபுனலிற்
றானமாடிமறைவாணர்க்கநேகவிததானஞ்சொரிந்துதுகிலுந்
தேனாரலங்கல்பலகலனோடணிந்துபொருதேரிற்புகுந்தனன்வழா
வானாளுநாதனதிர்முகிலிற்புகுந்ததனவன்போடுமன்னர்தொழவே. (௧௦)

* கிருபாரியன்கடவுன்மருகன்றிகத்தபதிசாலுவன்கிருபன்முதலோ
ரிருபாலுமன்னர்வரமுனிவார்பெருஞ்சேனையெங்கணுஞ்சூழவரவே
நிருபாதிபன்றனதுசேனாதிபன்றனொடுநீள்களம்புக்கனனரும்
பொருபாரதச்சமரமின்றேமுடிப்பலெனுமெண்ணத்தினோடுபொரவே. (௧௧)

* தாமந்தராதிபர்கள்பலரொடும்வலப்புடைசலிப்பின்றியணியவிறல்கூர்
மாமந்தராதிபர்கள்பலரொடுமிடைப்புடைவகுப்பொடணியத்தினகரன்
கோமைந்தன்மைந்தரிருவோரொடுஞ்சேனையைக்கொண்டுறவணிந்தனனிகற்
சாமந்தர்மண்டலிகர்முடிமன்னர்சூழ்வரத்தரணிபதிபின்னணியவே. (௧௨)

* ஒருவருமெனக்குநிகரில்லையெனுமத்திரன்புத்திரனையுரகதுவசன்
பொருபடைமுனைக்குரியசேனாபதிப்பெயர்புனைந்தமைபுகன்றனமினிக்
குருகுலம்விளங்கவருகுந்திமைந்தர்களிரவிகுமரனைக்கொன்றவிரவிற்
பருவரன்மிகுந்துளமுனைந்ததும்பாசறைபுகுந்ததும்வியந்துபகர்வாம். (௧௩)

வேறு.

* செவ்விரவிதிருமகனைச்செகம்புரக்குங்காவலனையிரவலோருக்
கெவ்விரவும்விடிவிக்குமிருகரத்துவள்ளலையின்றிழந்தோமென்று
விவ்விரவுநறுமலர்த்தார்த்தருமன்முதலைவருந்தம்விழிநீர்சோர
வவ்விரவிலிமைப்பொழுதுந்தரியாமலழுதரற்றியலமந்தாரே. (௧௪)

* சாயைவெறுத்தனளவளிற்றலத்தேவிமிகவெறுத்தாடபனனீன்ற
சேயைவெறுத்துயிர்கவர்ந்தானுறவறியான்றயித்தியர்போர்செயித்தானென்று
மாயைவெறுத்திடவிளைத்தமாயோனைவெறுத்தனன்வன்மனத்தியான
யாயைவெறுத்தனன்பின்னைவிதியைவெறுத்தனன்வீமற்கிளையகோவே. (௧௫)

* அற்றையிராவிடிவளவுந்தனித்தனியேயாகுலமுற்றனிலன்மைந்தன்
மற்றைநால்வருமாலுமன்னவரும்வருந்தினியுமருங்குசூழ
விற்றைநாள்வஞ்சினத்தின்குறைமுடிக்கவேண்டுமெனுமிதயத்தோடும்
பிற்றைநான்முரசதிரவளைமுழங்கக்களம்புகுந்தான்பிதாவைப்போல்வான். ()

* விம்முபெரும்பணையொலியால்விண்டதுகொலண்டமெனவின்றோஞ்சக்
கைம்முகமாமுதலானகடுஞ்சேனைப்பாஞ்சாலன்காதன்மைந்த
னெம்முகமுந்தானாகியிரதமூர்ந்தணிவகுக்கவினையோர்யாருந்
தம்முனைவந்தடிவணங்கிப்புடைசூழ்ந்தார்சிறிதுமனஞ்சலிப்பிலாதார். (௧௭)

* அத்திரயூகமதாகவரும்பெருஞ்சேனையைவகுத்தாங்கதிபனாகி
மத்திரபூபதிநின்றவலியினைக்கண்டதிசயித்துமாலைநோக்கி
யித்திரமாகியபடையோடெப்படிநாஞ்சிலபடைகொண்டெதிர்ப்பதென்றான்
குத்திரமாகியவினைகளொருகாலுந்திருவுளத்திற்குடிபுகாதான். (௧௮)

* வீடுமனைச்சிலைக்குருவாம்வேதியனைறம்முனைமுன்வீடுசேர்த்த
நீடுமணிப்பொலங்கழலோர்நின்னருகேநிற்கின்றார்நிகரிலாய்கே
லாடுதிரைக்கடனீந்தியேறினர்க்குக்கழிகடத்தலரியதொன்றோ
தோடவிழ்தார்ச்சல்லியனுக்கிளைப்பரோவெனமொழிந்தான்றுளபமாலை. (௧௯)

* வில்லியரில்வேலாளில்வாளெடுத்தோர்தம்மிலொருவேந்தரொவ்வார்
செல்லியல்வெம்பரியாளிற்கரியாளிற்றேராளிற்சிலர்வேறொவ்வார்
மல்லியல்பொற்றோள்வலிக்குந்தண்டுக்குமெதிர்ந்துபொரவல்லார்யாரே
சல்லியனுக்கொப்பார்நின்றம்பியரிலிலரென்றுஞ்சாற்றினானே. (௨௦)

* அருவரையோரிரண்டிருபாலமைந்தனையதடம்புயங்கண்டவனிவேந்தர்
வெருவருபோர்மத்திரத்தான்வேறொருவர்மேற்செல்லானின்மேலன்றி
யிருவருமேமுனைந்துமுனைந்திரவிகடல்விழுமளவுமிகல்செய்தாலு
மொருவரொருவரைவேறலொண்ணாதின்றுமக்கென்றுமுரைசெய்தானே. ()

* பார்த்தனொருவனுஞ்சென்றுபரித்தாமாவுடன்மலையப்படைஞரோடு
மாத்திரிமைந்தரிலிளையோன்சௌபலனைவெல்லவிகன்மாவலோனு
மூத்தவன்மைந்தரைவெல்லமுனைப்பவனன்மைந்தனொடுமூண்டுவெம்போர்
கோத்தருமமத்திரத்தார்கோவையுயிர்கவர்தியெனக்கூறியிட்டான். (௨௨)

கருணைபொழிபசுந்திருமால்மொழிகேட்டுச்சிரந்தாங்கிக்காவல்வேந்தர்
வருணமுயர்மணித்தேருமதகரியும்வாம்பரியும்வயவரான
பொருநர்குழுவும்பகுப்பாற்புகவேகியெதிரார்த்துமுரசமார்ப்பத்
தருணவெயிலுமிழ்படைகள்சுழலவெதிர்ந்தனர்கடலின்றன்மைமான. (௨௩)

வடிபட்டகொடுங்கணைகண்மாரிபொழிசுயோதனன்வாகினியுநேர்ந்து
கொடிபட்டதேரொடுதேர்க்கொடுங்கரிகளுடன்கரிகள்குலவுபாய்மா
நொடிபட்டபொழுதில்வருகதிப்பாய்மாவொடுதலைப்பெய்தார்ப்பநோன்றா
ளிடிபட்டசொல்வயவர்வயவரொடுமுனைந்தனரெண்டிசையுமுட்க. (௨௪)

விற்பொழியுங்கணைமாரிகளினாலுங்கதையாலும்வேலினாலும்
பற்பலவாம்படையாலுமொருவரொருவரையோச்சும்பரிசுதன்னா
லெற்படுவாகினியிரண்டிலேற்றதிறல்நாற்படையுமிறந்துசிந்தி
முற்படுசெங்குருதிகள்போய்க்கடலலைப்பப்பிணப்பிறங்கன்முடுகிற்றெங்கும்.

* ஆயபோதினிற்குருபதிபதாகினிக்கதிபதியாயபூபதியும்
மாயவன்புகன்மொழிப்படிதருமன்மாமதலைமேல்விரைவுடன்வந்தான்
காயும்வெங்கனற்கண்ணினன்செவியுறக்கார்முகங்குனித்தசெங்கரத்தான்
றீயவாகியசிலீமுகமுரானுமச்சொரிதருசிங்கவேறனையான். (௨௬)

இருவருடைக்கொடித்தடந்தேரிரண்டுமெதிரெதிராய்வந்தெய்தக்கைக்கொள்
பொருவருதிண்சிலைவளைத்துநாணெறிந்துகனல்வாளிபோக்கும்போதிற்
றருவருவானுலகத்தார்சலித்தனர்கள்திசையானைசலித்ததேபோ
லொருவருமிப்போர்போலும்போரறியோமெனவுரையாதவர்களின்றே. ()

வேறு.

பலகணைகளிருவர்சிலைகளினுதவுமிடையிலெழுபரவைபுனல்சுவறிமுகில்விண்
டலமதனையொருவிவரைகளினடையவெழுசிகரசயிலமசைவுறவெழுவகை
யுலகமிடிபடவமரர்விழிபொதுளமுடுகியனனுமிழவருவிசையினுறலா
லிலகுகதிரவனுமவனிரதமுறுபரியுமுறுமிடரையெவர்புகலவுரியோர். (௨௮)

சாதநிலையிடுநிருபன்விடுகணைகளைதிரிசிலைதருகணைகடுணிசெயொலியும், விரதமுயர்பருதிசுதனொருவலவனடுகணைகள் விடுகணைகள்பொடிசெயொலியும், வரதரிருவர்கள்பவளவிதழினிடையிடையிலெழு வளையினொலிகளுமுருள் கொடேர், பரதநடமிடுமொலியுமுறையொலியுமலதொலிகள் பகரவிலையமர்செய்களமே. (௨௯)

ஒருகணையினுயர்கொடியுமிருகணையினுகள்பரியுமொருகணையில்வலவன்முடியு, மிருகணையினுறுசிலையுமணிரதமுமுடன்முரசமெழுதுகொடியிறைபுவியின்மேற், குருதிவிழிபொறியுதவநிலவுபொழுதினிலருகுகுலகிரியைநிகரிரதமேற், பொருகரிகள்முனமரியினிலைமையெனவொளிருலவைபுதல்வனவன்மிசைபொதுளினன். (௩௦)

ஒருபகழிதனிலினியசிலைதுணியவிருகணையினுருளழியவொருசரமதாற், பொருகரிகொள்கொடியுமொருகணையில்வலவனுமரிய பொடிகள்படவிடைமுடுகினன், கருதரியபுயவலிகொள்சிலையுடையவரிமதலைகணைகள்புயமுறவுருவலாற், பொருசமரமுனையழிவுபடவெதிரியனிகபதிபுவியிரதமிசைவிரவினன். ()

அனையபொழுதினில்வலவர்கோனருமணியிரதமிசையணுகியொருசிலையைவளையா, முனைகொள்பலபகழிமழைமுடுகியிவனிரதமொடுமுறைகொள்சிலைகொடிவலவனோ, டினையபடியடவுலவைதருகுமரனொருகதையிலிவனெழுதனெறியடையவே, புனைமகுடமொடுசிதறியவனிமிசையுறநிறுவுபொழுதெவர்கடுதிசெய்திலரே. (௩௨)

மடமையரவெழுதுகொடிமகிபனுடையனிகபதிமருளவுரைபல்கொளுவியே
கடமையெனவமர்புரியவரிபடைஞர்பலவயுதகடகமுடைபடமுடுகியே
தடமகுடநிருபர்படவிரதகசபரிவபவர்தலைகடிசைதொறுமுருளவே
புடவிகிடுகிடுகிடெனகதைகொடுலவினனுலவைபுதல்வனடுகளமுழுதுமே. ()

விருதுபுனையரியெழுதுகொடிவயவனடுமுனையில்வெருவிமுதுகிடுமவரலாற்
கருதுபடைகொடுவருவதுனைருமறிவினரரிதுகளமதனிலெனுமளவில்விற்
பொருதுமுறிபடவகிலமிசைநிலவுமனிகபதிபுயமதிரவிழிபொறியுக [ரா
மருவுநுதல்வெயர்கொளுவவிதழ்கதனவதிவிரைவின் வலிபவனன்மகனையெதி

விருவுமுனைமறலிநகர்விடுவலினியறிகவெனவிருதுபலவுரைசெய்தொருதே
ர், மரமதனிலெறியவிருபுயமுறலுமொருநிமிடமனதவசமுறநிலையினுன், கரவு
ணர்கிலுலவைதருபுதல்வனவனொருபெரியகனகமணிரதமணுகியே, பரவுபுரவ
லர்களொடுமொருவிமுனைதனிவிலொடுபடைஞர்மிசைபொருதணுகினுன். ()

வேறு.

* தோமரந்தன்னுல்வாயுசுதனமரழிந்தபோழ்தி
லேமருவரிவிற்ருனையிருபெருஞ்சேனையோரு
மாமருதடந்தேர்வாசிமத்தவாரணங்களூர்ந்து
திமருகானமென்னத்தனிச்தனிச்செருச்செய்தாரே. (௩௬)

* தேரவன்மைந்தன்மைந்தர்சித்திரசேனனேனைச்
சூரியவன்மன்சித்திரகிர்த்திமுச்சுடரோடொப்பார்
வீரரில்வீரனனவெம்பரிநகுலனேடும்
போரில்வந்தெதிர்ந்துதாதைபோயுழிப்போயினுரே. (௩௭)

* தசையுறவளர்ந்தபொற்றேட்சகுனியுந்தனயராகி
யிசையுடன்வளர்ந்தவீரரிருவருமிரதமேலோர்
நிசையுறுமதமாவந்துநெருப்பெதிர்பட்டதென்ன
யிசையனதிளவலோடுசெருச்செய்துவென்னிட்டாரே. (௩௮)

மாலுருதிகத்தர்கோமான்வயங்கொள்சஞ்சயத்தார்மற்றுஞ்
சாலுவன்முதலாவுள்ளதரணிபர்விசயனேடு
மேலுறவடர்த்துநிற்பவெகுண்டவன்பகழிகோடி
யேலுறவிடுத்துமாய்த்தானிருதுணியாகிவீழ்ந்தார். (௩௯)

குலப்பெரும்பகையாய்த்தோன்றிக்கொடுஞ்சமர்புரிநாடோறு
மலக்கணுற்றயரவல்விலருச்சுனனெடுபோர்செய்த
விலக்கமில்தேரோரியாருமிலையெனப்புகலத்தேடி
யுலைத்தெதிரின்றிநின்றுனும்பர்கோனுதவுமைந்தன். (௪௦)

* இருபெருஞ்சேனையோருமிப்படிச்செருச்செய்காலைத்
தருமன்மாமதலைதன்மேற்சல்லியன்றுனுமீளப்
பொருபரித்தடந்தேருந்திப்புகைகெழுமுனைகொள்வாளி
யொருதொடைதன்னிலோரேழுரத்துடன்றுரத்தினனே. (௪௧)

கதித்துரகத்தேருந்திக்கவுந்திமுன்பபந்தகானை
யெதிர்த்தொருநூறுநூறுபுங்கவமிருக்கிற்போக்கி
மதித்திடாவாண்மைமிக்கமத்திரபூபன்விட்ட
விதிக்கிணைப்பகழியாவும்விலக்கினனென்பமாதோ. (௪௨)

ஆயவக்காலைவிமனயர்வகன்றருந்தேரேறி
மாயவொண்சிலையுந்தாங்கிவாகினியிருபாற்சூழத்
தேயமன்னவர்கடம்மைத்திசைதிசையிரியல்போக்கித்
தூயமத்திரன்மேல்வந்தான்ருெடுகணைக்கிலக்கிலாதான். (சங)

* தனக்கெதிர்தானேயானசல்லியன்றானுமீளச்
சினக்கனன்மூளவாளச்சிலம்பெனச்சிலையும்வாங்கிக்
கனக்குலமேழுஞ்சேரக்கன்மழைபொழிந்ததென்ன
முனைக்கடுங்கணையால்வீமன்வடிவெலாமூழ்கவெய்தான். (சச)

* அறைகழல்வீமன்ருனுமங்கர்கோன்பாகன்ருனு
முறைமுறைபுரிந்தவெம்போர்மொழிவதற்கியாவர்வல்லார்
நறைமிகுதும்பைமாலைநகுலசாதேவரென்னு
மிறைவருஞ்செங்கண்மாயனிளவலுமிவன்மேற்சென்ருர். (சரு)

* சென்றுவெஞ்சிலைகள்கோலிச்சிலீமுகமுறப்புத்தோறு
மொன்றெனவநேகமேவியொருமுகமாகப்போர்செய்
தின்றிவனுவிகோறுமென்றுசல்லியன்மேற்றங்கள்
வன்றிறல்யாவுங்காட்டிமாறில்போர்மலைந்திட்டாரே. (சசா)

* மதம்படுவேழமன்னமத்திராசன்ருனும்
விதம்படத்திரண்டுபோர்செய்வீரர்தம்மெய்களெல்லாஞ்
சதம்படுபகழியோரோர்தனுக்களினுருவியோட
விதம்படவெய்துநக்கானேவினுக்கிராமன்போல்வான். (சஎ)

* தம்பிமார்தளர்ச்சிகண்டுசமீரணன்புதல்வன்சீறித்
தும்பைமாமாலைவேய்ந்துதொடுகணைவலிதின்வாங்கி
வெம்புபோர்மத்திரேசன்வியன்கொடிபாகுவாசி
செம்புனீர்சொரிகளத்திற்சிதறிடவறுத்துவீழ்த்தான். (சஅ)

தேரிழந்தொருதேரேறிச்செலுத்திமீண்டடையுமுன்னர்
காரிழிந்துருமுற்றென்னக்கரிபரிகாலாளெல்லாம்
பேரழிந்தோடக்கோல்கள்பெய்துகுன்றங்கள்செய்ய
நீரிழிந்தென்னமாய்த்துக்களேபரநிலைகள்செய்தான். (சகூ)

வீமனைச்சேர்ந்தகோலவிழியினுனேக்கிவாசத்
தாமன்மற்றொருதேரேரிச்சரமழைபொழியவந்தான்
பூமனைபனையவெற்றியுதிட்டிரன்முதற்பூபாலர்
நிமனமுந்தவுந்துதேரினர்செருச்செய்தாரே. (ருo)

வேறு.

அருளுந்துசிந்தைமறைமுனிமைந்தனும்பரவையனிகந்திரண்டுவரவோர்
மருளுந்தலைக்குலைகொளிரதம்புகுந்துசிலைவரைகொண்டடங்கமருவா
ரிருளுந்துமுன்றுனிவுபடவென்றிகொண்டடைதுமெனவந்தெதிர்ந்தனனரோ
தெருளுந்துமஞ்சுரர்கள்பதிமைந்தன்முன்புமதிதினமுந்தினன்கனுறல்போல்

அதுகண்டகன்ககனபதிமைந்தனும்பொருவிலதுகொண்டருங்குணநிதி, முதுகொண்டல்வந்துபொழிமழையென்னவொண்கணைகண்முனிமைந்தனஞ்ச விடலா, விதுகன்றுகன்றிதெனநகைகொண்டுதன்சிலையிலெழுமம்புதந்ததனை யைம், பதுகண்டமொன்றுதுணிபடவென்றுநின்றுபலபலதன்மைகொண்டமர் செய்தார். (ருஉ)

ககனங்குலைந்துவரையினமும்பிளந்துபுவிமுழுதுங்கலந்தகனலாற்
றகனம்பொருந்துவனமெனவங்கயர்ந்துகடறருதண்சலங்குறைவுரு
விகனம்புகுந்திசையிலிபமுங்கலங்கமுனையிணைநின்றருஞ்சமர்செய்தார்
மகனன்புறுஞ்சுரர்கள்பதிமைந்தனுஞ்சுருதிமுனிமைந்தனுங்கலைவலோர். ()

பரிதன்னுதேரின்மிசைமதிவிஞ்சுபாகன்மிசைபயிலும்பதாகைமிசைகட்
பெரிதன்னுவீரன்மிசைசிலைதன்னுநாரிமிசைபெயருந்துமாவின்மிசையு
மெரிதன்னுமாமுனிவன்விடுகின்றகூர்கொள்கணையெவர்கண்டுகூறவுரியோர்
புரிகின்றவாளமரிலரிதந்தமீளிகணைபொடிகண்டுமீளவுமரோ. (ருச)

கணையைந்திலுந்திரதமிணையம்பிலின்பரிகள்கணையொன்றிலொண்கவசமுந்
துணையம்பில்வென்றிபடுசிலையுந்தகர்ந்துமுனிசுதனும்பயந்தகலவே
யிணையின்றிநின்றமகபதிமைந்தனன்றுகணையினில்வென்றுநின்றனனரோ
பணையுர்தவுந்திமலரரிகொண்டிருந்தவொருபணிலங்கறங்கவவனே. (ருரு)

சிலையற்றகன்றமுனிமகனக்கணம்பொறிகடிசையுக்கவொன்றுவிழியா
நிலையுற்றவென்றிதருகிரியொத்தடைந்திரதநினைவுக்குமுன்செல்கதியின்
றலைபுக்கிவெஞ்சிலையுமிடல்பற்றிவந்துசமர்தரநிற்குமுன்பொடிசெய்தான்
கொலைபற்றுவெஞ்சிலையுமிரதத்தையுங்கவிகொள்கொடிபெற்றவன்கணைகளால்

அமரற்றகன்புவியின்மிசைநிற்குமைந்தனரியுடனிற்குமங்கைவிறலோ ன், சமரிற்றுணிந்துவிழுமெனவுட்கவங்கொர்கதைதனையுய்ப்பவெங்கணைகள் கொண், டிமனுட்கவெண்டிசையுமிகவுட்கநுண்டுகள்செய்தெதிருற்றனன்சிலை யொடுந், தமரிற்பொலிந்தபடையொலிபுக்கதும்பர்செவிதருமத்தின்மைந்தன ணிவாய். (ருஎ)

கதமிக்குயர்ந்துசிலைமுனிபெற்றவன்விழிகள்கனல்கக்கநின்றுநகையா
மதமிக்குயர்ந்தவலியொடுகைக்கொளுங்கனகவரையொத்திருந்தவெழுவொன்
றிதமித்தெறிந்துதடைபுரிகிற்றியிங்கிதனையெனவச்சிரன்பவுரிகூர்
சுதனுய்த்திடுங்கணைகள்பலபுக்குறுங்கவதுதுகள்பட்டழிந்ததெழுவே. (ருஅ)

எழுவைத்தடிந்துபொரவருசக்கிரிதந்தசுதனெதிர்நிற்கிலன்பெயர்கொண்மா
னுழுவைக்கிடந்ததெனமுனைவிட்டகன்றிடலுமதனைத்தெரிந்துகிருபன்
வழுவற்றதன்சிலையும்வளையக்கொடுங்கணைகண்மழையொப்பவந்தணுகினன்
றழுவிப்பெரும்படைஞரிருபக்கமுங்குறுகுதமரத்தொடுங்கடுகியே. (ருகூ)

கடுகக்கடுங்கணைகள்சொரிவிக்கிரமன்றனெதிர்கவனத்துரங்கமுறுதேர்
முடுகிப்பசுங்களபமுகிலுய்ப்பமன்றல்கமழ்முளரித்தடங்கணுடையான்
விடுபொற்சரங்கள்படைஞரைமுட்டிமண்டலிகர்வெருவப்புகுந்துமறையோ
னடுகொற்றவெஞ்சிலையுமிரதத்தையும்பொடிசெய்தனிகத்தையும்புரியவே. ()

புரியக்கொடும்பகழிகளினுட்கியங்குமுனிபுறமிட்டுவன்றிறலழிந்
திரியக்கணங்கிருதவருமப்பெரும்பெயர்கொளிறைதக்கதம்பியரொடுங்
கிரியொத்திலங்கிரதமிசைபுக்கிநின்றமர்செய்கிரணக்கடுங்கணைகளா
லரிமைத்துனன்றனுடலமிழத்துரந்தனர்களதிரத்திரிந்தனர்களே. (௬௧)

அதிரத்திரிந்துசமர்புரியுக்கிரந்தெரியுமளவிற்சிவந்தவிழியோன்
முதிரக்கொடுங்கணைகண்முனையிற்பிளந்துபலமுடிவைத்தமண்டலிகர்மெய்
பிதிரக்கிடுங்கவசமறவெய்பெனுஞ்சிலைகள்பிளவுற்றயங்குரமற
வுதிரத்தருந்துவசமுடுவிற்கணம்படுமுனுதிரத்தொடுஞ்சுலவினான். (௬௨)

சுலவித்தடங்கிரிகணிகரொத்ததும்பிபரியிரதத்தொடுந்தொகுதியாய்ச்
குலவிப்பெரும்படைஞரொடுபுக்கவெம்படைகள்பிணமுற்றருங்குவடுறப்
புலவிற்களம்பொதுளநரனுற்றிடுங்கணைகள்புகலற்குணந்தவரியார்
பலவிற்கொடும்பகைஞர்பனிபட்டெழும்பருதிபடலக்கரம்புரையவே. (௬௩)

வேறு.

தண்டுழாய்முகிலூர்ந்ததேர்மிசைவருந்தனஞ்சயன்சரசால
மண்டுதீயெழவாகினியனைத்தையுமாற்றிமற்றொருதேர்மேற்
கொண்டுநின்றனர்கிருதவன்மப்பெயர்குறித்தகாளையினோடும்
பண்டுதித்தவரெழுவரையாருயிர்படுத்தினான்கடுத்தம்மா. (௬௪)

தம்பிமாருயிர்வானுறநிகரிலாச்சயிலமொத்தொருதேர்மேல்
வெம்பிவந்தமர்பொருமுடிமன்னனைவிற்றுணித்தடுவாசி
பம்பிவீழ்தரப்படுத்தரும்பாகனோடணிமணிபடுந்தேரு
மிம்பர்வீட்டிநின்னுயிர்கொடுபோகெனவிசைத்துவிட்டனன்மாதோ. (௬௫)

ஒன்னலார்பலர்வீந்திடக்களமெலாமுதிரவாரிகளோட
மன்னர்மன்னவன்றிகைத்திடக்கொடுஞ்சமர்மலைந்தெதிர்காணாய்
நன்னலந்தருதேவதத்தப்பெயர்வளையொலிதிசைநாட்டிக்
கன்னல்வேலெனத்திருகினன்றம்முனுங்காவலனுறுபாங்கர். (௬௬)

* சாத்தகிப்பெயரவன்சமீரணன்மகனகுலன்வெஞ்சாதேவன்
பார்த்தனென்றிவரனைவருமிவர்பெரும்படைத்தலைவருஞ்சேர
வார்த்தெழுந்துமேல்வருதல்கண்டணிகழலாளியேறனையானும்
பேர்த்துமுந்துறத்திருகினனரசொடும்பெரும்படையொடுமம்மா. (௬௭)

தந்திவான்பரிதேர்பதாதிகள்புடைசார்ந்துசார்ந்தமர்மோத
வந்தமன்னவர்மலைந்தனர்மணிமுடிமன்னரோடிகலாக
விந்தமன்னதோட்சல்லியன்கண்மலர்மெய்யினுஞ்சிவப்பேற
முந்திநின்றுகார்முகங்குனித்தடுகணைமூடினான்றிசைதோறும். (௬௮)

* தண்டுழாய்முடிமாயவன்றம்பியைச்சாயகம்பலகோடி
கொண்டுதேர்முதலியாவையுமழிந்துமெய்குலைந்திடும்படிமோதி
மண்டுபாய்பரிநகுலனையன்புடைமருகனென்றெண்ணாமற்
கொண்டல்வாயிடிநெருப்பெனச்சிற்சிலகூரவாளியினெய்தான். (௬௯)

* ஒருகொடுங்கணைதொடுத்தலும்வென்கொடுத்தோடினன்சாதேவ
னிருபொடுங்கணைக்கிலக்கமாயினன்மருத்தின்றவனிருதோளும்
பொருகடுங்கணைமூன்றினாலருச்சுனன்புயமுமார்பமும்புண்செய்
தருகொடுங்குறநுதலின்மேலம்புநாலறத்தின்மைந்தனையெய்தான். (எ0)

* அறத்தின்மைந்தனதானனங்குருதியாலருக்கன்மண்டலம்போல
நிறத்தவாறுகண்டருகுறக்கதைகொடுநின்றவாயுவின்மைந்தன்
மறத்தடம்புயவரிசிலைச்சல்லியன்மணிமுடிகழன்றோடிப்
புறத்துவீழ்தரவெறிந்தனனெறிந்தமைபுயங்கமகேதனன்கண்டான். (எக)

வேறு.

பூந்தராதலமுழுதொருகுடைநிழற்பொருத்தி
வேந்தராரும்வந்தடிதொழவிளங்கியகொடியோன்
சேந்தகண்களுஞ்சிற்றமுமாற்றலுந்திகழப்
பாய்ந்தவாம்பரித்தேரின்மேற்பலரொடுஞ்சார்ந்தான். (எஉ)

எடுத்தவிற்குனித்தாசுகமெண்ணிலதூண்டி
யடுத்தபோதினிலரிதருங்கொடியுருமேறு
கடுத்துவாண்முகங்கனலெழக்கட்கடைபெதிர்போய்
மடுத்தருங்கணைசொரிந்தனன்மழைசெய்வில்வளைத்தே. (எங)

தேறுசாயகமொன்றொடொன்றாழியிற்செந்தி
மாறும்வண்ணநின்றமர்பொரமற்றவரசனி
யேறுபோன்றுபற்பலவுரையியம்பிநின்றிகலி
நீறுகண்டனரிருவர்பொற்றேரையுநெறியால். (எச)

தேர்சிதைந்தகன்றிடவிருவீரருந்தெழித்துப்
பாரிழிந்துறப்படர்ந்துவாளமர்களும்பயிற்றி
நேரிலாதவக்கதைகள்கொண்டடித்திடநேரார்
போரிதென்கொலோபுதுமையென்றயிர்த்தனர்புலவோர். (எரு)

அனையகாலையிற்சமீரணியடித்தவான்கதையாற்
புனையுமௌலியுந்தும்பையும்பொடிபடவரசன்
முனையழிந்துவென்னிட்டனன்முதல்வனுங்குணர்ந்து
கனைபொலன்கழற்சல்லியன்கார்முகம்வளைத்தான். (எசு)

வேறு.

* நேரிலாதகிருபப்பெயர்விறற்குருவுநீடுசாலுவனுமற்புயமணிச்சிகர
வீரனனசகுனிப்பெயர்படைத்தவனும்வீறுசால்கிருதவற்பனுமெனப்புகலு
மாரமார்பினர்முதற்படைஞரிற்றலைவரானவீரதுரகத்தினர்களிற்றினர்க
ளூருமுருமிரதத்தினரெனைப்பலருமோதவாரியெனமத்திரனொடொத்தனரே.

* வீமசேனனுமவற்கிளையபச்சைமயில்வேளின்வானவர்குலப்பகைதொலைத்தவனு, மேமகூடநிகருத்தமவயப்புரவியேறுவீரனுமவற்கிளையவித்தகனு, நாமமாயிரமுடைக்கடவுளுக்கிளையனாயிரேடுவமைபெற்றொளிர்நிறத்தவனு, நேமிரும்தரணிபெற்றிடநினைத்தமர்செய்நீதிமானருகுசுற்றினர்துணைச்செயவே.

* ஆடன்மாவுமலையொப்பனமதக்கரியுமாழிசேர்பவனமொத்தவிரதத்திரளு நாடுபோரிலரியொத்தவனிகத்திரளுநாலுபாலுமெழலுற்றமருடற்றினர்க [ள் ளோடியோடியெதிருற்றவர்முடித்தலைக ளூறுசோரியுததிக்கிடைவிழுத்தினர்க கோடிகோடிதமரப்பறைமுழக்கினொடுகோடுகோடுகள்குறித்தவிருபக்கமுமே.

* ஆனபோதிருதளத்தினுமிகுத்தவிறலாண்மைவீரரொருவர்க்கொருவர் மெய்க்கவச, மானமேயெனநினைத்துவரிபொற்சிலையும்வாளும்வேலுமுதலெத் திறவிதப்படையு, மேனியூடுருவவெட்டியநிலைக்குவமைவேறுகூறவிரகெப்படி மலைத்தனர்க, டானவானவருயுத்தமுமரக்கரொடுசாகைமாமிருகயுத்தமுநிகர் த்தனவே, (அ०)

* வீமசேனனொடருச்சுனன்வயப்புரவிவீரமாநகுலனட்பினவனுக்கிளைய தாமமீளியளிமொய்த்ததுளவப்புதியதாரினனநசன்விற்குருவைமுற்பொருத சோமகேசபதிமெய்ப்புதல்வன்மற்றுமுளசூரரானவரைமுற்றுறவிலக்கியெதிர் மாமனையுமிகைத்துவருமத்திரனைவாவெனுவமர்தொடக்கினனுதிட்டிரனே. ()

* வீரசாபமொரிமைப்பினில்வளைத்தெதிர்கொள்வேகசாயகவிதத்திறமெனைப்பலவு, மாரசாயகமெனச்சிகரமற்புயமுமார்புமுழ்கவுடன்முற்றுமுனையிற் புதைய, வீரமானகுருதிப்பிரளயமெய்ப்புறமும்யாறுபோற்பெருகவெற்றுதலும்வெற்றிபுனை, சூரர்யாரினுமிகுத்திருண்முடிக்கவருசூரனுமெனவியப்புடைய மத்திரனே. (அஉ)

* ஆரவாரமுரசக்கொடியுயர்த்தவனதாகமீதணிமணிக்கவசமற்றுவிழ, வூருகேமியிரதத்தினுறுமச்சுருளவோடுவாசிதலையற்றுநிலத்துருள, நேரிலாதவவனெற்றிதுளைபட்டுருவநீடுகோனொடுபிடித்தகுனிவிற்றுணிய, வீரவாய்முனைநெருப்புமிழ்வடிக்கணைகளேவினனொருநொடிக்குளெதிரற்றிடவே. (அங)

* வீறுசாலருளறத்தின்மகனப்பொழுதுவேறொர்தேர்மிசைகுதித்திமையவெற்பினிடை, யேறுகேசரியொடொத்துளநெருப்புமிழவீறிலார்புரமெரித்தவனிகர்க்குமென, மாறிலாதவொருசத்தியையெடுத்துநெடுவாயுவாகுமெனவிட்டனனிமைப்பொழுதி,லாறுபாயருவிமுக்குவடிறுத்தசெயலானதான்முனைகொண்மத்திரன்முடித்தலையே. (அச)

வேறு.

* தொட்டவரிசிலைத்தடக்கையிராமனென்னத்தொடுத்தகணைதப்பாமற்றொழாதவேந்த, ரிட்டகவசமுமார்பும்பிளந்தபின்னரெடுத்ததொறுவடிவேலாவிளையோனென்ன, மட்டவிழுந்தும்பையந்தார்த்தருமன்மைந்தன்வாகுவலியுடனெறியமத்திரேசன், பட்டனனென்றணிகுலைந்துமுதுகிட்டோடிப்படாதுபட்டதுயர்த்தபணிப்பதாகன்சேனை. (அரு)

* மதிகண்டபெருங்கடல்போற்குந்திமைந்தர்வான்சேனையார்ப்பதுவுமன்னன்சேனை, நதிகொண்டகனல்கொளுத்துமிராமபாணநுழைகடல்போனெந்நதுவுநோக்கிநோக்கிக், கதிகொண்டபரித்தடந்தேர்ச்சல்லியன்றன்கண்போல்வாரெழுநூறுகடுந்தேராட்கள், விதிகொண்டபடைபோல்வெம்படைகளேவிவெம்முரசக்கொடிவேந்தன்மேற்சென்றுரே. (அசு)

* அவரளவோவரவுயர்த்தவரசன்றானுமாகுலத்தோடருஞ்சமரிலரியேறென்னக், கவரிபுடைபணிமாறத்தவளக்கொற்றக்கவிகையொருதனிநிழற்றக்கரைகாணுத, வுவரிநெடும்பெருஞ்சேனைவெள்ளஞ்சூழவுயிரனையதுணைவருடன்மாமன்சூழத், தமர்முதலாம்படைகளொடுதன்னைவென்றுதரணிகொளவருநிருபன்றன்னைச்சார்ந்தான். (அஎ)

* வீமன்முதற்றம்பியரும்பொருவிலாதவெஞ்சேனைத்தலைவரும்போர்வென்றிகூறுஞ், சோமகருமுதலாயதறுகண்வீரர்தும்பிகளையரியினங்கடொடருமாபோற், றூமமணித்தடஞ்சிகரத்தோளுமார்புஞ்சரமுழுகத்தனுவணக்கிச்சாய்த்தசோரி, பூமுழுதும்பரந்துவரப்பொருதவீரம்புலவோர்க்குமதிசயித்துப்புகலலாமோ. (அஅ)

* தன்றமையன்றனைப்பொருதுவெல்லவந்ததானையெலாநீறுக்கித்தரணியாளும், புன்றமையனெதிரவனுக்கிளையவீரர்பொரவந்தோரெழுவரையும்புவிமேல்வீழ்த்தி, யின்றமையுஞ்சமரமினிக்காண்டல்பாவமென்றிமையோரதிசயிப்பவிமையம்போலே, நின்றமைகண்டானிலனைமகிழ்ந்துநோக்கிநெஞ்சுறவன்றென்செய்தானெடியமாலே. (அகூ)

* செயகந்தன்செயவன்மன்செயசேனன்சேனுவிந்துசயத்திரதன்றிறலார்விந்து, வயமொன்றுவிக்கிரமனென்போராவிவானுடுபுகுந்ததற்பின்மதங்களேழுங், கயமொன்றுசொரியவெதிர்நின்றதென்னக்களித்துவலம்புரிவீமன்முழக்கக்கண்டங், கயனின்றவலம்புரித்தாரண்ணல்சோர்ந்தானுசர்மேலன்பெவர்க்குமாற்றலாமோ. (கூ௦)

* தனக்குநிகர்தானுனகிருதவன்மன்றம்பியர்களெழுவர்படத்தம்முன்பட்ட,மனக்கவலையறிந்துபெருஞ்சேனையோடுமற்றவன்றம்பியரைவரோடும்வந்து, சினக்கதிர்வேல்வீமனுயிர்செகுப்பானெண்ணிச்செருச்செய்தானேனையர்கடிருகியோட, வெனக்கிவரேயமையுமெனப்புறக்கிடாத விளையவர்மேற்கடுங்கணையைந்தேவினனே. (கூக)

* சித்திரவாகுவினேடுபெலசேனன்போர்ச்செயசூரன்சித்திரனுத்தமவிந்தென்றே, யத்திரவில்லாண்மையினிற்றிகழாநின்றவைவரிவர்யாவரையுமடர்ப்பான்வந்தோர்,சத்திரம்யாவையுமேவிச்சங்கமூதிச்சமர்விளைத்தார்நெடும்பொழுதுசமீரணன்றன், புத்திரனுன்முன்சென்றவெழுவரோடும்பொன்னுலகங்குடிபுகுந்தார்புலன்கள்போல்வார். (கூஉ)

* எற்றிடவெங்கனலுழைந்ததென்னமுன்னமெழுவருடன்றம்பியரோரி வருஞ்சேரக், கூற்றிடையேகுதலுமிகக்கொதித்துநாகக் கொடிவேந்தன்முடி வேந்தர்பலருஞ்சூழ, நாற்றிசையுமெழுந்துபெருங்கடலைமோதிநடுவடவைக்க னலவித்துநவிலாநின்ற, காற்றெனவேபாண்டவர்தம்முடலந்தோறுங்கணைமு ழுகவில்விசயங்காட்டினானே. (கூங)

* தன்கரத்தில்விற்றுணியவேறோர்வில்லாற்சாதேவன்வலம்புரிப்பூந்தாம வேந்தன், வன்கரத்துமார்பகத்துமுகத்துஞ்சேரவைவாளிகுளிப்பித்தான்மற் றுமற்று, முன்களத்துளெதிர்ந்துளோரிருசேனைக்கு முன்னெண்ணுந்திறலு டையோர்முண்டுமுண்டு, பின்களத்தைச்சோரியினாற்பரவையாக்கிப்பிறங்கலு மாக்கினர்மடிந்தபிணங்களாலே. (கூச)

* காந்துகனலுமிழ்சினவேற்கைக்காந்தாரர்காவலனுஞ்சகுனியுந்தன்கனி ட்டனான, வேந்தனுமன்னவனுடன்பல்வேந்தரோடும்வெம்பனைக்கைப்பலகோ டிவேழத்தோடு, மேந்துதடம்புயச்சிகரிவீமன்றன்னோடிகன்மலைந்துதொலைந்தி ரிந்தாரிவரையல்லா, லார்ந்தபணியணிக்கொடியோனிளைஞர்மீளவொன்பதின்ம ரவனுடன்வந்துடற்றினாரே. (கூரு)

* பிறங்கியவுத்தமனுதயபானுகீர்த்திபெலவன்மன்பலவீமன்பிரபலதான ன்,மறங்கிளர்விக்கிரமவாகுசுசிலன்சீலன்வருபெயர்கொளொன்பதின்மர்வானி லேறத், திறங்கொள்கசரததுரகபதாதிகோடிசேரவொருகணத்தவியச்சிலைகா ல்வாங்கிக், கறங்கெனவேசூழ்வந்துபொருதான்வீமன் கட்டாண்மைக்கிவை பொருளோகருதுங்காலே. (கூசு)

* பாண்டவரில்வீமன்கைப்படையான்முன்னம்பட்டொழிந்தோரொழிந் தோர்கள்பலருங்கூடிக், காண்டரியகேசரிவெஞ்சாபமன்னார்கண்ணிலான்மதலை யரக்களத்திலன்று, மூண்டுபொருபணித்துவசமுன்னோன்காணமுனைந்தமர் செய்தவனியின்மேன்முடிகள்வீழத், தீண்டரியதிருமேனிதேரில்வீழச்சேணை டைந்தாரரம்பையர்கள்சிந்தைவீழ. (கூஎ)

* தனக்கிளையோர்தொண்ணூற்றொன்பதின்மர்தாமுஞ்சயவீமன்சரத்தா லுந்தண்டினாலுங், கனக்குடிலிற்குடியேறக்கண்டுகண்டுகைசோரமெய்சோரக் கண்ணீர்சோர, வெனக்குறுதியுரைத்தவர்தம்முரைகேளாம லென்செய்தே னெப்பொருளுமிழந்தேனென்று, மனக்கவலையுறுமன்னன்றன்னைநோக்கிமாம னுமற்றொருகோடிமாற்றஞ்சொன்னான். (கூஅ)

வேறு.

* அருகுசாயைபோல்வாழுமநுசர்யாரும்வானேற
வுருகிமாழ்கிநீசோகமுறினுமீளவாரார்கண்
மருகவாழிகேள்போரின்மடிவுறுதபூபாலர்
முருகவேளையேபோல்வர்முரணறுதகூர்வேலோய். (கூகூ)

* கிருதநாமநால்வேதகிருபனாதியோரான
நிருபர்சேனைசூழ்போதநிமிரவோடிமாருத
பொருதுசிறிமேன்மோதுபுலியினேறுபோல்வாரை
முரசகேதுவோடேடமுராணுபோரின்மூள்வோமே. (க00)

* எனமகிபன்வாடாமலினியவாய்மையேகூறி
யனிகராசியோடேகியமரில்வீமன்மேன்மோத
முனைகொள்வீமனுமாறுமுறுவல்வாணிலாவீச
மனனிலோடுதேர்மாறிவலிகொள்பாரிலானுனே. (க0க)

ஒருகையூடுநேர்தாங்குமுயர்கொடண்டமோயாம
லிருகைகொண்டுநேர்சாடியிரதம்வாசிகாலால்கள்
பொருகைவேழமாய்ந்தேழுபுவனமோசைபோய்மூட
வருகைகண்டுதேராதமகிபன்மாமனீதோதும். (க0உ)

* அலகில்வேலைபோல்சேனையதிபனுவிபோமாறு
பலருமாகிமேன்மோதுபடைஞர்சாயவேநாமு
மிலகுவாளம்வேனேமியெவருமேவுவேமாக
தலைவகேளெனுவீரசகுனிகூறினுன்மூள. (க0௩)

விரகிதாமெனுவோடிவிருதராருமோர்கோடி
வரமதானவேலாழிவளைகள்வீசிவாதாட
வுரககேதுவோடானவுரனுளோர்கண்மாமேனி
சருகினுயதால்வாயுதனையனுகினுனண்டு. (க0௪)

* விரகருதகூதாடுவிடலைமீதுசாதேவ
னிரதமேவியோர்வாளியெழில்கொண்மார்பிலேவாமுன்
மருகனுனபூபாலன்மதிகொண்ஞானிபூண்மார்பி
லுருவவீசினுன்மாமனுதவியாவொர்கூர்வேலே. (க0௫)

* எதிரிலாததோளாண்மையிளவறேரின்மேல்வீழ
வுதவியாகவேலேவுமுலகுகாவலான்மார்பின்
முதுகிலோடவேநூறுமுழுகவேவினுன்வாளி
யதலபூமியூடாழியமுதமாரும்வாயானே. (க0௬)

* சமரில்வீமனேவோடுதலைவன்வீழவேபூமி
யமரனுனதாமாவோரயிலைவீமன்மேலேவ
வெமர்களாவிபோல்வானேடிகல்செயாமலீசான
குமரனுவிபோமாறுகுடைதுநாமெனுவீரன். (க0எ)

முனைகொள்வேலையோர்கோடிமுறிகளாகவேவாளி
வினையிலேவியேமீளவிரைசெய்தாரினுன்மார்பி
லனையவாளினூறேவவரசர்சாயவேதேரி
னினைவிலாதுதாமாவுநிமிடமோதுமுன்வீழ. (க0அ)

* மருகன்வீழவேசாபமறைவலானுமாமாலை
விருதனேடுபோராடிவெரிநிடாவிடாதோட
வருகுசூழுமாசூரரடையவேர்டவோடாது
திருகினுனராவேறுதிகழ்பதாகையான்மாமன். (க0௯)

* சகுனியாவிபோமாறுசபதவாய்மைகோடார்மன்
மகிபனேவுவேல்போலவமுழுவுருமன்மேலோட
வுகவையோடுமோமாயனுதவுகூரகீள்வேலை
யிகலெரடேவிருன்வீமனிளவலானபோர்மீளி. (கக௦)

பெரியதானவுருமேறுபிளிறுமோசையோடோடி
யரியமாமனூர்குதவறிவுசேருமாமார்பு
விரியமுழ்கியாறாதுவெரினிலோடவேயாவி
யுரியவானின்மீதாகவுடல்கொள்பாரிலானனே. (ககக)

வே று.

* தாவியவெம்பரிமானிரதத்திடைசாதேவ
னேவியவேலொடுசௌபலராயனிறந்தானென்
றேவியதெங்கணும்வெஞ்சமர்பார்முழுதுடையானு
மாவியழிந்தவுடம்பெனவன்மையழிந்தானே. (ககஉ)

மீளவும்வேந்தர்கள்வேந்தனகன்றிலன்வீறுக
மூளவருஞ்சினமைவரையின்றுமுடித்தெழுபா
ராளவினைந்தனிசேனையிருந்தவையாராய்ந்து
வாளமெனும்பொருதேர்மிசைகொண்டெதிர்வந்தானே. (ககங)

தும்பிகளாயிரமாயிரமாநற்றெருடுதேர்க
ளிம்பரிருந்தவைநான்குசதம்படையிகல்வல்ல
வெம்புபதாதியர்நான்குடையாயிரம்விரைவோடு
மம்பினடைந்திடவந்தனன்மீட்டுமமர்செய்ய. (ககச)

கண்டனர்மாறுங்காவலருங்கைகளைநீட்டி
விண்டனர்போதாதென்றுகொன்மீண்டான்விறல்வேந்தன்
பண்டையணிந்தபதாகினியாவும்பற்றற்று
முண்டுகொல்வெற்றியிங்கிவைகொண்டெய்துறினென்றார். (ககரு)

மான்முகநோக்கிவிசயனுரைப்பான்மதியென்னே
வேன்முகமுய்க்கும்போரிடையாரேவிளியாதார்
நான்முகமுய்க்குஞ்சிரியர்பல்லோர்கொடிசேர்முன்
கான்முகமுய்க்குங்கனலின்மடிந்ததுகருதாறே. (ககசு)

போர்வலியற்றோர்பொன்றினராகிப்போவாரைத்
தேர்வலியுற்றேனேடியழைத்துத்திறலோடும்
பார்மிசைகொண்டுவந்தனனுவிபடுதற்கு
நார்வலியற்றோநாணிலனென்னேதுணிபென்றான். (ககஎ)

சொல்லியமாற்றங்கேட்டலுமாயோனிதுசொன்னான்
மல்லுயர்தோளாயானொருநாதாள்வடிவாகி
வில்லியர்வைகுமானகர்சென்றேவிலைவெல்லாம்
பல்லுரையாகக்கூறியநாளுட்பட்டாறே. (ககஅ)

வெற்றிவராதுன்குற்றமனத்தால்விறல்வேலா
ருற்றவராரும்பற்றலர்கையா லுயிர்நீங்கப்
புற்றரவென்னநீதனிநின்றேபொருமாதே
நற்றிறல்கண்டோர்சொல்வழிநிற்பாய்நவைதீர்வாய். (கக௯)

என்றுகுறித்தேனென்றுமுளத்துக்கிசையாம
லன்றுகுறித்தவின்மையுரைத்தலரிதன்றே
வின்றுமடுத்தானிங்கிவருய்யாதிவணுவி
பொன்றமுடிக்குமாறுகருத்தேபுகலென்னே. (க௨௦)

முன்னமுதித்தனான்றுகுறித்தார்முனிவோர்கள்
பன்னருமிந்தப்பூமிசையோரைப்படுவித்துப்
பின்னரிறக்குமிங்கிவனென்றும்பேராரும்
பன்னுநராந்தகனென்னுமாறும்பயனுய்ந்தோர். (க௨க)

அத்தகைமுற்றிற்றென்னினிகூறலாமென்று
கைத்திறல்வல்லகாளைதனக்குக்கருமேக
மொத்தநிறத்தானோதநகைத்தேயொருமித்தான்
வித்தகவீமன்வேந்தனையோடிவிரைந்தேற்றான். (க௨௨)

வேறு.

தோடாருந்தேனிற்சுரும்புண்டெரியலங்கல்
வாடாமலர்முகத்தான்வந்துகதைவீசுதலா
லேடாருந்தொங்கலிரதமிபமூர்வாசி
பாடாரவயவர்களும்பட்டதெவர்பட்டாரே. (க௨௩)

குன்றுபுரைகரிகள்கோடுகரந்தாஞ்சிதைந்து
பொன்றிவிழுதல்புலவரிறைதன்வயிரஞ்
சென்றிறகுகொய்யவிழும்பரிசுதேற்றியதான்
மன்றல்கமழுமொருமாவீரன்வல்லபமே. (க௨௪)

தேர்கள்சிகரஞ்சிதைந்தழியநிற்பதுமுன்
கார்கொள்கனகச்சிலம்பின்முடிகத்திரித்த
வேர்கொளுலவையென்த்திகழ்ந்தானெண்டிசையும்
பேர்கொள்வயவீமனென்னும்பெருந்தகையே. (க௨௫)

ஆகத்துமார்பினுநூறுயிரமாமம்புருவ
மாகக்கதிமாவுமள்ளருமண்மேல்வீழ
வாகச்சிலையைவளைத்தான்விழிசேந்து
மேகத்தனியூர்திதந்தவிறல்விசயன். (க௨௬)

பட்டுமுடிமன்னவரும்பாய்கரியுமாழியந்தேர்
முட்டும்பரியுமடன்மொய்ம்புடைகாலாளுகளுங்
கெட்டுவிழும்பரிசுகண்டான்கிலேசத்தா
லெட்டுத்திசையும்புரந்தோனிரிந்தானே. (க௨௭)

கவித்தகொடையுமுடியுங்கதிர்ப்பூணு
மவித்தகொடும்பல்படையுமம்பொற்கவரிகளும்
பவித்திரமாமூர்த்திகளும்நீங்கியிந்தப்பார்புறந்தோன்
றவித்தபயமுங்கதையுந்தானுமாய்வென்கொடுத்தான். (௧௨௮)

ஓடினான்வேந்தனுயிர்க்குதவிசெய்தானென்
றோடினாரார்த்தார்களைவர்பெருஞ்சேனையெலாங்
கூடினார்மொய்த்தார்கொடுங்கோலான்வாகினிக்க
ணோடினார்கொன்றுயிரைநீக்கினார்நேரில்லார். (௧௨௯)

உயிர்துறந்தமெய்கள்பலவேர்ங்கலாயோடுதிரஞ்
செயிரறுபல்கோடிநதிசெல்வனவாய்ச்சேர்பறவை
மயிர்சுணங்குபேயன்குடிமாக்களாய்வெற்றியெனும்
பயிர்தழையப்பாண்டவர்கள்பறந்தலைப்புரந்திருந்தார். (௧௩௦)

இரதமிரண்டாயிரமுமித்தொகையவாம்பரியுங்
கரதலமாவெழுசதமோரயுதங்காலாளும்
பரதகுலமுய்யவரும்பாண்டுமுதிர்செய்தவத்தாற்
சாதநிலையிடவுதித்தோர்சதுரங்கத்தானையிதே. (௧௩௧)

துருபதன்மாமைந்தர்துட்டத்துய்மனுடனேசிகண்டி
பொருபடைவில்சோழனொடுபோர்க்குரியசாத்தகியு
நிருபர்களைவருமிவரைநேர்பவரைவருங்கரிய
சுருபநெடுமாலுமிடைதுன்னிவிளங்கினர்மன்னோ. (௧௩௨)

அம்பரத்தோர்கண்டுகளித்தம்பொன்மலர்மழைபொழிந்தார்
வெம்பணிப்பாதலத்தவருமேல்விளைவுநோக்கிநின்றார்
கம்பமதமாலியானைக்கரடமெழக்கலித்தனவா
லிம்பர்திசையெட்டினும்பல்லுயிரனைத்துமிரைத்தனவே. (௧௩௩)

தேசுலவுதருமமெனுந்தெய்வதங்கையெடுத்தார்த்த
தோசைபெறுநான்மறையுமோகைபுனைந்தார்த்தனவான்
மாசிலடன்மண்மகடன்பெரும்பாரம்வறிதாக
விசனையுமைவரையுமெடுத்தினிதுவாழ்த்தினாள். (௧௩௪)

கார்புரந்தமேனிக்கடவுளுடன்பாண்டவர்கள்
சிர்புரந்தவாகைச்சிலையாரவணிருந்தார்
தார்புரந்தவஞ்சச்சகுனியொடுந்தீயரொடும்
பார்புரந்தமன்னன்பரிசினிமேற்கூறுதுமால். (௧௩௫)

வெல்லுந்தருமம்விறலழியும்பாவமெனுஞ்
சொல்லுந்தலைநிறுவித்தோற்றந்தொலைவெய்திக்
கல்லுங்கடலுங்களத்திற்பலகடந்து
கொல்லுமரிகைப்பிழைத்தகுஞ்சரம்போலோடினான். (௧௩௬)

நீலவுடலுநெருப்பிருந்தவாள்விழியுஞ்
சூலமுடன்கதையுஞ்சோர்ந்தகருங்குஞ்சியுமாய்
ஞாலமெலாம்வீக்கநராந்தகனுய்ந்தோற்றியவக்
காலனகல்பரிசுகாட்டினன்காவலனே. (கஙௗ)

ஓடினன்காலிரண்டுமோய்ந்தானுரியவிடந்
தேடினன்காணன்றிகைத்தான்றிசைபலவு
நாடினனங்கோர்நனிநீர்மடுவுணர்ந்து
கூடினன்கண்டான்கொடுங்கோன்மைக்கோவேந்தே. (கங அ)

பார்த்தான்றிசையனைத்தும்பற்றலர்கட்கெடடாவென்
றூர்த்தான்மடுவருகிலாயகதையோடிருந்து
வேர்த்தான்களைத்தான்வெதும்பினன்வெய்துயிர்த்தான்
போர்த்தான்பேரச்சம்புழுங்கியிதுசிந்தித்தான். (கஙகூ)

வேறு.

தொடுத்தார்தொடுத்தமொழியனைத்துஞ்சோர்வுபடுத்தியைவருயிர்
விடுத்தேவானத்துறயாமேவுறலோடரசுபுரப்பனென
வடுத்தேநினைவுகொண்டருஞ்சூதாடிப்புரிந்தகைதவங்கள்
கெடுத்ததெமையேயலதவரோர்கேடுகண்டதிலையன்றே. (கச0)

மேனாள்விதுரன்மொழிந்ததுவும்விமலமுனிவர்புகன்றதுவு
மானவறிவிற்சஞ்சயன்வந்தறைந்தவிரகுமரும்படலைத்
தேனார்துளவச்செழுந்தாரோன்செப்புந்திறனுமறுத்தவெனக்
கேனும்வெற்றியினியுயிருக்கிறுதிபயத்தற்கிடரிலையே. (கசக)

கன்னன்வலியுங்கொடும்பாவக்கபடச்சகுனிகைதவமு
மன்னர்துணையும்வாகினியின்மலிவுங்கொண்டுதடுமாறிச்
சொன்னகுரவன்சிலையாசான்சுதனற்கிருபன்முதலோர்கள்
பன்னும்பொருளுங்கொள்ளாதுபாருமுயிருந்துறந்தேனே. (கசஉ)

அவனிபாதியைவர்க்களித்தங்கவரோடுலகம்புரத்திரெனத்
தவனனனையபெருந்தாதையுரைத்தமொழியுந்தகர்த்தேனு
லிவரைத்துயரக்கடற்படுத்தியேழைமாதர்பலரிரங்கக்
கவனத்துரகத்தேர்வீமன்கையாலாவிகழல்வேனே. (கசங)

கச்சைக்கொடியோன்மறைக்கொடியோன்களிற்றின்கொடியோன்பணைக்கொடியோன், பச்சைவெற்றிமயிற்கொடியோன்பன்றிக்கொடியோன்முதலான, வுச்சக்கதிர்மாமுடிவேந்தருடன்வந்தோர்கள்பலர்மடிந்தா, ரிச்சைப்படுவதினியழகோவிசையோபொருளோவிருநிலமே. (கசச)

வாழேனினிமேலுயிரோடுமருவேன்குந்திமகார்க்குவலி
தாழேன்றளரேனமர்புரிந்துதகுவானடைவன்றுணைவரொடு
போழேனுள்ளமொருமுனிவன்புகன்றமறையுண்டதைச்செபித்துப்
பாழேயிறந்தார்தமைமீளப்பாரில்வருவித்திடுவேனே. (கசரு)

மறையாலிறந்தோர்தமைமீட்டுமேலந்துவெல்வன்மாசுறுமே
லறையாகவத்திற்பொருதாவியழிவேனென்னமனந்தேறி
நிறையாவாற்றல்வளர்ந்தோங்கநின்றான்முன்னர்நின்றனனற்
பொறையாலறிவால்விரதத்தாற்பொறுவற்றுளசஞ்சயனென்போன். (கசசு)

கண்டானரசன்சஞ்சயனைக்கருத்தினுணம்வளர்ந்தோங்க
வண்டார்மாலைதுறந்தபுயன்வதனநோக்கியுந்தனைகொ
லண்டாவமரினகத்தென்றானையாவியாதனருளாலே
கொண்டாருயிர்வந்தனனென்றான்குறித்தானிதனைக்கொடுங்கோலான். ()

பாராள்வென்றிப்பாண்டவரைப்பாரிற்புரட்டிப்படுத்திடுவ
னோராமறையாலஃதன்றேலுகுப்பனுயிரையினிவாழேன்
காராரோதியன்னையர்க்குங்கருதும்வேந்தன்றனக்குமிடர்
வாராவண்ணம்புகலரியேன்வழங்கிவிடுத்துமடப்பாய்ந்தான். (கசஅ)

வேறு.

* கம்பித்துவந்தபுலனைந்துங்கலக்கமாற
வெம்பித்தடங்கிமனஞ்சித்தொடுமேவல்கூரத்
தம்பித்தேதோயத்திடைவாயுவுந்தம்பமாகக்
கும்பித்துஞானப்பெருந்திபங்கொளுத்தினனே. (கசகூ)

* பன்னாளும்யோகம்பயில்வோரிற்பதின்மடங்காத்
தன்னகமுற்றுமெலிவின்றித்தயங்குமாறு
நன்னுளமூலகளினத்தைமலர்த்திநாவா
லுன்னுமலுன்னுமுறைமந்திரமோதினனே. (கரு0)

* இதயஞ்சிறிதுங்கலங்காதவிறைவனிவ்வா
றுதகந்தனிற்புக்குயர்மந்திரமோதும்வேலை
மதவெங்கயப்போர்வளவற்குமுதுகுதந்த
விதமண்டலீகர்புலிகண்டமிருகமொப்பார். (கருக)

முன்னைச்சமரின்முகமாறியொழிந்துபோன
தன்னெப்பிலாதகிருபாரியன்றமன்மற்று
முன்னற்கரியகிருதப்பெயரோசைவேந்தன்
பின்னர்த்தெளிந்துதனிமீண்டனர்பெட்பினேடும். (கருஉ)

சமரிற்றலைசென்றனர்நின்றனர்தாமவேந்தைத்
தமரிற்பொலிவோடெதிர்காண்கிலர்தருக்கினேடு
மமரிற்பெறுவெற்றிகொண்டோரலதாருமின்றி
நிமலத்திருந்தபடிகண்டனர்நீடுயிர்த்தார். (கருங)

வெண்டாரகையும்விதுவுங்கதிர்மீதெழுந்த
பண்டாகியதுபோர்க்களமாங்கனம்பார்வைக்கெல்லாம்
விண்டேவிசிம்பிற்கதிரோன்றுவிளங்கல்காட்ட
வண்டாரலங்கலுடையாரறவுமருண்டுநின்றார். (கருச)

காணுவாசையானீங்கியகன்றினம்போ
ஞுலயர்ந்துதடுமாறிநடுங்கிநெஞ்சங்
கோணுவகன்றுபலகோடிகுறித்துமீண்டார்
பேணுர்பெருக்கமதைநோக்கிலர்பெட்பின்மிக்கார். (௧௫௫)

கண்டாரிவரையடலைவருங்காதிவெற்றி
கொண்டாரிவேயிவரோடமரென்பயன்கொள்வதென்றே
விண்டாருணர்ந்துமுணராரில்வியந்திருந்தார்
தண்டாமரைசேர்தனிமார்பினர்சாய்ந்துபுக்கார். (௧௫௬)

கூசிக்குலைந்துவருவோரெதிர்கொற்றமிக்க
மாசற்றசிந்தையுளசஞ்சயன்வருதல்காணுத்
தேசிற்சிறந்தோர்நிகழ்காரணஞ்செப்புகென்று
ராசற்றவனுமுரைத்தானரசன்றனுண்மை. (௧௫௭)

* ஈண்டுஞ்சமரினிறந்தோர்களெவருமின்றே
மீண்டுற்பவிக்கவிடுவித்துவிரகினேடும்
பாண்டுப்பயந்தோர்படையாவுமடியமோதப்
பூண்டுத்தமமாமறைகொண்டகன்பொய்கைபுக்கான். (௧௫௮)

இக்காலைகாறுமிடரில்லைநம்மேந்தனீவிர்
தக்கோர்கள்சிந்தைதளராதுறுமிந்தவாய்மை
மைக்காருளத்தன்றனக்கோதிவருவனென்னுப்
புக்கானிவரைவிடைகொண்டுபொருதுதூயோன். (௧௫௯)

வே று.

பாசறைப்பாங்கரிற்படர்ந்துசஞ்சய
ஞசறநோக்கலுமவணிற்றங்கிய
தேசுடைமடந்தையர்பலருந்தேம்பினர்
காசுடைமுடியினன்கலக்கங்கேட்டரோ. (௧௬0)

தடங்கரையிழிந்தநீர்சரியுமாறுபோல்
விடங்கிளர்விழியினர்வெதும்பனேக்கினன்
வடந்தருமுச்சனம்வசியமைந்தனுக்
குடம்படுசஞ்சயனேதன்மேவினன். (௧௬௧)

காவலர்காவலன்கலந்தமங்கையர்
மேவலர்பயிற்சியால்வெருவல்போதுமோ
மாவலாயுதிட்டிரன்மருங்குசென்றுநீ
யாவலானுணர்த்திடினருளளிப்பனே. (௧௬௨)

மற்றவனருள்கொடுமங்கைமார்களைக்
கொற்றவனகரியிற்கூட்டுகென்றனு
மற்றிதேசெயலெனவறத்தின்மைந்தனை
யுற்றனனுச்சனென்றுரைக்கும்பேரினன். (௧௬௩)

வணங்கிநின் றரிவையர்மாற் றங்கூறலு
மிணங்கிநீகொண்டுசெல்கென் றுபோக்கினன்
பணங்கிளரல்குலார்பலரையுங்கொடு
கணங்கொள்சிர்க்கரிபுரங்கடிதினேகினன். (௧௬௪)

ஆங்கவன்வரவினல்விதுரனுய்ந்தவ
ரீங்குறுநிகழ்வெலாமியம்பக்கேட்டபின்
றுங்கினனருந்துயராங்குத்தங்கினன்
வீங்குநீர் துளைந்துபொய்மீண்டடைந்துளோன். (௧௬௫)

சஞ்சயன்பின்னரிற்சார்ந்துமங்கையர்
செஞ்சவேமனைதொறுஞ்செறித்துப்பின்புபோய்ப்
பஞ்சின்மெல்லடியொடுபார்புரந்தவ
னஞ்செவிசுடவிவணடுத்தவோதினன். (௧௬௬)

கேட்டனனயர்ந்தனன்கிளர்ந்துமாழ்கினன்
மீட்டினியென்கொலோவிளைவதென் றுசிர்
நாட்டமிலாதவனடுங்கிவைகினன்
வாட்டடங்கண்ணியுமறுகிமாழ்கினள். (௧௬௭)

இவ்விடைத்தேசிகனீன்றகாளையும்
வெவ்வழற்கிருதனுமவிற்கைவேதனு
மெவ்வமிலுரககேதிருந்தவான்றட
மவ்வையினடைந்துநின் றுரைப்பதாயினர். (௧௬௮)

உலகெலாங்குடைநிழலுட்படுத்தினை
யலகிலாவரசருக்கரசனுயினை
யிலகுபோர்முனையிலுமேற்றம்பெற்றனை
யிலகிநீயொளிப்பதுவிரும்பல்போதுமோ. (௧௬௯)

படுப்பதொன் றரிகளைப்பயன்படாவெனில்
விடுப்பதொன்றேயுயிர்வேந்தற்காவது
மடுத்துளைந்தொதுங்கிநீமருவிவைகுத
லடுப்பதோநின்னையொப்பவருக்கண்ணலே. (௧௭௦)

மறந்தவாவலியுளோர்மாய்ந்துளாரினிச்
சிறந்தமாற்றலர்க்கெதிர்செருவிலாரென
நிறந்தவாமன்னவநினைத்துளாய்கொலோ
வறந்தவாவெம்முடையாற்றல்தேர்கிலாய். (௧௭௧)

இன் றுவெம்பரிதிபோயிரவுறுமுனஞ்
சென்றடலைவர்தஞ்சிரங்கொண்டெய்துவ
னன்றெனமேவுநிசமரினுயக
வன்றெனிற்றேசிகன்மைந்தனல்லனே. (௧௭௨)

எனப்பலவாய்மைகளிவுளித்தாமனு
மனத்தினிற்றூயவன்வழங்கக்கேட்டபின்
கனக்குரன்முழக்கெனக்கழித்துக்காவலன்
சினத்தினுற்சிலமொழிசெப்பலாயினன். (களங)

ஆற்றலுக்கொருவனீயமரிலுன்னெதி
ரேற்றவருய்வரேயெனினுமின்றமர்
மாற்றலர்மோதலாற்சாலமாழ்கினேன்
சாற்றலென்னினிச்சிலகடிகைதங்குவேன். (களச)

உடலணங்ககற்றிமீண்டுன்னொடேகியான்
மிடலுடையவரைவெற்றிகொள்குவன்
வடநிழலிருத்திரவ்வளவுமாற்றல
ரிடமுணர்ந்தெய்திடாவண்ணமென்னவே. (களரு)

கொண்டனரவ்வுரைகொற்றவன்றனே
விண்டனருரைப்படிமீண்டுபோய்வடங்
கண்டனரிருந்தனர்களிக்குநெஞ்சினர்
பண்டையநிலையினன்பார்கொள்வேந்தனே. (களசு)

வேறு

* மற்றவர்மீண்டபின்னர்மாதவக்குந்தியீன்ற
கொற்றவர்தாமுஞ்சேனைக்குழாத்தொடுந்தங்களோடுஞ்
செற்றவர்தம்மையெல்லாஞ்சேணுலகேறவேற்றிப்
பொற்றவரிராசராசன்புக்குழியறிவுறாமல். (களஎ)

* பாடியுங்களமுஞ்சூழ்ந்தபாங்கருமங்குமிங்குந்
தேடியுங்காண்கிலாதசிந்தையாகுலத்தராகி
நாடியவொற்றராலுநாற்றிசைப்பலவுந்தேர்ந்து
வாடியபுண்டரீகமலரொத்தார்வதனமன்னோ. (களஅ)

துறந்தனன்கொல்லோவென்பார்துவரிதழ்மடவாரோடு
மிறந்தனனகருக்கென்பாரித்தலைபுகன்றவீர
மறந்தனன்போலுமென்பார்வாளமரஞ்சியோடி
யறந்தபவொளித்தானென்பாரரியமேயாமுமென்பார். (களகூ)

இவ்வணம்பலருங்கூறவிரங்கிநாற்றிசையுமோடிச்
செவ்வணநிருபர்காடித்திரிதருமமையந்தன்னி
லுய்வணங்கொணர்ந்தாரென்னவுலவைவானவற்குதித்த
கைவணப்புதல்வன்வேட்டக்காரர்வல்விரைவின்வந்தார். (கஅ0)

வந்தவர்வீமனோடுமாசுணக்கொடியோனீருட்
சிந்தைசெய்திருந்தான்மூன்றுதேரினர்கரைவாய்நின்று
பந்தமும்வலியும்பேசப்படுப்பம்பாண்டவரையின்றே
முந்துறவென்றுசொற்றூர்மொய்ம்புளாயுணர்தியென்றூர். (கஅக)

ஆங்கவர்வாய்மைகேட்டவனிலமைந்தனுந்தோளோங்கி
வீங்கிவிண்ணப்பமுன்னோன்றிருமுனர்மேவிக்கூறத்
தாங்கியதுளவோனுதிநிருபர்கள்சாலச்சிந்தை
யோங்கநின்றுரைத்தோர்க்கெல்லாவளமையுமுதவினானே. (௧௮௨)

மாமறையொன்றுண்டந்தமறையினாலிறந்தோர்தம்மை
யேமுறப்புரப்பதன்னியிருந்தனனீரிலென்று
காமனைப்பயந்ததாதைகட்டுரைத்திடக்கைமிக்குத்
தாமரைக்கணத்திற்சூழ்ந்தார்தராபதியினைனாரம்மா. (௧௮௩)

தேர்களுங்கரியுமாவுந்திரள்களுந்தடக்கைசூழக்
கார்கொளுமேனியோனுங்காவலர்பலருமைந்து
பேர்கொளும்பாண்டுமைந்தர்பெருமிதத்தவரும்வந்து
நீர்கொளுமடலினானைநேருறச்சூழ்ந்துநின்றார். (௧௮௪)

இந்திரனொடுபோர்செய்தேயிளைத்தருங்கடலிற்பாய்ந்த
முந்துபோர்விருத்திரப்பேர்முதல்வனைச்சூழ்ந்துநின்ற
வந்தனரென்னயாருநிற்பமாலருளினாலே
விந்தமொத்துயர்ந்ததோளான்வீமன்வாய்மலர்ந்துசொல்வான். (௧௮௫)

வேறு.

* கங்கைமகன்முதலாகக்காந்தாரர்முடிவாகக்களத்தில்வீழ்ந்த
துங்கமணிமுடிவேந்தர்சொல்லிமுடிப்பதற்கடங்கார்துரகமாவுஞ்
செங்கனகமணிக்கொடிஞ்சித்திண்டேரும்பெரும்பனைக்கைச்சிறுத்தசெங்கண்
வெங்கயமுமேருமல்வீழ்கயத்திலேறினையோவேந்தர்வேந்தே. (௧௮௬)

* நெஞ்சறியநீயெமக்குநிலைநின்றபழியாகநெடுநாட்செய்த
வஞ்சகமும்பொய்மொழியுமனுநீதிதவறியதுமறந்தாய்கொல்லோ
துஞ்சியநின்சேனையெல்லாமீண்டுவரநீயறையுஞ்சுருதியிற்றை
வெஞ்சமரமுடித்தன்றோவறைவதினைவீரருக்குவீரமாமோ (௧௮௭)

* அடிமாறிநீரிடைப்புக்கருமறைநீபுகன்றாலுமரவப்பைம்பொற்
கொடிமாறிக்குருகுலத்தார்கோவேநின்பேர்மாறிக்குலாவுமாலை
முடிமாறிபொருதனிமாமுத்தநெடுங்குடைநிழற்கீழாளுமுந்நீர்ப்
படிமாறிபொழியவிடேன்புறப்படாய்மறைபடவிப்பகல்போமுனனே. (௧௮௮)

* ஓதப்பைங்கடல்புடைசூழுலகாளுமுடிவேந்தருறுபோரஞ்சிப்
பாதத்தில்விழுவரோபாரரசர்கேட்டாலும்பழியேயன்றோ
மேதக்கவரமகளிற்கைப்பிடிக்கவிந்திரனும்விண்ணோர்தாமுங்
காதத்திலெதிர்கொள்ளக்கற்பகநீழலில்வைப்பன்கலங்கலம்மா. (௧௮௯)

இனத்தொடுநின்றன்மாமனிறந்தளவுமெமைவெல்லவெண்ணியெண்ணித்
தனத்தொடுநின்றறம்புரியாப்புல்லரைப்போன்மதத்துலவுந்தாமவேலோய்
கனத்தபடைசாய்ந்தபினுஞ்சினத்தொடுநீசமர்புரிந்துகளம்படாமல்
வனத்திடைபோயொளித்திருந்தால்வசையன்றோவிசைகருதாவஞ்சவேந்தே.

கங்கைபுகுந்தாடுவதுங்கார்வரைப்பாலுறுவதுவுங்கனல்சான்றாகப்
பொங்குமகம்புரிவதுவுமனத்தூய்மையுடையவர்க்கேபுனிதநல்கு
மிங்குநீபுனன்மூழ்கியிருக்கனந்தமெடுத்துரைத்தாயெனினுமீதோர்
பங்கமுறுவசையாகிப்பரக்குமலாற்பயன்படுமோபழிப்பான்மிக்கோய். (௧௬௧)

திரிபுவனத்தவருணரும்பெயர்கொண்டுபுவிகொடுங்கோற்செலுத்திவாழ்ந்து
விரிபுவனந்தனிலமரில்வெருவியொளித்துயிர்மாய்ந்தான்வேந்தனென்பார்
பரிபுரப்பொற்பதமலர்சேர்பாவையர்களிதுபோலும்பழியொன்றுண்டோ
கரிபுரவித்தேர்காலாள்கடல்கொண்டுங்கைதவங்கள்கருதுந்தீயோய். (௧௬௨)

இத்தகையமொழிகன்னமுறவுநீயச்சத்தாலிருந்தாயென்னிற்
கைத்திறல்சேரிராகவன்றன்கணையதனாற்கடலேழுங்கதறுமாபோற்
சுத்தமுறநீயிருந்ததூயதடம்புகைந்திடுநீர்சுவறிவாகைச்
சித்திரவிலாளியனற்கணையொன்றாலுணர்ந்தெழுதிதெளிவிலாதோய். (௧௬௩)

பாவனியிப்படியுரைத்தபலமொழிகடனதுசெவிப்படலும்வேந்தன்
சீவனமந்திரஞ்சோரவாய்சோரக்கைசோரச்செய்கைசோர
வாவனவுமழிவனவுமறியாததனதுமடவறிவுசோர
மேவினநன்மையுஞ்சோரவெகுளிவயப்பட்டெழுந்தான்விதியாலம்மா. (௧௬௪)

* நீளமுறப்பரவையுறவானமுறக்கரைபரந்துநிமிர்ந்தநீத்த
நாளமலர்ப்பொய்கையினின்றெழுவான்மெய்ச்சுருதிமறைநவிலுநாவான்
காளநிறக்கொண்டல்பெருங்கடன்முழுகிவெள்ளமெலாங்கவர்வுற்றண்ட
கோளமுறக்கிளர்ந்ததுபோற்றோன்றினன்மணியுரகக்கொடியினானே. (௧௬௫)

*தோன்றிநெடுங்கரையேறிக்கரைமுழுதுநெருக்கமுறச்சூழ்ந்துநின்ற
தேன்றிகழ்தாரைவரையுஞ்செந்திருமாலையுநோக்கிச்சேனையோடு
மான்றிகழ்தேர்முதலானவாகனங்களொடுநின்றீர்வலிகூரென்கை
யூன்றியதண்டுடனின்றேனொருதமியேனெப்படியேயுடற்றுமாறே. (௧௬௬)

தோன்றுபெருஞ்சேனையையுஞ்சூழ்ந்திருந்தநிருபரையுந்தொலைவிலாற்றற்
றேன்றிகழ்தாரைவரையுஞ்செங்கண்மாலையுநோக்கிச்சிறிதுசொன்னான்
கான்றுகனலுமிழ்படைகள்கைக்கொள்வீர்கதையொடுநான்றமியாய்நின்றே
னென்றொருவர்க்கொருவரெதிரேற்பதோபலருமடுத்திடுவதேயோ. (௧௬௭)

கூறுமெனக்காந்தாரிகுலமதலைநின்றியம்பக்கொண்டன்மேனி
நாறுபசுந்துழாய்கமழுநளினநாபனுஞ்சிறியநகையினோடு
மாறுபடுமபிமனைமுன்வதைத்தகொடுமுனையன்றுமறநூல்வண்மை
தேறுமுனையிதுவீமனொருவனுமேநின்னொடமர்செய்கிற்போனே. (௧௬௮)

* இளம்பருவமுதலுனக்குமிவனுக்கும்வயிர்ப்பெண்ணிலெண்ணொணாதா
லுளம்புகலவரசவையில்வஞ்சினமும்பலபடநின்றுரையாநின்றான்
களம்புகுதுநின்னொழிந்ததுணைவரையுந்தனதுதடக்கையாற்கொன்றான்
விளம்புவதோவேறொருவர்நின்னுடன்போர்மலைவரோவேந்தர்வேந்தே. ()

* வில்லாலும்வாளாலும்வேலாலும்பரிநெடுந்தேர்வேழத்தாலுந்
தொல்லாண்மைதவறுமற்செருமலைந்தோர்சான்ருகச்சூழ்ந்துநிற்பப்
புல்லாரைப்புறங்காணும்போர்வேலோயிருவருநீர்பொருதுநம்மில்
வல்லார்கள்வென்றிபுனைந்தவனிதலம்பெறுமிதுவேவழக்குமென்ருன். (உ00)

வேறு.

* கொண்டனிகர்திருமேனிக்கோபாலனிவையுரைப்ப
வண்டுபடிவலம்புரித்தார்வயவேந்தன்மனங்களித்துத்
திண்டிறல்வீமனைநோக்கிச்சிலைமுதலாம்படைகொண்டோ
தண்டெனுநின்படைகொண்டோசமர்விளைப்பாய்சாற்றென்ருன். (உ0க)

பேராலுந்துணையாலும்பிறங்கியகைத்தலத்தாலும்
பாராளுந்தன்னீர்மைபழுதுபடாதெனவிருந்த
போராளியிவையுரைப்பப்புல்லறிவோய்கதையன்றி
யேராதுன்னுடன்பொருதற்கேனையவென்ருன்வீமன். (உ0உ)

எவ்விடைவீமனுநாளுமிகல்புரிதற்கிடமென்று
பொய்விடையேமுடர்ந்தோனைப்புயங்ககேதனன்கேட்பக்
கைவிடையவேயூதுங்கரியமுகிலுளத்துன்னி
யவ்விடையாங்கிருவர்க்குமமர்புரிநற்றலஞ்சொன்னுன். (உ0ங)

* நாவெழுமாமணிநெடுந்தேர்த்தபனனிகர்மழுப்படையோன்
மூவெழுகான்முடிவேந்தரனைவரையுமுடிப்பித்து
நாவெழுபான்மையினுடையோன்களிக்கரமேதஞ்செய்
பூவெழுதிவினுஞ்சிறந்துபொன்னுலகோடொத்துளதால். (உ0ச)

* அந்நிலமேயிருவருக்குமமர்புரியலானவிட
மன்னவர்தம்முடற்சோரிவழிந்துசமந்தபஞ்சகமா
மென்னநிலைபெற்றதடங்களுமங்கேயங்கேயுண்
டுன்னிலெதிரில்லதனுக்கொலிகடல்சூழ்நிலத்தென்ருன். (உ0ரு)

ஆயதிசைபோதுமெனவாடரவக்கொடிவேந்தன்
பீடழியக்கானடையாய்ப்பெயர்ந்தனன்மற்றிவர்தமது
தூயதிறல்வாகனமுஞ்சூழ்படையுமாவிரைந்து
தியவனுக்கிருமருங்குஞ்செல்கின்ருர்சேனையொடும். (உ0சு)

* தம்பியர்கள்புடைசூழத்தருமன்மகன்பல்லியமும்
பம்பியெழநடக்கின்றபரிசுதனைமுகநோக்கி
யெம்பியருமெங்கிளையுமிறக்கவிருந்தனமென்றே
வெம்பிமனமிகத்தளர்ந்தான்விதிதனக்குவிதிபோல்வான். (உ0எ)

* முடிக்குலமன்னவர்தத்தமுடிகளினற்சிவக்கின்ற
வடிக்கமலமடந்துசிவப்பாவதேயெனவிரங்கிக்
கொடிக்கண்முரசெழுதியவக்கோவேந்தன்கொடித்தேர்விட்
டடிக்குமுரசெனப்புகல்வானிராசராசனுக்கம்மா. (உ0அ)

* என்றுணைவருடன்யானுமேவியநின்றொழில்புரிந்து
வன்றுணையாய்ச்சேவிப்பமடங்கலாசனமேறி
யின்றுணைவர்குருகுலத்தாரெனுமிசைபோய்த்திசையேற
நன்றுணைவாவாழிதியோஞாலமெலாநின்குடைக்கீழ். (உ0கூ)

* தப்பாதென்மொழியென்றுதருமன்மாமதலைமுகி
லொப்பானதிருமேனியும்பர்பிரான்சான்றுகச்
செப்பாதவாய்மையெலாஞ்செப்பினன்செப்பவுமக்
கைப்பானவன்னெஞ்சக்கடுங்கண்ணன்கண்மறுத்தான் (உக0)

மூளவருஞ்சினமெம்மைமுடித்தகற்றிப்பார்முழுது
மாளநினைந்தணையாயதவ்வண்ணமாருமிலா
வாளவெருந்தரைசுமந்துமய்ங்குதிர்நீர்யான்கருதேன்
மீளநெடுநாளுண்டமிச்சிலையார்வீயாதார். (உகக)

* எங்கிளைஞரென்றுணைவரென்பொருட்டாலிறந்தேக
வுங்களருள்பெற்றிருக்குமுயிர்வாழ்வினினிதன்றே
வங்கமெலாம்வேறுபடவாறுபடுகுறுதியின்வாய்க்
கங்கமுங்காகமுங்கொத்தக்களத்தவிந்தானெனும்பெயரே. (உகஉ)

எனப்பலவுமெடுத்தியம்பியிசையாமலசைவின்றிக்
கனத்திலுருமேறுதனிகாசினியிற்படர்வதுபோ
லுனற்கருமுன்கதையோடுமொருவனும்போயிடஞ்சார்ந்தா
னினத்துடன்மற்றிவருமரியிசைத்தவிடந்தனையடுத்தார். (உகங)

பார்புகழுந்துாய்சிமந்தபஞ்சகமாமடுவருகிற்
சீர்புகழுநற்றலத்திற்சேர்ந்துதிரள்புடைவளைப்ப
வேர்திகழுநாட்டமிலாவிறைமகனுமரிமகனும்
போர்புரியத்தமதுவரைப்புயங்களைநோக்கினரன்றே. (உகச)

அக்காலைசெழுந்துளவமணிந்தபிரானடல்வீமன்
மெய்க்காலத்தீயிறைக்கும்விழிவிளங்குமுகநோக்கி
கைக்கானகொடுங்கதையுங்கடுஞ்சினமுமெதிர்தூண்டப்,
புக்காடல்புரியவெழும்பொற்பானுக்கிவையுரைத்தான். (உகரு)

வேறு.

வஞ்சனைகுடிபுகுமனத்தன்கங்கையி
னஞ்சினையிட்டுனையுகுத்தனான்றினில்
விஞ்சுபாதலத்தமுதருந்திமீண்டுயி
ருஞ்சுவந்தவனுனக்கெவர்கொலொப்புளோர். (உகசு)

கொடிபுனையரவினுங்கொடியகோமகன்
வடிவறக்கனன்மனைமடுத்தனான்றினிற்
றுடியிடையாயொடுதுணைவருய்ந்திடக்
கடியுயிர்காத்ததார்கருதற்பாலரே. (உகஎ)

இடும்பனையாருயர்நீக்கியாரையு
மடும்பகனுருயிரகற்றியந்தணர்
படுந்துயரொழித்தநின்பரிசுகாண்டொறுங்
கொடுஞ்சமனெஞ்சமுங்குலைந்துகூசுமால். (உகஅ)

இருபதோடொருமுறையிரிந்துபோர்முனை
நிருபர்முன்யான்றடுமாறிநீங்கிய
வொருசராசந்தனையோங்கன்மார்பக
மிருபிளவாக்கியவேறுநீயன்றே. (உகசு)

கேடில்கிம்மீரன்றசடாசுரன்கெழு
மாடியல்நண்மணிமாலனுதியர்
வீடியதுரைத்திலன்விறல்கொள்கீசகன்
பீடறமுடித்தநின்பெருமையென்சொல்வேன். (உஉ0)

மத்திரன்மயங்கியவசைகொடம்பியைச்
சித்திரவதைசெயக்கண்டுசேர்கலாக்
குத்திரமன்னனைக்கோறலுன்றனக்
கெத்தனைசுலபமாரிணையென்றோதுவோர். (உஉக)

உரைத்தவஞ்சினங்களுமுறுத்துவெம்மையுங்
கரைத்தகைதவங்களுமனைத்துங்கையற
நிரைத்தவஞ்சகனுயிர்நீக்கிவையகம்
புரத்திர்நீரைவருமென்றுபோற்றினன். (உஉஉ)

தாமரைக்கண்ணுடைச்சயிலமிவ்வணம்
வீமனைப்புகழ்ந்திடவிளங்குமாற்றன்மிக்
கேமநற்புயங்கள்வானெய்தயானைமேற்
காமருமடங்கல்செல்கடுப்பினுயினன். (உஉங)

இருவருமங்கதம்புனைந்திலங்கிய
திருமுடியொளிரவோர்செங்கைதாங்கிய
பொருவில்வான்கதைகளைப்புரட்டிவெள்வளை
பெருகொலிதிசைதொறும்பெருக்கிநேர்நின்றார். (உஉச)

ஆயகாலையிற்புனலாடனீங்கிய
தூயநல்விராமனோர்தேரிற்றோன்றலு
மாயனுமன்னருமறனின்மைந்தனு
நேயமோடெதிர்கொளநீங்கிமுந்தினர் (உஉரு)

உதிட்டிரன்றழுவினனேனையோரெலா
மதித்தடிதொழுதனர்மாயனுதியாக்
கதிப்படுதேரிழிந்தடைந்துகண்ணரு
ளுதித்திடயாரையுமுவந்துநோக்கினன். (உஉசு)

வைகினரிவர்செருமலையும்பாங்கரின்
மெய்கிளரிவரவர்விளைத்தபோரெலாஞ்
செய்கையாற்றம்முனோன்செவிசெறித்தபின்
மொய்குலமுகிலனுன்மொழிவதாயினான். (உஉஎ)

ஈண்டுநின்றகன்றபின்பெங்கனேகினீ
ராண்டுளபுதுமையென்னுடுக்தூயரீர்
மாண்டசீர்ப்பெயரொடுவழங்குகென்னலு
நீண்டவனுதிட்டிரற்கிவைநிகழ்த்தினான். (உஉ௮)

வேறு.

சந்தனமகிலுந்தேக்குந்தராளமுமணியுந்தேனு
முந்துறுதரங்கந்தோறுமுறுஞ்சரச்சுவதிப்பாங்கர்
வந்தகற்பிரயாகையென்னும்வான்பெயர்படைத்ததீர்த்த
மெந்தனுலுரைக்குமாறோயிருக்கெலாமுரைக்குமன்னே. (உஉ௯)

அனையவப்புனலின்மூழ்கியமரராய்முனிவரானோர்
நினைவினிற்றெருக்கொணாதுநிறைமதிக்கடுத்தசாப
மினையகற்றவத்தாலாடித்தவிர்ந்ததென்றிசைக்கயாருங்
கனைகழற்குரிசிலந்தக்காதையையுரைத்தியென்றார். (உ௩0)

மறையவன்வலதங்குட்டத்துதித்தவன்வாழ்வின்மிக்க
சிறுவிதியளித்தவின்சொற்றிருவனையார்களான
மறுவிலச்சுவதியாதியிரேவதியீறுமாதர்
குறைவில்கற்புடைமைகண்டுகுளிர்மதிமணஞ்செய்தானே. (உ௩க)

துதிபெறமின்னனுரைத்தோய்ந்தின்பநுகருநாளி
லதிகமாம்வனப்பின்மேவுமுரோகணிமயலிலாழ்ந்து
மதிபிறர்முகநோக்காமைமருவல்கண்டாற்றகில்லார்
பதிதனைவெறுத்தேமாதர்படர்ந்துதாதைக்குரைத்தார். (உ௩உ)

தக்கனங்கணுகினின்றுதண்மதிமுகத்தைநோக்கி
மைக்குழன்மடவாராருஞ்சமமெனமருவிடாமற்
புக்கிநீயொருத்தியாசைபொறப்பதுநெறியோகூறாய்
மிக்குயர்கல்விவல்லாயெனப்பலவெறுத்துப்பின்னும். (உ௩௩)

இன்றுதொட்டிருபான்மேனவெழுவருமின்பமெய்த
வொன்றுபட்டனையேனன்றுமுரைத்தசொல்லுகுத்தாயென்னி
லன்றியான்சபிப்பனென்னுவறைந்துமீண்டகன்றான்மற்றும்
வென்றிமாமதியுந்தேறானியற்கையேவிளக்கிநின்றான். (உ௩௪)

முருந்தெனமுத்தமென்னமுல்லையின்றும்பாமென்னத்
திருந்தியநகையார்கேள்வன்சேர்ந்திடாமையினல்வாடிக்
கருந்தடங்கண்கண்முத்தங்கனதனத்திறைப்பமீண்டு
பொருந்தியதாதைக்கோதப்புழுங்கினான்கனலேபோன்றான். (உ௩ரு)

கலைமதிதேய்ந்துதேய்ந்துநாடொறுங்கலைகளெல்லா
முலைவுறவெனச்சபித்தானுதலான்மதியுமோய்ந்து
நிலைதளர்ந்தகனுடோறுநொந்துநொந்துலவல்கண்டே
தலைமிகுமமரர்தேறிநிலவினோன்றனக்குச்சொல்வார். (உகசு)

ஆங்கவன்புகன்றசாபமகற்றிடவல்லதிந்தப்
பாங்குறுபிரயாகதீர்த்தமாடுதிபரிவினென்ன
வீங்குதோள்விதுவுநன்னீர்விரைந்துதோய்ந்தரன்றாள்போற்ற
வோங்கமாவாசைதன்னிலுமாபதிகருணைசெய்தான். (உகஎ)

அன்றுதொட்டகன்றவெல்லாக்கலையுமோர்கலையோடாங்கு
நின்றவன்றனக்குமீளக்கலையெலாநிரம்பநல்கி
யொன்றொன்றாத்தினந்தோறெய்தவொன்றொன்றுகுறையச்செய்தான்
வென்றிகொண்டுலகமேழும்விளக்கினான்விதுவென்போனே. (உகஅ)

வேறு.

சிறுவிதிமற்றிதுநோக்கித்தேவரொடுமாதரொடுங்
குறுகியவன்றனக்காசிகுறித்துமனமயலொழித்து
நெறியாலேயோரொருவர்நேர்ந்தின்பநுகரவென
மறுவறுமாதரைநல்கிமற்றவன்மீண்டனனன்றே. (உகசூ)

அனையமதிக்கயந்தொலைத்தவப்புனலிற்படிந்துபினும்
வினையறுக்கும்பலபுனலும்விரைந்தாடியாங்ககன்று
புனைகொள்சரச்சுவதிநதியெழுநதியாய்ப்பொலிவோங்குங்
கனைமடுப்பாங்கினடைந்தோர்கலைமுனியைக்கழல்பணிந்தேன். (உசo)

அம்முனிபேர்மங்கணனுமவன்முன்னரேழ்மருத்துச்
செம்மையுறுபெயராரைத்தெரிந்தளித்தமுனியென்ப
ரிம்மையிலாங்கவன்றருப்பையினைப்பற்றித்தவம்புரிந்தான்
வெம்மையினாலுலகேழும்விண்ணவரும்வெருவுறவே. (உசக)

அக்காலைகடவுளர்களரன்பதத்தில்வீழ்ந்துரைப்ப
மிக்கானுமவணடைந்துவேதியனைத்தவிர்கென்ன
முக்காலமுணர்ந்தமுனிமோனத்தோடிருந்திடலு
மைக்காளவிடமுண்டமணிவாயான்மனங்கறுத்தான். (உசஉ)

அங்குலத்தைத்தனதுவிரலாற்றெறிப்பவவன்றவங்கள்
வெங்கனலினீறாகிவெந்துவிழவிழிதிறந்து
கங்கைபெருக்கெடுத்தொலிக்குங்கடுக்கையணிசடையானை
யங்கமவனியிற்றோயவடிமிசைவீழ்ந்திதுபுகல்வான். (உசங)

நினைந்தனையேயுலகுண்டுநீடுமுயிர்த்தொகையுண்டு
புனைந்திடுமுத்தொழிலுண்டுபோற்றுமிறைவருமுளராற்
சுனைந்ததவப்பயனாகித்தூயபயன்றருவோனு
யனந்தரமப்பயனைத்துமகன்றிடமாய்நிற்போயே. (உசச)

எனப்பலவும்புகழ்ந்தேத்தியிறைஞ்சியுனையுணராத
வினைக்குரியவறிவிலியைவியந்தாளக்கடனென்னலும்
வனச்சடிலமுடிப்பரமன்வரதனாய்ச்சிறுநகைசெய்
துனற்கரியதவமீளவுதவியவன்றனக்குரைத்தான். (௨௪௫)

நின்றவத்தாலுலகுயிருநிமலருமெய்சலித்ததனா
லின்றவர்கடுன்பமறவியற்றினேமின்றுமுத
லொன்றுபலவாய்த்தவங்களுறும்விருத்திவாழ்தியென
வன்றுதவியேறுகைத்தேயண்ணன்மறைந்தனனன்றே. (௨௪௬)

அத்தூயமுனிசூழலடைந்தவனைத்தரிசித்து
வித்தாரப்புனல்படிந்துவிளம்பியகௌசிகமுனிவன்
சத்தானதவம்புரிந்தகடந்தோய்ந்துவதிட்டமுனி
சுத்தாதிதவச்சூழற்றூயபுனல்படிந்தேறி. (௨௪௭)

சோமதீர்த்தந்துனைந்துதொல்லைதனிற்சண்முகனைச்
சேமவானவர்பலருஞ்சென்றிறைஞ்சிவழிபட்டு
நாமநீர்ச்சரச்சுவதிநதிக்கரையின்முடிபுனைந்த
தாமவான்புனல்படிந்தேன்சாற்றுதுங்கேளெனப்புகன்றான். (௨௪௮)

வேறு.

ஆறூர்சடைமுடியானனல்விழியாறினுமணுகும்
வீறூர்பொறியோராறையும்விரைவாலருகழைத்தே
நீறூடியகனல்வானவன்முடிமீதுநிறுத்திக்
கூறூதொருமொழியுஞ்செலவவன்மேனிகொளுந்தி. (௨௪௯)

ஓடித்திருமலர்மீதுறவொருவேதியனடியிற்
பீடிற்றொழுதெனதாவிபிழைப்பித்திடுகெனலுந்
தேடிச்சிறுபெருமானருள்சிறுவெம்பொறிகளைநீ
நாடிப்பகிரதியாமொருநதியுய்க்குதியென்றான். (௨௫௦)

கலைகற்றவர்வழிபட்டறிகனலக்கணமணுகி
யலைமிக்குயர்நதியிற்பொறிகளையுய்த்திடவாறி
னிலையிற்செலநதியக்கணநீர்சாலவறழ்ந்தே
யுலையச்சரவணையிற்பொறியுய்த்தாள்வரவுணர்ந்தே. (௨௫௧)

பொன்பட்டதரங்கப்பகிரதிபொற்புடனுய்ப்ப
மின்பட்டெனமேவுங்கதிர்பலபட்டெனவொளிரா
முன்பட்டுளபொறியாறுமுழங்கிப்பயின்ஞான்றி
லென்பட்டதுவானுந்திசையெட்டும்வெருவியதே. (௨௫௨)

புனிதன்கனல்விழிவந்தபுலிங்கங்களோராறு
நனிதங்குபுசிலநாள்செலஞானத்திருவுருவா
யினதாமுகமாறுங்கரமீராறிருதாளோ
டனநன்றிருமுருகன்றிருவருளோடவதரித்தான். (௨௫௩)

விரிசெங்கதிரொருகோடியினொளிமேனியுமருளும்
புரிநூலொடுசிறுமூரலுமழகார்தருபுயமு
மெரிமாமணிவடமுங்குழைகளுமாடையுமிருதாட்
பரியும்பரிபுரசாலமுமொளிரும்படிவந்தான். (௨௫௪)

வந்தேபனிவரையூடொருமணியாசனமேறி
முந்தேபலபலயோகமுமுயல்வுற்றிடுபோதிற்
சந்தார்முலையுடையார்தவமுறுகார்த்திகைமானார்
கொந்தார்குழன்மகவாசையினருகெய்தினர்குறித்தே. (௨௫௫)

ஒருவர்க்கொருவர்களாசையினொடிக்கரநீட்டக்
கருவிற்புகுதாமேனிகொள்கந்தன்சிறுநகையோ
டருளித்தனதுருவாறுகொடவர்கைதொறுமணுகப்
பொருவற்றவர்மகிழ்ந்தார்கொடுபோனார்கடம்படவி. (௨௫௬)

ஆராமுலையமுதூட்டினரன்போடவர்போற்றச்
சீராலவரிடையாடல்சிறந்துற்றனனிளையோன்
காரார்குழலினர்மீளவுங்கருதித்தவிசிடைமுன்
பேராதுறுமிடமுய்த்தனரொன்றாயினன்பெருமான். (௨௫௭)

அக்காலையிலமரேசர்களணுகித்தொழுதடைய
மிக்கான்குருவெனுமேலவன்மேவிச்சுருதியினான்
முக்காலமுமுணருந்திருமுகமாறுடையானுக்
கிக்காசினியுணரும்படிகருமங்களியற்றி. (௨௫௮)

அங்கிக்கதிர்மகவென்றுமருங்கங்கையளித்த
புங்கத்திறன்மகவென்றுமரும்பேர்கள்பொருத்தித்
துங்கத்திறலொடுகார்த்திகைசுதனென்றுமுரைத்தான்
வங்கக்கடல்புடைசூழ்புவிவாழ்த்துஞ்சுரர்குருவே. (௨௫௯)

அச்சார்பினிலச்சண்முகனருளோடுருவமைந்தே
யெச்சார்புடையோருந்தொழவிருக்குந்தலமடைந்தே
நச்சேவடிதொழுதுய்ந்தனனானென்றுரையாடிப்
பச்சாலிலைதுயில்வோனவனிசைமீண்டிதுபகர்வான். (௨௬௦)

வையத்திவனுறுபோதினின்மறையாகமமெல்லா
முய்யக்குகனிடைமேவியுகந்தேதொழுதுலவ
மையற்கடலகன்றேமுனிவரராருமதிக்கு
மையத்தையகற்றித்தனியாசானிலமர்ந்தான். (௨௬௧)

வேறு.

சோராவருடன்னுபுதன்மகனைப்
பாராதுறவாற்றல்படைத்திலனாய்
காரார்குழலாளொடுகாய்விடைமே
நீரார்சடையோனெதிர்நின்றனனே. (௨௬௨)

நீலக்கிரிபொற்கிரிமேனிலவுங்
கோலத்தைவிளக்கியகொள்கையினுன்
ஞாலத்திருவோடொருநல்லருள்சேர்
மாலுற்றனனுங்குவனன்மிசையே. (உசுங)

என்னைக்கவிராசரிலேற்றமருண்
மின்னைப்புடைகொண்டெதிர்மேவினனுன்
முன்னைப்பழமாமறைமுற்றுமுன
ரன்னத்தனியூர்தியிலம்புயனே. (உசுச)

அயிராணியும்வெங்குலிசாயுதனு
மயிராவதமீதிலடைந்திடமேவ
துயிலாவசமீதுசுவாகையொடு
மியலார்கனல்வானவனெய்தினனே. (உசுரு)

ஏனைத்திசைகாவலரேழ்முனிவர்
ஞானத்தனியெண்மர்நவக்கிரக
மானப்பெயர்கொண்டவர்வானவரு
மோனத்திலடைந்தனர்முற்றிலுமே. (உசுசு)

ஏகாதசருத்திரரெண்ணறுபைங்
நாகாதிபர்நாமவரம்பையரும்
வாகார்பதினெண்கணவர்க்கமுடன்
சோகாதிதுறந்தவர்துன்னினரே. (உசுஎ)

மறையோசையுமங்கலதூரியமா
முறையோசையுமுனிமடவார்பரவு
நிறையோசையுநின்மலர்செய்புகழைப்
பறையோசையுமாயதுபார்முழுதும். (உசுஅ)

வந்தார்தமைநோக்கிமகிழ்ந்துநகை
தந்தானுமைதந்தருளுந்தனயன்
பந்தார்முலையாளொடுபாய்விடைவிட்
டுந்தாமகவுக்கருகோடினனே. (உசுகு)

ஈசன்பணியாலழலென்பவனு
மாசின்றியகங்கையும்வந்தருகு
நேசம்பெறமுந்தினர்நின்றருகே
வீசுங்கரநீட்டினர்மேலவரே. (உஎ0)

அருகேயொருநால்வரழைத்திடலுந்
திருமான்மருகன்றனிசிந்தைசெயா
வுருநால்வகையாயவரோகைபெற
வருவோர்கரமெய்தினன்மைந்தனுமே. (உஎக)

வே று.

வெள்ளெருக்கஞ்சடைமுடியான்விரைந்தடையுந்தன்குமரன்விரகுநோக்கி
யுள்ளிருக்கும்பேரன்புவெளிபரந்தாலெனநகையேயோடும்பர்காணக்
கள்ளிருக்குமலரலங்கல்கடம்பணையாதரத்தோடுமார்பிற்றுங்கித்
தெள்ளிருக்குங்கருணைமுகந்திருமுகத்தினுடன்செறித்தான்றேவர்தேவன்.

அம்பிகையுந்தன்கரத்திலடுத்தமகவினைமுகத்தோடணைத்தாதித்த
விம்பமதுநிகரில்பச்சைமேகமதனிடையணையும்விரகுகாட்டிப்
பம்பியதன்கருணையெலாம்பரிந்தளித்துமீளவுமப்பார்மீதுய்த்தாள்
நம்பனும்வானதியனனுமவ்வண்ணமுருவனைத்துஞாலத்துய்த்தார். (உஎ௩)

மீட்டுமிருவொருநான்கும்விளங்கியொரேதிருவுருவாய்விரைகொள்வாசத்
தாட்டுணையுமேமபுயாசலங்களவையீராறுஞ்சலசந்தோற்கு
மீட்டுகதிர்ச்சண்முகமுமீராறுவிழிமலருமேற்பநின்றான்
வாட்டிறல்சேர்மாலயனுமேனையருமற்புதங்கண்மலிந்தார்மன்னோ. (உஎச)

முருக்கிதழ்க்குவெண்மையுநன்முருந்தினுக்குக்கருமையுந்தன்முகத்திற்காட்டு
மருட்கடலாயேழுலகுமளித்தபரம்பரையருகிலடைந்துபோற்றித்
திருக்கிளர்தன்முலைசொரியுஞ்செழுஞானவமுதுவள்ளஞ்செறித்துச்சேய்க்கு
நெருக்கியசெவ்வாய்கடொறுமருத்தினடனக்குயர்வும்நிகருமில்லாள். (உஎரு)

திருஞானவமுதுண்டுதேக்கியபின்மாமதலைதன்னைச்செவ்வே
யொருஞானமுதல்வனடிபணிவித்தேதிருநாமமுரைத்தியென்னப்
பெருமானுமறைமுறைபாற்பெயர்களெலாமெடுத்தியம்பிப்பேறியார்க்குந்
தருமாறுதனிபெழுத்தாற்சரவணபவன்னெனும்பேர்தழையச்சொன்னான். ()

எராருமிமாசலையுநனிமகிழ்ந்தேதன்புதல்வனெல்லாம்வல்ல
பேராண்மைதனையுணராப்பெண்டன்மைமடந்தாங்கிப்பேசலுற்றாள்
சீராருமிளங்குழவிக்கரியமறைப்பொருளனைத்துந்திருத்தியீண்டு
நேராருமிலரென்னப்புரிதியோதிமமுயர்த்தோய்நீயீண்டென்றே. (உஎஎ)

தனையன்மிசையாற்றரியபெருங்களியானுமைகூறத்தாட்கலானய்
வினவபத்தாலக்குமரன்றனக்கருகிற்சேர்ந்திருந்துவேதமூல
மனையவிதியெடுத்துறைபத்தானுணரான்போற்பின்னரறைந்துகூறு
மினையமொழிக்கேதுபயனியம்புகெனயாவருங்கையெறிந்துநக்கார். (உஎஅ)

ஓதாமற்சுருதியெலாமுணர்ந்தவனுக்கெம்போல்வாருணர்த்துமாறே
காதாருநெடுங்கண்ணுப்கண்டனைநின்மகன்ஞானக்கல்விமுற்றும்
போதாருமறைமூலத்துட்பயன்யாமுணர்வதுவோபுகறற்கென்று
வேதாவுங்கரங்கூப்பிவிசாகனுயர்நாமமெலாம்விளம்பிநின்றான். (உஎகூ)

மூப்புவனங்களும்புரக்குமுகிலூர்தியச்சார்பினமூந்தித்தாழ்ந்தே
யெப்புவனங்களுக்குமிறையிருதாளிற்கரமுகிழ்த்தேயியம்புகின்றான்
றப்புறழ்வேற்கொடுஞ்சூர்தனக்காற்றேனென்னதரசுதுறந்தேன்றூய
விப்புதல்வன்றனக்களித்திமையவர்கந்துயர்தீர்ப்பனிகல்வென்றென்றான். ()

வலாரியிவைதொழுதியம்பப்புராரிமகிழ்வொடுமொழிவான்வருந்தேல்வா
னோர்க், கிலாபமுறவிவன்சேனாபதியாகியாசுரரையெதிர்ந்துவென்று, பலாய
னஞ்செய்துனக்கரசுபரிந்தளிப்பன்வாழ்தியெனப்பணிப்பவின்னோர், நிலாவு
தையங்கண்டொலிக்கும்பாற்கடல்போற்கலித்தார்த்தார்நிகரிலாதார். (௨௮௧)

ஆண்டகைநீபுகன்றபடிக்கரியமகவினைச்சேனைக்கதிபனாக
மாண்டகுநின்முன்பாகமணிமௌலிபுனைதுமெனமங்கைபங்கன்
றாண்டுறுநம்மன்பின்வழிபுரிதிரெனவருள்செயலுந்தொழுதுபோற்றிக்
காண்டரியபண்ணவர்கள்வுபகரணாதிகள்கொண்டேகருதிச்சூழ்ந்தார். (௨௮௨)

வேறு.

வீங்கியபாரிசாதநன்மலருமிளிர்சரச்சுவதியின்புனலுந்
தாங்கிமற்றுள்ளபொருளெலாங்கொண்டுசண்முகன்றனைத்தவிசேற்றிப்
பாங்குறத்திருமான்மந்திரமியம்பப்பங்கயன்வான்புனலாட்ட
வோங்கலின்வயிரிகலசநீருதவவும்பருமுனிவருங்களிப்ப. (௨௮௩)

மாமறைபரவவுமையொடுபரமன்மலர்விழியருளொடுநோக்கிக்
கோமுறையதனான்மஞ்சனமாட்டிக்குளிர்புனற்பட்டினான்மாற்றித்
தாமரைத்தவிசிலிருந்ததூயவனோர்தனிமணியாடைகள்சாத்தி
யேமநன்மேனிமுழுதுறக்கலவையெண்டிசைகமழ்வுறச்செறித்தான். (௨௮௪)

பாதசாலங்கள்பதங்களிலமைத்துப்பட்டிகைமருங்கினிலிறுக்கி
வேதநல்வழிமுந்நூலொளிர்மார்பில்விளங்குபற்பலமணியாரங்
கோதறுசெய்யமணிவடம்பரிதிகுவடுறன்மானவேயணிந்து
காதல்சேர்கரத்தின்மரகதக்கடகங்கடவுளரணிந்தனரம்மா. (௨௮௫)

வாசுகியமுதங்கடைந்தஞான்றுயர்ந்தமந்தரஞ்சூழ்ந்ததுமான
வீசுதோள்வளையம்புனைந்துநன்னுதலில்வீரபட்டமுமுறநிறுவி
மாசறுகுழைகள்செவிகளிலணிந்துமறைமொழியாசியோடெடுத்துத்
தேசுறுவயிரமாமுடியாறுசென்னிகடொறுஞ்செறிவித்தார். (௨௮௬)

காந்தளுங்கடம்புங்கனகமந்தாரங்கமழ்தருமாலையும்புனைந்து
வேய்ந்தவுத்தரிகமீதுறத்திருத்திவெங்கனலிடையிழுதுகுத்து
மாந்துநல்லவியாநிவேதனந்தந்துமடங்கலாசனத்தின்மேலிருத்தி
யாய்ந்ததாம்பூலமுதலுபசாரமியர்வையுமளித்தடிபணிந்தார். (௨௮௭)

எந்தைநீவானோர்சேனைகாவலனாயிராக்கதர்தமதுயிரகற்றி
யுய்ந்திடவடியோங்காத்தருள்புரிகென்றுரைத்தணிவிழாநடத்தினராற்
சுந்தரவதனக்கருணைவான்கடலிற்சுரந்தவர்க்கருட்கரங்கவித்துக்
கந்தவேளிருந்தான்வானவரிடையிற்கவிகைநீழலிற்சுடர்கால. (௨௮௮)

ஆசறக்கவரியிருமருங்கசையவந்தரதுந்துபிமுழங்க
நேசமிக்குயர்ந்தமுனிவரர்பணிந்துநிறைமொழிமறைகளாற்றுதிப்ப
வோசைமிக்குயரும்விஞ்சையர்கானமொருபுடையொருபுடைவிமல
மாசறுதூயநாரதன்வீணைவளரொலிதிகந்தங்கண்மருள. (௨௮௯)

பேரிகைசங்கநாதநற்றுடிகள்காகளம்பேரெழிற்சின்ன
மாரியர்சேனுபதியெனவொலிப்பவரம்பையர்திருநடம்பயில
வேரிஞேடிருந்தானிளையசேயதுகண்டிமாசலைவிழிகளித்தெய்தி
சிரியசீராஞ்சனம்புரிந்தகற்றித்தெய்வவான்சத்தியுமளித்தாள். (உ௯0)

கனல்விழிநுதலிற்படைத்தவன்வலியாற்கணக்கறுபூதங்களளித்து
மனனுறவியற்றியெண்ணிலாவீரர்வரவமைத்துதவினுனிப்பாற்
புனிதமாமேகாதசவுருத்திரர்கள்பொருந்தினர்படைகளாய்க்கரத்தி
னினியமாலளித்தான்வாகைமாலிகையாண்டிந்திரனளித்தனன்றுவசம். (உ௯க)

வலியுடைக்கலுழன்மரகதக்கலாபமயூரவாகனம்பரிந்தளித்தான்
சலசமேலிருந்தவேதியன்பலாசதண்டமொன்றளித்தனன்கங்கை
யிலகுகுண்டிகையொன்றளித்தனள்சுவாகைக்கிறைமணிமாலிகைபுனைந்தான்
பலர்புகழ்வருணன்சாமரையளித்தான்பரிதிதந்தனன்படர்கவிகை. (உ௯உ)

மீளவும்வானேர்பலருநல்வலியும்விடுபடைக்கலங்களுநல்கி
யாளெமையென்றுரண்ணலுநோக்கியமரரைக்காத்தியென்றமைத்து
வாளுறுவிழியாடன்னுடன்மீண்டேயரும்பெருங்கயிலையையடைந்தான்
ருளதாமரையோன்விண்டுவுமருளாற்றமதுமாநகரிடைசார்ந்தார். (உ௯௩)

ஏனைவானவருமுனிவரும்போற்றவிளையவன்கந்தமால்வரையிற்
ரூனமர்ந்திருந்தான்சிலதுநாளிப்பாற்ருருகனெனுந்திறலரக்கன்
சேனையோடடைந்துசெருவிளைத்திடலுஞ்சேயவர்படையெலாஞ்செறுத்து
வானுயர்வேலாலவனுயிர்தொலைத்துவானவருளமகிழ்வித்தான். (உ௯௪)

றுன்னலர்பின்னும்வாரிதிக்கிடையிற்ருேள்வலித்தாருகன்றுணைவர்
மன்னினரென்னக்கேட்டுளமழன்றுவானவருடனவணெய்திப்
பன்னருஞ்சத்திவேலினுலேனைப்படைகளாற்றெலைத்தபின்மீண்டான்
மின்னியபரிதிமேவிடத்தொலையுமிளிரிருட்படலமொத்திடவே. (உ௯௫)

இமையமால்வரைக்கோர்சார்பினிற்கிரவுஞ்சமெனுமொருமாயகேத்திரத்தி
லமைவுறநிருதரெண்ணிலரிருந்தேயமரரைவருத்துமாறுய்ந்து
தமனியமுடியான்சத்திவேலேவத்தனுசருமவரையோர்கணத்திற்
சமையறவடலைப்பொடிகளாக்கழிந்தார்கடவுளருவந்தெழுந்தார்த்தார். (உ௯௬)

மூவுலகிடத்துமசுரரையாய்ந்துமுடித்தபின்வானவருகந்து
தேவசேனையைக்கைப்புனலுடனுதவத்திருமணமுடித்துமாமறைகள்
மேவரப்புகழவிருந்தனனந்தவிசாகனுலயந்தொறுமடைந்து
தாவிகற்புனல்கடினைத்துமீண்டடைந்தேன்பலபலபுனிதநற்றலங்கள். (உ௯௭)

அங்கிவானவன்முன்றவம்புரியிடனுமரிதவம்பயிற்றியசார்பு
மங்கைமாநதியாய்ப்படர்ந்தபாங்கரினுமகபதிதவம்புரியிடனுந்
தங்கியாண்டிருந்ததண்டுளைந்திராமன்றருமகசாலையினடைந்தே
னங்குகந்தனுகிராதனுரைத்தானமர்புரிந்துளசெயலனைத்தும். (உ௯௮)

கங்கைதன்மகவுஞ்சிலைவலாரியனுங்கன்னனுமத்திரபதியுந்
துங்கநற்சுபலன்மைந்தனுமேனைத்துணைவருந்தொலைந்திடமாழ்கிப்
பொங்கரவுயர்த்தோன்வீமனோடமரிற்புகுஞ்செயலனைத்தையுமுணர்ந்து
செங்கரமுகிழ்த்தியான்கேட்டலாலுரைத்தான்செயமறிந்தனுகியவென்றான்.

வெள்ளைமேனியனங்குரைத்தவையனைத்தும்விருப்பொடுமுதிட்டிரன்கேட்டுத்
தள்ளுறுமன்பாலுளமகிழ்ந்திருந்தானெனுமுரைதரமுனியதுகேட்
டுள்ளமானந்தமுறக்கரமுகிழ்த்தேயுறுசனமேசயனுரைத்தான்
விள்ளிருவினையுந்துரிசறத்துறந்தவிமலமாமுனியுடனம்மா. (௩௦௦)

ஆதரவதனாற்சண்முகன்காதையரியமார்க்கண்டமாமுனிவ
னீதிமான்றனக்கன்றுரைத்தவாறெனக்குநிகழ்த்திலையப்பரிசன்றி
மாதவனுருவாமிராமனுலீண்டுவகுத்ததென்றுரைத்தனையிரண்டு
மோதுறின்மலைவாயிருந்ததென்னென்றானுத்தமன்மயக்கறவுரைப்பான். ()

கேட்டிநீயரசேவாரிசபவன்றன்கிளர்தருமடங்களோறுதித்து
மீட்டுமாசுரரைமுடித்தலாற்கந்தன்விளங்குமுற்பவங்கணக்கிலவா
னீட்டலேனவன்றன்சரிதமுங்கணக்கினிகழ்வதன்றுதலாற்பலவாக்
காட்டியபடியுஞ்சரதமாயுளத்திற்கருதுகென்றுளமயல்கழித்தான். (௩௦௨)

வெண்டிரையெறியுந்தரளநற்றரங்கவேலைசூழ்பூவலயத்தோர்
கொண்டதிவ்வண்ணமெனமுனியுரைப்பக்கொற்றவனன்றிதாமென்றே
யெண்டிசையறியமனதிடையுதித்தவிருட்படரையநீத்திருந்து
புண்டரநுதலோய்மேனிகழ்வனைத்தும்புகலெனப்புனிதனும்புகல்வான். ()

நற்பலவிராமன்றிருமொழிகேட்டேயைவருநறுந்துழாயோனு
மற்புதநிகழவமர்பரிசனைத்துமறைந்தபின்பவனன்மைந்தனையும்
பொற்புறுசுபலன்பாவைமுன்னளித்தபுரவலர்புரவலன்றனையுஞ்
சொற்பெறக்காட்டியிவரமர்தொடுத்தசெய்கையின்றுணிபெலாஞ்சொற்றார். ()

அன்னதேயுறுதியாமெனக்கழறியவர்முகநோக்கனுமிராமன்
மன்னனும்வாயுமதலையுங்கரங்கண்முகிழ்த்தவன்வயங்கருள்பெற்றுப்
பின்னரினொருவர்க்கொருவர்வெஞ்சினமும்பெற்றியுங்கொற்றமும்பெயரப்
பன்னினர்பாய்ந்தார்பதறினார்தெழித்தார்பாரொடுவிசும்புகண்பனிப்ப. (௩௦௫)

வேறு.

கந்தநறுமலர்க்கூந்தற்காந்தாரிபுதல்வனையக்
குந்திமகன்முகநோக்கிக்கொடுஞ்சொற்கள்பலசொன்னான்
கந்தருவரன்றன்னைக்கட்டியதோள்வலிகொண்டோ
சிந்தையிற்கைதவங்கொண்டோசெருச்செயநீபுகுந்ததுவே. (௩௦௬)

வாராயின்றனைக்கொடியமறலியுணவிருந்திட்டு
நீராரநுகர்ந்துமுதனிகழ்த்தியவஞ்சினந்தவிர்ந்து
காராருங்குழன்முடியாக்கருங்கண்ணிகுழன்முடித்துப்
பாராளவன்றுணைவரொடும்படுதிகடிதென்றான். (௩௦௭)

தன்கருத்திற்ரு முய்யத்தானினைப்பர்தலத்தோர்க
ளுன்கருத்துமுழ்வினையின்முடிபன்றிமேவுறுமோ
மின்கருத்துநுங்கருத்தும்விறலழியக்கதைப்போரி
லென்கருத்தேமுற்றியக்காலெங்குறுவாய்புகலென்றான். (௬0அ)

தனையுமருங்கிளைஞரொடுதானிருக்குமூற்றத்தா
லிதையமருளினிற்பொங்கியியம்பினனிம்மொழியென்று
குதைவரிவிற்புரவலர்கள்கோமானுமைவரையுங்
கதையொன்ருற்கடந்துபுவிகாப்பனெதிர்வருகென்ருன். (௬0௯)

வே று.

நடையொழியாதோன்விறற்குமாரனுநயனமிலாதோன்முதற்குமாரனு
மடலொடுகார்வானிடிக்கதாமெனவதிர்வுறவேயோடிமத்தவாரணம்
விடையரிமாவேறெனப்பிரதாபமும்விசயமுமாயேமிகுத்துமேவிடு
கடையுகநாள்வாயொலிக்குமாறிவர்கதைகொடுபோராதரித்துமூளவே. (௬௧0)

ஒருவரையோராசலத்தினேர்பொருமுவமையில்வாஞேர்குறிக்கநீடமர்
புரிதரவேதாநகைத்துமீமிசைபொறியெழமாருநிகர்த்தவீரர்க
ளிருவருமாகாயகத்தின்மீதுறவெழுவருலாவாசகத்திலாழ்குவர்
வெருவரவீருர்புவிக்கணுகுவர்விசையொடுபேராதிகற்செய்வார்களே. (௬௧௧)

உகவையினுலேநகைப்பர்நீள்சினமுறவுறமீதேமடிப்பர்வாய்மலர்
புகையெழவேதீவிழிப்பர்மார்பொடுபுனைகிரிபோலேதுடிப்பர்தோளிணை
யிகல்புரிநூலோர்பயிற்றுசாரிகையிடம்வலமேவாதுவட்டமாகுவர்
முகடுறமீதேயுருத்துமீளவுமுதுகுறநேரேகுதிப்பர்பாரினே. (௬௧௨)

ஒருகையினுலேசுழற்றிவான்முகடுடைபடமேலேசெலுத்திநீள்கதை
யிருநிலமீதேமறித்துவீழுமுனெறிகையினுலேதரிப்பர்சார்பொடு
விருதுகள்பேசாநிருத்தமாடுவர்விசையுடனேகால்பிணைத்துமீளுவர்
பொருபடைநூலாய்குலக்குமாரர்கள்புகழ்தரவேநேர்குதித்துலாவுவார். ()

கதைகதையோடேயிடிக்குமோதைகள்கதையுடையோர்தானகைக்குமோ
தைக, ளெதிரெதிர்போர்வாதிசைக்குமோதைகளிசையுடன்மீதேபுடைக்கு
மோதைகள், பதயுகமீடாயுறுத்துமோதைகள்பணிலமுமாயோர்குறிக்குமோ
தைக, ளதலமும்வானேடடுத்தபார்முகமடையவுமேயாகுலத்தைநேருமே. ()

இருவருநேராயிபற்றுபோரினிலிருகதையாலேயடிக்கமேனிகள்
பொருவறவேதோள்கதுப்புமார்பொடுபுனைமுடிசேர்சிருறுப்பியாவினுங்
குருதிகள்பாயாநரப்புநீருறுகொடுமைகள்காணுர்சலிக்குமாறிலர்
பெருமிதமாரேவகுப்பர்சூழ்தருபிணையலின்மாபோர்துணுக்கமாயினர். ()

அரியினையோர்கேதனத்திலேயுளவவனெடுநாகேறுயர்த்தவீரனு
முரிபனபோராதரித்துமீளவுமுடலறவேதானிளைத்தபோதினின்
வரைமுடிமேனுளொடிக்ககாலருண்மதலையையேழ்பார்புரக்குமாண்டகை
யுரைதடுமாறுவுயிர்த்துநீயுனதுயிர்நிலைகூறுயெனக்கெனுமுனம். (௬௧௬)

இருவினையோர்வானறத்தின்மாமகனிளவலியானோவொளிப்பனாருயிர்
பொரவருவோய்கேள்சிரத்திலேநிலைபொருளெனவேவாய்குறித்திடாதுமுன்
பெருமனுமேராமுடிக்கண்மோதினன்பிரளயமாபோதிடிக்குமாறென
வரிதருவோனாகுலத்தினாலுடலயர்வுறவேவீடலத்திலாயினான். (௫௧௭)

விதியாலேகலக்கமாறிமெய்வினைவழிசார்வானெதிர்க்கணாகியே
மதியுடையோய்நீயுரைத்திபாருயிர்மருவிடம்பானாதரிக்கவீண்டென
வெதிரியுமோதாமறைத்துமாமுடியினிலெனவேவேறகரைப்பவீமனு
முதிர்கதையாலேமதித்துமோதினன்முடிபுனைவானோர்சிரத்தின்மூழ்கவே. ()

மகிதலமேல்வீழ்கருத்தனக்கணமதியொடுதானோர்கதைக்கரத்தொடு
மிகவெதிரேபோயடித்திடத்தலைவெடிபடமாறுவயிர்த்திகற்றலை
யகனிலமீதேசலித்துநிற்கவுமருளொடுகூடாதுயிர்த்துரப்பொடு
புகவெதிரேபோய்மருத்தளித்திடுபுதல்வனுமோதாமுடித்தலைக்கணே. (௫௧௯)

உரியகதாபாணியர்க்குளோதிடவுவமையிலாதோனடித்தபோதுயர்
சிரமுடியூடேபிளக்ககாலிருதிசையினுமேபோய்நிலைத்தசோரிகள்
மருவியதானிலவெற்பிதாமெனமகிதலமேலேயயர்த்துவீழவும்
விரிவுடனாகாவெனத்தனாண்மையைவிருதர்கள்காணாவிளைக்கும்வீமனே. ()

வருபுவிமீதாயுயிர்ப்புருன்விழிமலர்திறவானாயுழக்கியேயுகு
குருதியுகாமேதொடைத்துநீள்புகழ்குருகுலபூபாலனுக்கிரவேகமொ
டுருமெறிமாமேருவொத்தகாயமுமுதறிமனோவீரமுற்றுமீளவு
மருகொருபாலாநிற்கும்வீமனையடுகதையானேர்முட்டிமோதவே. (௫௨௧)

வேறு.

ஓமவுண்டிகொள்பேரழல்வானவனூதைவெஞ்சமராடியவாறென
வாமரங்களினான்மதியாதமராடுகின்றநிசாசரராமென
வீமனுந்துரியோதனனுமனும்வேகமொன்றியவீரியராயடு
சேமவண்கதையாலமராடினர்தேறிநின்றவர்வாள்விழிமூடவே. (௫௨௨)

மேவுசிங்கவராவவிலோதனர்வீசுகின்றகதாரவர்மேலிட
வாயுவெம்பரியாதபனுந்தடுமாறிநின்றனன்வானவர்தானவர்
நாவடங்கினர்மாமுனிவோரொடுநாகரஞ்சினர்நான்முகனாதியர்
மூவருஞ்செயலேதெனநாடினர்மோழைகொண்டதுமூடியகண்டமே. (௫௨௩)

தார்வலம்புரியானொடுபோர்புரிதாழ்வுகண்டனன்வீமனைவாசவி
தேர்விடுந்திருமாலடிநீண்முடிசேரநின்றுரையாடினன்மாருதி
நேர்தளர்ந்தனனியாதுகொலோசெயனீமொழிந்தருள்வாயெனவானவ
ரூர்புரந்தவனோருகமுராரியுமோதினன்செவியூடவனோடிவை. (௫௨௪)

நீநயந்தனைகேளுறுபோரிடைநேர்மலைந்திடுவோரிருவோரினு
மானிலன்பெலவானதிலேமுகரானனன்றருசேயிளையானினி
நானிலம்புகழ்வோர்பலவாயிரநாண்மலைந்தனராயினும்வீவரோ
வானகம்புகுதாரிருவோர்களும்வாசவன்றருபூணணிமார்பனே. (௫௨௫

மாறுகொண்டவனாவிசைவானுறமாறநெஞ்சளவேதமெனிலொன்றுள
கூறினன்றலைவஞ்சகமானதுகோலமாருதிகண்டுகொள்வானெனி
னூறுமைந்தரிலாதிபனாகியநூல்வலந்திகழ்மார்பனையாருயி
ரீறுகண்டிடலாமிவனூறுணைமையேதமென்றகலாதுறமோதினே. (௩௨௬)

ஏழ்பெருங்கடல்சூழ்புவிபாரமுமேதமுங்கெடவேதமிலேவரும்
வாழ்கவென்றுயர்நாரணனூர்திருவாய்மலர்ந்தசொலான்மகிழாமிக
ஊழினும்பெரிதாமரிவாய்மைகொடுருவின்புடைசேர்கரநாண்மலர்
வீழ்வுறும்படிபோயெதிர்நின்றனன்வீமன்வாள்விழிநேர்சிலைவீரனே. (௩௨௭)

ஞானபண்டிதவாயுகுமாரனும்நாரணன்பணியாலிளையோன்மொழி
மோனவன்குறிதானுணராவெதிர்மோதினன்கதைபூபதியூருவின்
மானகஞ்சுகன்மீளவுமீளவுமாறிநின்றிடவேயதுகண்டபின்
மேன்முழங்கியவானவர்தூரியமேல்விழுந்ததுபூமழைசாலமே. (௩௨௮)

மாறநின்றகையோதனன்மீளவும்வாயுமைந்தனைவாகுவுமார்பமு
நீறெழும்படிசாடியபோதவனீணிலந்தனிலோடிவிழாதுதன்
னூறுமிஞ்சியபேருடலோடெதிரோடிவன்றுடைகீறிடமோதலின்
வீறுகொண்டபுயாசலம்வாடிடவீரனும்புவிமீதுறவீழவே. (௩௨௯)

வேறு.

அரிப்பதாகனுரகப்பதாகனைவதிர்த்துமேலுறவடர்த்துநீ
டுருப்பினாலதிசயிக்கவூருவையொடித்துநீள்சினமுஞற்றவே
நெருப்புறுவிழிசிவத்துவார்கடைநிமிர்ப்புறுதபுருவத்தனாய்
மருப்புநான்குறுதனிக்கைமாவெனமதத்துமார்பினிடைகுத்தினான். (௩௩௦)

கதுப்புவாயுநேரியக்கதாயுதகரத்தினானிகலக்கினா
னெதிர்த்தயானையையடர்த்தகேசரியெனப்பொன்மௌலியையிருத்தினா
னுதைத்துமேலிருபதத்தினாலவனுரத்தைவாகுவையொடித்துநீள்
விதத்தினாலிருநிலத்தின்மீதுடல்விதிர்த்துவீசினன்வியக்கவே. (௩௩௧)

எனச்சிலாறுகள்பயிற்றவீரனுமெதிர்ப்பதாயெழுதலுற்றபோ
தனற்சகாயன்முனளித்தகாளைதனடற்சரோருகபதத்தினா
லனக்குழுப்பலினியென்கொலாமெனவுதைத்துமூளையையுடைக்கவே
சினத்தினாலிளைஞனைத்தெழித்தனனுதிட்டிரன்பெரிதுசெப்பினான். (௩௩௨)

வேறு.

பாராளுமரசரெலாம்பணியுந்தாளான்பரவைசூழுலகேழும்பரவும்பேரா
ன், காராருமுளனெனினும்வாழ்வின்மிக்கான்களியானைக்குருகுலத்திற்றோற்
றஞ்செய்தான், வீராநீவிதிவலியாற்கொன்றாய்நன்றேமீண்டுநீசிரத்துதைத்தல
றமோசொல்லா, யோராதுசெய்தனையேனகந்தைவேண்டாவெனவிரங்கியிரு
விழிநீர்கலுழநின்றான். (௩௩௩)

படியுடையானிவ்வண்ணம்புகலவாங்குப்பார்த்திருந்தபலராமன்றரிக்கலா
னாய், கொடியைநீவெங்கதைப்போர்வல்லோரேசக்குறித்தூருவினடித்தாய்கு
றைவிலாதோர், கடியளவுமேமோதலிழிந்தபாங்கர்கதையோச்சாரதுபொறை
செய்திருந்தோஞ்சோதி, முடிபுனைந்தசென்னியினீயுதைப்பதோநீமுடியும்வ
கைபயில்வனமரென்றுமூண்டான் (௩௩௪)

துளவுகமழ்திருமேனிக்கமலநாபன்றொழுதெழுந்துமுன்னைவினைவிழ்ந்த தோன்ற, லவ்வுபடாதிவர்க்கியற்றுமிடையூறன்றியனற்பிறந்தாடுகிலுரிந்தான வளன்றாங்கு, வளமலிபேரவையுரைக்குறங்கில்வீமன்மலர்க்கரத்திற்கதைபடீசாய்வையென்றா, ளுளங்கோடிமுனிசாபம்வந்தவாறுமுணர்வையினிவீமனை யென்னுரைப்பங்கூறாய். (௩௩௫)

பாண்டவரையீண்டுபுரிசமரிலிந்தப்பாவிபுரிகொடுமைகளார்பகரவல்லார், காண்டவமன்றழித்தபிரான்மகனைக்கோடி. காவலர்சூழ்ந்துயிர்கவர்தலறமோகூறாய், மாண்டவனும்விதிமுறையாலன்றியொன்றான்மாய்ந்திடுமோதவிர்திமறமென்றுபோற்ற, நீண்டவனுங்கொதிபடங்குநீர்போலாறிநீங்கிநகர்போயடைந்தானெடியதேர்மேல். (௩௩௬)

ஆங்கவன்போயகன்றபினர்பதுமநாபனறத்தின்மகன்முகனோக்கியனிலமைந்தன்,வீங்கியதோட்புரவலனைக்காலாலெற்றவெறுத்தனைநீயவன்புரிந்தவெம்மையெல்லா,;நீங்கியுடன்மறந்தாயோமனையினூடுநெருப்பிட்டான்விடமிட்டானீருளிட்டான்,;றாங்கியபொய்ச்சூதாடியுரிமைகொண்டான்றவக்கொடியைப்பேரவையிற்சார்வித்தானே. (௩௩௭)

காட்டகத்தினீரிருப்பச்செய்யகுஞ்சிக்கரும்பூதம்வரவிடுத்தானின்றுகாறும், நாட்டினைநல்கிலனென்றேயுலகோரேழுநலிவித்தானிப்பாவிநடுங்கச்சாய்த்து, நீட்டியகாலினினுதைத்தாலவன்முன்செய்தநீர்மையினும்பொல்லாதோநிகழ்த்தாயென்று, தோட்டலர்மார்பினன்மொழியப்பவனன்மைந்தன்றுணைவனடித்தாமரையிற்றொழுதுசொல்வான். (௩௩௮)

அறமிருந்தநெஞ்சினருக்கிரங்கலன்றியறக்கொடியபெரும்பாவிக்கருள்கொண்டோடிற்,றிறமிருந்தசெங்கோலினியற்கைபொய்த்துச்செகத்தில்வாழுளதனைத்துந்திறம்பிடாதோ,மறமிருந்தவுயிர்நிலைதன்குறங்கேயாகவஞ்சகத்தாற்சிரங்காட்டிமாய்ந்தோன்றன்னை, நிறமிருந்தவடிவேலோயென்செய்தானுநீங்காதென்னுளத்திருந்தநெடுந்தீயென்றான். (௩௩௯)

பொற்பமரும்வாயுசுதன்புகலக்கேட்டுப்புயறடுப்பானினைந்துயர்ந்துசிமையந்தாங்கும், வெற்பினையோர்கரத்தெடுத்ததுளபமாயோன்விரைபொதுளுங்கமலமலர்முகத்தைநோக்கிப், பற்பலவாங்கைதவஞ்செய்தவற்குமாறாப்பழியுண்டுசெம்மையினோர்சிறிதேமாசு, கற்பனைசெய்திடின்விசும்பின்மதியைச்சூழ்ந்தகளங்கெனவார்புகலாதோர்கருத்தான்மிக்கோய். (௩௪0)

என்செய்கோம்விதிமுறைநின்றியற்றுமாறேலெவர்கடந்தார்வீமனையாம்வெறுப்பதென்னே, முன்செய்தவினைப்படியேமுடிந்தவெல்லாமூவுலகும்பாழ்படயாமுனைந்தபோரிற், றன்செய்கைக்கெனவொருவர்க்குண்டோமாய்ந்தோர்தனக்கெதிரோவிருந்தோர்கள்சான்றாய்நின்ற, நின்செய்கையாருணர்வாரென்றான்ஞாலநீதிநிறுத்திடவுதித்தநிருபரேறே. (௩௪௧)

அக்கணத்திற்றெளிவெய்தியிராசராசனறன்புதல்வன்வாய்மையுமாங்கருகிற்கூறுந், தக்கதிருமான்மொழியுமுணர்ந்துசிந்தைதளர்வெய்தியிதுபகர்வான்றவறுநீதி, மிக்கவர்நீர்குலக்குரவன்வின்மையாசான்வீந்தவிபக்கொலைபுரிந்தீர்

விதரணத்தோன், றெக்கதேரெடுக்குமுனேவதைத்திர்சிந்துதுரந்தரனேமாயை யினுற்றெலேத்திர்மாதோ. (௩௪௨)

சாத்தகிதன்னுயிர்கௌள்ளச்சமைந்தபூரிசராவினேவாளொடுகரமுந்தனை யிலிட்டீர், மாத்தரையிற்பொய்புகன்றீர்கதைப்போர்தன்னில்வன்குறங்கினடி. த்துயிரைமாயச்செய்திர், கோத்தருமமுறைதருமன்கோடானென்றேகுறிப்ப தெலாம்பொய்பருத்துக்கொண்டல்போலுங், காத்திரங்கொண்டோய்முடித்தா ய்கருமநின்செங்கண்களினியுறங்குமெனக்கனன்றுசொன்னுன். (௩௪௩)

நீயுரைத்தமொழிகேட்டுமகவான்றந்தநெடியசிலேக்கரத்தோன்வீமனுக்கு நேராய், போயுரைத்தல்பழியென்றுகுறிப்பாற்காட்டப்புக்குணர்ந்திண்டெனே யடித்தான்குறங்கினன்றி, வாயுரைக்குமுன்னரொருகதையாலேந்துமைந்தரை யுமுயிர்தொலேத்துவாரிஞாலந், தாயுரைத்தபடிபுரப்பன்யானேநின்கைதவத்தா ற்கெட்டழிந்ததெனத்தளர்ந்துசொன்ஞன். (௩௪௪)

மற்றவனேயுறநோக்கிச்செங்கண்மாயோன்மறுமாற்றமருங்கணேந்துபுகல லுற்ருன், கொற்றவனேயான்றூதுவந்தஞான்றுமிவ்வண்ணநிகழுமெனக்குறி த்தேனன்ரே, கற்றகுரவர்கள்மொழியும்விதுரன்சொல்லுங்கடந்துன்னேயீன் றெடுத்ததந்தைவாய்மை, செற்றனேயக்குற்றமுனேக்கெடுத்ததென்றுன்றேவர் களுநான்மறையுந்தேடநின்றுன். (௩௪௫)

பாஞ்சாலனருந்தவத்தால்சிகண்டியென்னும்பண்புயர்திட்டத்துய்மனென் றும்போற்றும், பூஞ்சாயகக்குரிசிலனேயமேனிப்புத்திரர்கள்புனிதருயிர்கொள் வான்வந்தே, நீஞ்சாதபேரமரிலிருவராவிநீக்கினுர்நின்மலன்கற்பித்தவண்ணம், வாஞ்சையொடுமண்ணுளக்கருதிநீயே மடிவித்தாயுனக்கேயவ் வசைதான்மன் னே. (௩௪௬)

தனக்குறுதிப்படைத்துணேயாய்வந்துநின்றசாத்தகியைமாற்றலர்கடகர் க்கும்போது, கனக்கிணேயாய்க்கருதுசிலேவல்லோனஞ்சிக் கண்டிருத்தலறமா மோகன்னன்முன்னர், முனிச்சாபந்தனிற்றேர்மண்புதைந்தஞான்றுமுனேப்ப கழியருச்சுனன்றன்றொடாதுநின்றுன், மனக்கவலேயுறுமரசேசாபநீங்கிமண் புதைந்ததேர்புவிமேல்வருமோகூறுய். (௩௪௭)

வீமனுக்குநீயுரைத்தவிரகாலென்னேவீட்டினனென்றுயுயிர்கணிலேவிளம் பிக், காமனுக்குநிகர்வனப்பினுனேக்கையிற்கதைகொண்டுபலமுறைசென்னியி ன்மேலெற்றிச், சேமனுக்குநிகராகித்தெழித்தாய்நின்னேத்தெளியுமளவினிற்க ரவுபுகன்றுயன்றே, சோமனுக்குப்பிறங்கடைநின்றோரிலுன்போற்சூதுரைத் தோராருலகிற்சொல்லுவாயால். (௩௪௮)

உள்ளபடிநீயுரைத்தால்பாவரேனுமொழிந்துநடுவிரகுரையாருனதுவாய்ச் ச்சோற், கள்ளமதேவீமனுக்குக்காட்டிற்றன்றேகாட்டாதுகரந்திடினுங்காவல் வேந்தே, யள்ளல்வயற்றிருநாடுபுரக்குநாளிலருந்தவஞ்சேர்மயித்திரியரறைந் தசாபந், தள்ளவுனக்கெளிதாமோகனலில்வந்தாடந்தமொழிதவறுறுமோசாற் றுகென்றுன். (௩௪௯)

இனேயபலமொழிகள்பலவெடுத்துக்கூறியிசைத்திருமான்மீண்டுமிதுபகர் வான்வாகை, முனேவேலோய்நீயிவரைக்கொன்றுஞாலமுழுதாளநினேந்தவெலா முடிவிற்ப, வினேயாகியுனேயழித்ததென்றுகோடிவெறுப்பதுவென்னெம்மை யெலாம்விமன்றன்டாற், புனேயமரில்விழ்ந்ததனுற்றெலேத்தாய்தீமைப்புகுதி கதியெனப்புகன்றுபுனிதன்மீண்டான். (௩௫0)

வேறு.

கேசவனுசரக்கிளக்குமுன்னமே
வாசவனுதியர்வானின்மல்கினோர்
பூசலின்மாய்ந்துவீழ்புரவலன்றன்மேல்
வீசினர்பூமழைவிரைவின்முந்தியே. (௩௫௧)

மருவணிசெய்யதாமரைமலர்க்கணன்
பொருபடைநிருபரும்புனிதரைவரு
மிருபடைபெயர்தரவெழுந்துமீளுமுன்
பரிதிவானவனுமேல்கடலைப்பற்றினான். (௩௫௨)

அக்கணஞ்செங்கண்மாலைவரோடுந்தன்
மிக்குயரிளவலோடேகிவேந்துடைத்
தொக்கவான்பாசறைகாணத்துன்னினார்
புக்கினரேனையோர்புனைதம் பாசறை. (௩௫௩)

சென்றவர்மணிகளுநிதியுந்தேர்களு
மொன்றியவினைசெயுமொருநன்மாக்களு
மன்றவணுறைந்தவராருந்தம்பொரு
ளென்றுகொண்டிரதமீதிருந்துதுன்னினார் (௩௫௪)

இறந்தனன்முதன்மகனென்றுதந்தைபாற்
சிறந்தசொற்புகலுமுன்செங்கண்மாயவன்
மறங்கெடச்சென்றியான்வருத்தமாற்றிமீண்
டறந்தவாதும்வயினடைவனென்னவே. (௩௫௫)

கைத்திறல்வல்லவர்கருணைநாயக
வித்தினநீயவணேகுருயெனிற்
புத்திரசோபத்தாற்புகல்வர்சாபமென்
றுத்தமருரைத்தனரொருவனேகினான், (௩௫௬)

மாடநீண்மறுகெலாமரசுசூழ்ந்துறு
பாடுகண்டரசுறுமனையைப்பற்றினான்
னேடவிழ்தாரினான்சுபலன்பாவையோ
டுறவிருக்குமவ்விருக்கையெய்தினான். (௩௫௭)

அதற்குமுன்வியாதனுங்கணுகிவைகினன்
முதற்படுகரியமாலெய்திமுன்பனோ
டெதிர்படுமரசையுமிறைஞ்சிவைகினான்
விதிச்செயலெனவவர்துன்பம்வீட்டுவான். (௩௫௮)

ஆயபோதனிலனன்றளித்தகானையா
லேயவென்மைந்தரைவிண்ணிலேற்றிய
தூயனேவந்ததென்னென்றுசோகமுங்
காயநற்குறிகளுங்காணக்கூறினான். (௩௫௯)

மதிச்செயன்மிக்குளீர்வானுஞாலமுந்
துதித்திடுஞ்செய்கையீர்தூயராயினும்
விதிச்செயல்கடக்கொணாதென்றுமேலவர்
பதித்தசொன்மறந்துளீர்போலும்பண்புளீர். (௩௬0)

ஆயவுண்டெனிலியானடுத்துக்கூறிய
தூயநல்லுரைகளுநீவிர்சொற்றதுந்
தாயனையார்பலர்சாற்றும்வாய்மையு
மேயநின்காளையர்வெறுப்பரோசொலாய். (௩௬௧)

புரசைமால்வண்கரிமீதுபொற்புடன்
வரிசையான்மறுகுலாவாழ்வுவேண்டினே
ருரைசெயுமருந்ததிக்கொப்புளாளையன்
றரசவையேற்றிவைத்தாடைசாய்ப்பரோ. (௩௬௨)

அனையவர்காரணத்தடுத்துமாண்டனர்
நினையலைமைந்தரென்றவரைநின்மகார்
புனையடலவரென்றுணர்திபோய்மயல்
வினையொழிந்தருங்கதிமேவிவாழ்குவீர். (௩௬௩)

அவருமைக்காணவிங்கடைவரம்மவோ
துவரிதழ்மங்கைநீதுயரினாலவர்க்
குவகைதீர்கொடுமொழியுரைக்கிலீரென
நவமுறப்புகன்றிவர்நண்புமூட்டினான். (௩௬௪)

மறைமுனியுமக்கிதேவண்மையென்றுகொண்
டறைதரமீளவுமவனையுய்த்துமீண்
டிறைவரைவருமிழிந்தியங்கும்பாசறை
நிறைமுகிலடைந்தனனேமித்தேரின்மேல். (௩௬௫)

இவரெதிரேகியேயிறைஞ்சியுய்த்தபி
னவமுறப்புகன்றனனடந்தபண்பெலாந்
தவமுறவைவர்சஞ்சலங்கணீங்கினர்
கவனமான்றேரின்மீதிருக்குங்காட்சியார். (௩௬௬)

தாரிழிந்தருள்புயாசலமுராரியுந்
தேரிழிந்திந்திரன்சிறுவன்றன்னையு
நேரிழிந்துளபடைபலவுநீயுமிப்
பாரிழிந்துறுகெனப்பணித்துளானரோ. (௩௬௭)

அவ்வணமாங்கவனவனிசாருமுன்
செவ்வணிவிளங்குதேர்தீமுருக்கிடக்
கைவணச்சாம்பரிற்கழியக்காவல
ரிவ்வணமெவ்வணத்தென்றுபோற்றினார். (௩௬௮)

மாற்றலர்படைக்கலமறைதிறம்பிடா
தாற்றலோடிநிற்பலகோடியாழ்ந்துள
தேற்றமோடியாம்வரமேற்பநல்கிய
வாற்றல்சேரமர்தொலைப்பளவுமீறற. (௩௬௯)

தொலைந்ததித்தினமெனத்துணிபுநாடியே
கலந்ததிக்கனலெனக்கண்ணன்கூறலு
மிலைந்தவர்கைச்சிலைவீரரற்புத
மலிந்தனர்புகழ்ந்தனர்மாதவன்றனை. (௩௭௦)

மீளவும்பச்சைமால்வேந்தரைவரும்
வாளுடைத்தம்பியும்வருதிரென்னுடன்
மூளுமோர்வினையுளதென்றுமுந்தினா
னீளுறக்கங்குலினீண்டகாலினான். (௩௭௧)

பொற்புடைவெள்ளிடைப்பொருந்துமோர்நதி
நற்புடையெழுவருநணுகிவைகினார்
முற்படுமிவர்கதைமொழிந்துளோமினி
வெற்புறுவேந்தர்வேந்துழிவிளம்புவாம். (௩௭௨)

வேறு.

கணையுங்கழலாசிரியன்புதல்வன்கமழ்தார்கிருபன்கிருதன்றனொடு
முனைவேலினன்மேவுமெனக்கருதாமுறைவைகினரோர்புடைவந்திலனென்
றனையாளுடையான்செயலைக்கருதியிறைவாறுதெரிந்திடமேவினராற்
புனைவாகைவிலோதனர்தேரின்மிசைப்பொலியும்புயல்பொற்சிலைகோலியரோ.

வீந்தான்முடிவேந்தர்கள்வேந்தனெழின்மிகுவீமனருங்கதையாலெனவே
யாய்ந்தோர்புகலச்செவியிற்சுடநெஞ்சயர்வெய்தியராவருமேற்றொலியாற்
சாய்ந்தாலெனவேயிரதத்தின்மிசைதள்ளாடிவிழுந்துயிர்தங்கியபின்
சேந்தாரைமுருக்கியதீயனையான்றிருமுன்னர்புகுந்தனர்தேரொருவி. (௩௭௪)

வீழ்ந்தாரவன்மேனியில்வெய்துயிராவிழிமாரிகலுழ்ந்துவிளங்கடிமேற்
றாழ்ந்தாரமுதாரிதுவோவிதியின்றகையென்றுதளர்ந்திடுகாலையினில்
வாழ்ந்தோனிவர்வாய்மையினாற்சிறிதேமதியாலுணர்வெய்திவறழ்ந்துளநா
வாழ்ந்தேபுனலெய்தியணைத்துடலோடவருக்கிதுரைத்தனனாண்டகையே. ()

வந்தென்னொடுவாசகமோதியநீர்மறைபக்கணமேகுமுனெய்தியடர்
கந்தேயனையார்பலதீயுரைகள்கழறக்கரையேறிவெகுண்டுகதை
யுந்தாவிகல்செய்தனன்வீமனுடனுயிர்நீங்குவதாயவனாற்றமழிந்
தந்தோவெனவீழவடர்த்தனனாண்டரிகூறவடித்தனனாருவினே. (௩௭௬)

முறைதப்பியடித்ததுமன்றியுயிர்முடியத்தரைவீழ்ந்தபின்மூண்டுசின
நிறையத்தலைமீதினுதைத்தெனையுநிலையற்றசொலாலுமடர்த்தனராற்
குறைவற்றபெருந்திருவுற்றவருங்குறுகித்தொழவாழ்ந்துகுலைந்துவசை
பறையக்கிடந்தேனெனக்கென்னினிவாய்பாசத்தின்வயப்படுபான்மையினான்.

என்னையவனேதனுமிங்கிவர்வீழ்ந்திருகட்புனலாறிடவே.
ன்றேயெனைவாகினிநாயகனியாகென்னிலெனக்கெதிரார்புவிம்ப.
வென்றேமுடிசூட்டுவனேனையரைவியந்தென்னையயர்ந்தனைமேவலரை
யின்றேபகலெய்துமுனேயுயிர்கொண்டிவணெய்துவனேவுதியிக்கணமே. ()

பற்றுரையடுத்தொருவாண்முனையாற்பலர்சென்னிதுணித்தொருபாசறைபா
லுற்றேகெடமீட்கிலனேலடலாலுயர்கேசிகனீன்றவனுகலன்யான
மற்றூழ்புயமன்னவர்மன்னவநின்மணிமௌலிபுனைந்தசிரத்தினிடை
யுற்றேதனிகால்கொடுதைத்ததுகேட்டுயிரோடுநவன்கொலுகாதழகே. ()

நின்வாகினிநாயகனுக்கியெனைநீயுய்க்குதியென்னநெடும்புகழ்சேர்
தன்வாகினியிற்பிறர்நேரில்பரித்தாமாமொழியத்தகைதானுணரார்
முன்வாகையொடும்புனைசென்னிமிசைமுழுமாமணிசூட்டிவிடுத்திடவே
பொன்வார்சிலையாரிவர்மூவர்களும்போனார்பொருமாறுதுணிந்திரவில். (௩௮௦)

சாலச்சினமூண்டவர்தாமகலத்தனிவந்தொருசஞ்சயனக்குருசில்
ஞாலத்தினில்வீழ்ந்ததுகண்டிடமேனனிவீழ்ந்துகலுழ்ந்திடநாயகனு
மேலிச்செயன்முன்னருரைத்தவெலாம்வேத்துக்குரையென்றுவிளம்பியபின்
காலத்தையுணர்ந்துவிதிச்செயலைக்கருதித்தனிமீண்டனன்கற்றவனே. (௩௮௧)

வந்தான்மகனேநியவண்ணமெலாமாதாவொடுதாதையும்வைகுழிபோய்த்
தந்தானுரைதந்திடுமுன்னருடற்சாய்ந்தார்புவிமேற்றளர்வெய்தினரா
லுந்தாவிதியின்செயலாலுரைகளொன்றேனுமுறாதுயிர்பொன்றினையோ
மைந்தாவெனவேகலுழ்வுற்றனரான்மாய்ந்தாரிலயர்ந்தனர்மாதர்களே. ()

இப்பாலிவரைத்தனிதேற்றினனுயிவுளிப்பெயர்மைந்தனுமேனையரு
மொப்பாருமிலாவடலைவரையுமுயிர்கொண்டிடுமாறவர்பாசறையிற்
றப்பாமறைசேர்வலியார்புகுமச்சரிதந்தெரிவேனினியென்றவர்தம்
பொற்பார்கழல்வீழ்ந்துவணங்கியபின்புனைதேர்மிசைசஞ்சயன்போயினனே.

எனவேதனியம்பியதிப்பருவமெழில்சல்லியமென்பரிதைத்தமிழின்
முனநான்மறைவில்லிநகர்க்கிறைவன்மொழியுஞ்சதமொன்றிருநான்குசெயு
ளினமாகவிரண்டுசதத்துடனேயெண்ணெண்பதிரண்டுறுநல்லயனால்
வினவாவிதிரண்டுமொர்மூன்றுசதமென்னுந்தசமெட்டுமிரண்டொடையே. ()

பதினெட்டாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௩௮௪.

சல்லியபருவம் முற்றிற்று.

பத்தாவது,

சௌப்திகபருவம்.

பாசறையுத்தசருக்கம்.

உருவென்றருவென்றுளதென்றிலையென்
றிருளென்றொளியென்றிகல்வார்முனிவோர்
மருதன்றிடறும்வரதாவுனைநின்
னருளொன்றிலவேறறிவாரெவரே. (௧)

கிருபைக்கடலிற்கிளர்மாமுனிவன்
நிருபற்குரைசெய்திடநன்னெறியா
லுருகிக்கலுழ்வுற்றுரையாயொருவன்
பொருகைத்திறலென்றிடலும்புகல்வான். (௨)

வந்தான்முனிமாமகனோர்மடுவி
லுந்தாபரிநீருணவேபுரிவித்
தந்தாழ்புரிநூலணிமார்பசையச்
சந்தார்நிழறங்கினர்மெய்த்தகுவோர். (௩)

தண்டார்திகழாசிரியன்புதல்வன்
கண்டான்வடமொன்றதிலேகதுவு
மெண்டானறுவாயசமொன்றிகல
விண்டேவிளியும்படிகூகையினால். (௪)

கள்ளார்தமைவென்றிடர்ராடினர்தாங்
கொள்ளார்தருமங்குவியும்பொழுதே
தள்ளாதணுகித்தலைகொள்குவரென்
றுள்ளாவிரவென்றெழியானெழலு. (௫)

வேறு.

மாதுலன்மருகன்சிந்தைமதித்தவாறனைத்துமோர்ந்து
பூதலத்திருத்தியையபுகல்வகேளென்றுசொன்னான்
மீதலத்தவருமண்ணிலரசரும்வேதத்தோரும்
பாதலத்தவருமேத்தும்பான்மையோய்பழியேற்பாயோ. (௬)

கங்குலிற்றுயிலிற்சென்றுகாதினுங்காத்திலேதி
தங்கிலாவெறுங்கையோரைத்தடியினுஞ்சரணென்றோரை
யங்கையாற்கொன்றபாவமணையுநீயணையலென்று
னிங்குவைகறையிற்சேறலியற்கையாமெனத்தடுத்தே. (௭)

யாமனுக்கிதனைச்சொன்னான்வையகமுழுதுமாண்ட
சோமனுக்குரிமைவேந்தன்றாய்முடிச்சிரத்துதைத்த
வீமனுக்குரியார்தம்மைவிட்டுநற்கதமுமுண்டோ
சேமனுக்கன்புமிக்கதிருவுளத்தூய்மையோயே. (௮)

மாதவத்தொருவனனமறைவலாசிரியனுமென்
றாதையைவெறுங்கைநின்றுதன்னுயிரகற்றுமாகண்
டோதைநீருலகோர்காணவுறுதலைதுணித்தபொல்லாப்
பாதகன்றன்னைக்கொன்றாற்பழிகொலோபாவங்கொல்லோ. (௯)

கங்கைதன்மகனுக்கோற்றிக்காசினிமுழுதுமீந்த
தங்குலத்தலைவன்றன்னைத்தடிந்தபாவியரையென்கைப்
புங்கவிக்கனலால்வேவப்புரட்டினாலன்றிநம்பாற்
றங்குமோதவமும்பெருந்தருமமுஞ்சால்புந்தூயோய். (௧0)

தந்தையைமுடித்ததீயோன்றரைப்படாதிருப்பமண்மே
லெந்தனதாவிதாங்கியிருத்தலிற்சாதனன்றே
யந்தணரரசேயெந்தையகலுஞான்றுரைத்தமாற்றஞ்
சிந்தியாதிருக்கிலென்னிற்றீயவரினியார்கூறாய். (௧௧)

இரவென்றுஞ்சுருதியென்றுமெண்ணலைநேரலாரைப்
பொரவென்றுவாகைமாலைபுனைவதேபுகழாக்கோடி
கரவென்றுமுணராய்தீமைகருதிலாய்கலைவலோர்கள்
சுரர்வென்றவாறுதேறாயசுரரைத்தொலைக்குந்தோறும். (௧௨)

பாண்டவரின்றுகாறும்பயிற்றியவமரினூடு
மூண்டதுபலவுமாயினறங்கொலோமுதல்வனாருக்
கீண்டதுந்தருமமேயோகிட்டியாங்கவரைவென்று
மீண்டலால்வாழேனென்றுவிளம்பினனிவுளித்தாமா. (௧௩)

நின்னுளக்கருத்திவ்வண்ணநிகழ்வதுநிமலன்செய்கை
யென்னிதற்கினிவேறெண்ணமெனவுடன்பட்டுத்தேரிற்
றன்னிருபுடையுமேனோர்சார்ந்திடவரியேறென்று
துன்னுவதென்னச்சென்றான்றுரகதத்தாமன்றேர்மேல். (௧௪)

சென்றனர்தருமன்மைந்தன்பாசறைசேரச்சேர
நின்றனர்செயல்களெல்லாநினைந்தனர்சிலைகால்வாங்கி
வென்றிகொடுணிவீக்கிக்கோதைகள்விரற்குநாட்டி.
யின்றுலகேழுநுங்கவெழுந்தமுத்தீயிற்போந்தார். (௧௫)

வரிசிலைக்கொருமாமுனிவரத்தவதரித்த
குரிசிலைப்பெரும்பாசறைகுறுகுறுகுமுன்குருகித்
திரிபுரத்தைநீறாக்கியதேவர்கடேவன்
கரைசெயற்கருமாடல்செய்தனனுருக்கரந்தே. (௧௬)

கரியமேனியுஞ்செய்யவாள்விழிகளுங்கலையொன்
றுரியவெண்பிறையெயிறுஞ்செங்குஞ்சியுமொளிரப்
பெரியமேனியுங்குறியதாளொடுமெதிர்பெயர்ந்து
கிரிகடுளெழநின்றதோர்கேழ்கிளர்பூதம். (௧௭)

கண்டுசீறினன்கடவுடன்செயலெனவுணரான்
மண்டுதீயினும்வாள்விழிசேந்தனன்வரிவிற்
கொண்டுவான்கணைசெலுத்தினன்கோடிமேலாக
விண்டுதிர்ந்திடமுரித்ததுவிறலுடைப்பூதம். (௧௮)

அங்கிவானவனுலவைதென்புலத்தவனாதி
தங்குவானவர்படையெலாமுறைமுறைதவத்தோன்
செங்கண்டீயுகச்செலுத்தினான்விழுங்கியதன்றே
திங்கடங்கியசடையினான்செலவிடுபூதம். (௧௯)

புட்டிறங்கியசரமெலாமகன்றிடப்புழுங்கி
வட்டமாகவில்வளைத்தவனின்றனன்மறுகி
வெட்டிவான்சிலைபறித்துநீறெழத்தகர்த்தெறிந்து
கிட்டிநின்றதைம்படையுடைக்கேசவனுருவில். (௨௦)

உச்சவான்கதிரொத்தெழுமொருவனையடுத்த
நச்சுவேலினர்தம்மையுமவ்வணாட்டிப்
பச்சைமாலுருவனேகமாயிரமெனப்பரப்பி
யிச்சையாற்சிரித்தார்த்தனவான்முகடிடிய. (௨௧)

மாவலார்மனக்கருத்தொடுவாளமரழிந்து
காவலாமொருகுறளினாற்கலக்குறுபொழுதில்
சேவலான்விடு * கிருத்திமந்தேரொடுமிவரை
மேவலாம்வகைவாரிவானெறிந்ததுமீள. (௨௨)

அந்தரந்தனையளவிட்டுமீண்டுமண்ணாழ்ந்து
கந்துகப்பெருந்தேர்களுந்தூளினிற்கழிய
சிந்தையுட்கிடவுய்ந்தெழுந்தோர்புடைசேர்ந்தார்
வந்தமூவருமற்புதமலிதரமன்னோ. (௨௩)

அனையகாலையின்முனிமகனானனைநோக்கி
வினைவலாயுயிரளித்ததுவிறலுடைப்பூத
முனையழிந்ததென்றெண்ணலைமீண்டுபோர்முறையே
நினைதனன்றெனமாமனுங்கிருதனுநினைந்தார். (௨௪)

தாமனென்பவன்சஞ்சலமோற்சிறிதிலனாய்
மாமன்வாண்முகநோக்கிநின்னோர்பொழிவகுத்தான்
காமன்றன்னைமுன்கறுத்தவன்கருணைபோய்ப்படுநா
ளுமன்போலகல்வேனெனமீட்டுமொன்றுரைத்தான். (௨௫)

---

* கிருத்திமம் - பூதகணம்.

கந்தனைத்தருகடவுளையுளமுறக்கருதிச்
சிந்தனைப்படிசெலுத்துவன்றெருமரலொழிந்தே
யிந்தவான்றருவிடத்துறுமெனப்புகன்றெழுந்தான்
றந்தைதாமொடமுந்தனயனுக்கரியதாந்தகையோ. (௨௬)

தூயநீர்படிந்தரியவெண்ணீறுடலுளக்கி
நேயவைந்தெழுத்தன்பொடுபலமுறைநிகழ்த்தி
மாயவிப்பிரபஞ்சமாயைகடொடராமற்
சேயனுனிருந்துன்னினன்சிவபெருமானை. (௨௭)

கறுத்தகந்தரக்கடவுளக்குமரனேடாடல்
வெறுத்திடாதொருவேதிகைவெங்கனல்வடிவாய்ச்
சிறுத்ததாளுடைப்பூதங்கடமைச்செலவுய்த்தான்
கறுத்தடைந்ததுவாய்தொறுங்கனற்பொறிமலிய. (௨௮)

வேறு.

ஒருமுகத்தனவிருமுகத்தனபலமுகத்தனவுயர்வரை
யிருபுயத்தனபலபுயத்தனவிருபதத்தனபலபதத்
துருவுபெற்றனபிறையெயிற்றினவுருமிடித்தனவதிர்குரற்
பெருமிதத்தனபொறிகள்கக்கினபெருமனுய்த்திடுகுறள்களே. (௨௯)

அரிமுகத்தனமரைமுகத்தனகலைமுகத்தனவடலுடைக்
கரிமுகத்தனகவிமுகத்தனவுழைமுகத்தனகரடிவெவ்
வரிமுகத்தனநரிமுகத்தனவுழைமுகத்தனவழுவறும்
பரிமுகத்தனநிரைமுகத்தனபரமனுய்த்திடுகுறள்களே. (௩0)

ஆடுகின்றனசாரிகொண்டிகலாலடுந்தொழில்பூண்டன
பாடுகின்றனதேடுகின்றனபாசமங்கைகள்பற்றிமெய்ந்
நாடுகின்றனமூடுகின்றனஞாலமெங்குநயந்துமீண்
டோடுகின்றனமீளுகின்றனவொருவயனுய்த்திடுகுறள்களே. (௩௧)

வாலெடுப்பனகாலெடுப்பனவந்துவந்துருமேறென
வேலெடுப்பனவில்லெடுப்பனவெய்யகோல்கள்விடுப்பன
கோலெடுப்பனகுனிலெடுப்பனகுந்தவாண்மழுவங்குச
மேலெடுப்பனவாய்திறப்பனவிருதுபேசுவகுறள்களே. (௩௨)

வேறு.

எழுவாரியுமேலெழுந்துலகேழுநுங்கியரும்பில
மேழுமஞ்சவெறிந்துமேவுமிராமடங்கலெழுந்ததென்
றேழுமாமுனிவோருமஞ்சவியங்கரும்புனல்காட்டுவா
ரேழுநாவுடைபானிலெப்துவரெண்டிசாமுகமிரியவே. (௩௩)

துன்னியிவ்வணம்வந்துவந்துதொடர்ந்தபோதினுநெஞ்சுவே
றுன்னினின்றிலனண்ணலன்பையுதுத்திலன்றெளிவோர்ந்ததம்
பின்னுமங்கொருபாரிடம்பிடருந்தியங்குறுபெற்றியான்
றன்னைவேதிகையிற்றழைக்கெழுதழலின்முன்னரினிட்டதே. (௩௪)

ஆளுமெங்கையைநாடுசிந்தையகன்றதென்றழல்வாயவன்
வாளுடன்றனியேபுகுந்துயிர்மாய்வனென்றெதிர்வாவலும்
பாலையோதியுடன்கொழுங்கனல்பரமனுமெதிர்தோன்றலுந்
தாளின்வீழ்ந்துவழுத்தினான்விழிதாரைநீர்பொழிசால்புளான். (௩௫)

ஆதியேமுதலேயெவர்க்குமனாதியேமறைகாணுணாச்
சோதியேசுடரேயனந்தசுரூபியேமலைவல்லியார்
பாதியேபுலனைந்தும்வென்றவர்பற்றிநின்றபதத்தனே
நீதியேகுணமூன்றுநீங்கியநின்னையாருணர்வார்களே. (௩௬)

விச்சையாயினைஞானமாயினைவேதமாயினையமுதொடு
நச்சுமாயினைஞாலமாயினைநால்வகைப்படுநல்லுயிர்க்
கச்சுமாயினைவினையுமாயினையருளுமாயினையவரவர்க்
கிச்சையாங்கதியாவுமாயினையுணரவல்லவரியாவரே. (௩௭)

என்றுகொண்டவனேத்திமீளவிறைஞ்சிநின்றிடவீசனுங்
குன்றமன்றுதுளைத்ததூயகுமாரனிற்பரிவோடணைத்
தின்றுநின்னுடனுடல்காட்டவிசைந்துவந்தனனென்றுபோர்
வென்றபூதமுமேனையாவும்விபூதியாடல்விநோதமே. (௩௮)

மையல்சிந்தைமயங்கலையவரூதினிக்கடன்முற்றுமிச்
செய்யவாளிலொறுத்தியென்றருள்செய்துநல்கியிராவிடை
யுய்யுமாறுளர்நின்முனெய்திலரோடினுரெனிலுண்டுயிர்
வெய்யவெஞ்சிலைவீரவாகைமிலைந்துமீளுதிபுகழவே. (௩௯)

பூதமீதுவிடுத்தவான்கணைபுட்டில்வெஞ்சிலைவானவர்
காதலோடுமளித்தசாயகமுலவுதேரொடுகழிவெலா
மீதுபின்னருமேவுமென்றுவிளம்பினுயகன்மாயையிற்
போதவத்திசையூடுவீழ்ந்துபுரண்டிரைஞ்சிமடங்கினன். (௪0)

வே று.

தேராதிசிலையாதிகணையாதியாகமுனந்தீர்ந்தவெல்லா
நேராய்முன்னிருந்திடலுமற்புதனுய்நெடுந்தேர்மேற்கொண்டுநின்று
தாராருங்கிருதனையுமாமனையுமழைத்தவர்தேர்தனுவுநல்கி
நீராருஞ்சடைமுடியான்கருணையெலாமவருணரநிரப்பினனே. (௪௧)

வெற்புறுதோட்சேட்செல்லவிமலனருளினைப்புகழ்ந்துவியந்துபோற்றிச்
சிற்பரநாமங்களொலிதிசையேறப்புகன்றெழுந்துதெவ்வர்மேவுஞ்
சொற்புனைபாசறையடைந்துதுன்னியவாயிலிற்காப்புத்துணைத்தேரோரை
நற்பயனுமெனநிறுவிஞானவரோதயன்புகுந்தானலங்கொடேர்மேல். (௪௨)

வே று

பருவரலகற்றியிரண்டுவீரரையும்பாசறைவாயிலிலிருத்தி
மருவருங்கமலமாலையான்கதம்பமாலையானெனமனங்களித்து
பொருவருநிருபர்தமக்கெலாஞ்சேனுபதியெனப்புறமிடாதடர்த்த
துருபதன்மதலைவரிசிலைத்திட்டத்துய்மனன்மாளிகைபுகுந்தான். (௪௩)

திருமுகச்சாலைநாப்பணிவிரத்தினதீபமல்கிடத்துயில்புரியு
மொருமுகமடங்கலனையெதிர்நோக்கியுருத்திருவிழிகளிற்புலிங்கஞ்
செருமுகமதனிற்றந்தையைச்செறுத்ததீயனுமெனத்தெளிந்தொருதன்
பொருமுனைச்சிலைநாண்கந்தரத்துறவேபூட்டியீர்த்தனன்முனிபுதல்வன். (௪௪)

ஈர்த்தலுந்துயில்நீத்தெழுந்துமாற்றலனையிவுளியந்தாமனென்றுணர்ந்து
பார்த்தடற்சிலையானுயிர்த்துயிர்கலங்கிமறலிவாய்ப்பட்டவாருயிரிற்
காத்திரமொடுங்கியிருந்தனனவனைக்காலையீர்த்துடன்கொடுபுக்கான்
பார்த்தவர்மருளவீதியின்மகத்திற்பசுவெனப்பயன்புலப்படவே. (௪௫)

ஆண்டகைகொடுத்தவாளினாலவனையங்கமுற்றினுந்துளைபொருத்தி
மீண்டுமீண்டவனைவருத்துமாறுணர்ந்துவேதியன்வான்முகநோக்கி
யீண்டுநீசென்னிதுணித்தியான்கதிபோயெய்துமாறென்றவனியம்ப
மாண்டகுதுரோணன்மதலையீதுரைத்தான்வாள்விழிசேந்தனன்மலைய. (௪௬)

நான்மறையுணர்ந்துநவமெலாம்பயின்றுநன்மகமுளவெலாமுடித்து
வான்முறையெவரும்வழுத்திடவிருந்தவன்சிலைத்தேசிகன்சிரத்தை
யூன்முறைவாளாலுருட்டுபாதகனுக்குளகொலோகதியுமென்றுரைத்துத்
தான்முனிந்ததற்பின்சென்னியுந்துணித்துத்தரைப்படவீசினான்றக்கோன். ()

கொங்கலர்மகுடகோடிகளுரிஞ்சுகுரைகழற்காலையைக்குறைத்துக்
கங்குலிற்றெழித்துப்பாசறைமுழுதுங்கலக்கலுமலக்கணுற்றெழுந்து
தங்களிற்றுயின்றோரின்னதென்றுணரார்சாருமுன்றலைகளைத்துணித்தான்
றிங்களைப்புனைந்தசென்னியானளித்தசெய்யவாள்விதிர்த்தடற்சிறுவன். (௪௮)

கயில்புரிகழற்காற்றந்தையைச்செறுத்தகாலையைப்பாலையத்திடையே
துயில்புரியமையத்தெய்திவான்சென்னிதுணித்தனன்றுரோணன்மாமகனென்
றயில்புரியரசர்பலருமாண்டுணர்ந்தேயச்சமுமிச்சையுந்தாங்கிப்
பயில்புரிசிலையார்சிகண்டியைமுதலாப்பலரும்வந்தனர்கள்பாஞ்சாலர். (௪௯)

உத்தமோசாவுமுதாமனுமெதிர்வந்துடற்றுபோர்கண்டுகண்சிவந்து
கைத்தலமொளிருஞ்சோதிவாள்விதிர்த்துகரிதுரகங்கடேர்வீட்டி
யத்திரவலிசேரிருவரைச்சென்னியறுத்தகன்றோடியோர்நொடியிற்
பத்திரமோச்சிச்சிகண்டிதன்சென்னிபார்மிசைவீழ்த்தினான்மன்னோ. (௫௦)

வைத்ததாண்மலராற்பாதலநடுங்கவெடுத்தசேவடியில்வானஞ்ச
கைத்தலவொளிவாள்விதிர்ப்பினாற்கங்குற்கழிந்திடவெண்டிசைகலங்க
மெத்தமோகரித்துப்பாரதமுடித்தவீரரைத்தேடியேயெதிர்ந்தான்
குத்திரமுணராக்குருமகன்பாடிமனைதொறுமனைதொறுங்குறுகி. (௫௧)

பூதலமுழுதுங்கவர்ந்ததந்தையர்கள்புறத்திடைப்போயதுந்துயின்ற
மாதுலன்முனிவன்மதலைகைப்படையான்மாய்ந்ததுமாய்ந்தறச்சிறி
மூதழலுதித்தமொய்குழல்வயத்தின்முளரியின்முத்தெனவுதித்த
காதலம்புதல்வர்முனிமகனனற்செய்கண்ணெதிர்கதுவினர்மாதோ. (௫௨)

கண்டுமாமுனிவன்மதலையாண்டவர்தங்கார்முகம்வலியினலழித்துக்
கொண்டலிற்றெழித்துவேந்தரைவருக்குங்கொளுத்தியசுடரனையாரைத்
திண்டிறலுடையோர்சிகாமணியனையான்சித்தினிற்கலங்கிவண்டேற [ன்.
லுண்டவர்தமைப்போன்மதத்தினல்வாளா லொருநொடிதனின்முடிதுணித்தா
பொன்னிநன்னதியுநேரியம்பொருப்பும்புகாரெனுநகரமும்படைத்த
சென்னியுமவன்றன்சேனையுஞ்சேனபதிகளுஞ்சேர்குறச்சேர்ந்து
முன்னியசமரின்முனிமகனுடன்போய்மோதியவ்வேதியான்முடிந்தார்
பின்னியசடையோன்வழங்கியபடையாலார்கொலோவம்முனைபிழைத்தோர். ()
புகலரும்பதினெண்பூமிபாலகரிற்பாசறைபொருந்தினேராரு
மிகலருங்கரிகடேர்பரிகாலாளென்பனயாவையுஞ்சேரப்
பகலருஞ்சமரிற்பதின்மடங்காகப்பாதிநாளிரவினிற்படுத்தா
னகலருங்கேள்வியாய்ந்தவிக்குமரனமலனற்றனையனுதலினல். (௫௫)
ஆறுபட்டகலச்சோரிகள்கடல்நின்றூர்த்தெனவரிவையர்புலம்பச்
சேறுபட்டுகுத்தநிணங்களேமலியக்களேபரஞ் * சிலோச்சயம்விளக்க
மாறுபட்டவர்கள்பாசறைமுழுதும்வலம்பலபன்முறைவளைத்து
நீறுபட்டியங்கவியற்றிமீளவுந்தேர்புகுந்தனனிமலனுக்கினியோன். (௫௬)
ஆடியகவந்தமாடியகணங்களாடியவலகைகளனேகம்
வீடியநிருபர்சென்னிகளீர்க்குமிகுங்குரைஞமலிகளனேக
மூடியசிறுபேய்க்கரும்பெரும்பேய்களுணவளித்திணங்குவதனேகம்
நாடியங்குணர்ந்தார்கிருபனுங்கிருதநாமவேலரசனுநடுங்கி. (௫௭)
சாத்தகிதனையும்வேந்தரைவரையுந்தண்டுளவோனையுங்காணர்
கூத்துடையண்ணலருளினலகன்றூர்கொல்லெனவல்லவர்மதித்துக்
தோத்திரவிதியாற்சிவனடிநினைந்துதொல்லைவெம்பகைமுடித்தேனென்
றூர்த்தனன்சீற்றமாறினன்றணிந்தானனுகினனச்சுவத்தாமன். (௫௮)
ஏகுதுந்தாழாதிறையுமையென்னவிருவருமியம்பிடத்தவத்தோன்
பாகுறுதடந்தேர்செலுத்திடமீண்டுபாரெலாம்புரந்தவனுழைபோ
யாகுலங்கிளரநோக்கினரிரங்குமமையத்திலவன்விழிமலர்ந்து
சோகனுநனைத்துநீவிர்போய்மீண்டவாறெலாஞ்சொன்மினேவென்றான். (௫௯)
பாண்டவரிருக்கும்பாசறையடைந்துபயிற்றியதிறலெலாம்புகன்று
மாண்டவர்பெயருங்குறித்துமாதவனுமிளைஞனுமன்னரைவர்களு
மீண்டகன்றேடியொளித்தனரேனேரிறந்தனர்மீண்டனமெனலு
மாண்டகைபுளகம்போர்த்திடவருளோடச்சுவத்தாமனுக்கறைவான். (௬௦)
ஆழ்ந்தபேரறிவோயுனையுணராமலாதபன்மதலையைமண்ணில்
வாழ்ந்தநாளெல்லாமத்திரத்தோனைவலுவியந்திருந்தனனறவுந்
தாழ்ந்தவின்ஞான்றுநீபுரிந்தியற்றுந்தகமைசான்மறமவர்தம்மாற்
சூழ்ந்திகன்முடித்தலாவதோநின்னைத்துணிந்திடாதிறந்தனனென்றான். (௬௧)

---

* சிலோச்சயம் - மலை.

வேறு.

வருவராங்குறவாவுதேரின்மேற்
பொருவர்சஞ்சயன்வந்துபொன்னடி.
யொருவர்சென்னியிலெொல்கவேபணிந்
தருகாய்நின்றுரையாடுமெல்லையில். (௬௨)

எந்தாய்நீயிவணிடருழந்திட
முந்நாதிங்ஙனிருப்பதோமுறை
யந்தோவெம்முயிர்பொன்றிடாதென
நொந்தேநின்றனர்நவன்றநால்வரும். (௬௩)

மாடார்சஞ்சயன்வாய்மையோர்ந்தபி
னூடாள்வேந்தனுநல்கியாரருள்
வாடாதெந்தையும்யாயும்வான்மொழி
கோடாதோதுவைகுறுகியையநீ. (௬௪)

வேறு.

வினையிவ்வண்ணம்விளைந்ததினிச்செய
லினையலந்தம்பிகுமாரரைநேர்ந்தவர்
தனையராகத்தருக்கியுலகெலா
முனையினுற்புரந்தேயுறமுட்டுவாய். (௬௫)

வணங்கினேனெனவோதுமின்வாய்மொழி
யிணங்கிடாவிதுரற்கிதியம்புமின்
கணங்கொளன்னலைக்காத்தருள்செய்மினென்
றணங்கனுட்கறமாதவவ்வறமினே. (௬௬)

என்றபின்னரிருந்தவவேதியற்
கொன்றுகூறினனேனைத்தவத்திலே
நின்றுவாழுமினீரவரோடினித்
துன்றிலீரெனச்சொற்றனன்பெற்றியால். (௬௭)

இன்னவாறுரைத்தேகுமினென்றபின்
மன்னனீசனைவாழ்த்திவழுத்தலுந்
துன்னினுரிமையோர்மலர்தூவினர்
பொன்னினுட்டகம்போந்தனன்பூபதி. (௬௮)

தம்பிமார்பலருந்தனிவீரரு
மும்பரோடெதிர்கொள்ளவுவந்துபோ
யம்பொனுட்டிலருங்கதிவைகினு
னிம்பர்நால்வரிரங்கினர்போயினர். (௬௯)

பாசறையுத்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௬௯.

சிரோமாணிக்கங்கவர்ந்தசருக்கம்.

வடிக்கரியகலைகளெலாமறைமுனிபாற்றெளிந்தபதம்
வெடிக்தண்டம்பொதுளவலிவிசையனுக்குக்குறித்தபத
முடிக்கரியபாரதத்தைமுடித்தபதம்விடத்தரவி
னடித்தபதனிணைத்தவர்க்குநல்குபதம்பணிகுவாம். (௧)

ஆராதகொடுமையினலயத்தாமனவ்விரவிற்
சேராரைத்துரிசறுத்துச்சென்றபடிதெரிவான்போ
லேராரும்பசும்புரவியேழுகளுந்தேரின்மிசை
யோராயிரங்கதிரோனுதையவரைமீதெழுந்தான். (௨)

பாண்டவரைவருமாலுமிளையோனும்பரிதியெழ
மீண்டனுகுமமையத்தில்வியந்ததிட்டத்துய்மனுக்குத்
தூண்டுதேர்வலவனருந்துயரொடும்போய்த்தொழுதுரைத்தான்
மாண்டவர்கள்செயலனைத்துமனல்செவியின்மடுப்பான்போல். (௩)

கேட்டவுரையுள்ளுருமின்கிளருருமினொலிகேட்ட
நாட்டவனலராவினம்போனடுநடுங்கியயர்ந்தாற்றி
வாட்டிறல்சேர்மன்னரையுமைந்தரையுந்துறந்திரோய்
வீட்டியுயிர்மாய்வதுவேதிறலென்றுவிரும்பினர். (௪)

திருமாலுமவரோடுதிறங்கள்பலவகைகூறி
வருமாயையாருணர்ந்தோர்மறத்திரினித்துயரென்று
பொருதேரின்மிசைபுகுந்துபுனல்சோரவிழிமலர்கள்
செருநீடும்பாசறையைச்சேர்ந்தார்கைத்திறலுடையார். (௫)

தேரிழிந்துசாத்தகியுந்திருமாலும்பாண்டவரும்
பாரிழிந்தபரிதிகளிற்பலதிசையுமொளிவிளங்கப்
பேரிழந்துமாண்டபிணப்பெருங்குவைகள் * பரந்தேகி
வேரழிந்தமராமரம்போல்மைத்துனன்மேல்வீழ்ந்தயர்ந்தார். (௬)

வீழ்ந்தவரையெடுத்தணைத்துவிழியொழுகும்புனன்மாற்றி
யாழ்ந்தவறிவுடையிருவரரற்றிடமற்றேனையரைப்
போழ்ந்திடங்கள்பலநோக்கிப்போந்துமைந்தரைவரையும்
வாழ்ந்ததினிப்போதுமெனமனஞ்சலிப்பக்கண்டார்கள். (௭)

கிட்டினர்மேல்விழுந்தார்கேண்மையொடுசென்னியைமெய்
யொட்டினர்கண்ணீருகுத்தாருடன்மார்பிற்
கட்டினர்சோர்ந்தார்கலித்தார்பரதவித்தார்
சுட்டினராவிதொலைக்கத்தொலையாதார். (௮)

வேறு.

வந்தாரிவரிந்தவாறுதுயருற்றிருப்பச்
சந்தார்முலையாடமையனெடுமைந்தர்களு
முந்தாமுடிந்தசெய்ல்கேட்டுமதிமூண்டதூய
ருந்தாவுவட்பிலவத்துற்றிருந்தாள்வந்தடைந்தாள். (௯)

---

* பரம் - உடல்.

ஆரழலுற்பவித்தாளுமாங்கணைத்துமைந்தர்களு
மேர்பெருகுதுணைவர்களுமுயிர்மாயுமிடநோக்கிப்
பார்முலைமேற்புடைத்துப்பாரின்மிசைவீழ்ந்தயர்ந்து
கார்புரையுங்குழல்சோரக்காவலர்பாற்சென்றணைந்தாள். (௧௦)

எற்றுவாள்தாழ்வாளெழுவாள்விழுந்தயர்வாள்
பற்றுவாள்வஞ்சம்பகர்வாள்பலர்தமையுஞ்
ஈற்றுவாடாவித்தொலைவேனென்றுன்னுவாள்
முற்றுவாளென்னேமுடியாதுயிரென்பாள். (௧௧)

இன்னபரிசாலிவள்புலம்பியாவருக்கு
முன்னவன்பொற்றாள்விழுந்துமொய்குழலாண்மாழ்குதலு
மன்னவனுமேனையருமாழிப்பெருமானு
மின்னனையைத்தேறும்வகையெல்லாம்விளம்பினார். (௧௨)

பச்சைமால்சொல்லாலும்பாண்டவர்தஞ்சொல்லாலும்
பொச்சவிடையாள்புலம்புஞ்செயன்மாற்றி
யச்சமறவந்துசிலையாசிரியனற்புதல்வன்
புச்சமறக்கொன்றதெலாங்கேட்டிதனைப்புகலுவாள். (௧௩)

மன்னர்பிரானேமகாருந்துணைவர்களுஞ்
சென்னிதுணிவெய்தவிறல்கொண்டோன்செழுஞ்சிரத்தைப்
பன்னுமடியேன்பதத்தான்மிதித்தன்றி
மன்னுகுழன்முடியேனென்றாள்மயிலனையாள். (௧௪)

அந்தவுரைகேட்டவறத்தின்றிருமதலைப்
பைக்கொடியேமாளாப்பதம்பெற்றப்பாதகனை
யெந்தவணஞ்சென்னியிறுத்தடைவதென்றியம்ப
வுந்துசிரோமாணிக்கங்காட்டவுடன்பட்டாளால். (௧௫)

அக்கணத்தில்வாயுவளித்ததனிக்குமர
னிக்கணமேயாங்கவனையெய்திக்கொடுங்கணையாற்
றக்கசிரமுருட்டிமீளேனேற்றாரணியிற்
புக்குவனானாரழலூடென்றான்பொறையுணரான். (௧௬)

மாலுமவனைமதித்துநீசெல்கெனலு
மேலுமொருதேரின்மீதுகொண்டக்கணமே
கோலுஞ்சிலையுங்கொடுங்கதையுங்கொண்டெழுந்தா
னாலங்கனன்மேலடுத்தசெயலாமெனவே. (௧௭)

ஐவரினுமீற்றினறைவோன்றன்றேருய்ப்பக்
கைவருமோர்விற்காளைகண்சிவந்துசென்றபினர்
மைவருபொன்மேனிவனமாலிகைகமழும்
பைவருநாகர்துறந்தபார்தாமன்கூறுவனால். (௧௮)

வீமனடைந்துபொருதுவிறன்மேவவயத்
தாமனடங்கான்கொடும்பாவிதன்னிடத்தி
லேமமுளதோர்கணை தந்தையீந்தந்த
ஞமம்பிரமசிரோநாமநாட்டுவரால். (௧௯)

ஆயகணையொன்றுலகிலமெலாநீறுகு
மேயவதன்பெருமையெம்மாலுரைக்கரிதே
தீயவிழியான்செலுத்துமேல்வீமனுயிர்
மாயுங்கணத்திலுயிரென்படுமேவாட்டிறலீர். (௨0)

முன்னொருநாளந்தமுனிசேய்துவரைதனி
லென்னருகுநண்ணியுனக்கீவனெந்தைநல்குகணை
மன்னுமுனதாழியருள்வாயென்றுகூறினன்
சொன்னபொழுதாழிகரந்தொட்டெடுத்திநீயென்றேன். (௨௧)

எடுத்தானொருகரத்திலெழும்பாதுகண்டுமுகங்
கடுத்தானிரண்டுகரத்தாலுங்கொண்டணிகித்
தடுத்தான்வலத்தாலுந்தாங்கினன்வாராது
விடுத்தான்முகத்தில்விழிந்தானகையோடும். (௨௨)

வேறு.

சீரார்முனியருளிற்றருசேயேயிதுதெரியாய்
போராழியெவர்க்காயினுமண்மீதுகைபுகுமோ
வாராயெனவருளோடணிமணிமாதிகளீந்து
பேரார்நகருற்றேனிவையுணர்வீர்மதிபெரிதும். (௨௩)

அப்போதுணர்வுற்றேனவனுழையக்கணையுளவென்
றிப்போதினைகுற்றேனெதிரிலையிக்கணமெவருந்
தப்பாதடைகுதுமென்றுதருந்தேர்கள்புகுந்தா
ரொப்பேதுமிலாமாதவனுயர்தேர்மிசையானன். (௨௪)

வாகைச்சிலையாரக்கணம்வந்தார்முனிமகனு
மேகிக்கிருபனைமானகரிட்டேகிருதனையு
மோகைச்சிலையாய்நின்னகருறவென்றுபணித்தே
யேகிச்சதுமறைமாமுனிபயில்காவிலிருந்தான். (௨௫)

கண்டானிகல்வலமாருதிகடுங்கண்கள்சிவந்தான்
வண்டார்தொடைசருகாகவும்வலத்தோடுமுயிர்த்தா
னண்டாதகொடும்பாவியுனக்கிவ்விடமாமோ
தண்டாலுனையடவேயெதிர்வருகென்றுசலத்தால். (௨௬)

பலவாய்மைகள்படவோதலுமவனேடெதிர்பகரா
துலகேழையுநொடியிற்பொடியுறுவிப்பனெனச்சென்
றிலகார்சிலைமுனிதந்தவிருக்காலுயர்கணையை
வலபாண்டவருயிர்தீர்குதியெனவுய்த்தனன்மைந்தன். (௨௭)

பிரமச்சிரநாமக்கணைபெயர்வுற்றலகெங்கு
முரணிற்கனலாகிப்புவிமுழுதும்பொதுளியதா
லாணிற்றிறலினின்மிக்குடையுலவைக்குரியவனும்
விரவிச்சிலையொடுநின்றனன்விரைவாலிவர்வந்தார். (௨௮)

பச்சைத்திருமாலுங்கணைபடுவல்லபமுணர்வா
னிச்சைப்படுதன்றேரிலிருந்தோன்முகநோக்கி
யுச்சக்கதிர்வினையாய்செலவுய்த்தாவிபுரப்பாய்
நச்சைத்தெறும்பிரமச்சிரநாமக்கணையென்றான். (௨௯)

வரதன்சிலையரசனருள்கணைவாசவிகைக்கொண்
டிரதந்தனினின்றேகுருவினைநெஞ்சினிருத்திப்
பரதன்குலமுறுதம்முயிர்காக்கென்றுபணித்தான்
சரதம்படுமறையோடெழுதனிவான்கணைதனையே. (௩௰)

வேறு.

எழுந்தவக்கணையுநேராயிந்தவிக்கணையுந்தாவி
யழுந்துயிர்த்தொகைகட்கெல்லாமாகுலப்படுத்தும்போதிற்
றெழுந்தவவீணைவல்லமுனிவனுஞ்சுருதிசொற்ற
கொழுஞ்சடைமுனியும்வந்துகுறுகினாரிடையினம்மா. (௩௧)

தத்தமக்கிதங்கணோக்கித்தாரணியுயிர்கண்மாயுங்
குத்திரங்கருதாதென்னேகொடுஞ்சமர்புரிவதென்னச்
சித்திரத்தேரரசர்சென்றுதொழுதனர்சிலைவலாசான்
புத்திரனணைந்துநின்றான்முனிவரர்புகல்வதானார். (௩௨)

மாமறைபுணர்ந்ததுபோய்மாய்ந்திறுமுன்னர்ஞாலந்
தேமறைக்கணையைமீட்டுத்தேற்றுதியென்றுகூறத்
தாமதற்பெயரோனென்றூற்றடைபடாததற்கிலக்குக்
கோமுறைபுகன்றலன்றியென்றனன்கொதிக்குநெஞ்சன். (௩௩)

தனஞ்சயன்முகத்தைநோக்கித்தாபதர்தாட்கலாய்நீ
மனஞ்செயுமருளாலீண்டுன்வான்கணைமாற்றுகென்னக்
கனஞ்செய்நல்லருளீர்யான்முன்கற்றதுண்டழைப்பன்காணே
யினஞ்செய்நன்மணிசிரத்திலிருந்ததிண்டளிக்கினென்றான். (௩௪)

மாதவத்தொருவர்மீளமுனிமகன்வதனநோக்கிக்
காதலித்திதனைப்பெற்றோய்கற்றிலைசாந்திபொல்லாப்
பாதகத்தொழிலோபூண்டபான்மையென்றுரப்பிவல்லே
போதிலக்கென்னையென்றாரொருமுனிச்சுதனுரைப்பான். (௩௫)

பாண்டவருயிரைநாடிவிடுத்தசொற்பழுதுறாம
லீண்டிவர்மாதர்தங்களுதரத்திற்கருப்பமெல்லாம்
பூண்டறமுடிக்குமென்னப்புகன்றனன்றூயதாளா
லீண்டஞாலத்தைமுன்னளந்தவனிகழ்த்துகின்றான். (௩௬)

உத்தரையபிமன்றேவிக்கருவினிலுயிர்க்குமைந்த
வித்தரைக்குரியோனுகலியளித்தேனையோர்த
முத்தணியுதரத்தூடுமுளைத்தெழுகருவின்மீது
னத்திரம்பரப்புகென்றானவனதற்கிசையானுறன். (௩௭)

திருமகள்கொழுநன்மீண்டுசெப்புவானிதுசெயாயேற்
பொருகணைவிட்டிமீண்டுபோந்தபினதனைமீள
வருமகவாகச்செய்துமணிமுடிபுனைவன்றப்பாக்
கருவபகாரிஞாலத்துயிரினைக்காத்தியென்றான். (௩௮)

ஆசிலாத்துரோணன்மைந்தனருங்கணைக்கிலக்கங்கூறி
யேசிலாவைவர்மின்னுருத்தரைமுதலோரெய்து
மாசறுங்கருவைநீறுமாட்டுகென்றுரைத்துவிட்டான்
றேசுடைமணிகைக்கொண்டுமறையொன்றாற்றீர்த்தான்பார்த்தன். (௩௯)

கைச்சிலைக்குரியோன்மைந்தன்றேவிநற்கருவைவிட்ட
பச்சைமாலவளுக்காவிபரிபவமுறாதுநல்கி
யிச்செகத்தன்னந்துய்நீரெய்திடாப்பிணிசேரியாக்கை
யிச்சைகொண்டாண்டுமூவாயிரந்தொலைத்திடச்சபித்தான். (௪௦)

முனிமகற்கனையசாபமொழிந்திடச்சுருதிதந்த
முனியுளமழன்றானன்றுமொழிந்ததிங்கிவனுக்கென்ன
முனிவெழுந்தயத்தாமன்றன்முகிலொடுமுனியையாரு
முனிவுறச்சாதமின்றிமனிதரின்முறையாவீரே. (௪௧)

யெனப்பிரதிசாபநல்கியேகினனிவுளித்தாம
னனற்சொரிகணைகளான்முன்பயர்ந்துளவுயிர்களெல்லா
மனக்களியுற்றெழுந்தார்மாயவனுய்ப்பமீண்டு
தனக்கிணையிலாததூயதவத்தினர்விபினஞ்சார்ந்தார். (௪௨)

மாமணிவீமன்கையினளித்திவர்மடங்கியிப்பாற்
றாமுறுபாசறைக்கணெய்தினர்தழல்வந்தாடன்
காமுறுகரத்தில்வைத்துக்கழறினனிகழ்ந்தவெல்லாந்
தூமவான்குழலாள்சிந்தைத்துயரினையகற்றினளே. (௪௩)

வந்தழலுற்பவித்தமாதுமைவருமிருந்தே
யந்தணன்மகனுக்கென்னேயாரையுமடற்குமாற்ற
லெந்தவண்ணத்தாலுற்றதென்றிவர்வினவச்சொன்னான்
கந்தடுகளிநல்லியானைக்கஞ்சனாருயிர்கவர்ந்தோன். (௪௪)

வேறு.

கடல்சூழுலகொருவெண்குடைநிழலிட்டகருத்தோ
ரடலஞ்சவடர்த்தானெனலவனாண்மையினன்றான்
மடல்விஞ்சுறுகமழ்கேதகைவளநாடர்களுணர்மின்
சுடரம்பகனருள்செய்திடவிவன்வென்றதுதுனிபே. (௪௫)

வாளாளறவந்தாலலதுதவானுமைமணவன்
பேணாதவர்கெசகேசரிபெருமைக்களவுண்டோ
மாணாலுயர்பிரமாதிகளுணராமறைமுதல்வன்
காணாரிமையவர்கண்டவர்கருதுஞ்செயலுடையோர். (௪௬)

ஆலங்குடிபுகுந்தானபிராமியிடம்வைத்தோன்
சூலந்திகழ்தருசெங்கையமனைமனுவிதொலைத்தோன்
மூலந்தனிகடுவிறகன்முதன்முக்குணவடிவோன்
ஞாலந்தருதொழின்மூன்றுநடத்தும்பெருமானே. (சஎ)

முடிவற்றவனாதிதமுளைக்குஞ்சுடரெனினு
மடியற்கெளியவனாதலினாசான்மகனன்பாற்
படியிற்றொழுதேத்திக்கருணையின்வாள்வலம்பற்றி
மடிவித்தனனெவரேயெதிர்மாளாதுயிர்மீள்வோர். (சஅ)

ஈசன்செயலுமையோர்கணமிவணீக்கியபண்பா
லாசன்றியுமுய்ந்திரிரவகலாமுனமவன்முன்
காசொன்றுபுயத்திரெதிர்மேவிற்கதிர்வாளால்
நாசம்புரிவிப்பானெனவுணர்வீர்நவையறுவீர். (சகூ)

பொன்னஞ்சிலைசிலைகொண்டெழுபுனைசந்திரமௌலி
முன்னம்பயிறருமாடல்கண்மொழிவேனவைமுற்றுங்
கன்னங்குளிர்வுறநெஞ்சொடுகளியெய்துமினென்றே
யின்னந்திருமாலிங்கிதெடுத்தான்மறைதடுத்தான். (ரு0)

வேறு.

கற்பமவைதோறுமரியுந்தியெழுகஞ்சத்
துற்பவமுறும்பிரமனுட்புலனடக்கிச்
சிற்பரனையுன்னிநெடுநாடவஞ்செலுத்திக்
கற்பனைதொடங்குமிதுவேமுறைமைகாண்மின். (ருக)

அந்தமுறையேபிரமனுந்தியரவிந்தம்
வந்தபினரீசனைமதித்துளநினைத்தே
சந்தைமுறையேதவமியற்றினனிருப்ப
வெந்தைவெளிவந்திலனிவன்பரவிமீண்டே. (ருஉ)

தக்கனெனவேயொருதனதுமகனைத்தங்
தக்கணமுயிர்த்தொகையவன்றனதுசார்பாற்
புக்குறவியற்றியதனுக்குணவுபூமேற்
றக்கபடிதந்துதவிசேறினன்விதாதா. (ருங)

பேருடலெடுத்துளபிராணிகடமக்குச்
சிறுடல்சிறுத்தவைகள்சேருமுணவாக
வேருடனியற்றியிவரேசறவோர்வேள்வி
யாருடனுந்தக்கனொடுமாரணனியற்ற. (ருச)

அக்கனலின்முக்கணுடையண்ணலைமறந்தே
மிக்கவரெலாமவிவிரைந்துகொளும்வேலை
எக்கடலுமெக்கிரியுமியாவுமெனநின்ற
செக்கர்சடையானிதுதெரிந்துளமழன்றான். (ருரு)

பாரினிடைதன்பெயர்கள்பற்றறவடக்கி
நீரினிடையாழ்ந்துபலநாளிகழநின்றோன்
காரிடையெழுந்தருமுகாசினிபிளக்கு
மேரிடைபுகுந்ததெனவெப்பினன்மகத்தில். (ருகூ)

மூவுலகமேந்துகனகாசலமுரித்துத்
தேவுலகமஞ்சும் வகைநாணொலிநெழித்து
பூவுலகயர்ந்துயிர்கள்பொய்ப்பவொருவிற்கொண்
டாவலினியற்றுமகவெல்லையணைகுற்றான். (௫௭)

தக்கனையுமெச்சனையுமேனையர்கடம்மோ
டக்கணமுனைச்சிலையினாலுயிரகற்றி
மிக்கதிறல்வானவர்விரிஞ்சனைவெகுண்டு
முக்கணனிலிங்கமதைமூள்புவியினிட்டான். (௫௮)

வெய்யவுனைவானவருடன்கனலில்வேவச்
செய்வனெனையன்றியுயிர்செய்யவுரியாயோ
கைவருமகத்தவிகொடாதுகனல்வேட்டவர்
மையலரியாரையுமுயிர்க்கிறுதிமாட்டி. (௫௯)

சேடமறவேயிறுதிசெய்வனெனவேகை
யூடுறவிருந்தசிலையோர்கணமுறுமுன்
மாடமிகுநாணுரிமைமாட்டியொலிசெய்தான்
மீடுறுதிகந்தமளவுங்கவலைபெட்ப. (௬0)

வேறு.

உயிரியக்கன்றிச்சூத்திரக்கயிற்றையுகுத்தபாவைகளெனவயர்ந்த
வியலுடையுலகச்சக்கரஞ்சுழன்றவிரவிமாமதியுடுமுதலப்
பயிலுதமொழிந்துகலங்கினகிரிகள்பக்குவிட்டனவலைசுவறி
அயன்முதலிமையோர்நடுங்கினரொடுங்கிக்கடாகமுமரற்றியதம்மா. (௬௧)

எப்பொலன்கிரிகளெக்கடலினியீண்டெவ்வுலகெவ்வுயிர்த்தொகைக
ளிப்பெருங்கடவின்முனிவினாலயராதிருப்பதென்றிருக்கெலாமெடுத்துச்
செப்பருந்திருமாலுன்முகன்முனிவோர்வழுத்தியாங்கவனடிசிரத்திற்
றப்பறக்கொண்டேபிழையெலாம்பொறுத்துன்றண்ணளிபுரிகெனப்புகன்றார்.

மீளவுங்கங்காதரனவர்வழுத்திவீழ்ந்துவீழ்ந்திறைஞ்சுதனேக்கி, நாளதாமரையான்மீதருள்புரிந்துநற்சிலைநாணிணைக்கறித்து, மூளும்வெஞ்சினத்தைமாற்றுவராயீண்டோர்மூடிகத்துருவுகொண்டென்ன, வாளுடைப்பெருமானருளினாலோர்சொலந்தரத்தெழவயன்மகிழ்ந்தான். (௬௩)

அக்கணமவ்வாறியற்றலுஞ்சிலைநாணகன்றபினருஞ்சினமதனை
முக்கணன்வேலைப்பாங்கரின்விடுத்துமுகமலர்ந்தருணைகைகாட்டித்
தக்கமெய்யொழிந்தோர்தகுமுறுப்பழிந்தோர்தாம்பெறமீண்டுமீந்ததற்பின்
மைக்கடலுலகுமுயிர்களுமுன்போன்மருவினமாலயன்மகிழ. (௬௪)

பொம்மல்கொண்டிமையோர்முனிவரர்பலரும்புனிதனுக்குளமகிழ்சிறப்பச்
செம்மைசேருளத்தர்மகம்பலமுடித்துத்தேவர்தேவினுக்கவிதரலா
விம்மையுமறுமைப்பயனுமாங்கவருக்கீந்தவரன்பிணைவியந்து
மைம்மலிகளத்தனடுவன்வீற்றிருந்தான்மடங்கலாசனத்தின்மீதம்மா. (௬௫)

ஆயிடையிருந்தவானவர்புளகமரும்பிடவாண்டகைபெயர்ந்து
மேயநான்மறைகளொலித்திடவிலிங்கம்விடுத்ததிக்கடைந்துநோக்குதலுந்
தேயுவின்வடிவாயகண்டமூடுருவித்தேறுபாதலங்கடந்திழிந்து
ஞாயிறென்றனந்தமொளிர்ந்தெனத்திகழநாகர்கண்டஞ்சினர்மாதோ. (௬௬)

கைக்கரியுரித்தோன்றனையடிதொழுதுகார்முகில்வண்ணனுமயனு
மிக்கொழுங்கனலேதென்னலும்புகலவ்விதனடிமுடியுணர்ந்தடைந்தோர்
தக்கநற்பிரமமுதன்மையராகுஞ்சார்ந்துணர்ந்துரைமினென்றியம்ப
மைக்கடனிறத்தோன்பாதலம்புகுந்தான்வராகமாய்மலரடிகாண்பான். (௬௭)

அன்னமாயுயரப்பறந்தனன்பிரமனணிமுடிகாணுமாறுகிப்
பொன்னுலகத்தோருடனரனவனைபொருந்திவீற்றிருந்தனனுகங்கண்
மன்னியெத்தனையோமடங்கியதிருவர்மயக்கறாந்தறிகிலராகிச்
சொன்னசொற்சோர்ந்துமடங்கிமீண்டுரைத்தார்தோற்றிலதடிமுடியென்றே.

சிறுநகைபுரிந்தவ்விலிங்கமோர்வரையாத்திகழ்ந்திடச்செய்தவர்க்கருள்செய்
துறுதியிவ்விலிங்கபூசனைபுரிந்தோர்க்குளதுநன்மைகளெனவுரைத்தான்
மறுவறுபெருமானவ்வுரைமதித்துவானவரயனரிமுதலோர்
நிறுவிவெவ்வேறோரிலிங்கமர்ச்சனைகணிரப்பினர்நிலத்தின்மீதம்மா. (௬௮)

அவ்வணம்புரிந்தோர்க்கப்பெருமிலிங்கத்தவர்க்கெதிரைந்துவான்முகமுஞ்
செவ்வணமேனிப்பொலிவுமோங்கிடத்தன்றிருவருள்தயங்கிடத்தோற்றி
யெவ்வமில்சிந்தைக்கருத்தினவ்வழியேயீந்துவாழ்ந்திருந்தனனென்பார்
தைவருமகத்தியாழ்முனிவாதராயணராதியாந்தவத்தோர். (௭௰)

ஒருவராலுணர்தற்கரியவன்பெருமையுரைத்திடலெம்மனோர்க்கெளிதோ
திருவருபுயத்திரவன்வரங்கொண்டுசெறுத்தனனிவனெனத்தேறி
மருவுறுமாலைமார்பினர்வியந்துவரதனையேத்தியாண்டிருந்தார்
கருதுறுதிரிதராட்டிரனுழையிற்புகுந்தவாறினிக்கழறுதுமால். (௭௧)

இப்பெரும்பருவஞ்சவுத்திகமிதனையியலுமிப்பாரதமுற்கொண்
டொப்பரும்வடசொற்றமிழினூல்விரிவுண்டுணைத்திடச்செயும்வகைபுரிந்த
செப்பருஞ்சீர்த்திமுல்லையூர்முருகன்சேயிதழ்நாவில்வாழ்வாணி
யொப்பருஞ்செய்யுணூறுமீரைந்துமுரைத்தமுப்பானுநல்லயனே. (௭௨)

சிரோமாணிக்கங்கவர்ந்தசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௪௧.

சௌப்திகபருவம் முற்றிற்று.

பதினேன்ருவது,

ஸ்ரீ ப ரு வ ம்.

திருதராட்டிரன்புத்திரசோகசருக்கம்.

மருந்தைவானவர்க்களித்துவையமுண்டுசெய்யசெம்
பருந்திலேறிமாதவத்தர்பணியவாயர்பாடியிற்
பொருந்துகின்றபொதுவர்மாதர்பூந்துகிற்கவர்ந்துபூங்
குருந்திலேறிநின்றகொண்டல்குரைகழல்கடுதிசெய்வாம். (க)

ஈண்டுகுருமளவுமுத்தபஞ்சகத்தினெல்லையா
மீண்டுசாந்திபஞ்சகம்விளம்புவான்ருெடங்கினே
மாண்டமன்னகேட்டியென்றுவரதனேதவிரதமோ
டீண்டுமன்னவன்புகழ்ந்திறைஞ்சினுன்மகிழ்ந்தரோ. (உ)

முனிவர்நாயகன்சொல்வானிம்முறையனைத்துமுணர்வுசீ
யினியசஞ்சயன்புகுந்திறைஞ்சிவேந்தனேடுசொலத்
தனியனுனவன்கடற்கணடுவனின்றுசாம்பல்போ
லினியவன்றலத்தில்வீழ்ந்திரங்கிமாழ்கினுனரோ. (ந)

சாய்ந்துமைந்தராசையாற்சலிக்கவந்துவிதுரனு
மாய்ந்துநீதிபுகலயாவினுலுமாறிலாமையாற்
காய்ந்தவாதராயணன்கடந்தடைந்துபலமுறை
தேய்ந்துதுன்பமோடுமாறுசெப்பியேதெருட்டினுன். (ச)

ஐயகேட்டியினிதிருந்தழுங்கனன்மையன்றுநீ
செய்யமாதரொடுகளம்புகுந்துதேறிமீண்டுபோய்க்
கையினுலியற்றுகின்றகருமமுற்றிவருவதே
மெய்யிதென்றுகூறினுன்வியாதனென்றுபேருளோன். (ரு)

வரதன்வந்துபுகலமன்னன்மாதிரேடுசாவியே
கரதலங்கண்முகமறைந்துகாண்கிலோமடைந்தெனச்
சரதமாகவுள்ளெழுந்ததாபநீங்கிடாதுநீர்
பொருதபாங்கர்மேவுமென்றுகூறலும்பொருந்தினுர். (சா)

புரத்திறுடுகணவன்மாய்ந்தபூவைமார்களியாவரு
மரற்றியாவிபொன்றினுரையாயுமாறுமேவவென்
றுரைத்தியானைமீதுபேரியுருமெனத்தெழித்தனர்
விரித்தகூந்தலார்கள்வேலைவெள்ளமொத்துமேயினுர். (எ)

விதுரனேடுசஞ்சயன்விளங்குநாட்டமில்லவன்
முதுமைகண்டுமாதிரனேடுதேரின்மீதுமுறைவழா
மதுகைகொண்டுபுரிசைவாயின்மாறுமுன்னராறுபோற்
புதுமைவெள்ளமாயமாதர்கண்கடந்தபுனல்களே. (௮)

வந்துவேந்தன்மாதரோடுமாதிரனேடுமேவினு
னிந்தவாறுநேறுமென்றிரங்குமோசையெங்கனு
முந்திடக்கவுந்தியோடுமுற்றமாதர்பலரொடும்
விந்தைதங்குபுயமுளாருமாலுநேரின்மேவினர். (௯)

முன்னர்மேவுமாறுணர்ந்தமூலகாரணன்பகுத்
தன்னவீமனுக்குவேறமைத்தபஞ்சலோகமொன்
றுன்னுமுன்னர்கொணருவித்துடனடந்துநேர்புக
மன்னனுக்குவிதுரன்மைந்தர்வரவுணர்த்தினனரோ. (௧௦)

முரசுயர்த்தகொடியினனைமுகுரவானனன்பொடும்
வரிசையிற்சிறந்தகூறிவருதிமைந்தவென்னலும்
விரவினிற்படர்ந்துதாளில்வீழ்ந்துகண்கனீருக
வுரைசெயாதிருப்பவேந்தியுறுபுயந்தழீயினன். (௧௧)

வேறு.

ஆயுழிமாயனும்வாயுகுமாரனைடறைகுவனந்தகன்முன்
னீயெனவேவருபாவையைவைத்தயனின்றுவணங்கவெனுப்
போயிவனவ்வகையேயடிதாழ்வுறுபோதிறுகத்தழுவிச்
சேயிரும்பழிபாவையுடம்பொடுதீர்ந்தனன்வேந்தனுமே. (௧௨)

பாவைபொடிப்பொடியாயுறவேதெறுபாவியைநீபுரியுந்
தீவினையுற்றொருநூற்றெனுமைந்தர்கள்சேரவிறந்தனர்யா
ருவிபடைத்ததுநீவிழியற்றமையாலெனவற்றையினு
நாவையெடுத்திலன்வீமனுருத்திடநாரணனிற்றியெனு. (௧௩)

என்னுடவஞ்சனையான்மகராவியிறந்தனரென்றனையின்
றுன்னுடவஞ்சனைகண்டனமென்றரியோதலுமுன்னருளுண்
டென்னுடவஞ்சனையென்செயுமென்பிழையென்னையொறுத்தனவா
லுன்னிடிலவரையல்லதெனக்கினியுறுதியும்வேறுளதோ. (௧௪)

மாதவவென்றிதமோதினன்வேந்தனுமாருதிமைந்தன்முத
லோதியநால்வர்வணங்கவுமன்னனுகந்துதழீஇயினனப்
போதுதமன்னைமனத்துயர்தீர்முறைபுக்கிவணங்கினரா
லேதமிலவரில்வீமனைவெங்கனலென்னவுருத்தனளே. (௧௫)

முற்பகையாயினுமத்பமிதென்பதுமுன்னலைமுன்னவனைக்
கற்படுதண்டினடித்தனையூருவினிச்செயல்கைவலியோ
சொற்பழுதெண்ணில்புகன்றுசிரத்திடைதுன்னியுதைத்தனையாற்
பற்பலநின்பிழைபின்னவனுதிரம்பருகினபான்மையிதே. (௧௬)

என்றவள்கூறவணங்கிராதிபரேறியபேரவைவா
யன்றெமைவைத்துமுனூற்றதுநீயறியாய்கொலணங்கனையாய்
துன்றியவஞ்சனைசெய்ததெலாமவர்சூட்சிகள்யாமுணரேம்
நன்றிபிழைத்தவருயருவரோபதினாலுலகுந்தொழுவோய். (௧௭)

மாமுனிசாபமுமாதிடசாபமுமானிகர்வாயுன்மொழிக்
காமுறுசாபமுமவ்வணம்வக்துகலந்துபடுந்தனவாற்
றேமுறுபின்னவனுதிரமருந்துவனென்றுரைசொற்றதனாற்
கோமுறைவாயிடைகொண்டுவிடுத்தனனியான்புரிகொள்கையிதே. (௧௮)

வாயுமகன்சொலிவ்வண்ணம்வழங்கமறுத்துமடக்கொடியுந்
தாயமிழந்தவவைக்கனுமக்கொருசார்புரைதந்தவனைத்
தூயவகொன்றதுநன்றுகொலோவிதுசொல்லெனவெல்லவரு
ஞாயமிறந்திலன்வீமனவன்றனிநண்ணுவதுன்னிலனே. (௧௯)

மறுத்துமறுத்திவனோதியகற்றவுமைந்தனகன்றிலனா
யொறுத்திவனைப்பலதிமொழிகூறியுருத்துயிரற்றனனென்
றிறுத்துளமன்னவர்யாருமுரைப்பவிதங்கியென்முன்னவனைச்
செறுத்ததுநன்மைகொனூலறிவிற்சகதேவனெனச்சலியா. (௨0)

ஆடியசூதவனாலடனூற்றுவராவிதொலைத்தவனிப்
பாடியகாளையெனத்தெரிவாயவையூடுபகர்ந்தசொலாற்
சாடியதாம்விதிவண்ணமெனக்கொள்சலிப்பதுநன்றலவே
சூடியமைந்தர்களைவருநின்சுதரென்றடியிற்றொழுதார். (௨௧)

ஆறினள்சீற்றமெடுத்தனண்மைந்தரையாசிபுகன்றுகள
மேறினளவ்விடைமாதுதிரௌபதியெய்திவணங்குதலுந்
தேறினனின்னையருந்ததியென்றுரைசெய்துமகிழ்ந்தெவரும்
பாறுகள்சூழவிருந்தசுயோதனர்பக்கலடைந்தனரே. (௨௨)

வேறு.

கண்டாள்பானுமதியென்பாள்கணவனுடன்மேற்பாய்ந்துயிர்ப்பு
விண்டாளென்னவிழுந்திரங்கிவெறுத்தாளுயிரையிருகுரவர்
தண்டாத்துன்பந்தரக்கலுழிசொரியத்தளர்ந்துதரைப்பட்டார்
வண்டார்கூந்தன்மடமாதரெவரேபுலம்பிமாழ்காதார். (௨௩)

தீராத்துயரமொருவண்ணந்தேறித்துச்சாதனன்முதலாம்
பேராற்சிறந்தபுதல்வர்களைநோக்கிக்கண்ணீர்பெருக்குறவே
சோராத்தனத்தின்மேற்புடைத்துத்துன்பமுழன்றாரவர்வேட்ட
வாரார்தனத்தாரிழைத்ததுயர்வகுத்துக்கூறலெவர்க்கெளிதே. (௨௪)

செல்வத்துயருமிலக்கணனைமுதலாஞ்சிறுவர்பற்பலருங்
கல்விக்குரியவபிமன்னுமுதலாமைவர்காதலரு
மொல்கிக்கிடந்தவிடங்கடொறுமுற்றார்நோக்கியுயிர்த்துயிர்த்துச்
சொல்வைத்தழுதார்வாக்குரியதோகைமார்கடுயர்கூர்ந்தே. (௨௫)

சொல்லாலுயருந்துச்சளையாடுயர்கூர்ந்தோடிச்சிந்துபதி
மல்லாருடன்மேல்வீழ்ந்தழுதுமறந்தாள்கங்கைமகன்கிடந்த
பொல்லாங்குணர்ந்துநெடிதுயிர்த்துப்புலம்பிச்சிலைக்குநான்மறைக்கும்
வல்லானெனுமாசிரியனைப்போய்க்கண்டாருடல்கண்மறந்தாரே. (௨௬)

போற்சிறந்தகிருபியெனும்பெண்ணாரமுதுகணவன்மிசை
தீராத்துயரத்துடன்வீழ்ந்துதியங்கிமயங்கிநெடிதுயிர்த்தாள்
பாராள்கன்னன்றனையுமவன்பயந்தபுதல்வர்தம்மையும்போய்
நேராயெதிர்ந்துபெருந்துயரந்தாராகிநெடிதுயிர்த்தார். (௨௭)

கண்டாள்கலுழ்ந்தாளவன்றேவிகரைந்தாள்கணவன்மேல்வீழ்ந்தாள்
விண்டாள்போலச்சகுனியுடன்மேல்வீழ்ந்தயர்ந்தாளவன்றேவி
வண்டார்விராடன்றனைநோக்கிமகாரைநோக்கியாற்றிலளாய்ப்
பண்டாதரிக்குஞ்சுதக்கணையென்பட்டாள்கனலிற்பதுமம்போல். (௨௮)

வற்றாக்கருணைப்பாஞ்சாலன்மணித்தோள்புணர்ந்தபெருந்தேவி
யுற்றாளுணர்ந்தாண்மேல்வீழ்ந்தாளுயிர்த்தாண்மகத்தினுதித்தோனுங்
கற்றோர்புகழுஞ்சிகண்டியையுங்கண்டாங்கவரில்லவர்கலந்து
பெற்றார்துன்பம்பதைபதைத்தார்பெண்ணாய்ப்பிறத்தல்பெரும்பிழையே. (௨௯)

சேதிப்பெருமான்மகதபதிசேரன்சோழன்பாண்டியன்மற்
றாதிக்காசிநகர்ப்பெருமானருண்மத்திரபூபதியுலகிற்
றீதற்றோதும்பாதவர்மற்றுள்ளசெகத்திற்புரவலர்கள்
பேதித்துடலங்கிடந்தவெலாங்கண்டாள்சுபலன்பெறுமடந்தை. (௩௰)

வாகுலீகன்சோமதத்தன்வாகைப்பூரிசராவென்போன்
றோகைமார்களவருடனேதொடர்வார்போலச்சோர்ந்துயிர்த்தார்
மேகமனையாருலகினுளவேந்தர்பலரும்வீந்தவியத்
தாகங்கொண்டேதனியியற்றுந்தகையேயிவையென்றுட்கொண்டான். (௩௧)

சேந்துவிழியள்கறைப்புனலைச்செலுத்தச்சிந்தைத்தீயெழநின்
றாய்ந்ததுளவோன்றனைநோக்கியகிலங்கெடுத்தபாவத்தாற்
றேய்ந்துன்கிளையுமிவ்வணஞ்சிதைந்துமாயக்கடவதெனச்
சாய்ந்தகுழலாள்கொடுஞ்சாபந்தந்தாளவருந்துணுக்குறவே. (௩௨)

வேறு.

கற்பினிலுறுதிவாய்ந்தகருங்கணாயுலகில்வந்தே
யற்பவமானோர்மீளவொடுங்குவதுறுதியன்றோ
பற்பலபுகல்வதென்னோவிதிவழிப்பயனுண்டாமென்
றற்புடையமலன்சொற்றேபாங்கவரோடும்போந்தான். (௩௩)

வந்தொருவனத்தைச்சார்ந்தேயாவரும்வருத்தமாறத்
தந்தையைத்தொழுதுசெய்யத்தகுவதென்னுரைத்தியென்ன
வந்தணருடனுசாவிபறன்மகன்றனக்குரைத்தான்
செந்தழலிடுமின்மாண்டோரனைவர்க்குந்திறம்பாதென்றான். (௩௪)

வேறு.

முன்னவனுரைப்பவயவீமன்முதலோருந்
துன்னுவனமுற்றுயர்தருக்கடுணிசெய்வித்
துன்னுசகடிற்கொடுசமர்க்களமதுய்த்தார்
மன்னனுமவர்க்குவிதியாகவேவகுத்தான். (௩௫)

வானநதிதந்ததிருமைந்தனையலாத
வேனையர்தமக்குரியரீமவிதிசெய்தார்
கானவழல்கோடிபலகாட்டுதல்கடுக்குஞ்
சேனையழலுக்குணவளித்தசெயலம்மா. (௩௬)

ஆவிநிலைசெய்யவரியோர்களவரோடுந்
தேவுலகடைந்தனர்கனற்கணுடநீர்த்தே
ஏவலறுகாரணமிலாமையினிருந்தார்
பாவியர்கடாரமெனுமெண்ணறுபரப்பும். (௩௭)

வெள்ளிடையிலாதுகனலெங்கணும்விளங்க
மள்ளர்சதகோடியர்களேபரமும்வாரித்
தள்ளுகனலுக்குணவுதந்தனர்சமர்க்கண்
புள்ளுகளுணத்தரைபுரண்டவரையெல்லாம். (௩௮)

ஆழியிடையூழியனலாற்பரவமென்னக்
காழுயர்கடுங்கனல்கலந்துநிமிர்போதி
னேழுலகுமேழ்பொழிலுமென்படுவதோவென்
றாழுணருமும்பருமுசாவினர்கலங்கி. (௩௯)

யித்தரையிடஞ்சிறிதிலாமலெரியீம
மெத்துதழலின்சிவிகைவியோமமெழுதோற்ற
முத்தமனிலங்கையெரியூட்டியதுமானு
மத்தனகைமுப்புரமழற்றுகனலொக்கும். (௪௦)

பாதகர்செய்வஞ்சனைபடுஞ்சமிதையாகி
மாதுவிழிநீர்கிருதமாகிவயவீர
ரோதுசபதஞ்சுருதியாகியுறுதீயாய்
நீதியரசன்பொறுமைநீண்டெரிவபோலும். (௪௧)

தருமன்முதலோர்முதியதாதைவில்விதூர
னுரிமைபெறுகுந்தியொடுசவுபலையுளாகி
துருபதனளித்தவள்சுபத்திரையுமொன்றிப்
பருவரலெனுங்கடல்படிந்தனரிரங்கி. (௪௨)

ஆயிடைவிதூரனறிவாற்றெளிவடைந்தே
மாயனுடனிங்கிவர்மனத்துயரகற்ற
நேயமடமாதரொடுநிருபருமுணர்ந்தே
காயமொடுநின்றனர்கலங்குபுனல்போல்வார். (௪௩)

திரிதராட்டிரன்புத்திரசோகசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௪௩.

உ

ஈமவிதிமுடித்தசருக்கம்.

தாயாய்மகவாய்த்தனியாய்ப்பலவாய், நீயாயானாய்நிற்குமொருவன்
மாயாமயனாய்மாயைக்கணாக, வாயாதவனென்மனநீங்கலனே. (௧)

பொய்யாமொழிசேர்விதுரன்புகல, மெய்யாமுரவோர்துயர்விட்டுறலு
மையாரிளையக்குரவன்மனமுற், றையாவறைவாயறநூன்முறையே. (௨)

எனவிங்கிவனன்பொடுமீதறைய, மணமொன்றியவில்விதுரன்மகிழா
முனநன்முனிவோர்மொழியின்படியே, தனிமுன்னவனெண்செவிதந்தனனே.

தருமம்பிறர்தான்மொழியுந்தகையோ, கருமந்தெரியத்தெரியுங்கலைக
ளுருவம்பெறுதன்னையுணர்ந்திடினிக், கருவின்றுயராறுவர்காவலனே. (௪)

நிலையிற்றெரிபொன்புவிநேரிலையே, மூலையிற்புகுவாரறியுந்தரமோ
கலைவற்றசைவற்றுணர்வற்றுருகா, மலைவற்றுரையற்றவர்தேர்வதுவே. (௫)

வேறு.

சுக்கிலசோணிதவுருவாய்த்துளையுமன்னையுதரத்தின்
மிக்கபஞ்சசாகைகளாவிளக்கிவிக்குஞ்சிலநாட்க
டொக்கரம்பென்புதசைதோல்பொதியுஞ்சிலநாளி
னொக்குமவையவங்களெலாமுண்டாஞ்சின்னாள்களினே. (௬)

கருப்பையினுட்பட்டுக்கதலவிடங்கிட்டாம
லிருப்பிலிருந்துதிக்குநாளெய்தினதோமுகமாகிச்
செருப்புரிவாயுசெலுத்தச்சென்றுபுகும்வழியறவு
நெருக்கவுபாதியினேங்கிநிலத்தில்வீழ்ந்திரங்குமால். (௭)

நோய்களினுமுடல்வருந்திநண்பசியாலலைப்புண்டு
பேய்களினாற்றடுமாறிப்பேச்சுணர்ந்துசேட்சென்று
தாய்களிப்பத்தமர்களிப்பச்சஞ்சரித்துவஞ்சனையும்
வாய்கரைக்கும்பொய்யுரையுமருவிமனந்தடுமாறி. (௮)

பரதாரம்பிறர்பொருளென்றுன்னுமற்பலதிசையுங்
கரவாகித்திரிந்துழன்றுசமுசாரங்களின்மயங்கித்
தரவாளின்மூப்பலைப்பத்தள்ளாடிவினையுலைய
விரைவாகியமபடர்வந்தீர்ப்பவவன்கரமேவி. (௯)

யாதனாசரீரமடைந்திருவினையின்பயன்றுய்த்துப்
பூதலமீதவருய்ப்பமீண்டுமிந்தவுடல்பூண்டு
சாதனாயிறந்தலையுஞ்சங்காரந்தவிர்த்தவனே
வேதநான்கிறந்திடத்தின்மெய்ப்பொருளாச்செப்புவரே. (௧௦)

எடுக்குமுடற்கணக்கறிவாரெவரேதண்கடற்கரைவா
படுத்தமணற்றொகையறிவாரவரேமற்றெவ்வுயிரு
முடுத்தகலைசீரணமுற்றொன்றுபோயொன்றுவரு
மிடத்தன்மையாமுடல்களிவ்வுயிருக்கெய்துவதே. (௧௧)

தன்னிலையையுணராமற்றன துபுலனடக்காம
லுன்னியுலகினிற்பிறருக்குபதேசஞ்சிலர்சொல்வார்
மன்னியதன்குலமதித்துமற்றவரைநிந்திப்பார்
பொன்னுடையோமெனக்களித்தேயாதுலரைப்பொருள்செய்யார். (௧௨)

இத்தகைமைகளின்மயங்கியிவ்வாறுபெரும்பாசக்
கொத்திலலைந்தனனன்றேருகுவலயத்திற்றெளிவற்றே
சத்துணர்ந்துதானுரென்றெண்ணினனேற்சலிப்பற்று
முத்திபுகுந்தனனென்றேமொழிவனின்னுங்கேட்டியால். (௧௩)

வையகத்தின்மாமறைநூல்வல்லமுனிவோருரைப்பக்
கையகத்தினமலகமென்னவொன்றுகண்டுளனுற்
பொய்யகத்துளோரவர்க்குப்புகலாநெறியதுவா
மையலற்றுக்கேட்டியெனச்சொன்னுன்மயக்கறவே. (௧௪)

இப்புவியிலோர்மறையோனேகினன்காந்தாரஞ்
செப்புபெயர்வான்கிரியிற்சேர்வான்மனத்துன்னித்
தப்புநெறிபோந்துகிரிச்சார்பினின்முட்காடடைந்தா
னப்புடையிற்றுட்டமிருகங்களினலயர்வுற்றுன். (௧௫)

ஓடினனச்சந்தன்னுயிரலைப்பவாங்கொருத்தி
கூடினுளாகாரங்காண்பரியகொள்கையளாய்
நாடினன்சாலநடுங்கினனங்கவடன்
பீடிலாப்பொல்லாமுகங்கண்டபெற்றியினுல். (௧௬)

நீண்டுயர்ந்தபாதபமொன்றுங்கிருப்பநேர்புகுந்து
தாண்டியதினேறிச்சலித்துடலந்தள்ளாடி
மீண்டுமதன்பாங்கர்விடுங்கிளைமேற்சாய்ந்துருண்டு
மாண்டவன்போன்மீளமடங்கிமண்ணில்வீழ்ந்தானே. (௧௭)

வீழ்ந்தான்கருங்கொடிகண்மேற்றருவிற்சுற்றியவை
தாழ்ந்துதெரியாதவகைதான்மேய்ந்தபாழ்க்கூவ
லாழ்ந்தானவ்வல்லியரும்பாசப்பற்றதனுற்
சூழ்ந்தானல்லூசலினிற்சுற்றுவார்போற்சுழன்றே. (௧௮)

ஆங்கிருந்துநோக்குதலுமக்கூவற்கண்ணரவந்
தாங்கியதுத்திச்சுடிகைதங்குதழற்கண்ணினெடு
மோங்கியுறக்கண்டுகுறையுயிர்தாங்கியக்கூவற்
பாங்கர்தனைநோக்கினன்பரிதாபமுற்றவனே. (௧௯)

கொல்லுஞ்சினவேழங்கோடிரண்டுதாங்குதலை
யொல்லென்னமூவிரண்டுமோதுபதம்பன்னிரண்டுங்
கல்லென்னத்தாங்கிக்கருநிறமும்வெண்மையுமா
யெல்லையுறக்கண்டான்றுணுக்குற்றிரங்கினன். (௨௦)

மேலாவத்தருவின்மிசைநோக்கவெண்ணிறந்த
காலாற்றலையாற்சிறையாற்கணக்கிறந்தே
கோலாகலத்தும்பிக்கூட்டங்கண்மொய்த்தடர்ப்ப
வேலாழ்ந்தான்போலயர்ந்தானுன்மத்தமேம்பட்டோன். (௨௧)

அக்கணத்தினத்தருவினுயுமளிக்குலஞ்செய்
புக்குயருந்தீந்தேன்பொருந்தியவாய்விண்டடைய
விக்கவலையுற்றேனிசைக்குமகல்வாய்திறந்தே
தக்கமதுகரங்கடன்வாய்நறைசுவைத்தான். (௨௨)

பின்னரிரண்டெலிகள்பேருடலம்வெண்மையொடு
பன்னுகருமைபடைத்தவுடறுங்கிமரந்
தன்னையடியிற்கரிப்பதுவுந்தான்கண்டு
மன்னுதனிநாகனைத்துமற்றாங்குற்றானென்றான். (௨௩)

செய்யமனமுடையசிர்விதுரன்கூறியசொன்
மையலுடைமன்னவருந்தந்தையிஞ்சொல்வல்லோரு
மையமகன்றென்றுமுணராதவராகி
மெய்யுணர்வோய்சிறுவன்மீட்சியுங்கூறென்றுரைத்தார். (௨௪)

பாராளும்வேந்தர்பலரற்புதமடைந்து
பேராதுகேட்பப்பெரியோனிதுபகர்வான்
வாராயரசேவரைகண்டாய்மெய்ம்முத்தி
நேரானகானம்பிரபஞ்சமீயுணரே. (௨௫)

தப்புநெறிதீவினையாநல்வினையாஞ்சாருநெறி
வெப்புதவுகாடனைத்தும்வெவ்வேறும்பேதவுயிர்
செப்புவிருகங்களெலாந்தேசழிக்குந்தீப்பிணிக
ளொப்பில்விகுதியதாமுற்றாண்மானிடவருணம். (௨௬)

உற்பத்திசஞ்சரித்தலோய்ந்தொடுங்கன்மூன்றுடைத்தா
மற்பவுடலவ்விருக்கம்வல்லியாசைகளாமப்
பற்போகியாருயிர்கள்படுக்குமருங்கூற்றுவனு
நற்கருப்பையோரிரண்டுநன்பகலுமிரவுமதே. (௨௭)

வேழமொருவருடமதாம்விளங்குமுகமாறிருதாம்
நீழலதனுடல்வருணம்நெறிமுறைசேரிரண்டயனந்
தாழ்பதங்கள்பன்னிரண்டுந்தகுமாதமவந்தடர்க்கு
மூழ்முறைகோரிக்கைகளாமுயர்தருவின்மதுகரங்கள். (௨௮)

அருந்துதேனின்றுளிகளாருயிரின்விடையங்கள்
பொருந்தியவேதியனென்றுபுலப்படுத்ததான்மாவே
வருந்துதுட்டவிருகமொருமாதரவர்வேழமாத்
திருந்தவளியிரண்டெலிகளிவையாறும்பகையாமே. (௨௯)

அறுவிதமாம்பெரும்பகைக்குமடங்கியச்சமுற்றிருந்து
முறுகறுந்தேன்சுவைத்நலிந்தவுயிர்க்கடுத்தபான்மையிதே
பெறுமுடலாற்சங்காரம்பெற்றதனுற்றுன்பமலா
துறுதியுளவெனப்புகல்வதுளவேகொலுரையாயே. (௩௦)

வேறு.

வரைபடாதவித்துன்பவாழ்க்கையையுன்னிமயங்கித்
திரைபடாவலைச்செயலெனத்திரிவதுதீர்வ
ருரைபடாநெறியுணர்ந்துதன்னுள்ளுறவுலகம்
புரைபடாதபொய்யென்றுளங்தெளிந்தருள்புனிதர். (௩௧)

மைந்தரானவர்மனையவளானவல்மற்று
முந்துநண்பினேர்வாழ்வெனலிவையுலகியலே
சிந்தைகொள்கலைதன்னுடலன்னியந்தெளியின்
முந்துநன்னிலைபுகும்வகைமுயலுதிமன்னே. (௩௨)

இறந்தவர்க்கெலாமுலகியலியற்றிமீண்டதற்பின்
சிறந்தநற்செயல்புரிகுதுஞ்செல்கெனவிதுர
னறந்தவாவகையுரைத்திடவந்தகனுணர்ந்தான்
மறந்தசோகமீண்டெய்திடமானிலத்தயர்ந்தான். (௩௩)

முறையினுலிமசலமவன்முகனுறப்புகட்டிக்
குறைவிலாதவெண்சாமரையிரட்டிமெய்குளிர்வித்
தறையுமுன்னரினயர்வினையகற்றிடத்தெளிந்தே
யிறைவனேதுவர்னிருந்தவர்துணுக்கமுற்றேங்க. (௩௪)

எம்பிகேட்டியிங்கிருந்துடனுடொறும்வருந்திப்
பம்பியாருயிர்பரிக்கிலன்பாண்டவரிருந்தாற்
செம்பொனுடுறச்செலுத்தவர்யானுயிர்தீர்வ
னம்பிமன்னினுநரகமேபெரிதெனநவின்றுன். (௩௫)

அனையகாலையில்வியாதனையரிநினைத்தருள
முனிவனெய்தினன்யாவருமுறைமுறைபணிந்தே
வனையுமோர்தவிசளித்தனரிருந்தபின்வழங்கித்
தனையன்றன்னுளச்சலிப்புணர்ந்தோர்மொழிதந்தான். (௩௬)

கேட்டிமன்னநீயிறந்தவர்தமக்குளங்கிளர
வாட்டமுற்றனையறிவுளோர்க்கவைநலமன்று
வீட்டுதுன்பமுமின்பமும்வினைவழியெய்து
நாட்டிலாரதைதவிர்க்கவல்லோர்கலைநவில்வோய். (௩௭)

இருந்துளோருடற்றிரமெனிலிறந்தவர்க்கிரங்கி
வருந்தலாமினிநமக்குமவ்வாறுசின்னளிற்
பொருந்தலாவிடருழப்பதென்பொய்யைமெய்யாக்கி
யருந்துதுன்பமுமின்பமுமயர்வர்நாடாதார். (௩௮)

ஈசன்செய்கையுமாடலுமீதலாலொருவர்
நாசமெய்தவுநலியவுமுளகொலோநவில்வாய்
தேசினின்மகார்செருப்புரிந்திறக்கும்வாறுதித்தோர்
பேசவேனொருரகசியம்பெரிதுளங்கோடி. (௩௯)

ஓதுமோர்தினமிந்திரன்பேரவையுற்று
மீதுளோரொடுமேவுநாண்மேதினிமடந்தை
கோதிலாவமரேசனைக்குறுகநான்முகத்தோ
னாதியானவரன்றுரைத்தருளியகருமம். (௪௦)

விரைவின்முற்றிடவேண்டுமென்றுரைத்திடவேள்விக்
குரிசிலோதுவான்குரைகழற்றிருதராட்டிரனுக்
குரைசெய்மைந்தர்நூற்றுவரினுமுதல்வருமொருவன்
றரைசெய்பேரினாய்நின்கருமத்திற்குத்தலைவன். (௪௧)

அவன்மொழிப்படியுலகுளோரனைவருமொருங்காக்
குவலயத்திடைநற்குருக்கேத்திரமடைந்து
நவமுறப்பெரும்போர்பயின்றிறப்பர்பின்னாளிற்
கவலையிற்றுநின்பாரமுங்கையறுமென்றான். (௪௨)

அந்தவாசகமவளுணர்ந்தகமகிழ்ந்தகன்றாள்
வந்துளன்புவியானுமீண்டிவைமனம்வலித்துச்
சந்தநாரதன்மொழியினாற்றருமனீதுணர்ந்து
முந்துவான்பகைவரர்வழிமுயற்சிசெய்திருந்தான். (௪௩)

கடவுட்செய்கைகள்விலங்குமோகருத்தினைமயக்கி
யடலுட்பேரமர்விளைத்துலகனைத்தையுந்தவிர்த்தார்
மடமுற்றேயிதைச்சகுனியுங்கன்னனும்வளர்த்தோ
ரிடரற்றோரிவரைவராலோர்பிழையிலையே. (௪௪)

காரணப்படியுதித்தவர்கழன்றனரினிநீ
யாரணப்படியருங்கடன்முறைபுரிந்தகற்றி
வாரணப்படையைவருமைந்தராக்கொண்டு
தோரணிப்படிபுரிந்துசின்னாளினிற்றுரப்பாய். (௪௫)

உனதுதுன்பங்கண்டுயிர்சுமந்தாற்றலராகி
யினிதினீக்குவானிராசைசெய்திருந்தனரைவர்
மனதுதேற்றுதிமைந்தரைமல்குநற்கதியும்
புனிதவாழ்வுநற்புகழுமுண்டாமெனப்புகன்றான். (௪௬)

அனையவாசகத்தாலவனருந்துயர்தேறித்
தனையன்மீளவுந்தந்தைபொன்னடிமலர்தாழ்ந்து
வினையைவென்றவனின்சொலேவேதமென்றுன்னி
யினைபலாக்கையைத்தாங்கினனென்றுகொண்டிசைத்தான். (௪௭)

தனையர்தங்களைத்தழீஇயுரைநன்னெனக்கூறி
முனிவரோதியபடிகடன்முறைபுரிந்திடுமின்
புனையருந்துயர்போக்குமின்புதல்வர்காள்யாவும்
வினைகடந்தவன்செயலதேயென்னவேந்துரைத்தான். (௪௫)

அண்டந்தாவிமீதளாவியகொழுங் கனலனைத்தும்
விண்டவிந்ததுவடவனலவிந்தெனவெந்து
முண்டகாசனைகேள்வனுமாதருமுறைநேர்
பண்டையோருமைவருமகன்றேகினர்பரிந்தே. (௪௬)

ஈமவிதிமுடித்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௬௨.

திலோதகசருக்கம்.

பூவினன்முதலினோர்போற்றுமாதியாய்
நாவினிற்றுதியுமாய்நவிலுஞானமாய்ப்
பாவியற்பயனுமாய்ப்பரவநிற்பவன்
கோவியர்க்கருள்புரிகொண்டல்வண்ணனே. (௧)

வேதமாக்கியமுனிவீணைமாமுனி
கோதிலாத்தவுமியனென்னுங்கோமுனி
காதலிற்பலமுனிகணங்களோடுசென்
றோதரும்பகீரதிநதிசென்றுற்றனர். (௨)

கார்நிகர்தருங்கொடைக்கவுந்திமைந்தரும்
பார்தருவேந்தனும்பாவைமார்களு
மோதருவிதுரனுமேனையோர்களுஞ்
சீர்முகில்வண்ணனும்பின்சென்றெய்தினர். (௩)

தவவலிப்பகீரதன்றந்தமாநதி
கவலையுற்றிவர்வருவரவுகாண்டலு
முவரியிற்றெழித்தலைபுயர்ந்துவீசிமற்
றிவருடையுடலணங்கியாவும்போக்கிற்றே. (௪)

வந்தவரனைவருமாதரியாவரும்
மந்தணர்பலருநீராடிக்கங்கையைச்
சிந்தையிலுன்னியேசென்னியாற்பணிந்
துந்துவான்கரையகுற்றுவைகினர். (௫)

மாதவிவழைகடமாவிலுப்பைபூந்
தாதகிவருக்கைசண்பகங்களாதியாம்
பாதபநிறைந்ததோர்பழுவத்தெய்தினர்
மாதருமாந்தருமறைவலாருமே. (௬)

மங்கலமாதர்கள்வகுத்தவோதிக
வங்கையான்முடித்தனரழலிற்றேன்றிரு
டங்குழல்சோர்தருந்தகுதிநோக்கியே
புங்கவாதியோர்புகறன்மேயினர். (௭)

மன்னவையுரைத்திடுசபதவாய்மையும்
பின்னுறநிகழ்ந்துளபெற்றியாவையு
முன்னியபடிமுடித்தோங்குகற்பினுய்
நின்னருங்குழன்முடித்திடுதனீர்மையே. (௮)

தகுந்தவமுனிவருந்தண்டுழாயணி
முகுந்தனுமொழிந்திடமுந்துமாமியர்
தொகுங்குழற்கைசெயத்தொடுமுன்றேகையும்
வகுந்துடன்முடித்தனள்வாரித்தன்மையால். (௯)

புவிமுழுதுலவியபுதுவிருட்டினைக்
கவினுறவோர்முறைகரந்துவைத்தல்போ
லவிதருகருங்குலழன்றுநீட்டினு
ணவமுறமுடித்தனளின்றுநங்கையே. (௧௦)

பூமழைபொழிந்துயர்புலவர்வாழ்த்தினர்
மாமுனிக்கணங்களுமருள்வழங்கினர்
தாமகிழ்மகிழ்ந்தனர்சதுரரானவர்
தூமமென்குழலினர்தொழுதுதுள்ளினர். (௧௧)

அன்னமென்னடையவராண்டிருப்பமற்
றுன்னருமுனிவரருரையின்வண்ணமே
கன்னவிற்றோளினர்கருமமுற்றுதற்
கன்னிலைசாலைசெய்தார்களக்கணம். (௧௨)

உபகரணங்கள்கொண்டறமுவப்பவன்
றபவுயிர்மாய்ந்தவர்தங்களுக்கெலாம்
விபவமாம்பெருங்கதிமேவவேண்டியே
நபமியங்கிமையவர்நவிலவாற்றினன். (௧௩)

முனிவரர்க்கிருகரமுகிழ்த்தியான்புரி
வனைகடனியாவர்பான்முனம்வழங்குவ
தினிதுறவுரைத்தியென்றியமன்றந்தவன்
வினவலுமாங்கவர்விளம்பன்மேயினர். (௧௪)

ஈன்றவண்முனந்தருமிரவிசேயுமக்
கான்றநற்றுணையவன்கருமத்தக்கிரனு
மேன்றுநீபுரிகவென்றியம்பவாங்குள
சான்றவரன்னதேதக்கதென்றனர். (௧௫)

முன்னவனாற்றுவர்முடிந்தமைந்தர்கள்
பின்னரின்மாதுலர்பேசுமைத்துனர்
பன்னருஞாதியர்பலர்க்குமிம்முறை
துன்னியசிலைகடாயித்துச்சோர்வற. (௧௬)

இறந்தவாளரசர்பற்பலர்க்குமிவ்வணா
மறந்தவாவகைசிலையமைத்துமாவன
சிறந்திடச்செய்தனன்சேமவேதியர்
மறம்படக்கூறியமறையின்வண்ணமே. (௧௭)

அவ்வணாளிரண்டாறுஞ்செய்கடன்
செவ்வியர்புரிந்துபின்சிலையுகுத்தனர்
கொவ்வைவாய்மாதருமியாருங்கூடவே
பௌவநேர்பொருந்தியபரவையாடினர். (௧௮)

பொருந்திபநதிக்கரையேறிப்பொன்மணி
யிருக்குரையான்கனல்லாடையாவையு
மருத்தியின்மறையவர்க்கருளிவைகினர்
கருத்துடையவரெலாங்கதியழுந்தவே. (௧௯)

வடமுகமுப்பிதாக்களையும்வைத்துறக்
குடமுகம்விண்டுவைக்குறித்துவந்துகீ
ழிடமுகம்விசுவதேவரையுமெய்துவித்
தடலுறத்தருந்திதியருச்சித்தாற்றினர். (௨௦)

சங்கியல்வெண்படாஞ்சூழ்ந்தசாலையுட்
டுங்கமாம்வேள்வியுந்தொடங்கிமுற்றினா
ரங்குலிப்பவித்திரதருப்பையோடகன்
கங்கையிற்றருப்பணக்கடன்களாற்றினர். (௨௧)

வடவிருக்கத்தடிமன்னியாவரு
வடவுடன்பிண்டமுமளித்துமுற்றினர்
கடல்வளையுலகெலாங்களிக்கத்தானமு
மிடனுறப்பூரியுமெவர்க்குநல்கினர் (௨௨)

சூதகந்தொலைந்தபின்றன்னுதாதைதாய்ப்
பாததாமரைகளிற்பணிந்துபற்பல
வேதியரொடுமனந்துய்த்துவேந்தவை
கோதறவிருந்தனர்குரவரோடுமே. (௨௩)

இயம்புசீர்பருவமாமிதனைநல்லயன்
வயம்புனைமுருகனைவகுத்திடென்றலுஞ்
சயம்புனைசதமுமூவைந்துசெய்யுளா
யியம்பினன்றமிழின்விப்பிரன்சொற்றேறியே. (௨௪)

திலோதகசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௧௯.

ஸ்ரீபருவம் முற்றிற்று.

உ

பன்னிரண்டாவது,

சாந்திபருவம்.

திருமுடிபுனைந்தசருக்கம்.

* ஆக்குமாறயனுமுதலாக்கியவுலகங்
காக்குமாறுசெங்கண்ணுடைக்கருணையங்கடலாம்
வீக்குமாறரனுமவைவீந்தநாள்மீளப்
பூக்குமாமுதலெவனவன்பொன்னடிபோற்றி. (க)

தொடுபொலன்கழற்றிறற்சனமேசயன்றூய
வடுவிலாமுனிமலர்ப்பதம்வணங்கியேமற்று
நடுவிகந்திடாநரபதிநடந்தவாறனைத்து
மிடுதிகாதிலென்றிரந்திடத்தவக்கடலெடுத்தான். (உ)

வையகம்புகழ்பாண்டவர்மைந்தர்நற்றுணைவர்
செய்யமைத்துனர்மித்திரர்செருவிடைமடிந்தோ
ருய்யநற்கதிபெறும்படியுதகநல்கியபின்
மையில்சானவிமருங்கினின்மாதமூன்றிருந்தார். (ங)

அங்குவைகியபெருந்தகைவிழிப்புலனற்ற
துங்கவேந்தனும்விதுரனுங்கிருபனுந்தொகுத்த
மங்குல்வண்ணனுமிளைஞனுந்துணைவருமடவார்
தங்களோடுபேரவைப்புறத்தவிசின்வீற்றிருந்தார். (ச)

அனையகாலையில்வியாதனுமரியநாரதனு
முனிவரெண்ணிலர்சூழ்வரமுன்னுறமேவப்
புனைபொலன்கழலோரெலாம்புகுந்தெதிர்பணிந்து
வனைதருந்தவிசுய்த்தருங்கடன்முறைவழங்கி. (ரு)

பீடுசேருமன்பாலவர்பெருமிதம்வழுத்தி
நீடுமாணையர்லவர்வரவைகிநேரிருப்பக்
காடுபோன்றசெஞ்சடையினர்குண்டிகைக்கரத்த
ரீடுகூறருங்காட்சியரிவ்வுரையறைந்தார். (சு)

துன்றுபைந்துளவோனருட்டிறத்தினுந்துணைவர்
குன்றுபோலியபுயவலிச்செயலினுங்குறுகார்
சென்றுவானுறச்செலுத்தியிச்செகமெலாம்புரக்கும்
வென்றிவாழ்வுகைக்கொண்டனைவேந்தர்கள்வேந்தே. (எ)

தருமம்வென்றியாம்பாவமெய்வலியினைத்நகர்க்குங்
கருமமீதெனக்கட்டுரைத்தனர்கலைகடந்தோர்
பெருமநின்வயினுணர்ந்தனமம்மொழிப்பெற்றி
பொருவிலாய்முடிபுனைந்தரசாளுதிபோந்து. (அ)

என்றுகூறிடவறன்மகனவர்க்கிதையுரைத்தான்
வென்றுமீண்டதுபொய்யலவெற்றியீண்டடைந்து
மொன்றுசிந்தனைக்குவப்பிலையபிமனையுகுத்து
நின்றுவாடுறுதன்மையானிகரிலாமுனிவீர். (௯)

அந்தமாமகவகல்கினுமரியமைத்துனனுந்
தந்தமைந்தர்களைவருமிருப்பினுந்தருக்கே
யுந்துமாங்கவர்தம்மையுமுகுத்துயிர்சுமந்த
சிந்தையாகுலற்கென்னையோவெற்றியாற்சிறப்பு. (௧௦)

ஈதலாதெழுமிரவுசேயெமக்கெலாமுதல்வ
னூதலாலவன்றனைவிரகத்துயிரழித்த
தீதெலாமுளம்போழ்ந்திடத்தியங்கினேற்கென்னே
காதலாற்சமர்கடந்தெனக்கருதுறுவீரம். (௧௧)

பெற்றதாயுளங்கொண்டுதான்பெருதவள்போல
வுற்றபான்மையென்னுளந்தனைநினைதொறுமுருக்குங்
கற்றபான்மையிற்கன்னன்வாழ்கதையெலாமடியேன்
குற்றநீங்கிடக்குறித்திடவேண்டுமென்றுரைத்தான். (௧௨)

அறந்தவாநரபதியிவைபுகன்றிடவீணைத்
திறந்தவாமுனிதெளிவுறப்புகலுவானெடுத்தான்
சிறந்தவாதராயணன்முதற்சீரியோர்பலரு
மறந்தவாவலிமன்னருமகிழ்சிறந்திடவே. (௧௩)

வேறு.

கன்னியம்பருவத்தன்னிற்கதிரவன்வரத்தாலீன்று
மன்னுயிர்ப்பழிக்காவஞ்சிநீத்தபின்வருதேர்ப்பாகன்
றன்னுழைவளர்ந்துசென்றுதறுமறையமுழுவலான்றன்
பொன்னடியரவிப்பெற்றுச்சாபமும்பொருந்தினனே. (௧௪)

மீண்டுகாந்தாரியீன்றவேந்தர்வேந்தோடுநண்பா
யாண்டரசனைத்தும்வாழுமமையத்திற்கலிங்கர்கோமான்
மாண்டகுபுதல்விமிக்கவனப்புடைச்சுபாங்கியென்னுந்
தீண்டருகற்பினுடன்சுயம்வரங்கேட்டுச்சேர்ந்தார். (௧௫)

பையர்விலோதனத்தோன்பரிதிதன்புதல்வனோடும்
பொய்யினுற்சேனையோடும்போய்நகர்குறுகுமுன்னர்
மெய்யுருக்குவியுமெண்ணில்வேந்தருஞ்சிசுபாலப்பேர்
துய்யநற்சராசந்தப்பேர்நிருபருந்தொக்குநின்றார். (௧௬)

ஆங்கவடன்னைப்பல்லோரணங்கனர்கொண்டுவேள்விப்
பாங்கர்மண்டபத்தினெய்திப்பற்பலமன்னர்தம்மை
யீங்கிவட்கறிவுறுத்தியராவுயர்கொடியினேந்தல்
பூங்கொடியுணரக்கூறப்புகுந்தனளவனைநீங்கி. (௧எ)

கண்டராவுயர்த்தோன்சிறிக்கன்னியைவாரித்தேர்மேற்
கொண்டணைந்தகலவந்தகொற்றவர்பலரும்போர்செய்
தெண்டிசாமுகமுமுட்கவெழுந்தபோரரவங்கேட்டு
முண்டகநண்பன்மைந்தன்முந்திவில்வளைத்தான்மன்னோ. (௧அ)

ஓசையாற்சிலர்களம்பினுதையினாற்சிலர்களங்கி
வீசலாற்சிலர்கடன்றேர்வீதியாற்சிலர்கண்மாய்ந்து
பூசலற்றகன்றுராண்டுபுகுந்தவர்கன்னனோடு
மேசறப்பொருதுநின்றுனியற்சராசந்தனென்போன். (௧௯)

வாங்கியவில்லுந்தேருமாற்றியம்பனர்தந்தூண்டத்
தாங்கியபகையினோடுஞ்சராசந்தன்றனதூர்சேர்ந்தான்
றேங்கமழ்கோதையோடுசெம்மலைநகரினுய்த்தான்
வீங்கிருட்பிழம்புநீக்கும்விபாகரனளித்தகோமான். (௨௦)

பெரும்பகைமனதுட்கொண்டுபெயர்ச்சராசந்தனென்போ
னருந்திறற்கன்னன்பாங்கரணிகிப்போர்விளைத்தனான்றிற்
றருங்கணைசிலைகள்வான்றேர்முதலியதாமவேந்த
ரிரும்புவிபாய்ந்துமற்போரேற்றனரியாவுமிற்றே. (௨௧)

ஒருவருக்கொருவர்தாழாதுருச்சமர்பயிலும்போதி
லருவரைத்தோளனங்கசந்தர்கண்டங்கர்கோமான்
பொருவருவெற்றியென்பாற்புக்கதென்றுரைப்பவன்னன்
மருமலர்புயத்திற்புல்கிமாலினிநகர்போய்ச்சார்ந்தான். (௨௨)

அங்கர்கோமானுநண்பரார்த்திடநகரிசார்ந்து
சங்கையற்றிருந்தானோர்நாட்சபித்தனன்மறையோன்றன்றேர்
துங்கனன்முனையிற்பூவிலாழ்ந்திடவமரர்தோன்ற
லிங்கிவன்கவசகுண்டலங்கடானிரந்துதீர்த்தான். (௨௩)

இருவர்தஞ்சாபத்தாலுமீன்றவள்வரத்தினாலுங்
கருதருமமரர்கோமான்கவசகுண்டலப்பேற்றாலுங்
குருகுலக்குரவனருத்தரதிகிரற்குறித்ததாலும்
பொருவில்மந்திரத்தார்கோமான்புகலிழிப்புரையினாலும். (௨௪)

வான்சிலைக்கொருவனனமகபதிமைந்தன்வென்று
தான்சிலைக்கொருவனானிவையெலாந்தடுத்தும்போரி
லான்சிலைக்கணைகடோறுமுறவுறப்புரட்டிநின்றான்
கான்சிலைத்தோளாய்மண்ணிற்கன்னனுக்கெதிரார்கூறாய். (௨௫)

ஈசன்மால்பிரமன்விண்ணோரெண்டிசைப்பாலர்மற்றுந்
தேசிகரிருவர்தந்தசெழுங்கணைபலவுங்கொண்டு
மாசறப்பொருதுநிற்பதரிதெனவெருவிலான்கொல்
வாசவன்மதலையன்றான்வழிச்செயற்கவதியுண்டோ. (௨௬)

என்றுநாரதனும்வீணையிசைமுனிகூறக்கேட்டு
வன்றிறற்றருமன்சிந்தைவாடிக்கண்கலுழ்ந்துபாங்கர்த்
துன்றியபாண்டுதேவிதிருமுகஞ்சுளித்துநோக்கி
நன்றுநீநவிலாதெம்மைநலிந்ததேபோன்றதென்றான். (௨௭)

அன்னைதன்மகனைநோக்கியையநீகேட்டியானு
முன்னமேயுணரேனானேனருஞ்சமர்மூண்டபின்னர்
கன்னனென்மகவென்றுய்ந்துகையறலகன்றுநின்றே
னென்னைநீயிரங்கலூழையெவர்கொலோவிலக்குகிற்போர். (௨௮)

எனவவள்புகலக்கேட்டவுதிட்டிரனிதமுறும
லனநடைமடவார்சிந்தையாழ்மறைவெளியாம்வண்ண
மனமுறச்சபித்துப்பின்னர்வாசவிமுகத்தைநோக்கி
யினியுலகாளவுன்னேலேகுதுங்கானினென்றான். (௨௯)

வேறு.

உதிட்டிரனுரைக்கநரனுத்தரமுரைப்பான்
மதிக்குலமுதித்தெழுவரோதயவினிச்சென்
றதர்ப்படுபுறத்தடவியிற்புகினடுக்கும்
பதிக்கணில்வசைச்சொலதனிற்பதின்மடங்கு. (௩௦)

இன்றுபலவாய்மைகளியம்புவதினென்னே
யன்றுதெரியாதமரயர்ந்தபினரென்ன
நன்றுநுமர்சிந்தையிதுவென்னிலினிஞால
நின்றுதருமின்கள்வனமேகுவனியானே. (௩௧)

கற்றவறிவுள்ளகலைவல்லநரபால
னற்றவரிலிவ்வணமறைந்திடமருத்துப்
பெற்றவனிதென்னைபெரியோர்பிழையெனுஞ்சொ
லுற்றுறுதிபோலவுணர்குற்றநறைதலென்றான். (௩௨)

எண்டிசையிலுள்ளகுலமன்னர்படவெற்றி
மண்டனிபுரத்தலிகல்வல்லவர்குலத்திற்
பண்டைமுறையாய்வருபழந்தருமநீகா
னண்டுவதுகூறுதலறக்கடமையாமோ. (௩௩)

மானமழிவும்பழிசுமப்பதுமனங்கொண்
டனமுறநாமடவியெய்துதலைநாளி
லானபடியாகவெனவேயவணிருத்தன்
ஞானமமர்செய்தபினர்நண்ணலறமன்றே. (௩௪)

மண்ணிலுளமன்னவருமாமுனிவராரும்
விண்ணவருநம்மைமதியாரடவிமேவி
லெண்ணியமர்செய்தகருமத்திலெதிராவே
நண்ணுமுயிர்கோறலெனுநாமமுளபாவம். (௩௫)

தீமையுளதென்றுனதுசிந்தைதனிலுண்டேன்
மாமறைவலாருரையின்வண்ணமகமாற்றி
நேமமுறவைகிநிலமங்கைதுயர்தீரக்
கோமுறைநடத்தலறமென்றிதுகுறித்தான். (௩௬)

தம்பியுரைசெய்தமொழிதன்செவிகொளாமல்
வெம்பியுளநொந்துகலுழ்வேந்தன்முகநோக்கி
வம்பவிழலங்கல்புனைமத்திரையளித்த
செம்பவளமேனியர்தெரிந்திதுதெரித்தார். (௩௭)

எண்ணுதறொடங்குமுனர்பின்னரதையெண்ணி
னண்ணும்வசையாமடவிநண்ணினுலகெல்லாம்
பெண்ணின்மதியாற்பழிபிறந்தபினர்காணிற்
பண்ணுதவமுங்கொடுமைபற்றலதுண்டோ. (௩௮)

ஏதமறநங்குலவியற்கைமுறையாலே
பூதலமளிக்குமதுவேபுகழுமையா
மோதுமமரிற்கொடுமைமூள்வதிலையென்றான்
கோதருமனத்தனதுகொள்கலன்மறுத்தான். (௩௯)

ஆரழலினூடெழுமணங்குகைமுகிழ்த்துத்
தாரொலிசெய்மார்பனருள்கொண்டிதுசமைத்தாள்
வீரமுடையோர்பலர்விளைத்தமரிலெண்ணில்
சீரியரையாருயிர்செறுத்தவர்களன்றோ. (௪0)

நேருவதுதீமையெனினீடுமறநூலிற்
போருறுதலோதுவதுபோற்றுவர்கொன்மன்னர்
சீருறுமகத்தினிகர்செப்புமமர்வென்றோர்க்
கேருறவிருந்துணர்தியீசனிடையென்றாள். (௪௧)

வேறு.

சேலொத்தகண்ணாளிதுகூறத்தியங்கிநின்ற
பாலொத்தநெஞ்சன்படர்நீங்கலனாகவாங்கு
நூலொத்தகேள்விப்பெருந்தாதையுநண்மைமிக்கோர்
சீலத்தவரும்விதுரனுஞ்செப்பவுந்தேரிலானே. (௪௨)

சாராதுநில்லேன்றவத்திற்றரையாள்கிலேனென்
றோராதவரிலெனவோதலுமுவரிவண்ணன்
பாராண்முறைமைபலகோடிபயிற்றப்பற்றா
னீரார்தடத்தினெழுத்தென்னவெழுந்துநின்றான். (௪௩)

கண்டேசுருதிதருமாமுனிகாவல்வேந்தே
பண்டேவெருதுநனிபாரதம்பற்றறுத்தாய்
வண்டேமுரலுமதுமாலையர்வசைவழங்க
தண்டேன்சொரிகானுறநாடுதல்சாற்றுகென்றான். (௪௪)

சுருதிக்கனிவாய்முனிகூறலுந்தோன்றாழ்ந்து
பரிதிக்குரியோன்றனையாருயிர்படுத்தபாவி
கருதிப்புவியிலினிவைகினுங்காண்பதென்னோ
நிருதக்குலமுத்தமமாயதென்னீர்மைநோக்கில். (௪௫)

கைதாழிளைஞர்சதவெண்ணினர்கதறமாய்த்து
மொய்தார்க்குருவைமொழிமாறிமுனைந்துகொன்று
பொய்தாழ்குரவனுயிர்மாற்றிபுகுந்தசுற்ற
மெய்தாத்தனையரெண்ணிலர்மாளவியற்றினேனே. (௪௬)

நேரார்புவியிற்புகுந்தாரெனிநேர்ந்துபோர்செய்
தாராதுவெற்றியடைவார்பலரறமுமஃதே
வாராயெனைப்போலொருவாழ்மனைவைகுவோரைத்
தேராதொழித்தோருளரோவிதுசெய்வதாமோ. (௪௭)

ஆழேனரகிலரசென்னுமவாவிலாவி
வாழேனகல்வேன்வினையென்னைவஞ்சித்ததென்றே
தாழேனெனப்பற்பலவாய்மைகடருமனல்கச்
சூழேதமற்றமுனிநாயகன்சொல்லலுற்றான். (௪௮)

கேளாய்தருமமறைமுறையால்வருகேண்மையன்றி
வாளாவிறந்தோரியாவருமில்லைநீமாய்க்கவல்ல
தாளாண்மையாலுமலையிதுமுன்னிலைசாற்றுமாறெ
னீளாவொருவன்புரிவினையாடலின்னீர்மையன்றே. (௪௯)

முன்னைப்பகையுமவராவிகண்முடியுநாளுந்
தன்னைத்தொடரவவர்பலர்சாய்ந்தனர்சான்றிதற்குப்
பின்னைக்குரியோனவன்மதிசொல்வழிப்பெட்பினின்ற
நின்னைத்தொடராவினையினிச்சஞ்சலநீக்குகென்றான். (௫௦)

ஞானப்பெருமானிதுகூறநயந்துவேந்தன்
கானத்துளவோன்முடிசூடியகாட்சிகொண்டு
வானச்சுடரேவுனைத்துணைக்கொண்டனன்மாசிலாழ்ந்தே
மீனத்துரினுந்தனிக்கதியேறினுமென்றுமென்றான். (௫௧)

வேறு.

பேராருமறன்குமரனிதனைக்கூறப்பேய்முலையுண்டவன்சிறியநகையினோடு, வாராய்நீயெனையன்றிக்கருமமொன்றுமனத்தாலுங்குறித்துணராயாதலாலே, போராருங்கொடுந்தீமையுனக்கென்றேனும்பொருந்தாதுநீயிளைஞர்போற்றச்சென்று, நீராரும்புவிபுரத்திமகுடஞ்சூட்டிநெறிமுறையாலென்வுரைத்தானேயமிக்கான். (௫௨)

கேசவனிங்கிதுகூறநிருபரேறுகேழ்கிளரும்புயமோங்கத்தவிசில்வைகி, நேசமுறுதம்பியர்க்குமினிதுகூறி நிமலமுனிதனக்கிணைக்கைகுவித்துநோக்கி, தேசுடையாயுலகினுரு முயிர்கண்முன்செய் தீவினைநல்வினையையனுபவிப்பரென்னும், வாசகமுண்டேயதனுற்றீமையாவும்வகுத்துரைத்தியானுணருமாறுவென்றான். (௫௩)

சுருதியெலாமுத்தரிக்குமுனிவன்கூறுந்தோன் றல்கேளாகமத்திற்றெருத்தநன்மை, வருதினந்தோறுஞற்றுதனல்வினையாமாகாவழிநடத்தறீவினையாக்கோடியின்னும், பரிதியுதையாத்தமத்திற்றுயிலினுழ்தல்பரதாரங்கருதல்பிறருடைமைகோற, லருகன்மனைதனிலெய்தப்பூசியாமலகங்கொண்டுவெறுத்திருத்தறீமையாமே. (௫௪)

குருமொழியைவழுவல்குருநிந்தைகூறல்குடியடர்ந்தநகரழித்தன்மறைவிற்றுண்ட, லரிவைதனையடியவரையோம்பிடாமையங்கிமனையகத்திடுதலயலார்செய்கை, பெருமைநினைந்துரித்தாகாக்கருமம்பூணல்பேசுறுதான்கொண்டகருமங்கள்விட்டல், வருமுயிர்கடமைவாளாவதைத்தல்வேதமறையவர்கள்பொருள்விரும்பறீமையாமே. (௫௫)

சரணடைந்தோர்தமைக்காவாதிருத்தல்வேதஞ்சாற்றுகடவுளர்ப்பழித்தன்முதலாவுள்ள, பருணிதர்கடிமையெனவுரைப்பதெல்லாம்பாவமாம்பாவம்போன்றிருந்தும்பற்று, திரணமதிலாயுதங்கொண்டெதிர்த்தோனெல்லாவிருக்குணருவேதியனேயெனினுநேராய், மரணமுறுவித்தல்பசுவதைத்தன்முத்திமகத்திடையிலெனவரசேமனங்கொள்வாயே. (௫௬)

என்றுபலமுறைகூறப்பதுமநாபனேந்தலுணர்ந்தனைகுரவன்வாய்மையெல்லா, மின்றுன்மனந்தனிலையமகற்றுயிந்தவிருடிநிலைதேர்வையினிப்புகல்வதென்னே, துன்றுறுநாரதமுனிவன்பெருமையாரேதொகுத்துரைப்போரோர்காதைசொல்வன்கேட்டி, வென்றியுறுமிவன்மாண்புதெரியவென்றேவிளம்பினனுலகனைத்துமளந்துளானே. (௫௭)

வேறு.

நாரதமுனிவரன்றங்கைநல்கிய
வேருறுபருப்பதனென்னுமாமுனி
சீருறுமாதுலனன்புதீர்கலன்
காரணிவரைத்தவங்கருதிவைகினான். (௫௮)

இருவருநெடிதுநாட்டவமியன்றபி
னொருவருக்கொருவரோர்தினத்தினோகையாற்
பொருவருமனத்துடையெண்ணம்பொய்யற
விருவருங்கூறவென்றிசைந்துவாழுநாள். (௫௯)

காட்டிடையருந்தவந்துறந்துகாவலர்
நாட்டிடைப்பயிலுநாள்நவிலுஞ்சுஞ்சயன்
வாட்டிறற்குருசின்மாநகரில்வந்தனர்
தாட்டுணைதொழுதவன்கடன்றந்தானரோ. (௬௦)

வந்ததேனென்னுமைமாதவத்தரென்
றிந்திரனெனவிருந்திறைவன்கூறலு
மந்தணர்நினதகத்தயனம்வைகுதல்
சிந்தைசெய்தடைந்தனமென்றுசெப்பலும். (௬௧)

மகிழ்ந்தனன்றனதுளமன்னர்கோமகன்
புகழ்ந்தனன்றன்மனைகொண்டுபோயின
னெகிழ்ந்தநற்கருணையானிகழுமைம்புல
னகழ்ந்தவர்க்காவனயாவுநல்கியே. (௬௨)

சுந்தரவதனமார்சுதையைக்கூவிநீ
யந்தணர்க்காமுபசாரநல்கெனத்
தந்தனன்பெயர்சுகுமாரிதாபதர்
சிந்தைகள்களித்துறவேவல்செய்யுநாள். (௬௩)

கரும்பினன்மொழிகளுங்குவளைக்கண்களு
மரும்பியவனசமொட்டனையகொங்கையுஞ்
சுருங்கியமருங்குலுந்தூயநாரத
னிரும்பினுந்திடமனமிளகச்செய்ததே. (௬௪)

பாசிழையல்குலாள்பான்மைநோக்கியே
மாசிலாதவனவள்வனப்பின்மாழ்கலாற்
றேசுலாம்பருப்பதனுணர்ந்துசெப்பலை
யாசைகொண்டதையெனவாற்றிக்கூறுவான். (௬௫)

சிந்தையிற்கரந்திடாதேதுதேரினு
நந்தமிலுணர்த்துமாறன்றுநாட்டினேம்
பைந்தொடிவயினடைபைதல்கூறிலை
யந்தணர்நன்னெறிக்கடுப்பதாங்கொலோ. (௬௬)

மாரன்வெங்கணைகளால்வாடுகின்றநீ
யாரமாதினைத்தொடாதிருத்தலாற்றலாய்க்
காரமர்குழலியைக்கைப்பிடித்தபின்
சாரும்வானரமுகமெனச்சபித்தனன். (௬௭)

மாதுலன்றியங்கினன்மருகன்றன்னையும்
பாதலம்புகாவகைசாபம்பன்னினன்
ஏதிலர்போன்றிவரிருப்பவேனையோன்
பூதலத்தடவிகடுருவிப்போயினன். (௬௮)

சுஞ்சயனெனுமிறையுணர்ந்துதூயனுக்
கஞ்சனவிழியைநீர்மகிழ்ந்தளித்தபின்
கஞ்சனும்வாணியுமென்னக்கற்புடை
யிஞ்சொலாளுடன்புணர்ந்தின்பமுற்றினன். (௬௯)

அக்கணம்வானரமுகமருந்தவ
மிக்கவன்மொழிப்படிமேவநாரதன்
மைக்கருங்குழலொடுமண்ணில்வைகினு
னக்கொடிகணவன்மாட்டன்புவிஞ்சவே. (எ௦)

வனப்பினைவிரும்புவர்மடந்தைமாரிவ
டனக்கரும்பதிமுகத்தாழ்வுகண்டபின்
மனத்துயராழ்ந்திலள்கற்பின்வண்மையா
லுனற்கருமகிட்சிகொண்டோங்கிப்போற்றினள். (எக)

ஆயிடையொருபகலருந்தவத்தினேன்
வேயிடைப்படர்கொடுங்கானமேவலும்
போயிடைமடங்கியமருகன்பொய்யில்செந்
தீயிடைச்சிகையெனச்சேர்ந்துகூடினன். (எ௨)

அன்னமாமுனியுடனன்புகூறவித்
துன்னுநாரதனைநீசொற்றசாபமிங்
கென்னைநீமீட்டியென்றிசைத்துத்தானுமுன்
சொன்னசாபந்தனைத்தொலைத்துநீக்கினன். (எ௩)

அவ்வணமிவனுமாங்கவனுக்கோதியே
செவ்வணந்தேசுடைமுகத்திற்சேர்ந்தபின்
கொவ்வைவாயிருந்துழிக்குறுகநோக்கல
ளவ்வயினயலரென்றுயுங்கற்பினள். (எ௪)

பருப்பதன்சாலவும்பயின்றபான்மையா
லருப்பநுண்ணிடையினுளறியக்கூறலு
மொருப்படமணவன்மாட்டுவகைகூர்ந்தன
டிருப்பயின்மாமுனிசிறப்பினேங்கினன். (எ௫)

வேறு.

சீரார்தருங்கொங்கைகுற்றேவல்செய்யத்தெளிந்தோனவண்
பாராள்பவன்றன்புரத்திற்றரித்தாங்குபயில்கின்றநாள்
பேராதமருகன்றனைத்தானிவன்கான்பெயர்ந்தேகவே
யாராதகங்கொண்டுதனிமாமனுக்கீதரைந்தானரோ. (எசு)

மன்னெக்குமன்னுயமண்ணுளுமடல்வேந்தர்வர்க்கத்திலே
நின்னெக்குமாறில்லைநீதந்தகொடியோடுநீள்கானகந்
துன்னக்கருத்துண்டுனக்கென்னதருமாறுசொல்லாயெனப்
பன்னத்திருத்தார்புனைந்தோன்பணிந்தீதுபகர்வானரோ. (எஎ)

சுதனினின்றியானெஞ்சயர்ந்தேனளிக்கென்றுதொழுதேத்தலு
மிதமொன்றுசுவணமலவரநல்கிமாதோடுமிவன்மீண்டபின்
மதனன்னவன்வந்துதித்தான்மலஞ்சொன்னமாய்வீழவே
யிதுகண்டுகொலைசெய்தகன்றூர்கள்வில்வேடரிறைமாழ்கவே. (எஅ)

வந்தாவியுய்வித்தமன்னன் றனைச்சாலமகிழ்வித்தன
னந்தாவிலங்குந்தவத்தோனிவன் றன்மைநவில்கிற்பதே
கந்தார்களிற்றோயுனக்குண்மையல்லாதுகழறாரிவர்
முந்தாதரத்தோடுமுடிசூடுகென் றன்பின்முகில்கூறினான். (௭௧)

மைக்காளமுகிலூர்திமகன்மாபனொடுகூறும்வரதன்சமர்த்
தொக்காரிறந்தெண்ணிலாதோர்படுஞ்செய்கைசூழ்ந்தஞ்சினான்
மிக்காருண்மிக்கானறத்தோடுபுவிகாக்குமேல்வெவ்வினை
யெக்காலுமென்செய்யுமிதின்மிக்கதேகானினிடையேகுதல். (௮0)

ஒருகாதைகேண்மின்கள்வானாடுமகநாதனொடுவைகுநாள்
திருகேதுமுணராதகுருவோதவென் றந்தைதெளிவுற்றதுண்
டருமாதவத்தோரிலதிகன்கொடுந்தீமையகலச்செய்தே
வெருவாதுதண்டம்புரிந்தேயறங்காக்கும்விறல்வேந்தனே. (௮௧)

என்றானதற்கையமிலைமுன்னர்மிதுலைக்கணிளைகாத்தறங்
குன்றாதசனகன்புரிந்தானோர்தண்டங்குறிக்கொண்மினோ
பொன்றாததவமுள்ளவிகிதப்பெயர்கொண்டபுனிதன்வனந்
துன்றாதரத்தோடுவந்தானவன் றம்பிதொழுதேத்தவே. (௮௨)

வனமுற்றகனியொன் றுகொய்தான் றன்முன்னோன்முன்வாராமுனே
புனமுற்றுளோர்கண்டுகூறப்பின்வந்தேபுகழ்ந்தேத்தியே
நினைவிற்பணிந்தானினைத்திந்தவாற்றானெடுந்தீமைவந்
துனையுற்றதிறைபக்கலோதிப்பவந்தீர்ந்துறாயென்னவே. (௮௩)

அஞ்சிக்கசிந்தேகிவிகிதப்பெரும்பேரறைந்தோனடல்
விஞ்சித்தலங்காத்தசனகன் றனொடுகூறமறைவேதியர்
தஞ்சொற்றுணிந்தேகரங்கொய்துவிட்டான் றணந்தேத்தமுன்
கஞ்சப்பதந்தாழ்ந்துரைத்தானுவப்போடுகைகாட்டியே. (௮௪)

தொலைத்தாயருந்தீமைபோதென் றுவிடைநல்குதூயோன்முனே
நிலைத்தேகரம்பண்டுபோல்வந்துறக்கண்டுநெறிமாறிலா
நிலத்தேவரிருவோருமுவகைப்பெருங்காதினீடோங்கினார்
குலத்தோன் றன்மிசைவானினுரவோர்கண்மலர்மாரிகுலவிற்றரோ. (௮௫)

வேறு.

ஆராகினும்பொதுமையோடாயுமாண்மையுடையானாயினாளுமரசன்
சேராதவன்புவியினோர்தீமையும்மல்கதேவேசரும்புகழ்வரா
லோராதிருந்துகடுமாறேனுளங்கருணையூற்றாவுதித்தமுதலே
வாராயினிப்புவியின்மாமாசகற்றவெனமாகாதிபன்புதல்வனே. (௮௬)

ஓதாவியற்கைபுகல்வோராருமுற்றுரையினோடாதரத்துறையவே
வேதாவளித்தவுயிர்நாடோறுமிப்புவியினீடேறவெண்குடைநிழன்
மாதாவெனக்கருணையார்வோனுயிர்த்துலகில்வானோனெனத்தகையமு
தாதாவுயிர்த்துறையயானோபுரப்பன்மகிதானென்றுரைக்குமளவில். (௮௭)

அருமாதவத்தினர்களவன்வாழிடத்தணுகியறைவோமியற்கைபலவுந்
திருமாலருட்குரியபெரியோய்புறப்படெனவிதுவேசெயற்கையெனவே
வருகாவலர்க்குழுவுமடமாதர்தற்குழுவுமணியாழியிற்றுயில்செயும்
பெருமானுமற்றையருமுடன்மேவுற்றனனெர்பெரிதாய்ரதத்தின்மிசையே.

வந்தார்நதிக்குரியவன்சார்பினிற்பலருமவன்றுடனிற்பணிதலும்
சிந்தாகுலத்திவரடைந்தாரெனக்கருதியன்போடெடுத்துரைசெய்தான்
மந்தாகினிக்கரையிருந்தாவிபற்றவர்கள்மைந்தாகதிக்கணுறவே
தந்தாயியற்கடனடைந்தாயினிப்புகுதிதங்காமலத்திநகரம். (௮௯)

போரிற்சிறந்தவர்கள்வீழப்புரந்தவனிபோகத்திருந்திடுவதோ
பாரிற்றவங்கருதுவேனிற்கிலேனெனல்பாயக்கொடுந்தகைமையே
காரிற்கொடுங்கணைவலாருக்கயன்பொறிசெய்காலத்திலங்குமுறைகாண்
வீரற்கறன்சமரின்மோதிப்புரந்தவனிவீடுற்றிடுந்திறனெலாம். (௯௦)

வாராதுதீமையுனைமேவாதுபோதிநகர்மாலோடுமேனையரொடுஞ்
சேரார்பதம்பணியவாழ்வாய்புனைந்துமுடிசீராரறங்கள்வழுவா
தோராலிருந்துலகமாள்வாயெனுஞ்சொன்முடியேற்றுவருந்தவரொடும்
பாராதிபன்றனதுமுதாதைதாடொழுதுபாடார்புரங்குறுகினான். (௯௧)

மதிகண்டபௌவமெனவொலிகொண்டியங்குநகர்வாழ்வோர்வியந்தழகுசெய்
தெதிர்கொண்டறன்குமரனடிமீதணிந்துமுரசெறியோதையுங்குழலியா
ழதிரொன்றுகின்றவொலிகளுமெண்டிசாமுகமுமபர்வெய்தவந்துபுகுதா
முதிர்கொண்டனின்றுலவுமனைமுன்பிழிந்திரதமுறைமண்டபங்குறுகினான். ()

ஓராதனத்தின்மிசைமாலைக்கனிட்டனொடுமுறவேபணித்திடையிலே
யிராதனத்தின்மிசையிருதந்தைமார்களையிருத்திப்பெருந்தவரெலாஞ்
சிராதனத்தின்மிசைவைகப்பணித்தரிவைமாரப்புறஞ்செலவிடுத்
தாராதரத்தினைஞர்கிருபாரியன்பிறருமணியாதனத்தமரவே. (௯௩)

முரசந்தயங்குகொடிநிருபன்பணித்தருகுமுழுமாமணித்தவிசின்மேற்
பரசொன்றுசெங்கையவினனவங்கிருந்தபினர்பரிவாரமும்படைஞரும்
வரசுந்தரந்திகழுமடமாதருங்குழுமிவளர்மங்கலந்தருமிடை
பிரசந்தயங்குகொடைமறைவாணர்வந்தனர்கள்கடலேழ்பெயர்ந்ததெனவே. ()

தொழுதானெழுந்துபலமுறைபாசிகொண்டவர்கடமையாதனத்தொகை
செய்தே, யிழுதானநெஞ்சனவையுறுபோழ்தினந்தணர்களியலோடடைந்தொ
ரசுரன், பழுதாகவம்புரிதல்பலராவிகொண்டனுகுபவனீயெனும்பரிசுசொற்,
றெழுதாவருஞ்சுருதியுணர்வோர்மனங்கருதலிதுவாமெனும்படிசொனான். ()

அக்காலையிற்பலருமைக்காழ்நிறத்தினருமப்போததைத்தெரிதலுந்
தக்கோர்செறுத்தவனைவெப்போடெதிர்ப்பவுயிரற்றனறத்தனையனு
மிக்காரணக்கொடுமைசெப்பாயெனக்கருமுகிற்பாலிருத்தவிழிகள்
மிக்காரின்மிக்கவனுரைத்தானரக்கனிவரைப்போலெடுத்தவிரகே. (௯௬)

வேறு.

முடங்குலையபரித்தேரோனவுயர்த்தோனன்பனிவன்முன்னமீந்த, மடங்
கலபன்வரம்பெற்றான்மறையவர்கண்மனஞ்சலித்தான்மாள்வையென்றே, த
டங்கண்வேதியர்கனற்செய்பார்வையினான்மடிந்தானித்தகையதென்று, கடங்க
லுழுமதயானைக்கோடொசித்தோன்புகன்றிடவக்கவலைதீர்ந்தான். (௯௭)

அவனுடலந்தனையகற்றீயந்தணரைத்தொழுதிறைஞ்சியாசியேந்தி
நவமணியாசனத்துவகையுடனிருந்தானுதிட்டிரனாமம்பெற்றான்
கவலையறுபெருந்தாதைவிதுரனொடுமெண்ணியெல்லாக்கலையுந்தேர்ந்த
தவமுனிவர்தமைநோக்கிமுடிபுனையுநாளென்றோசாற்றுமென்றான். (௯௮)

ஆங்கவர்கடெளிந்துதமதகங்கொண்டுநாளைமுடியமைத்தலென்னத்
தேங்கமழுமலர்மார்பர்சிந்தைகளித்திடப்புகலத்தேறிமீட்டுந்
தாங்குருநன்னதிப்புனலுங்கடற்புனலுமேனையவுந்தருமாறேவி
யாங்கணமேயானையின்மேலெழின்முரசமறைவித்தார்நகர்களெங்கும். (௯௯)

தருமன்மகன்மறையவர்கடமக்கானுநன்னிதியுந்தந்துபோக்கிப்
பெருமிதஞ்சேர்முனிவரர்க்கும்விடைகொடுத்துப்பெருந்தாதைவிதுரனோடு
திருமனைபோயுறவுய்த்துப்புயல்வண்ணற்கோர்விடுதிதேர்ந்துநல்கி
வருதுரியோதனனிருந்துவாழ்ந்தமனைவீமனுக்குவழங்கினானே. (௧௦௦)

துச்சாதனப்பெயரோன்வாழ்ந்தமனையருச்சுனனுக்களித்துத்தொல்லோர்
மெச்சாத்துன்முகன்விகன்னன்விளங்குமனையிருவருக்கும்வியப்பநல்கி
யச்சார்பிலேனையருக்கவரவர்வாழிடஞ்செல்லவளித்துப்புக்கான்
பொய்ச்சார்பிற்செல்லாதபுலனுடையானலனுடையப்புறத்தின்மாதோ. (௧௦௧)

பாராளுங்கொடுங்கோலார்பலருடனும்பணித்துவசன்பட்டானென்று
போராளியுருட்டாழிபொய்த்ததெனக்கதிரவன்மேற்புணரியாழ்ந்தான்
றேராதான்கைத்தலங்கடமதிறையைக்காணாதுதேடித்தேடிக்
காரருமெண்டிசையுங்கதுவவபோற்கருங்கங்குற்கலந்ததம்மா. (௧௦௨)

அச்சமறவிவணிருக்கினழிப்பனுமையெனச்சீறியறனின்மைந்த
னிச்சயமாஞ்செய்தவங்கணிறைமதியினுருத்தாங்கிகரவாணீட்டிப்
புச்சமறத்துரக்குதலிற்பொலிவெய்தியேழ்பொழிலும்புதுநிலாவி
னிச்சைபெறத்தோற்றியதாலிருளோடிக்குகைதொறும்புக்கிரங்கமாதோ. ()

நீத்தார்தமுளந்தனிலுங்கடவுளர்களினுமகிழ்ந்துநிலத்திலுள்ளோர்
கூத்தாடவுதிட்டிரன்றனறவாழிகுணகடலங்குறித்ததேபோற்
சூர்த்தானைகெடுத்தேழுபசும்புரவித்தடந்தேர்மேற்சுருதியோங்க
மார்த்தாண்டனுதித்தெழுந்தான்மாதர்முகம்போற்கமலமலரமன்னோ. (௧௦௪)

தொலைந்தகொடியவரிடத்திற்பயின்றகொடுமைகடவிரத்தோன்றறன்பாற்
கலந்துநலனுறமகிழ்வாள்வாரணங்கள்பொழிதானக்கலவைசாத்தி
மலைந்தவரைத்தனமீதுமாமணியின்வடஞ்சாத்திவனசமாதி
யலர்ந்தமலர்த்தொடையறித்தாதபச்செந்துகில்புனைந்தாளவனிமங்கை. ()

சிறுத்தவிடைபெருத்தமுலைசெய்யவாய்ப்பசுங்கழைத்தோடிருவன்னார்க
டெறித்தயாழொலியினொடுகுறித்தபள்ளியெழுச்சிகடன்செவிசேராமுன்
மறுத்தவிருந்திருவுளத்தான்மலரணைமேற்பொறுத்ததுயின்மாறிநாளு
நிறுத்துகடன்முறைநேர்ந்துபரிதியடிதொழுதெழுந்தானிருபரேறு. (௧௦௬)

தண்புனலுநன்மலருஞ்சந்தனமுநறும்புகையுங்கொண்டுசார்ந்து
பண்புறுதாய்தந்தையடிபரிவோடுபூசித்தவரைப்பணிந்துபின்ன
ரெண்படவேதனையின்றாளடிதொழுதுமற்றவர்களிசைத்தவாசி
கண்படுநல்லருளுடையான்சிரத்தேந்தியவ்வாயில்கடந்துவந்தான். (௧௦௭)

கலகவிழிச்செழுந்துவர்வாய்க்கன்னியர்நீராஞ்சனங்கள்கனகவட்டங்
குலவுபலசதமேந்திக்குறுகிமாற்றினரிப்பார்குவவுக்கொங்கை
நலனுடையார்மங்களப்பாட்டகமியம்பநன்னுதலார்கவரிவீச
நிலவொளிர்வெண்குடைமடவார்நிழற்றவந்தப்புரவாயினீங்கிச்சென்றான். ()

அலம்புரியுஞ்சிலம்படியாரருந்ததியைநிகரானோரங்கணுளர்
குலம்புரியுமடமாதர்நிறைகுடமுமணிவிளக்குங்கொண்டுநேர்வந்
திலங்குமுடிபுனைவானுக்கியன்றாசிபுகன்றகன்றாரிப்பால்வாயி
லுலந்தருந்தோட்டம்பியர்களுற்றடிதாழ்ந்திடமகிழ்ந்தாங்கவரோடுற்றான். ()

விதுரனெடுங்கிருபமுனியுயுச்சனெடுசஞ்சயன்றார்வேந்தர்பல்லோர்
மதுரமொழிகளிற்பரவமற்றவர்கட்கியன்முறையால்வணக்கநல்கி
முதுமறையோர்பெருங்கடல்சூழ்முன்றிலடைந்தவரடிக்குமுடிகள்சூட்டி
யதுகுலநாயகனெய்தவவனருள்கொண்டரசவையிலேகினானே. (௧௧௦)

பேரவையின்புறமெய்திப்பெருமுரசந்திசைதோறும்பெயரக்கற்ற
நாரதனுதியர்சுருதிநவின்றமுனிவரர்தமக்குநண்ணித்தாழ்ந்து
வீரமடமாதிருந்தவிறற்புயத்தோன்யாவர்க்குமினிமைகூறிச்
சீருறுநற்றவிசளித்துத்தானுமணியாசனத்திற்றிகழ்ந்தான்மன்னோ. (௧௧௧)

மங்கலதூரியவொலியுமுழவொலியுநடமாடுமடனலார்க
டங்கியசச்சதியொலியும்யாழொலியும்வேதியர்கடவறாவாக்கிற்
றுங்கமுறத்தருமாசியொலியொடுபோர்மலைதரவித்தோன்றலேத்த
தங்கிருந்தான்குடைநிழற்கீழிருபுறமுஞ்சாமரைகளசைப்பமன்னோ. (௧௧௨)

மணிவண்ணனுண்டிருந்தோர்மதிமுகங்கடொறும்விழித்துமௌலிசூட்டக்
கணிதமிடுமோரையருகடுப்பதற்குள்பொருள்கண்முற்றுங்கணத்தின்முன்னர்
தனிவுறத்தந்திடுமினெனயாவையுந்தந்தனமென்றேசரணிற்றாழ்ந்தா [த்
ரணிதருமாங்கவனருள்கொண்டந்தணர்கள்விதிமுறைகளனைத்துஞ்செய்தார்.

தந்தையுந்தாய்மாரிருவர்தாமுமருகாசனத்திற்றரித்தார்வந்து
கந்தடுவெங்களியானைக்காவலனைமணிபொதுளுமறுகாற்பீட
முந்தவுறப்பணித்தபினர்முறையாலேபொற்கலசமுதுநீராட்டி
யந்தணர்வண்புனன்மாற்றியருங்கலைகள்புனைவித்தாராசியோடும். (௧௧௪)

வாசமுறுபொற்கலவைமுந்நூலார்திருமார்புவயங்கப்பூசித்
தேசுலவுமணிவடங்கள்குழைமுதலாம்பணிபலவுந்திருத்தியைய
மாசறநன்மலரலங்கலமைத்தபினருத்தரிகமீதிணக்கி
வீசுறுவெண்குடைநிழற்றவெண்டரளத்தவிசின்மிசைவிளங்கச்செய்தார். ()

ஆராதபெருங்காதலன்னையருந்தந்தையருமாசிகூறப்
பேராதபெருங்கருணைத்தவமுனிவர்தொட்டுதவப்பெரியோர்சூழ
காராருமுகில்வண்ணன்கருணைபொழிவிழிவழியேகமலைமேவி
பாராளவுதிட்டிரற்குமணிமகுடம்புனைந்தான்செம்பவளவாயான். (௧௧௬)

ஆர்த்தனநான்மறையோசையார்த்தன தூரியங்களெலாமார்த்தார்வானோ
சார்த்தனவெண்டிசையுயிர்களார்த்தனநன்மலர்மாரியவனியெல்லாந்
தூர்த்தனர்பூசுரராசிதுன்னுகடலொலிநாணத்தொடுத்தார்வீமன்
பார்த்தனையாதியர்கண்கள்விழைவுற்றார்யார்மகிழ்விற்பயிலாதாரே. (௧௧௭)

தம்பியர்வந்தடிதாழ்ந்துதவிசின்மிசைவீற்றிருப்பத்தக்கோர்வாழ்த்த
விம்பர்குலக்குரவரெலாமகிழ்தூங்கவாசனத்திலிருந்தபின்ன
ரம்பரவாணர்களிறையுமளகேசனுஞ்சிரங்களசைப்பவீந்தா
னம்பியருமறைவாணர்கலைவாணராதுலர்க்குநிதிகணண்பால். (௧௧௮)

மற்றுமறைவாணருக்குக்கோதானம்பலகோடிவழங்கிப்பின்னுஞ்
சொற்றபலபலதானமுறையாகத்தூயருணர்ந்தளித்துப்போக்கிக்
கற்றவரோடினிதிருந்துபலர்க்கும்விடையளித்தபினர்க்கமழ்தார்வேந்தன்
சுற்றுமடவாருடன்போய்த்தனதுறையுள்புகுந்திருந்தான்றேன்றலம்மா. ()

இவ்வண்ணமுடிசூடியுலகமொருகுடைநிழலிலியற்கையாகப்
பொய்வண்ணமுறாதபடிபுரந்திருந்தான்சாத்தகியும்பூவைப்பூவின்
மெய்வண்ணமுடையவனும் விழைந்திருப்பநாடோறுமேவியாய்ந்து
கைவண்ணக்கதைவல்லானிளவரசாய்முறையோம்பக்களித்திருந்தான். (௧௨௦)

எதிர்த்தவரைத்தொலைக்குதலும்வணங்கினரையீடேறப்புரக்குமாறுங்
கதித்தமகபதிமைந்தன்றனக்களித்தானகுலனுக்குக்கசரதாதி
விதித்தபெருநாற்சேனைபரித்திடுதல்வியந்தளித்தானிளையமீளி
மதித்தருகுநீங்காதவண்ணமுடன்கொண்டிருந்தான்மதியான்மிக்கோன். ()

தழைத்தோங்குந்தண்ணளியார்மாமுனிவர்விடைகொண்டுதணந்தபின்னர்க்
கழைக்காமனனையானக்காமனையின்றருள்பெருமான்கலந்தபாங்கர்
மழைக்கால்கொண்டருள்பொழியும்வதனசெந்தாமரைமலரவந்துசூழ்ந்து
புழைக்கரடமாவனையார்வீடுமன்பாலுறுபான்மைபுகலலுற்றேன். (௧௨௨)

திருமுடிபுனைந்தசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௨௨.

௨

வீட்டுமனைக்கண்டசருக்கம்.

திமோகனஞ்செய்முலைமானார்நிதம்பவலைதேறாதழுந்துமிடையு
மாமோகமைந்தர்பொருள்வாழ்வாலயர்ந்துதடுமாறாமயங்குமிடையுந்
தாமோதரன்கமலமாதாள்பவன்சுருதிதேறாதவன்றனதுதா
ணாமோதவுந்தொழுதுளேகாணவும்பெறுகினாமேயனந்தம்விழியோர். (௧)

ஆராதரன்குமரன்மாலோடுடன்கருதியாகாயகங்கைதருவோன்
சீராரிடங்குறுகிமீள்வானிசைந்திளைஞர்தேர்மீதுடன்புகுதவே
நாராயணன்றனைநெடுமேனோரொடுங்கடிதுநாகாதிபன்றனுழைபோய்
வாராவருந்தவர்கள்சூழாவிருந்தவனைவாகாய்வணங்கினனரோ. (௨)

வந்தானறன்குமரனம்பான்முகுந்தனொடுமென்றேமனங்கருணைமீ
தூந்தாவிருந்திடுமினென்றானிருந்தனருகந்தேயருந்தவர்கள்பா
லெந்தாயடைந்ததரிதென்றேவணங்கியவரின்போடகன்குழுமினார்
கொந்தார்மணங்கமழும்வண்டாரினன்பரிவுகொண்டோதினன்சிலசொலே. ()

நீதான்மொழிந்தபடியாலேயறன்குமரனீள்பார்சுமந்தபுயனாய்
மாதாவைவந்தெதிருமாபோலடைந்துனதுவாயானறம்பலவுறுங்
காதானெனும்புகழ்கொள்வானுயருந்துணைவரேனோரொடுங்கடுகினான்
வேதாவினும்பெரியர்சீராலடைந்தனர்கள்வீறாரருந்தவர்களே. (௪)

வேறு.

விதுரன்கிருபன்சஞ்சயனும்விறலோரடைந்துவீற்றிருந்தார்
மதுரமொழியாலறங்களெலாமுணருமாறுவழங்குதலே
யிதரம்புகல்வதினியென்னையென்றானவினீரமிலை
முதுநல்லறநீயுணராவோமொழிவாயென்றான்முகுந்தனையே. (௫)

ஐயகேட்டிதினதுரையாலறியும்வண்ணமடைந்தவர்க்கு
மையலகலாதினியொருவர்வழங்குமுரையாலுனதுடலஞ்
செய்யகளத்தில்வீழாமுனிருந்தசெயல்போற்புலன்சிறக்கு
மெய்யின்வருத்தமுறாதுனக்கென்வரத்தாலுரைத்திவிரித்தென்றான். (௬)

அனந்தசயனந்துறந்தபிரானளித்தவரத்தாலக்குரவன்
மனந்தன்வாக்குமெய்முதலாம்வருத்தமாறியகங்குளிர்ந்து
வனந்தங்கியமெய்க்கருஞ்சுடரைவனசக்கரங்கள்குவித்திறைஞ்சி
நினைந்தன்பொடுகண்ணுறநோக்கிநேயத்திதனைப்புகல்கின்றான். (௭)

எட்டாக்கனியேமறைமுதலேயெல்லாப்பொருட்கும்பழம்பொருளே
விட்டார்க்குறவேபிரபஞ்சம்வெறுத்தார்க்கயலேவியன்மறையு
ளொட்டாதவனாமொட்டினனாயுயிர்தோறலவியோரிடத்துந்
தட்டாதவனேயாவுணருங்கரமோமலர்த்தாடருவாயே. (௮)

அயிலுமரிபகும்பமுநல்லாழிப்படையுமன்னமுடன்
பயிலுங்கலுழனொடுவிடையும்பரிந்தேபுவியிற்பாரதர்க்காக்
கயிலைமலையுமருந்தேதற்கமலமலரும்பாற்கடலிற்
றயிலுமொழித்துத்தேவகிதன்சுதனாயுதித்தருளவோனே. (௯)

பொருளும்பொருளின்புணர்ப்பாகிப்புலனாய்ப்புலனுன்மயங்குகின்ற
மருளுமாகியம்மயக்கமாற்றுமறிவுநீயாகி
யிருளுமாகியொளியாகியுயிர்களாகியிகபரமா
யருளுமன்புந்தலைவனுநீயானாலுனையாரறிவோரே. (௧௦)

ஒன்றாயிரண்டாய்முக்கவடாயுருபற்பலகால்கைகளாய்
நின்றேதருவாயிருவினையாய்நிகழ்நான்மறையாய்முக்குணமாய்
நன்றாய்த்தீதாய்ப்பலசமையநடுவைந்தெழுத்தாய்யெட்டெழுத்தாய்
யென்றாயாகியீன்றேனேவிளங்காயென்னேவாகரியே. (௧௧)

என்னப்பலவும்வீடுமனுமேந்தல்குறித்துத்தொழுதேத்தத
தன்னொப்பவரில்லாப்பெருமான்சற்றேநகைத்துத்தண்ணளிசெய்
துன்னொப்பவரில்லாப்பெரியோயுனக்கிவ்வுடலநிறுத்திடுநாள்
பன்னற்கருமெட்டாம்வசுவின்பதம்வந்துறுமென்றருள்செய்தான். (௧௨)

தண்ணந்துளவோனுரைத்தமொழிசாரச்செவியிற்புளகரும்பி
வண்ணக்கமலமலர்வழுத்திமாயோனருள்கொண்டருகிருந்த
விண்ணிற்பயிலும்வியாதனொடுவீணைமுனிவனருடாங்கி
யெண்ணித்தருமம்புகல்பவனாய்மருமான்றனக்கெடுத்துரைத்தான். (௧௩)

வாராயரசர்பெருமானேமறைமாமுனிவரருளாலுங்
காரார்வண்ணனெதிருந்தகாட்சியாலுங்கலையனைத்து
மேரார்கரத்திலாமலகமென்னப்புகல்வேனுனதுளத்திற்
றீராவையமுளவனைத்துந்தெரிந்துகேண்மோசிறந்தென்றான். (௧௪)

வற்றாக்கருணைக்கொருமுதல்வன்வழங்கத்தருமன்மகன்மகிழ்ந்து
கற்றார்க்கிறைஞ்சிமுகுந்தனடிக்கமலங்கருதிக்கைகுவித்துப்
பொற்றாள்வணங்கிமூதாதைபுணர்ப்பாலருகிற்புகழ்ந்திருந்து
சொற்றான்றனதுதூயமனந்தொடருமையத்துணிபெல்லாம். (௧௫)

உரைக்குமுலகிற்பலகோடியுரவோர்க்கொருவனரசாகித்
தரைப்பால்கொண்டாங்கவர்வணங்கத்தண்டமியற்றுந்தனிச்சால்பு
நிரைக்குந்தாரோன்றனக்கேதானேர்ந்ததுண்டுயின்பதுன்பங்
திரைக்குமரணமுதற்பலவுஞ்செகத்தோர்க்கொப்பச்செறிவதனால். (௧௬)

இந்தவையநெடுநாளாயிருந்ததுளத்திலிதற்குவிடை
தந்துமாற்றவேண்டுமெனத்தக்கோன்சிறியநகைகாட்டிக்
கந்தமலரினறையனைத்துங்களிக்குஞ்சுரும்புண்பதுபோல
விந்தவரைநேரிருபுயத்தான்விரும்பிக்கேட்கப்புகல்கின்றான். (௧௭)

தேசிற்கருணைவாய்மைகளித்சிறந்தவரசன்புலனைந்து
மாசற்றொருவித்தேவருக்குமவனித்தேவரடிமலர்க்கு
நேசத்தன்புபூண்டொழுகுநெறியன்வலத்தாலுலகனைத்தும்
பூசித்தேத்தும்படியுளவாப்புரப்பனுணர்திபொருவில்லோய். (௧௮)

செப்பமுடையசெழுந்தோன்றற்சிவன்மால்பிரமன்றேவரினு
மொப்பினதிகர்பூசுரரொன்றுளங்கொண்டவர்க்கன்புறுத்துவனேற்
றப்பொன்றிலனாயாயுவொடுதருமம்பெருகித்தருமுயிர்கள்
வெப்புமடையாதேழ்முகிலும்விளங்குமழையுமகம்விறும். (௧௯)

தேசிபொருந்தும்வலிபொருந்தும்சேரார்த்தொலைக்குமுறையுளவா
மாசுநீங்கும்புலனைந்துமுரைந்தவண்ணம்வழிபடுமா
லேசிலரசர்வாழ்வுவலியெல்லாமுலகிலிருக்குணர்ந்த
பூசுரர்களாசிதரும்புணர்ப்பென்றுணர்திபுகழ்மிக்கோய். (௨0)

அனையபான்மையவர்தம்மையரசன்றண்டம்புரிவதுவே
னெனில்யானுரைப்பனிதுகேண்மோவெதிகைக்கொண்டேமாமுனிவாப்
புனையவென்றிவருமிடத்தும்புனிதமறையோர்வதைமுதலாத்
துனிவினதிகப்பாதகங்கண்டொறுக்குமிடத்துமிடறின்றே. (௨௧)

அத்தன்மையராமறையோரென்றறிதியறத்தோயெனப்புகன்று
முத்தன்மீளவாசிரியன்மொழிவேனின்னுங்கேட்டியெனச்
சித்தமீளமொழிகின்றான்றெய்வக்குரவன்றேற்றியுல
கித்தன்மையவாய்த்தந்துபலவிமையோருயிர்களெலாமளித்தான். (௨௨)

உதித்தவிமையோர்மூவுலகுமுலவிப்பாவமறமென்ன
மதித்துப்புரிதறெரியாமன்மடங்கிக்குரவன்றனக்குரைப்ப
விதித்தானிலக்கவத்தியாயமிடையுந்தருமசாத்திரங்க
ளுதிக்குமிடையோருணர்வரிதென்றிருந்தேசூழுந்தொல்விரைவில். (௨௩)

வாசக்கமலத்தயனுதலில்வந்தார்பதினொருருத்திரர்க
ளேசத்தகனையோரயுதவத்தியாயநிகழ்வித்தார்
தேசிற்கடவுளருக்கிறைவன்சுருக்கியதனைத்தெளிவெய்தப்
பாசத்துடனையாயிரமாப்பகர்ந்தான்றன்பேர்படுமாறே. (௨௪)

அமரராசானதைமூவாயிரமாயறைந்தானதைச்சுருக்கி
விமலமுறுநற்புகரென்போன்விரித்தானோராயிரமாக்கிக்
கமலனளித்தவுயிரதனைக்கண்டுதேறுமறிவினரித்
தமதுசிந்தையிருளடையவிமையோர்மால்பாற்சார்ந்துரைத்தார். (௨௫)

மாலுமுலகினறநிறுவுமாறுபொருவன்றனைமனதி
லேலவளித்தான்வாசுவெனும்பெயரோனவன்மண்ணிறையாகான்
சாலத்தவஞ்செய்தொருமகவைத்தந்தானரியக்கருத்தமனை
ஞாலமவனுங்கருத்திலனாயனங்கற்றந்துதவநயந்தான். (௨௬)

அனையவனங்கனெனுங்குமரனகிலங்காத்தேயறநிறுவி
மனையின்மாண்பானோர்புதல்வன்வருவித்தவனுந்தவம்புகுந்தான்
தனையன்பெயர்நன்னிதியென்னச்சாற்றவுடையோன்பகையாறு
மினியபுலனைந்தினுமிடர்ப்பட்டெவருங்கொடியோனெனவிறந்தான். (௨௭)

முனிவர்பலர்வந்திஸ்டியவன்முறைசேர்வலதூருவின்புடையே
கனிசேர்தருப்பையரணியினாற்கடைந்தார்பொல்லாநாட்டமுடன்
றனிவெம்புலிபோற்பெயர்ந்தொருவன்சார்ந்தானவனைக்கிராதர்புவி
யினிதாப்புரத்தியெனவேஷியிருந்தோர்புயத்திற்கடைந்தாரே. (உ௮)

இறந்தோன்வலப்பாற்புயத்திடையினெழின்மேனியுநற்சராசனமுஞ்
சிறந்தமுடியுங்கதிர்ப்பூணுஞ்செய்யவிழியுநல்லருளு
மறந்தவாதகணைத்தூணியார்க்குமமரர்கணைகளுங்கொண்
டுறைந்தபரமாசாரனெனுமுரவோனொருவன்வந்துற்றான். (உ௯)

நிலத்தேவரைக்கண்டதிசயித்துநிலத்திற்பணிந்துநின்றேத்தித்
தலத்திலென்னாற்செயும்பணிகள்சாற்றின்முடிப்பனெனத்தக்கோர்
குலத்திற்சுடரேயரசாகிப்புரத்தியிந்தக்குவலயமென்
றிலக்குந்தேசுமாசியுடனீந்தார்கவித்தார்முடியிவற்கே. (௩0)

மாய்ந்தவரசன்றனதுடலின்மலிந்தவென்பினிடையுதித்துக்
காய்ந்ததாதனவிதானனெனக்கருதும்பெயரோரிவன்றன்பா
லாய்ந்ததேர்ச்சித்துணையானோரடற்பார்க்கவனேயரசானான்
பாய்ந்தபரித்தேர்கரியாளோடொருநாற்படையும்பரந்தனவே. (௩௧)

புரமுமெயிலுமகமுடனேபொருந்தத்தவிசின்வீற்றிருந்துக்
கரவும்பொய்யுமறுபகையுங்கடந்துதருமநெறிநிறுவி
விரவிதண்டமியற்றியவன்வேந்தாயவனிகாத்திருந்தான்
சுரருமுரகரியக்கர்முதற்றெல்லோர்துதிக்கவத்தூயோன். (௩௨)

அவன்றன்வழியிற்பிறங்கடையாமரசர்பலருமவன்றனக்குப்
புவனிச்சுரர்கள்விதித்ததெல்லாப்பொருட்குமாறிலொருபகர்ந்த
வரியதிங்குக்கவர்ந்திடினேசாரும்வறுமைதவறானேன்
வானநிதியும்வளஞ்சுரந்துநன்மைக்கெல்லாமிடமாவான். (௩௩)

மாற்றார்பணியும்பதமூறுதிமன்னன்றனக்குத்தன்னருகி
னேற்றார்வணங்காவிடினவருமிறைஞ்சாரதனாற்றொழவேண்டுந்
தேற்றாதென்னைமாலுருவந்தொன்றாலெனுமாறிதுகண்டாய்
தோற்றாயுலகுக்கரசிலவேற்றமைநன்மைசொல்லாவே. (௩௪)

வருணாச்சிரமமொருநான்குமறையாச்சிரமமொருநான்கும்
பெருமான்முறைமைபிறழாதுநடத்தவேண்டும்பெரிதுமெனத்
திருமாலுளத்திற்குடியிருந்ததிறலோனுரைப்பத்தருமன்மகன்
கருணாநிதியேயவையனைத்துங்கழறுகெனலுமெடுத்துரைத்தான். (௩௫)

வேறு.

தூயவேதியர்முதனால்வருணமாத்தொகுத்த
காயமானவர்தமக்கெலாங்கழறுவர்கற்றோர்
தீயவன்முனிவிலாமையும்வாய்மையுந்திறம்பா
நேயமாதுநல்லருளுமாசாரமுநெறியே. (௩௬)

மறையவர்க்குநன்மறையுணர்ந்திடுதல்பன்மகங்க
டுறைபடுத்நலத்தியயனமோதுதல்சுசியோடு
பொறைமிருந்தனற்றவந்தரல்கடவுளர்போற்ற
லிறைவரைக்கனல்வேட்பித்தலிதெலாமியல்பே. (௩௭)

நெறியின்மிக்கவர்தந்திடுதானநன்னிதிக
ளறிவின்மிக்கவர்பெறவழங்குவதுமாமவர்க்குச்
செறிவுபற்பலவென்னினுஞ்சிறப்புடைத்தரும
மிறைவநற்றவமியுற்றுதலென்றுணர்வாயால். (௩௮)

சுருதிமாமகம்பயிலுதல்சிலமறைதொடர்தல்
விருநிளேடுநாற்படைகளுமளிக்குதன்மேவார்ப்
பொருதழித்தனல்லுயிர்களைப்பொதுமையிற்புரத்த
லிருநிதிக்குழாமீதன்மன்னவர்குலவியல்பே. (௩௯)

அனையதன்மைபற்பலவினுஞ்சிறப்புடையறமா
முனையினென்னலர்முடிப்பதுமுடிபுனைந்தவர்க்குப்
பினையுநல்வசிகர்க்கருமறைமகம்பேண
னினைவதிற்பெரிதாமறனிகழ்த்துதுங்கேண்மோ. (௪௦)

அறம்வழாவகைமுயற்சியோடருநிதியீட்டற்
றிறம்வழாவகையேர்த்தொழில்செலுத்துதல்செப்பு
நிறம்வழானிரைக்கண்புரந்தளித்தலின்னிலத்தின்
மறம்வழாத்தவவசியர்தமியல்பிதேமதிப்பாய். (௪௧)

இத்திறத்தவர்மூவருமுளமகிழ்வெய்த
வத்திறத்தவராருந்தொழில்செய்வதேயறனுங்
கைத்திறற்கொருவருநிகரற்றகாவலகேள்
வித்தகத்தனிச்சூத்திரர்தங்குலமேன்மை. (௪௨)

வருணநான்குடையறங்களியுணர்ந்தனைமற்றும்
பருணிதந்தெரியாச்சிரமங்களும்பகர்வன்
கருணைதங்கியகண்ணினுய்கருதுகென்றெடுத்தான்
றருணமங்கையர்கண்ணளிபடாதகற்றுரோன். (௪௩)

பிரமசாரியமில்லறம்வானப்பிரத்தம்
பரமநல்யதியாசிரமங்களாப்பகர்வர்
விரவுதேசிகன்வழிபடல்வியன்மறையுணர்தற்
பரவுநற்றவமிரந்துணல்பகர்தன்முன்னெறியே. (௪௪)

கற்புமிக்கநற்காதலியுடன்கடன்மூன்றும்
பொற்புமிக்குறப்புரிந்துநல்விருந்துடன்புசித்து
நற்பயன்றருமாறெலாநடுவுடனியங்க
விற்படுத்திறமீரண்டாவதாச்சிரமம். (௪௫)

கனவினோடுநன்காதலியோடுபோய்க்கானிற்
புனிதமாயுறல்காயிலையுண்டிகள்புசித்த
வினையகற்றுறவருங்கலையுணருதலெல்லா
மினிதுனேதுமூன்றுவதாச்சிரமமாவிசைப்பார். (௪௬)

பந்தபாசமற்றோரிடத்துறுவகைபயின்று
தந்ததேதெனினுந்துய்த்துத்தாபமொன்றிலரா
யுந்துதர்க்கமுமுரையுமற்றாமரிற்பயில்வோர்
சிந்தைதங்குநாலாவதாச்சிரமத்திற்றெளிந்தோர். (௪௭)

விரவுமிவ்வனம்விளம்பியநெறிமுறைநாலாச்
சிரமமுந்தகும்வேதியர்த்திறத்தின்மற்றிருவர்க்
குரவுதோளினுயொருவனமடுக்கினுமொக்கும்
பரவுசூத்திரற்கொருவழிமூன்றுமேம்பாடே. (௪௮)

கருதொணுதுநாலாவதாச்சிரமமிக்கருத்தா
விருமையுந்தெரிந்தோர்புகன்றனரெனவெடுத்தே
மருதிடந்தவன்மாமுனிவரர்களுமகிழத்
திருமிகுந்தவீடுமன்சொலத்தருமனுந்தெளிந்தான். (௪௯)

ஐயநின்னுரையமுதினுமின்சுவையளிக்கு
மெய்யவிவ்வனமேதினிவேந்தனுலன்றி
யுய்யவல்லவரிலைகொலோவென்றையமுற்றேன்
செய்யசிந்தையாய்த்தெருளுறச்செப்பெனச்செப்பும். (௫௰)

அரசனேயுலகினுக்குயிரரசனேதரும
மரசனேபெருங்கடவுளுமவனிலையென்னில்
விரைசெய்மாலையாய்மின்னனுர்கற்புமெய்ப்பொருளு
முரைசெய்முன்னரிற்றீர்தருமென்கொலோவுளவாம். (௫௧)

வேந்தனுக்குடற்பல்லுயிர்மிகுந்தருள்பொழியுஞ்
சாந்தனுக்குலகோம்புதறவத்தினுந்தலைமை
யாய்ந்தவத்தகையருளிவர்க்காதரவவனுக்
கேய்ந்தவேனையோரன்பதாதரவெனுமிருக்கே. (௫௨)

என்றுகூறிமீட்டிறையிலாநாடுநல்லிரவி
துன்றிலாவிருட்சூழலென்றுரைத்திடத்தோன்ற
வின்றியாமகன்றெய்துதுநாளையென்றிறைஞ்சிச்
சென்றுதங்கினர்தம்பதிதிவாகரன்மறைந்தான். (௫௩)

ஆதபன்றனியத்தமால்வரைமறைந்துதைய
பூதரந்தனிற்றோற்றலும்பூபதியுணர்ந்து
காதலின்கடன்முடித்தபின்கண்ணனேடிளைஞர்
மாதவத்தினர்யாவருங்குரவனைவாய்த்தார். (௫௪)

அதற்குமுன்னரேதூயர்வந்தாங்குறத்தொழுது
மதர்க்கும்வாள்விழிவானதிமைந்தனைத்தாழ்ந்து
* விதர்க்கபாமுறைவிற்றிருந்ததற்பினர்வியந்து
சுதற்குநித்தவத்தோன்றலுக்கவனிதுசொல்வான். (௫௫)

நென்னனீதருவினாவுகட்குத்தரநிரைத்தே
னின்னுமுன்மனத்திருந்தனவுரைத்தியேலிசைப்பன்
பன்னுபாண்டுவின்பாக்கியத்துதித்தபார்த்திபனே
யென்னமற்றவனஞ்சலித்துளமகிழ்ந்திசைப்பான். (௫௬)

விட்டுமனைக்கண்டசருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௭௮.

அரசநீதிச்சருக்கம்.

சேலாகிச்சோமுகனைச்சிதைத்தவனைமகபதிக்கா
வேலாகிவிருத்திரனைவீழ்த்தவனைமாற்றலர்பான்
மாலாகிப்பாண்டவர்க்குவழித்தூதுநடந்தவனை
நாலாகிப்பலமறையுநவில்வானைப்பரவுதுமே. (௧)

தட்பமுறுதராபதியேதாரணிக்குக்கடவுளென
நுட்பமுணர்ந்தவர்கூறவுணர்ந்திருந்தேனதனுண்மை
விட்பயின்மாநதியீன்றோய்விளக்கினைநின்னருளாலே
யுட்படுமையந்தவிர்ந்தேனினிப்பலவென்னுரைப்பதுவே. (௨)

அவ்வரசனெவ்வண்ணமவனிபுரந்தளிக்குமுறை
யிவ்வண்ணமெனப்புகறியான்றெளியவெனக்கேட்ப
மைவண்ணமேனியன்பொன்மலரடியையகநிறுவிச்
செவ்வண்ணமுறுமேனித்திருக்குரவனெடுத்துரைப்பான். (௩)

குடைவேண்டுங்கொடிவேண்டுங்குரைமுரசின்குழுவேண்டும்
மிடைமாலைமுடிபூண்கள்விரைக்கலவைநலம்வேண்டும்
படைவேண்டும்பார்வேண்டுமரண்வேண்டுங்குடிவேண்டுந்
தடையறுநன்மதியமைச்சுந்தருநண்பும்வேண்டுமால். (௪)

வேறு.

கல்வியுணர்வுஞ்செவியுணர்வுங்கற்றோர்துணையுநல்லறிவு
மொல்குதற்பின்மனையாளுமுவக்குங்கிளையுமுறுதுணையும்
வெல்லுமிடனுநேரலரைவிலக்குமிடனுஞ்செங்கோன்மை
செல்லுமுறையும்விருந்தோம்பிச்சிலம்வழுவாமையுந்தெரிந்தே. (௫)

மடிமைபுகுந்தான்வருமிடர்க்குவருந்தாறுகிநவநிதியும்
படியின்மநநூன்முறையாலேபடைத்துப்பகுத்துபலர்நினைப்புங்
குடிமையுரவோர்தஞ்செயலும்பகைஞர்குழுவின்கோட்பாடு
முடிமையொற்றாலுணரவல்லோன்முதல்வனுலகுக்கவனுமே. (௬)

---

* விதர்க்கம் - நியாயம்.

சாமம்பேதமியற்றானந்தண்டமெனவேபுகல்வவெலா
மேமவேந்தர்க்கெடுத்துரைக்குமியல்பாமிதனிலீறன்றி
சாமமுறுமூன்றினுமாகாநாளிற்றண்டம்புரிந்திடுத
லாமென்றுணர்திமயங்கியஞான்றறவும்பிழையாமியாவினுமே. (௭)

கொடிஞ்சிமான்றேர்கிம்புரிக்கூர்ங்கோட்டுவேழங்கதிப்பாய்மா
நடஞ்செய்தமரென்னலுமகிழுநனிகான்மள்ளர்நாற்படையா
மிடைந்தவில்வேல்வாள்மூன்றாய்விதித்துக்காலாட்களைமுன்னர்ப்
படிந்தமூன்றுவகைகூட்டிப்பகர்வாராரும்படையென்றே. (௮)

பகரும்படைஞர்சிறப்பரசன்பண்பாலுளவாமப்பண்பு
புகலும்பழைமைவழியொழுகல்பொற்பாஞ்சிறியபுல்லறிவோர்
மிகவுமன்போடுளரெனினும்வேந்தன்வியத்தன்முறையன்று
னிகருமுயர்வுமுளவரசர்நீங்கவுதித்தோய்மனங்கொண்மோ. (௯)

இரவிக்குரியமரபினெழுமிறையம்பரிடனெனும்பெயரோன்
பரவிப்பலரும்புகழ்ந்தேத்தப்பாராண்டிறந்துச்சயிச்சிரவப்
புரவிக்குரியோனகர்மேவிப்புலவர்பெருமானருகிருப்ப
விரைவிற்கண்டான்சுவேதனெனுந்தனதுபடைஞன்றனைவியந்தே. (௧௦)

தெய்வமணிப்பூண்வடந்திகழத்திருமாமுடியுமிருகுழையும்
வையமனைத்துமிருளகற்றவாசமாலைநறைவீசக்
கையிற்படையோடொளிதிகழும்விமானமிசைமேல்வரக்கண்டு
பொய்யிற்செறியானற்புதனு * யரியைநோக்கிப்புகல்கின்றான். (௧௧)

மகங்கள்பயின்றுமனுமுறைமைவழியேயுலகினறநிறுவி
யகங்கண்மாசுபடாமலளித்துமடைதற்கரிதாய
சுகங்கொளுனதுபேருலகந்தொக்கானெனதுபடைத்தலைவ
னிகங்கொண்டிவனேதிழைத்தவினையென்றானமரர்க்கிறைபுகல்வான். (௧௨)

ஒன்னார்ச்செறுத்துவிழைந்தாருக்குவப்புநல்கியுலகனைத்து
நின்னுமத்தாற்புரந்திருந்தநிருபநின்னைப்புறங்காணத்
தன்னுதரவாற்சதசிருங்கன்றனையரசுரர்மூவர்பெயர்ந்
தென்னுலடங்கார்குரற்சேனைக்கடல்கொண்டடைந்தேயிகல்விளைத்தார். (௧௩)

மாறாயடைந்தோர்தமைநோக்கிமன்னரரசேநின்னருகிற்
பேறாலுயர்ந்தபடைத்தலைவனிவனைப்பெருமைபெறலாக்கித்
தேறார்க்கடந்துமீடியெனச்சேனைக்கடல்சூழ்ந்திடச்செலுத்த
நூறாயிரவர்க்கொருவனெனநாவலுந்தரத்தோன்சென்றெதிர்த்தான். (௧௪)

விரவுமுகில்களோரேழும்விரிந்தாலென்னக்கரிநிரையு
மரியவரைகளுளவெல்லாமடுத்தாலொக்குந்தேர்க்குலமும்
பரவும்பரியும்பதாதிகளும்பரவையேழுமெனவொலிப்ப
வரவுமசுரர்குமரர்பொருமூற்றமுணர்ந்தானுரைக்கின்றான். (௧௫)

---

* அரி - இந்திரன.

எந்தலருகிற்பலரிருப்பவெனக்கிக்கருமம்பணித்திட்டா
னுய்ந்தபழமைகுலமுயற்சியறிந்தாய்ந்துறுதியுணர்ந்தன்றோ
சேர்ந்தபகைஞர்பெருவலியோர்செறுப்பதரிதாமினிமீளேன்
காய்ந்துவாளாற்றலைதுணித்துப்பலியாகுவன்சங்கரற்கென்றே. (௧௬)

எழுந்தான்றனதுவாகினிவிட்டீசன்கோயிற்கெதிர்சார்ந்தே
கொழுந்தார்சடையோனடிபோற்றிக்கொய்வான்சிரத்தைமுயல்போதிற்
றொழுதானிறைவனெதிரெய்தித்துணைசெய்தவனைப்புரந்தளித்தா
னுழுந்தார்பொழுதினென்னலரையூற்றங்கொள்ளும்வரமுதவி. (௧௭)

மீண்டான்றனதுபடைக்கடலின்மேவிப்பலரோடொன்னலரை
மூண்டான்பெரும்போர்வயமடைந்துமுன்பனருளோடெதிர்கொள்ள
மீண்டானந்தநல்வினையான்மேவிற்றிந்தப்பெரும்பேறென்
றூண்டான்சுவர்க்கமெடுத்துரைப்பவம்பரீடன்புகல்கின்றான். (௧௮)

அரசர்குலத்துக்கணியாவதாற்றன்மிகுமள்ளரைப்போற்ற
லுரைசெய்வதுவென்னவர்பழமையுறுநற்குலத்திலுதித்தோரே
வரிசையுணர்வரவர்க்கெய்தாவாழ்வொன்றுளவோவெனமகிழ்ந்தான்
கிரிசெய்தோளாய்கீழ்மக்கள்கேண்மைகேட்டியெனவெடுத்தான். (௧௯)

வேறு.

ஆசிரமஞ்செய்தருமனென்னுமுனியன்பா
லேசிறவஞ்செய்துற்றனரோர்சாரிடனின்றித்
தேசுறலாலேபலவிருகங்கள்சேர்ந்தொன்றி
மாசறவைகிற்றம்முனிசூழன்மருங்கெல்லாம். (௨௦)

ஆருளுக்கோராகரமானேனருகெய்தி
நேருறநிற்குநீங்கினுநீங்காதுடன்மேவு
மூரல்விளக்குஞ்சூழுமுவக்குமுனிவன்றாட்
பேர்கிலதங்கோவோர்சுணங்கிரவும்பிரியாதே. (௨௧)

கண்டுகருத்தானற்புதமெய்துங்காலத்திற்
பண்டுதுரக்குநற்கலைதாவிப்படர்செய்ய
மண்டுபயத்தோடம்முனிபக்கல்வரநோக்கித்
தண்டுதரித்தோன்கருணைசுரந்தான்றவமோங்க. (௨௨)

வந்தெதிர்சிறுவான்கலையைப்போல்வடிவாக்கி
முந்தியதைப்போர்வென்றிமுடித்தான்முனிவேறோர்
நந்தலில்வேங்கைநண்ணியடர்ப்பநாயாண்டுச்
சுந்தரவேங்கையாயதைவென்றேதுதிபெற்ற. (௨௩)

மாமதயானைவந்திதைமோதமறையோனன்
மாமதயானையாயதைவென்றேவருபோதிற்
றாமதபஞ்சானனமெதிர்துன்னத்தானந்தத்
தாமதபஞ்சானனமெனலாகித்தாழாதே. (௨௪)

வென்றதுமீளச்சரபமெதிர்ந்தேமேலெய்த
வென்றதுதானுஞ்சரபமதாகிமிளிர்போதிற்
சென்றடவல்லதோருயிரில்லாச்செருக்காலே
சென்றடவுன்னித்தம்முனிதன்னைந்திறனேரளி. (௨௫)

ஆங்கவனோர்ந்தேமுன்னையநாய்நீயாகென்னப்
பாங்கரமுன்னருருவினிருந்தபரிசேபோ
லோங்கியநல்லோர்சிற்றினமானோருடனன்பு
தீங்குறுமென்றேசெய்கலனென்றுனதிசெம்மல். (௨௬)

இன்னுங்கேண்மோமன்னர்புரக்குமியனாட்டிற்
பன்னுஞ்சாலிகன்னல்வபற்சேர்பழனங்க
டுன்னுநதிக்காலூறல்கனன்னீர்த்துறையாவு
மன்னுவதன்றேவளனெனமுன்னோர்மதிகொண்டார். (௨௭)

கார்வளனோடுமானதிநீர்பாய்தருகால்கள்
நீர்வளனோடுநீதிமயங்காநெறிமன்னர்
பேர்வளனோடுபற்பலபண்டம்பெரிதுண்டாப்
பார்வளமென்னப்படுமிதுவேறோர்பயனின்றே. (௨௮)

கழியாவாகிக்கைதவவொன்னார்களினூற்ற
லழியாவாகிமாரிவறழ்ந்தாகுலஞான்று
மொழியாவாகிப்பற்பலநாட்டிங்குறுபோது
மிழியாவாகியேற்றமளிப்பததுநாடே. (௨௯)

முசித்தோர்தீமைமுற்றவகற்றிமுறையாலே
பசித்தோர்தீவெம்பசியையகற்றிப்பிணிபற்று
வசித்தேவேறோர்சஞ்சலமற்றோர்வாழ்நாடு
பொசித்தேதானேம்புலனையடர்த்தோர்புகழ்நாடு. (௩௦)

வேறு.

மண்ணுள்ளதுவரையுள்ளதுகாடுள்ளதுநீர்சூழ்க்
கண்ணுள்ளதுபலவாமரணைவரேற்பினுமாகா
வெண்ணுள்ளதுப்புள்ளதெழிற்பண்டமனைத்தும்
பண்ணுள்ளதுயர்ந்தாழ்ந்ததுபதிசூழ்தருமெயிலே. (௩௧)

அளகைக்கிறையிவர்வாழ்வினிலதிகங்குறையெனவே
வளமிக்குயர்குடிமைக்குரியவர்வாழ்வுறலுண்டேற்
புளகித்திடுமரசற்கிதுபோதும்வலியிலையா
விளகிச்சொரிதருதண்ணளியிருகண்ணெனவுடையோய். (௩௨)

பொய்யானவைபுறமேபடவுலகங்கள்புரப்போன்
மெய்யானவமைச்சன்றுணைகருதாதுவியப்போ
மையார்விழிமடவார்வதுவையின்முன்மகவீயுஞ்
செய்யாவொருவினையொத்தசிறப்பென்பர்தெரிந்தோர். (௩௩)

ஆயிற்கலைவல்லோன்முறையறிவோனிறையறிவோ
னேயிற்புரவலன்முன்வினையிற்ருலினிமற்றென்
ருயிற்றனையரினூருளன்புக்கிவர்தக்கோர்
வாயிற்புகல்வதுவென்னவர்மனதேகரியனரே. (௩௪)

வே று.

வேட்டவன்வேட்டவடம்மில்வேறுபா
டட்டியசெய்கையினிறையமைச்சனிற்
காட்டியசெய்கைகள்கரவுண்டாகுமே
ளூட்டுவர்நரகவாழ்வென்றுநற்றவர். (௩௫)

கோசலநாடெலாம்புரக்குங்கொற்றவன்
மாசில்கேமதரிசிநாமன்வாழுநா
ளாசுடைக்கொடியமந்திரிகளாயுநாற்
றேசிலார்சேர்ந்தவன்சீர்த்திநீக்கினூர். (௩௬)

மழைவளங்குன்றியுமாதர்கற்பினிற்
றழைவளங்குன்றியுந்தக்கபண்டங்கள்
விழைவளங்குன்றியும்விளைவுகுன்றியும்
பிழைவளம்பெற்றதுபேசற்பாலவே (௩௭)

கொற்றவன்றந்தைபானன்புகொண்டுள
மற்றிலாமுனிவனந்தொடர்ந்துபற்பனு
ளூற்றபின்மைந்தன்வாழுறுதிதேறவே
கற்றகாலவனெனுங்கருத்தன்றேன்றினன். (௩௮)

உழையரும்படைஞருமுறுதிநண்பரும்
பழையவேதியர்களும்பயிலும்பாங்கெலாம்
விழைவுறச்சென்றுசென்றேர்ந்துவிம்மித
வெழவெழக்காகமொன்றியற்றியேந்தினன். (௩௯)

வருணவான்காகமார்மாட்டுங்காட்டியே
பருணிதரறிகொணுப்பண்பனைத்தையு
மிருணிறநிகழ்வெலாமியம்புமிங்கிதென்
றருணமேனியனகரறியக்கூறினன். (௪0)

ஞாலமேனிகழ்விறப்பெதிர்வநற்றிரி
காலவேதிப்பெயர்காட்டுங்காகமென்
றேலமிட்டரசவைக்கெய்தியோதிமின்
டேலவேயிருக்கையினெய்திவைகினன். (௪௧)

கரவுறுசிந்தையரெவருங்கைகலந்
திரவினிற்காகமீண்டிருக்கொணுதென
வரவினுஞ்சிறியாங்கதைமுருக்கியே
விரைவின்மீண்டனருணர்வரியவிறினல். (௪௨)

காலையிலருமுனியுணர்ந்துகாவலன்
சோலையிலுறுமிடந்துன்னியோதினான்
வேலையிலுலகெலாம்வெறுக்குமாறுநீ
வாலையிலறநெறிவழுவினாயெனா. (௪௩)

ஏனையர்துன்மதியிருந்தபாங்குமத்
தானையர்காவுமுன்சார்ந்ததீங்குகள்
மானையர்கண்ணினர்மரபுமாமறை
யூனமாமியல்பெலாமுணரக்கூறியே. (௪௪)

அறன்வழுவறவுனக்கெய்துமாடக
மறன்வழுவுறக்கரந்திருக்குமந்திரி
திறனறிந்துணருதியென்றுசெப்பியே
புறம்வழாக்காகத்தின்புணர்ப்புங்கூறினான். (௪௫)

தன்னுடைவரவையுமுணர்த்தித்தக்கவன்
மன்னுடைமாமனந்திருத்தமற்றவ
னன்னிலைபுணர்ந்தபின்னாடொறுங்கடிந்
தன்னவர்நண்பெலாமறிந்துநீங்கினான். (௪௬)

மாதவன்றிருவடிநீழன்மன்னியே
காதலையுடையவாக்களையறுத்தபின்
றீதறுசெய்யகோலோச்சித்தேவரு
மோதவீற்றிருந்தனனொருவனோடுமே. (௪௭)

நன்னெறிவிளங்கவுநாடெலாமறை
துன்னியதருவையர்கற்புந்தொக்கதான்
மன்னுமூவுலகமும்வழங்கச்சீர்த்திமற்
றென்னலர்தாழவாழ்ந்துவந்துவைகினான். (௪௮)

கமைச்சரோருகனிகர்கலைவல்வேந்தனு
மமைச்சனல்லறிவினாலன்றிமேம்படான்
சமைச்சவான்றவத்தினாய்தரித்திசிந்தையூ
டிமைப்பிலார்வியப்பரென்றெடுத்துக்கூறினான். (௪௯)

நரபதிக்குழையர்நல்லறிஞர்வாய்க்கினும்
புரபதநண்புடைப்புனிதர்வேண்டுமாற்
பரபதமுணர்ந்ததாபதரில்வேந்தரிற்
கருதுமேனையரினுங்கருதலேற்பதே. (௫௦)

படைவலிபுயவலிபரித்தஞான்றினு
மிடைதுணைவலியிலார்க்கீறுண்டாகுமாற்
றடையறவோரிதியாசஞ்சாற்றுவன்
மிடைபுதுதெரியலாயுணர்திமேம்பட. (௫௧)

என்றிதுகூறினனிணையில்வீடும
னென்றுமீண்டுயர்ந்துளதொட்டகந்தவந்
துன்றியதனேககாட்டோற்றிநான்முக
னின்றனன்வேண்டுமாறளிக்குநீர்மையான். (௫௨)

சுந்தரவினமாந்துளங்கிலொட்டகங்
கந்தர நாறுயோசனைகடக்குமா
லந்தரத்தவர்நகையாடப்பெற்றதாற்
றந்தரத்தினையறத்தனிதிரிந்ததே. (௫௩)

ஒருதினம்பெருமழையூழிஞான்றெனத்
தருதிறலாலிடர்சார்ந்துமாழ்கியே
கருதுமோர்வரையுழிக்கலந்தபூழைவாய்ச்
சொருகியதிதன்கழுத்தளவுந்துன்னவே. (௫௪)

அப்பெரும்பூழையுட்டங்கிவைகிய
செப்பரும்பசியுடைச்சம்புகந்திரண்
டொப்பறக்கந்தரநரம்பையூறுசெய்
திப்பசிதணிந்ததாலிறந்ததொட்டகம். (௫௫)

மெய்வலிமிகுந்துநல்வேதியன்வரச்
செய்தவமிருந்துமோர்துணைதிறம்பலாற்
கைதவநரிகளாற்கண்டதாகலா
லுய்திறத்தவர்க்கெலாமுதவிவேண்டுமே. (௫௬)

பொருவரும்வில்லியிப்புவனமூன்றையும்
வெருவரமுடிக்குமோர்வீரராகவன்
றிருவருகவிக்குலஞ்சேர்ந்துமேவினு
னிருவருந்தனிச்செலாவிதனையோர்தியே. (௫௭)

ஆதலாற்றுணைவலியரசுக்கேற்பதாங்
கோதிலாயுணர்தியக்துணையின்கூறுபா
டோதலாந்தகமையன்றுணர்ந்துகோடலே
யேதமாநெறிக்கடைத்திடுகபாடமே. (௫௮)

ஆரியர்தவம்பயிலறன்வழாதகோற்
சிரியர்நூலுணர்செல்வர்நண்பினுற்
காரியம்பிசகுறுவென்றுகாட்டினர்
தேரினும்பூரியோர்நண்புதிமையே. (௫௯)

கேட்டியோர்காதைமுன்கிளர்த்துகோசல
நாட்டினைப்புரந்தவனன்புதங்கிய
மூட்டுதிக்காலவன்மீண்டுமுந்துபோர்க்
காட்டிடையருந்தவங்கருதிவைகினுன். (௬0)

நன்புடைக்காவலனாடுகாக்குநா
ளெண்படுவிதேகநாட்டிறைவெகுண்டெழாப்
பண்படுபோர்பலபயிற்றிவெற்றியுங்
கண்படுநகரமுநாடுங்கைக்கொளா. (௬௧)

மாற்றலனாற்றல்சால்வலியிற்சிந்திமெய்
தோற்றவனடவிகடுருவியோடியே
போற்றிமாதவம்புரிபொருவில்காவலர்
காற்றலந்தொழுதுகட்டுரைப்பதாயினான். (௬௨)

அய்யனேவிதேகநாட்டரசுகைக்கொள
மெய்வலியொடுபுவியிழந்துமேவினே
னுய்யுமாறருள்கெனவுகந்துகாவலன்
மையறுசனகனைவருவித்தானரோ. (௬௩)

ஈட்டுறுபுகழ்க்கடற்கீறுகாண்கலாத்
தாட்டிகன்றனைத்தெறுதகைமைநக்கதே
மீட்டுநீயவனொடுவிழைந்துவாழ்கென
பூட்டிநண்புய்த்தனன்பொய்யில்சிந்தையான். (௬௪)

மாமுனிசொற்படிமன்னனைத்தன்னகர்
கோமுனிகொண்டுசென்றளித்தகொம்பினைத்
தாமுறைமன்றலிற்றந்துதன்புவி
காமுறக்கைக்கொளக்கனிவினீந்தனன். (௬௫)

தன்னகர்கோசலத்தலைவன்சார்ந்தணி
முன்னரினியலுறவாழ்வுமுற்றினான்
மன்னுமாரியர்துணைமாட்சியாமெனப்
பன்னிமீட்டொருமொழிபகரலாயினான். (௬௬)

போற்றியபுரவலனன்புபூமிசை
தோற்றினர்க்குறுதிசூழ்விப்பதாகுமாற்
சாற்றுபாரியாத்திரிச்சயிலத்தூடொரு
தோற்றியவேடனுண்டுளங்கொடேய்மையான். (௬௭)

தாட்டிகனாற்றலனாக்கஞ்சார்ந்தவன்
பூட்டுவிற்கரத்தினன்பொய்யுணர்ந்திடான்
காட்டினன்னெறிபிழைத்திடாதுகாக்குநாண்
மாட்டுநண்பாயினார்வனத்துளோரெலாம். (௬௮)

எங்களுக்கிறைவனீயாகியாமெலாம்
பொங்குதீநரகின்வாய்ப்புகாதுகாக்கவென்
றங்கவரிரப்பமற்றவர்க்குக்கூறுவான்
பங்கயமலர்விழிப்பச்சைமேனியான். (௬௯)

வேறு.

அறந்தெரியாதநீரும்மையாவரே
சிறந்தளித்திடுபவர்செப்பும்வாசக
மிறந்துடலவியினுங்காப்பதேற்பதென்
மறம்வழாதுமக்கியான்மன்னனுவனே. (௭0)

வேறு.

என்றுதங்குலத்தவர்களுக்கிவனெடுத்தியம்ப
நன்றிதாமெனத்தொழுதவருடன்படுநாளிற்
குன்றிலோர்புடையிருந்தவர்க்கியலெலாங்குறித்தான்
வென்றதூயகப்பவ்வியனெனும்வரவேந்தன். (௭௧)

சுரபிதன்னையுந்தூயவந்தணரையுநமது
மரபினோரெலாம்வழிபடற்குரியர்மாருகி
யுரபதங்களிற்புடைப்பினுமொறுக்கினுங்காயார்
பரபதம்பெறக்கருத்துளோர்க்குரித்தெனப்பணித்தான். (௭௨)

தாயைத்தந்தையைக்கடவுள்போற்பூசனைதந்து
நேயத்தோடவராணையினொழுகுதனெறியாஞ்
சேயைத்தன்மனையாடனையன்பொடுசெறித்த
லாயத்தோடுணலறப்பெருங்கடமையென்றறிவீர். (௭௩)

அமர்செய்போதலான்மறமுறலறனலகண்டீர்
நமர்களுக்குயிர்காதனங்குலத்தொழிலேனுந்
தமர்பசிக்களவன்றியுமுருக்குதறகாவா
நுமர்கருத்தினிற்கொண்மினேபொய்நுவலாதீர். (௭௪)

என்றுகூறினனிவ்வணமவர்சிரத்தேந்தி
யன்றுதொட்டவனேவலினொழுகினரன்றோ
துன்றுவேடர்கடீவினைக்கடலெலாஞ்சுவறிச்
சென்றுளார்கதியிறைவனுநற்கதிசேர்ந்தான். (௭௫)

அரசர்நண்பினாலானவாறறைந்தனமின்னு
முரைசெய்வேன்கலையுணர்வுடையோர்கணன்புறுதி
விரைசெய்தாரினுய்ப்பெறும்பயன்கருதிடாவிறலோர்
புரைசெயாதநண்பென்றுளங்கோடிநீபுகழோய். (௭௬)

குலத்திற்றாழ்ந்தவரென்னினுங்கோமுறையுருவ
நலத்திற்றாழ்ந்தவரென்னினுநற்குணமுளரேற்
றலத்திற்பேரறிவுள்ளவர்சார்ந்துநண்பாவார்
நிலத்திற்றேருருட்கச்சுடையாணியைநினைந்தே. (௭௭)

நற்குணங்கள்மேற்பட்டவர்நண்புடையோரைச்
சிற்குணத்தவர்தேறுவரவர்பெறுஞ்செல்வ
மெற்குணத்தரிதவருடைப்பகைகிடைத்திடினுஞ்
சற்குணத்தராய்த்தியருந்தனிக்கதிசேர்வார். (௭௮)

அன்னபான்மைமீதெரியுமாறொருகதையறைவன்
பன்னுமோர்பெருங்கானிலோர்பழுமரத்திடையிற்
றுன்னுகின்றதுதுணையுடன்கபோதமச்சூழ
லுன்னுமுன்னர்வந்தெய்தினனொருவன்வில்வேடன். (௭௯)

எடுத்தவில்லினன்றொடுத்தவான்கணையினனிகலாற்
கடுத்தநெஞ்சினன்கனற்பொறிமலிந்தசெங்கண்ணன்
உடுத்தபாசடைக்கலையினன்வார்வலையுட்பட்
டடுத்தயாவுங்கொண்டெமன்படர்போலவந்தார்த்தான். (௮௰)

காதகப்பெயர்வேடனக்கபோதம்வாழிடங்கண்
டாதரத்தொடுகண்ணிகோத்தவன்மறைந்திருப்ப
மேதகப்படுபெண்புறாப்பட்டதவ்வேடன்
சாதகத்தினாற்றன்னுழைச்சேமத்திற்றரித்தான். (௮௧)

பாதபத்தினைபொருவியேபார்புகுமளவி
லாதபக்கரமறைத்துவானாலிகள்சொரிய
நாதபக்குளிரானுடனடுநடுங்கிடப்போய்
பூதலத்திடைவிழுந்தனன்புன்றொழிற்றலைவன். (௮௨)

செய்யகாலுடைத்தேவிகைப்புக்கதுதெளியா
துய்யவாண்புறாவோடியாய்ந்தெங்கணுமுலாவி
மையலாற்றொணாவாற்றினாற்கூவியதன்றோ
கையகன்றநற்கடவுளர்கலுழிகண்கால. (௮௩)

அறிந்திலேனொருசிறுபொழுதளவையினேனும்
பிறிந்தபான்மைநின்பேரறிவுரங்கெடப்பெயர்ந்தா
யிறந்துளாய்கொலோவுயிருடனிருந்துளாய்கொல்லோ
மறந்துளாய்கொலேவென்னையென்றொலித்ததான்மருண்டு. (௮௪)

அனையவாசகங்கேட்டதுபகலுமாண்டகையே
வினைவயத்தினால்வேடனுக்கீண்டுகைப்புக்கே
னெனைப்பிழைத்தலுக்கயர்ந்திலையெய்தினேன்றனக்குப்
புனையுமூதியம்புகுவதேபுந்திகொண்டருள்வாய். (௮௫)

உறங்கிமீளவும்விழித்தலொடொத்தபுன்பிறவித்
திறங்கடேர்ந்தநீதெளிவறத்தியங்குதல்கடனோ
யிறங்கிவீழ்ந்தவில்வேடனுக்கிசைந்தவேளாண்மை
யறந்தபாவகையாற்றுதியவனமக்கதிதி. (௮௬)

உன்கண்காணயானுயிர்விடற்குரியளாமியற்கை
யென்கண்காண்கிலனெமர்புரிதவமெனக்கொண்டேன்
வன்கணின்னுழையிலையகம்வாய்த்தவில்வேடன்
புன்கண்காண்பதுபோதுமோவில்லறம்பூண்டோய். (௮௭)

என்றுகூறலுமனையவட்கிரங்குதலொழிந்து
குன்றவேடனைக்குறுகிமற்றிவ்வுரைகுறிக்கு
மின்றுவந்தியாமிருந்திடனெய்தினையையா
துன்றுநின்றனக்கேதுகொல்யான்செயுந்தொழில்கள். (௮௮)

உரைத்தவாறுசெய்தளிக்குதுமுவந்தருள்கென்ன
நிறைத்தவேடனுமென்குளிர்நீக்கிநீரென்னிற்
றரைக்குளுநியநிகரிலையென்னலுஞ்சார்ந்தே
விரைப்பிலிந்தனங்கொணர்ந்ததவ்வலகினால்விகங்கம். (௮௯)

காட்டழற்கொடுவந்துவைத்தருஞ்சிறைக்காற்றான்
மூட்டமற்றதுமூண்டுயர்ந்தெரியெழுமுதியோன்
றாட்டிணைக்கரமிரண்டுடற்குளிரெலாந்தவிர்ந்து
நீட்டிமெல்லெனவெழுந்தனன்பெரும்பசிநிமிர. (௯௦)

கண்டுவான்சிறைக்கபோதமக்கருத்தினையுணர்ந்து
பண்டுசெய்தநல்வினையெனப்படுமிவனென்றே
கொண்டுநின்பசிகுறைந்திடவெனதுடற்கொடுப்பன்
மண்டுதீத்தலைவருந்தலையருந்தெனவழங்கி. (௯௧)

வீழ்ந்துமாய்ந்ததுவேடனுமற்புதமெய்தி
யாழ்ந்தவெம்பசிக்கருந்தியீதறிவுடைத்தென்றே
போழ்ந்துதன்னுளஞ்சுடச்சுடப்புக்கபெண்புறவை
வாழ்ந்திருத்தியென்றகற்றினன்மற்றதுபுகலும். (௯௨)

ஐயகேட்டிநீயதிதிநின்பசிக்குணவானா
லுய்பலாம்பிறந்தோரெலாமொடுங்குதறகவே
செய்பசிருடைக்கொழுநனைத்தீர்ந்திரேனுலகிற்
கையினாலெடுத்தருந்தெனக்கனலில்வீழ்ந்ததுவே. (௯௩)

இறந்துநீங்கலுமிருவருமிமையவருடல்கொண்
டுறந்தமாமணிவிமானமேன்மணியணியொளிரச்
சிறந்ததேவியும்புமானுமாய்ச்சேணுலகடைந்தா
ரறிந்துசிந்தைசெய்தவனிமேல்வேடனுமயர்ந்தான். (௯௪)

நன்மைசெய்தவர்நன்மையேயெய்தினார்ஞான்றும்
புன்மைசெய்தயாம்புன்கதிபுகுவதுபொய்யோ
வின்மைவேண்டிலேன்வேண்டிலேனிவ்வுடல்வீயுந்
தன்மைவேண்டுவன்றீவினையனைத்தையுந்தவிர்ப்பன். (௯௫)

நிலத்தின்வண்மையேநீரெனுமியற்கையானீசக்
குலத்தின்வண்மையாற்கொலைத்தொழிற்காலையமானேன்
வலத்ததீவினைப்பாலவாய்மானரகென்னும்
பிலத்திலாழ்வதிலாருயிர்விட்டுதல்பெரிதே. (௯௬)

செம்மைதங்கினோர்திருவடிவிழிப்புலன்சேரி
லிம்மையேகதியெய்துவரெனப்புகல்வழக்கா
லம்மமாசிலாவருங்கபோதங்கள்போலடையின்
வெம்மைதீரும்யான்மேற்கதிபுகுவதும்வியப்போ. (௯௭)

என்றுகூறினனெழுந்தனன்காட்டழலிடையிற்
சென்றுவீழ்ந்துயிர்துறந்தனன்றேவரூர்புகுந்தான்
மன்றன்மாலையாய்பகைமையைப்பெறுகினும்வாய்க்கிற்
றுன்றுநற்கதியவர்கணன்பியற்கையார்சொல்வோர். (௯௮)

பயிற்சிநன்மொழிகருதலாலொருதினம்பழகின்
முயற்சியானுயிரளவுநட்பாகுவர்முடிவேக்
துயற்சியெய்துமாறுன்னுவரோர்ந்துநண்புறுத
லியற்கையாமின்னுங்கேளியையாப்புன்னட்பிசைப்பேன். (௯௯)

வனத்திலோர்வடமரனுடைமூலத்தின்வளைப்பா
லினத்தைநீங்கியோரெலிதனித்திருக்குமாங்கதன்பேர்
மனத்தினேரிலாப்பலிதனுமற்றதன்சாகை
முனைக்கணுண்டுரோமசனெனும்பூசைமுற்றினத்தில். (௧௦௦)

அந்தமால்வனத்தருளிலாநீசன்வந்தணுகி
யுந்தியாருயிர்காதுவனாடொறுமொருநா
ளிந்தநீசன்மார்ச்சாலமாண்டிருப்பதையோர்ந்து
முந்துசென்றொருவலையுணராவகைமுடிந்தான். (௧௦௧)

இழிந்துசென்றதாலுரோமசனெனும்பெரும்பூசை
கழிந்தகானெலாந்திரிந்துமீண்டிருந்திடங்கண்ணுற்
றழுந்தியேவலைப்பட்டதாலறிந்திலாமையினான்
மழுங்கிமங்கையர்வலைப்படுமறிவினைமான. (௧௦௨)

பதைக்கும்வாய்விடுமுயிர்த்திடும்பலதிசைநோக்கு
முதைக்குங்கூரியவுகிர்களாலுறியினைப்பறிக்குஞ்
சிதைக்குமேனியைச்சிறுநற்றெய்வதம்போற்றும்
வதைக்குநீசனும்வருங்கொலோவெனமதிமருளும். (௧௦௩)

அன்னகாலையிலவ்விருக்கத்தடிமுழையிற்
றுன்னுறும்பலிதன்றனைதுரந்தொருகீரி
பின்னுமோர்பெருங்கூகையும்பின்றுரந்திடலாற்
றன்னிலுன்னியேயுரோமசனருகுசார்ந்ததுவே. (௧௦௪)

கண்டுநீங்கியகூகையுநகிலமுங்கானிற்
பண்டுமேவிடஞ்சென்றதப்பலிதனும்புகலு
முண்டுகாரியமுனதுயிர்காப்பனிவ்வுறியை
விண்டுநீங்கிடக்கறித்தகற்றுவன்பலால்விரைந்தே. (௧௦௫)

கட்புலன்படாவிகலைநீகருதிடாதென்பால்
நட்பதாகுவதுறுதியோநவில்கெனவினவ
வுட்புலன்களைந்தலம்வருமுரோமசனுரைக்குந்
தட்பவாள்விழிப்பலிதனைத்தண்ணெனநோக்கி. (௧௦௬)

அறம்பிழைக்கினுமல்லவைசெயினுஞ்செய்நன்றி
திறம்பிழைத்திடார்தீதுசார்பிறவியிற்றீர்ந்தோர்
மறம்பிழைக்கினும்வாய்மொழிபிசகுறேன்வந்தேன்
புறம்புரக்குதியாருயிர்புகழெலாம்பூண்போய். (௧௦௭)

வேகத்தாலெனைப்புரத்தியேற்கடவுளாவிரும்பி
யாகத்தேயுனைசுமந்துகொண்டிருப்பனையுறலேன்
மாகத்தோரெலாமுணர்ந்திடவாய்மையிற்றிறம்பேன்
சோகத்தாழ்கடலெடுத்தியுன்னினுமினித்துணையார். (௧௦௮)

உயிர்கன்றிடுமொல்லையிலுதவிசெய்பவனீ
செயிரகன்றுநானுன்வயிற்றீங்கினைப்புரித
லியலினுங்கொலோநெறிகொலோவெனப்பலகூற
வயர்வுதீர்கெனவருகணைந்திருந்ததாலாகு. (௧௦௯)

வேறு.

கண்டுரோமசனென்னைநீயுபகாரமாற்றுதல்கைக்கொளா
யண்டிடாதகல்வுற்றிருந்தனையையமுண்டுகொலையகேள்
மண்டுதுன்பமுழந்தவென்னைமறுப்படாதுயிர்தந்தநீ
யண்டர்தங்களிலன்றியந்தரமுன்னில்வைம்மைகளனுகுமோ. (௧௧௦)

சேரவந்தெனதுறியைமாற்றுதிசிந்தையையமுறேலெனச்
சிரிலங்குபுகன்மொழித்தொகைசெப்புபூசையைநோக்கியே
தூரவைகினுமுனையடுத்துளதுயரைநீக்குவனஞ்சனீ
யிரமற்றவன்மேவுகாலையினென்றுகாரெலிகூறியே. (௧௧௧)

தனக்குயர்ந்தவர்தங்களோடுதனித்துநட்புறுதன்மையோர்
மனத்தினேர்ந்துபயத்தினேடுமருங்கதாயுறனன்மையே
நினைக்குமுன்னரினீக்குவன்றனைநீசன்வந்திடினீதியன்
றெனக்குமுன்னரியற்றலெய்துறுமேதமென்றுரைசெய்ததே. (௧௧௨)

அனையகாலையிலியமகிங்கிரராமெனக்கதைதாங்கியே
வினையம்வல்லவர்நீசர்கூடிவியந்துமேவலும்வெருவியே
புனையுரோமசனினியென்வாய்ப்பதுபூந்துளாரெனவோடியங்
கினையபந்தமகற்றிமேலுறவேவிமீண்டெலிபோயதால். (௧௧௩)

வந்தநீசர்கள்நாணிநெஞ்சுமடங்கிநீங்கினர்மற்றைஞான்
றந்தநல்லெலிபக்கலெய்தியழைத்துரோமசனேதுமா
லெந்தனுவிபுரந்துளாயினியென்னைநின்னிலுமார்கொலோ
தந்தைதாயினிவந்துமேவுதிசார்துமோர்வயினென்னவே. (௧௧௪)

பலித்தனுதுமனத்துளேவருபற்றலாலோரிடத்திருந்
துலவுமாறுபயன்படாமொழியோதனன்றலயாதினுந்
திலதனுகியபுகருரைத்தவைதேறவோதுவனீதிநூற்;
கலைவலார்கள்வியக்கவென்றொருநீர்மையின்றுகரைக்குமால். (௧௧௫)

அரசர்தன்னிலுயர்ந்தபற்றலராலலைப்புனைவவ்விடை
யுரைசெய்பற்றலருக்குயர்ந்தவரோடுநண்புறலொக்குமால்
விரைசெய்தாரினர்நண்புபோதவியப்பதன்றுவியத்துளோர்;
கரைசெயற்கருமீனமெய்துவர்கருமமற்றிதுகோடியால். (௧௧௬)

கருமமுள்ளனபோதுலாவுதலன்றிமிக்கவர்தங்கடை
யருமையெப்பொழுதும்பயின்றிடலறிவுளோர்கடனுகுமோ
செருமலைந்திடுபற்றலார்வலிதீர்க்கநண்புறுசெம்மையோர்
வெருவிடாதுபயின்றுளாரெனின்வீழ்ந்துளாரெனலாகுமே. (௧௧௭)

அஞ்சனெஞ்சிடைதங்கவங்கவராதரத்தளவும்பயின்
றுஞ்சபின்னர்விலங்கிவைகுவருறுதிதேர்ந்தவராமெனக்
கஞ்சனுல்வருபுகருரைத்தனனிதுவுணர்ந்தகருத்தினேன்
விஞ்சநின்னொடுநண்புசிந்தையுண்மேவலன்றீவிடுக்கிலேன். (௧௧௮)

பயிலுமாறுனதருகுமேவுதல்பற்றிலேனெனவோதலும்
மயலகன்றதுபூசைமீளவுமாகுமவ்விடம்நீங்கியே
செயலின்வேறொருபாங்கர்சேர்ந்ததுசெகதலங்கள்புரப்பவற்
கியல்வதாமிதுவின்னுமோர்மொழிகேட்டியென்றிதையோதினுன். (௧௧௯)

பூசையென்றொருபுரமதிற்பலர்போற்றுதிண்புயவலியுடைத்
தேசுலாவுறுபிரமதத்தனெனும்பெரும்பெயர்ச்செம்மலே
யாசைகொண்டொருபறவைசாரிகையானபேருடனவனுடன்
பேசுநண்புகுறித்திருந்ததுபின்னிகழ்ந்தமைகேண்மினே. (௧௨௦)

தினந்தினம்புரவலனுடன்பயினுளிலாங்கொர்தினத்திலே
மனமிதங்கியளித்ததன்பறழ்மன்னன்முன்னிடமற்றவன்
றனிமைவைத்தரியாசனத்திடையுடனிருந்துதயங்கவே
யினியவேந்தல்சிறூரடைந்ததையெற்றினுருயிரற்றதே. (௧௨௧)

சாரிகைப்பெயர்கொள்விகங்கமுணர்ந்துசாலவுமாழ்கியே
பாரின்மிக்கவரோடுநண்புபலிப்புறுதெளியோர்க்கெனச்
சீரின்மிக்கவர்செப்புவாரதனுண்மையின்றுதெளிந்தன
மூரினித்துயருறமுடிக்குதுமென்றுவானிலுயர்ந்ததே. (௧௨௨)

மராமரங்களிரண்டுகீண்டிருகாலின்மாட்டிவயங்கநின்
றராவினங்களைநோக்குதார்க்கியனுமெனப்பொறிகண்டொறும்
விராவவேந்தனைநொந்துசாலவெறுப்பினேடிதுபகருமாற்
சராசனம்வலகாளைகாதுதழற்சலாகைமடுத்தல்போல். (௧௨௩)

அரசரானவர்வித்தைவாகினியதிகவாழ்வதிகாரமென்
றுரைசெய்மத்துடையார்கள்செய்வனவொருவலாவனதெரிவுறார்
வரிசைமிக்கவரவரைநண்பெனவாழ்வமற்றவர்கடம்மையோ
விரைசெய்தாரவநின்சொல்கண்டுணைமேவமோசம்விளைந்ததே. (௧௨௪)

வெற்றிநின்கொடியாருமானகர்விதிபாழ்படமோதியே
சொற்றவென்னுழையேகலென்றுதுணிந்துகூறிடமன்னனுங்
குற்றமென்றுணராமடத்தினரொருவரேபுரிகொடுமைகண்
டிற்றனேகரவிந்திடச்செயலறமதேகொல்விகங்கமே. (௧௨௫)

செய்பவெம்பழிசெய்துளானொடுநீர்தலாமதுசெய்யென
மெய்யனோதவிகங்கமீளவிளம்புமோரபராதம்வந்
தெய்தினுயிரகோடிமீளவியற்றலாமிதுநீதியே
கைதவங்களினன்றுகாண்குதிகாண்பலென்னலுமோதுவான். (௧௨௬)

உத்தமர்க்கிடையூறொருத்தருளூற்றிலும்பொறைசெய்குவார்
மத்திமர்க்கதனுக்கிணைப்படுமாறுசெய்வதுமாண்பதாம்
புத்தியற்றுளவதமர்பாலொருபுன்கண்வந்திடினூரழ
லொத்துழன்றுமிகுத்துளூற்றுவருணர்தியென்றனனரசனே. (௧௨௭)

வாசமாலையனோதமீளவுமாழ்குசாரிகையோதுறும்
பேசினுயிதுதருமநூல்வழிநீதிகூறியபெற்றிகேள்
மாசிலாதவர்போலநண்பிடைமருவுவாரவர்பகையுளோர்
பூசலின்வழிபகைவிளக்குவர்புலவுவேலினருணர்வுறில். (௧௨௮)

ஆண்டுதாழ்கிலராகியாங்கவர்கிளையடங்கலுமம்பர
மாண்டடைந்திடமுற்றுவாரிதுமன்னர்நீதியெமக்குமிக்
காண்டுமானுடருக்குமுற்பகைகருதிலாதுனேமேவினே
னீண்டுநின்செயறேறினேனினியாதுசெய்யினுமேற்பதே. (௧௨௯)

என்றுகூறலுமன்னனோதுவனிறைவர்வெம்பகைதொன்றுதொட்
டொன்றிநிற்குமவர்க்கலாலஃதொக்குமோபிறர்மாட்டினுஞ்
சென்றுமானுடர்நமர்குலப்பகையென்பதேதுசிறப்பிலா
தென்றுமன்னவன்மறுத்துமீளவெடுத்துரைத்தனனிச்சொலால் (௧௩0)

வேறு.

அருஞ்சிறைப்பறவைக்கெலாமனிதர்பாலச்சமொன்றே
தருஞ்செயற்பகைமைகூறக்கதன்றுன்பாற்செய்த
பெரும்பிழைக்கியற்றினேனுனைப்பிளந்துநீத்தறம்வழாம
விரும்புரங்காத்தியென்றுனிதங்கியவிகங்கமாதோ. (௧௩௧)

மன்னகேடீங்குசெய்தோன்மாண்டிடமுடித்திட்டாலு
மென்னரும்பார்ப்புமீண்டிங்கெய்துமோவிதுவுஞ்செய்யேன்
மின்னும்வேலரசேநின்சொல்வியந்திதுபொறுத்தேன்வாழ்தி
யென்னுமாறெடுத்துக்கூறிவிகங்கமீண்டேகிற்றன்றே. (௧௩௨)

ஆதலாற்றனக்குயர்ந்தவரசர்நண்புடையராகு
லேதமுற்றிடுவரென்னவிசைத்திதேயிசைவினண்பாம்
போதமற்றவர்கணண்புபுகல்குவனெனவெடுத்தான்
மாதவத்தினர்க்கும்பாண்டுமைந்தர்க்குமகிழ்வுகூர. (௧௩௩)

முச்சுடரெறிக்கும்பைம்பூண்முளரிமாமுனிவன்றந்த
விச்சைதீர்மறையோர்தங்களெழிற்குலமுதித்ததீயோ
னச்சராவணையான்றங்கணற்குலவியற்கைநீங்கிக்
கச்சிளமுலையார்காமக்கலவியிற்புலைமைபூண்டான். (௧௩௪)

வேடுவர்தம்மிற்கூடியவர்தருமின்னைவேட்டுக்
காடுகள்வரைகடோறுங்கலந்துவேட்டங்களாடிப்
பீடறப் * பிசிதமுண்டுபேதையிற்சிறந்தபன்னு
ளூடுறுதடவிவைகுநாடனிற்பசியினைந்தான். (௧௩௫)

அரும்பொருளாசைதூண்டவணிகர்பின்னடைந்துசெல்லுஞ்
சுரும்பிமிர்நெறியினூடுதும்பிகள்பொருபோர்நோக்கி
விரும்பிவந்தவர்கள்வேறுதான்வேறாய்வெருவியோடி
யரும்புமுட்காடுபாய்ந்தான்றனியனாயறைந்ததீயோன். (௧௩௬)

நாப்புலர்ந்துயிர்ப்புவிஞ்சநயந்திளைத்தோடியோடித்
தீப்புறநெறிகணாடிச்சென்றொருவடவானீழற்
பாப்பனகுலத்தில்வந்தபதிகன்போயடைந்துதங்க
வாய்ப்புடைபுரவித்தேரோன்மறைந்தனன்வாரிமூழ்கி. (௧௩௭)

மாலைவந்தெய்தவேடமங்கையைப்புணர்ந்ததீயோன்
காலையினன்றிச்சேறல்கடனலவென்னவுன்னிச்
சோலையிற்றழைத்துயர்ந்ததொன்மரத்தடியிலச்ச
வேலையாழ்ந்தயர்ந்தானாவிவெம்பசிமெலிவினோடும். (௧௩௮)

அத்தகைவிடத்திற்றங்குமரும்பெருங்குருகுதேவர்
பத்திசெய்தொழுகாநின்றபண்பினர்நாளசங்க
வுத்தமனாமங்கொண்டதுயர்பிதாமகற்குநண்பு
வைத்ததுசிறகர்வீசிவந்ததுவைகுமாறாய். (௧௩௯)

கண்டதுமறையோன்றன்னைக்கசிந்துளமகிழ்ந்துதேற்றி
யண்டியென்னிருக்கைசேர்ந்தவதிதிநீயடியேனுய்ய
வுண்டிதந்தருள்வன்கொள்கென்றுறுமூலபலங்கணல்கி
முண்டகவாசநன்னீர்தந்தவன்முசிப்புமாற்றி. (௧௪௦)

வேடைகளைத்துந்தீர்த்துமெய்பணங்ககன்றபின்னர்
மாடுறச்சயனநல்கிமற்றுநீயாவனிந்தக்
காடுறவருவதென்னோகாரணமென்றுகேட்பப்
பீடிலான்பொருள்விழைந்துபெயர்நவையனைத்துஞ்சொன்னான். (௧௪௧)

---

* பிசிதம் -. இறைச்சி.

தன்மறைக்குலமும்வேடர்சார்பினிற்சார்ந்தவாறும்
புன்மையிற்புலால்விரும்பிப்பொய்யனாயுழலுமாறுங்
கன்மமேயுருவமானோன்கரைந்தலுங்கருணையெய்தி
நின்மலமானசிந்தைக்குருகிநெகிழ்ந்துக்கூறும். (கசஉ)

பொருள்விழைவதனாலீண்டுப்புகுந்தனையாகிற்சொல்வேன்
மருள்விழையாதநீரான்வையகம்புரக்குங்கோமா
னருள்விருபாக்கனென்னுமசுரர்கோனெனதுநண்பன்
றெருள்வடதிசைமுக்காதந்திருநகர்சேரிமன்னோ. (கசங)

எனதுபேர்நாளசங்கனிதைமனங்கொண்டுபோங்கர்
மனதுறுநண்பனேவவந்தனன்பொருள்விருப்பா
லினிதுறவென்றுகூறியெதிர்ந்தனையாகினல்கும்
புனிதநல்லாடையீழம்போதுதிபுலரினென்றான். (கசச)

அவ்வணமிசைந்துகீழ்பாலாதித்தன்வரவுநோக்கிச்
செவ்வியன்விடையளிப்பவடதிசைச்சென்றுசேர்ந்து
வெவ்வழற்கதுவுவேலான்மேவியநகரிசார்ந்து
கைவலிக்கொருவன்வைகும்பேரவைகலந்துநின்றான். (கசரு)

ஆரைநீயென்னயானோரந்தணன்பொருள்விரும்பி
யூரைநீத்தடைந்தேனாளசங்கன்வாயுரையினாலுன்
பேரையுற்றுணர்ந்தடைந்தேன்பேசுமாறிதுவேயென்னக்
காரையொத்துதவுகையானவன்மனங்கருதிச்சொல்வான். (கசசு)

தீயரிற்றீயன்பொல்லாச்சிந்தையனிவன்மீதன்பு
தூயரிற்றூயர்க்கென்னாலாயதோதுணிகிலேனென்
றாயமுற்றவருக்கோதியவன்றனக்குண்டிநல்கி
நேயமுற்றிருத்தியென்றானத்தினநீங்கிற்றன்றே. (கசஎ)

கார்த்திகைப்பருவமற்றைஞான்றுபொற்கலங்களோடு
மார்த்திநன்மணியும்பொன்னுமந்தணர்க்களிக்கும்போதின்
மூர்த்திவேதியன்றனக்குமுசிப்பறயாவுநல்கித்
தூர்த்தனென்றிகழானற்சொற்புகன்றுபோக்கினனத்தோன்றல். ()

மீண்டிவன்சுரமுங்கானுங்கடந்துமுன்மேவிவைகு
மாண்டகுவடத்தின்பாங்கர்வந்தவன்றந்தசெம்பொன்
பூண்டவான்சுமையைவைத்துப்புக்குடல்வருத்தமாறி
யாண்டவனிருப்பமாலையடைந்ததுபரிதிசாய்ந்தே. (கசகூ)

வன்சிறைக்குருகுமீண்டுவந்துதன்னிருக்கையெய்தி
முன்மறைக்குலத்தோன்றன்னைக்கண்டவன்முசிப்பகற்றி
நன்மையினுண்டிநல்கிச்சயனமுமளித்துநண்பன்
றன்னுழைநிகழ்ந்தவெல்லாமுணர்த்தியுட்டருக்கிற்றன்றே. (கரு0)

வேறு.

மறைக்குலத்துதித்தோய்கேட்டிவைகறையில்வனங்கடந்தகன்றுநின்னாட்டிற்
சிறைப்படுபுனல்சூழ்மானகரடைந்துவனசரர்பாங்குசேராமன்
முறைப்படிகுலத்திற்றிருமினைமணந்துமுனிவொழிந்தில்லறத்திருந்தி
கறைப்படுந்திங்களதுபடார்சான்றோர்கருதுதியெனக்கழறியதே. (௧௫௧)

இஞ்சொலாற்குருகுமொழிந்திடக்காதுக்கிசைவிலாதிருந்தினியேகிற்
செஞ்சுடர்வெயிலாற்பசியினாலுடலம்வருந்துறுந்தின்பதேதென்று
வஞ்சகனுன்னியிப்பெருங்குருகைமாய்த்திதன்மேதைகொண்டகலி
னஞ்சலன்பசிக்கென்றாய்ந்துளத்தடைத்தேயற்றமேகுறித்திருந்தனனே. ()

கரவினையுணராவப்பெருங்குருகுகண்டுயின்றிடுவதுகண்ணுற்
றரவினுங்கொடியான்புகுந்துயிரகற்றியதன்றசைவகிர்ந்தெடுத்ததனை
விரவினற்றுகிலிற்பொதிந்துகொண்டலைவீசியாடகச்சுமைதலைக்கொண்
டிரவகன்றிடுமுன்பவ்வனங்கடந்தேயேகினன்வேதியனிப்பால். (௧௫௩)

பாரெலாம்புகழுநெறிவிருபாக்கன்பன்மணிமேடையிற்றுயிலச்
சீரெலாமுடையநண்பனுக்கடுத்ததீங்கெலாங்கனவுகண்டெழுந்து
தாரெலாமசையக்கண்கணீர்கலுழத்தன்னுழையிருந்தவர்தமக்கு
நீரெலாம்புகன்றுநென்னல்வந்தவனானேர்ந்ததோதுயரெனவுருகி. (௧௫௪)

புலர்ந்தபின்றனதுதூதரையேவப்புகல்யமபடரெனப்புகுந்து
நலந்தருவடத்தினருகுசார்ந்தாங்குநாடலுமேனிகண்டெடுத்துச்
சலந்தருபுலிங்கவிழியினர்சிலரைத்தம்மிறைக்குரைத்திடவிடுத்து
நிலந்தனிலடிப்பாடுணர்ந்துபின்றொடர்ந்தார்நெறிப்படர்வோன்றனைநிருதர். ()

கோட்டுவெம்பன்றிச்சுவடுகண்டோடுங்கொடும்புலிக்குழுவெனப்படர்ந்து
காட்டினிலவனைக்கண்டுகைப்பிடித்துக்கவர்தருமூளையுநோக்கி
நீட்டியபாசக்கயிற்றினாற்பிணித்துநெடுங்குறுந்தடிகளாற்புடைத்து
வீட்டியகுருகினுடலமுங்கொடுதம்வேந்தன்முன்னிட்டனர்விரைவில். (௧௫௬)

கண்டனன்சோர்ந்துநெட்டுயிர்த்திரங்கிக்கனகமுமணிகளுமளித்த, பண்டைவேதியனேயிவ்வணம்புரிந்தபாவியாமிவனெனப்பாரா, னண்டொணாக்கொடியோன்றனைப்பிசைந்துண்ணாதாருயிரொடுகொணர்ந்ததுவென்,பண்டையீரென்றனையகேளிந்தப்பாவியூனருந்திலோமென்றார். (௧௫௭)

அக்கொடும்பாவிதன்னையேன்கொணர்ந்தீரென்முனமகலநீர்கொடுபோய்
மிக்கபுன்றலையசுணங்குகட்கிவன்மெய்விருந்துசெய்திடுமெனவிடுப்பக்
கைக்கயிற்றீர்த்துவாய்வழிவுதிரங்கான்றிடவீதிதோறலைத்துப்
புக்கனரகழிசூழெயிற்கடந்தேபுரசனர்நிலமெலாம்பொதுள. (௧௫௮)

தனக்குபகாரமித்தனைபுரிந்தார்தமக்குயிர்க்கிறுதிசூழ்ந்தவனிச்
செனர்க்கபகாரமெத்தனைபுரிவான்றீயவர்திலகனாமிவனே
வனக்கரிதனைவிட்டிடறுமினென்பார்வல்லியமுனரிடுமென்பார்
நினைக்கினுமவனைநோக்கினும்பாவநேருமென்றெய்துறார்நிற்பார். (௧௫௯)

இவ்வணமவ்வூரிருப்பவரியம்பவேகியதூதர்கள்வெகுண்டு
கைவருமணிகள்வார்மணிவடங்கள்கலகலென்றொலித்திடுமனந்தம்
செவ்வழல்விழிசேர்ஞமலிகள்கொணர்ந்துவிடுத்திவன்றனைக்கரஞ்சுட்டிச்
செவ்வையினைவத்தியபாதகனைத்தீண்டிலோமெனத்தெழித்ததுவே. (கசுo)

உழுவைமேல்விடிலுங்கரிமிசைவிடிலுமொருநொடிதாழ்வுறுதாய
குழுவெலாந்திரண்டுமீண்டடைதயுணர்ந்தக்கொடியபாதகனையாண்டிருத்தி
வழுவுறுதமனுமன்னனுக்குரைப்பநாயுறுமானுடவாக்கைத்
தழுவியகொடியோரிருந்தனரென்னச்சாற்றியொன்றுரைத்திலனிருந்தான். ()

வாசவனிவனுக்குயிர்நிகர்தோழனாதலாலவன்வரநினைந்தான்
பேசுமுன்னடைந்துநிகழ்ந்தவையனைத்துங்கேட்டுமீவருந்தலைபெரிது
நாசமெய்தியவக்குருகுநான்முகன்றனன்பதென்றுணர்கலாய்போனு
மூசலாடுள்ளத்துயரினைத்தவிர்த்தியொருவனுருயிர்பெறுமுண்மை. (கசுஉ)

அக்குருகுடலமனற்குணவளித்தாலாண்டடைந்திடுமெனப்புகல
மெய்க்கொருமுதல்வனவ்வணமாரவிருக்கங்கள்பிளந்தடுக்கியபின்
புக்கதிவளர்த்தியதனிடைகொணர்ந்தபுனிதயாக்கையையிடக்கணத்திற்
றக்கநீறுக்கித்தணைந்ததுகனலுமியாவருஞ்சார்ந்துகண்டிடவே. (கசுங)

வானிடையிருந்தோர்சுரபிபால்பொழியமாருதத்தாலொருதுளிபோய்
ஞானவானுடலம்வெந்தசாம்பரின்மேனண்ணலுமப்பெருங்குருகு
சோனையம்புயல்போற்கண்டுளிகலுழுந்தோன்றன்முன்றோன்றிநின்றிடலுந்
தேனுறுமலர்கள்பொழிந்தனர்விண்ணோர்சிந்தைகண்களித்தனர்செகத்தோர்.

அசுரர்பிரானுஞ்சுரர்பெருமானுமடலுறத்தழுவியக்குருகி
னேசமேயுயர்த்தார்நிகழ்ந்தவையனைத்துநெறிப்படுத்துரைத்திடவுணர்ந்து
பாசநீத்தந்தமானுடன்றன்னைப்பாரினிற்செலுத்தவென்றிரப்ப
பேசருமியலாரவ்வணந்துறந்தார்பெய்தபொன்மணியுமீண்டளித்தே. (கசுரு)

பாசநீத்தவனைவிடுத்தலுமந்தப்பாதகன்பசும்பொனுந்தாங்கி
நீசனிற்போந்தானடிக்கடிதிருகிநெறியினைநோக்கியச்சத்தால்
வாசவன்விடைபெற்றுயர்ந்தனனசுரர்மன்னனைவாழ்த்தியக்குருகு
தேசணிவடத்தினிருக்கைசார்ந்தினியசிறப்பின்வீற்றிருந்ததுமன்னோ. (கசுசு)

கேட்டிநீமுரசமுயர்த்துளோயுலகிற்கேழ்கிளர்குலமுமேம்பாடு
நீட்டுதன்சொல்லுநோக்கலர்தெரிந்தநிருபர்நல்லறிவுடையவரை
மீட்டுநற்கருமங்களினுறப்படுத்தியிதையமோர்ந்தொற்றினுமுணர்ந்து
மீட்டுமாய்ந்ததற்பினன்புபூண்டொழுகன்மேலவர்கடமையென்றுரைப்பார். ()

நட்பினுலெல்லாநன்மையுமுளவாநட்புயிர்க்கிறுதியும்விளைக்குங்
கோட்புறவுணர்ந்தோருணர்விலார்பான்மைகுறித்ததையாய்பவனரசன்
பெட்புறத்தெளிந்துகொண்டநண்பிடத்திற்பேதமுமாய்வுறுதாய
நட்பினலுறவுந்துயர்தருமென்றுநவிலுவான்மீளவுமன்னோ. (கசுஅ)

வேறு.

புரிசைமாநகரமுன்னர்ப்புரந்தபவுரகன்பொல்லா
விரைசெய்திவிணைபுரிந்தேவிந்து * கோமாயுவாகித்
தரையிடைதிரிந்தோர்கானந்தங்கிமுன்னறிவினாலே
சருகுதுய்த்துதகமாந்தியிருந்ததுசாலநாள்கள். (௧௬௯)

தங்குலமனைத்துமென்னேதகவன்றூல்யாங்களீது
மிங்குநீபொசித்திருத்தியினிப்புலாலென்றுகூற
வங்கதைமறுத்துமுன்னர்நிலைவிடாதாதனைக்கி
வெங்கொடும்புலியொன்றெய்திவிம்மிதமடைந்துகூறும். (௧௭௦)

நின்னுடையுறுதிநோக்கிநினக்குநண்பாவான்வந்தே
னென்னருகுழையர்நீரினிருத்திவாவென்றுகூற
வுன்னருகிருந்தோர்வேறென்றுரைப்பர்நீமெயங்காயாகி
லன்னதுபுரிவனென்னவபையமன்றளித்ததன்றே. (௧௭௧)

பற்பலநாள்களிந்தப்பெரும்புலிபாங்கர்வைக
வற்பமாமறிவிற்பின்னுமதனருகுள்ளதிமை
யிற்படுமிருகமெல்லாமிதன்செய்கைமனங்கொளாமற்
கற்பனையதனாற்கொல்லக்கருதியேயிருக்குநாளில். (௧௭௨)

வான்பசியுடனேமேவும்வல்லியமருந்துமூன்கண்
மேன்மையிற்கரந்துநின்பான்மேவுகோமாயுவுண்ணத்
தான்கரந்ததுதீண்டேனென்றுரைப்பதேதவறுகண்டா
யூன்றினங்களவிலுண்ணுமென்றதாலொருமைபற்றி. (௧௭௩)

அருகுறுவிருகமிவ்வாறறையவுமறிவிலாமற்
பெருகனல்விழியாற்சிந்திப்பெயர்ந்துயிருண்பனென்ன
வருகணைந்திடலுமெய்தியன்னைநின்னறிவிவ்வாறே
கருதியோர்ந்தறிதியீதுபொய்மையாங்கழறும்வாய்மை. (௧௭௪)

என்னலுமீண்டுவெவ்வேறிருந்தநல்விருகமெல்லா
மன்னிலைபிரித்துக்கேட்கவகுத்ததுபகரலோடும்
நன்னிலையுணர்ந்துமுன்னர்நண்பனைமுயற்சிசெய்து
தன்னையீன்றதைவியந்துவாழ்ந்ததுதாழ்வில்வேங்கை. (௧௭௫)

ஆதலாலறிவிலார்பாலறிவுடையோர்சேர்ந்தாலு
மேதமாங்குணங்களாய்ந்தேயிறைவர்பாற்சார்தல்வேண்டு
மோதுறுபகைநண்போடுநொதுமலோருரைக்கும்வாய்மை
காதலாற்கோடனீக்கல்பராமுகங்காட்டறீதே. (௧௭௬)

எவ்வுரையெவர்சொற்றாலுந்தன்னறிவேறநோக்கி
யவ்வுரையுண்மையன்மையறிபவரறிவுளோராங்
கைவருமுலகிற்றத்தங்கருமத்துக்கேற்கச்சொல்வ
ரவ்வகையுணரக்காதையறைகுவன்கேட்டிமன்னே. (௧௭௭)

---

* கோமாயு - நரி.

விதிசைமாகரிலோர்வாழ்குடியிலுற்பவித்தமேன்மை
யதிசயமதலைதுஞ்சவவர்க்குளோர்பலருங்கூடிக்
கதிசெயவிரங்கியேந்திமயானத்திற்கலந்தபோழ்திற்
கொதிதருபசியாலங்கோர்கழுகுவந்திதனைக்கூறும். (௧௭௮)

மானுடராயுமிந்தமயானத்திற்சவங்கொணர்ந்து
மேனிகழ்வுணர்வுறாதுபயின்றுளீர்வெய்ய * சோகு
கானிடற்றுறுபசாசகணங்கள்சேரிடத்திலென்ன
வானுலாவிரவிமேல்பாலாயதுமனதுகொண்டே. (௧௭௯)

இறந்தவர்மீளாரென்பதுணர்குவிரென்னைநீரு
மறந்தபவிறக்குமாறுமீள்வதோவறிகிலேன்யா
னுறைந்திவணிருத்தற்கும்பரஞ்சுவரோடியுங்கள்
சிறந்தநல்லியாக்கையோடுஞ்சேருமினென்றதாலோ. (௧௮௦)

சிறையுடைக்கழுகுகூறச்செறிந்தவரறிவுசிந்தி
நெறிபடக்கலங்கியோடவவ்வொருநரிநேராகித்
துறைபடுகழுகின்வாய்மைகேட்டுநீரறிவுசோர்ந்தீர்
முறைமைகொன்மீண்டுவம்மின்மயானத்தின்மோகநீங்கி. (௧௮௧)

இரவிமேல்கடல்வாய்வீழுமளவுநீரிருந்துபெற்ற
வொருமகவதனைக்காண்மினுயிரடைந்துறினுமுண்டாம்
வருநெறிபொய்த்ததேனுமாலையினீங்கனன்றும்
புரிதவமுஞற்றியீன்றபுதல்வனையெறிந்தோபோவீர். (௧௮௨)

என்றதுகலுழ்ந்துகூறவிரங்கிமீண்டடையவந்த
வன்றிறற்கழுகுநோக்கியென்கொனீர்மடங்கிமீண்டீர்
துன்றியவுலகினுவிசோர்ந்தவர்மீண்டதுண்டோ
நின்றகோமாயுவாய்மைசரதமோபுகலீர்நீரே. (௧௮௩)

ஆயிரத்தொருமுந்நூறுமாண்டுகாறுணர்வன்யானே
நேயமிப்புவியின்மாய்ந்தோர்மீண்டவாறுணரேநீவிர்
சேயகண்கண்டதுண்டேசெவிப்புலனுயதுண்டோ
தூயவர்க்கிதுநன்றாமோவகலுமின்றொலைவுறாமல். (௧௮௪)

எனப்புகல்கழுகின்வாய்மைக்கிசைந்திவர்மீளவந்து
கனக்குரற்றனிக்கோமாயுக்கழறிடுங்கழுகின்வாய்மை
மனக்கொளாதுறைமின்மாய்ந்தார்மண்ணின்மீதனேகருய்ந்தோர்
நினைக்கரும்பரமனுடலார்கொலோநிகழ்த்தவல்லார். (௧௮௫)

தசரதன்றனையனோடுபுரக்குநாட்சதுர்வேதத்தோ
னிசரதகுமரன்மாய்ந்துமீளவுநெறியானுய்ந்தான்
கசரதமுடையவெற்றிக்காவலன்மைந்தன்வீணை
யசரதமுனியாலுய்ந்தானருட்சுவர்ணேடியம்மா. (௧௮௬)

---

* சோகு - பசாசம்.

உமக்கொருகடவுணல்கிலுய்ந்திடலரியதாமோ
கமைப்படுசெய்கைநன்றுகாணுமினிருந்தீண்டென்ன
வமைத்ததுபகரக்காதலலைத்திடத்திருகிநின்றார்
தமக்கறிவுறுதியோராமாந்தர்பல்லோரச்சார்பில். (கஅஎ)

வேறு.

ஏராருமக்கழுகுமனிதர்மீண்டாலிட்டசவந்தனக்கிரையாமென்பதுன்னிச்
சீராருமவ்வுரைகள்புகன்றதிந்தச்செயலுணர்ந்தகோமாயுமனிதன்வைகிற்
காராரும்பொழுதடையக்கழுகுசெல்லுங்கையகல்வர்யாவருமக்களேபரந்தன்
பேராருமுதரத்திற்குணவாமென்றுபேசியதாலிவையனைத்தும்பேதித்தம்மா.

அவரவர்தங்கருமத்துக்கிசையக்கூறலறியாமன்மயங்கினராங்கவருமிப்பா, லுவரிபுகுந்தனன்கதிரோனிவையனைத்துமுமாபதிகண்டருள்புரிந்தேசிறுவனாவி, தவறறவேதந்துய்பச்செய்பமீட்டுஞ்சம்புகமுங்கழுகுமரும்பசிசாராமற், கவுரியொடுமிருந்துநடம்புரிந்தோனல்கக்களித்தகன்றுதத்தமிடங்கலந்தார்மாதோ. (கஅகூ)

ஆதலாற்பகுத்தறியுமறிவிலாதாராருரைத்தமொழியுறுதியாதுந்தேரார், தேதமாப்புரைபடுவரென்னக்கூறியிறைவரிடத்தொழுக்கமிலையென்னிலந்தோ,காதலாற்பெருஞ்செல்வநிலைசெயாவாங்கருதுபோரிடைவிசயங்காணமாட்டார்,சாதலாற்றியும் வழுவாதொழுக்கங்காத்தறக்கவது வாமோர்காதைசாற்றக்கேண்மோ. (ககூ0)

மேகவாகனன்மெலிந்துபிரமலாதன்வெற்றியினைவியந்துதங்கடேசிகற்குத், தாகமுறவுரைத்ததெவ்வாறவனைவெல்லுந்தன்மையெனச்சுக்கிரன்பாற்சார்ந்தோதென்னப், பாகசாதனனடைந்துதொழுதுபோற்றிப்பன்னினான்றன்மெலிவையனைத்துங்கேட்டே, யாகலாயவனிடத்தினொழுக்கநின்மாட்டவ்வண்ணநின்றொழுகினாவையென்றான். (ககூக)

வியந்துமீண்டக்கணமேவிபுதர்கோமான்வேதியர்தம்முருத்தாங்கிப்பிரமலாதன், வயங்குமுழையடைந்துவழிப்பட்டிருப்பமற்றவனுமுளமகிழ்ந்துவேண்டுமாறு, நயந்துரைக்கிற்றருதுமெனவுனதுபாங்கர்நண்ணுமொழுக்கத்தையெனக்களித்தியென்னத், தியங்கியவனக்கணமேதந்தான்மீண்டுதேவர்கோன்றன்னிருக்கைசேர்ந்தானன்றே. (ககூஉ)

ஈந்தவன்றனுடலிருந்தோர்புருடனீங்கியிசைத்திடுநல்லொழுக்கநின்பாலிருத்தலாலே, சாந்தமறையோர்தமதுசத்தியெல்லாம்சார்ந்துனதுபாங்கரிருந்தனநீநல்க, வாய்ந்தமகபதிபெற்றானினிமேலுன்மாட்டனாகியிரோமெனவுரைத்தேயகலப்பின்னும், போந்திருந்ததிருமறையோர்சத்தியின்பின்போயினடன்னுருக்காட்டிப்புகன்றுமன்னோ. (ககூங)

அவ்வொழுக்கமுடன்றிருவமகவான்பெற்றேயாசுரனையென்றுலகமூன்றுங்காத்தா, னிவ்வொழுக்கமெவர்பாலினிருந்ததங்கேயாவுமுளவெனவுணர்தி யாவரேனுஞ், செவ்வொழுக்கந்திறம்பாமலிருந்தநெஞ்சர்தேயமொடுகாலவியல் பதனாற்சற்றே, துவ்வொழுக்கிலொருகாலம்வழுக்குற்றாலுந்தோற்றமுளராவர லாலிழுக்குற்றாரே. (௧௯௪)

வேறு.

கவுசிகன்றவம்புரிகாலத்தேமுனம்
புலிதிரேதாயுகம்புகல்துவாபர
மிவையிரண்டெனுமுகத்திடையினேழ்புயற்
றவிர்வுறபிலுற்றுதலுயிர்கள்சாய்ந்தவே. (௧௯௫)

அம்முனியுதரமூடெழுந்தவாழ்பசிக்
கெம்முறையுணவுதான்றேடியெங்கணும்
வெம்மையிற்காண்கலன்மேவவாண்டொரு
தெம்முறையடவிகண்டதனிற்சேர்ந்தபின். (௧௯௬)

ஆங்கொருபுலைமகன்கூவலாக்கியப்
பாங்கினிற்குடிசையொன்றமைத்துப்பற்பல
தாங்கரும்விலங்குயிர்மாய்த்துத்தாழ்வற
வாங்கமைத்திருந்தனனுயிர்கொண்டாற்றியே. (௧௯௭)

கண்டுசென்றிரவினிற்கவுசிகப்பெயர்
கொண்டவன்கரவினான்மேதைகோடலு
மண்டியபுலைமகனார்த்தெழுந்துடல்
விண்டிடவாளினால்வீசலுன்னினான். (௧௯௮)

ஆய்ந்துதன்பேரறிவிக்கவங்கவ
னோய்ந்துகையச்சமுற்றொடுங்கிக்கால்கண்மேற்
சாய்ந்துனக்கடுப்பதோதகுதியோவென
மாய்ந்ததீங்கரும்பனையான்வழங்குவான். (௧௯௯)

கேட்டிநீயொழுக்கமிவ்வுடலங்கிட்டுத
னாட்டினுள்ளுறுமுயிர்க்கரிதுநண்ணுமே
வீட்டுநல்லொழுக்கமேபுரிவதிவறல்
காட்டுமேநிறுவுதல்கடனதாகுமே. (௨௦௦)

ஒழுக்கநீத்தாயினுமுயிரைக்காக்குத
லழுக்கலவெனமுனியறையக்காதகன்
பழிப்பிதாருயிரினைப்பரிந்துதங்குல
வொழுக்கமேபுரப்பர்நல்லுணர்வுமிக்குளோர். (௨௦௧)

யாவையும்வல்லநீயில்லினெய்தியப்
பாவகாரியந்தரல்பழுதுபற்றியே
மேவுநாய்மேதைநீவிரும்பல்போதுமோ
தேவரும்புகழ்முனியென்றுசெப்பவே. (௨௦௨)

மறுத்தவன்புகலுவான்வையத்தோர்க்கெலா
மொறுத்துயிர்நீப்பினுமொழுக்கநீக்கொணு
தறப்பெருந்தவத்தினோர்க்கொழுக்கமாசுற
லிறப்பெருங்கனலிடுநீரம்போலுமே. (உ0௩)

அருளினிலுயிர்பரித்தாக்கைதாங்குறிற்
பொருளலவிவையெலாம்போக்கும்வல்லபந்
தெருவுறவுளதெனத்தெரிப்பச்சீரியோ
னிருசரண்பணிந்துனக்கேற்றசெய்கென்றான். (உ0௪)

அப்பெருஞ்சுணங்கினுனங்கியூட்டியே
கைப்படுத்தருந்திநீர்மாந்திக்காரணன்
செப்பரும்பசியினைத்தீர்த்துவைகியே
யிப்பசிவருவதேனென்றுநோக்கினான். (உ0௫)

ஆறுநான்கயனமிவ்வகிலத்தேமழைப்
பேறிலாவியல்பெலாம்பெரிதுதேர்ந்தபின்
சீறினன்புயல்களைத்தேவராசனைத்
தூறினன்விழிகள்வான்றொடர்ந்துநோக்கவே. (உ0௬)

மின்னினகுமிறினவெருவியேழ்புயற்
பன்னருமழைத்துளிபாரிற்சேர்த்தலா
னன்னிலைநதிகளுமருவுநாடெலாந்
துன்னுநீர்வெள்ளங்கடுளைந்ததாமரோ. (உ0௭)

நீங்கியதுலகிடர்நிமலனவ்விடை
தாங்கியபெருந்தவந்தன்னில்வைகினான்
பாங்கினல்லொழுக்கங்கள்படைத்துளோர்க்கொரு
தீங்குறில்நிந்தையாகாதுசெம்மலே. (உ0௮)

வேறு.

செங்கோலியற்கைதனையோதுவன்றேர்ந்துகேண்மின்
சங்கோலமிட்டவயல்சூழ்தருமங்கதேசம்
பங்காவனைத்தும்புரப்போனியற்கைபடைத்தவேந்தன்
புங்காதிபர்கள்புகழ்வசுவேமநற்பேர்புனைந்தோன். (உ0௯)

மானிலத்தரசைவிட்டிமையக்கிரிச்சாரன்மன்னித்
தேனிமிர்தார்குழற்றேவியினொடுஞ்சிறந்திருந்தே
ஞானியர்தம்மொடுநல்லிணக்குற்றிடுநாளிலங்கண்
வானுபர்சீர்த்தியன்வந்தனன்வென்றிவேன்மாந்தாதாவே. (உ௧0)

வழிபடுசெய்கையன்றண்டனைநூன்முறைகேட்கமன்னன்
கழிபடுசிந்தையன்கூறினனங்கநாடுகந்துகாத்தோன்
வழிபடுவேந்தர்கள்கேண்மினேவவையெலாம்விரித்துரைப்பன்
பழிபடுமாறலைபவ்வணமொழுகுதல்பான்மையென்றே. (உ௧௧)

வேறு.

கமலநாயகன்மகம்புரிகருத்தினனாகி
யமலமைந்தனைத்தான்கருத்தாங்கியின்றவனை
விமலமாமகம்புரிவிக்குமேலவனுக்கி
யிமையமால்வரைச்சாரலிலிருந்தவிபகிர்ந்தான். (௨௧௨)

முற்றமுன்னரினப்பெருங்கான்முனிமறைபக்
கற்றபங்கயன்கனன்றுவிண்டுவினுடன்கரைந்து
மற்றவன்றன்னெடுமாபதிமருங்குபோய்வணங்கி
யுற்றவாறெலாமோதினராதியீதுரைத்தான். (௨௧௩)

ஈட்டுதித்தொழிற்கொடியுருக்கிசைக்குநான்முறையாற்
காட்டவேண்டுநற்றண்டனைகாட்டியஞான்றில்
வீட்டுவார்வினையன்றெனிலரியதாம்விலக
நாட்டிலவ்வணந்திகொரீஇநன்றியேபயக்கும். (௨௧௪)

ஆதலாற்றண்டநான்முறைவேண்டுமென்றுக்கி
யோதுவேதநான்காறுசாத்திரங்களீரொன்பான்
போதமாகியபுராணமெல்லாமொருபுலமாய்
நீதிசாத்திரந்தருமசாத்திரத்தொடுநிரைத்தே. (௨௧௫)

பத்துநான்குமாயமைத்ததிற்பரதசங்கீதம்
வைத்தவாயுள்வேதந்தனுர்வேதமீமாஞ்சை
யொத்தநான்குடனென்பதிற்றிரட்டியுமொருங்கே
நித்தனல்கினன்விண்டுபானிகழ்த்தினனிதனை. (௨௧௬)

இந்தவான்கலையுலகெலாநிகழ்வுறவியற்றி
யந்தநன்னெறிநடத்திலார்க்கரியதண்டனைசெய்
துந்துநல்லறங்காத்தியென்றருளுவந்தளித்தான்
வந்துமாமகமுடித்தனன்மறைநதவப்புதல்வன். (௨௧௭)

விண்டுநல்கினனங்கிராவினுக்கவன்மரீசி
கொண்டல்வாகனன்றனக்கவன்கொடுத்தனவதனு
லெண்டிசாமுகத்துளமுனிவரரெலாமுணர்ந்தார்
தண்டநூன்முறைவரும்பரிசாமெனச்சாற்றி. (௨௧௮)

திருவுலாவியகபர்த்திசங்கரன்றிறற்றூணு
கருதுருத்திரன்பவனுமாபதியெனக்கற்றோர்
தருவதாம்பெயர்த்தண்டநூலினுக்கிதுதாங்கி
வெருகுறுதிபற்றுதனெறிவேந்தருக்குலகில். (௨௧௯)

பட்டமாமணிவேகடஞ்செய்தல்பொற்பயிற்குக்
கட்டவான்கலைச்செய்கைபோற்கமலவாவியுணீர்
தொட்டபாசிதீர்த்திடுதல்போற்சொரிந்தநெற்பதர்கை
விட்டகற்றல்போல்வேந்தர்களியற்றுதண்டனைகள். (௨௨0)

அந்தவாறுநட்புடன்பகைநொதுமலென்றசையான்
றந்தநூன்முறைதருதல்செங்கோன்மையாந்தக்கோ
யிந்தவாறுணர்ந்தியற்றினோர்க்கிகபரமுளவாஞ்
சிந்தைகோடியென்றனன்வசுவேமனுந்திறலோன். (௨௨௧)

மனமகிழ்ந்துமாந்தாதநாடனும்புவிவாய்ப்பத்
தனதுநாடுசென்றவ்வணம்புரந்தனன்றண்ட
மினியதாமிறைவருக்கெனவிடுமனிசைத்தான்
புனிதரானவர்கேட்டனர்மகிழ்ந்தனர்புகழ்ந்தார். (௨௨௨)

பின்னுங்கூறுவன்வெருவரும்படிபலபேசி
மன்னுநூன்முறைதாழ்ந்துதண்டனைசெயவழக்கா
மன்னதனறிமுக்குணநெறியாற்றினோன்கொடுங்கோன்
மன்னனுமவனுட்டினன்றுழுவைவாழ்வனமே. (௨௨௩)

சாமபேதநற்றானதண்டங்களின்றகுதி
மாமனுச்செய்நூல்வழக்கதாம்வலியுணர்ந்ததனுக்
கேமுறப்புரிந்தொழுகுதலியற்கையூக்கத்தாற்
ருமதத்தினென்றியற்றிடிற்ருழ்குவன்மன்னோ. (௨௨௪)

இமையவான்கிரிச்சாரலிலிலவொன்றுநீண்டு
சிமையவான்சினைதிசைதொறுந்திசைதொறும்போக்கி
யமையவேயடியாற்றவும்பருத்துயர்ந்தெண்ணில்
சமையிருந்ததுசார்ந்துநாரதனிவைசாற்றும். (௨௨௫)

மாருதத்தினோனின்னுழைநண்புறுமாறு
சீருறப்புகல்வாயுனைச்சிதைத்திலனென்னே
தாருகச்செயுஞ்சான்மலிப்பெயருடைத்தருவென்
னேருடைத்தனிவீணைவல்லவனெடுத்திசைத்தான். (௨௨௬)

அனையவாசகங்கேட்டலுமத்தருநகைத்துப்
புனையுமாருதனென்வலிக்கிணைசொலப்போதான்
கனையுமாங்கவன்வலியினுஞ்சோடசங்காண்மி
னெனதுகாழ்வலியென்னலுநாரதனிசைப்பான். (௨௨௭)

மேருமால்வரைச்சிகரிகடுணித்தவன்வெற்றி
சேருமோர்தருவினுக்கிழிபென்பதோதேருய்
காருலாவுநின்னுழையவன்கலந்தநாட்காண்பன்
ருருவிச்சொனீமறக்கலையென்றனன்றவத்தோன். (௨௨௮)

வாயுவென்னுழைவரினவமானமெய்துறுமென்
ருயசான்மலியுரைத்தலுமந்தணனகன்று
தேயுநண்பனுக்குரைத்திடச்சீறிவந்தடர்த்தான்
காயும்வெங்கனற்கண்ணுடனருஞ்சதாகதியோன். (௨௨௯)

ஒலித்துமேவல்கண்டுளநடுக்குறச்சினையுகுத்துக்
கலித்தடங்கிநின்றுரைத்தலாற்காற்றகன்றதுவாஞ்
செலுத்துநாரதனோக்கியேசிறுநகையோடும்
பிலுற்றுதேன்மழைவீணையிற்சொரிதரப்பெயர்ந்தான். (௨௩0)

நன்னுடைப்பெருமிதத்தினைவியந்தவர்தாழ்ந்து
மன்னுயிர்த்தொகைநகைதரவருந்துவர்கண்டீர்
பன்னுதற்கருஞ்செய்கையிற்பயனுணர்ந்தவர்கள்
முன்னுறச்செயலோர்ந்தவைவிலக்குவான்முயல்வார். (௨௩௧)

முயலுறுதிருந்திடின்முடிவெய்துவரிதற்கோர்
பயனுலாங்கதைகூறுதுங்கேண்மினோபார்மேற்
செயலிலோர்நதிமடுவினிற்றிகழ்சலசாத்திற்
றயலும்போதிவுடையதுமூன்றுநீர்தோற்றி. (௨௩௨)

வேறு.

தீர்க்கதெரிசிபிராத்தகாலத்தெரிசிதீர்க்கசூத்திரத்
தார்க்குநாமமுள்ளமூன்றுமரியநண்பினெழுகுநாள்
கார்க்குநீர்தொலைந்துபோதல்கண்டுசிந்தையச்சமுற்
றோர்க்கநண்புகொண்டிருந்தவிதனைநோக்கியுரைசெயும் (௨௩௩)

யாமிருந்தமடுவினீர்தொலைந்ததீண்டுவைகொணு
தேமமுள்ளகுண்டுநீருளேகவம்மினோவெனக்
கோமுனைத்ததீர்க்கதெரிசிகூறவெய்திடாமலே
காமுற்றிருந்ததெய்தல்காண்டுமென்றுகருதியே. (௨௩௪)

சொற்றமீனகன்றுவேறொர்துன்னுநீரினுற்றிட
மற்றைமீனிரண்டுமாங்குவைகுநாளில்வலைஞர்வந்
தற்றநீரினுள்ளமீன்களடையவுந்தளைத்தல்கண்
டிற்றதேகொலுயிரெனுவிரங்கியேங்கிமாழ்கியே. (௨௩௫)

பிராத்தகாலதெரிசியாங்கோர்பேதமுன்னியாண்டொரு
துராந்துமாவசைத்தகோர்வைதுன்னுவாய்கடித்தபின்
பராக்கிரமந்தொலைந்திளைத்தபின்னர்மீன்படுத்தவன்
சராச்சரந்தயங்குநீரடைந்துகோர்வைதாழ்த்தினான். (௨௩௬)

கோர்வையைத்தணந்துநீர்குளித்ததொன்றுமற்றதச்
சார்பினிற்றுறந்ததாவியென்பர்மாதவத்தினோர்
சீர்படைத்தவறிவினோர்கள்மேவுமுன்னர்சிந்தைசெய்
தார்வமுற்றியங்குவார்வருந்திமாள்வரஃதிலார். (௨௩௭)

என்றுகூறவறனளித்தவேந்தல்கண்கணீருக
நன்றுநீகுறித்தவாய்மைநாடுகாக்குமன்னவர்
வென்றுவாகைபுனையுமாறுவலியிலாதவிரகினர்க்
கின்றுவாழ்வுதங்குமாறிசைத்தியென்றுபரவினான். (௨௩௮)

உதிட்டிரற்குவந்துமீளவொருவனீதுகூறினன்
மதித்துமுன்னர்கங்கையாறுவருதல்கண்டவாரிதி
கதித்துமேவுநீரியங்குகாலையிற்கரைக்கணிற்
பதித்துறைந்ததருவைவேர்பறித்தடர்த்துவிசுவிர். (உ௩௯)

அருகினின்றசெடிகள்புற்களதைவிடுத்துமேவுவீர்
கருதினுண்மையென்னையென்றுகட்டுரைப்பமாநதி
யுருகியோதும்வருபுனற்கொடுங்கிமேனிசாய்த்துறிற்
றிருகிலாமலுய்யுமாவிநிமிரினுவிதிருமே. (உ௪0)

என்றுரைத்ததாதலானிசைத்தவேந்தர்வலியுளோர்க்
கொன்றிநிற்றல்கடனதாகும்வகையுமேவுறுதெனத்
துன்றுதாதைகூறயாருமுளமகிழ்ந்துதுதிசெய்தா
ரன்றுபோந்துமற்றைஞான்றடைந்துளார்களாருமே. (உ௪௧)

வருநெறிக்கணன்றளித்தமகனியம்புமொழிகளா
லருகிருக்குமவர்வியப்பவனுகியேபணிந்துநற்
கருமமுற்றுமுனிவரைக்கலந்துதாதைபக்கல்சென்
றருடுதித்துமலர்நிகர்த்தவடிசிரத்திரைந்தினர். (உ௪௨)

மைந்தர்தங்கள்வரவுகண்டுவானுலாவுகங்கையா
டந்ததோன்றன்மனமகிழ்ந்துநன்மையாசிதந்தபின்
முந்துதிட்டிரன்சொல்வான்மொழிந்தவேந்தனியல்பெலாஞ்
சிந்தைகொண்டுளோமுளத்திலையம்விண்டுதீரவே. (உ௪௩)

ஏனையோர்கள்பிறவிவேலையெந்தவண்ணமேறுவார்
தானிசைக்கவேணுமென்றுதருமன்மைந்தன்வினவலும்
ஞானபண்டிதன்முகிழ்த்தகைகையிநேடுபுகலுவான்
மோனம்வல்லமுனிவராலுணர்ந்தவாறுமுன்னியே. (உ௪௪)

அரசநீதிச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௪௨௨.

தருமசாத்திரவியல்புரைத்தசருக்கம்.

கலைகற்றவர்க்குமதுகல்லாதவர்க்கு
நிலைபெற்றவர்க்குநிலையில்லாதவர்க்குங்
கொலைகற்றவர்க்குமுயிர்கொல்லாதவர்க்குந்
துலைபெற்றசான்றானவன்றாடுதிப்பாம். (௧)

வேறாயபலகோடிவிதமானதருமங்
கூறாதநூலில்லையுணர்வொன்றுகொண்டோர்
தேறுவர்தேறாதுசிலர்தீவினைப்பால்
வீறுவருலகுண்மைவினையென்றுதெளிமின். (உ)

அத்தன்மையுளதாயவறநூலின்முறையிற்
சித்தங்கொளுஞ்செய்கையோதிற்றெரிப்பன்
வித்தாரவறிவுள்ளவிறலோர்களென்ன
முத்தன்றனக்கேமொழிந்தானறத்தோன். (௩)

கடிதாகவுடலங்கழிந்தோடுமுன்னே
மடிதீரவெதுசெய்துகதிதாவிவாழ்வார்
படிமீதுளோர்நேருபரிசோதுகென்றான்
முடியாதநதிமைந்தன்மொழிவானொர்கதையே. (௪)

வேறு.

மேதாவியென்னுமைந்தன்வேதியர்குலத்துள்வந்தோன்
மீதானகல்விகேள்விவிளங்கிவாழ்ந்திருக்குநாளிற்
பூதாதியுயிர்கள்மண்ணிற்பொருந்தலுமிறத்தலுங்கண்
டோதாமலவனையின்றோன்மைந்தனுக்குரைக்கலுற்றான். (௫)

ஊதியங்காணெனில்வாழ்வுனுற்றுதலொருவிக்காணிற்
பேதியாதேகியாற்றிப்பெரும்பகையாறுமாவி
காதியமறலியோடுங்கடப்பன்யானென்றுகூற
வோதியாங்குணர்ந்தமைந்தன்பிதாவினுக்குரைப்பதானான். (௬)

உனக்கொருகாலமுண்டென்றுன்னினைபோலுமையா
மனத்திடையுறுதியில்லார்மடந்தையர்மயக்கிலாழ்ந்தார்
தனிப்பெருஞ்சரதமில்லார்சார்பில்லார்புலன்வெல்லாதார்
புனர்ச்சனனங்களெய்திமறலிகைப்புகுவர்மாதோ. (௭)

இவையெலாநெறியினுய்த்தோரில்லிடையிருந்தாரேனு
மவரையாரடக்குஞ்சிராரவ்வண்ணமாற்றலில்லார்
தவவனஞ்சார்ந்துமென்னேசார்வதுபுலிவாய்த்தங்கி
நவையுடலிறந்துஞாலத்துதிப்பராங்குளவோநன்மை. (௮)

என்றவனுரைப்பத்தந்தையிதங்கியேயுரைத்தவண்ண
மன்றவனிசைந்துபோற்றியாரியர்திலதனுனை
வின்றுலகுள்ளோர்க்கென்னேயியம்புதலருளினேடு
பொன்றிடார்சரதமாற்றும்பொற்பினர்புனிதராவார். (௯)

இங்கிதேதொன்றுநாடொட்டியற்றுதலென்றுகூற
வங்கறன்குமரன்சொல்வானருந்தனமுடையார்க்கொன்றுந்
தங்கலில்லாதார்வாழ்வோமென்மையோசாற்றுகென்னக்
கங்கைதந்தருளுங்கோமானிவ்வுரைகழறினனே. (௧௦)

தனமுளார்க்கச்சமுண்டுமதமுண்டுதாபமுண்டு
மனமுறுமகந்தையுண்டுமையலுண்டிதனிலொன்றுந்
தனமிலார்க்கில்லையானகருமத்தாற்றாழ்ந்தோருள்ளோ
ரினிதுறவுயர்ந்தோர்கைத்தொன்றிலாதவரென்றிசைத்தான். (௧௧)

ஐயகேணிதியுளோர்களருங்கதிபெறுமாறென்னே
செய்யவாயாரநாயேன்செவிப்புலப்படுத்துகென்றே
மெய்யரின்மெய்யன்கூறவிடுமனுரைத்தானீழ
மையல்வேர்பறிந்தகாலம்வான்கதிபெறுவனென்றே. (கஉ)

பின்னுமோர்காதைசொல்வான்பெயர்மங்கனென்னுநூலோன்
பன்னருந்தனமார்ச்சித்துப்பயன்பெறுனுகிநாளுந்
தன்னுணர்வழிந்துலோபந்தனிலறமபங்கிச்சாபந்
துன்னிடவருந்தியாசைதொலைத்தனன்கதிதொடர்ந்தான். (கங)

என்னவிவ்வுடலமைந்தும்பூத்ததினியற்கையென்பா
ரன்னவைபூதமெங்ஙனுயதோவறிகிலேன்யான்
பன்னுதியையவென்னப்பகர்ந்தனன்பரந்தாமப்பேர்
மன்னியவொருவன்றந்தானுத்தியின்மலரிணுணை. (கச)

அணையவனளித்தானிந்தவாகாயமாகாயத்திற்
புனைசலமுதித்ததந்தப்புனலினுற்பவித்ததம்மா
வினையவாயுவுநற்றேயுவிரண்டுமாங்கிதனுற்றோற்றுந்
தனைநிகரிலாதமண்ணொன்றுணருதிதாழ்விலாதோய். (கரு)

ஐம்பெரும்பூதந்தன்னுலாருயிர்விரிந்ததிந்த
வம்பருவதலமேழும்பதங்களாய்வதனமாகி
யும்பரேழுலகும்வாரியுதிரமாய்வரைகளென்பாய்
நம்பிரானுருவுகொண்டான்பிரமாண்டநாதன்மாதோ. (கசு)

சரங்களாயுள்ளவெல்லாம்பூதமைந்தாகத்தக்கோர்
திரம்பெறக்கருதலன்றியசரமுமச்சிறப்பே
பரம்பெறக்கருதுகென்றுபகர்ந்தனன்றருமன்மீள
வரம்பெறுபெரியோரீட்டுமாசாரம்வகுத்தியென்றான். (கஎ)

விரதங்கொள்குரவன்கூறும்புலரியினெழுந்துமேவி
நிரதமாமிடத்திற்சார்ந்தேயிருமலநீக்கிமற்றும்
புரதமாஞ்சவுசமாற்றிப்பூந்தருச்சினையாற்றத்தங்
கரமுறச்சுத்தியாகிக்கமலத்திற்றுளைந்துமேவி. (கஅ)

இனியநல்லாடைதாங்கியிரவியைத்தொழுதுபோற்றி
முனிவறப்பசித்தோர்க்குண்டிமுதலியதளித்துநெஞ்சிற்
புனிதமாச்சரதம்போற்றிப்புன்மைகளகற்றிநாளுந்
தனையுணர்ந்திடுதருனேயாசாரத்தகமையென்றான். (ககூ)

மந்திரமென்பதெல்லாமனதுறக்கொண்டுநாளுந்
தந்திரநெறிசெலாமற்றவிர்ந்தரும்புலனைவீட்டி
யுந்திடச்செவிப்போர்மீதாமுலகடைந்திடுவர்யோகந்
தந்திடுநெறியோர்தன்மைசாற்றுவன்கேட்டிமன்னே. (உ0)

இயமமேநியமமற்றுமாசனம்பிராணுயாமம்
நயமுறுபிரத்தியாகாரநல்லதாரணைதியானஞ்
சயமுறுசமாதியென்றேசாத்துமட்டாங்கமோர்ந்து
பயனடைந்திடுவர்பல்லோர்வாயுவின்பரிச்சயத்தால். (௨௧)

ஈதலாலின்னுங்கேண்மோவெடுத்தயோகத்தின்மேன்மை
மீதிலாஞ்செபிதையென்றேவிளம்புவர்தக்கோர்காதை
காதலாலுரைப்பன்கேட்டியென்றுசந்தனுவின்காளை
கோதிலாப்புனிதவாயாற்கூறுவான்குறைகடீர. (௨௨)

கௌசிகனென்றோர்பார்ப்பான்சரதநற்கமையினோடு
விசிதவாசாரந்தூய்மைவிளக்கினேன்செபத்தான்மிக்கோ
னசிபுனைவருடந்தானோராயிரஞ்செலுத்தநோக்கி
யிசைகொள்சாவித்திரிப்பேரேந்திழையனுகிச்சொல்வாள். (௨௩)

வேறு.

பலகாதஞ்செபவிரதம்பயிற்றினைவேண்டுவதெல்லா
நிலமீதிற்றருதுமினிநீயுரைத்தியெனக்கேட்ப
நலமாகாப்பயனென்றைநாடாததிருவுளத்தான்
விலகாமலிவ்விரதம்விளங்குமாறருள்கென்றான். (௨௪)

மனமகிழ்ந்தேயவ்வண்ணநல்கியமன்மறைமுனியே
நினைமகிழ்ந்துதருமமுனதருகணையுநின்னிடையே
புனையமனுங்காலனுமுன்புகுமதிதியொடுவாது
தனியியற்றுஞான்றுனக்குச்சற்கதிவந்துறுமென்றாள். (௨௫)

அவளகலவிவன்மீண்டுமவ்வண்ணஞ்செபமாகித்
தவளநகைதனதருளாற்சதமூன்றுதனிவருட
மவனிமிசையிலுவரென்றறமுருவுகொண்டடைந்தே
துவளுநாற்புயத்தனெதிர்தோன்றியதுகூறுமால். (௨௬)

வியன்பட்டபெருந்தவத்துமேற்பட்டதுனதுசெபம்
பயன்பட்டநற்கதியிற்படருதியிவ்வுடனீக்கி
நயன்பட்டவுளமுடையஞானமுனியேயெனலு
மயன்பட்டமரபுடையோன்றந்தனக்கிம்மொழிபகர்வான். (௨௭)

துன்பமடைந்திடுகாலஞ்சுளியாதவிவ்வுடல
மின்பமடைந்திடுகாலத்திகழ்ந்திடுதலறமாமோ
வன்புடலம்விட்டெய்தும்வாழ்வுகருதிலனென்றா
னன்புடையகவுசிகனவ்வறமிதனைப்புகலுமால். (௨௮)

எம்முயற்சியுள்ளாருமியங்குமுடனீத்தன்றி
மெய்ம்முயற்சிப்பயனடையார்நீயுணராவிரகுண்டோ
பொய்ம்முயற்சிப்படுமுடலம்புகுவதுளதோநரகி
லைம்முயற்சியுயிர்க்கலாதுடற்குண்டோவென்றதுவே. (௨௯)

அவ்வண்ணமனங்கொள்ளாதபிமானத்துடனிருப்பச்
செவ்வண்ணமுனிக்கெதிரேமிருத்துவுடன்காலனுஞ்சேர்ந்
திவ்வண்ணமுடனீக்கவெய்திஞெம்வருதியம
னுவ்வண்ணமுனக்குரைப்பனெனப்பொருள்செயாதுற்ருன். (௩௦)

அக்காலையிமராசனடைந்திடலுமாதனந்தந்
துக்காதுகடன்முறையுமுகந்தளித்தாங்குடனிருப்ப
மிக்காரும்புகழிக்குவாகுவெனும்விறல்வேந்தன்
புக்கானன்னீர்துளைந்தபுனிதனுறுமருஞ்சூழல். (௩௧)

கண்டானங்கிருந்தபெருங்கடவுளருக்கடிவணங்கித்
தண்டாநன்னியமமுனிதனக்குமுறைதப்பாம
லுண்டானகடனுற்றியுறலுமுகந்தரனுடையோன்
பண்டாயவிரவிகுலப்பதிக்கிதனைப்புகல்கின்ருன். (௩௨)

மாலரசேசூழலுறவந்தாய்மற்றின்றெனக்கு
ஞாலமுறுமதிதிநீநானளிப்பனுன்னுளத்திற்
கோலமுறநினைத்ததனைக்கோடிமுறைப்படியென்னச்
சாலநெறிகற்றபிரான்றவமுனிக்குப்பகர்வானல். (௩௩)

வையகமெல்லாம்புரக்குமன்னனியானும்போல்வார்க்
குய்யுமுறைகேட்டவெலாமுகந்தளிக்குமாறன்றி
யையநின்கைபெறுவேனேபிறவிதருமவாவென்றே
பையவொழித்தனனனைத்தும்யானெதுவோபகர்வதுவே. (௩௪)

என்றிசைப்பமாமறையோனெவரேனும்புகுந்தவர்க்குத்
துன்றியிருந்தவரளித்தறாய்மையாமாதலினுற்
குன்றிசைக்குநெடுங்தோளாய்கொடைவல்லோர்பெறுமிடத்தி
னென்றுபுகழாநாணுதுரைத்திமனக்கருத்தென்ருன். (௩௫)

அத்தகையேலுத்தமநீயாற்றுசெபத்தேற்றபயன்
சித்தமகிழ்ந்துதவென்னத்திருமுனிவனுளத்துன்னி
யித்தகையபயனருத்தமீதுமுழுக்கவும்வேண்டிற்
கைத்திறல்சேர்புனலளிப்பன்கோடியெனக்கழறினன். (௩௬)

மாமுனிவன்மொழிகேட்டவயவேந்தனற்புதனுய்க்
கோமுனிநின்செபத்தில்வருபயனனைத்துங்குறித்தாயேற்
காமுறுவனெனக்கரைப்பக்கலைவல்முனிநிராசையினே
னுமுறைபாற்பயனென்னேவனுகுவதென்றருள்செய்தான். (௩௭)

இக்குவாகெனும்பெயரோனிவ்வாறென்றுணராமற்
புக்குனதுபயன்றருதியெனப்புகன்றேனினிவேண்டேன்
மிக்குயருந்தவத்தோய்நீவேண்டாமேவேண்டியதே
தக்கவர்கள்கடனென்னத்தரணிபனுக்கவனுரைப்பான். (௩அ)

நீயுரைத்தசொன்மறந்துவேறொன்றுநிகழ்த்துகின்றாய்
மாயுமிடத்தும்பிசகார்வாய்மையதுமாசாமேற்
றீயுறுத்துந்தவம்பொய்க்குந்தினமூன்றுகாலஞ்செய்
தாயுறுத்துமனுட்டானபலனனைத்துந்தொலைந்திடுமே. (௩௯)

கேட்டமுறையான்றருவன்கோடிநீகிளர்ந்தென்ன
நாட்டரசனவனோடுநவிலுமவர்தாய்மறுப்ப
மீட்டுமிருவர்களாங்குவிகுருதாகாரங்களொடு
நீட்டுறுவாதிடவிடைந்துநிருபனெதிர்நின்றுரைப்பார். (௪௦)

இவன்கொடுத்தான்கோதானமிப்பலனையான்கேட்கக்
கவலாதேதந்தபினர்கருதிமிகத்தெளிவெய்தி
நவமானபசுவிரண்டுநானீந்தப்பயனையெல்லா
மவன்பாலீந்திடுமாறுச்சென்றுரைப்பவகங்கொண்டான். (௪௧)

இசைந்தபினர்நிலைநீங்கியெனக்கரியனும்மறைய
நிசந்தவறிச்சென்றானைநேடியன்றுகண்டபினர்
குசம்பெறுநீர்கொள்கென்னக்கொள்ளேனென்றுரைக்கின்றா
னசந்தாட்செய்புலனுடையாயாய்ந்துரைத்தியறனென்றான். (௪௨)

மற்றவனுமெனைவலியக்கேட்டன்றுவாழ்சுரபி
யுற்றொருவர்க்களித்தபயன்றான்பெற்றான்யானுகவேன்
பற்றுடையார்க்கீதலன்றிப்பயன்வேண்டார்க்கிவனென்னோ
கொற்றவனேநிர்ப்பந்தஞ்செய்தலோகுறியாயே. (௪௩)

எனவுரைப்பமுன்னுரைத்தோனிவனிசையாவிடிலன்றே
முனமுரைத்தமொழியறனாமுன்னிசைந்துபின்வெறுத்தா
லினிதாமோயான்விடேனிவனையெனமன்னவனுந்
தனதுளத்திலிதையோர்ந்துசாற்றுனென்றாயினான். (௪௪)

அம்முனிவனவ்வுரைகேட்டரசேநீகேட்டனையே
யிம்முறையான்மனங்கோடியிசைத்தபடிகருதுமலாற்
றெம்முறையாற்சபித்திடுமெனப்புகலத்திறன்மன்னன்
கைம்முறையானீட்டினான்வேறொன்றுங்கழறாமே. (௪௫)

செவித்தபயனித்தரலித்தோர்வேந்துக்காகவென
வவித்தபுலனுறுமுனிவனரும்புனலோடவித்திடலுங்
கவித்ததவளக்கவிகைக்காவலன்கையேற்றபினர்
சுவைக்கலைதேர்மாமுனியைநோக்கியிதுசொல்வானால். (௪௬)

யான்பெற்றேனின்றவத்தையினிக்கதிநின்றனக்கெய்த
வான்பெற்றவெனதுபயனருளுவனீவாங்குகென
வூன்பெற்றவாதமிடுமிருவரவனெதிருந்தேற
யேன்சொற்றாயிதுதவிர்த்தியெம்முரைகேளெனச்சொல்வார். (௪௭)

காமமொடுகுரோதமெனுமிரண்டுமுருவங்காட்டி
நேமமுறுவாதுடனேநினையடைந்தோமிதுகேண்மோ
தாமமுறுமிமராசன்றருமமிரண்டினுக்கிடையின்
மாமுனியுநீயுமிகல்வாதுசெயுநீர்மையவே. (௪௮)

மற்றதெலாம்பொருளன்றுவழங்குவதுமேற்பதுவுங்
கொற்றவனின்செயலன்றுகடவுள்செயலெனக்குறித்தே
யுற்றுணர்தியெனவுரைப்பவறங்கூறமுதவுபல
னற்றவனைக்கதிசேர்க்குநீயென்னைநாடுவதே. (௪௯)

என்றுரைப்பவந்தரத்தினிமையவருஞ்சரோருகனு
மன்றவருக்கெதிராகியலர்மழைதூர்த்திடத்திசைக
டுன்னுபுகற்றுந்துபிகடுவைப்பமகிழ்வொடுநின்றார்
சென்றிவரும்பணிந்தனர்கடிசைமுகத்தோன்பகர்கின்றான். (௫௦)

மறையவனேநின்விரதவல்லபமார்க்குளதாகு
முறைதியெனதெழின்முகத்தினுடனீக்கியெனக்கரைப்ப
நிறையறிவுமிகுந்தவனுநிருபனுமாங்குடனீத்துக்
குறையகலவயன்வதனங்குடிகொண்டார்கொண்டாட. (௫௧)

வேதியனுந்தனதிருக்கைமேவினனுங்கடைந்த
சோதியுறுகடவுளர்தந்தொல்லையிடங்களிற்புகுந்தார்
காதியமாமறலிமுதற்காரணரும்போயகன்றார்
மீதியம்புஞ்செபமுயிர்க்குமேலானசெயலென்றான். (௫௨)

வீடுமனுங்கதையுரைப்பவிரும்பிமனமிகமகிழ்ந்து
பீடுபெறுமறன்குமரன்பேசுவானிதையுணர்ந்தேன்
மாடுறுநன்முனிவோர்கள்வகுப்பர்திருநிலையன்றென்
றீடுபடாவுணர்வுடையாய்நிலைக்குமாறியம்பென்றான். (௫௩)

மைந்தனேமகபதியுமாவெலியுமோர்காலஞ்
சந்தமுறவினவிடையந்தந்ததுளவதையுரைப்பன்
முந்துநீகேட்டதற்குமொழிபொருளாங்கேட்டியெனச்
சிந்தைமகிழ்ந்திடவுரைத்தானிப்பிறவிசேராதான். (௫௪)

ஒருஞான்றுமகத்திறைவனேதிமநாயகனிடஞ்சென்
றிருதாட்கள்சிரந்தாங்கியிருந்தபினர்விரோசனன்செய்
பெருவாழ்வினயர்ந்தவனிப்பேருலகிற்காண்கிலோ
மருமாலைபுனைதோளாய்வகுத்தியவனிருக்குமிடம். (௫௫)

என்றுரைப்பவவனகைசெய்திந்திரனைமுகநோக்கி
யின்றுனதுமனந்தெளிந்தேனுயினுமாங்கவனிருந்து
துன்றுவதுமுரைசெய்வேன்சுரபியயங்கரமென்னு
மன்றவுடலினைத்தாங்கிமண்ணின்மிசைபயினறிடுவன். (௫௬)

கண்டுநீபுரியும்வகைகழறுகெனவவனடியே
னண்டியவனொடுசிலசொலறைந்துமீள்குவனென்ன
முண்டகனும்விடைநல்கமீண்டுமுகில்வாகனனுந்
தண்டலிலாவுலகனைத்துந்தான்றேடியலம்வந்தான். (௫௭)

ஓரிடத்தில் * வாலேபத்துருவமைந்துபயில்கின்ற
சீரிடத்தன்றனைக்கண்டுதேவர்கோனருகெய்திப்
போரிடத்தின்மிகுவிசயம்பூண்டநீயீண்டிருந்து
பேரிடத்தெங்கனுமறையவுமியருந்திப்பிழைத்தனையோ. (௫௮)

மேன்மையுமுன்பெருஞ்செல்வமேம்பாடுமெமைப்போல்வார்
பான்மையுமோர்பொருள்செய்யாப்பரிசுமெங்ஙனெய்தியவோ
வான்முகிலினிறமுடையாய்வந்திருந்தாய்மறைந்துருவந்
தான்வெருவலெனப்புகன்றசதமகனுக்கவனுரைப்பான். (௫௯)

வேறு.

இந்திரநீயிங்குதவியபுன்சொலிகழ்வாலே
தந்திரமாகுந்தானவருற்றந்தளர்வாரோ
முந்துகுறிக்குங்காலையினச்சமுடனேடி
வந்ததுசொற்றாயின்றுமனத்தின்வலியோமே. (௬0)

ஆவதுமேவுங்காலையினாரேயடல்கொள்ளார்
வீவதுமேவுங்காலையினாரேவீயாதார்
காவதுகாவாதாண்மைசொலாரேநல்லோரென்
றேவதுகொள்ளாமாவெலிசொற்றானிவையெல்லாம். (௬௧)

அக்கணமந்தமாவெலிமேனியதில்வைகுந்
தக்கவள்செய்யாண்மிக்குருவோடுந்தானெய்தி
மைக்கடல்வண்ணன்றன்னெதிர்நிற்பமகிழ்வோடு
மிக்கடைநின்றாயாரைநீயென்றானிமையாதான். (௬௨)

தாளாருஞ்செந்தாமரைமேவுந்தனிமங்கை
நாளாய்நானேமாவெலிதன்பானனியுற்றேன்
கேளாய்முன்போலல்லனிவன்கீழ்மகனானென்
வாளாநின்பால்வந்தனனென்றாண்மலர்மங்கை. (௬௩)

அங்கதுகேட்டேயிந்திரனன்பாலடிபோற்ற
மங்கையவன்றன்னெஞ்சுபுகுந்தேமறைவானாள்
பொங்கியசிந்தைமாவெலியாதும்பொருள்செய்யான்
றங்கினன்மீண்டான்வானவர்கோமான்றனதூரில். (௬௪)

வேறு.

அன்றுமுதற்பன்னெடுநாளகன்றபினரவ்வசுரன்
துன்றுபனிவரைக்குகையிற்றொடர்ந்திருந்துதவமியற்ற
வென்றமகபதியவன்பான்மீளவும்போந்துரைத்தனனா
லொன்றுமுணராதவன்போலவ்வசுரனுளம்போழ. (௬௫)

*வாலேபம் - கழுதை.

மாமணித்தேர்நிரைதுறந்துவாரணங்கள்படைதுறந்து
நிமணிச்செஞ்சுடர்துறந்துதேவர்நிறையவைதுறந்து
கோமுறைபோற்கிரியினெருகுகையிடத்திற்குடியிருந்தாய்
வாமவயன்பொறித்தபடியிதுவென வுமவன்வகுப்பான். (௬௬)

தொல்லாண்மையுடையோருந்தோற்றிவித்தநான்முகனும்
வல்லாராய்ச்சிலவைகல்வாழ்ந்துசின்னுடியருழப்பர்
சொல்லான்மிக்கவனேநீதுன்பமுதலடைந்திலேயோ
நல்லோர்கள்வெருவுவரோகாலவியனலனுணர்ந்தும். (௬௭)

கோடையினுற்றீய்ந்தபசுங்கூழ்மழையாலாவனபோல்
வேடையினுற்றுயருழந்தோர்மீண்டுநலனுகர்ந்திடுவர்
வாடையினுற்கனல்விளங்குமக்கனல்வாடையின்மடங்குஞ்
சாடையினுற்காலவலிதள்ளவரிதாமெவர்க்கும். (௬௮)

இக்காலமிவ்வண்ணமியைந்ததெனக்கெதிர்காலந்
தொக்கபொழுதெவ்வண்ணந்தோற்றுமோயாருணர்ந்தோர்
மைக்காளமுகிலூர்ந்தோய்மனம்வலித்தியெனப்புகல
தக்கோனைமிகமகிழ்ந்துகோபதிதன்புரஞ்சார்ந்தான். (௬௯)

தாவுபுகழ்மிகுமகவான்றுரணியிற்சார்ந்தொருநாள்
மேவுபுனற்பகீரதியாம்வியனதிதோய்ந்தவனிருந்தே
நாவுளருஞ்செபமாகிநன்னெறியாற்பயில்போதிற்
பூவயனேர்வீணைமுனியாங்கடைந்துபுனறினைத்தே. (௭௦)

இந்திரனேடுறவாங்கணிரவியொளிர்மானமிசை
வந்தொருபெண்கொடியுதிப்பமலர்க்கரங்கள்குவித்தவராய்
நந்தலிலாக்காட்சியுளாய்நாமமேதுரைத்தியென
விந்திரையானவுணரிடத்திருந்திதுகாறகன்றற்றேன். (௭௧)

எனவுரைப்பவவரிடத்தினிருந்தநீயகன்றெய்த
மனனுறுத்துசெயலென்னேமலர்ச்செல்விபுகலுகெனத்
தனதியற்கையவருணரச்சாற்றுகின்றுடீவினையா
னினைவுடையோரிடந்தங்கேனெனவும்வாய்மைநிலமுணர. (௭௨)

வேறு.

பரிதியுற்பவமொடுக்கமாம்பருவத்திற்றுயில்வோர்
சுருதிசொல்வதைப்பழித்தவர்பிறர்மனைதொடுவோர்
கருதுசெப்பமற்றோரமாய்ப்புகல்பவர்காமுற்
றொருவர்தம்பொருள்வெஃகினேருண்மைகூறுதோர். (௭௩)

செய்தநன்றியைமறந்தவராருயிர்சிதைப்போ
ரெய்துறும்பயனிலாதசொற்புகல்பவரெவர்க்குங்
கைதவங்கள்செய்பவர்கள்ளுங்கயமுமேவிழைவோர்
வைதவாயினரிவருழைமருவலேன்மன்னே. (௭௪)

விருந்துகண்டுமெய்ப்புளகெழவமுதுசெய்விப்போர்
வருந்திகல்லொழுக்கத்தினின்மருவுவோரெவர்க்கும்
பொருந்தவின்சொலேபுகல்பவரரும்புகழ்பூண்டோ
ரிருந்தமாமனையெனதுதாயகத்தினுமினிதே. (௭௫)

முன்னர்க்கூறியவினைக்கெதிர்முயற்சிகளுள்ளோர்
பின்னரும்பலவறனுடைப்பெற்றிகள்விளைப்போர்
மன்னுதெய்வதமிகழ்ந்திடார்குலமுறைவழாதா
ரென்னைநீங்குறுவிரகுணர்ந்திருத்தினோராமல். (௭௬)

என்றுகூறிடவிந்திரனற்புதமெய்தி
நன்றுதீயவர்நல்வினைசெய்துளரென்னி
லொன்றநீபுகாதெவ்வணமொழிகுமாறென்ன
மன்றன்மாலையாள்சிறுநகையுடனிதுவகுப்பாள். (௭௭)

ஒறுப்பினாலுறுமாறுபோற்சிறிதுகாலுலவி
மறுத்துமீள்குவனல்லவர்தீவினைமருவிற்
பொறுத்தமாற்றுவன்போக்குமீண்டெய்துவனீங்கற்
சிறப்பினன்மையாமீள்வதேயெனமனச்செருக்கு. (௭௮)

அறிதிநீயெனவிருவருமன்பினிலிங்க
னுறுதியாயுறுகருமமேதென்னநின்னுழையிற்
செறியவந்தனனென்றவன்றேகத்திற்புகுந்தாள்
மறுவிலாவருமறைத்தனுவடிவமாய்மங்கை. (௭௯)

ஆதலாலறனுருவமாமரசர்களரசே
யீதுநீமுதற்கேட்டசொல்விடையமீதென்றே
மீதலத்தவர்வேதமாமுனிவரரோடு
பூதலத்தரும்புகழ்பெறுந்தகைபுகன்றனனே. (௮௰)

கேட்டமைந்தனுந்துண்ணெனத்தன்னுளங்கிளர்ந்து
மீட்டுமோதுவன்காலவித்தியாசநானுரைப்
பூட்டியோதிடவேண்டுமென்றிரந்திடப்புனிதன்
வாட்டிறற்பிறங்கடைதனக்கிவ்வணம்வகுப்பான். (௮௧)

காட்டமென்பதுநிமிடமூவாறுதான்கலந்தாற்
காட்டமுப்பதுகலைகலைமூன்றுநூற்றறுபா
வீட்டுமோர்சிறுமுகுர்த்தமிவ்வியல்புடைமுகுர்த்த
நாட்டமுப்பதோரிராப்பகனுளெனநவில்வார். (௮௨)

அனையநாள்கண்முப்பஃதெனின்மாதமாங்கதுதா
னினையவோரிரண்டிருதுவாமிருதுவாறென்னி
னினியவாண்டதாமிரண்டயனமுமதிலிசைப்பர்
வினைவெல்விண்ணவர்க்கோர்தினமாண்டொன்றுவிளம்பில். (௮௩)

உத்தராயணம்பகலதாமுறுமிரவாகு
மத்தலத்தருக்கோதியதெக்கணவயன
மித்தினங்கண்முந்நூறுமேலறுபதாயிசைப்பர்
சுத்தவானவர்க்கோர்வருடத்தொகைசூழின். (அச)

அனையவாண்டுபன்னிரண்டெனுமாயிரநான்கு
புனையும்பாகமேற்றியதொகைகிருதயுகம்புகல்வர்
வினைவலத்தொகைமூன்றெனிற்றிரேதமீண்டிரண்டிற்
கனைதுவாபரமொன்றுநற்கலியுகத்துருவம். (அரு)

முன்னுரைத்தமுந்நூற்றறுபஃதினைமுறையாற்
சொன்னநற்றுருவத்தொடுதாக்கியதொகைக
ளுன்னுநாலுகமுயர்வருடங்களாவுரைப்ப
ரன்னதன்மைசெய்கணிதமுமறைகுவன்கேண்மோ. (அசு)

பத்துமேழுநல்லிலக்கமாயதன்மிசைப்பருவம்
வைத்தவாயிரமாகமச்சங்கையாவகுப்பர்
சுத்தமோங்கியமுதலுகம்பன்னிரண்டிலக்க
மெத்துமாயிரஞ்சோடசமாறதாய்விரியில். (அஎ)

இரண்டதாமுகமிலக்கமெட்டதன்மிசையறுபான்
முரண்டனுன்குடையாயிரம்வருடமேமொழிவர்
திரண்டமூன்றெனுமுகந்திகழ்நான்கிலக்கத்தோ
டரண்டமுப்பதீராயிரநாலதாயறைவர். (அஅ)

அந்தநாலுகஞ்சதுரமாமவைகளாயிரந்தீர்ந்
தந்தணன்பகருந்திரவாகுமாங்கதுவு
முந்தவோதியதொகையதாமுறைப்படிவருட
முந்திநூறுசென்றிடலயனுயுவாமொழிவர். (அகூ)

பகலிற்பல்லுயிர்மல்கிடுமிரவினிற்பயிலா
தகலிடத்துறுபிரளயத்தடங்கிவிண்டிடுமா
விகலினேரிலாயிசைத்தவன்னிமிடநுட்பத்திற்
புகலுதற்கருங்காலமுமெண்ணறப்புணரும். (௯௦)

காலதூலங்கள்கண்டவருளரதிநுட்ப
மாலமுண்டவனவனியுண்டவனலாதறிந்தோர்
ஞாலமீதிலைவிண்ணினுமிலையிதுநன்மை
மேலுமப்படியுணர்தியென்றுரைத்தனன்மேலோன். (௯௧)

வேறு.

குந்திதந்தமுதன்மைந்தனங்கதுகுறித்துணர்ந்துபினுமோதுவா
னிந்தநல்லுலகிலுற்றநற்கருமம்வினாவினுற்றலெனயாவரும்
வந்தகூறுவருணர்ந்திலேனதனைமையதீரவருள்செய்கென
வந்தவாறுதெரிகங்கைதந்தமகனவனுணர்ந்திடவழங்குவான். (௯௨)

விரைவினுற்றுதலுமெதுவினுற்றுதலுமென்னவேகருமமிருமையா
முரவுதன்னறிவினுணர்ந்தவையுஞற்றலாரியர்கள்கடமையே
விரைவினுற்றுதலையூக்கமென்றுலகிலோதுவாரதுவிளம்பிலேன்
சிரமுறுங்கருமமுன்னியற்றுமுறைகேட்டியென்றிதுதெரிக்குவான். (௯௩)

மேதையென்றொருவன்வேதபுங்கவனளித்தமைந்தனொருவின்மதன்
போதநாலுமுருவன்கடந்துகலைபுனிதனாகியுலகியலுநாள்
மீதுறுங்கருமகாமதங்களுடன்மேவுகின்றமையுணர்ந்துமா
மாதவஞ்செய்சிரசாரிநாமமகனுக்குவாய்த்திடவழங்கினான். (௯௪)

அனையமாமுனிவனொருதினத்தின்மனையாளையூடிமுறைசீறியே
தனையனுக்கவடனுயிர்செகுக்குமுறைதந்துபோயினனோர்சார்பிலே
வினைவலத்தினிவனுன்னியுன்னியொருவெம்மைதங்கியுயிர்வீடுமா
றனையவன்னையைமுடித்திலன்றனதியற்கைமேவரவிருக்கவே. (௯௫)

அத்தனல்லுரைமறுக்கொணாதெனையளித்ததாயையுயிர்கோறொணா
தத்தமந்தனதுபெயரைமுற்றுதலென்றுன்னியங்கவனுசாவலாற்
சித்தமாமுனியெழுந்தசீற்றமதுசிந்திமீண்டுயிர்செகுப்பனோ
புத்திவிஞ்சுதிறலாளிருந்துபுரியான்கொலோவெனவருந்தியே. (௯௬)

வந்தடைந்தனனிருந்தகுழல்வயின்மகனையுந்தனதுமனையையு
முந்துகண்டுமுனிவின்றியேசிறியமுறுவல்பூத்தருகினாதலுஞ்
சிந்தையன்பொடுபணிந்துளார்களிருசெங்கைகொண்டுபுயமூடுற
வந்தணன்றழுவியவர்மனக்குறையகற்றிவாழ்ந்தனன்விருப்பொடே. (௯௭)

ஐயகேட்டிவிறலூக்கமின்றியறிவாலியற்றுகருமத்தினி
லெய்துமோர்பயனெனத்துணிந்துணர்தியென்றுகூறவறன்மைந்தனு
மெய்யிதென்றுணர்வுகொண்டுபின்னரும்விளம்புவான்றனையராதியா
வுய்யுமுன்றினுமுயிர்க்குநல்லுறுதியொன்றதேறவுரையென்னவே. (௯௮)

உரைசெய்வானரியகங்கைமைந்தனுலகொன்றுமின்பமெனவிம்மையாம்
விரவருத்தமெனவிம்மையோடுமறுமையும்விளக்குமறன்மேவரும்
பரவுமும்மையுமளிக்குமென்றுணர்திபாரின்முன்னரொருவேதியன்
புரைகொளின்பமொருவித்தனத்தின்மிசைபோதவாசைகொடுதிரியுநாள். ()

தவமுயன்றுதனமெய்தவுன்னியொருசார்பிருந்துதவமாற்றிட
நவமுயங்குமொருதேவன்வந்துன்மயல்நவிலுகென்னவவனாதலு
மவமுறும்பயனெனாதுநல்கமனதாகியாண்டுறுதியாகவே
கவினுலாவுறுமியக்கனைக்கருதவவனும்வந்துருவுகாட்டவே. (௧௦௦)

செப்பதாமரைபுனைந்தமார்பன்மனமுன்னுமையல்வலிதிரவே
பெய்யவெங்கனகமென்னநன்றனதுபேசுமாசையளவென்னலு
மைபன்மீளவுநினைந்துவேதியர்களாடகம்பொருள்செய்யார்நமக்
குப்பலாவதிதனுவிசைக்குமுறை[illegible]யொன்றமில்[illegible]பெனவுன்னினான். (௧௦௧)

தேர்கிலாதுபொருள்கருதினேனுனதுதெரிசனத்திலவைதீர்ந்துளே
னேர்வதென்னையறனோடுலாவுதவமொன்றுநல்கவருள்வாயெனப்
பார்வைசெய்துநெறிகருதுநீர்மையிதுபயிலுகென்றவன்மறைந்தனன்
சார்புநற்றவமெனத்துணிந்துமுனிசாலநாடவமுயன்றுளான். (௧௦௨)

அந்தமற்றதவமாற்றிநற்பயனடைந்தபின்னரெவராயினுந்
தந்திடென்றுவரினுதவுவேனரியதனமெலாமெலிவுதீர்ப்பன்யான்
முந்துதேயமுழுதாளவேண்டினுமவர்க்குநல்குவன்முதன்மையென்
றுந்துதன்மையனடைந்துமாமகிழ்வினுற்றனன்புவியுளொப்பிலான். (௧௦௩)

வேறு.

காமாதியிருமைக்குமரிதாயதறமென்றுகசிவோதியே
நாமாதியறநின்றபெருமானுமற்றொன்றைநவில்கின்றனன்
வாமாகமங்கற்றமறையாளனொருவன்றன்மனையாளொடுந்
தாமாதிகுணமற்றருங்கானிருந்தேதவஞ்செய்யுநாள். (௧௦௪)

கொல்லாதவிரதம்பிடித்தேவனத்தூடுகொட்புற்றநாட்
சொல்லாதமகமொன்றுபசுவின்றியியலாதிசொலுமாறுகொண்
டுல்லாசமுடனேமுடிப்பானிசைந்தானுணர்ந்தும்பர்கோன்
செல்லாதிவ்வியல்பென்றுசொல்லித்தணந்தான்சிறப்போடுமே. (௧௦௫)

முனிவோர்கள்பலர்வந்துமுறையன்றுபசுவின்றிமுயலுந்திறந்
தனிநன்மையெய்தாதுமகமூடுசெயுமாறுவிரதந்தபா
தினிநீயுமுறையாகமுயல்கென்னவிசையாமலவனேகலு
மனையாளுமொவ்வாதுநீசெய்யுமாறென்றுவழுவோதினாள். (௧௦௬)

அவள்வாய்மைகேளாதுகனலைச்செறித்தானவ்வனலாகிலா
துவளுஞ்செயற்கண்டுதனிநின்றமுனிமுன்னரொருமானடைந்
திவறன்மையென்னேமகத்தெல்லையுயிர்நீங்கினெய்தாப்பவம்
பவளங்கலந்தொத்தபடிவங்கொள்முனியான்பரிந்தெய்தினேன். (௧௦௭)

பசுவாகவேகொண்டெனைக்காதிமகமொன்றுபயில்கென்னவு
மிசையாதிருப்பத்தொடர்ந்தெய்துதனிமானெடுத்தோதுமா
லசைவின்றிநீவேதமறைநின்றபரிசானல்லவிநல்கிடிற்
கசிவானபலதேவருனைவந்துவிழைவார்கலந்தன்பினால். (௧௦௮)

வந்தோர்திகைத்தேதிரிந்தார்கள்காணென்றுமானோதியே
யந்தாதரத்தோனைதெரிசிக்குமாறுகவருளீதலு
முந்தேறநோக்கித்தன்னையம்பழுப்பேறமுனிவைகலுங்
கொந்தாரறத்தெய்வதம்வந்துமறையுண்மைகூறிற்றரோ. (௧௦௯)

மறைஞானமுதல்வன்றன்மனமன்றுதுணிவெய்திமறையோதுமா
றிறைவேள்வியதுசெய்துதவமேறநலமேறவிசையேறவே
நிறைவேறுகருமம்புரிந்தானெனச்சொல்வர்நெறிகற்றுளோர்
துறைவேறுசொலலென்னையறனன்றிமுயலார்கடுணிபோர்ந்துளோர். (௧௧௦)

வையந்தனிற்சொற்றமறைகூறுவண்ணங்கள்வழுவாதுசெய்
துய்யுந்தவந்தானமிதனானெறிப்பாலுறுந்தன்மையே
மெய்யானபொருளென்றுகூறத்தனுளமன்புமிகவிஞ்சவே
பொய்யொன்றுமுணராதவன்மீட்டுமொருவாய்மைபுகல்வானரோ. (௧௧௧)

நலமெய்துகருமங்கள்சிலர்செய்துபலர்சொல்லநவைபெற்றுளார்
நிலமெய்திவருபானுநிகர்ஞானிபிதனுண்மைநீயோதெனக்
குலமுய்யவருவோன்மகிழ்ந்தேதனன்போடுகுறைதீரவே
வலமெய்துமறன்மைந்தனிருகாதினமுதுக்கவாறோதுவான். (௧௧௨)

நிலவீனிளந்திங்கண்முடியானுரைத்தற்குநிகரற்றவன்
பலவீணைமுனிவோர்களமரேசர்கணநாதர்பணிபாதனா
யிலவீனுமலர்போலுமிதழாளுடன்சிங்கவணையேறியே
நலவீதிசெறிசூழல்கயிலாயவரைதங்குநாடன்னிலே. (௧௧௩)

முனிவோர்கள்சிலர்வந்துமுறைகுன்றவிதிதந்தமுதன்மைந்தனுங்
கலைவோருடன்வேள்விபுரிவானுனக்கீதலவியன்றியே
தனிநின்றபொருளானசுடரேயுனருள்வண்மைதானோர்கிலோ
மௌனநம்பனைகைகொண்டிருந்தான்முனிந்தன்னையிதுகூறுவாள். (௧௧௪)

உலகத்தர்செயுமாறுசெய்யாமலொருதக்கனுணர்வற்றிருந்
திலகச்செய்கொடுவேள்வியழிவெய்துமாறுகவிசைவாயெனா
வலகற்றகுணனானமகுணற்குரைத்தேயவன்றன்னொடும்
பலகற்றகணநாதரொடுமேறுமேல்வந்துபயில்காலையில். (௧௧௫)

வானூடுபயில்கின்றமறைநாதன்வரவுன்னிமகமாற்றினோன்
றுனேதுமல்சயாதுபலருக்குமவிநல்குதறுவாயுணர்ந்
தானுதபெருமானுநாதனூடுமொருமைந்தனவனல்கியே
ஞானுதிபர்கள்சிந்தைமகிழ்வெய்தவுய்த்தானயந்தாங்கரோ. (௧௧௬)

படைகொண்டுவிழிசிந்துகனல்கொண்டுவலிகொண்டுபரமன்கயில்
விடைகொண்டுவருகின்றதனிவீரனைகைகொண்டுமேவார்முனந்
தடைகொண்டுகணநாதர்மகவேலைசூழ்ந்தார்தயாவின்றியே
கடைகொண்டவுலகென்னவிமையோர்குலைந்தார்கள்கைகொட்டியே. (௧௧௭)

அஞ்சாமல்யாகஞ்செய்விதிமைந்தனுடன்வைகுமமரேசரை
விஞ்சாயுதங்கொண்டடற்றித்திரித்தேவிரைந்தோடியே
பஞ்சானதெரிபட்டபாடொப்பவுலவிப்பரிந்தேற்றினா
னஞ்சானவுளமுள்ளவிதிமைந்தனுடனெச்சனவில்சென்னிகள். (௧௧௮)

அக்காலையபனோடியகிலேசனடிதுன்னியவிநல்குவா
னிக்காலையுய்ந்தெய்துமாறுயுன்னருள்செய்வையென்றேத்தலுந்
தக்கானும்வெயில்சாருமெழுகென்னவுருகித்தடிந்தோரெலா
முக்காமலுயிரெய்துமாதீர்த்துளான்வேள்வியுறமேவியே. (௧௧௯)

உட்கொண்டவகம்விடவேவென்றனைக்காலுறத்தாழ்ந்துசார்
விட்கொண்டபுலவோரும்விதிமைந்தனுஞ்சாலவேமாமகந்
திட்பந்தரச்செய்துபலகாலுமவிகல்குசெயல்கொண்டுளான்
றட்பந்தருஞ்சிந்தையானுதியாயுள்ளசார்போர்க்கெலாம். (௧௨௦)

நற்காரியஞ்செய்துமறிவின்மையாற்றக்கனவையெய்தினன்
சற்காரியத்தோனன்மனனெய்துபெரியோய்தரிப்பாயென
முற்பாவனஞ்செய்தமுதாதையோதத்தன்முகமாமல
ரற்கோதையங்கண்டவரவிந்தமெனலாயதறன்சேய்க்கரோ. (௧௨௧)

வேறு.

பின்னருங்கரங்கள்கூப்பிப்பேசுவானறத்தின்மைந்த
னன்னிலைப்பொருள்களெல்லாநானுணர்வுறவுரைத்தாய்
பன்னுபார்க்கவனுக்கோர்பேர்சுக்கிரனென்பர்பார்மே
லன்னபேர்வந்தவாறிங்கறைந்திடவேண்டுமென்றான். (௧௨௨)

என்றிவன்கூறத்தாதையிசைப்பன்முன்னொருகாலத்தி
லென்றுநற்குபேரன்சார்பிலிவன்செய்ததுயரநோக்கி
மன்றலங்குழலாள்பங்கன்வாரியுண்டதோமுகத்தாற்
றுன்றுசுக்கிலமாய்வீழ்ந்தானப்பெயர்தோன்றிற்றென்றான். (௧௨௩)

அவ்வணமுளத்திற்கொண்டேயறன்மகனுரைப்பானைய
செவ்வணமேனிகொண்டதிருமுனிவியாதன்றந்த
கைவலசுகன்றன்றன்மைகாதலுற்றனன்கூறென்ன
வெளவ்வியமிலாதநெஞ்சனவன்கதையுரைப்பதானான். (௧௨௪)

சுருதிகளனைத்துஞ்சொற்றதூயநன்மகவுவேண்டிப்
பரிதிசூழ்ந்திறைஞ்சும்வெள்ளிப்பருப்பதமருங்குசார்ந்து
கருதியேயிமயமீன்றகன்னிநாயகன்பொற்றாள்கள்
தருதவம்பயிற்றிநின்றானளப்பருங்காலந்தங்கி. (௧௨௫)

பின்னருமகங்களாற்றிப்பிரானடியன்புவிஞ்சத்
தன்னகங்குழையுநாளிற்சாரணர்சித்தரும்பர்
மன்னியவியக்கர்வேதமாமுனிவரர்களோடு
மென்னையாளுடையகோமானுமையொடுமேற்றில்வந்தான். (௧௨௬)

பரிதிதன்னுதையங்கண்டபங்கயமென்னலாகிச்
சுருதிகள்பகர்ந்தவாதராயணன்றொழுதுபோற்றிக்
கருதியவண்ணநல்குங்கடவுடன்காட்சிநோக்கி
யுருகினனுளமுமென்புமவனிதையுரைக்கலுற்றான். (௧௨௭)

வாய்மைசான்முனியேநின்றன்மனத்தினிற்கருத்தையின்று
நேயமோடுரைத்தியென்னநிமலனேநாயினேற்குத்
தூயவனாகிப்பஞ்சபூதவீரியனாய்த்துன்னுஞ்
சேயினையுதவுகென்றானவனருள்செய்துபோனான். (௧௨௮)

அப்பெருஞ்சாரனீங்கியமைந்திமையத்தினூடு
செப்பருந்தகைமைத்தாயசாலையிற்றிகழுநாளி
லொப்பிலானரணிதாங்கியுறக்கனன்மதிக்குங்காலை
மைப்படிவிழியாளாங்கோரரம்பைதன்வரவுகண்டான். (௧௨௯)

மதர்விழிக்கலசக்கொங்கைமங்கைதன்வதனநோக்கி
மிதமறுமதனனம்பான்மெலிந்திடுமாறுகண்டே
யதர்வணமுறுவன்மங்கையவனுளமுணர்ந்தன்போடு
சுதர்மொழிச்சுகமாயாங்கோர்தருமிசைக்களித்திருந்தாள். (௧௩0)

மதன்கணைதுளைப்பத்தூயமாமுனியிருந்தபாவை
வதனமண்டலத்தின்சிரும்வடிவமுமுளத்தைப்போழ
விதனமுற்றிருக்குஞான்றில்வீரியங்கரத்திற்றூங்கி
மதனமுற்றரணியூடுபுகுந்ததுவையமுய்ய. (௧௩௧)

மதித்திடுகருமந்தாழாதுஞற்றலும்வரதன்கொண்டு
பதிக்குமவ்வரணியூடுகனலெனப்பாரில்வந்து
குதித்தனன்சுகனென்றேதுங்கோமுனிகிழ்பாற்குன்றி
லுதித்தசெங்கதிருநாணத்தாதைநேருருவினோடும். (௧௩௨)

கீழ்மைகளனைத்துந்தாழமறையொடுகிளர்ந்தஞானந்
தாழ்வுறவயரத்தோற்றுந்தனையனைமுனிவன்கண்டு
வாழ்வுடைவீடுகண்டோர்மருவுமானந்தப்பெற்றி
சூழ்வினைதுரிசறுத்தோனடைந்தனன்பரிவுதுன்ன. (௧௩௩)

அக்கணமமரர்வானிலார்த்தனரலரின்மாரி
தொக்கனர்மகவான்வந்துதோன்றினன்முனிவராரும்
புக்கினர்விதியும்வந்துபுலப்பட்டான்வெளியிற்கங்கை
தக்கநன்மகவையேந்தித்தன்புனலாட்டினாளே. (௧௩௪)

யாவருமாசிசொற்றாரிருமறைவிதிகண்முற்றித்
தேவர்கள்சூழக்கானமரம்பையர்செவிமடுப்ப
மேவரவிருக்குமேல்வைவிமலனம்பிகையோடெய்தித்
தாவருஞானவாரிதனக்கருடந்துபோனான். (௧௩௫)

வந்தவானவருநீங்கமைந்தனுந்தந்தைதாள்கள்
சிந்தையுஞ்சிரமுந்தாங்கித்திடனுவென்னுநாமத்
தந்தனைநன்பாலெய்தியருமறையாதியாக
முந்துவான்கலைகள்கற்றேமுனிவரின்முதன்மைபெற்றான். (௧௩௬)

மீண்டுதன்றாதைவைகும்விபினம்வந்தடைந்துசின்னா
ளீண்டுறுமுனிவர்மைந்தரிருந்தவர்தம்பாற்கூடி
மாண்டகுவிரதம்போற்றிப்பிரபஞ்சமயக்கினூடு
பூண்டசிந்தைபனுப்பின்றன்புலப்படாப்பொருளேபோல்வான். (௧௩௭)

வாதராயணநாமத்தோன்மைந்தனுக்குலகினுள்ள
பேதமுமாயையன்றிவேறிலைபிரமமொன்றே
கோதிலாயாதினுள்ளம்புறத்தினுங்குறிப்பதென்று
வேதவான்பொருளாற்காட்டித்திருவுள்ளம்விளக்கினானே. (௧௩௮)

அத்தகைதெளிந்தபின்னராசிரமங்கண்மூன்று
மித்தகையென்றுகூறவவன்மனத்திசைவிலாமற்
குத்திரமாயையென்பாற்குறிப்பதேன்ஞானநன்னூ
லுத்தமவுரைத்தியென்றானவனகைத்துரைப்பதானான். (௧௩௯)

கலைவலாய்மாயையென்றுகருதியாங்கதனுளின்ப
நிலைசெயாதகற்றலின்றியொருவினோர்நிலமீதுண்டோ
துலைநிகருளமுந்தீமைக்கச்சமுந்தயாவுந்தோற்றத்
தலையிணையுலைக்குநல்லோர்க்கருந்தவமதன்மேலுண்டோ. (௧௪௦)

என்றவனுரைப்பமைந்தனென்னிதுபுகன்றவெல்லா
மொன்றியபிரபஞ்சவாட்கைகருதினோர்க்குறுதியாமா
னன்றியும்விலங்காஞ்செம்பொனிரும்புதீவினையாநாடி
லின்றுடன்மிகையாமுத்தியெய்துமாறுரைத்தியென்றான். (௧௪௧)

தூயவனவனைநோக்கித்தோன்றலேவிதேகநாட்டின்
மேயவான்மிதிலைகாக்குஞ்சனகனும்வேந்தர்கோமான்
மாயையின்வேர்களைந்துபிரமமாய்வையத்தோரி
னாயவன்பயிலாநின்றானவனையார்நிகர்க்கவல்லார். (௧௪௨)

சேறிநீயவன்பாலையந்தீர்வுறப்புகல்வன்வான
மாறுகொண்டனுகேல்வையத்தியலுணர்ந்தனுகவென்ன
வீறுடன்றந்தைதாளில்வீழ்ந்தவன்விடைகொண்டும்பர்
கூறியபரதகண்டங்குறுகினன்மறுவிலாதான். (௧௪௩)

வான்படுவரையுங்காடுமாந்தநீர்விரும்பினோர்க்குத்
தான்படாச்சுரமுநீங்கித்தாமரையணங்கனார்தம்
மேன்படுமுகங்கட்கொவ்வாநாணினுன்மெலியுநன்னீர்த்
தேன்படுமருதவேலிவிதேகநாட்டெல்லைசேர்ந்தான். (௧௪௪)

ஆடலுமணங்கனார்தமருஞ்சுரக்கியானமோங்கு
பாடலுமருத்நல்லியாழ்படித்தலுமகுணர்தம்பா
லூடலுமதனனம்பாலாருயிரொன்றோடொன்று
கூடலுந்தேறித்தேருக்கொள்கையணுகிச்சென்றான். (௧௪௫)

மாடமாளிகைகள்வீதிமாமணிமுகப்புமேடை
கூடகோபுரங்கணீடுமிதிலையிற்குறுகிவேந்தன்
பீடுயர்ந்திருந்தகொற்றமண்டபம்பெயர்ந்துசெல்ல
நாடவிற்றுவாரபாலர்விலக்கினரதிர்ந்துநண்ணி. (௧௪௬)

ஆங்கவருரைப்பச்சிந்தைவெருட்சியுமன்புமில்லான்
பாங்குறநிற்பவன்னூர்பார்த்திபர்க்குரைப்பவச்சந்
தாங்கிநற்சுகனேவந்ததன்மையானென்றுதேர்ந்து
பாங்குறையமைச்சரோடுமெதிர்கொண்டுபதத்தில்வீழ்ந்தான். (௧௪எ)

சிங்கவாதனத்திலேற்றிச்செழுங்கடன்முறைமையாற்றி
யிங்குநீயடைந்தபான்மையருள்செயவேண்டுமென்ன
வெங்குலத்தாதைசொல்லவிறப்பொடுபிறப்பிலாத
புங்கவன்னெறியைநின்பாலுணர்வுறப்புகுந்ததென்றான். (௧௪அ)

வான்கிளர்குரவற்கெல்லாமாயையின்புணர்ப்புநீங்கத்
தான்மறையுணர்த்துந்தூயோன்றானுணராததுண்டோ
யானுணர்ந்ததுவுமுந்தையியம்பியதாகுங்கேட்டி
கோன்செயலுரைப்பனென்றாவிவையிவைகூறலுற்றான். (௧௪௯)

வேறு.

வேதபாரகனுகிவிளங்குறு
மாதவற்குவழிபடரும்பலி
யோதனக்குய்த்துளுற்றுதல்வேதியர்க்
காதலாஞ்செய்முதலாச்சிரமமே. (௧௫0)

பணைகொடின்முலைப்பங்கயமாமுகத்
துணைவியோடுமகங்களுந்தொல்லையோ
ரிணையிலாக்கருமங்கள்விருந்தெனும்
புணையுமாற்றல்புகலில்லொழுக்கமே. (௧௫௧)

மைந்தனைத்தந்துமற்றதுநீத்தகன்
றுந்துகானிலுறுதன்மூன்றுவதா
மந்தநன்னெறியாற்றியகற்றியே
முந்துஞானமுதன்மையைமேவுவார். (௧௫௨)

வரன்முறைப்படிவந்தவர்முத்தியா
முரனுடைத்தவரென்றுரையாடலு
மரணியிற்கனலாமெனவந்தவன்
றரணிபற்கிதுசாற்றுதன்மேயினன். (௧௫௩)

துறையமைத்தநான்காசிரமந்தொறு
முறையியற்றிமுடிக்கருஞானமிவ்
விறையினெய்தினிளிச்செயலென்கொலோ
குறைவிலாய்புகல்வாய்ப்பயில்கொள்கையே. (௧௫௪)

என்றுகூறவிராசவரோதைய
னன்றுமுன்னிகழ்நற்றவஞானியர்
துன்றுமாசிரமங்களிற்சொல்லிய
குன்றுறுதூடத்துவர்மேற்கொடே. (௧௫௫)

பற்றிலாதவர்கைவிடிற்பற்றுடைக்
குற்றவாழ்க்கையருந்தலைகொள்கல
ருற்றவாண்டகையாடற்குறுகவென்
றற்றசிந்தையராற்றினர்நூன்முறை. (௧௫௬)

உணருந்தூய்மையுடையவனக்கியான்
புணரக்கூறுவதேதெனிற்பொற்புறந்
தணருமாசிரமந்தலைதந்தபின்
ணிணருருமையியங்குதலேற்பதே. (௧௫௭)

என்றுகூறலுஞானத்திறைவரா
யொன்றிநின்றவர்நல்லுடலோம்புமா
றின்றுகூறுதியென்னவியம்பினன்
றுன்றரும்பகையாறுந்தொலைந்துளோன். (௧௫௮)

எந்தவாசிரமத்தினியங்கினு
முந்துயிர்த்தொகைக்குறுகண்விளைத்திடார்
பந்தபாசத்தழுந்திப்பயில்வுறார்
சிந்தைவேறுரைவேறுறச்செப்பிலார். (௧௫௯)

வெறுப்புமொன்றுவிழையும்பயப்புறார்
சிறப்புந்தீமையுஞ்செய்யினுங்கொள்கிலார்
மறப்புமொன்றுநினைப்புமருவலார்
பிறப்பிறப்பெனும்பேதைமைநீங்கினோர். (௧௬௦)

இரும்புமீழமுமொன்றெனநோக்குவார்
கரும்புமெட்டிக்கனியுஞ்சமங்கொள்வார்
துரும்புமேருவுமொன்றெனத்துன்னுவா
ரரும்புமுற்றியருங்கரைதாவினோர். (௧௬௧)

வெய்துகூறினுமேத்தினுமேலொன்று
பெய்துசீறினுமுனிவுபிறங்கிடார்
வைதிகம்லவுகீகமயக்குறார்
செய்தவத்திற்சிவத்தினமுழ்ந்துவோர். (௧௬௨)

அனையபண்புடையார்களுக்காசிர
வினையியற்றினும்வீடினுமாசிலைத்
தனையனீயுனையின்றவன்சார்படைந்
துனையுணர்ந்துரைவாயென்றுரைப்பரே. (௧௬௩)

சிந்தைசாலமகிழ்ந்துசிறப்பொடு
மந்தணாளனருண்முகத்தாசிக
டந்துமீண்டுதன்முதையிருந்துழி .
வந்துதாழ்ந்துவழங்கினன்மாண்பெலாம். (௧௬௪)

செய்யவான்சடைதுன்னியசேயுரை
யையன்கேட்டவனாருள்வான்முக
முய்யநோக்கியுணர்ந்தனைஞானநான்
மெய்பிநேயிவன்மேவுதியென்னவே. (௧௬௫)

பயிலுஞ்சிடர்சுமந்தர்பயிலவ
ரயிலும்பாயனராதியரோடவன்
செயலும்வேறொருசிந்தையுமின்றியே
யியலுமாமறையோதியிருக்குநாள். (௧௬௬)

அற்றகாலத்தொருநாளருங்கலை
கற்றசிடர்கசிந்துதந்தேசிகன்
கொற்றமோங்கியதாடொழுதேகுவித்
துற்றகையினராகியுரைப்பரால். (௧௬௭)

எமக்களித்தவிருக்கையிவ்வாற்றினா
னமக்குமேனையர்க்காக்கலையாகவே
தமக்குமேன்மையுறும்படிதந்திடென்
றிமைப்பிலாருரைத்தாரிசையேத்தவே. (௧௬௮)

மறுவிலாதமனத்தனுணர்ந்துநீ
சிறியவாணைகைசெய்திதுதக்கதோ
பெறுவதேனையர்க்கோதிப்பெருக்குதற்
கறனெலாமுணர்ந்திரறியீர்கொலோ. (௧௬௯)

கற்றவிஞ்சையைக்காசினியோரெலாம்
பெற்றுநன்மைபிறங்கிடச்செய்கலா
ருற்றமூடரினென்றலதென்கொல்பே
றிற்றதாமவர்நன்மைகளியாவுமே. (௧௭௦)

மோனவேதியர்முத்தியினன்றுஞான்
றேனையோர்க்குமிஃதுறவேண்டுமென்
றானமற்றுளத்துன்னுவராதலான்
ஞானம்வல்லவரென்கொனவின்றதே. (௧௭௧)

என்னமற்றவரித்தகையாமெனி
லுன்னருட்கொண்டுலகிலுள்ளோர்க்கெலாம்
பன்னிவேதம்பயிற்றுதும்போந்தென
வுன்னியாங்கவன்சிடருக்கோதுவான். (௧௭௨)

சிந்தைகொண்டதச்செய்கையென்வாயினுன்
முந்துரைக்குமுறைநினைந்தோதிநீ
ரந்தணாளர்க்கறைமின்கள்போந்தென
வெந்தையன்பொடுறுகத்தழுவியே. (௧௭௩)

உகந்துசிட்டருவப்பமொழிந்தவர்
பகர்ந்ததன்மையிற்பார்புகவிட்டபி
னகந்தைசற்றறியாதவன்மைந்தனோ
டிகந்திலான்விபினத்திலிருக்குநாள். (௧௭௪)

வேறு.

சீராருமகபதியாம்முனியடைந்துசூழலிடைசேர்ந்துசெய்த
பாராருங்கடன்முறைகள்கைக்கொண்டோர்மொழியெடுத்துப்பகருகின்றான்
காராருமொலிநிகர்க்குஞ்சதுர்மறைநின்னாசிரமங்காணேனின்று
பேராருமறைமுனியேகூறுதியென்னவைபர்ந்தபெற்றியென்றான். (௧௭௫)

நாரதன்மற்றிவையுரைப்பநவில்கின்றானுலகுணரமறைகணான்கும்
பாரதஞ்சென்றுரைக்கும்வகைபயின்றவர்களகன்றமையாற்பறைவாரின்றி
யேரதமாயிருந்ததெனப்பராசரனீன்றெடுத்தமுனியிசைத்தான்மீட்டுஞ்
சாரதையிற்றிரிந்துமறைசாற்றுவவினனருண்மறையாற்றக்கோனோடும். ()

என்றபொழுதம்முனியுமிவ்வியல்பான்மறைபுகல்வதேற்குமென்று
வன்றிறலோடகன்றனனவ்வண்ணமிளமகவினொடுவையமுற்றுஞ்
சென்றுககனத்துநெறியத்தியயனத்தொடுவலமாத்திரிந்துமைந்த
னன்றுணரமறைகளெல்லாம்பயிற்றுவித்தானருந்தவருமறிவுவிஞ்ச. (௧௭௭)

அக்காலையாகாயகங்கைதுனைவான்மகனையாங்கோர்பாங்கர்
புக்கியிருந்தருள்கென்னப்புகன்றவன்போயகன்றிடவப்புனிதனுண்டோர்
தக்கதலத்திருந்துமறைதான்புகலுமவ்வளவில்வீணைவல்லோன்
செக்கரந்தண்முடிச்சடைமேற்றிகழவெழுந்தருளிநின்றுசெப்பலுற்றான். ()

நாதமெழநீபுகலுநான்மறையான்மகிழ்பொருந்திநண்ணிநின்றேன்
போதமுறநின்கருத்திற்காவத்ரைத்திடிற்றருவன்புகல்வாயென்ன
மாதவனுந்தனையுணர்ந்துமயக்கெய்தாவகைதருவாய்வரமெற்கென்னக்
காதலறத்தூயவனுங்கட்டுரைத்தான்மறைகடந்தகருத்தையெல்லாம். (௧௭௯)

வருணமென்பதஞ்ஞானமில்வாட்கையிருவிலங்காமற்றைரெண்டும்
பருணிதர்கைக்கொண்டிருக்கும்பயனேயன்றுமொதியாப்படர்ந்துமென்னே
கருணைசரதங்கள்சற்றேகையற்றுனரகமலாற்காணாரரு
முருணிகராம்பவமகற்றுமுறுதிதன்னைத்துறப்பதுவேயுரனுமன்னே. (௧௮௦)

சராசரமாம்பலவுயிருந்தானேவேறிலைமாயைதனுவையாதி
விராவுமிவையனைத்துமதைவேறாகக்கருதுமிடமேகாண்முத்தி
நிராமயமுநிட்களமுநிர்விகற்பநிர்க்குணமுநீயேயாத
லிராவுடனேபகலற்றவிடத்தடையாதடைந்தஞான்றெளிதிற்றோற்றும். ()

அவ்வியத்தன்றனதியற்கையாயிருப்பவுலகியலையானேயென்று
செவ்வியற்கைதனைமறந்துதிரிவனவுந்தனையுணருந்தேற்றமுண்டோ
மெய்வலிக்குநிகரறத்தோயுணர்தியெனவீணைமுனிவிளக்கஞானப்
பவ்வமதிற்றுளைந்தெழுபவக்கடல்கடனைத்துரந்தான்பரமேயானான். (௧௮௨)

வாசநறுங்கமலத்தோன்வழங்குமருள்கைக்கொண்டமைந்தனன்பாற்
பேசவதுமனம்வலித்துத்தனைமறந்துந்தாம்புகுவான்பெயர்ந்துதந்தை
மாசறுதாடொழுதெழுந்துவழங்குதலுமவன்ஞானவலியையுன்னி
யீசனையான்மகிழ்ந்தான்புரிவினுக்காற்றாதிருந்தேயிரங்கினனே. (கஅங)

வலம்புரிந்துதாதைதனைவல்விரைந்துத்தராமுகமாய்வானினூடு
நலம்புனையுந்தனியோகப்பயிற்சியினன்மேலுலகோர்நாடிநாடிக்
குலம்புரிந்ததவமிவனுக்கிளைமையினேதனிஞானங்குறுகிற்றென்ன
வலம்புரிமாருதவேகம்பிற்படச்சென்றனனுயிர்களனைத்துமானோன். (கஅச)

மேவுசராசரமனைத்துமோருருவேயெனினுமிலவேறன்றேயா
னேவமறுமெந்தைபிறகடைந்தழைத்தாலெனையேனென்றிசைமினென்று
தாவுபலயோனிகட்குஞ்சாற்றவன்னதேயெனலுந்தணந்துசென்றான்
வாவுபரித்தேரொருவித்தனிப்பருதிகதிநடத்தும்வன்மைகாட்டி. (கஅரு)

அருங்குவட்டினூழ்ந்தசுனைநீர்துளையுமாமடவாராடைநீக்கி ·
வருங்குலத்தோன்றலைநோக்கிநாணடையார்பயின்றனரம்மாதவத்தோ [கை
ளொருங்குடைத்தன் வளத்தொன்று முனைரான்வானுறநிமிர்ந்த வோங்கற்சா
மருங்கொடித்துத்துகட்படப்போய்மேருவடதிசையடைந்தான்மறுவிலாதான்.

அரணிதனிலுற்பவித்தோனடையுநெறிபின்றொடர்ந்தேயத்தனுனே
யிரணியகர்ப்பனைநிகராயேகுதலும்வான்வழிக்கொண்டிமைப்பிலாதோர்
சாணிகள்சேர்வரைச்சிகரிகதியினிற்காதியபுதல்வர்காணுமாறே
தரணியிற்சென்றிழியென்னவுயிர்த்திருந்தானுயர்ந்தெழுந்தசயிலமீதே. ()

அச்சயிலத்தருஞ்சுனைநீர்நினைத்தவர்கண்டநாணியாடனீத்துப்
பொச்சவிடையார்விரைவிற்புகுந்தாடைபுனைந்திடலும்புனிதனேக்கி
யிச்சயிலநெறிபடருமுனிக்கொளியாதெனக்கொளித்ததென்னையென்னக்
கச்சுமுலையார்மாயைகடந்தவனம்முனியெனலுங்கசிவுற்றானே. (கஅஅ)

வேதமுனிமாமகவைநினைந்துநினைந்துயிர்த்துயிர்த்துமெலிந்துமாழ்கிக்
காதலினுற்சுகனேயென்றழைத்திடலுந்தருக்கள்வல்விகானிலுள்ள
பேதவுயிர்த்தொகையனைத்துமேனேனென்றெதிர்கூவப்பிரமமொன்றே
பூதலமெலாமென்பதுளம்விளக்கவற்புதனாய்ப்புழுங்கிநின்றான். (கஅகூ)

வேறு.

இச்சையாதுமிலாதவன்மைந்தன்மாட்
டிச்சைசாரலும்வெள்ளிடபத்தின்மேற்
பச்சையம்பிகையோடுபடர்ந்தன
னச்சயின்றமரர்க்குயிர்நல்கினோன். (ககூ0)

சித்தர்கின்னரர்தேவரியக்கர்கண்
முத்தரிந்திரன்மாலயன்முத்தியைக்
கைத்தலங்கொள்கணங்களொடெப்திரு
னத்தனாருட்பார்வையரும்பவே. (ககூக)

கண்டெழுந்துகளித்துவணங்கியுட்
கொண்டகாதற்கொடுங்கனன்மாய்வுற
வண்டிநின்றுதுதித்தனனுண்டகை
துண்டவெண்பிறைமௌலிதுளக்கியே. (௧௯௨)

ஓதுவானுரவோய்தவமுற்றஞான்
றேதுவேண்டுவதென்றெதிரெய்தலாற்
பூதமைந்தையும்வெல்லும்புதல்வனை
யீதல்வேண்டுமென்றுயிசைந்தீந்துளோம். (௧௯௩)

ஆர்க்கும்பிஞ்சுமருந்திறன்மைந்தனு
லேர்க்குநன்மைகளெய்தினையென்னினிப்
பார்க்குளோரிற்படருழந்தாய்மறை
யூர்க்குநாவுடையாயிதுபோதுமோ. (௧௯௪)

கடந்தஞானக்கலைநிறைந்தோனை நீ
தொடர்ந்துசொல்வதுதோற்றமன்றுனக்
குடந்தையாய்மனமுன்னியபோதெலா
மடந்துதோற்றுமவனுருச்சாயையே. (௧௯௫)

வரைகள்வாரிதிமண்ணுளஞான்றெலா
முறைகொளுன்புதல்வன்பெயருள்ளவர்
நிரைகொளும்வரந்தந்தனனீயினித்
தரையினேகெனக்கூறித்தணந்தனன். (௧௯௬)

அந்தணன்மறைந்தேகவருமறை
தந்தவன்பணிந்தேபுகழ்சாற்றியே
வந்துவைகினன்சிந்தைமயக்குறீத்
தெந்தைநாரதனேதியதிதெனு. (௧௯௭)

அறனளித்தவனுக்குரையாடினு
னிறனளிக்குநெடுஞ்சிலைவீடுமன்
மறனளிக்குமகிபரெலாம்பகை
புறனளித்தவப்போதின்மகிழ்ந்துளார். (௧௯௮)

இந்தவான்கதைகேட்பவரின்பொடு
முந்தவோதினராருமுயர்ச்சியற்
றந்தமற்றுளஞானமடைந்துநற்
சிந்தைதூய்மைசிறப்பரென்றோதியே. (௧௯௯)

மீளவும்பகர்வான்கற்றவீடுமன்
றுளதாமறையான்றருநாரதன்
வாளமானிலமெங்குமருவியே
தோளில்வீணையுடன்வந்துதோன்றினன். (௨00)

பதரிகாச்சிரமத்திற்பயில்வுறுஞ்
சதுரர்மாகரநாரணர்தம்முறை
யிதனினையிருந்திதுகூறினன்
மதுரவாசகமாமுனியன்பினல். (உ0க)

உடலெடுத்தற்குறுதியொளியினை
யிடலினுள்ளும்புறத்தினும்விஞ்சவே
யடலினேக்குதலென்பர்களாரிர
நடலையற்றவனுறுணர்வெய்தவே. (உ0உ)

கூறுகென்றுகூறித்திடநாரணன்
றேறுநீயெனச்செப்புகென்றுயுளத்
தூறுபேரொளிக்கொப்பதுவேபுறத்
தாறுகாண்பதுமன்றியுமொன்றுகேள். (உ0ங)

உத்தரத்திசைமேயினருக்கெலா
முத்தியென்றுமொழிந்தனவாகமங்
கத்தரங்குறுவார்கள்சுவேதனு
மத்திலங்குவனன்றுறுமாதவர். (உ0ச)

மெய்யும்வெண்மையாமெய்யலதொன்றையு
மெய்யவோர்ந்திலரெண்ணிலருற்றுளோர்
கையினுழிபடைத்தருள்கண்ணனு
லுய்யுமாறுளமுன்னுமியற்கையார். (உ0ரு)

அனையகாண்குவர்பேரொளியாய்மறை
முனிவபோந்துணர்கென்றுமொழிந்திட
வினையினீங்கியவேதியன்போந்துகண்
டனையவாறுலகுக்கறிவித்தனன். (உ0சு)

வசுவெனும்பெயர்மன்னவனவ்வெளி
யிசையநோக்கியிருங்கதியெய்தினன்
கசியும்வேதியன்கான்முனையத்திரி
யுசிதமோடுகண்டுள்ளமகிழ்ந்துளான். (உ0எ)

கமலசம்பவன்கன்னினன்காணரும்
விமலமால்திருமேனியையாவரே
தமரினேக்கத்தரித்தவர்காண்குவ
ரமலர்நீத்தசுவேதர்களண்மையில். (உ0அ)

என்றுகூறவிராசவரோதய
னன்றுசிந்தையலர்ந்துவணங்கியே
நன்றுபல்லுலகோர்க்குநயக்குமா
றென்றுதேர்ந்துரைப்பாயநமோகையால். (உ0கூ)

நிகரிலாமுறையாய்நிலையீவதாய்ப்
புகலுமுந்திபொருந்துவதாயுயிர்க்
கிகலிலாவெளிதாயியனல்லறந்
துகளிலாயொன்றுதேர்ந்துசொல்வாயென்றான். (௨௧௰)

விரதசீலன்வியந்துபுகழ்ந்துநீ
வரதனுகையின்மானிடருக்கெலாஞ்
சரதமுய்யும்வகைதரித்தாயெனப்
பரதநற்குலப்பார்த்திபற்கோதினான். (௨௧௧)

முன்னோர்ஞான்றுமுதன்மைகொள்நாரதன்
சொன்னலோகதுரந்தரன்பாற்செல
மின்னுமாசனத்துய்த்துவினவினான்
றன்னிலற்புதமேதெனத்தக்கவன். (௨௧௨)

ஐயகேட்டியோரற்புதமுண்டென
மெய்யனோதினன்மேதினியோரெலா
முய்யத்தோற்றியகங்கையினோர்கரை
யெய்துபத்துமமெனுமொருமாநகர். (௨௧௩)

வேறு.

அந்தணனொருவன்பிருகுநாமத்தோனுருயிர்க்குகவுசெய்குணத்தான்
சந்ததஞ்சரதம்போற்றுவோனெவற்குந்தக்கவன்முனிவுணராதான்
கந்தனையனையபுதல்வரையுயிர்த்துக்காரிகையுடன்விருந்தோம்பி
முந்துநற்றனத்திற்குபேரனுநாணமுயற்சியாற்குவித்துவாழ்ந்திடுநாள். ( )

பற்பலதருமம்புகலுநூலனைத்தும்பாங்குறவுணர்ந்திதினொன்றை
நற்பரமர்க்குந்தருமமேதென்றேநயகுணனனுதினநாடிச்
சிற்பரமுனிவர்தம்முடனுசாவித்தெளிந்திடப்புகலுவாரின்றி
யிற்படுநெறியினொழுகுநாடன்னிலெய்தினனொருமுனியிவன்பால். (௨௧௫)

கண்டுகண்விழைவுபொருந்திடவெதிர்போய்க்கான்மலர்சிரமுறவணங்கி
முண்டகனனையாய்வருகெனக்கொடுபோய்முயற்சியாலமுதுசெய்வித்து
வண்டுகளொலிக்குந்தாமரைமார்பன்மாமுனியாசிபெற்றதற்பின்
பண்டையோர்விரும்புமுதன்மைசேர்தருமம்பகருவாயடியனேற்கென்றான். ( )

சரதமென்றுரைப்பர்சிலர்சிலர்கருணைதானெனவுரைப்பராரியர்கள்
விரதமாங்கொல்லாநெறியெனப்புகல்வர்விருந்துபசாரமேயென்பர்
கரதலாமலகமென்னவாசிரமங்கருதருமறமெனநான்கு
புரைதவிர்நெறிகள்புகல்குவர்யானேபுகலவல்லவனென்றுமீட்டும். (௨௧௭)

நிகரறுநைமிசாரணியத்தினேர்படுகோமதிக்கரையிற்
புகரறுபதுமத்தடத்தருகாகப்புயங்கனுயகனுளனவன்பேர்ப்
பகரொணுப்பதுமன்மனைநெறிபுரிவோன்பயின்றநற்றவத்தினன்பாரிற்
சுகமகோததிகண்டவர்களாங்கவனற்றொகைபடாதறமெலாந்தொகுத்தோன்.

வாய்மையாற்பொறையாற்சாந்தியானிலையாமனத்தினலனை, பார்ந்
தோன், தூயவர்க்கதிதிபூசனைபுரிவோன்சொல்லொணுதவன்செயலினிதீ, சே
ய்மையென்றுளத்திற்கொண்டிலைசென்றுன்சிந்தைகொண்டதையுரைத்திட்டா,
லாயவன்புகல்வன்றெளிந்திடவென்றேயம்முனிகூறிவிட்டகன்ருன். (௨௧௯)

கேட்டவக்கணத்திலன்புமுன்னீர்ப்பக்கேசவனனையவந்தணனுங்
கூட்டியபுதல்வர்சுற்றமுள்ளவருங்குழுக்கொளப்பலர்க்குநண்புறுத்தி
மீட்டவர்விடுப்பச்சென்றுநான்மறையோன்விளம்பினேன்வாழ்விடஞ்சார்ந்து
நாட்டினைகோவடைந்துநற்பதுமன்றனதகஞ்சார்ந்தனனன்றே. (௨௨௦)

அன்னவன்றேவியெதிருறமேவியருச்சனைபுரிந்தகங்கொடுபோ
யென்னைவந்ததுவென்றுவகையோடுரைப்பவிருக்கினேனுனதுவல்லவன்பால்
மன்னுநற்கருமமுளதற்கடைந்தவாறெனவாரிசநண்பன்
றன்னுழையடைந்தார்வருவரெட்டாகுந்தினத்தெனச்சாற்றினடகவால். ()

நன்முனிகேட்டுநன்றிதேயவரீண்டடைந்தபினண்ணுதுமதுகா
றென்மனங்கொண்டநெறிபுரிந்திருப்பலீண்டருகார்வனத்தென்ன
வன்முனைமடமாதினுக்கெடுத்துரைத்துவல்விரைந்தகன்றுநாளிருமூன்
றுன்னலனுணவுவிரதியாயிருந்தானெண்டொடியருகடைந்துரைப்பாள். ()

மாமறையுணருந்தூயனேயெனதுமகிழ்நனேவலின்படியடைந்தோர்க்
காமுறையுண்டியளிப்பதென்றெழினீயடைந்துணுதிருத்தனன்றுமோ
நேமமுங்கெடுமெங்கொழுநனுக்கெமக்குநிரையமெய்திடுமிவண்கொணர்வன்
காமுறுமுறையேதுய்த்தெமைப்புரத்தல்கடனெனக்காரணனுரைப்பான். ()

அருந்தநிக்குயர்ந்தகற்புடையணங்கேயாதபனருகுறுபெருமான்
வருந்தினமெட்டாந்தினமெனப்புகன்றுய்மாற்றினனுண்டிமானத்தா
லிருந்தினிநகரேனத்தினத்தவனிங்கெய்துமுனெனின்மறுநாடொட்
டருந்துவனுனக்கோர்தவறிலையிதனுலன்னைநீபோதுகென்றளித்தான். (௨௨௪)

நாகர்நாயகன்றன்மனைவிமீண்டடையநளினமித்திரனிடத்திருந்த
போகிமீண்டடைந்துதன்மனைபுகலும்பூவைபாதார்ச்சனைபுரிந்து
வேகமாய்மணியாசனத்தின்மீதிருத்திவெப்பகன்றிடமரைவீசி
யேகமானதனும்பதிக்குரைத்தனளவ்விருபிறப்பாளனல்லியற்கை. (௨௨௫)

கேட்டவனத்தக்கணமவளருகுகிட்டிநன்மொழிபலபுகன்று
வாட்டமுமுடலின்வருத்தமும்பாராதெக்கைநீவந்தவாறுரைக்கி
லீட்டுமிக்கணத்திலளிக்குறுமருள்கென்றிசைத்தலுமினிப்பிறப்பெய்தாத்
தாட்டிகன்கருமமுளவவையினிமேற்சாற்றுவன்மாசுணத்தலைவா. (௨௨௬)

முந்தநீபதங்கன்மண்டலமடைந்துமுறைசெலமீண்டனையந்தோ
வந்தமண்டலத்தின்றன்மையுங்கதியுமாதித்தன்சிறப்புமாங்குணர்ந்த
சிந்தைபற்புதங்களுளவெனிலவையுந்திறவழங்கவென்றிரப்ப
வந்தணன்செவிகட்காரமுதகுத்தானுமெனவவனெடுத்துரைப்பான். (௨௨௭)

வேறு.

முரசுசுரடிகைமுழவுவளைதுடிமுகில்களதிர்வனபுரையவே
வரிசையொடுமொலிதருவதொருபுறம்வானினுறுமரமகளிர்வந்
துரைசெய்நெறிமுறைபரதநடமிடுமொலிகளொருபுறமுரனுளோர்
கரைசெய்கலைநிலையிடுவரொருபுறமமரரொடுசுடர்கவினவே. (௨௨௮)

சுருதியொலிகளுமுனிவரவரவர்தொடருமொலிகளுமதிரவே
கருதிவருமொருதிகிரிரதமிசைகதிசெய்தசசதமணிமெய்யான்
பரிதியுலகுறுகுறைகளறவெழுபரிகள்விசையொலியெழவருங்
குருதிபொழிவிழியருளினிறைவுறுகுரிசிலிசையொலிகுமுறவே. (௨௨௯)

அவனதருள்வழிமழைகள்பொழிவதுமரியதினமதுபகர்வது
மவனதருள்வழியுலகினுயிர்களுமவனையலதிலையமரருஞ்
சிவனுமரிபிரமனுமவ்வுருவிடைதிகழுமொளியெனினுயிர்களுக்
கிவனையலதொருகடவுளுளதெனவினியவறிவினர்கடமையோ. (௨௩௦)

கனகமலர்மழைபொழியவமரர்கள்கவினிலுலகினைவலமதாய்
நினையுமுனமளவிடவுமரிதெனுநெறிகளொருவியவிசைகொடேர்
பனகவயிரிமுனுதையமுறுமொருவலவன்விடவருபரிதிமுன்
பனகவொருசுடர்வடிவனணுகினனவனதியலினையறைவனால். (௨௩௧)

விபுதர்திறலினன்முடிகள்பணிபலவிரவுமுடலினனடலினிற்
றபுதலிலனொளியிரவிநிகர்பவனவன்முன்மகிழ்வொடுசார்ந்துபின்
குபிதமொழிசிலபுகலவவன்மகிழ்கொண்டபினருகண்டியே
சுபுதர்முதலினர்பரவவிறையுடன்றுன்னியொன்றெனமன்னினான். (௨௩௨)

கண்டுபுலவருமெண்டிசையினருங்கஞ்சவதனமலர்ந்துளா
ரண்டியொருவனைவிந்தையிவையிவனார்கொலோபுகல்வாயென
வண்டுதுதையரவிந்தமுறுபுயன்மல்குகிருபைவிழிநல்கியே
பண்டையவனியல்பென்றனொடுசிலபன்னினானொளிமன்னினான். (௨௩௩)

கடவுளரினலனுலகின்மறையவர்கவினுமொருகுடிவருபவ
னடலினுறுபலவறமுநிறுவிலனாசின்மனிதனிராசையான் .
புடவிவருமுடலகலவெனதுழைபுகுதுமுறைமையினணுகினா
னிடரினெறியஃதலதுசொலவிலையென்னவுளமகிழ்வெய்தினேன். (௨௩௪)

னென்னவிவைநிகழ்வென்னமறைமுனிநெஞ்சினிடைகொடுவந்தமற்
றென்னையிதுநெறியுய்யுமவரிலையென்றுகருதிவணங்கியே
பன்னியதுநினைவந்துவினவுறுபண்பின்விடையமிதாமெனச்
சொன்னபொழுதுதனன்புமிகவிவனண்புபலமுறைசொல்லியே. (௨௩௫)

வேறு.

அகத்திடைகொடுபோயுண்டியருந்தியபின்னரந்தச்
செகத்தியறேறம்வேதவேதியன்செய்கையெல்லா
முகப்பொடுகேள்வியெய்தியொரேநெறிநிராசையார்க்குந்
தகப்படுமுத்தியென்றேசாற்றினன்றபனனன்பன். (௨௩௬)

மனத்தினிற்கொண்டவையமாற்றினைகடவுனீயே
யெனக்கெனவினிமைகூறியேந்திழைக்குவப்புநல்கிச்
சனக்குமாரற்குநேரொஞ்சவுனகர்தன்பாலெய்தி
யினித்தனிநிராசையோடமிருப்பனென்றேகினனே. (உகஎ)

அவ்வனஞ்சிலநாட்டங்கியவாவிலானவனிசூழுஞ்
செவ்வனக்கதிரின்செல்வன்றேசினிற்பாலினீர்போ
லவ்வனம்பெற்றானன்னபான்மைகண்டுற்றேனென்று
மைவனமேனியானுக்குரைத்தனன்மறுவிலாதான். (உகஅ)

வலாரியாங்கதனைத்தேறிமாமகிழ்சிறந்துஞாலத்
துலாவுசிருரவோய்நின்னுலோர்ந்தனனிதனையென்றே
சொலாமுறைபற்பலாற்றாற்றுதித்திடமீண்டுபோந்தான்
குலாவுநாரதனென்றன்பால்வீடுமன்குறித்திட்டானே. (உகசு)

உருகிமெய்ப்புளகம்போர்ப்பவொரேயறனுலகோர்க்கெல்லாம்
பருகிடுமமுதமென்னப்பகர்ந்தனைபயன்பெற்றேமென்
றிருகாமுகிழ்த்துமேற்பாலிரவிசெல்வதுகண்டியாரும்
வருதுமீண்டுநையத்தென்றேவிடைபெற்றார்பாண்டுமைந்தர். (உசO)

மாமுனிவாருக்தங்கள்கடன்முறைமனத்திலுன்னிக்
கோமுனிவிடுப்பச்சென்றார்கொண்டல்வண்ணனுந்திதற்றக்
காமுறுவிதுரனோடுகலந்தவர்பலருமெய்தத்
தோமுறுமனத்தர்சென்றார்தொல்லைமாநகரினம்மா. (உசக)

இப்பெரும்பருவம்யாவர்கேட்பினுமிசைத்துநாட்டுத்
தப்பறுபுலமையோடுசாற்றினுஞ்சாலநன்மை
கைப்படுமுத்திவீடுகண்டவரவரேயென்று
செப்பினன்வைசம்பாயனெனுந்திருநாமஞ்சேர்ந்தோன். (உசஉ)

வான்கடலமுதுண்டாரின்மகிழ்சனமேசயப்பேர்
தான்பெறுமவனுந்தாழ்ந்துதருக்கிலுணர்வுபெற்றே
னென்படும்பிறவியென்றேயிசைத்துமாதவனையேத்தி
நன்முறைநிகழுமாறுநவலுகென்றுரைசெய்தானே. (உசங)

இந்தநற்பருவஞ்சாந்தியென்பதாமுனிவன்முன்னந்
தந்தசொற்றமிழாலீட்டுந்தறுவையின்முதலையாளி
முந்தவந்துறைகள்காக்குமுல்லையூர்முருகனின்னேர்
தொந்தமதாகச்செய்ததொடையறுசதவெண்ணெண்ணே. (உசச)

தருமசாத்திரவியல்புரைத்தசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள்-சுசுசு.

சாந்திபருவம் முற்றிற்று.

உ

பதின்மூன்ருவது,

அநுசாசனிகபருவம்.

கிராதிபுயங்கசம்வாதச்சருக்கம்.

முந்தியபிறப்பிற்செய்தநல்வினைமுடித்ததேயோ
பிந்தியபிறப்பின்முன்னேர்பெருந்தவம்பலித்ததேயோ
சந்திரவதனத்தென்ருய்தாமரைச்செல்விமேவுஞ்
சுந்தரவகலத்தோனைத்துதிக்கநாவசைக்குமாறே. (க)

பலகலைவல்லவைசம்பாயனரன்பான்மீட்டும்
வலியுடையரசைநோக்கிமன்னநீபொருந்தக்கேண்மோ
குலனுயர்கங்கையீன்றகோமுனியறத்தின்மைந்த
னலமுறப்புகன்றதென்றுமீளவுநவிலலுற்ருன். (உ)

அத்தினமகற்றிமீட்டுமத்தினபுரியைநீங்கி
யுத்தமன்றுணைவரோடும்விதுரன்மற்ருெருவனேடுஞ்
சத்துணர்கிருபனேடுஞ்சஞ்சயனேடுமேகி
முத்தனைத்தொழுதுநின்ருர்முனிவருமீண்டுவந்தார். (ங)

மாமுனிவரர்கட்கெல்லாம்வணங்கிநற்றருமன்மைந்தன்
கோமுனிவரனைச்சூழவிருந்தபின்குளிர்ந்தபார்வை
யாமுறைநோக்கியின்னுமறியுமாறுரைத்தியாருங்
காமுறப்புகல்வனென்ருன்கங்கையீன்றெடுத்தகோமான். (ச)

மறங்கிளர்குருதிவைவேன்மன்னவன்புகலாநிற்கு
மறந்தபவராவிலோதனவனிதாராதவாற்ருற்
றுறந்துகானடைந்திடாதுதொடுத்தமர்மலைந்துஞால
மிறந்திடப்புரிந்ததீமையகலுமாறிசைத்தியென்ருன். (ரு)

பொன்பட்டமேனிவேந்தன்புகன்றசொற்செவிபுகாமுன்
கொன்பட்டநீதிச்செங்கோற்கொற்றவவையங்கொள்ளேன்
மின்பட்டபடையார்நும்மால்வீந்திலர்விதியேயாமா
லென்பட்டதகிலத்தேனுமுமக்கென்னேவிசையுந்தீமை. (சு)

அத்தகைதெரியுமாருவோர்கதையறைவன்கேட்டி
பத்தியினென்றெடுத்துப்பகர்ந்தனன்பாரின்மீது
சுத்தவேதியனில்லாடன்சுதன்றனைநாகந்தீண்டி
முத்தலமிரங்கவாவிமுடிவெய்தியிறக்குமேல்வை. (எ)

சன்றவினேக்கிநோக்கியிரங்குதல்கண்டோர்வேட
னுன்றபேரறிவின்மிக்கோனருச்சுனனென்போனேடி
யேன்றமாசுணத்தைப்பற்றியேந்திழைமுன்னர்க்காட்டி
யூன்றியிக்கணத்தின்மாய்ப்பனுயிரினைக்காண்டியென்றான். (அ)

ஐயநீகேட்டிமைந்தனுருயிர்துறந்தபான்மை
வெய்யவெம்பாவமன்றிவீட்டினோர்திமையன்று
லுய்யுமாறுதவிநாகமுயிரொடும்விடுத்தியென்றாள்
செய்யவாயரிவைக்கங்கேகிராதர்கோன்செப்பலுற்றான். (சு)

வேறு.

சந்ததியுயிர்க்கிறுதிநந்தவிடநாக
முந்துயிர்தொலைத்தலறமாமிவன்முடித்தாற்
சிந்தையுறுதுன்பமிலையாருமருள்செய்யார்
பைந்தொடியுணர்ந்திலைகொல்பாரினியல்பென்றான். (க0)

வாகைபுனையிந்திரன்விருத்திரனைமாய்த்தான்
மோகமுறுதக்கனைமுடித்தனன்மகேசன்
வேகமுயிருண்டவரைவீப்பதுவழக்கே
யாகுலமடைந்திடுதலன்றெனமறுத்தான். (கக)

கஞ்சுரகமின்னுயிர்கலிந்திடவடர்ந்தா
லெஞ்சுபுதல்வன்கடிதெழுந்தெதிர்தலுண்டோ
துஞ்சினதிலென்னபயனென்னுவதுசோக
மஞ்சுவன்விடுத்தியதையென்றனளயிர்த்தே. (கஉ)

பார்ப்பனியுரைத்தமொழிபாப்பரசுகேட்டே
யார்ப்புறுகிராதனையயிர்த்திதனையோது
மோர்ப்புடையையென்னையுயிருண்ணுமியல்பென்னே
ஞர்த்தருமிருத்துவகைசொன்னபடிசெய்தேன். (கங)

என்னியல்பதென்னிலிவையென்னுமுறையாமா
லன்னியர்புரிந்தபிழையானனுபவித்த
என்னிலமையேயெனலுகாடியகிராதன்
பன்னினனரும்பணிதனக்கிதுபகுந்தே. (கச)

ஓதியமிருத்துவினையானுணருகிற்போர்
மேதினியுணர்ந்தனைவெங்கொடுமைசெய்தாய்
காதுதல்வழக்கெனவுரைப்பவதுகண்டே
யேதெனமிருத்துவனுகுற்றிதையிசைக்கும். (கரு)

அம்பாமுமிம்பருமடுத்தபிலவைப்புந்
தம்பதமெனக்கொடுசரித்துடையகாலன்
வம்பவிழுமெங்களிறைமற்றவனிசைக்க
வம்பினுழல்வேமெமையுமெய்வதவனுமால். (கசு)

என்றனையொறுப்பதினுமிப்பணியைமாய்க்கும்
வன்றிறலினும்பயன்வருந்தகமையுண்டோ
நன்றறிகிலாதவரிசைக்குமொழிநாடா
தின்றுரைசெய்தாயெனவிசைத்ததுமிருந்து. (கஎ)

வில்வலியவேடுவன்வெருண்டொருவர்மீதிற்
பல்பகழியேவினவர்பார்மிசையிருப்பர்
மெல்வருகொடுங்கணைவிட்டுவர்தடிந்தே
சொல்வலியுணர்ந்துடையதூயவருமம்மா. (கஅ)

ஆதலினியற்கையிதுவாமருகடுத்த
பாதகவெயிற்றரவினுவிபரிவிப்ப
னீதியிதுவேயெனனுரேர்முகமதாகி
யோதரியகாலனவனுற்றிதனையோதும். (ககூ)

என்னையுயிர்கொன்றதிவனென்பதழகாமோ
முன்னைவினையன்றியிவன்முற்றுவதுமுண்டோ
பன்னுதலுணர்ந்தவர்கள்பண்ணவினையென்றே
பின்னைசிலர்மேற்பிழைகள்பேசிலருவப்பார். (உ0)

நல்வினைகணன்மைதருநாசமுறுவிக்கும்
வல்வினைகளவ்வணமியற்றலெவ்வழக்காம்
பல்வகையுணர்ந்துமொருபணியையுயிர்கொள்ள
மல்வரையதோளுடையவனசரநினைத்தாய். (உக)

என்றுபுகல்காலனையுமேறமுகநோக்கி
யன்றுசிலவாய்மைகளறைந்திடுமிடைக்கட்
குன்றுபுரைவெம்முலைகொள்பார்ப்பனிகுறித்தா
ளின்றுமதுவாதவுரையென்னபயனென்றே. (உஉ)

மேலைவினையைத்தனிவிலக்கினவருண்டோ
சாலநுமர்வாய்மைவழியிற்பொழுதுதாழ்த்த
பாலனுடலீமவிதிபண்ணுமுறைவேண்டுங்
கோலவரவைத்தவிர்திகோறலினியென்றே. (உங)

வேடன்முகநோக்கியவள்சொல்லிவிடுவித்தே
நாடரியநங்கைமனைநண்ணினளடைந்தோர்
தேடரியதம்முழைசெறிந்தனர்சிறந்தோய்
நீடரியகாதைமுதலாய்நிகழுநீர்மை. (உச)

ஆயமுறையாலொருவராருயிர்செகுக்க
நீயுமினியேனையருநேரும்வலியுண்டோ
மாயவினைகாரணமிலாமசகமேனு
மேயவிறவாதுலகியற்கையுடனென்னல், (உரு)

காரியமுமைப்புகறல்காசினியில்வல்ல
வாரியர்நினைத்திலர்களாமுறையுணர்ந்தே
சீரியநெறிக்குரிசிறேறுதியுனக்கிப்
போரிடைவருங்கொடுமையில்லைபொறையுள்ளோய். (உசு)

என்றுகுரவன்புகலவேந்தன்மகிழ்வெய்தி
யொன்றுபுகல்வானுலகியற்கைமனைவாழ்வோர்
சென்றுநமனைத்தெறுசிலாக்கியருமுண்டோ
வின்றுலகினுண்டெனிலிசைத்தியெனவோதும். (உஎ)

வேறு.

மனுகுலமதனிடைவந்தகோமகன்
றனியுறழ்வேற்சுயோதனனென்றோதிய
புனிதமாலரசனிப்புவியினன்மாதை
வனிதையாய்ப்புணர்ந்துடன்மருவவாழுநாள். (உஅ)

பொற்புவிமாதர்கள்புகழெலாந்திரண்
டுற்பவித்தெனவவளுதரத்துடொரு
கற்புடைக்கன்னியங்குதித்தகாலையி
லற்புதமடைந்தனர்பிதாவுமன்னையும். (உகூ)

நலந்தருசுதர்சனைநாமந்தாங்கியே
குலந்தருமியல்பின்மின்கொடிவளர்ந்தநா
டலந்தருபிதாமகிழ்சார்ந்துதாசனர்க்
கிலங்குபூசனைதரவிவளையேவினன். (௩௦)

பரிபுரமொலியெழப்பனிகளார்த்திட
விருதனஞ்சுமந்திளைத்திடையொசிந்திடக்
கரவளைபுலம்பமேகலைகளார்த்திட
வரிவிழிப்பவளமாய்மங்கையேகினள். (௩௧)

புருவவிற்குனித்திரண்டம்புபோக்கலும்
வெருவினன்போலயர்ந்துடல்வெதும்பிய
சருவியக்கனலவன்றூரமாகென
வரிவையுநாணிநின்றறைதன்மேயினள். (௩௨)

அளித்தவனொருவருக்களிக்குமுன்னரே
களித்தொருவரைநந்தனிகலத்தல்கூடுமோ
தெளித்தநீபுகல்வதென்சேறிதந்தைபா
லுளத்துறுகருத்தினுக்குவப்புமேவவே. (௩௩)

என்றுரைத்தகன்றனளிவனுமோர்மறைக்
குன்றெனவேதியன்வடிவங்கொண்டுபோ
யன்றவனபணிந்திடவாசிகல்கியே
துன்றுதார்மன்னனுக்கிதனைச்சொல்லுவான். (௩௪)

உருவினிற்சிறந்தநின் றனையையோங்கெழிற்
றிருவினையெனக்குரீரளித்திதேர்ந்தென
நிருபனுமுரைத்திலனிருந்தநீர்மைகண்
டருவரைத்தோளினனகன்றுபோயினன். (௩௫)

தன்பெருங்கலையெலாஞ்சுருட்டித்தக்கவ
னன்புடன்மறைதலுமங்கியின்றென
முன்புறைகுரவர்வந்துரைப்பமுன்னினன்
மின்புரைவேலினன்சிந்தைவேறதாய். (௩௬)

யான்புரிகொடுமையோவெனையடுத்தவ
டான்புரிகொடுமையோதருமம்பொய்த்ததோ
வான்புரிகனலவிவழக்கமாறுத
லேன்கொலோவெனவயிர்த்துயிர்க்குமேல்வையில். (௩௭)

நான்மறைவேதியருணரநங்கைபாற்
றுன்மயல்கொண்டதைத்தழலுரைத்தலுந்
தேன்மலரலங்கலான்றெளிந்துசெல்வியை
வான்கனலவற்குநீர்வழங்கினனரோ. (௩௮)

வேனிலானிவனெனவேடந்தாங்கியக்
கானிமிர்கன்னியைக்கரம்பிடித்தபின்
மானிளமுலைப்பெரும்போகவாரிதி
தானிகரறத்துளைந்திருக்குஞ்சார்பினில். (௩௯)

அக்கொடியகட்டினிலறனெலாந்திரண்
டிக்குவலயத்திடையுருவமெய்தல்போற்
றக்கவனோர்மகன்சார்ந்துளானடன்
முக்கனல்வளர்க்குநன்முனிவர்வாழ்த்தவே. (௪௦)

வானவர்பூமழைபொழியவன்னியுந்
தானருண்மைந்தனுக்கியற்றுஞ்சார்பெலா
மூனமற்றியன்முறையுதவிமீளவுஞ்
ஞானசுதரிசனநாமஞ்சாற்றினன். (௪௧)

ஓர்கலைமதிவளர்ந்தொளிரும்பொற்பெனச்
சீர்பெறவளர்ந்தபின்னூலுஞ்சேர்த்தினன்
பேர்பயின்மறைகளும்பிறவுமாய்ந்துதன்
னேர்கலைவலரிலானிறைவுற்றனரோ. (௪௨)

வாகுறவொருமுனிமகளருந்ததி
நாகிளமடவனநாணுங்கற்பினள்
மாகரும்புகழ்யோகவதிமாண்பெயர்ப்
பாகருஞ்சொல்லியைப்பரிவில்வேட்டபின். (௪௩)

இல்லறமாண்பனுயெடுத்தவாறெலா
மெல்லுறவியற் றுவானெண்ணிப்பின்னருஞ்
சொல்லியகாலனைவெல்லத்தொல்லையோர்,
நல்லவையுணர்தரகவின்றுளானரோ. (௪௪)

வேறு.

பயில்வுறுங்குருகேத்திரப்பாங்கரினடைந்து
சயிலவார்முலைத்தையலோடொருதனிச்சோலை
யியலின்முற்றியேயிருந்தவனெய்திஞேரிருதா
ளுயர்விருல்வழிபாடுசெய்துற்றனனுரவோன். (௪௫)

கற்பினுலுயர்காதலிகாதலன்றருஞ்சொல்
லற்பினுற்கடந்தறிகலளதிதியர்க்கென்றும்
பொற்பினுற்செயும்பூசனைநோக்கியபுலவோ
ரிற்பயின்றிடுமறத்தின்மீதிலையெனமகிழ்ந்தார். (௪௬)

இன்னதன்மையானியற்றுநாளிப்பெருந்தகைதன்
பன்னிதேர்ந்துறப்பகருவன்பாவைநீகேளாய்
மன்னிநம்வயின்வந்துறுமதிதியைப்பிறரா
வுன்னலீசன்மாலாவுளத்துன்னுநியுவந்தே. (௪௭)

வருந்திவந்தவருடலனைங்கொழித்தவர்மலர்த்தாள்
பொருந்தவர்ச்சனைபுரிந்தபின்போனகமியல்பா
லருந்துவித்தவரகன்றிடில்விடுத்தவராசி
திருந்துசென்னிமேற்புனைவதேநினைக்கருஞ்சிறப்பு. (௪௮)

என்னைவேண்டினுமதிதியர்க்கீவதேதரும
முன்னைவேண்டினுமுடன்படல்கற்பினுக்குறுதி
பின்னையானிலாவிடத்தினுமிவைகடைப்பிடியாஞ்
சொன்னவண்ணநீவழுவறவொழுகுதிதோகாய். (௪௯)

என்றுபற்பலகற்பனையில்லவட்கியம்பிச்
சென்றுகானிடைச்சமிதையுந்தருப்பையுஞ்சேர்ப்பா
னன்றுநீங்கினனுயிழைசாலையூடிருப்பத்
துன்றுமோர்மறைவேதியன்சூழல்வந்திறுத்தான். (௫௦)

நேர்ந்தநூலிடைநெஞ்சுதுண்ணெனக்கடிதெதிர்ந்து
சார்ந்தமாமுனிதனைக்கொண்டுசாலையிற்செறித்தே
யார்ந்தருங்கடன்முறைப்படிபூசனையாற்றிச்
சேர்ந்துதாண்மலர்சென்னிமேற்சூடினள்சிறந்தே. (௫௧)

ஐயநான்செயும்பணிவிடையருள்செயவேண்டு
முய்யநாயினேனென்னவூழுவந்துநான்மறையோன்
செய்யவாயிதழுறலாமமுதினுற்றிர்ப்பாய்
மெய்யினேங்குறுகாமநல்விடாயினையென்றான். (௫௨)

உரைத்தவாசகங்கேட்டலுமொண்டொடிதனுக்குந்
திரக்கமேயுருவாகினோர்கூறலாமியல்போ
நிரைத்தசெய்கையான்மேற்கதிநிகழுமோநிரயத்
தரைக்குளோமிருவருமெனில்விழைவரோசான்றோர். (௫௩)

வேறுமுண்டுலகியற்கையில்விழைவெலாமளிப்பன்
கூறுகென்றவன்குறித்திடக்குரவனுநகைத்துத்
தேறுமென்னுளக்கருத்திதுயாதொன்றுந்தீண்டேன்
மாறுகூறலைமையலையகற்றுதியென்றான். (௫௪)

அடுத்தவாண்மதிமுகத்தினளயர்ந்துளமாழ்கித்
தடுத்துரைத்திடற்றனபதிவிரதம்வேர்சாய
மடுத்துடன்படின்மடமச்சங்கற்புநாண்மாய
மெடுத்துரைப்பதீண்டென்னெனத்தவறினளேழை. (௫௫)

கலக்கமுற்றபின்கணவன்முன்கரைத்தசொற்கருதி
யலக்கணைத்தவிர்ந்தாண்டகையுரைகடவேனுக்
கிலக்கமாய்வருமிடும்பையென்படுக்குமென்றெண்ணிக
குலப்பசுங்கொடிபரிவினன்மூரலுங்கொடுத்தாள். (௫௬)

தந்தமூரலாற்சார்ந்தவேதியன்மனந்தருக்கி
யந்தமாதினையணைகுவான்கொண்டறைபுகுந்தான்
முந்தநீங்கியகொழுநனுமுன்றின்முன்படுத்தான்
கந்தமூலமுஞ்சமிதையுந்தருப்பையுங்கவர்ந்தே. (௫௭)

எய்திநின்றவனில்லவடனைப்பரிந்தழைப்ப
மைதருங்கணுண்மணவனென்றுளந்தனின்மதித்து
வைதிகஞ்செறியதிதிவாண்மலர்முகங்குறித்தா
ளுய்தியொண்கணுய்சபிக்குவனுரைக்கலையென்றான். (௫௮)

பொருந்தியிங்கவற்குடன்படுபுணர்ப்பினற்புளக
மரும்பிடாமுனமகல்வதன்றிவன்மொழியயர்த்து
விரும்பிமாறுரைகூறினுஞ்சபிக்குமேல்வினையூ
ழிருந்தவாறுளதாமெனவுரைசொலாதிருந்தாள். (௫௯)

வல்லவன்பலகான்முறைகூவினன்மடந்தை
சொல்லுறுமையாற்றுணுக்கமுற்றெழின்மனைபுகுந்து
வில்லினேர்புருவத்தினுண்மிளிரிடந்தடவ
வல்லியங்கமலப்புயத்ததிதியீதறைந்தான். (௬௦)

மதிதிகைத்திலைமறையவனின்மனைக்கிழத்தி
யதிதியர்ச்சனைபுரிபவளாமெனவறிந்து
கதிதிரட்டியகருத்தினன்காத்திரங்குளிர்ந்து
புதிதியற்றியதெனப்புயம்புளகரும்பினனால். (௬௧)

ஆடினன்பலகான்முறையருமறையனைத்தும்
பாடினனெனக்கீதன்றோபாக்கியமென்றே
நாடினனெந்தைசெய்ததேதநற்றவமென்று
பிடினன்மொழிகுழறிடப்பேசுமாலிதனை. (௬௨)

அதிதியாயெனதகத்தில்வந்தவனலாதெமக்கோர்
முதியர்வேறிலைமூவரும்வேறிலைமுன்செய்
விதியும்வேறிலைவேதமும்வேறிலைவிரத
மதியும்வேறிலையென்பதேயென்மனவழக்கம். (௬௩)

பஞ்சபூதமும்பருதியுமதியுமென்மனமும்
விஞ்சுசான்றிதற்கையநீவிரும்பியவழிபா
டஞ்சொலாடரவரியனென்றணையிதென்றே
கஞ்சமாலையான்கழற்றிமீண்டனன்கலிதொடங்க. (௬௪)

அனையகாலையிலவ்வணமறிந்தசரீரி
யினையவாறெலாமுண்மையேயென்றுரைத்திடலு
மனையவட்கருகிருந்தபொய்வேடத்தைமறைத்து
நினையுமுன்னர்முன்னின்றனன்றருமனுநிமலன். (௬௫)

எண்ணிறந்தவானவரொடுமிருடிகளோடு
நண்ணியூர்திமேனிற்றலுநான்மறையவனும்
புண்ணியஞ்செறிகோதையும்புகுந்தடிதொழுதார்
மண்ணிடத்தெலாநிறைந்ததுபொன்மலர்மாரி. (௬௬)

உலகிலாருனைநிகர்பவருத்தமநினக்கிங்
கிலகுபெற்றியென்னுரைக்குதியீகுதுமென்ன
வலகிலாமறையுணர்ந்தவன்மறலிவந்தனுகா
நலனைநல்குதிநாயினேன்விழைவிதேயென்றான். (௬௭)

உனக்குவானுறவேண்டுமேலுறுவதையன்றி
நினைப்பினெலாம்வாழுதிநிலமிசையென்றே
தனக்குநேரிலான்றந்துபைந்தொடிதனைவியந்து
புனிதமாநதியாகிவாழ்கெனவரம்புகன்றான். (௬௮)

கதியளித்திடுகங்கைபொற்றாய்மையாய்வேக
வதியெனப்பெயர்தாங்கிநின்மணவனுக்குடன்பட்
டகரவல்லியாயேனையோரரும்பவந்தொலைக்கு
நதியதாகியேவாழ்கெனநவின்றனனல்கி. (௬௯)

பெற்றபேறலாம்பெரிதெனக்குரவர்கண்மதிப்ப
நற்றவன்மனத்தருக்கிடநல்வரமளித்துக்
கற்றதூயரோடறப்பெருங்கடவுள்போய்மறைந்தான்
சொற்றவண்ணமேமறலியைத்துரந்திவன்வாழ்ந்தான். (௭௦)

எடலர்ந்ததாரிறைவவில்லியன்முறையியற்றிற்
காடலர்ந்தமாமறலியைக்கடக்குதலரிதோ
பீடலர்ந்தனையுணருதியெனவவன்பேச
மாடிருந்தவர்மகிழ்ந்தனர்மீட்டிதுவகுப்பான். (௭௧)

கிராதபுயங்கசம்வாதசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௭௧.

உ

இந்திரமதங்கசம்வாதச்சருக்கம்.

பொன்னார்கலசத்திருநிலைமுலைப்பூமாதொடுந்தாய்புகல்வழியே
பின்னோனென்றுடராக்கானை ந்துபேசிரேமாண்டுறுகாலை
மன்னுங்கவிச்சேனையக்கொடுவாரிதியைச்சேதுபந்தனஞ்செய்
தொன்னாரிலங்கையரசுகிளைபொடும்வேர்களைந்தானுறுதுணையே. (௧)

சொல்லாலடியேன்றுயர்களையத்தோன்றுங்கோமானினியொன்று
கல்லாவடியேன்கேட்டுய்யக்கரைத்திமூன்றுகுலத்தோரு
மெல்லாநலமுமுளமறையோர்குலத்தோடிசையுமியலுண்டேல்
வல்லாய்புகலக்கடவதெனக்குரவனிதனைவகுத்துரைத்தான். (௨)

தேசிற்பொலியுமொருமறையோன்சிறுவன்றந்தையேவலினா
னேசத்தருங்கானடைதருப்பைநேர்வானெறிக்கொண்டகல்போதி
லாசிற்பெரியோன்வேசரிதனன்பாலளித்தகன்றையடர்த்
திசற்றுறந்தானதுதன்னையின்றுட்குரைத்தநதிகலோடும். (௩)

கேட்டவதன்றாயவன்மறையோனன்றாங்கிழாம்புலையனவன்
காட்டிலவனோடென்னைபயன்கனல்வதெனவேகட்டுரைப்ப
மீட்டுமிவனவ்வாய்மையினால்வியர்த்துமாழ்கியருகடைந்து
நாட்டங்கலுழிதரவுண்மைநவில்வாய்தேறவெனக்கென்றான். (௪)

முன்னைப்பிறவிநல்வினையான்மொழியுமுயிர்கள்பாடையெல்லாந்
தன்னிற்றெளிந்தோனாதலினாற்சார்ந்தானுணர்ந்தென்றகங்கொண்டே
யுன்னைப்பயந்தாள்காமமயக்குற்றேநாலாம்வருணத்தோன்
றன்னைப்புணரவுனையளித்தாள்சார்ந்ததுனக்குப்புலையெனலும். (௫)

கேட்டசிறுவனடுநடுங்கிக்கிட்டிப்பிதாவைநிகழ்ந்தவெல்லாங்
காட்டியுரைத்துத்தவமதனாற்கலப்பன்மறையோர்குலத்தென்றே
மீட்டுங்கானில்விரைந்தடைந்துபதமொன்றிருத்திவிண்ணோக்கி
நீட்டித்தொருநூறாண்டளவுநின்றுதவஞ்செய்திடுநாளில். (௬)

குலிசக்கரத்தோனடைந்தெதிர்ந்துகுறித்ததவமேதினுக்கென்ன
வலியுற்றுயருமறையவரில்வழக்கந்தருகென்றிரந்திடலு
நிலனிற்குறியாவரங்குறித்தாய்நேருந்தரமன்றதையொழித்துத்
தொலைவற்றுளபான்மையினுனக்குத்துணிபேதுரைத்திதரவென்றான். (௭)

நாகர்க்கிறைவன்பகர்ந்திடலுநடத்தூந்தவத்தோன்யாதொன்று
மோகித்திலனிங்கிதுவொழியமொழியேன்வேறேதையுமென்ன
வாகைச்சிலையான்போய்மறைந்தான்மற்றுஞ்சிறுவன்றவமானான்
சோகத்துடனோரங்குட்டமூன்றியெவருந்துணுக்குறவே. (௮)

தசைதோனரம்புபுறஞ்சரியத்தளரானாகிச்சதவருட
மசையான்றவத்தினிருந்திடலுமங்கமொடுங்கியவனிமிசை
விசையால்வீழ்ந்தான்மகபதியும்விரைந்தாங்கடைந்தேகரநீட்டி
னசையோடெடுத்துவருத்தமெலாமகற்றியிதனைநவில்கின்றான். (௯)

பொன்னுமிரும்புசெம்பாகும்புனலுண்டதைப்போற்புவியிடத்தின்
மன்னுயிர்கண்மாமறையோராகார்பிறவிமடங்காம
லென்னுமுனதுசிந்தைநிலைக்கெட்டாக்கனியைவிரும்பியுனக்
குன்னாற்றவாறுதேடினையீண்டொழிவாயிதனையுணர்வில்லாய். (௧0)
இவ்வாறியற்றுந்தவங்கள்சதமடங்காவேறுமெனிற்புலைய
ரொவ்வாநாலாம்வருணத்தார்க்கொப்பாரவரிவ்வியலுளாற்றிற்
செவ்வாடகஞ்சேர்வசியரொடுஞ்செறிவாரவராயிரமடங்கு
மவ்வேதனையாந்தவமுளாற்றின்மன்னர்குலத்தைமருவுவரே. (௧௧)
அரசரிந்தமுறையாகவைஞ்ஞூற்றிரட்டிமடங்குளாற்றி
லுரைசெய்மறையோர்குலம்பெறுவருணர்வுநெறியும்புலனவித்த
வரிசைத்தவமுமோரயுதமடங்குசெயினங்கவர்முனிவர்
புரைசெயுனக்குத்தருமாறுகிட்டாதிந்தப்புணர்ப்போடும். (௧௨)
கேட்டிசிறுவவிவ்வாறுகிளர்ந்திச்சனனந்தொறுந்தவங்க
ளீட்டிமறையோர்குலத்துதித்தோரிசைக்குநெறியைக்கடந்துலவின்
மீட்டுமிழிந்தகுலத்துதிப்பரிழிந்தோர்வருணம்விளக்குவரேற்
காட்டுஞ்சனனங்களினுயர்ந்தவருணங்கடமைகடவார்க்கே. (௧௩)

வேறு.

வேந்தாற்பற்றொருதவிப்பிரசார்த்துலமுன்கை
சேர்ந்திடாதிதனைவிட்டுச்சிறுவனீமாதர்பல்லோர்
காந்தனாயுனைப்பூசிக்கவைகெனக்கவினுநல்கி
மாந்தரிற்சண்டதேவனெனும்பெயர்வழங்கினானே. (௧௪)
அவ்வணமிசைந்துமைந்தனரிவையர்பலரோடாங்குச்
செவ்வணமேனியோடுதிகழ்ந்தனன்புவியிலிப்பாற்
கைவருகளிறுகைத்துக்கடவுணாயகன்போய்ச்சார்ந்தான்
கொவ்வைவாயரம்பைமாதர்க்குழாமெதிர்கொள்ளவின்பால். (௧௫)
ஆதலாலரசரேறேயந்தணர்குலந்தாராத
லோதுமுக்குலத்துளோர்க்குமுறுவதன்றென்றுகங்கை
காதலன்புகலக்கேட்டுக்கரமுகிழ்த்தறத்தின்காளை
யோதினான்முனிவராருமுளமகிழ்வெய்தமன்னா. (௧௬)
காதிநற்றனையன்முன்னங்காவலர்குலத்துதித்தோன்
வேதியனானானென்றுவிளம்புசொல்லுலகிலுண்டா
லேதினாலடைந்தானென்னவிருக்குணர்முனிவனில்லாட்
கோதியதரிவைமன்னற்குரியவடமூவலாலே. (௧௭)

வேறு.

வந்தவம்மைந்தனுமாதவங்களை
தந்துபல்லூழிகள்சாரவாற்றலன்
சுந்தரத்தோளினாய்சொல்வதென்னென
வந்தணர்பெருமிதமறியக்கூறினான். (௧௮)

மீளவுமுதிட்டிரன்வீதவவ்வியன்
கோளறுமன்னர்நற்குலத்துதித்தவன்
ருளதாமறையவன்குலத்தைச்சார்ந்தனன்
ளமார்புவியினென்றுரைப்பர்வல்லவர். (௧௯)

அன்னபண்பேதெனவறையலாயினன்
முன்னம்வீதவ்வியன்முடிபுனைந்தல
கென்னலமும்பெறப்புரக்குமெல்லையிற்
றன்னனையவர்சதந்தனையர்தோற்றினர். (௨௦)

வந்தவர்காசிநாடளிக்குமன்னவன்
றந்தவர்தனையமர்த்தலத்தில்வீட்டலா
னந்தமன்னவன்பரத்துவாசன்பொன்னடி
முந்துபூசித்திதுமொழிந்தகாலையில். (௨௧)

கருணைபூத்தவனொருமகங்கவின்பெற
விருநிலத்தியற்றியாவரையுமேவினுற்
பொருதழித்திடும்வலிமகவைப்பொற்புற
நிருபனுக்குதவினனிமலர்வாழ்த்தவே. (௨௨)

அப்பெரும்புதல்வன்வீதவ்வியன்சிறார்
தப்பறப்போரிடைச்சாயவீட்டியே
கைப்படைத்தந்தைமேலெய்தகாவலன்
வப்புடன்பொருதலின்வெந்தந்தோடினன். (௨௩)

பற்றுவானிவனுடன்படரவாங்குறு
சொற்றநற்பிருகுவின்சூழன்மன்னியே
கொற்றவன்மறைந்தனன்குமரன்பின்றொடர்ந்
துற்றனன்முனிவனையுவந்துபோற்றினன். (௨௪)

எங்குலத்தவர்தமையீடழித்தவன்
றங்கிநின்சூழலிற்முன்மறைந்துளா
னிங்கிவன்றனைகவர்ந்தேகவேண்டுமென்
றங்கையாற்றொழுதனனவன்பொற்றாள்களில். (௨௫)

கலைவல்சீர்மைந்தனேகருதுநின்பகை
யிலையிவணுளனெனிலினிக்கொண்டேகெனத்
தலையளிபுரிந்தனன்சார்ந்துசூழலுட்
கொலைபயில்வேலினன்குறித்துநோக்கினன். (௨௬)

ஏந்தலுமுனிவரனினைப்பிலெண்ணரு
சாந்தவேதியரொடுசார்ந்துவைகலு
மாய்ந்துணர்ந்தந்தணனடியிற்றாழ்ந்துபோய்
சேந்தகண்மைந்தனுநகரிற்சேர்ந்தனன். (௨௭)

அன்றுதொட்டரசனுமையன்வாய்மையாற்
றன்றியவுருவமேதூயதாமென
நின்றனன்றவத்திடைநேயமைந்தரை
மன்றலங்கனலிடைநல்கிமாண்பினல். (உஅ)

உதித்தகாதலர்களுமோங்குவேதியர்
கதித்தநற்குலத்திடைகலந்துளாரிதை
மதித்துநோக்கிடின்முறைறவழுவன்றுமென
விதித்தவன்றனைபுரைவிமலனோதினன். (உகூ)

அனையதுசெவிபுகவையமீத்தனன்
மனையனற்பிரிதிக்கினைச்சபலராக்குத
வினையவர்வலிகொலோவிதியியற்கையோ
கனைபுலன்கழலினுய்கரைத்தியென்னவே. (௩௰)

தன்வலிச்செயலொருவர்க்குத்தரவுமென்
முன்வினைச்செயலதைமுற்றிவிக்குமா
லென்வலிச்செயலிலார்க்கென்னிருப்பினு
மின்வலிபொற்புணர்த்தொளிக்குமேல்வினை. (௩௧)

வித்துநன்றாயினுநிலத்தின்மேம்படு
மத்தகைகளர்நிலத்தாற்றல்குன்றுமால்
வைத்தநேயநன்மையேவழங்குந்திபமு
மித்தகையுணர்கவென்றெடுத்துக்கூறினன். (௩௨)

மீளவுமோதுவான்விதியுஞ்செய்கையு
நீளவுண்டாமெனிற்கருமநீடுமால்
மூளுமோகனலுயிர்ப்பின்றிமுற்றுமோ
காளவெங்கனலிலாக்காற்றின்மாமகம். (௩௩)

என்றவன்குறித்தலுமிறைவன்கூறுவா
னன்றிதேநாடியோர்நலந்துய்த்தோரது
குன்றல்கண்டகல்வதோகூடத்தாழ்வதோ
வின்றிதுமொழிகெனவெடுத்துக்கூறினன். (௩௪)

காசிதேயத்திலோர்கைவில்வேடுவன்
மாசிலாழ்பறவையைமாய்த்தல்வேண்டியே
கூசிடான்விடக்கணைகுறிப்பிற்போக்கினன்
றேசறவழுவியோர்தருவிற்சேர்ந்ததே. (௩௫)

நஞ்சுதோய்சாயகநாட்டியத்தரு
விஞ்சுகாய்கனியிலைவியந்துதிற்றலா
னஞ்சுகமொன்றதிலிருந்தருந்திய
தெஞ்சலின்றெடிதுநாள்காறுமின்கனி. (௩௬)

அச்சுகமத்தருவனையதாகியு
மெய்ச்சுடுவெயின்மழையுயிர்ப்பில்வீடியுங்
கொச்சைநீரறிவிலாதிருந்துகோலமு
மச்சமுநீங்கியதக்குவட்டினே. (௩௭)

மேகவாகனனதையுணர்ந்துமேவிநீ
யாகநொந்திருப்பதேனயன்மரங்களிற்
சாகநற்கனிநிழற்சாரநோக்கியும்
மோகியர்தம்மிலென்றுரைப்பக்கூறுமால். (௩௮)

வேறு.

எக்காலமுமிப்பாதபமெனதாமெனவைகி
முக்காலமுமுதிருங்கனிமுசியாதுநுகர்ந்தே
னிக்காலமிதற்கிவ்வணமிடையூறுகலந்தாற்
சுக்காதகல்வதுவோவுணர்வுடையோர்மதிதூய்மை. (௩௯)

பெற்றுலவர்நண்பென்றுபிடிப்பார்பெறுமுறைக
ளற்றுலவர்தமைநீங்குவரதுவும்பெறுமறனே
பற்றுலகல்கிலனென்னலுமறையோர்நிகர்வடிவத்
துற்றேனுடனிவையோதினவுயர்தோள்புளகெழவே. (௪0)

நீயேயறவுருவம்பெறுநீரேதுகுறிக்கிற்
சாயாதருளுவனென்னவுணர்ந்தேதருகுவையே
லோயாமரமுதன்மைப்படியுறவேபுகலெனலு
மாயோனவைதந்தான்வளனடைவுற்றததருவே. (௪௧)

பல்லாயிரவருடந்தவம்பயில்வோர்களின்முன்னர்
நில்லாதவனொருநன்னெறிநிலைகண்டெதிர்வந்தான்
சொல்லாமிவையறனுக்கொருதூய்தாமெனவுணர்தி
நல்லாரகல்கிலரென்றுபுகன்றானவையில்லான். (௪௨)

அக்காலமறத்தோன்றலுமறிகுற்றுயரறிவே
தெக்காலமுமுணர்வாயதையுரையென்னவிசைத்தான்
மைக்கார்முகில்வண்ணன்பதமலர்காணுதலாமாற்
றிக்கோடியபுகழாயிதுகேளென்றுதெரித்தான். (௪௩)

ஐம்பூதமுமறனும்பலபலயாகமுமதனை
நம்பும்பயனவையுந்திறன்ஞானங்களும்வீடுஞ்
செம்பொன்னடிதருமென்னிலினிச்செய்கையுமுளவோ
பைம்பொன்மணிமார்போய்நமர்பவநாசனனிவனே. (௪௪)

கயிலைக்கிறையுறைவானொடுகமலத்தனுமானு
மயிலிற்றிகழ்பவனும்பலவானோர்களுமறையு
மயலிற்றிகழ்துவரைப்பதியாள்வோனெனவறியு
மியலிற்செறியறிவேயுயரறிவென்றனனினியோன். (௪௫)

முனிவோர்சிறுநகையோடுமெம்முகில்வண்ணனைநோக்கி
நனிதேவகியுதரத்திடைசிலநாண்முனமிவந்தோன்
றனிநம்மொடுபயில்வானிலமுருமன்னர்கடரமா
யினியிங்கிவனுயர்நான்மறையிறையோபுகலெனலும். (சசு)

அரணிக்கிடைசெழுசெம்பொறியஃதோர்சிறிதெனினு
முரணிற்பலபுவனங்கண்முறுக்குந்தகையிலையோ
தரணிக்கதிபதியாகியதருமன்றருதவமே
கருணைக்கொருமுதனம்மொடுகருதிப்பயில்வதுவே. (சஎ)

எனவோதலுமருள்விடுமெனிருகண்ணளியுடையோன்
பனிவான்முருவலினோடுபரந்தாமனிருந்தான்
மனனோடுயர்முனிவோர்கண்மகிழ்ந்தாரறன்மகவுந்
தனிநற்குலமுதாதைதனைப்போற்றியுரைக்குஞ். (சஅ)

சுருதித்தவமறையோர்க்கிதுதருவேனெனச்சொற்றந்
துருவற்றதைநல்காதவருறுபேறுரையென்ன
மருவிற்றெருநரியோடொருவனவானரமதனைப்
பரிசித்திடுதசைதோன்மிசைவதுகண்டிவைபகரும். (சகூ)

எப்பாவமுயன்றாய்முதலிக்காலமடுத்தூன்
றுய்ப்பாகியதென்னோவிதுசொல்வாயெனமறையோர்க்
கிப்பார்மிசைதனைநல்குவனென்றேருதியிறந்தேன்
றப்பாதுதவிலனுதலினிதுசார்ந்தனனெனவே. (ருo)

முன்வாறுதெரிந்தோதிடமுகிழ்வானரமிதுவோ
நின்வாறெனவகன்றுற்றதுநிலமீதிதுசாருங்
கொன்மாமறையவரோடுகுறித்திகலரானாற்
றன்வாறுணர்வாயென்றுரைதந்தானதிதந்தான். (ருக)

வருணத்திழிபுற்றோர்மறைமாமந்திரசெபமுட்
கரணத்திலடைத்தாலவர்கதியேறுதலுளவோ
சரணத்துணையுடையாயிதுசந்தேகமறுப்பாய்
புரணத்துடனென்றானறன்மகனோர்கதைபுகல்வான். (ருஉ)

இமையக்கிரியுறுசாரலினிடையெண்ணறுமறையோர்
கமையிற்செறிதவமுற்றதுகண்டங்கொருசிந்தை
யமைவுற்றவனுலாமரபதில்வந்தவனணுகி
விமலத்தவர்நற்றேசிகன்விரைமாமலர்தொழுதான். (ருங)

வையத்தெழுபிறவித்துயர்மாற்றும்படியருள்செய்
துய்யத்தவமுறவைத்தெனையாள்வாயெனவோத
வெய்தற்கரிதிதுநீவழிபடுகென்றருளீந்தான்
மையற்றவனுரையின்படிவழுவற்றுநடந்தான். (ருச)

அச்சார்புவிடுத்தோரிடையமர்ந்தன்புடையோனய்
மெச்சாவுயரிமையோர்பலர்விரதங்கள்செபங்கள்
பொச்சார்பிலனலாற்றினன்புரிவானதிதிகட
விச்சாதிதுறந்தேகுருவினையேத்தியிருந்தான். (௫௫)

வேறு.

தென்புலத்தவர்விழைவுறக்கடன்முறைதிருத்தி
யன்புடைத்தனிதேசிகனடிமறவாது
யின்பமுற்றிடவுலகெலாமிவனடந்திடுநாள்
முன்புகற்பனைசெய்தவன்முகமலர்ந்தடைந்தான். (௫௬)

வாழ்ந்துளேனெனமறைமுனிதாளிணையதனிற்
ருழ்ந்துநற்பெருந்தவிசினுய்த்திடலவன்றருக்கி
யாழ்ந்தநெஞ்சினனியற்றுநன்னிலையெலாமாய்ந்து
வீழ்ந்திடுஞ்செயல்விலக்கிநல்லனவெலாம்விளக்கி. (௫௭)

வைத்துமீண்டனன்மற்றவனவ்வணமருவி
பொத்தநாளெலாமுலைந்துமன்னவன்றனக்குதித்தான்
புத்திரன்றனைப்புவிதொழுமகுடமும்புனைந்தே
யத்தனேகினனருங்கதிக்கிவனரசானுன். (௫௮)

உலகுகாக்குநாண்முற்பவத்தறநிலையுரைத்த
கலைகொடேசிகனிறந்தபின்காவலனகரி
லிலகுவேதியனில்லுதித்திவன்புரோகிதனு
யலகில்சேனையான்றன்னுழையனுகினனன்றே. (௫௯)

கண்டுகாவலன்முற்பவத்தோன்றலாற்கசிந்தே
விண்டுவெண்ணகைவிளைத்தலும்வேதியனருகி
லண்டியென்கொலோயான்பிழைபுரிந்ததின்றதையுட்
கொண்டிடாதெனக்குரையெனநிகழ்வெலாங்குறித்தான். (௬௦)

தெரிந்தவேதியன்மந்திரம்புகன்றதீமையினுற்
புரிந்தநற்றவம்பொய்த்திவன்புரோகிதனுனேம்
விரிந்தமந்திரஞ்செபித்தலான்மேம்படுகுலத்திற்
பரிந்திடாதஞானத்துடன்பவமடைந்தனனுல். (௬௧)

என்றுணர்ந்தனனியற்கையாலிவ்விறைவணங்கி
யன்றுதந்தனனுன்களுமாடகக்குவையு
மின்றுநீயிதன்றீமைநீக்கெனவிடுத்திருப்ப
மன்றன்மாலையான்மறைமுறைப்படியறம்புரிந்தான். (௬௨)

மகங்களாசனையதிதிபூசனைபலவாற்ருற்
சுகங்களெய்தியுந்தோய்ந்துநீர்த்துறைபலகண்டு
மகங்களைம்புலன்வழிசெலாதறுபகைசெகுத்து
மிகந்துமுற்பவவினையலாமிறந்தனனுரவோன். (௬௩)

முனிகுலத்திடைமுக்குறும்பகற்றியமுதன்மைப்
புனிதனுயவதரித்தனன்புரவலன்மநுநா
னினைவினீட்டியேவாழ்ந்தவனெடுங்கதியடைந்தா
னினியுரைப்பதென்கேட்டிநீயேசறுகுணத்தோய். (௬௪)

சொற்றவன்றனக்கிழிபலாற்கேட்டவன்றாய்மை
யுற்றுமேவுவனற்கதியாதலாலுரவோர்
குற்றம்வீந்தநற்குணத்தினோர்க்கன்றியேகுறியார்
பெற்றமந்திரம்பெருந்தவநற்செயல்பெருமை. (௬௫)

அந்தணன்பலவிடும்பைகட்குடன்படுமாகின்
மந்திரம்புகன்றோன்றவன்றன்னினும்வாடுஞ்
சிந்தைதூய்மையோய்சோதனைபுரிந்தலாற்செப்பார்
முந்துவான்கலைமுழுதுணர்நன்மனமுதல்வர். (௬௬)

என்றுகூறலுமறன்மகனின்பமாம்வேலை
துன்றிமீளவுஞ்சுரர்களுயகனுடனன்பா
யொன்றிலேன்பயனெவ்வுரர்க்கேதுறுமுரைத்தி
வென்றமேலவவென்றனன்மீட்டிதுபகர்வான். (௬௭)

கேட்டியோர்கதைகிளத்தபங்காசுவனென்னு
நாட்டையாள்குவனரபதிநந்தனர்வேண்டி
வாட்டிறற்சுரர்நாயகன்மகிழ்வுறுமகத்தை
வேட்டுமைந்தர்கள்சதமளித்தனன்மிகவியப்பால். (௬௮)

அந்தமைந்தரோடவனியைப்புரக்குநாளரசன்
சுந்தரஞ்செறிவனிதையர்சிலரொடுந்தேர்க்கு
வந்தசேனைகண்மந்திரக்கிழவரோடொன்றிப்
புந்திமீதுறவேட்டமாயடவியுட்புகுந்தான். (௬௯)

சேனையானவைசிதறிடத்தமியனுய்ச்சென்று
மானைவாளியால்வீழ்த்துவான்மகிபதிவிரையத்
தானலம்பெறுமகபதிசூட்சியாலூழி
தானடைந்தபேரொலியெனவொலித்ததோர்சத்தம். (௭௦)

விஞ்சுவான்பரிதவறியவ்வேந்தனைத்தாங்கி
வஞ்சியோடியதரசனுமயர்ந்திருந்தனனுன்
மஞ்சுசூழ்வரைமருங்கிலோர்மானதிநன்னீர்
விஞ்சியாடினன்வனிதையாய்விளங்கினன்விதியால். (௭௧)

நாணந்தாங்கிமீண்டடைந்துதன்னந்தனர்தம்பாற்
காணரும்பெருங்காசினியளித்தருங்காட்டிற்
றனெனுந்தவஞ்செய்பவர்சூழல்போயடைந்து
மாறுறாந்தவமியற்றிவைகினளந்தமங்கை. (௭௨)

காமத்தாலொருமாமுனிகையைப்பட்டுச்
சேமத்தோகலல்குலாள்சிறுவர்நூற்றுவரை
வாமத்தாலளித்திருந்தபின்மைந்தரோடகன்று
நாமத்தாற்றனிநகரிசென்றடைந்தனணங்கை. (௭௩)

மைந்தர்நூற்றுவர்முதலளித்தவர்தொழவாழ்த்தி
யிந்தநல்லுருப்பெற்றபின்பெற்றவரிவரென்
றந்தமைந்தருக்கறிவுறப்புகன்றவரோடுந்
தந்தமானிலம்புரக்குமினென்றனடகையால். (௭௪)

அனையவாற்றினாலவர்புரந்திருத்தலுமமரர்
புனிதநாயகன்பொறுத்திலனாகியோர்மறையோன்
றனையனாகிவந்திருதிறத்தவருக்குஞ்சாற்றி
வினையினான்மனம்பேதித்துவேறுசெய்தனனே. (௭௫)

இருதிறத்தருமிருஞ்சமர்புரிந்துடனிற்பக்
கருமழைக்கணாள்கலுழ்ந்திடக்கண்டெதிர்குறுகி
யொருவனிற்றலுமொண்டொடிதன்குறையுரைத்தாள்
செருமுகத்தினின்மைந்தர்மாய்ந்துளகொடுஞ்செயல்கள். (௭௬)

நாகர்நாயகன்சிறுநகைபுரிந்துநீவேள்வி
யாகநேர்ந்தெனக்கப்பிரியத்தையாற்றினையான்
மேகவாகன்யான்வெம்மைகொண்டிவையெலாம்விளைத்தேன்
றேகையாயதுமெனதுடைச்சூட்சியின்றுணிபே. (௭௭)

என்னவோதலுமிணையடிபன்முறைவணங்கி
யென்னதூழ்வினையிவ்வணம்புரிந்ததென்செய்வேன்
பொன்னிநாட்டவபொறுத்தியென்பிழையினைவெகுளே
லுன்னிலாரினிமூவுலகுடையவமிரென்றாள். (௭௮)

சாந்தனாகியத்தையலைமீளவுநோக்கி
வீந்தமைந்தரிற்சிலர்தமைமீட்டுநல்கிடுவ
னாய்ந்துகூறுதியாருயிரியாவருக்களிப்ப
தேந்தராவகலல்குலாயெனவவளிசைத்தாள். (௭௯)

மடந்தையான்பின்புயிர்த்தநன்மைந்தரைப்புரத்தி
கடந்தவேலினாயென்றனள்ககனநாயகனு
மிடைந்தவேல்விழியாய்முனம்விருப்பினாலளித்த
தடம்புயத்தரையிகந்ததென்சாற்றுவையென்றான். (௮௦)

அந்தமைந்தர்மீதாண்மையின்வரவெனக்கருள்கூ
ரிந்தமைந்தர்மேற்பெண்மையினவாவிஃதேற்றந்
தந்திடென்னலுந்தன்னுளமகிழ்ந்திருசதமா
மைந்தர்தம்மையுமுய்ந்திடச்செய்தனன்மகவான். (௮௧)

மீளிகூறுவான்வேந்தனீ மின்னிடை மடவார்
கோளிற்றாழ்கதென்கோடியாண்மையினெனக்குறிப்பத்
தாளிற்றாழ்ந்திஇன்பமாங்கதனினுந்தலைமை
வாளித்தெய்தலான்விரும்பினனித்தனிவடிவம். (அஉ)

வேண்டிலேன்முதனுருவமென்றுரைத்திடவிண்ணோ
ராண்டகைக்குளமற்புதமடைந்தகையளித்து
மீண்டுமேகினன்மைந்தரோடிவளகமேவி
யாண்டுவைகினளறிதிநீயிதன்செயலனைத்தும். (அங)

அறனளித்தமாமகவெனவாங்கவன்றேறி
நிறனளித்தகங்காநதிநீர்மையாற்பயந்த
திறனளித்தழுதாதையைத்தெரித்திநீயென்றான்
மறனுடைப்படைமாதவன்வல்லபமென்றான். (அச)

வேறு.

முன்னைத்திறல்கண்முழுதோர்ந்தவன்முன்னியோதும்
பன்னற்கரியவுவணன்பெரும்பாரிற்றோற்றி
யன்னைக்கடைந்ததனிச்சாபமகற்றவேண்டி
யுன்னிக்கடவுள்நகரெய்தினனோகையோடும். (அரு)

வானோரைவென்றுதனியமுதேந்தினன்வந்தஞான்று
ஞானோதயமாமொளியானெதிர்நாகமீதி
லேனோர்கள்போலத்திருமாலடைந்தின்சொலோடு
நானுவரமுமளித்தேகினநன்மையோடும். (அசு)

பெற்றோன்கருத்துமுடிவாயினபின்புதந்தை
பொற்றாள்பணிந்திச்செயல்கூறலும்புளகரும்பி
நற்றாய்தனினுமினியானுனைநாடிமேவ
லற்றார்தமக்குமரிதென்றவமாரளப்போர். (அஎ)

நாராயணனையருட்கொண்டலைநளினநாபி
நீரானையெங்குமொளிர்பரந்தாமனைநீண்டபச்சைத்
தாரானையெய்திப்பதரிகச்சூழலிற்றாழ்தியென்றே
நேராகவுய்ப்பவவனேகினனேயமோங்க. (அஅ)

கண்டான்றிருமான்மலரடித்தாமரைகாதலோடே
கொண்டான்பணிந்தானவன்பலநாமமுங்குறித்துநின்றான்
றண்டாமரையோன்றன்னைமுன்றந்தவன்றண்ணளிக்கே
பண்டாதரங்கொண்டுறவானைநோக்கினன்பச்சைவண்ணன். (அகூ)

வந்தாயடைதியுடனென்றுவழங்கியோர்சார்
முந்தாநடந்தானிவனுடன்போந்தனன்மூன்றுகண்ணான்
கொந்தாரலங்கற்குழலுமையோடருந்தவங்குறித்த
சந்தார்வனத்தைக்கடந்தான்வடசார்படைந்தான். (கூ0)

எய்தற்கரியவிருள்வண்புவியெதிரலோடுஞ்
செய்நற்றவத்தான்காருடநாமனுக்தேற்றநீங்க
வெய்திற்சுடரின்விழிநல்கிவிபினமெங்கு
முய்தற்பயன்போலுலவினன்வானிலும்மண்ணினூடும். (கூக)

காணுதபெற்றிபலகோடிகள்கண்டுகண்டு
மாணுதுநிற்பவயினனும்வாள்விழிபொத்திமீள
வேணுதநோக்கமுதலையபாங்கரிருந்தவண்ண
நாணர்சிலையானரநாரணுகலுநாணமுற்முன். (கூஉ)

என்னேயெதிரும்பற்பலபெற்றிகளென்றுகேட்பக்
கொன்னேயென நுதனித்திறன்மாயைகுறிக்கவல்லோர்
தன்னேர்முனிவர்தமக்குளுமின்றிதுதக்கதென்முன்
முன்னேயுணருந்தரமுளவோவெனமோகமற்முன். (கூங)

வேறு.

இவ்வணமெவர்க்குமெட்டாப்பெருந்தகையென்மூதாதை
மைவணமேனிமாயன்மாயநீர்புகலக்கேட்டுப்
பொய்வணமுணரான்மீளப்புகலுவான்புதல்விதன்னை
யெவ்வணமுடையநீராற்களிக்கினன்றிசையுமென்முன். (கூச)

இந்திரமதங்கசம்வாதசருக்க முற்றிற்று.

ஆகசெய்யுள் - கசுரு.

கன்னிகாதானவரன்மகிமையுரைத்தசருக்கம்.

அண்டர்தஞ்சிறுருங்கன்றுமயனெளித்திடவுங்கானிற்
பண்டுபோலானின்கன்றும்பகர்தருபுதல்வராகி
வண்டொலிகூந்தலாருமானினம்பரிவுகூரக்
கண்டுகல்களிக்கநிற்குங்கண்ணனைக்கருத்துள்வைப்பாம். (க)

வரநதிமைந்தன்சொல்வான்மாமுனியளித்தமைந்தன்
விரதமிக்குயருமட்டவக்கிரனென்னுமேலோன்
பிரமசாரியத்தினூடுபெயர்ந்தருங்கலைகணீந்தி
யுரனுடைமனையொழுக்கமுஞற்றுவானுளங்கொண்டானே. (உ)

வாகுறுதவத்தான்மிக்கவதானியமுனிவன்பாவை
பாகெனுமொழியினள்சுப்பிரபாவையையாய்ந்துநாடி
யேகியங்கவனைநோக்கியின்றவடன்னையின்று
நாகரும்புகழநன்னீரளித்தியோநவிலுகென்றான். (ங)

அம்முனிபரிவினேடுமையநீயறிவான்மிக்காய்
மைமுகிற்குழலினளைவதுவையெய்திடுமுன்னுக
வெம்மைதிரிமையச்சாரன்மேவிமீண்டருளுகென்னச்
செம்மையோயாண்டியற்றுங்கருமமென்செப்பாயென்றான். (ச)

பொற்புறுமிமையவல்லிபுனிதனைக்கருதிநோற்ற
நற்றவச்சாலைநோக்கிநம்பனைத்தொழுதுபோற்றிப்
பற்பலபுதுமைநோக்கிப்பாங்குறையடவியூடோர்
கற்பனைமனைகண்டேகிற்காரிகையொருத்திவாய்ப்பாள். (௫)

அவளுடன்வார்த்தைக்கூறிமீள்வையேலையநின்பாற்
றவளநன்னகையினைத்தருவனென்றுரைப்பத்தக்கோன்
அவணூன்மார்பினோடுதுயல்வரச்சென்றுசேர்ந்தான்
கவலையற்றவர்கள்மேவுமிமையமாங்கனஞ்சூழ்சாரல். (௬)

அங்குறுநெறியின்பாங்காருநிதிக்கிழவனன்பாற்
றங்கியநகர்கண்டந்நகர்வழிசார்ந்தகாலை
செங்கைமாமலர்கடாளிற்செறித்தருச்சனைபுரிந்து
தங்குதிசின்னானொன்றானவ்வணந்தருக்கியுற்றான். (௭)

அரம்பையராடல்பாடலவர்வழிபடுதலாக
விரும்பியதனதனல்கவிலங்குறுமனத்தனாகித்
திரம்பெறச்சுரர்நாளொன்றுதீர்ந்தபின்சென்றுசார்ந்தான்
வரம்பெறுகிரிகைமுன்னமாதவமிழைத்தசூழல். (௮)

கண்டுகண்களித்துத்தாழ்ந்துகவினுடன்வலங்கொண்டாங்கு
மண்டுநீர்த்தடங்கடோய்ந்துவதானியன்புகன்றகான
மண்டினன்மனையுநோக்கியடைந்தனனரிவைமார்கள்
கொண்டெதிர்முனியைத்தங்களிறைவிமுன்புறக்கொணர்ந்தார். (௯)

பரிந்தவளெதிர்வந்தாங்குப்பணிந்துடன்கொண்டுசென்று
கருந்தடங்கண்ணாளாங்கோராசனங்கவினநல்கி
விரும்புறுவழிபாடாற்றிவெப்பொழிதீஞ்சொற்கூறித்
திருந்திழைமாரைநீத்துத்தமியளாய்த்திகழும்போதில். (௧௦)

வேறு.

பங்கயநாயகன்பரவைமூழ்கலாற்
கங்குல்வந்துலகெலாங்கருதிமொய்த்ததா
லிங்கிவன்கடன்முறையியற்றிமங்கைதன்
றுங்கநல்லமளிமேற்றுயில்பொருந்தினான். (௧௧)

பசுங்கொடிபூண்களுங்கலையும்பற்பல
விசும்புறுமலர்களால்விரையலங்கலுந்
தசும்பிருகொங்கையுந்தாங்கத்தானுமவ்
வசம்பிலானுடன்றுயிலானகாலையில். (௧௨)

வேட்கைசற்றிலாதவன்விரும்பிடாமையாற்
றாட்கலன்புருடர்தந்தன்மைநீத்தனை
வாட்கணாரின்பமாம்வாழ்விலாதநீ
பூட்சிகொண்டென்பயன்பொருதலென்றனள். (௧௩)

அணங்கனுய்பிரமசாரியத்தையாற்றுவே
னிணங்கலாமேகொலாமேழைமார்க்கியான்
பணங்கிளரல்குலாய்கலிதப்பற்றிலா
வுணர்ந்தவரின்பமாம்வாழ்வுவப்பரோ. (கச)

மீண்டியான்புரந்தனில்விரைந்தபின்னரின்
மாண்டசீர்வனிதையைமணம்புரிந்தவ
ளீண்டருந்துணைமுலேசேர்வதன்றியான்
றீண்டினுமுனைப்பொருள்செய்கிலேனியான். (கரு)

பாரமோகனத்தனப்பாவையாருடைத்
தாரமோரினைத்தொடிற்சாரும்பாதக
நீருறுகன்னியேயெனினும்நின்மல
வாரியர்தொடுவரோநின்னையன்பொடும். (கசு)

தந்தைதன்காவலிற்சரிக்குமங்கையை
யந்தணீரேற்பதில்லறத்தின்மாண்பதாம்
பைந்தொடியிச்சையிற்பயிலுநின்னையான்
சிந்தையிற்ருெடுகிலனென்றுசெப்பியே. (கஎ)

வைகினனிரவெலாமங்கைபாங்கரிற்
செய்கைசார்கதிரவன்சேர்ந்தபின்னரின்
பொய்கையையண்மியேகடன்புரிந்தபி
னுய்கைசூழ்மாதினுக்குரைத்துமீண்டனன். (கஅ)

வந்தனன்மாதுலன்வாழுமன்னகர்
தந்தனனவதானியன்றனையைதன்னையே
யிந்தநீர்மையைபெறுமவருக்கிதலே
முந்துநல்லறனெனமுதல்வன்கூறினுன். (ககூ)

கேட்டனன்முரசகேதனனுங்கேழ்கிளர்
தாட்டுணைமுனிவருந்தக்கதேயெனக்
கோட்டமில்சிந்தையிற்கொண்டுபின்னரும்
பூட்டுவிற்காதலன்புகறன்மேயினுன். (௨0)

வருணநாலாவதில்வந்தமங்கையைச்
சுருதிநூல்வேதியர்தொடவுதித்தவன்
பெருமிதவான்கதிபெறுவதெவ்வண
மிருநிலந்தவஞ்செயவெய்திஞேய்சொலாய். (௨க)

என்றசொற்கேட்டவனிசைப்பதாயினுன்
றுன்றுவேதியர்கணுல்வருணந்தோன்றிய
மன்றலங்குழலியாவரையுமுற்றுவ
ரன்றியோருயர்குலம்ரசர்முற்றுவார். (௨௨)

தனத்தினேரிரண்டினுந்தாழ்குலத்தின
ரினத்தினுமாதரையிசைதலையறங்
கனத்திதுதவிர்த்தவர்கலக்கினுள்ளதா
மனத்தினிற்றாயவவருணசங்கரம். (௨௩)

அரும்பிரதிலோமனுமனுவலோமனு
மிரும்பெயர்தாங்குவரிதனின்மாமுனி
வருங்கலந்தளிக்குவர்மைந்தர்தங்களை
யருந்திறன்முனிவரேயாவணல்கினும் (௨௪)

எனையோர்முறைப்படிக்கெய்துநாமமுந்
தானுருகுலமுமாதவருக்கில்லையா
மானவசிலாக்கியன்மனுவுரைத்ததோர்
ஞானமார்வாய்மையுண்டுணர்திநாடியே. (௨௫)

இருநதிமூலமுமிருடிமூலமுங்
கருதுவதன்றெனக்கரைத்தமாமனு
வுரைதனக்குறுதியொன்றுளதுகாண்மினோ
தருமிடம்பொருளிலாதுயருந்தன்மையே. (௨௬)

குறுமுனிவசிட்டனுங்குருவியாதனு
மனுவுறவந்ததும்வயங்குதூய்மையு
நிறைவுறவுணர்குவைநினக்கென்கூறுத
லுறுதியெய்திடிற்கதியுறுவரென்றனன். (௨௭)

மீளவும்பகர்வனவ்வேந்தன்பூமிசை
பாளையோதியரெலாம்பாபரூபமென்
றுளநாயகவெனதகத்திலுண்டதை
வாளுறவெனக்குநீவகுத்தியென்றனன். (௨௮)

வேறு.

கேளாயரசேகிளர்நாரதனார்
வாளாவுலகோர்வலம்வந்துறுநாள்
மாளானெதிரச்சரமான்வரலும்
வேளானவனில்லவள்போன்மிளிர்வாள். (௨௯)

கண்டானவள்பேர்கழறிக்கவினா
லண்டாதெதிர்நின்றணிமங்கையரை
விண்டார்பெரியோரெனமேலவர்கள்
கொண்டோதுவதென்குறியாய்குணமே. (௩௦)

எனவேபுகலாவெதிர்நின்றவடான்
றனிவேதியனேயவர்தஞ்சரித
மினிதேர்செவியூடிடுமாறெனவே
யனநேர்நடையாளறைவாள்சிலசொல். (௩௧)

வேறு

உரைப்பதென்னைநீயுரைராதொன்றுண்டோபாதகத்துக்குடன்பட்டோர்கள்
கரைக்குமடமாலியபரேயவர்மனதுகண்டுரைக்கடவதாமோ
நிரைத்தபலபூண்கண்மலர்க்கலவையுண்டியாடையினுநேயமாவர்
நிரைப்படுமெக்காலத்தும்புருடமணித்தோள்பொருந்துஞ்செயல்கண்மாதோ.
யாவரேயெனினுமடமங்கையர்களிசைவுறுமாடவரெதிர்ந்தாற்
சேர்வரேயெனநிதம்பருவமடைகுவர்பொல்லாச்செயல்களெல்லாங்
காவலாயவரருகிற்குடியிருக்குமெனப்புகன்றுகவினிற்சென்றாள்
தேவரேத்தியபஞ்சசூடையெனுந்திருநாமஞ்செறிந்தகோதை. (௩௩)

அத்தகையோவெனவீணைமாமுனிவனுரைத்தகன்றானறந்தங்கோயே
யித்தகையவினாவினுக்குவிடையமிதேயெனவுரைத்தானதியாளின்றேன்
வித்தகனுமக்கொடியன்றானுரைப்புரக்கும்வகைவிளம்புகென்னச்
சுத்தபவித்திரவுடலானொருகாதையெடுத்துரைத்தான்றுதிமீதோங்க. (௩௪)

தேவசர்மனெனுமுனிவன்றிருத்தேவியெழுதரியவனப்பிற்சேர்ந்தா
ளாவலுடனிருந்துபணிவிடையியற்றுமுரிசையெனுமணங்கினோடு
தாவுவனத்தாச்சிரமந்தனிலிருந்தான்மகம்பிறர்க்குத்தணித்தல்வேண்டிப்
போவதுளந்தனினினைந்துவிபுலனெனுஞ்சீடனொடுபுகல்வதானான். (௩௫)

உரிசையெனுமாதாசைதனிலுழல்வான்மகபதியானுணர்ந்துகாக்கும்
வரிசையினாற்புகுந்தடையாவாற்றினிருந்தனனின்றுமகத்தின்சார்பிற்
பரிசமுறச்செல்கின்றேன்பரித்திருத்திநீயவளைப்பாகசாதன்
புரைசெய்பலவுருத்தாங்கிப்போதுமுணர்ந்திடவல்லாய்போற்றுகென்றாள். ()

அவ்வாறுதானிசைவுற்றருட்குரவன்றனைப்போக்கியல்லார்கூந்தற்
செவ்வாயாடனைப்புரக்குஞ்செயலுணர்ந்துமகபதிமுன்செம்மைமேனி
வெவ்வடிவேற்கருங்கண்ணாளருகணைந்துவனப்புயர்ந்தவேடந்தாங்கிக்
கைவேலோடெதிர்நின்றான்காவலிருந்தவனுயிரிற்கலந்திருந்தான். (௩௭)

வேறு.

மங்கையுணராதபடிமற்றவனொளித்தே
யங்கவளகத்தடையவங்கதுணராமற்
றுங்கமுறுவாசவனடைந்துபலசொற்றான்
செங்கைவளைமின்னனைசிறந்தணையுமாறே. (௩௮)

அக்கொடியுளத்திலுறுமந்தணன்வெறுத்தே
யிக்கடையினெய்தவலியென்னையகல்கென்றே
மைக்கடைவிழித்தெரிவைவாய்வழியிசைத்தான்
றெக்கமகவானுயிர்தொலைந்தெனவயர்ந்தான். (௩௯)

தேறியபின்மாமுனிதிருந்தவுருவங்கொண்
டேறுசெயுருத்திரனெனச்சினமிகுந்தே
கூறுபடுமெங்குரவனில்லைவிழைகுற்றாய்
நீறுபடுமுன்றவமருந்தவனினைந்தால். (௪௦)

தொக்கசுரர்தோன்றலெனவந்தபெயர்தோற்றுத்
தக்கவர்கடாரநினைவுற்றனைதரித்தாய்
மிக்ககொடியோயுனையவிப்பனுயிர்விடப்
புக்குமுறையெங்குளதெனப்புகலும்வேலை. (௪௧)

நாடிமகவானுரைசெவிப்புகநடுங்கி
வாடிமறைமாமுனிமலர்ப்பதம்வணங்கி
நீடியதவச்சுடர்நினைப்பவலமுற்றேன்
விடினரிறுயினன்விலக்குதிசபித்தல். (௪௨)

இன்றுமுதலிவ்வியல்பினிப்பயிலகில்லேன்
துன்றியருள்செய்கெனவிரப்பமுனிதூய
குன்றமெனவந்துவெகுளிக்கனல்குளிர்ந்தே
சென்றகதியென்றுரைசெலுத்தினன்விடுத்தான். (௪௩)

நீங்கிமகவானுமுயர்நீணகரடைந்தா
ணுங்கரிவையோடுறுதியாமவையியம்பிப்
பாங்கர்முனியுந்தனதுமாமனைபடர்ந்தா
னோங்குமுதனீங்கினவனுற்றனன்முடிந்தே. (௪௪)

நிகழ்ந்தவைபுகன்றிடநெடுந்தகையுவந்தே
புகழ்ந்தவனினைந்தவைபொலன்படவழங்கி
மகிழ்ந்தினியவல்லியுடன்வாழ்ந்தனன்வலத்தா
லகழ்ந்திடுபுவிப்பொறைபடுக்குமெனலாயே. (௪௫)

ஆமுறையினலரிவைமார்களிடையையா
காமுறுதலின்றிநிறைகாத்தல்கடனுமாற்
கோமுனியிவ்வாறுமதிகொள்கெனவகுத்தான்
றிமுனையடும்பகழிசெய்கைமிசையாழ்வோன். (௪௬)

இன்னுமிதுகேட்டியரமங்கையெழிலோடும்
பன்னுமுயர்வானிடைசரிக்குமிடைபார்மேற்
பொன்னரியலங்கன்மலர்பூவிலகிவீழ
மின்னனையெடுத்தனள்விளங்குரிசையென்பாள். (௪௭)

தன்குழலணிந்தவடருக்குமிடைதங்கை
மன்கொழுநனங்கர்பதிவந்தடையவேட்டோ
னன்மனைசெறித்தனவிருந்தபினர்நங்கை
பொன்மலர்புனைந்தசெயல்கண்டிதுபுகன்றான். (௪௮)

இந்தமலரெங்கணுளதென்னையிதன்வாச
முந்துலகினெங்குமிலையென்றவன்முனிக்காம்
பைந்தொடியுடன்சொலமகிழ்ந்தவள்பதிக்கே
யந்தவுரைசொற்றிதைபறைந்தனளடங்கி. (௪௯)

வாசமலரிவ்வனம்வரும்படியருட்செய்
தேசருமெனக்கினியவேழைபுனிவண்ண
மாசறவளித்தியெனவங்கவனிதங்கி
மாசில்விபுலப்பெயரினானெடுவகுத்தான். (ருo)

அன்றவனகன்றுககனந்தனிலடைந்தே
மன்றன்மலர்கொண்டுவருவானெதிரிருந்து
வென்றியொடுதோல்வைபடமெய்யமர்விளைத்தார்
துன்றுமடமாதுமொருதோன்றலுமடுத்தே. (ருக)

கண்டகனுமெல்லையிருமூவர்கவினோடும்
விண்டுபலகூறுபொரவேதனைதைநோக்கி
பெண்டிசைகொளம்புவியினெய்திமலர்வைத்தே
பண்டைமறைதேர்குருபதத்திடைபணிந்தான். (ருஉ)

அந்தமலர்மாலையரசன்பெறவழங்கி
வந்தவனைமீளநகர்மேவுறவகுத்துச்
சுந்தரவனங்கினொடுதூயனுறுபோதி
லிந்தமுறையாதெனவினாவினனெழுந்தே. (ருங)

வானிலொருமாதுமொருவானவனையுங்கண்
டேனவர்சுழன்றனரிருந்தனர்களறுவர்
மானமுறுகூறுபொருவார்மதிவலத்தோர்
தானவர்புகன்றமொழிதன்னிலுளதச்சம் (ருச)

ஒவ்வொருவருக்கொருவரோதுமுறையாற்கூ
றிவ்விபுலனெய்துகதியெய்தவுரியேனென்
றவ்வயினிகழ்த்தினரியான்செய்கொடிதென்னோ
திவ்வியமறைக்கிறைவதெளிபவுரையென்றான். (ருரு)

இருவரிரவும்பகலுமேசிலிருமூவர்
பரவுமிருதாறுமொருபாவமுளதுன்பாற்
கரவுறநினைந்துரிசையுட்புகுகருத்தென்
விரவுசெவிவைத்திலையதற்குனைவெறுத்தார். (ருசா)

அக்கொடுமைதீரும்வகையானருள்புரிந்தேன்
மிக்கமுனிநீதவம்விளக்கவெனவோதத்
தொக்குகுருவாய்மைகடுணுக்குறமதித்தே
தக்கதிதுவாமெனமனக்கவலைசாய்த்தான். (ருஎ)

சாலநெடுநாடவமியன்றரிவைதன்னோ
டேலவொருமூவருமிருங்கதியடைந்தார்
ஞாலமுழுதுங்கவிகைநன்னிழல்புரப்போ
யேலவுணர்வாயெனவெடுத்துரைகுறித்தான். (ருஅ)

அக்குவலயத்திறைவனம்மொழியுணர்ந்தே
மிக்கவரெவர்க்குமிவரென்றுரைவிளம்பத்
தக்கதெனநாரதனைமால்வினவுசார்பிற்
றொக்கவுரைசெய்ததிதுகேட்டியெனச்சொன்னான். (௫௯)

வேறு.

துவரையிற்பச்சைமாறேற்றுநாரதன்
கவினெலாநோக்கியிக்காசினிக்குளே
யெவரைநீபணிகுவையென்றுகேட்டலாற்
சவுரிமெய்ம்மகிழ்வுறச்சாற்றுவானரோ. (௬0)

பேறுசெய்குருவுரைபிசகிலாதவர்
தேறுமிம்மாயையைத்தெளிந்ததூயவர்
மாறிலாவிருந்தினைவழிபட்டோர்முதற்
கூறுநான்மறைமொழிகொள்ளுந்தூயவர். (௬௧)

தென்புலத்தவர்டென்றீர்க்குமாதவ
ரன்புறவந்தணர்க்கடங்குமுள்ளத்தர்
தன்பெருமொழுக்கங்கடணைப்பிலாதவர்க்
கென்சிரம்வளையுமென்றினிதிற்கூறினான். (௬௨)

ஆதலாலையநீயறிந்துவைகென
மீதலத்தவனெனும்வீடுமன்சொலக்
காதலானறன்மகன்கவுசிகன்றனை
யேதினாலளித்தனன்காதியென்னவே. (௬௩)

பிருகுமுன்பளிக்கநற்சவுனகப்பெயர்த்
திருமுனிகாதிதன்றந்தைசெங்கையாற்
றருவினைப்புரைபவன்குசனித்தாரணி
யொருகுடைபுரக்குநாளுற்றென்றோதுவான். (௬௪)

நீயுநின்மனைவியுநேருநண்பரு
மேயவென்றொழிற்புரிந்திருத்திரோவென
வாயவன்மகிழ்ந்திசைந்தாற்றுநாடனிற்
போயொருபாங்கரிற்புனிதன்வைகினான். (௬௫)

சாலையிற்றொடர்ந்தவர்தவத்தராரியன்
மேயவவ்விடந்தனின்மேவிநல்கினர்
தூயநல்லுண்டிகடுய்த்துக்கண்டுயி
லாயினனிவரிருந்தடிகளொத்தவே. (௬௬)

மாற்றலீர்துயிலினையகல்கவீர்மலர்
தோற்றகைத்தலங்களாற்றூயதன்னடி
போற்றுமினென்றவன்புகன்றுகண்டுயி
லாற்றினனிவரிருந்தடிகளொத்தினார். (௬௭)

துயிலறவுணர்வறச்சொல்லும்பேச்சற
மயலறவிருந்தனன்மனைவிதன்னொடு
மியலுறவழிபடுமேழுமூன்றுநாள்
செயலிலான்விழித்திலன்செம்மையோங்கவே. (௬௮)

மற்றவன்விழித்துயின்மாறியாய்மொழி
யுற்றுரையாதுபோயொருவர்பாங்கரி
னற்றவன்றுய்த்திமீண்டடைந்துநாமவேற்
கொற்றவன்பழிபடவுறக்கங்கொண்டனன். (௬௯)

மீளவுமிருபதோடொன்றுமெய்த்தினந்
தாளிரண்டிருவருமொன்றித்தங்கினார்
கோளகல்பசியொடுமுறக்கங்கொள்கலர்
நாளகன்றெழுந்தனன்ஞானமாமுனி. (௭௦)

என்னைகொலற்புதமென்றுமாதவன்
பொன்னனைதன்னொடுபுரவலன்றனை
யன்னிலைமகிழ்ந்துமக்களிப்பனல்வர
மின்னதென்றுரைமினென்றிசைப்பக்கூறினார். (௭௧)

தங்குலத்தொருபெருந்தனையன்மேவவு
முங்குலத்தொருவனாயோங்குமாறுமச்
சங்களற்றவர்சொலவாய்ந்துமுன்னரிற்
பங்கயன்குறித்ததுமுணர்ந்துபன்னினான். (௭௨)

நீதருபுதல்வனுக்குதிக்குநீர்மையான்
வேதியனாகுவன்மெய்ம்மையெங்குலச்
சாதனோர்மகனரசாகித்தாரணி
நீதியிற்புரக்குமென்றுரைத்துநீங்கினான். (௭௩)

அவ்வரத்தாற்குசனளித்தகாதிதன்
செவ்விசேர்நந்தனன்சிறப்பிலோங்கினான்
செவ்வியபிருகுவங்கியத்திற்சீரியோன்
பவ்வநாடளித்தனன்பரசுராமனே. (௭௪)

என்றுரைத்திடப்புயம்புளகமேறிட
மன்றலங்கோதையான்வணங்கிக்கூறுவா
னொன்றெனக்குரைத்திசேர்ந்திடத்தினாற்றமும்
வென்றிகொள்பசுக்களின்மேன்மையோடுமே. (௭௫)

தண்ணளிக்கொருவகேள்சவனனென்பவன்
மண்ணகத்துயர்கெடவருபகீரதிப்
புண்ணியநதியிடையமுனைபோய்ப்புகு
நண்ணினனவ்விடமூழ்கிநாடியே. (௭௬)

நீரினுட்புகுந்தருந்தவநிரப்பியே
யாரியன்பன்னிரண்டாண்டுவைகினான்
பாரிடைவலைஞரப்பாங்கரோர்தின
மேருறமீன்கவர்ந்தேகவெய்தினார். (௭௭)

வலித்தனர்பற்பலர்வலையைமாமுனி
புலப்படாவுடலையும்புவியிலிட்டதாற்
குலத்திருமுனியெனக்குலைந்திறைஞ்சியே
செலுத்தினெம்பிழைபொறைசெய்யவென்றனர். (௭௮)

கேண்மினோநுங்குலத்தியற்கைகிட்டினீர்
வாண்முகவலைஞர்காண்மயங்கலீரெனை
வீண்முசிப்புறுதுபோய்விற்றுண்டெய்துமின்
காண்பருநலனெனக்கரைக்குங்காலையில். (௭௯)

மெய்ந்நடுநடுங்கியேவலைஞர்மேதினி
கைவரக்காத்திடுநகுடன்காலில்வீழ்ந்
துய்திறனேதெனநிகழ்வுரைத்திடச்
செய்தவனருகடைந்திதனைச்செப்புவான். (௮0)

சிற்றறிவுடையவர்செய்ததீமைகள்
கற்றமாதவத்தனேகாக்கவேண்டுமென்
றற்றடிபணிதலுமுரைத்திட்டானரோ
ருற்றமேதவர்க்கவர்குலத்தியற்கையே. (௮௧)

அடுத்தவாறியற்றினராரியமீன்களி
லெடுத்தனரென்னையுமியற்கையாகவே
விடுத்திடலறனலவிலையளித்தெனை
தடுத்துமீட்குதியறந்தவறுறுமலே. (௮௨)

எனமுனிபுகறலுமேந்தனன்றெனப்
புனல்வலைத்தொழிலரைநோக்கிப்பொய்யிலா
வனகனுக்காயிரம்பொன்னளிப்பன்யா
னினியிவற்றருதிரென்றிசைக்குமாயிடை. (௮௩)

முறையறப்புகன்றனையிறைவமுற்றிய
நிறைதொழிலினர்க்குணர்ந்தளித்திநேரிலா
யறைவதென்பான்பெறுமளவுமென்றனன்
குறைவிலாவிலக்கமோர்கோடிகூறினான். (௮௪)

அத்தொகையேகொல்யான்பெறுவதாமென
முத்தனும்வெகுண்டுநீர்மைத்தாமுன்னையோர்
சத்துணர்ந்தவரொடுமுசாவிச்சாற்றெனக்
கைத்தலங்குலைத்தவன்கருதலாயினான். (௮௫)

அத்தலத்தருட்கவிசாதனாமுனி
வித்தகனடைந்துநீவேதனொப்பிலா
வுத்தமன்றனக்குலகேழுநல்கினு
மொத்திடாதகற்குநல்லுறுதிகேட்டியால். (௮௬)

ஓர்குலம்பசுக்களுமுரைக்கும்வேதரு
நீர்மையாமுலகினிற்புனிதநேர்வதாம்
பார்மிசைபசுவெனும்பொருட்படாதெனி
லார்கொன்மாமுனிவரிலொழுக்கமாகுவோர். (௮௭)

தேவர்கடம்மினான்மறைகடேடிய
மூவரேமூவரின்முனிவர்தூயரா
மாய்வதென்னினிபவராவினாலலாற்
பாவனரன்றெனிற்பசுவையென்சொல்வேன். (௮௮)

ஓர்பெருஞ்சுரபியையுகந்தளித்தவர்
பார்முழுதுதவியபயனையெய்தியே
சீர்பெறுகதியிடைசெறிவரப்பசு
வார்மயிர்க்காண்டெனுங்கணக்கிலண்ணலே. (௮௯)

மகங்களுமோமமுமங்கிவானவன்
சுகங்களுமமரர்தங்தேசுந்தூயவ
ரகங்களுந்தென்புலத்தவர்களின்பமு
மிகந்திடாவேவினையாவுங்கோவினால். (௯௦)

ஆதலாற்கோவிலொன்றளிப்பனென்றுநீ
கோதிலான்முன்னரிற்குறித்தியென்னலுங்
காதலாற்சென்ற்துகழறமாமுனி
போதலாமென்றுடல்புளகமேறினான். (௯௧)

தன்விலைதந்ததாமென்றுசாற்றலு
மன்வலிமிக்குயர்பசுவழங்கினான்
புன்வலிவலைஞரும்போற்றிக்கைக்கொளா
முன்வினைநன்மையான்மொழியலாயினார். (௯௨)

ஐயனேயெங்குறையகன்றெம்மாருயி
ருய்யுமாறிப்பசுவுகந்துகோடியென்
றெய்துறுவலைஞர்களிறைஞ்சவாரியன்
மெய்யெனக்கொண்டிதுவிளம்பன்மேவினான். (௯௩)

* ஏற்கலனொருவர்மாட்டிங்ஙனும்மையு
மாற்கமுள்ளவரின்மேற்கதியின்மாட்சிமை
சேற்கவேநினைத்திதுசெறித்ததாமெனக்
சிற்கலைவல்லபன்றெளியக்கூறியே. (௯௪)

தன்னுடன்வலைவயின்சலசரங்கள்வந்
தன்னிலையெதிருறவிருந்தவாங்கதைப்
பொன்னிறுடைய்துமினெனப்புகன்றிடத்
துன்னியதுடலொடுஞ்சுவர்க்கமக்கணம். (கூரு)

வலைஞரையெனக்குநீர்சுரபிமாட்டிய
நிலையினூற்றுறக்கநாடுறுமினீரெனக்
கொலைஞர்மெய்பொன்னுடற்கொண்டுவானவர்
தலைவன்வந்தெதிர்கொளத்துறக்கஞ்சார்ந்தனர். (கூசு)

மறமுடைவேலினன்மன்னர்மன்னனை
யறனுடைமாமுனியருளினோக்கியே
திறனுடையாயுனக்கேதுசிந்தனை
பெறுகுவைகூறெனப்பேசுவானரோ. (கூஎ)

நான்மறையுருவமாய்ஞாலமுன்னர்செய்
வான்றவத்தாயிவண்வந்தகோமுனி
தேன்முரலுனதடிக்கமலஞ்சென்னிமே
லூன்முறைதருடுதனுவலுநல்வரம். (கூஅ)

என்றவனோதலுமிருடிசாலவு
மொன்றியதன்மனமுவந்துவானவர்
மன்றன்மாமணிமுடிசூட்டவானெலாந்
துன்றிடப்புரக்குதிதொலையுஞான்றினில். (கூகூ)

எனவரமளித்தவனிதிற்போற்றிட
முனிவனமடைந்தனனிதனின்மொய்ம்புடை
யனகனேபயனெலாமாய்ந்துகோடியென்
றினமுறப்புகன்றுமற்றிதனைக்கூறுவான். (க00)

மாமுனிநீரினுண்மருவுமாருயிர்
தாமுறுமிடத்திவன்சரித்ததிமையா
லேமுறுமவைக்குறுமிடர்வந்தெய்திய
தாமுனிக்கவனெனவறிதியையகேள். (க0க)

தூயவன்றன்னொடுதொடர்ந்ததோற்றத்தா
லாயநல்லுயிர்களும்வலைவலார்களு
மேயினர்நற்கதிசுரபிமேன்மைபு
நீயுணர்ந்தாயினிநிகழ்த்துவாயென்றான். (க0உ)

வீடுமனுரைத்திடவேந்தர்வேந்தனும்
நீடுபேரவனியினிரப்புதானங்கள்
கூடுநற்பயனெலாங்குறிக்கவென்னலு
மீடொருவருமிலாவியம்பன்மேயினன். (க0௩)

வேறு.

தூயநற்கனகம்வெள்ளிசெம்புநற்றாசுசோதி
மேயநன்மணிகடந்திவிறற்பரிசிவிகைபொற்றேர்
நேயமோடுதவறன்னினதிகங்கன்னியரைநல்க
லேயவங்கதனிற்றூய்மையிரும்பசிக்கன்னமீதல். (௧0௪)

அதனினுந்தூய்மைநன்னீருதவுதலதனினன்மை
சதமுறுங்கற்றவிஞ்சைதனையளித்திடுதற்கோர
விதனினும்பெரிதுநல்லார்க்கினியவெட்டானமீதன்
முதன்மனுவனையாய்சாலமுக்கியமவனிநல்கல். (௧0௫)

வருணத்திற்குலத்தினல்லகுணத்தினுன்மறுவிலாத
தருணத்திற்பசுவைவல்லசதுர்மறையவர்க்களித்தான்
நிருமிதத்தானமெல்லாநேர்ந்தநற்பயன்வந்தெய்தி
யிருளற்றசுரபிலோகமெய்துவரென்பர்மேலோர். (௧0௬)

அளித்திடுபொருளின்மேம்பாடதிதிவேண்டியதுநல்கல்
களித்ததினன்றுகேளாதவர்மனக்காதநீர்த்த
றெளித்தவர்க்குதவல்பின்னுமதிகமேழையர்க்குநேர்வ
தொளித்திடாதுதவலென்றுனுலகெலாம்வணங்குந்தாளான். (௧0௭)

வேறு.

அறன்றருபுதல்வனுங்கறையுமையவேர்
நிறந்தருகோபுரநிகழ்வதெங்ஙனே
திறனுறவுரைத்தியென்றிரப்பத்தேர்ந்தவன்
றுறைபடமொழிகுவன்றூயர்கேட்பவே. (௧0௮)

மேலுலகனைத்தினுமீதுயர்ந்திடு
பாலவாமதற்குமேற்பயிலுநாடிலக்
கோலவிண்ணவர்முனிக்குழாத்திலாரதை
யேலுறக்காணுமாறிசையும்பெற்றியோர். (௧0௯)

முன்னரிலிந்திரன்முகங்களுன்குடை
மன்னுபுத்தேளிணவணங்கியிவ்வணந்
துன்னிடக்கேட்டநாள்சொற்றதுண்டுகேள்
பன்னுவனென்றிதுபகரலாயினன். (௧௧0)

வாசவகேட்டியிச்சுரபிமன்னுநா
டேசிலாவண்டகோளகையினெல்லையா
மீசனுடதற்குமேலென்றுபோற்றுதி
பாசமார்வினையெலாம்பற்றறுக்கவே. (௧௧௧)

யானுமென்மைந்தரிற்சிலருமீடறு
மானவர்தங்களிற்சரதமாறிலா
ஞானவித்தகருமேநண்ணிநோக்குத
லேனையோர்நோக்குதற்கெளியவேகொலாம். (௧௧௨)

மண்ணகம்புரந்துமெய்வருந்திப்பற்பல
வெண்ணமுமுடித்தறநிறுவியெக்கியம்
பண்ணியோர்சதங்களுமருளும்பற்றியே
விண்ணுறுவாய்மையைவிளக்கும்வேந்தரும். (௧௧௩)

அரியநற்சுரபிகட்கரிச்சித்தந்தணர்க்
குரியதாமுறைபுனலுதவிபெண்ணற
விரவியமாந்தருமதனின்மேவுவர்
பெரியதிக்கதிக்கெலாமென்றுபின்னரும். (௧௧௪)

அரியவான்கிரணமுற்றவிருமக்கதிக்
குரியராகுதலெல்வர்க்குறுமென்றேய்கலை
கரியமாலீசனைக்கருதியன்பினாற்
புரிவழிபாடுளோர்புகுவர்திண்ணமே. (௧௧௫)

ஈசனுங்கொடியிடையேறுயர்த்தது
மாசறலூர்திமற்றதனைக்கொண்டதும்
பூசுவெண்பொடியதிற்பொருந்துவித்ததும்
பேசிடிற்றூய்மைமேற்பேசலேழமை. (௧௧௬)

என்றயனுரைத்தல்கேட்டிந்திரன்புரந்
துன்றினனெனநதிசுதனுரைத்தலு
மன்றல்சேர்மாலையான்மகிழ்ந்துமீளவு
மொன்றெடுத்துரைத்தனனுயிர்ப்புநீடியே. (௧௧௭)

அத்தகைச்சுரபியினவையவங்களி
னெத்தகைவானவரிருப்பரென்னவே
யித்திறல்விடுமனிசைக்கலாயினன்
முத்தழன்முனிவரர்முடிதுளக்கவே. (௧௧௮)

ஆனனந்தானுகொம்பதனிலிந்திரன்
ருனுயர்நாசியில்வாயுதாள்களின்
மோனமாமியக்கர்கோன்முசிப்பில்வேதிய
னேனையகண்களினிரவியெய்துமே. (௧௧௯)

பிட்டபாகஞ்சடைப்பிரானுந்தேவியும்
வட்டமாருதரமேகனலின்வானவ
ரிட்டமாமிடையினிலிருக்குமாழியான்
றீட்டநெஞ்சினிற்பகனென்னுந்தெய்வதம். (௧௨0)

வாலினிற்றருமநன்மயிரில்வானவர்
சாலநற்காதினிற்சாற்றுங்காலங்கள்
பாலமத்திமைசித்தர்பன்னகாதிபர்
ஞாலமெலாவிடத்திருப்பர்நாடொறும். (௧௨௧)

உதிரமேசந்திரன்மேதையுண்மையா
மதிதருமூலகளேவாணிகோசலந்
துதிதருகீர்த்திகோமயஞ்சுலக்குமி
மதியுமவ்வானெனில்வகுப்பதென்கொலோ. (கஉஉ)

இவ்வணமவையவத்திருப்பதாகிய
தவ்வியற்சுரபியின்புனிதம்யாவரே
செவ்வையினுணர்ந்தவர்சிந்தைதூயவர்
கைவரப்போடணைகலந்துய்ந்தார்பலர். (கஉங)

ஓர்கதைகேட்டியென்றுரைப்பன்முன்னரிற்
பார்புகழ்சுமித்திரனென்னும்பான்மையோ
னோர்பசுப்படைத்ததைவழிபட்டுற்றஞான்
றோர்பெறவோர்முனியிவனண்பாகியே. (கஉச)

அப்பெருஞ்சுரபிமேய்த்தவிருமாயிடை
செப்புமச்சுரபியோரிடபஞ்சேர்ந்தபின்
றப்பறக்கருப்பமுந்தாங்கிக்கன்றுயிர்த்
தொப்பறநாடொரும்விருத்தியுற்றதே. (கஉரு)

வேறு.

புறக்குமாமுனிபோமிடம்பின்னரிற்புகுந்து
நிரப்பிநீர்முறைமேய்த்தனனிகழ்ந்தகன்றுகள்போற்
பரக்கும்பாலதன் * பீனம்வாய்ப்பயின்றிடப்பருகி
விருப்பினேங்கலாலவன்பெயர்பீனனுய்விரித்தார். (கஉகா)

அனையகோக்கணமளப்பறவிருத்தியாகியநாள்
புனையுமோர்மடுப்பாங்கரின்மேய்ந்திடப்புனலுள்
வனைகருங்குழன்மடந்தையோரெண்ணிலோர்வந்து
கனையுநீர்படிந்திடவிவையவரொடுகழறும். (கஉஎ)

யாவர்நீரிங்குப்புகுந்துநீர்துளைவதேதென்னத்
தேவர்பாடையிற்செப்பலும்யாங்கள்கோச்சென்னம்
பூவினுக்கியபுனிதமாதர்களெம்முலகங்
கோவிருந்தநல்லுலகெனக்குறித்தனர்குணத்தால். (கஉஅ)

அந்தவானுலகடையுமாறெமக்கருள்வீரென்
றிந்தவான்பசுக்கணமெலாமியம்பலுமிதங்கி
யந்திதேவனாரழன்மகப்பசுக்களாயவிந்தால்
வந்துமேவுவீரெனவுரைத்தகன்றனர்மாதர். (கஉகூ)

மீண்டுகோக்கணம்வேள்வியிற்சென்றிடவிழைந்து
பூண்டமாமுனிசுமித்திரன்பொருளியாமவனை
மீண்டுநீக்கியாங்கதிபுகலினியதன்றென்றே
யாண்டுவந்துறுமாவியைநீக்கிலென்றுய்ந்து. (கஙo)

* பீனம் - முலை.

சென்றுகோறுநந்திருமுனிதனையெனச்செல்ல
வென்றியோடடைந்திடமனமுக்கங்கள்விளங்கா
தொன்றிநிற்றலுங்கபிலைகளதிற்பிறிதுரைக்கு
மின்றியாங்கொலைபுரிதுநீர்தருவதேதெனவே. (௧௩௧)

எங்களைத்தனித்தாணநல்கிற்பயனெய்து
மங்கதற்கொருநூறுகூறதிசமாம்பயன்க
ளுங்களைத்தரினிசைவுமிவ்வுலகெலாம்புகழுஞ்
சங்கையற்றநல்வரந்தனைத்தந்தனமெனவே. (௧௩௨)

கேட்டுநன்றெனக்கிளர்ந்துபோய்முனிவனைக்கிட்டி
யீட்டியெம்மைமீபுரந்தனையினியுனக்கருங்கோ
நாட்டைநல்கிநீரும்வருதியோவெனவுரைநல்க
மீட்டுமாமுனிவெறுத்தனன்வீத்ததுவிரைவில். (௧௩௩)

கொன்றுநீக்கிடக்கோவுலகதனிடைபுகுந்தா
னன்றுவாங்குறைபவரெலாமடைந்தெதிர்தழைப்ப
வின்றுவேதியனினியமெய்யிடர்செயுமுகத்திற்
சென்றுறுத்தியதகசியென்றார்சிலர்தேவர். (௧௩௪)

ஆதலாற்கபிலைகள்குலத்தானமகசி
யேதறப்பெற்றதிப்பாற்பலவான்களுமேகிக்
கோதிலாவந்திதேவனல்வேள்வியிற்குறுகிக்
காதலாலிவைபுகன்றதுமனிதற்சொற்காட்டி. (௧௩௫)

பயிலுநற்கதிபெற மைப்பகவெனக்கொண்டே
யியலும்வேள்விசெய்வாயெனவிசைத்திடவரசன்
செயலுணர்ந்திலன்றிகைத்துமைசெருக்கலனென்ன
மயலகன்றிடப்புகன்றதான்மன்னனுமிசைந்தான். (௧௩௬)

வருடமாயிரம்பயிற்றுவான்மகமனமுள்ளேன்
வெருவிலாதுமையரும்பசுப்படுத்துவேட்டிடுநாள்
கருதியோர்பசுத்துயருறல்காண்கினுந்தவிர்வேன்
புரியுமாமகமென்றனன்பூபதிமீட்டும். (௧௩௭)

அன்னவாறிசைந்தனுதினம்பலபலவடக்கி
மன்னனீந்தனனுகுதிவருடங்கள்பலவாய்ப்
பின்னுமேபுரிந்திடுதலாலோர்தினம்பெற்றந்
தன்னைவேள்விநற்சாலையூபத்தறிதனைத்தார். (௧௩௮)

ஈன்றதன்றுடன்வருதலுமிதன்முகநோக்கி
யான்றமைந்தநீயாரிடத்துறுவையோவென்றே
யூன்றுதங்குலவியற்கையாலுரைத்திடலுணர்ந்தான்
சான்றுபோலவத்தழன்மகமியற்றிலன்றவிர்ந்தான். (௧௩௯)

அந்தக்கோவினோடிருந்தவையனைத்தையும்விடுத்து
முந்தத்தான்மகமுற்றினன்பெருங்கதிமுடித்தான்
சிந்தைத்தூய்மையாற்புகுந்தவத்தேனுவின்குலங்கள்
சந்தத்தேமலர்கொடுசெலக்கோபுரஞ்சார்ந்தே. (௧௪௦)

புந்தியாலதையுணர்ந்தபினப்பெயர்ப்புனிதன்
வந்தியாவரும்வணங்குதாள்மாமுனியானோன்
சிந்தையூடுநீகருதுதிதேவரிலதிக
மிந்தவான்பசுவென்றனனிருநதிப்புதல்வன். (௧௪௧)

கன்னிகாதானவரன்மகிமையுரைத்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௦௯.

கபிலைமகிமையுரைத்தசருக்கம்.

நல்குரவின்மெலிவெய்திமனையவனவியுமுரைகொடுநடையெழா
தொல்கியுளமயர்வெய்திடுமவனுண்டுகுசலவனுக்கிக
மல்குபரமுறுசெல்வமொடுகதிமருவவருள்பரமனைநிதஞ்
சொல்கொடுதிசெய்துவெல்வினைமபடர்தொடரினுயர்கதிபுகுவனே. (௧)

எங்கும்வண்புகழ்சென்றுவேரிடுமின்சொலறனருண்மைந்தனுந்
தங்குகபிலையுயர்ந்ததெனவுரைதந்துளாயிதுசால்புளா
யங்கவரிதையுணர்ந்தறிவதெம்முறைபன்பிலறைகுதியீண்டென
மங்குன்மழைபொழிகின்றதெனநதிமைந்தனிவையிவைபன்னினன். (௨)

பசுவினவையறுமுனவுநடையுடையனவுமொருவழிபடுகினு
மிசையுமிருசெவிவிழிகள்முலைகளுமிருகுரமுமிருநாசியு
மசைவில்கருநிறமுளதுகபிலைகளதனினொருதிறமணுகினும்
வசையில்கபிலையதெனவுமிசையுணர்வரதமுனிவரர்பலருமே. (௩)

உரைசெய்கபிலையையொருவன்வழிபடினுறுவனுயர்கதியுலகினோர்
திரைசெய்மனுமுறைதவறும்வினைபலதீருமுறுபவமாறுமால்
விரைசெய்பலபலமறையவர்களுடன்விபுதருணவமுதருளினோன்
வரிசையுடனொருகபிலையுறபசிமாறவொருதினநீட்டினே. (௪)

தகைசெய்கபிலையைவழிபடுவதலததையுமுறைபலதண்டனை
மிகைசெய்திடினரகமிழ்வரதுதருவிரவுமமுதுணவுரியரன்
றுகைவொடுமவனுருவின்மிசைவிடினவர்கள்பெறுபயனுரைசெயும்
வகையதுணர்கிலர்பிரமன்முதலினர்மதிபினுணருதிகருதிமே. (௫)

வேறு.

அக்கபிலைதனைவேதமறையோர்க்காக்கி லவன்பெறும்பேறொருவருக்கு மறையக்கூடா, திக்கபிலைவழிபட்டுப்புற்கனல்கி யிரும்பசிதீர்த்தருந்தறுதண்ணீ ரீயக்கற்றோ, னெக்கருமமாற்றானேயெனினும்பாவ மெல்லாஞ்செய்திட்டவ னேயெனினுங்கல்வி, புக்கொருவனிடைக்கல்லானெனினும்பாசப் புணர்ப்புடையோனெனினுமுயர்கதிபுக்கோனே. (௬)

அத்தகையமேன்மையிதற்கெவ்வாறென்னி லங்கிவானவன்கபிலையகத்தி
னூடு, சித்தமமுறன்றமரரெலாந்தேடமுன்னாட் சிறந்தொளித்தான்றேடியவர்
காணாராகி, யுத்தமமாங்கபிலையிடத்தணுகியிந்த வுலகனைத்தும்வருத்தமறவுள்
ளவண்ண, மித்தகையென்றுரைத்தியெனவினவக்கேட்டாங் கிருப்பதுணர்த்தி
யதவன்வந்தெதிர்ந்தான்மாதோ. (௭)

அவன்கேட்டவரநல்கியுலகினுய்த்தே யக்கபிலைதனைவியந்தேயமரராருங்,
கவின்முற்றும்பெருந்தூய்மை யனைத்துநல்கிக் கதிக்கேற்றுஞ் சோபானநீயே
யென்று,நவமாகப்பலவரங்கடந்தாரந்த நாடொட்டுப்புனிதமதுநல்குமென்றே,
சிவன்விற்போர் கண்டவன்முன் னவனுக்கோதச் சிறப்படைந்தே பின்னுமிது
செப்பலானான். (௮)

முனிவருந்தேவர்களுமறிதறேற்று முறையனைத்தும்புகன்றனையானுய்
யுமாறு, தனிநதிதந்தருள்பெருமானடியேன்சிந்தை தனிலையமுளதொன்றுதந்
துமாய்ந்தோர், புனிதமுறுமாறுகமைந்தர்நல்கும் புனற்கடன்கடிறனைத்தும்
புகலவென்ன, யினியதுகேட்டனைதெளியப்புகல்வன்கேட்டி யென்றெடுத்து
மொழிந்தனனூலெல்லாம்வல்லோன். (௯)

மகமியற்றியவிநல்குமமரரேபோன் மாய்ந்தோர்க்காத்தென்புலத்தோர்
மருவாநிற்பர், தகவுடைத்தாயவர்க்குண்டிதருப்பணங்க டலப்பிண்டப்பிரதா
னமெனுமூன்றாகும், வகையதனிற்சந்துட்டிமறையோர்க்கீதல் வழங்குபண்ட
ங்கொடுசமைத்தமாசிலன்னம், பகர்திலநீரொடுகூட்டிவிடுதல்பிண்டப் படநல்க
லிவையெனவேபரிந்துகொள்ளே. (௧௦)

விலக்கியனவொழிந்துவிதித்தனவேகொண்டு வேதியரிலிழிந்தோரைவி
ரும்பிடாமற், சுலக்கணமாந்தூயவரைவரித்துச்சிந்தைத் தூய்மையொடுபுறத்
தூய்மைதோன்றநூலிற், சொலத்தகுநன்முறையாகத்திதிகணோர்ந்தோர் து
ன்னுவர்கலினைத்தவெலாங்கதியுந்தோய்வர், பலித்தமகமோரைந்தினிதுவெ
ன்றென்னிற்பாவனமாங்கருமமிதிற்பகர்தற்குண்டோ. (௧௧)

நன்முறையானாடோறும்புரிதலாகு நல்லோர்கைப்படுந்தினத்தும்புரித
லாகு, மென்முறைநீர்நதிதோறும்புரிதலாகும் விரும்புபிதுர்த்தினந்தேடிப்புரி
தலாகும், புன்மையறயாவினுமேபுரியானாகிற் புரையறவேயிறந்ததிதிமறவா
னாகி, வன்மையொடுபுரியானேனரகவாழ்வின் மருவுவன்மற்றவனென்றேமனு
நூன்மாண்பு. (௧௨)

ஆங்கதுதேர்ந்திறந்தவர்தங்கடன்களெல்லா மாற்றுதிநூன்முறையென்
னவறத்தின்மைந்தன், பாங்கிதுதேர்ந்தனன்விரதம்பயிற்றும்பான்மை பலவித
மாப்புகல்கின்றாரடியேன்றேறத், தாங்குமுறையுரைத்தியெனக்கேட்டுத்தக்
கோன் றண்ணளிசெய்தன்றெடுத்துச்சாற்றலானான், வீங்குதிரைக்கடலேழு
ம்வரைகளேழும் விளங்குபொழிலேழினும்பேர்விளக்கினானே. (௧௩)

வேறு.

தவமியலுமுனிவரர்களுபவாதந்தான்பயில்வர்
புவனியிலில்லறம்புரிவோர்க்கொருகருமம்போற்றுங்கா
னவமுறவுண்டெனிற்பயிலநாடோறுந்தபக்நடுத்த
விவரம்வழுவறச்செயலேவிரதமாமெனவுணர்வாய். (கச)

அடுத்திருந்தவாசிரமப்பயன்வழுவியாகாரந்
தடுத்திருந்தாலென்னபயன்சாருமவர்க்கெனக்குறிப்ப
வெடுத்தபெயருதிட்டிரனுமிரணியமெத்தானத்துங்
கொடுத்திடுவதென்னையெனக்குரவனிதையெடுத்துரைத்தான். (கரு)

ஈசனங்கிவானவன்பாலிந்திரியந்தருஞான்று
காசியினிற்சிந்தியதுகனகமாகியதென்பர்
நேசமுறுபலதானநேர்ந்திடினுமுடனிருத்தித்
தேசுபெறக்கொடுக்குமுறைதேவர்செய்தார்தூய்மையினால். (கசு)

சூடகமேபலபலவாமரும்பொருளிற்பெருந்தூய்மை
யாடகமேசிறியோரையரியவராய்ச்செயுநீர்மை
யாடகமேபெரும்போகவளக்கர்கடந்திடுதோணி
யாடகமேதருமமெலாமாக்கிவிக்குமதிகாரம். (கஎ)

என்றுரைக்கவறன்குமரனிசைத்திடுவன்கோமயமுந்
துன்றியநற்கோசலமுந்தூய்மையாமெனப்புகன்றாய்
வென்றியொடுமசுசிகளைவிளக்குவதெதாலெனவே
மன்றல்கமழ்நதியளித்தமைந்தனிதையெடுத்துரைத்தான். (கஅ)

முன்னாளிலரமகளாமுகிணைகைகோவினையெடுத்தே
யென்னாளுமுனதிடத்திலிருக்கவரமீவலென
மின்னேபோன்மறைந்துலவுமிளிர்கண்ணாய்நீயிருப்ப
துன்னுநின்றிடிற்கவலைவேண்டாமெம்முழையென்றார். (கசு)

நெறிபிழைத்தோரிடையானுநீங்குவேனீங்கேனு
லுறைவனுமதிடத்தென்றுமும்மாலென்பெயர்விளங்கு
முறைநீவிரிகந்துவிடினெனையாவர்முக்கியமென்
றறைவரெனப்பலகோடியறையவான்குலங்கூடி. (உ0)

நன்றெமதுகோமயத்தினுளுமிருந்ததனாலே
துன்றுமெழுகினர்பாற்றேறுவைநீயெனக்கூற
வின்றெனக்குக்கிடைத்ததெனவெழிலோங்கியமர்ந்திருந்தா
ளொன்றியகீர்த்தியுமவ்வாறுகுசலம்போயுற்றாளே. (உக)

ஆதலாற்புனிதமவையாயதுலகினிற்பலர்க்கும்
போதமுறுமனமறியாவப்புனிதம்போக்குவர்தா
மீதுணர்தியெனவுரைப்பவறன்முறையாலீட்டாத
மாதனமேற்பவர்க்கென்னேவகுத்துரைத்தியெனக்கென்றே. (உஉ)

திங்கண்மரபினிற்பிறந்துசெகமுய்யவறம்வினவு
புங்கவன்கேட்டிடமீண்டும்புகல்கின்றான்வீடுமனு
மிங்கிதனுக்கோர்காதையியம்புவன்மற்றதுகேட்கி
னுங்கண்மனத்தையமறுமெனவெடுத்தேறவல்கின்றான். (உ௩)

பற்றுடையபாதகங்கள்பறந்தோடும்பலபிணியு
முற்றவறுமையுமகலுமுறுர்செனனக்கோள்கையிற்
செற்றமறுசெல்வமொடுசிறப்படைந்துபுவிமீது
கற்றவயன்பதமடைவர்கருத்தினொடுகேற்கவல்லோர். (உச)

அரியவளக்கருகாதையறைவனிதுகேண்மினென
வுரியநதிதருகுமாரனுரைத்தானத்திரிவதிட்டன்
பெரியசமதக்கினியார்பேசுறுகௌசிகமுனிவன்
கருதுபாரத்துவசரொடுகவுதமர்காசிபனுரும். (உரு)

இவரெழுவருலகேத்துமிருடியர்களிவரோடு
கவலையறுமருந்ததியுங்கணவனைவிட்டிமைப்போது
மவலமுறப்பிரிந்தறியாளவள்பணிசெய்சண்டியொடு
மிவள்கணவன்பசுசகனென்பவனேடுமிவர்பதின்மர். (உசா)

தவமிகவுமுயன்றவனிதன்னிலிவர்பயின்ஞான்றி
லுவரிவளைகடலுலகிறேங்குமழைதூங்காமற்
கவலைமிகுந்துயிர்வருந்துங்காலத்திலித்தவத்தோர்
நவமுறுநற்கனிமூலங்கந்தமிலைநலமின்றி. (உஎ)

எச்சார்பிலெவ்வுயிருமெத்திறத்துமாதவரு
முச்சாயவலியொடுங்கியுணர்வறக்கண்டிவர்பசியா
லச்சாணிபோலுமுடலணங்குறப்போந்தோரிடத்திற்
பிச்சானுர்போலெப்திப்பிணமொன்றங்கெதிர்கண்டார். (உஅ)

கண்டிதனைத்துய்த்தேனுங்கடும்பசிநீத்திடுதுமென
வண்டிவளைத்திடக்கண்டேயக்கானிலடைந்தரசன்
மண்டியவேட்டஞ்செலுத்திவருவிடாதருவனெனப்
பண்டுரைத்தபெயருடையோன்பார்த்தணைந்துபணிந்துரைப்பான். ()

மாமுனிவீருமதுபசிவருத்தத்தாற்பிணநுகரக்
காமுறுதல்கடனன்றாற்கனகமணிப்பணியாடை
யேமுறுநற்பலபண்டமெண்ணறுநற்பாற்பசுக்கள்
கோமுறையன்பினிற்றருவன்குறைதீரக்கொண்மினென. (௩0)

ஆய்ந்துரைத்தமன்னவனுக்கம்முனிவர்புகல்கின்றார்
சாய்ந்துபசியாலுயிரைத்தணந்தாலுமினிதன்றி
வாய்ந்தசபநுகர்ந்தாவிவைப்பினுநன்றிவ்வுலகி
லோய்ந்தொருவர்பாங்குறைசொற்றுவப்பதினுமொளிர்வேலோய். (௩க)

ஆயினுநல்லோருணர்வுற்றடுநெறியான்வந்தபொரு
ளீயினுமேனையர்காவாவியல்புடையார்பாற்பெறலா
ணாயினுந்தாழ்வேசியர்கணாண்டுறந்துமேதேடுபொருண்
மாயினுந்தீண்டார்குரவரதிற்றாழ்வர்மன்னர்பொருள். (௩௨)

ஏற்கலமென்றவர்வெறுப்பவிறைவன்மதிமிகமாழ்கி
வேற்கரன்சென்றவன்றனதுவிறனகரெய்தியபின்னர்
நாற்குறைதீர்முனிவரர்முன்னொடித்தவிழிபுரைநினைந்தே
நீர்க்குமிழியனையானுங்கரமைத்தற்கிவையுரைத்தான். (௩௩)

வாய்மைமுனிவரர்தமக்குவழங்குகனிகாயிடத்திற்
றூய்மையிலாப்பொருளடக்கிச்சுமந்துகொடுபோயுதவித்
தீமையவர்க்குறுமாறுசெய்கவெனப்பணித்திட்டான்
போய்மதிவல்லவர்புணர்ப்பாற்புகுந்துமுனிவரர்க்களித்தார். (௩௪)

பற்றியகைக்கரங்களினாற்பயின்றுணர்ந்தாடகமிருக்குங்
குற்றமுணர்ந்திவையேதுங்கொள்கலமென்றதைவெறுத்தா
ருற்றவர்மீண்டவையனைத்துமுறுகொடுங்கோன்மன்னனுக்குச்
சொற்றனர்மற்றவன்வெகுண்டுதுணிந்துகனல்வளர்ப்பித்தான். (௩௫)

அக்கனலிலோரரக்கியதிர்த்தெழுந்தாடலைநோக்கி
மிக்கபுயவலிக்குரிசில்வேதமுனிவரராவி
யுக்கிடநீயழித்தியெனவுறுதிபடச்செலுத்தினனாற்
புக்கியதாங்கவர்பயிலும்பொய்கையகன்கரைமருங்கில். (௩௬)

சான்றனையமுனிவர்களுந்தடவிழிமங்கையரோடு
மான்றதவம்புரிந்தெழுந்தேயரும்பசிக்காம்பயன்காணார்
தோன்றுபுனற்றடமன்னித்தோற்றியதாமரைநாளங்
கீன்றிருந்துமுறையாகவப்புனலைக்கிட்டேனும். (௩௭)

நிலவொளிருமிதழ்மறைத்தநீண்டவெயிற்றொடுகரத்திற்
பலபடையுந்திகழ்ந்திடவப்பாவையெதிர்ந்துருக்காட்டி
நலமுயருமுனிவரர்நீர்நயந்தடைந்ததென்னையெனக்
குலமுனிவர்நீயாரைகுறித்தியென்றார்குறைவில்லார். (௩௮)

ஆரையாகினுமென்னேயானிந்தநற்றடத்தி
னீரையொருவருக்காகாநெறிகாவலுறுவனெனப்
பூரைபடுபுண்டரிகத்தாள்வேண்டிப்புகுந்ததெனப்
பேரையுரைத்ததுகவர்மின்பெயர்ந்தென்றாள்பெண்போல்வாள். (௩௯)

உற்பவமுமிவள்வரத்துமுய்த்தவன்றன்மனநிலையுங்
கற்பனையாற்றமதாவிகவரவருஞ்செயலனைத்து
முற்பவங்கடெரிவதுபோன்முழுதுமுணர்ந்தவர்நகைத்தே
சிற்பரமாமவர்நாமம்விடுத்தொன்றுசெறிந்துரைத்தார். (௪0)

அக்கணத்திலோர்முனிவனவரையடுத்தவரோடு
மிக்கவினையக்கவெலாம்விளம்புசுனச்சகன்றமினொடும்
புக்கனராக்கவன்றன்பேர்புகலுதலுந்தெரியாமற்
றக்கவனைப்பன்முறைகடனியரக்கிவினவுதலும். (௪௧)

அம்முனிவன்றன்கரத்திலடுத்ததண்டந்தனைவீசி
யிம்முறைநீயோகேட்பாயெனவெகுளச்சிரந்துணிந்து
மைம்மலைபோலவள்வீழ்ந்தாள்வாள்விழியின்கனற்பாய
விம்மெனவான்பொடியாகியியங்கியதால்வனமெங்கும். (௪௨)

மற்றவர்கண்மகிழ்வெய்திமாமுனியையுடன்கொண்டு
நற்றடத்தினுட்புகுந்துநாளமொடுமூலங்கள்
பெற்றதெலாமோர்சுமையாப்பிணித்ததையோரிடஞ்செறித்துக்
குற்றமறத்தடப்புனலுட்குளித்துச்சிக்கடனிறைத்தார். (௪௩)

சாற்றுங்கடன்முறைமைதப்பாதியற்றியபின்
போற்றும்பசிதவிர்க்கப்புக்காரப்புண்டரிகச்
சேற்றுலலசிச்செறித்ததொன்றுங்காணாமை
லாற்றப்பசியாலலைந்தையமுற்றுரைப்பார். (௪௪)

என்னேயிவணொருவரெய்தியதின்றிக்கமல
முன்னாயிருந்ததெவர்கொள்வோர்முடிபென்னாங்
கொன்னேயிருந்தவரிற்கொண்டோரொருவரெனப்
பின்னேயவரவர்கள்பேசுமின்சூளென்றுரைத்தார். (௪௫)

சுனசகியாம்பேருடனேதோன்றியமாதவன்றம்மை
வினவுமுதலவனுக்கியேனையர்கண்மேம்பாடு
புனையவிருந்தவரவர்கள்புகன்றனராற்சூளுரைக
ளனகவவையனைத்துமுனக்கறைகுவன்கேளெனச்சொன்னான். (௪௬)

வேறு.

பசுவினையுதைத்தவர்பதங்கனெதிராகக்
கசிவிருமலந்தனிகழித்தவரகற்ற
விசிதமறையற்றவர்கள்வீழ்நரகிலாழ்வன்
மிசைதரல்கரக்கினெனவத்திரிவிதித்தான். (௪௭)

சுருதிகள்கலாதவர்துறந்தரிவைசேர்வோர்
வெருவுகுரைநாய்கயின்விசித்தலவிநாளுந்
திரியுனர்கள்சேர்ந்தகதிசேர்வன்மரைநாளந்
திருடினெனவேயுரைகள்செய்தனன்வதிட்டன். (௪௮)

பெற்றசுதர்விற்றல்சரணென்னவருள்பேணு
துற்றிடவிரந்தவர்தமக்குதவியெல்லா
மற்றவரைபெள்ளலுடையோர்கதியினாழ்வன்
மற்றிதுகரந்திடினெனப்பினும்வகுத்தான். (௪௯)

பொய்க்கரிபுகன்றவரிரண்டொருதினத்தின்
மைக்கொடியதானமதுவாங்கினர்வருத்த
மிக்குறவெருத்தின்மிசைபாரமிடுவித்தே
புக்குதொழிலாயவைபுரிந்துலகில்வாழ்வோர். (௫௦)

இன்னவர்களெய்துகதியெப்துவனிசைந்திங்
கன்னவசனந்தருகிழங்கினையடுத்துந்
துன்னுமுறையாற்கரவுசூழ்கினெனவிட்டான்
கன்னநிறைகேள்விமிகுகாசிபனிசைத்தே. (௫௧)

உரைத்ததமஞானியர்பசுக்கணமுளுற்றும்
புரைக்கவியினத்தினிடைபொறையறமிலானும்
நிரைக்கதியடைந்திடுதுநேர்ந்திதுகரந்தாற்
பரத்துவசமாமுனிபதைத்திதுபகர்ந்தான். (௫௨)

பூத்தமடமங்கையொடுபூப்பிலணைவானு
நீத்தமதினீர்மலநிரைத்துவிடுவானுந்
தீத்தொழில்புரிந்துதரசிவனமுளானும்
பாத்திரனெனக்கிவைகரந்துகைபரித்தால். (௫௩)

என்றுசமதக்கினியிசைத்தனனிருந்து
வென்றமுனிகவுதமர்விளம்புமுரைகேண்மோ
துன்றுசுனசக்கியனைநோக்கியுளதீயோர்
நின்றமனமஞ்சுவரநெஞ்சுறவுரைத்தான். (௫௪)

செய்ததருமங்கடமைநின்றுவிலைசெய்தோன்
பொய்தவிருஞ்சுருதிபொங்குகனல்விற்றோன்
வைதிகமொழிந்துபிறமாந்தரைவிழைந்தான்
கைதருநல்லுண்டியதுகைக்கொள்பவனெப்பே. (௫௫)

இத்தகைகரந்ததுளவென்னிலெனவோத
வத்தகையியாவருமறிந்தபினர்விசுவா
மித்திரனெடுத்துரைசெய்தானிவைவிளங்க
வுத்தமரியாவருமுணர்ந்திடநினைந்தே. (௫௬)

முற்றுபரிவாரமதைமுன்னர்புரவானுய்
மற்றுபரிசாரகர்மருங்களியிலானு
யுற்றகுடியோம்பலறவாழுமொருவேந்தன்
பெற்றகதிசேர்வனிதுகண்கரவுபேசில். (௫எ)

என்னமுனிவோரெழுவர்கூறுமுறையெல்லா
மன்னுமுனிதேர்ந்தபினர்மங்கைவடமீனென்
றன்னரியகற்புடையொருத்திமுகநோக்க
வன்னவளரும்புநகையோடறையலுற்றாள். (௫அ)

மாமிமிசையன்பறவசைச்சொன்மொழிவாடன்
சாமிவசையைப்பிறர்தமக்குரைசெய்பொல்லா
டோமில்பரமான்னமதுசெய்துதனிதுய்த்தா
ளேமுறுகதிக்குரியவிப்பொருள்கவர்ந்தால். (௫௯)

என்றுமுனமங்கருகிருந்தவளிசைப்பா
டுன்றடிசில்செய்துமுனர்துய்த்தவடொழிற்கண்
குன்றுமனதுள்ளவள்பொய்கூறினள்விலைக்கொண்
டொன்றுமகனைத்தருமொருத்திகதிசேர்வன். (௬௦)

இப்பொருள்கவர்ந்திடினெனச்சொலவயற்கண்
டப்பறுபசுச்சகனெடுத்தினிதுசாற்று
மிப்புவியில்வேசியுதரத்திடையெழுந்தே
செப்புமொருவர்க்கடிமைசெய்துழல்வன்யானே. (௬௧)

அவ்வகையருஞ்சனனகோடிதொறுமாவே
னெவ்வுபொருளின்றுகவர்வுற்றதுடையேனேற்
செவ்வியருணர்ந்திடுமினென்னவதுதேர்ந்தே
திவ்வியசுனச்சகர்தமக்கிதுதெரிப்பார். (௬௨)

எங்கண்மனமுள்ளவகையிங்ஙனுரைசெய்தே
மங்கவையனைத்துமுனதுள்ளமுளவன்றோ
சங்கையறநீயுமுரைசாற்றுகெனமற்றப்
புங்கமுனிபுன்னகைபொருந்தியிதுசொல்வான். (௬௩)

வேதமுனிவர்க்கெனினும்வேள்விபலசெய்யு
மாதிமுனிவர்க்கெனினுமன்பினொடுபெற்ற
மாதினையளித்தபயன்வந்ததுமரைத்தண்
டேதமொடுகைக்கொள்கரவாலெனவிசைத்தான். (௬௪)

அன்னமொழிகங்கள்செவிசாருமுனமாரு
முன்னரியமாமுனியையுற்றுரைசெய்பாவங்
தன்னையகல்விக்குமொருசார்புரைசெய்வல்லோ
யின்னுமுணவுந்தருவையென்றனரிதங்கி. (௬௫)

ஆயபொழுதம்முனிவலாரியுருவாகி
நேயமொடுநின்றுபலநீர்மைகணிரப்பி
மாயைதருவானையுயிர்மாற்றவிடைவந்தேன்
றூயபுகல்கேட்கும்வகைசும்மையுமறைத்தேன். (௬௬)

வைத்தவிடமுற்றதனைமான்பின்மிசைவீரென்
றுத்தமனுரைத்தகலவோதைபடுமாரி
யித்தரைபொழிந்துபுவியெங்கும்வளனுண்டாய்
முத்தர்பசிதீர்ந்துதவமுற்றினரிருந்தார். (௬௭)

ஈண்டுணர்திநீயெனவெடுத்திதனையோதிப்
பாண்டவன்மகிழ்ந்திடவிரைந்திதுபகர்ந்தா
னீண்டவிதிகாசமெவர்கூறினுநிலத்திற்
பூண்டுபெருவாழ்வுகதிபுக்குவர்களென்றே. (௬௮)

வேறு.

மதிகுலமுய்யவந்துதித்தமாமணி
விதியினையணையவன்விரித்தவோர்ந்தபின்
சதிருறுகவிகையுஞ்செருப்புந்தந்தைபேர்
விதமுறப்புகன்றளித்திடல்வினாவினான். (௬௯)

கேளிதுமுன்னரிற்கிளர்ந்துப் பானுவு
மாளுறுதிறற்சமதக்கினிப்பெயர்
வாளுறுமுனிவனுமெதிர்ந்துவாதிட
நீளியமொழியுளவெனநிகழ்த்தினான். (௭௰)

ஓர்தினமம்முனியுகவையெய்தியே
பார்மிசைவில்லொடும்பரிவினேகலுங்
கார்தருமின்னிகர்காமர்காதலி
சீர்திகழிரேணுகைபின்னர்ச்சேறலும். (௭௧)

பொருவறுகூர்ங்கணைப்புட்டிருங்கியே
திருவணையுடன்வரச்சென்றுவெள்ளிடை
யருண்முனிதங்கிநின்றம்பினாழிகை
யருகுறச்செறித்தபின்னம்புபோக்கினான். (௭௨)

மனோவிகாரங்களின்மயங்கிடாதவன்
வினோதமாத்தெறித்தவான்கணைகண்மின்னனாள்
கனோதயமேகலைகலிப்பவோடியே
சனோதயமுனியருகாக்குஞ்சார்பினில். (௭௩)

ஒருதரந்தாழ்த்துவந்துறலுநோக்கியே
வருதிநீபெண்கொடிதாழ்த்தவாறெனோ
கருதியாங்குளபடிகழறுவாயென
விருகரங்குவித்துநின்றியம்பலாயினாள். (௭௪)

பாதபங்கயங்களைப்பரிதிவெம்மைசே
ராதபந்தகித்தலாலயர்ந்துமாநிழற்
பாதபஞ்சார்ந்துநின்றுறிப்பார்புகழ்
சீதபண்புடையைநின்னருகுசேர்ந்தனன். (௭௫)

எனவவள்புகறலுமிருடிகண்கள்சேந்
தினனுனதுடல்வியர்வெய்தச்செய்தவன்
றனையினியான்செயுந்தன்மைகாண்கென
மனமழன்றனனுலகேத்துமாமுனி. (௭௬)

கண்டுவெம்பரிதியுங்கருதுவேதியர்
கொண்டகோலத்தனுயெதிர்ந்துகூறுவான்
முண்டகனனையமாமுனிவபானுவைத்
தண்டனைபுரிவதாநினையத்தக்கதோ. (எஎ)

பல்லுயிர்க்குலங்களும்பாருங்கானமுஞ்
சொல்லருமாதபந்தொடரும்பெற்றிகண்
டொல்லையினுருத்திலையுடல்வருந்தல்கண்
டெல்லைதீர்மாமுனிவெய்தல்போதுமோ. (எஅ)

கதிரவன்கரங்களாற்கனங்கள்பெய்வது
சதிர்செயம்மழையினாற்புவிதழைப்பது
கொதிகொளப்பொருளினுலவிகொடுப்பதா
மெதிர்மறையியம்புறுமிமையவர்க்கெலாம். (எகூ)

அத்திரவாழ்க்கையாமாருயிர்க்கெலா
மித்திரனவன்றனைவெகுளலாகுமோ
சத்தியநன்றெனக்குறித்துத்தன்னுரு
வுத்தரமேருவிலொளிரத்தோன்றினன். (அ௦)

கருணைவான்கண்ணனுக்கருதிமாமுனி
யருணைத்தழுவிநின்ருசிசொற்றபின்
பருணிதன்கவிகையுஞ்செருப்புமன்புடன்
வருணமிக்குளமுனிக்குதவிமாண்புடன். (அக)

என்னுடைவெம்மையைவெல்வதாயிடை
மன்னுவோர்பெரும்பொருண்மற்றிதாமென
முன்னயனமைத்தனன்முனிவர்க்காரிதை
யுன்னியோர்ந்தளிக்கினுமுறுவர்நற்கதி. (அஉ)

ஆதலாலிவையுனக்களித்துளேனென
மாதவன்பெறும்படிவானினேடுதே
ராதபனல்கியாங்கருள்கொண்டேகினன்
மாதினேடம்முனிசூழன்மன்னினன். (அஙூ)

இவ்வணமுலகினிலெவருநல்குவர்
மெய்வணமுணர்ந்தவர்க்கென்றுவீடுமன்
பொய்வணமுணர்கலாப்புரவலன்றனக்
குப்வணமாகவேயுரைசெய்தானரோ. (அச)

சவுசமாம்விதிமுறைதன்னைக்கூறெனக்
கவசமேயறமெனுங்காவலன்சொலத்
திவசநாயகனிகர்தெளிவுபெற்றவ
னவசநீங்குறவெடுத்தருள்செய்தானரோ. (அரு)

இரவினும்பகலினுமிருமலங்களை
முரனுறுபுவியிடின்முகந்தெற்காகவே
தருவடக்கபிமுகஞ்சந்திமூன்றினுஞ்
சிரமிசைவேட்டியைச்சேர்த்திறங்கியே. (அசு)

இரவியையான்களையேறநோக்கலா
தொருவரோடுரைசொலாதொருவர்கண்ணுறு
துரனுடையோர்மலமுகுத்துமண்ணினாற்
றருபுனலாற்சுத்திசெய்துசாரவே. (அஎ)

இடக்கரமிருத்திகையிட்டுச்சுத்திசெய்
தடற்படுவலக்கரமவ்வணஞ்செய்தே
திடற்படுமிருகரஞ்சேர்த்துச்சுத்திசெய்
துடற்படுகால்களுமுரனிற்செய்தபின். (அஅ)

பன்முறைதூயநீர்படுத்துமிழ்ந்துவாய்
நன்முறையாசமனங்கடந்தபின்
முன்முறைமுப்புரிநூலுந்தாங்கியே
பின்முறையொருவர்பாற்பேசலாகுமே. (அகூ)

இல்லறந்துறவறமென்னுமாண்புடை
வல்லவரடுத்தனவாறெலாமவர்
சொல்லுறுநெறிப்படிமுற்றித்தூய்மையி
னெல்லைதீர்ந்தொழுகுவதியற்கையாமரோ. (கூ0)

பின்படுகுலத்தரிப்பெற்றிக்கேற்பன
முன்படவியற்றுவரவர்க்குமுற்றுவ
தென்படுகருமமென்றிசைக்கின்மாதவர்
தன்பதம்வழிபடல்சாலமிக்கதே. (கூக)

அத்தகைவழிபடுமரியருத்திர
னுத்தமகதிவயமுறுவன்காண்டியென்
றித்தகைவிளம்பிடவிறக்குங்காலமாய்ந்
தெத்தகையுணர்வதென்றிறைவினவினன். (கூஉ)

கூறுவான்வீடுமன்காலங்கூடுநா
ளீறெனவுணர்குவரெதிரினுத்தரத்
தூறியதிசையினிலொருவன்றெக்கண
மேறியமுகத்தனையிருத்தல்கண்டுளோர். (கூங)

ஆண்டுமூன்றினிலவரடைவர்காலனூர்
மாண்டவாளிரவிதன்மண்டலத்தொளி
யீண்டுநற்பிரபையிலாதிருப்பநோக்கினோ
ரீண்டுவற்சரமிரண்டினிலிறப்பரே. (கூச)

தன்னிழல்பூழைபோயிருந்தருள்படி
லுன்னுமோராண்டினிலுறுவன்காலனூர்
பின்னுமாங்கதுபலபேதங்கண்டிடின்
மன்னுவன்மூவிருமாதத்தங்கவன். (௯௫)

காமிரண்டாலுந்தன்கன்னம்பொத்தினு
லூம்பெறுமோசைகேளாதுலர்ந்திடிற்
பாவுமோர்திங்களிற்செல்வன்பன்மணி
விரவியபகடுகைவீரனூரினே. (௯௬)

வேறு.

நீர்வாயிற்பெய்துவெயினிழலிருக்குமிடத்துமிழ்ந்தாற்
சார்தருமிந்திரசாபஞ்சாராதேலவன்றனுயிர்
பேர்வதுமாதங்களிருமூன்றகலினெனப்பெரியோர்
தேர்வரிதுமனங்கோடிதிகந்தமளவுறுபுகழோய் (௯௭)

சாலியெனுமொருமீனக்தனித்துருவன்றன்னேடு
நாலுமுனிநாசிநுனிதனக்குணரத்தெரியாவே
லேலவுறுதிங்களினுளிறந்தகல்வரெனவுணர்தி
மாலுமிகாரதபெருமாதவத்தோய்மையலற்றே. (௯௮)

உதடுநாக்கறுப்படையினேதுபற்களவ்வண்ண
மிதமறவேதோன்றிலவன்விளிவனரைவருடத்தி
லுதரமிதையத்தானமுறுகரங்கானனையாவே
லிதவுடையபுனலாடினிறப்பனேரேயயனத்தில். (௯௯)

தன்பாதச்சுவடளறுதனிற்சிதைந்துகாணுமே
லென்பாயவுடலிழந்தோனினிச்சின்னளிடையுணர்தி
வன்பாற்கண்ணுடிகளிற்றலைதவிர்ந்துநிழன்மருவி
லன்புடையாயுணர்தியொருமாதமுயிரகலுமதே. (௧௦௦)

பதங்கனிரண்டாய்த்தோன்றிற்பகற்கணுடுக்குலந்தெரிந்தே
கதங்கொளிரவினிற்றெரியாதெனின்மதியங்கலைநிறைந்து
விதங்குறைந்துதெரியுமெனின்விளிந்தவனுஞ்சின்னளின்
மதங்களொடுமாற்சரியம்வளாாநன்மதியுள்ளோய். (௧௦௧)

காதினுமூக்கினுநடுக்கங்காணவிருகண்டசன
மோதியநீலக்கருமையுற்றவன்றேயொழிகுவராற்
போதியதன்னிழற்றென்பாற்புகுந்ததெனிற்கண்டன்றே
மேதிமணிக்குரல்கேட்பார்விலக்கரியதிறலினரும். (௧௦௨)

என்றுரைக்குங்குறிகளினுலிறுதியுணர்ந்திடர்மூழ்கா
தொன்றுபடுசிந்தையராயுலகியற்கைதனையொழித்திட்
டன்றுமுதற்கடவுளடிக்கமலத்திலன்புறுத்திற்
சென்றுறவருங்கதியிற்சௌனமெனுந்திடர்நீங்கி. (௧௦௩)

மன்னர்பிரான்கேட்டியெனவரநதிதந்தவனுரைப்பப்
பின்னுமிதுபகர்கின்றனறன்குமரன்பெருமானே
மன்னுசுரர்தொழுந்தகையமானிடருண்டுலகினெனச்
சொன்னமொழிகேள்வியுளேனுளவாகித்சொற்றருளே. (கOச)

உதிட்டிரநாமத்தண்ணலுற்றுரைத்தமொழிகேட்டு
வதிட்டமுனிசாபத்தால்வந்துலகினுற்பவித்தோ
னதிட்டமிதுவலவெவருமறிந்ததுவேகேளென்று
குதட்டியநாக்குளிர்ப்போங்கவிவ்வாய்மைகுறிக்கின்றான். (கOரு)

மாதவிமுன்னுளிந்தவண்ணமகபதிதன்னைக்
காதலினல்வினவவன்கட்டுரைத்தமொழியனைத்து
மோதுவன்கேடருமார்த்தமின்பமிவைபொருமுன்றின்
றீதகலநெறிமுறையேசெலுத்தியருள்புனைவாரும். (கOசா)

வாமமடமங்கையர்தம்வனப்புகவாதிகழ்வோரு
மேமமுறுவிஞ்சைகளாலிருநிதியாற்பெரும்புகழாற்
சேமமுறுசெருக்கடையார்சிதேந்திரியர்தன்றுர
நேமமலாவில்லாருநெறிமுறைமைதவராமே. (கOஎ)

சரதவிரதந்திடத்தாற்சரித்தோருஞ்சவுசவிதி
நிரதாமுமகலாருநேயவறம்ரகசியமாய்
விரவியபற்றிடுவாரும்விகற்பமறத்துறவடைந்தே
வரதமுறப்பயில்வாரும்யான்வணங்குமானவரே. (கOஅ)

என்றுமகவானுரைத்தானெனக்கூறவுதிட்டிரனுங்
குன்றனையதோள்புளகங்கொண்டுகரங்குவித்தபினர்
துன்றுலகிற்றடாகங்கடொட்டலரும்பயனென்ப
ரின்றதனல்வரும்பயனையெமக்குரைத்தியெனப்புகல்வான். (கOகூ)

அறங்கள்பலகோடியுளவாயினுமாங்கதற்குளெலாந்
திறந்தருவதத்தருமஞ்சீவனெலாந்துய்த்திடுமாற்
சிறந்தபசுவொன்றதனிற்சேர்ந்துபுனற்றுறையாறின்
மறந்தருவேலாயவன்றன்மரபனைத்துங்கரைசேரும். (ககO)

சதுர்த்தருக்குமகங்கள்செயுந்தன்மையிலையிவைபுரிந்தா
லதற்கதிகம்பயனெய்துமவர்குரவர்நரகமெலாம்
விதிர்த்தடைவர்நற்கதியில்விண்ணவருந்துதித்திடுவர்
முதற்றருமமாமென்றேமும்மலந்தீர்த்தவன்மொழிந்தான். (ககக)

வாகைபுனைமறவேலான்மற்றதுகேட்டக்கணத்தி
னோகையொடுகடவுளருக்குறுபூசைபுரிபோதின்
மோகமறுமலர்நிபநிவேதனஞ்சந்தனமுறையாற்
சோகமகனறும்புகையாற்றுவதுரைத்திதுணிபென்றான். (ககஉ)

விடுமனுமுன்னுவில்வெள்ளிமாவலிக்குரைப்ப
பிடுடையோன்மனுவினுக்குப்பேசவவன்சுவர்னனுக்கு
நீடுறவோதிடவந்தவிமலமுனியாற்கேட்ட
காடரியகாரணனுன்கேட்டபடிகேண்மோ. (கககூ)

கபிலைமகிமையுரைத்தசருக்கமுற்றிற்று.

ஆகசெய்யுள் - சககூ.

ஆசாரமுரைத்தசருக்கம்.

பொன்மருவுந்துவாரகையிற்புகன்மறையோன்புதல்வரோன்பான்பொன்றுங்காலை, கன்மினுக்கியமுதல்வற்கபையமிட வருச்சுனனுங்கவலேலென்று, தன்சரமாக்கியகூடந்தனைவளைந்தருபுதல்வன்றனைமாருடி, யன்புமிகுவிசயனுக்காதியைத்தெரிவித்தனனவன்றுளகத்தில்வைப்பாம். (க)

ஓங்குதிரைக்கடலெழுந்தவெள்ளமுதின்வருக்கத்தாலுண்டாம்பெற்றித்
தாங்கியதிம்மலர்களெலாந்தன்னுலம்பரவாணர்தருவர்பூசை
நீங்கரியசுகந்தமெல்லாநிறைந்துவெண்மைநிறங்கொண்டமலர்கணிட்டித்
தாங்கருதுகடவுளடிதன்னில்வழிபடுவர்மனந்தளராமன்னே. (உ)

கோட்டுப்பூநிலப்பூநற்கொடியிற்பூநீர்ப்பூவக்குறிக்குநான்கும்
விட்டிற்கேற்றிடுமேனிபிறவியலேக்கரைசேர்க்கவிரையுந்தோணி
நாட்டிற்காமியங்குறித்தோர்செம்மலருநற்கெதியைநாடிநின்றோர்
பூட்டிக்கூறியவேணமலரினுமர்ச்சனைபுரியிற்புனிதமாமே. (ஙு)

மலையசாற்கந்தத்தான்மாபாதகங்களெலாமாயுநீங்கி
நிலைபடுநற்றூமத்தானெறிவயமாந்திபத்தானிகழும்பெற்றிக்
கலைவல்லோர்புகலிருக்காசினியிலாசற்றோர்கண்ணுற்காணு
முலைவில்லாப்பெருங்கதியுமுதவுமருஞ்செல்வமுமீண்டுதவுமன்னே. (ச)

உத்தமமாஞ்சுரபிதருநெய்த்திபமேனையவாலுஞற்றுதீப
மத்திபமாந்திலதயிலமுதலவெலாமொவ்வாதவைக்கொணுதாற்
குத்திரநெஞ்சினராகிக்குறைபடாவிளக்கதனைக்கொண்டுபார்க்கிற்
சுத்தபவித்திரமானதூய்மையெல்லாந்தரும்பசுநெய்ச்சுடர்செய்தோர்க்கே. ()

கைதருதமகத்தமுதுகற்பனைசெய்வித்தவினர்கடவுட்கிந்து
செய்தவமுதருந்தினர்கள்செய்ததவமினியுலகிற்செய்தோர்யாரே
பொய்தவிருமக்கடவுட்பூசையிலார்க்கவ்வமுதுபோலுமுண்டி
பெய்திடுவரெனினும்வழிபடுமவர்க்குப்பெருங்கைப்பாம்பெறுகொணுதே. ()

ஆதலினலமரரெலாமியக்கரெலாமசுரரெலாமருள்பெற்றுள்ள
பூதலவானவர்களெலாமுரகரெலாமேனையரிற்புனிதரெல்லாங்
கோதிலதுபயனதிகங்கொடுப்பதுபூசனையெனவேகொண்டாரன்றோ
காதலளித்திடும்விரும்பில்விரும்பாரேற்பெரும்பேறுகலந்துய்வாரே. (எ)

என்றுரைக்கவறன்குமரனிளகிமனமறையோர்கைத்தொன்றேதேனுஞ்
சென்றுதொடுமவர்க்கென்றோசேருமுறையெனக்கேட்பச்செப்பலானான்
குன்றுகொடுமழைதடுத்தகோவலனுமாமுனிவர்குழுவுமாரும்
வென்றியுடன்செவிமடுத்தவீடுமனும்பெயருலகில்விளக்குந்தூயோன். (௮)

வேறு.

அரசர்கள்பந்துவென்னுமணிமுடிநிருபனங்கோர்
வரிசையிற்றமியாயெங்குமருவியாய்த்துணைருநாளில்
புரைசெயுநீசனேரேபுகுந்துநன்மறையோர்வீதி
யுரைசெயும்பராகமெய்தவுடல்படாதுகள்வுற்றானே. (௯)

கண்டுதானென்னையிந்தக்காரணம்புகல்வையென்னப்
பண்டியான்பிரமசாரிபலரகத்துண்டியேற்றுத்
தெண்டிரைமீதிற்செல்லவேதியர்தெருப்பராக
மண்டியதன்னந்தன்னிலியானதையருந்தினேனே. (௧௦)

வேதியர்பொருள்கைக்கொண்டோர்க்கென்கொலோமேவுமாறு
கோதிலேன்பராகந்துய்த்தகொடுமையானீசனானேன்
மாதவம்பயின்றபண்பாற்றெரிந்ததிம்மாற்றமென்ன
வோதினனதனாலஞ்சியொதுங்கியதென்றுசொன்னான். (௧௧)

பின்னருஞ்சொல்வானிந்தப்பிறவியினாறுமன்னன்
றன்னுடன்புகன்றநாளிற்றவிர்ந்துறுகதியிற்சார்வை
யென்னவோர்புருடன்கூறக்கனவுகண்டெழுந்தேனென்ன
வுன்னுடன்பகர்ந்தேவிட்டதுடலினிக்கதியிற்சேர்வன். (௧௨)

என்றுரைத்தகன்றான்வேந்தனச்சமோடுறுபாங்கெய்தி
யன்றுதொட்டொன்றுந்தீண்டாவகைபலரறியக்கூறி
நன்றியிற்சிறந்துவாழ்ந்துநற்கதியடைந்தானென்றே
துன்புறுவினைகளெல்லாந்துணித்தவனுணர்த்தினானே. (௧௩)

மீளவுமறன்குமரன்வினவுவான்விண்ணாடென்று
கோளிலார்புகல்வதொன்றோபலகொலோகூறுகென்ன
வேளினையனையாய்மண்மேல்விளக்குநல்வினையனந்தம்
நீளியகதியுமவ்வாறுளபலநிகழ்த்தக்கேண்மோ. (௧௪)

கருதருங்கவுதமப்பேர்க்கலைமுனிதவத்தையாற்றி
யொருவனத்திடையுலாவவொருகரப்பொருப்புநல்கு
மருவிளங்கன்றுதன்றாய்வானடைந்திடமண்மீதிற்
பருவரலுழத்தனோக்கியருளினாற்பரிந்தெடுத்தான். (௧௫)

வளர்த்தனன்மைந்தன்போலவளர்ந்துநல்வரைபோலாகிக்
களித்திடமுனிவன்பாங்கர்க்கலந்தினிதிருக்குநாளி
லளித்திடுமவனிகாக்குந்திரிதராட்டிரன்போலாகி
யொளித்துருவலாரிவந்தானும்பலைவளைந்துபற்றா. (௧௬)

கோமுனிப்பாங்கரெய்திக்குவித்தகைத்தலத்தனாகி
மாமுனியளித்தியிந்தவாரணைத்தனக்கென்றோதச்
சேமவேதியனுரைப்பான்றுயிலாச்சிறுமைநோக்கிக்
காமுறக்கொணர்ந்துநாளும்வளர்த்தனன்காதலோடும். (௧௭)

மைந்தனில்வளர்த்தகொற்றவாரணந்தன்னைமன்னா
யுந்துவாகனமாநின்பாலுதவுதற்குளமுண்டாமோ
விந்தவாசிரமங்காக்குமியாமிலாவிடத்துமேற்றுக்
கந்தமூலங்கணல்குங்கருதலைகரியையென்றான். (௧௮)

பொற்புறமுனிவன்வாய்மைகேட்டபூபதிநகைத்தே
சிற்பரம்பொருடேர்ந்துள்ளதேசிகர்பெருமானின்பா
லற்பமாங்கரியுலாவலதிகமாமெம்மனோர்கட்
குற்பவமுதல்வனன்றாயுலோபமேனுதவுவாயால். (௧௯)

வான்கரியெங்கட்கூரும்வாகனமாகமுன்ன
மேன்பரித்தமைத்தாயிங்ஙனிகழ்வதுதக்கதாமோ
நான்முறைபசுவிலக்கம்பசும்பொன்னூறிலக்கநீவன்
மான்வளர்கரத்தனன்றாய்வாரணமளித்தியென்றான். (௨0)

சொற்றவைக்குடன்படாதுதோன்றலேவிழைவிலாதோர்க்
குற்றசெல்வங்கணல்கிலென்பயனுலகிலில்லார்
பெற்றிடவளித்தியிந்தப்பெருங்கரிபெறுவாயென்னின்
மற்றிதுபுகல்வன்கேண்மோமகிதலம்புகழ்வைவேலோய். (௨௧)

செய்தநல்லறங்கடன்னிற்சிறப்பினைப்பெறுதலோடு
மெய்துதிவினைகடன்னாலிடர்ப்படுமுலகமாகி
வைதிகமுணர்ந்தமேலோர்வயங்குநற்சபையின்மேவிற்
பொய்தபவருள்வனிந்தப்புகழ்தருகளிற்றையென்றான். (௨௨)

அரசர்கோன்புகல்வானையவரியதாம்வினையிரண்டும்
வரிசையிற்புரிந்தமாக்கள்வருமுலகடையலாற்றேன்
கரைசெயாத்தவத்தாயானோகாண்பதவ்வுலகமென்ன
விரைபுதுமன்றலானைநோக்கியேவிளம்பலுற்றான். (௨௩)

தருமனென்றுரைக்குமேலாந்தகையருகடைதியென்ன
விருபெருங்குரவர்க்கன்போடனுதினமிறைஞ்சுநீரான்
கருதியானவன்பாலேகக்கடவனோபொருள்செய்தென்றான்
மருவலர்நிணமும்வாகைமாலையுங்கமழும்வேலான். (௨௪)

வரமுயர்மிக்கமந்தாகினிநதிமருங்குநண்ணிக்
கரமுயர்கரிகொள்ளென்றான்கனன்மகம்வளர்த்துநாளுந்
தரமுயரதிதிபூசைதந்துபின்சேடந்துப்ப
குரமுயர்தென்புலத்தோர்க்குறுக்கடனிரப்புநீரார். (௨௫)

அவரையோர்பொருளாக்கொண்டாங்கடைவனேவளித்தல்கொள்ளாத்
தவரிருந்துலவும்பாங்கரென்ன லுஞ்சயிலமேருப்
புவனியிலொளிரும்பாங்கர்ப்புகுந்திபங்கைக்கோனென்று
னவமுறுபுனிதவேந்தனவி லுவனகையினேடும். (௨௬)

இன்சொ லுஞ்சரதவாய்மைவிரதமுமிதமுமார்க்கு
மன்புடனருளுமெல்லாவுயிரிடத்தாகுநீரார்
வன்புவிசரிப்போர்யானேவருவனங்கெய்துவேனே
வின்புறுதூயோய்நல்லவிடனென்றுபுகறியென்றான். (௨௭)

சாரதந்திரங்கள்வல்லதவமுனிபரசைநோக்கி
நாரதன்பயி லும்பாங்கர்வருதிநல்குவன்மாவென்ன
நீரரணெறிகணிந்திநிருதகிதங்கள்வல்லோர்
பாரதிற்பயி லும்பாங்கர்ப்படர்வனேபணித்தியென்றான். (௨௮)

கிதங்கள்விதியினுய்ந்தோர்கிளருமன்புடையாராகிச்
சிதங்கொள்வீணையேந்திக்கடவுளாயத்திற்சேர்ந்து
நாதங்கள்பயின்றோர்சாருமிடமதுநண்ணமாட்டேன்
மாதங்கமருளுமாறுயென்றனன்மறுவில்வேந்தன். (௨௯)

செய்யமாமுனிவன்மீளச்சிந்தரமீவன்வாராய்
மையலற்றுலவுமேருவடகுருபூமிக்கென்னப்
பொய்யிலாரிமிசைசெய்யார்போவதாமனையபூமி
யுய்யயானடையுமாறேவென்றனனுலகபாலன். (௩0)

மாமுனிபகர்வானிந்தவதிட்டனுதியர்கள்வைகுஞ்
சேமமார்விபினமெய்திச்செழுங்கரிகைக்கொளென்ன
வேமதானங்கனல்கிவிஞ்சைகளிரப்போர்க்கீந்தோர்
தாமுறுமிடனுமென்னேயானதிற்சார்கிலேனே. (௩௧)

என்றரசுரைப்பமீண்டுவிரவிவாழுலகினெய்தி
மன்றலங்கரிகொளென்னமாதவம்வேதாந்தியான
மொன்றியோர்விழைவிலாதோருறுவதாமெனக்கேயெய்தும்
வென்றவைம்புலத்தாயென்றான்வேந்தன்மாமுனிவிரிப்பான். (௩௨)

வருணனல்லுலகமேவில்வாரணமளிப்பனென்னப்
பருணிதர்முத்தீயோம்பும்பான்மையர்புகுவரன்றிக்
கருணைமாமுனியேயென்னுற்காணலாந்தரமன்றென்றான்
றரணிகாவலனிதற்கத்தனிமுனிபுகல லுற்றான். (௩௩)

வேறு.

உலகெலாம்விரும்புவதும்பர்நாயக
னிலகுறற்பதமவணெய்தினிகுவன்
வலனுயர்க்கரியையென்றுரைப்பமாண்புடை
யிலைகொள்வேலவனெடுத்தியம்பலாயினன். (௩௪)

போரிடைவென்றவன்பொருவினன்மகச்
சீரிடைவென்றவன்மறைகடேர்ந்தவன்
பாரிடைசதவருடம்பயின்றவன்
சேரிடம்யான்கொலோசெல்வனங்கென்றான். (௩௫)

வரும்பிரசாபதிவாழ்நல்லுல
குராம்பெறவடைந்திபங்கொள்கென்றோதலும்
பொருந்தயமேதங்கள்புரிந்துளோர்கள்சேர்
தரும்புரஞ்சார்வதோதகுதியென்றனன். (௩௬)

அம்முனிமீளவுமரியகோவல
கிம்மெனவனுகியிவ்விபங்கொண்டேகென
விம்மையிற்கோக்கணமீய்ந்துபற்பல
பொம்மல்வான்றவமுறும்புனிதர்போமிடம். (௩௭)

ஆங்கதுவேண்டிலேனையயானெனப்
பாங்குறுபார்த்திபன்பகரப்பின்னருந்
தாங்கருமகிழ்வுடன்றவத்தராரியன்
வீங்குதோள்புளகெழமீட்டுங்கூறுவான். (௩௮)

வெயிலினாற்குளிரினால்வெதுப்பிலாவுல
கயிலுமிவ்வுறுபிணிமூப்படாவுல
குயரியகதிக்கெலாமுயருமவ்வுல
கயனுடையுலகத்தினனுகிக்கோடியால். (௩௯)

இப்பெருங்களிற்றையென்றியம்பமாமுனி
செப்பினன்றிரிதராட்டிரனுஞ்சீரியோ
ரெப்பெருந்தவங்களுமியற்றிநல்லறந்
தப்பறவியற்றினோர்சாருமவ்விடன். (௪௦)

உனற்கருந்துயருக்குடன்படாவுல
கெனக்கெளிதாகுமேயெய்தற்கென்னலுந்
தனக்கிணையிலாமுனிநகைத்துச்சக்கிரீ
வனக்கரிகோடியென்றுரைவழங்கினான். (௪௧)

அக்கணமகபதியாகித்தாழ்ந்தெழுந்
திக்கரிநினைவழிபடுமியற்கைகண்
டொக்கலினனுகினனுரைவிளம்பவே
கைக்கரிபெறுவதுகருதுவென்கொல்யான். (௪௨)

வினோதமாவையநீவேழத்தோடிவண்
மனோசுகமடைவதுகண்டுமற்றிது
தனோடுறக்கருதுதறக்கதேயெனச்
சனோசியாங்குரைத்தலுமுவிதொகுப்பனால். (௪௩)

பேரறிவாண்மையிற்பிளிறுங்குஞ்சர
நேரறநின்னுழையிருக்கனேயமே
தாரசைதோளினாய்கொண்டுசார்கென
வேறுறுவாசவனெடுத்தியம்புவான். (௪௪)

வான்கரியோடுநீவானில்வந்துறிற்
றான்கொடுசெல்வனத்தன்மையன்றெனில்
யான்கரிகோடலனென்னவிம்முனி
பான்மையினவனொடும்பயிலும்பண்பினால். (௪௫)

ஏறினன்கரிமிசையிந்திரன்புரம்
வீறினிலடைந்தனன்விபுதர்நாயகன்
றேறினனிவனொடுசித்துரந்தனை
யாறியநிலைமையானடுத்திருந்தனன். (௪௬)

என்றுவானதிமகனிதனையோதலு
மன்றுநல்லறன்மகனருந்தவத்தினு
மொன்றியதருமங்களுறுதியென்பரா
லின்றிதையடியனேற்கிசைத்தியென்னவே. (௪௭)

மீளவும்பகருவான்விறல்கொள்வீடுமன்
றாளதாமரைக்குமித்திரன்றன்சந்ததி
கோளறுமனுகுலத்தோன்றல்கோதற
வாளுறுபகீரதனவனிகாக்குநாள். (௪௮)

நாளதாமரையினானுலகைநண்ணியே
தாளுறவணங்கலுந்தந்தைநோக்கியே
வாளுறவாதனம்வழங்கியோதுவான்
வேளனாயொருவருமேவிலாரிவண். (௪௯)

எவ்வணம்நீவருமியற்கையீண்டெனச்
செவ்வணத்தயன்றனக்கிதனைச்செப்புவா
னுய்வணம்பற்பனாடவமுயற்றினேன்
கைவருமகமெலாங்கடிதியற்றினேன். (௫௦)

ஏதினுமிவ்வுலகெய்தும்வல்லப
மோதவின்றந்தணருஞற்றும்வேள்விவாய்
கோதறவோவாடியான்குறைத்தகற்றியே
தீதறமுற்றுவித்தனன்சிறப்பொடும். (௫௧)

அந்தணர்மகிழ்ந்தயனுலகமன்பினான்
முந்திநீநோக்கியேமுதன்மைகைக்கொளா
வந்திடுகெனவரமளிப்பவந்தன
னெந்தைபான்வருமுறையிதுவென்றோதினான். (௫௨)

உதவிநீசெயப்படுமவர்தம்முக்கத்தாற்
பதவிமேற்படுமெமதுலகம்பார்த்தனை
சதவிதமகத்தினுந்தவங்கடன்னினு
மிதவுசெய்வதுபெரிதென்றுகூறியே. (௫௩)

மன்னனுக்கருச்சனைவழங்கியுய்த்திடப்
பன்னுமிப்புவியெலாம்பரித்திருந்தனன்
கன்னவிற்றோளினுய்காண்டியென்றனன்
மன்னியவறன்மகன்வகுப்பதாயினன். (௫௪)

அம்புவியிடத்தினோர்க்காயுவிருத்தியு
மிம்பரிற்குறைதலுமெய்துமென்பரா
னம்பனைநிகர்சொலுஞானவாரியே
வெம்பவமொழிதரவிளக்கவேண்டுமே. (௫௫)

வேறு.

எனவறன்றனதுமகன்மொழிந்திடவிசைந்துவீடுமன்வழங்குவா
னனகவாயுவொடுபுகழுமோதுதிருவாண்மையுஞ்செயுமறங்களுந்
தனதுபாங்கர்நல்லொழுக்கமுண்டெனில்வளர்ந்திடுந்தகைமைதங்குறுந்
தினந்தினங்குறைவுறும்பயன்கனிகழ்தியொழுக்கமுடையோர்கள்பால். (௫௬)

ஆயகாலைதனதாயுவேறுமுறையாதுமோதுவனிசைந்தென
தூயனிங்கிதுபுகன்றுளானுலகினல்லொழுக்கின்முறைதோன்றவே
தாயதாம்வருணமீறிடாதுரியதன்மையிற்பயிலுநன்முறை
தீயயாவையுமகற்றுமென்றுநனிசிந்தைகோடிதிடமெய்தியே. (௫௭)

தேசிகன்றன்மொழிபொருள்செய்யாதவர்கள்சிலமாமறைசொல்லாதுகொண்
டாசினாலவனிபயிலுவோர்திரணமங்கைகொண்டுநகமதனினூற்
பேசியேயதுதறித்துளோரிரவிபின்னுமுன்னுமுறமோச்சினோர்
நாசமெய்துமவரென்னுடைக்கமலநாதன்வைத்தபரமாயுவே. (௫௮)

பொய்யகற்றிவெகுளாதுயிர்க்கிறுதிபோற்றிடாதுதிரிபோகினுந்
தெய்வவர்ச்சனைகள்செய்யினுங்கனல்சிறக்கவாகுதிபயிற்றினு
முய்யுமாயுமொருவற்குரித்துடையொருத்தியைத்தொடுமொருத்தனுக்
கையமென்னையதனிற்சிறந்தகொடிதில்லையாயுவையகற்றவே. (௫௯)

அதனிலின்னுமுளதென்னையென்னிலிதமானநண்பனரசன்குரு
விதனவேதியன்வயித்தியன்றனதுபாந்தவங்களின்விளங்குவோன்
சிதனமானவடியானையாதியர்கடேவிமாரைமனதுன்னினுங்
கதமதாயுவவனரகலாதுகதிகாணும்வண்ணமிலைகழறவே. (௬௦)

ஆலயங்களினடுத்தவிழமறையந்தணாளர்தனமார்ச்சனை
மேலையாயுவைபகற்றுநின்றுணவுமிசையினுஞ்சலவிசர்ச்சனம்
ஞாலமீதுவிடினும்பொலாதுகுணதிக்கைநாடிநவிலைகியே
பாலையேபகல்கொளாதருந்தல்பயனாருமென்பர்தெரிபாவலோர். (௬௧)

எச்சிலுற்றபொழுதங்கிவேதியரிருந்தநற்பசுவினைத்தொடார்
நிச்சயித்துளவிருத்தர்கண்படினெழுந்துநின்றுதொழுதாரெனி
னச்சமில்லையவராயுவெல்லைமறையறையுநாளுதலைவிரவொணா
துச்சியோடுதுயில்சுசிகொள்ளுமுறையுன்னலார்கலைதெரிந்துளோர். (௬௨)

கரமிரண்டுகொடுதலைசொரிந்திடுதல்கருமமன்றுடல்கலப்புறத்
திரமியங்குதயிலம்பெய்யார்தனதுதேசிகன்றனொடுசீறிடார்
தரமகன்றவனருஞ்சினத்தினொடுசார்ந்துவைபினுமறப்பதே
யுரமரும்புவியுதித்தவர்க்கிதனினில்லையாயுவுறுமுண்மையே. (௬௩)

இரவிதன்றிதிவசுக்கடன்றிதியினேழிரண்டினிலைம்மூன்றினிற்
சுரதமங்கையர்கடோள்விரும்பின வராயுநாடொறுமகன்றிடும்
பரவுமங்கமிலாதிருவிலாரழகுபதிவிலார்கலைகடெளிவிலார்
விரவல்கண்டிழிவுகூறினாயுவொடுமேவுநன்மையகல்விக்குமே. (௬௪)

தந்ததாவனமலஞ்சலங்கழிதருங்கடத்துறைவிளம்பிலா
ருந்துகாலையுடனந்தியிற்றுயிலுறாரளித்தவர்பதத்துணை
முந்துதாழ்ந்துகுருவுக்கிறைஞ்சிமறைமுதல்வரைத்தொழுதுநாடொறுங்
கந்தநன்மலர்சொரிந்துதேவின்வழிபாடுமுற்றுவர்கருத்தரோ. (௬௫)

பின்னர்சேறலொருகருமமாகிலலர்பெரியராயுவுமிகுந்திடு
மன்னுகெர்ப்பமுளமாதரைத்தழுவில்மாயுமாயுவடதிசையொடும்
மன்னுமேற்றிசைதுயிற்செயார்தலைபடுத்திமற்றதிசைநன்மையா
முன்னுநீனிடைதோய்வராடையுகளங்கதித்திடவிதுக்கியே. (௬௬)

வடவிருக்கமரசிலையுயிர்த்தகனிவாயினிட்டுமிசையார்கணா
வுடனுநாசியினுறும்புனல்படுநல்லுண்டிகொள்கிலர்களுப்புகைப்
படவெடுத்துமிசையார்கள்கங்குலிடைபற்றிவெண்டயிர்நுகர்ந்திடா
ரிடர்மிகுத்தமதுபானமொத்ததெனவெண்ணவஞ்சுவர்களேசிலர். (௬௭)

கண்டுளோர்கள்பெறநல்கலாதுகைவந்தபண்டமுமிசைந்துளோ
ருண்டிவந்தனவிருந்தினோர்க்கொருவிதத்தளித்தொருவிதங்கொள்வோர்
விண்டநேயமதுதயிர்ச்செழுங்கமலம்வீறுபாயசமுதற்சொலுங்
தண்டலற்றபொருடனியருந்தினர்தமக்குமாயுகுறைவாகுமே. (௬௮)

வேறு.

பாரினோங்கியவிழிபுநோக்கினர்பசும்புரவித்
தேரினோங்கினோன்றனைத்தெரிசித்திடிற்றீரும்
வேரினோங்கியதருவனாய்விரிதிரையுவரி
நீரினோங்கியகாலம்விட்டாடுவானினையார். (௬௯)

தென்புலத்தவர்க்கிரவிலோர்கருமமுஞ்செய்யார்
தன்புலத்தெழுதனையனிற்றம்பியைப்புரப்பார்
முன்புலப்படுதமையனைப்பிதாவெனமுன்னி
நன்புலப்படநடந்தவர்காடருந்தவத்தார் (௭௰)

வீறுயர்ந்திடுபுவிமிசைதீவினைவிளைத்தோர்
பேறுதங்குவதெவ்வணமென்றுநீபேசின்
மாறுகொண்டிடாதிவ்வணமொழுக்கத்தின்மருவி
யாறுசெல்பவர்க்கன்னமீந்திடிற்கதியடைவன். (௭௧)

சொன்னநல்லறந்தனக்கெலாந்தூயநல்லறமா
மன்னமீகுதலதற்கரும்பயனெவரறைவோ
ரின்னபான்மைகளுன்வயினிசைத்திடென்றே
பன்னுமாறெனப்பகர்ந்தனன்பார்புகழ்குரவன். (௭௨)

விரதமந்தணர்வேந்தரேபோற்றுதலென்று
வரதரோதினர்மற்றவர்பயிற்றுதலென்றே
சரதம்வல்லவசாற்றுதிதேறயானென்றான்
பரதநற்குலந்தழைத்திடப்பாண்டுவீன்றெடுத்தோன். (௭௩)

வேதவேதியர்சாந்திராயணமுதல்விரதங்
காதறீர்வுறக்கிரிச்சரமாற்றுதல்கடனு
நீதிமன்னவர்நியமமாந்திதிகணுள்வாரம்
போதநாள்பலகழிந்திடப்புரிவதுமறனே. (௭௪)

வசியர்சூத்திரர்வருந்துபவாதம்விட்டிருக்கற்
கிசையுநான்குநாளளவுமேற்பட்டத்தாவிழுக்காங்
கசியுநல்விரதங்களைக்காமுறுதியற்றி
னிசியனீங்கிடும்பிறப்பெனநிகழ்த்தினனிமலன். (௭௫)

பின்னரோதினனையவிப்பிரபஞ்சமதனுட்
சொன்னசொல்லெலாந்துணிகலையானிதுதூயோர்
பன்னுமாமறைதேர்ந்துரைத்திடத்தரும்பரிசா
மின்னதேதுணிவென்றனனிறைவன்மீட்டுரைப்பான். (௭௬)

மனிதரானவர்தீவினைவயத்தராகியநாள்
புனிதனீங்கியேயஃறிணையுடற்புணருவரென்
றினிதினோதிடக்கேட்டுளேனெவ்வினைக்கெய்து
மனகவீறகன்றிடுமுடலறைந்தருளென்றான். (௭௭)

உலகில்வாழ்வுறுமனிதர்களுயிர்த்தொகையாகி
யலகிலாவுடலெடுக்குமாறறைகுவன்கேண்மோ
சலசவாள்விழித்தருமனேயென்றுதன்னளிசெய்
தலகிலாதவனெடுத்திதையறைகுவனம்மா. (௭௮)

தந்தைதாயொடுதேசிகன்றன்னிடையியற்று
முந்துநன்மைகட்களவிலதிமையைமொழிதற்
கந்தனாளுமஞ்சுமேனியரிடத்தாற்றிற்
சிந்துநற்பரிகாரத்தாற்றீர்ந்திடாதிதுவே. (௭௯)

கோவிலெண்ணெய்யோர்பொருள்கொண்டனனென்னி
லாவிநீங்கியேயாகுவாய்வராகமாயயர்ந்து
மேவிநாள்பலகழிந்தபின்சுணங்குடன்மீண்டு
மோவலின்றியேயுறுவனீமனங்கொள்வாயுரவோய். (அ0)

வேறு.

பிறர்மனைநயந்துளோர்கள்விருகமாய்ப்பேசுந்திய
சிறைபடுகழுகாய்ப்புள்ளாய்ப்பருந்துடற்செறிந்துபன்னாள்
குறையெலாமடைந்துபின்னுங்கிருமியின்குலமாவாரென்
றுறுதியிற்சிந்தைகொள்கென்றுரைத்தனனுயர்ச்சிமிக்கோன். (அக)

கடவுளர்தம்மைப்போற்றிப்பிதுர்க்கடங்கடன்செயாதோ
னடலுறுகாகமாவன்முன்னவனஞ்சப்பல்கா
லிடர்மொழிபுகன்றோன்றானேகிரவுஞ்சமென்றுதிப்போன்
கொடியராய்மறைவலோனையடித்தவர்குரைத்துவைதோர். (அஉ)

நரகிடைப்பயிலாநிற்குங்குருவிகளாவர்நாட்டி
லூரனுடைப்படைக்கரத்தர்வெறுங்கரத்துறுவோர்தம்மை
விரவுபொன்னாசைவிஞ்சிவதைக்கில்வேசரியாய்வீழ்வர்
பரவுபெண்வதைசெய்தோர்கள்நரகெலாம்பயிலுவோரே. (அங)

அன்னம்பால்தயிர்நெய்பண்ணியாரங்களளத்தாற்கொண்டோர்
பன்னுமச்சங்களாதிநீர்பயிலுயிர்களாவர்
மன்னியபழங்கள்வெள்ளியிரும்புபொன்மறைத்தெடுத்தோர்
துன்னுவாரணங்கள்கூகைகாகமாய்ப்புழுவாய்ச்சோர்வார். (அச)

அடைக்கலப்பொருள்கைக்கொண்டோனீசனாயங்கமெய்து
மிடற்படுகந்தம்வீசுமியற்றிரவியங்கரந்தோ
னுடற்பெருஞ்சுண்டனாகியுலவுவன்மடவார்செய்பிற்
றிடத்தந்தவுடலந்தங்கியவரொடுஞ்செறியுமன்னோ. (அரு)

அறிந்தவைசிறிதுசொற்றேனறத்தினையுரைக்குநூலிற்
சிறந்திடவுரைத்தவாற்றாற்றெளிதியென்றுரைப்பமீண்டு
முறைந்தவிவ்வுலகினாயேற்கொன்றுசந்தேகமுண்டின்
றிறந்திடாவரத்தாய்நாயேற்குரைத்திமற்றிதனையென்றே. (அசு)

புகலுவானுயிரைக்கோறல்புகலருந்தீமையென்றே
சகலரும்புகறல்கேட்டேன்செய்வதத்தன்மையேயா
மிகலுறல்வேட்டம்போதலியங்குதலுணவாய்க்கோறன்
மிகலுறுபிதுர்க்கடன்சீர்விளக்கலிற்கோறலுண்டே. (அஎ)

அதற்கெலாந்தீமையுண்டோவிலைகொலோவறைவாயென்று
முதற்படுகருணைவள்ளன்மொழிந்திடக்குரவன்சொல்வா
னிதக்கமுள்ளோர்களுய்யுமியல்பினைக்குறித்துக்கேட்டாய்க்
கதக்களிறுடையாய்நன்றாமெனவிதுகரைப்பதானான். (அஅ)

தருமங்களனந்தமேதஞ்சாற்றுமிக்கலைகளெல்லாந்
தெருமந்துமுதன்மையிதென்றுணர்கலார்தெளிவிலாரே
பொருவெங்கோட்டொருத்தலெல்லாவுயிரடிபொதுளப்பூமேற்
றிருவடிச்சுவடுகாட்டுஞ்செயலினுற்றெறிந்துகொள்ளே. (௮௯)

உயிர்க்கொலைபுரியாச்செய்கையொன்றுமேயறங்கட்கெல்லா
மியற்படுமிறையாங்கோறலிற்றீதினுக்கரசதாமா
லயற்பலபுகல்வதென்னேயப்பெரும்பாவநான்கு
முயற்சியினடையுமவ்வாறியம்புவன்முதன்மைமிக்கோய். (௯0)

மனதினாற்காயந்தன்னால்வாக்கினாற்றகரும்வாற்றா
லனைகவந்தெய்தும்பாவமதற்கெலாமுதன்மையிவ்வூன்
றினலதைநீக்கின்மூன்றுநிலைமையுமுடனேநீங்கு
மினியகற்றருமங்கொல்லாவிரதம்வந்தெய்துமன்றே. (௯௧)

செனனங்கடோறுஞ்செய்தநல்வினைதிரண்டோர்க்கன்றி
மனனஞ்செய்தரும்புலாலைமறுத்திடலரியதாமாற்
சனனஞ்செய்விதையேயவ்வூனுகர்ந்திடுந்தன்மைவிட்டாற்
கனனஞ்செய்பிறவிவேலைக்கரையருகடுத்துளோரே. (௯௨)

அயமேதவேள்விதன்னினதிகமுனையின்றிடாமை
பயிலுயிர்க்கொலைசெய்தாலுமொருவாற்பயிலுவித்தே
செயலுறக்கொணருமவ்வூனருந்திவைசெப்பொணாத
கயமையும்பஞ்சபாதகங்களுந்தொடருங்கண்டாய். (௯௩)

என்றுவீடுமன்போடுமிசைத்திடவறன்குமாரன்
கன்றியமனத்தனாகிக்கரங்குவித்தையவந்தோ
வென்றிசேர்தென்புலத்தோர்விரும்புவர்மேதையென்றே
கொன்றவர்க்களிப்பர்பல்லோரதற்கென்னேகுறித்தியென்றான். (௯௪)

மதிகுலத்தரசரேறேமகத்தில்வானவர்க்குநல்கு
மிதமுறுகருமமேபோலினியதென்புலத்தினோர்க்கு
முதவு ..ிரண்டும்வேதமுரைத்தலாற்கொடுமையின்றாம்
வதைபுரிபாவமேவுஞ்சுவைப்பொருட்டாவிமாய்த்தால். (௯௫)

தன்னையார்மிசைந்தாரன்னார்தனைமிசைந்திடுமதென்றே
பன்னிடுமறைகளெல்லாம்பழிக்குடன்படுவருண்டோ
வன்னிலையுணர்ந்துவேண்டாதமைந்தவரன்றேசால்பி
னன்னிலையுணர்ந்தோரொன்றுநற்கதியேற்றுநன்மை. (௯௬)

தவத்தினானின்றமேலோர்வழிமுறைதவிர்ந்தபாங்கர்
நவத்துடலெடுத்தோனன்மையாவரேநவிலுகிற்போர்
பவத்தினச்சுவைமிசைந்துபாவத்துக்கஞ்சிவிட்டோ
னவத்தொழிலகற்றும்வானோருடனென்றுவரையலாமே. (௯௭)

பூவிலோர்புலன்செய்துற்றவுயிர்க்கிவைபுகலற்பாலன்
றாவியுண்டெனினுமிவ்வா றங்கநோய்படுவதின்றாற்
றாவியங்கதனைமாற்றுந்தன்மைகட்குண்டிசெய்த
றேவினுக்கெனவேதிருமுயிர்க்கொலைதீர்ந்திடாவே. (கூஅ)

தன்னுடற்றசையினீண்முட்டாங்குறிற்படுவதோர்ந்தும்
பின்னுயிர்க்கிடுக்கண்செய்யும்பேதைமைக்கேதோகூற
லன்னிலைதெளியவொட்டாதருஞ்சுவையருண்மிக்குள்ளோர்
பன்னியபுலாலைவிட்டிப்பண்பினையடைவர்மாதோ. (கூகூ)

துய்க்குதலொழிதல்வேண்டுமுயிர்க்கொலைசூழாரென்போர்
கைக்கொள்வோர்க்காகவன்றேபலருயிர்கடிவதெல்லா
மிக்கவிவ்விரண்டுமுன்னிவிட்டவன்றன்னைவாழ்த்தி
மைக்கடலுலகினுள்ளவுயிரெலாம்வணங்குமாலோ. (க௱)

தொல்லுலகனைத்துங்காத்தசுவாயம்புமனுவிவ்வண்ணம்
வல்லமார்க்கண்டனாதிமுனிவரைவணங்கிக்கேட்ப
சொல்லியவாறுமீதேயாயுவும்புகழுந்தோற்றத்
தொல்லைதீர்திருவும்பேறுமெய்துதற்கிதன்மேலுண்டோ. (க௱க)

வேறு.

மானவர்புலாலொழியாதுமாண்புரிந்
தானவர்தங்கடன்றரத்திலாவரால்
வானவர்விடுத்தபினசுரர்மாட்டுறு
மீனவன்றுயரெலாமொருவியின்புற்றார். (க௱உ)

தானமுந்தருமமுந்தவந்தியானமும்
ஞானமும்வேள்வியுமுதலநன்றெலா
மானதோருயிர்கொலாவறத்தினங்கமா
மானவவுணருதிமற்றென்கூறுதல். (க௱௩)

ஊனுணவோர்தினத்துற்றநன்மையு
மானுநற்றவஞ்சதவருடமாற்றினோர்
தானுறுநன்மையுஞ்சரியென்றேதுமால்
ஞானவாகமங்களுமறையுநம்பிகேள். (க௱ச)

தங்கியமகங்களாற்றவத்தினாலுயர்
பங்கயனுலகினையரிதிற்பற்றுவா
ரிங்கிதுதசைமிசைவின்றிவைகினோர்
துங்கவவ்வுலகினைச்சுலபத்தெய்துவார் (க௱ரு)

சகரனுநளனுநற்றிலீபன்சார்புறப்
பகர்பகிரதன்முதற்பலர்மெய்வேந்தர்கள்
புகரெனநீக்கினர்சிலர்கள்போக்கலா
ரிகழ்வுறமாதநான்கிடைவிட்டுண்பரால். (க௱சு)

அவ்வனைத்திற்கினுமடையுநற்பய
னிவ்வனைமுடையதென்றெடுத்துக்கூறலு
முய்வனங்காஸ்கிலாவிதனையுண்பதென்
மெய்வனம்பறபலவிதமிருப்பதே. (க0எ)

என்றறன்மகனதியின்றவன்றனை
யன்றிதைவினவலுமவனுங்கூறுவான்
துன்றுமுனிவ்வுடற்குறுகிதோற்றலாற்
சென்றருந்துவர்சுவைதெரிந்தசிரினேர். (க0அ)

மேற்செயல்விரும்பினர்விடுவர்மற்றவர்
தாற்பரியத்தினுன்மிசைவர்தன்வினை
யாற்பவமடுத்தவர்க்கெளியதாங்கொலோ
காப்பதிவ்விரதமென்றுரைத்துக்காட்டினன். (க0கூ)

மீளவும்வீடுமன்விளம்புவான்முதற்
கோளறுமகத்தியன்விதித்தகொள்கையா
லாளும்வேலரசருக்கடுக்கும்வேட்டங்கள்
வாளுறக்கொடுவிலங்கினங்கண்மாய்ப்பதே. (கக0)

அவ்வுயிர்தனைவதைத்தவனிமீமிசை
யுய்வறப்பல்லுயிரோம்பும்பான்மையாற்
செவ்வையாயினவதிற்சிலவுயிர்த்தசை
வெவ்வழல்வேலினுன்மிசையுமென்பவே. (ககக)

ஆசடையாதவர்க்கெனினுமையகேள்
பேசியமேதையைவிடுத்தபெற்றியோர்
பூசுரனுலகமும்பொருள்செயார்பல
மாசிலுந்தவறுஞர்புனிதர்மற்றவர். (ககஉ)

வேறு.

தனதுமேனியிலூன்வளர்ப்பதுசிந்தையூடுதயங்கினேர்
தனிதிரிந்தவிலங்கினுருயிர்சாடியூனுணறக்கதே
புனிதமன்றதுநெறியுமன்றுபுலான்மறுத்தவறத்தினற்
கினிதுநன்மைவிரும்பினேர்க்கருளில்லையென்பர்கடந்துளோர். (ககங)

இத்துணைப்படுதிமைதீர்முறையெங்ஙனென்னிலிதைத்தெரிந்
தெத்தினத்தின்மறுத்துளான்மிசையேனினித்தசையென்றுதா
னத்தினத்தினகன்றுபோமளருழ்ந்துதாழ்ந்தவலப்படும்
புத்தமாய்ந்தும்விடுத்திடாதவனென்னைவேறுபுணர்ப்பதே. (ககச)

தன்பிராணபயந்தெரிந்துதவித்தலோர்ந்துகருத்துடன்
பின்பிராணிவதைத்துமாந்துவர்பேதைமைச்செயல்கூறவோ
மன்பிராணியனைத்துமொன்றெனமனதிலுன்னிமறுத்திடின்
முன்பிராணிகடந்தவன்பதமிவனிருக்குமுகப்பரோ. (ககரு)

பூதராசியனைத்தையுங்கொலைபுரியமன்படர்போலவே
காதலானுயிர்நீக்கிமாற்றுகனற்கணுனிவனுகுநாள்
மாதராதலவுயிரனைத்துமுண்மாறுகொள்ளுமறுத்திவன்
சீதவாள்விழியெய்தினன்புசிறந்துநோக்குமருட்கணால். (௧௧௬)

அருளுமன்புநல்லறனுமுண்மையுமரியதிவினையச்சமுந்
தெருளுஞானமுமின்சொலுந்தகுதியுமுளார்கொலைசெய்தவூன்
மருளினானுகராதுவிட்டவர்நரகவாழ்வுவிரும்பினோ
ரிருளுறுங்கருவுறனயந்தவரிதையருந்துனருணர்வையால். (௧௧௭)

எனவுரைத்திடவறனளித்தவனிதையமுட்கிடவிவையெனக்
கினியநற்கதிபுகுகருத்தெனமனம்வலித்தபினிணையிலாய்
முனமுயிர்த்தொகைகெடவியற்றியமுனையிகழ்கணிலழிபவர்க்
கனகவெக்கதிதருமதிற்புகராறுமியற்கைகண்மொழிகென. (௧௧௮)

இவனுரைத்திடமுதுகுலக்குரவனுமிதக்கமொடிவைசொனான்
கவின்மிகுத்திடுமறைதிருத்தியகடவுளொத்தனன்முனிவனோ
ரவனியிற்றவமுறுமிடத்தினிலனுகிநற்பதமுடனுறக்
கவலையுற்றொருகிருமிபுக்கதுகடிதயற்றலைதிருகியே. (௧௧௯)

சிறுநகைத்திருமுனிகுறித்திதுதிருகியப்புறமகறல்கண்
டுறுகுறைக்கிதுமுதன்மைபற்றியவுடலெடுத்தணையிதைவிடிற்
பெறுகருத்துளதெனமதித்திலையகல்வதிற்றருபேறெனோ
நிறுவிடச்சிலமொழிகுறிக்கெனநிமலனுக்கதுபுகலுமால். (௧௨௦)

வேறு.

பாரோதியவேதபாராயணனேபலகோடியுயிர்த்தொகையெங்குமுள
நேரோடெதிர்மேவினுடற்கிறுதிநிகழ்விக்குமெனும்பெரிதச்சமுளேன்
சீரார்கழல்கண்டுநடுங்கியயற்செல்கின்றனனெவ்வுடல்சேருயிரு
மாராயினுயிற்கிடையூறுறுபோதாந்துக்கமிருப்பதருஞ்சுகமே. (௧௨௧)

என்றோதலுமாசில்பராசரனீன்றோனினியுன்னையெதிர்ந்தவுயி
ரின்றோரிடர்செய்வதிலாதவரமீந்தோமினியெய்துதியின்பமென
நின்றாய்ந்துபகர்ந்திடுமக்கிருமிநினைவவ்வணமல்லதுநேர்வதிலைப்
புன்றோலுடலாற்பெறுமாறுளதோபுகல்துக்கமலாதுயர்போகமதே. (௧௨௨)

என்னப்புகலுங்கிருமிக்குயர்வோடிவனேதுவனிச்சிறுதியவுடன்
முன்னைப்பவமுற்றியஞான்றுவினைமுடிவெய்தியதென்னைமொழிந்திடெனத்
தன்னைத்தெளிவுற்றதுகூறுமுதற்றவமற்றுளசூத்திரசாதனியான்
பன்னிக்கொலைபொய்பலபாதகமும்பயில்வேனினியாரொடுபற்றிலனே. ()

பொல்லாதனயாதுபுரிந்தவர்பாற்புகுவேனவர்நண்புபொருந்துவனூல்
கல்லாருடனேபயில்வேனறமுங்கருதேனொருவர்க்குமிதக்கமுடன்
சொல்லேனடலின்சொலருங்கடவுட்டுதியேன்மதியோடொருதூயநெறி
நில்லேன்பலபாவியரிற்குழமிநிலமீதுதிரிந்தனநீடுறவே. (௧௨௪)

அன்னைக்கினிதானவனாகியவளடிபூசனைசெய்துழலுங்கொடியேன்
பின்னைச்சிலநாளகலுற்றபினர்பெருமான்மறையோனொருபேரறிவோன்
தன்னைத்தொடர்பாலருமெய்திடலாற்றந்தேன்வழிபாடதுதக்கபடி
பின்னைத்தனியாருயிர்விட்டிவ்வுடற்பெற்றேன்யமவாதனைவிட்டபினே. (கஉரு)

அந்திக்கொருநாள்வழிபட்டதனாலடியேன்பிறவிச்செயலானவெலா
மதியிற்றெரியப்புவியிற்றிரிவேன்வாழுஞ்செயலீதெனவோதுதலும்
விதியைப்புரைவேதவியாதனுமவ்விறல்சேர்கிருமிக்கருள்செய்தபினர்
சதிரிற்செயல்யாவுமுணர்ந்தனனின்றூழ்வோடமுடிப்பதுதக்கதுவே. (கஉசு)

வேறு.

வாமுனக்கென்னைவேண்டுமாறென்னமாமுனியிவ்வுடனீங்கித்
தரைமிசைப்புனிதயாக்கைபெற்றுய்யத்தன்னளிபுரிகுவாயென்னச்
சிரமசைத்துனக்கிவ்வாக்கைதீர்ந்ததற்பின்செனனமெய்தியவுடற்கெல்லாங்
கரமுறநெல்லிக்கனியின்முற்பவங்கள்காண்கெனமாண்புடன்கழறி. (கஉஎ)

இவ்வுடலகன்றேபுலையரினுதித்தேயிறந்துசற்சூத்திரனாகி
மெய்வலிவசியனரசனாயுதித்துவேண்டியவரங்களுமகமுங்
கைவரப்புரிந்துகதியடைந்திடுவாய்படருதிகவினுறவென்றே
யுய்வணமாகப்புகன்றனன்வாதராயணநாமமொன்றுடையோன். (கஉஅ)

மாற்றமாங்கதுகேட்டப்பெருங்கிருமிமகிழ்ந்துகாற்றலையுறவணங்கி
யேற்றவென்றுயரமொருசொலாற்றவிர்த்தாயேழையேனுய்ந்தனனென்று
போற்றிடமுனிவனகன்றனனிப்பாற்புல்லுடனீக்கியோர்புலையன்
பேற்றினாலுதித்தான்முன்னையப்பவத்தினிலைதெரிபேரறிவுடனே. (கஉகூ)

தீவினையொன்றும்புரிந்திடாநன்மைதெரிந்தபண்புடையனாயியற்றி
மேவியவுடலங்கழிந்தபின்றவத்தால்விளங்குசூத்திரரகத்துதித்துப்
பாவியாகாமற்பலவறமும்பயிற்றிமுன்னறிவொடும்படர்ந்து
வாவியில்வனசப்பாசடையதனைமானநல்வசியரிற்சேர்ந்தான். (கஙo)

தேறியவறிவனக்குலவியற்கைசெய்கையாற்கொண்டதிற்கால
மாறியவறங்கள்பயிற்றியவ்வுடலைமாற்றிமன்னவரகத்துதித்தான்
கூறியமுறையாற்றனுமுறைபயின்றுகொடும்படைதாங்கியம்புவிக்கு
வீறுறமகுடம்புனைந்தரசானான்வேதியற்கன்புவிஞ்சிடவே. (கஙக)

அத்திக்கைமாமிசையில்வெண்குடைநீழற்றோள்வலையங்கணின்றொளிரப்
பதித்தமாமணியின்மகுடவாள்வீசப்பருமணிக்கவரிநின்றசையக்
கதித்தவாகினிகள்சூழ்வரமுரசுகாரொலியெனத்திசையதிர
விதிக்கருங்குணங்கள்புகழினைவிளக்கமேவினன்வியாதனாசிரமம். (கஙஉ)

தும்பிநின்றிழிந்துதுயல்வருமாரத்தொகுதிகடிசையினைவிளக்கச்
செம்பொனின்மலராற்பதமலர்க்கழகுசெய்துபன்முறைபணிந்தேத்தி
யும்பருமகிழக்கடன்முறைபூசனையுஞற்றிவாய்புதைத்தெனையாண்ட
நம்பனேநாயேன்செயலிதுபுகல்வாய்நானினிப்பிறவிசேராமை. (கஙங)

என்றவன்கேட்பமாமுனிமகிழ்வுற்றிதயநெக்குருகதன்முறையா
லொன்றியவாசிபகர்ந்தவன்றனைக்கொண்டோரிடத்திருந்திவையுரைத்தான்
மன்றலந்தாரோயினியுடலெடுத்தான்மாய்கிலாவாறுனக்குரைப்ப
னின்றுநீகோடிமனதின்மாமறைகளிசைத்திடுரகசியமிதுவே. (௧௩௪)

அந்தணர்பொருட்டாயாயினுமான்கள்பொருட்டினாலாயினுமடுபோர்
தந்திடுகளத்தினாயினுமுடலந்தணந்திடிலவன்பவந்தறித்தோ
னிந்தவாறறிந்துவேதியர்குலத்திலெழுந்துமாமுனிவரிற்சிறந்து
சந்ததமெமைப்போலியங்குதியென்றான்றவத்தினர்தொழுகழற்றலைவன். ()

உய்ந்தனனடியேனெனத்தொழுதேத்தியுறுதியையுளந்தனிற்கொண்டு
சந்திரனமுதகலையெனச்சொரியுந்தண்ணளிக்கொருவனைநீங்கி
வந்துதன்னகரிபுகுந்தபின்செருவின்மாய்ந்துமாமுனிமகவாகி
யந்தமில்கலைகடெளிதருந்தவத்தையாற்றியிந்திரற்குநண்பானான். (௧௩௬)

அவ்வியப்பேர்புனைந்தமாமுனிவனவன்பலயாகமுமியற்றி
மைவருணருக்குநிகரெனும்வாதராயணர்மலரடிவணங்கிச்
செவ்விவானவர்களர்ச்சனைபுரியுந்திறத்தனாய்நிலத்திருக்கின்றான்
தெவ்வடுகளத்தின்மாய்ந்தவர்க்கெய்துஞ்சிறப்பைநீதெளிகுதிதிறலோய். ()

கொடியபோர்பயிற்றியித்தலையிறந்தோர்குழுவினுக்கயர்வுறேலவர்கள்
படிமிசைபிறவாத்துறக்கமேபுகுந்தாரதிற்பெறுமியலிலைப்பயன்கள்
வடிசுடர்வேலோயுணருதியென்றேறவானதிதந்தவன்கூறப்
படிபுகழ்தருமன்மகிழ்ந்துமீட்டொன்றுபகர்ந்தனன்பற்றிலான்றனக்கே. ()

உலகினிற்கல்விகற்றவன்றவத்தையுஞற்றினோன்தானமீந்துடையோ
னலகில்மூன்றென்னுந்தூய்மையினதிகம்யாதுதேர்ந்தோதுதியென்ன
விலகுநான்மயித்திரேயர்முன்வியாதனிணையடிதொழுதுகேட்டதனாற்
பலர்புகழ்குரவனுரைத்தசொற்படியேபகருவன்கேண்மியாவென்றான். (௧௩௯)

விஞ்சையுந்தவமுங்கருதினோர்தம்மின்மேன்மையாந்தானமவ்வாறே
துஞ்சிடப்புகல்வனன்னதானத்தாலுய்ந்தவர்பயிற்றலாலதிமன்
விஞ்சுதானத்திலரும்பயனன்னமிருவரும்விரும்புவததுவாந்
தஞ்சமாந்தானமளிப்பவன்முதன்மைதாங்கினோனுமெனப்புகன்றான். (௧௪௦)

பரிப்பவனவனுமிருவரும்பரிக்கப்படுபவராதலாலவனை
யுரைப்பர்மேலவனென்றுரைத்திடமீட்டுமோதுவான்மாதர்செய்கருமங்
கரைத்திடவேண்டுமேதினாலடைவர்கதியெனமதிவலோன்புகல
விரைப்புதுமனத்தகைகைசாந்திலைதன்விரதமுண்டுணர்கெனவிரித்தான். ()

வேறு.

பேருவனியின்புடையின்மேவுமொருகைகை
நேருறுமடந்தைநெறிசாந்திலைமுனின்று
தாருறுபெருங்கதியடைந்தனைதவத்தாற்
சேருமுறையாதெனவவட்கவடெரிப்பாள். (௧௪௨)

மாமியொடுமாதுலனைநாடொறும்வணங்கி
நேமமுறவன்னவரிசைத்தொழினேர்ந்து
தேமிகுமருங்கடவுடென்புலர்விருந்துக்
காமுறையிசைந்ததொழிலாற்றுவனடங்கி. (௧௪௩)

சென்றுதெருவாசலதியேனொருதினத்து
நின்றுநகையேன்புனிதநீர்படிவருமற்
றன்றுபெரியோரமுதுதுய்க்கவளியேனெற்
கென்றுகருதேனெனுவமீவனளியோடும். (௧௪௪)

தன்கணவனைக்கடவுளொன்றுபலதன்மை
மன்முறைதிருத்திவழிபாடுகணிரைப்பே
னன்முறையவற்கினிமைநாடியவைதேடி
யன்பொடுசெண்மத்தடிசினல்குவனடுத்தே. (௧௪௫)

வல்லவனகன்றதினமாதிமலராடை
நல்லனநறும்படிநகற்பணிகள்சாரேன்
சொல்லுமவனெய்தினவைதுன்னமகிழ்வோடு
மில்லின்முறையாற்றுவனிழுக்கறநலத்தால். (௧௪௬)

சுரபிமுதலாகவுளபல்லுயிர்சுரக்கு
மருளுடையனாகியதினும்பசிதவிர்ப்பன்
றிருவுறமணந்தவனலங்கவொருசிறல்
வுரைசொலியறிந்திலனுவந்திடவுரைப்பேன். (௧௪௭)

அங்குவழிபாடுகளியற்றுவனலர்ந்தோர்
தங்குறைபகற்றுவனருந்தனையர்தம்பாற்
பொங்கியகலைத்தெளிவுபுக்குமுறைசெய்வ
ளிங்கிதுபுரிந்தசெயலென்றவள்குறித்தாள். (௧௪௮)

சாந்திலையுரைத்தமொழிதக்கதெனவேயப்
பூந்திருகரத்தவள்புகழ்ந்துமனைபுக்கா
ளாய்ந்திதையுரைத்தவர்களாயுவொடுசெல்வம்
வாய்ந்துகதிசேர்வரெனவீடுமன்வகுத்தான். (௧௪௯)

மீளவறன்மைந்தனவில்வானனுதினத்திற்
கோளகலவோர்முறைமைகூறுதியெனக்கென்
றுளருள்வலானைவினவக்கலையனைத்தும்
வாளுறவுணர்ந்தவன்மதித்துரைசெய்வானால். (௧௫௦)

காலையொடுமாலையுடனுச்சிகள்கருத்திற்
காலையமதானவர்களாறுமிருநான்கு
மேலையநல்லக்கரசெபங்கள்விழைவோடுஞ்
சாலுறவியற்றுமுறையேகுறைதகர்த்தல். (௧௫௧)

ஆரணனையாதியையனாதியைவிளங்கும்
பூரணனைமெய்மையொருபொய்யிலியைஞான
காரணனைவாரணமழைப்பவெதிர்காத்த
நாரணனைவாழ்த்துதிநன்றுவினிடர்தீர. (கருஉ)

நித்தனைநிராமயனைநேரிழையிடஞ்சார்
முத்தனையருட்கடலைமுக்கணனைமூவா
வித்தினைவினோதியைவிசாகனையளித்த
வத்தனைநினைத்தியுனதாசகலவேண்டில். (கருங)

நாடொறுமறிந்தறிவிலாதுநவையெய்திற்
சாடுமவர்நாமமொருகாலுரைகடந்தாற்
பீடுதருமாயுவுளதாகுமிதுபெற்றி
நாடுடையவர்க்கெனநவின்றனனறத்தோன். (கருச)

வேறு.

கேட்டவேந்தனுங்கிளக்குவானிதை
நாட்டிவின்சொலுநவிலுந்தானமுங்
காட்டிரண்டினுட்கவினுமாறெலா
நாட்டுகென்னவேநவிலலாயினான். (கருரு)

தானமாவதுதருமிடத்தவன்
ஞானமாவதெவ்வளவுநல்கினோன்
பானயந்துறும்பயனுமன்னதே
தேனியங்குசொற்றிறமைகேட்டியால். (கருசா)

சத்தெனுங்குணஞ்சார்ந்தவர்க்கலாற்
சுத்தவின்சொலாந்தூய்மைகூடுமோ
சித்தம்வேறுரைவேறுசெய்கைவே
றித்திறத்தினோர்க்கின்சொலேற்குமோ. (கருஎ)

அனையபண்பினோர்காதையாசற
வினியுரைக்குவனேந்தல்கேட்டியென்
றினையபாண்டுமுனீன்றகாளைதன்
புனிதமார்செவிபுகவழங்கினான். (கருஅ)

ஒருவன்வேதியன்வனமுலாவல்கண்
டிருகரங்கள்கொண்டெய்திப்பற்றினான்
நிருதன்றருணனென்னுநீர்மையான்
பருகிவெம்பசிப்பற்றுநீக்கவே. (கருகூ)

வடித்தெடுத்தவன்மறைகளாகமம்
பிடித்தகாலையும்பெயர்வில்சிந்தையான்
வடித்தயர்ந்திலன்சோகமெய்திலன்
நடித்தசோதிபோனகைத்திருக்கவே. (கசா0)

கண்டுதாருணன்கலங்கியையமுட்
கொண்டுசிறியோனிவனெனக்குறித்
தண்டியென்னுடலணங்கும்வண்மையு
முண்டுகண்டுநீயுரைக்கிலுய்வையே. (௧௬௧)

என்றுகூறிடவிரக்கமுற்றவ
னன்றுரைத்தனைகாமவேலிறாய்
வன்றிறற்படைவகுப்பன்கேளென
நின்றுசிந்தனைநீட்டிக்கூறினான். (௧௬௨)

தளிர்த்தலின்றிமெய்சருகினாவது
களித்திகாசியாம்பிணியின்கற்பனை
யளித்தடங்கலையங்கமுற்றவும்
வெளிர்த்தல்பாண்டவமென்பர்மேலையோர். (௧௬௩)

சுற்றத்தாருடன்கடுமைசொற்றிடற்
பற்றற்றேகுவர்பரிதவிப்பவர்க்
குற்றிடுமிஃதொருவர்வென்றுதன்
தெற்றிகூறினுமேவுநிந்தநோய். (௧௬௪)

காலநோக்கிநல்லுதவிசெய்கலா
லேலமற்றவனிசையில்வந்ததென்
றோலமாகவேயோதக்கேட்டவன்
பாலினெய்துமிப்பாண்டுகாசியே. (௧௬௫)

கற்றிலாதவர்புகழக்கற்றுளோர்
பற்றிலாதவன்பாலிலுந்தனம்
பெற்றிடாததிற்பெரிதுமாழ்குவோ
னுற்றபாங்கினுமுறுவதப்பிணி. (௧௬௬)

என்றுகூறலுமிரங்கிவிட்டனன்
குன்றுபோலுமக்கொடியதானவன்
சென்றுவைகினான்சிலமாமுனி
நின்றதின்சொலினீர்மையீதரோ. (௧௬௭)

நதியளித்தவனவின்றவாசக
மதியளித்தநன்மரபிற்பாண்டுவாம்
பதியளித்தவன்கேட்டுப்பல்சிறார்
விதியளித்தபண்பென்பர்மேலையோர். (௧௬௮)

அனையவாறெலாமறியக்கூறெனத்
தனையன்றந்தவன்றாழ்ந்துகேட்டலாற்
புனையும்வென்றியான்புகறன்மேயினான்
வினையினால்வருவிதங்கள்யாவுமே. (௧௬௯)

வேறு.

தன்றாமுதாரத்திற்றனக்குதித்தோனுந்தமனுந்தனயனின்ற
மின்றாழ்விலாதளித்தானவர்கொடுக்கிலிரண்டாவான்விளம்புமில்லாள்
வன்றாமவுதரத்தின்மற்றொருத்தற்குதித்தவன்றான்மூன்றாமைந்தன்
சென்றாங்கோர்தாய்தந்தைசிறந்தளித்தத்தந்தமைந்தன்சேருநான்கில். (கஎ௦)

தாய்தந்தைதனையகன்றுதனதிச்சைதிரிபவன்சந்ததியாவந்தால்
வாய்மைவலாயவனைந்தாவதுமகனுங்களவிலனவரைத்தன்னில்லா
டோய்வதனாற்றந்தைபெயர்த்தோற்றாதான்மனையுடையான்சுதனாவன்
காய்வுறவின்றவர்துறந்தகாலமொருவனுக்கடைந்தோனேழாங்காலே. (கஎக)

கன்னியாம்பருவத்திலொருவனுடன்கலந்தளித்தோன்கானீனன்றான
மன்னவனைப்பின்மணந்தோன்றனக்கெட்டாமைந்தனெனவறையுநூல்கள்
மின்னனைதன்னுதரத்திற்கருவுணர்ந்துமணாதேயெனினும்வேட்டோன்
பின்னுதிக்கவேட்டவனும்பிதாவொன்பதாந்தனயன்பேசுங்காலே. (கஎஉ)

இல்லவளைத்தன்கணவன்றுறந்தபினர்மற்றொருவனிடத்தில்வாழ்ந்து
வல்லசிறார்தனையுயிர்க்கிற்றுறந்தவனுக்கொருபத்தாமைந்தனுமாம்
சொல்லியதாய்தந்தைபொருள்கொண்டுவிலையாயளித்தசுதனேகொண்ட
மல்லுறுதிண்டோளான்றன்பதினொன்றாமகனெனவேவழங்குமன்றே. ()

தன்னுடைவீரியம்பிறர்பாற்சார்ந்துதித்தமகனிவன்பேர்சாற்றவாய்ந்தா
லன்னவனுந்துவாதசமாமகனாவனிதுநூலிலடைவேயென்று
மன்னியவீடுமன்றனக்குப்பணிந்துகங்கைநதிமகிமைபரிவினோடு
மென்னலமும்பெறவடியேற்கியம்புகெனவீடுமனுங்கெடுத்தான்மன்னே. ()

பகலில்லாவிரவியுங்கங்குலினில்லாமதியுமெனப்பாயுங்கங்கை
மிகலில்லாநாடந்தநாட்டினுக்குப்பொலிவழியும்விண்ணோர்தம்மிற்
பகர்பாகசாதனன்போற்பாரினதியனைத்தினுக்கும்புனிதம்பற்றி
யிகபரமூலம்பணிக்குமிறைசடையிற்பொலிந்தகங்கையென்னோசொல்வேம்.

பஞ்சபாதகங்கெடுக்குமயக்கறுக்குமிமபாசம்பற்றாதாகி
மஞ்சுறுமூவினையுமதிலிரண்டகலுமனநிலையையடையுஞ்செய்த
வஞ்சனைநோய்துரிசறுக்குந்துறக்கநகரிடைக்குடியாமல்குவிக்குஞ்
சஞ்சலந்தீர்த்திடுங்கங்கைதனிற்றுளைந்தோர்க்கினித்தூய்மைசாற்றுமாறே. ()

மகந்தானந்தவஞ்சிலமற்றைநதிக்கரைகடனின்மருவிச்செய்தோ
ருகந்துபெறும்பேறுகளிற்சதமடங்குபெறுவரவனுஞற்றினோர்கள்
செகந்தோறுமெவருணர்ந்துசிந்தைகுடிவைத்தாலுஞ்செப்பினாலு
மகந்தாங்குகங்கைநினைந்தளைந்தாலுமோர்புனற்கணகலும்பாவம். (கஎஎ)

நெடுநாணீர்துளைந்தவர்க்குநீரினுறுபல்லுயிர்க்குநியமத்தோடு
கொடிதகலக்காவடிதோட்கொண்டுசுமந்திடுபவர்க்குங்கூறலாற்றேன்
றடுமாறுமுளத்துடனேசரித்தொருவருணர்விலராயிப்பாற்சார்ந்து
படுவாயுவாற்றிவலைமெய்யினுறப்பரிசித்தோர்பவமற்றோரே. (கஎஅ)

கங்கைநீராடுதும்போயெனவுரைத்தோர்க்குளதுபயன்கால்கள்சேப்ப
விங்கிவர்களாரோனுஞ்சிறிதிடம்போயிறக்கினுமேலுலகமெய்தும்
பொங்குபயன்பெறுவரெனிற்புகலுமுறையுளவோவப்புனிதநல்குந்
தங்குபகிரதியெனவேயெடுத்துரைத்தானொருவருக்குஞ்சாற்றொணாதான். ()
அவ்வாய்மைகேட்டரியவறன்குமரன்பின்னுமுலகதனிலுள்ள
வெவ்வாசப்புனலினைத்தும்வினவினனவையனைத்தும்விளம்பக்கேட்டு
மெய்வாய்கண்செவிநாசிமேவுபொறியொருவழியேமேவவாழுங்
கைவாசத்தார்தருமனகமகிழ்ந்துவேறொன்றுகருதிச்சொன்னான். (௧௮௦)

ஆசாரமுறைத்தசருக்க முற்றிற்று.

௮௫ செய்யுள்-௫௬௬.

உமாமகேசுவரசம்வாதசருக்கம்.

ஆராவமுதாயருளாய்மருளாற்
றீராநிலையாஞ்சென்னக்கடறன்
போரம்புணையாற்கரையைப்பெறவே
நாராயணனுய்த்தருநன்மைகளே. (௧)

விரைவார்தொடையான்விறல்வீடுமனார்
புரைதீர்கருணைப்புனறேக்கியபின்
கரைசேர்நிலையேகருதிக்கவினா
லுரைசேர்பவனாயிதையோதுறுமால். (௨)

வேறு.

எடுக்கும்பவங்கடீர்ப்பதுவாயெல்லாவிருட்டுமகற்றுவதா
யடுத்ததிமைப்பாதகங்களெல்லாமதனாலகல்வதுவாய்
விடுக்கும்புலன்கள்வெல்வதுவாய்வேதவொழுக்கந்தெரிப்பதுவாய்க்
கொடுக்குங்கதியையெனுங்காதைகூறாயொன்றென்குறையறவே. (௩)

என்னப்புகலுமுதிட்டிரனுக்கிதனைப்புகல்வானதியளித்தோன்
முன்னைத்துவரைநகராளுமுகில்வண்ணனுக்குநாரதனு
முன்னற்கரியமுனியுரைத்தானவனாலியானுமுணர்ந்துள்ளேன்
றன்னிற்பெரிதொன்றில்லாதசாரமியங்குமிதிகாசம். (௪)

நீலத்திருமாலுருக்குமணிநிழலிற்றொடரவோர்வரைப்பாங்
கேலத்தவஞ்செய்தனன்வருடமீராறுசிதமெனுமிடத்திற்
சாலத்தனையர்தனையுதவுந்தருக்காலவனைக்காணுமுறை
ஞாலத்துள்ளமுனிவர்கணங்ளிவணைந்தார்நலமேற. (௫)

வேட்கைபெறவந்தவர்கலைதேர்வீணைமுனியைமுதலானோர்
பூட்கைமதமாவனையானைப்புடையில்வளைந்துசூழ்ந்திருப்ப
வாட்கண்மடமானருகிருப்பமாயனணியாதனமிருந்தான்
றாட்கலாதங்கவன்வாயிற்சார்ந்ததனலந்தங்காதே. (௬)

அந்தவடவைநிகர்செழுந்தீவானினடைந்துமீண்டெய்தி
நந்தன்மனையில்வளர்ந்தபிரானளினவாயின்வழியடைய
வந்தன்முனிவரற்புதராயதனைவினவமுகுந்தனவர்க்
கிந்தவுரையையெடுத்துரைத்தானேமத்தோள்கள்புளகெழவே. (௭)

அருவிபுரளுந்தடங்கிரிப்பாலணித்தாயசுரனொருவனவண்
மருவிப்பலநல்லுயிரழித்துவானோர்க்கதிகஞ்செய்திருந்தான்
வெருவிற்றவனுலுயிரனைத்துமவனைவீட்டும்பொருட்டாக
வருவித்தென்வாய்வழியனலைமாய்த்ததவனைப்பொடியாக. (௮)

மீண்டுபிரமனுலகடையவிதாதாமன்மதனையெதிரிற்
றாண்டியெனக்குமகனாகத்தோற்றஞ்செய்யப்பணித்திட்டான்
மாண்டகனலுமெனக்குதிக்குமகவாங்கனலுமொன்றாகி
யீண்டுவரக்கண்டேகொண்டேனிதுவாநிகழ்பென்றெடுத்துரைத்தான். (௯)

வாசக்கமலத்தயனனையார்மலிந்தற்புதத்தினீர்மையராய்
பேசற்கரியபெருமானேயுனையாருணரும்பெற்றியரென்
றேசைத்திருமாறனைப்புகழவுலகோரடியாலளந்தபிரா
னேசத்துடனேசிறுநகையோடிதனைமீளநிகழ்த்தினனே. (௰)

எடுத்தபலத்திற்பலவசுரற்கிடர்செய்குற்றமெனையணுகா
தடுத்துநீங்கும்படியாய்நம்மருளாற்புனிதவிதிகாச
மிடுக்கணகலச்செவிப்புலன்பட்டிடநீருரைமினெனக்கேட்ப
மடுக்குந்தவநல்லமுதுண்டோர்மாயன்றனக்குப்புகன்றிடுவார். (௧௧)

தேவேதேவர்பெருவாழ்வேசெகங்களனைத்துமுளநாக்குங்
கோவேயெமக்குமுணராதவொளியேநின்னைக்குறித்துணர்ந்து
நாவேதமும்புபெறத்துதிப்போர்க்கன்றிநவிலற்கரியோனே
காவேநீயின்றுணராதகதையாமுளமோகழறுதற்கே. (௧௨)

என்னக்கூறச்சிறுநகைசெய்திசைப்பான்றிருமாலிவ்வுலகின்
மன்னற்குலத்திலுதித்துமடமனிதராக்கைபெறுதலினாற்
பன்னற்குரித்தாமெமக்கும்பாற்கேட்கும்பயனேபயனென்ன
முன்னித்தூயோர்நாரதனைமொழியப்பணித்தார்முனிவரெலாம். (௧௩)

வீணைமுனிவரம்முனிவரருள்கொண்டாங்குவிளங்குமணிப்
பூணைவிளக்குந்திருமேனிப்புனிதன்மலர்வாண்முகநோக்கி
வாணிகேள்வன்வந்துதித்தவனசவிலஞ்சிப்பெருமானே
காணவுரைப்பனோர்காதைகண்டுகேட்டபடிகேண்மோ. (௧௪)

கங்கைமுதலாம்பலகோடிதீர்த்தமாடக்காசினிக
ளெங்குந்திரிந்துகயிலைமலைச்சார்பினடியேனெய்துதலு
மங்கோர்பொதும்பர்பலகோடியலர்ப்பூந்தருக்கள்வானளவிக்
கொங்கைவீசத்தேன்மாரிபிலிற்றுந்தென்றற்குளிர்ந்தசையும். (௧௫)

மயில்களகவக்கிளிகள்சதுர்மறைகள்பயிலச்சுரங்களெலாங்
குயில்கள்பயிலப்பலகோடிகுலஞ்சஞ்சரிகக்குலமொலிப்ப
வியனுந்தடந்தோறரவிந்தவேமவிதழ்கள்விகசித்து
முயனுங்கருந்தேன்கனையமைப்பமுகில்கண்டுஞ்சும்பழுவமதே. (௧௬)

அரியபழுவந்தனக்கிடையினமர்கூவிளமொன்றுயர்வானந்
தெரியுமளவுமளவிட்டதிருமாலென்னச்சிறந்தோங்கு
முரியவந்தத்தருநீழலுனுற்றுந்தவளவேதிகைமேற்
கரியகளத்தனுதனமேற்கலந்தாண்டிருந்தான்கௌரியொடும். (௧௭)

கணநாயகரிற்சிலர்தூயகவரியசைப்பவோர்கவிகை
யுணர்வான்மிகுந்தோர்நிழற்றவயனுவோர்பலர்கட்டியமியம்பத்
துணைவாவடியார்தொழுதேத்தித்தண்மாமலர்கண்மழைபொழிய
புணரியலைமேருவைவளைத்தபொற்பினமரர்புடைசூழ. (௧௮)

இயக்கர்சித்தர்கின்னரர்சாத்தியர்விஞ்சையர்களிசையெடுப்ப
மயக்கிலெண்ணில்சதகோடிமறைமாமுனிவர்வந்திறைஞ்சிப்
பயக்கும்பரமானந்தத்திற்படரச்சிலர்நற்கந்தருவர்,
நியக்கமகலவேழிசைத்தேன்வீணைவழியாற்செவிமடுப்ப. (௧௯)

நாறுங்கொன்றைமாமலருநதியுமதியுமடுத்தசடை
வீறுபொலியவாடரவின்விளங்குபுரிநூலணியிலங்க
நீறுமேனிதனைத்தவளநிறமாச்செய்யவுகிருமூவை
யூறுபடுதோலுடைவிளங்கவொருதாண்முயன்மேலுறமாதோ. (௨0)

மற்றோர்பாதங்கவானின்மிசைமருவமுகங்களோரைந்தும்
பெற்றிவிளங்கநுதலோறும்பிறழுமூன்றுவிழியிலங்கச்
சுற்றுமெண்டோள்களின்மானுமழுவுஞ்சூலகபாலமுடன்
பற்றுந்துடியுமனவரதமபையமென்னும்பயன்விளக்க. (௨௧)

சிறியநகைகள்செம்பவளவாய்மீதூரச்செழுங்காதி
னிறையுமகரகுண்டலங்கடிகந்தமளவுங்கதிர்நீட்டக்
கறையினிலங்குமெழுநீலகண்டமதியிற்களங்கமென
வறையவிளங்கவுத்தரியமசையத்தோண்மேல்விரைப்பெய்த. (௨௨)

கொங்கைசுமந்தேயிடையஞ்சுங்கொம்புபச்சைக்கொடிமூவா
நங்கையிரேழுலகின்றநாதத்தொளியாமணிவிளக்குப்
பங்கேருகமாமலரடியார்பவநோய்க்கரியமருந்திருந்தா
ளெங்கோமான்றனிடப்புறத்திலிரவிபருகின்மதியேபோல். (௨௩)

அந்தவமையமுன்றவத்தாலடியேன்றனக்குவாய்த்ததனால்
வந்துபிரான்பேரோலக்கம்வணங்கிபெழுந்துவாய்புதைத்துச்
சிந்தைக்களிப்பாக்குழறச்சேர்ந்துநிருந்தாள்சிரஞ்சேர்த்துச்
சந்தையொலித்துப்புகழ்ந்தேத்தத்தன்மேலருள்செய்தனன்பரிந்தே. (௨௪)

ஞானமுனிவர்பலரோடுநானுமிருந்தேபேரின்ப
மானவளக்கரிடைமூழ்கியயருமிடையினெனதன்னை
வானவுருவத்தொருமுதலாம்வரனைநோக்கியரக்காம்பற்
றேனையுதவிற்றெனப்புகன்றுளுலகிற்றிமைசிதைவுறவே. (உரு)

சாற்றற்கரியபல்லுயிர்கடங்தாரெவரேதந்தவுயிர்
போற்றற்குரியாரெவரேமீண்டழிக்கும்வலியார்புடையுளதே
தோற்றக்கதிரோன்மதியனலாஞ்சுடர்களுலகினுறமலென்னே
தேற்றப்படயான்மொழிந்தருளிசெய்வாயெனலுஞ்சிவனுரைப்பான். (உசு)

கேளாய்பரையேபலகோடியண்டங்கிளர்த்திக்கேடின்றி
நாளாய்க்கோளாய்ப்பலபொழுதாய்நவினுன்மறையாயாகமமாய்
மீளாருயிரின்பலபேதநிரைப்பாயமைத்தின்னிலைதோறு
மாளாமவர்பானீங்காதோன்யானேயிவைநீயறியாயோ. (உஎ)

எங்குந்தானாய்நிராமயமாயேகமாகிப்பழம்பொருளா
யங்கம்பிரமாண்டத்தெல்லையடங்காவாகியமைவின்றிச்
சங்கற்பங்கள்விகற்பங்கடவிர்ந்தசுடராய்த்தனிவெளிமீப்
பொங்குபரமானந்தவெள்ளப்புனல்யானெனவரேபுலப்பட்டோர். (உஅ)

மீண்டுமாடல்காரணமாய்வெறும்பாழ்வெளியிலோருருவந்
தூண்டுதாங்கப்புற்புதம்போற்றோன்றினின்றேனவ்வுருவி
னீண்டுமூவர்வந்துதித்தாரிவராலுலகமெய்திவளர்ந்
தாண்டுகழியுமெனதாடலாமென்றுணர்வாயகிலமெலாம். (உகூ)

நேருமெனதுநிட்களமாமுருவேபிரமநிச்சயமாஞ்
சாருஞ்சனகமிவ்வுடலாந்தந்தமூவர்முத்தொழிற்கும்
யேரும்வலியுஞ்செயன்முறையும்பெருக்கிப்பிரபஞ்சகடத்துவர்யான்
சேருமிடம்யாதினுமெவர்தந்திறத்துமிருந்துசெலுத்துவிப்பன். (௩0)

உச்சக்கதிரோன்மதியனலென்றோதுவிழிகள்சுவாதமதாம்
வைச்சவுலவைவிலம்பாதவரைப்பாமண்டகடாகமென
திச்சைவதனமிடையுடலமெல்லாவுலகுமிறைவசனம்
பச்சைக்கொடிநீயுணர்தியெனப்பணித்தானினைத்தோர்க்கணித்தானேன். ()

என்னாலுதித்தோனுருத்திரன்மாவிலஞ்சியுதித்தோன்சரோருகனுந்
தன்னாலுதித்துயிர்க்குலங்கடனிகாப்பவனத்திருமாலா
மின்னேயழிப்போனுருத்திரனும்வெறுத்தோர்பிறவியினைப்பாற
மன்னுவுருவம்யானெடுத்தவாறென்றுணர்திமறுவில்லாய். (௩உ)

எனக்குட்டிருமால்யானவனுளிருப்பதுணராரெமைவேறு
மனத்திற்கொண்டுசிலர்பயில்வர்மலைவருபர்வுதாழ்வுரைத்தே
தனக்குட்டானேமெய்யுணர்ந்தோரொன்றென்றுருகுந்தவமுடையோர்
புனித்ததெய்வமுனிவரர்களிவர்காணுலகிற்பொருவற்றோர். (௩௩)

என்றுபெருமானெடுத்தியம்பவெழில்சேர்பவானிகரமுகிழ்த்துக்
குன்றுபுரையெண்டோளானைக்குறித்துநோக்கிச்சுடர்மூன்று
மின்றுன்விழியாமெனிற்புதைத்தாலிலையோவொளிகாண்குதுமென்ன
வன்றுகாந்தட்டாநீட்டியமலன்விழிகள்புதைத்தாளே. (௩௪)
கருநியிரண்டுவிழிபொருளக்கரத்தான்மறைத்தகாலையினிற்
பரிதியுடனேமதிமறைந்துபதினாலுலகுமிருண்மேய்ந்து
சுருதிநியமம்வழிபாடுதோற்றமொடுக்கந்தலைமயங்கி
யிருதினளவைகாலங்கடெரியாதிமையோரிடருற்றார். (௩௫)
கண்டுபெருமானுலகியற்கைகவலாவண்ணநுதனுட்டம்
விண்டுவிழித்தானிருள்கிழித்துவிளங்காநிற்கும்பேரொளியுட்
கொண்டுநடுங்கிப்புதைத்தகரங்குவித்துநீக்கியுமைவணங்கி
யண்டர்பெருமான்பிழைசெய்தேன்பொறைசெய்தாள்வாயெனையென்றுள். ()

வேறு.

அஞ்சாதுகேண்மங்கையிருகண்புதைத்தாயதற்காற்றலார்
பஞ்சானதெழுவாயுவசமுற்றதெனநொந்துபலவானவர்
நஞ்சார்பினுளநாமம்நவிலக்கனற்கண்ணைநனிநீக்கினே
னஞ்சாரவ்வொளியாலவ்விருள்சாயவுயிர்யாவுமுரவோருமே. (௩௭)
விழிபொத்துகைதாழவிதுவேவோடுகதிர்கண்டுவெருவற்றபின்
பழியற்றநுதனுட்டமீளப்புதைத்தேன்பரிந்தென்னனு
மழிவற்றதனிஞானமடமங்கைநினைமுற்றுமறிவாரெவ
ரிழிவுற்றதென்சிந்தையெனவோதிமற்றுன்றிசைத்தாளரோ. (௩௮)
சிரமொன்றுகலைநல்குதிறமன்றிபொருணூலுசிரமீளவும்
வரவென்னகருமங்குறிப்பாயெனக்கென்னமாதேவனுஞ்
சரமன்னுவிழியாடன்முகமன்புடன்பார்வைதக்கோதினன்
வரமன்னுமுனிவோர்களடியார்கடுயர்தீர்ந்துவாழ்வெய்தவே. (௩௯)
வலிவிஞ்சுதிறலாளர்வயம்விஞ்சுநிருதேசர்வரமெய்தியே
நலிவிஞ்சுசுந்தோபசுந்தாளெழுந்தெங்குநலிவாக்குநாள்
மலியும்பரயனேடுபுகலச்சினத்தன்னவரைமாய்க்கவே
யிலவன்னவிதழாளைவருமாறுசெய்தானினைந்தெண்ணியே. (௪௦)
நிலமன்னவடிவங்களரமாதரிடைகொண்டுதிசைமாமுகன்
நலமன்னுமடமாதைவருவித்தனன்வந்தமடநங்கையோ
டிலகுஞ்சதானந்தனெனைவந்துபரவித்தன்னியல்கூறினன்
மலரன்னமுகமாதுமெனையன்பின்வலமாகவந்தாளரோ. (௪௧)

வேறு.

வனப்பினுன்மிகுந்தகோதைவலம்வரவவளைநோக்கு
மனத்தினுற்றிசைகடோறும்வதனமண்டலமுண்டாக்கி
யனத்தினையனையாய்கண்ணுலருந்தினன்வனப்பையன்றே
இனத்தினின்றளவுமைந்தாயிருந்ததென்முகங்கண்மாதோ. (௪௨)

என்றனனமலன்பீட்டுமேந்திழைபுகல்வாளைய
துன்றுநின்கண்டத்தூடுகறையென்னோதோன்றலென்ன
வன்றிதுகேளாய்முன்னரிமையவரசுரரோடு
மொன்றிவான்கடல்கடைந்தாருண்பதற்கமுதுண்டாக. (சங)

விரும்பியவமுதெய்தாமுன்விடமெழுந்துலகமேழுஞ்
சுருங்கிடக்கனலைத்தூற்றிமேவலாற்றொழுதுபோற்றி
வருந்துதல்கண்டுபொல்லாவல்விடந்தன்னையேந்தி
யருந்தியிக்களத்திலுய்த்தேனதனைவேறிடங்கிட்டாமல். (சச)

முனிவரர்பலருந்தேவர்யாவருமுதன்மைபெற்றுக்
கனியிதழென்னைநீலகண்டனென்றுரைத்தார்நாம
மினியுனக்கின்னமையமிசைத்தியானியம்பவென்னத்
தனியுலகின்றவல்லிமீளவுஞ்சாற்றலுற்றாள். (சரு)

கருணைவாரிதியாய்மல்குங்கண்ணுதலுனதுசெங்கைத்
தருணைநற்றலத்தினேந்தும்பினாகம்வந்ததுகூறென்ன
வருணமேன்மையினான்கண்ணுவனெனுமுனிவன்முன்னாட்
பருணிதர்புகழப்பாசம்பற்றறத்தவம்பயின்றான். (சசு)

அன்னவன்மேனியுட்கொண்டாங்குவன்மீகமூடி
மன்னியாங்கதனின்மீதோர்வரையெழுந்துயர்வானோங்கித்
துன்னிவாழ்ந்திருக்குநாளிற்றொல்லைநான்முகன்வந்தெய்தி
யன்னதைத்துணித்துவன்மீகத்தையுந்தொலைத்துநீக்கி. (சஎ)

அகழ்ந்தவனியன்மாட்டுற்றவந்தணற்கருளளித்துப்
புகழ்ந்தபின்பந்தவேணுப்பொருசிலைமூன்றதாக்கி
சுகந்தநற்கமலத்தோன்றற்றுளவினோன்யானுமெய்த
சகந்துகளறவளித்தான்றனுவிரண்டினைநற்சார்பில். (சஅ)

கொழுந்தினற்சார்புதான்கைக்கொண்டனனென்கைசாப
மழுந்துபினாகஞ்சார்ங்கமரிகரத்திருப்பதாமாற்
றெழுந்தகையிமையோரஞ்சித்துயருறுங்காலமெய்தி
னெழுந்துதானவரைவாட்டியிடர்தவிர்த்திடுவன்மாதோ. (சகூ)

தீயவர்பலரைச்சாடுந்திறந்திருமாலுக்குண்டா
மாயவன்றன்னான்மாயாதவரையானழிப்பதாமா
லேயவப்பினாகம்வந்தவியல்பிதாமென்னக்கூறத்
தூயவம்பிகைதுதித்துமீளவுஞ்சொல்லலுற்றாள். (ருo)

இரதங்கள்விமானயானமிபம்பரிபலவுமேறாய்
விரதமாமிடபமேறவியப்பென்னையுரைத்தியென்னச்
சரதமார்தருமமிந்தவிடபமாமதனாற்சார்ந்தேன்
வரதநன்முகத்தாயானின்வலியவோவொழிந்தவெல்லாம். (ருக)

அன்னதூய்மையினான்மிக்கவானேறுவந்தவாறு
பன்னுவன்கேட்டிமுன்னாட்பருப்பதவிறைவன்பாங்கர்த்
துன்னியிவ்வுலகமெல்லாஞ்சுகம்பெறத்தியானத்துற்றேன்
மன்னியாங்கிடபமொன்றென்பாங்கரின்மருவிற்றன்றே. (௫௨)

தினந்தினமெய்தித்தன்பொற்செவிகளாற்கோட்டால்வாயா
லனந்தரவாலான்மேனியாலெலாந்தொடுவதோர்ந்தே
மனந்தனிலன்புகூரமுனிவுபோன்மறுக்கங்காட்ட
வினந்தருபிரமனாதியிமையவரெவரும்வந்தார். (௫௩)

வந்தெனைவணங்கிவாழ்த்திமறுவிலாயுனக்குநாளு
நந்தியர்ச்சனைசெய்யாற்றானிதன்பிசைநன்புதாங்கி
யுந்தனூர்தியுமானேறேயுயர்விலோதனமுமாகச்
சந்ததங்கொள்வாயென்றாரம்முறைதரித்தேன்மாகோ. (௫௪)

பாலொத்தமொழியாண்மீண்டும்பரமனிபுனிதமான
ஞாலத்திலிருந்திடாமலத்திரோனரம்புமீரா
சாலத்தோய்மயானத்தூடுசார்வதேன்புகல்வாயென்னக்
காலத்தீவிழியான்மீட்டுங்கருணையோடுரைக்கலுற்றான். (௫௫)

முத்தியைவிரும்பினோர்கண்முன்வினையனைத்துந்தீய்க்கு
மத்தடஞ்சிந்தைதோறுமிடமெனக்காதலாலே
வித்தகமாதேவின்னோர்யாவருமேலையோரும்
பத்தியான்மயானவாசியென்பரிப்பான்மையன்றி. (௫௬)

விரைசரோருகத்தனோர்காள்விரிந்தபல்லுயிர்களெல்லாங்
கரையறமுடிக்கும்பூதகணங்களைக்கண்டேயஞ்சி
நிரைபடுகருணைமேனிநிமலனேபுறத்தினூடுந்
தரைபடுமயானத்தூடுஞ்சரித்தெமையளிப்பாயென்றான். (௫௭)

அவ்வரமவனுக்கீந்தேயகிலத்துமயானத்தூடுஞ்
செவ்வியினிருப்பனென்னைத்தெளிந்தவர்புனிதமாவ
தவ்விடமென்பர்தேறாரசுசியென்றகல்வாரென்றான்
கொவ்வைவாயணங்குமீளக்குறித்தொன்றுபுகலலுற்றாள். (௫௮)

நீறுபூசவதேன்வல்லபாணமேநெடியசூலங்
கூறுகைத்தலத்தேனிந்தக்கோளராப்பணியேன்மற்று
சிறுபேரொளியாங்கோலந்திகழ்வதேனிதனையெல்லா
மாறுசேர்சடையாய்நாயேனறிந்திடப்புகல்வாயென்றாள். (௫௯)

பருப்பதவரசன்பாவாய்கேட்டிநீயுயிர்பற்றெல்லா
மொருப்படநீறுசெய்தேயொருவனாயுலவுகாலம்
விரிப்புறத்தரிப்பனந்தவிபூதியையதனான்மீளக்
கருப்பயினுயிர்கண்மீண்டுமுளதாகுங்காறுமாறே. (௬௦)

அத்தியுமரவுமெய்யிலியாவருமணியார்யானே
பத்தியினணிவேனெனைப்பணியெலாமணியாருண்டோ
முத்தணிமுலையாயாவர்சுருக்கத்தான்முதன்மையன்றிப்
பித்தராயிழிந்தோர்காண்டிபெருமிதமதுவேயென்றான். (௬௧)

மூவருமொன்றேயென்னுமுறையினைத்தெரித்தல்வேண்டித்
தேவருமுணராமுன்றுசிரமுடைச்சூலங்கொண்டேன்
மேவருமனலமேனிவிளக்குவன்கேட்டியென்றான்
றூவருபரமானந்தச்சலதியாபொளிருந்தாளான். (௬௨)

சிதமுட்டணங்களென்னுமிருவகைத்திறத்தவாகும்
பூதலமனைத்துமின்றேற்புலப்படாதுயிர்கட்கன்றே
வாதலிற்சிதம்விண்டுபாலளித்தனல்யானுமேனன்
மேதினிக்கிளநிலாவும்வெயிலுமொத்துயிர்களுய்ய. (௬௩)

ஆரணங்கனையாயின்னுமையங்களுள்ளவெல்லாங்
காரணமுணரக்கேண்மோகமறுவனென்றுகூறப்
பூரணமதிமுகத்தாள்புணர்முலைபுளகமோங்க
நீரணிசடையினானுக்கிவ்வுரைநிகழ்த்தலுற்றாள். (௬௪)

அயனுணராதசென்னியதன்மிசைகலையொன்றாய
வியனுடைமதியைவைத்ததென்னையோபுகல்வாயென்ன
மயனுடைத்தக்கனிட்டசாபத்தாற்கலைகண்மாய்ந்து
பயனுடைநிலவினோனென்பதயுகமலர்கள்பூண்டான். (௬௫)

ஒருகலையுடனேவந்தென்னுயர்பதமடையலாலே
தருமவன்சாபமெய்தாத்தன்மையாற்சடைமேல்வைத்தேன்
றுருமதிக்கிட்டசாபக்கொடுங்கனல்குளிர்ந்ததிப்பான்
பெருகிடக்குறையச்செய்தேன்பெற்றிகடவறிலாமல். (௬௬)

பிள்ளைவெண்பிறையிங்குள்ளபெற்றியாற்கலைகண்மல்கி
யுள்ளவெந்துயரநீத்தானொளிதிகழ்சோமனென்னை
முள்ளரைமுளரிப்புத்தேண்முதலினோரிந்துமேவுந்
தெள்ளிமைகண்டேயிந்துசேகரனென்பர்மாதோ. (௬௭)

ஈதுமுன்னிகழ்ந்தபான்மையெனவுரைத்தணங்கேநின்பா
லாதரமுள்ளவாற்றாலறைந்தனனியாவுமென்ன
மூதுணர்முனிவராருமுகமலர்ந்துவகைபொங்கிப்
பாதபங்கயங்கள்சென்னிபடத்தொழுதனர்கள்பல்கால். (௬௮)

கரையுணர்வரியவின்பக்கடல்படிந்திருக்கினாலே
வரைமகள்கொழுநன்பாதமலர்பலவிதத்தாலேற்றி
நிரைநிரைவிழிகளாலிசொரிந்திடநின்றுமீளப்
பரையெனும்பச்சைவல்லிக்கொடியினைப்பார்வைசெய்தார். (௬௯)

நேசமாமுனிவர்கொண்டநினைவினையுணர்ந்தேனன்னை
யிசைவணங்கிக்கேட்குமிடனிதாமென்றுகொண்டு
பாசமாம்வினைவிட்டோர்கள்பற்றியபற்றேநாயேன்
பேசமாறின்னுமுண்டுபேரருள்செய்வாயென்றாள். (எ0)

மாரதமனையமேனிவானுதல்வாய்மைகேட்டு
வரதனுமுளரியேய்க்கும்வாணகைமுகத்தனுகிக்
காதலமன்புளார்க்குக்கனிந்தருள்சுரக்குங்கண்ணாய்
விரிவுறவுரைப்பன்கேட்டிவேண்டியமுறைகளென்றான். (எக)

மிளிர்சடைமுடித்தகோமான்விளம்பலுமுலகமுய்யத்
தளிர்புரைகாத்தாள்கேட்டசங்கைகள்பலவுண்டாமாற்
குளிர்கடல்புரைந்தமேனிக்கொண்டலேபுகல்வனென்றான்
றெளிவுடைவீணைவல்லநாரதன்சிறப்பின்மாதோ. (எஉ)

கருமுகில்வண்ணனத்தவாறெலாங்கருத்தினுய்த்தே
திருமுனிமுகத்தைநோக்கிச்செவிக்கமுதுகுத்தாயின்னும்
பெருமிதமுடையவல்லிவினவிடப்பெருமான்சொற்ற
வருளுடைச்சரிதமெல்லாமறைகெனவறையலானான். (எங)

வினையபூர்வத்தாலன்னைவிமலனைநோக்கிநீட்டு
மினையபூவுலகினெல்லாவுயிருமொன்றெனக்கொளாமற்
றனையரினுயர்வுதாழ்வுசாற்றுநால்வருணமேனோ
புனையுமங்கவர்க்குவேதவொழுக்கென்னேபுகல்வையென்றாள். (எச)

ஆண்டகையுரைப்பான்றிமையுயர்ந்தவருயிரினுவார்
மாண்டகுவினையிரண்டுமன்னினோர்மனிதராவார்
பூண்டநல்வினைமிகுந்தோர்புங்கவர்குலத்தினுவார்
நீண்டவாள்விழியாயின்னுநிலத்தியல்பகர்வன்கேண்மோ. (எரு)

மனிதர்நால்வருணமானவாறுதம்வினைகட்டிடாப்
புனிதவேதியன்றன்பாதந்துடைமார்புமுகத்திற்போற்ற
வினிதுடனுதித்தாரன்னாரிடத்தினல்வருணமெய்திற்
றனைகேளிழிந்தோர்பாதத்தானனத்துயர்ந்தோராகி. (எசு)

வேறு.

உலகின்முன்றருங்குலமுய்யவாருயிர்ப்
பலவுமீடேறவானவர்கள்பண்புற
விலகுமாமறையொலித்திசைக்குநல்லற
மலிதரவுதித்தவர்மறைவலாளரே. (எஎ)

தானமுமோமமுந்தவமுஞ்சுத்தியு
ஞானமுஞ்சாந்தமுநல்லொழுக்கமு
மானமுங்கல்வியுமறைபயிற்சியு
மூனமில்வேதியர்க்கொழுக்கமாவதே. (எஅ)

வேள்வியும்வேள்விசெய்வித்தன்மாமறை
தாழ்வறப்பயிற்றிவித்திடலுந்தந்தவர்
வாழ்வுறக்கோடலும்வாய்மைநாட்டலு
மூழ்கிரதிதியர்க்குவந்தர்ச்சித்தலும். (௭௯)

தென்புலத்தவர்கடன்றீர்த்தலுந்தன
தன்புடனருக்கியமிரவிக்காக்கலு
மின்புரைதுணைநலம்விரும்பிமேவலு
மின்பமோடிருபொழுதிசைவிற்றுய்த்தலும். (அ௦)

பொறையினைவளர்த்தலுமறங்கள்போற்றலு
மிறைவரர்ச்சனைகளுநியமமீட்டலுங்
குறைவருகருணையுங்குடிவைத்தோர்களா
மறைமுதற்குலத்தினோர்மாண்புமிக்குளாய். (அக)

கோபமுமாசையுங்கோறலாற்றலும்
பாபமுமயக்கமும்படிறுரைத்தலுந்
தாபமுஞ்செருக்குமேற்றங்கவைகினோர்
தீபமேசூத்திரர்திறத்தினுவரே. (அ௨)

உடைப்புவிக்கறமெலாமுளுற்றும்வண்ணமாப்
படைத்தனன்பிரமனப்பான்மைபொய்த்தவர்
கடைத்தொழிலியற்றினோர்கடையரன்னமுன்
டிடற்படுகருத்தினோர்க்கில்லைவான்கதி. (அ௩)

நெறியுளரென்னினுநிலையன்றென்னினு
முறைதெரியோர்முனியாரவர்க்கெதி
றறைபடுமவர்பொருள்கொள்கலாரவ
ருறைவதுநரகமென்றுன்னியேனையோர். (அ௪)

தாமரைமுகத்தினுயின்னதன்மையோர்
மாமறைக்குலமுதல்வருணத்தோர்களா
மேமுறுமாசாதவியற்கைகூறுவன்
காமுறக்கேளெனக்கழறன்மேயினுன். (அ௫)

வேறு.

தொழுகுலத்தவர்சொற்படிகருமங்கடொடுத்தல்
வழுவறச்சதுர்வேதியர்மானெறிகாத்தல்
விழுமியர்க்குபகாரமுமேன்மையும்விளைத்தல்
பழுதிலாமறையுணருதல்வேள்விகள்பயிறல். (அ௬)

தானமீகுதருட்டரைத்தண்டனைபுரிதன்
மானமூக்கமுஞ்சால்புநற்கல்வியும்வரித்த
லீனமற்றவனியில்வளனுறிலொன்றெடுத்த
லூனமற்றதன்னடிபர்பாலோகையோடுறுதல். (அ௭)

பகைகட்பாகியபாங்கரிற்றருநிபாராட்டல்
வகைகொள்சுற்றமும்வாகினியளவையும்வளர்த்தன்
மிகையினுலெதிர்ந்தவருடனமர்செய்துவிலக்க
னகைசெய்மாமுடிநரபதிதருமமாகங்காய். (அஅ)

வணிகரென்பவர்வான்பொருளீட்டுதல்வந்தோர்
தணியுமாறுநற்கருமங்கட்குதவுதறனங்கண்
மணிகொளான்குலம்புரத்தனல்லுழுதொழில்வகுத்தல்
பணவராவகலல்குலாயநிதியைப்பரித்தல். (அகூ)

இனையபான்மைகட்குரியவிருக்குமாமகங்கள்
புனைதலுந்தொழிலாகுநற்கந்தங்கள்புவிமேற்
சுனையுமெள்ளுடனிரதங்கடுகளுறுங்கொண்டு
வினையின்விற்றிடினென்றுளங்கோடிநீவிமலை. (கூ0)

கடைக்குலத்தவர்பான்மைகேள்கருதுமூவர்க்கு
மடைத்தநற்றொழிலிவர்புரிதற்குரித்தன்றாற்
றிடத்தினன்னவர்செப்பியதொழிலெலாம்புரித
லிடத்தினீங்கிவர்கருமமாவென்றுதிநலைவி. (கூக)

வேதவேதியரிடத்திலும்வேந்தர்களிடத்தும்
நீதிவாணிகரிடத்திலுநிகழ்பலதொழிலும்
போதமற்றிவர்போற்றினன்றேற்புலப்படாதா
லோதுமத்தொழிலேவலாலுஞற்றுதலுரித்தே. (கூஉ)

எந்தவான்றொழிலியற்றிலுமிதக்கநீங்கிலரா
யுந்துசத்தியமறம்வழுவார்களாயொருவர்
சிந்தைகோதகச்செய்கலராய்ப்பரதார
முந்துகற்றனம்விருப்பிலராகுதன்முதன்மை. (கூங)

இந்தவண்ணநீத்தொழுகினரிடுக்கணிற்றுளேந்தோ
ரந்தவண்ணமேபயில்பவர்நாடொறுமதிகம்
வந்துவானவராமவர்வருணநான்குரைத்தோங்
கந்தமாமலர்க்குழலினுய்கழறுதுங்கேண்மோ. (கூச)

ஞாலமீதினிலாசிரமங்களோர்நான்காஞ்
சிலமாயதைத்தெரிக்குதுந்தேசிகனருகிற்
சாலவேதொழிலாற்றுதலருமறையுணர்த
லேலவேகனற்கருமமேற்றுண்ணுதலின்னும். (கூரு)

வரமதாமெனச்சிதேந்திரியத்தனுய்மருவ
லூரமுறுங்கலைகற்றவையுறுகளத்துறுத்தல்
பிரமசாரியமென்னுமாசிரமதாம்பேசிற்
றரமதன்றுகேளில்லறஞ்சாற்றுவன்மாதோ. (கூசா)

எனையோர்க்கெலாமேற்பவைக்கிடர்களைபவனும்
வானிலோர்க்குந்தென்புலத்தர்க்குமகிழ்வுசெய்பவனு
மானவேதியன்சிருட்டியைமல்குவிப்பவனுந்
தானமோங்கிடுமில்லறந்தழுவினோன்மாதோ. (௯௭)

சரதமாருள்வளரறஞ்சவுசநற்கடன்கள்
விரதமாகவேபூண்டைந்துவேள்வியுமியற்றிப்
பரதனம்பரதாரங்கள்விழைவிலான்பயிற
விரதவின்சொலாயில்லறமியற்றுவோனியல்பு. (௯௮)

காடுசேர்ந்தொளிர்காவியுஞ்சடையுநற்கனலைப்
பீடுறும்படிவழிபடுமியற்கையும்பெற்று
நீடுகந்தமூலங்களாற்பசியினைநீக்கி
வாடுநுண்ணிடையோடுறன்வானப்பிரத்தம். (௯௯)

சிதைவிலிந்திரியத்தனைச்சிந்தைவேறிலனைத்
ததையுமோரிடத்திருப்பறச்சவுசங்கடாங்கி
விதையமாரருளெய்தியோரிங்கிசைவிலனைய்
விதியினில்லறத்தோன்பகர்ந்திடிற்றுய்த்துமீள. (௧௦௦)

தரையின்மேற்றுயிலுடையனைச்சாந்தனைமறையோர்
நிரையுடன்பயிள்றுறுதிடவிரதனைநித்தங்
கரைசெய்தத்துவவுணர்வொடுங்காசினிபயில்வோன்
புரையிலாதநான்காவதாச்சிரமத்திற்புனிதன். (௧௦௧)

என்றுகூறலுமேந்திழையிருகரமுகிழ்த்துக்
குன்றுதங்கியேயருந்தவங்கோட்புறப்பயில்வார்
நன்றுவேறிலைத்தவத்தினுமென்பர்நாயகனே
யின்றுகூறுதியுரையான்றவத்தியல்பென்றாள். (௧௦௨)

வேறு.

வீறுவயர்ந்துபலகோடியர்விண்ணினின்பம்
பேறுவரியதவமாற்றுவர்பெற்றியோடு
மாறுகுமின்மைசெயனுடியருந்தவத்திற்
றேறுதியற்றிப்பெறுவார்தஞ்சிந்தைமையல். (௧௦௩)

பல்லோர்பதங்கடனைமாண்புறப்பற்றிநின்று
நல்லோர்தவங்கள்பலகாலநடத்துகின்றார்
சொல்லேதுமற்றுத்துறந்தோர்க்கலாதென்றோற்றமென்னும்
வில்லாவதெங்ஙன்வெளியாமுணர்திநீவேதவல்லி. (௧௦௪)

இம்மைத்திறத்திற்பெறுசெல்வமிறந்தனான்றே.
கைம்மிக்கதுங்கலைப்பெரும்போகமெல்லா
மம்மைச்சிலனாளனுபவித்தாற்றலைந்தம்புவிக்கே
செம்மைப்படவந்துதிப்பாரிதுதேற்றமன்றே. (௧௦௫)

அங்குட்டமொத்ததனியாக்கையராதபன்றேர்
தங்கிப்பரில்வர்தவமாங்கதுதக்கதாமா
லிங்குச்சிலர்கண்மனமாசறவியற்றுகின்றேர்
துங்கத்தவமேயாதினுமிக்கதுதூய்மையென்றுன். (௧௦௬)

காற்றூர்சிலர்கள்சருகுணவாற்சிலர்காய்நன்மூலப்
பேற்றூற்சிலர்கள்பிறங்கியநீரினிற்பின்னர்தங்கு
வாற்றூற்சிலர்கள்வருபசிமாற்றுவர்மல்குமுன்
சோற்றூர்சிலர்களருந்தவமாற்றுவர்துய்த்திருந்தே. (௧௦௭)

என்றேபரமன்றவத்தியல்பாற்றவெடுத்துரைப்பக்
குன்றேபுரையுமிளமுலைக்கோமளவல்லிகேட்டு
நன்றேமனையினறமாற்றுநன்மையாவ
தொன்றேபறமயுணர்வுறவோதுதிடீக்குமோர்ந்தே. (௧௦௮)

என்னக்கருணைக்கொருநாயகனீதுசொல்வான்
பன்னிப்பலவுமுனக்குமுன்கூறினன்பாவைமீளத்
தன்னிற்புரியுமுதன்மையினல்வினைசாலநன்றுந்
துன்னப்புகல்வனதன்பரிசிக்கணைந்துன்பநீங்க. (௧௦௯)

பொல்லாதனவாம்பலபலதன்மைகள்போக்கிவேத
நல்லாறெனவேபுகலுவதேற்பதுநன்மையாமாற்
சொல்லாயதனிலதிதியர்துய்த்திடத்தூய்மையோடு
மில்லாறுடையோனமுதளித்தாற்றுதலேற்றமாமே (௧௧௦)

ஆசிரமங்களின்மேம்படுதன்மையுமரியதானம்
பேசியதன்மையின்முக்கியமும்பலபெற்றிபெல்லா
மோசையினுல்விருந்தோம்புதலாமிதற்கொவ்வுறுதாற்
காசினிமேற்பலகோடியறங்களுங்காண்டியென்றுன். (௧௧௧)

அன்னதனிச்செயலாற்றினர்க்கேதுரித்தாவதென்னே
பன்னுவையென்னலும்பார்ப்பதிக்கோதினன்பாண்டரங்கன்
மன்னியதாயொடுதந்தையைப்போற்றுதன்மாறிலாத
நன்னுதலாயவனுய்ந்திடுமாறிதேநாள்கடோறும். (௧௧௨)

கொழுநனைச்சேயிழைதெய்வதமாக்கொளுங்கோலமேபோற்
பழுதறத்தாதையையன்னையைநல்வழிபாடுசொற்ற
தொழுதகையில்லறத்தோன்கடனுமெனத்தோகையன்னுர்
பழுதுடனீக்கியஞான்றிவராற்றுதல்பகரவென்றுள். (௧௧௩)

கேளாயணங்கேயளித்தவர்வான்மிசைகிட்டினரேற்
றூளாண்மையினுற்றென்புலத்தோர்க்கிதந்தானியற்றிப்
போளாவதிதிகடன்முறையாற்றுதல்புனிதமாமாற்
கேளாம்புருடனகன்றநற்கோதையர்கூறுகேளே. (௧௧௪)

தன்கேள்வனுக்குமிகுதிமேவுதறக்கவெல்லா
மன்போடிடற்றியரும்பிரமசாரியத்தில்வைகின்
மன்பேரறமுநிலைமையுமாமிவைமாண்புமென்றான்
பொன்போலொளிசெய்யிதழியந்தார்புனைபூதநாதன். (௧௧௫)

வேறு.

பஞ்சபருவங்கடனிற்றன்றாரம்விழைபாமற்பரதாரங்கள்
விஞ்சுகனவிலுநினையாதுளபண்டம்பறவைவெலிவிரும்புபோது
முஞ்சுறுவத்தாதியமென்றருணினைவின்மனையறநின்றுஞற்றிநிற்கு
மஞ்சுநிகர்பெருமிதத்தான்வாசிமகப்பேறடைவன்மாண்பினோடும். (௧௧௬)

எங்கிருந்தானெனினுமெதிர்பயின்றிடினுமெத்தகையானெனினுமென்னே
சங்கற்பவிகற்பமறப்பற்றிரண்டுந்துடைத்திருக்குந்தன்மையுள்ளோன்
பொங்கியலையெறிதருமானந்தவெள்ளமருந்தினவன்புத்தேணாட்டு
மங்கவனைநிகர்வரிலையறிதியென்றான்யாவருக்குமறிவொணாதோன். (௧௧௭)

சந்திரசேகரனுரைப்பச்சயிலராசன்றனையைதாழ்ந்துமீட்டு
மந்திரநல்லுருவேயிம்மண்ணுலகின்மனிதர்புரைமன்னர்க்கென்னே
தந்திரமுந்தண்குடையுந்தண்டனைசெய்தனுக்கிரகந்தருக்குமாறும்
வந்தனைசெய்பெருமிதமும்வந்தவாறென்றுரைத்தாண்மாசிலாதாள். (௧௧௮)

அருந்தவங்களியற்றியவாறஃதாகுமவர்மனிதர்க்கதிபராகிப்
பொருந்துலகம்புரப்பவராம்புகழ்பெற்றார்தமதுநெறிபொய்யாராகி
வருந்தவுயிர்களுக்ககிதஞ்செய்யாமலறம்வழுவிமறம்போற்றாமற்
றிருந்துசெருவினின்முதுகுகாட்டாமற்சிறந்தவனேகதியிற்சேர்வோன். ()

கருமமிலாதறம்பிழைத்துச்சமர்விழைந்தோர்நடுவுநிலைகருத்திலாம
லொருவர்பக்கபாதந்தாலொருவர்தமைவழக்கழியவுரைத்தோர்மற்றும்
பொருளதிகங்கவர்ந்தோர்தம்புலன்மயக்காற்பரதாரம்புணர்ந்தோரன்றே
திருவுமிழந்தாயுகுறைந்திழிந்நரகினிற்பயில்வார்தேயங்காத்தோர். (௧௨௦)

என்றுபசுபதிபுகலவிமாசலைமாமனமகிழ்ந்தேயெம்பிரானே
துன்றுரகசியதருமமியாவருக்குமொன்றாய்ந்துசொல்வாயென்ன
நன்றுபுகல்குவன்கேட்டிநாடருங்கொல்லாநெறியேநன்மையென்றா
னன்றுபுரமூன்றுமொருகணமகலாமுனநகையாலழித்தபெம்மான். (௧௨௧)

உலகமீரேழினையுமுதவியதாய்மீட்டுமிதையுரைக்கலுற்றா
ணிலமிசையினுடல்பெற்றோர்கோறலிலாநெறிவழியினிற்றல்கூடா
தலகிறந்தவிளையாடற்குரியவனேகொல்லாதவறுமெவ்வாற்றிற்
சுலபமுறவிபற்றும்வகைசொல்லென்றாள்வல்லமறைசொல்லொணாதாள். ().

கிரிராசனந்தனையாள்கேட்டமொழிக்கிறைவனகைகிளர்த்திச்சொல்வான்
கரிராசன்முதலாயகடவுளர்க்குந்தெரிவரிதாங்கருமமீதே
யரிராசனுண்ணிடையாயறைகுவன்கேள்பேன்மசகமெறும்புசாக
மெரிராசன்குடியிருக்குமுடலெடுத்தோர்கோறலிலாரெவரேமண்மேல். ()

சஞ்சாரம்புரியாமற்காயிலைகள்கனிகரத்காற்சாய்த்திடாம
லெஞ்சாமலுன்னதத்தினிருந்துபழுத்துதிர்ந்தவெலாமேந்திமாந்தி
யஞ்சானபுலனடக்கியறுபகையுந்துரந்தறிவுபுறஞ்சாயாமற்
பஞ்சார்மெல்லடிமடவாயிருப்பவர்கொல்லாநெறியிற்பயில்வோர்மாதோ. ()

அவ்வாறுபயிலுமுறையாவருக்குங்கூடாவாமாதலாலே
மைவார்கண்மடவனமேயின்னுமதனிலைவேறுவகுப்பன்கேண்மோ
செவ்வியனுயானெனதுநிறமென்னுஞ்செருக்கழித்தோன்கொலையிற்றீர்ந்தோ
னெவ்வுடலானுறினுமவைவிநிவயமாமெனநீங்குமிடர்செபாவே. (௧௨௫)

விளக்கதனுட்பலவிட்டில்வீழ்ந்திறக்கும்வைத்தவர்பான்மேவாவாபோ
லளக்கரியகொழுமுனையிலலகிலுயிர்சிதைதபாவமடையாவாபோற்
றுளக்கமுறுபலதொழிலிற்றொலையுயிர்க்குக்கொடுமைவந்துசூழாவாபோற்
களக்கமறயான்வதைத்தேனெனக்கருதார்க்கிலையுயிரைக்கடிந்தபாவம். (௧௨௬)

ஆயுவகலாதொன்றுமாவியகலாதமுறையறிவுறுமற்
றாயருஞ்சஞ்சலமதனாற்றான்கொன்றேனென்பர்கொலைசூழுவந்தே
தேயமுறுநல்வினைக்குந்தீவினைக்குமூலந்தன்னினைப்பேகண்டாய்
காயுமுயிர்வழிகொல்லாநெறிமேவுமாறுளதுகழறக்கேண்மோ. (௧௨௭)

மறைகூறும்பலவேள்வியாற்றுமவர்பல்லுயிரைமாய்த்துவானோர்
பெறுமாறுநல்லவிகட்டுகின்றார்கொல்லாதநெறியாம்பேசின்
முறைவீறுதிறலந்திதேவனெனுமோரரசன்முற்காலத்திற்
பிறைநுதலாய்சதகோடியான்வதைத்தேமகம்புரிந்துபயன்பெற்றானே. (௧௨௮)

அச்சுரபியினமனுகியெமையெமையென்றுயிர்நீத்தற்கமைந்துநிற்ப
விச்சையுறப்பலகாலமிருந்துமகமியற்றியவனெய்தாமுத்தி
நிச்சயமாயடைந்தனனன்விரைக்கணமுங்கோவுலகநிறைந்தவேள்வி
புச்சமறவியற்றிடத்திற்கோக்களுதிரங்கணதிபொருந்திற்றுலோ. (௧௨௯)

அந்தநதிப்பேர்சர்மணவதியெனப்புனிதமதாயகிலத்துள்ளோர்
வந்துபடிபுனலாகிப்பஞ்சபாதகநீக்கிமருவிற்றன்றே
கந்தமலர்விழியாயசர்கருந்துறவேயியற்றிகினுங்காணார்தீமை
சந்ததமுநன்மைகளேகாண்பார்கொல்லாநெறியாந்தன்மையீதே. (௧௩௦)

இன்னுங்கேள்பெருஞ்சமரிலெண்ணிறந்தோர்தமைக்கொன்றுனெய்துமின்ப
முன்னியுயிர்தொலையானேலருநரகிலாழ்ந்துதுன்பமுழலாநிற்கும்
பன்னுவதேனவ்விடத்திற்கொல்லாமைபாவமதாப்பலரைக்கொன்ற
தன்னிலைகொல்லாநெறியாமறமாயிற்றிவையுணர்தியறிவான்மிக்கோய். (௧௩௧)

ஆருயிர்கட்டுண்டிகருஞ்சாலிமுதற்பயிர்கெடுத்தலறிவின்மிக்க
சீருயிராமனிதர்தமைச்செறுத்தலருங்கோக்கணங்கள்சிதைத்தலாதி
சேருமியற்கையையுடையதுட்டவிருக்கத்திரளைச்செகுக்குமாறு
பாருடையவரசனுக்குப்பணித்திட்டோம்வேட்டமதுபாவமின்றே. (௧௩௨)

வேந்தனடச்சிதைந்தவுயிர்மேற்கதிசேர்ந்திடுமாறுவிருப்பிலீந்தோஞ்
சேந்தரசர்வேட்டமதிற்சிதைபாரேனல்லுயிர்கடிநம்புங்கண்டாய்
சாந்தமுடனருள்விளங்குமிருவிழியாய்பலவுயிர்கள்சாய்த்தபோது
மேந்தல்கொல்லாநெறியாகுமுதற்றருமப்பயன்பெறுவனின்னுங்கேண்மோ.

மதிசிறக்குமானுடரிற்பலர்திமைபுரிபவர்கண்மாசிலாத
பதிநடவுநிலைநாடிநான்முறையாற்றண்டனைகள்பயிற்றவேண்டும்
விதிவழியாமெனவியற்றிற்கனைகட்டபயிரேபோல்விளங்குநீதி
பதிகமுயிர்கொல்லாதநெறியினுமிங்கிவையரசுக்கறிவைமாதோ. (கஙச)

பொல்லாதகொலைசூழ்ந்தோர்வேதியரைநடுங்குவித்தோர்பொருவிலான்கள்
சொல்லாதநெறிகுறித்தோர்தமையரசன்றண்டனையிற்சூழ்ந்துளானேற்
கல்லாதமடமையினாற்கைப்படுபாயங்களெலாங்கரையும்வாளா
வில்லாதுபரிந்திருந்தானெனினரகமெய்துமன்றேயிறைவன்மாதோ. (கஙரு)

இலஞ்சியர்தாமரைமலராயிவ்வாற்றுன்முறைமையறிந்தியற்றும்பெற்றி, நிலஞ்செயுயிர்க்கவைகொல்லா நெறியினுமேம்படுமுணர்ந்தின்னெறிவல்லோர்கள், வலஞ்செறிநற்கதியடைவர்மற்றுனக்கீதுரைத்தனநின்மனத்திலின்னும், புலன்செய்மயலுளவாய்மைபுகறியெனவெமதன்னைபுகலவதானாள். (கஙசு)

வேறு.

ஆசிரமமூன்றிடத்துமில்லறத்தோனுதரிக்குமுறையெனவேயறைந்தாயைய, பேசியவில்லறத்தோனுக்கேமமெய்திற்பெரிதியற்றுமறங்களெல்லாம் பெறுமாறென்னே, தேசுடையாயுரைத்தியெனப்பரமனன்றேசெப்புவன்கேடருமமொடுகாமந்தேர்ந்து, நேசமுறுமவர்க்கருத்தமன்றிக்கூடாதவைநிகழும் பெற்றியெனநிரைக்கலானான். (கஙஎ)

வித்தையொடுசொல்வன்மையுழவுபற்பல்வியாபாரங்கோப்புரத்தல்தொழும்புசெய்த, வித்தகையசெயலாலேவித்தமெய்துமிவைசெலுத்துமுறையுமினியியம்பக்கேண்மோ, வுத்தமமாமவித்தைசெருக்கொழிந்துசாற்றவுரைவன்மைகாலமறிந்துரைத்தன்மற்றும், வைத்தமடிநீத்துழவுபுரிதறன்னைமதித்துநடுவொடுவாணிகத்தின்வாய்த்தல். (கஙஅ)

நன்முறையாற்பசித்திராவண்ணமோம்பனல்லானின்கணங்கடமைதொழும்புசெய்வோர், மன்முறையேதனையாள்வோன்சொல்வழாமல்வஞ்சனைபொய்யற்றெழுகலிவைகணல்கும், பொன்மணியாபரணமடலாயுகிர்த்திபோகமறக்காமமொடுபுகன்றவெல்லா, நென்முதலாம்பலபண்டங்களுமுண்டாகுநிரைபடுநால்வருணத்தோரீட்டுநீர்மை. (கஙகூ)

எக்குலத்தோனெத்தொழிலோனெனினுமீட்டுமீழமறம்வழாதடக்கியில்லாளோடு, மொக்கலொடுங்கடவுளர்தென்புலத்தோர்க்கன்பாலுறுமுறையாற்கடனியற்றியதிதியாகித், தக்கமனைபுகுந்தவருக்கன்பாலுண்டிதந்துபலர்க்குபகாரமியற்றித்துய்த்து, மிக்கபரதனந்தாரம்விரும்பானாகவிளங்குதனற்குலத்தோர்க்கும்விதியாமாதோ. (கசOO)

வேறு.

தன்குலத்திறைவதோன்றருந்தனம்பலர்க்குநீட்டி
முன்குலத்தவருக்கன்பான்முறைவழான்வணங்கியார்க்கும்
பின்குலத்தவர்க்குமின்சொற்பெருக்கியோரிடையிற்செய்த
வன்குலத்தினியநன்றிமறந்திடான்வெருளிமாறி. (கசக)

தீவினைக்கஞ்சிநல்வினையெலாஞ்சிரமேற்றாங்கி
நாவினைக்காத்துநல்லோர்நண்புபிரளவும்போற்றிக்
கோவினுக்கடங்கியொன்றைக்கொன்றுணருகிவாய்மைத்
தேவினைப்போற்றிநிற்குஞ்சீரியோர்கதியிற்சேர்வோர். (கசஉ)

ஆக்கைமானிடரேயேனுமமரிலதிகாரந்தத்
தீக்கையின்முயல்வரென்றுசெப்பலுந்தேவிமீட்டும்
பாக்கியஞ்சிலர்க்குண்டாகிப்பலர்கணல்குரவுதாங்கி
நோக்கமற்றுழல்வதென்னோநுவலுதிதெளியவென்றாள். (கசங)

ஆதியின்மலரோன்கற்பித்தாக்கைகளளித்தநாடொட்
டேதமும்படிறுமின்றியிரக்கமுநெறியுந்தாங்கி
நீதியிலிறந்தோர்க்கன்பாற்பலிபிச்சைநேர்ந்துதக்கோர்க்
கோதியநன்மைசெய்தோருறுவர்செல்வத்தினோடும். (கசச)

தன்கிளைபசித்திருப்பத்தாய்தந்தைபசியான்மாழ்க
நல்கலனுகத்துய்த்துநாடிவந்தவர்க்குநல்கா
வன்கணன்பிச்சையென்றுவருமவருடன்போர்செய்த
புன்குணன்வறுமைவிஞ்சப்புவியெலாமிரப்பன்போந்தே. (கசரு)

அவரவர்மனத்தைநாடியாங்கவர்வினையின்வண்ணந்
தவவலிப்பிரமனுக்கைதருவளித்தகமையாலே
புவிமிசைதிருவுளோரும்புகலுநல்குரவுளோரு
நவமலவியங்கலென்றேபின்னருநவிலலுற்றான். (கசசு)

உரைத்தநல்குரவுஞ்சிருமொருவழிவருவதன்று
நிரைப்படுபலவாறாகிநிகழுமுற்பவத்தினேர்ந்த
புரைப்படுவினைகட்கீடாயவையெலாம்புகல்வன்கேண்மோ
சுரர்க்கரும்பதத்தாயென்றேயருள்சுரந்துரைக்கலானான். (கசஎ)

இப்பெரும்பவத்திலாற்றவிருநிதியுண்டாயுண்ணு
தொப்புறவிடாதலுத்தக்குடனிழிபடைந்தமாக்கள்
முப்பவத்தொருவர்கூற்பொறுத்தலான்முயற்சியின்றி
வொப்புறவியற்றிலோபத்துழன்றுயிர்துறந்தோராரும். (கசஅ)

நல்குரவுழற்றநாளுந்தளர்ந்துநற்போகந்துய்க்கும்
பல்கதிர்ப்பூணினரைப்பார்த்தவைவிரும்பிநிற்போ
ரொல்குமுப்பவத்திற்பேதையாகியுற்றிடாதசெல்வ
மில்வினடுக்குமென்றென்றிருந்துயிர்துறந்தோர்மாதோ. (கசகூ)

வருத்தமெள்ளளவுமின்றிவான்பொருள்வந்துசேற
வருத்தியினுதவியின்பமனுபவிப்பவர்முன்சென்மந்
தொருத்தர்கேட்டணங்குறுமல்வலிதவருளத்தையோர்ந்து
பொருத்தமோடுதவிசெய்தபுண்ணியர்பூமென்பாவாய். (௧௫0)

அணங்குழந்தலசிநாடோருகுலப்பட்டுச்செல்வ
மிணங்குறத்துய்க்குமாக்களிரப்பவர்கேட்டுப்பன்மா
றுணங்கிவந்தறுத்தபின்னருதவினோர்முற்பவத்திற்
பணங்கிளர்நிதம்பப்பாசிழைப்படிவவல்லி. (௧௫௧)

அருந்தொழில்புரிந்துநாளுமணங்குற்றுந்தனமெய்காம
லிருந்துயிர்சலித்துநல்கூர்ந்திடப்படுமவராரென்னின்
முருந்துவாணகையாய்கேண்மோமுற்பவத்திரந்தோர்க்காசை
பொருந்துறக்கூறிநீளத்துதவிடாதகற்றும்புல்லர். (௧௫௨)

வையகமீதிற்பல்லோர்வறுமையினாள்கள்போக்கி
வெய்துறமுகிர்ந்தகாலத்திருநிதிபடைத்துவீவர்
மையுறுகுழலாய்கேட்டிமுற்பவமாண்பின்வாய்த்த
துய்வுறக்கொடாதுபின்னருதவியாருயிர்துறந்தோர். (௧௫௩)

அளப்பருஞ்செல்வம்பெற்றுமனுபவித்திடற்காற்றாது
களிப்பறப்பிணியான்மாழ்குங்கசடர்முற்பவத்தினாடு
வளத்துடனுதவலின்றிவன்பிணிவருத்தற்காக
வுளப்படுதானஞ்செய்தவுறுபயனென்றுகொள்ளே. (௧௫௪)

சுந்தரவதனராகித்தோற்றநற்குணத்தோடுற்றோர்
முந்துபுன்புலாலுண்ணாதமுற்பவத்தினர்களாமாற்
சந்ததமிரக்கமின்றிவனப்பழிதக்கமெய்யர்
புந்தியார்முற்பவத்திற்புலாலுண்டோர்பொருவிலாதோய். (௧௫௫)

சகலநற்குணமுஞ்சீருஞ்சால்புமுள்ளோர்கண்முன்னர்
புகலுறுபவத்திற்றாரம்புனைந்தவள்புணர்ச்சியன்றி
மிகலுறுபரதாரங்கள்விருப்புறாதில்லாண்மாட்டு
முகவுடனன்பில்வாழ்ந்தோராமெனவுணர்தியோர்ந்தே. (௧௫௬)

மனையவளிறந்துமுண்டாய்மாண்பிறந்திசையிலாதே
தனையுளம்போழ்ந்துமண்மேற்சரிப்பவர்முற்பவத்திற்
புனையிழைதனக்குக்கொங்கைபுளகெழவின்பநல்கா
வினையுலர்ந்திறந்துமீண்டுமுதித்தவர்வேதவல்லி. (௧௫௭)

மிதமறுகல்விஞானம்விளங்கிடச்செல்வமேவா
திதமுறப்புவியில்வாழ்வோரியாவரென்றிசைத்தியாயிற்
கதமுறுபவத்திற்கேள்வியாகியுங்கருத்திலாமற்
சதமுறுதானநல்காத்தன்மையோரென்றுகொள்ளே. (௧௫௮)

அறிவிலனாகியெல்லாச்செல்வமுமடையுநீரான்
மறுவிலாமுற்பவத்தின்மருங்குதேர்கிலனாயாரு
முறுதியினானென்றுநாடிக்குறையறவுவந்துநல்கிப்
பெறுமுறைகாத்தளித்ததன்மையாற்பெற்றதாமே. (௧௫௯)

மாசற்றகலைகற்கேள்விவளரறிவுடைமையோடு
தேசற்றமதுரவித்தாரக்கவிதையைசேர்க்கவல்லோன்
நேசத்தான்முன்பவத்தினெறிவழாமுறையாசானுக்
காசற்றவழிபாடாற்றியருள்வழிநின்றோனாமே. (௧௬௦)

தான்கற்றகலைகளெல்லாமொருவர்பாற்றந்ததகக்கோன்
வான்பெற்றுநிகழ்பவத்தினனைங்குருவண்ணங்காத்தோன்
றேன்பெற்றகுழலாய்பன்னாடிரிந்தலுத்தயர்ந்துஞ்சிந்தைக்
கேன்பற்றாதறிவுளோரையிகழ்ந்தவமதித்தபாவம். (௧௬௧)

நன்மனையறிவுயர்ந்தநற்பெரும்புதல்வரோடு
பொன்மனையகலாள்வைகப்போகமும்புகழுந்தாங்கி
வன்மருட்பிணியிலாதுவாழ்பவர்முற்பவத்தி
லன்பொடுமறிவுயர்ந்தோர்க்கருந்தனமளித்தோராமே. (௧௬௨)

மனையவண்மைந்தனோடுதலைவனுமாறுபாடா
யனையநல்குரவுற்றெல்லாத்துன்பமுமனுபவிப்போர்
முனமுடைப்பிறப்பிற்றேடிமோகலோபத்தாலீழ
மினியவர்க்குதவான்மண்ணிலிட்டிறந்தகன்றோராமே. (௧௬௩)

திருவளனாயுமைந்தர்சேர்ந்துறானாகிவாடி
மருவவர்புவியிற்பல்லோர்முற்பவம்வகுப்பன்கேண்மோ
கருவளவுயிரைவாளாற்காதினோரவராமென்றே
யுருவமும்பெயருமில்லாயுளங்கொள்வாயின்னுமுன்னி. (௧௬௪)

வேறு.

விழிப்புலனாறுதுடலெடுத்துலகின்மீதே
பழிப்புடனிருப்பர்பிறர்பன்னியரைமுன்னங்
கழித்துறுபவத்தினிடைகாமன்வயனாகி
யிழித்தகவினோக்கினவரென்றுணர்திநல்லாய். (௧௬௫)

செவிப்புலனியங்குமுறைதீர்ந்துலகின்மீதே
தவித்துழல்வர்பற்பலர்கண்முன்பிறவிதன்னிற்
குவித்திடுகரத்துடையகுரவரையதட்டி
நவைக்கொடுமொழிக்கனலைநல்கினவரன்றே. (௧௬௬)

தியவுதரத்தினுறுதேவுபெயர்நோயான்
மாயுமளவும்புவியின்மல்குமவனன்றோ
போயபிறவிக்கனுரைபொய்த்தமதுவுண்டோ
னீயுணர்தியாவுமுணருங்கொடிநெறிப்பால். (௧௬௭)

கோசமிரணைந்தொடுகொழுங்குருதிசிந்த
வாசுறுமுடற்சுமைசுமந்தலசிநிற்போர்
பேசுபரதாரமொடுகன்னியர்கள்பெற்றம்
வாசிகருமேதிபுணர்வுற்றவர்பவத்தில். (கசஅ)

எடுத்தவுடனுடொறுமயர்ந்தறிவிகந்தே
யடுத்துவருமூனசையரும்பிணியுழப்போன்
றெடுத்துளமுதற்பவமதித்தசைசுவைக்காய்
வடுத்தரவயற்றிருடிமாந்தினவனுமே. (கசகூ)

அற்றமுறமற்றொருவனுக்கடிமையாகி
யுற்றதனையோடுழலுவான்றனையுசாவிற்
பற்றுடையமுற்பவமதிற்பிறர்பதைப்ப
முற்றுசிறையிட்டுறமுவந்திடமுயன்றோன். (களO)

பங்குவெனவந்துலகினிற்பயிலுமாந்தர்
துங்கவுயிர்கால்கரமொடித்தவர்துடிப்ப
வங்கையின்முரித்துயிரடித்தவர்களன்றோ
மங்குபலநோய்களின்வருந்தியுயிர்மாய்வோர். (களக)

பாதமதனிற்பலவியாதிகள்வருத்த
மேதினியினிற்றிரிவர்மேலையபவத்திற்
கோதுடையகாலினொடுகோலிறொழவந்தோர்
தீதுபுரியாரெதிர்செருக்குடனுதைத்தோர். (களஉ)

குச்சையொடுகூன்குறள்கொடும்பெயர்குறிப்ப
விச்செகமதிற்பயில்வர்முன்பவமெடுத்தன்
றச்சமறுபண்டவிலையைக்குறைசெய்தாசை
நிச்சயமறத்துலைகுறைத்துநிறையிட்டோர். (களங)

வேறு.

சாதுநற்குணத்தக்கவரைத்தன
மோதுமோசமுளுற்றிக்கவர்ந்தவர்
சீதமாமதிவாண்முகத்தாய்நிகழ்
பாதகாதிப்பயித்தியக்காரரே. (களச)

மைந்தரின்றெனவாடியுமைத்தர்கள்
சிந்தினரெனச்செப்பியுந்தேம்புவோர்
முந்துறும்பிதுர்க்காரியமுற்றிடார்
பிந்திவால்வதையாதமபெற்றியே. (களரு)

ஞாலமீதுபுஞ்சகரானவர்
சிலவேற்றின்விதைசிதைவித்தவர்
மாலதாகும்புணர்ச்சிமயக்கொடுங்
காலவிக்கினஞ்செய்தவர்கற்புளாய். (களசு)

நேரமொன்றுநிகழ்ந்தனவின்றியே
யாரமங்கையரவையவதிக்குவார்
சோரநாயகன்றோள்புணர்ந்தேமுனஞ்
சேரவேட்டவன்சிந்தைவஞ்சித்தவர். (௧௭௭)

நற்குடிப்பிறந்தேதகல்குராவினாற்
பற்பலீனத்தொழிலினும்பாவைமார்
சிற்பரப்பொருடேர்ந்தவர்க்கன்பறப்
பொற்பின்விஞ்சுறுபுன்சொற்புகன்றுளோர். (௧௭௮)

பண்பிகந்துபலர்முனிந்தெற்றிடக்
கண்பிசைந்தடியாரிற்கலந்துளோர்
விண்கரந்துளமேலைப்பிறப்பினி
லெண்கடிந்திகல்வாய்மைகளெள்ளினோர். (௧௭௯)

ஒருவர்பாற்பயிலுற்றன்புறவிலா
திருமையுங்கெட்டிழிபுடையார்முனந்
தருதியாகியைச்சார்பவர்வாசலிற்
கருதிமேவத்தடைசெயுங்கண்டகர். (௧௮௦)

புற்றராவெனச்சீறிப்புரவலன்
பற்றுதண்டம்பயிற்றப்படுபவர்
சொற்றமுற்பவத்திற்சிந்தைதூய்மைகெட்
டுற்றமாந்தர்க்குறுகண்செய்வேந்தரே. (௧௮௧)

பெற்றவான்றனம்பின்னரிழந்துநின்
றற்றலுற்றயர்ந்தாகுலமெய்துவோ
ருற்றொருத்தனொளித்தவரும்பொருள்
பற்றிமீளக்கொடார்முற்பவத்தினே. (௧௮௨)

மாதரோடுதன்மைந்தர்களோடுமுற்
பாதமென்னப்பலர்மடிவோர்முனங்
காதியேவதைகண்டவர்பற்பல
நீதியாமிதுமனங்கோடியால். (௧௮௩)

சொற்றபாவத்தொழில்புரிந்தோர்தமக்
குற்றதண்டநிரையவுபாதிக
ளற்றகாலத்தினாருயிர்த்தோற்றமு
மிற்றுமானிடமெய்தினிவ்வாறுறும். (௧௮௪)

என்றுகூறினனீசனிரண்டருங்
குன்றுபோலிளங்கொங்கைசுமந்தவ
ளன்றுசிந்தையினற்புதமன்னியே
பொன்றுகூறுவளோகையினோடுமே. (௧௮௫)

கொடியர்தங்களைக்கொற்றவனுன்முறை
படியிற்றண்டம்பயிற்றுதனீதியே
முடிவிலாதவமுன்வினைச்செய்கையோ
கடிவதப்பவச்செயலோகழறுவாய். (௧௮௬)

என்னையின்றவளிவ்வாறுரைத்திடப்
பொன்னையொத்தவிதழிபுனைந்தவன்
மின்னையாற்றவியந்திதுகூறினன்
றன்னையொத்தவர்தானலதில்லவன். (௧௮௭)

கேட்டிமாதுநீகேழ்கிளர்பூமிசைக்
காட்டுமாக்கையர்கைப்படுகாரிய
மீட்டோராக்கையின்மேவுறுமுன்வினை
காட்டுமாறிதுகாவலன்றண்டமே. (௧௮௮)

அரசன்றண்டத்தகன்றிடுமுன்வினை
வரிசையற்றிப்பிறப்பின்மயக்கினு
னுரைசெய்தீவினைதென்றிசையோன்முனம்
புரைசெய்தாற்றிலகன்றிடப் பூவையே. (௧௮௯)

அரசன்றண்டனையாற்றியவாருயி
ருரைசெய்யேமனுமாதியிற்றேறுவன்
விரைசெய்தாருடையாயிங்குவெப்புறுன்
கரைசெயாத்துயர்காண்குவனுண்டரோ. (௧௯௦)

வேந்தன்றண்டமும்மேலவன்றண்டமுஞ்
சேர்ந்ததீமைசிறிதேயகற்றுவ
தாய்ந்ததாக்கையனுபவித்தாலலா
னீங்கொணாதுவினைச்செயனீள்கடல். (௧௯௧)

கற்றமாதுகரங்குவித்தையகே
ளூற்றதீவினையோடும்பரிமகம்
பற்றினோர்க்கெனநான்மறைபன்னுவ
தெற்றவோவுரையென்னவிசைப்பனால். (௧௯௨)

தானெனுஞ்செருக்கற்றுத்தரும்வினை
மானவாசிமகத்திற்கழிவுறுந்
தானெனுஞ்செருக்கோடுதரும்வினை
மானவற்கனுபவத்தன்றிமாறுமே. (௧௯௩)

சொற்றவாசகங்கேட்டுச்சுரர்பணி
கொற்றமங்கைகுவித்தகரத்தொடு
மற்றுமோர்மொழிகேட்டனள்வையகம்
பெற்றவாருயிர்நன்மைபெருகவே. (௧௯௪)

வேறு.

அருள்விளங்குங்காலத்தினியல்பென்பர்வினையென்பரான்மாத்துய்த்தன்
மருளகலவிதிற்பலத்ததேதுரையாயெனவீசன்மகிழ்ந்துசொல்வான்
றெருளுடையாய்முற்காலஞ்செய்தவினைக்கிடாகச்சேருங்காலம்
பொருள்விளங்குமக்காலவியற்கைவழியின்பதுன்பம்பொருந்துமன்றே. ()

மந்தராசலமுலையாய்கருத்தானஞ்சலவுதையமண்மீதெய்து
மந்தகாடருங்காலத்தரியநவக்கிரகங்களளிக்கும்பெற்றி
முந்துவினைவழிவினைக்குத்தான்கருத்தாவிருவினையுமூலந்தீரச்
சிந்தைபுரிந்தவரென்னைத்தேர்ந்தருளின்வழிநின்றோர்சிலரேயன்றோ. (ககூகூ)

எனவுரைப்பச்சாம்பவிமற்றிவ்வுலகிற்பாலரிறந்தேகமற்று
நனைவுடனேவிருத்தர்பலகாலிருக்கும்வினையாதோநவில்வாயென்ன
முனமெடுத்தபவத்தினிடைமுற்றுகருமங்களினால்விருத்திமீட்டு
மனநடையாய்பரமாயுகுறைவுறத்துமியற்கையெலாமறைவன்கேண்மோ. ()

முற்செனனத்தனில்வாய்மைபொறைகருணையொழுக்கமொடுமுறைகூறுசான்
சொற்றவறுதானன்பிற்றுன்னினருக்குயராயுந்தொக்குண்டாமா
லற்பமுறுகொடியிடையாய்பொய்வெகுளிகுரோதமுடனசுசியாசான் [ம்.
சொற்பமெனநினைந்தனைசெய்தொடர்வினையாயுவைபகற்றுந்தொக்குண்டாக்கு

இன்னுமொருருக்குமமாமுறையுளகேண்மேலுலகமெய்தியீண்டோர்
மன்னுவர்தீர்க்காயுவுடன்சிரநரகிற்பயின்றவர்கண்மனிதரானு
லுன்னலறுகதாயுவினோடுடலெடுப்பிறந்தகல்வதுடலேகண்டாய் [னே.
பின்னுமுயிரிறவாது தெளிதியென்றான் கொழுஞ்சடைமேற் பிறைவைத்தோ

உம்பர்பிரானுரைத்திடவுமுடலிரண்டுவகைப்பாலாயுரைக்குமாண்பெண்
ணிம்பரெடுத்திடுமாறுப்புரிவினையின்செயலையெடுத்திசைப்பாயென்ன
வம்பிகைகேட்டளவிலருளானந்தப்பரஞ்சுடரீதறைந்தான்கேண்மோ
வம்புறுதாமதம்பெண்மையிராசதமாணுடலதனைமருவுவிக்கும். (உ00)

சாத்துவிதவிருகுணத்துஞ்சார்ந்துழியாணுடலார்க்குந்தானேயாகிற்
கோத்தபிறப்பகற்றுவிக்குமுக்குணமும்பிணிமூன்றுங்கொண்டகோலங்
காத்திரமான்மாவக்களேபரத்தைத்தானெனவேகருதலாலே
தீர்த்தருக்கும்வினைமேவுமவைபொழிந்தாலுடலொழியுந்தேறுகென்றான். ()

அவ்வுடலநால்வகைத்தாஞ்சராயுசமண்டசத்தினுடனுற்பிசந்தான்
கொவ்வைவாய்ச்சுவேதசமென்றுரைப்பதுவாமிதின்முன்னங்குறித்தரெண்டு
மெவ்வமிருய்வளர்க்குமுயிரிற்றிரண்டுமுதித்தியங்குமியற்கையாமாற்
றிவ்வியமாஞ்சராயுசத்தின்மாணுடனேயுத்தமனுந்திறத்தினனே. (உ0உ)

அந்தமுறையினிலுத்தமாங்கமெடுத்தவன்கேள்வியாகானென்னில்
வந்தசராயுசப்பசுவோடொப்பனெனவுணர்திமறையோன்முன்னர்
தந்தனன்மைந்தரைத்தனதுதவவலியாலுடலதனிற்றமமெய்தாலமக்
குந்துதமங்கேள்வியினலன்றிபகலாதெனவேயுளங்கொள்வாயால். (உ0௩)

மாமுகிலினிரையனைத்தும்வாயுவினாற்போயகலுமாறுபோலக்
காமமொடுகுரோதவுலோபாதிகள்கேள்வியினாலேகடிதுநீங்கு
மேமுறுகேள்வியைவிரும்பானியற்றியநல்வினையுறுதியெய்தமாட்டா
தாமுறையிலறப்பலன்றந்தகனுங்கேள்விபெரிதாகுநங்காய். (௨௦௪)

ஞானமுறச்செய்துகதிநயப்புவிக்குங்கேள்வியறநல்குஞ்செல்வ
மோனமுறுமவ்வறமுமுற்றிடாதருங்கேள்விமுயற்சியில்லார்க்
கேனடையுமின்பமிதிற்கேள்வியோனுறுதியுயிர்க்கில்லைகல்வி
நானயம்பெற்றார்க்குமஃதில்லார்க்குங்கேள்வியலானுண்ணிதின்றே. (௨௦௫)

பிறந்திறந்தயாக்கையெலாமுளந்தோற்றச்சிலருதிப்பர்பெரிதாமன்பா
லறஞ்செவியினுறக்கேட்டோரதைமறந்தோர்வளர்பருவத்தயர்வரிப்பா
லிறந்தனவுமெதிர்வனவுநிகழ்வனவுந்தெரிந்திருப்பர்சிலர்களேசிற் [ளே.
சிறந்திடநல்வெருளோடுமெடுத்துரைத்தோர் பலர்க்குமெனத்தெளிந்துகொள்

எடுத்தவுடற்கரியாமைபெரிதறிவுசிறிதாகுமிமையோர்க்கேனு
மடுத்தவறியாமையகற்றிடலரிதாம்புவியினுயிரகன்றோர்காற்
றெடுத்துடலின்மீண்டடைவரெமதூதர்தமதறிவுசோர்ந்துபற்ற
விடுத்தகற்றுமருட்டருமன்மீண்டெழுவதுணராயோவிமலைநீயே. (௨௦௭)

என்றுபுகன்றிடக்கனவினியல்பாவதென்னையதையிசைத்தியென்று
துன்றுகருங்குழல்கேட்பச்சோமசேகரனிசைத்தான்றோகைகேண்மோ
மன்றமனச்சேட்டைகளானிகழ்வதுஞ்சூசகமாய்மருங்குகாட்டு
மொன்றுமனுகாவகையுமுளவதனையுணர்தியென்றானைப்பிலாதான். (௨௦௮)

வேறு.

ஐயாவிவைகேளணியாருயிர்கள்
செய்யூழ்வினைநின்செயலோவதுவே
மெய்யாமுறையேபுரியும்விரசோ
கையார்மழுவாயுரையாய்கருதி. (௨௦௯)

எனவேநகையோடிதுகூறிடுவா
னினிதேயிதுகேளெனைமுன்னிலைசெய்
தனியன்புடையோர்தருகாரியமூழ்
வினையாயனுகாதெனைமேவுறுமே. (௨௧௦)

ஏனோர்புரியுமிருசூழ்வினையுந்
தானோர்பெயரிற்றகுதெய்வதமா
மீனார்விழியாய்நிகழும்வினையே
தானுமொருபோதருபௌருடமே. (௨௧௧)

பயிர்செய்வதுபௌருடமாம்பருவத்
தியலாமழைபெய்திடல்தெய்வமதா
மயிலேயவையென்செயலோமனதின்
செயலென்றுணர்வார்தெளிவுள்ளவரே. (௨௧௨)

கருதுஞ்செயன்மானுடர்தங்கடனும்
வருமுண்டெனிலூழ்வாராதிலவேற்
றருமன்செயலேயெனிறண்டனையென்
றிருமாமறையேயுரையாய்தெளிவாய். (௨௧௩)

எனவோதுதலுமென்றூய்புகல்வாள்
புனிதாவிதுவேபொருளாமெனிலித்
தனுமேலில்லையென்பவரார்தனுவோ
டினிதாமுறையேதிசையாயெனவே. (௨௧௪)

பச்சைக்கொடிகேள்படைவீடுளவென்
றிச்சித்தனுகாவவனேயில்லையென்
றச்சத்துரையோடனுமானமுளோ
ரிச்சித்துணர்வோருணர்நீர்மையிதே. (௨௧௫)

என்றோதுதலுமெமனுலுயிர்தீர்ந்
தின்றூங்கவன்மாடுறுமாறெவனோ
குன்றூர்சிலையாய்குறியாயெனவே
யன்றூலுறுவோனருள்செய்தனனே. (௨௧௬)

வினைதீர்ந்துளவேல்விழுமாண்டுடலம்
புனைதூதர்கடாம்பொதுளிக்கொணருந்
தனிமாயையினோர்தனுவிற்புகுவித்
தனுமுன்கொடுபோகுவர்கோனுழையே. (௨௧௭)

பாவம்பெரிதேதற்படுவார்வழியிற்
றூவஞ்சமனுந்தழறந்திடுகட்
கோவம்பெரிதாயனவிற்கொளுவி
யேவம்பலதண்டனைசெய்திகலி. (௨௧௮)

மலமார்குழியாயிருளாய்வழிதீர்ந்
தலகாரறிவோரருமாநிரையம்
பலவாய்நிகழும்பார்வைக்கிடையே
நலிவெய்திடவேநனியுய்ந்திடுமால். (௨௧௯)

தருமம்புரிவோர்தனைநண்பொடுகண்
டருகாயணியாசனமீதமரத்
திருவோடருள்வானிதுவேசெயலென்
றொருமானுடையோனுரைசெய்தனனே. (௨௨0)

காளப்புயலிற்கலைமெய்யுடையாண்
மீளப்புகல்வாள்மிகுமாருயிரான்
மூளப்புரிபாதகமாமுறையுங்
கோளத்தறமுங்குறியென்றுறவே. (௨௨௧)

சொன்னானிறைவன்றொடர்தீவினைதான்
மின்னேயொருமூவகைபாலணையு
மென்னேமனம்வாக்கெழில்சேருடலென்
றுன்னுமமறைநான்குரைபாடுவதே. (உஉஉ)

மனதாலுறுதீவினைகேண்மயலான்
புனைசேரொருவர்பொருள்கோறுவது
மினிதாயதமமிகலாயபறனோ
டனமேநிகழ்வாமிதுவென்டிறியே. (உஉஙூ)

பொய்யேகுறளேபொருளின்மொழியே
மையார்கடுஞ்சொல்லெனுநால்வகையுஞ்
செய்யாமறைதீவினையர்க்கதனூற்
பையாமுறைறமேவுவதாய்பகரும். (உஉச)

கொன்றேயுயிரைக்கொலைசூழுவதுஞ்
சென்றேதனையிற்புகலுந்திறலற்
றன்றேபிறமாதரினுதாமுந்
தின்றாலிகழுந்திறமூண்டிடலும். (உஉரு)

மதுவென்பவைதன்வளர்வாய்வழியற்
புதமுண்பதுவுமுடலாற்புகல்வார்
சதமொன்றியதாமரையாள்விழியா
யிதமிங்கிதுகேளினுமோர்நெறியே. (உஉசு)

வேறு.

உரைத்தபாதகத்தினெல்லாமுயர்ந்தபாதகமியாதென்னிற்
கரைத்தபுன்மதுவிரும்பல்கல்விஞானங்கடேசு
நிரைத்தநல்லறிவுபெற்றநெறிதருமங்களெல்லாம்
புரைப்படவகற்றிப்பொல்லாநிரயத்திற்பொருத்தும்பாவாய். (உஉஎ)

அவமதியிகழ்ச்சிசோர்வுநன்மதியழிவுநாணந்
தவமகலுதல்பொல்லாப்புச்சாற்றுமாணவமாங்காரங்
கவலையைம்புலனில்லாமைவெகுளியேமுதலாங்காட்சி
யெவரவர்கருதினோர்கள்ளினையுணவிரும்பினோரே. (உஉஅ)

தெய்வதச்சார்பாக்கொண்டுந்தேசிகன்சார்பாக்கொண்டுங்
கைவருகரவிற்கொண்டுங்காசினியறியக்கொண்டும்
பொய்வலிக்கொடியர்பல்லோர்புன்மதுவருந்தாநிற்ப
ருய்கிலர்நரகவாழ்வுக்கொருப்பட்டோருரைப்பதென்னே. (உஉகூ)

மறைமுறைதிறம்பியாகாவழிநடப்போர்களந்தத்
துறைபயில்வோர்களன்னார்தொடர்ச்சியுந்திமைநல்கு
நிறையறிவுடையோராவர்தனமிசைநேயமில்லார்
கறைகெழுவேற்கணல்லாய்கருத்தினிற்கோடியென்றான். (உஙூ0)

எப்பெருந்திமைவாய்த்ததென்னினும்பரிகாரத்தாற்
றப்பறுமிதுநீங்காதுசமனவர்க்குருக்கியியம்
வெப்பொடுபுகட்டித்தண்டஞ்செய்தபின்வெரியேவிஞ்சு
பற்பலநாகில்விழ்த்திப்படுத்துமாறுரைக்கிற்பாவம். (உ௯க)

இன்னுமோர்வார்த்தைதேவரகசியமியம்பக்கேண்மோ
பொன்னுலகிடம்பற்றுதுமானிடர்பொருந்தலாலே
யன்னவாகனன்சிந்தித்தேமுற்பவமழிவுறுமற்
பொன்னனுய்மையல்பூட்டிப்பின்னரும்புரிந்தான்சூட்சி. (உ௯உ)

வேசியர்கவறுகள்ளுமூன்றுமேதினியுண்டாக்கி
வாசிகளழிக்கவைத்தானுதலான்மயங்கிமாக்க
ளூசலாடுளத்தராகிநரகினிற்குடிபோயுற்றார்
பேசியதீபகத்தாற்பிடித்திடுபறவைபோன்றே. (உ௯௩)

ஆதலாலிந்தமூன்றுமறநெறிசிந்துமாறு
போதினனளித்ததென்றுசிந்தையிற்பொருத்தவல்லோர்
நீதியுநெறியுநல்லநிலையுநல்வினையுஞ்சீரு
மோதுவதனைத்துநாடோறுயர்ந்தெனையுணர்வர்மாதோ. (உ௯௪)

என்றரும்பரமன்கூறவிணைக்கரமுகிழ்த்துவாமந்
துன்றியபவானிசொல்வாடியேநல்வினையாமாறு
மின்றுநீயுரைசெய்யென்னவெடுத்திதையுரைக்கலுற்றான்
குன்றுதோறுடல்செய்யுங்குமரனைப்பயந்தகோமான். (உ௯௫)

மனத்தினுல்வாக்காற்காயவழியினுல்வந்துசேரும்
புனிதநல்வினையுமூன்றுவிதமதாம்புகலக்கேண்மோ
நினைப்பின்மாசிலனுயார்வநெறிகண்டாய்நன்மைக்கெல்லா
மினைப்படுமுதன்மையாவதின்னுங்கேளிளங்கொம்பன்னுய். (உ௯௬)

ஒருவருக்கலக்கண்டீரவுரைத்திடுபொய்மையேனுஞ்
சரதமாஞ்சரதமேனுமுயிர்களுக்ககிதஞ்சாரிற்
பொருவறுபொய்மையாகுமாதலாற்புகலுமாறு
கருதியோர்க்குரைத்தோர்வாக்காற்கானுநல்வினையதாமே. (உ௯௭)

தானங்கடவங்கடக்கோர்தனைவழிபடுதலெண்ணி
லூனமிலறங்கணேக்கலுறுபுனறிளைத்தலுண்டி
பானமுமகற்றியன்பாற்பற்பலவிரதம்போற்றல்
வானயோகங்கனிட்டல்காயத்தால்வருவதாமே. (உ௯௮)

இத்தகையாவுந்திமைக்கஞ்சிநின்றியற்றினோர்கட்
குத்தமகதியுஞ்சீருமாயுவுமுளத்தோடொத்த
பத்தினித்துணையுநன்மைபயிற்றிநன்னெறிவழாத
புத்திரவலியுமெல்லாப்புகழுங்கைக்கொண்டோர்மாதோ. (உ௯௯)

நன்னெறியிருப்பத்தீயவழிபுகுநரரையென்னே
பன்னுவதென்றுகூறப்பருப்பதவிறைவன்றந்த
கன்னிமாமகத்தினன்மைகழறுகென்றுரைத்தலாலே
பன்னகாபரணன்மீளப்பவளவாய்திறந்துரைத்தான். (௨௪௦)

வேள்வியைந்தென்னுநூல்கள்விளக்குவன்கேட்டியோக்கத்
தாழ்வறுதன்னையன்பாற்பரிப்பதுதவிர்த்துநோக்கி
லூழ்முறைமகங்கண்மூன்றும்பர்தென்புலத்தோர்மீட்டுங்
காழ்விலிவிருந்தோடென்னக்கருதிநீயுணர்திமாதோ. (௨௪௧)

தேவருக்கன்பாலாற்றுந்திருமகமிரண்டுகூறு
மோவலின்மறையின்வண்ணமுரைக்குமுத்தீயும்வேட்டு
மேவரவவிகனல்கல்விண்ணவர்க்காலயங்கள்
காவியங்கண்ணாய்நாற்றிப்புரிகுதலிரண்டாக்காணே. (௨௪௨)

மறுவிலாயாலயத்தின்மறைமுறைகடவுளோரை
நெறிமுறைதாபித்தென்றுநியமத்தோடாடல்பாடல்
குறையறுதீபமோமங்குளிர்மலர்மாலைசாந்த
நறியமென்புகைநிவேதனத்தொடுச்சவங்களுட்டல். (௨௪௩)

கவிகைசாமரங்கள்பிச்சங்காளமத்தளங்கண்மேளங்
குவிகையிற்கொடிபரித்தேர்குஞ்சரமுதலாமூர்தி
தவிசுகண்ணடியாடைதகுநவமணிப்பூணுதி
கவினுறவியற்றியன்பாற்கருதுதன்முதலியாகம். (௨௪௪)

பச்சைவாளுடலாயென்னைப்பஞ்சலோகத்தினுக்கி
யிச்சையிலுனேயுங்கற்பித்திருங்கடிவிழாநடத்தி
னிச்சயநமதுபாங்காநிற்பவராவர்கண்டாய்
கச்சணிமுலையாயாரேகருதுவோரவர்கடுய்மை. (௨௪௫)

அந்தியிற்காலையுச்சியமையத்திலரவுமேவிச்
சந்திரனிரவிதன்னைவிழுங்குறுந்தகையாம்போதின்
முந்துறுவிசேடமானதினங்களின்முன்னிமேவி
வந்தனைபுரிந்தாரென்னிற்பாதகம்பலவுமாயும். (௨௪௬)

ஆதலாலுணர்திதேவருமகமிரண்டாவேள்வி
யோதுதென்புலத்தோர்க்கன்பாலுரைத்தமாமறையின்வண்ணஞ்
சாதலானவரைநாடித்தருப்பணம்பிண்டமுண்டி
கோதறமறையோர்பாங்காக்கொடுப்பதாங்குறையிலாதோய். (௨௪௭)

அன்புடன்சுவைப்பாலுண்டியமைத்தெதிர்ந்தவரையாக
மின்புறப்பணிந்துபோற்றியின்சொலோடகத்திலுய்த்தே
முன்பவர்க்கருத்திநீங்குபூதன்மையோர்க்குடன்சென்றுய்த்தே
பின்பருந்தினரேபூதவேள்விசெய்பெருமைமிக்கோர். (௨௪௮)

ஓக்கலார்முசித்திராமனுறுபயன்பெறுமாறுண்டி
தக்கனளியற்றறன்னோடைந்தெனச்சாற்றும்வேள்வி
மிக்கனவெல்லாநல்கும்விழுமமற்றிதன்மேலுண்டோ
மைக்கருங்குழலாயென்றுன்மறையினுமளக்கொணாதான். (உ௪௯)

வெற்பினுக்கிறைவன்றந்தவிமலைபேரருளினோடு
சிற்பரம்பொருளைநோக்கிச்செப்பியவேள்வியைந்துண்
முற்படவிறந்தோர்க்கிதன் முறையெனவகுத்தாயன்றே
பற்பலருயிருளாக்கைபற்றிடிற்பயனியாதோ. (உ௫0)

இறந்தவர்க்களிக்குமாற்றுலெய்துறுமியல்பேதென்ன
வறந்தவாவருட்பேராழியம்பிகைமுகத்தினோக்கிச்
சிறந்தவாணைகையாய்கேட்கத்தகுமெனச்சிரந்துளக்கி
யறைந்திடுமாறுநோக்கியருகுறுமுனிவராரும். (உ௫௧)

ஈன்றதாயருளானம்மாட்டிருந்துளமடமையெல்லா
மான்றிடாதகற்றுமாறுவினவினளாயென்றுன்னிச்
சான்றெனநின்றுடன்னைத்தாழ்ந்தன்பினோடுநோக்கி
யேன்றிறைபுகலும்பான்மையிருசெவிக்கமுநினேற்றுர். (உ௫௨)

பவளமால்வரையின்மீதுபடர்நிலவெறிப்பதேபோற்
றிவளநீறுடலந்தாங்குஞ்செழுஞ்சுடர்குறிப்பதானன்
றவளவாணைகையாய்மாய்ந்ததந்தைதாய்பெயராற்செய்த
லுவளருங்கடல்சூழ்வையத்தோர்நன்றியோம்பலாமே. (உ௫௩)

வேறு.

கடவுளோர்களிற்பேதமாய்த்தென்புலங்காணி
யுடையராதலாற்றென்புலத்தவரெனவுரைக்கு
மடலுள்வானவருளரவரவ்வறநுகர்வோர்
மிடலில்வேதகாற்படைத்தவர்மேம்படுகுணத்தோர். (உ௫௪)

செய்யுமானவர்கடன்முறைசெலுத்திடவவர்வந்
துய்யுமாறுகொண்டுகந்தருள்வழங்குவருவப்பான்
மையிலாயுநல்வாழ்வுநன்மைந்தர்கள்வளமைத்
தையனன்மனஞ்சால்பெலாஞ்சார்ந்திடுந்தன்மை. (உ௫௫)

ஆங்கிவன்செயுமறமிவன்றன்னையேயடுக்கும்
பாங்குறும்பலதருமமும்பயிற்றியாங்கதனை
நீங்கினனெனினீங்குறுமாயுவுநெறியு
மோங்குசெல்வமுமவன்குலவிருத்தியுண்டாகா. (உ௫௬)

உரைத்தவேள்விநான்கிபற்றிடானென்றையுமறவா
னருத்தியோடுசெய்தானெனிலைந்தும்வந்தெய்துந்
கருத்தினுற்கதியுந்தருங்கடைப்பிறப்பெய்தி
நிரைக்குங்கும்பியுள்விழ்வனவ்வணமதனிகட்சி. (உ௫௭)

உரியதந்தைதாய்பசித்திடவேனையோர்க்குண்டி
பரிவினாற்றுறுபான்மையாற்பயனுளதாமோ
சரியதாமவைபாதலிற்றென்புலத்தவரே
பெரியரைவகைவேள்வியிலென்றனன்பெருமான். (உருஅ)

அன்னைகேட்டனளாதரத்தொடுமிதையறிந்தாள்
சொன்னவாசகமுணர்ந்தனன்றாய்மறைப்பொருளே
பன்னுநற்கதிதுர்க்கதிபடருவோரிவரென்
றுன்னியோருமாறுரைத்தருளென்றனளுரைப்பான். (உருகூ)

பிறர்க்குக்கேடுசூழாமனன்னெறிபிழையாம
லறத்தைக்கூறியதேசிகனடிமறவாமற்
சிறப்பிலாருயிர்சிதைத்திடான்றீனபோடகனாய்
மறத்தினீங்கியேவருவிருந்தோம்பியேவாழ்வோன். (உகூ0)

வாய்மையாருளமல்கிடநல்லவர்வருக்கத்
தூய்மைதங்கிஞானற்கதிப்பேறெலாந்துணைவோன்
தீயதாங்குணஞ்செருக்குடன்பொய்கொலைவெகுளி
நேயந்தாங்கியேதுட்டரோடுடன்படுநீரான். (உகூக)

பரதனம்பிறர்தாரமுங்கைவயப்படுமா
றிரதமூறுநாவுடனுழலியற்கையைப்பூண்டோன்
விரதவல்லியாழ்நிரையத்தில்வீழ்பவன்கண்டாய்
கருதுகென்றனன்கண்களோர்மூன்றுடைக்கடவுள். (உகூஉ)

அறமெலாங்கருமம்பிகையையகேளுலகிற்
றிறனெலாந்தருதருமகோடிகளுரைசெய்தாய்
நிறனெலாம்புனைமானிடர்நிற்பரிதன்றே
பிறனெலாமடங்கோரறம்பேசுதியென்றாள். (உகூங)

மேனைதந்தவள்விரைமலர்வாண்முகநோக்கி
மானையன்றுகைக்கொண்டவன்வாய்திறந்துரைத்தான்
றேனைவென்றநன்மொழியினாயில்லறந்திரிந்தாற்
கானையாதரித்திடுவதேகடைப்பிடிகருமம். (உகூச)

அனையபெற்றிகள்கூறுவனுணருதியத்தந்
தனையன்றாரமென்பவைமனந்தன்னினுநினையான்
வினையிரண்டினுமயக்குறான்மழைபனிவெய்யிற்
புனையும்போர்வையானைம்புலன்வழிமனம்போக்கான். (உகூரு)

பகைகளாறையும்பற்றறவேரொடும்பறித்து
மிகையுறாதகமியானெனதென்பவைவிடுத்து
வகைகொடன்னுடற்பாலபிமானமும்வாட்டிச்
சிகையுடன்புரிநூலையுந்தீதெனநீக்கி. (உகூகூ)

காரகம்வேணுதண்டங்கையிற்றாங்கிநார்ச்சீரை
விரகினாலுடுத்தொருபெருங்குரவனைவெஃகிப்
புரியுமாறெலாமவன்சொலப்புத்தியிற்றரிப்பான்
மரகதம்புரைமேனியாய்பிறந்திறவாதோன். (உசுஎ)

எத்திறத்தவாமவ்வியல்பென்னிலிங்கிதுகே
ளத்தமீட்டுதறுன்பமாங்கதனிலுந்துன்பம்
வைத்தளிக்குதலொழிகுதலதனிலும்வருத்தம்
வித்தம்வேண்டிலாமையினந்தத்துன்பம்விட்டகலும். (உசுஅ)

தான்விரும்பியத்தனையனைவேண்டிடிற்சாரான்
றான்வெறுத்திடிலொழிந்திடான்றனையனார்தானார்
தேன்விரும்புசொலாய்சிருட்டிக்கிரமந்தெளிந்தா
லேன்விருப்புறுமேழையாமறிவுளார்க்கெனினும். (உசுகூ)

தாரமாவதுமுன்பவத்தாருடைத்தாரஞ்
சாருமேற்பவத்தார்வயினடுப்பதோசாரிற்
காரைநேர்குழலாய்சந்தைக்கூட்டத்தைக்கண்டாற்
றீரும்பந்தகமிரத்தந்தோலென்புடற்றேசு. (உஎ0)

தளிர்த்தநல்லிலைகாடொறுமுதிர்வுறுந்தகைபோ
லளித்தமேனியிலிளமையுமியாக்கைநீர்க்குமிழி
விளக்குந்தென்புலத்தவன்வருமெனவெருவுற்றாற்
களிக்குமோமனங்காசினியோர்க்கறங்கண்டோய். (உஎக)

கானல்போன்றதுசகடத்தின்கால்புரைந்தொருவர்
பானிகழ்ந்திடாமின்னெனப்பயின்றங்ஙன்மறையு
மீனவாழ்வையுற்றோர்ந்திடினின்பமெய்தாவா
ஞானவாரியிற்படிந்திடுநாளடைந்துறினே. (உஎஉ)

பிணியினானரையால்விருத்தாப்பியச்சரையா
லணிகெடுத்திடுவறுமையாலரைக்கணமேனுந்
தணியவேநிலையிலாமையாற்சஞ்சலந்தன்னாற்
றுணிதிமானவர்துன்பமேயுழப்பதுதோகாய். (உஎங)

பிறக்குந்துன்பமுங்கருவினிற்றுன்பமும்பின்ன
ரிறக்குந்துன்பமுமியமவாதனைப்படுதுன்பு
மறப்பதாயினும்வான்கலைமுறையினாற்றெளிந்தோர்
துறத்தலன்றியேதீர்வரோவப்பெருஞ்சோகம். (உஎச)

இந்திராதிபரிமையவர்முனிவரரெங்குஞ்
சிந்தையாகுலமுறுவதுமயர்வதுந்தெளிவாய்
கந்தமாலைபாய்துறந்திடாதின்பமார்கண்டோர்
சந்தமாமறைமுடிவுகண்டோர்களேதக்கோர். (உஎரு)

இமையமீன் றருளிளங்கொடிகேட்டிபித் துறவு
கமைகொளில்லறத்திருப்பினுங்கைப்புகுமன்றே
வமையுமோரிடத்தற்புதமகம்புறமிரண்டாஞ்
சுமைகொள்பற்றறுத்தோர்பலர்பிறவிகடுடைத்தோர். (உஎசு)

வேறு.

சாங்கிய நூலோர்ஞானந்தனின் முத்தியடைவர்யோகந்
தாங்கியுமடைவரேனோதக்கதாங்கிரிகைநீக்கார்
தூங்கியுமடைவரன்பாற்சுகதுக்கந்தீமைநன்மை
நீங்கியுமடைவர்முத்திநெறியெலாம்புகல்வன்கேண்மோ. (உஎஎ)

பூதங்களைந்துஞானப்பொறியைந்துபுலன்களைந்து
மேதங்கொள்கருமயிந்திரியங்களினைந்துமீட்டிக்
கேதங்கொள்கரணநான்குங்கிளர்பிரகிருதியோடு
வேதங்களைந்தைந்தாகவிளம்புதத்துவங்களாமே. (உஎஅ)

அவ்வியத்தனைதியான்மாவறுநான்கோடளவளாவி
யொவ்வறுபிரகிருதிநாமமுற்றதாமதனைவேறாத்
திவ்வியநிலையினின்றுதெளியுமேனுடலெய்தாவாங்
கொவ்வைவாயணங்கேமூன்றுகுணங்களினியல்புகேண்மோ. (உஎகூ)

தாமதமிராசதந்தான்சாத்துவிதப்பேர்கொண்ட
காமருகுணங்கண்மாறிக்கருமங்களியற்றுவிக்கு
மேமுறுமடிமைகோபமினியபொய்களவுகாம
நாமிகறுயில்பொச்சாப்புத்தாமதநல்குமாறே. (உஅ0)

மானநற்கல்வியின்பம்வண்மைபேரறிவீரெட்டுத்
தானநல்லொழுக்கஞ்சீலந்தவமிராசதமளிக்கு
ஞானநல்லருண்மெய்நல்லோர்வழிபட்டுநன்னூலாய்த
றானகையணங்கேசத்தின்றேற்றமாமனத்திற்கொள்ளே. (உஅக)

இக்குணமிரண்டுநீங்கிச்சத்திநல்லியற்கையேந்தி
யக்குணமவையும்வேறாயாய்ந்தவர்சாங்கியத்தின்
மிக்கவரணங்கேபாம்பும்வெள்ளியும்புனலுமென்று
புக்குணர்பழுதைகானற்கிளிஞ்சிலென்றுணரும்பொற்பு. (உஅஉ)

முக்குணமகன்றஞான்றினிஃதுணைமுடிபுமுத்தி
யக்குணமனிதர்பாவமடுப்பதுதாமதத்தான்
மைக்கணுயிராசதத்தாற்புண்ணியமிரண்டுமாறுந்
தொக்கசாத்துவிதந்தெய்துஞ்சுகங்கணிர்க்குணத்தின்மாதோ. (உஅங)

இந்திரியங்கண்மாற்றமனமொன்றுமிருக்கினெய்து
மந்தநன்மனவிகற்பந்தேகமுந்தேகியான
முந்துபேதமுமுணர்ந்தான்முகங்கெடுமுடிவிலாத
வந்தெழுபரமானந்தவாரியின்மருவலாமே. (உஅச)

அவ்விடத்தவ்வியத்தினனாகியாயாவந்தானு
மிவ்விடமிவைநிலைப்பாடெனவுணரானுமேதறி
யெவ்வமில்சித்தசாந்தியெய்தியேபிரகாசமெய்துஞ்
செவ்வையினனேயானுமெனுஞ்சொல்லேதெளிந்துகொள்ளே. (உஅரு)

வேறு.

இன்னுமிங்கிதுகேட்டியோகமென்
றுன்னுமோர்நெறியுளதுரைப்பதென்
பன்னுமைம்புலன்பற்றிடாமனந்
தன்னையுள்ளவர்சார்வதாகுமால். (உஅசு)

ஆசைகோவமோடல்லனீக்கியே
மாசில்சிந்தைநல்லருளின்வாய்த்தபின்
றேசுலாவுமாசனத்திற்செவ்வியோர்
பாசமொன்றிலாதிருப்பர்பற்பகல். (உஅஎ)

அருவைகேள்பிராணனும்மபானனும்
பெருகுதானனும்பெய்சமானனுந்
தருவியானனுந்தன்வயம்பட
மருவினாயுவர்த்திக்குமண்ணின்மேல். (உஅஅ)

காயசித்தியாய்க்கருதுபெற்றிக
ளேயமோடுறநினைப்பிலாதவர்க்
காயவென்னுருவமைவுண்டாகுமாற்;
றாயராமவர்சொல்லற்பாலவோ. (உஅகூ)

என்றுகூறனுமிறைவிமீளவு
நன்றுபற்பலர்ஞானமிக்கவர்
துன்றுவாருனதுருவிற்றாயனே
யின்றுகூறுதிதெளியவென்னவே. (உகூO)

விமலனேதுவான்வேதமோதொணு
வமலசிற்பரம்பொருளியானதிற்
சுமதிநிட்களந்துன்னுவோர்களா
நிமலமோடுமுன்சொன்னநீர்மையோர். (உகூக)

வேறு.

சுந்தரவதனமடந்தைகேள்சகளத்தோற்றமிவ்வுருவமாம்பலர்கண்
முந்துறவுரைத்தயோகநன்னிலையான்முறைகொள்சாரூபமெய்துவராற்
பந்தமும்பற்றுமறுத்தெனையுருவாய்ப்பாவனைசெய்தவர்பெறுவார்
சந்ததமுயல்சாயுச்சியமிரும்பிற்சார்ந்தநீராமெனுந்தரத்தால். (உகூஉ)

பின்னருமெனதுசுருபமிவ்வுலகிற்பேசியசிவலிங்கமதனிற்
பன்னியபடியேபாவனைபுரிந்துபற்பலர்கந்தமுமலருந்
துன்னுநெய்விளக்குந்தூபமும்புனலுந்தூய்நிவேதனத்தொடுதொடங்கி
மன்னுமன்பதனுல்வழிபடிலடைவர்வந்துசாமீபமாம்பதமே. (உகூ௩)

சரியையாமுறைகள்பயின்றுநாடோறுந்தகுதியினன்புமேம்பட்டோர்
சுரர்புகழ்சாலோகப்பதம்பெறுவர்தொகுத்தநற்கதிமுறைநான்கும்
விரதநன்மார்க்கநான்கினுநடந்தேமேவுவரவர்களைமடியார்
விரிதிரைக்கடல்சூழ்புவியில்விண்ணவருமுனிவருமேவுவர்வேண்டி. (உகூச)

ஆதலாலிந்தவாறெலாமுனக்கின்றறைந்தனன்கோடியென்றுரைப்பக்
காதளவகலுங்கண்ணினுள்சித்தைகளித்திருகரமலர்குவித்து
வேதவேதாந்தநிலையெலாமடியேன்விளங்கிடப்புகன்றனையுய்ந்தேன்
மூதறிவுடையமுனிவர்பாலருளான்முன்னனுளருளியமுறையால். (உகூரு)

என்றபிராமியிசைத்திடநோக்கியம்பியயாவையுங்கேட்டாய்
மன்றலங்குழலாயரிவையரனேகர்வந்திருந்தனரவர்மனதிற்
றுன்னுறுமையந்தீர்ந்திடமாதர்க்குரியதாமுரையெலாஞ்சொல்வாய்
வென்றியாயானும்விழைவுளேனென்றான்வேதநாயகியிதுபகர்வாள். (உகூசு)

அற்புதவகிலகாரணமறைகளறிகொணுவருட்பரஞ்சுடரே
கற்புடைமடவார்புரியறமுனக்குக்கரைப்பவளியான்கொலோவெனவே
முற்பவமொடுக்கமொழித்தவன்மீளவுமைக்கிதுபகர்ந்தனனெவரு
நற்பயன்பெறுமாறுரைத்திமாதருக்குநாயகமாதலாலென்றான். (உகூஎ)

ஆண்டகைவாய்மைசென்னிமேற்சூடியருந்ததிநிகரரமாதர்
மாண்டகந்தருவமங்கையர்முனிவர்நெறிவழாமடந்தையர்பலரு
நீண்டகட்கடையாடனைத்தொழுதெழுந்துநின்றுகைகட்டியேவினவத்
தாண்டவபதத்தான்பலரொடுங்கேட்பச்சங்கரிசாற்றினளன்றே. (உகூஅ)

இற்பிறப்புடையகங்கைகாளிந்திசரச்சுவதியைமுதலேழு
நற்பிரவாகங்கடமதுருவுடனேநண்ணியன்பொடுகரங்குவித்து
நிற்பதும்வதிட்டன்மனைவியைமுதலாநேரிழைமாரெலாஞ்சார்ந்து
கற்புடைமைக்கோர்தெய்வதந்தானுய்க்கருதுறுமென்னமுங்கருதி. (உகூகூ)

வானவரியக்கர்விஞ்சையர்வீணைவல்லவர்பற்பலகோடி
ஞானநாயகனுஞானவொண்கொடியுநனியுயர்ந்திருந்தபேரவையிற்
பானலங்கண்ணாருடன்பணிந்திரண்டுபொங்கருங்கரங்குவித்திருந்தார்
மோனநாயகனைநோக்கியொண்கரங்கண்முகிழ்த்துளகின்றவண்மொழிந்தாள்.

தந்தைதாயன்னையுடன்பிறந்தோன்றன்சகோதரனிவர்களிலொருவர்
முன்னிமற்றொருவர்க்களித்திடத்தெருளாமுன்னமேவரைவினைமுற்றிப்
பின்னையங்கவனைக்கடவுளாவுபிராப்பேணியாங்கவனபிமதங்கொண்
டுன்னியதேவர்தென்புலத்தவர்களதிதியர்க்குறுகடனாற்றி. (௩0க)

மனதொடுவாக்குங்காயமுமொன்றுபட்டில்செய்வன்மையுண்டாகித்
தனதுகேள்வனுக்குவழிப்படுமியற்கைதாங்கியின்சொல்லொடுதக்க
புனிதமுமறிவுக்தெளிவுமுண்டாகிநாடொறுமோர்தினம்போலத்
துனிதபநடந்தோர்பதிவிரதத்தோரிகபரவின்பத்திற்றுன்னிவோர். (௩0உ)

முதலொருமறையோன்பன்னியிருவர்முதன்மனையவள்பலதருமம்
பதியபிமதமற்றுஞற்றினளிளையாள்பதிவழிபாட்டினிலிருந்தே
சதமுறவவன்சொற்றுங்கிடீடறங்கடந்தனண்மூவரும்விதியான்
முதிருடலகற்றிநற்கதிபுகுந்தார்முதலறக்கடவுள்சார்ந்துரைப்பான். (௩௦௩)

முன்மனையவளேகொழுநனேவலினான்முற்றியதன்றுநீயறங்க
ளென்பயனதனான்மீளுதியவனோடெய்தவாற்றலையெனநீக்கிச்
சொன்முறைதவறுதியற்றிநாளோடுஞ்சாருலகெய்துமாறளித்தான்
பின்மதிதளர்ந்துபெய்துரநோக்கிப்பேசினானசிலாப்பெரியோன். (௩௦௪)

வருதிநீமடந்தைமீண்டுலகெய்திவளருடற்றுங்கிநாயகன்பாற், கருதியன்
புடையளாகியங்கவனைக்கடவுளாக்கருதிநற்கருத்திற், புரிதியாங்கவன்றன்றொ
ழிலுயர்கதியிற்புகுவையென்றுரைத்துவிட்டகன்றான், சுருதிகளிதற்குச்சான்
றெனவுரைத்துத்தோகைமீண்டிவையெலாஞ்சொன்னாள். (௩௦௫)

கொழுநனுக்கிதவாமுண்டிசெய்களித்தல்குவிமுலைப்போகம்வேண்டியபோ,
திழிவறமனந்தான்றளர்வுறுதவற்கெதிர்பகராதுசெய்தியற்றற், பழுதறமடவ
ர்பலருளரெனினும்பகையறநன்புடன்பயிற, விழிவறுகற்பின்மடந்தையர்செ
யலாமிறைவகேளின்னமென்றுரைப்பாள். (௩௦௬)

ஒருத்திமேன்மயலாயொழுகினும்புருடனுடன்படலொன்றுதந்ததனை
விருப்பொடுமீளக்கேட்டபோதொளித்துவிழைவுறத்தந்திடல்வேட்டோ
னருத்தியாற்றனக்கேதளிப்பினுமுவப்பாலவாவுறலந்தரங்கத்திற்
பொருத்துறுபுருடனொடுமோதனத்திற்பொருந்துதலினியகற்புடைமை.(௩௦௭)

வறுமையிற்பிணியிலறிவிலாமையிற்சீர்வனப்பிலாமையிற்றிகழ்ந்திடினு
முறுபதிதனக்குக்கடவுளென்றவன்பாலோகைகண்டவன்றொழிலுஞற்ற
லறிவொடுபிச்சைபலியிலையென்னாதளிக்குதன்மூன்றருங்கடனு
முறைபடுகாலத்தியற்றினாண்டகைக்கேமுதன்மையென்றியற்றுதலியல்பே.()

ஆசுரம்பிசாசமிராக்கதமெனமூன்றருங்குலமடந்தையர்மனிதர்
தேசுடனுதிப்பரவர்குணமெடுத்துச்செப்புவன்கேண்மினோவெவர்க்கு
மாசுறுவிபசாரங்களுண்டாகுமற்றுளநடக்கைவேறுளவா
மீசுநற்குரோதஞ்சலந்தனதானியமிச்சையினழித்தலோடிவையும். (௩௦௯)

ஆசுரமடந்தைசெய்கையாம்பிசாசத்தரிவையர்மணவன்மாட்டன்பற்
றீசுடன்மைந்தரொக்கலோடளவாதிகலுவோர்கலாஞ்சினமிசைந்தோர்
மாசறுபொய்மைநாணிலாமடமைவஞ்சனைதுயில்களவொழியார்
பேசுறுமிராக்கதப்பெயர்புனைந்தோர்பெறுவர்திநரகிருவகையோர். (௩௧௦)

ஒழுக்கமுஞ்சிறுமின்சொலுந்தூயவுளமுங்கற்புடைமையுமன்பு
மிழுக்கறநடத்துமவர்களேவானோர்மனிதரென்றிசைத்திடுமடவார்
பழிப்பறவொழுகுங்கற்புடைமையினற்பயனெலாமின்னமுங்கேண்மோ
விழிக்கனலதனான்மதனுடலெரித்தவேதகாரணவெனவுரைப்பாள். (௩௧௧)

வேறு.

புருடனுண்டபின்றானுணல்பூவைமார்க்
குரியதாமவனுழ்துயிலுற்றபி
னருகினிற்றுயின்றுங்கவன்முன்விழித்
தருடலைக்கொளலேகற்பினுறரோ. (௩௧௨)

பூண்கண்மாலைகள்பொற்றுகில்சாந்தணி
மாண்பின்மங்கையர்வல்லவனீங்கிடி.
லாண்டுநீங்கியடைந்தபின்மீளவுங்
காண்பர்கற்புடையோர்கள்கவினெலாம். (௩௧௩)

மணவனின்புறினின்புறுவாரவன்
றணவுதுன்புரிற்றுமுமவ்வண்ணமே
துணிவர்நாயகன்காயினுந்துன்புறார்
கணிதமற்றமகிட்சிகலப்பரே. (௩௧௪)

பிறரிற்சேர்கலர்பெண்மையின்மூத்தவர்
மறைவினன்றிமனையிற்றனித்திரார்
குறிகொண்மாதுலன்மாமியைக்கோதற
நெறியினர்ச்சனைநேயநிரப்புவார். (௩௧௫)

கணவன்பேர்சொலிலாயுகடக்குமென்
றுணர்வினுற்கனவூடுமிசைத்திடார்
மணவனுயுவிருத்திமலியுமென்
றணையின்மஞ்சளிசைவுறத்தோய்குவார். (௩௧௬)

பூத்தநாண்முதலாய்ப்புருடன்முகம்
பார்த்திடார்தினமூன்றுபரிந்தபின்
னீர்த்தடம்படிந்தேநின்றுநோக்குவார்
சீர்த்தகொண்கன்றிருமுகந்தீதற. (௩௧௭)

வேட்டவன்றறுவாய்க்கின்மைமேவுமேற்
பாட்டுடைக்கதிர்மாமுகம்பார்ப்பரா
னூட்டிலியாவர்நலமும்வியந்திடா
ரீட்டுகற்புக்கிழிபுறவெண்ணியே. (௩௧௮)

வேறு.

வாசற்படிமேலுரலுலக்கைவருசல்லடைவான்முறமீதி
லாசுற்றிடுந்தம்மனைத்திருவென்றனுகிவைக்காரளித்தவனிற்
றேசினுடனேயுதித்தவனிற்செனித்தசிறுவன்றனிற்சால
நேசத்துறுவர்பதியிடத்தினிற்பகையார்நிலத்தென்றும். (௩௧௯)

விதியார்புருடனிறந்தானேல்விரைந்தக்கணத்திலனுமரணஞ்
சதிராற்செலுத்தினிருவகையோர்சார்வர்கதியிற்புருடனொடு
முதிராத்தேவருருத்தாங்கிமுடிவில்காலம்பயனுகர்வர்
சதிரார்கற்பதருநிழலிற்றக்கோர்புகழத்தணவாதே. (௩௨௦)

கூடாவென்னிற்பாக்கிலேபூண்குளிர்சாந்தலர்வார்குழறுறந்து
நீடாருயிரைப்பரிக்கும்வகைநிறைபாவுண்டியோர்போது
நாடாநுகர்ந்துவிரதங்களவையிலறங்கள்புரிந்திருப்பிற்
றேடாமுறைநற்கதியடைவர்திரம்பினரகிற்செறிவாரே. (௩௨௧)

இவ் ஈறியற்றுங்கற்புடைமையெவர்பாலுளதங்கவர்வாய்மை
செவ்வாறுரைக்குமறையாகுஞ்சேர்ந்தமனையேசிவலோக
மெவ்வாறுரைத்தாளவ்வாற்றினிமையோர்சிரிப்பரெழுமுகிலு
முய்வாமழைபெய்யெனப்பெய்யுமுண்டோவவளினுயர்ந்தோரே. (௩௨௨)

என்னப்புகலச்சிவபெருமானிசைந்துமகிழ்ந்துகேட்குதலும்
பன்னற்கரியாளுலகேத்தும்பரனேயுணராப்பழம்பொருளே
தன்னிற்றெரிந்தபடிபுகன்றேன்றப்புண்டெனினும்பொறுத்தியென
மின்னைத்தழுவிக்களிகூர்ந்தான்விரிநான்மறைக்குமேலானோன். (௩௨௩)

வேறு.

அடினுறெழுந்தாருயரம்பரத்தவர்கள்
வீடினுர்துயர்விம்மலுற்றனர்முனிவரர்கள்
பாடினுரிசைகின்னரர்விஞ்சையர்பலரு
காடினுர்மடமங்கையர்நன்மகிழ்சிறந்தார். (௩௨௪)

தொழுதுகண்டுளிசோர்ந்திடவார்கலிகலிக்கும்
விழுமிதாமெனயாவரும்வியப்புறுமிடையிற்
பழுதுறுவருட்பார்வையான்பவளவாய்திறந்து
முழுதுணர்ந்தவாணகைமுகநோக்கியேமொழிந்தான். (௩௨௫)

இமையவல்லியோடியானளவளாவியசரிதங்
கமையினேடெவருங்கிடைபுனிதமாக்கரைத்தோர்
நிமையிலாதவராகியெம்மருளெலாநிறைந்து
சமையமாமறையுங்கடந்தின்பவாரிதிசார்வார். (௩௨௬)

சிந்தைவேறிலாதன்புடன்செங்கைகள்கூப்பி
யிந்தவாறெலாங்கேட்டவரெழுபவநீந்தி
வந்தவல்வினைமாசெலாந்தொலைந்துயிர்வாழ்ந்து
கந்தமாமலரோனுலகடைவர்வான்கடந்தே. (௩௨௭)

மடந்தைமாரிதுபரிவினுற்கேட்கிலிவ்வாறு
திடங்கொள்கற்புடையார்களாய்ச்செனித்தருளடைவர்
தொடர்ந்தவைதவியத்தினேர்துய்மையாற்கேட்கி
னடைந்திடாதுவைதவ்வியஞ்செனனமுள்ளளவும். (௩௨௮)

வந்திமங்கையர்மைந்தரையுயிர்ப்பர்நல்வறுமை
முந்துறும்பிணிமுயங்குவோர்தீர்ந்தின்பமுறத்தி
யுய்ந்துசெல்வமுமாயுவும்பெறுவரென்றுரைத்தா
வந்திவண்ணனுபாரணமுதல்வனுமண்ணல். (௩௨௯)

போற்றிவான்கணநாதர்கள்புடையினிற்சூழ
நீற்றின்மேனிவானிலவெழநிழலெனத்தொடருஞ்
சாற்றுமம்பிகையோடுந்தன்னாலயஞ்சார்ந்தான்
கூற்றினுக்கருங்கூற்றனுங்குரைகழற்கோமான். (௩௩௦)

உருகியன்புதேக்கெறிந்துவட்டெடுப்பமாமுனிவர்
பருகிக்காதினாலமுதினைப்பழிச்சியேமீண்டார்
பெருகுமாரருட்கொண்டலேபெயர்ந்தனனடியேன்
கருதுகென்றுநாரதமுனிகண்ணனுக்குரைத்தான். (௩௩௧)

சீதரன்றன்றிருசெவிதேக்கிடமாந்தி
யாதரந்தழைத்தின்பமாமளக்கரிற்படிந்தே
மாதுபங்கனுமங்கலைவழுத்தியேமுனிவர்
போதுறும்படிசெலுத்தியேதானகர்புகுந்தான். (௩௩௨)

தேவியோடுதன்றிருநகரடைந்துமைந்தனையுங்
காவியங்கணுருயிர்த்துவாழ்ந்திருந்தபின்கமல
மாவிலஞ்சியான்வந்தனம்பெறமனமதித்து
மேவினேனியான்றுவரையில்விளம்பினுனெனக்கே. (௩௩௩)

அனையபான்மையின்றுமக்களித்தேனெனவறையத்
தனையன்றந்தவர்தம்முடற்புளகெழத்தாழ்ந்து
வினையினீங்கினோம்வேறினிக்கேட்பதென்னென்றார்
முனைவரியாவருமுகுந்தனுமுதல்வனைநினைந்தார். (௩௩௪)

மீளக்கூறுவான்வீடுமன்வேந்தர்கள்வேந்தே
காளக்கந்தரன்கமலவொண்பதமறவார்க்குத்
தாளத்தாமரையான்பொறிதவிர்ந்திடுமின்னுங்
கேளிப்பான்மையென்றோர்மொழிகிளர்த்தினன்கிடைத்தே. (௩௩௫)

உமாமகேசுவரசம்வாதசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள்-௲௦௩௪.

புருடோத்தமன்மகிமையுரைத்தசருக்கம்.

அவதாரமீரைந்தாயறங்காக்கும்பேரொளியாயறத்தாலெய்துங்
கவலாதபெரும்பயனுயாவரையுமியாவையுங்கண்ணருளாற்காத்துப்
பவமாயைவலைவீசிப்பிரபஞ்சம்பயில்வித்துப்பரமானந்த
தவவீடுதருந்திருமாறனையன்பால்வழிபடுதிதவத்தான்மிக்கோய். (௧)

செல்வமெலாமிலக்குமியாற்செறிவதுவாமவள்சேருந்திறனேதென்னி
னல்வினையாலன்றியுருளக்கருமமரியையலாலனுகுருவாம்
பல்வகையென்புகல்வதுலகினிலுதித்தோர்மலரடிகள்பழிச்சல்வேண்டுங்
கல்வியுளாய்முத்திபெறுகருத்தினர்க்குமவனையலாற்கைபுகாவே. (௨)

கருவியாயிடனுகிக்காலமாய்க்கருத்தாவாய்க்கழறுநிற்கு
மருவியாயுருவாகியறமாகியறங்காக்குமவனுமாகி
வெருவிடாத்தானவராய்வானவராய்மானிடராய்மீட்டுமுள்ள
சுருவமாயாவினுந்தான்ரேற்றுனாய்வீற்றிருப்போன்றுளவமாலே. (௩)

மறையாகிமறையளிக்குமறையோனாய்மலையரசன்மங்கைபாகத்
திறையாகிமகங்களாயிரவிமதியனலாகியெல்லாந்தானாய்த்
துறையாகியறுசமையந்தோற்றுவித்துவினைதொலைத்துச்சமையவாத
மறையாதார்மனத்திருக்குமாதியெனநீயுணர்தியறந்தந்தாயே. (௪)

பூரணஞானக்கனியைமலர்மாதுவீற்றிருந்தபொற்புளானை
நாரணனைத்திகிரிவலந்தரித்தானைநன்மைகொளுற்புயமுளானை
வாரணவொண்கரத்தானைக்கவுத்துவநன்மணிசிறந்தமார்பினானை
யாரணனையிலஞ்சியினிலளித்தானையேத்துதிநீயன்பினோடும். (௫)

மாதவனைமாயவனைவாமனனைவசுதேவன்மைந்தனான
யாதவனைக்கேசவனைச்சீதரனையிபமழைக்கவெய்தினானைப்
பீதவனைதுகிற்புனைந்தபெருமானைக்கருமேகப்பெற்றியானைப்
பூதவனைக்காதலினாற்புகழுதிநீயினிச்செனனம்பொருந்தாய்மன்னே. (௬)

எக்காலுமெப்போதுமெவ்விடத்துமறவாமலிசைப்போர்தம்பா
லக்காலத்தப்போதிலவ்விடத்தினெதிர்மேவுமண்ணல்கண்டாய்
தக்கார்மற்றவனன்புசார்ந்தோரன்பற்றவரேசாலத்தீயோர்
முக்காலுமொழிந்தனனீயுளங்கோடியெனக்கரைத்தான்முதன்மைமிக்கோன்.

இத்தகையதிருமாறன்சரிதமெலாமெடுத்துரைப்பவிறைவன்கேட்டே
யத்தகையென்னுளங்கொண்டேனையவினிப்பூசனைக்காமவராார்கூறாய்
வித்தகமானிலமீதிற்பயில்வோரிலெனவுரைப்பவிடுமப்பேர்
முத்தனிதையறைகின்றான்முனிவராருஞ்சிரந்துளக்கமுறையாலம்மா. (௮)

அற்றாரேயெனினுமவாவகன்றிலரேயெனினுநிலமீதிலாக்கை
பெற்றாரிற்கற்றவரேபெரியரவர்குலமொழுக்கம்பேணாராகி
யுற்றாரினெழுகியவர்க்குள்ளன்போடியற்பூசையுஞற்றினோதம்
பொற்றாமக்கடவுளர்க்குமூவருக்கும்புரிந்ததினும்பொலிவுண்டாமே. (௯)

ஆதரிக்குங்கடவுளருமருமறையுநிலையறமுமவன்றன்னாவிற்
போதரிக்குமாதலினாற்போற்றினோர்பணிந்தோர்நற்பூசைசெய்தோர்
காதலிக்கும்பொருளளித்தோர்களித்திடநன்மொழிபுகன்றோர்கவலையற்றோர்
பூதலத்துக்கதிபருமாய்ப்புகலரியபெருங்கதியும்புணர்வர்மன்னே. (௧௦)

கற்றுணர்ந்தோர்மனஞ்சலிப்பக்கடியவுரைபுகல்பாவிகாலனூரிற்
குற்றமெலாமியற்றியதீக்கொடியோரிற்பரதவிப்பன்கொடுங்கோலோனே
மற்றவனையுயர்வாக்கித்தான்றொழாமன்னவனுமழைபெய்யாமற்
பெற்றியெலாங்குறைந்தவனுடரும்பசியாற்கொடும்பிணியாற்பெரிதுமாழ்கும்.

முன்னொருஞான்றறமுணராள்பிறர்பொருளேகருதுவதுமொழிவதெல்லா
மன்னியபொய்வஞ்சனைக்கேயிடமாஞெளொருவேசிவாழுநாளிற்
பன்னியநூல்கற்றுணர்ந்தபாவலனைவழிபட்டுப்பணிந்துபோற்றிச்
சொன்னபொருளீந்திறந்தாள்சோரனெனத்தொடர்ந்தவரையகற்றித்தோகை
மறுசெனனம்பார்ப்பனியாயுவந்துதித்துப்பெருங்கற்பின்மங்கையாஞ
ளூறுதியிதினிலையெனவேயுணர்தியெனப்புகலுதலுமோகைதாங்கி
யறிவுடையோனிவ்வுடலிலகலாதவறுமைதனையகற்றும்பெற்றி
பெறுவதுளதெனில்வகுப்பாயெனவுரைத்தானவனெடுத்துப்பேசலுற்ருன். ()

வேறு.

காலையினெழுந்துமுன்னங்கணபதிதனைநினைந்து
பாலைநேர்மொழியாள்வாணிபதிதிருப்பதம்வழுத்தி
மாலையுந்திருவினோடுவாக்குறத்துதித்துமீட்டும்
வேலைநேர்விழியாளோடுவிமலனைநினைத்தல்வேண்டும். (கச)

சரவணையுதித்தகோவைத்தன்மனைதேவசேனை
குரவணிகுழலாடன்னைக்குறித்துளங்கொண்டபின்னர்
புரவணிமகவானாதியெண்மரைப்புரவியேழு
ருணன்றூண்டியதேரோனையாதியாங்கிரகங்கடம்மை. (கரு)

எட்டெனும்வசுக்கடம்மையுருத்திரர்பதினொன்றென்று
கட்டுரைப்பவரைசத்தமருத்துகடம்மைக்கங்கை
தொட்டெழுநதியையேழுகடல்களைச்சுரபிதன்னை
மட்டறுதவத்தர்வாலகில்லியரைவழுத்தல்வேண்டும். (கசு)

வியாதன்வான்மீகிபாரத்துவாசநாரதன்மேம்பட்ட
தயாநிதியகத்தியன்கௌதமன்காசிபன்கண்வாதி
நியாயநன்முனிவோர்தம்மையரம்பையாதியிற்பேர்நீட்டுங்
குயாசலவானமாதர்குழாங்களைநினைத்தல்வேண்டும். (கஎ)

தருமசத்தியடவங்கடம்மைநற்பகலிராவை
வருமிராசிகளையச்சுவதிமுதனாள்கடம்மை
யிருதுவோடயனமாதமாண்டினையீரேழான
பொருவிலேழுலகையோரேழ்பூவினைப்பிலங்கடன்னை. (கஅ)

வேதியர்தம்மையாழிமன்னரைவேந்தர்தம்மை
மாதருந்ததியையாதிமாதரையுளத்திலுன்னித்
தீதறவணங்கித்தேசுமாயுவுஞ்செல்வத்தோடு
போதுறவழங்குகென்றுமீளவும்பொற்பினோடும். (கக)

விண்டுவைவாசுதேவவிமலனைப்பரமானந்தக்
கொண்டலைத்துளவநாறுகுழகனையழகன்றன்னை
முண்டகமுளரியானைமுராரியையிராவணன்றன்
றண்டநாயகனையென்றும்பரவுதறக்கதாமால். (உ0)

கோவிந்தன்கொண்டல்வண்ணன்கோபாலன்கோபிமார்க
டாவிந்தபுபத்தோன்றாமோதரனிராமன்காகுத்தன்
மேவிந்தப்பெயர்களோராயிரமுளான்விளம்பவல்லார்
பூவிந்தப்பிறப்பினெய்திப்போய்க்கதிசார்வர்மாதோ. (௨௧)

ஆயிரநாமநாளும்வழுவுறாதறையவல்லார்
மாயிரும்பிறவிசாரார்வல்வினைக்கடலின்மூழ்கார்
போயிருளகற்றிமீளப்புவியினைவிளக்குஞ்சோதி
ஞாயிறுபோலச்சிந்தைநண்ணிவீற்றிருப்பர்மன்னே. (௨௨)

என்பெறாரெவரேயேனுமிவனிடத்தன்புளார்க
டுன்புறார்பிறந்திறக்குந்துயருறாரென்றெடுத்து
மின்பெறுவொளிகூர்வேலான்வீடுமன்விளம்பக்கேட்டு
மன்பெறுமுறையான்பெற்றேனெனமனமகிழ்ந்துசொல்வான். (௨௩)

உலகினிலெவரேபூசைவணங்குதலுபசரித்த
லிலகமுதருத்தலாதியெடுத்தகாரியங்கட்கென்று
நிலமெலாம்புரப்போன்கேட்பநிறைமதியுடையகோமான்
றலைவர்வேதியரேயென்றாங்கவர்நிலைசாற்றலுற்றான். (௨௪)

வேறு.

வேள்வியுமறைகளுமொழுக்கமேன்மையுந்
தாழ்வறுபொறையுநற்றவமுஞ்சாற்றிய
காழ்வலியாசிரமத்தின்காட்சியு
மூழ்வலிவேதியர்க்கென்றுண்டாயதே. (௨௫)

ஏனையோர்க்கிம்முறையியலாதென்னினுந்
தானவர்க்கேகடன்றவிர்தல்கூடுமோ
ஞானமற்றவரதுநழுவின்ஞாலமு
மானுமிவ்வுயிர்ப்பொறையாற்றவல்லதோ. (௨௬)

பாலரேயென்னினும்பயிலுநான்மறை
யேலவேயுணர்ந்திடாரெனினும்வேதியர்
மாலுறவொருவனல்வயிறுதூர்த்திடுஞ்
சாலியன்னத்தினாற்றலைமைசாருவார். (௨௭)

விருத்தராய்வேதமோர்ந்தவர்க்குவேண்டியே
யருத்தினோர்க்குறுபயனறையவல்லரார்
விருப்பிலோர்சதசகத்திரநல்வேதியர்க்
கருத்தினோர்க்கினிப்பிறப்பறைதற்கில்லையே. (௨௮)

தானமும்பூசையுந்தாழ்ந்துஞற்றலு
ஞானவேதியர்தமக்கன்றிநண்ணுமோ
மானமுங்கல்வியும்வாய்மையாதிய
வூனமொன்றிலாதுணருரவுத்தோளினாய். (௨௯)

என்றவன்கூறலுமேந்தன்மீளவு
மின்னவர்க்கிம்முறையேதினெய்திய
தொன்றவேதெரித்தியென்றுரைப்பவீடும
னன்றவன்றனக்கிதையறையலாயினன். (௬௦)

கேட்டநின்வினவுக்குவிடையங்கேழ்கிளர்
நாட்டிணைப்புரந்திடுமருச்சுனன்னலம்
பூட்டியபவனனற்புகலக்கேட்டதை
நீட்டுவனுனக்கெனநிகழ்த்தன்மேயினன். (௬௧)

புருடோத்தமன்மகிமையுரைத்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - கூ௦௬௫.

பூதேவர்மகிமையுரைத்தசருக்கம்.

காகமாயோரவுணன்கானகத்திற்சானகிபொன்
னாகமார்தனமதனைநண்ணிமுகந்திடவந்த
மோகமாருயிருடனேமுடியெனப்புற்கணைதொடுமுன்
மேகமேசரணென்றுன்விழியொன்றுய்விதித்தோனே. (௧)

பூவேழுமொருகுடைக்கீழ்புரக்குமருச்சுனனென்போன்
றூவேழுபரித்திண்டேர்த்தபனனொளிதிகழ்கின்ற
தீவேழிலெனக்கதிகரிலையென்றுதெழித்திடலா
ஞவேழுபடைத்தகனவிற்பூதம்நண்ணியதே. (௨)

ஆகாயமிசைநின்றேயருச்சுனனைமுகநோக்கிச்
சேகாயதோள்வலியைச்சிந்தித்துவியந்துரைந்தாய்
வாகாயசொல்லன்றுமறைவல்லோருனக்குயர்ந்தோர்
தீகாயுங்கனற்கண்ணேய்தெளிதியெனப்புகன்றதுவே. (௩)

தெண்டிரையினெனதாழிசெலுத்துமுறைமையினடங்கி
யண்டியெனைக்குறையிரக்குமந்தணரோவெனக்கதிகர்
வண்டிமிர்பொன்னரிமாலைவானவர்தானவர்புகழ
வெண்டிசைவென்றவனெனையோவெளியனெனப்புகன்றதுவே. (௪)

முற்குறித்தபடியினிமேன்மொழிவையேலுனையடுவன்
விற்குனித்தாசுகமொன்றுலெனக்கண்கள்பொறிமேவப்
பற்கறித்துநோக்குதலும்பருவரலோடுருக்கரந்து
சொற்கநகர்புகுந்ததவனெதிருன்றுசுடர்ப்பூதம். (௫)

மாபூதமகன்றிடலும்வளர்திகிரிபுவிசெலுத்துங்
காபாலிமுனியாதகாமனிகர்வனப்புடையோன்
கோபாலனிவனென்னக்கொற்றமொடுபயின்றிருப்ப
வாபாதமொழிக்கிசையாணுப்பவனனெதிரடுத்தான். (௬)

தன்னையறிவித்தவனைச்சார்ந்துலகேழ்புரப்பதனால்
நின்னைவியந்துரவோரைநெறிகுலையமொழிந்தாயா
லன்னைபிதாவலிசிறிதேயாயின்மகவடலுவமோ
வென்னைமறையவர்வலிகடேர்ந்திலையோவிறையோனே. (எ)

அந்தணர்கடவவலியாலரசர்செங்கோனிகழ்வதெலா
மந்தணர்களொழுக்கத்தாலாருயிர்கள்செறிவதெலா
மந்தணர்களுன்மறையாலருமாரிபொழிவதெலா
மந்தணரிலதிகருலகதினுண்டோபுகலாயே. (அ)

இந்திரனுங்கௌதமனாலிடரடைந்துவருந்திலனே
முந்தியவாரிதிகள்குறுமுனிகரத்தாலடங்காதே
செந்தழலோன்பிருகளித்ததீச்சாபமேற்றிலனே
சுந்தரனேயெனவொன்றுஞ்சொல்லாமலிருந்திடலும். (கூ)

பின்னுமிதுபுகல்கின்றான்பவனனெனும்பெயர்படைத்தோன்
முன்னமங்கிரசுவளித்தமுதற்புதல்வன்பிற்கலைபதியார்
பன்னிதனைவருணனெடுத்தகன்றிடலாற்பதிபுகுந்து
தன்னிலையப்புனலனைத்துமாந்திடலுந்தளர்வெய்தி. (க0)

மாதுதனைமுன்கொணர்ந்துவைத்தடிதாழ்ந்தனனென்று
பூதலமெலாமுணரும்வருணனும்புரவலனும்
வேதியருஞ்சுரர்குருவும்விளக்குவலியுணர்கென்றுங்
கோதுடையகுணத்தரசன்குறித்திலானொருமொழியும். (கக)

மீளவிதுபகர்கின்றான்மேகவாகனன்முதலோர்
மூளனலினவிமருத்துவருக்களியாமுறைமறுப்பக்
காளவிழிப்பெரும்பூதங்கற்பித்துக்கைதொழலாற்
கோளடையாதவிநிறுவுஞ்சவனகனார்குறியாயே. (கஉ)

வானவர்களாசுரரால்வாடியரும்போர்விலங்கி
ஞானவயித்தியனருகுவண்ணவருட்செய்துய்ப்பத்
தானவர்கள்குலமனைத்துஞ்சருகுகனற்சார்ந்ததுபோ
லீனமுறப்புரிந்துவெற்றியெய்தியதையுணராயோ. (கங)

ஒருஞான்றுதானவராலுலப்புண்டுவானவர்கள்
வருமாறுகண்டருளால்வதிட்டமுனியெதிரேற்றுக்
கருமேனியுடையாரைக்கட்பொறியாற்பொடிபடுத்திச்
செருவேற்றிப்புனைந்தகன்றதிருமுனியார்செப்பாயோ. (கச)

வானவருந்தானவரும்வலியபோர்செயமயங்கிப்
பானுவுடன்மதியகலப்பாரனைத்துமிருண்மூடி
யினபலராயிமையோரெஞ்சியடைந்தத்திரிபாற்
றானடையவவனமரர்தனைப்புரப்பானுளங்கருதி. (கரு)

இரவிமதிக்கிடரடையாவிகலுடலமீந்தழைத்துப்
பரவகல்வான்மிசைநிறுவியரக்கர்குலம்பாழ்படுத்தி
யுரைசெய்பொழுதினுமுன்னரும்பர்தமைமகிழ்வித்தா
னரசேமற்றந்தணனேவேந்தனேவவனம்மா. (௧௬)

கேட்டியின்னும்பலகோடிவேதியர்கள்கேடில்புகழ்
நாட்டிலவர்க்கதிகருளரெனவெவரேநவில்வோர்கள்
பூட்டியவிற்கரத்தோயென்றுரைத்திடவப்புரவலன்றான்
மீட்டுமொன்றும்புகலானாய்விழுந்தான்போலிருந்திடலும். (௧௭)

உலவைவானவன்மீள்வுருத்தவனைமதியானாய்
நலமெலாநீயடைந்தவாறுணராநரபதியே
குலமுனிவன்தாத்திரேயன்குரைகழற்றாள்வழிபட்ட
பலனன்றோவரசரின்மேம்பட்டதெனக்கரைத்திடலும். (௧௮)

அக்காலத்தவனறிவுசிறிதோங்கியானந்த
முக்காலமுணர்வானைவழிபட்டமுறையதனா
லிக்காலேழுலகாளவெய்தியதாமினிமறையோர்
தக்காரென்றுணர்வனெனவினிமையொடுசாற்றுதலும். (௧௯)

வேதியருக்கினியவனாய்விளங்குவையேலுனதாயு
போதவிருத்தியினடையும்பொய்ப்பையேற்பொய்க்குமென
வாதநாமத்தண்ணல்வகுத்தகன்றானெனமொழிந்தான்
கோதிலாவீடுமனாங்குரவனறக்குமரனுக்கே. (௨௦)

கேட்டுமுதிட்டிரன்மீளக்கேள்கிளருமூதாதை
தாட்டுணையிற்றொழுதெழுந்துசதுர்மறையோர்பெரும்புகழை
நீட்டியின்னுமுரைத்தியெனநினைப்பயர்ந்துவருதலினாற்
றோட்டுநறுந்துழாய்முகிலேசொல்வனதைக்கேளென்றான். (௨௧)

பச்சைமேனியனடியைப்பரவிமறையவர்பெருமை
யிச்சையுளேனெடுத்தியம்பவேண்டுமெனவிரந்திடலு
நச்சுமுலைப்பூதகியைநாடியுயிர்தொலைத்தபிரான்
முச்சகமும்புகழ்மறையோர்முதன்மையெடுத்தறைந்தானே. (௨௨)

வேறு.

ஆயுவேண்டினர்செல்வமாண்மைவேண்டினர்மிக்க
சேயைவேண்டினர்தக்கசிலம்வேண்டினர்முத்தி
நேயம்வேண்டினர்சுவர்க்கநீடுவேண்டினர்விப்பிரர்
தூயதாளிற்றொழுதுசூழ்வரேசுற்றமென. (௨௩)

பாசம்வேண்டினர்பஞ்சபாவம்வேண்டினர்தீயர்
நேசம்வேண்டினராயுநீடுமாநிதிவாழ்வு
நாசம்வேண்டினராயினான்குமாமறையோரைக்
கூசிடாவசைபேசியிகழ்வரேகொடியோர்கள். (௨௪)

முன்னர்நாடுருவாதமுனிவனெம்மனையெய்தி
யுன்னருஞ்சிலவைகலுற்றனன்பரிவாக
மன்னியங்கவன்பூசைவாக்குடன்மனங்காயந்
தன்னொடும்பிரியாதுதானியற்றிடுநாளில். (௨௫)

முனிவுறுமருள்கூருமுகமலர்ந்திகன்மேவுந்
தனிபடும்பலரோடுசெருவுமுண்டியைநீங்கு
மினிதருந்துனர்கூறுமொருவனைவயிறேற்கும்
வனைகொள்பஞ்சணைமீதுமதியினுந்துயிலாகும். (௨௬)

ஏருமெம்முகமேனுமீளுமெம்மகமேவு
மாருமன்றெனுமாறியாவரேபுகல்வோர்க
ளாகுலஞ்செனியாமலாதரங்குறையாம
லோகைகொண்டவனோடுலாவுவேனொருநாள்போல். (௨௭)

வேறு.

இத்தன்மையோடுபயில்கின்றநாளிலொருநாளெனக்குமகிழ்வோ
டத்தன்குறிக்குமிடுபாயசத்தின்மிசையாசையாயதெனவே
சித்தங்குளிர்ந்துசிறுபோதின்முன்னர்செய்வித்தருந்தவொருபாற்
றுய்த்தேயொழிந்ததுடன்மீதுபூசுகெனவோதவன்புதொடர. (௨௮)

வீறுருக்குமணியோடியானுமிகுபாயசத்தைவிரகா
னீறுருமேனிமுழுதுந்திணிக்கநிகரற்றஞானமுனிவன்
கூறுவிடத்தினவனேபணிந்துகுலமாதுமேனிகுறியாய்த்
தேறுதபித்தனெனவேயெழுந்துசென்றான்புராரிசிவனை. (௨௯)

மடமாதுருக்குமணியோடியானுநிழல்போலமன்னிவரவே
தடமானதேரைமறுகூடுகொண்டுசார்கென்றளித்தருகினில்
வுடனாயுளாரையவனேவிமீளவொருகோல்கரத்தினிறுவி
யடலோடுமாதினுடலிற்புடைத்தங்கவளோடுவீதியணுகி. (௩௰)

விரைவோடுதேரின்மிசைகொண்டுதானுமுறமேவுகின்றபொழுதிற்
றிரைபோலவந்துபலசேனைமன்னர்திரளாவெருண்டுதிகையா
வுரைபாடியென்னைமதியாதுசீறிவருவாரையுங்கையமையாக்
குரைதேர்கடந்ததிசையூடியானுமுடனேபுகுந்துகுறுகி. (௩௧)

முனிவின்றிமானவழிவின்றியங்கைமுகுளித்துடன்செல்பொழுதிற்
கனியன்னவின்சொலுடையாளைமீளநிலமீதெறிந்துகதிமான்
புனைதேரினோடுமவனேகியானுமுணரப்புவிக்கணிழியாத்
தனிமங்கைமேனிமிசைதூளிறைத்துவிரைவோடுசார்ந்திரதமேல். (௩௨)

மீளச்செலுத்தியொருதேரையந்தவிமலப்பிரதாபமுனிவன்
றாளத்தலர்ந்ததிருமேனிவேர்வுதொடரப்படர்ந்தபொழுதிற்
காளக்கருங்கணுடையாளைவந்துகண்ணுற்றெதிர்ந்துதிகிரி
வாளத்திலங்குபுவிமீதொருத்தர்நிகரானையன்பின்மதியா. (௩௩)

தீசெய்தநன்மைபலவென்றுகூறிநெறிவல்லவன்கைபெறுதூண்
மாசென்றகற்றநினையாது கொண்டுமடமங்கையோடுமுடனே
காசொன்றுதேரின்மிசையேகுகின்றகாமாரியென்றுமுனிபின்
றேசெய்தவந்துதொடர்கின்றதன்மைதெரியாவுவந்துதிருகி. (௩௪)

வந்தானருட்கண்முனிதேரிழிந்துவரவேமகிழ்ந்துகுறுகி
யந்தாமரைக்குநிகரானபாதமுடிசூடிநின்றவளவிற்
சிந்தாகுலத்தினுறுமாறுபற்பல்செயல்செய்துமென்னைமுனியீர்
கொந்தார்குழற்பொன்னொடுநீயுமென்றுகுழகன்வியந்துபுகல்வான். (௩௫)

வேறு.

யான்செலுமுறையெலாமிசைந்துநிற்றலா
லூன்செய்வேலினரெலாமுனக்குள்ளாகியே
வான்செலுநின்றொழிலாற்றிவைகுவர்
தான்செலார்பொன்றுவர்தரணிமன்னரே. (௩௬)

எனக்குமேபாயசமீந்தருந்தலாற்
றனக்குயர்விலாப்பரந்தாமன்றன்பத
மினிப்பலநாளகன்றிற்றினெய்துவா
யுனக்கரியாயதிங்கொன்றுமில்லையே. (௩௭)

மேனியிலன்பொடுமின்னுநீயுமாய்த்
தானுறப்பாயசந்தடவுநீர்மையா
லூனுடைநின்னுடற்போழ்வுறுதுறை
வானவர்படைகளான்மற்றொன்றுலுமே. (௩௮)

எங்கணும்பூசியென்னுள்ளங்காற்கிடாச்
சங்கையாலங்குறச்சாயகம்படிற்
பங்கமாம்பிறவியான்பலவுந்துய்த்தலான்
மங்குறுச்செல்வங்கண்மல்குநின்னுழை. (௩௯)

அப்பெரும்பழுதினீயந்தணாளர்கட்
கெப்பொழுதும்வழிபாடியற்றிடிற்
றுப்படையாதுனக்கிடையிற்சார்வுறு
நிற்பயனுகிநீநினைத்தனான்றினே. (௪௦)

மாதிவளன்பினுல்வழிபட்டாற்றலாற்
காதலனிவண்மிசையன்புகாமுறு
மேதமென்றகன்றிடாதின்பமெய்தலா
லோதருமின்பமுமுகவுமெய்துமே. (௪௧)

துகளிணைக்கைகளாற்றுடைத்திடாமையா
லகலுறுமாக்கமுங்கற்புமாற்றுமாற்
புகலுமென்றேர்மிசைபுகுந்துமீடலாற்
றகவினின்னேடருங்கதியிற்சாருமே. (௪௨)

எத்தனைபுடைப்பவளென்கைக்கோவினா
லுத்தமமேனியிலுறப்பட்டாளவட்
கந்தொகைபுத்திரரளிப்பசெய்துமெய்
வித்தகவோர்மொழிவிளம்பக்கேட்டியால். (௪௩)

எண்ணிரண்டாயிரத்தெழுவருக்கெலாங்
கண்ணிவண்முதன்மைகற்புடையகாதலி
மண்ணினுநின்னொடுமருவிமீளவும்
விண்ணினும்பிரிகலாளாகமேவுமே. (௪௪)

என்றுபற்பலவரமீந்துமாமுனி
நன்றுபுகலுரைசொற்றுவாழ்த்தியே
நின்றருக்கரந்தனனினைந்துபோற்றியே
மன்றலங்குழலொடுமனையினெய்தினேன். (௪௫)

இந்திரதிருவெலாமெதிர்ந்தவாறுபோல்
வந்தகநிறைந்ததுமணிகளாடைகண்
முந்துபூணிருநிதிமுன்னரிற்சத
வந்தரங்களித்தனமன்பில்வைகினேம். (௪௬)

அந்தணர்நிறைமொழியறியக்கூறினேன்
சந்ததமவருடையன்புதங்கினோ
ரிந்தநல்லுலகினிலேதுறார்நலன்
சிந்தைசெய்கெனவரிதெளியக்கூறினான். (௪௭)

அறத்தின்மாமைந்தனுமன்புவிஞ்சிட
நிறக்கிளர்மேனியாவிலைசெய்வாண்முக
முறக்கணானோக்கியேயொன்றுகூறினான்
திறத்தினான்முனிவரர்சிறப்பினோங்கவே. (௪௮)

அத்தகைமாமுனிகயிலையாண்டகை
சுத்தநல்லுருவெனச்சொல்வருஞ்சினைக்
கொத்தறமுடித்தவர்குழகன்பிஞ்ஞகன்
முத்திநாயகன்புகழ்மொழியவேண்டுமால். (௪௯)

என்றறனளித்தவனியம்பக்கேசவன்
குன்றெனவிருபுயமொளிரக்கொற்றமு
நன்றியுள்புளகமுமீதுநண்ணவே
யன்னொருவாய்மொழியறைவனன்பொடும். (௫௦)

தகுவதைவினவினைக்கேள்விசார்ந்தவர்
மிகுதியின்விளம்பினர்வினையினீங்கியே
புகுவர்நற்கதியினிப்பிறவிபோற்றிடார்
மகிமுதியகத்தெனவரதனோதுவான். (௫௧)

சிவனுறுபேரருட்செயலையாவரே
புவனியிலுணர்ந்துனக்குரைக்கும்பொற்பினோர்
தவமுயர்பிரமனும்யானுஞ்சாற்றுதற்
கவனிலையுணர்கிலோமென்னிலாசற. (௫௨)

மற்றவனடித்துணைவணங்கிவள்ளறன்
பெற்றிதங்கருளினாலுணர்தல்பேசுவன்
குற்றமொன்றிலாயுளங்கோடியென்றுமால்
சொற்றனன்பிறர்புகழ்சொலாதவாயினான். (௫௩)

உருத்திரமோர்சதமுள்ளன்போடெவன்
கருத்துறப்புகன்றுளானிகத்திற்காணொணாத்
திருத்தகுமூன்றினுஞ்சிறந்தநான்கெனும்
பெருத்தநல்வீட்டையும்பெறுவன்பின்னரும். (௫௪)

தேவைமாதேவனென்றுரைப்பர்சீர்பெறத்
தாவுறவுயர்ந்தவரிலாததன்மையாற்
கோவமாந்தாமதகுணத்தனென்பது
பாவகாரியத்தர்தம்பாங்கிற்பண்புளோய். (௫௫)

தக்கசாத்துவிதனுமமரர்தங்கண்மாட்
டொக்கலினிடத்தருளுருவமாவனால்
முக்குணங்கடந்தவன்மோனஞானியர்க்
கக்கரவுருவனான்மறைகட்கண்ணலே. (௫௬)

மறந்தகம்பொருந்தினோர்க்கிடியினேறுவங்
தறந்தரவணங்கினோர்க்கெளியனாகுமாற்
சிறந்ததக்கன்மகஞ்சிதைந்ததன்மையு
முறைந்தவருய்ந்ததுமுரைக்குஞ்சான்றிதே. (௫௭)

புரங்களோர்மூன்றையும்பொடிபடுத்திய
சரந்தனைக்கரத்தினிற்றரித்தஞான்றினி
லுரந்தருகுழவியாயுறலுமும்பர்கள்
வரந்தருவானடிவணங்கிநோக்கினார். (௫௮)

வீரியருருவமாய்விளங்குமைந்தனைச்
சீருடையமரர்கண்டதிசயித்தலு
மேருடனுறுதுருவாதனென்றுபேர்
காருடைக்கந்தரன்கழறிக்கூறுவான். (௫௯)

அருளனுரூயைமுன்பறைந்தவாய்மையா
லிருளறுகுழவியைவளர்க்கவென்னலுந்
திருவனாண்மைந்தனைச்சிவமெனும்பொரு
ளுருவமாயுலகெலாமுலாவுமோகையால். (௬௦)

அப்பரம்பொருளெனதகத்தில்வந்தது
மிப்படிநல்வரமீந்துபோயது
மொப்பிலாய்வுணர்திமுன்னுரைத்தவேதியன்
முப்புராருதனன்புகழைமுற்றவே. (௬௧)

கேளெனப்பின்னருங்கிளத்துவானுடற்
காளமேகத்தினைக்கடுக்குங்காட்சியான்
றோளிணைபுளகெழமுனிவர்தொக்கனர்
நீளுறுசிந்தைகணிமலமோங்கவே. (௬௨)

வியாதனாற்சிவனுடைமகிமைவேறொரு
பயோநிதிகடைந்தமுதெடுத்தபண்புபோற்
றபாவுடையோனொருசரிதமாக்கினா
னியாயமாய்ந்தவரெலாம்பிறவிநீங்கவே. (௬௩)

அச்சுதனிர்க்குணனாதியவ்வியன்
சச்சிதானந்தசுதந்தரப்பிரபு
நச்சினாரிருவினைநலியுமாண்டகை
யிச்சையொன்றிலாதவனெண்டிக்கம்பரன். (௬௪)

படைத்தவற்படைத்தவன்காக்கும்பான்மையை
யுடைத்துளோர்காப்பவனுயிரைநீக்குவோ
னிடர்ப்படாக்காப்பவனெங்குமாயினோன்
னடற்படுபூதங்களனைத்துமாயுளோன். (௬௫)

தன்முகத்துதித்ததுதழலும்பர்க்கெலாம்
பன்முகத்தவிதரும்பான்மையாயதா
னன்முகத்திரவியுமதியுநல்வழி
வின்முகத்தோளினாய்விளம்பக்கேட்டியால். (௬௬)

அங்கவன்றிருப்பெயரறையினும்பல
விங்கிதத்தன்புகழிசைந்துஞற்றினும்
பைங்கடற்றரங்கநேர்பவமகன்றிடுஞ்
சங்கையற்றுயர்கதிசார்வர்திண்ணமே. (௬௭)

அமலநாயகன்பெயராயிரத்தினும்
விமலமார்முக்கியவிசேடநாமங்க
ணிமலமொன்றிலார்களுநினைந்துகூறிடிற்
கமலனவ்விதியையுங்கடக்கலாற்றுவார். (௬௮)

என்றுபற்பலமுறையெடுத்துக்கூறலுங்
குன்றுயரிருபுயன்கொடுமைதீர்ந்தன
னென்றுளமகிழ்ந்தபின்னிருகையஞ்சலித்
தொன்றுகேட்டனன்பிதாமகனையோகையால். (௬௯)

வே று.

நல்லதருமங்கடனைநல்கினுமுணர்ந்தே
செல்லுமுறைநின்றிலர்திரிந்ததையிகழ்ந்தே
வல்லபடியேமொழிவர்மாண்பெனமதித்தே
யொல்லைவழியேபயில்வருலகதினிரண்டாய். (எ0)

அங்கவர்கடஞ்செயலறைந்திடுதியென்னப்
புங்கவரினைத்தகுரவன்புகலுகின்றான்
பொங்குறுமிராசதர்கடாமதர்பொருந்தார்
தங்குவரதிற்புனிதசாத்துவிதமாந்தார். (எக)

அம்முறையினுலுணரவாமெனவறிந்தே
செம்மலிதுகூறுவனினிச்சிலர்கள்சாது
மைமலியசாதுவெனமாமுனிவர்சொல்வா
ரிம்முறையெனக்கறியவிண்டுபுகலென்றான். (எஉ)

தானுமறியானொருவர்சாற்றுதலுமோரான்
மானுடனசாதுமதிவற்திருவிதத்து
மீனமறவேயுணரினிமையவருமாய்ந்து
ஞானமுறுசாதுவெனவேகவில்வர்நாமம். (எங)

என்றுபுகலத்தருமனின்பமெழப்பல்காற்
சென்றுதொழுதையவெனதையமதுதீர்ந்தே
னென்றுமினியானுனையுசாவுமனமில்லே
னென்றனன்வியாதமுனியிம்மொழிபகர்ந்தான். (எச)

அறக்குமரன்மாநகரடைந்தரசனோடுந்
திறத்துடனடைந்திடுதல்சிந்தைசெயுநீரான்
புறத்துடனகத்துமொருபுன்மைசிறிதில்லாய்
நிறத்தருளினோடும்விடைநேர்தல்கடனென்றான். (எரு)

அனையமொழிகேட்டறனளித்தவனைநோக்கி
மனையறனுரைத்தபடிமன்னர்நெறிதாங்கிப்
புனைபுகழறம்பொறையினோடுலகுபோற்ற
வினையமுடன்வாழுதிவிளங்கிளைஞரோடும். (எசு)

கண்ணனுரையின்படிகளித்திடுதிபின்னு
மண்ணலுனையீன்றவனுமன்னையுமிருந்தார்
பண்ணுடையர்தம்மைவழிபட்டிடுதிமிக்கோ
ரெண்ணமுறவேனையரிடத்தருள்செய்கென்றே. (எஎ)

வேள்விபலவேபுரிதிவேதநெறிகொண்மின்
தாழ்வையகன்மின்பிறர்கடாரநினையாதீர்
வாழ்வுறுமின்முன்னயனம்வந்திடிலடைந்து
கேள்வியுடையீரருகுகிட்டுமினியாரும். (எஅ)

என்றுவிடைநல்கவிருபாதமுடியேற்றி
மன்றல்கமழ்மாலைபுனைமன்னவருமாலுந்
துன்றுபலரும்புரியடைந்தனர்தொகுக்கும்
வென்றிமுனிவோரும்விபினங்களிலடைந்தார். (எகூ)

பூதேவர்மகிமையுரைத்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௲சச.

வீட்டுமன்முத்தியடைந்தசருக்கம்.

தேரிழிந்தவனிதன்னிற்றிருப்பதஞ்சிவக்கவோடிப்
போரிடையவனர்க்கஞ்சிப்புகுங்குகைமுசுகுந்தன்றன்
சீருடைத்துயிலைப்பங்கஞ்செய்தவனங்கம்வேவ
வோரிடைச்செய்யும்விநோதன்றன்பதமுளத்துவைப்பாம். (க)

வருமறன்குமரன்றந்தைமலரடிவணங்கித்தாய்மார்த்
திருவடிதொழுதுவேதரடிமலர்சிரத்திற்றாங்கிப்
பொருவறத்தவிசினெய்திப்புவிபுரந்திருந்துபின்னு
மிருவினைதவிர்ந்தோன்பக்கலேகுதற்கொருப்பட்டானே. (௨)

உத்தரதிசையைக்காலையுதையன்வந்தடுத்தலோர்ந்து
கைத்தலவண்மைமிக்கவிளைஞருங்காவல்வேந்து
முத்தமக்கிருபனோடுஞ்சஞ்சயனோடுமாலும்
வித்தகவிதுரனோடும்பிதாவொடுந்தேர்மேற்கொண்டார். (௩)

குந்தியுஞ்சுபலன்றந்தகொம்புமுன்செல்லமற்றும்
வந்திகர்மருங்குசுற்றயுயுச்சனும்வணங்கிமேவ
வந்தணர்குழாங்களோடுதவுமியனருகினெய்த
விந்திரனிவனேயென்னவெய்தினனேந்தலம்மா. (௪)

அறனருள்காளையந்தவீடுமனருகாகாமுன்
றிறனுடைமுனிவர்யாருந்திரண்டனரவரைச்சென்னி
யுறமுறைவணங்கித்தாதைதாதைபாலுற்றுத்தாழ்ந்து
நெறியுறநின்றுவாய்மைபுகன்றனனேயமிக்கான். (ரு)

நின்மகன்விதுரனுதிருபருமாலுமேனை
வின்முனையரசாருமாதருமறையான்மிக்க
நன்மைசேர்சருவஞானமுனிவருநாடிநின்பா
லின்முகராகிவந்தாரேந்தனீகாண்டியென்றான். (சா)

ஆங்கவன்விழித்துநோக்கியாவரும்பணிந்துபோற்றத்
தாங்குநல்லருளாலாசிசாற்றியேமுனிவர்க்கெல்லாம்
பாங்குறப்பணிவுகூறிப்பரந்தாமனடியையுள்ளந்
தாங்கியேதுதித்துப்பின்னர்சாற்றினன்மாற்றமொன்று. (எ)

புவியிளைப்பகற்றவேண்டிப்புவியில்வந்துதிந்நாய்நீயிக்
கவினுடனொருவராலுங்காணொணாமாயைவல்லோய்
தவிரெனதிழிபைநன்மைதருதியென்றிரந்தான்கண்ணன்
பவமகன்றுயர்ந்தவெட்டாம்வசுபதம்பாலித்தானே. (அ)

செங்கண்மாலருள்கைக்கொண்டுசெழுந்தவமுனிவராரு
மிங்கிதத்தாசிகூறத்தனயனையேறநோக்கி
நங்குலத்தனையர்நின்பாலொடிக்கருமன்புதாங்கி
யிங்குனைப்பரிப்பர்வாழ்கென்றிசைத்தருள்வழங்கினனே. (சு)

விதுரன்சஞ்சயனுயுச்சன்வேதவிற்கிருபனாதி
முதுமொழியோர்க்குநன்மைமுகமலர்ந்தினிதுகூறி
மதுரமாமொழியாற்றுமுமாதருக்கன்புகூர
விதமொழிபகர்ந்துபாண்டுமைந்தனுக்கிதனைச்சொன்னான். (க0)

குவலயத்தரசர்தம்மைக்கொடுஞ்சமர்முகத்துவென்று
நவநிதியீட்டித்தக்கோர்க்குதவிநான்மிகுத்துவைத்த
கவினுறுபொருள்களியாவுங்கலைமறையவர்க்கும்வேள்வி
யவிதருவதற்குமாதுலர்க்குநீயளித்தியென்றான். (கக)

சொற்றவருதுவஞ்சந்தொடர்கலாதருளினோடு
கொற்றவர்பணியவாழ்தியினைஞரோடென்றுகூறி
மற்றவன்றன்னைவாழ்த்தியருள்செய்மீள்வானநாட்டி
னுற்றிடற்கென்றானருங்கைதொழமகிழ்வினோங்கி. (கஉ)

வடந்திகழ்மூலயினுடன்வாய்மையால்வந்தசாபங்
கடந்தனனென்றுமூன்றுகடவுடன்பெயருமேத்தி
யடங்கியவாயுபந்தமகற்றியேயுடலைநீத்தான்
றொடர்ந்தொளியெழுந்துவான்மேற்றுன்றியேமறைதலேற்ற. (கங)

வானவரலரின்மாரிவழங்கினரந்தரத்தி
லானதுந்துபிமுழங்கிற்றிந்திரனாதியாக
ஞானமாமுனிவர்தேவர்நலத்தெதிர்கொண்டுமுந்து
தானுறுகதியினுய்த்தார்தலத்துயிர்குளிர்ந்ததன்றே. (கச)

ஆவிபோயகன்றபின்னரனைவருந்துயரந்தாங்கி
மேவியேயருவிசோரவிம்மினர்புரண்டுசோர்ந்தார்
காவியங்கண்ணினருங்கடலெனக்கலித்தார்ஞாலத்
தேவருமானுமெய்தித்தெருட்டினர்தெளியமாதோ. (கரு)

பற்பலபுகன்றுதேற்றிப்பரிவினோடிருத்தியாருங்
குற்றமொன்றிலானுக்கிமவிதிசெயக்குறித்தகாலை
சிற்பரமுனிவரோமஞ்செய்தனலெழுப்பவேந்தர்
முற்படுகருத்தினலேயித்தனமுறையாற்சேர்த்தார். (கசு)

தேன்படுமலங்கலானைத்தெண்ணீர்களாட்டிமீள
வான்படுதுகில்புனைந்துமாலையுஞ்சாந்துநல்கி
யூன்படுவேலினார்கடிரிதிராட்டிரனுமுற்று
வேன்படுமுதிட்டிரப்பேர்வேந்தனும்பதம்பொறுத்தான். (கஎ)

இளையவரிருவர்சென்னியேந்திநல்விமானத்துய்த்தே
தளையவிழ்விமானமந்தநால்வருந்தாங்கிச்செல்ல
விளைபயனுணர்ந்தவேதமுனிவரர்வேலைசூழ்ந்து
வளைதரச்சாமவோசைமலிதரத்திசையின்மன்னோ. (கஅ)

வீமனும்வலாரிதந்தவிற்கரத்தவனும்பாங்கர்
சாமரமசைப்பமாதரனைவரும்வட்டந்தாங்க
நாமநல்விதுரன்வெள்ளைநற்குடைநிழற்றச்சென்றே
யீமமேலுறுத்தியோமத்தெரியினுக்குணவுசெய்தார். (கசு)

ஆடையாபரணமீழமான்கணன்மணிகளாதி
வேடைகடீரவேதவேதியர்க்களித்துநீங்கி
நாடெலாம்புரக்கும்பற்பனரபதிக்குழாங்களோடும்
பீடுறுகங்கையென்னும்பெயர்நதிக்கருகுசார்ந்தார். (உ0)

சிறப்புறமறையிற்கூறுஞ்செயன்முறைக்கடன்மேற்கண்டு
நெறிப்படவியற்றிநாடோறருங்கடனிறைந்தபின்னர்
முறைப்படநிலமுமானுநிதியமுமுதவிமுற்றித்
துறைப்படமுனிவர்சூழத்துளவினானுடனிருந்தான். (உக)

ஆண்டொருமங்கையாகியவிரொளிமேனிபொங்க
மாண்டருபூண்கண்மின்னமலர்விழியருவிபாயப்
பூண்டபேரன்பினோடுபுதல்வனுக்குருகிநின்றா
ளீண்டுலகேழுமீன்றசானவியென்னுமன்னை. (உஉ)

கங்கையென்றுணர்ந்தெல்லோருங்கழற்றொழுதேத்திநிற்ப
மங்கையென்புதல்வனாயுவலைவதேமதிமிக்குள்ளோ
னிங்கிதவறம்வழாதானினியவனெவர்க்குந்தென்பாற்
றங்கினோர்கடனடாத்துஞ்சால்புடையவன்றிதற்றோன். (உங)

வாய்மையினெறிவழாதோன்மழுவலான்றன்னைவென்ற
தூய்மைசேர்வின்மைமிக்கோன்சுராசுரருணராவெல்லாம்
நேய்மையினுணர்ந்துகூறுநிராமயவுளத்தன்போரிற்
சாய்வதுதகவேதியசிகண்டியாலெனச்சலித்தாள். (உச)

அற்புதஞ்சிகண்டிமாய்த்தானென்பதற்கையமுண்டாற்
பொற்புவிவேந்தனோந்துகுலிசமும்போழாமெய்ய
னுற்பவமொழிந்ததென்னேயென்றதுமுரைக்கலானான்
சிற்பரம்பொருளாய்நின்றசெங்கண்மாலின்சொலோடும். (உரு)

கைவலிச்சிகண்டியோடாகண்டலரனேகரேனு
மெய்வலியோனைவென்றுடுனைவரோமேலிதம்மா
செய்வலித்தவத்தான்சாபத்திறத்தினாலுடலம்பெற்றான்
மைவலிகுறைத்துமீளவசுவினுளொருவனானான். (௨௬)

அத்தனான்மறலிமேவாவருளுடைவரம்பெற்றானைச்
சுத்தமாமுலகையீன்றாயுனதகந்தோற்றினானை
முத்தனையவனையாரேமுடிப்பவர்துயருறேலென்
றுத்தமனுரைப்பவாசியுரைத்துருக்கரந்தாளன்னை. (௨௭)

தன்றுயராறிக்கங்கைதனதுருக்கரந்துசெல்லப்
பொன்றுயராறவைகும்புயத்தினானுதிட்டிரப்பேர்
மன்றுயராறானாகிவரதனைநினைந்துமாழ்கி
யென்றுயராறுமாறென்றவைப்புறத்திருந்தான்மன்னோ. (௨௮)

வேறு.

மென்முறையாமநுசாசனீகமெனும்பருவமுனியியம்புமந்தச்
சொன்முறையாற்றமிழில்சகத்திரமொருநூறெண்ணொன்பான்றொடைகளாக
நன்முறையாங்கவிமுதலைநல்லயன்சீரிதழ்நாவினவிலும்வாணி
பன்முறையாய்ந்திடுமுல்லைமுருகயன்பாடவுஞ்சிலசொற்பகர்ந்தாண்மாதோ.()

வீட்டுமன்முத்தியடைந்தசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௲௱௮௯.

அநுசாசனிகபருவம்முற்றிற்று.

உ

பதினான்காவது,

அசுவமேதபருவம்.

மருத்துயாகச்சருக்கம்.

பற்றறுப்பவர்பற்றியபற்றினைப்பற்றின்
குற்றமற்றவர்கூடியவின்பத்தைக்குறித்துக்
கற்றகல்வியாற்காண்பதிற்காணொணாக்கருத்தை
முற்றுமாயதையென்கொலோயாமொழிவதுவே. (௧)

கருத்தெலாமுணர்தூயமாமுனிவரன்காவற்
றிருந்துரிதியான்செவிப்படவிவையெலாமுரைத்து
வருத்தந்தீர்வுறுமிக்கதைகேட்டவர்வகுத்தோர்
விருத்தியெய்துவராயுவுஞ்செல்வமுமேலோய். (௨)

கதியுமெய்துவருடல்விடுகாலத்தினென்று
மதியருந்தவனுரைத்திடமன்னவன்மகிழ்ந்து
விதியினுக்கைபெற்றுளபயனடைந்தனன்வேறோர்
துதியும்வேண்டிலனீதலாலெனவிதுசொன்னான். (௩)

ஐயகேட்டிநீயறைந்தவைதிருவுளத்தமைத்தேன்
மெய்யினுக்குருவாயினோர்மேற்செயலனைத்து
முய்யவோதியடியனேனுணர்ந்திடவென்று
செய்யகோலினன்வினவுறத்திருமுனியெடுத்தான். (௪)

மாறிலாதவரவ்விடஞ்சிலதுநாண்மருவி
யீறிலாதவருடனிருந்திடலுமாங்கொருநாள்
சேறிலாதவசெல்லுநிதிருநகர்க்கென்னப்
பேறிலாதவரிற்சிலபேசினான்பெரியோன். (௫)

என்னைமாநகரென்னையோபந்தமிவ்வுடலா
லென்னைசாதகமென்னையோபெறுவதிங்கினிமே
லன்னைதன்னினுமாரருட்குரியவனகல
முன்னையாரமர்முடித்துளேன்முழுமகன்யானே. (௬)

அடுத்தவெஞ்சமராற்றியானனைவரைமாய்த்துத்
தொடுத்தபோகமுமின்பமுந்துய்க்கினுந்துயரன்
றெடுத்தபேரருட்குரவனையீர்ந்ததிங்கென்னைக்
கெடுத்ததிவினைச்செயலெனக்கேகமுற்றயர்ந்தான். (௭)

வேதமாக்கியவியாதனங்கவன்றனைவிரைந்து
கேதமாக்கியசிந்தையைக்கேவலமாக்கிச்
சாதமாக்கினேன்றனக்கலாதுனக்கென்னேதவிராய்
நோதலாக்குதலென்றிதுநவனுவன்மன்னே. (அ)

வசிட்டமாமுனிசாபத்தால்வந்தவதரித்துக்
கசட்டரும்புலனடக்கியசந்தனுகாளை
விசிட்டநீகொலவீவனேமேற்கொளேலொன்று
மசட்டரெந்தெறுமருட்செயலாவுணர்ந்தறிவாய். (கூ)

என்றுகூறலுமறன்மகனிறையருடாளற்
றுன்னுமாறெனக்கரிதினிமுன்னிலேதொகுத்து
வென்றவாரியராயினும்விளம்புவர்விளம்பி
லன்றுமேவுறுங்கொடுமையென்பதற்கையமிலேயே. (க0)

சாற்றுந்தீவினைபோதுமென்றனக்கெனவியம்ப
நோற்றநோன்மையானுவலுவனெடித்திடுங்கொடுமை
மாற்றுமாறுளவாசிமேதப்பெருமகத்தை
யாற்றிவாழுதியருவினையகன்றிடுமென்றான். (கக)

பின்னுங்கூறுவான்மறைமொழிச்செயன்முறைபெருக்கிப்
பன்னுமிம்மகம்பயிற்றியந்தணர்பெறப்பாரும்
பொன்றுமாமணியொன்பதுமான்களும்புகழா
வின்னுமீகுதியாசறுமென்றுரைத்தனனே. (கஉ)

அந்தவாசகமுரைக்குமுன்பந்தணர்பலரு
மிந்தவாய்மைநேரிலேயெனக்குறித்தனர்முகுந்தன்
கந்தமாமலர்முகங்கவினேங்கிடநோக்கிப்
புந்தியவ்வணங்கோடிநீபுனிதனைப்பொலிவாய். (கங)

வாசிமாமகம்பஞ்சபாதகங்களைவாட்டும்
பாசமூவினைப்பற்றறைபுஞ்சத்தறப்படுக்கு
மேசிலாப்பொருள்வேண்டுவதீந்துனதிழுக்கை
நாசமாக்குதியம்மகம்பயின்றெனநவின்றான். (கச)

மாலுரைத்திடவுதிட்டிரன்மாமகிழ்சிறந்து
பாலுறுத்திபரிமகம்பயிற்றிடினதற்குச்
சாலுறுத்தகுந்தெக்கணைதருவதற்கிழ
மேலுரைத்திடினெய்தரிதெனவிளம்புதலும். (கரு)

கேட்டமாதவன்சிறுநகைகிளர்த்திடவியாதன்
மீட்டுவேந்துடைவான்முகம்வியப்புறநோக்கி
நாட்டையாள்பவர்க்கென்கொலோநிதிநவையென்ன
வாட்டமொன்றிலாவுதிட்டிரன்மறுமொழிபுகல்வான். (கசு)

ஐயகேண்மினோசுயோதனன்வெற்றிமீதமர்வாய்
வையமாற்றவுநண்புடையோர்கள்பால்வழங்கி
யுய்யவாங்கவருடன்படக்கொண்டதொன்றன்றி
வெய்யநெஞ்சினனிதியெலாமுலகெலாம்விதைத்தான். (௧௭)

அறுவகைப்பெரும்படைக்கெலாமாதரித்தளித்தே
யுறுநிதிக்குழுவுளவெலாந்தொலைத்தனனிப்பா
லிறுதியுற்றவர்க்கீந்துமீந்திருந்தவர்க்களித்துங்
குறைவுபட்டதாற்குறைவுறாச்சஞ்சிதக்குவைகள். (௧௮)

தலைவர்மாண்டறத்தனையர்வந்தடிதொழுஞ்சார்பி
னிலையுறத்துமாறவனியும்பலபலநேர்ந்தோங்
கலைவலாய்மகம்புரிதருகருமமேதென்று
துலையைநேருளன்புகன்றனன்முனிசிரந்துளக்க. (௧௯)

அனையதோர்ந்துசத்தியவதியளித்தவனுங்கு
நினையநெஞ்சினுளுணர்ந்திதுநிருபனுக்குரைத்தான்
புனையும்வாகையாய்மாதனமுறும்வகைபுகல்வன்
வினையகன்றிடக்கொணருதியென்றிதுவிளம்பும். (௨௦)

வேறு.

பரிதிதன்மரபினிற்பகரும்வேந்தரிற்
குருதிவேன்மருத்தெனுங்கொற்றப்பேரினோன்
மருதிறன்மகம்புரிந்தளித்தவொண்டனங்
கருதியோதிடவெவர்க்கெளிதுகாவலோய். (௨௧)

வேதியர்வேண்டுவகொடுவெறுத்ததிப்
பூதலத்துறுத்தியார்புலப்பட்டோரிது
பேதியாவவரதன்றன்றுபேசிய
மாதனமுண்டதுவேள்விநல்குவாய். (௨௨)

என்றுசொல்லுதிட்டிரன்செவியினெய்தலு
மின்றவன்சரிதநானின்பமெய்திட
வொன்றுவீழாவகையுரைத்தியென்னவே
நன்றிதுகேளெனநவிறன்மேயினான். (௨௩)

தேசினிற்பொலிதருதினத்தினாயகன்
காசினிக்கிறைபுரிகடன்மமீக்கொளா
வாசறத்தனையனையளித்துளானவன்
பேசுவர்மனுவெனும்பெயர்கொடோன்றலே. (௨௪)

அன்னவனரசனாயவனிகாத்தநாள்
மன்னுமங்கவனுழைவந்துதித்தவன்
பன்னியபிரசானியனவன்பயந்தவன்
றன்னிகரிக்குவென்றுரைக்குந்தன்மையோன். (௨௫)

அவனளித்தவனிக்குவாகுவாமவன்
புவனியிற்றனையர்நூற்றுவரைப்பொற்பொடு
நவமுறப்பயந்தனனலஞ்செய்முன்னவன்
றவவலிவிச்சுவென்பவன்றந்தான்புவி. (௨௬)

அந்தமன்விவிசனையளிப்பவாங்கவன்
றந்தனன்சுதர்பஞ்சதசரையாரினு
முந்துறவுதித்தவன்பலினன்மொய்ம்புடை
யுந்தபகாரியாயுலகங்காக்குநாள். (௨௭)

தம்பியர்சதுர்த்தசர்தம்மொடொன்றலற்
றம்புவிபுரக்குநாளுழையராரியர்
நம்பியவாகினிநண்புளார்க்கெலா
மம்பெனலாயினனறிவுமாழ்கியே. (௨௮)

கொடியகோற்கொற்றவன்குவலயந்தரப்
படியுளோராற்றலர்பலருமேவியே
கடிதரவவன்றருகாளைக்காக்கியே
முடிபுனைந்திருத்தினர்முறைவழாமலே. (௨௯)

மைந்தனாங்குலகெலாம்புரக்குமாண்பினா
லிந்திரனாதியரிசைகொண்டாடவே
தந்தையாற்சீர்த்திவேர்சாய்ந்தவான்றரு
முந்துபேர்நிறுவினன்முனிவர்வாழ்த்தினார். (௩௦)

கார்மழையெனவிரந்தவர்களிப்புற
நேர்மழவிடையெனுநிருபனாடொறும்
பார்மழைகண்டெனப்பலர்கள்கூட்டுணத்
தார்மழைபொழிபவன்றருதல்விஞ்சினான். (௩௧)

வேதியர்முனிவரர்விமலநெஞ்சுடை
நீதியர்கவிவலார்நிரப்புமிக்குடை
யாதுலர்பெறும்படியாதனங்களு
மாதனராசியுமலியநல்கினான். (௩௨)

அறம்வழானாறிலொன்றன்றிவெஃகிலான்
மறம்வழான்மாற்றலர்மாட்டினண்புடைத்
திறம்வழானினியர்பாற்சரதஞ்செம்மைசேர்
நிறம்வழானாயுலகளிக்குநீர்மையால். (௩௩)

அறியளவையினலாத்திகநல்கினோர்
வெறியரென்றுரைத்தசொல்விழுமமெய்தவோ
பொறியளவதுகொலோபொலிவெலாமற
வறியனாயினனொருவருநிகர்க்கலான். (௩௪)

குற்றமாய்த்துறுபகைகுழுமித்தீபத்தி
னற்றநோக்கியவிருள்புரையவார்த்தழி
மற்றிவன்பொருள்வலியிலாதமாசினூற்
பற்றலர்க்கிடந்தருங்கானம்பற்றினான். (௩௫)

வினைத்தநல்வினைத்துணைவிரும்பியாவுமீந்
தினைத்தவனுளைப்புறலேற்குமேயெனாத்
தனைத்தவைம்புலத்தினர்தவத்தினுய்த்தனர்
தினைத்தனைநருந்தவஞ்செம்மலன்பொடும். (௩௬)

நயக்கடமையினுளாரிழக்கினன்மையிற்
பயக்குமென்பதுநிலைகாட்டும்பண்புபோ
லியக்கனூற்றனங்களுமெண்ணில்சேனையும்
வயச்சிலைமன்னுமிழைவந்தடுத்ததே. (௩௭)

சீரியகோடையாற்றீய்க்கசூழ்பொழி
மாரியாற்றளிர்த்தெனவந்துதோன்றினான்
சூரியன்முன்னரிற் * றுகினமென்னவே
வீரியமிழந்தனர்மேவலாரெலாம். (௩௮)

பற்பலமலர்செறிதடத்திற்பங்கய
மெற்படுபொலிவுபோலெவருந்தாழ்வுற
மற்புயன்றன்னரசியற்றிவைகினா
னற்கரந்தமனெனுநாமந்தீட்டியே. (௩௯)

ஆங்கவன்றவத்தினுமறம்வழாநிலை
யோங்குசெங்கோலினுமுயர்செல்வத்தினு
நீங்கலாவருளினுஞ்சரதநீரினு
மோங்கியமனுவினுக்குவமையாயினான். (௪0)

முள்ளரைமுளரியங்கோவினான்மகன்
பொள்ளறவுதவியபுதல்வர்தங்களிற்
கொள்ளுமங்கிரசுவென்னுங்கோமுனி
வள்ளலுக்குயிர்த்துணையாகவாழுநாள். (௪௧)

அரிமகபதிமுதலாருமன்புறப்
பரிமகம்பற்பலபயிற்றிப்பார்த்திபன்
றிருமகள்கொழுநன்முன்கிடைப்பநற்கதி
புரிமகன்புரந்திடப்புகுந்துளானரோ. (௪௨)

அன்னவன்மைந்தனேயாவிதிக்கனா
மன்னனாயுலகெலாம்புரந்துமாமகம்
பன்னிடப்பற்பலவியற்றிப்பற்றினான்
பொன்னுலகவன்மகன்புவிபுரக்கவே. (௪௩)

---

* துகினம் - பனி.

ஆங்கவன்பெயர்மருத்தென்பரங்கவன்
றாங்கியிவ்வுலகெலாம்புரந்துதங்கினான்
றேங்கமழ்பதுமத்திற்செறிந்தமுத்தெனப்
பூங்குலமுனிவரும்புகழப்பொற்பொடும். (௪௪)

கரடவெங்கைக்களியானையோடையாய்
புரடரவெண்டிசைபொறித்தபேரினான்
றிரடருகருங்குழற்செய்யவாயுறு
பரடணியரம்பையர்பகரும்பண்பினான். (௪௫)

மாற்றலர்துதிமறமதுகைமன்னவன்
போற்றினர்க்கின்பமுமறமும்போல்பவன்
சாற்றுமன்னுயிர்க்கெலாந்தண்ணளிக்குடை
நாற்றிசைநீழலைநல்கும்பெற்றியான். (௪௬)

தருமமும்வாய்மையுமுருவந்தாங்கிய
கருமமேகாட்டுவோன்ககனநாயகன்
பெருமிதநாணினாற்பெயரவாழ்பவன்
குருமணிமுடிபதமுரிஞ்சுகொள்கையான். (௪௭)

அன்னவன்மாமகம்பயிற்றுமாதரந்
துன்னருமுபகரணங்களுய்த்தபின்
முன்னையங்கிரசுமுதற்குமாரனும்
பொன்னையேவரித்தனன்புலவுவேலினான். (௪௮)

ஆங்கதுதெரிந்தயிராணிநாயகன்
றாங்கியபொறாமையாற்சார்ந்துதேசிகன்
பாங்குறவடைந்திவன்பணிந்துபோற்றியே
யீங்கிதுபுகன்றனனின்சொலோடுமே. (௪௯)

எனக்குமாமகங்கணீயியற்றிமன்னவன்
றனக்குநீபுரிவதுதகுதியாங்கொலோ
மனக்கருத்துடையனாமருத்துநீசெலிற்
கனக்கவும்பிழைத்ததாங்கடவுளோர்க்கெலாம். (௫௦)

எம்மையேவிழைவையென்மறுத்தியேனையோர்
தம்மைவேண்டினையெனிற்றவிர்தியெம்முழை
மெய்ம்மையேயீதெனவிளம்பினானரோ
மைம்முகில்வாகன்மந்திரிவிளம்புவான். (௫௧)

சொற்றவையுணர்ந்தனன்றன்னிலேனியான்
மற்றிதுகேண்மினோவானவர்க்கெலா
முற்றதேசிகனியானொருவன்பாங்குறல்
குற்றமாமதுசெயேன்கோடிசிந்தையுள். (௫௨)

செந்தழற்றன்மைசேர்ந்திடினுஞ்செங்கதிர்
வந்துமாசெய்தினுமகிபொறாதுயிர்
சிந்தினுமாடகச்சிலம்புலாவினு
மெந்தன்வாய்மொழிபிசகெய்துமோகொலாம். (௫௩)

என்றவனுரைத்திடவிமையிலாரொடுங்
குன்றிவலாரிபோய்க்குறுகித்தன்னுழை
துன்றினன்சுரர்குருவிருந்தசூழல்வாய்
மன்றன்மார்புடையடன்மருத்துமேவினான். (௫௪)

எந்தைமுன்னுந்தையாலிருக்கின்மாமகந்
தந்தனனாதலாற்சார்தல்வேண்டுநீ
முந்துமென்மகந்தனைமுடித்தற்கென்னனு
மந்தணனிதையெடுத்தறையலாயினான். (௫௫)

வானவர்நாதனோர்மகமியற்றுவான்
றானடைந்தென்னுழைச்சாற்றிப்போயினான்
மானவர்க்கியான்கொலோமகமுடிப்பவ
னீனமாமும்பருக்கெய்தலேற்பதே. (௫௬)

அளித்தவன்பொதுமையினவிர்ந்ததன்மையாற்
களித்துநம்பிதாமகங்கவினிலாக்கினா
னொளிப்பதென்யான்வரேனொருவான்மகம்
விளைத்திடனன்றெனவிளம்பினானரோ. (௫௭)

கேட்டமாலரசனுங்கிலேசமீக்கொள
வாட்டமுநாணமுந்துயருமல்கிட
நீட்டியவுயிர்ப்பினனாகிநீங்கியே
நாட்டினாரதமுனியெதிரினண்ணினான். (௫௮)

துயரெனுங்கடற்படிதோன்றற்காயிடை
யியலுடைவான்கரையேற்றுந்தோணிபோ
லுயர்குலமுனிவரவுவகையோடவன்
மயலறவணங்கினன்மலர்ப்பதங்களில். (௫௯)

தாமரைமுத்தினைத்தருதன்மானவே
வாமவாள்விழிவழிகளுழிவந்தெழப்
பூமனையனையவன்பொருமிநிற்றல்கண்
டாமுறைவினவினனவன்விளம்புவான். (௬0)

வேறு.

மாமகம்பயிலுமாறுவரன்முறைகுறித்துநோக்கி
யேமநல்லுலகினோர்களிறைஞ்சுதாட்குரவன்பக்கற்
காமுறவடைந்துகூறவிகழ்ந்தவன்கரைத்தசொல்லாற்
பூமுகமானேனென்றான்புராதனமுனிவன்சொல்வான். (௬௧)

துயருறேலுனக்கெய்தாமற்சுரர்குருவிகழ்ந்தாலென்னே
மயலறுதவத்தான்மிக்கமறைமுனிமாறிலாதோ
னியலுமங்கீரசுப்பேரிருடியர்க்கினியமைந்த
னயனைநேருரைக்குங்கோமானரியசம்வரதனுண்டால். (௬௰௨)

முன்னவனுனபொன்றேன்முனிந்திடயாவுங்கைவிட்
டன்னவன்வயிரத்தாலோர்திகம்பரனாகிவைகு
மின்னுனைவேலோயன்னான்வேள்வியைமுடிக்கும்வேறொன்
றன்னலையென்றான்பெற்றேனுயிரெனப்பணிந்துசொல்வான். (௬௰௩)

மாமுனிதன்னைநாயேனுணர்வதெவ்வண்ணமெந்தப்
பூமியினிருந்தானென்பாற்புகுவதெவ்விதத்தாலென்று
கோமுனிபுகலவீணைகொண்டசெங்கரத்தோன்சொல்வான்
றீமுனைவேலினான்றன்செவிக்கமுதுகுக்குமாபோல். (௬௰௪)

அம்முனிகாசியென்னுமருநகரகலானாகி
மைம்மலிபித்தனேபோன்மருவுமங்கவனைக்காணுஞ்
செம்மைகேள்பிரேதமொன்றுசெறித்துநீசென்றுகாசிக்
கொம்மைசேரெயிற்றுவாரத்திருந்திடிற்குறுகுமாங்கு. (௬௰௫)

குணபங்கண்டருகினெய்திநோக்கிநின்குறிப்புநாடிப்
பணபடவரவிற்சிறியச்சத்தாற்பபிலும்வானிற்
கணபதிபோலவோடுங்கண்டவன்றனைவிடாது
துணரவிழலங்கன்மார்போய்தொடருதிதுனிவிலானை. (௬௰௬)

அறிந்தவனெய்தாவாற்றாற்பற்பலவாகச்சிந்தை
முறிந்திடப்புகன்றுசீறிமுனியினுமிகந்திடாமற்
சிறந்தவன்பின்னர்ச்சென்றாற்றிருவுளத்தருளைத்தாங்கிப்
பிறிந்தொருநிலையந்தங்கிப்பேசுநின்னோடுமன்னே. (௬௰௭)

நிகழ்ந்தவைபுகன்றுபோற்றிநின்மனக்கருத்துங்கூறிப்
புகழ்ந்தடிவணங்கிநின்றார்புங்கவன்றனதுசிந்தை
மகிழ்ந்தெனையுரைத்தோராரென்றுசாவுநீமனங்கொண்டென்பே
ருகந்துரைத்திடுதியெங்ஙனுளனெனவுரைப்பன்கேண்மோ. (௬௰௮)

எனக்கிதைப்புகன்றபின்னரெரியிடைப்பாய்ந்தானென்று
மனத்துடனுரைத்தியென்றுமாமுனிபுகன்றுபோக்கிக்
கனக்குரற்பரியையூருங்கடவுணாயகனூர்ச்சார்ந்தான்
முனிக்குலத்தலைவன்வேந்தன்காசிமாநகர்முன்பானான். (௬௰௯)

அவ்விடத்துயிரிழந்தகளேபரமனேகநோக்கி
வெவ்வலிவேந்தர்வேந்தன்புகுந்தொன்றைவென்னிற்றாங்கிச்
செவ்வியோர்பலருங்கங்கைதிளைத்திடமேவும்வாயி
லெவ்வயினென்றுநாடியிருந்தனனவனெதிர்ந்தான். (௭௰)

மாசறுமுடலுநாடாவாக்குமுன்மத்தரேபோற்
றேசுறவந்துநின்றுகளேபரஞ்சேர்ந்துநோக்கிக்
கூசவான்போலமீண்டுகுப்புற்றுவிரைந்துசெல்ல
மாசறுமுனிவனுமென்றன்னால்பின்றொடர்ந்துசென்றான். (எக)

சென்றனன்விழ்ந்தெழுந்துதெழித்தகன்றோடிப்பாடி
நின்றனன்றிருமிநோக்கிநிருபன்றன்வரவுகாணாத்
தன்றுறுதுகளைவாரிச்சொரிந்தவன்சிரத்தினூடு
குன்றமெய்யனையான்போனானம்பினும்வேகங்கொண்டே. (எஉ)

தழன்முனைவேலினானுந்தன்கரமுகிழ்த்துமீள
நிழலெனத்தொடர்ந்துசெல்லநீணகர்முழுதுந்திர்ந்து
விழைவுறுமனிதர்சாராவுயர்வடவிருக்கநீழ
லுழன்றுநீர்வேட்கையான்போலோய்ந்துடலலசிவிழ்ந்தான். (எங)

ருசிபோம்வழியேநாலுந்தொடர்வபோலரசனெய்தி
மாசிலாதவன்பொற்பாதம்வணங்கலுமகிழ்ந்துநோக்கி
யாசிலாயென்னையாவரறிவித்தோர்சரதமாகப்
பேசினையென்னிலுண்டாம்பெற்றிகணினைத்ததெல்லாம். (எச)

பொய்படமொழிந்தாயென்னிற்புனைமுடிச்சிரமேழ்கூறாய்
மெய்படத்தொலையுமுள்ளவாறுநீவிளம்புகென்னக்
கைபடத்தொழுதுகாலிற்புகன்றனன்கலைகடேர்ந்தே
யுய்படுநெறிகைக்கொண்டநாரதனுரைத்தானென்றே. (எரு)

கேட்டவனிருந்ததெங்ஙன்கிளர்த்துகவென்னவென்பாற்
காட்டியிறுரைத்தபின்னர்க்கடுங்கனற்புகுந்தானென்ன
நாட்டினைப்புரப்போன்கூறஞானமாமுனிவன்மீட்டு
ஈட்டுகாரியமேதென்பாலெய்துதற்கிங்ஙனென்றான். (எசா)

ஐயகேண்மருத்துவென்னுமயோத்திநாட்டரசன்யானே
செய்யநல்வேள்வியாற்றுங்கருமத்தாற்றேடியன்பாற்
கையடைபுகுந்தேனாயேன்கடைப்பிடியிதுவேயென்றான்
பொய்யறுமுளத்தினானுமிவ்வுரைபுகலலுற்றான். (எஎ)

வேள்விசெய்வித்தற்காகவிரும்புவதெனையோபூமேற்
சூழ்வுறுசவத்தைநோராந்தன்மையேனென்றுமென்றும்
வாழ்வினிலறிவான்மிக்கவானவர்குரவனெம்முன்
றாழ்வினைதொடைத்தோன்பக்கலுற்றவன்றுணைக்கொள்வாயே. (எஅ)

என்னையேகுறிக்கொண்டாயேலெம்முனோனுரையாலன்றி
யின்னுழையணுகேனென்னநிருபன்மற்றிதனைச்சொல்வான்
முன்னையென்றாதைநுந்தைமொழிப்படியயின்றபண்பாற்
பொன்னையான்வரித்துச்சென்றுபுகன்றனன்புகலுந்தன்மை. (எகூ)

அருந்தவக்குரவர்கோமானமரர்கோனுரையினாலே
வருந்துமென்முகநோக்காமன்மனிதர்பாற்பயிலேனென்று
னருந்தமுதனையாய்நின்றனருளினாலமரர்கோவைப்
பெருந்திறலழியுமாறுபெறுவன்யான்பின்னரென்றான். (அ0)

அத்தகையுணர்ந்துசாலவருந்தவன்மகிழ்வினோங்கி
யித்தகைநிகழ்ந்ததென்னிலினியேன்கொல்புகல்வதம்மா
முத்தர்கண்முகமன்கூறமுடிப்பனுன்மகத்தையானே
கைத்திறலுடையாயின்னுங்கழறுவன்கேட்டியென்றான். (அக)

முன்னவன்றிக்கரித்தமுனிவினாற்பொருளுமில்லு
மின்னிலைகைவிட்டிவ்வாறிருந்தனன்பிச்சுவாரிற்
கன்னவிறோளாயானுன்கனன்மகமுடிக்கும்போதிற்
பொன்னுங்கோபதியுநின்பாற்பொறுத்திலர்புரிவர்தீமை. (அ௨)

சஞ்சலமுறாதுநிற்கத்தக்கநீயாகினன்று
மஞ்சினையாகிற்சாபமடைகுவைபலேகதூரம்
விஞ்சிடவுணர்ந்துநோக்கிவிளம்புவையென்றான்வேந்தன்
வஞ்சமொன்றிலாதசிந்தைமாமுனிக்குரைக்கலுற்றான். (அங)

வேறு.

மாறடுஞ்செயல்வல்லகாளைவலாரியன்றமரர்க்கெலாஞ்
சேறுமெங்குருவன்றநான்மறைதேறுணாதசெழுஞ்சுடர்
நீறிடுந்திருமேனியாண்டகைநேர்ந்துசீறினுநினையலேன்
வீறடும்பரிதாபமுன்னருண்மேவினின்னும்விளம்பல்கேள். (அச)

இரவிமாமதியுலகமாமறையிமையிலாதவர்முனிவரர்
விரவுகாலமெலாமியங்குவன்வெய்யதீரதைபநின்
பரிவிகந்துனைவழுவிமற்றொருபற்றினுற்றிடினென்றருள்
கரவிலாதவனோதினான்முனிகளிசிறந்திதுபகருவான். (அரு)

உன்னையிந்திரனுக்குமேலுறுவாழ்வினுழவுறுத்தியே
பின்னைவேள்விதொடங்குவேனிஃதேதினென்றுபெயர்ந்திடேன்
முன்னையெம்முன்மொழிந்தமந்திரமுண்டெனக்கதின்முற்றுவே
னன்னைபங்கினனென்னுளத்துளனரியதொன்றிலையாவதே. (அசு)

இமையமால்வரைவடதிசைக்கணின்முஞ்சுவந்தமெனும்பெயர்ச்
சிமையமால்வரையுண்டதிற்பலதேவர்சித்தரியக்கரோ
டுமையொடுங்கமலாசனாதியரோகையோடுபணிந்திடச்
சமையமண்டபமதிலிருந்துசரிப்பன்முப்புரதகனனே. (அஎ)

கதிர்களும்பலகோள்களுங்கணநாதரும்பலகாலமுஞ்
சதிர்பெறும்படியப்பெருங்கிரிதன்னையேவலமாவராற்
பிதிர்வுறும்படியண்டபித்திகைமறையொலித்தெழுபேரொலி
யதிர்வுறுந்திசைபத்துமென்சொலவப்பொலன்கிரிவளமையே. (அஅ)

பாதபங்கடலிர்த்தல்பூத்தல்பயிற்றுகாய்கனியின்பயன்
பேதபண்பறவென்று முண்டுபிறங்குவல்லிகள்புதர்களு
மாதபந்தனிநிலவொடொத்திடுமிருதுபேதமகன்றிடுங்
காதலங்கிலையென்பருண்டிறைகமலபாதவிருப்பமே. (அகூ)

வாலயௌவனமோதுறுங்கவுமாரமூப்பெனுமாயைக
ளாலமுண்டவன்வெற்பினுள்ளவரார்க்குமில்லையலாமனுஞ்
சிலமாதவர்கோடிகோடியர்சிந்தைசெய்துறுவார்செலுங்
காலமெண்ணிலவீதல்கண்டிலர்காலமென்பதுகண்டிலார். (கூ0)

பசிபெரும்பிணிகுணவிகாரபிரபஞ்சமாயையுணர்ந்திடார்
நிசிபெரும்பகலென்றுகண்டிலர்நீடுபேரொளியாலரோ
கசிவுறுந்துளிவிழியரும்பியதருவிபோன்றுறல்காட்டுமாற்
பசியமேனிகொளம்பிகைக்கொருபங்களித்தவனங்குளான். (கூக)

அந்தமால்வரையின்புறங்களிலாழ்ந்ததாழ்வரைமாடெலாஞ்
செந்தழற்கிணையாயொளிர்ந்திடுசெம்பொனின்சிலைதுன்னுமாற்
கந்தமாம்பரியூர்பவன்விழிகாணவாற்றலனக்கிரி
யிந்துசேகரனருளினாலவணேகிமீள்குவன்யானரோ. (கூஉ)

எய்தொணாதொருவர்க்குநின்னுடனேகியானகிலேசனைச்
செய்தவத்தினர்பேற்றினைப்பலதேவர்தேவினைநாதனைக்
கைதவத்தினர்காணொணாதகனற்பிழம்பினையன்பொடு
மெய்தரத்தொழுதேத்தியாரருள்பெறுவனீமும்வியப்பொடும். (கூ௩)

ஆறுசூடியையாலகாலமருந்தினானையமோகியை
நீறுபூசியமேனியானைநிராமயத்தெழுநித்தனை
யிறுசெய்தடுகாலகாலனையேகநாதனையீசனைத்
தேறுவார்மதிநீங்கலானைவணங்கிலாரருள்செய்வனே. (கூச)

வருதிநீபலகோடிகோடிமணங்குசெம்பொன்வழங்குவன்
றருதிபாரமெடுக்குமாறுசமைந்தெனப்பலசாற்றலுங்
குருதிவேலுழவன்புகுந்தனன்கூடமாதவனேகினான்
பருதிகோடியினொளிருமக்கிரிகண்டுபோற்றினர்பரிவொடும். (கூரு)

ஆசிலாமுனியண்ணலைத்தொழுதன்பினின்றிதுகூறலுந்
தேசுலாமுனிபெறுதிவேண்டுபசெம்பொனென்றுசிறந்தசொன்
மாசிலாவிருகன்னமூடுறமனமகிழ்ந்தணியானைமேற்
றேசுலாவயமொட்டகஞ்சகடேற்றினார்திசைபோற்றவே. (கூசா)

கணிதமற்றமணங்குசெம்பொனெடுத்துவந்துகவிப்பவே
பணிதரித்தபிரானருட்செயல்பன்னியோர்வரைபார்த்தத
னணிபடுத்தியபொற்பிறங்கலடுத்ததென்னவமைத்துளார்
திணிடவிக்கிரியருகிறெக்கணதிசையினிற்பொருதிறலுளார். (கூஎ)

வேறு.

பொருபோர்முனையில்வயப்புலியைப்போல்வான்சாலைசெய்வித்து
வருவோர்பலருமுணர்ந்தடையமறையோர்தமக்குமன்னவர்க்குந்
திருவோலைகளுந்தூதுகளுஞ்செறித்துக்கலப்பைவேண்டுவன
தருவார்தமைக்கொண்டாற்றுவித்துத்தமனியமும்பல்குவைசெறித்து. (௯௮)

மின்னாற்செய்தனெனச்சகலவிதபாத்திரங்களுளவெல்லாம்
பொன்னாற்செய்துபலபண்டம்பொருப்பேழென்னப்புகுவித்து
மன்னாற்பொலியும்பேரவையான்மறையாற்பொலியவீற்றிருந்து
சின்னாளகற்றித்தேசிகனாற்றீக்கைவரித்தான்சிறப்போடும். (௯௯)

எடுத்தான்றுவசமிவ்வுலகிலிரந்தோர்க்கிரத்தற்கெண்மடங்கு
கொடுத்தாதரிப்பன்வம்மினெனக்கொற்றக்கதிரின்குலவேந்தன்
றெடுத்தான்மகமுமவையுணர்ந்துதூயவியாழமெனுங்குரவன்
கெடுத்தானென்னைவலாரியெனக்கேதங்கூர்ந்தாழ்ந்தனனன்றே. (௧00)

தேய்ந்துதேய்ந்துநாடோறுஞ்செந்தாமரைநேர்முகம்வாடி
யோய்ந்துபயிலுமாரியன்பாலுற்றேமகவானுளக்கருத்தை
யாய்ந்தேனரசனினியுன்னையல்லாதியற்றுவகைபுரிவன்
சாய்ந்துதவறேலெனப்புகன்றுதன்பேரவையிற்கலந்தானே. (௧0௧)

அங்கிவானவனைநோக்கியவனிக்கதிபன்மருத்தென்போன்
றங்கிமகஞ்செய்திடமுயன்றான்சார்பிலடைந்தென்றூதாகி
யிங்கிதுரைத்திசம்வரதனென்பான்றனைவிட்டிவன்முன்னே
னெங்கள்குரவன்முன்னிலையாயியற்றினன்மையெனக்கூறி. (௧0௨)

அவ்வாறமைத்துவரவெனலுமதுவேயெனச்சொற்றவனிதலங்
கைவாரழலோன்கலந்துமகச்சாலையடைந்துகதிர்வேலான்
மெய்வான்முகத்தினெதிர்நின்றான்வேந்தன்றெழுதற்புதமடைந்து
செவ்வானம்போலொளிர்வானைச்சிங்காதனத்தின்மிசையுய்த்தான். (௧0௩)

முனியும்வரதன்றனைக்கூவிமுன்றுவதனன்களியெய்த
வினியபூசைக்கடனவனுலியற்றிவித்தாசியும்புனைந்து
தனிவந்ததுவேனெனவினவச்சதயாகனுக்காவந்தபடி
யினிதினறிவித்தெடுத்துரைத்தானெழுநாவுடையபெருமானே. (௧0௪)

வாராயரசேமகத்திறைவன்வகுத்தமொழிகேணினதுமகஞ்
சீராயுலகிற்சிறந்தோங்கச்செய்வானெமதுகுலக்குரவன்
பேராலுயர்ந்தோனவனடையப்பெறுமாறுகப்புரிதியெனப்
போரார்வயிரப்பெரும்படையான்புகலப்பணித்ததிதுவென்றான். (௧0௫)

தும்பைமிலைந்தநெடுங்கூர்வேற்றோன்றலிதனைப்பகர்கின்று
னும்பர்குரவன்பக்கலடைந்துரைக்குமுகமன்பலபுகன்று
நம்பமுடித்திமகத்தையெனநான்போயுரைப்பவிதங்காமற்
செம்பைநிகராம்விழியோனும்மறுத்தானிதையார்தெளியாதார். (௧0௬)

மெலிந்துநியங்கிமீண்டடைந்துமேனுண்முறைறமைவழுவாமற்
கலந்துருகுருவுக்கிளையான்பொற்கழலிற்பணிந்துகோணர்ந்தனனுன்
மலிந்தவளத்தானினியுரைத்தாலென்னேவினியான்வழங்கலென
நிலந்தன்குடைக்கீழடக்கியவாணிருபன்புகன்றேயிதுநிகழ்த்தும். (௧௦௭)

விண்ணுக்குரியார்மகம்பயிற்றும்விமலமுனியெம்பொருட்டாக
மண்ணுக்குரியார்மகம்பயிற்றிமாசிலாழ்தல்கடனாமோ
பண்ணுக்குரியசிவயோகியமையுமெமக்குப்பயிற்றமக
மெண்ணுக்குரியாயுரைத்திவிழியீரைந்நூறுமிந்திரற்கே. (௧௦௮)

என்னப்புகலக்கனன்மீளவெடுத்துப்புகல்வானிணையில்லாய்
பொன்னைத்திருமுன்னிலைகொண்டுமுடித்தாயென்னிற்புகழன்றே
தன்னேப்பவரில்லாய்யாகசதத்தோனஃபாற்றரும்புனித
முன்னற்கரியகதிரன்றுமுணர்தியெனவுமுரைக்கின்றான். (௧௦௯)

கதிவந்தெய்திற்றெனினுந்தாக்கதிவந்துளதென்னினுமுலகிற்
றுதிவந்துறினும்பழிவரினுஞ்சுமப்பேனினியான்றொடுத்தமக
மதிவலோயம்முறைதுறந்துவரியேன்பிறரையெனவுரைத்தான்
விதியிங்கிவனேயெனுமுனிவன்வெகுண்டிங்கிதனைப்புகல்கின்றான். (௧௧௦)

இருகாலுரைத்தபிழைபொறுத்தேனினிமீட்டுரைத்தாயெனிலுன்னைச்
சருகாய்ப்படுத்தியென்சாபத்தழலாற்பொடிசெய்குவனென்ன
வெருவாவனலோன்றனுக்குற்றுவிளம்பியின்சொல்விடைபெற்று
முருகார்தொடையானுழையேகிமொழிந்தானிகழ்ந்தமுறையம்மா. (௧௧௧)

வரித்தேனுயர்சம்வரதனையான்மாறிப்புரியேன்வேள்வியெனப்
பரித்தேரரசன்பகர்ந்ததெனப்பன்னமகவான்மிகக்கனன்று
சிரித்தேவயிரஞ்செலுத்தியவனுயிரைமுடிப்பான்சென்றுரைநீ
யெரித்தேவென்னமுனிசபிப்பனேகேனென்றானிந்திரற்கே. (௧௧௨)

வேறு.

நின்னமலினுலுலகநீறுபடும்வேறென்
றுன்னையடுகின்றகனலுண்டுகொலுரைத்தற்
கென்னையிஃதென்றவனிசைப்பவெழுநாவோன்
பன்னினன்வலாரியுணரும்படிபரிந்தே. (௧௧௩)

விருத்திரனுனக்கரியமேன்மையுடனெய்தி
யருத்தியினின்மூவுலகுமாண்டதுணராயோ
பெருத்தசவனன்கனல்வளர்த்தவிபிடிப்பான்
மருத்துவர்பெறத்தருவலத்தையுணராயோ. (௧௧௪)

எடுத்தவயிரப்படையுநின்கரமுமெஞ்சத்
தடுத்ததுணராய்கொல்வளனுழ்கடறணைப்பக்
கெடுத்ததுணராய்கொனமர்க்கிட்டியிபமோடு
மடுத்ததறியாய்புழைவாய்வதிமகத்தோய். (௧௧௫)

ஓதியபெருந்திறலுமூற்றமுமுளாரும்
வேதியர்வலத்தைநிகராகலர்விருப்பே
னீதியினவர்க்கறுகுநிற்கவரியேனான்
றாதினியொருத்தர்வழிசொற்றிடுதியென்றான். (௧௧௬)

அச்சமுறுமக்கனலைவிட்டருகிருந்த
பச்சையுருவன்கதிர்பரந்ததெனமல்கு
மிச்சையுறுகந்தருவரேந்தன்முகநோக்கி
நிச்சயமிதென்றுநனிநீடுறவிசைக்கும். (௧௧௭)

நீகடிதுசென்றுநிருபற்கவையுரைத்தி
மாகர்குரவன்றனைமறுத்தவிகொடுக்கிற்
சோகமுறவேவயிரவான்படைதுரக்கு
மேகமுடையானெனவிளம்பிவருகென்றான். (௧௧௮)

நன்றெனவிசைந்தவனடந்தரசைநண்ணி
யன்றவனறைந்தபடியாவையுமறைந்தான்
மன்றல்கமழ்பொற்கமலமாலையுடையானுக்
கின்றிதையுரைத்தியெனவேந்தனுரைசெய்தான். (௧௧௯)

அத்தகைமறுத்தபடியாலிளையனான
முத்தனைவரித்தவன்மொழிப்படிபுரிந்தே
னித்தகைதுறக்கினறமெங்ஙனுளதென்னோ
மித்திரதுரோகமதன்மேலுளகொல்பாவம். (௧௨௦)

ஆரியனும்வானவர்பிரானுமறியாத
காரியமியான்முறைகரைப்பவுரியேனோ
வீரியமிதன்றுநெறிவீட்டிலனிறந்தாற்
பூரியனெனார்பகர்திபோயெனவிடுத்தான். (௧௨௧)

மீண்டவனுரைப்பனிதுவென்றகலவெந்தை
மாண்டகுசம்வரதன்முகநோக்கினன்வகுத்தான்
காண்டியிமையோர்பதிகலாம்புரியியற்கை
பூண்டுறினும்யானொருபொருட்செய்கலன்மன்னோ. (௧௨௨)

ஊழியனலாழிகள்பெயர்ந்துறினுமும்பர்
தாழிறைவனேவுகுலிசந்தடியவரினும்
பாழியிமையோர்பலர்படைக்கலமதெனினும்
வாழியகல்விப்பனொருவாய்மையின்மறுத்தே. (௧௨௩)

அஞ்சலரசேமகமதாற்றுதியெனத்தண்
சஞ்சரிகமேவுமலர்மாலைதிகழ்தாம
னிஞ்சொல்பகரப்புயமிரண்டுமலைநேரா
யுஞ்சனனெனத்தனியுகந்தனனிருந்தான். (௧௨௪)

இந்திரனிருந்திடமிடைந்திவருரைத்த
முந்துசெயலின்படிமொழிந்திடவடைந்த
கந்தருவர்கோவினெதிர்கைப்படைசெலுத்தி
முந்துவிழிதீயுகமுனிந்தனனிவ்வேந்தை. (௧௨௫)

ஓசையொடுநீள்வயிரமேவவெதிருற்றோ
னீசனனையானையரனென்றுதொழவேகண்
டாசறவொர்விஞ்சைவலியாலதைமறுத்தான்
கூசியதுமீண்டபடிகொற்றவனுணர்ந்தான். (௧௨௬)

எய்துகுலிசம்பனியிரிந்தெனவிலங்க
வைதிகமுணர்ந்தவனைவான்பதம்வணங்கி
யுய்திறமுனுற்றினையுனக்குயிரையாதி
செய்கைகளெலாமுதவினேன்மடமைதீர. (௧௨௭)

என்றுரைவிளம்புமகிபற்கிவனிதங்கி
வென்றிபுனைவோயுனையியந்தனனளிப்பேன்
றுன்றுபெருமாறுரைசெயென்றுமுனிசொல்ல
நன்றெனவடங்கிநரபாலனிதுசொற்றான். (௧௨௮)

கமையுறுவலாரிமுதலாயுளகருத்தா
விமையவரெலாமகிழ்வினெய்தியவிகொள்ள
வமையுடையநல்வரமளித்தியெனவோதச்
சமைவிதுபுரிந்திடுதியென்றுரைகடந்தான். (௧௨௯)

அந்தரமியங்குமவராருமகிழ்வெய்த
மந்திரமதொன்றிலவர்மாமுனிவகற்றி
யிந்திரனையாதியரையாங்கணுறுவித்தான்
வந்தெதிர்பணிந்தவரைமாண்பொடுபுகழ்ந்தான். (௧௩௦)

கொற்றவனுடன்குருவினுக்கிளையகோமான்
மற்றவருடன்பரிவின்வாய்மைகணிரப்பி
யற்றிதெனவாங்கவருடன்றனியளாவிக்
குற்றமறவேயவிகொடுத்தனனெவர்க்கும். (௧௩௧)

மாசறுமறைப்படியிவ்வானவர்களுண்ணத்
தேசினவிநல்கிமகவேந்ததிசயிப்ப
வாசறநல்வேள்விபுரிவித்தனனியாருங்
காசினியிலொப்பரிதெனும்படிகரைப்ப. (௧௩௨)

மாறிலரமங்கையர்மகிழ்ந்துநடமாடத்
தேறியசொல்விஞ்சைமடமாதர்சிலர்பாட
வீறினெடுவேதியரெலாமறைவிளம்பக்
கூறரியவேள்வியதுகோமுனிமுடித்தான். (௧௩௩)

வாஞ்சையொடுமான்கள்பலகோடிவரைபோலுங்
காஞ்சனமெலாமமரர்காமைமறையோர்பாற்
பூஞ்சடையுளான்றனிபுகன்றபடிதந்தான்
சாஞ்சலியமற்றமதியுள்ளதனிவேந்தன். (கருச)

கண்டதிசயம்புனைதருங்ககனவாணர்
மண்டழல்செய்மன்னவன்மனம்புரிவழங்கி
யண்டிமுனியைப்பரவிபங்கவர்விடுப்ப
பண்டுறுமிடத்தினடைகுற்றனர்பரிந்தே. (கருரு)

மீட்டுமரசவ்விடைவிளங்குபலபண்ட
மாட்டுபலபாத்திரமெலாதனிவழங்கி
நாட்டினையடைந்துதிருஞானமுனியோடும்
வாட்டிறலுளான்மருவிவாழ்ந்தனனிருந்தான். (கருசு)

அன்றுதருகாஞ்சனமியாவருமுகந்து
பின்றையொழியாதனவிருப்பவவர்பேசி
நன்றிதுமறைந்துபுவியுட்படநடக்குந்
துன்றுபலகாலநிலைதோற்றுவதொலைந்தால். (கருஎ)

இப்பொருளெவன்விழியிலக்குறுமவற்கே
யப்பொருளுரித்தெனவறைந்தவரகன்றார்
செப்பமுடையாயவைபிருந்ததிதுதேர்தி
கைப்படுமுனக்கெனமுனிச்சுடர்கரைத்தான். (கருஅ)

அத்தனமிருப்பதிமையக்கிரியணித்தா
முத்தமனினக்குரியதென்றுறுதிகொண்டேன்
வித்தம்வருவித்தரியவேள்விபுரியென்று
னத்திபுரிமன்னவனதீந்துமகிழ்கொண்டான். (கருகூ)

வேதமுனிசொற்றதுவிருப்பமொடுகேட்டுக்
காதலும்வெறுப்புமிலனுயினியகாலை
நீதியினிருப்பநெடுமாலிதுபகர்ந்தான்
வேதனைபுழக்குமுறைதீர்த்திடல்விரும்பி. (கசo)

மருத்துயாகச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - கசo.

கிருட்டிணார்ச்சுனசம்வாதசருக்கம்.

வினையென்றுங்காலமென்றுங்குணமென்றும்வெவ்வேறாகப்
புனைகின்றவெல்லாமின்றிப்பொய்யற்றுமெய்யைத்தேறித்
தனையொழிந்தொழியாவானந்தக்கடற்குளித்ததக்கோர்
நினைவறுநிலத்தினூடுநிகழொளிபரவல்செய்வாம். (க)

முரசுயர்பதாகைவேந்தேமுன்வினைச்செயலின்வண்ண
மரசர்தம்முடலநீந்தாரையமெம்மறிவிலாமை
பரசியகடவுளன்றிமுத்தொழிற்பயிற்றலுண்டோ
வுரைசெய்வார்தம்மாலென்றேயவர்க்கெலாமுளதுதீமை. (௨)

ஒருவரையொருவர்கோறற்குரியரேலுரைத்துநிற்கும்
பெருமிதமறலியென்னமிருத்துவெண்பிணிகளென்மற்
றருவரைதோளாயாயுவுரைப்பதேனறிவிலாரிற்
றருவதேனுரைகனியோகுரவரைத்தடியவல்லோன். (௩)

வருத்தமெனுயிர்ப்பென்முன்னர்மகத்திறைவயிரமோச்சி
விருத்திரன்றன்னைக்கொன்றவிதத்தினையுணர்ந்துதேரிற்
கருத்துடையோர்கட்கம்மாநிகழ்பெனக்கருதலாற்று
றுருக்கொளற்புதமுமீசன்முத்தொழிலுறுதல்காண்பார். (௪)

கலங்கனீசிந்தையூடுகருதலைபலர்க்குநன்மை
விலங்குறுவண்ணம்வாசிவேள்விசெய்தளித்தியென்ன
வலங்கழும்புயத்தோன்கூறமுனிவரர்பலர்சொலன்பா
னிலம்புகழ்ந்தேத்தக்கூறிநிருபன்றன்றுயரந்தீர்த்தார். (௫)

தேறினன்குரவர்வாய்மைத்திறத்தினாற்சிறந்தவைய
மாறினனன்மையாகத்தீதாகமறைவலோர்நீர்
கூறினவண்ணமன்றிவேறொன்றோகொள்வதென்ன
வாறினனுரைத்துமீளவறைந்தனனிதனையம்மா. (௬)

தரங்கத்தாற்கரையலைக்குஞ்சானவிமருங்கிற்சின்னா
ளிரங்கித்தானிருந்தபின்னரேகுவனகரினூடு
துரங்கத்தோரசனோடுஞ்சூழல்போயடையுமென்று
சிரங்கற்றோர்பதத்தினான்றவணங்கினான்றேற்றங்கொண்டே. (௭)

யானகரடைந்தபின்னரியற்றுறுவேள்விக்கேற்ற
வானுறுகலப்பையாவும்வருவித்துன்னுடன்போய்வேள்வி
மேனிகழ்பொருள்கள்வாசிமேதத்தைமுடித்துமென்னா
ஞானவேதியனுக்கோதிவிடைதந்தானவின்றுபோனார். (௮)

முனிவராகன்றபின்னர்முகுந்தனும்பிதாவுமேனை
முனையுணர்துணைவராரும்விதுரனும்மொய்ப்பவைகி
நினைபகல்கழித்துமீண்டுநிறைநிதிநகரிற்புக்கான்
றனையெதிர்கொள்ளவவ்வூர்வாழ்பவர்மகிழ்வுசார்ந்தே. (௯)

நவமணிச்சோதிகாட்டுமண்டபத்திருந்துநல்லோர்
தவமதிமுகங்கள்பார்த்துத்தருமநூலியற்கைகேட்டுக்
குவலயத்தேற்பதேற்றுங்குறையிரந்தவர்கட்கீந்துங்
கவிகைநீழலிற்புரந்தான்காசினியனைத்துமன்றே. (௧௦)

என்றுமாமுனிவன்கூறவிராசநாயகனுநோக்கிக்
குன்றெடுத்தவனுஞ்செந்தீகொடுத்தவில்லெடுத்துளோனு
மொன்றியெங்குற்றுரெவ்வாறுலாவினருரைத்தியென்ன
வன்றவர்சரிதங்கேண்மோவெனமுனியறையலானான். (கக)

பற்பலவைகலாங்கண்பயின்றபின்பாரளந்த
சிற்பரனுடனேமுன்னோன்விடைபெற்றுத்தேரூர்ந்தேகி
யற்புதமாதரோடுமணிகொளிந்திரப்பிரத்த
நற்புரமதனிலுற்றானமறையோர்கள்வாழ்த்த. (கஉ)

என்னாறுதேர்கள்கைமாவியற்பரிபதாதிசூழக்
கன்னாகலகிலங்காக்குங்காவலர்பணிந்துபோற்ற
விண்ணவர்மலர்கடூவவிறலரியாசனத்திற்
கண்ணனோடினிதிருந்தான்காண்டவமழித்தகாளை. (கங)

அன்னகர்வைகுநாளிலோர்தினத்தரியையேத்தி
முன்னமாதவத்தினின்றுமுசித்தநாண்மொழிந்தமாற்றம்
பின்னபிமன்னுமாண்டதுயரத்தாற்பெறல்பொச்சார்ந்தே
னின்னுமீயொருகாற்கூறவேண்டுமென்றிறைஞ்சினானே. (கச)

அத்தகையவனைநோக்கியங்குரைத்தவைகளெல்லா
மித்திறத்துரைத்தபோதுந்தெரிவுறலெளிமைப்பாலன்
றுத்தமவுனக்கோர்காதையுரைப்பனக்கருத்தின்சால்பாற்
பத்தியினுணர்தியென்றேபச்சைமால்வகுக்கலுற்றான். (கரு)

முன்னர்நாள்காசிபப்பேர்மறையவன்முகமனோடு
மென்னுழையடைந்தானன்னானியற்கடனளித்திருத்தி
யன்னுதிதத்துவத்தின்பயனெனக்கென்னக்கேட்க
வன்னவன்மொழிந்தவெல்லாமறைகுவனுணர்திமன்னே. (கசு)

தானொருதினத்திலோர்நற்சாரலின்சார்பினேக
மானொருகரத்தனேபோல்வடிவுடைச்சித்தர்கோமான்
கானொருமருங்கிற்றோற்றக்கண்டவன்பணிந்துபோற்றி
யூனொருபலமிலாதவுடலுளானுரைக்கலுற்றான். (கஎ)

நல்வினைமுத்திநல்குமெனப்பலர்நவிலும்பண்பால்
வெல்வனிப்பிறப்பையென்றுபுரிந்தறவெறுப்பிலாழ்ந்தேன்!
கல்வரையடைந்தேனின்னைகண்டனன்கடவுளேபோல்
வல்வினைதொலையுமாறுவகுத்தியென்றிடலுஞ்சொல்வான். (கஅ)

எத்தனைகாலஞானமெய்துறுணகினின்று
சத்துறுகருமமெல்லாந்தாங்கிநின்றுஞற்றினனு
முத்தியையடையவொண்ணாநல்வினைமுயற்சியெல்லாம்
வைத்தகாஞ்சனத்தாலிட்டதளையெனமதிக்கொள்வாயே. (ககூ)

வேறு.

எந்தநல்வினையும்யானியற்றிடாதிலே
யந்தணன்புரத்தினுமமரர்நாட்டினுஞ்
சந்ததமியங்கியுந்தவிர்ந்ததில்லையா
லிந்தவான்பிறப்பிறப்பென்னுமேழ்கடல். (௨0)

கற்றநன்கலையெலாங்கல்விவான்செருக்
குற்றிடப்பலர்வெகுண்டோடவாதுசெய்
திற்றனன்பயனெலாநிரையமெய்தியும்
பற்றினேன்பிறவியைப்பாசமீர்ப்பவே. (௨௧)

எத்தனையன்னைதன்னுதரமெய்தினே
னத்தனெத்தனைபலரளித்தமைந்தருஞ்
சத்தறுதாரமெத்தனைச்சகோதர
மித்தொகையாவரேயிசைக்குமென்னுளோர். (௨௨)

ஓதினும்பிறப்பறுநிடரிலாழ்ந்தவப்
போதினுமென்கொலோபொய்யைமெய்யெனச்
சாதியுஞ்சமையமுந்தானுநீங்கலா
தாதியமொன்றிலாதுழறலுற்றபின். (௨௩)

இனைத்தறவிடையவாசனைகளீண்டுரு
துனைத்தரும்பிரபஞ்சமொன்றுங்கைக்கொளா
முனைக்கருங்காட்டிடைமுசிப்பினெய்தினேன்
றனைத்திரேளீங்கினேன்றன்மைதேறியே. (௨௪)

அகிலமுமுயிர்களுமரியபாசமு
மிகலுறுவேறுபட்டெங்குமாயினேன்
புகலுவதென்கொலோபிறவிபோயதாற்
பகலவனெதிர்ப்படுமிருளின்பான்மைபோல். (௨௫)

கடலைநீந்திக்கரைகண்டதன்மைபோ
லிடரிலாப்பெருநிலத்தெய்தினேனினி
யுடலுறேனின்பமாமுத்தியாழ்ந்தனன்
றடமதித்தேசிகனருளின்றன்மையால். (௨௬)

என்னைநீயுணர்ந்தருகெய்தினாயினி
யுன்னையானின்பத்தினுறுவிப்பேனிவண்
மன்னிபானுரைத்தனவாறெலாமனத்
துன்னியோர்க்கிடுதியென்றுறைத்தன்மேயினான். (௨௭)

பாரியல்வினையிரண்டென்பர்பாவமுஞ்
சீருறுதருமமுஞ்செறியுந்துக்கமு
நேரிடுமகிழ்ச்சியுநிகழ்த்தும்வித்ததே
யாரியலுடலதினாவதென்பரே. (௨௮)

எவ்வணமாமுறையென்னிலேழையர்
பைவணக்கருவழிப்படர்ந்துசுக்கிலஞ்
செவ்வணப்புனலுறச்செறியுமாடியிற்
றைவருநிழலிற்சைதன்னியஞ்சால்புளாய். (உசு)

அவ்வொளியாலிரேரியபிண்டமாய்க்
கைவலிகால்சிரமுதாங்கற்பித
மெய்வலியடைந்துநாண்மேவயோனிவாய்ப்
பைவழிதிறந்திடப்பாரிற்பாயுமே. (ந௦)

உதித்தவனிருவினையுடலமாதலாற்
கதித்தவன்முறைப்படிகருமமாற்றிடு
மதித்திடிலிருவினைவயத்தனுகலான்
விதிப்படிதன்னைமெய்யுணர்ந்தமேலையோன். (நக)

யானெனதென்றபிமானத்திவ்வழி
வானுறவொழுகுவான்மருளனுகுமாற்
றானவன்பெறுபயனில்லைசாற்றுவன்
மேனிகழ்வனசெயல்விரித்துக்கேட்டிநீ. (நஉ)

கையறவிரதம்விட்டசும்புகைக்கொளு
நெய்யரியெனத்தனைத்தேறுநீர்மையா
லுய்யுநற்கருமம்போலுடலைப்போற்றுவர்
மையலிற்புசித்துமுன்வளர்ப்பர்மானவர். (நங)

உண்பதுந்தவிர்வதுமுன்னலாதுதுய்த்
தெண்படப்பன்முறையிரைகளேற்பவர்
பண்பகனித்திரைபரத்தைச்சேர்பவர்
கண்படுமாரியர்கடந்தமூன்றுமே. (நச)

உரியதாம்வினைகளினுலோபந்தீமையா
மரியகாயத்திறனதிகந்தாழ்த்திகழ்
பெரியமுப்பிணிகளாம்பேசுமூன்றினுஞ்
சரியறவுணர்ந்திடினுயிரைத்தள்ளுமே. (நரு)

இவ்விதமுடலம்விட்டேகுமாருயிர்
வெவ்வினைமுறைப்படிமேவுமாக்கைகள்
செவ்வியர்நகும்படிதிரிவதன்றியே
யுய்வகையுணர்ந்திலருலகியற்கையோர். (நசு)

அவரினன்முத்தியடையுமாற்றல
ரிவரெனவுணருதிசாந்தமெய்தியே
தவம்பொறைவாய்மைநற்சவுசந்தானத்தோ
டுவரிசூழுலகினிலுதித்தமாந்தரை. (நஎ)

கருணையும்பிரமசாரியமுங்கைக்கொளா
வொருவர்தந்தம்மனையுகவுகொண்டிடா
திருளுறுபுலன்வழியறிவியங்கிடாப்
பெருமிதமுடையராம்பிறவிநீங்குவோர். (௩௮)

அத்தகையென்றிவையூன்றுகோலதாய்
முத்திவீடடைவரிம்முறையினிற்கலார்
தத்துநீர்க்குமிழியாமுருவந்தாங்கியுஞ்
சத்தறவொழிந்துமேசரிக்குஞ்சார்பினோர். (௩௯)

முத்தருக்குயர்குணமொழிவனின்னுங்கேள்
பத்தியிற்கடவுளைப்பழிச்சறென்புலத்
துத்தமர்கடனதிதியர்கட்கூட்டுதல்
சித்தசித்துணருதறெளிவின்மிக்கதே. (௪0)

தந்தைதாய்தேசிகன்றானருச்சனை
புந்தியார்ந்தியற்றுதல்புகலும்பண்பெலாந்
தந்திடறனுவிருந்தென்றுதக்கவர்
முந்துடல்பரிப்பதுமுறைமைப்பாலதே. (௪௧)

உற்றடிவணங்கினின்றேகையோங்கிடக்
கற்றவர்தருமுறையமுதங்காதினுற்
பெற்றதைநுகர்ந்துதாம்பிரியப்பேரருட்
பற்றுடையவர்களேபாசம்விண்டுளோர். (௪௨)

பரவுதல்பழிச்சுதல்பயிறலாதியாக்
குரவர்நம்புனிதவாசாரக்கொள்கைக
ளிரவொடுபகலுந்தன்னியற்கையாக்கொளி
லூரனுடைவேலினையோடுந்துன்பெலாம். (௪௩)

வேறு.

விரதநிட்டைபுலன்மயக்கின்விசயநற்பொறை
சரதசத்துகுணமுஞற்றுதவர்தமக்கெலாம்
பிரமமக்கினிசமிதுய்த்தல்பருகபெட்பினெய்
குரவனற்சொன்மறைமகத்தைமுயல்குறிப்பிதே. (௪௪)

பிரமனிட்டைநெறிசரித்தல்பிரமசாரியக்
கருமமுற்றுபெயருரைப்பர்கருதுசிரியோர்
வருமவர்க்குநிகரொருத்தர்வாய்க்குமேகொலாங்
கருதுதற்குமரியபெற்றிகாணுநீரரோ. (௪௫)

மரணசோகநரகவாதைபிணிமயக்கினோ
டரணமானவிருளெலாமகன்றநீரராங்
கரணநான்குபுலன்களோடுமனதுகைப்படிற்
சரணடைந்துளாருமுத்திசார்வர்திண்ணமே. (௪௬)

அம்புயன்சிருட்டியுள்ளடங்குமாறெலா
மிம்பர்கூறுவராகரங்களென்னுநாமமே
பம்பிமீதடங்கொணாப்பராபரந்தனை
யும்பரக்கரங்களென்றுரைப்பர்நாமமே. (௪௭)

ஈதிரண்டுமுலகெலாமியங்குகின்றவைம்
பூதசாலமங்குரித்தவிதையின்பொற்பதே
வேதவாய்மைகமனமாகமனமெனுஞ்சொல்விட்
டேதந்தீரவேபுணர்ந்திருப்பர்தன்னையே. (௪௮)

வேறு.

சுகதுக்கஞ்சிரமமென்னுமுடலமேசுசியதென்று
மகிலவான்பொருள்களியாவுமத்திரமென்றுமாற்றும்
புகலுநல்வினையுமீளப்பிறப்பருள்புலமைத்தென்றும்
பகருமுன்னியற்கைபூண்டோர்க்கருதுவர்பற்றிலாமல். (௪௯)

அவ்வணமுணர்ந்துதேறியடங்கியஞான்றுமோக
மைவருணாந்தகாரம்வந்துவந்தடுக்குமாங்குச்
செவ்வியினதனைநீக்கிப்பிரபஞ்சஞ்சோராராகி
யுய்வணம்வழுவாநின்றோரெய்துவருரையாமுத்தி. (௫0)

ஆங்குறுபிரகிருதிநாடியதற்குமேலறிவிலாதார்
தாங்குவருடலனந்தஞ்சார்மரணஞ்சாயாதாற்
பாங்குறுமக்கரத்தின்பயனுணர்ந்திருந்தோர்க்கன்றி
நீங்குறுதுடலுமின்னுநிரப்புவனினிதிற்கேண்மோ. (௫௧)

அவரின்னதன்மையாரென்றுரைத்திடாதிகழாராகி
நவமுறப்புகழாராகிநலனுறுமேகாந்தத்திற்
கவலைதீராசனத்திற்கருத்தெலாமகற்றிச்சும்மா
யவலமற்றிருத்தல்கண்டாயாவருமுணராக்காட்சி. (௫௨)

நின்றவச்சமாதியூடுநினைப்புவந்தடுத்ததுண்டே
லன்றதன்வயமாகாமனிராலம்பனாகினானு
மின்றிவன்சர்வமித்திரனேதமில்சர்வநண்பன்
குன்றலில்சிதேந்திரியத்தன்காமக்குரோதாதிநீத்தோன். (௫௩)

எனப்புகல்பவன்சர்வபூதமுமியானேயென்று
மனத்துணர்ந்தவனுமூன்றுவகைபராமுத்திகண்டோர்
தனக்குளகருத்தையின்னுஞ்சாற்றுதுமினிதுகேட்டி
நினைப்பிலாமனத்தோயென்றுமீளவுநிகழ்த்தலுற்றான். (௫௪)

உறவுடன்பகையுமின்பதுன்பமுமொன்றாக்கண்டோன்
மறமறுநிராசையோடுவசையிசைபொருள்கொளாதா
னறநெறிகைக்கொண்டென்றுங்குலநெறியாற்றிநின்றோன்
றுறவுற்றேடணைகண்மூன்றுந்துறந்தவன்சிறந்தஞானி. (௫௫)

தாபங்கண்மூன்றுமற்றுச்சார்தருபற்றினோடு
நிபஞ்சித்திரத்தாலுற்றதெனமனஞ்சென்றுசேரச்
சோபங்காமூறுமியாம்வைராக்கியத்துணிபுண்டானோன்
கோபஞ்சாராதமுத்தியவ்வியயங்கூடினோனே. (௫௬)

சத்தநற்பரிசரூபரசகந்தத்தன்மைநீத்தோன்
சத்துமுன்னானமூன்றுகுணத்தினுஞ்சார்புநீத்தோன்
சத்துசித்துணர்ந்துசர்வசங்கறநிவிர்த்திபூண்டோன்
சத்தவன்சித்திசாந்திசார்ந்திடமுத்தியாமே. (௫௭)

என்றுபற்பலவுங்கூறிநிதானமிங்கிதுவேயென்ன
வன்றவனுரைத்துமீளவியோகத்தையறையலானான்
வன்றிறற்கருக்கொண்டாரைத்தரிசனத்துணருமாபோற்
றான்றடவுதரமான்மாநிகழ்த்துறலியோகரூட்சி. (௫௮)

இருந்தமாதாவனேகவியற்கையினாலாயபோதுங்
குருந்தசையாவுங்கர்ப்பகோளகைநிற்குமாபோற்
பொருந்துடனன்மைதீமைபொதுளினுந்தன்னையோர்ந்து
விரும்பிடாநிலையினிற்குமுண்மையாமேலாமியோகம். (௫௯)

தன்னையோர்ந்தசைவிலாதகன்மயமடைந்தயோகி
பின்னையேன்பிறந்திறப்பான்யுத்தனும்பெயரும்பூண்பான்
மன்னுறுசரையாலழான்மறலியைத்துறந்துவாழ்வான்
பன்னுதன்னடியர்க்கன்னபதந்தருமியல்புளானே. (௬0)

மேனியத்திரமுணர்ந்தேநிட்டையில்விளங்குமேலோ
னான்றவிராகதுக்கந்தனிலகப்படுதலாற்றான்
வானுயர்பூதகோடிகளிலச்சமடையான்மாயா
ஞானியாமிவையேபிரமசரியமாநவில்வதெல்லாம். (௬௧)

யுத்தநாமத்தனானயோகியைவயிரமாதி
கைத்திறப்படைகளன்னீர்காலனல்கடக்கமாட்டா
வெத்தகையரியபோகமெனினுமிந்திரன்வாழ்வேனு
மத்தகைகருதிக்கொன்றானழிவுளதென்னுமாற்றல். (௬௨)

வேறு.

தன்னிடத்திற்றனைநன்றாவுணர்ந்திருக்கும்பரமசுகந்தன்னில்வேறாப்
பன்னுதற்கோர்சுகமில்லைபிரபஞ்சத்திலதுகூடும்படியதாய
தென்னையெனில்விருதாவனுட்டானமதாமிவையுணரவிளம்பக்கேண்மோ
பின்னைமதிபுறஞ்சாயாதிருத்தலசமதற்குறுதிபிரிப்பன்கோடி. (௬௩)

தனையறிந்தபேரின்பசுகத்தாழ்ந்தமனமீண்டுபுறத்திற்சார்ந்தா
லனையநிலைதவறெய்துமாதலினாற்பெயராமலடக்கவேண்டும்
வனையுறுபற்றானுகண்டநாளமிதையத்தொருசாரகத்தேமாற்றி
யனையமனந்தனைமீளவானந்தத்தமிழ்த்துவராமறிவான்மிக்கோர். (௬௪)

என்றுபலபலமுறைகளெடுத்தியம்பிக்கௌசிகன்மீண்டென்னைநோக்கித்
துன்றுசிறுநகையுடனேயுணராப்பொருளென்றேசொல்வதென்றே
நன்றுபெரியோயின்னுமக்குரவனிகழ்த்தியவாநவில்வாயென்ன
வன்றறையக்கேட்டவனுமீளவொருவாய்மையெடுத்தறையலுற்றான். (௬௫)

மீளவிருகரமுகிழ்த்துமுத்திதருநிலையின்னும்விளம்புகென்னக்
காளமுகிலுலகுய்யப்பொழிவதுபோன்மறைப்பொருள்கள்காட்டலுற்றான்
கோளறுபற்பலபசுவிற்கொண்டபாலொருகுடத்திற்கொணர்ந்தோன்காக்கு
மேளதமிலாதமுறைபோன்மனமான்மாவிணைத்தேடலின்பமாமே. (௬௬)

ஆயமுறையிப்பரமதத்துவங்கள்செவிப்புலனாலறிதலன்று
மாயமலத்துரிசகன்றமனந்தீபமாப்பொருளையுணருமாறு
மேயுமெந்தத்திசையினுங்காலிருகரமன்னம்விழிகளிதுவாக்கொண்டே
தூயபரதத்துவங்கள்விளங்கமகாயோகியர்கள்தோற்றங்காண்போர். (௬௭)

தனையுணர்ந்துதத்துவங்கள்வேறாகநினைந்துசித்தசாந்திதாங்கி
மனமகலாதெஞ்ஞான்றுமானந்தமடைந்திருக்கும்விவியுளார்க்கு
நினைவில்லைமறப்பில்லையின்பமில்லைதுன்பமில்லைநானில்லைத்
தனையுணராவகைமறைக்குமிருளில்லையொளியில்லைத்தவமுளாயே. (௬௮)

இதுபிரமவித்தைமகாவாக்கியத்தின்முடியுமறையந்தமீதே
யிதுபரமரகசியமற்றொருவருக்குமுணர்வரியதிதுவேகண்டாய்
சதுரவுனக்கெடுத்துரைத்தேனுணர்ந்தனையிம்முறைபிரமசரியனாகென்
றதரமசையாதுரைத்தானாரியனென்றருமறையோனறைந்துமீட்டும். (௬௯)

அன்றுரைத்தசித்தனியான்சிடனுருவடைந்துனக்கீதறையவந்தே
னின்றுளத்திலுணர்ந்திருத்தியெனப்புகன்றேயுருவமறைத்தேகலோடும்
வென்றிவித்தேயானடைந்தேன்மேவருஞானானந்தவெள்ளநின்பாற்
றன்றுகருணையினுரைத்தேனுணர்தியென்றானுலகளந்ததுளவினானே. (௭௦)

பிணியினான்மெலிகின்றேன்பெரும்பாவியுணருமறிவிலாதபெற்றி
யணிபவனாதியர்க்கின்னாலறைவதலநினையொழிந்தாரறியவல்லோர்
கணிதமறுமன்பதையிற்செய்தவத்தால்வசியனேகடைஞனேமற்
றுணரின்முத்திகைகூடுமரசர்வேதியர்க்கடுத்ததுரைக்கற்பாற்றே. (௭௧)

அத்துணையபரமசாதனவுபாயங்களெலாமறைந்தேனன்றே
வித்துணையபரமசுகமினிக்காண்பதெங்ஙனுலகியற்கைநீங்கி
நித்தியமோர்ந்தவன்மூத்திமாதுநாயகனதற்கோரையநேரா
துத்தமநேருதிஞானயோகுமிருதொருமூன்றினுளவாமென்றான். (௭௨)

எவ்வுயிருந்தானானேனிவ்வியலையெடுத்துரைப்பவிருகண்டாரை
மைவருணத்திருமேனிமாசகற்றப்பேசரியமகிழ்விலாழ்ந்த
கைவரிவிற்காளைக்குக்கரியமுகில்புரைமேனிகருணைக்கண்ணா
னவ்வகையாய்மீளவுமோர்காதையெடுத்துரைத்தனனிவ்வுயிர்களோங்க. (௭௩)

ஞானமுனியோர்விமலவேதியனைப்பணிந்துமனையவனன்பாக
வினமுறுபெரும்பிறவியெய்தாதவகையாதாலெய்துமென்ன
மானனைகேளத்தியாத்துமவிஞ்சையுணர்ந்தவர்க்கிலையென்றுரைப்பமங்கை
தானுணரும்வகையதனைத்தெளியவுரைத்திடவென்றுதாளிற்றாழ்ந்தாள். ()

சிறுநகையோடவள்கொழுநன்செனனமரணாதிகளைத்தீர்க்குமாறு
வறிவடையநினைந்ததிதேயற்புதமாங்கற்புடையாயறைவன்கேண்மோ
மறுமையிம்மையிழையாதுமயக்கறுத்தோர்க்குறித்தானமறையினந்த
நெறிகடந்தசீர்மையுனக்கெடுத்துரைப்பான்கேட்டியென்றானிகரிலாதான். ()

வேறு.

கன்னமதிற்கேட்கரிதுகாண்டரிதுசெயவரிது
பொன்னனையாய்கருமங்கள்கருமிகளப்புணர்ப்பாலே
மன்னுறுஞ்சித்திகளென்றேவாதிப்பர்கருமமெலா
மன்னியமாயற்றாரையிகழ்வருலகியலன்றோ. (எசு)

என்ஞான்றுகருமமெலாமியற்றாமலறத்துறந்தா
னஞ்ஞான்றேயவன்பிறவியகன்றதேன்மனங்கோடி.
மெஞ்ஞானப்பெருந்தீபம்விளங்கியான்மாவுணர்ந்தே
யஞ்ஞானவிருளகற்றியானந்தமணுகுவனால். (எஎ)

பஞ்சவாயுவுமனமும்பத்தியுமேழ்பாவகனுக்
கிஞ்சொல்புகனாவேழாமியலான்மாவேகனலாம்
வஞ்சனைசெய்தத்துவங்கள்சமிதையதாய்வருநெய்யா
யுஞ்சிடவேநாடோரும்யோகியர்வேட்டிடலொழியார். (எஅ)

அக்கருமமெய்க்கருமமதுநிற்கவாற்றலெலா
பொய்க்கருமமெனவுரைத்திபுனிதமுளாயெனக்கூறத்
தக்கவர்கள்பெருமானேமனம்வாக்கிற்றாழ்வுயர்வு
கைக்கொளயான்புகலென்னக்கட்டுரைத்தான்கலைவல்லான். (எகூ)

முன்னாளில்வாணிக்குமுகனான்குதரித்தபிரா
னன்னாளிலுரைத்தபடியறைவனதுகேட்டி
பன்னாளுமனமுயர்வாமவர்க்கிழிவாமெனப்பாவை
தன்னாகமிகநடுங்கிச்சலித்துரைப்பாடன்பதிக்கே. (அ0)

உன்னையருங்காமத்தாலூறிலாவகைகாக்கு
மென்னையிழிபாக்கியதேனெனப்பிரமனெடுத்துரைத்தான்
பொன்னனையாய்தாபரசங்கமமிரண்டாம்புகல்மனத்திற்
பின்னையவாக்கினுக்கிழிபாமுன்னையவாமுயர்பேதாய். (அக)

என்றுரைப்பவாழிமகிழ்ந்திருந்தாடற்பரமுடைய
வென்றிமனமருகிருக்கும்வேதியனுக்கெனவுணர்தி
குன்றனையமுலைத்திருவேயெனக்கணவன்குறித்திடலு
மன்றுணர்ந்தாளக்கொடியும்வேறொன்றையறைந்திடுவாள். (அஉ)

மனதுடனேயிந்திரியமிரண்டென்னுமாறதனு
ளனகவுயர்த்திகடாழ்த்தியறைதியெனவவ்விரண்டு
முனமவர்தாயிந்திரியமொழியமனஞ்சமமென்றே
மனதுதானுயரவென்றேவகுத்தமொழியுளகேண்மோ. (௮௩)

கண்களுருவுணராதுகாதுசத்தந்தேருது
பண்கொளிரதங்கந்தம்பரிசியாநாநாசி
யெண்கொளுடற்பரிசத்தாலின்பதுன்பமெய்தாவாற்
றண்ணுறயான்கூடாதுவேறுபடிற்றேற்றாவே. (௮௪)

எனவுரைப்பவவைகேட்டேயிந்திரியமிதுகூறு
மனமேயிவ்வொன்றாலேமிக்கதிகம்வதிவாயோ
தனியுறுமின்பமுமுளவோநின்றனக்குச்சாற்றிலெம்மாற்
றுனியறவேநீயருந்துதொடர்பனைத்துமறந்தாயோ. (௮௫)

எம்மிலொருவன்கலங்கியிடரடையினுறுவாயோ
செம்மைபெறவவன்வழியாற்செறியுமனுபவங்களெலாந்
தம்மிலொருவன்வழியிற்சார்வனமற்றொன்றாலே
யெம்முனடைந்திடுவாயோயேதானீமுதன்மையனே. (௮௬)

பிணியதனானீயடங்கிற்பெயர்வுறுபோதகமெம்மா
லணியவுளதெமக்குன்னாலாவதென்னோவறையாமோ
தணியமுதல்யாமருந்தித்தந்தபினர்நீயதுக்குந்
துணையுணர்ந்துநீமுதன்மையெவ்வணந்தொடர்ந்தனையோ. (௮௭)

ஆமல்லவென்றுதடுத்தறையவல்லசீடருக்கும்
பாமன்னுகலைதெருட்டும்படிசென்றாலெமையன்றி
நீமன்னுமுறையுளவோநீங்கியெமையருங்கனவி
லோமுன்னும்வாயிலாமனைபோற்றுன்புறலின்றே. (௮௮)

எம்மையிலாதோரின்பமெய்தரியாய்நீநின்னை
யிம்பரகன்றெமக்குமிலையிருதிறமும்வேண்டுதலாற்
செம்மைசமமாயுரைத்தன்முதன்மையுரைசெய்தவெலாம்
வெம்மையெனப்புகன்றிடலுமனமுணர்ந்துவிளங்கிற்றால். (௮௯)

அக்காதையுனக்குரைத்தேனறிகவெனத்தனதிறைவ
னிக்காமவல்லிதனக்கெடுத்துரைப்பவுளமிளகி
மைக்கானமுகிற்கூந்தன்மடவரல்வாயுவின்சரித
முக்காலமுணர்முனியேமொழிகவெனக்கரமுகிழ்த்தாள். (௯௦)

வாயுவினாற்காயமெழும்வாயுவினாற்போகமுறும்
வாயுவினாற்சுக்கிலங்கண்மாதுதரமுறுவதுவும்
வாயுவினான்வளர்கருப்பைமலர்ந்ததனையேற்பதுவும்
வாயுவினாற்சோணிதமுமருவுவதுமுளதாமே. (௯௧)

அபானனாற்சுக்கிலம்போமுதானனாற்கருவடையுந்
தபாவகைகாப்பதுமதனைவியானனுஞ்சலபான
மபாயமுறாவகையுகுப்போன்சமானனுமான்மாவாய்ச்
சுபாசுபங்காண்பதுமீதாகாய்பிராணனெனத்தொகுப்பாரே. (௯௨)

சோணிதத்தாலுருவமையுஞ்சுக்கிலநல்லுயிராகு
மானுடைத்தாயிவையிரண்டும்வாயுவினாலாவதுவாம்
பேணியநான்முறைபுவிமேற்பிறத்தல்புரிவதுமதுவே
நீணிலத்தில்வினைவழியேநிறுவுவதுமதுவாமால். (௯௩)

வினையுலப்பகனலுக்குமேவுமுயிர்ப்போரைந்து
மனையகனற்செயலாகவாய்ந்துரைத்தாராதலினாற்
புனையிழைகேளகன்றிடுமெப்பொழுதுயிருமுடனீங்கு
மினையபரிசுணர்ந்திருப்பர்யோகநிலையேற்றாரே. (௯௪)

என்றுரைப்பப்பார்ப்பனியாரிரைஞ்சியினியானியற்று
மொன்றுசெயற்குறித்தியெனத்தவமுனாற்றலுறுதியென
வன்றுமறைமுனியுரைத்தானிவ்வண்ணமுனாற்றியவள்
சென்றடைந்தாண்முத்தியெனத்தெளிவித்தான்றிருமாலே. (௯௫)

பரவசத்தானாயிறைஞ்சிப்பற்குனன்கைமுகிழ்த்திருப்ப
வுரவுநறுந்துழாயலங்கல்வேதாந்தச்சுடர்மீட்டுங்
கரவுணராதவன்செவியிற்கடலமுதைப்பொழிவதுபோ
லுரவுமொருகாதையெடுத்துரைக்கின்றானருளோடும். (௯௬)

மேதாவியென்னுமொருசீடன்விரைவுடனேகிப்
பாதாரவிந்தமலர்பணிந்துகுரவனைப்போற்றி
யாதாரச்செழுஞ்சுடரேயாரணவந்தப்பொருளைப்
போதாதசிற்றறிவேனுணரும்வகைபுகலென்றான். (௯௭)

அக்குரவனம்மொழிகேட்டருள்வெள்ளமீப்பொங்க
முக்குறும்புதொலைத்தவனைமுகநோக்கிமொழிகின்றான்
மிக்கவரும்பொருளென்னைவினவினைமேதினிபடைத்தோன்
றக்கவருக்குரைத்தபடிசாற்றுவன்கேளெனவெடுத்தான். (௯௮)

அத்திரிகாசிபன்வசிட்டனமரர்குருவசுரர்குரு
மித்திரகௌசிகனகலிமெய்க்கேள்வனாதியர்கள்
சுத்தபவித்திரனானபிதாமகனைத்தொழுதெழுந்து
முத்திவித்தாம்பிரமநிலைமொழிகெனலுமவன்மொழிவான். (௯௯)

சத்தானபரம்பிரமஞ்சத்தியத்தாலுயிருளவா
மித்தரணிமுழுதியங்குமெடுத்தியம்புசத்தியத்தா
லத்தகைசத்தியத்தாலேமாயுமதிற்குணமூன்று
சுத்தர்தொகுத்துரைத்திடுவர்தொழின்மூன்றாவதுமிதுவே. (௧௦௦)

சத்தியத்தின்முறைநாமஞ்சுருதிதவந்தானகு
நித்தியத்தையுணர்பவரன்னீர்மையினைப்பெரிதாக்கிக்
குத்திரமாங்காமாதியறுவகையுங்குறைத்தவர்க்கே
முத்தியெனவெடுத்தியம்பிமீட்டுமிதுமொழிகின்றான். (௧௦௧)

அத்தகையபெருஞ்சாதமடைந்தவலகீக்குதற்கு
வைத்தசாதங்கண்டீர்வருணமுடனாசிரம
முத்தமமாந்தருமமெலாமுனாற்றினவர்க்குளவாகுஞ்
சத்தியமச்சத்தியத்தாற்சார்வர்சிவந்தவறாதே. (௧௦௨)

வே று.

அவ்வியத்தமாயகண்டமாயனாதியாயருளாய்த்
திவ்வியச்சுருதிகட்குணர்வரியதாய்த்திகழு
மிவ்வியற்கையபிரமமோர்ந்திருந்தவர்குணமூன்
றெவ்வுமொன்பதுதுவாரமாம்புரஞ்செயித்தோர்கள். (௧௦௩)

முனிவர்கேண்மினோமுக்குணத்தியல்பினைமொழிவ
னினியசத்துடனிராசதந்தாமதமென்பர்
தனிபதன்றுமூவகையுமொன்றாகியேசரிக்கும்
வினையையொத்துடற்கலந்தவைவிளங்குதலுணர்வீர். (௧௦௪)

தமமடங்கியபோதினிலிராசதந்தழைக்கு
மையமீதறச்சத்துவகுணமுவந்தனுகுந்
தமமெழுந்திடிலிரண்டுமோய்ந்தகன்றிடுந்தானே
கமையறும்படிபுரந்திடுமுடலினைக்கலந்தே. (௧௦௫)

தெரியுமாறுமக்குரைப்பன்றாமதகுணச்சேட்டை
யுரியலோபமுஞ்சோகமுமோகமுமுரைத்தற்
கரியவச்சமுமிகலுநீண்முனியுமாந்துயிலும்
புரியும்பாவமும்பொய்யுரைத்தலுமதன்புணர்ப்பே. (௧௦௬)

உரைத்ததாமதத்தாலுறுமுயிர்பலவுளவாங்
கரைப்பன்கேண்மினோகட்செவிவிரிச்சிகங்காலி
நிரைத்தபன்றிநாய்வானரமெறும்புநீள்காகங்
குரைக்குஞ்சம்புகங்கிருமிகண்மசகமுங்குறிப்பர். (௧௦௭)

மரங்கள்வன்புதர்பூண்டுபுன்மால்வரைக்குலங்க
ளிரங்குநீர்வருவனகராமிபம்பரிமுதலா
வுரங்கொளாருயிர்த்தொகையெலாந்தாமதத்துதித்த
தரம்படாமனிதரிற்சிலரிலுடற்றரித்தோர். (௧௦௮)

அனையதியுருப்பெறுமுயிர்த்தொகையினையடர்த்தோர்
நினையுந்திமையானன்னெறிநீர்மையினிகழார்
வினையறுத்திலர்பரஞ்சுடர்மேன்மையையுணரார்
தனையுமாய்கிலர்நரகினிற்றாழ்வரச்சமுக்கோர். (௧௦௯)

வலியும்வீரமுந்தருமமுமானமுமதமு
நிலையுமின்பதுன்பங்களுநேயமுமடவார்
கலவியோடுயர்வாஞ்சையுமாசையுங்கவினு
நிலவுவீசுநற்பெருமையும்பொய்மையுநெறியும். (கக0)

இராசதத்தினுலவியபூதமாமிவைமுன்
விராவுறும்பவத்தவ்வணமீட்டுமெய்தியவாந்
தராதலம்புகழ்முனிவர்கள்கேண்மினேசத்திற்
பராபவம்பெறுவோர்செயற்பகருவனுணர்மின். (கசக)

சந்ததமகிழ்பிரகாசமன்புடனருள்சரத
முந்துமானந்தம்பொறைசவுசத்தொடுமுறைமை
சிந்தைதூய்மைமெய்தேறுதறெளிந்தவர்ச்சேர்த
லுந்துசத்துவின்குணமெனவுன்னுமினுணர்வோர். (ககஉ)

கொலைசெயாவிரதந்தனங்கோதையர்பிறர்தம்
நிலைகொளாநெறிசிரத்தைகணிராசையின்மருவல்
கலைசெயாற்றல்கற்பித்தலாதியவெலாங்கருதி
லலைசெய்வான்பிறப்பகல்பவர்சற்குணத்தடுத்தே. (ககங)

இனையபண்பினேர்முத்திகாண்பவர்முனமிசைத்த
கனையிராசதக்கருத்தினேர்சுவர்க்கத்திற்கலந்து
வினையுலந்திடமீள்பவர்தேர்கதிவிழைந்தோர்
முனைமுட்கூர்மையாந்தாமதம்விரும்புவோர்முனிவீர். (ககச)

தீமைசேர்தருகருமத்தைச்செய்திடக்குறிக்கிற்
றமதத்தினனல்வினைதனைக்குறித்திடுத
லாமிராசதந்தனையுணரறிவுமேவுதலே
தோமிலாதசாத்துவிதமாயுணர்மினேருட்சி. (ககரு)

அன்னசத்துவின்குணமெனவறைந்தவையெல்லா
மன்னியப்படச்சமாதியினிற்றலேயன்றோ
பன்னுமுக்குணங்கடந்திருபற்றும்விட்டதுநீ
யென்னும்வாசகமாயினுயென்பதுமிவையே. (ககசு)

தூலசூக்குமங்காரணமெனவுடற்றோற்ற
மேலமுன்றதாமியாவருமுணருடற்றூலம்
ஞாலமீதினிலிவர்க்குடன்மனம்புத்திகவிலு
மூலவாயுவோரைந்துடனெட்டெனமொழிவர். (ககஎ)

தத்துவங்களத்தனிமையாஞ்சூக்குமசரீரம்
வைத்தசிவனேகாரணமற்றதைவிளக்கு
நித்தியன்றனக்கிவைபுடலாகவேநினோர்தான்
முத்தியங்ஙனங்காண்பர்மேன்மொழிக்கடங்காவே. (ககஅ)

பூதமைந்தெனப்புகலுவர்புண்ணியரதனு
றேதநீங்கிடப்புகலுவனிசையுமந்நியாத்தும
மோதுபூதமாங்கதற்கதிதெய்வதமொன்று
பேதமூன்றதாங்கேண்மினோபேரருட்டிறத்தீர். (கககூ)

கன்னந்தத்துவஞ்சத்தமேபூதநற்கடவு
ளுன்னுறுந்திசையுடலமேதத்துவம்பரிச
மன்னுபூதநற்கனலதன்வானவனுமா
லின்னுநேத்திரந்தத்துவரூபமேபூதம். (க௨0)

இரவிதெய்வதந்தாலுவாமிசைத்ததத்துவமத்
துரியபூதநல்விரதமாமதியுறுகடவுள்
பரவுநாசிதத்துவங்கந்தம்பூதமாம்பவன
னரியதெய்வதமறிமினோதத்துவத்தடுக்கு. (க௨க)

பாதம்பாயுருபத்தமும்பாணியும்வாக்கு
மோதுதத்துவங்கருமமிந்திரியமென்றுரைக்கு
மாதிதத்துவகமனமும்விசர்க்கமானந்தந்
நிதிருனமும்வசனமும்பூதமாத்தெளிமின். (க௨௨)

புத்திரமித்திரன்பிரசாபதிபுரந்தரன்கனலி
யத்திறத்ததிதெய்வதமாமெனவறிமின்
சித்தங்கூடமோங்காரமாமனம்புத்திசெறியுந்
தத்துவமபிமானஞ்சஞ்சலம்பகுத்திடுதல். (க௨௩)

பூதமாமதன்றெய்வதம்புகலுவன்கேண்மோ
வேதமாமதிபிரமனுமேலினியுணர்மின்
கோதிலாமறைகுறித்திடுநிறைவிதேகொண்மின்
காதலென்பவைகருத்துறுக்கலைவீரென்முன். (க௨௪)

இதனையோர்ந்துடன்படாதவைச்சமிதையினியக்கி
முதன்மைசாலுமான்மாவெனுங்கனலினைமூட்டி
விதனநீங்குறவேள்விசெய்மேலவர்காண்பார்
பதனமாகிரவொடுபகலிலாப்படைவீடு. (க௨ரு)

வேறு.

இந்திரியமொருபத்துந்துளைத்துப்பற்றோரிரண்டு மறுத்தொறுமூன்றுமெய்தாவாக்கி, முந்துகரணங்கள்புலன்வழிபோதாமன் முடித்துள்ளாம்பகையாறுமுறுக்கித்தன்னைச், சந்ததமுநீங்காமலுணர்ந்தானந்தசலதிபடிந்திருப்பவரேபிணிநோய்மூப்பு, மந்தகவாதையுஞ்சனனமரணநல்குமரியவினையிரண்டுமிலாரியர்களாமே. (க௨௬)

வேறு.

மனந்தனைமனந்தனுன்மதித்துமாதவ
ரினங்கொளான்மாவையான்மாவினின்புற
வனந்தரங்காண்பவரகிலபூதத்துந்
தினந்தமைக்காண்பவர்நிர்விகற்பச்சிந்தையோர். (க௨௭)

ஒருவிளக்கினிலொளியுரைத்தற்கெண்ணிலார்
ஒருவிளக்கிடந்தொறுந்தழைக்குமாண்புபோ
லுருவிளக்கிடந்தொறுமொருவனாகிய
பெருவிளக்கொளியவனுணரும்பெற்றியே. (கஉஅ)

அப்பெரும்பரஞ்சுடரகத்திற்காண்பவற்
கிப்பரம்புறத்தினுமிருப்பநோக்குவார்
தப்பறுதருமனல்வருணன்மாருத
னொப்பிலாக்கனன்மதியிரவியும்பர்கோன். (கஉகூ)

அயன்றிருமாலரனாதிநாயகர்
பயன்படுமுனிவரும்பணியுந்தன்மையா
ரியலுறக்கருதுமினின்னுங்கூறுவ
னுயர்வுளீர்கேண்மினென்றுரைத்தன்மேயினான். (கஙo)

கருமநல்லிலக்கணங்கொலைதவிர்ந்துறல்
பொருவருபாதகங்கொலைபுரிந்திடல்
பெருமைவானவர்க்குயர்பிரகாசமானவர்
கருமமாற்றுதலிலக்கணமென்றுன்னுவீர். (கஙக)

அம்பரஞ்சத்தமாநிலனியங்குறும்
[illegible]ம்பறுபரிசமுந்தேயுரூபமு
மிம்பநீரிரதமுமிசைமண்கந்தமுந்
தம்பயனிலக்கணஞ்சரதம்வாக்கிதே. (கஙஉ)

மானதவிலக்கணஞ்சிந்தைமற்றுள
தானதைப்பகுத்திடுதன்மைபுத்தியாம்
பானுயர்தத்துவச்சுரூபமாவன
தானறவொழுகலவ்வியஞ்சமத்துவமே. (கஙங)

நீங்கிடாயோகஞ்சுபவிரதநீண்டுயர்
சாங்கியஞானஞ்சன்னியாசமென்பதே
பாங்குறப்பகரிலக்கணங்கள்பற்றுத
லோங்குஞானத்தினுக்குரைக்குஞ்சாதகம். (கஙச)

ஞானவாரிதிபடநவில்சன்னுசிதன்
னூனுடல்வீழ்க்கினுமுறினுமுத்தனே
வானமுநரகமுமறலிபாசமும்
பீனமங்கையர்முலைப்பாலும்பெற்றிடான். (கஙரு)

அவ்வியதப்பெயரறையுந்தத்துவ
முய்வுளீர்புருடன்கேத்திரனென்றோதுவர்
மெய்வழிப்பிரகிருதியென்றுரைப்பர்மீளவு
மிவ்வியல்பனைத்துமவ்வியயநாமமே. (கஙசு)

அனையதோர்தந்துவங்குறைந்தையாதரித்
தனவறியாமைபூண்டொழுகுதன்மையாற்
புனையுறுமந்தரான்மாவிபூதங்கள்
கனைபிரபஞ்சத்தைக்கலந்துகாணுமால். (கஙஎ)

தன்னையோர்ந்துளபடிகுணங்கடானற
மன்னிநின்றிடுமெனின்வழங்குதத்துவ
மன்னியப்பட்டுநிராமயந்தனுய்ப்
பன்னுமவ்வியெயமாம்பதம்பொருந்துமே. (கஙஅ)

தேசினிலிரவியைமுதன்மைசெப்புவர்
பேசியபூதத்திற்கனலைப்பேணுவர்
மாசறுவிஞ்சையில்வாணிமாமரைக்
கேசறுபிரணவமென்பர்நால்வலோர். (கஙகூ)

வாயுவிற்பிராணனம்மந்திரங்காயத்திரி
பாயுநாற்காலினிற்பசுக்கண்மானுடர்
நேயமாம்பரப்பினுணிமலவேதியன்
றாயனுற்பறவையுட்டீனஞ்சொல்வரே. (கசo)

உகங்களிற்கிருதயுகமீவிலுத்தம
மகம்பெறுசெம்பொனுமருந்துமாற்றினு
ளிகந்திடாதன்னநீர்துய்ப்பதேதினும்
நகங்களின்மேருவைநவில்வர்நன்மையாய். (கசக)

தருக்களில்வடங்கள்சானவிநதிக்குலப்
பெருக்கினிற்சரசினிற்பெரிதுவாரிதி
யிருக்குமாசிரமத்தினில்லொழுக்கமே
கருத்துடைத்திசைகளிலூர்த்தவங்காண்மினோ. (கசஉ)

வானவர்பலர்களில்வருபிரசாபதி
தானுயர்வுடையனங்கவர்தமக்குள்யான்
மேனிகழ்முக்கியன்விண்டுமீசனுங்
தானென்னின்முக்கியர்தவத்தர்காண்மினோ. (கசங)

யான்முதலீசனீறுயமூவரிற்
றுன்சிலர்வேறெனச்சாற்றும்வாதமஞ்
ஞானமாமூன்றுருவிடத்துமண்ணுறு
மோனமூர்த்திகர்மூலமொன்றரோ. (கசச)

காணவேண்டிப்புருடார்த்தங்கண்டவன்
மாணுபோதனையெலாமாண்பிலாய்ந்தவ
னேனுறுமறிவினுக்கெல்லைசார்ந்தவன்
சேனுடைமூன்றுமொன்றுகத்தேறினன். (கசரு)

எப்பெருங்கடவுளுமேற்றுமூவர்தம்
மொப்புறுகலைகளாமொன்றுமூன்றுமென்
றிப்புவியோர்கருத்தேறிற்றுமெனி
லெப்பொழுதகன்றதங்கவர்மயக்கெலாம். (கசசு)

எத்தனைகாலம்வாதியற்றினானிக
லத்தனைஞான்றுநல்லறிவுசார்ந்ததன்
றுத்தமர்கேண்மினோபிறவிக்கூற்றமா
முத்திகண்டோர்களிம்முடிபுதேறினோர். (கசஎ)

பகலொடுமிரவுவந்தடுக்கும்பான்மைபோ
லகனுயிர்த்தொகைகளுக்கின்பமாதல்போன்
மிகலறுதுன்பமுமேவிப்போர்செயும்
புகலவொன்றொருவர்பாற்புகாதுணவே. (கசஅ)

எடுத்துடல்விவதும்வினையையேற்பது
மடுத்ததைநுகர்வதுமலசினோற்கலாற்
றடுப்பருமானந்தவெள்ளந்தங்கிய
மிடுக்கழியாப்படைவீடுமேவுமோ. (கசகூ)

அப்பெரும்பிறவியைவெறுக்குமாழறி
வெப்பயனால்வருமென்னிற்கூறுவன்
செப்புனால்வருணமாசிரமந்தேறினோர்
தப்பறநடந்திடினறிவுசாருமே. (கரு௦)

எத்தகைபயிலினுமேதுகூறினுஞ்
சத்தினையுணர்ந்தவர்சரித்துளாரெனிற்
கொத்தறவிருவினைகுலைந்துவேர்கெடு
முத்தியிற்பொருந்துவர்முதன்மையிங்கிதே. (கருக)

விடையம்வேறாயஞான்றவரைவெவ்வினை
யடையுமோபூதமைந்தாகக்கூறிய
நடையுடைக்குணம்பலநடத்தனோக்குத
லுடைமையுங்கூறுவனுகந்துகேண்மினோ. (கருஉ)

வானமாம்பூதத்திற்சத்தம்வந்தெழுந்
தானுயர்வாயுவிற்பரிசஞ்சத்தமு
மேனிகழ்தேயுவிலுருவுமேற்படு
மூனமிலிரண்டுடனுரைப்பர்மூன்றுமே. (கருங)

அப்புவிலிரதத்தோடறையுநான்குமா
மொப்பறுபிரிதிவியிற்கந்தத்தோடறச்
செப்பியவைந்துமாய்த்திகழுஞ்செய்கைக
ளுப்பதுங்கரணத்தின்றுணிபுங்கேண்மினோ. (கருச)

வேறு.

வன்மையாகியுமென்மையாகியுமிருமருங்காம்
புன்மைதீர்தருசத்தமிப்பாற்பகல்பரிசத்
தன்மைசீதமும்வெப்பமுமாதியாத்தழைக்கும்
பன்மைசுக்கிலமுதல்வருணைப்படும்பார்வை. (கருரு)

இரதங்கைத்தறித்தித்தலாதியவிருமூன்று
முரவுகந்தந்துர்க்கந்தநற்கந்தமென்றுளிரும்
விரவுவேதியர்கேண்மினேவிவையெலாம்வேறுப்
பரவுதத்துவங்களின்மனம்பெரிதெனப்படுத்தி. (கருசு)

அதற்குயர்ந்ததுபுத்தியென்றதற்குயர்பிரகிருதி
யதற்குயர்ந்ததுபுருடனென்றறிவினையறிந்தா
லதற்குநேர்தருமானந்தமினியிலையறைய
வதற்குடன்படார்க்கதனினுமிழிபிலையறிவீர். (கருஎ)

சாந்தவத்தராய்ச்சங்கற்பவிகற்பகாதகரா
யாய்ந்தரிந்துணர்வுடையருய்க்கொலையகன்றவரா
யேந்துமைம்புலனுமையைந்துறுப்பினையேய்ப்ப
வோய்ந்திருந்திடுமுளத்தராயுறுமினேவென்றான். (கருஅ)

இனையவாற்றினுலிருப்பதேமுத்தியென்றெடுத்து
வினையினீங்கினேன்விளம்பிடமேலவர்மகிழ்ந்தே
யனையநீர்மையினிகழ்ந்தருளடைந்தனராமா
னினையுநீயுமோர்ந்திடுகெனநிரப்பினுனிமலன். (கருசு)

கேட்டசீடனுங்கேள்வியாரமுதினுற்கிளர்ந்து
நாட்டநீருகத்தேசிகனற்பதம்வணங்கி
வீட்டியாசையையானந்தவேலையிற்படிந்தான்
நாட்டுவாய்மனத்தென்றனன்வாரிசநாபன். (கசூ0)

பற்குனப்பெயர்விடலையப்பரிசெலாமுணர்ந்து
சிற்குணக்கடல்படிந்தருஞ்செனனவேழ்கடலை
நற்குணக்கடலால்வென்றுஞானபூரணனு
யுற்கைகாண்பவருடபதிகாணுமாறுைத்தான். (கசூக)

ஆடினுனெழுந்தாதரமேலுறவரிதாட்
சூடினுன்சிரந்தூக்கினுன்சன்னியைச்சுருதி
பாடினுன்பணிந்தான்பகர்ந்திடுவதொன்றறியான்
றேடினுனுள்ளவாறுணர்ந்தாகுலந்தீர்ந்தான். (கசூஉ)

இனையதன்மையார்காதினிற்புகினுமிங்கிதனை
நினைவினுன்னினுமுரைப்பினுநித்தியமடைவர்
வினைப்பயன்படாதகன்றிடும்விண்ணவரவரை
புனைவர்காண்டொறும்பொன்மலரவரடிப்போதில். (கசூங)

ஆயதன்மையின்றுரைத்ததென்றருந்தவன்புகல
நேயநற்சனமேசெயனேரிலானுகித்
தூயமேனிகழ்சரிதமுஞ்சொல்லெனவைசம்
பாயனன்பரிந்தெடுத்தனன்பகருவானுகி. (கசுச)

கிருட்டிணூர்ச்சுனசம்வாதசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௬௦௪.

கிருட்டிணவுதங்கசம்வாதசருக்கம்.

சிதரனைவெண்சங்கத்திகிரிகரந்தரித்தானைப்
பூதரனைப்பூதகியைப்போற்றுமுயிர்மாற்றினனை
வேதரனைவேதாந்தவேத்தியனைவெற்பருண்மின்
சோதரனையாதரவாற்சொற்றவரேகற்றவரே. (க)

இவ்வண்ணமிருவருமாங்கிருந்துபலநெறிதாங்கி
யுவ்வண்ணமுணரரசருற்றடிதாழ்ந்திடத்தவிசின்
மைவண்ணமேனியரிந்திரப்பிரத்தமாநகரின்
மெய்வண்ணமுடனிருந்தார்சிலநாட்பின்விளம்புவாம். (உ)

கறுத்தமழைமுகில்வண்ணன்மைத்துனனைக்கண்ணருளாற்
பொறுத்தெதிர்ந்துவண்டுவரைபோய்வருதலுளங்கருதிச்
செறுத்தடலாற்றெலைத்தசிலைத்தேர்வேந்தேநெடுநாளாக்
குறித்திருந்தார்குரவரொடுயாதவர்யாவருங்குழுமி. (௩)

எனைக்காணுமாதரத்தாலிளைஞர்சிறூர்மடமாதர்
நினைப்புளராயினர்விழைந்தார்நீணகரிற்சனங்களெல்லா
முனைப்பிரியவாற்றிடினுமுதிட்டிரனைப்பிரிவாற்றேன்
வினைத்தொடர்புமனம்போனுமேவினஞ்சென்றதுபலநாள். (௪)

மேலாதவினியேனுமேவியவர்நினைத்தபடி
போலர்கப்புகுந்தடைவன்புகுவதற்கும்பொருண்மூன்றின்
மாலாகாத்திருவுளத்தான்வாய்மைகொடல்லாற்செல்லேன்
வேலாரும்விழிமடவார்விரும்பலங்கற்செழும்புயத்தோய். (௫)

எனதுயிருமெனக்குறவுமிருநிதியுமுளவெல்லா
மனதிலொருமாசில்லாமாமுரசக்கொடியோனு
மினிதுறவம்முறையவற்காயிருந்தனன்யானேகுகருத்
தனகனுரைபிறவாகாளாமெனவுமாகாதோ. (௬)

இவ்வாய்மைக்கினிநிகழ்வதெடுத்துரைத்தியெனக்கேட்பச்
செவ்வயிலான்மைவருணத்திருமாறன்முகநோக்கி
யவ்வாறுன்னுளத்துளதேலத்திபுரம்போந்துரைத்து
வெவ்வாசிநெடுந்தேரான்விடுத்திடமீளுதலென்றான். (எ)

சேமத்தேர்வயமீளிசெலுத்துமொழிசெவிக்கமுநா
யேமத்தேர்கொடுவாவென்றெடுத்துரைப்பத்தாரகனு
நாமப்பாய்பரிநிறுவிநல்கினன்மாத்திரைப்பொழுதிற்
றாமத்தார்த்தனஞ்சயனுஞ்சவுரியுமேற்கொண்டார்கள். (௮)

முரசதிர்ப்பப்பேரிகைகண்முழங்கமுழவொலிசெய்ய
விரசிதகாகளஞ்சின்னம்வெண்சங்கநின்றதிர
புரைசெய்களிற்றினும்வாசிப்பொம்மலினுந்தேர்மீது
மரசர்பலர்புடைசூழப்பதியரார்ப்பொலிமல்க. (௯)

சாமரங்கள்பணிமாறத்தனிக்கவிகைமேனிழற்றக்
காமருகாருடக்கொடியுங்கவிக்கொடியும்வானளப்பப்
பூமரம்போற்பலமாதர்மறுகுதொறும்புனைமலர்கள்
பாமரமில்லாதவர்மேற்படிரநறும்பொடிவீச. (௧0)

வேதியர்கள்வாழ்த்தெடுப்பவிண்ணவர்பூமழைபொழியச்
சோதியணிவெண்டிரையுஞ்சுடரெறிப்பநகரடைந்து
நீதிவழுவாநிருபன்குடைநிழலானேயமிகுத்
தோதியமாதங்கபுரமுற்றார்கள்பெற்றியொடும். (௧௧)

நரநாராயணரடைந்தநன்மையினலன்போங்கிப்
புரசனர்வந்தெதிர்கொள்ளப்புகுந்துநகர்வலம்வந்து
விருவுமிறைமனைமுன்னர்விட்டிழிந்துதேர்புகுந்து
பரவினர்முன்பிருவரையுங்குந்தியையும்பயனேங்க. (௧௨)

மாமுரசக்கொடிவேந்தன்மல்கியபேரவையெய்திக்
கோமுனிவந்துறத்தழுவக்குழைந்தனன்றேவகிகுமர
னேமுறவேயடிமலரிறைஞ்சியபார்த்தனைத்தழுவிக்
காமுறவாண்முகநீவிக்கண்களித்தான்மனங்களித்தே. (௧௩)

வீமனுக்குத்தானிறைஞ்சிமீட்டிருவர்தொழத்தழுவி
நாமவிதுரன்கிருபன்னனிமகிழக்கரமுகிழ்த்துத்
தேமருவுசஞ்சயனுதியர்மகிழச்சிலகூறி
மாமுகிலுக்கருகாகமணியணைமேல்நரனிருந்தான். (௧௪)

அளவளாவியவிறைவனுங்கவரோடகம்புகுந்து
குளவளாவியகுரவர்குழுவுடனேயமுதருந்தி
யிளவிளாங்கனியெறிந்தோனுடனிருந்தன்றிரவொழித்துத்
துளவளாவியபுயனுநரனுமவைதனிற்றேன்றி. (௧௫)

வைகியபின்னுதிட்டிரன்றன்வாண்முகத்தில்விழிநிறுவி
யுய்கையுணர்தனஞ்சயன்மானுளக்கருத்தையெடுத்தோதப்
பொய்கையகன்கரைநிறைந்துபுனிதவமுதுவட்டெடுக்கு
மெய்கிளரும்பொருளாய்ந்தோன்விழைவலிதைப்புகல்கின்றான். (௧௬)

தாழ்வுற்றுத்தடுமாறுந்தரத்தோரையிருமையினும்
வாழ்வித்ததிருமாலேயுனையானேவழுத்தவலன்
வீழ்வுற்றிடாதுயிர்ப்பால்விலக்கியதுன்பேரருளே
சூழ்வுற்றுன்மனக்கருத்தேயடியேற்குந்துணிபென்றான். (௧௭)

இன்னுமொருவாய்மையுளதெம்பிரான்றலைநாளிற்
பன்னியநல்முறைப்படியேபரிமேதம்பயிலுமுறை
யுன்னியதெங்கருத்ததுமுன்னூர்புகுந்துமீளுவையே
னன்னலத்தாலவ்வேள்விநடத்தலாமெனப்புகன்றான். (௧௮)

பச்சைமாலவையுணர்ந்துபரிவிலருடருவாயே
லிச்சைதீர்வுறவனுமிமீட்டுமடைந்திடுதுமெனச்
செச்சைமாலிகைபுனைந்ததிரடோளான்றனக்குரைத்தா
னச்சினுரெழுபிறவித்துயர்தனக்கோர்நச்சனையான். (௧௯)

பாண்டவருமாண்டுறையும்பாவனரும்புலன்செய்யா
நீண்டவிழிப்புரவலனும்விடைப்பமுகினினைங்தெழுந்து
மாண்டகையதம்பியொடுமடந்தைசுபத்திரையோடுங்
காண்டரியசேனையொடுந்தேரேறிநகரடைந்தான். (௨0)

சென்றுதனஞ்சயன்மீண்டுசெல்லுமுறைதுணிந்திலனாய்
நின்றுயிர்ப்பக்கரியமுகினீங்கிலனாய்நோக்கியநோக்
கொன்றுபடமுனமொன்றாயுயிரொன்றாயுடலிரண்டா
யன்றுபிறந்தவரின்றைக்கென்கொல்பிரிவாற்றுவரே. (௨௧)

ஓர்வண்ணமனந்தேறிநரன்மீண்டானுவரியுண்ட
கார்வண்ணனவனுருவங்காண்பளவுங்கண்ணுற்றுப்
போர்வண்ணச்சிலைமீளிபுனைமாலைசாத்தகியாம்
பேர்வண்ணஞ்சிவந்தவன்றன்பின்வரமுன்பயந்தானே. (௨௨)

கொவ்வைவாய்நீலவிழிகொஞ்சுமொழியஞ்சுகநேர்
செவ்வியுடைச்சுபத்திரையாந்திருவிரதமிடைசெல்லப்
பவ்வமெனமுரசதிர்ப்பப்பலபடைஞர்புடைசூழ
வவ்வயின்வானவரலரின்மழைபொழியவணுகினனே. (௨௩)

வேறு.

காரியமெலாநிகழ்செய்காரணமுணர்ந்தோன்
சீரியனுதங்கனெனுமாமுனிநிகழ்ந்த
சூரியனுறுதகுளிர்சோலைவழிசென்று
ஞரியனடைந்ததையறிந்தவனடுத்தான். (௨௪)

பாரொருவிமான்முனிபதந்தொழவெடுத்தே
சீரொடுநல்லாசியுரைசெய்துகவையோடுங்
காரொருவிலாசிரமமுய்த்தபினர்கண்ணற்
கேரோடுவிருந்தருளினனமுதமேய்ப்ப. (௨௫)

வந்தவரெலாமமுதருந்தபினர்மாயன்
றந்தவுபசாரமுழுதுந்தகையினெய்தி
யந்தமுனியோடுதவிசேறினனமர்ந்தான்
கந்தமலரோனனையகாசின்முனிபேசும். (உகூ)

பரதகுலமுற்றவர்படைத்தரசுசெய்யச்
சரதமுறுபல்லரசர்தங்கள்கிளைமல்கச்
சுரதமுறுமாருயிர்சுகம்பெறநடாத்தி
விரதமுடனேதுவரைமேவவருமாறே. (உஎ)

ஏதமிலவாகவுறவோடிகல்செய்பக்க
பாதமிலியென்பருனையெப்பயனுணர்ந்தோ
ராகவமுறுவகையடக்கியுலகாள்வோர்
சோகமுணராவகைதுரந்ததிலுணர்ந்தேன். (உஅ)

நூற்றுவருமைவருமரும்பகையினோகா
நாற்றினையிருந்தரசுசெய்தனர்களன்றே
மாற்றினைபுவிக்கிடர்வராவகையினென்றே
தூற்றினனியாவுமுணராரினிவைசொல்லி. (உகூ)

அன்றவனறைந்தமொழியாவையுமறிந்தே
குன்றொருகரங்கவிகைகொண்டவனகைத்தே
யின்றிதையுணர்ந்தனனெனைப்புகழ்வதன்றாற்
றுன்றுபெரியோயுனுரைசுடுசரமிதன்றே. (௩௦)

பறந்தலைபுகுந்தமர்பயிற்றியிகலாலே
யிறந்தவர்தமக்கருள்விளக்கியிவைசொன்னாய்
மறந்துகையமானவருமாய்ந்தவருமுண்டோ
சிறந்தனையொருத்தனிதுசெய்வதுணராயோ. (௩க)

ஆரியர்கண்மூவருமியானுமறைபாசான்
காரியமுணர்ந்தவசுவும்பலகரைந்துஞ்
சீரியனலாதகொடியோனறிதல்செய்யான்
போரிலனைவோரொடுமடிந்துகதிபுக்கான். (௩உ)

ஐவருமிருந்துபுவியாண்டனர்கள்யானே
செய்வதினியென்னையெனமாமுனிதெரித்தா
னுய்வகைநினைத்திலையழிந்ததுலகுன்னாற்
கைவரவுனைத்தனிசபித்தல்கடனாமால். (௩௩)

என்றுபுகலக்கருணையோடரியியம்பு
மின்றெனைவெருண்டெனையெனிற்சிலவுரைப்பன்
வென்றவவுணர்ந்துபினர்வேண்டினசெய்கென்றே
பின்றையுமுரைத்தனனுரைக்கரியபெம்மான். (௩ச)

தாமதமடைந்தொருவர்தாம்வெருவுமாறு
யேமுறவியங்குமுறையேதுதருமையா
மாமதமடங்கியுறுவார்தெளிவுவல்லோர்
நீமதிகொள்வாயிதுநெறிப்படுகருத்து. (௩௫)

கோபமதனுற்சிலர்தவஞ்சிறிதுகொண்டோர்
சாபமிடுவாரவர்தமக்கெளியனேகொல்
தீபநிகர்பேரொளியுருத்தனதுசிற்றத்
தாபமுடலுக்கதனிலென்னைபரிதாபம். (௩௬)

அரியவறிவாலறியுமாற்றின்வழிபிரம
சரியமுளவென்னையனுகாதனதுசாபந்
தெரியுமுணர்வோய்முனிவுதீர்ந்துணர்தியென்றே
கரியமுகிறன்செயலெடுத்திதுகரைத்தான். (௩௭)

ஈசனெடுமால்பிரமனென்னுமொளிமூன்றும்
பேசுமெனதுள்ளுளதுபெற்றியுயிரெல்லாந்
தேசினிலியற்றியளியாற்றுதிவிளக்கி
நாசமுறுவிப்பவனியானவமிதன்றே. (௩௮)

ஒப்பமுறைநாடிலறமொன்றுகொடிதொன்றுச்
செப்பவரிதாம்வறுமைசெல்வமிலையாமாற்
கைப்புமதுரப்பெயர்கலக்குறுநிலத்தே
யற்பருயர்வோரிலையராகுமுணராயோ. (௩௯)

இன்னபரிசம்புவியியற்கைநிலைசெய்ய
வுன்னியுருவாகியறனுக்குறுதிசூழ்வன்
மன்னுமெதிரிக்கெதிரியாவனகல்வானோர்
தன்னையுயர்வித்தசுரரைத்தடிதல்சான்று. (௪0)

பரதகுலபுங்கவர்களிற்பலர்கடையோர்
சரதவுருவானவர்கடருமன்முதலேவர்
விரதமுறவங்கவரைவெற்றியடைவித்தேன்
வரதவவரன்றியுளமன்னவர்மடிந்தார். (௪௧)

தேயமுறுபற்பலுயிர்திருவதுமுன்னி
லாயுமுறையாலலதழித்திடுதல்கூடா
மாயுமுறையுள்ளவர்கண்மாய்ந்தனர்விலக்கற்
கேயுமுறைவல்லவரியார்புவியிடத்தில். (௪௨)

இத்தகையதென்செயலியாவுமுரைசெய்தே
னுத்தமவுனக்கிதையமுள்ளபடிசெய்கென்
றத்தனுரைசெய்யமுனியாய்ந்தருளடைந்து
பத்தியொடுவாணகைபரப்பியிதுசொல்வான். (௪௩)

இப்பரிசனைத்துமுணர்வேனெனநிடத்திற்
றப்புடையமாமுனிவுதந்தவனுநீயே
யொப்புறவகற்றினையுனைத்தெரியுமாறே
செப்புவனெனர்வாசகமெனத்தனிதெருட்டும். (சச)

தனஞ்சயனயர்ந்ததுமனந்தனிலுணர்ந்து
கனஞ்செய்நினதாடலுடல்காட்டினவனென்பர்
மனஞ்செயடியேன்பிறவிமாற்றவருளுண்டேற்
றினஞ்செய்பவனெனத்தவொளிதெரிசனமளிப்பாய். (சரு)

என்றவனியம்பவருளிற்றிருமணாளன்
றன்றுபிரமத்துருவெடுத்துலகுசுற்றி
யன்றையிலுமின்றதிகமாகவெதிர்நின்றான்
வென்றமுனிகண்டுவெருவுற்றறவியந்தான். (சசு)

வானவர்கடானவர்கண்மாதிரமுதற்கொண்
டேனையுலகேழினுடனேமுமொழிமூன்று
ஞானவுருவாமிறைவர்மூவரையுநாடி
நூனமறவெற்றிமறைநான்முறைதுதித்தான். (சஎ)

ஆளுடையைநின்னையறியாதுரைசெய்வஞ்சக்
கோளுடையனென்பிழைகுறிக்கவரிதாமோ
வாளுடையபேரொளிமறைக்கவெனமீட்டுங்
காளமுகிலாகியெதிர்நின்றிதுகரைத்தான். (சஅ)

வேண்டும்வரமொன்றுதருவேன்விரைவிலோதென்
றாண்டகைபுகன்றிடலுமையவுனைநோக்கு
மாண்டகையபெற்றியினும்வலியதினியுண்டோ
பூண்டவுனதன்பலதுபோயமைதலின்றே. (சகூ)

கேசவனுனக்கெதிர்கிடைத்தருள்வழங்கா
தாசினகலேனருள்வனுவதுரையென்ன
நேசமுடனிப்புடைநன்னீரரிலளித்தி
யோசையுடையாயெனவுகந்தருள்புரிந்தான். (ருo)

அன்னவனையேத்தியவனன்பினைவியந்து
பின்னவனுமாதுமுடனெய்துபெரியோரும்
பன்னுபடையும்புடைபரிந்துவரமீண்டு
தன்னகர்புகும்பரிசுதாங்கிநெறிசென்றான். (ருக)

நேயமுறுசாத்தகிநெடுந்தகையைநோக்கி
யாயமுனிநின்னைமுனிவாலறையவல்ல
தூயதவமென்னையதுசொற்றிடுதியென்ன
நாயகனுரைத்தனனவன்சரிதநண்பால். (ருஉ)

எத்திசையுமெவ்வுலகுமேத்துமுனிபிருகு
சுத்தமுனிவங்கியமதிற்பரவுதூயோன்
முத்தனிவனுமமுமொழிந்திடுமுதங்கன்
வித்தகன்மனங்குவியவிஞ்சையுணர்நாளில். (௫௩)

வேறு.

கவுதமனுமொருமுனிவன்கழலிறைஞ்சிவழிபட்டு
நவமெனவன்புள்ளவனுய்நாடோறும்பணிவிடைசெய்
தவனுதவவிஞ்சையெலாமாய்ந்தனனுங்கவனருகிற்
றவிரவிவன்மாணுக்கர்தமக்கெல்லாம்விடையீந்தான். (௫௪)

பேரருளால்வரமுதவிவிடுத்திவனைப்பேணுன்போ
லாரருளையகத்தடக்கியவனிருப்பவிவன்சலியான்
காரிருள்சேர்கடுங்கானிற்கந்தமூலஞ்சமிதை
சீரருள்பாசடைதருப்பைசெறித்தளித்துத்திகழ்நாளில். (௫௫)

நெடுங்காலம்வழிபடலானேயவுடற்சரையெய்தி
விடுங்காலம்போலிரைப்பவழிபடுதல்விடுத்திலனுய்க்
கொடுங்கானினடைந்தமுதுகூட்டுதற்கிந்தனச்சும்மை
கெடுங்காலத்தவிர்ந்துறுவான்சிரமுடிசுமந்தடைந்தான். (௫௬)

பருதியாயிரகிரணம்பட்டதெனவொளிவீசுஞ்
சுருதிமுனிசடாபாரம்மேலாகச்சுமந்தனுங்கிக்
கருதிலனேர்சடைவிறகிற்கலந்திருந்தனிலத்திட்டான்
குருதியிளங்கொடிபோலக்குரைந்தவனிகுதித்ததுவே. (௫௭)

செய்யசடைக்கெழுந்தெழுந்துசெழுந்தழலாய்முண்டிடலான்
வையமதையாற்றிலவாய்வருந்தியதம்மாதவனு
மெய்யுமருஞ்சடைநீக்கமுளத்துன்னியுறுதுயராற்
பெய்யுமழைமுகில்போலச்சாய்ந்தவனிமிசைபெயர்ந்தான். (௫௮)

ஆற்றவராற்றினனதனையாரியன்கண்டருளோக்காற்
றேற்றிமகடனைநோக்கிதூயவனையெடுத்தியென
னோற்றபெருநோன்மையுளாளொப்பெனக்கைகொண்டெடுத்தாண்
மாற்றினள்கண்புனன்மீளமாதவன்சஞ்சலித்தழுதான். (௫௯)

வந்துமுனிபருகெய்திவரமுனியேயுனதுதுயர்
முந்தவுரைத்திடுகவெனச்சடைநீத்தமுறைகூறி
யந்தமிலாநினதடியர்க்காயவருளெனக்கிலையே
நொந்துதுயரலதென்னேவுறுவதினியானென்றான். (௬௰)

சிறுநகையுமாரருளுந்திகழமுனிதனைநோக்கி
யுறுபயனுவதுவுமுனக்குளவாகநினைந்திருந்தேன்.
மறுவறுநற்றவமாசான்வழிபடுதற்கிணையாமோ
பெறுவதெலாம்பெற்றனமேலென்னேயாம்பேசுவதே. (௬௧)

அற்றசடைக்கனலாற்றுதவனிமேலிதுகண்டாய்
பற்றியுனையெடுக்கவலபாவையருமுளவேகொன்
மற்றிவளுந்தவத்தினளேமணந்திவளைப்பயனுகர்ந்து
குற்றமறவாழ்ந்திருத்திகுரவரெலாங்கொண்டாட. (சுஉ)

இவ்வியல்பினறவிருத்தமில்லாமல்வரமீந்தே
னவ்வியல்பால்வரைந்தளிப்பாணுடவர்நாயகமாகிக்
கொவ்வைவாய்த்திருவோடுங்குழைந்துமனையம்பூண்டு
செவ்வைநெறியொழுகுகென்த்தெளிவித்தான்சிடனையே. (சுங)

ஆண்டகைநீயுரைத்ததலாலறம்பாவம்யானுணரேன்
மாண்டகுநின்சொற்குயர்ந்தமாமறையுங்காணேணு
வீண்டுமுனதருள்வழியேயியங்குவனென்றெடுத்துரைத்தான்
பூண்டபெருங்காதலுமைம்புலன்மயக்கும்பொருந்தாதான். (சுச)

அவ்வண்ணந்துயரகற்றியற்றசடைமுடியேற்றி
மெய்வண்ணப்பூங்கோதைவிரைவின்மணமியன்றளித்துப்
பொய்வண்ணமுணராதான்புனிதமுனியொடுமிருந்தான்
கைவண்ணக்கொடுந்தந்திகண்படுகாட்டகத்தம்மா. (சுரு)

ஒருஞான்றும்பிரியாமலோகையொடுமக்கன்னி
தருபிதாவாரருளாற்றனுவேறுபெறத்தாங்கிப்
பெருமானைவழிபட்டாள்பெற்றியுளமாதவனு
மருண்ஞானங்குடிவைத்தவாரியன்றாள்பணிந்துரைப்பான். (சுசு)

வேறு.

திரையெறிகருங்கடலுடுத்ததிண்புவி
புரைபொறையாளனேபுனிதருக்குளிற்
றருகுருதெக்கணைதருவன்கேட்டியென்
றிருகரமுகிழ்த்தனனவனியம்புவான். (சுஎ)

அவாவிலையொன்றினுமறைவதென்கொலோ
தவாவறஞ்செலுத்தலேதந்ததெக்கணை
விவாதமென்வேண்டிலேன்விடுத்தியென்றெனி
லுவாமதிமுகத்தனளுழைபிலோர்கென. (சுஅ)

சென்றனன்கலிகைபாதஞ்சென்னிசேர்த்
தின்றபிமதமுனக்கிசைக்கிலேழுல
கன்றியதென்னினுமருள்வன்போய்க்கவர்ந்
தென்றனனவளிதையியம்பலாயினள். (சுகூ)

மித்திரசக்கியனென்னும்வேந்துடைப்
பத்தினிகாதணிபகருங்குண்டல
முத்தமவளித்தியென்னுளத்திலுண்டென்றுழ்
சுத்தனுமிசைந்தவட்டொழுதுபோயினன். (எ0)

மாமுனிவர்துதன்மனேயைக்கண்ணுரிஇக்
கோமுனியாண்டெனநிகழ்வுகூறலும்
பூமுனிநிகர்பவன்புழுங்கிமாமன
மாமுறைதெரிகிலாயனைக்குநீயென்றான். (எக)

அப்பெருந்தோன்றன்மானுடர்தம்மாக்கைசெற்
றெப்பறுமேதையுண்டுயிர்பரிப்பவன்
றப்பவன்பாற்புகலென்றுசாற்றினன்
செப்பமாந்துலையினுமினியசிந்தையான். (எஉ)

அப்தொடியுளங்குலேக்கையவேழையேன்
பேய்படுகருத்தினுற்பேசிப்போக்கினேன்
வாய்படுகுற்றமொன்றாருமன்மைந்தனைத்
தாய்படுகருணையாக்காக்கத்தக்கதே. (எஙு)

எனவவன்மொழிதரவிருடிமீளவு
மனகனிக்குமரனுக்கபாயமெய்திடாப்
புனையிழாய்மீள்வனென்றுரைத்துப்போய்ப்படர்
முனிவனேடிருந்தனன்முனிவில்லாதவன். (எச)

இங்கிதுநிற்கமற்றிவரைநீங்குமு
தங்கனுமத்தினன்றருதராபதி
பெங்குளானெனவுணர்ந்தேகிநோக்கினன்
றுங்கவான்விழியுடைத்தோன்றறன்னேயே. (எரு)

மானுடர்குருதிநீர்வாசயாக்கையு
முனளெயிறுங்கண்ணேட்டமின்றிய
வானசெங்கண்களும்வரைந்தநீயென
மேவரவிருந்தனனந்தவேந்தனே. (எசு)

ஒருயிரிலாதகானுற்றுவைகிய
காருருமேறனனருகிற்கண்ணுற
வேருடைமுனிவரனெய்திநிற்றலுஞ்
சீருடைநோக்கினன்மகிழ்ந்துசொல்லுவான். (எஎ)

பெரும்பசியாலுழன்றுலவும்பெற்றியே
னரும்பசிதவிர்க்கவந்தருகிலண்மினுய்க்
கரும்பினுமினியநீவருதிகாதவென்
றருங்கரநீட்டினனவனுங்கூறுவான். (எஅ)

தேவினுமுயர்குருதெக்கணைக்குநின்
சார்பிலோர்பொருள்பெறுந்தன்மைநாடியே
மேவினேனியறவிருத்தங்கூறினுப்
நாவினற்பொய்தராநாமவேலினுய். (எகூ)

எத்தகையாகியவுடலமெய்தினு
மத்தொழில்பயிலினுமறிவுக்குண்டுகொல்
குத்திரமயக்கநீகுறிப்பதன்றிது
சித்தசாந்தியினெழுகென்றுசெப்பினன். (அ௦)

மாத்தவனுரைத்தசொன்மன்னன்கேட்டிந்தக்
காத்திரமடைந்தனூன்றமரர்கற்பனை
யாத்திரைமனிதரையாமமூன்றினுட்
சாய்த்தொருவனையுண்டுபசிதணிப்பதே. (அக)

அவ்வரமிவ்வியல்பளவுமவ்வணஞ்
செவ்வியினிகழ்ந்ததித்தினத்தினீயுமக்
கௌவையாங்காலமென்கண்முனெய்தினை
யுய்விலையுனதுயிருண்பலென்னவே. (அஉ)

நாட்டியமறைமுனிநவின்றவாசகங்
கேட்டிளநகையொடுகிரணவேலினுய்
மூட்டுதீப்பசிப்பிணிமுருக்குங்காலையில்
வீட்டவல்லவரியார்விளம்புமாறுகேள். (அங)

சத்துறுகுணமுநற்றருமசீலமு
முத்தமதானமுமுளத்திற்றூய்மையும்
பத்தியுமுடையநின்பசிக்கிவ்வீனுட
லித்திசைப்பயன்படலினிமையேயன்றோ. (அச)

ஆயினுமெம்முடையாரியன்புடை
யேயினகருமத்தைமுடிப்பித்தென்னுடற்
றாயநீபுசிக்குதிசொல்வதென்னுயிர்
மாயினுமென்றனன்வந்தமாதவன். (அரு)

கைப்புகுபொருளைவிட்டிருந்துகாண்பதுஞ்
செப்புயிரிக்கொலைசெய்வார்முன்னர்சேர்வதுந்
தப்பதாமென்கொலேசாற்றுமாறெனச்
செப்பியவேந்தனுக்கிதனைச்செப்புவான். (அசு)

ஆதலிலென்னுரைபிசகினுழிநீர்
பூதலங்கொளாதுறுதுறுதிபூண்டுநீ
காதலைத்தணித்தெனைவிடுத்திகாவல
மீதலத்தவர்கரியெனவிளம்பினன். (அஎ)

மன்னவனிதங்கிமாதவனைமாமுகந்
துன்னிடநோக்கியென்சார்பிற்சோர்வற
வுன்னியதென்பெறவுரைத்தியாயென
வன்னவனுதரத்தறையன்மேயினன். (அஅ)

புற்புதவாழ்க்கைமெய்பொருதவாரியின்
கற்புடைமனையகலிகையுன்காதலி
பொற்புறுசெவிக்குழைபுனைதலுன்னின
ணற்பயனுறவதைநல்கவேண்டுமால். (௮௯)

மாமுனியிவ்வுணர்வழங்கமாறுறக்
கோமுனிபிறர்பொருள்கொடுத்தலென்பய
னேமுறவேண்டுவதிசைத்திமற்றெனக்
காமுறுமனத்தினன்கட்டுரைப்பனால். (௯0)

ஆம்பல்வாயணங்கனாளடியன்முன்புசெய்
தோம்பியதவத்தினாலிதனையுன்னினா
ளேம்பலோடளித்தியேலீதியின்றெனிற்
றாம்பெறுபொருளிலைவேறுசாற்றியே. (௯௧)

அம்மொழிகேட்டவாளரசனாங்கது
செம்மையிற்பெறுவதேசிந்தையாமெனி
லெம்மனையெய்தியில்லவளுக்கென்மொழி
மெய்மையினுரைத்துநின்விழைவுகொள்கென்றான். (௯௨)

ஆங்கவன்மனையெவணென்னவாண்டவன்
பாங்கரிற்காட்டலும்பரிந்துபோந்தபின்
றாங்கியகற்புடைச்சாலிபோன்றவ
ணிங்கிடாதிருந்திடுநிலையமெய்தினான். (௯௩)

உன்னுடைக்காதலனுரைத்தவாய்மொழி
யின்னதேநின்குழையளித்திபெற்கென
நன்னுதன்மகிழ்ந்தெனக்குரியநாயகன்
றன்னடையாளந்தருதியென்னவே. (௯௪)

மீண்டனன்றவமுனிவிகுருதவெவ்வுருப்
பூண்டவவ்வரசனையடைந்துபூவைசொற்
றாண்டியவிளக்கனாள்சொன்னவண்ணமே
யாண்டவற்குரைத்தடையாளங்கேட்கலும். (௯௫)

அதிவிதமணங்கதிலதுவலாலொரு
கதியிலைவேறெனக்கழறினேனென
மதிமுகவனிதைமாட்டுரைப்பின்மையறக்
கதிரெறிகுழைதருமெனக்கரைத்தனன். (௯௬)

சென்றிவனவ்வணந்தேவிக்கோதலு
மன்றலங்குழன்மதயந்தியாமனந்
துன்றியமகிழ்வொடுதொழுதுநல்குவ
னின்றிதுகேளெனவிசைத்தன்மேயினாள். (௯௭)

பசிப்பிணிதாகமிக்கினிபடும்பவன்
முசிப்பொடுவிடங்களான்விகாரமுன்படா
தசித்தழும்பலகைபேயாதிபூதங்க
ணசிக்கொணுதிவைபுணர்ந்தவர்க்குநாடொறும். (கூஅ)

பாலரேவிருத்தரேபாவைமார்களே
மேலுறத்தரித்திடினதனின்மேவிய
சீலமாம்பொன்மழைதினமும்பெய்திடுங்
கோலமுங்குறைவுறுக்குழையிதாமரோ (கூகூ)

நாகருமமரருமசுரர்நாதருஞ்
சேகரகருடகந்தருவர்சித்தரு
மாகரமெனும்பெரிதாதரத்துடன்
ருகராயுழல்வர்கைதவத்திற்கொள்ளவே. (க00)

இப்பெருங்குழையுயிரென்னுமாறிதா
மெப்புவியிடத்திதற்கீடுண்டாகுமோ
செப்பருந்தவத்திஞெய்தேசிகன்றன்மாட்
டொப்பருகருமத்தாலுதவலுன்னினேம். (க0க)

தருந்திறலாவதெண்ணிறந்தசார்புள
விருந்ததிலுத்தமதானமேதெனி
லருங்குருதெக்கணையளித்தற்காயுடல்
வருந்துவோர்க்குதவுதன்மானுநீரின்றே. (க0உ)

ஆதலாலெம்முனோரருந்தவத்தினு
லோதலாங்காரியமுறுதிவாய்த்தலாற்
காதலாலிதையெலாங்கடந்துநல்குவேன்
சாதலாமுனிகோடிதக்கதே. (க0௩)

எச்சிலாயினுந்துயிலெய்திச்சோரினு
மிச்சையிற்புவியகத்திடினுமேதமா
நிச்சயங்கவர்வர்நீநெறிக்கொண்டேகென
வச்செழுங்கோதைசொற்றதனைநல்கினுள். (க0ச)

வேறு.

பூசித்துப்பாதமலர்பொன்மலராலரிச்சித்து
வாசித்தமறைமுறையால்வணங்கமகிழ்வுடனீந்தாள்
நேசித்தமுனிவரனுநேர்ந்திருகைகொடுவாங்கி
யோசித்தாசிகளுரைத்தாஞெருகோடியவட்கம்மா. (க0ரு)

ஆற்றரியபெருங்கற்பினணியிழையைவிடைகொண்டு
சாற்றரியதவமுனிவன்றனிவனத்திற்பசித்திருந்த
கூற்றனையகொடுங்கண்ணன்முன்வந்துகுறுகினனுற்
சாற்றினன்மாதளித்தபடிதண்ணளியோடுரைசெய்தான். (க0சு)

தாழ்விலாதவன்மகிழ்ந்ததன்மையினாலவ்வரசன்
வாழ்விலாழ்ந்தனனாகிமறைமுனிநீயேகென்ன
ஆழ்வினையாலுனக்கிவ்வாறுடலடுத்ததுனக்கிணையார்
வேள்விமாதினுக்குரைத்தவிக்கியானந்தெரிந்திலவே. (௧௦௭)

சொல்லுமுனம்யானகலேன்சொற்றிடுகாரியமெனிலிங்
கொல்லுமதையுரைத்தியெனதுளமையற்றீரவென
வல்லதேசிகன்கருமவலியுடையான்கூறுதலும்
கொல்லுமுனியோருயிருங்கொல்லாதமுனிக்குரைக்கும். (௧௦௮)

வரிசைபெறுநான்மறைநூல்வல்லவரைவழிபடுத
லரசருக்கிலொழுக்கமெனவாய்ந்தடியேன்வழிபடுநா
ளுரைசெயற்குஞ்சிறிதாயகுற்றத்தாலுருத்தொருவன்
கரைசெயற்குமரிதானதுன்பமெலாங்கற்பித்தான். (௧௦௯)

அவன்சாபக்கொடுங்கனலால்யானுமிந்தவுடலுங்கித்
தவராததுயரலைப்பத்தவிக்கின்றதன்மையினாற்
றவரானவாய்மடந்தைசோகத்தாலிருந்துயிர்த்துத்
தவராசர்வழிபடுதலரிதெனக்கைதணந்தாளால். (௧௧௦)

அரியதரங்கருமமதுவாயினுமாங்கவரையலா
லுரியகதிவேறிலையென்றுணர்த்துமுறையுனக்குரைத்தேன்
பெரியைநீபோந்துகுழைபெற்றாயம்மொழியுணர்ந்து
கரியகுழற்றந்தாளென்றுரைத்தானக்காவலனே. (௧௧௧)

மன்னனுரைகன்னமூறமாதவத்தோன்மனமுவந்து
பன்னுவதெனக்குழையைப்பரிவிலளித்தாரியனுக்
குன்னுடையபசிதணியவுறுவன்மொழிதவறேனான்
கன்னவிலுமிருபுயத்தாய்கருதிவிடைதருகென்றான். (௧௧௨)

அந்தமொழிகேட்டரசனத்தவத்தோன்முகநோக்கிச்
சிந்தவுயிர்துலைப்பவர்பாற்சேர்பவரோதெளிவுள்ளார்
வந்திடேல்யானுய்யுமாறுகுறித்திடிலென்றான்
கந்தனேயுவமையெனுங்கலைவல்லானிதுபுகல்வான். (௧௧௩)

உன்னுளத்தின்கருத்திதுவேயென்னிலுனக்கடையவுட
லென்னுடையதேசிகனுங்கவுதமனேற்புடையானேற்
பன்னியகலிகைபரம்பாவனியேயாமாகி
லின்னிலையேதுலைந்தரசர்யிருத்திபுவிபுரந்தென்றான். (௧௧௪)

அக்காலமவன்மேனியம்பொன்வரையெனத்திகழ
முக்காலந்தெரிகருத்துமுனிவிலாப்பெருவாழ்வும்
புக்கான்மற்றவன்மகிழ்ந்துபோற்றியுதங்கனைத்தொழுது
மிக்காய்நின்றரிசனத்தால்விரவியதாமிவையென்றான். (௧௧௫)

மன்னவனேயெங்கோமான்மனதினினைந்தமையாலே
யுன்விடும்பையகன்றதினியுலகோம்பியிருத்தியெனப்
பன்னியாசிகடந்துபரிசித்தும்பணிந்துப்ப
நன்னிலைமாமுனிபெயர்ந்தானற்குழைமானுரிபொதிந்தே. (௧௧௬)

மேவுநெறிதனிலொருசார்வில்வமரங்கண்டதன்மேற்
றாவியதன்பொதும்பரிடைத்தக்ககுழைதனைநிறுவிக்
கூவிளநற்பழங்கொய்தான்கோடையினாற்றரைபாய்ந்த
தாவிகவர்வதினுரகமதைக்கவர்வுற்றகன்றதுவே. (௧௧௭)

கண்டானங்கதன்பின்னர்கால்விசைக்கொண்டோடுதனு
மண்டாமலொருபுத்தினகத்தோடிமறைந்திடலும்
விண்டாரிலடைந்ததனையொருதண்டால்விரைந்துகல்லிக்
கொண்டோடுமதைக்காணான்குறைந்துயிர்க்குமமையத்தில். (௧௧௮)

குவலயமாதொருமறையோர்கோவுருவிற்றலைப்பெய்து
தவவலிபோய்குழைகவர்ந்துசார்ந்ததயிராவதமென்
றுவமையிலாவொருநாகமுதவுமகவாமதுதான்
புவனியிலன்றதலமதிற்போந்ததென்னோபுகலெனலும். (௧௧௯)

மாமுனியம்மொழிகேட்டுவாங்குகுழைசார்ந்துழிபோய்
நாமறக்கொண்டிக்கணமேநண்ணுவேனெய்தாவே
லாமுறையொன்றோராமலாவிதனைநீக்குவனென்
றேமுறவேகூறுதலுமிந்திரன்வந்தடுத்துரைப்பான். (௧௨௦)

பாதலம்போய்மீள்வதுளப்பற்றாகிலுன்கரத்தி
லேதமிவர்த்தண்டமுனையென்கரத்தில்வச்சிரமாய்
மாதலத்தைப்போழக்கடவதெனவேவரந்தந்
தாதரத்தாற்சென்றானமரர்பெருந்தகையே. (௧௨௧)

கூறியவான்றண்டாற்குவலயத்தைப்போழ்ந்துசெல
வேரிமலர்ப்பூமடந்தைவேண்டியிடந்தந்தனளா
லாரியன்றனற்கருமமாதலாலக்கணத்திற்
சீரியன்சென்றுற்றான்றிருநாகர்சீரிடமே. (௧௨௨)

எத்தனையோகாவதங்களென்னவுயர்ந்தகன்று
சுத்தமுழுமணியின்சோதிபயின்றெம்மருங்கும்
பத்திப்புரிசைக்கபாடவாயிற்பரப்பை
யுத்தமன்கண்டானுயிர்த்தானுணர்வற்றே. (௧௨௩)

அவ்வளவிற்செழுந்தழலோனாங்கவன்முன்போர்பரியாய்க்
கௌவையுணர்ந்தெய்தியிருகரத்திடத்தும்பூரியெனச்
செவ்வியோனவ்வண்ணஞ்செய்யவுகாந்தத்தொலியாய்
வெளவினோன்வைத்துத்தொழுதான்குழைமறுகி. (௧௨௪)

பெற்றான்குழையும்பெயர்ந்தடைந்தானம்புவிமே
லுற்றான்குருவாசிரமத்திஞேகையொடுங்
கற்றார்புகழுங்கமலத்திருவனைதாட்
பற்றானடைந்தான்பணிந்தானவிந்தானே. (௧௨௫)

ஆசானையுந்தொழுதேயாதரத்தானுன்னருளாற்
றேசாலுயர்ந்தகுழைசேர்ந்துவயமானதெனப்
பேசாமகிழவுறவேவானப்பெற்றியெலாங்
கூசாதுரைத்தியெனயாவுங்குறித்தானே. (௧௨௬)

உன்னைப்பிறர்போனுரைக்கரிதாமுண்மைவலாய்
முன்னைத்தவத்தான்முடிந்ததிதுவாமென்று
பின்னைத்தவாதவரனெல்லாம்பெயர்ந்தளித்தான்
றன்னைத்துராந்துறவாததத்துவத்தான். (௧௨௭)

அத்தகையபெற்றியுடையானவ்வருந்தவத்தோ
னுத்தமருக்கெல்லாமொருவனெனக்கொண்டாடி
வித்தகனும்வண்டுவரைமேவினான்மித்திரனை
யொத்தந்தமாநகருஞ்ரோருகம்போலோங்கியதே. (௧௨௮)

சுந்தரமாமன்மதனையளித்தகருணைத்திருமால்
வந்தானெனும்வாய்மைமாநகரிற்சாராமுன்
கொந்தார்மலராற்குளிர்சந்தனச்சேற்றாற்
பந்தார்முலையார்பலமனைகள்கோடித்தார். (௧௨௯)

ஆடுவார்வாசநீரம்பரங்கள்வேறணிந்து
சூடுவார்பொன்மலர்கள்தொய்யின்முலைமேலெழுதித்
தேடுவாரஞ்சனங்கடீட்டுவார்செம்பொனணி
வாடுவார்பூணமருங்குற்பொறாதென்றே. (௧௩0)

சுண்ணமரிப்பார்துவைப்பார்கன்மான்மதங்கள்
வண்ணமுறுமந்தாரமாலைதொடுத்திடுவார்
தண்ணந்துழாய்மாலைதாங்குவார்விந்தையென்று
கண்ணன்களிக்கனுகுமென்பார்கசிவார்கள். (௧௩௧)

சந்தனச்சேற்றான்மெழுகிக்கர்ப்பூரந்தான்கிறி
முந்துபுழுகளைந்துமான்மதங்கண்மொய்ப்பித்தே
யெந்தமறுகுநெறியுநீவிரிப்படியே
தந்துவரக்காணார்தரியார்மடமானார். (௧௩௨)

பூரணகும்பங்கள்பொலிவித்துவீதிதொறுந்
தோரணங்கணாட்டிச்சுடர்மணித்தீபம்புதுக்கி
யேரணிவிதானங்களெண்ணிறந்தமாலைகளாற்
றூரணிவான்காணாமற்செய்தார்தவமாந்தர். (௧௩௩)

வாழைநடுவார்வளர்கமுகுநாட்டிடுவார்
மாழைநிறைநற்றுகிலால்வான்கொடிகள்மீதெடுப்பார்
தாழையிளநீர்பழுக்காய்த்தன்குலைகள்சேர்விப்பா
ரேழையரினென்மடங்காயேம்பலூருமாடவரே. (கந்ச)

பற்பலவாந்தேர்கள்பரிமாக்களிறுடனே
நற்படைஞர்சூழவரநண்ணியெதிர்கொண்டார்கள்
சிற்பரனைநற்பொருளைத்தேருச்செழுஞ்சுடரை
யற்புதனையவ்வூரிலானமுடியாதவரே. (கநரு)

வேறு.

ஆடைகண்டவராடையேபலவணிகள்கண்டவரணிகளே
சூடைகண்டவர்சூடையேகமழ்துளவுகண்டவர்துளவமே
யோடைகண்டவரோடையேயவையவுமுணர்ந்ததுணர்ந்தவே
கோடைகண்டவர்மாரிகண்டுகுளிர்ந்ததொத்தனர்பலருமே. (கநசு)

விதியையொத்தனனுணர்விலாரெதிர்மெய்யுணர்ந்தவர்தம்முனற்
கதியையொத்தனனன்புளாரெதிர்கருதுமுற்பலவிகசித
மதியையொத்தனனசைநல்வினைமாறிலாதவர்கட்கிரு
நிதியையொத்தனனுயிரையொத்தனனேயமொன்றினர்சார்பினே. (கநஎ)

என்னதன்மையினெவர்நினைந்தெதிரெய்தினாரவரிருவிழிக்
கன்னதன்மையனாகிமீளவுமவர்களோடளவளவினான்
மன்னுமாமுரசோதைவானெழமறுகடைந்தலர்சொரிவிளங்
கன்னிமார்முகமலரவந்தெழுகதிர்புரைந்தவைகுறுகினான். (கநஅ)

தேரிழிந்திளநங்கையோடுசிறந்ததம்பிமுனஞ்செலக்
காரிழிந்தொளிமின்னலோடுறுகாட்சிகண்கள்களிப்பவே
பாரிழிந்துறையுட்புகுந்திருபாதபங்கயமீதுரத்
தாரிழிந்திடவேபணிந்தனனன்னையோடுபிதாவையே. (கநகூ)

முன்னவன்பதமீதுசூடிமுகுந்தனுசிபுனைந்தபின்
மன்னுமைந்தர்களிட்டராதியர்வந்திறைஞ்சமகிழ்ந்தனன்
பொன்னையாதியமாதரன்புபொருந்துமாறுரைகூறியே
மின்னுலாமணியாலிழைத்துவிளங்குமண்டபமேயினான். (கச0)

அன்னதன்மையராயினாரிளையோனுமஞ்சுகமங்கையும்
பன்னுதேவகிமுதலமாதவர்பயந்தமைந்தனகன்றதீங்
குன்னிநெஞ்சுதளர்ந்துமாழ்கியுயிர்த்திருந்தனரொப்பிலான்
பின்னையங்கவர்களிதொடங்கவெடுத்துமற்றிதுபேசுவான். (கசக)

கந்தனென்றுமுகுந்தனென்றுகலங்கியாரியன்முதலினோர்
சிந்தைசஞ்சலமெய்தவாளிசெலுத்தியாரையும்வென்றபி
னிந்திராதிபரெதிர்கொளும்பதமெய்தினனபிமன்னுநீ
புந்திகொண்மின்மயங்கலீர்புகழ்போலுமோவுடல்புகலினே. (கசஉ)

என்றுகேசவனேதபாருமிசைந்தபின்னரினின்றவன்
றன்றுமைந்தனைநோக்கியாரமர்சொல்வர்பல்விதமுள்ளவா
றின்றகூறுதியென்றுகேட்பவெடுத்தியம்பினனிகழ்வெலா
மன்றுதாதையுமீன்றமங்கையுமன்பொடாரருள்பொங்கவே. (கசகூ)

வே று.

நாடுகொடேனென்றுரைத்தானரபதிபோய்வானடைந்தானுடுநீங்கிக்
காடுபுகும்பாண்டவர்கள்காசினிநாயகரானூர்கன்னனாதி
யிடுபெறுவிடுமனுஞ்சிலைக்குருவுமொழிந்தவரும்பெற்றூர்பேறு
கேடறவைவருங்கிருபனச்சுவத்தாமனுமிருந்தோர்கெடாமலென்றான். (கசச)

கேட்டமொழியாற்றந்தைபுளகரும்பிபொருவராற்கெடுவாரின்று
பூட்டுவினைக்கீடாகப்புகுந்ததுவுமெனப்புகன்றுபொய்மையில்லார்
நாட்டுபரிமகமியற்றவுன்னியதுமுணர்ந்தினிமைநவின்றுநீங்கி
வீட்டினடைந்தனனிப்பால்விமலனுந்தன்னிடஞ்சார்ந்தான்மேன்மையோடு.

கிருட்டிணவுதங்கசம்வாதசருக்கமுற்றிற்று.

ஆகசெய்யுள் - சசக.

பரிட்சித்துற்பவசருக்கம்.

எண்டோளானிதையத்திலிருப்பவனச்சுதனனுங்
திண்டோளானிதையமலர்செறிந்திருப்போன்சிவனுமாற்
பண்டோதியுணர்ந்திரண்டாப்பகர்சமையவாதிகளைக்
கொண்டாடேனவரையுமோர்பொருளாவுட்கொள்ளேனே. (க)

உருக்குமணியுள்ளிட்டவுவாமதிவான்முகமின்னார்
முருக்கிதழைவெளிறக்குஞ்செவ்விதழார்முறைமுறையே
தருக்கவவரிடந்தோறுஞ்சார்ந்தின்பநுகர்ந்திருந்தான்
கருக்கொண்மூவினைநிகர்க்குங்காயத்தானுடோறும். (உ)

இங்கிதுநிற்கப்பாண்டுவிசைக்குமரரிருந்தோங்கு
புங்கவெயிற்கரிபுரத்திற்புகுந்தவாறுரைக்கின்றூந்
தங்குமடந்தையர்பலருந்தழறனிலுற்பவித்தாளு
மங்கிருந்தாருத்தரையோடப்புரத்தினமர்ந்திலங்கி. (ங)

ஒருஞான்றவ்வுத்தரையாளுருகிமணவனைநினைந்து
சருகுகனலுறல்போன்றுதாரைபொழிகண்ணினளா
யொருமாதுதுபருறலுமுற்றரியபிரதைபெனுந்
திருமாதுபலபுகன்றுதெருட்டியவடியர்தவிர்த்தாள். (ச)

அவ்வாய்மைபாண்டுசுதரறிந்தவலமிகவெய்திச்
செவ்வேலார்கலுழ்ந்தளித்தசிறுவர்தமைநினைந்துருக
மெய்வேதவியாதமுனிமேவியவர்துயர்நீக்கி
யுய்விர்நற்பரிமேதமுனற்றுமெனவுரைத்தகன்றான். (ரு)

முரசுயர்த்தகொடிவேந்தன்றம்பியரைமுகநோக்கி
விரைசெய்புதுமலர்ச்சடையான்விளம்புமுரைகேட்டனமா
லுரைசெய்பெருமிதவேள்விக்குறுபொருளுண்டாயன்றே
வரிசைபெறுமுறைமையென்றுன்வஞ்சமொன்றுமுணராதான். (௬)

கந்தவாகனன்காளைகைதொழுதுகாவலனே
முந்தாதிமறைமொழிந்தமுனிபுகன்றபடிபோகிச்
சந்தாருமிமையவரைச்சாரலடைந்தவனருளாற்
பந்தாருமுலைத்தெரிவைபங்கனடிதொழுதேத்தி. (௭)

மேன்மைபெறுமவன்வரத்தால்வெறுக்கைபெற்றுமீளுதுமென்
றுனனமைந்துடைக்கொடியானறைந்திடலுமதுவேயென்
றானமறுநன்மதிசேருறுமிளைஞர்கூறுதலும்
வான்முரசமுயர்த்தபிரானவ்வாறுமனம்வலித்தான். (௮)

வேறு.

தந்தையொடுதாயடிதனிற்றொழுதுசாற்றி
முந்தவிடைபெற்றபினர்முற்படவளித்த
குந்திமகிழப்பலகுறித்தடிகள்சென்னி
யுந்திட்டவணிந்தவள்பணிப்பமகிழ்வெய்த. (௯)

கிருபனொடுயுச்சன்மதிகேழ்கிளர்விதூர
நிருபனொடுசஞ்சயனைநிறுவிநகர்தன்னிற்
பொருபடைஞர்சூழமுரசோதைதிசைபோர்ப்ப
வருமிரதமேறியிசைமன்னவரகன்றார். (௧௰)

ஐவருமகன்புரமகன்றடவிநீங்கிக்
கைவருபனிக்கிரியடைந்தனர்கள்கண்டார்
மெய்வருவியாதனையும்வீறுறவணங்கி
யுய்வருமியற்கையருளின்வழியினுற்றார். (௧௧)

மாமறைவலானுரைமறுததிறன்மன்னர்
தாமறவிருந்துபலநாடவமுயன்றார்
சேமிசையிருந்தவுயர்தேவடிநினைந்து
நேமமுறுபூசைகணிரப்பினர்நெறியால். (௧௨)

அப்பொழுதரன்கருணையாகியருணல்க
வொப்பறுபராசரனளித்தவனுணர்ந்தே
செப்பியறன்மைந்தனொடுதேவர்களியக்கர்
மைப்படுகணங்கள்வழிபாடுகளியற்றி. (௧௩)

ஆங்கவர்தமாரருளடைந்துபினர்மேவி
யோங்குமறமன்னர்கையினுன்னிநெறியாகத்
தாங்குமொருகோடுகடனிற்றரையகழ்ந்து
வீங்குநிதிநோக்கினர்வியாதனருள்சூடி. (௧௪)

எடுத்தனர்குவித்தனர்களெண்ணில்வரையாக
வடுத்தகரியொட்டகமருஞ்சகடனந்த
மெடுத்திடவெடுத்துநகரெய்துமுறைசெய்தார்
தொடுத்தமலர்மார்பினரிருந்தனரச்சூழல். (கரு)

எங்குமுளவாகநனியிழம்வருவிக்கப்
பங்கமறுமன்னவரதிர்க்துபயமெய்திச்
சங்கையொடுமெற்புதமிதென்றுநவைசார்ந்தார்
புங்கமுனியாபருளுளார்க்கரிதுபோலாம். (க௬)

இவ்வணமிருந்தவர்களேமவரையெல்லா
மவ்வியல்பிஞனகரிஞக்கியிடுமேல்வை
பவ்வமதனிற்றுயில்செய்பாவனனிகழ்ந்துஞ்
செவ்வியமுறைச்செயலினிப்பகர்தல்செய்வாம். (கஎ)

வே று.

ஆரணமுனிவனேடுமைவர்போயிமையமெய்திக்
காரணன்றன்னையேத்திக்கனகங்கைக்கொண்டவாறு
மேரணிமகமியற்றற்கெண்ணியவாறும்வந்து
காரணர்புகலத்தாமோதரன்றந்தைக்குரைக்கலுற்ருன். (கஅ)

யான்வருஞான்றுபாண்டுதந்தவர்யாகமாற்றி
மேன்மையையுதவுமாருமீளுதிகிளைரோடுந்
தேனலர்மடவாரோடும்விரைவினென்றுரைத்தார்செல்வேன்
வான்வருகருணையோடுவிடைதரல்வண்மையென்ருன். (கக)

அம்மொழிபலவுந்தேறியத்தனுமுமையுமன்னர்
கைம்மலிபுரையுநீலவண்ணனைக்கண்ணிஞேக்கிச்
செம்மனிவினைவின்வண்ணஞ்சேறியென்றுரைப்பச்சேர்ந்தார்
தம்முயிரனையபெம்மான்மகிழ்ந்தருடாங்கிமீண்டான். (உ௦)

பலதேவன்கிருதவன்மன்சாத்தகிமுதலோர்பற்ப
லுலகியற்கடங்காக்கல்விபிரத்திமன்சாம்பனென்னு
ரலகறுசுதக்கினனுதிமைந்தர்யாதவர்களோடு
சலசலோசனனடைந்தான்சுபத்திரைதன்னேடம்மா. (உக)

ஆனைதேர்பரிகள்சூழமுரசொலியாசைபோர்ப்ப
வானுறுபதாகைத்தேர்மேன்மாதவனடைந்தானென்று
மேனிகழ்தூதரோடிவிருத்தனுக்குரைத்தார்நீலக்
கானுறழ்கண்ணினுளுங்கவுந்தியுமுணரமாதோ. (உஉ)

விதுரனுதியரைநோக்கிவிறனகரலங்கரித்தே
சதிரினையெதிர்கொண்டன்பாற்றுமினென்றுரைப்பத்தக்கோர்
மதுரவான்மொழியாலவ்வூர்மாக்களுக்கறிவித்தெய்தி
யதுகுலதிலகன்றன்னையாவருமெதிர்கொண்டாரே. (உ௩)

தோரணநிரைத்துவானந்தொடச்செழும்பதாகைநாட்டிப்
பூரணகும்பம்வைத்துப்பொன்மலர்சிந்திச்சுண்ண
மேரணிபொடிகளாடியிமசலந்தூர்த்துமாக்க
ணூரணன்றன்னைக்காணநண்ணினார்நகரியுள்ளார். (உச)

தன்னொப்பான்முனேயானதாமரைக்கண்ணினானை
மின்னொப்பாமடவார்வந்துவிழைவுறக்கண்டுநின்றார்
பொன்னொப்பாமென்னப்பல்லோர்புவிமடமங்கையென்ன
வென்னொப்பாமென்னவன்னமெனமயிலென்னவேகி. (உரு)

தனைக்கண்டானென்பர்தன்பாற்றண்ணகைபுரிந்தானென்பர்
நினைக்கயானினைவின்முன்னநெஞ்சிடைவந்தானென்பர்
கனக்கருமேனியானென்கண்ணுறநிமைக்காப்பிட்டே
னினிச்சிலர்க்கென்னுண்டென்பர்மறுகுதோறெதிருமாதர். (உசு)

தட்பமோமேனியென்பர்தண்டுழாய்வாடாதென்பர்
நட்பெவரென்பர்நம்மைநோக்கலனணிதென்பர்
கட்புலன்கதுவாதென்பர்மனம்பற்றுக்காட்சித்தென்பர்
விட்புலத்தவரைக்காண்மின்விரைமலர்பொழிவாரென்பார். (உஎ)

இன்னணம்புகலமாதரெதிர்ந்தவர்தொழுதுபோற்ற
வன்னகரெய்தியெண்ணிலவிரோளிமறுகுநீங்கி
மன்னவனிருந்தவந்தப்புரத்தினைவந்துசார்ந்து
பொன்னுருட்டேரிழிந்துபுக்கனன்மாயோனம்மா. (உஅ)

செம்மலையன்புகூரவிறைஞ்சியத்தெரிவைமாரை
யிம்மையின்முறையேதாழ்ந்தங்கிறைஞ்சியமடவார்க்கெல்லா
மைம்முகிலாசிகூறிமனமகிழ்ந்திருந்தான்பன்னு
ளம்முறையோர்நாளுற்றவாறினியறைதுமன்றே. (உகூ)

வேறு.

காருலாங்குழலுத்தரைகருமுதிர்ந்தொருஞான்
றேருலாவியமைந்தனையீன்றனளேனுஞ்சொற்
சீருலாவுநன்மனைவயிற்செறிந்தமங்கையராற்
பேருலாவெழுகடலெனவொலித்ததாற்பெரிதும். (௩0)

அந்தவாசகங்கேட்குமுன்பவளகட்டுதித்த
மைந்தனுவியிலானெனமாதர்கூறுதலா
லுந்துறுந்துயர்மீதெழவுவகைதீர்ந்தொலித்த
திந்திராபதமேய்க்குமாளிகையுளாரிரங்கல். (௩க)

மன்றமண்டபத்திருந்தமான்மாளிகைபுகுந்து
துன்றுகுந்திதன்சூழல்போய்ச்சாருமுன்றோன்றி
நின்றுகுந்தியுந்துருபதன்பாவையுநெருங்கு
குன்றிரண்டுநேர்தனமுலைசுபத்திரைக்கொடியும். (௩உ)

ஆறுபோல்விழிநீர்படவருணமும்வாடக்
கூறுநாவிலார்குறையிரங்கெதிர்ந்திதுகுறித்தார்
பேறுபோன்மைமைக்காத்தருள்பெருமமாமுனிவன்
சிறுமம்பினாற்சேயுயிரிராதெனத்தெளிந்தேம். (௩௩)

ஐயநின்னருளுள்ளவர்க்கயன்விதிதானென்
செய்யுமென்றகந்தேறினோம்வேறொன்றுந்தெளியோ
முய்யவந்தெறுமொருமகவிறந்துவீழ்ந்துளதால்
வெய்யவெம்முடைக்கொடுமையாலெனப்புவிவீழ்ந்தார். (௩௪)

பச்சைவண்ணனும்பரிவுடன்குந்தியையெடுத்தே
யிச்சையாற்றனியிருவரையருளினாலேந்தி
யச்சமெய்தலிரிரங்கலீரெனவெடுத்தறைந்தான்
முச்சகம்புகழ்நங்கையோடுதித்தெழுமுதல்வி. (௩௫)

பெற்றமைந்தர்பற்பலரையும்பெருஞ்சமருகுத்து
மற்றுமிக்குறுந்தாசையான்மாநிலத்திருந்தார்
சூற்றம்வீந்தநற்குணத்தினரிதன்செயல்குறித்தா
லற்றுநீங்குவாருயிரையமொன்றிலையே. (௩௬)

உரைசெய்போருடன்றுலகினைப்பெற்றவர்க்கோம்ப
வரிசைமைந்தரில்லாவிடின்வசையலாற்புகழோ
கரைசெயற்கருங்கருமங்கண்முடித்தநீகசிந்தின்
றிரைசெய்துன்பநீக்காவிடிலேற்றமுண்டாமோ. (௩௭)

சென்றுநீர்படிதேசிகன்மதலையைச்செறுத்துக்
கொன்றுவெங்கராமகன்றபின்குருவினுக்காக
வன்றுமீட்டுவந்தளித்தனையார்கொலோவறியா
ரின்றுநீநினைந்தனையெனிலெய்திலாதுளவே. (௩௮)

பெற்றமைந்தர்களறுவரைப்பிளந்துடன்பிறந்தோன்
பற்றலாரில்வான்படர்ந்தபின்றேவகிபரிவாச்
சொற்றஞான்றினிற்பாதலந்தொடர்ந்தளித்ததனைக்
கற்றுணர்ந்தவர்காசினிதனிலெவர்கருதார். (௩௯)

பெரியபேருடைப்பெருமநின்பேரருள்பெற்றோர்க்
கரியதொன்றிலையென்பர்களரியரதனாற்
கரியகொண்டலேகாக்குதியெங்களையென்றா
ளாரியவேள்வியினுதித்தவளிதையெடுத்துரைத்தாள். (௪௦)

முனிமகன்சரமுனைப்படாதன்றுநீகாத்துப்
பனிதருஞ்சொலாளுத்தரையாருயிர்பரித்தா
யினியவக்குருந்திடருறினுனையலாதெவர்பாற்
றனிபடைந்திடும்வசையிதுநினக்கருந்தகையே. (௪௧)

மீட்டிநீகணேயெனமுனியுடன்படாவிதங்கண்
டீட்டுமாதவர்தம்முனமளிப்பன்யானென்ருய்
டாட்டினின்சொலாற்பயனடைந்திருந்தனர்பகரு
நாட்டையாடருமைவருநன்மைவந்ததுபோல். (சஉ)

மனக்குநேர்தருமைத்துனர்சிந்தைகண்மகிழ
வனக்குநேரிலையாளுடனுத்தரையுவப்பக்
கனக்கயாமெலாந்துயரறக்காத்திபாலகனே
யெனக்குநல்கியநுகிலினுமரியதோவென்ருள். (சங)

தங்கையோதுவாளுன்னுடைமருமகன்சாய்ந்தன்
றங்கம்வீழ்த்துவதிக்குருந்தாசையாற்றரித்தான்
றுங்கமைத்துனனெவ்வணமவன்றுயர்துடைப்பா
யிங்குதித்தவக்குருந்துயிரீகலாதிருந்தால். (சச)

அறத்தின்மைந்தனுஞ்சமீரணன்மைந்தனுமடையார்
திறத்தினேரிலாவிருவருமிம்முறைதேர்ந்தாற்
றுறப்பராருயிர்தொலைந்தபின்ருலைகிலம்யாமு
னிறக்குமாறருளில்லையேற்புரக்குதியென்ருள். (சரு)

செய்யவாயினுள்புகன்றசொற்றிருவுறுமார்ப
னுய்யுமாறுசெய்குவனுணர்ந்துறுதியென்றுரைத்து
வையகம்பொதுளியமலரடிசெக்கர்மலியத்
தையலுத்தரைசூதிகாமனேவயிற்சார்ந்தான். (சசு)

பின்னரெய்திடக்குந்தியும்பெயர்சுபத்திரையு
முன்னரெய்தினடுருபதனளித்தமொய்குழலா
டன்னைநேர்பலராமனுக்தம்பியுமெய்தத்
துன்னிநோக்கினனுத்தரைசூதிகைச்சூழல். (சஎ)

சுரிகைவாளயில்சக்கரஞ்சூலமேமுதல
பரிபடைக்கலம்வேம்பிலைமுதலியபயிற்றி
விரிகைவெண்மலர்ப்பூரணகும்பங்கள்வேதத்
துரியமந்திரமுறையினுலோங்குறவமைத்து. (சஅ)

விருத்தகாரியர்பற்பலர்நான்கெனும்விதமுங்
கருத்திலாய்ந்தவர்கடலெனச்சூழ்தரக்கவின்பெற்
திருக்குமவ்விடத்தெய்தினனிணையடிநினைந்தோர்
வருத்தந்தன்னதாய்மகிழ்ந்தருள்வழங்குகார்வண்ணன். (சகூ)

ஓடிவெங்கனலுதித்தவளுத்தரைக்குரைப்ப
வீடினனெனக்கிடந்தவண்மீட்டுயிர்பெற்று
வாடிமாமலர்கனற்படிந்தாலெனவாயர்
பாடிதோறுமாடியபதங்கண்டனள்பணிந்தாள். (ருo)

மலினவாடையும்வாடியவதனமுமாகி
யிலகுகண்களிற்சொரிபுனனித்திலமேய்ப்ப
வலகிலாவொளிமேனியைமறைத்தழகார்ந்த
சலசநேர்முகநீட்டிமாதவற்கிதுசாற்றும். (௫௧)

அண்டினோர்துயரகற்றுதலணிவிரதமதாக்
கொண்டகொண்டலேகுரைபெருங்கருணையங்கடலே
விண்டமைந்தனையாருயிர்மேவுமாறுதவிப்
பண்டுரைத்தசொற்காக்குதிபரமுனக்கையா. (௫௨)

இறந்தவாண்டகைசென்றநாளேகலனானே
னறந்தவாவகையிருந்தனனாருயிர்பரித்துப்
பிறந்தமைந்தனீங்கியதுணர்ந்தினிச்செவிற்பெருமான்
மறந்தருங்கொலென்றயிர்ப்புளேன்மனக்கருத்திதுவே. (௫௩)

முதலையற்றுயிர்விரும்பியபாவியான்முனைந்த
மதலையைத்தணந்தெவ்வணமண்மிசைத்திரிவ
னதலமுற்றுமுன்பிறந்தவர்தமைத்தருமவனீ
குதலையைப்பரித்துயிர்தரலரியதோகூறாய். (௫௪)

மருகன்மைந்தனைமுனிமகன்வாளியோவதைக்கு
மருகராமுனதாருட்கைவரும்யாமும்
பருகுகாலையிற்பறித்ததொத்தெதிர்வினைப்பயனை
சருகிற்சாய்த்துநின்றண்ணளிபுரிகுதிதக்கோய். (௫௫)

மைந்தன்வந்தெழக்கண்டநான்மாதவனடியி
லந்தமைந்தனைச்சரணடைவிப்பனென்றடியேன்
சிந்தைசெய்திருந்தனனென்னைன்சிதைவுறுதுயினாத்
தந்துநல்கெனச்சாற்றியாதரத்தொடுஞ்சார்ந்தே. (௫௬)

விந்தமைந்தனையிருகரங்கொண்டுமெல்லெனவே
யேந்திநோக்கிநின்பாட்டனீரேழுலகின்றோன்
சார்ந்துநோக்கநீதொடொழாதிருப்பதுதகவோ
யீந்தவன்வழான்றருமநீயென்கொலோதபுதல். (௫௭)

அருகிலெய்தினனவரையின்றவளத்தன்
திருவகட்டினிலடக்கினோள்சேர்ந்தனளுன்பால்
தருமியாகபத்தினியும்வந்தடுத்தனள்சாற்றுக்
கருமமென்கொலோவென்றனள்வீழ்ந்தனள்கலங்கி. (௫௮)

வீழ்ந்தவுத்தரைமீளவும்வெய்துயிர்த்திரண்டு
தாழ்ந்தகைகளுங்குவித்தருஞ்சென்னிமேற்றாங்கி
வாழ்ந்தவாழ்விதென்னாருயிர்மைந்தனுக்குதவி
யாழ்ந்திடாதனைவரையுங்காத்தெடுத்தியென்றறைந்தாள். (௫௯)

அந்தமங்கைபாலாருட்டிறம்பலனாகி
சிந்தைதேறுதியிரங்கலைநிருவனாயென்றே
கந்தவாசநீர்கைக்கொடுபதமலர்கழீஇப்பின்
சுந்தரஞ்செறிவான்முகஞ்சொரிந்துநீர்துடைத்தான். (௬௰)

செய்யவாய்மலர்கொப்பளித்துமிழ்ந்துசெங்கரத்தாற்
பெய்யுநீரினாசமனமுமுடித்தபின்பெய்தி
பொய்யதன்றிதுபுதல்வனைவருவிப்பன்புவியு
முய்யபாண்டுநந்தனருமென்றிதையெடுத்துரைத்தான். (௬௧)

வேறு.

பாரிற்பகைவரிடத்தேனும்படிறென்றுரையேனெனிற்செய்யும்
போரிற்றோல்வைவெற்றிகளிற்புளகங்கலக்கம்புகேனென்னிற்
காரிற்றுளியிற்கணைசெலுத்துமபிமன்னளித்தகைக்குழவி
சீரிற்பொலியவாவிபெறுந்திசைபத்தினும்பேர்சிறப்புறவே. (௬௨)

குலத்துக்கெடுத்தமுறைதருமங்குன்றேனென்னிலொருஞான்று
நிலத்துக்கிமையோர்தமையன்புநீங்கேனென்னிலினியவெழி
னலத்துக்கொருவர்நிகரில்லாணாஞ்பரணவுத்தரையித்
தலத்திலுயிர்த்தசிறுகுழவியுயிர்வந்தெய்துந்தவறாதே. (௬௩)

நரனென்றுரைக்கும்பெயரோனுநானுமொருகாரியமுகத்துந்
திரனென்றுரைக்குஞ்சினந்தாங்கிச்சிந்தை வேறுஞ்செயலிலையேற்
சரனின்றுகைப்பவமர்த்தலையிற்சாய்ந்தவபிமன்றிருத்தேவி
கரநின்றுகுத்தகுருந்தினுயிர்கடிதினாகக்கடவதுவே. (௬௪)

வஞ்சச்சகடன்சிசுபாலன்றந்தவக்கிரன்மாதுலனுங்
கஞ்சன்றனதாருயிர்தொலைத்தகருமந்தலையாந்தருமமென
விஞ்சுமமரர்முனிவரர்தம்விறலார்கருத்திற்பட்டுளதே
லுஞ்சிக்கணத்தினெழுமபிமற்குரியாளின்றதனிமகவே. (௬௫)

சரதந்தருமமிரண்டுமிருவிழியாப்பிரமசரியமெனும்
விரதந்தினமுமெனதகத்தேவிளங்குந்தகைமைமெய்யாமே
லிரதமுனிகூர்ங்கணைவலிசாய்ந்தெய்துமகவுக்குயிரென்றான்
பரதகுலத்தோர்யதுகுலத்தோர்பலர்காதெய்தப்பரந்தாமன். (௬௬)

கரத்தையசைத்துக்காலுதைந்துகண்கடிறந்துவாய்பதைத்துத்
திரத்தினுயிர்ப்புமுறையியங்கிச்சேய்க்காருயிர்வந்தடுத்ததனாற்
புரத்தின்மடவார்பற்பலரும்புளகமரும்பியெடுத்தணைத்தா
ரரற்றுமோதைதவிர்ந்துமகிழ்ந்தார்த்தார்கடலேழார்ப்பனபோல். (௬௭)

பெற்றகொடியுமாமியரும்பிரதையெனும்பேர்க்குரியாளு
மற்றையடைந்தமாமகிழ்வையாரேயறைதற்குரியோர்கள்
கற்றகுரவர்புடைசூழக்கண்ணனிருந்தபேரவையி
லுற்றுமகவைத்தொழுவித்தேபணிந்தாளுவகையுத்தரையே. (௬௮)

எந்திமகவைமுகில்வண்ணன்பரிசித்திருக்கின்முறைவாழ்த்திக்
காத்திமணிப்பூண்பலநல்கிக்களித்துப்பரிட்சித்தெனுநாமஞ்
சாத்திமறையோர்சொன்முறையேசாத்தியாசிதந்தளித்தான்
போந்தேமலரும்யதுகுலத்தோர்புனைபூண்பலவுமளித்தனரால். (௬௯)

எடுத்தார்கொடிகள்வீதியெலாநிறைத்தார்சுண்ணநன்மலர்கள்
கொடுத்தார்நிதிகள்கொள்வரிலாக்குறையேகுறையோர்குறையில்லார்
தடுத்தார்வானம்பந்தரினுற்சலித்தாருலகோர்முரசொலியாற்
றடுத்தார்முனிவராசியொடுமபர்ந்தார்விழைவவ்வணிநகரார். (௭௦)

விருந்தவரசுங்காந்தாரவேந்தன்பயந்தபூங்கொடியும்
பெருந்தவாற்றாவிம்மிதராயிருந்தார்விதுரன்பெரிதார்த்தான்
கருந்தானுயர்ந்தோர்கண்ணனையேகளித்தார்கமலக்காயருந்திச்
செருந்தன்மேதிபால்பொழியுந்திருநாட்டரசர்திறத்தெங்கும். (௭௧)

இவ்வாறிங்குமகவுண்டாயிசைபெற்றியங்கவக்குழவி
செவ்வாய்திங்களொன்றகலச்சென்றபாண்டுசிறார்மீண்டு
கைவாரணங்கள்பிடியோடுங்கரணியொடும்போய்நீர்துளையும்
வெவ்வாயருவிக்கான்யாறுங்கானுநீங்கிவியந்தடைந்தார். (௭௨)

செம்பொனனந்தம்பலபாரஞ்செறியநகரஞ்சேர்ந்தனரென்
றிம்பருணர்ந்துபுரசனங்களெழின்மாமணித்தோரணம்புனைந்து
கம்பவரம்பைமரகதத்தாற்கத்தூரியினுற்றரைமெழுகி
நம்பவேமத்தாற்கும்பநிறுவிநகரங்கோடித்தார். (௭௩)

விதுரனுதியுரவோரும்விமலனுதியாதவருஞ்
சதுரற்கெதிர்போயுறத்தழுவிக்கண்போன்மனமுந்தருக்கியபின்
மதுரமொழிமங்கையர்பாடமன்னர்பரவவந்தடைந்து
கதிர்மாநகரிற்றேரொருவிக்கலந்தாரந்தப்புரங்கணத்தில். (௭௪)

எய்தித்தாதைபடிவிறைஞ்சியபர்காந்தாரிபதம்போற்றிச்
செய்கைக்கரியதமையின்றுடிருந்தாள்வணங்கியேனையர்தம்
மெய்வெற்பொளிரமுகமன்கள்விளம்பிநெடும்பேரவைப்புறத்திற்
பைதலகலவீற்றிருந்தார்பாண்டுசிறாருந்திருமாலும். (௭௫)

விதுரனிகழ்ந்தகருமமெலாம்விளம்பத்தக்கோரற்புதராய்
மதுரமொழியாற்றிருமாலைவணங்கிமுகமன்பலகூறிக்
கதுமென்றடைந்துசிறுவனைப்போய்க்கண்டுகளித்தார்தமைமறந்தா
ரிதமென்புகல்வதினியென்றேவுளவோமகிழ்வதிதிற்பெரிதே. (௭௬)

பச்சைத்திருமான்முகநோக்கிப்படுபோர்க்களத்தினன்றவிந்த
விச்சைப்புதல்வன்றனைமீட்டுமீந்தாயெம்மைக்காக்கவுளாய்
நச்சப்படாதான்செல்வமெனத்தணந்தோமகவைநலிந்ததுய
ரச்சத்தழுந்தோமினிப்பிறவிக்குனையாரறியாரருட்செயலே. (௭௭)

* சொம்மைப்படைத்தோர்புரந்தளிக்குந்துன்பமுணர்வர்சொம்முணராச்
சும்மைபொறுத்தோர்பரமுணர்வாசுமையேனுணருமதுவேபோ
லெம்மைப்படைத்தாய்புரக்குமனங்குணர்வாயெமக்கென்றெரிவதென
மும்மைப்பாசமகற்றுவித்துப்புறத்திலுடையோன்மொழிந்தானே. (௭௮)
சிறியநகையும்பெருங்கருணைத்திறனுங்காட்டித்திருநெடுமா
லறியுமறிவாலறியாதானவரைத்தழுவிக்குழைந்திருந்தான்
வறியரிடத்திலிருநிதியம்வந்தாலென்னச்சிலநாட்பின்
செறியுமரசன்பேரவைப்பாற்சேர்ந்தான்சுருதித்திருமுனியே. (௭௯)
கண்டுவியந்தென்றவப்பயனுங்கலந்ததெனப்போயடிதொழுது
விண்டுமுதலோர்கடன்முறையும்விளக்கித்தவிசின்மிசையிருத்தி
வண்டுபடியுஞ்செழுந்தாரார்மறைபினுசிபுனைந்திருந்தார்
குண்டுமலர்வாவியைநிகர்வோன்குறித்தானிதனைக்கொற்றவர்க்கே. (௮௦)
மாமன்னவர்கள்பெருமானேமரலாதரத்தான்முதல்வாசித்
தாமனவியத்தருங்குழவிதளராதுதித்ததிறனுணர்ந்தேங்
காமனினித்தானுனைநிகரோகடந்தீர்பிறவிக்கடற்றினையீர்
சோமன்வரத்தாலுதித்திரென்றுரைத்தானரசனிதுசொன்னன். (௮௧)
உலகமளந்தோன்றிருவருளுமுனதாதரவுமுடையோர்க்கிங்
கலகிலின்பமலாதுதுயரடையாதென்னவெடுத்துரைத்தே
திலகன்மீட்டுமிதையுரைத்தான்செம்பொனளித்தாய்சிறந்தவெலா
மிலகவேள்விபுரிவித்தெம்மிடர்தீர்த்திடச்செய்குதியென்றான். (௮௨)

வேறு.

வாசநாறுமலர்மார்பனியம்பக்
கேசவன்பரிவுடன்கிளர்வெய்தி
யீசனீமகமியற்றிடவென்ன
நாசமற்றமுனிநாதனுரைப்பான். (௮௩)

வேறு.

சித்திரையுவாவைமுதலாயுரியதீக்கைப்
பத்தியினணிந்துபனிரண்டுடையபருவம்
வித்தகருடன்பயிறல்வேள்விபரியேகி
யத்தினமதற்குமுனர்மீடன்முறையாமே. (௮௪)
வாழ்பரியிலக்கணம்வழாதபரியாகித்
தாழ்வறவிருத்தலுணர்மின்குதிரைதன்பின்
காழ்வலியுடைச்செயலர்காத்தடைதலாகு
மூழ்முறையினுலவிமீளுமுரனோடும். (௮௫)
வந்துபரிசேர்ந்தபினர்மாமகமுடித்த
லுந்துபலபாத்திரமெலாங்கனகமோமங்
தந்திடுபதார்த்தமிவைதக்கபடிசேர்மின்
விந்தையுறவேதியர்விருந்தமுதருய்ப்ப. (௮௬)

---

* சொம் - உரிமைப்பொருள்.

வேண்டியவெலாமுதவுமின்பகிரதிக்க
ணீண்டுயர்வுருங்கனகசாலைநிருமிக்கத்
தூண்டுமினெனவர்க்கெதுவிருப்பமறுதேர்ந்த
தாண்டுதவுமாறுபொருள்யாவுமுளராமின். (அஎ)

மாதவர்கள்வேதியர்கள்வந்தடையவென்றே
தூதரைவிடுக்குமினெனப்பலசொற்சொற்று
வேதமுனியைப்பரவிவிண்டுமுகநோக்கி
யீதுநிகழ்விக்கவருளோவெனவிசைத்தான். (அஅ)

கன்றுகொடுநின்றுவிளவின்கனியுதிர்த்தோ
னன்றுதவினன்விடையதற்கொருபுணர்ப்போ
வின்றுனதுதம்பியரும்யாமுமுனதேவற்
சென்றுபுரிவோரெனவெடுத்தினிதுசெப்ப. (அகூ)

ஆற்றலுளனாயமறையறைந்தவனையேத்திச்
சாற்றியதெலாஞ்சமைவுறும்படிகடாங்கி
யேற்றமுளவச்சுவவிலக்கணருடன்போய்த்
தோற்றுபரிமான்கடிகழ்சூழலுணர்குற்றார். (கூ0)

இந்தவயமந்தமகமீட்டுவதெனக்கொண்
டந்தவயவாசிபுனலாட்டியரிச்சித்தே
முந்துமறைவாணர்பலர்மொய்ப்பமுறையாலே
சந்திரன்வழிக்குரிசிலைத்தவமுறுத்தி. (கூக)

நல்லதனியோரைகளினற்புனலிலாடிச்
சொல்லுமுறையாடையொடுமானுரிதுவக்கி
னெல்லைமுழுதும்மறையவெய்தியொருதண்டம்
புல்லியருந்திக்கையதுபூண்டனன்வலத்தோன். (கூஉ)

முற்கலைதெரிந்துமுதல்வன்றனொடுமெக்கிய
வற்கலிருந்துபலவாற்றின்மகமாற்ற
வுற்கையனநெற்றிமிசையோடையணிவித்து
நற்பரிவிடுத்தனர்நன்னாளில்வலமேக. (கூங)

அங்கவர்கள்சிடர்பலராரணநெறிப்பாற்
றங்கயமடிக்கடிதருக்கவிகொடுப்ப
வெங்குநிறைவுற்றனரிசைத்தபொருளோடுஞ்
செங்கணனைநோக்கியெவர்செல்வருடனென்றான். (கூச)

ஆருடனடுக்கவலராய்ந்துரைசெய்யென்ன
வேருடைமுனித்தகையெவர்க்குமெளிதன்றான்
றாருடைநரற்கலதுசாரும்வகையென்னக்
காருடைவனப்பினியகாளையஃதோர்ந்தே. (கூரு)

எடுத்தசிலையன்பகழியேழ்கடலிகர்க்கு
மடுத்தபலதூணியனபேதகவசத்தன்
றொடுத்ததொடையன்கதிர்துலங்குமுடியோன்வா
னிடுக்கணறவென்றவனெழுந்தடிபணிந்தான். (௯௬)

அண்ணல்விடைநல்குதியறைந்தினமுன்னே
நண்ணுபரியோடுமுறுவேன்வலநடாத்தி
யெண்ணமறவேவுதியெனப்பரிவினென்றான்
றண்ணளியினோடுதழுவித்தருமனோதும். (௯௭)

கார்பொழிதரும்படிகடுங்கணைசெலுத்திப்
போரழியமன்னர்புறவந்துரிசறுத்தோஞ்
சீர்பொழிமுகக்குரிசில்சென்றிடுதிசைப்பா
லார்பொருகினுஞ்சமரழித்தியுயிர்நல்கி. (௯௮)

வாக்கினிலியற்கைபடுமன்னவர்தமக்கென்
றீக்கையறிவித்தனுகல்செய்தியயமேத
மாக்குதினமுன்னரறனோடடைதியென்றே
போக்கினன்மனத்தெளிவுடன்பொருவிலானை. (௯௯)

தந்தையொடுதாயரடிதாழ்ந்துவிடைபெற்றுக்
கந்தனெனவேகலைகடந்தவன்மகிழ்ந்தே
சுந்தரமடந்தையர்தமக்கினிதுசொற்று
முந்துபுமுகுந்தனருண்மாமுடிபுனைந்து. (௧௦௦)

கிருபனொடுவிதுரன்முதலானவர்கள்கிட்டி
நிருபர்பலநன்முறைநிரப்பவருள்பெற்றுத்
தருபவனன்மைந்தனடிதாழ்ந்திளைஞர்தாழ
விரும்புயமணைத்துவிடைபெற்றனனிசைத்தே. (௧௦௧)

மூவரைமுதற்கடவுளோரின்முதிரும்பூ
தேவரைவலம்புரிதல்செய்தடிவணங்கி
நாவரைவிலாசிமுறைற்சூடியருணல்கக்
கோவரையனுனிரதமொன்றின்மிசைக்கொண்டான். (௧௦௨)

பரிட்சித்துற்பவசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௫௫௧.

பரிவலம்புரிசருக்கம்.

படித்தடம்பொதுளியபாதம்பாரதம்
வடித்துரைப்பவர்செவிவழியின்மாந்தினோர்
மிடித்துயரகற்றிடும்பாதம்வேள்வியை
முடித்திடும்பாதமென்முடியினுயதே. (௧)

ஆர்த்ததுசங்கினமார்த்தபேரிகை
போர்த்ததுசேனையின்புணரிவிண்ணொலாங்
தூர்த்ததுகொடிகளெண்டிசையுஞ்சொற்றதாற்
பேர்த்தெழுந்தோடியேபெயரும்பூழிகள். (௨)

ஒருகரமிருமருப்புகுக்குமும்மத
வருவிநால்வாய்களஞ்சுறுத்துமாற்றலாற்
பொருவலிக்கரதலக்கபோலப்போதக
மிருமருங்கெண்ணுறுவரைகளேய்த்தே. (௩)

கதியினுநிறத்தினுங்கவனநற்சுழி
மதியினும்வழுவிலாமாவின்மாலைகள்
சதியினுநடமெழத்துகடழைத்தெழு
நதிபதியெதிர்திரைபுரையநண்ணிற்றே. (௪)

உருண்மணித்திகிரிகளுருளுமோதையோ
டிருளினுமொளிதருமேமத்தேர்நிரை
பருதிதனிரதமிப்பாங்கர்மேவிய
தருவகவுவமையினுலாயதெங்கணும். (௫)

விட்படுதாரகைவிதுவைச்சூழ்ந்தெனப்
பெட்புறுசிலைவலான்முன்னும்பின்னுமாய்க்
கட்புலன்கதுவரிதென்னக்கைப்படை
கொட்புறச்சூழ்ந்தெனப்பதாதிக்கூட்டமே. (௬)

துவசம்வானளவினதும்பைநாறின
கவசமார்பொளிர்ந்தனகண்கள்சேந்தன
நவசராசனத்தினான்மருங்கினண்ணினர்
திவசநாயகனுடனெய்துந்தேவர்போல். (௭)

சுந்தரமங்கையர்தொங்கறங்கிய
கந்தரகுழலினர்காவிக்கண்ணினர்
சந்தவண்முலையினர்தேரிற்றந்தியி
னிந்திரபுரமினாரென்னவேகினான். (௮)

எரியினுஞ்சுடர்கெழுமேமப்பூணினர்
புரியிளமுறுவலாலுருக்கும்பொற்பினர்
கரியினும்பலசிவிகையினுங்கால்பொரு
பரியினுமணுகினர்பாரிற்பற்பலர். (௯)

காகளஞ்சின்னநாகசுரம்வேலைசூழ்
சாகரமொலித்தெனவொலிப்பத்தண்குடை
மாகநற்கவரிவட்டங்கள்வான்வெயி
லேகரிதிவர்வயினென்னவைகினான். (௧௦)

கள்ளிடையறாதுறுகனகவான்மலர்
வெள்ளிடைமருங்குலார்விண்ணின்வீசலாற்
றள்ளிடைச்சுட த்திரைக்கொழுநன்சார்ந்துழி
யெள்ளிடையிடவிடமிலாமன்மூடிற்றே. (௧௧)

பொடித்தெழுவெயர்வொடுபுனிதர்வெண்பரி
யடிக்கடியியற்றுறுமாகுதிப்புகை
துடித்தெழுதரங்கவாரிதியிற்றுய்த்தெழு
தடித்திலாமங்குலின்றன்மைமானுமே. (௧௨)

இவ்வணம்பின்றொடர்ந்தேகவப்பரி
யுய்வணம்வேள்வியைவலமுஞற்றியே
கைவணமுடையவர்கலந்துசூழ்தரச்
செவ்வியனுத்தரதிசையினண்ணிற்றே. (௧௩)

மெல்லெனமெல்லெனவேகிமீண்டுபுக்
கல்லினும்பகலினுமுலாவுயம்புவி
யெல்லைகணீந்தியேதிகத்தமென்றுரை
சொல்லியதேயத்திற்றுரகம்புக்கதே. (௧௪)

வேறு.

தகர்த்தியாரையுமுடித்தமுற்சமரினிலிற்ற
திகத்தநாயகன்சிறுவரச்செயலெலாங்கேட்டு
மகத்துவம்பெறுமடங்கலைவிசயனைவனைபோர்
முகத்தில்வெல்வதுமுன்னினர்துன்னினர்முனிந்தே. (௧௫)

அனைந்தவேலினராற்றல்சால்வில்லினர்கவச
முனைந்தமார்பினர்முடியினருவரியிற்புடைசூழத்
தனைந்தகற்றியதந்திபாதியிற்சதுர்விதமும்
வனைந்துவந்தனர்வளைந்தனர்மாமகப்புரவி. (௧௬)

கண்டுசாரணரிந்திரன்கான்முளைக்கோத
தண்டுதாங்கினோன்றம்பிபோயவரெதிர்சார்ந்து
பண்டுநங்கையர்பகைத்தவர்பட்டவாறுணர்வீர்
மண்டுபோர்செயமதிப்பதுமாண்பினிலன்றே. (௧௭)

பிறந்துளோர்களில்சரதசத்துருப்பெயர்பெற்றோ
னறந்தவாதவனருண்முரசக்கொடியண்ணற்
றிறஞ்செய்வாசிமாமகத்தினுக்கிடர்செயறீதாந்
துறந்துமேவுநாளெனக்கவன்சொற்றதுகேண்மோ. (௧௮)

இறந்துநீங்கினரெண்ணறுகொற்றவரிருந்தார்
சிறந்தபாலர்கள்செருவினுக்கவர்விழைவுறினு
மிறந்துநீங்குருவண்ணநின்னிதையத்திலருள்கொண்
டறைந்துநல்லுரையாதரத்தவரையுநோக்கி. (௧௯)

வாசிமாமகம்பார்த்திடவரும்படியுரைத்து
கேசமோடுபீடருதியென்றருணேர்ந்தான்
கூசினேனஃதனுநுமைக்கொடுங்கணையளித்தற்
கேசிறுவினையுணர்பிறேறுவெதிர்ந்துளீரென்றான். (௨௦)

அந்தவாசகங்கேட்டலுமாதரித்திலராய்
வந்தபோரிடையுற்றகேதுதன்மருங்கோ
யுந்தனுவியையகற்றுதுமொருகணத்தென்று
கந்தனுமெனக்கார்முகம்வளைத்தனர்கதித்தார். (௨௧)

சுற்றுதேரினர்தூணியர்மிலைந்ததும்பையினர்
பற்றுவில்லினர்குணவொலியெண்டிசைப்பயிலக்
கற்றவிஞ்சைகள்சிறிதினுற்கலைமுழுதுணர்ந்தோர்
கொற்றம்வெஃகுறுமிளைஞரிற்கொதித்தெதிர்மலைந்தார். (௨௨)

செய்யகண்களிற்றியுருக்கேந்தியசிலையான்
வையமீதினும்வலிமுகக்கொடியினுஞ்சுவேத
மெய்யரிக்குலமீதினும்பாகுடன்மீது
மெய்யுங்கூர்ங்கணையெத்தனையென்பதாமிலக்கே. (௨௩)

மருவுசூரியவன்மனுமம்புனைமைந்தன்
செருமுனைந்திடத்தனஞ்சயன்சிறுகைவிளைந்துப்
பெருமிதம்படுவில்வளைத்தாசுகம்பெய்து
கருநிறக்கணையவன்முகத்திற்படச்சாய்த்தான். (௨௪)

அஞ்சியங்கவன்றனுக்குறவவன்றனக்கிளையான்
விஞ்சுசூரவீரியனெனும்விடலைமீக்கொண்டு
கஞ்சவான்முனைப்பகழியாற்கார்முகிலுதவு
பஞ்சினுண்டுளிபடுவபோற்பார்த்தனைமறைத்தான். (௨௫)

தொடுத்துவிட்டவான்கணைகளைத்துண்டங்களாக்கி
யடுத்துவன்றனைச்சிலகணையாலயர்வெய்தப்
படுத்தல்கண்டனன்கேதுவன்மப்பெயர்படைத்தோன்
கடுத்துவான்முகமெதிர்ந்தனன்கணைமழைபொழிய. (௨௬)

வில்வளைத்தனனுறொலியெடுத்தனன்விசி
மல்வளைத்தவெம்புயத்தினன்மிசைபலமறைப்ப
சொல்வளைத்திலான்சொரிதரத்தனஞ்சயன்றுணித்து
கல்வளைத்தவான்சிலையினிற்காய்கணைசெலுத்தி. (௨௭)

அனையமைந்தனையிரும்புயத்தடசலுமவனு
முனையகன்றனன்முனிவுடனவன்றனக்கிளையோன்
கனைபொலன்கழற்சண்டவிக்கிரமனெதிர்கலந்து
புனைவெண்டும்பையன்போர்ப்புலியாமெனப்பொருதா. (௨௮)

எதிர்ந்தமைந்தனையிரக்கமாம்பார்வையானேக்கி
யதிர்ந்திடும்படிபுரிந்திலன்விசயனின்றளவின்
முதிர்ந்தசிற்றத்தான்முட்டியுநிலையுமோர்ந்தெய்தான்
வதிர்ந்தமேருவின்மேலப்புமாரியிற்கணைகள். (௨௯)

கரியஞாயிறுசெய்யவான்கரமுகுத்தென்னச்
சொரியுஞ்சோரியனாகியேதுனிவுடையவனுப்
பரியதிண்சிலையூன்றியோர்பஃதுவான்கணைகள்
புரியுமாற்றலான்பொற்புயமமூழ்ந்திடப்புதைத்தான். (௩௦)

வின்மைவல்லவன்விடுகணைபுதைதரமீளான்
வன்மைதங்குமனத்தனய்வடவையங்கனலைப்
புன்மையென்றிகழ்சிற்றவானலமிகப்பொங்கி
மன்மடங்கல்போலார்த்தெதிர்வந்துவில்வளைத்தான். (௩௧)

துதையவான்கணைநூறொருநொடியினிற்றுரந்து
புதையமார்பகமமூழ்த்தலாற்பொருவிலானவனே
யுதையபானுவொத்தனன்மறந்தொருகைகொண்டிருந்த
சிதைவிலாதகாண்டிவநிலஞ்சேர்ந்ததாற்சிதறி. (௩௨)

ஆனதன்மைகண்டத்திரிகத்தர்தம்மனிக
மீனவாரிதியார்த்தெனவொலித்தலும்விலக்கி
மானமைந்தனைபுழையரும்விருத்தரும்வளையத்
தானிருந்திதுதெரிந்தனர்தனுவலான்வின்மை. (௩௩)

கடங்கலுழ்ந்தெழுசிந்துரக்காவலர்குழுவின்
மடங்கனேர்பவன்வானவில்வினைப்புரைசிலையா
னடங்கவென்றவனசுரரையம்பரவான
ரிடங்கொள்காண்டவமெரித்தவனிவற்கெதிரெவரே. (௩௪)

நின்றழுவுலகோரையும்பாரதநெடும்போர்
வென்றமீளிநீயொருபொருட்படவெவர்விரிப்பார்
துன்றுமுன்னவன்சொல்வழான்றண்ணளிசுரந்தான்
கொன்றுநீக்குதலரியவோவுமையெலாங்குறிக்கில். (௩௫)

அவனைவெற்றிகொண்டிடவெவர்க்கெளியதென்றவர்தங்
கவனமுற்றிடவிளமனங்கரைவுறத்தெருட்டிப்
புவனமுற்றும்வென்றவனெதிர்போந்தளவளாவித்
தவனனுக்கெதிர்தாமரையாவதேதருமம். (௩௬)

என்றுகூறலுமைந்தர்களவ்வணமிசைந்தார்
துன்றுவீரனுமறப்பினைத்துடைத்துவில்லேந்திக்
கன்றிநெஞ்சிருகண்சிவந்துருத்தருங்கணைகள்
சென்றுவாகினிபிளந்திடத்திசைதொறும்விடுத்தான். (௩௭)

ஓடினார்சிலர்தம்முயிர்நீங்கிவாலுறவே
வீடினார்சிலர்விசயன்றன்கொடுங்கணைவிசையம்
பாடினார்சிலர்தலையறக்கவந்தமாய்ப்பாரி
லாடினார்சிலராயினாரவனெதிரானோர். (௩௮)

அனையகாலையின்மைந்தர்நால்வருமடிதாழ்ந்து
முனையினின்னையார்நிகர்ப்பவர்முனிவுறேலருளால்
வினையகற்றுதலாற்சிலபோரியாம்விளைத்தோந்
தனையரிற்புரக்குதியெனச்சாற்றலுமகிழ்ந்து. (௩௯)

தழுவினானவர்தங்களையிங்கிதஞ்சால
வழுவிலாமுறைவழங்கியேமாமகம்நோக்க
வெழுமின்சித்திரையுவாவிலெம்மேவலைமுற்றிக்
குழுமிவாழுதிரெனவிடைகொண்டனன்குரிசில். (௪0)

தாரகாசிபின்வரமதத்தும்பிமுன்போத
விரதராசிகளிருமருங்குடன்வரவேகிப்
புரவிதன்னுடனனுசரித்தெய்தினர்போந்து
சரதநாயகன்மகப்பரிசார்ந்ததுமகதம். (௪௧)

தாவுவாம்பரிபகதத்தன்றனையர்வாழ்நகரி
மேவுகாலையிற்கண்டவர்புயவலிவிளக்கத்
தூவுசாயகப்புட்டிலுந்தும்பையுமிலைந்தே
பேவுதாங்கிவாகினியுடனெழுந்தனனிரைந்தே. (௪௨)

பற்றுவார்களாய்ப்பரியினைவளைந்தவார்ப்பரவம்
வெற்றிவில்லுடைவிசயனுய்ந்தவரெதிர்மேவிக்
கற்றுகைத்திறற்கணைமழைபொழிதரக்கலங்கி
முற்றினாரலர்முனையிரிந்தோடினர்முனைந்தோர். (௪௩)

வாசிகைவிட்டுமடங்கிமாநகரிடைப்புகுந்து
தேசினாலுயர்செழுங்கிரியுரைத்தருதிண்மை
பேசுவான்கரிமிசையினிற்கடல்பெயர்ந்தென்ன
மூசுவாகினியுடன்வந்துமுனிவொடும்வளைந்தான். (௪௪)

வயிரதத்தனுமத்திறனோன்வருவதுகண்டு
சயிலவான்சிறகரிந்தவன்றந்தருள்குமரன்
பயிலும்வாணகைபரப்பியேமீண்டுவிற்பற்றித்
துயலுநாரிகோத்தெடுத்தனனக்கணத்துழனி. (௪௫)

திசையுடைந்ததுசெவிடுபட்டதுபுவியெல்லா
மசையலாயதுகிரிகளுமவ்வணமியற்றி
விசயன்முந்துறுகணைகளாற்பொறியெழவீரத்
தசைவிலாதவனுதையினனமரருமஞ்ச. (௪௬)

வந்தவான்கணைமாமழைவாளியால்விலக்கி
முந்துசாயகம்பற்பலமுனிவினாலெய்தா
னிந்திரன்மகன்மிசைபலநாகநேரென்ன
முந்துறும்பகதத்தனுக்குதித்தகான்முளையே. (௪௭)

நாமவான்கணைசிதைத்தடற்கணைகளானரனுந்
தாமவாளியாற்றந்தியைமண்ணிடைந்தகர்த்தான்
சேமவான்கவசத்தினன்சிந்துரம்வேறொன்
றேமமாமணியங்கதத்தொடுபுகுந்தெதிர்ந்தான். (௪௮)

சண்டவேகமாம்பவனமுமுயிர்ப்பினுந்தருக்கி
மண்டுகாதினுந்தழல்வாள்விழிபொழிந்து
கண்டபேர்மனங்கலங்குறக்கைக்கதைவிதிர்த்துப்
பண்டைமாவினென்மடங்குறப்படுத்ததுபலரை. (௪௯)

மீதுவந்தெழுவச்சிரதத்தனும்விடலை
காதுறுங்கணைமுடுகலிற்கைவலிக்கொருத்தன்
போதுறுங்கணையாலவைபொடிபுறப்புரிந்தான்
சாதுரத்திகல்வல்லவன்றேமரஞ்சாய்த்தான். (௫௦)

நான்குதோமரமொன்றின்மீதொன்றுறநடத்த
வான்கலந்துமீண்டெய்தினோன்கணைகளால்வாட்டி
யூன்கலந்திடமைந்தனைப்புரட்டியொன்கணையாற்
றுன்கலக்கினனவனயர்ந்தனன்புவிதலத்தில். (௫௧)

வீழ்ந்தவன்றனிமெய்யயர்வொழிந்துமீண்டெழுந்து
தாழ்ந்திலன்பொரும்போர்வலிசாலவுமார்த்துக்
காழ்கிளர்ந்தவிற்றுங்கியாசுகங்கலந்தெய்தி
மாழ்கிவானவர்நடுங்குறவிம்மொழிவகுத்தான். (௫௨)

எனதுதந்தையைவிருத்தனுதலினுயிரீர்ந்தா
யுனதருங்கணையெனைவெற்றிகொள்ளுவதுண்டோ
தனதருந்திறற்கெவர்கொலோசாய்ந்திடாதிருப்போர்
புனிதவேகலையேகலையெனவந்துபுகுந்தான். (௫௩)

வேறு.

இருவர்வாகினிசமர்பயின்றிடவிருவர்விற்களும்வளைவுற
விருவர்சாயகமகல்விசும்புறவிருவர்வாய்மொழிமுகில்பொர
விருவர்வீரியமமரர்கூறிடவருதினஞ்சமர்முற்றினு
மிருவருந்தனிவெற்றிதோல்வையிலாவருஞ்சமரென்பவே. (௫௪)

கார்மயங்கினசலதியுங்கொதிகனன்மலிந்தனகண்ணகல்
பார்மயங்கினமண்ணெலாநிறைபுடிவுதிர்ந்தனபற்பல
சேர்மயங்கினவமரரும்பலசிந்தைசெய்தனர்தேறியே
போர்மயங்கவடர்த்துளானிகல்பொருவிலான்முனிவெய்தியே. (௫௫)

பாகுபட்டதுவேழம்வீழ்ந்ததுபற்றுவிற்றறியுண்டது
சேகுபட்டுயிர்கவசமற்றதுசெய்யதூணிசிதைந்தது
கோகுலப்படைசாலவுட்கமலைந்தகொற்றவனற்கணை
யாகுலப்படவனுரத்தினழுந்தவீழ்ந்தனனவசமாய். (௫௬)

கிடந்துமண்ணிலெழுந்துமீண்டமர்களரவெய்தியசிறுவனைத்
தொடர்ந்துகண்ணருள்செய்துநின்னுயிர்தொலைதல்செய்திலனெம்முனோன்
றிடந்தரும்பலமொழிவகுத்துளதன்மையாலிதுசெய்வதன்
றடங்கையாயெனைநம்பினென்றுநியுன்னையாரமர்வெல்லுவோர். (௫௭)

சித்திரைத்தனியாமுவாவிடைசேர்ந்துமாமகநோக்கவே
யுத்தமக்கரிநகரமெய்துதியுய்தியெம்மருளுளரெனக்
கைத்திறற்கொருவன்கரைப்பவகன்றுகைக்களியானையான்
வித்தகர்க்கனுகூலனாயினன்மீண்டருச்சுனன்மேவினான். (௫௮)

துன்னுதன்படைசூழவந்துதுரங்கமேகியசார்பெலா
மன்னுமாகுதிதந்துவேதியர்வந்துசூழமகிழ்ந்துடன்
துன்னுநாடுகள்பலகடந்துதொடர்ந்துசிந்துவெனும்பெயர்
பன்னுநாடுபுகுந்ததப்பரியவணிகழ்ந்தனபகர்துமால். (௫௯)

சிந்துபூபதியன்றுதானுயிர்சிந்திவீழ்ந்ததிறத்தினா
லந்தமன்னருமைந்தனுந்திறலவனளித்தசிறார்களு
மிந்திரன்மகனைச்செறார்களினெண்ணிவாசிபிடிப்பதா
யுந்துசிந்தையின்முன்னர்சார்ந்தனருவரிபோன்முரசதிரவே. (௬௦)

தந்திரங்களுமெண்ணின்மன்னர்தருங்குமாரரனேகரு
முந்தினாரிறைவன்குமாரன்முடிந்தகன்றனனொருவனே
விந்தமன்னபுயங்களோங்கவளைந்துநேரறுவீரனை
யுந்தினார்பலபடைகள்வானமுமாதிரங்களுமுடையவே. (௬௧)

வெற்பின்மேன்மழைபொழிவதொத்தொருவீரன்மீதபரிதமுறப்
பற்பல்வான்கணைவேல்கணிச்சிபருத்தவண்கதைவிசலான்
முற்படும்பெயரான்மபங்கிமுரண்கொடோர்மிசைதன்சிலை
கற்படும்படிவீழபாக்கைமறந்தனன்குளிர்கவிகையான். (௬௨)

வானுளோர்களுமுனிவராருமுளங்கண்மாழ்கிவரோதயன்
றானுணர்ந்திடுமாறுநன்மறைதந்துவாழ்த்தினர்தக்கவன்
மேனிகழ்ந்ததுணர்ந்துசிறிவிளங்குகண்கள்சிவந்துதன்
மானவெஞ்சிலையொலியெடுத்தனனாரிமீதுறமாட்டியே. (௬௩)

பதுமமாமுனைவாளிநூறுபரப்பிவாகினியாற்றவு
முதுவராவினமுருமின்மாய்குதன்முற்றமுற்றமுடித்தலாற்
சதுரரெண்ணிலர்மாய்ந்துதேர்கடகர்ந்துதந்திகள்சிந்தியே
கதுவுறும்பரிகால்கள்சாய்ந்ததுகாலன்முன்னுயிர்போலவே. (௬௪)

ஊறுபட்டதுமன்னர்மைந்தருலாயதோளுரன்மாடெலா
நீறுபட்டதுசேனையோடுறுநெடியதேர்கரிபரியெலாஞ்
சேறுபட்டதுநிணமெழுந்துசெருச்செய்தோருடல்செம்புனீ
ராறுபட்டதுமாறுபட்டவராகுலத்திலழுந்தினார். (௬௫)

ஓடினாரையுமாயுதங்களுகுத்துளாரையுமோடவே
சாடினாரையுமஞ்சினாரையுநாமவெம்பிணராசிவரைத்
தேடினாரையுமீதுறக்கைசெறித்துளாரையுஞ்சிந்தைகள்
வாடினாரையுமெய்திலன்கருமாமுகிற்கொருமைத்துனன். (௬௬)

இன்னதன்மையினளவிறந்தவிராமபுரங்குடியேறலான்
மன்னர்தங்குலமைந்தராயிரர்வந்துசாரவுடற்றினார்
மின்னுபூண்கள்வனைத்தவில்லொடுமேவுதேர்கடகர்ந்துபோய்ப்
பின்னடைந்தனர்முன்விடும்படிபெயரவந்தபிரதாபரே. (௬௭)

கால்விசைக்கொடுபின்னடைந்தவர்கண்கடையுகமுன்னர்வந்
தால்விசைத்துரகதமியங்கியவிரதம்வேறுறவணுகினார்
மால்வரிச்சிலைமீளியாங்கவர்வருதல்கண்டுநகைத்தருங்
கோல்விடுத்திலனினியநன்மொழிகூறினானருள்குழையவே. (௬௮)

சரதநீதிவழாதவேந்துரைதந்தவாய்மையினாலுமைக்
கரதலங்கொலைசெய்கலாதுயிர்பெறுமினீவிர்கலக்கமற்
றிரதமாதியசேனையோடுறுமகமியற்றுறுமேல்வையிற்
பரதநங்குலவரசன்வாழ்வுறுபடையடைந்துபயன்கொண்மினே. (௬௯)

இன்றுதான்முதலாகவெம்முடைநண்பராகியியங்குமின்
சென்றுளார்பகைநினைதனன்றலவென்றுபற்பலசெப்புமுன்
றுன்றுதுற்சளையிருகணீர்மழைசொரியவந்தெதிர்தோன்றலுங்
கன்றுசிந்தையனுயெதிர்ந்துரைகலுழிமாறவுரைக்கவே. (௭௦)

ஐயவிங்கிவன்மருகன்மைந்தனளித்தியாருயிரவன்மிசை
செய்யகண்ணளிசெய்கவென்றவளோதலுந்திறல்வல்லவன்
மையலாயிவனைத்தருந்திறன்மருகனெங்குளனென்னவே
தையல்விம்மியுயிர்த்துரைத்தனடனுவலானுணர்வெய்தவே. (௭௧)

கேட்டிபற்குனமுன்னமீன்றவனமரின்மாய்ந்தகிலேசன்மெய்
வாட்டவாட்டமுறத்திரிந்தனன்மைந்தனீவருவாய்மையை
நாட்டினுள்ளவரோதவென்கொனடுங்கியாவிதுறந்தனன்
றேட்டியானையினுய்விதிச்செயலென்னையின்னிதுசொல்வதே. (௭௨)

மாமன்மாண்டுபுரந்தவாண்டகைமாண்டுமைந்தனுமாண்டுமென்
றீமைநல்லுயிர்தீர்ந்திலாதுதியங்கிசின்றநுதெளிகென
வாமநாற்றுவருடனுதித்தவள்கூறவாள்விழியின்வழி
காமனன்னவன்முத்துகுத்திதுகட்டுரைத்தனனன்புளான். (௭௩)

வேறு.

அம்மகேணூற்றுவருக்கதிபனறக்கடமைதவிர்ந்தலக்கண்செய்த
வெம்மையேபெரிதென்றுங்கதனினுமென்மடங்குபொல்லாவேடன்யானே
செம்மையேபோலுலகிலரசர்குலமுதலோடுஞ்செறுத்தபாவிக்
கைமையாய்நீமேவக்காணாதோகண்களெனக்கவலைபூண்டான். (எ௪)

நற்சோமகுலத்துணைவனவின்றமொழியவையோரைநாசஞ்செய்ய
விற்சோமற்கிணைநுதலாள்விதிவலியைமதிவலியால்வென்றுருண்டோ
வற்சோகமொழிதியெனவவன்கலுழிப்புனன்மாற்றியணங்களுடன்
சொற்சோராப்பெயரனையுந்துணைத்தாளிற்றொழுவித்தாள்சோகந்தீர. (எ௫)

வாரியெடுத்தவளையுயர்மருமத்திலுறத்தழுவிவாளும்வேலுஞ்
சீரியான்முடிப்பூணுந்தேருநெடும்பெருஞ்சிலையுந்தெரிந்துநல்கி
விரியபுரத்திருத்திநன்றுடுவேள்வியின்பான்மேவென்றோதிக்
காரிகைதன்னுதறனதுபயமழுந்தவணைத்துவிடைகளித்துநல்கி. (எ௬)

மன்னர்கருபற்பலவான்மைந்தருக்குமாதரத்தால்வாய்மைகூறி
யன்னவரைமாநகரியணைவித்துத்தன்படையோடரிகுமாரன்
பொன்னசலநிகர்தேர்மேற்புகுந்துபுரவியைத்தொடர்ந்துபோந்தகாலை
யன்னிலையேபரிபலநாடகன்றுவங்கமகன்றதென்பாலாயதன்றே. (எஎ)

கலிங்கமொடுகுலிங்கமுமொட்டியதேயத்தொடுங்கடந்துகதிர்செலாமல்
விலங்கவளர்ந்தெழுந்தோங்குவிந்தகிரிக்கொருதென்சார்மேவலோடு
மலங்கல்புனைநெடும்புயத்தோனீலனெனும்பெயருடையவரசர்கோமா
னலங்கிளருமுதன்மைந்தன்பிரவீரனெனுநாமன்வளைந்தானண்ணி. (எஅ)

வெற்றிபுனைவயவாகைவிற்குரிசிலவனையெதிர்மேவியென்னே
கொற்றவர்கள்குலதீபமியற்றுமகந்தருபரிநீகொள்வதென்றான்
கற்றபடைத்திறலாளிகண்சிவப்புந்தன்வனப்புங்காட்டியானே
பற்றுவனுப்போரியற்றிப்பரிமீட்டுப்பாரெனப்பகர்ந்தான்பார்த்தன்கேட்டான்.

சிறியநகைநிலவுமிழச்செருச்செய்வலியுடையாய்நீசிலைவாங்கென்ன
வெறியரிற்போர்வில்வளைத்துநாணெறிந்துபலகோடிவிசிகந்தூவத்
தறியதனிலுற்பவித்தநரமடங்கலெனுந்தரத்தான்றன்வில்வாங்கிப்
பறியவவன்விடுசரங்கடுகள்கண்டான்படையனைத்தும்படுவித்தானே. (அ௦)

ஒருகணையாற்சிலைநூறியொருகணையாற்றேரழித்தேயுகவையோடு
மிருகணைமார்பினிலழுத்தவிகலழிந்துதடுமாறியென்செய்கோமென்
றொருகணையானச்சமுடனகன்றிடலும்விசயனருகடுத்தமன்னர்
பொருதுபரிகொள்ளாமற்போவதுவேயெனநகைத்தார்புலியேபோல்வார். ()

வேறு.

அச்சமுடனன்றுமறைபாதவனகன்று
செச்சைபுனைதந்தைபருகெய்தியிதுசெப்ப
முச்சுடருமூன்றுவிழிபானுமெனைமுற்றற்
கச்சமுறுமாரமரினுமுறையினன்றே. (அ௨)

பாரதவமர்க்கலைபடிந்தவர்களைப்போற்
றாரதமியங்கெரிகலார்நகைதரித்தா
ரேதமுறவச்சமரிழைத்தவரைவென்று
வீரநருமக்கெரிவுறத்துவன்விரைந்தே. (௮௩)

என்றுபலவஞ்சினமெடுத்துரைகுறித்து
நின்றபலவேந்தரொடுநீளிரதமேறி
யொன்றுபடுசேனையொடுமுற்றெதிர்தகைந்தான்
குன்றனையதோள்வலிகுறிக்குமொருநீலன். (௮௪)

வந்தபடைகண்டுநரன்வாகினியிலுள்ளோர்
சிந்தினர்கள்வாளிமழைசீறினர்கலித்தார்
முந்துபுமலைந்தணிமுகங்கெடமுனைந்தே
கந்தனெனுமீளியெதிர்கார்முகம்வளைத்தான். (௮௫)

நீலனுமுடற்பொருவினீலநிகர்வோனு
மாலமுமடர்க்கும்வடவானலமுமாகிக்
கோலமுறுவிற்குனிவுறக்கணைகள்கொண்டு
மானுமடலாசுரருமென்னமலைகுற்றார். (௮௬)

அந்தரமியங்குபலவானவருமாங்கு
வந்துவமர்நோக்கினர்வலாரிதருமைந்தன்
கந்தரமியங்குசிலைகணைபலசெலுத்தி
யுந்துமுரவோன்றனுவொடித்தனன்வலத்தால். (௮௭)

வேறுமொருவான்சிலையெடுத்துவயவேந்தன்
மாறுபடுசெங்கணைசெலுத்துவதுமாற்றி
யேறுமிரதஞ்சிலையெழும்பரியனைத்துங்
கூறுகவசங்குறைவுறும்படிகுலைத்தான். (௮௮)

பின்னுமொருவாள்கொடுபெயர்ந்துவருவானை
நன்னிலைகுலைத்தரியநாந்தகமும்வீட்டிப்
பின்னிடமுடுக்கியுடலம்பிளவியங்க
மன்னுகணையுய்க்கவவன்மாமதிதளர்ந்தான். (௮௯)

ஓடிமுதுகிட்டரசனேதுதிறல்வாய்மை
நாடிலனயந்துமருகற்கிவைநவிற்றி
நீடிவிறல்கொள்கெனநெருப்புமதுகேளா
நீடினவுயிர்ப்புமிகநீலனொடுகூறும். (௯0)

அச்சுதனன்மைத்துனனையாண்டகையருட்பா
லிச்சைதருவித்தகனையேழுலகுகாண
வச்சமறுகாண்டவமழித்தபெருமானை
நச்சிவிறற்பெற்றனனவிற்றுமுறையன்றே. (௯௧)

காவலரனந்தமொருகாழ்கணையில்விழ
மேவலரைவென்றதனிவீரனைவிலக்கத்
தேவரில்வலாரிலைநயித்தியரிலின்றன்
மூவரினுமின்றிதுமனந்தெளிதிமொய்ம்போய். (௯௨)

அன்னவனைநின்றனதுநம்பனெனலாக்கி
யின்னிலையினல்லுறவியற்றுதுமெனக்கொண்
டின்னுமுனர்தேரின்மிசையுற்றவனைநேர்ந்தான்
கன்னன்மகனுக்கொருகாவலனையேபோல். (௯௩)

வேறு.

மடங்கலங்கொடியவன்மைந்தனோடுமுன்
றடம்படுவிழிச்சகாதேவன்சார்ந்தநா
ளுடன்படவியற்றியவொருவன்யானென
நடந்தெதிர்நின்றனனரன்வியக்கவே. (௯௪)

தூயவெங்கனலவன்சொன்னவாய்மையா
லாயவனுணர்ந்தழலாமென்றுன்னியே
தீயவன்றன்னுழைசெறிந்ததேனென
வாயவன்வழிபடுமன்பினாலென்றான். (௯௫)

நினக்கிதுதகுதியாமெனினுநின்னுரு
வெனக்கறிதரும்வகைதெரித்தியீண்டென
மனக்கருத்துணர்ந்துதன்வடிவங்காட்டினான்
கனக்கருமேனியன்றொழுதுகாதலால். (௯௬)

நின்னையேவழிபடுநீலன்செய்தவ
மென்னையேயென்னையேயென்றுபோற்றனு
மின்னையேநகுபடைவீரன்மேவுற
பன்னருமாசிகள்பலவழங்கினான். (௯௭)

பரிமகமியற்றியேபான்மைநோக்குற
விரிபுகழ்நீலனின்னகரிமேவுவன்
றரியலனனலன்றருதிநன்பென
வரியவனவ்வணமருள்செய்தானரோ. (௯௮)

மைந்தனுந்தங்கையும்வருதல்செய்தபி
னிந்திரன்மகனெதிர்ந்திறுகநம்பினான்
மந்தரபுயமுறத்தழீவிவம்பினோ
முந்துவேள்விக்கெனமொழிந்துபின்னரும். (௯௯)

வார்சிலைதேர்கொடிவாசிதூணியும்
பேர்படத்தந்தவன்பெரிதருட்கொடு
சீர்படப்புரவிபின்சேறன்மேயினான்
கார்முரசதிரொலிதிசைகளிப்பவே. (௧00)

ஏகியவான்பரியெதிர்ந்தமன்னவர்
போகியையெதிர்கொளும்புனிதராமென
வாகினாற்சூழ்தரவந்துதென்புவி
யோகினாலுலவினானொருவிற்காளையே. (௧௦௧)

சோலைவாயளியினந்துதைந்துபண்பயி
லாலவாயெனுநகரருகினப்பரி
வேலைவாயலையெனமேவிநிற்றலுஞ்
சேலைமீதுயர்கொடிச்சிறுவன்றேறினான். (௧௦௨)

தந்தைவந்தனனெனத்தருக்கியாற்றலு
மந்திவான்மதிக்கடலாமென்றார்த்தனன்
விந்தநேர்புயக்கிரிவிண்ணளாவுற
வந்தனன்றன்னையின்றவன்மருங்கினில். (௧௦௩)

அம்மவோவெந்தையராய்மகப்பொருட்
டிம்மையிற்புரவியோடெய்தினானிவண்
செம்மலையெதிருதுஞ்சென்றுசேனையோ
டம்முறைக்கினிவிடையருளுகென்னவே. (௧௦௪)

தடித்தனனிளமுலைப்புளகந்தாங்கினள்
வடித்தவாட்கலைதெரிமகனைநோக்கின
ளிடிக்கொடிப்பெருந்தகையின்றகான்முளை
தொடிக்கரந்தொட்டநாண்மகிழ்விற்றுன்னினாள். (௧௦௫)

மன்னவர்மன்னிவண்வந்துளானெனப்
பன்னியமொழிசெவிப்படியுமுன்னரே
தன்னையுமறந்துவாய்குளறித்தாவியே
மின்னனைமருங்குலும்விளக்கமாயதே. (௧௦௬)

எற்படுமிழையினாளேம்பல்பூத்தபின்
கற்படுதோளுடைக்காளைக்கோதினாள்
சொற்படுமுன்னர்போய்த்தோன்றிக்காண்கவென்
றற்புடனேவினாளவனுமேயினான். (௧௦௭)

முரசுபேரிகையெழுமுகிலினார்த்தெழ
வரசுவாமிசையிவர்ந்தரசர்சூழ்தர
வரிசையினேகியேமாகர்கோன்றரு
குரிசிலையவனிமேற்குறுகிநோக்கியே. (௧௦௮)

வணங்கினன்புளகெழவனசத்தாள்களி
லிணங்கிகைமுகிழத்தெழுந்துநிற்றல்கண்
டணங்குறவவன்செவிக்கனலினாகவே
நிணங்கமழ்வேலினானிரப்பலாயினான். (௧௦௯)

பப்புருவாகனென் றுரைக்கப்பாரின்மே
லொப்பறுமேன்மையோடுலவுநீர்மைபோய்
செப்புவதென்கொலோநின்சேவகத்தொழி
லிப்பொழுதுணர்ந்தனனென்னையூற்றமே. (௧௧௦)

அரசரிலுநிந்தனைகட்டின்மேவுரிற்
கரைசெயற்கருஞ்சமர்க்கலக்கமெய்திடார்
வரிசையின்மிருதனவசியமங்கைதன்
விரைசெறியுதரத்துன்மேவினுய்கொளீ. (௧௧௧)

விளைத்திலையருஞ்சமர்வேல்விவாண்பரி
தளைத்திலைகாணுமாறென்கொல்சார்ந்ததென்
றுளைத்திடவோதலுநாணியுத்தமன்
வளைத்தவாண்முகத்தனுய்மடங்கினனரோ. (௧௧௨)

மீண்டுபோய்த்தன்னகர்மேவிப்பேரவை
காண்டகுகாவலர்பலர்கலந்துற
மாண்டகுமுழையரோடுன்னிமைந்தனு
மாண்டகைமொழிக்கிதவன்றிவைகினுன். (௧௧௩)

இவ்வணமிருந்துழியினையபண்பெலா
மவ்வயிற்றந்தையாலறிந்துநாகர்கோன்
செவ்வியலளித்தநற்றெறிவைபற்குனன்
மெய்வலியுளுகியென்றுரைக்குமின்னனே. (௧௧௪)

பாதலத்திருந்தவள்பாரினெய்தியே
மீதலத்தவன்மகன்மகன்விளங்கிய
மாதலத்திலஞ்சிருழ்மதுரைமானகர்
காதலிற்கண்டனள்கண்களிப்பவே. (௧௧௫)

சேடியரோடுபோய்ச்சிறுவன்வைகிய
நீடியபேரவைப்புறத்தினின்றுழி
வாடியமருங்குலனன்னைமாசுண
நாடியளுகியென்றறிபநாட்டினர். (௧௧௬)

ஆதரமெழப்புளகரும்பவக்கணங்
காதலம்புதல்வனுங்கனகமாமலர்
பாதமாமலர்மிசைப்பரப்பியோர்சிறு
பூதரமெனப்பணிந்தெழுந்துபோற்றினன். (௧௧௭)

மைந்தனைக்கரங்களார்த்தெடுத்துவாழ்த்தியே
யிந்திரன்மகன்றனக்கின்பம்போன்றவள்
சந்திரவதனமுமங்கையுந்தண்ணிலா
வந்துறச்சிலமொழியுரைத்தன்மேயினள். (௧௧௮)

மதலைகேள்குருகுலமாசிலாமணி
விதலைசெய்வீரர்வான்மேவவிட்டினேன்
குதலைநந்தனன்சமர்குறித்துளானதற்
கிதவலாதிருப்பதுமேற்றமாகுமோ. (கககூ)

தந்தையைமனக்கருத்துணர்ந்துதக்கவா
றுந்திடவியற்றுதலுரிமைப்பாலவே
சந்தனுவிடையினுந்தனையன்பாங்கினு
மந்தரமுணருதியவலமாறவே. (கஉ0)

குலத்தியல்பாற்சமர்குறிக்கவேண்டுமென்
றலர்க்கணையிறைவகேளத்தனேதுமே
னலத்தொடுபற்பலர்நவிலச்சென்றுநீ
சிலைத்தொழில்காட்டுதல்சிறந்தமெய்ம்மையே. (கஉக)

மன்றனக்கபிமதமாகமைந்தகே
ளென்றனக்கபிமதமதனிலேற்றமா
முன்றனக்கதில்வசையுற்றிடாதென
மின்றனித்தோதலும்வீரன்கூறுவான். (கஉஉ)

அத்தனேடமர்பொருதடல்பரிப்பது
வித்தகர்கடமையன்றென்றுவெய்துயிர்த்
தித்தகையளவும்யானிடைந்திருந்தனன்
புத்தமுதன்னசொற்பிழைத்தல்போதுமோ. (கஉங)

தாயொடுதந்தைசொற்றவுறவைகலின்
வீயினுமினிதெனவிமலர்கூறுவா
ராயதன்மையிலினித்தாழ்ப்பதாசெனத்
தூயவன்றெழுதுரைதொகுத்துப்பின்னரும். (கஉச)

ஈன்றவடன்னுழையெய்திவைகவென்
றூன்றபன்மங்கையருடனந்தப்புர
மேன்றிடச்செலுத்தியிந்திரன்றன்பேரனு
மூன்றினன்செருமனத்துவகைபொங்கவே. (கஉரு)

சுற்றினன்கோதைகள்புட்டிறாக்கினன்
பற்றினன்பெருஞ்சிலைக்கவசம்பன்மணி
யுற்றமாமுடிகதிருலவுபூணெலாம்
பெற்றனனிரவிபோலொளிபிறங்கவே. (கஉசு)

ஏறினன்றேர்மிசையிவுளிவாயுவின்
கூறினுயதுவெனக்குப்புற்றெய்திட
நீறினனிவனெனநிருதர்முன்முக
மாறினனெனமறுகணுகினனரோ. (கஉஎ)

கலித்தநுசங்கமுமுரசுகாகள
மொலித்நதுமுழவுடையோதைவிம்மின
வலித்தடந்தேரின்மேலன்னம்வாழ்கொடி
சலித்திடவுயிரெலாம்பவனந்தந்ததே. (௧௨௮)

ஆனையுமெண்ணறவரிக்குழாங்களுஞ்
சேனையுந்தேர்களுங்கடலிற்சேர்தர
மீனைநேராயுகன்கயல்விலோதனந்
தானுயர்விசும்புறமுன்னஞ்சாரவே. (௧௨௯)

காரொலியடங்கினகடலடங்கின
தேரொலியெழுதலிற்றிசையின்யானைகள்
பிரொலியடங்கிமாமதமுந்தீர்ந்ததாற்
பேரொலிநாகங்கள்பிளிறுமோதையால். (௧௩௦)

எடுத்தனன்சிலைபொலியென்கொலென்றயன்
கடுத்தனன்வான்முகமென்னிற்காசினிக்.
கடுத்தவாறென்கொலோவறைதலார்ப்பொடு
மடுத்திடுவடவையின்வந்துதோன்றினன். (௧௩௧)

மல்லுயர்புயத்தினன்வாகினிக்குழா
மொல்லெனவொலித்தகன்றேடிவாம்பரி
செல்லுருவகைதகைந்தார்ப்பத்தேர்வலான்
சொல்லுமுனெதிர்ந்தனன்மகிட்சிதோன்றவே. (௧௩௨)

தந்தைதன்படையுமித்தனையன்சேனையு
முந்துறவரியபோர்மோதநோக்கியே
கந்தனுமீசனுங்கலந்தபோரென
மைந்தனுமிந்திரன்மகனுமேயினர். (௧௩௩)

அற்புதமெய்தியேயமரர்நோக்குற
பற்பலவரசர்கள்பரிவினோடெதிர்ந்
தெற்படுகலனெடுங்காவைவேமவிற்
பொற்சிலைகுனித்தனர்புயங்கள்வீங்கவே. (௧௩௪)

வேறு.

மடைபட்டெழும்பிரசமுறுநற்சுகந்தமலர்வதனத்தர்தஞ்சிலையின்வாய்
தொடைபட்டவெங்குணமுமுறுவித்ததிர்ந்தொலிசெய்துழனிக்ககண்டவெளி
துடைப்பட்டருங்கிரிகளிடைவிட்டுறுஞ்சலதியுகளத்திகந்தமளவுங் [மீ
கடைப்பட்டவன்றுலவுபவனத்திலும்பலர்கள்கவினற்றொடுங்கினர்களே. ()

புனல்கக்கவும்பவனமொலிகக்கவுங்குவடுபொடிகக்கவும்புகையொடுங்
கனல்கக்கவும்புவியுமுயிர்க்கவுங்கணைகள்கதுவிச்சொரிந்திடனெலா
மினலுட்கவஞ்சமறலியுமுட்கவெம்பருதிமிக்கவுட்கமஞ்சுருமெனு
மனல்கக்கவெண்டிசையுமயரத்தொடங்கியதுசமர்விக்கிரமந்திகழவே. (௧௩௬)

திசையெட்டினுங்ககனநிலையத்தினுஞ்சலதிதிமிரத்தினும்புவியினும்
விசைமிக்குறுஞ்சுரர்கணதிவைப்பினும்பழையமிளிர்வெற்பகங்கடனிலு
மசைவற்றசிந்தையிருவருமுய்த்திருங்கணைகளனுகிப்பெருஞ்சமர்செயத்
தசையற்றெறலும்புபொடிபடவுட்கினின்றனர்கள்சமரிற்பொரும்படைஞரே. ()

இரதத்தையும்பரிகள்கவனத்தையும்வலவரிதையத்தையுஞ்சமர்செய்வோர்
விரதத்தையுங்கணைகள்வருசத்தியும்வதனமிளிர்விக்கிரமுந்துதிசெய்தார்
சரதத்தினுந்தருமநிலையத்தினுந்துனிசெய்சமரத்தினுங்குறைவிலா
வரதத்தியங்குசுரருடனுற்றெதிர்ந்தமுடியணிபட்டமைந்தர்பலரே. (கூஅ)

இகலிச்சைநின்றிருவர்சொரிகைக்கடுங்கணையினிளமைச்செழுங்குமரன்மெய்
புகமுப்பதம்புரான்விடவெட்டிமைந்தனொருபுடையெட்டருங்கணைவிட
மகனுய்த்திடுங்கணைகள்பொடிபட்டகன்றுவிழுமதிவிக்கிரமன்கணைசொரிக்
துகளாக்கடுங்கணைகனுதலிற்படும்படிசெய்துரனிற்கலந்தொலிசெய்தான். ()

முறையிற்படும்பகழியுதிரப்பெரும்புனலையுதவத்தன்மொய்ம்பொளிரவே
பிறையிற்பொலிந்தமகனொருபத்துவண்பகழியினருய்த்தனன்புயமிசை
நிறையப்பரந்துதிரமுகவிற்படும்பகழிநிகழ்வித்தவன்கொடிதுணித்
தறைநற்கவுந்திமகன்மிகவுக்கிரவெம்பகழியமர்வித்தனன்புயமெலாம். (கச0)

சரமெட்டிரண்டுபுயமுழுகக்கனன்றுவடசயிலத்தினஞ்செய்சிலையான்
வரமிக்கவன்றனதுசடிலத்தகன்கணைகள்மறையச்சொரிந்துவிடலா
லிரதத்தினின்றபடிநினைவற்றயர்ந்துசிலையிணையொட்டிநெஞ்சுதளரா
விரவிற்றெளிந்துமகன்விறலைப்புகழ்ந்துநகைவிளையப்பினுஞ்சமர்செய்தான். ()

வரைமிக்கிரண்டுபுயவடவெற்பெனுந்தனதுமகனுக்கலம்பெருகவே
விரைமிக்குயர்ந்தகணைவிடவுட்கிலன்பெருமைமிகுசிந்திரமங்கைபுதல்வன்
றிரைசெற்றவன்றுசிவனருள்கொற்றவெம்பகழிசினமுய்க்கவன்றுதையினன்
கரையுற்றவென்றிமகபதிபெற்றவன்றனதுகடிமிக்குரம்பொதுளவே. (கசஉ)

சதிரிற்சிறந்தினியதனுவிற்கெவன்கொல்கரியெனவுற்றசஞ்சலமிலான்
கதிரைப்புரைந்தபனியிதையத்தமுந்துகணைவெரினிற்கலந்தகறலான்
விதிர்வுற்றருஞ்சிலையுமிரதத்தயர்ந்துநிலமிசையுற்றிறந்தனனரோ
வதனைத்தெரிந்துசுதனிளகித்துறந்திரதமவனிக்கயர்ந்தணிசெய்தான். (கசங)

வேறு.

வடிநெடுங்கூர்வேன்மைந்தன்றெளிந்தபின்மாய்ந்துவீழ்ந்த
படியுடையான்மேல்வீழ்ந்துபதைத்தவன்கணைகள்போழ்ந்த
கடியுயர்புண்ணினுஞ்சோகமாங்கலக்கினுலு
மிடிவிழுமரம்போன்மீளவயர்ந்தனனிலத்தினேங்கி. (கசச)

போர்வலானிறந்தவாறுமகன்மண்மேற்புரண்டவாறுங்
கார்விலோதியினுள்சித்திராங்கதைகன்னமேற
பார்மிசைவீழ்ந்துசாலப்பதைத்துப்பாதலத்துநங்கை
சிர்வயினடைந்துகூறியவளொடுஞ்சேர்ந்துகண்டாள். (கசரு)

கண்டனள்கலுழ்ந்துசோர்ந்துகண்களாற்காணலாற்றாள்
விண்டனள்போலவீழ்ந்துமென்மலர்முகத்தினெற்றிப்
புண்டரநுதலான்சென்னிமடிமிசைப்பொருத்திவிண்ணி
லண்டருமரம்பைமாருமறுகிடவரற்றலானாள். (௧௪௬)

தழல்விழித்தகுவர்மூன்றுகோடியோர்தம்மைவென்று
யழலினுக்காகவானோராரையும்வென்றுமீண்டாய்
கழலொலியோங்கவெற்றிகண்டனைகுருகண்டத்தின்
மழலைவாய்த்தனயனம்பால்வீழ்வதோமறுவிலாயே. (௧௪௭)

வசுவினைக்குருவைச்சிந்துமகிபனைமார்த்தாண்டன்றன்
சிசுவினைச்சேயையெண்ணிறையவேந்தரையும்வென்று
பசுவினைமீட்டவெற்றிப்பார்த்திபர்கோவேயோர்நூன்
கொசுகினுஞ்சிறுவனம்பாற்குலைந்திடல்கொடுமையன்றே. (௧௪௮)

மஞ்சனச்சடையினான்றன்வரம்பெற்றும்வலிகள்பெற்றுங்
கஞ்சமர்த்தனன்றன்கேண்மைகிட்டியுங்ககனவாணர்
விஞ்சியவாசிபெற்றும்வென்றுமூவுலகுமீண்டுங்
கொஞ்சியமதலையம்பாற்குலைவதோகொற்றமையா. (௧௪௯)

மறம்வழாச்செல்வம்பெற்றுப்பாரகமுடித்துவாகை
யறம்வழாதணிந்தகோவேயறன்மகனரியவாய்மைத்
திறம்வழானெனுஞ்சொற்றேவர்வாயுறத்திகழ்ந்துமம்பு
நிறம்வழாமார்புகீண்டுசென்றதேகொடியபாவம். (௧௫௦)

என்றிவள்பலவும்பன்னியிரங்கிப்பஞ்செரியுற்றென்ன
மன்றலும்வனப்புஞ்சிந்திமண்மிசையயர்ந்துவீழக்
குன்றிளமுலையாளுகக்கொடியவடன்னையேந்தி
யின்றுநீகலுழேலென்றாளவளிதையெடுத்துரைத்தாள். (௧௫௧)

வெற்படுவலாரிநாடுபீடலவென்னச்சோதிக்
கற்படுநாகர்கோமான்கன்னிநீகரைத்ததென்னே
விற்படுமேனிவேந்துமைந்தனும்விளியுமாறே
விற்படுமவரினாகாயென்னைநீகொண்டவெண்ணம். (௧௫௨)

மைந்தனைப்பொருதியென்றுமணவனல்லுயிரைவாளா
சிந்தினைகொழுநனாசைதிறம்பினைபோலுமன்னாப்
வெந்திறலுடைமின்னாரிற்றாழ்ந்தனைவிதியோவன்றி
யுந்துபெண்ணறிவோபெற்றியுளகொலோவுரைத்திலாயே. (௧௫௩)

அன்னைசொல்வழானாப்மைந்தனத்தனாருயிர்கைக்கொண்டா
னென்னினியுலகங்கொள்வதிசைகொலோவசையேயன்றே
மன்னைநீகண்ணிற்கண்டுவாட்டமற்றிருந்தாய்நெஞ்சி
னுன்னியதுணரேனுன்னையுணர்கிலேனுயிரேபோல்வாய். (௧௫௪)

கற்பினுக்கொருத்திநீயோகணவன்மாட்டன்பிலாதா
யெற்படுதுயரங்காணவெண்ணியநெறியோமைந்தன்
பற்பலபுரிந்ததீமையுளகொலோபரிவுகூர்ந்து
வெற்பிருபுயனையாவிடீட்குதியென்றுமீட்டும். (கருரு)

ஆண்டகையுயிர்பெறானேலனலிடைக்கணமெய்தாமுன்
மாண்டகன்றிடுவேனென்னவரனடிமடிமேற்றாங்கி
நீண்டவாள்விழியாள்கூறாளுரையொன்றுநிறைந்திருந்தாள்
பூண்டபேரன்பினோடுமார்கொலோபுலம்பலற்றார். (கருசு)

அக்கணமைந்தன்றேறியன்னையர்தம்மைநோக்கி
யுக்கதன்பிதாவைநோக்கியுறுதுயர்பலவும்பூண்டு
மைக்கருமுகில்போற்சாய்ந்துபுரண்டுவான்முகத்தினெற்றி
யிக்குவிலோனைமானுமிளமையானிதனைச்சொன்னான். (கருஎ)

நாட்படுகமலமன்னமுகத்தினாணடுக்கங்காணத்
தாட்படுமரசர்சென்னித்தந்தையைவதைத்தபாவி
பேட்புறநிலத்தினூடுபெயர்ந்திடிற்சலதிநில்லாத்
தாட்பரம்பொறாதுமண்ணுமிரவியுங்கதியாகாதே. (கருஅ)

என்செய்தேனெனதுதாதையெழின்மணிமகுடச்சென்னிப்
பொன்செய்தநிலத்தினூடுபுரண்டிடக்கண்டபாவி
மின்செய்தவாளாலாவிவீடுவனெந்தைமீளக்
கொன்செய்தகண்ணிற்காணாவிடினெனக்குறித்துநின்றான். (கருகூ)

சொற்கலைமுழுதுந்தேர்ந்ததூயமாமுனிவனெக்கிய
வற்கலரிவணிகழ்ந்தவாறெலாமடியார்கேட்டு
நற்பரிதளைத்துமீண்டுநண்ணினர்நரனைநோக்கிப்
புற்புதவாழ்க்கையென்பதுணர்வுளார்புலம்பினாரே. (கசு0)

வான்பரியொருவராலும்வளைக்கரிதாகவென்று
தான்பரிநடத்துமாண்மைத்தனஞ்சயமடங்கலேநீ
கான்பரிந்துலகமாளுங்காவலன்வேள்விக்காக
யேன்பரிநடத்தவாராதிருந்தனையேமத்தோளாய். (கசுக)

சரதத்தாலுயர்ந்தகோமான்றந்தநல்வேள்விநீக்கி
விரதத்தைநீக்கியாவிவிளிவனேவிளம்புமுன்னர்ப்
பரதநற்குலத்துக்கெல்லாம்பழிபடமைந்தனாலே
யிரதநீத்தவனிமேல்வீழ்ந்திறந்ததெனியம்பிடாயே. (கசுஉ)

என்றவர்பலவும்பன்னியிரங்கியாங்கெதிரிற்சாய்ந்த
வென்றிமாமகனைநோக்கியென்கொனீவிளைத்தவெம்போர்
நன்றிதேதந்தைதன்னைநலிந்ததன்பரிகாரங்க
ளின்றுனக்கெளிதேமுற்றலென்றெடுத்தியம்பலுற்றார். (கசுங)

பன்னிருவருடமீன்றோன்கபாலத்திற்பலியேற்றுண்டு
நன்னிலமுழன்றுந்திராகவையிதுதவிர்வதெங்ஙன்
கொன்னுனைவேலானோடுசமர்செயக்குறித்தபாவம்
பொன்னனுளுரையால்வந்ததெனவுளம்பொருதுயிர்த்தார். (௧௬௪)

அத்தகையதனைத்தேர்ந்தேயந்தணர்க்குரைக்கலுற்றான்
பொய்த்தவறுணரார்காணப்புகலுவனெவருங்கேண்மோ
கைத்தவர்கொண்டவேந்தைமீண்டெழாக்காலையாவி
வைத்திரோனுரையுங்கூறேன்வாழ்கிலேன்மண்மீதையா. (௧௬௫)

வீரனைவதைத்தல்சாலத்தீவினைவீரர்தம்பி
லாரமார்புடையவேந்தைக்கோறன்மற்றதனிற்றீமை
சேருமாங்கதனினீதிதிறம்பிலார்தம்மைக்கோறல்
சாருமற்றதனிற்பாவந்தந்தையைவதைத்துளாற்கே. (௧௬௬)

வீரனையரசனாகிமெய்யுறவுருவனாகித்
தாரணிபுகழுமென்னைத்தந்தவனாயினானைப்
பாரவெங்கணையாற்கொன்றபாதகந்தவிருமேகொல்
கோருபரிகாரங்கணிரப்பினுநெடிதுகாலம். (௧௬௭)

மறந்தவிர்ந்தாவிமாயவதைத்தயான்மண்ணில்வாழே
னிறந்தவிந்திடுவேனின்னேயென்கொலோவிசைப்பதென்னப்
பறந்தலையகத்திலாருங்கலுழ்ந்திடப்படிமேல்வைகி
யறந்தவானுயிரைநீப்பானாயினனவனுமம்மா. (௧௬௮)

வேறு.

உருகாமதிமகனுங்கவினுறுகோதையுமாவி
திருகாய்விடுமுறைகண்டனடிகழ்நாகமடந்தை
முருகாரிதழலர்சேர்குழன்முகில்வாணகையோடு
மருகாய்மகனிடைவைகினளஞ்சேலெனமொழிவாள். (௧௬௯)

மேலைப்புதுவினைபற்றிவிளிந்தானுயிர்பெறவே
மாலைக்குழல்சிந்தாமணிவரவென்றுநினைந்தாள்
காலைக்கதிரெனவந்துகரத்தேறியதன்றே
சோலைக்குயிறன்றந்தைதுணைத்தாள்கடுதித்தாள். (௧௭௦)

அக்கோமகனலரைப்புரையங்கைகணில்வைத்தே
யுக்காதொழியுயிர்மீட்குதியுன்றந்தையுரத்திற்
றக்கோயிதைவைத்தென்றுயிர்தருமாமணிதரவே
திக்கார்புகழுடையானதுசென்னித்தலம்வைத்தான். (௧௭௧)

தன்னாருயிரிற்கொண்டுபிதாவின்புடைசார்ந்து
மின்னாலுயர்சிந்தாமணியிதயத்தில்விளங்க
முன்னாகவமைத்தானதுமுன்னந்துயிலுறுவோர்
பின்னாயெழுசெயலாலுயிர்பெற்றுய்ந்தெழுந்தானே. (௧௭௨)

ஊறுந்தெரியாவாக்கையுமொளிவாய்மலர்முகமுந்
தேறும்பலகலனும்பிரபைசெய்யத்திருமுடிமே
லாறும்பலமலரும்புனையரனோடரிநாமம்
பேறும்பெறும்புயனுமெனவிரைசெய்தருள்பெற்றான். (௧௭௩)

கண்டானுயர்மறையோரொடுபலகாவலர்கவலை
கண்டானிருமடவாரிருவிழியிற்பொழிகலுழி
கண்டானொருமகன்வாடியுயிர்த்தேங்கியகாட்சி
கண்டானுயரிமையோரிருகரமோங்கலர்மழையே. (௧௭௪)

ஆசைத்திருமகனைத்தனதணிமார்பினழுந்த
நேசத்தொடுதழுவித்துயர்வரயாரொடுநெறியாற்
பேசிப்பலர்முகமுங்குளிர்வுறவேமொழிபெய்தான்
பூசித்தவரெவருந்தனைநிகராதபுணர்ப்பான். (௧௭௫)

கதிகண்டணிபடுதாமரையொத்தாள்கலுழ்கண்ணாள்
மதிகண்டணியலர்போன்றனள்வருநாகமடந்தை
விதிகண்டெதிர்சுரராசனையொத்தான்மகன்மேலைக்
கதிகண்டவரானார்சுருதியினான்றகருத்தோர். (௧௭௬)

அடலொத்தபுயத்தானெழவிருவாகினியன்பாற்
கடலொத்ததுசுடரொத்தகலைக்கோமணிமுடியா
னிடருற்றவைதேறானிவணேனெய்தினரென்றே
மடமைக்குரியவரோடுவகுத்தான்பலமொழியே. (௧௭௭)

அக்காலமுணர்ந்தேமகனிகழ்வாதையுமறையத்
தக்கானையணைத்தன்பொடுமுரகன்றருதனையை
திக்காமுகம்வைத்தென்கொல்சிறந்தெய்தினையிவணீ
முக்காலமுணர்ந்தாய்மகன்முயலுஞ்செயன்மொழிதி. (௧௭௮)

இக்கான்முனிநின்மாட்டினியற்றுந்தவறுளவோ
தக்கானருள்வழியோவுளபடிசாற்றுகவென்ன
வெக்காலமுமுகிழாமலர்வதனத்தினனிளகி
யக்காவலனுக்கோதினளமுதஞ்செவிபுகல்போல். (௧௭௯)

ஈன்றாளிலுமினியாரிலைமகவுக்கெனவுலகிற்
சான்றோருரைசெய்வாரொருதவறுற்றுளஞான்றுந்
தோன்றாதவனுழையன்புதொடர்ந்தோங்கியதொடர்பா
லான்றாழ்மதியுடையாயதுவன்றாமிதுகேண்மோ. (௧௮௦)

ஒருஞான்றிளமடவார்பலருடனீர்விளையாட
வருசானவியருகேகினன்வசுவென்பவரெழுவர்
திருமாமுடியொளிர்பூணினர்தேசொன்றியவுடலார்
தருமானமுகைத்தவ்வுழிசார்ந்தார்புவிசேர்ந்தார். (௧௮௧)

ஆடிப்பகிர்திநீர்கடன்முறையாவுநடாத்தி
நாடிக்கரைபயில்வுற்றுழிநவமாமுருவெய்திப்
பீடிற்பொலிதருகங்கைபெயர்க்கேயெதிர்நிற்ப
வோடித்தொழுதவளோடிவையுரைசெய்தனருரவோர். (௧௮௨)

நின்மைந்தனையுயிர்கொண்டிடுநேயத்தனிற்றுருபன்
றன்மைந்தனைமுன்னைதனுவுடன்மேவுதல்சமைத்து
வின்மைந்துடைவிசயன்றனிவென்றொருவிரகான்
மென்மைந்தர்புகழ்ந்தேத்தியவசுவென்றுதெரிந்தும். (௧௮௩)

அவனைத்தனிமுனியாயுனதருளென்னையடர்த்த
கவனக்கதிமான்றேர்வருகாளைக்கினியாமே
புவனிக்கறிவுறவெம்வலிபுகல்வேமுயர்சாபஞ்
சிவனற்சடைநெறிமின்னனையென்றேசிலசொன்னார். (௧௮௪)

அச்சொற்செவிபுகவன்னையதற்காதரமாகி
யிச்சொற்றருமென்றுளவையென்காதுறவஞ்சி
நச்சிற்பயிலுரகாதிபனகர்நண்ணிவணங்கி
முச்சொற்றருமெந்தைக்கிதுமொழியத்துயர்பூண்டே. (௧௮௫)

எனையங்குறநிறுவித்தனியெய்திப்புவியிடையே
கனையுங்கழல்வசுவோடுயர்கங்கைக்கும்வணங்கி
வினையாலுயிர்தீர்ந்தான்விரலுறைவிடுமனென்று
தனையாங்கவருணரும்படிசாற்றித்துயர்தீர்த்தான். (௧௮௬)

வின்னாண்பவரெந்தைக்கருண்மேவிச்சிலசொன்னார்
மன்னாளபவனவனீந்திடுமகனம்பின்மடிந்து
தன்னாரெரிபீயுந்திடுமணியாலுயிர்சாரு
மென்னாலிவையனுகாவெனிலுளவாகரகென்றார். (௧௮௭)

அத்தன்மையுடன்பட்டெனதத்தன்பதிசார்ந்தே
சித்தந்தனிமகிழ்வெய்துறுசெயலாலிவைகூறி
யுய்த்தங்கணினீங்கென்றுயரொப்பிப்பினருற்றேஞ்
சத்தாய்மகமுற்றும்படிவருதன்மைதரித்தே. (௧௮௮)

எனையேவினனெமதத்தனியன்றிப்பதியெய்தி
தனையன்சமர்செய்யும்படிசாற்றிப்பயில்வித்தே
புனைவாகையினுயாவிபுரந்தான்மணிதந்தே
நினைவிங்கிதுவென்றொருவருநேரினினைப்பாள். (௧௮௯)

இல்லான்மொழிபுலனுகுமுனிருதோள்புடைபெயர
வல்லார்குழலாய்நங்கையளித்தான்குருகுலமென்
றெல்லாருமகிழ்ந்தேத்தவிசைத்தேமுனிவாரா
நல்லாரொடுபுகல்வானிசைநாடோறும்வளர்ப்போன். (௧௯0)

மணிவண்ணனெமக்காகவருத்தம்பலபுக்கோன்
றனிவெஞ்சிலையாசானெனையுயரும்படிசெய்தான்
பணிநாயகனரகம்புகுபரிசைத்தவிர்வித்தா
னனிநன்றிபுரிந்தாரைமறந்துய்ப்பவராரே. (௧௬௧)

பாரிற்றுயர்களையுங்கருமுகிலச்செயல்பத்தி
மாரிக்கெவர்கைமாறுவழங்கற்குரியோர்தான்
போரிற்சிலரெம்மாலுயிர்பொய்த்தாரெமதன்பாற்
சீரிற்றிகழ்சால்பாய்ந்தவர்கடனென்றுதெரித்தே. (௧௬௨)

நாகக்கொடிதனைநோக்கிநயந்தின்னகர்வைகி
யாகத்தயமிசையத்தினபுரியேகுறுமுன்னர்
தாகத்துயர்மகனேடிலையவளோடணிதன்னே
டேகக்கடவதுநீரெனவவரிவ்வுரைசொல்வார். (௧௬௩)

சகரக்கடனிகரும்பலபலவீதிதரித்த
நகரத்திலடைந்தேகுதனலனென்றுரைசெய்யச்
சிகரக்கிரியனையானதுசெய்யுமாறலவேள்வி
நிகரற்றுளதீக்கைக்கழகலவென்னுநிகழ்த்தி. (௧௬௪)

நெறிதோறுமெதிர்ந்தோர்பலர்தருமாமணிநிரைசேர்
செறிமாமுடிபலபூணொருசிறுவன்பெறநல்கி
யறிவாலடலாலாண்மையினலாற்றியவமர்வாய்
மறியுந்திறலபிமன்னுவைமானுந்தரமென்றான். (௧௬௫)

மின்னாரொடுசிறுவன்றனைநகர்செல்லவிதித்து
மன்னனவர்பலர்சூழ்வரமணிசந்தனமேறிப்
பொன்னாடர்கள்புகழும்படிமுரசோதைகள்போர்ப்ப
வின்னாணொலியெழவாசியினுடனேகினன்விசயன் (௧௬௬)

சிந்தாமணிதனையக்கொடியிருகண்வழிசேர்த்தே
யெந்தாயுனதிடமேகெனவேகிற்றதலத்தி
லந்தார்முடிமகனோடிருவருமாலையமணுகிச்
சந்தாபமகன்றுற்றனர்நெடிதாயதவத்தார். (௧௬௭)

வேறு.

வரிசையோங்கியமுனிவரராகுதிமடுப்பக்
கிரிசெய்தோளினன்றொடர்ந்துசென்றுலகெலாங்கிட்டி
யரசர்பற்பலர்நண்பினோடெதிருறவணிகித்
திரைசெய்மேல்கடல்கண்டனன்றேவரூர்கண்டோன். (௧௬௮)

ஆண்டுநீங்கியுத்தரதிசையயபத்துடன்சென்று
பாண்டுதந்தவன்மகதனூர்ப்பாங்கிற்பயிலக்
காண்டுமென்றருங்கிரிவிரசப்பெயர்கரைக்கு
மாண்டகுந்திறன்மாநகர்மன்னவனுணர்ந்தான். (௧௬௯)

வினையநீங்கியசராசந்தனளித்தருள்விடலை
முனையின்விஞ்சுசாதேவன்கான்முளையெனவந்தோன்
கனையுமேகசந்திப்பெயர்க்காளைகண்சிவந்து
தனைவியந்துநாற்சேனையோடுறுபரிதடுத்தான். (௨௦௦)

தடுத்தவாசகங்கேட்டமுறுமிழ்தனஞ்சயன்வந்
தடுத்தபோதினிலவனுடன்விடலையிதறைவான்
வடுக்கணார்குழுவினில்வருவாரெனமனதிற்
கெடுத்தசங்கையற்றேகினைபரியொடுமென்றே. (௨௦௧)

கொண்டுளேன்பரிவிடுகிலன்சமரினிற்கொற்றங்
கண்டுபோவனென்றுரைத்திடக்கைவலிக்கொருவன்!
விண்டுவெண்ணிலவெழநகைகாட்டிமுன்மேவி
யண்டிநின்றுமுதறிவுடையோர்க்கிதையறைவான். (௨௦௨)

செம்மையாகியதிருவுளத்தவனிபரேறு
மெய்ம்மையாயரசரையுயிர்விட்டலையென்ன
வம்மையேபுகன்றுய்த்தனனுதலின்மாட்டேன்
வெம்மைகாட்டுதற்கென்றனன்வெற்றிசேர்விசயன். (௨௦௩)

அனையமாற்றமக்குமரனுஞ்செவியுறவமையான்
வினையமன்னியேவில்வளைத்தாசுகம்விடுப்ப
முனைவலான்சிறுநகையொடுமொய்கணையேவித்
தனையனேவியகணையெலாம்விலக்கினன்றாழ்வாய். (௨௦௪)

மெல்லமெல்லெனவிளஞ்சிறுவிடலைவான்கணைகள்
மல்லலம்புயன்மாற்றிமற்றவன்மணியிரதம்
புல்லுவாம்பரிபாகன்மெய்புதைதராவண்ணஞ்
செல்லவுய்த்தனனளியொடுஞ்சிலசிலீமுகங்கள். (௨௦௫)

கலபமாமயினடமிடக்கண்டவான்கோழி
சுலபமென்றுதான்விரைந்துகாற்றெழித்திடுந்தகைபோ
லலகிலாதவில்வீரியனுண்மையைப்பழித்து
விலகவான்கணைமெய்யெலாம்புண்படவிரித்தான். (௨௦௬)

முனிந்துதன்னளியுள்ளுறமோதுமோர்கணையா
லனந்தமாமணித்தேரையும்வில்லையுமழித்து
நினைந்தமைந்தன்மேற்சிலகணைநீட்டலுமிடைந்து
புனைந்தமௌலியன்வென்றந்துபொருக்கெனமீண்டான். (௨௦௭)

ஆறிமீளவும்வேறொருதேரின்மேலாகி
நூறிவெல்வனென்றோர்சிலைநொடிக்குமுனேந்தி
மாறிலாதவன்முன்னர்வந்தெய்தலுமகிழ்ந்து
தேறிடும்படிசொற்றனன்செருவெலாமுடித்தோன். (௨௦௮)

சிறியைநீசெருச்செய்ததேயமையுநின்றிறலை
யறியுமாறுணர்த்தினைகுலத்தறத்தினைநிறுவி
நெறியினுளினிச்சித்திரையுவாவினன்னிருபன்
செறியவாற்றியமகத்தெல்லைசேருதிசிறப்பால். (௨0௯)

வேறுசிந்தைவிட்டன்புடன்விளங்கநீயென்று
கூறுவாய்மையாற்சிறுவனுங்குழைந்தடிதாழ்ந்தான்
றேறுமாறெடுத்திருபுயமார்புறச்சேர்த்து
நாறுமாலையான்விடைதந்துபரியொடுநடந்தான். (௨௧0)

போனவாசியுஞ்சேதிபன்றனிநகர்ப்புறத்தி
லானவாய்மைகேட்டருஞ்சிசுபாலனற்றனையன்
றேனலர்ந்ததார்ச்சரபனென்பவன்செருச்செய்வான்
ஞானனிந்துவந்தெதிர்ந்தனன்றனஞ்சயனுணர்ந்தே. (௨௧௧)

அன்பினாலவன்றனையணைத்தமர்புரியாம
லின்பமெய்தலுமிணையடிதொழுதருச்சித்துத்
தன்புரம்புகுந்தான்மகஞ்சாருமாறறைந்து
பின்புகுந்தனன்பரிவுடன்கிராதர்வாழ்பேரூர். (௨௧௨)

அவரைவென்றுமீண்டயோத்தியாங்கோசலையணுகித்
தவரியங்குகாசியினடைந்தவரெலாந்தாழ
நவமியங்கமீண்டொருதசான்னவமெனுநாட்டி
லுவரிபோல்வணலுற்றனன்மகப்பரிவுறலால். (௨௧௩)

சித்திராங்கதனடிதொழச்செய்தருண்மகத்துக்
கித்தினத்தில்வந்திடவெனக்குறித்தவணிகழ்ந்து
பத்தியாற்பரிபோம்வழிபடர்ந்தனன்பாரிற்
றத்துவாம்பரிநிடதநாட்டெல்லைசார்ந்ததுவே. (௨௧௪)

அந்தநாட்டிறையமர்புரிந்தருள்வயனுகச்
சுந்தரன்றணைந்தணியொடுந்தென்றிசைத்தொடர்ந்து
வந்தமால்வரைத்தென்புவியாரியம்விளங்கு
சிந்தைசேர்ந்துளவடுகன்னடந்தமிழ்த்தேயம். (௨௧௫)

புரக்குமன்னவர்போற்றிடக்கேரளம்புகுந்து
தரைக்குளிற்சவுராட்டமாந்தேயமூந்தாங்கி
நிரைக்குங்கோதில்கோகன்னமாநீணகர்நீங்கி
யிரைக்கும்யாதவருறைதருதுவரைபோயெதிர்ந்தார். (௨௧௬)

ஆய்ந்தகோதிலாவரிவசுதேவனேவலினாற்
சாய்ந்திடாவலியாதவகுமரர்போய்ச்சார்ந்து
வேய்ந்தபூசைகளியற்றினர்மிகவுளந்தருக்கி
மாய்ந்திடாவலிக்காளையாங்ககன்றனன்மாதோ. (௨௧௭)

பஞ்சமாநதம்படுதுறைமேலைவாரிதிப்பால்
விஞ்சுறுந்துரகந்தனிப்பயின்றுபோய்விறையார்
கஞ்சவாவிகாந்தாரநாடணுகினகலித்தார்
விஞ்சுமாதுலன்சகுனிகான்முளையொடும்விருதா. (௨௧௮)

வேறு.

ஆரமிற்றனையின்றவனற்றுணையாய்முனுரைத்தவருந்
திரமடித்தவராமெனவச்சிறுசேய்மனதிற்குறியா
வேரணிபொற்றடமேருநிகர்த்தவிர்தேரினெதிர்ப்படலுந்
தாரணிபொற்சிலைமீளிதடுத்திதுசால்பினுரைத்தனனே. (௨௧௯)

வையமெலாம்புகழ்மெய்யனுரைப்படிமன்னரைநேர்தகையான்
செய்யவமைந்திலனென்கொல்பொரும்படிசேர்ந்தனைசேனையொடு
முய்யவுயர்ந்திலனுந்தைமயங்கியுகுத்தனனாருயிரை
வெய்யருடன்றனிநன்புமுயங்கிவிரைந்தவரோடிகல்வாய். (௨௨௦)

சொற்படுபான்மைநினைந்தெமைவான்பகையென்றுதொடர்ந்திலனீ
பொற்புறநன்புபொருந்தினைநீதுபுரக்குதிஞாலமெனக்
கற்படுதோளுடையானருளோடுகரைப்பதுணர்ந்திலனு
மற்புதமாமரசெய்தனனுங்கதறிந்தனனுண்மைவலான். (௨௨௧)

தன்சிலைகோலியனேகசரங்கடழற்சொரியும்படியே
மன்சிலைதேரொடுபாகுமழித்துறுமைந்தனையோடிடவே
மின்படவேவினரோர்கொடியிற்சிலைவீரியனுங்கவனும்
பின்சிலைதேர்கொடுமீண்டனலம்புபொழிந்துபிணங்கினனே. (௨௨௨)

தேர்மிசைநூறுபதாகையினம்பதுநின்சிலைமீதறுபான்
பார்மிசைதாங்குசுவேதவிலக்கணவாசிகண்மேலிருபா
னேர்வலவன்மிசைநான்குமிகுத்துயர்புங்கவமெய்தினையோன்
போர்மிசையாவலியங்கவனைந்துபொருந்தமுனைந்தனனே. (௨௨௩)

அக்கணையாவுமிகற்கணையொன்றிலறுத்தடலுக்கொருவன்
கைக்கணையும்பொருவெஞ்சிலையும்பொடிகண்டுநகைத்திடலான்
மிக்கவிருத்தரடைந்துனதாருயிர்மீளியளித்தனனீ
யிக்கணமேகுதியென்றுதடுத்திரதத்தைநடத்தினரே. (௨௨௪)

பிற்படவோடியதேரெதிர்மீண்டுபெருஞ்சிலைகொண்டுமுனிந்
தெற்படுமாமகுடந்திசைதோறுமியங்கிருளைத்தெறவே
வெற்படுபோர்வலிவச்சிரன்மாமகன்வெம்முனையூடுபுகுந்
தற்படுசேனையுடன்சமரேற்றனனாரழல்கால்விழியோன். (௨௨௫)

தன்னளிகொண்டமர்செய்வகையாலிவர்தன்னையுணர்ந்திலரென்
றெண்ணமுடன்கனற்கண்ணினனாகியிருஞ்சிலைகோலியபின்
கண்ணளிபாட்டளிவாதுபுரிந்திடுகமழ்தொடைமார்புடையான்
விண்ணுறுவித்தனனுங்கெதிர்வந்துவிளங்கியசேனையெலாம். (௨௨௬)

உற்பலவாளிகணூறுசெலுத்தியுகாந்தவனற்கிளையான்
விற்படுதூணிசரங்கரியற்றிவிலோதனமாற்றியபின்
பொற்புறுதேரொடுமாவலவன்றனிபோக்கியுடற்கணெடும்
பற்பலவாளியழுத்தவயர்ந்துபடாதனபட்டனவே. (௨௨௭)

அத்தகைநேர்ந்தவனன்னைகலங்கியளித்தியளித்தியென
வித்தகனுக்கவையம்புகநன்மைவிளம்பியருட்பொழியா
கைத்திறல்வல்லவனஞ்சலெனப்பலகாரணமோதியபின்
சித்திரவீரனெனும்பெயரானருகெய்தினன்றேரியரோ. (௨௨௮)

வந்தகுமாரன்வணங்கவெடுத்தணிமார்பினுறத்தழுவி
நுந்தைவிளைத்தபெரும்பழியாலெதிர்நூற்றுவர்மாய்ந்தனரா
னுந்தையுமுன்றனுடன்வருவோருமுடன்பொருதுற்றனர்விண்
சுந்தரவப்பகைதீர்க்கவலாய்கொறுணித்தியினித்துணிவே. (௨௨௯)

ஆடலருஞ்சிலையாண்டகைவாய்மையினுலரசானவர்போர்
வீடலுறுவகையானமர்செய்திறலானுயிர்வீந்திலைநீ
யீடலவோர்கணைசார்முனையூடுமெனப்பலகூறியபின்
காடலர்தாமரைவாள்விழியானிதுகட்டுரைசெய்தனனே. (௨௩௦)

வேறு.

சேற்றூல்வயல்செங்கழுநீர்மலருங்
கூற்றூனுயர்நாடுளகோமகனே
மாற்றூரெனவுன்னலைமைத்துனமைப்
பேற்றூனுலகாளுதிபேர்பெறவே. (௨௩௧)

எந்தைக்கினியானெமதன்னைதடஞ்
சிந்தைத்துயர்தீர்ந்துசிறப்புறவே
முந்தைத்தனிநண்பின்முயங்குமினோ
கந்தர்ப்பனிகர்த்தகருங்கழலோய். (௨௩௨)

அறுதிக்கிதுசித்திரையாமதியின்
பருவத்தின்மகம்பயில்பான்மையவா
முறுதிக்குரியாரொடுமோகையொடும்
பெறுதிக்கனல்காண்டிபெயர்ந்தினிநீ. (௨௩௩)

என்றோதமகிழ்ந்தவரிவ்வகையே
சென்றேகையுறும்படிசேர்துமென
நின்றோதினராங்கவர்நேரவிடை
வென்றோன்பரியேரடுபின்மேவினனே. (௨௩௪)

மன்னாரமர்வீந்தவிராடன்மக
னன்னாடுமகப்பரிநண்ணுதலும்
பன்னாமுனம்வந்துபணிந்தனனா
லன்னாடிபுரந்தருளஞ்சனனே. (௨௩௫)

வேள்விக்குறுமாறுவிளம்பியபின்
றாழ்வற்றவர்நாடுதணந்தரிபோய்
வாழ்விற்பொலிதுருபதமன்னியதாற்
காழ்வுற்றவராகுதிகார்பொரவே. (௨௩௬)

நகமொத்துளமைத்துனனற்குமரன்
செகமுய்த்திடுவிப்பிரசித்துணரா
வகமிக்குறுமேம்பலொடங்கவனும்
புகலத்திசைபூசைபுரிந்தனனே. (௨௩௭)

வருவீர்மகமாந்தறுவாயினெனப்
பெருமானுரைசெய்துபெருந்தகையோ
டிருமானிலமெங்குமுறும்பரியோ
டொருவாதுதொடர்ந்தனனேகையொடும். (௨௩௮)

தருகாவலருஞ்சதுர்வேதியரும்
பெருகாமறையாகுதியும்பிறழா
வுருகாமகம்வேட்பவனுற்றநகர்க்
கருகாகியதப்பரியார்வமொடும். (௨௩௯)

கண்டாரதுசாரணர்காவலனுக்
கண்டாவிவைகன்னமளித்திடலு
முண்டானமுதொத்தவுதிட்டிரனுந்
தண்டாகரனுக்கிதுசாற்றினனே. (௨௪௦)

படைபட்டகையார்பலர்பாரிலுளோர்
தடையற்றுவரும்படிசாற்றிவிடுத்
திடைபட்டமுறைப்படியெப்பொருளு
மடைபட்டிடவாற்றுமினென்றெனவே. (௨௪௧)

பரிவலம்புரிசருக்க முற்றிற்று.
ஆ செய்யுள் - ௭௯௨.

வேள்விச்சருக்கம்.

காராய்மணியாய்க்கடலாய்க்களிறுய்த்
தாராயுரைசெய்தருமேனியனாய்
வாராயெனதுள்மருவும்படியாய்
நாராயணவோநமவேநமவே. (௧)

வீறுர்புயனுமிகுமாருதிதா
னூறுவருளிக்கணிகூறியசொற்
றேறுவதுவேசெயலென்றனுகி
நூறுயிரசாரணர்பானுவல்வான். (௨)

ஓடித்திசைதோறுளவேதியரும்
நாடித்திகழ்மன்னருமேனையரும்
நீடித்திகழ்வேள்வியினின்றிடவே
தேடிக்கொணர்மின்சிலநாள்செலுமுன். (௩)

சென்றேவினன்வென்றிசைமண்டபமுங்
குன்றேபுரையுங்குவிசாலைகளு
மன்றேவினைவல்லவர்கம்மியர்தா
னின்றேபலவேநிருமித்தனரே. (௪)

பொன்னான்மணியாற்புனைசாலைகளு
மின்னுமொளிருந்தனிமேடைகளு
நன்னூவலரானவிலுந்தரமோ
பன்னூளுறவேபயில்வித்தனரால். (௫)

சிற்பந்தனினூன்முறைசெய்தழகு
கற்பித்தவர்கண்களியெய்திடவே
பொற்பிற்றிகழ்மாமணியுந்துகில்க
ளற்பிற்றந்தானறனீன்றவனே. (௬)

மன்னர்க்கிளையான்மணிமாளிகையும்
பன்னற்கரிதாய்வருபாவலர்க
டுன்னற்கிடனுஞ்சுருதிக்குரியோ
ரன்னக்குவைமன்றமுமாமயல்கள். (௭)

வே று.

கலசமுஞ்சுருவையுங்கனகபாத்திரத்
தலசுநீர்க்குடங்கள்பீடங்களாதியாப்
பலசமூகமுமெலாம்பொன்னிற்பன்மணி
துலைசெய்மேலொளிர்தரச்சூழ்வித்தாரரோ. (௮)

தண்டுலமேழ்பெருஞ்சயிலமாகவே
கொண்டுடன்குவித்தனர்குலவுமாட்க
வண்டராலயமெனப்பருப்புமாழியேழ்
கண்டெனவிழுதுமக்கணத்தினுக்கினூர். (௯)

வாழையின்கனிமுதிர்வருக்கைமாக்கனி
தாழையின்கனியிளநீர்தக்கோலமாம்
பூழையில்பழுக்கனிபொருவின்மாங்கனி
யாழிமால்வரையெனக்குவிந்ததாண்டெலாம். (௧௦)

பலசுவைப்படுகறிவகைகள்பற்பல
நிலவியகுன்றினும்நீடுவித்தனர்
சலசவானன்புவிதாங்குமோகொலென்
றிலகுறவயிர்த்தனனென்கொல்சொல்வதே. (௧௧)

பாறயிர்பாளிதங்கலவைபற்பல
வேறணிமுடிகுடைவிசுசாமரை
கூறிமசலமலர்நாரந்தங்குங்கும
விரியநறும்பொடிவேரிகற்பூரம். (௧௨)

பாகுதண்ணிளவிலைவங்கம்பத்திரி
வாருறுகாய்சுவைதயேலங்கோமயஞ்
சேகறுகோசலந்தியித்தீம்புன
லாகுலம்படுமொலியுவரியார்த்தநீர். (௧௩)

கோசிகஞ்சித்திரத்துகில்கள்கோமணி
தேசினுடியபுனையாடைசெம்பொன்னூற்
பூசியபடங்கள்வெண்புகையினும்படர்
வேசியர்மனதினுமிதமிலாதவே. (௧௪)

அம்மனைகழங்குபந்தரியபாவைகள்
செம்மைசேர்மரவுரிசிரகந்தண்டங்கள்
வெம்மைதீர்பாதுகைவெயிலின்பத்திர
மிம்முறையெனத்தொகையெவருணர்த்துவோர். (௧௫)

பஞ்சியினளறுமைமஞ்சள்பாரெலாம்
மிஞ்சுறுநறியசாந்திரவிம்பநே
ரெஞ்சலில்சிந்தூரமாடியின்சொலாற்
கொஞ்சியகிளிகள்பூவைகளின்கூடுகள். (௧௬)

ஆயிரம்பாரமாடகங்களோர்குவை
யாயிரமாயிரங்குவையடுக்கினர்
காயிருங்கதிர்மணிக்கணங்கள்கண்ணெதிர்
காயிருங்கதிரவன்கலங்கக்காட்டினர். (௧௭)

ஆதனக்தோட்டிவில்லனேகமாம்படை
சாதனக்கணைகண்மற்றுள்ளதாம்படை
மீதலத்தோர்க்குமீதரிதுமேவலென்
றோதுறப்படைத்தனருரவுத்தோளினர். (௧௮)

கின்னரமிதுனயாழ்முதலகிட்டிய
நன்னலப்பொருளெலாம்நல்கிவானவ
ரென்னிதற்புதமெனவிருக்கும்பாண்டவர்க்
கன்னிலைமுராரிவந்தளையன்மேயினன். (௧௯)

தூண்டியபரியொடுதொடர்ந்துசென்றவக்
காண்டிவக்கரதலன்கருதுநாடெலா
மீண்டிமன்னவர்பொருஞ்செருவினேற்றுவென்
ருண்டவர்விடுப்பவந்தணுகினனரோ. (௨௦)

புல்லியமேனியுமணங்கும்பூத்திட
வல்லியம்போல்பவன்றுவரைமானகர்ச்
செல்லியகாலையிற்கண்டுசெப்பினன்
கொல்லையானிகருமிக்குருசிலோடுமே. (௨௧)

செப்பியதேதெனிற்றேயவேந்தர்க
டப்பறவேள்வியிற்சாரும்வண்ணமா
மிப்புவியோர்க்கெலாங்கூறினேனினி
யொப்பறவனுகுவரோகையோடுமே. (௨௨)

நண்பொடுபகைநொதுமலைநடத்துறு
தெண்படயாரையுமெதிர்கண்டன்பொடு
பண்படுமின்சொலாற்பலவுநல்கியே
தண்படுகொடையினான்சரித்தல்வேண்டுமே. (௨௩)

மாகனைக்கழலுடைமைந்தன்பப்புரு
வாகனற்குணத்தினான்வருவன்றன்பதந்
தாகமாய்த்தொழுதிடவவனைத்தண்ணளி
யோகையிற்பார்வைசெய்திடவுரைத்தியால். (௨௪)

என்றிதுநின்னிடனியம்பவென்றவன்
றுன்றியமொழிபலசொற்றிங்குய்த்தலா
லின்றிவனடைந்ததென்றிசைப்பயாரினுங்
குன்றிடாப்புகழினான்குறிப்பதாயினான். (௨௫)

பாரினிலெத்தனைபைதல்பூண்டனன்
போரினிலெத்தனையணங்குபோழ்ந்தனன்
சேரினிவேள்விசெய்வித்தலாலவ
னேரிலாவிடும்பையேநிலையமாயினான். (௨௬)

மனக்குளேன்மீதுறமருவுமன்பினாற்
றனக்குறுதுயர்தெரியாதுதாங்கினான்
கனக்கருங்கொண்டலேழனையகாட்சியான்
றனக்கெலாநிகரெனச்சாற்றிமீளவும். (௨௭)

அவையவவிலக்கணமியாவுமாசிலா
தவமறவிளங்குமாறருச்சுனற்குள
தவவிடருறுமியல்பேதிற்சார்ந்தவோ
கவலையெய்தினனிதுகரைத்தல்வேண்டுமால். (௨௮)

எனவறன்காளையிங்கிதனைக்கூறலு
மனமுவத்திவ்வுரைமாலுரைத்தனன்
றனிமனத்தூய்மையோய்சாற்றெணுமுறை
யெனினுநீகேட்டதற்கிசைப்பன்கேண்மினோ. (௨௯)

உறுப்பெலாமிலக்கணத்துற்றபற்குனன்
சிறப்புடற்கோர்சிறிதுயருஞ்செம்மைய
மறுப்படாச்சிறுதொடையதனின்மாற்றலர்
கறுத்தெதிர்ந்தாகுலமடைவர்காண்மினோ. (௩௦)

என்றுமாலுரைத்திடவிறைவனன்னதே
நன்றுரைத்தனையெனகங்கைவேள்விவாய்
நின்றபைங்கொடிகனலுதித்தநேரிழை
யன்றுணர்ந்தின்னகையரும்பினளரோ. (௩௧)

வித்தகன்முதல்வரந்துணைவர்மேகமெய்
யத்தனுறுயிர்களாம்யதுகுலத்தவர்
சுத்தவீரன்றனைத்துதித்துவைகினர்
பத்தியான்மேற்செயற்பகருவாமரோ. (௩௨)

வேறு.

தொடையார்முடியுடன்மன்னவர்சுடர்மௌலிதொகுக்குங்
கொடையாரிருவெண்சாமரைகுலவுங்குளிருடலார்
படையார்பலபலவாகினிபரவைக்கிடையொருகுன்
றிடைவந்தெனவந்தார்திசையினுநான்கினுமுள்ளார். (௩௩)

கரியும்பரியிரதங்கள்கலந்தெங்கணுமிடைய
வரியுந்தனியரியும்பலவகையாங்கொடிவானிற்
றெரியும்படியொளிரத்திசைமுரசாற்பொலிசெய்ய
விரியும்புகழ்பலவேந்தரும்வேள்வித்தலமடைந்தார். (௩௪)

அணியாதவர்துணைவீரரொடறன்மைந்தனுமெதிர்போய்ப்
பணிவார்தமையிருதோளுறமுயலுஞ்செயல்பற்றி
மணியாதனமிசையுய்த்தவர்மகிழப்பலகூறித்
திணிதோளரிமகனைக்கொடுதருபூசைகள்செய்தான். (௩௫)

தான்பூசைபுரிந்தான்யதுகுலவீரர்தமக்கு
வான்பூசனைமுறையானபின்மன்னுவமர்பெறவே
தேன்பூமலர்கமழ்பற்பலதெறலாலயமுதலாக்
கான்பூந்திருநிலமீண்டருள்கண்ணனருள்செய்தான். (௩௬)

உற்றார்பலர்வரமானகருறுபோகமுமிகழப்
பெற்றார்விடுதியில்வைகினர்பேராண்மைவலத்தோர்
கற்றார்புகழ்பலவேதியர்கணமோடியுரைப்ப
வற்றாரிருபற்றுமுனிவராருமடைந்தார். (௩௭)

வேறு.

நாரதன்வசிட்டன்காசிபன்பிருகுவகத்தியனற்றருவாதன்
சாரதன்மைகள்சேர்கௌதமனுதங்கன்சனற்குமாரன்றவக்கணுவன்
பேரதமாகாத்தூயமார்க்கண்டன்பின்னருமுள்ளமாமுனிவர்
நீரதநெறிகணிந்திவந்தடைந்தார்நேயமுமன்புமுண்ணிரப்பி. (௩௮)

முடித்தசெஞ்சடையும்வெளுர்த்தவெண்பல்லுமுருவெலும்பியங்கியவுடலுந்
தடித்தகுண்டிகையுந்தண்டமுஞ்சுருதிச்சாரமேசொரிந்திடுநாவும்
பிடித்தகேசமுநாற்சிரையும்விளங்கப்பேரருட்கொருவராயடைந்தார்
வடிச்சுடர்வேலான்செய்தவம்பலித்தவாறுபோன்றுளமுனிவரர்கள். (௩௯)

சந்திரன்மரபிற்குரியநாவலனுந்தவமியனுநியருடன்போ
யிந்திரன்கமலவாசனன்றன்னையெநிருமாறெனப்பணிந்தெழுந்து
முந்துறுபூசைக்கடன்முறைபுரிந்துமுறைமைசேர்விடுதியினுய்த்தான்
சிந்தையுமுவந்துதன்னையுமறந்துதேக்கியவாக்குடைச்செல்வன். (௪௦)

குந்தியநடையுமார்பின்முந்நூலுங்குசைக்கரப்பவித்திரவிரலுந்
தந்திடுமறையுந்தருக்கமுஞ்சிகையுந்தண்சொலும்வெண்படாந்தழைப்புஞ்
சுந்தரமுகமும்புண்டரநுதலுந்தோளிலுத்தரீகவெண்டுகிலு
மந்திவானுடலுமாகிவந்தடைந்தாரந்தணர்கடலினுமார்த்தே. (௪௧)

வெண்ணிலாமுறுவல்விளக்கவாரிருளின்மேன்மையைக்கருங்குழல்விளக்க
வண்ணவான்சிலையைப்புருவமேவிளக்கவாய்மலரரியேவிளக்க
வெண்ணிலாவுடுவைத்தரளமாலிகைகள்விளக்கமின்னலைநுசுப்பேற்கக்
கண்ணகன்முலைகள்விமானமேல்விளக்கக்ககனமொத்தரிவையர்கலந்தார். ()

வானரமடவார்விஞ்சையர்மடவார்வல்லகந்தருவயாழ்மடவார்
தானவர்மடவார்முனிவரர்மடவார்தகுதிசேர்பாதலமடவார்
கானவர்மடவார்நீரரமடவார்கலந்தனரெண்ணிலிங்கெவரோ
மானவர்மடவார்வருஞ்செயலுணர்த்தவல்லவர்நன்மதிமாண்பு. (௪௩)

வட்டநற்கவிகைபிச்சநற்களிறுவாம்பரிதேர்பலமொய்ப்ப
விட்டநற்றரளமாலிகையிலங்கவியலிசைநாடகமூன்று
மட்டறத்தெரிந்தவல்லபமொளிரமதுரநற்கவிதைவாய்கமழப்
பட்டவர்த்தனர்கள்பணிந்திடவொருகைப்பகட்டின்மேற்பாவலர்வந்தார். (௪௪)

பொய்யினையுணராருரைத்தசொற்பிசகார்புகலருங்காலமூன்றுணர்வார்
வெய்யனவியற்றார்வெந்துசிறிடினுமுறுதியேயலதொன்றும்விளம்பார்
மையலிலழுந்தார்மனுமுறையுணர்ந்துவரம்பின்வான்கலைகளும்பயின்றார்
மெய்யுருவனையார்மந்திரிக்கணத்தோர்மேவினாரிரதமேலம்மா. (௪௫)

செய்யகண்ணுதிரஞ்சொரிந்திடமுறுக்கிற்றிகழ்ந்தமீசைகணெடிதோங்க
கையில்வேலொளிரத்தோளிணைகுவவுகனகமால்வரையொடுகெளுல
வெய்யவாம்பரிமேலானைமேற்றேர்மேல்விபரிதமுறுபடைசூழ
வொய்யெனவந்தார்தந்திரத்தலைவருவரிநாப்பணில்வரையொத்தே. (௪௬)

கோவினைப்புரத்தலருந்தனமீட்டல்குவலயம்வளம்படத்திருத்தன்
மேவுழத்தொழிலுமியற்றிமெய்ப்பொருளைவேதியர்பாவலோர்மீட்டு
மேவலோரினைத்தோரெவருமெய்திடத்தந்திசைபெறுவசியர்வந்தடைந்தார்
தாவியகெருடகேதனத்தேர்மேற்றந்திமேல்வாசிமேற்றருக்கால். (௪௭)

கூழிளுயிர்கள்குளிர்வுறச்செய்துகொண்டலின்குறைதவிர்த்துறவா
யாழிவாய்விளக்குங்கங்கைதன்குலத்திலவதரித்தறனெலாம்புரிவோர்
மேழியங்கொடிவானளவுறக்கரிமேற்பரிகண்மேற்சிவிகைமேன்மிடைந்த
பூழிசெங்குளையுகுத்ததேனடக்கப்பூமிபாலகர்வந்துபுகுந்தார். (௪௮)

தாமரைமாலைமார்பினிற்றிகழவோதிமக்கொடிமுனஞ்சார
வாம்பரிதேர்வாரணம்பொருளமன்னவர்தங்குறையிரப்பக்
காமுறமறையின்றுளிக்கணக்குரைக்கக்கற்றுணர்சமத்தொடுந்தாளசி
சேமவெண்சிவிகைமீதுறவந்தார்சிர்கருணைசர்கண்மாதோ. (௪௯)

எக்குலத்தவருமெத்தொழிற்குரியோரெவருமீண்டெய்தினரன்றி
யொக்கலிற்படாதவரிலைவேள்விகாணுமாறவிருழுலகிற்
சக்கரத்தவனல்லகடனவந்தோர்தமக்கெலாமிடனுதவியதான்
முக்குலங்களினுமேம்படுசோமமுதற்குலத்தவன்மகச்சாலை. (௫௦)

குந்தியநடையர்முடவர்களுமர்குறளுருக்கொண்டுசஞ்சரிப்போ
ரந்தகர்செவிடராதுலர்பங்குவாதியாமவரெலாமடைந்தார்
வந்திகரோடுமாகதரடைந்தார்மன்னவரெண்ணிருதிறத்தோர்
தந்தமாமகமுமிதற்கிணையாகச்சாற்றுமாறுகந்திலர்தக்கோர். (௫௧)

சாத்தியகலவைவீத்தவான்பொடியுந்தமான்மதமுதிர்பொடியு
மேத்தியசுண்ணமெறிதருபொடியுமியங்குகற்பூரதுண்பொடியும்
பூத்தமாமடவார்மெய்திகழ்மஞ்சட்பராகமுங்குங்குமப்பொடியுந்
தேர்த்திரள்கரிகள்பரிகளாலகல்வான்செறிதரச்சேட்செலும்பொடிகள். (௫௨)

இமசலஞ்சொரியுநறும்புனற்பெருக்குமிலங்குசந்தனத்திழிபுனலு
மமைவருமரசர்மாலையிற்பிரசமனுகுறுபெருக்குமானைகளின்
சமைவறுமூன்றுமதச்செழும்பெருக்குங்கந்துகவிலாழிநீர்ப்பெருக்கு
மமரர்கண்புதையாவண்ணமிப்பொடிகளடிக்கடியடக்குறும்புனல்கள். (௫௩)

வே று.

ஆகுதிப்புகையட்டிலிடும்புகை
பாகுபற்றப்படும்புகைபாவைமார்
மேகமொத்தகுழற்குவெதுப்பிய
வாக்கினிற்புகைவானிலெழும்புகை. (௫௪)

ஆரணத்தொலியாகமநூலொலி
வாரணத்தொலிவான்பரித்தேரொலி
காரணத்துந்துமியொலிகாவலர்
பூரணத்தொலியெண்டிசைபொற்பொலி. (௫௫)

ஆடுவார்பலமாதரணித்தினிற்
பாடுவார்பலமாதர்பனிமலர்
சூடுவார்பலமாதர்துணைப்புய
காடுவார்பலமாதர்கலம்பெற. (௫௬)

பஞ்சிதோய்குவர்தொய்யில்பணிக்குவர்
கஞ்சிலஞ்சனந்தீட்டுவர்காயக
ரஞ்சவெள்வளையங்கையணிகுவர்
செஞ்சிலம்பொலிச்சேயிழைமார்குழாம். (௫௭)

பஞ்சவான்மலர்வாளியிற்பற்பல
ருஞ்சுங்கண்மலர்வாளிக்குடைந்தன
ரஞ்சலாதிகலாற்றமுனைந்துபோர்
விஞ்சவென்றுவிறற்புனைவீரரே. (௫௮)

வீதிதோறும்விளங்குவிழாவொலி
சோதிமண்டபந்தோறுந்துதியொலி
வேதிதோறும்விளங்குங்கனலொலி
யேதிதோறும்புலிங்கமெழுமொலி. (௫௯)

காவுதோறுங்களிவண்டிசையொலி
மேவுமாளிகைதோறுமின்னாரொலி
தாவுவானமேலாய்கொடிதாழொலி
பாவலாரிடத்தேதமிழ்ப்பாவொலி. (௬௦)

ஞானவேதியர்நான்மறையோதையுங்
கானவோதையுங்கார்முரசோதையும்
பானலங்கணார்பன்மணிமேகலை
தானசைந்திடுமோதையுஞ்சார்பெலாம். (௬௧)

அன்னதூயகறியமுதாயிர
மன்னபூபவருக்கம்பழவகை
யுன்னுதேனிழுதொண்பாற்றயிரொடுங்
கன்னற்கட்டிகள்பொற்கலங்காண்பரே. (௬௨)

உண்டுநீக்கும்பிரளையமோர்நொடிக்
கெண்டிசாமுகத்தெல்லையகற்றலான்
பண்டுவேதியன்பற்பலவாக்கிய
மண்டுகுன்றுகண்மாறுறவோங்குமே. (௬௩)

இலக்கமாந்தொகையெண்படத்துய்த்திடிற்
றலத்தினோர்பிரசந்தொனிசாருமா
லலக்கணின்றியணிமுரசார்த்ததால்
புலப்படுந்துணையும்பலபோதினும். (௬௪)

அன்னபண்பினிலங்கனுகர்ந்துளோர்
தன்னருந்தொகையாவர்கொல்சாற்றுவோர்
பன்னுசந்தனம்பாகிலையாதியாய்
மன்னுநாடொறுந்தந்துமதிக்கவே. (௬௫)

வேறு.

இவ்வணமியற்றினைகுமுதிட்டிரனிருக்கையெய்தி
மைவணமேனிமாயன்மருங்குறவணங்கிச்சொன்னான்
கைவணம்வல்லவெற்றித்தனஞ்சயன்கதிமாவோடு
முய்வணமாகவந்தானுறுநகாருகினையா. (௬௬)

நின்றிருக்கமலபாதம்பணித்திடவின்றுநீங்கி
மன்றலங்கதிரைக்கிழ்பாற்கண்டபின்வருவேனென்னக்
குன்றிரண்டனையதோளானெனவொருகுமரன்கூற
வென்றவைம்புலத்தானுற்றமெலிவுதீர்ந்துளமகிழ்ந்தான். (௬௭)

அரசவையிருந்துளோர்களனைவருமகிழ்ந்தபின்னர்
முரசொலிப்பவித்தியம்மாநகர்க்கெலாமொழிந்தபின்னர்
கரைசெயற்கரியமேன்மைகண்டகாவலர்போய்ச்சார்ந்தார்
விரைசெறியுறையுளிப்பால்விபாகரன்மேல்பாற்சார்ந்தான். (௬௮)

இரவெலாந்துயிலெய்தாவாயிருந்துயிர்த்தினிநாமென்றே
நான்முகங்காண்பதென்னக்கவையிருட்டன்னைச்சீற
விரவியக்கங்குலச்சமேய்ந்தகன்றிடவந்துற்றான்
புரவியேழ்பரித்ததேர்மேற்கிட்டிசைபொருவிலாதோன். (௬௯)

ஆங்குமுன்னெவருமேகியருங்கடனிரப்பித்தாழ்ந்து
ணீங்குவதணிகளாலும்நிறைபொலனுடையாலு
மாக்குடன்மறைத்துப்பல்லோரணிகொடேர்ப்புரவியானைத்
தாங்கிடவெதிர்வந்துற்றார்தனித்தனிநகரிமாக்கள். (௭௦)

பூரணகும்பம்வைத்துப்புனையணிவிதந்தான்மேய்ந்த
தோரணம்புதுக்கிமாடந்தொறுந்தொறும்விதானம்போக்கிக்
காரணிசெய்தவிதியரம்பைவான்றருக்கள்கட்டி
நாரணனுலகமென்னநகரியையலங்கரித்தான். (௭௧)

சாந்தினான்மெழுகிவேதித்தலமெலாநானமாட்டி
யேந்தியகற்பூரத்தாலிரேகைகள்பரப்பிவாசப்
பூந்தொடைதூக்கியெங்கும்பொன்மலர்பரப்பிவைத்தார்
மாந்தருமாதர்தாமுமாகபூரணத்தின்மாதோ. (௭௨)

உதிட்டிரன்வாயுமைந்தனிருவர்யாதவராயுள்ளோர்
மதிக்குமால்கிருபன்றூயமதிவிதுரன்போர்மன்னர்
துதித்திடுதரத்தோர்யாருந்தொல்குலத்தங்கையோடு
பதிச்சனரோடுமேகிபார்த்தனையெதிர்கொண்டார்கள். (௭௩)

வேறு.

காலையினெழுந்துகடன்முற்றியகலத்தின்
மாலையொளிரக்ககனவாணர்பதிமைந்தன்
பாலைநிகர்வெண்பரிசடங்கொடுமுன்பற்றச்
சேனைபுனைதேரினெதிர்வந்தருகுசேர்ந்தான். (௭௪)

வெற்றிமுடியோர்பலருமேவுபரிநோக்கி
யுற்றுமகிழ்வாரும்வலமாகியுறல்கண்டே
கொற்றமுயர்மீளியிரதத்திடைகுதித்தே
மற்றிவர்தமக்கடிவணங்கினன்முறைப்பால். (எரு)

தம்முனிருவோர்முதியதாதைமுதறக்கோர்
மைம்முகிலலாயுதன்மறைக்கிருபனுதிச்
செம்மையுடையார்களிருசேவடிபுனைந்தான்
பொம்மன்மணிவெங்கதிர்புரைந்தமுடிமீதில். (எசு)

எடுத்திருபுயத்தொடிறுகத்தழுவியாசி
கொடுத்தனர்தனைத்தொழுதகோகுலமனந்தம்
வடுத்தவிரிரட்டையரைமார்பின்மிசைபுல்கி
விடுத்திலனுரைக்கரியவேம்பலொடுவீரன். (எஎ)

செய்யவிழியும்பவளவாயுமொளிசெய்ய
மைய்யில்கடல்வண்ணன்மணிமாண்பிரதமேறி
மெய்யபலரோடுநகர்வீதியிடைவுக்கான்
பொய்யெனுமருங்குன்மடமாதர்பலர்போர்த்தார். (எஅ)

நோக்குவர்களிப்பர்பலநோன்புடையதாய
பாக்கியமிவற்குரியபாவையர்களாகி
யாக்கமுறுவோரவரிலாயவுடல்பெற்று
நீக்குறவுலாவுதனெடும்பிழையிதென்பார். (எகூ)

நீலவுடலும்பவளவாயுநிகரில்லா
மாலுமிவனும்புரையுமாறுணர்மினென்பார்
சாலவிவரேவல்புரிதன்மையுளனுமேற்
சீலவறன்மைந்தனமர்தெய்வதமிதென்பார். (அ0)

வேணுவிலெடுத்தபுயன்வெண்பிறைமிலைந்த
தாணுவுடனேசமர்தரும்புனிதனென்பார்
வாணகையினாலசுரர்மூவெயின்மடுத்தல்
மாணவமரேசர்பகைகாய்ந்ததகையென்பார். (அக)

விண்ணவரெலாம்புகழவிண்ணரசளித்து
மண்ணுலகின்மீளவருவாரெவர்கொலென்பார்
கண்ணகல்வடக்குததிகண்டுமுனைவென்று
தண்ணளிபுரிந்துவருசாபவரியென்பார். (அஉ)

கங்கைமகனுங்கலைகொள்கன்னனுமிரண்டு
புங்கமறையாசிரியரும்புதல்வனுந்தேர்
தங்குமுனைவென்றுநிரைமீட்டதனிவின்மை
பங்குனனலாதெவர்படைக்கவலரென்பார். (அங)

கோடியிரதங்கடுணைகொண்டமரியற்றிப்
பீடுபெறுசிந்துபதிபெற்றவனையாவி
காணேரவேசபதகாட்டியகல்வித்த
தோடுபடுமீளிநகர்சொல்லவெவரென்பார். (௮௪)

மூன்றுலகுமாண்மைபுகழ்மொய்ம்புடையகன்னன்
ஈன்றுகனல்கண்வழிகலந்தமுனைவென்றே
யேன்றவன்முடித்தலைதுணித்தவிவனுக்கே
தோன்றுபகையாருளர்சுராசுரரிலென்பார். (௮௫)

வாம்பரியுடன்பாரதகண்டம்வலம்வந்து
தேம்பணியலங்கல்புனைவார்திரளைவென்று
காம்பயனடைந்திடநகர்த்தலையடைந்தா
னேம்பலொடுமிக்கருமமார்க்கெளியதென்பார். (௮௬)

இவ்வணநகர்ச்சனரிசைப்பதுமுகந்து
மைவணநிறக்குரிசின்மண்டபமடைந்தே
தெய்வமணிமேய்ந்துடையதேரினிலிழிந்து
கைவணமுணர்ந்தசிலையான்மனைகலந்தான். (௮௭)

தாயரிருவர்க்குமுறையாயடிகடாழ்ந்து
நேயமடவார்பலர்நிரம்பமகிழ்வித்து
மாயனெடுபேரவைபுகுந்துதிசைமன்னர்
சீயமனையானவிதிருத்தவிசுசேர்ந்தான். (௮௮)

வேதியரும்வேள்வியயமுங்கலைவிதத்தா
லோதியசடங்குமுறைசாலையுறைவித்தார்
மாதிரமெலாமுணரவாய்மைநிலையிட்டோன்
பூதியுயரத்தனதுதோள்கள்புளகித்தான். (௮௯)

வேறு.

பன்னாளகலவொருநாளிற்பகர்பங்குனியாம்பருவத்தின்
மன்னானவர்கள்பலர்சூழமதுரைப்புரிபப்பரவாகன்
மின்னார்மேனியுலூபியொடுமேவுந்தனையீன்றவளோடுந்
துன்னார்வெருவநாற்சேனைசூழவந்தான்சுடர்போல்வான். (௯0)

உலகிலரசர்பலரேகியுடன்கொண்டடையநகர்புகுந்து
திலகமடவார்தமைப்புரத்திற்செலுத்திமறுகிற்றேரிழிந்து
கலகவயவேற்கரதலத்தான்றன்றாதையர்கள்கலந்திருந்த
வலகில்பெறும்பேரவைபுகுந்தானவர்க்குயிரொன்றானானே. (௯௧)

பணிந்தான்பெரியதாதையடிபரிவாலெடுத்துத்திருமார்பி
லணிந்தானாசிவழங்கினனத்தன்றிரிதராட்டிரனைத்
தணிந்தாதரவிற்றொழுவித்தான்றண்ணந்துளவோனிராமனுக்கு
மணிந்தான்பதத்தின்முடிமீட்டோல்வரடியுமணிந்தானே. (௯௨)

ஒருவர்க்கொருவர்மகிழ்சிறப்பவரனிற்றழுவியாசிபுகன்
றருகிற்றனியாதனத்திருத்தியரிச்சித்தரியகடன்முறைமை
பொருவற்றவராலியற்றுவித்துமனையிற்செறித்தார்போய்த்தொழுது
திருவிற்பொலிதாய்மார்களையுஞ்செனிப்பித்தோன்றாய்மாரையுமே. (௯௩)

பரிவாலெடுத்துச்சியைமோந்துபகர்ந்தார்கோடிவாழ்த்தொலிக
ளரியேறனையான்மீண்டரும்பேரவையிற்புகலுமருங்குமரன்
பெரிதுமகிழவுடன்வந்தோரெவர்க்கும்பிள்ளைப்பிறைபேசலு
மரியகுமரன்றனக்குமணிபணியாடைகடந்தருள்செய்தான். (௯௪)

வாசந்திகழுமலர்க்கூந்தன்மடவார்தமதுமாமியரை
நேசமுறப்போய்த்தொழுதுமுதனெறியான்மடவார்தமக்கிறைஞ்சிப்
பாசம்பிரியாமனத்தோடுமிருந்தார்படர்ந்துபற்குனனும்
பேசுந்தரத்தின்றவர்க்கிதவுபெயர்த்தான்மகிழ்விற்பெரிதுறவே. (௯௫)

அந்தக்குமரனுடன்மனைசென்றளித்தவிடுதிதனிலடைந்தான்
முந்தத்தனையனுடன்வந்தோர்முடிவேந்தர்களோடினிதிருந்தார்
சந்தச்சிலையான்றிருமாலுந்தானுமோர்பாங்கரினிருந்தார்
வந்தித்தியற்றும்பெருவேள்விமுடிக்குமாறும்வகுத்துரைப்பாம். (௯௬)

நாற்காலிருகாற்சலசரங்கண்முதலாவுரைக்குநான்மறையி
னூற்பாலாயமுறையாகநவலுமுயிர்கண்முந்நூறு
காற்பார்விரதக்கருத்தினர்கள்கரைத்தவண்ணங்கொணர்ந்தளித்தார்
வேற்பாலரசர்வியந்திருப்பக்கொணர்ந்தார்சமிதைவிதிமுறையே. (௯௭)

விளங்கும்வேதிசுதைதிற்றிவெண்முத்துடனேமணிபரப்பிக்
களங்கில்சொன்னகலசங்கள்கவினநிறுவிமுத்தேவர்
வளங்கொளுருவத்துடன்மணியும்பொன்னுமந்தாகினிப்புனலுந்
துளங்கநிரைத்துமாவிலைமேற்புனைந்தேயிளநீர்சூட்டியபின். (௯௮)

அனையகலசம்பதினாறுமருமாமறையின்படிநிறுவி
வினைவல்வேதிகையைக்கருடன்வெள்ளேற்றுருவில்விளங்குவித்துப்
புனைமாமலரினலங்கலொடுபுதுமாமணித்தொங்கலும்புதுக்கித்
தனைநேரில்லாவியாதனொடுதவமாமுனிவர்சூழ்ந்திருந்தார். (௯௯)

மறையாகமங்கள்கடலேழுமதித்தாலென்னவானதிர
நிறையோசைகடந்திடக்கனல்கண்மூன்றும்வடவைநிகர்த்தெழும்பக்
குறைவில்சொர்ன்னமயமாயும்குலாவிமணியின்மயமாயு
மறையும்பலபத்திரமொளிரயாகசாலையவிர்ந்தனவே. (௧௦௦)

நற்றூமறையோனிவனென்னும்ஞானவியாதனருகடைந்து
பொற்றேர்வேந்தரடிதொழுதுமப்புனிதவேந்தைமுகநோக்கி
யுற்றூதரித்ததினிவேள்விதொடங்குஞான்றின்றெனவுகந்து
கற்றூர்கற்றகலையனைத்துங்கன்னத்துறுவோனெழுந்தானே. (௧௦௧)

நன்னீர்படிந்துதூயகலைநாட்டியதற்காங்கலனணிந்து
பொன்னீர்மையிருடுருபதன்றன்புதல்வியுடன்சாலையிற்குறுகித்
தன்னீர்மைகள்சற்றகலாததவமாமுனிவர்தாளிறைஞ்சி
யென்னீர்மையுந்தேர்ந்தவனிருந்தானிட்டபீடமிசையம்மா. (௧0௨)

தம்பிமார்கள்குற்றேவறராயாதவர்கள்புறங்காப்ப
வும்பர்பெருமான்கருணையொடுமுகந்துநோக்கத்தவுமியனுங்
கும்பமுனியும்வியாதனும்பாக்கியவற்கலருங்குலமுனிவர்
பம்புகுழுவுமியற்றுவித்தபடியேவேள்விதொடங்கினரால். (௧0௩)

நாளோரேழுமிவ்வண்ணநடத்தவிமன்புறம்போந்து
வேளோடுவமைபுகல்சதுரன்விளம்புகின்றான்மேதினியோர்
கோளோர்பிறிதுமுன்னுமல்வேண்டும்பொருள்கைக்கொள்கவென
வாளோடொளிர்ந்தகரநீட்டிவருந்தானெவருமகிழ்வோங்க. (௧0௪)

கரிதேர்பரிகள்குடைகவரிகலன்மாமுடிகணவமணிகள்
சரிகூறரியபொற்கலைகடனிவான்படைகள்பாத்திரங்கள்
புரியும்பசும்பொன்பசுநிரைகள்பூமிகள்கர்களுடனைத்து
மரிதேகோடலலதளித்தலறவுமெளிதாயமைந்தனவால். (௧0௫)

என்னகருமமெவர்குறித்தாரேதேதாசையுறலானு
ரன்னகருமமவர்பெற்றாரேபெருதாரவனிமிசை
சொன்னமாரிகளையாருஞ்சொரியுமாரிகணையாரு
முன்னிமருந்துக்கென்றுலுங்கிடையாவிந்தவுலகத்தில். (௧0௬)

அளகைநகரிடைத்தேனும்வறியர்சிலருண்டறன்றனையன்
புளகமுறுவேள்வியிலெவரேபூண்டோர்வறுமைபூணுடை
வளமைகரிதேர்பரிமுடிகண்மானம்பெறலாலவர்தம்பி
யிளகுமனிதர்பொலிவடைந்தார்முனிவர்தவிரயாவருமே. (௧0௭)

சிந்துகுறள்பங்கெனுஞ்சிரர்செவிடாந்தகருமாமுதல
வந்தோர்பலரும்வாகனமுமணியும்பொன்னும்பெற்றுயர்ந்தா
ரந்தமகத்தில்வாராதவரையடைந்ததன்றிமிடிவந்துச்
சந்தமுறக்கண்டவரரியதிருவிற்சார்ந்தார்தாரணியோர். (௧0௮)

இன்னபண்பால்வெருகோடிசனங்கண்முகந்துங்குறைவின்றிப்
பொன்னசலமும்பல்பொருளும்பொலிவிற்குறைபாதாயினவான்
மன்னுமேழுபுனன்முகந்தேயுலகினிலுறத்தும்வாரிதிநீர்
பின்னுமொலிரும்படிபாயதென்னவுணர்ந்துபேசுவதே. (௧0௯)

வேறு

கந்தருவர்வீணைபொலிவிஞ்சையர்கள்கான
மந்தணர்கள்வேதவொலிபால்வலமடங்க
முந்துமறையின்படிமுடித்தமரரார்க்குந்
தந்தனர்கணல்லவிகள்சத்தியர்தயங்கி. (௧௧0)

ஏருடையசெங்கமலவாவியிடமெய்து
நீருடையதூயவனநீடுகனைமென்னப்
பாருடையவன்றனதுவேள்வியெதிர்பற்றி
தாருடையவானவர்விமானநிரைசார்தல். (௧௧௧)

மாமலரலர்ந்தமதுவாதரவுமல்கக்
காமுறவருங்களியளிக்கணமிதென்ன
நாமமுறுநான்மறைகொணர்ந்திடலுநண்ணி
தூமவவியுண்டனர்சுரந்தருள்செய்வானோர். (௧௧௨)

தேவருமவர்க்கிறைவனுந்திருவில்வீசு
மூவருமகிழ்ந்தவிமுறைப்படியருந்த
மேவரவளித்தபினர்வேதமுனிவோர்கள்
தாவரவியற்றுமுறையூபவிதிதந்தார். (௧௧௩)

காதிரமதாறுகலைவில்லுவமதாறு
மீதுறுபலாசமதிலாறுவிறன்மிக்க
சாதலறுதேவமதிதாரமதிரண்டு
மேதில்செலுமொன்றுமெழுமூன்றுவிதியூபம். (௧௧௪)

ஏற்றமுமிரண்டுபஃதொன்றெனவிசைக்கும்
போற்றியசானுடையபொற்பினிலமைத்தே
நாற்றிசையுமேமமணிநற்றறிமுந்நூலுஞ்
சாற்றுமுறைதந்தனர்களூபமதுதக்கோர். (௧௧௫)

வேறு.

முறைப்படியூபந்தோறுமாருயிர்பூட்டிமுன்னர்
மறைப்படியிடையில்வேள்விவாசியைநிறுவிக்கற்றோர்
துறைப்படிசடங்குமுற்றித்தொலைத்துறுப்பவிகணேர்ந்தார்
நிறைக்குரியவராயுள்ளநிமலவானவர்களம்மா. (௧௧௬)

எடுத்தநல்லவையவங்கடொறுந்தொறுமிரந்துமேதை
மடுத்தமுதினுஞ்சுவைக்கவானவர்க்களித்தபின்னர்
தொடுத்தமாமுனிவராருந்துண்ணெனவார்த்தெழுந்து
முடித்தனர்கனலையாசிமொழிந்தனர்முறையான்மாதோ. (௧௧௭)

வணங்கினனிளைஞரோடுமாதொடுமுகுந்தனோடு
மிணங்கினனிறைவன்செம்பொன்வரைகளுமணியுமேனை
யணங்கறுபசுவுநீருமளித்தனன்முனிவரார்க்குங்
கணங்கொள்வேதியர்க்கும்வான்றெக்கணைசதமடங்கென்றோத. (௧௧௮)

விருப்புடையார்கள்பெற்றநிதியெலாம்விறலிற்கொண்டா
ரொருப்படராற்றதெல்லாமுறுநர்பாலுகந்தளித்தார்
கருப்படாமேனிமாயன்கண்ணுதலிவனேயென்னுந்
திருப்படாமுனிதன்பாகங்குந்தியாந்தெரிவைக்கீந்தார். (௧௧௯)

அன்னவளதனைமீளவாதுலர்க்களித்தாளாண்டு
சொன்னமாமயமாச்செய்தபாத்திரஞ்சுருவையோடு
மன்னியசாலையாதிமறையவர்க்களித்திருந்தான்
றன்னிகரிலாதகொற்றத்தவிசின்மேற்றருமனம்மா. (௧௨௦)

நாள்பலவெடுத்துந்தீராதாய்நவநிதியும்நல்கி
வாள்வலியரசர்க்கெல்லாமாமணிமுடிகள்பூண்கள்
தாள்வலியானைவாசிதேர்நிரைபலவுந்தந்தான்
றோள்வலியளவுங்கொண்டாரவரொடுந்துன்னிவந்தோர். (௧௨௧)

கானத்தாலிசையாலுள்ளக்கருத்தினாலன்னமாகித்
தானத்தான்மறையால்வேள்விச்சடங்கினான்முனிவர்சார்ந்த
ஞானத்தாலுலகிலுள்ளார்வறுமையைநலிந்தபண்பால்
வானத்தார்மகிழ்ந்தேயாசிவழங்கினன்மலர்பொழிந்தார். (௧௨௨)

தெள்ளமுதனையபாடற்பாவலர்சிறந்தபின்னர்
தள்ளருங்குணத்தின்மிக்கதாபதர்சதுர்வேதத்தோர்
வள்ளலுக்காசிகூறிமகிழ்ந்தவரிடங்கள்சார்ந்தார்
கள்ளவிழ்கோதையோடுங்காவலனுறையுள்புக்கான். (௧௨௩)

நெறிப்படவந்தமன்னர்நேயமுமகிழ்வுந்தாங்கிச்
சிறப்புடனிடங்கள்சார்ந்தார்செய்தவிவ்வேள்விபோலக்
குறிப்பரிதென்றுமென்றுகுலமுனிவரர்கள்சென்றார்
றிறப்படையரசேயென்றுசெப்பினன்முனிவரேறு. (௧௨௪)

கேழ்கிளர்வைவேற்காளைகேட்டுகந்தறனின்மைந்தன்
சூழ்வறப்புரிந்தவேள்விதனக்கிணையுலகிற்கூற
யூழ்வினையுருத்தோர்க்கேனுமுணருதலரிதோவென்ன
வாழ்வுளாய்கேட்டியென்னமாதவன்வகுப்பதானான். (௧௨௫)

மாமகமுடித்தபின்னர்மாமுனிவரர்களோடுங்
காமருமுதிட்டிரப்பேர்க்காவலனவையில்வைக
வேமமோர்பாதியாகவியற்கையோர்பாதியாக
வாமகல்லுடலத்தோடோர்நகுலம்வந்தடுத்ததாலோ. (௧௨௬)

ஆங்கொருபிலத்தினூடங்குரித்தருந்தவத்தினோரைப்
பாங்குறநோக்கிநின்றுபயிற்றியமகத்தின்வண்மை
பூங்குலமுனிவிர்யானோபுகழ்கிலன்பெரிதாக்கொள்ளே
வீங்கிதேபெற்றியென்றதிருடியரிதனைச்சொன்னார். (௧௨௭)

எங்களாற்பிழையோகூறுமிருக்கினாற்பிழையோவேந்தர்
தங்களாற்பிழையோவென்னேசாற்றுதிதெரியவென்ன
வங்கவர்க்கதனாலன்றோர்காதைகேட்டருள்கவென்னச்
சங்கையற்றினிமையோடுஞ்சாற்றிடத்தொடங்கிற்றன்றே. (௧௨௮)

வேள்விச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௨௦.

நகுலோபாக்கியானசருக்கம்.

காரார்கொன்றைத்தன்சடையானுந்தலமீன்ற
நீரார்போதிற்கண்வளர்வானும்நிகழ்கின்ற
சீரார்பற்பறேவருமானோன்றிருமேனிக்
காரார்வண்ணமென்பவர்பிறவியகல்வாரே. (௧)

சீர்பெறுகல்வியாதனைநேராஞ்செயல்வல்லோன்
பார்புகழ்வெற்றிப்பாண்டுகுலத்தின்பயனேபோ
ரார்தரவங்ஙனம்வைகியதூயோரருளோங்க
வேர்பெறவோதும்நகுலமுரைத்தவியல்பெல்லாம். (௨)

வேறு.

பூவெலாம்புகழநிற்கும்புனிதநற்றலங்கடம்மிற்
பாவெலாம்புகழுந்தூயபவித்திரமென்றமேலோர்
தாவெலாமகனுளாயதவக்குருக்கேத்திரத்தி
லோவிலாச்சத்துப்பிரத்தனெனுமுனியொருவனுண்டால். (௩)

அன்னவன்சூழல்வைகியருந்ததிக்கற்பினாளும்
பன்னியுமகனுமாகநால்வரும்பரிவினாலே
மன்னினர்சிலநாளந்தமறைமுறையொழுக்கம்பூண்டு
தன்னிகர்முனிவராரும்புகழ்ந்திடத்தவறில்லாமல். (௪)

வேறு.

வாழுநாள்கடனின்மாமழைபொய்த்தே
யாழுறுந்துயரினாருயிரெல்லாந்
தாழுநாளுமுயர்தானதவங்கள்
வீழுநாளுமெதிர்மேவியதன்றே. (௫)

புற்றலைப்பசுமையும்புலனின்றிக்
கொற்றமுற்றகடலுங்குறைவெய்த
நற்றவர்க்குணவுநாடரிதாகி
முற்றுமாருயிர்முசுப்புறுநாளில். (௬)

அந்தமாமுனியரும்பசியாலே
நொந்துநாடொறுநுடங்கிடையோடு
மைந்தனோடுமயிலோடும்வனத்திற்
கந்தமூலமனுகாநிலைகண்டான். (௭)

சாற்றுகின்றபசியாற்றடுமாறி
யாற்றுநீருமறவந்தணர்கோமான்
றோற்றமின்றியுலர்தொக்குடையோனாய்
நீற்றினோனடிநினைந்துநடந்தான். (௮)

நால்வரும்புவியினண்ணுறுபாங்கர்
மேல்வருஞ்செயல்விளங்கியதென்னப்
பால்வருந்தனிநெல்பார்மிசைகண்டார்
சால்வருங்கதையர்சார்ந்துசெறித்தார். (௯)

ஐநெல்கண்டலைகளொன்றுடனொன்றாய்
ஞானநன்மனிதர்சேர்த்துமடங்கித்
தானமெய்தியவைதண்டுலமாக்கி
வானியங்குபொரிமாவதுசெய்தார். (௧௦)

அந்தமாவுமருநீருமுளோராய்
வந்துசந்தைமுறைவான்கடனெல்லாந்
தந்தபின்னராதுதம்பசிதீர்ப்பான்
சிந்தைசெய்தனர்செகம்புகழ்சீரார். (௧௧)

அனையகாலைதனிலந்தணனங்கோர்
வினையகன்றவிடலான்முனமேவி
நினைவரும்பசிநிரம்பியதென்னப்
புனையும்வேறியனுளத்தருள்பூத்தான். (௧௨)

எந்தைசெய்ததவமென்குலமேலோர்
தந்தவர்ன்றவமளப்பிலதாமால்
வந்ததேயமையும்வம்மினெனக்கொண்
டந்தணனன்மனையன்பொடுமுய்த்தான். (௧௩)

பதங்கழீஇப்புனற்பாவனமாக
மதங்கொளாவுடலகத்துறமாந்தி
யிதங்கொண்மேலுமனையெங்குமிறைத்தே
சதங்கொளும்புகழினன்மனைசார்ந்து. (௧௪)

வைத்திருந்தபொரிமாவினைநான்கு
பத்தியிற்பகுதிசெய்துபலர்க்கு
முத்திறந்தனையளித்துமுனிக்கென்
றுத்தமன்றனதுகூறுகொடுத்தான். (௧௫)

அந்தமாமுனியருந்தியபின்னர்ச்
சிந்தைவாட்டமொடுதீப்பசிதீரா
துந்தவேகனலுயிர்ப்பொடிருந்தா
னிந்தமாமுனியிடர்க்கடலாழ்ந்தான். (௧௬)

வாசமாமுனிவரோதையனெஞ்சி
லாசுணர்ந்தவனகத்திறனில்லாண்
மாசிலாதவவெனக்கெனவைத்த
போசனந்தருவனல்குதிபொற்பால். (௧௭)

வருமகாமுனிபசிக்குணவாகத்
தருதிநீகுறைவுசாரவளித்தா
லிருமையுங்கெடுமிதென்னைகொலென்றே
யொருமடந்தைசொலமாமுனியோதும். (௧௮)

விருகமும்பறவையும்புவிமேலா
யுருகியேயுணவுகந்துகொளார்ந்தே
யருகமானதனியன்புளசுற்றம்
பருகநல்கும்வகைபார்த்தறியாயோ. (கசு)

மார்க்கமானமனையான்மனமையற்
றீர்க்கலாதவர்கடீநரகெய்திப்
போர்ப்பர்துன்பமவனுங்கதிபொய்த்தென்
ஞர்க்குநூல்கள்செவியார்த்தறியாயோ. (௨௦)

பாம்பினாலிடர்படுஞ்சசியேபோற்
கூம்பிநீபசிகொடுங்கனலாழ்ந்தாய்
தேப்பினின்றளர்வுதீர்க்கலனானேன்
றேம்பலன்றுனதுபாகமுமேற்றல். (௨௧)

ஐயமுய்க்குமிடையஞ்சொலணங்கே
வெய்யதீக்கருமமென்றுவிளம்ப
வுய்கைகற்றவளுகந்துரியோன்றன்
மையலற்றிடவகுத்துரைசெய்தாள். (௨௨)

வேறு.

சுற்றமுங்கிளையுநற்றுணையுமூற்றமும்
பெற்றதாய்தந்தையுங்குருவும்பேணலாங்
கொற்றவான்கடவுளுமுயிருங்கொண்கனே
மற்றனியுரைப்பதென்மடநல்லார்க்கெலாம். (௨௩)

மணந்தவனினைவினுக்குடன்படாள்வழி
தணந்தவளவளன்றோநரகசாதகி
யுணர்ந்துநீசெயுமுறையுகுத்துநீங்குட
லணங்கறப்பரிப்பதிலாவதென்கொலோ. (௨௪)

ஆவதுண்டென்னினுமதிதிக்கீந்துநீ
மேவருபசியுடனிருப்பவேறுபட்
டேவமற்றுண்டிகொண்டிருப்பனேகொலாந்
தேவர்நாட்டமுதமேயெனினுஞ்செம்மையோய். (௨௫)

தருதிநீதடையறத்தந்துமாமுனி
பொருபசியகற்றெனப்புகன்றுநல்கலு
மருமையிவ்வனிதைகற்பாற்றுந்தன்மையென்
றிருமையுந்தெரிமுனியேந்திநல்கினான். (௨௬)

ஞானவேதியன்பசிநலிவுநோக்கியே
வானுயர்சிந்தையான்வழங்கிமாற்றுக
வீனமாம்பசியையென்றிறைஞ்சவாங்கவன்
றானுகர்ந்தனன்மகிழ்சார்ந்துவைகியே. (௨௭)

அளித்தவைநுகர்ந்துமவ்வந்தணாளனுங்
களித்திலன்பெரும்பசிகலப்பவைகலுஞ்
சுளித்துவாண்முகமலர்துயரிலாழ்ந்தனன்
றெளித்தவனருமறைசெப்புநாவினான். (௨௮)

தந்தைதன்மனத்துயர்தனயன்றேர்ந்துழி
வந்தடிவணங்கியிம்மறைவலாளனுக்
கெந்தையென்பாகமுயிவலென்னவே
சிந்தைசெய்தவனிதுசெப்பன்மேயினான். (௨௯)

ஈன்றமைந்தன்பசிக்கிரங்கியையநீ
தோன்றிநாளாயினுஞ்சுதனளித்தவர்க்
கேன்றபாலகனெனுமியற்கையாய்ந்தவன்
சான்றவர்புகல்வராற்சால்பின்மிக்குளாய். (௩௦)

பாலருக்கதிகமாம்பசிபொறுக்கலை
யேலநீதருவதற்கிசைகிலேனெனச்
சாலவுமுரைத்ததன்றந்தைக்கோதினான்
ஞாலமுள்ளளவுயர்புகழைநாட்டுவோன். (௩௧)

அத்தனானவன்மனமறிந்துஞற்றிடாப்
புத்திரனுடற்புவிபொறுக்குமேபொறை
யுத்ததானங்களுக்குரியனானயான்
சத்தளித்திடுவதற்கென்கொலாழ்வதே. (௩௨)

நிரந்தரந்துய்த்துநாமின்றுநீக்கிடி
லரந்தையென்றேனுவுணவருளினாளையூ
னுரம்பெறக்காணுதுமொருவனெய்துமோ
வரந்தனித்தருதியென்மாசுதீரவே. (௩௩)

என்றவனீகலுமீன்றமாமுனி
குன்றெனவிருபுயமொளிரக்கொண்டுவந்
தன்றவர்க்களித்தனனவனருந்தியே
துன்றரும்பசியொடுதோற்றங்காட்டினான். (௩௪)

மீளவுந்திருமுனிதுயரமீச்செல
வாளலர்மாமுகங்கோடவைகலுங்
காளநல்லிருட்குழன்மைந்தன்காதலி
தாளிணைதொழுதிதுசாற்றினாளரோ. (௩௫)

முன்னையபவத்திலாமுற்றுநல்வினை
பன்னியவுருவமாய்ப்படர்ந்தவேதியன்
றன்னரும்பசியினைத்தவிர்த்திதந்தசத்
தென்னுடைப்பகுதியுமீந்தென்றேத்தினாள். (௩௬)

சிறிய நுண்மருங்குலிற்றேய்க்கதுன்னுடன்
மறுவிலாய்நீபசிமறுக்கவல்லையோ
பெறுவதுஞ்சிறிதுநீபெயர்ந்துநல்கினு
மறனலகோடலென்றனகனேதினன். (௩௭)

மாயவிவ்வுடல்பரித்திருக்குமாறெலாந்
தூயநின்வழிபடுதொழிற்கன்றுங்கொலோ
நேயமெண்டிசைபடநிரப்பிநல்கவென்
றுயவளுதவினளவடன்பாகமே. (௩௮)

தந்தனனதனையுந்தருக்கிவேதிய
னந்தநல்லமுதினுமருஞ்சுவைப்பட
முந்துறநுகர்ந்துதன்முசிப்புநீங்கினன்
மந்திரவுருவெனவந்தமாமுனி. (௩௯)

வளர்ந்துதோண்முகமலர்மலரவந்தவ
னளந்தவாய்கரமலர்ப்பூசியன்பொடுந்
தளர்ந்தவென்பசியினைத்தணித்துளீரினிக்
கிளர்ந்ததேயறமெனக்கேண்மைகூறியே. (௪0)

மறைந்தனன்வேதியன்வானின்வானவ
ருறைந்தனரந்தரத்தோதைவிஞ்சிடச்
சிறந்ததுமலர்மழைதேவதுந்துமி
பறைந்ததுதிசையெலாஞ்செவிடுபாயவே. (௪௧)

ஆர்த்ததுமாமறையார்த்ததேழ்முகி
லார்த்ததுநல்லறமார்த்ததாழ்கட
லார்த்ததாவுயிரெலாமரியவெண்டிசை
போர்த்ததுமுனிவரர்புகலுமாசியே. (௪௨)

வேறு.

அனையகாலையிற்றருமதெய்வதமெதிராகி
மனையின்மாண்புடைமாமுனியெதிர்நின்றுவகுக்கும்
வினையகற்றியவிமலநின்விபினம்வந்தடைந்த
புனையுமாமுனியானென்றுபுகன்றதுமீட்டும். (௪௩)

பாம்புமேற்படுபாருளோர்பயன்பெறவிருந்தை
யோம்புமாறுணர்த்தினையெவருனக்கிணையாவோ
ரேம்பலோடுவானவரெலாமெய்தினர்விரிஞ்சி
தேம்பிலாவுலகெய்துதிதேசுடல்சிறந்து. (௪௪)

அபையங்காட்டிநல்விமானமுமளித்தமைத்தனது
சபையினிற்கொணர்ந்திடப்பணித்தனன்பிதாமகனு
முபையமாதருமுன்னுடைமகவுடனீயும்
வபைகொள்வேள்விமாமறையவன்காணவேவம்மின். (௪௫)

என்றுகூறுமுனெய்தியவிமானமுமிமையோர்
துன்றினின்றனர்தொழுதருண்மாமுனிதுயரம்
வென்றமேனியும்புளகெழுசிந்தையுமேவ
வன்றுநால்வருமருமணிவிமானமீதானார். (௪௬)

எடுகொண்டதாரம்பையர்கவரிகளிரட்டப்
பிடுதங்குறவிஞ்சையர்கானங்கள்பெருக்க
விடுகண்டவர்திருவுளம்வியந்திடச்சென்றார்
தோடுதங்குநான்முகனெதிர்தூயர்நால்வருமே. (௪௭)

அன்னவாறுகண்டன்னமூர்பவனெதிரணுகி
யன்னதானநீரளித்ததேயாமெனத்தழுவ
வன்னபோதவரகங்குழைந்தவனடிதொழுதே
யன்னபேரொளிமண்டபத்தரியணைப்பொலிந்தார். (௪௮)

கண்டிருந்தியானதிதிகாட்டியகாட்கமலத்
தண்டியான்சிரத்தலைந்தனனுண்டொருபாதி
யெண்டிசாமுகமுணர்தரவேமமாகியதாற்
பண்டைவான்றலையற்புதமென்கொலோபகர்தல். (௪௯)

அன்றுதொட்டியான்பாதியும்பொனுமென்றே
சென்றுநோக்குவன்றிசைதொறுமகங்களிற்செறிந்து
மன்றன்மாலையான்குறையறுவாசிமாமகத்துக்
கின்றடுத்தனனெய்தியதிலையஃதிதனால். (௫௦)

அந்தமாமுனிபூநெல்கொண்டளித்ததற்கிடா
வெந்தநற்கருமங்களுமெனக்கிசைகிலவென்
றிந்தமாமுனிவரரெலாந்தனுக்குறவிசைத்தே
வந்தவான்பிலங்கரந்ததுநகுலமெய்மறைந்தே. (௫௧)

அனையதன்மைகேட்டுதிட்டிரனுங்கதற்கொல்கி
வினையகன்றவர்செய்கைக்கெம்போல்பவர்வேள்வி
புனையநேருறுமோவெனப்புகன்றனன்பொய்யின்
முனைவர்போயினர்முன்பனைவாழ்த்தியேமுறையால். (௫௨)

ஆங்கணேங்கியவாறுகேட்டனையறன்மைந்தன்
றுங்குவேள்விபோலொருவரும்பயின்றிலர்தக்கோ
யாங்கவ்வேள்வியோரந்தணனதிதிபாலளித்த
பாங்கர்நேரிலையாயதென்றுரைறப்பான்மை. (௫௩)

தூலருக்குமிரண்டுளதூலநல்வினைகள்
காலமோர்ந்தருக்குமவறங்கண்டவர்பெரியோர்
பாலினேர்படாதெனமுனிபகர்ந்திடவரசன்
சிலவேதியன்றனக்கிதுபுகன்றனன்சிறப்பால். (௫௪)

வந்துதோற்றியும்வாளுருக்கரந்துமிவ்வகையாற்
றந்தசொல்லுடைநகுலத்தின்றன்மையாதென்ன
வந்தணாளனுமாயவனுணர்ந்திடவறைந்தான்
முந்தையாறெலாமுறைவழாதருளொடுமுன்னி. (௫௫)

நாற்றிசைப்படுபுவியெலாநலமுறத்தொழுது
போற்றிசெய்சமதக்கினிப்பெயருடைப்புனிதன்
சாற்றுதென்புலத்தவர்க்குறுஞ்சிரார்த்தமேதருமா
றூற்றிவான்பசுப்பாற்கவர்ந்தோரிடையமைத்தான். (௫௬)

பாண்டனூதனமோமத்தேனுவினுடைத்தீம்பான்
மாண்டமாமுனியணங்குறக்கவர்ந்துவைத்ததனைத்
தீண்டியேயருங்குரோதமாந்தெய்வதஞ்சாய்ப்ப
நீண்டவேணியானோக்கினனுயிர்ப்பினைநீட்டி. (௫௭)

மீளத்தோற்றியவெஞ்சினமங்கனங்கரந்து
கோளத்தேநிகரிலாதவன்குறைந்திரந்திடலும்
நாளத்தாமரையோனிகர்ஞானவாரிதியைத்
தூளத்தாமுடற்றெய்வதமெதிர்ந்திதுசொல்லும். (௫௮)

பற்றிலாதநின்றிருவுளம்பாலினுக்காகக்
குற்றமேவலுங்குறைதலுங்காணுமாகுருகி
யுற்றபாலினைக்கவிழ்த்தனனுனதுளமுணர்ந்தே
னிற்றையென்பிழைபொறுத்தியென்றெடுத்துரைத்ததுவே. (௫௯)

மாசிலாதவன்வானவன்மாமுகநோக்கி
யாசியற்றவுமறமுறையியற்றவுமறிவாற்
பேசிமுற்றுமோபேரறிவுடையவர்பெருமான்
பாசநல்லருட்செயலதாப்பார்ப்பர்யாவினையும். (௬௦)

அன்னபண்புடைத்தன்றியுந்தென்புலத்தவர்க்கா
மன்னுதூயபால்வைத்தனனீயதைமண்ணி
லுன்னிநீக்கினையாங்கவர்க்குறுகணேயன்றி
யென்னைநீயிவணென்செய்தாயரும்பிழையெதிர்ந்து. (௬௧)

செறுத்ததீவினைநல்வினைசெய்தவர்தம்மை
வெறுத்தொறுக்கவும்வியக்கவுமேலவரிருந்தார்
கறுத்ததுமிலைக்கரைத்தநின்னின்சொலாற்கருதிப்
பொறுத்ததுமிலைப்போதிநீபுகலிடத்தென்றான். (௬௨)

கேட்டுவானவனகன்றனன்கிளர்முனியிருந்தான்
மீட்டுஞ்சூழலிற்றென்புலத்தவரெதிர்மேவி
நீட்டுறுஞ்சினநிரம்பிடநினக்கபராதங்
காட்டுவானெதிர்கறுத்திடாதிருப்பதுங்கடனே. (௬௩)

கண்ணகன்றமாநிலமிசைக்கருமங்கள்பலவி
னெண்ணுகாரியங்குரவர்காரியமலாதேதோ
விண்ணவன்றனைவெறுத்திலைநகுலமாய்மேவி
யுண்ணெகிழ்ந்திடத்திரிகவென்றுரைத்தனர்சாபம். (௬௪)

அனையவர்க்கிருதாடொழுதையயான்செய்த
வினையிருளிவையடுத்ததென்மேலருள்செயவென்
றினையபான்மைகளுரைத்திடவெதிர்ந்தவர்கருணை
புனைவிழிக்கடைபுரட்டியேமீளவும்புகல்வார். (௬௫)

எய்துசிற்றுடற்றாங்கிநீதிரியுநாளெதிர்ந்து
பொய்துவக்கறவினையிலாப்புரவிநன்மகத்தைச்
செய்துமுற்றுமோர்சகபதிசெவிப்படச்செறித்து
மெய்துணைப்படுமுனிவரராற்றியவிரதம். (௬௬)

மாமறைப்படிதவம்புரிந்தருச்சனைவகுத்துக்
காமுறச்சிலநாளெலாங்கழித்தபின்கருதி
நீமுனிக்கணம்புடைபெயர்ந்திடவலிநேர்ந்த
கோமுனிக்கிதுபுகலவேகொள்வைமுன்படிவம். (௬௭)

ஆயதன்மையென்றவர்குறித்தகன்றனரிப்பாற்
றூயவேதியனகுலமாந்தொக்கினைத்தாங்கி
நேயமாம்பரதத்தினிலருணமாநதிநீர்
பாயுநாட்டினிற்றவம்புரிந்திருந்தனன்பலநாள். (௬௮)

தாபித்தான்சிவலிங்கமுமருச்சனைதந்தான்
கோபித்தாங்கவரிட்டசாபக்கொடுங்கனலைத்
தீபத்தாலிருட்டீர்த்தல்போற்றீர்த்தருந்திறலோன்
சோபித்தானலனுத்தரமெய்தினன்றொடங்கி. (௬௯)

கேடிலாக்குருக்கேத்திரத்தெல்லையைக்கிட்டி
நாடிமீண்டுபோய்சானவிநதிக்கரைநண்ணி
வீடிலாப்புகழ்வேந்துடைவேள்வியைவியந்து
பாடிநான்முனிவரர்புகழ்பற்றிலாவுளத்தான். (௭௦)

விட்டுநீங்கிமுன்மெய்த்தவப்படிவமுமேவி
யட்டசித்தியுமடைந்திறவாமுனியானான்
றெட்டபைங்கழலாயென்றுசொற்றனன்றூயோன்
மட்டிலாப்பெரும்புகழினான்மீளவும்வகுப்பான். (௭௧)

தென்புலத்தவர்சபித்தஞான்றரசர்செய்வேள்வி
மன்புலத்திடைமுனிவர்சீர்வழுத்தவென்றுரைத்த
தென்புலப்படவுரைக்குதியுள்ளவாறென்றான்
மின்புலப்படுவேலினான்மேலவன்புகல்வான். (௭௨)

நிரைத்தவாணகைநிலவெழுமாமுனிநினக்கின்
றுரைத்திடாதனவுளகொலோரகசியமுளவோன்
றரத்தவாள்விழியன்னலேகேட்டியென்றறைந்தான்
விரித்தவாகமமுறையெலாந்தெரிந்துளமேலோன். (எ௩)

தாமமார்பினுயமரர்கடலைவனோர்தலத்தி
லேமமாமணிச்சாலைசெய்தெழின்மகமுடிப்பான்
வாமவானவர்பலரொடுமுனிவரரோடு
நாமவேலினுனடத்தினன்வேள்விபன்னாள்கள். (எ௪)

ஒருதினத்தினிற்பற்பலபசுக்கவர்ந்துறலுஞ்
சுருதிகற்றநன்முனிவரர்துண்ணெனவிரங்கிப்
பெருமிதத்தினேயுயிர்க்கொலைசூழ்தலிற்பெரிதாத்
தருமியற்கையுண்டோதுதங்கேண்மினேதருக்கால். (எ௫)

வேறு.

ஆண்டுமூன்றுசென்றிடுமுயர்சாலியாலவிகனேர்ந்திடிலையா
வேண்டுமாறெலாமேவுமிக்கொடுந்தொழில்விலக்குதனலனுமாற்
பூண்டுறுங்கிரேதாயுகம்புகுவதுநலனன்றுபுனிதருக்கென்று
மீண்டுமோதினர்விண்ணவர்மறுத்தனர்வேதியருரைதன்னை. (எ௬)

அரியைநோக்கியிவ்வருமகமியற்றுதற்காரணங்களிற்கூறுங்
கரியைநோக்குதிகாதுதநீதவைகழித்தியென்றவர்கூறப்
பெரியர்வாய்மையைப்பிழைபடமறைமுறைபேசிவாதிடவாண்டுத்
தெரியுமாற்றல்வல்லானுபச்சரனிடைசென்றுசெப்பினர்மாதோ. (எஎ)

அனையகாவலனமரர்கோன்பக்கமாமறிவுசாய்த்துயிர்காதி
வினையினுன்மகமுற்றுதலுரித்தெனவிளம்பலுமீண்டெய்தி
நினையுமாமகமுடித்தனராங்கவனிரையம்வீழ்ந்தனன்மாதோ
புனையுபச்சரநாமதேயத்தினனடுவுரைபொய்ப்பட்டே. (எஅ)

சுருதிகூறுமிவ்விரண்டருநெறியையுந்துன்னினோர்க்குடன்பட்டுக்
கருதுவண்ணமேயமைவர்முக்கடவுளர்ககனவாணர்கள்சிந்தை
தருவதாருயிர்காதுதன்முனிவரர்தவிருதலுளமாமாற்
பருதிவேலவகேட்டியிவ்வண்ணமேகிடந்ததுபலவுன்று. (எகூ)

உரியநற்குறுமுனிவரன்பொதியவெற்பூடொருமகமாற்றப்
பெரியசாலைசெய்துலகுளமுனிவரர்கணமெலாம்பெயர்ந்தெய்தி
யரியமாமுறைச்சடங்குசெய்வித்திடவாண்டுபன்னிரண்டென்றே
புரியுமம்மகந்தீக்கைகொண்டொழுகினன்புலவர்களதுதேர்ந்தார். (அ0)

நாமவேதியருயிரினைநலிந்திடார்நவையறுமூவாண்டிற்
சேமநெற்கொடுசெய்குவர்மகமெனச்சிந்தைசெய்திடுபோதிற்
காமவேளடுகண்ணுடைக்கடவுடன்னருள்கைக்கொண்ட
நேமமாமுனிக்குரைத்தனர்முன்னையநிகழ்வெலாமுனிவோர்கள். (அக)

வேறு.

அந்தமுனியாருயிரகற்றியவிதல்லேன்
கந்தமொடுமூலமுதலானகனிகாயோ
டிந்தனவுதானியமுமேற்பனகொணர்ந்தே
தந்திடுவனல்லவிமெவர்க்குமிதுசால்பே. (௮௨)

வானவர்கள்வந்துறுமினென்றுரைவழங்கத்
தானவர்மறுத்தனர்தவக்கடல்கொதித்தே
யூனமறமூவருமுகந்தவிபெறத்தந்
தேனையர்பெருவணமறுப்பதுசமென்னி. (௮௩)

அஞ்சொன்மடமங்கையொடுமந்தணனிருந்தே
வஞ்சமறவேமகமியற்றுதலும்வானோர்
சஞ்சலமுழந்துமழையைத்தனிவிலக்கி
யுஞ்சுபலநல்வளனொடுக்கினர்நிலத்தில். (௮௪)

ஏழுகடலொன்றெனவியங்குமுனிவோர்கட்
கூழுறுபெரும்பசியுலைத்திடவருந்தி
வாழுமுனிவர்க்கனுவகுத்தனர்வளங்க
டாழுமுறைமாமுனிநகைத்திதுதரித்தான். (௮௫)

உத்தரகுருத்தலமுகாதுவளனென்று
லத்திசையிருந்தபயன்யாவும்வருவிப்பன்
வித்தகர்பசிக்கனலவிப்பனெனவிண்ணோர்
முத்தனையடைந்திதுமொழிந்தனர்வணங்கி. (௮௬)

ஆழிகளைநக்கியெமதாற்றலைவளர்த்தாய்
பாழிவரையன்றுகெடவேதரைபடுத்தாய்
வாமுசுரரான்மெலிவுமாற்றியருள்செய்தா
யூழிதொறுமெங்களையுகாதுமுறைகாப்போய். (௮௭)

நீயருள்பிழைத்தெமைநினைத்துமுனிவாயேற்
றூயருள்பிழைத்தகுழவிக்கிணைசலிப்பான்
மாயுதுமெமைக்கருணைமன்னுதியெனச்சென்
றூயவர்துதிக்கமுனிவாறியருளானன். (௮௮)

எடுத்தகருமம்பிசகிவேறினியியற்றே
னடுத்தபடிகூறுமினளிப்பனருளென்னத்
தொடுத்தமகமுற்றியபின்னோன்மைமுறையாக
மடுக்கும்வகைசெய்கெனமகிழ்ந்தயனளித்தான். (௮௯)

இற்றபெருவாழ்வுமுனைதிர்ந்ததெனவோங்கி
நற்றவனையேத்திமழைநல்கும்வகைசெய்தே
குற்றமறநல்வளனொடுங்குறைதவிலாமன்
முற்றியவியுண்டனர்முறைப்படியில்வானோர். (௯௦)

எண்ணுமுறையாண்டுகளிரண்டினுடனொன்று
நண்ணியபல்பண்டமுகறுங்கனிகண்மூலம்
பண்ணுமிழுதுங்கொடுபகிர்ந்தவிமுடித்தான்
றுன்னெனமுன்னான்குவருடந்தொலைதல்செய்தே. (௬௧)

ஆங்கணுறுவானவருமாரியருமன்பாற்
ருங்களுறுசார்பிதொறுமேவினர்தவத்தோன்
றீங்கறவிருந்துபொதியத்திடைநிகழ்ந்தான்
பூங்கொடியொடும்புனிதர்சூழ்முறைபொருந்த. (௬௨)

இத்தகைநிகழ்ந்தசெயலிம்முறையினாலே
தத்துயிரழித்தவிதருங்கடமைதன்னி
னுத்தமமுயிர்க்கொலையிலாவுறுதியெல்லா
மத்தகைபுலப்படவுரைத்ததருளையா. (௬௩)

தென்புலமியங்கியுளதேவரதுதேற
மன்புலமடைந்துரையொழுங்கெனவிதித்தார்
மின்புலவுவேலொடுவிளங்குகரவேந்தே
யன்புறவுணர்ந்திடுநீயிச்செயலனைத்தும். (௬௪)

வேள்வியதுமூன்றுவகைவிண்ணவர்களுக்குத்
தாழ்வறவியற்றுமகமொன்றுதவிராம
னூழ்முறைபிதுர்க்கள்கடனொன்றுறுவிருந்தைக்
காழ்வழிபடும்பரிசுமூன்றுமிதுகண்டாய். (௬௫)

உத்தமமிரண்டுமுயிர்கொன்றுறுதியெய்தல்
வைத்ததுவிருந்தினைவழிப்படுசெயற்கு
மெத்தவுயிர்கோறலிலைமேம்படுநல்வேள்வி
வித்தகரெலாமிதனையேநனிவியந்தார். (௬௬)

அந்தமுறையாதெனிலடுத்தநகுலந்தான்
றந்தமுறையாவர்வழிபாடுகடரித்தார்
சிந்தைபரிசுத்தமுறுமேற்கதிகள்சேர்வர்
நந்தலிலர்சந்ததமுநன்மையுளராவார். (௬௭)

கருத்துடையவுச்சிபடகோலமணிமேவு
மருத்தனைமனித்தனெனவாரறையவல்லா
ரொருத்தனவனேயெனவுளங்கொடுபுரிந்தார்
திருத்தகுசிறப்புடையசெல்வமடைவாரே. (௬௮)

வேள்வியின்வருந்துமுறைகண்டனைவிருந்தைத்
தாழ்வறவியற்றெளிமைதன்னையுமுணர்ந்தாய்
காழ்வலியிதற்கலதுகைப்புகுதலுண்டோ
வூழ்வினைதுடைக்குநெறியீதெனவுரைத்தான். (௬௯)

கஞ்சமலர்வாள்விழிகளிற்கருணைபொங்க
வஞ்சமறுகற்புடைவபுட்டைதன்மணாளன்
சஞ்சலமொழிந்துரியதாமெனவியந்தான்
விஞ்சைவலதூயவர்விரும்பிமகிழ்தூங்க. (௱)

நாடுபடுமன்னருகர்க்குரியரான
தோடுறுகறுங்கெரியலாருமருடொக்கி
நீடுமறைவேதியர்நிரைத்துபலர்சூழ
மாடுறுவிலானருண்முனிக்கிதுவகுத்தான். (௧௦௧)

வேள்வியைமுடித்தபினர்வேந்தர்தொழுதாளான்
வாழ்வுறுசெயற்கைபலவற்றையுமெனக்குத்
தாழ்வறவுரைத்தல்கடனென்றுபலசாற்றக்
காழ்வலியருந்தவமுளானிதுகரைத்தான். (௧௦௨)

நருலோபாக்கியானசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௱௨௨.

அசுவமேதபருவம் முற்றிற்று.

பதினைந்தாவது,

ஆசிரமவாசபருவம்.

முறைபுரிசருக்கம்.

விசும்பினையாதியாவிரியும்பூதவித்
தசும்புளவாழ்க்கையிற்சார்வரேகொலா
மசும்பிளமுலையலர்மங்கையாள்பவன்
பசும்புயல்வண்ணமேபரவும்பற்றினோர். (க)

மான்மதங்கமழ்குருகுலமகீபதி
வான்மனமகிழ்வுறவைசம்பாயனர்
தேன்முகமாரியிற்செவியிற்சாரவே
றூன்முறைமீளவும்றுவறன்மேயினன். (உ)

வந்தவாளரசருமறைவலாளருஞ்
சிந்துநாட்டவர்களுமருங்குதீர்ந்தபின்
கந்தடுகளிறுடைமதுரைகாவல்செய்
மைந்தனையாவருமகிழ்ந்துபுல்கியே. (ங)

தொடுகழன்மணிமுடிதொங்கலங்கதம்
படுவெயினராமணிமாலைபற்பல
வடுசமரேதிதேரானைவாம்பரி
வடுவறமகிழ்வொடுவரிசைநல்கினர். (ச)

அவரவர்வேறுவேறளிப்பவண்ணமார்
கவலைதீர்திரிதராட்டிரனுங்காதலாற்
றவமுறவரிசைசெய்தாசிதந்தபின்
குவவுதோட்குமரனும்விடைகொண்டானரோ. (ரு)

அன்னையாண்டிருப்பமீண்டனிகஞ்சூழ்தர
மின்னும்வேற்புல்லியவேந்தர்தாழ்ந்தெழப்
பன்னுமேழ்வேலையிற்படகமார்த்தெழப்
பொன்னெயின்மதுரைமாநகரிபுக்கனன். (சு)

சாற்றியபெரும்புகழ்ப்பாண்டுதந்தவர்
தோற்றியகதிர்முடியிருடரேந்திட
நாற்றிசைமுழுவதுங்கவிகைநன்னிழ
லாற்றலாலடக்கிவாழ்ந்திருக்குமாயிடை. (எ)

கண்ணனுமிராமனுங்காவல்வேந்தரும்
வண்ணமாவிளமுலைமடநல்லார்களுந்
தண்ணளிபொங்கிடகரஞ்சார்ந்தனர்
புண்ணியர்தமைவிடைகொண்டுபொற்பொடும். (௮)

செலுத்தியநெறிமுறைசென்றுநாடெலா
மொலித்திடுபெரும்புகழெனவுலாவியுங்
குலத்தியலாசிரமத்தின்கொள்கைகள்
பலிப்புறநடாத்தியும்பார்புரக்குநாள். (௯)

மறமிலையறனலால்வாய்மையன்றிசொற்
றிறமிலைவயிரமுஞ்சினமுமில்லையா
னிறையொடுசால்புநாண்மானநீதிநற்
றுறைபடுமியல்பினர்கயவர்குழல்கள். (௧௦)

பாட்டளிதுதைதருபதுமமாலையார்
நீட்டியவருக்கியமுகந்துநீள்கதிர்
வீட்டிவாளசுரரைவிளங்கிக்காலங்கண்
மாட்டுமற்றென்கொலோகருதற்பாலதே. (௧௧)

விழியெனுமம்புநீள்வேலுந்தத்தமைத்
தழுவியான்புயத்தலாற்சார்ந்துதைத்துருப்
பழியறுபடைஞர்கள்பயிலும்போரினு
மழியுணர்புறம்படாதயிலுமம்புமே. (௧௨)

கட்புலன்கதுவுறுக்ககனவாணர்மாட்
டெட்பகவன்னமாசிருக்குமென்பராற்
றட்பமுநட்பமுஞ்சார்ந்தநாட்டினோர்க்
குட்பகைமுதலமாசொன்றுமில்லையே. (௧௩)

இங்கண்மும்மாரியும்விளைவுந்திதறத்
தங்குபல்வளன்களுந்தருக்குமோங்கியே
யெங்கணுஞ்சிறந்ததாலெவர்க்குமாறிலாச்
சங்கையொன்றறன்றருதனயனாட்டினே. (௧௪)

முனிவரர்விண்ணவர்முடிதுளக்கிடத்
தனியரசாட்சியிற்றருமன்றம்பியர்
வனிதையர்சூழ்தரமகிழ்ந்துவைகினான்
பனிமதிமரபுளோர்தவம்பலித்தல்போல். (௧௫)

என்றுமாமுனிவரனெடுத்துக்கூறலு
மன்றலம்புயத்தினான்மகிழ்ந்துமாதவக்
குன்றமேகுரவர்பாற்குறிக்குமன்பெலா
மின்றருள்செய்கெனவெடுத்துக்கூறுவான். (௧௬)

சாத்திரப்படிகடன்கழித்துத்தம்பியர்
கோத்திரமுதல்வர்கள்குழுவவேகியே
நேத்திரம்புலன்செயாநிருபன்பாங்கர்போய்த்
தோத்திரத்துடனடிதொழுதுநாடொறும். (௧௭)

தனிமைசால்கற்புடைச்சகுனிசோதரி
வனிதையர்திலதத்தைவணங்கிமற்றவர்க்
கினிமையிற்பூசனையியற்றியானபின்
பனிமொழிபற்பலபகர்ந்தபின்னரின். (௧௮)

குந்திதாளருச்சனைகுறித்துமீண்டுவந்
தந்தணர்குழுவொடுமத்தனைக்கொடு
வந்துமண்டபத்தினின்மடங்கலாசனத்
தந்தணத்திருத்தியாங்கருள்புனைந்தபின். (௧௯)

பொற்றவிசினிலறன்புதல்வன்வைகியே
சுற்றமுமிளைஞருஞ்சூழமன்னவர்
கொற்றமோடிருபதந்தாழவெண்குடை
யொற்றைமேனிழற்றவேழுலகுங்காப்பனால். (௨௦)

விதுரனுங்கிருபனும்விரகின்மிக்குயர்
சதுரனுஞ்சஞ்சயனுயுச்சன்றன்னொடு
மதுரவாசகர்பலர்வளைப்பநாப்பணின்
முதுமொழிக்குரவன்வீற்றிருப்பன்மொய்ம்பொடும். (௨௧)

கடிக்கமழ்தாரினார்காவல்வேந்தர்க
ளடிப்படுபுவிக்கெலாம்நடத்துமாணைகள்
படிப்படியொற்றர்கள்பகர்வர்மீளவு
முடித்திடுமியல்பெலாமொழிவன்மைந்தர்க்கே. (௨௨)

வந்தவேந்தர்களடிவணங்கித்தங்குறை
முந்துறக்கூறுவர்முதல்வனோடும்போய்ச்
சந்ததமவரவர்தன்மைநாடியே
மைந்தனுக்கிசைப்பனவ்வண்ணமாற்றுவார். (௨௩)

திசைசெறிதிறைவருசெயல்கள்கூறிநின்
றசைவரப்புகலுவரரம்பைமாரெலாங்
குறைவறக்கானங்கள்பாடக்கொற்றமோ
டிறைதனியாசனத்திருப்பனின்பொடும். (௨௪)

மன்றமதகன்றுமாளிகையிற்சார்ந்துழி
வென்றிவேலுழவர்கள்விருத்தனோடுபோய்த்
துன்றியாங்கவனருஞ்சூழல்வைகியே
நின்றமுதருந்துவர்நேயத்தோடுமே. (௨௫)

வேறு.

தன்றுகுழற்றுரௌபதியுஞ்சுபத்திரையுமேனையரும்
வென்றிபெறுகாந்தாரவேந்தளித்தபூங்குழற்குங்
குன்றனையமாமனுக்குங்கொணர்ந்தடிசிறுகர்விப்பா
னன்றுபுரிதாகவாய்ந்தமைக்குமறுசுவைகள். (௨௬)

வேட்டபடிவேட்டதெலாம்விருப்பிலளித்துண்டபினர்
காட்டுமடைக்காய்மலர்கள்கந்தமுதலியவழங்கித்
தாட்டுணைகடொழுதகல்வர்சந்ததமுமிவ்வண்ண
மீட்டுமொழுகிடமைந்தர்விருப்பமெலாமுதவுவரால். (௨௭)

தந்தையருகிவிருந்துதன்வறமற்றயங்குதல்போல்
பைந்தொடிமார்மாமியிடம்பயில்வர்தினம்பலகாலுஞ்
சிந்தையுணர்ந்துங்கருமஞ்செய்துமுடித்திடுவரவர்
வந்தனமும்வழிபாடுமார்வகுக்கவல்லாரே. (௨௮)

பைவருமைந்தலையுடையபாந்தணிகர்பகர்கின்ற
வைவரையும்பயந்தாட்குமவ்வண்ணந்தொழிலியற்றிக்
கைவருதம்மனைவருளங்களித்திடக்கற்பாற்றுவரான்
மைவருவாள்விழியுடையமாதரெலாம்நாடோறும். (௨௯)

அகாரங்கள்பற்பலவுமாலயங்கள்பற்பலவும்
நகரங்கள்பற்பலவும்நாடோறுஞ்செய்வித்துத்
தகருமிளமைந்தரெலாஞ்சற்கெதிமேவிடுமாறு
பகரும்விழிப்புலனில்லான்பலகோடியறம்புரிந்தான். (௩0)

மான்றேரும்வாம்பரியும்வாரணமுமூர்பலவு
மான்குலமுமாடகத்தோடந்தணர்பாலன்புடனே
நான்முறைசேர்கன்னுளினுண்மையறிவுடனளிப்பன்
றேனவிருமாலையினர்சிந்தைகளிதூங்குவரே. (௩௧)

ஆராதபெருங்காதலாற்றடாகங்கள்வனங்
காராரும்பெருஞ்சோலைக்ககனவாவரும்விரும்பு
நீரார்சத்திரஞ்சாலைநேமிசூழுலகெங்கும்
பேராதுபலகோடிபெருக்கினன்விருத்தனுமே. (௩௨)

இறந்ததினமல்லாமலேற்றபலநாடோறுந்
திறம்பலில்லாமைந்தருக்துஞ்சிந்துபதிமகன்றனக்கு
மறந்தவாவிடுமற்குமாசரியன்றனக்குமுயிர்
துறந்தபுரவலர்தமக்குஞ்சோமதத்தன்முதலோர்க்கும். (௩௩)

இலக்கணனுதியகுமாரிறந்தோர்க்குமபிமனுக்குஞ்
சொலற்கரியமத்திரத்தாற்றுேன்றலுக்குஞ்சகுனிக்குங்
வெலற்கரியபோராற்றல்விபாகரன்சேய்முதலோர்க்குங்
கலக்கமறச்சிராத்தவிதிகடத்தினன்கருத்துடனே. (௩௪)

அனைய தினங்களிலான் களாடகங்கள்பலநல்கித்
தினந்தினமுமிவ்வண்ணஞ்செய்திருக்கவறன்குமரன்
மனமுகிழானலர்ந்தசெந்தாமரைவதனமொளிசெய்ய
வினையமொடுபலபொருளும்விழைந்தளித்துப்புரிவித்தான். (௩௫)

வேறு.

நோக்கியிதுநெஞ்சின்மிகநொந்துபவனன்சேய்
வாக்கினுரையான்முனம்வகுத்தபலவஞ்சர்
தூக்கியவர்பேர்வழிதொடுத்தகருமத்தால்
வீக்குவனுயிர்ப்புமனம்வெஞ்சினமிகுந்தே. (௩௬)

அன்னவருமிங்கிவனைநோக்கிலழியாத
மன்னவர்கண்மன்னைமுதன்மைந்தரையழித்தோ
னென்னவுளநோவவிகலாதெதிர்விழிப்பர்
தன்னுணர்வுபோலுமெதிர்சாருமவர்சால்பும். (௩௭)

இத்தகைமையொன்றலதியாவினுமிவர்க்குப்
புத்திரரிலாமைதெரியாதிவர்புணர்ப்பா
லுத்தமனறன்குமரனுள்ளமவர்பாலே
வைத்தனனலாதொருமறுக்கமுணரானே. (௩௮)

எந்தவரிதானபொருளெவ்வயினடைந்தா
னந்தவமையந்தனினருட்பெரியதாதை
சிந்தைகளியெய்தும்வகைசேர்ந்தருளிமீள்வன்
முந்துநெறியிங்கிதெனமொய்ம்புயர்வன்மாதோ. (௩௯)

ஆருமெமதத்தனருளுக்குரியராமின்
பேருமிதுசிந்தைபிடிபாதவரெமக்குச்
சாருமினியாரலர்தரித்தவர்களேயுற்
றுருமுறவுங்கிளையுமென்றுபலசாற்றி. (௪0)

இவ்வணம்வழிப்படவியாவரும்விரும்பி
யவ்வணமருட்செயலடைந்துவருநாளிற்
செவ்வணமருத்துதவுசெம்மறனிநேர்வர்
தெவ்வணமுரைப்பதெனுமாறிலனிசைத்தான். (௪௧)

காடுபடுமன்னவரிலாசுரரிணுகங்
கூடுசுரரிற்பெயர்குறிப்பவரியாரு
மீடுபடுவாரிபமதென்னவரிமுன்னர்
பீடுபடுமென்கதைமுனென்றுநனிபேசும். (௪௨)

அந்தனருளுஞ்சிறுவரைந்திருபதெண்ணோர்
ந்தமுயிர்வானமுறவேதனிதடிந்தே
னெந்தனிசையாதுமிதனுலெனவெறிந்தே
முந்துகதைவானமுறமொய்ம்பிடைதரித்தான். (௪௩)

ஆசைபெரிதாகியுருளாயமதில்வென்றே
நீசரெனைமனோதகபுரிந்தனர்நிலத்தே
தூசமுரிவித்தனர்துரௌபதியையன்றோ
காசமடைகுற்றனர்கள்கண்டநலமென்னோ. (௪௪)

என்கடவுளுந்துணையுமேற்றமுமெனக்கு
மன்னுயிருமிக்கதையலாதிலைமதித்தே
மின்பழியுமெம்பழியும்விட்டியவலத்தா
லன்பொடுதினந்தினமருச்சனைசெய்வேனே. (௪௫)

மண்ணிலரசானவர்மடங்கனிகர்வாரு
மெண்ணமறவென்புயவிலங்கலெதிரானால்
விண்ணடைவதன்றியுளவோவிளிதனோக்கார்
கண்ணிலிபெரும்புதல்வர்காய்ந்தமரின்மாய்ந்தார். (௪௬)

என்றுபலவாமொழிபிரட்டையரைநோக்கி
யன்றவனறைந்திடலுமானனமுகிழ்த்தார்
துன்றுமிளையோரறன்மகன்றனொடுசொல்லா
தன்றுமறைசெய்தனரரந்தையுறுமென்றே. (௪௭)

அத்தகையவாய்மையிருவோர்செவியினுழை
வுத்தமனியற்றுமுபசாரவிதியாலு
மத்தனிவனென்றும்வருகாலவலிதேர்ந்துஞ்
சித்தமதனிற்பொறைசெலுத்தினர்தியங்கார். (௪௮)

அன்றகலமுன்னரியல்பாகியுரைநாளிற்
சென்றதிதியின்றுகைசிறந்தவருடங்கள்
துன்றவொருநாளிவனுரைத்தவைசுடத்தார்
மன்றன்முடியானைவருவித்தனன்மதித்தே. (௪௯)

சஞ்சயனுயுச்சனொடுதாழ்வறுவிதுரன்
கிஞ்சுகிருபன்புவிவிளக்குமுடிவேந்தர்
வஞ்சமறுசிந்தையறன்மைந்தனிளையோரோ
டெஞ்சலறுமந்திரமிருக்கைபுகுவித்தே. (௫௦)

தன்னிழனிகர்க்குமுரியாளுடனேதக்க
மன்னவைபுகுந்தனன்வயங்குவிழியில்லான்
றன்னினர்வணங்கியணைமீதுதொடர்வித்தே
பின்னிவரிருந்தபினர்பெற்றிபுகலுற்றான். (௫௧)

முறைபுரிசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௫௧.

உ

திரிதராட்டிரன்றுறவெய்தியசருக்கம்.

சீலமுந்தறங்களுமறமுஞ்செம்மையுங்
காலமுங்கண்டவர்கருதுகிற்பது
சூலமுந்திகிரியுந்துறந்துநித்தவ
னீலமுங்கருமையும்நிகர்க்குமேனியே. (க)

ஆடவர்திலதவொன்றறையக்கேண்மினோ
காடலர்தாரினோர்வையங்காத்தவர்
நீடியதொகையெவர்புகல்வர்நீத்தவர்
பீடினராயினரிரண்டுபேற்றினும். (உ)

ஆசையாற்புவிமயக்கருமல்வைகினோர்
பாசமாமறலிகைப்பாசம்புக்கினோர்
தேசுடையாயறிவுயர்ந்தசீரியோர்
கூசுவர்மயக்கினிற்குழுமிவாழ்தலே. (ங)

வித்தெனுமவாவினாலியற்கைவேறுபட்
டுத்தமகுணமிகழ்ந்துறுதிநீங்கியே
சத்தசத்துணர்ந்திடார்தாபதத்தினாற்
பித்துழன்றிறந்தபின்பிறவிபேணுவார். (ச)

பொய்யெனவுணர்கிலருடலைப்பூரியர்
மெய்யெனப்புகலுவர்துயின்றுமீளவு
மொய்யெனவிழிப்பதுமுதகபுற்புத
மையமற்றுலவலுமடுக்குமாலினே. (ரு)

சேட்படுதுறவெனும்புணையைச்சேர்ந்தலாற்
காட்படுபிறவியங்கடல்கடப்பரே
நாட்படநுகர்ந்தவின்பத்தைநச்சுத
லாட்படுபயன்மயக்கறிவதன்றிதே. (சு)

அஞ்சனம்பொறித்தவராய்ந்துரைத்தல்போற்
சஞ்சலமகற்றினோர்தன்மைதேறுவர்
நஞ்சினுங்கொடியவஞ்ஞானவாழ்க்கையர்
துஞ்சலுற்பவித்திடறொலைக்கற்பாலரே. (எ)

வாரிநீர்வான்றருமாரிநீரதாய்ப்
பாரினோர்தாகமும்பாற்றுமந்தநீர்
பேரினான்மீளவும்பெயர்ந்தொன்றுதல்போற்
சீரியருரைகடந்திடரிற்சேர்வரே. (அ)

ஏதுவுநீதியுமெடுத்துக்காட்டுதல்
பேதையர்க்குணர்வுடைப்பெருமநின்வயிற்
சாதகப்படுமறிவுடையைசாற்றலெ
னோதுவதின்னுமொன்றுளதுகேட்டியால். (கூ)

வஞ்சகக்கொடியர் நூற்றுவரென்மைந்தரிற்
கஞ்சனூற்பவமுறக்காட்டினானவர்
நஞ்சமென்றாகிலேனாகிநான்மகிழ்
விஞ்சியித்துயர்க்கெலாமெய்யொன்றாயினேன். (௧௦)

அஞ்சனவண்ணன்வந்தறியுமாறெனக்
கிஞ்சொலாற்பற்பலகோடியேதுக்கள்
வஞ்சகமின்றியேவகுத்துரைத்தனன்
பஞ்சவர்க்குடன்படுமாறுபண்பினால். (௧௧)

சஞ்சயன்விடுமென்சாபவாரியன்
வெஞ்சிலைவிதுரனென்மீதவாவினாற்
பஞ்சரித்தெண்ணறப்பகர்ந்தவாய்மைக
ணஞ்சினுங்கைத்ததென்னந்தனர்க்கரோ. (௧௨)

ஆடல்வெஞ்சிலைவலாராருமோதினர்
பாடல்வல்லவன்முதற்பரமயோகியர்
நாடெலாந்திறனெலாநவின்றுதேற்றினர்
நீடலர்முடியினாய்நிகழ்ந்தவாறெலாம். (௧௩)

ஒருசுயோதனனிடையுற்றநண்பினாற்
கருதிடாதுலகெலாங்கழித்தபாதக
னிருபன்யானப்பெருங்கொடுமைநீங்குத
லருமையாந்துறந்திடாதிருக்கிலையனே. (௧௪)

இறந்தவர்தம்மினுமிருந்துளாரினும்
பிறந்திடுமவரினும்பிதாவிடத்தருள்
சிறந்தநின்றனக்கிணைசெப்பவல்லரோ
துறந்தகன்றிடினுநின்னன்புசோர்வனோ. (௧௫)

புத்திரர்சதம்படைத்ததுதுயர்பொருட்
டுத்தமனுனக்கிணையொருவர்காண்கிலேன்
சத்தினியாதெனிற்றரணிநின்வயின்
வைத்தனன்முன்னரேவனஞ்செல்வேனியான். (௧௬)

அரசனுங்குருவுமென்றிருவராணைபால்
வரிசையிற்செய்தொழின்மாசுறுதிறற்
புரைசைவான்களிற்றினாய்புகன்றிடாதெதிர்
பரிசினாலாணைதந்திடுதிபண்பொடும். (௧௭)

வாழ்வினிலெனக்கிணையின்றிவாழ்ந்தனன்
காழ்வலிமைந்தர்தங்காட்சிகண்டன
னூழ்வினையொதுங்கிடத்தவத்துறுதினித்
தாழ்வுறேனெவர்கொலோசாதல்தப்பினோர். (௧௮)

என்றுபற்பலமொழியெடுத்துக்கூறலு
மன்றலந்தொடையறன்மைந்தனுங்குணர்ந்
தின்றிதுபகர்வதற்கேதுவேதென
நின்றுநின்றுயிர்த்திதுநிகழ்த்தன்மேயினான். (௧௯)

மந்தராசலமுலைமாதர்தம்வயிற்
றந்திடுபணிகளிற்றப்புண்டாயதோ
மைந்தரெம்மாற்பிழைவந்ததோவலாற்
சந்ததநண்பினோர்தாஞ்செய்குற்றமோ. (௨௦)

அமைபொருகானைவிட்டடைவித்தன்பினு
லெமையெடுத்தளித்துநல்விஞ்சையெய்துவித்
திமையவர்க்கேற்பவாழ்வீந்துநாடொறு
நிமையெனக்காத்தநீநீங்குந்தேற்றமே. (௨௧)

இடைசிலசிறியர்கைதவமுமெம்முறை
தடைபடுமியக்கமுமுழுஞ்சந்தித்தே
படைமுகத்தயர்ந்தகொன்றன்றிப்பண்டுதொட்
டுடையநின்பேரளிக்கொப்புண்டாங்கொலோ. (௨௨)

வேறு.

சுற்றமுங்கிளையுமெம்மைத்தோற்றிவித்தவனுந்தாயும்
நற்றவக்குருவுந்தேவும்நண்புநீயன்றியுண்டோ
குற்றம்யாம்புரிவதெல்லாநின்னுயர்சிந்தைகொள்ளேற்
பற்றெமக்குன்னிலுண்டோவென்றிருபதத்தில்வீழ்ந்தான். (௨௩)

வணங்கியகுமரன்றன்னைமலர்க்கரநீட்டியேந்திப்
புணர்ந்துமார்பகத்திற்றுங்கிப்புளகெழவாசிகூறி
யிணங்கிடவருகினுய்த்தேயெந்தைநீபுரக்கும்நாட்டிற்
றணந்திடாதுளவோவின்னுங்குற்றமாந்தன்மைமன்னே. (௨௪)

நாட்டினுமில்லைநின்றனகரினுமில்லைநின்பொன்
வீட்டினுமில்லைமின்னாரிடத்தினுமில்லைவேடர்
காட்டினுமில்லையோரேழ்கடலினுமில்லையென்றாற்
சேட்டிளம்பரிதிபோல்வாயாண்டுளகுற்றஞ்செப்பாய். (௨௫)

எங்களாலடைந்தகுற்றமெங்குலக்குரவரானோர்
தங்களாலடைந்தகுற்றந்தனையராலடைந்ததெல்லா
முங்களானீங்கிற்றென்றாலும்வயினுரைத்தற்குண்டோ
பங்கயமலர்ந்தசெங்கட்பாழியம்பொருப்புத்தோளாய். (௨௬)

என்றுரைத்தின்சொலாலேயெண்ணலைமனத்தினொன்றுந்
துன்றுபுமனிதர்வாழ்க்கைத்துயரலாற்சுகமிங்கென்னே
வென்றியோய்துறவாதுன்பான்மேவிடின்மறலிமேவி
லன்றியாம்புரிவதென்னேவறைகுதியறநூலாய்ந்தோய். (௨௭)

ஆயுவென்பதுதானூர்க்குமுளவவையருதமுன்னர்
தூயசுற்கருமமாற்றிமேற்கதிதொடரவேண்டும்
நேயமங்கையர்கண்மைந்தாநிதிவயின்மயக்காற்பொச்சாப்
பேயினரென்னிலென்னுண்டெமபடர் * சிலுகேயன்றே. (உஅ)

முந்தையநாளிலிந்துவழிவருமுதன்மைவேந்தர்ச்
சந்ததிபுரக்குநாடுதணந்துபோய்த்துறவெய்தாரோ
கந்தடுகளிற்றுவேந்தேகாதலென்மீதிலுண்டே
லுந்துறிதவத்திலன்போடுழியோடுழிவாழி. (உகூ)

மதிமரபுதித்துவேந்தர்வந்தடிதாழவாழ்ந்து
முதுமொழிபலவுமாய்ந்தநின்னைகன்முனியாயின்று
சதுர்மறைவியாதனெந்தைதன்னளிபூண்டுமில்லில்
விதிவரிச்சயனமீதில்விளிவனேவறிவிலாரில். (௩௦)

ஆயிடையமரிலாவியகற்றுதலறமாம்வேந்தர்க்
கேயதுகைகூடாவேற்றுறவெய்தியிறத்தனன்று
மாயிரும்புவிமேலாசைவளர்ந்திடவிருத்தனுயும்
பேயுணர்வுடையோனுகியிறப்பனேபேதையாகி. (௩க)

அறந்தருபுதல்வன்றந்தையமரினுமாய்ந்தானல்லன்
றுறந்திலன்கரையானெந்துதுயருழந்தகத்தினூடே
யிறந்தனனெனன்றுசான்றோரியம்புதல்கேள்விமேவிற்
சிறந்தநின்செங்கோற்கூற்றமுளகொலோதெரிந்திடாயே. (௩உ)

பொற்கலமகுடமேமகுண்டலம்பூண்களாரம்
பற்பலசமந்துநொர்தேனறுசுவைப்பயனும்வெஃகேன்
வற்கலைசடைநற்றண்டங்கமண்டலம்வரித்துக்காட்டிற்
புற்கைகன்மூலங்கந்தம்புசித்தலேவிரும்பினேனல். (௩௩)

ஆகத்தாளினைப்பானுவாலண்ணலையேத்திமோகத்
தாகத்தானுயிரைகன்மாதவருழைவிடுவதன்றி
மோகத்தாலயர்ந்துழுவெட்டணைக்கடன்மூழ்கிநீங்காச்
சோகத்தாலிறக்கலாற்றேன்றுணிந்தருடருதியென்றான். (௩௪)

அத்தனுங்குரைத்தபான்மையறன்மகன்செவியெய்தாமுன்
முத்திமின்புணருமாறுமுன்னினனென்றுதேறிக்
கைத்தலங்குவித்துச்சிந்தைகலக்குறக்கண்ணீர்வார
வித்திறம்புகன்றான்வாக்குமனமும்வேறிலாதகோமான். (௩௫)

படிபுரந்தளிக்குநீதிப்பார்த்திபர்தமக்குவேறு
நொடிதருதவமியாதோநோற்பவற்கதிகனன்றே
கடிபுலனவித்தோர்தாமேசேர்வர்நற்கதியிலேந்தல்
கொடிநகர்காட்டினுள்ளோர்குழுவொடுங்கதிசேர்வானே. (௩௬)

---

* சிலுகு - யுத்தம்.

ஆயினுங்குரவர்முன்னுனெறிமுறையபடிப்படுத்தி
மாயிருந்துறவுபூண்டுவான்கதியடைந்தாரென்று
நீயதைவிரும்பினையேல்விலக்கிலனிருபவீண்டு
நாயினேற்குதவவேண்டுமொருவரநவில்வன்கேண்மோ. (௩௭)

பெற்றநின்கருணைகொண்டுமறநெறிபிழைத்திடாம
லுற்றரசியற்கைபூண்டேனிவ்வளவுன்னைநீத்து
மற்றுலகிருந்துவாழேன்வருவனுன்னுடனேகானிற்
சற்றிமையாதுன்னேவற்றலைக்கொடுபுரிதற்கையா. (௩௮)

எந்தைநீகடவுளெங்கட்கென்றுனைவழிபாடாற்றி
வந்ததீவினைகடீரமாநிலம்புரந்துநின்றேஞ்
சிந்தையெம்பாலினீக்கிச்செல்வையேலிருத்தலாற்றே
முந்துறவருதுமவ்வாறளிக்குதிமுதல்வவென்றான். (௩௯)

ஆங்கவன்புகன்றவாய்மையரசனுமுணர்ந்துமீளத்
தாங்கியன்புடனோர்பான்மைசாற்றினன்றக்கதன்றாற்
பாங்கர்நீர்வருதலுன்னாற்பாரெலாமுய்யவேண்டும்
நீங்கிடிலுலகமூன்றும்நெறிகளும்பாழ்படாதோ. (௪௦)

தன்மகனுலகுகாக்கத்தான்வனந்துறந்துசேற
னன்முறைநின்னொடேகிற்பெருமைகொன்னன்மையேகொல்
வின்முனையிளைஞர்மாதர்நண்பினர்விழைந்தோர்நாட்டோ
ருன்முனந்துறப்பரென்பதுணர்கிலாய்போலுமையா. (௪௧)

தேசுற்றமுகத்தினாய்நின்மனுநெறிச்செங்கோலெம்பான்
மாசுற்றதெனினுநீக்கிவான்கதிதருமென்றுன்னி
வீசுற்றுங்கானினேகவிழைந்தனனீயுமேவி
லாசற்றதவத்தையாரேயளிப்பவரளியுளானே. (௪௨)

வழிபடுமியற்கைக்கேற்றசனங்களைவருவதாக்கி
மொழிபடுமிடையூறென்றுமொழிந்திடாதுய்த்திச்சோமன்
வழிபடுமரபுமெந்தன்வாய்மையுமுந்தனுய்ந்த
கழிபடுமறிவுமோங்கிவிளங்குறுமெனக்கரைத்தான். (௪௩)

துய்யவனுதிட்டிரற்குத்தொகுத்தவாறனைத்துந்தேறிப்
பொய்யிலான்புழுங்கிச்சிந்தைதவத்தினிற்பொருந்துமாற்றன்
மெய்யுடையவனன்றென்னேவிடுப்பதிக்கனியையென்றே
மையலுற்றழுங்கிமீளவறன்மகன்வகுக்கலுற்றான். (௪௪)

ஒருவருமென்னோடெய்தாவகைநகருறுத்தியானே
வருவனுன்னுடனேயெம்பிமாரிராரென்னினோடு
பொருவருமுயுச்சன்றன்பாற்பொருத்தியைவருமுன்பாதங்
கருவறச்சிறமேற்றாங்கிவருதுநீகலங்கலையா. (௪௫)

தனிதுறந்தெய்திக்காட்டிற்றவம்புரிகாலமன்று
பனிவெயின்மறையினூலின்பழுத்தமெய்ப்பயன்படாவா
லினியுன்னைவிடுத்துவைகேனெய்துவனுடனேயென்றான்
புனிதரிற்புனிதனாகியுலகெலாம்புரக்குங்கோமான். (௪௬)

ஆடலஞ்சிலையானிவ்வாறறைதலுமருகிலுள்ளோர்
தோடவிழ்தாரோய்மைந்தன்பிரிவெனவருத்தந்தோற்றி
நாடெலாமொருவிநின்றேனெய்துவானவின்றானன்றே
வாடலைத்தவத்தினாற்றம்வருமிவணிருத்தியென்றார். (௪௭)

வளநிலமருதவேலிமன்னவர்பலரும்வேதங்
கிளர்கலனுணர்ந்ததூயகுரவருங்கிளர்த்துமுன்னர்
தளர்கலமுடையபோதன்சலித்தியாங்கொருதன்பன்னி
யிளகலஞ்சாய்ந்துசாயாவிருதனவரைமேற்சாய்ந்தான். (௪௮)

கரங்களாலாரமேற்றாங்கிக்கற்பினுக்குவமையில்லாள்
வரங்கிளரிமசலத்தால்வதனமண்டலம்விளக்கிச்
சுரந்திருவிழியினூவிசொரிதருபுதல்வரோடுந்
தரம்படுகவரிவீசித்தளர்மெலிவகற்றினாரே. (௪௯)

தேறியாண்டிருந்தமைந்தர்திறந்தருள்விழியோனாகி
மாறிலாத்தனதுகாதன்மடந்தையைக்கடைக்கண்காட்டி
யாறிடைப்புகறியென்னவவளெடுத்தறைபலானுள்
வீறுடையாம்பல்விண்டுநறவினைவிடுத்தலேபோல். (௫௦)

ஐயகேளுந்தைநீங்கியருந்தவம்பயிலுமாறு
மையலுற்றுரைத்தான்மேனிதளர்ச்சியான்மருங்கிற்சாய்ந்தா
னெய்பெனவுரைப்பதென்னேயானுடனேகிநீவிர்
செய்தொழிற்புரிந்துகாப்பன்றிறப்பலிர்தந்தைவாய்மை. (௫௧)

மன்குலக்குரவர்முன்னரளித்தவர்வாய்மையன்றிப்
பன்னியமறைவேறில்லையென்றுமெய்ப்படவாழாரோ
வுன்குலத்தந்தைசிந்தையுகவுசெய்துதவுகென்றாள்
மின்குலத்திபமொப்பாள்வேட்டவன்சிந்தையோர்ந்தே. (௫௨)

அம்மொழிகேட்டுமீட்டுமறன்மகன்றாதைதன்பாற்
செம்முகவனசகாட்டியையநீசெல்லுமாறு
கைம்மலைவேந்தரோடுமுசாவியேகரைப்பநாளை
யிம்மையூனுகருமாறிண்டெழுந்தருள்கென்றுசொற்றான். (௫௩)

மாசற்றபுதல்வனேதவிருத்தனுமதிகொளாம
லாசற்றதவத்தினெய்தற்கருளளித்தாயேலன்றி
நேசத்தானுகரேனுண்டியினிப்பலநீர்மைநம்பாற்
பேசத்தான்வலியனல்லேனென்றனன்பிடுமிக்கான். (௫௪)

கனஞ்சொரிகருணைச்செங்கோற்காவலனுமியோரு
மனஞ்செறிநடையினுருமரங்கையுற்றிருக்குமேல்வை
வனஞ்செறிமுனிவர்கோமான்வாதராயணன்வந்துற்றா
வினஞ்செறிபைங்கூழ்வாடவெழின்மழைபொழிதல்போன்றே. (௫௫)

வேறு.

தாராருஞ்சடைதுளங்கத்தண்டுகமண்டலந்தாங்கித்தனிவந்தெய்த
நீராரும்புவிபாலர்நேர்நடந்துதொழுதெழுந்துநேயமிக்குச்
சீராருமுனிவரனைத்திருத்தவிசின்மீதிருத்திச்செய்யுமேன்மை
பாராருமுறையியற்றிப்பணித்தருளவருகிருந்தார்பரவியம்மா. (௫௬)

செய்யவாய்திறந்துமுனியுதிட்டிரனைமுகநோக்கிச்செம்மைவல்லாய்
மையலடைந்திருப்பதுவென்மனக்கருத்தையுணர்த்துகெனவணங்கியையா
பொய்யறுமென்றந்தைவனம்புகநினைந்தானவைசெவிக்குப்பொறாமல்வாடிப்
பையவுழ்ந்தனமுனதுபதமலர்கண்டோமென்றான்பண்புமிக்கான். (௫௭)

கேட்டியிதுவேலரசர்குலத்தருமங்கேழ்கிளருமரிற்கிட்டி
நாட்டிலிறந்திடலன்றித்துறவெய்தியிறத்தலென்றேநன்னூலெல்லாங்
காட்டியதுநீயுமர்வைகானடையத்துணிந்தவரைவிலக்கலாமோ
வீட்டுகநின்மனப்பாசம்விடுத்தியவனினைத்தவழிவேந்தர்வேந்தே. (௫௮)

தந்தையுடனீயேகிவழிபடுதற்குளம்வலித்தாய்தகுதியன்று
னுந்தைசெலநீயுலகம்பரித்திருத்திவேறொன்றுமுரையேலென்று
கந்தமலர்க்கடவுளைமுன்றந்தவனைநிகர்த்தமுனிகருணைநோக்கான்
மைந்தனையுமைவரையும்நோக்கியருளிடவறத்தின்மகன்சொல்வானால். (௫௯)

எத்தகையேனேதுணர்வேனெம்பொருட்டாலடைந்துரைக்குமின்சொலென்
தத்தனியான்மறுத்துரைத்தற்கறிவேனோதிருவருளாலறைந்தவண்ணம் [ப
பத்தியினாற்றுவனென்றான்பரமமுனியுருமறைத்துப்படர்ந்தானிப்பாற்
சித்திரவிற்கரன்வணங்கித்தாதையுனதருடுறவேன்செய்வதென்றான். (௬0)

மைந்தன்மனமுணர்ந்துதழீஇவாழ்த்தியவனுடனடைந்துமனையிற்றுய்த்துத்
தந்தமிருக்கையினிருந்தாரன்றுதினகரன்சாய்ந்துசார்ந்தான்மீள
வுந்துமுதிட்டிரனுதிமைந்தரையுமுழையரையுமோகையோடும்
வந்துறவென்றுரைத்தேவிமலரணைமேற்பொலிந்திருந்தான்வாகைவேலான். ()

வேறு.

சுற்றியநந்தனர்தொல்படைவேந்தர்
பற்றறுசஞ்சயனாதியர்பல்லோர்
குற்றமிலாவிதுரன்கிருபன்கோட்
கற்றறியார்பலர்வந்துகலந்தார். (௬௨)

அங்கனல்வந்தவள்குந்தியடற்சீர்
தங்குசுபத்திரைதாவுமுலூபி
மங்கலமாமதுராபுரிமங்கை
நங்கையர்பற்பலர்நண்ணிவளைந்தார். (௬௩)

வானநிறைந்திடுவானுடுவின்கட்
டானமதிக்கிணைசாற்றுவிருந்தன்
ஞானமிருந்தவர்தன்முகநோக்கிக்
கானமுறுத்துநலேலகடனென்றான். (௬௪)

ஐயவுனக்கவனுமறிவானாற்
செய்யுமுரைக்கிலரேதடைசெய்வோர்
வையமளித்தெமைவாழ்வுறவைத்தோ
யுய்யுநெறிக்கடனுமினமென்றார். (௬௫)

அந்தனுமைந்தரின்முன்னவனானோன்
வந்துதொடர்ந்திடவேதனிவைத்து
முந்துலகாண்முறைமுற்றுமுணர்ந்தோய்
தந்திடுவன்சிலதன்மைநினக்கே. (௬௬)

வேறு.

சந்நாங்ககர்நாடுதருமங்கடாமம
முத்தமனென்றெல்லோருமுருகவரசளிப்பதுவே
வித்தகமாம்பெருங்கருமம்பானுனைத்தபடிவிளம்பல்
புத்திகொளக்கடவதென்றான்றுறந்துவரம்புகநினைந்தோன். (௬௭)

அந்தணர்சான்றோருழையரானவரிலறமுணர்ந்த
முந்துவிஞ்சைவல்லோரைமுதன்மைசெயக்கடவதுவாந்
தந்துபொருளவர்விழையத்தருமுபதேசங்களெலாஞ்
சிந்தைதனிற்பொருத்தியுளந்தேறுநியாலாறிதுவே. (௬௮)

இந்திரியமோரைந்துமியல்பன்றிச்செல்லாம
லந்தமுறைகாத்தவனேவுலகனைத்துங்காத்தவனே
யிந்திரியமறிவின்வயமெய்தாவேலிசையழிந்து
சிந்திவிடுமறங்களெலாஞ்செம்மைநெறிகடவாதே. (௬௯)

தான்குற்றஞ்செய்யாதான்பிறர்குற்றந்தவிர்ப்பவனும்
வான்குற்றம்புலன்மயக்கால்வருவனவென்றுளங்கோடி
நான்குற்றதானையினும்நாட்டினுநம்பினரிடத்து
மூன்குற்றபகையிடத்துமொற்றுடலுறும்பயனே. (௭௰)

அரிவையரந்தப்புரத்துக்கையமறக்கடுங்காவற்
றருவதுவுமுண்டியொடுசலபானநித்திரைகள்
மருவுவதுமனதறிந்தமானவர்பால்விடுவதன்றிக்
கருதுமுறைசெயவொண்ணாதெனவுணர்திகைவேலோய். (௭௧)

மனங்கலந்தமுதிர்விருத்தமடந்தையர்களுட்காவ
லனந்தரமுமடவாருக்கமைத்திருத்தல்கடனுமா
மினம்படுசிறுமைபொருடுமெண்ணாதுசெயுங்கருமங்
கனந்தருமேவலகேழுங்கைவயமாயினுமம்மா. (௭௨)

மந்திரமாமிருக்கைபலவிடத்தாகாமதிவல்லோர்
சிந்தையுணர்ந்தவரன்றியேனையரையுடன்செறியார்
தந்திரமாமுயல்வதுவாஞ்சமைந்தமொழிபுறம்படுமேற்
சிந்தையெண்ணங்கெடுமதனைப்பரிகரிக்குஞ்செயலின்றே. (௭௩)

விவகாரம்பரிசுத்தவிஞ்சுகலையுணர்ந்தவராற்
றவறுதுநடுவுணர்ந்துசாற்றிடுமின்றுட்டர்தமை
யிவறலொழிந்தவரரசுக்கேற்றமுறைபுரிந்திடுதி
நவமாயச்செலவடக்கிநற்செயலிற்பெருக்குதியால். (௭௪)

காலையிலேதெய்வதத்தைக்கைதொழுமின்கதிருயர்ந்த
வேலையிலேவிருந்தோம்பிவிழைந்துண்மின்பலரோடு
மாலையிலேகடன்கழித்துமன்றமடைந்திருந்தகன்று
சோலையிலேமேடையிலேதோகையின்பந்துய்த்திடுமின். (௭௫)

மகுடமணியாரங்கள்வான்கலைகள்புனைந்திடுமின்
மிகுதிபெறுமொழிக்கலசிவிவகாரம்வேறொருவர்
பகுதியிடைவிடலொழிமின்பலமலர்கள்நறுங்கந்தந்
தகுதிபடவணிந்திடுமின்றாளாண்மைகைவிடன்மின். (௭௬)

நெறிமுறையாற்பொருளெய்துநீர்மையெலாம்பெருக்கிடுமின்
பெறுமரசுக்கிடையூறுபேசினரைகெடுத்திடுமின்
மறுகிமிகுந்தொழிலியற்றிவருந்தினர்மன்னித்திடுமின்
றறுகணிகல்வல்லோரைப்பேரவையிற்சாற்றுமினே. (௭௭)

அன்புடையராகியரும்பொருட்கருமத்தணங்கெய்தா
தின்பம்விழையாதுபயின்றீவோர்க்குவேண்டியவாம்
நன்பொருள்களளித்திடுமினண்பாயந்துகைக்கொண்மின்
வன்கணதுகண்டன்றிமாற்றலர்மாட்டேவன்மின். (௭௮)

அந்தரங்கத்துறுவாய்மைபயிரங்கமாக்கன்மின்
றந்துறுபயிரங்கத்தைச்சாற்றுமலடக்கன்மின்
முந்துபகையினரிடத்துமொழிவதின்சொலானுலுங்
தந்திடுபொன்னிகழுமுறையெள்ளளவுந்தவிரன்மின். (௭௯)

ஊற்றமிகுந்தவன்பகைநண்புறுத்துவதேமிகநன்மை
யாற்றலிலான்பகைவிரும்பிலடுப்பதுவுமருஞ்செயலா
மேற்றநண்பினுயர்குற்றமெத்தனைதான்பொறைசெயினுந்
தோற்றமதிற்பெரிதன்றியரசின்வலிதொலையாவே. (௮௰)

தன்கிளையிற்சுற்றத்தார்தரணிபரிற்சுற்றத்தார்
பின்கிளைகடொறும்பழமைபேணிவருசுற்றத்தார்
நன்குணர்ந்துநடத்துவதேநற்றருமமிவறன்மை
வன்கொடுமுட்பகையாகியழிக்குமவன்வரைபோன்றே. (௮௧)

படைத்திறத்தார்மிசையென்றும்பரிவுடைமைதவசமன
மிடைத்தபடிசுகமுறத்திகலந்தளித்தல்விரகாமாற்
புடைத்தொருவர்தமைவெல்லும்போர்விரகுதன்வலியுந்
தொடைக்குமவன்வலியுடனேதுணைவலியுங்கருதுவதே. (௮௨)

ஈட்டியமூலப்படையுமிரும்பொருளாற்சேர்படையும்
நாட்டிலுளபலபடையுநனியுயர்காட்டினிற்படையும்
பூட்டியநண்பினர்படையும்பொருந்தார்விடுபடையும்
பாட்டிலறுவகையாயபடையென்றேபகருவரால். (௮௩)

கூட்டியறுபடையுடனுங்கொண்டபலதுணையுடனுந்
தாட்டிகமாமுக்கமுடன்றனதுநிலைவலியுடனும்
வாட்டிறலாய்காலமிடமதித்தெழுந்தானெனிற்பகையை
வீட்டுமிவைகருதானேல்விளிந்துவிடுமதிக்கொள்ளே. (௮௪)

மைந்தரினுந்துணைவரினும்புரந்தருள்கமானவரை
யந்தணரைக்கடவுளரிலதிகரெனமதித்திடுக
முந்துபலவான்கருவிமும்மதவாரணம்பரிகள்
சந்தனநல்லடியரிவைசந்ததமும்போற்றுவதே. (௮௫)

சன்மானந்துணைவரிடந்தனிலன்போடாற்றுவதாம்
பன்மாறுபுகலுவதென்பரதாரந்தனங்கருதே
யூன்மானமுயிர்விடினும்விடாதேயுறுவாய்மைச்
சொன்மாறிச்சிறியரொடுஞ்சூழாதேபேழ்வலியோய். (௮௬)

முன்னுளிற்பராசரன்கான்முளையாயமுனிவரனு
மென்னுவியனையானுமெண்ணிறந்தமுனிவரரும்
பொன்னுருந்தடந்திகிரிப்புராதனனுமுனக்குரைத்தார்
நன்னுவிற்கிசைந்தபடிநானுமுரைத்தனனென்றான். (௮௭)

வேறு.

தந்தையுரைவந்துசெவிசாருமுனராக
மைந்தனுடலம்புளகெழப்பதம்வணங்கி
எந்தையுனதாணைவழிநிற்பனெனைநீத்து
முந்துவனமேவும்வகைமுன்னியதையன்றே. (௮௮)

ஆயபிரிவுக்கலசினேனெனவணைத்து
நேயமுளதுன்மிசையெனக்குடலநில்லாத்
தூயமுறைகண்டுதுறவிற்படர்வனுனே
காயமதுநோக்கியுணர்கென்றசரைகாட்டி. (௮௯)

மேற்கதிவிரும்பலிலராகிமிடியெய்தும்
பார்க்குளுறுபேதையரிலாதல்பயனன்று
லேற்குமிதுநீபுவியிதக்கமொடுகாத்தி
நீர்க்குமிழிபோற்பிறவியென்றிவைநிகழ்த்தி. (௯௰)

மைந்தரையுமேனையர்வலித்தொகையுநோக்கி
யந்தணருளீந்தவனகத்திடைபுகுந்தே
முந்துநகருள்ளவர்கண்முற்றுமுறவென்றே
நந்தனர்தமக்குணநடத்தினனலத்தால். (௬௧)

அம்முறைதலைக்கொடவராரையுமுனுய்ப்ப
விம்முறையனைத்துமவருக்கினிதினோதிச்
செம்மைதெரிவீர்விடைதெளிந்தருள்கவென்றான்
மைம்முகில்பொழிந்ததெனவாள்விழிகலுழ்ந்தார். (௬௨)

ஆங்கவர்தமக்கருளினோடுகமனதந்தன்
பாங்கர்விடைகொண்டுபரிவாலெனதுமைந்தர்
நீங்கவிடைதந்தபினர்நீவிரருள்செய்யத்
தாங்கினனுளத்தினகர்வாழ்தருசனங்காள். (௬௩)

யாவருமகிழ்ந்துவிடையீவதழுகென்னத்
தாவுபிரிவாலுடறரித்திலர்நடுங்கி
யேவியொருவேதியனையின்சொல்புகல்வித்தார்
மேவியவனோதினனடுத்தருகின்மேலோன். (௬௪)

மைந்தரடுபோரினிடைமாய்ந்துகதிகண்டார்
தந்தனையுதிட்டிரனெனுந்தனயனுக்கு
முந்துலகமுன்னரரசாண்டமுதுவேந்தர்
சிந்தையினுநன்மதிசிறந்தவனிகாப்பான். (௬௫)

பல்லுயிர்களுந்தமதுநல்லுடல்பரிந்தாற்
புல்லுவதருங்கதியினிற்பொறைவலாளன்
வல்லமனுநூன்முறைவழங்கிடனெலாமென்
றல்லலுறுமாமுனிவரண்டருமுரைப்பார். (௬௬)

அத்தகையசெம்மலுனருந்தனயனுயுஞ்
சுத்தமதிநீதுறவுதுன்னியயர்வானென்
புத்திரர்களேகதிபொருத்துவர்மறுத்தார்
சித்தமதிலுள்ளபடிசெய்கெனவிசைந்தார். (௬௭)

மைந்தரிலுமைம்மைவிழிவரவுநிமைபோலச்
சந்ததநிகழ்த்திமிகுதண்ணளிபுரிந்தா
யுந்தனைமறந்துபிரிவாற்றலமுழன்றேஞ்
சிந்தைதனிலுள்ளபடிசெய்கவினிவேந்தே. (௬௮)

வேதியரையாதியர்விருப்பினொடுநின்பாற்
போதனைசெலுத்தினர்களென்றுபுகலக்கேட்
டேதமறுவேந்தனருளீந்தனரெனக்கொண்
டோதியவர்தத்தமுறைசெல்லநெறியுய்த்தான். (௬௯)

புரசனமடங்கியகல்வுற்றபினர்பொற்பார்
திரமுறுதன்மாளிகைசிறந்திடவினண்ணிப்
பரவுவிதுரன்றனொடுபற்பலவிளம்பி
யிரவிலறன்மைந்தனொடிசைக்கெனவிடுத்தான். (௧௦௦)

வந்துவிதுரன்றனதுமைந்தருழைநண்ணி
நந்தைமொழிகேண்மினவிநன்மையுணர்வீர்காள்
முந்துமமரிற்படமுடிந்தவரெவர்க்குந்
தந்திடுசிரார்த்தவிதிதான்செயநினைந்தே. (௧௦௧)

கார்த்திகைவரும்பருவகாலமளவுந்தா
னார்த்தியுடனேபலவறம்புரிவனாகிச்
சீர்த்தியுடையிருமைசெலுத்தினனெனத்தான்
பார்த்திபர்தமக்கிதுபகர்ந்தனன்விதுரன். (௧௦௨)

முன்னவன்மகிழ்ந்துமுறையாமெனமுராரி
யன்னவனுமம்முறையடுக்குமியல்பென்றான்
பன்னுமனிலக்குமரனொந்திதழ்பதைப்ப
வன்னவனைநோக்கினனருஞ்சினமிகுந்தே. (௧௦௩)

மூத்தவனுளத்திலனன்மூண்டசினமோர்ந்து
பார்த்தனவனுக்கருகுபற்றியிருகாதிற்
றோத்திறமொழிந்தொழிதிநோன்றலுளனோமென்
றேத்தவைபுகன்றுமொழியானிஃதிசைந்தான். (௧௦௪)

மாண்டவர்தமக்குரியவன்பகைஞரன்றோ
பூண்டவர்புரிந்தசெயல்போழ்வதுளமின்னுங்
காண்டியவிருத்தனுயர்கானடைவதாயு
மீண்டுபுரியுங்கடனிசைத்துவரவுய்த்தான். (௧௦௫)

ஆண்டுபதினைந்தளவுகாலமவருக்கு
வேண்டுபலவாமுறைவிதங்கள்புரிவித்தான்
பாண்டுசுதர்தம்மெளிமைப்பார்த்தநிலடங்கான்
மீண்டுமுயலும்படிவிதித்தனன்வழக்கே. (௧௦௬)

தஞ்சமறுவஞ்சிதுகிலீர்த்திடறவிர்த்தான்
வஞ்சனைபடும்பலவிடத்திலுமறுத்தான்
கஞ்சவயநாடுகவராதுமதுகாத்தா
னஞ்சலமிதென்கொலவனேநமதுதந்தை. (௧௦௭)

என்றுவயவீமனிகலோடுமுரைசெய்ய
வென்றிபுனைபற்குனன்வெறுப்பினொடுநோக்கி
யன்றிதுபொறுத்தனைநம்மண்ணலருள்போற்றி
யின்றிகழ்வதோமுதல்வனெண்ணமதையென்றான். (௧௦௮)

அந்தமொழிமுன்னவனுணர்ந்தரிகுமாரன்
தந்தமொழியின்றி துதரிப்பதலவென்றே
கந்தனனையானறிவுகண்டுளமகிழ்ந்து
வந்தவிதுரன் றனொடுவாய்மையிதுரைத்தான். (௧0௯)

எந்தையவனென்னுயிரெனக்குரியதெய்வந்
தந்தமொழியன்றியொருசால்புமுளவேகொல்
சிந்தைநெறியின்படிசெலுத்திடுகவென்றே
முந்தியுரைசெய்கெனமொழிந்துவிடைதந்தான். (௧௧0)

மாடைபணியான்கள்பலவான்பொருள்களெல்லாம்
நீடவருள்வான்விசயனீயருகிருந்து
வேடையகலாவணம்விருப்பினொடுநல்கென்
றோடைமதயானையுடையானருளியுய்த்தான். (௧௧௧)

வேறு.

விதுரன்மீண்டுவந்தன்பினால்வேந்தனைத்தாழ்ந்து
சதுரர்தங்களுக்குரைத்தனன் றக்கதேயென்றார்
மதுரைமன்னவர்மருகனுமறன் றருமகனு
முதவுவாருயிருட்பொருட்டுரைத்தநோவரிதே. (௧௧௨)

என்னவேண்டினுமீகவென் றிந்திரன்மகனுக்
குன்னியோதினனுதிட்டிரன்சமீரணியுணரான்
பன்னினன்பலமனங்கொளேல்பயிலுதிநினைத்த
தென்னபான்மையினற்றுகென் றறைந்தவனகன்றான். (௧௧௩)

கானிற்செல்பவன்கருந்துறமகிழ்ந்துகார்த்திகையாம்
வானிற்பேர்பெறுமுதன்மைசான்மாதநல்லுவாவிற்
பானற்கண்ணியோடிருந்துபற்பலவறம்புரிந்தான்
றேனிற்சூழளித்திறமெனவேதியர்திரண்டார். (௧௧௪)

வாகுலீகனற்சோமதத்தனுமவன்மகனும்
போகியன்னகன்னனுமவன்புதல்வரும்புகழ்சேர்
சோகநீங்கியசிந்துபூபதியவன்சுதனும்
நாகமெய்தியமத்திரன்சகுனிநந்தனரும். (௧௧௫)

இறந்தவேந்தரும்வீடுமனிகற்சிலையாசான்
மறந்தொலைந்திடாமைந்தர்சன்மைந்தரும்வானிற்
சிறந்தநற்கதிசேர்ந்திடச்சிராத்தங்கள்புரிந்து
நிறஞ்செய்பாற்பசுவாயிரமாயிரநேர்ந்தான். (௧௧௬)

ஆடைநித்திலவாரங்களாடகம்பலவும்
வேடைதீர்தரவேதியர்விஞ்சைவல்லோர்க்குத்
தேடிநல்கினன்சிறப்புநல்கினன்செயுந்திறத்தி
லோடையானையருவந்தளித்திடமனத்தோர்ந்தே. (௧௧௭)

அனையபண்பெலாமுடிந்தபின்பந்தணராசி
புனையுமற்றவருதவியகாலத்திற்பொற்றூண்
முனைவலோரெலாந்தாழ்ந்திடமதிகுலமுதல்வன்
வினையகன்றிடத்தவத்தினுக்கேகுவான்விரைந்தான். (கக௮)

மைந்தரேனையோர்சூழ்வரமறையவர்விரவ
முந்துபாட்டிமைத்தினந்தனிலிட்டியைமுடித்து
விந்தைசேர்மனைக்கருச்சனைவிதிவழிபுரிந்து
சிந்தையார்ந்திடப்பல்பொருடுறந்துளந்தெளிந்தான். (கக௯)

பூண்டவெண்டுகிற்பூண்களும்பொருக்கெனநீக்கி
மாண்டவற்கலைதரித்தனன்மாதுடன்விருத்தன்
மூண்டபோமழல்கைக்கொடுமுன்செலமறையோர்
பாண்டுதந்தவருடன்வரமறுகினிற்படர்ந்தான். (க௨0)

ஆயகாலையிலைவரைப்பயந்தநல்லணங்கு
தூயசிந்தையுந்துறவினையடைதருந்துணிபாற்
றீயவூழ்வினைதீர்தரத்தெளிவுடனெய்தி
சேயமைந்தரையொருபுடைவைத்திதுநிகழ்த்தும். (க௨க)

திரிதராட்டிரன்றுறவெய்தியசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - களஉ.

நகர்நீங்குசருக்கம்.

மண்ணாடின்பம்வானிடையின்பமதியாதோர்
கண்ணாடென்றுங்கண்டுகளிக்கும்பொருளாவ
தெண்ணாடுன்னிலைம்படைதாங்குமெழில்வீறு
பெண்ணோடெய்துமஞ்சனவண்ணம்பெறுமன்றே. (க)

மேனாளுந்தைகானமடைந்தேவிதியாலே
வானாடாளச்சென்றனனன்றாழ்வலிதள்ள
வேனாவந்திருங்கள்பொருட்டாவியாது
மானாரெள்ளவைகினன்யாதென்மதியம்மா. (௨)

பின்னரினூறுமைந்தரியற்றும்பிழைநோக்கி
யுன்னியிருந்தேனென்படுமோவென்றுளநொந்து
பன்னுமரும்போர்தீர்ந்தபின்மைந்தர்பலராவி
துன்னியகன்றதுன்பமுழன்றேன்சுகமென்னோ. (௩)

வாட்படைவேந்தர்வந்துவணங்குமலர்த்தாளான்
பேட்புறுகன்னனாவியழித்தபெரும்பாவி
நாட்படவின்னும்வைகினும்வீழ்தனரகன்றோ
வேட்கையுளேனாவிவருடனேகான்மேவற்கே. (௪)

தாழேனாவிநீங்கவுந்தாய்சொற்றவறுதான்
பாழேசாவப்பார்த்துமிருந்தபெரும்பாவி
வாழேன்வாழேன்வேந்தொடுசெல்லுமடமங்கைக்
கூழேபோலவாற்றுவனேவலுடனேகி. (௫)

என்றவள்கூறநால்வருமாதரிருந்தோருங்
கன்றுகளானைப்பிரிவதுபோலக்கலக்குற்றார்
துன்றுபுவாசத்தொங்கல்விலங்கச்சுடர்மௌலி
நின்றனைசயக்கைகொட்டியுரைத்தானெறிமிக்கான். (௬)

நீயேயெம்மையின்றுவளர்த்தேநெடிதாக்க
மாயேவாழவாரருணல்குழளவாற்றற்
றாயேயெம்மைநீங்கவுளத்திற்றரித்தாயோ
நாயேனுன்னைநீத்துயிர்வாழநாடேனே. (௭)

திருவேயுன்னைத்திவனமுய்த்துச்செகமாளேன்
வருவேனுன்னோடென்றுரைகூறிமலர்க்கண்க
டருநீராலேதாள்கள்விளக்கிச்சாய்ந்தானைப்
பொருவேற்பாண்டுதேவியணைத்துப்புகல்கின்றாள். (௮)

வேறு.

ஐயகேளுனதுதந்தையருந்தவத்தேவலாற்றி
மையலற்றிருக்குஞான்றுமற்றெனைநீத்துப்போனான்
செய்யகோலுடையாயந்தவண்ணங்கான்சென்றுவைகிப்
பொய்புடலகற்றிநுந்தைபுகுமிடம்புகுதறாய்மை. (௯)

மகத்தினுந்தவத்துநல்லோர்குழுவினுமறைகணூறு
முகத்தினுமொலிக்குங்கானமுனிவர்முன்புடற்போடாமற்
செகத்தினுஞ்சயனீதும்பாசபந்தகத்திற்சேர்க்கு
மகத்தினுந்தொலைப்பதோவிவ்வடலுடையங்கமையா. (௰)

மனக்கருத்தடையமைந்தரனைவருமுணர்மின்மாசற்
றெனக்குதவுறுகைம்மாறின்றிசைதலேயென்றுதேற்றிக்
கனக்குரன்மருகிமாரைக்கைகளாலணைத்துக்கண்ணீர்
தனைத்துடைத்தினிமைகூறிவற்கலைதரித்துமீண்டு. (௧௧)

வாசத்தேவருக்குமெய்தாவான்பொருளளந்தமைந்தன்
பாசத்தாற்புலம்பறீரத்துனியென்னோடாயிற்பல்லோர்
நேசத்தாலடைவருன்னோடதுநெறியன்றுநின்று
மாசற்றேவிடையீகென்றாண்மறுத்திலர்மைந்தரம்மா. (௧௨)

அறமுயரொருவனோடொன்றறைகுவலையகேட்டி
திறமுயர்சகாதேவப்பேர்ச்செம்மலைப்புரத்தியென்று
மறமுயரிளைஞர்பாற்சன்மானஞ்செய்தினிதுவாழ்மின்
பெறலருங்கனல்வந்தாளைப்புரக்குமின்பெரிதுமன்பால். (௧௩)

எனையமடவார்மாட்டுமன்புசற்றேனுங்குன்று
தானவர்க்குதவிவாழ்விராதபன்புதல்வன்றன்னை
வானுறச்சிந்தைகொண்டுபலகடன்புரிமின்வையத்
தானமற்றுயர்ந்தவீரனுமக்குமுன்னவனுயோங்க. (௧௪)

மாதவனருளின்வண்ணமாற்றுமினரகமாண்பு
காதலாற்றொழில்செய்வோர்கள்களித்திடக்கருணைசெய்மின்
வாதராயணனைச்சிந்தைமறவன்மினென்றுகூறி
வேதனையுறன்மினெங்கள்பிரிவினாலென்றுவிட்டாள். (௧௫)

பொற்பமர்சனனிகூறும்வாசகம்பொருந்திச்சென்னி
நிற்பவர்தங்களோடுசேரிழைசுபலன்பாவை
பற்புடைமருங்கினெய்தியவளுக்கைபடையாளாண்டு
கற்புடையவள்போய்க்கூறக்காவலனுணர்வுற்றனே. (௧௬)

வற்கலைதரித்துக்குந்திவந்தனளென்றுமாய்ந்து
நற்குணனருளின்வண்ணமாமெனநயந்துதேறிச்
சற்குணர்தம்மோடந்தத்திருநகர்மறுகிற்சென்றான்
வெற்படுமத்தயானைமுதிர்ந்துசெல்விரகுநாட்டி. (௧௭)

வருத்தமென்பதுகாணாராய்மாமியரோடுசெல்லும்
விருத்தனைநோக்கியுள்ளிநைந்துவாமருகிமார்கள்
கருத்துறத்துறவுபூண்டுவற்கலைசாற்றிக்காணி
லருத்தியினடைவதாகிச்சூழ்ந்தனராருமன்பால். (௧௮)

அஞ்சொலார்மருங்குசூழவருநகர்வீதிசெல்லும்
வஞ்சமின்மனத்தினானைநோக்கலும்பிரியாவாழ்க்கைச்
சஞ்சயன்விதுரனென்னுமிருவருந்தணந்துநீங்கி
யுஞ்சிடக்காவிதண்டமுகந்தணிந்தேகினாரே. (௧௯)

அறன்மகன்வெருவிச்சாலவயர்ந்தழகாமோவென்னத்
திறனுளாயுனதுதந்தைக்கியார்கொலோவேவல்செய்வோர்
மறனுடையுனக்குநேராவழிபடச்செல்வோமென்று
நிறைபதிவோனைத்தேற்றியிறைவனைச்சார்ந்துநின்றார். (௨௦)

அந்தகைசுபலன்பாவைதெரித்தலுமறன்குமாரன்
வித்தகமுறைபினுற்றும்விமலமாஞ்செய்யகோலுக்
குத்தமர்துணையுண்டென்னமகிழ்ந்தனனுணர்வோராம
லித்தலைபுரிந்திரென்னவிரங்கினனிறைவனம்மா. (௨௧)

ஆங்கதுகேழுமுன்னர்கிருபவாசிரியனோடு
பாங்குறயுயுச்சனித்துப்படருதமும்மோடென்ன
வோங்கியவுவகையோடுமுரைத்திடப்பலசொற்கூறி
விங்குதோன்மைந்தர்பாங்கர்மேவுமென்றிருத்திச்சென்றான். (௨௨)

சென்றிடுசெயல்கடேர்ந்துதிருநகர்ச்சனங்களுள்ளா
ரன்றருஞ்ஞானவரடவியலரிவையோடுந்
துன்றியகாலத்தாழ்ந்ததுயரெனத்தாங்கிச்சூழ்ந்தார்
மன்றலங்குழல்கள்சோரமாதருமதிவலாரும். (உங.)

வே று.

ஆறுயதருங்கனிழிந்தபுனற்
சேறுயதுசெல்பவர்கால்படலால்
வீறுகிமிதித்திடமீட்டுமது
நீறுவுயர்வுற்றதுநீணெறியே. (உச)

என்னேயினியாமவணிற்பதென
முன்னேபுகுவார்சிலர்மூதறிவாய்
பின்னேபடர்வார்சிலர்பீடுடைய
மன்னேகுலனென்றுமயக்குறுவார். (உரு)

காலத்தினியற்கைகருத்துறுவார்
ஞாலத்திறமுற்றவுநாடிடுவார்
பாலத்தில்விதித்ததெனப்பகர்வார்
சாலத்தடுமாறினர்சார்ந்தவரே. (உசா)

இவ்வாறிவரேங்கவிருங்குரவன்
மைவார்விழியாளொடுமாநகரிற்
செவ்வேமறுகெண்ணிலதீர்ந்தணுகி
வெவ்வாவெயினீங்கினனேதுறுமுன். (உஎ)

கழிபட்டுளவெள்ளிடைகையறவே
வழிபட்டுவருஞ்சனர்வாரிதியிற்
பழிபட்டறியாதவர்பற்றினர்நின்
றழிவுற்றமனக்குறையாற்றியபின். (உஅ)

மீளப்பணியென்றுவிளம்புதலு
மூளத்துயரோடுமுகந்திருகி
வாளப்புவிசேர்நகர்மன்னினராற்
கோளற்றகுணத்தினர்கூட்டமெலாம். (உகூ)

பலரும்பதிசென்றுபரந்தபின
ரிலகுக்குரவன்றனியேகிமகார்
குலமாதர்கண்மீளுதல்கொள்கையென
வலர்வாள்விழிமுத்தமரும்பியதே. (௩0)

செப்பார்முலையாரொடுசெய்யபத
மொப்பாருமிலாதவர்தாழ்ந்தொருசார்
நிற்பார்தமைவாழ்த்தினனீங்கிடுமே
னற்பாலனுகுற்றனனத்தனுமே. (௩க)

காந்தாரிபதத்திடைகைதொழவே
யேந்தாயினிதானவியற்கையெலா
மாய்ந்தேதபலகூறினளாசிபுகன்
ஞேய்ந்தேகுமினென்றுரையாடினளே. (௩௨)

இருவர்க்குமியற்கைவலம்புரியாய்
வருமக்களுமாதர்கடங்குழுவு
மொருமித்துளகுந்திமருங்குறவே
யருளூற்றவளாசிவழங்கினளே. (௩௩)

வீழ்ந்தாரடிமாமலர்மீதுறவே
யாழ்ந்தார்துயரந்தனிலாதரவு
தாழ்ந்தார்தமியேகுதியோவெனவேற்
போழ்ந்தாலெனவாண்டுபுரண்டனரால். (௩௪)

அக்காலையில்வாயுவளித்தசுதன்
மிக்காயறிவிற்பலவெவ்வினைவாய்
புக்காதுயிர்காத்தபுராதனிநீ
யிக்காலமயர்த்தனையென்னிதுவே. (௩௫)

எம்மாலுளதோபுவியேற்றரசர்
தெம்மான்முனைந்தசெயற்கையெலா
நம்மாண்பருளன்றுகொளுவதுவே
னம்மாவெனவாவியுகுத்தனனே. (௩௬)

அல்லிற்றுரியோதனனூற்றமரக்
கில்லிற்படுதுன்பமுழந்தமையுங்
கல்லிற்கொடுபோயுயிர்காத்தவனீ
செல்லிற்பதிவாழ்வதுதீமையரோ. (௩௭)

என்றிசைபினளிருகண்வழியே
நின்றுலிசொரிந்திடநன்னிலமேற்
பொன்றுனெனவீழ்ந்துபுரண்டனனாற்
குன்றேந்திதனக்கிளையாள்கொழுநன். (௩௮)

பெற்றாளொருபெண்கொடியென்றுபிறர்
சொற்றலவர்சென்னிதுணித்திடுவோர்
நற்றுயிர்நற்குருதெய்வமுநீ
யுற்றரெவர்நின்னிகரொப்பவரே. (௩௯)

மைவிட்டுளவாள்விழிமைந்தரெனைக்
கைவிட்டெவணேகுதிகாதலொடும்
பொய்விட்டுடன்மேவுதும்போந்திலமேன்
மெய்விட்டுவிடக்கடவோமெனவே. (௪௦)

இருமைக்கராற்றினரின்சொனலா
ருருகுஞ்செயலால்விழிமுத்துகவே
கருதும்பலவாய்மைகரைத்திடல்கண்
டொருமங்கைகனும்புன னூறியதே. (சக)

பிரிவின்றுயர்காண்பவர்பெற்றியராய்
புரிபேறடைவோர்துயர்போற்றலரென்
றரிதங்கைதனக்கிளையாளறிவிற்
பெரிதுன்னியவர்க்கிதுபேசினளால். (சஉ)

வேறு.

கோதிலாதகற்குமரரைவரு
மாதர்யாவருமரபின்மைந்தனு
மேதந்தீர்வுறவென்றும்வாழிநீர்
காதலென்பதென்கருத்தைமுற்றவே. (சஙு)

இம்மையிற்பயன்யாவுங்கண்டன
னம்மையிற்பயனுய்ந்துநீங்கினேன்
வெம்மையித்திறம்விலக்கும்வாய்மொழி
செம்மைகற்றவர்செப்புஞ்சீரன்றே. (சச)

பெறுதன்மைந்தரையிம்மைபெற்றபின்
மறுமையும்பெறுமாறுதாங்கியே
துறவுபூண்டலாற்றுன்பசாகரத்
திறுதிகாண்பரோவெவருமேந்தல்காள். (சரு)

ஒன்றுங்கூறலீருந்தையன்னைபாங்
கென்றுநற்றவமிழைத்திருத்தலே
நன்றெனக்குநீர்நகரிற்சென்மினென்
றன்றுநல்லுரையாசிகூறியே. (சசு)

சொரியுமாலிகடொடைத்துமாதரைப்
பரிவினோடணைத்துவகைபற்பல
விரிவினோதியேவிடுத்துப்போயினள்
சரியில்சூரனற்றனையையென்பவே. (சஎ)

தேற்றமாற்றினோர்தேறியோர்வண
மாற்றமின்றியேவலம்புரிந்தபின்
போற்றிமீண்டனர்பொலிசனத்தொடுஞ்
சாற்றரும்புரஞ்சார்ந்துவைகினர். (சஅ)

புரத்தைநோக்கியும்புதியமாமணி
விரித்தவேந்துடைவிபினநோக்கியுஞ்
சரிக்குமண்டபந்தன்னைநோக்கியுங்
கரைபடாத்துயர்கண்டிருந்தனர். (சகூ)

துறந்தவேந்தனுஞ்சுபலன்பாவையு
மறந்தவாதகுந்தியுமருங்கனற்
சிறந்தவேதருஞ்செல்லுமாதரும்
புறந்தராவிருவோரும்போயினர். (௫௦)

நகர்நீங்குசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௨௨௨.

வனம்புகுசருக்கம்.

வானையாதியைம்பூதமாய்வழங்கியமானுய்ப்
பானலம்புயப்பகைஞராய்ப்பகர்பலன்றந்தோன்
மீனமாணமைகோலங்குறணரகரிமழுவிற்
கூனலங்கையராயெழுகொண்டன்மேனியனே. (௧)

வெறுத்துநீங்கியவிருத்தனைமின்னிடைதாங்கப்
பொறுக்குமண்மகள்போல்பவடொழுதுபின்போதக்
குறித்தகோதையர்சூழ்தரக்கோளினன்னெறிப்பா
லிறுத்திடும்படியிருவர்முன்செல்லநீத்தேகி. (௨)

வனமுஞ்சாலையுமருதநீர்வைப்புநல்வளஞ்சே
ரினியநற்குருநாடுநீந்தேகியாங்கிரவி
முனமகன்றபின்வெள்ளிடைமுறைப்படிதுயின்றார்
புனிதமாகியதருப்பைமேற்கடன்முறைபுரிந்தே. (௩)

இரவிமீளவந்தெய்துமுன்புலரியிலெழுந்து
வருபகீரதிமருங்குபோய்த்தலையுறவணங்கிப்
புரியுமாதரம்பெருகிடவப்புனலாடி
விரவிவான்கடனாற்றியேவியந்தினிதிருந்தான். (௪)

அங்குநீத்தெழுந்தருங்குருக்கேத்திரமடைந்து
தங்கியாங்கணோரிடந்தனிலிரவினைச்சாய்த்துப்
பங்கயத்துளமலர்த்துவோனுதித்தபின்படர்ந்தார்
திங்கணற்குலம்பொலிவுறச்சென்னியாற்றொழுதே. (௫)

கருமுகிற்குலங்கண்படுசோலையைக்கண்ணுற்
றருகினேகலுமாங்குறைகைகயர்கோமான்
பெருகுநற்றவத்துயர்ந்தவன்பெயர்சதயூபன்
வருதிரென்றெதிர்கொண்டுதன்வனந்தனிலுய்த்தே. (௬)

அருக்கியந்தலையாங்கடனாற்றியாதரத்தா
லிருக்கினோதுறுகந்தமூலங்களுமீந்து
வருத்துறும்பசிதுரந்தபின்சயனமும்வகுத்துத்
தருக்கினாற்பலமுகமனுஞ்சாற்றினன்றக்கோன். (௭)

அனையபாங்கரின்மனமுறவம்பிகைதனையன்
வினையமோடவனருந்தவம்பயிலுவான்விரும்பிக்
கனைவிதுரனுக்குணர்த்தலுங்கடவதாமென்றே
நினையுமுன்னரிற்சாலைசெய்தமைத்தனர்நெறியால். (௮)

வேறுவேறதாப்பற்பலசாலைகள்விருப்பாற்
கூறுமாதர்தங்குழுவினுக்கணித்துறக்கூட்டி
யாறுசேர்கனலந்தணர்க்கோர்புடையமைத்து
மாறிலாத்தவம்பயின்றிருந்தனரந்தவனத்தில். (௯)

நாடிக்கானிடைநற்கனிமூலங்கணல்கத்
தேடிப்பற்பலர்திரிந்திடத்தேவிமெய்பரிப்ப
நீடிக்குந்திதாள்வழிபட்டுக்கைகட்டிநிற்ப
வாடித்தன்னுடலணங்குறன்றவந்தனைவளர்த்தான். (௧௦)

வேறு.

முற்றுமுணர்பெற்றிமுனிவோர்விழிபுதைப்பக்
கற்றமதிவல்லவர்கருத்துமகிழ்வெய்தக்
கொற்றவனருந்தவமுயன்றுவருகொள்கை
யுற்றபுவியெங்குமுறைநீடியதுணர்ந்தே. (௧௧)

தளர்ந்ததிருமேனியரிதானதவமாற்றி
விளங்குதலெவர்க்குமரிதாமெனவிளம்பி
யளந்தறிவுளோர்கண்மிகவற்புதமடைந்தார்
சுளிந்திலரயர்ந்திலர்சுகங்கருதிலாரே. (௧௨)

மாதருமியற்றுநெறிமாசறமுடித்துத்
தீதறவிருந்தினிமையோடுதொழில்செய்யக்
காதலறுசஞ்சயன்விதுரனிலைகாட்ட
வேதியர்தரக்கனல்விருத்தனுருபோதில். (௧௩)

காயிலைகிழங்குகனிகைக்கொள்வதினாசை
மாயவொருநாளிடைவிடுத்துணமதித்தார்
தூயருரையின்படிதினம்பலதுறந்து
நேயமறவுண்பரொருநாணிகரிலாதோர். (௧௪)

சருகுமிசைவார்புனலருந்துவர்தவத்தோர்
பருகுவதுமுன்னிலர்பயப்பயவிடுத்தார்
மருகியருமவ்வணமுயன்றுவருநாளிற்
றிருமுனிவனாரதனடைந்துசிலரோடும். (௧௫)

அக்குருகுலத்தரசனாற்றுமுயர்சாலை
புக்குவிளங்கவெதிர்போயருடலைக்கொண்
டொக்கலொடுதாழ்ந்துகடனாற்றியுடனெய்தி
மிக்குயர்தருப்பைதனைமீதுறவமைத்தான். (௧௬)

ஆண்டுசதயூபனெனுமாங்குறைபலோர்கள்
வேண்டுமுறைசார்ந்தெனவேமிகவிழைந்தார்
பாண்டுமனையாள்சுபலன்பாவையுமகிழ்ந்தாள்
பூண்டவனடித்துணைசிரத்திடைபொருத்தி. (௧௭)

அப்பொழுதுவேந்தனையாண்டருள்செய்கோவே
யிப்புவியினிற்றவமிழைத்திடவிரும்பி
யொப்பினனியற்றுசதயூபனருளாலே
தப்பறுமுனைத்தரிசனம்பெறலினென்றான். (௧௮)

அம்முனியவர்க்கினியவாதரவுகூறு
மிம்முனியிருக்கைநிகரெங்கனுளதையா
செம்மையுடையோர்பலர்செழுந்தவமியற்றி
மும்மையுமடைந்தவிடமாமிதுமுறைப்பால். (௧௯)

நாட்டினுளநன்னதிகளுக்குளுயர்கங்கை
நீட்டுகுருகேத்திரநிலத்திலுயர்வன்றே
வாட்டமறுதூய்மையிருபான்மையும்வரித்துக்
காட்டுமிடமீதுபலகாற்புகல்வதென்றே. (௨௦)

தேறுசதவிந்துவெனவேயரசுசெய்தோன்
வீறுசதசித்துவெனமேவுமகவன்பா
லாறுபடவேயவனிநல்கியிவணுகிப்
பேறுதருவிண்ணவர்பிரானுலகடைந்தான். (௨௧)

மாறரியபேருடையவாளுழவர்பல்லோர்
தேறுதவமாற்றிவயமோடுகதிசேர்ந்தார்
நாறுமகவேந்தலொடுநன்மணிசெறித்த
வீறுதருபேரவையில்வைகினர்வியப்பால். (௨௨)

வேறு.

இந்தநாட்டினிற்றவமியற்றனோக்கினே
னந்தநாட்டினிற்பயனடைதனோக்கினேன்
வந்தகொற்றவர்க்கெலாந்தவம்வளர்ப்பதா
முந்துமித்தலமுனக்கெளிதினுற்றதே. (௨௩)

வாதராயணமுனியருள்செய்வண்மையா
லேதமிலித்தலமுனக்கிசைந்ததாற்
காதலித்தருந்தவங்கருதிவைகவென்
றோதினன்முவருக்குகவுநல்குவோன். (௨௪)

ஐயகேளவரெலாமங்கவாற்றலாற்
செய்யநற்றவங்களைச்செலுத்தியேறினர்
வெய்யதாமெனதுடற்பழுத்தமேன்மையா
லுய்யுமாறுணர்கிலேனெனவுரைக்கவே. (௨௫)

வருந்தலியாவர்க்கும்வாய்த்துறுகுநற்
பெருங்கதியுனக்குவந்தெய்தும்பெட்பினே
டருந்தவமாற்றலுக்களவுமாற்றுகென்
றிருந்தவனேதனுமிதனைக்கூறுவான். (௨௬)

எக்கதியெனக்குறுமேமைமாரெலாம்
புக்குவதெக்கதிபொருவிலாவிரு
க்கவரடைவதேதெனக்குச்சாற்றுகென்
றக்கணம்வினவலுமறைவனாயினன். (௨எ)

பாங்குடையல்லியம்பதுமக்கோயிலான்
பூங்குலக்குபேரனென்றுரைக்கும்புண்ணியன்
றூங்கருநன்பனுய்த்தலைமைவிஞ்சுற
நீங்கலாயளகையினிருப்பைநீடவே. (௨அ)

நன்மணிவிமானமுந்தவிசுநாயகப்
பொன்மணிப்பூண்களும்பொலன்செய்மேனியும்
நின்வயினடுத்திடுநினதுநற்புடை
யின்மடமாதுயரியக்கர்தாழவே. (௨௯)

வாழ்ந்திடுபதமுனக்கடுக்கும்வண்பதந்
தாழ்ந்துனக்கேவல்செய்பிரதைதன்பதி
யாழ்ந்திடுமமரர்கோன்பதியிலாசையால்
வீழ்ந்துடற்புல்கிடமேவிவைகுவாள். (௩0)

தப்பறுபாண்டுநுந்தம்பிவானவ
ரொப்பறக்கதிர்முடியொளிசெய்மேனியோ
டப்புவிக்கரசனேடருமையோடுறுஞ்
செப்பினும்பெயரெலாஞ்சிந்தைசெய்வனல். (௩௧)

அன்னவன்குந்தியாதரத்தினுழ்ந்துளன்
பன்னியாய்வனப்பின்மெய்ப்படைத்துமேவியே
பொன்னெனக்கேள்வனைப்பொருந்துவாளெனச்
சொன்னபின்போர்மொழியெடுத்துச்சொற்றனன். (௩௨)

மதுரவாசகமுடையறத்தின்மைந்தனும்
விதுரனுமோர்கலையென்னுமேன்மையாற்
கதிர்முடியானுடன்கலக்குஞ்சஞ்சயன்
சதிருடைநாகர்நாடடையுந்தாழ்வற. (௩௩)

எவனெவன்பன்னியரிங்குவைகினே
ரவனவன்பயிலுமாட்டாவரண்ணலே
நவமெனக்கருதலையுடலைநாசஞ்செய்
தவமிதுதேறுதியென்றுசாற்றினன். (௩௪)

அற்புதநீராயரிவைமார்களு
முற்பமுதல்வனுமொய்ம்புவீங்கினர்
நற்படிசெயலெலாங்கேட்டுநன்முறை
யற்பவாழ்வகற்றினோனுறையலாயினான். (௩௫)

சாற்றியவாறெலாஞ்சாதமையனே
யேற்றமிங்கிவர்புருமியற்கையெவ்வணந்
தோற்றியதவ்வணமறிவுசோர்வற
வாற்றுதியெனச்சதயூபன்கேட்கவே (௩௬)

வாமுனியோதுவான்கேண்மின்மாதவர்
விரிவுறவோர்தினம்விண்ணினேகினேன்
சுரிறைபேரவைதுன்னிவைகிய
விராவினிலுன்னரும்விபுதர்தொக்கனர். (௩௭)

அத்திசைவேந்துடைச்சரிதமாய்ந்தவ
ரித்திறம்புரிகுவதியல்பனைத்தையும்
பத்தியிதுறைத்திடப்பாகசாதனன்
வித்தகன்பெறும்பயன்விரித்துக்கூறியே. (௩௮)

வனந்தனில்வந்தநாளாதிமற்றிவ
ரினம்பெறவாண்டுமூன்றிருந்துதம்முட
லனந்தரநீக்கியேயடைவர்நற்கதி
யெனும்பலவாய்மைகளிசைத்துளானரோ. (௩௯)

அன்றியான்புரந்தரனுறையக்கேட்டவா
றின்றுமக்கறைந்ததென்றெடுத்துக்கூறலுங்
குன்றெனக்குவவுதோட்குலவக்கோமுனி
நன்றிதேயென்றுநாரதனைப்போற்றினான். (௪௦)

பின்னருஞ்சிற்சிலவாய்மைபேசியே
யன்னவர்தொழுதிடவாசிநல்கிப்போய்
தன்னுடையாச்சிரமத்தைச்சேர்ந்தனன்
பன்னருமுனிவரோடுளத்திற்பற்றிலான். (௪௧)

ஆங்கவனகன்றபின்பாசைநீத்தவன்
பாங்குறுபவரொடுபயிலுநற்றவ
மோங்கிடநாள்பலவுஞற்றிவைகினான்
நீங்கறவவர்தஞ்செயல்கள்செப்புவாம். (௪௨)

அத்திமாநகர்விடுத்தகன்றநாண்முதற்
புத்திரரைவரும்பூவைமார்களு
மத்தரின்மயங்கியுமறுகிவாடியு
நித்தமுமுயிர்த்துநாணிக்குமாயிடை. (௪௩)

அறன்மகனோர்தினமண்ணைலெம்வயிற்
றிறலறநகண்பறத்தீர்ந்துகானக
முறவுநற்றவமெனவுஞற்றவேகினான்
பொறைசெயுமன்னையும்பொற்பொடேகினாள். (௪௪)

ஈன்றவனம்மையோரிறையுமீங்கலாள்
கான்றநன்மணியராக்கைவிடாதுபோ
லான்றநல்லறிவுடனளித்துக்காத்ததா
யூன்றியபாசநீத்துடன்சென்றுளரோ. (௪௫)

இரக்கமுநம்முழையன்புமென்றுஞ்சார்ந்
தரக்குவீட்டினுமுயிரளித்தவேந்தையார்
பரக்கழிவொன்றிலான்பற்றின்றுன்னலன்
புரக்கவாண்டகையுடன்போயினனரோ. (௪௬)

காலமூன்றையுமுணர்கருத்தன்காவலன்
பாலுளபற்றினாற்பற்றெலாமறுத்
தேலவேயகன்றனனிசைகொள்சஞ்சயன்
சீலமங்கையருடன்செல்வதாறரோ. (௪௭)

இத்தகையாவரும்புளியிற்றேடென
முத்தியைவிரும்பியேமுறைபினீங்கினா
ரத்திறநோக்கியுமவனியாசையென்
புத்தியைமயக்கியதின்னும்பொற்பிதே. (௪௮)

தாயுடன்றந்தையைத்தவிசிலேற்றியான்
நேயமாவழிபடுநீர்மைகுன்றியே
மாயவாழ்க்கையினிடைமல்குவேன்கொலோ
பேயறிவுடையரினென்றுபேசினான். (௪௯)

ஆர்த்தபைந்தொடையலானதனைக்கூறலும்
தீர்த்தனுக்கிருபுடைசெறிந்ததம்பியர்
கார்த்தொகையாலியிற்கலுழிநீட்டினார்
பார்த்திபரியாவருங்கவலைபற்றவே. (௫௦)

அழற்கொடிசுபத்திரைசித்திராங்கனை
நிழற்புரைநாகர்கோன்மடந்தைநேரிலாத்
தழற்புரைமடந்தையர்பலருந்தங்களிற்
றொழிற்படவரற்றினர்பிரிவுதோற்றலால். (௫௧)

பற்பலரிவ்வணம்பயிலுமாயிடை
சிற்குணமுயர்சகாதேவனோதுவான்
முற்படுமுன்னவன்முளரிவாண்முக
நற்பிரபைநோக்கியேநாட்டநீருக. (௫௨)

ஐயகேளெம்மையின்றளித்தயாதவர்
செய்யபூங்குலக்கொடிசெனனநீக்குவான்
மையலற்றகன்றனள்வனத்திலென்னவு
முய்யவித்திருவளங்காதுமோகையால். (௫௩)

சென்றிலமுடனவடிருவடித்துணை
யொன்றிநின்றேவல்செய்துகவுநல்கிலோ
மன்றுகன்னெஞ்சினோமாயிருந்தன
மின்றுயிர்த்துன்னுவதேதமைப்பாலவே. (௫௪)

வேட்கையாற்புவிக்குனைவேந்தனாக்கினர்
வாட்கைதேர்முனிவருமண்ணாளோர்களும்
பேட்புறநீர்விடுத்தேகல்பிழையாந்
தாட்கணீரெனைவிடுத்தாய்குற்றேவற்கே. (௫௫)

அத்தகைக்கிசைவுறாதாகிலையாம்
புத்திரரெனுமுரைபொய்படாமலே
மெய்த்தவச்சாலைபோய்நோக்கிமீளுவன்
பத்தியினேவுகென்றிளவல்பன்னினான். (௫௬)

மாயிருமிளவறன்வாய்மைகேட்டலுந்
தூயவரியாவருந்துன்னிநோக்கவே
தாயொடுதந்தைநற்றமரினாதர
மாயினரரிவையாருமோதினார். (௫௭)

எம்முடைவழிபடுகடவுளேய்ப்பவே
நம்மனைநீங்கியஞான்றுதொட்டவர்
மெய்ம்மலர்ப்பதந்தொழவிரும்புஞ்சிந்தைய
ரும்முடனடைகுதுமெனவுரைப்பவே. (௫௮)

இசைந்தனர்மற்றுமாரெதிர்தற்குன்னினோ
ரசைந்திடுநகரினுமாங்ககத்தினுங்
கசிந்தவன்பினரெலாம்வம்மின்காணவென்
றசைந்தனன்மனத்தினானேதிப்பின்னரும். (௫௯)

களிற்றின்மீததிர்குரன்முரசுகாரொலி
வளத்தினோடுயர்நகர்மறுகிற்சாற்றுவித்
தளிக்குணவளித்தநல்லலங்கன்மௌலியான்
றளித்தருள்பொழிகணான்சொல்வதாயினான். (௬௦)

சென்றிடுகாலையிற்பரிவிற்சேர்பவர்
கொன்றியசகடுதேர்சிவிகையூருமான்
குன்றுழைபரிபலகோடிசெய்வித்தான்
றன்றுநீர்நதிக்கெலாந்தோணியேற்றினான். (௬௧)

ஆயிரமாயிரமாவணங்களிற்
பாயிரந்தண்டுலம்பருப்பையாதியா
மாயிரும்பொருளெலாம்வைத்துக்கேட்டவர்க்
கேயெனநல்குமாறெங்குமாக்கினன். (௬௨)

பாண்டவர்நகர்முதற்பற்றிலார்தவம்
பூண்டபாங்கினளவாகப்பொய்கைக
ளீண்டுறுசாலைசத்திரங்களெண்ணறு
மாண்டகுபொழிலலர்வனங்கள்செய்வித்தான். (௬௩)

ஓரையுநாளுமின்றெனவுரைத்திட
வாரையுநகரெயிலளித்துளாரையும்
போரையெண்ணுதவேற்பொருநர்தம்மையு
மூரையேகாமினென்றுரைத்தெழுந்தனன். (௬௪)

கிருபவாசிரியனுங்கிளருயுச்சனும்
நிருபன்வாய்மையின்படிநகரினின்றிடப்
பொருபடைத்தானையும்புவியில்வேந்தரு
மிருமருங்குடனுறநகர்விட்டேகினர். (௬௫)

இரவியைப்புரைமுடியிருடிரந்திட
வருகுழையிருமுழுமதியைமானவே
யொருகுடைநிழலிலொண்மணிப்பொற்றேரின்மேற்
கரவுணராவறன்கானையேகினன். (௬௬)

குன்றிரண்டிருபுயங்குறிக்கொண்டாலென
வென்றியங்கதையொடுவிளங்குங்கோமக
னன்றரதனமணியார்த்ததேரின்மேற்
சென்றனன்வலப்புறத்தழகுசேரவே. (௬௭)

பெருங்கடனீந்தியபெருமனன்றுத
விருங்கவிக்கொடியுயரெழில்செய்தேரின்மேற்
கருங்கடல்வண்ணனைப்புரையுங்காட்சிசேர்
தருஞ்சிலைவீரியன்வாமஞ்சாரவே. (௬௮)

முன்னுறமாவலான்மூரியானைமேற்
பின்னுறப்பின்னவன்பெயர்கொள்வாசிமேற்
பன்னருமாதர்கள்பருமணிக்குழாந்
துன்னியசிவிகைமேற்றொடரத்தோன்றலும். (௬௯)

கார்நிரைசூழ்ந்தெனக்கரிகள்குன்றுக
டேர்நிரையலைகடற்றிரையில்வாம்பரி
போர்தருவயவர்கள்புனரிதுண்மண
லார்தரவேகினன்முரசமார்ப்பவே. (௭௦)

எண்டிசையடங்கலுமெழுந்ததுளியாற்
கண்டிலரொருவரையொருவர்கார்முகில்
விண்டதூரியங்கள்பல்விதத்தினோசையான்
மண்டலங்குகைதொறுமறைந்ததஞ்சியே. (௭௧)

மாழைநற்கதிரெறிவான்றுகிற்கொடி
யேழெனப்பெயர்கொளுமெழிலிபோற்பரந்
தாழிநேரம்பரக்கங்கையார்த்துறை
பூழிவாயடங்கிடப்பொழிந்துளாயதே. (௭௨)

வட்டமுங்கவிகையுமன்னர்கோமகன்
றொட்டபைங்கழலுடைச்சூரன்வெங்கரம்
பட்டடலணங்குறுவண்ணம்பாரெலா
மிட்டபந்தரினிசைந்தெழில்விளைத்ததே. (௭௩)

காவலர்பற்பலர்கனகமேருவை
யாவலிற்குன்றுகளனேகஞ்சூழ்வபோற்
பாவலர்பரிவெலாம்பரவும்பாண்டவ
ரேவலிற்றேர்மிசைமுன்னரேகினார். (௭௪)

வேதியர்பாவலர்விருத்தர்சான்றவ
ராதிபர்மாகதராரியவந்திகர்
கோதிலாமுனிவரர்குழுக்கொண்டேகினா
ரோதியவிவுளிதேரிபங்களூர்ந்தரோ. (௭௫)

மாதருமாந்தருமதனனோடவன்
காதலியெண்ணறக்கலந்தகாட்சிபோ
லோதுடல்வனப்பினாருன்னியேகினார்
போதெறிசகடுகள்புரவியூர்ந்தரோ. (௭௬)

சிந்துடன்குறளுகள்செவிடுமூங்கைக
ளந்தராதியர்பலர்சகடத்தாயினா
ரிந்திரன்செல்வமொத்தேகிக்காவதங்
குந்திதங்கவர்மணிக்குவடுநண்ணினார். (௭௭)

ஓடுறுமருவியுமுகளுஞ்செல்களும்
நீடியதருக்களும்நிதிக்குழாங்களும்
நாடுறுமயில்களும்பிறவும்நங்கைமார்
நீடுறுவிழியினும்நீலம்போர்த்ததே. (௭௮)

காழ்கிளரகிற்புகைகமழ்நறும்புகை
தாழ்வறுகாட்டழற்றனிலெழும்புகை
வாழ்சிறுகுடிக்குறமடனலாரடு
மாழ்புகைபேழ்முகிலசைதலொத்ததே. (௭௯)

வரைநிகர்வாரணமெண்ணிலாவகை
நிரைநிரைதுன்னியேநீங்கும்பான்மைகள்
புரவலன்போகியென்றுன்னிப்புக்கிடம்
விரைவுடனடுபல்விலங்கல்போலுமே. (௮௦)

வானுறவோங்கியவரையின்மாசுணந்
தானுயிரிலாவுடற்றூங்கிவாடையா
லூனமற்றசைதலிவ்வோங்கலேந்நலை
யானைநல்விருந்தினுக்கழைத்தலேய்க்குமே. (௮௧)

பொன்னவிரிளமுலைமீதுபோதினு
மின்னராமணிவடமிலிரவேகிய
நன்னுதன்மாதரைநாணுவித்ததா
லன்னிலமறத்திமாரணிந்தகுன்றியே. (௮௨)

நகைமுகமிதழ்விழிநடைநற்சாயல்கண்
முகைமுலைமேனிதோண்மொழிகரங்குரற்
றுகைபதமுகிற்குழற்றுன்னுமாதரை
யிகலுவபோன்றதாங்கெதிர்ந்தமால்வரை. (௮௩)

வரையினின்றிழிதருநறவின்மாலையும்
வரையினின்றிழிதருமாசுணங்களும்
தரையினின்றவர்க்குமந்தரத்தின்மாருதத்
தரையினின்றவர்கட்குந்தலைமயங்குமே. (௮௪)

நகைமுகநரபதிதானைகாற்றிசை
வகைபடுமுரசொலிவாய்புதைத்ததாற்
றகைபடுகல்லினுஞ்சிமையச்சார்பினுங்
குகையினுமாதருங்குரைக்குமோதையால். (௮௫)

வாசநன்மலர்குடைந்துலவுவண்டினம்
பூசலிட்டெதிரெதிர்போய்த்தொடர்ந்ததா
லாசறவருபவரளகக்காட்டினு
மாசறுமறத்தியரளகவைப்பினும். (௮௬)

கோடையால்வெப்படைந்தெய்துங்கொற்றவன்
வேடையானதுதவிர்ந்திருத்தல்வேண்டியோ
வாடையந்தென்றலும்வந்துவீசிட
வேடவிழ்மலர்க்குவடெதிர்தகைந்ததே. (௮௭)

அத்தடங்கிரிவளனனைத்துநோக்கியே
சத்திரநிழலெழத்தரணியாள்பவன்
முத்தர்கண்மொழிப்படிமுன்னிவைகினன்
சித்திரந்தேரினின்றிழிந்துசிரோடும். (௮௮)

தேர்களுங்கரிகளுமனத்திற்செல்கநிப்
போர்தருபரிகளுஞ்சகடம்பூண்டுறு
வார்களுமிழிந்தினர்சிவிகைமேல்வரு
வோர்களுங்குழுமினருவப்பினோடுமே. (௮௯)

சந்தனவிருக்கமும்பலவுந்தாழையுங்
கொந்தடர்மாமகிழ்குரவங்கோங்குருன்
மந்திகடாவுதேக்காநிவான்றரு
வுந்துருமிடத்தெலாமூர்திபூட்டினர். (௯௦)

ஆயிரமாயிரமாடமாளிகை
மாயிருமறுகொடுவருத்துகல்கலாற்
காயிருங்களிரனர்காதன்மாதரோ
டேயினரப்புறத்திருக்கைதோறுமே. (௯௧)

உந்துறுசெம்மணிபுருட்டியோங்கல்வாய்
வந்திழியருவியினுடிமங்கைமார்
கந்தனையனையவர்கரங்கள்பற்றியே
சந்ததமியங்கினர்வரையின்சார்பெலாம். (௯௨)

வேறு.

குயிலொடுகூவுவர்கிளியொடுகொஞ்சி
மயிலுடனுடுவர்மானுடனேடிப்
பயிலணைநாணநடந்துபடிப்பா
ரியலுடன்யாழ்கரமேந்தினர்பல்லோர். (௯௩)

விஞ்சையர்நாணவிளக்குமிசைத்தேன்
வஞ்சியர்நல்கமறந்தியரெல்லாம்
பஞ்சியணிந்தபதங்கள்வருந்த
வஞ்சிவிலங்குவரன்னமுயிர்ப்ப. (௯௪)

முல்லையரும்புமுகிழ்ப்பநகைப்பார்
பல்லவமூர்துபதத்தின்மிதிப்பார்
நல்லனபோதையலங்கல்களுற்றிக்
கல்லிளமாமுலைமீதுறல்காண்பார். (௯௫)

சாலைகள்கண்டனர்தாபதவேள்விச்
சோலைகள்கண்டனர்துன்னியபொற்பூ
மாலைகள்கண்டனர்வான்பணையின்பொன்
னூலைகள்கண்டனரோகையினோடும். (௯௬)

கைக்கரிகண்டுகலங்குவர்காந்த
னுக்கலைபற்றியிருத்தெதிர்சேர்வர்
மிக்ககுடாவடிவெல்லரியாமாப்
புக்குயர்வேங்கைபொருந்திடமாய்வார். (௯௭)

மன்னவனீதிவழாமுறையாலே
துன்னினருக்கொருதுன்பமுறாதா
யென்னவைமும்பெரிதெய்திமடங்கி
முன்னரிருக்கைகடோறுமுனைந்தார். (௯௮)

வேறு.

கடகரியெருத்தமீதுகவித்தவெண்கவிகைவேந்த
னிடாறுகிரிமேருதெக்கணத்திசையையாக்கி
யடலுறுமேருவெற்புக்கடுத்தபார்பரிக்குமாறு
வடதிசைபுகுந்ததென்னவிரவிபோய்மறைந்ததன்றே. (௯௯)

அறன்மகன்செலுத்துமாழிசெம்மையென்றகிலத்துள்ளோர்
திறனெலாமுணருமாறோவென்கொலோகதிரின்செல்வன்
புறமடைந்தொளித்தபின்னும்பொய்யிருளகலச்செய்ய
நிறனடைந்திருந்தவானும்நிலனுமேற்றிசையினம்மா. (௧00)

கலைபடித்துணராத்தீமைக்கொடியகோற்காவல்வேந்தர்
கொலைபடிந்தொழுக்கமெல்லாங்குடிபுகுந்திருந்துநாட்டிற்
றலைநிகருளத்தானீதிகாணவந்தொளித்தோர்சூழற்
றலையெடுத்தஞ்சிநீங்கல்போன்றதுசார்ந்தமாலை. (௧0௧)

நீடியபுகழும்பாலின்வேலையுநிலவாய்மூடப்
பாடியபுகழான்வெண்மைக்கவிகையேபனிமெய்யாக
வோடியமாலைதன்னையுருத்தெழுந்தடர்ப்பதென்ன
மூடியகடல்வாய்பிறிமுழுமதியெழுந்ததன்றே. (௧0௨)

பங்கயஞ்சூதமுல்லையசோகுடனுற்பலங்கொண்
டங்கசன்றென்றற்றேரினாயினன்முரசமார்ப்ப
வெங்கணுமுலவிமீண்டிவ்வேந்தல்வாழ்பாசறைப்பாற்
றங்கினனிவர்கள்செய்யுந்தன்மைசற்றறையலுற்றேன். (௧0௩)

அஞ்சனந்தீட்டுவாருமாதனமாற்றிநீங்கிப்
பஞ்சிகளடிதோய்வாரும்பரிபுரம்பதத்துய்ப்பாரும்
விஞ்சுறவெண்முத்தாரம்விளங்குறத்தரிக்கின்றாரும்
வஞ்சிநுண்ணிடைபொறாதென்றுகுலமதிக்கின்றாரும். (௧0௪)

கருங்குழலளகந்தோறுங்கமழ்மலர்சொருகுவாரு
மருங்குலில்வயிரஞ்சேர்த்தவட்டிகைவரிக்கின்றாரு
மிருங்குவிமுலையிற்றொய்யிலெழுத்திடுவாருஞ்சேக்கை
தருங்கடிமலர்சேர்ப்பாருந்தண்ணறவருந்துவாரும். (௧0௫)

பரிவினான்மணவனாசைபடர்தருகொழுகொம்பாகிப்
பிரிவினால்வருந்துவாருமூடலைப்பெருக்குவாரும்
விரிவினாற்பொருதுகாமவேட்கையிற்சருவுவாரும்
வரிவிழிவலைகள்வீசிவருநகைளைவிக்கின்றாரும். (௧0௬)

அனங்கவேதங்களெல்லாமாய்ந்தறிவுறுத்துவாருந்
தனங்களினறுஞ்சேறாடிக்காந்தனைத்தழுவுவாரும்
மினம்படுகுயிலைத்தூதுக்கேகவிட்டெதிர்செல்வாரு
மனங்களித்துனிவருத்தமஞ்சமேற்பயிலுவாரும். (௧௦௭)

எற்றுணுமதுவின்றேறலெறிவெறியதனாற்கூறை
காற்றினிலகலக்கையால்வெள்ளிடைக்கலைசேர்ப்பாரு
மாற்றமொன்றெடுத்துவேறுமயக்குறப்புகல்கின்றாருந்
தோற்றியமதியைவெய்யசுடரெனவொறுக்கின்றாரும். (௧௦௮)

இருதனவரைகளாலுமிருசெழுங்கரங்களாலு
மொருதனிநிதம்பத்தாலுமுடனெருருந்தழும்புண்டாக்கி
வருதனிமணவனாடுபோயலின்மருவிவாசந்
தருமலர்க்கணையினானையிகழ்வுறுத்தாத்தினாரும். (௧௦௯)

இன்னணநகரிமுற்றுமிரவினையகற்றமன்னர்
மன்னவன்றனிப்பூஞ்சேக்கைவாய்த்துமிழ்மணித்தீபங்க
டுன்னிடக்குரவற்காணுமாசையுந்துயருமுந்த
வன்னிலையிரவைநீத்தானெறிபடரணங்கினோடும். (௧௧௦)

கரகதயானைவேந்தனருந்தவச்சாலைகாண
விரகதுபுணருமாறுவெண்மதியிரவோடேகத்
துரகதத்தேர்மேற்பச்சையாழியிற்சுடருமாயன்
மரகதமார்பிற்செய்யமணியெனவுதித்ததம்மா. (௧௧௧)

முன்னரேமலர்ந்தபொய்கைமுளரிகண்முகிழ்ப்பமாதர்
மின்னொளிமுகங்களெல்லாமலர்ந்தனவெயிலைநோக்கித்
துன்னியசகோரராசிதுயின்றனநீலக்கண்கண்
மன்னியவுயிர்களெல்லாமொலித்தனமண்மீதம்மா. (௧௧௨)

ஆடகக்கிரியைச்சூழுமாதபற்கருக்கியங்க
ளீடறக்கொடுத்தபின்னரீண்டியதானையோடு
மாடகலரதமின்னார்குழுவொடுமானமிக்கோன்
பாடலரிஞரோடும்பாரின்மேற்பாரிற்போந்தான். (௧௧௩)

துன்னியதானைசூழத்தூர்துமிதுவைப்பவைவேன்
மன்னவர்மருங்குசுற்றமடநல்லார்கவரிவீசப்
பொன்னகர்க்கிறையோவேழாந்திசைபுரப்பவனோவென்று
பன்னிடச்சென்றுகண்டானருந்தவம்பயிலுஞ்சூழல். (௧௧௪)

கங்கையந்திவலையோடயமுனையுங்கலவாப்பாங்கர்
புங்கவர்பரவுந்தூயகேத்திரத்தெல்லைபுக்குத்
தங்கியமுனிவர்காட்டத்தாதைசெய்தவத்தின்சாலை
யிங்கிதென்றுணராமுன்னரிரதநீத்தடைந்தான்மன்னோ. (௧௧௫)

இளைஞருமடநலாருமேனையர்பலருந்தத்தங்
கிளைபடுமூர்திரீக்கிக்கிளர்ந்தெழுவொழிபதாதி
வளைவுறவிருப்பநல்கிமதியென்போன்கோள்களோடும்
விளைபலமீன்களோடுமுறுவபோல்வேந்துஞ்சென்றான். (௧௧௬)

ஆயிடைப்பன்னசாலைக்கணித்துறவருந்தவத்தோர்
தூயவன்வரவுநோக்கியெதிர்ந்துநின்றுய்யத்தாதை
மாயிருமடவாரோடயமுனைநீர்துளையும்வண்ணம்
போயினனென்னச்சென்றானத்திசைப்புலவுவேலான். (௧௧௭)

ஈண்டிவர்செல்லமுன்னரேகினார்யமுனையாடி
மீண்டனரெதிரினோக்கிவேந்தனுமலர்நேர்கண்க
டீண்டிறத்திவலைமுட்பிற்றுளைந்தவன்றாளில்வீழ்ந்தான்
பாண்டவரணைந்தாரென்றுசொல்லுமுன்பரிந்தெடுத்தான். (௧௧௮)

ஆசிகள்புகன்றுமார்பிலழுகுறவணைத்துநாட்டம்
வீசியதிவலைமாற்றிவிடுத்தனனறன்றந்தோனை
மாசிலாமடநல்லாருமிளைஞரும்வணங்கவாழ்த்தி
நேசசீர்மையனாய்நின்றான்குறைவிலாநெறியினின்றான். (௧௧௯)

ஆய்ந்துளசுபலன்பாவையடிதொழுதெவருமன்பா
லீந்துளவாசிகூடியீன்றதாய்க்கருகுறுமுன்
பாய்ந்தடித்தலத்தில்வீழ்ந்துபற்றினனிளையகாளை
சாய்ந்தமிக்குடையமின்னுந்தழுவினளவனையம்மா. (௧௨௦)

மிக்கவர்பலருமெண்ணின்மாதரும்விரைந்துசென்று
தக்கவளடியிற்றாழ்ந்துவிழிப்புனலாட்டிச்சால
நெக்குருகிடவேநின்றார்நிரம்பியகருணைக்கண்ணா
லக்கொடிநோக்கிப்புல்கியன்பொடுமாசியீந்தாள். (௧௨௧)

மடநலார்பலர்க்குமின்சொன்மொழிந்தபின்மாசிலாத
தடமதியுடையதூயசஞ்சயன்றன்னைநோக்கி
யுடலுறவுயிரும்நெஞ்சுமொன்றெனவணைத்துயிர்த்தான்
குடமுலைமேதித்தீம்பாற்கூழ்வளர்த்திடுநன்னாடன். (௧௨௨)

கருந்தடங்கண்ணீர்வாரக்காமருகொங்கையேந்தி
வருந்தியமருங்குறேய்க்குமாதர்கண்மருங்குசூழப்
பொருந்தியேயன்பர்தங்கள்புணரியிற்பெருகநின்றா
னருங்குலப்புகழைத்தூய்மையாக்கவந்துதித்தகோமான். (௧௨௩)

ஒருவருக்கொருவரன்புமினிமையுமூறலூற
விருவருக்கத்தினோருமொருமையுற்றியங்கும்வேலைக்
கருவருக்கத்தின்மீளக்கலந்திடாக்கருணையண்ணல்
வெருவரத்தனுக்குற்றாங்குவிதுரனைவினாதல்செய்தான். (௧௨௪)

வஞ்சமாமறிவுகல்லாதுளவெலாம்வல்லதூய
சஞ்சயன்புகலுகின்றனவனுடைத்தன்மையெல்லாம்
பஞ்சின்மெல்லடியாராருமின்னுரும்பழனந்தோறுங்
கஞ்சநன்மலர்த்தேன்பாயும்நாடனுங்கன்னத்தேற்ப. (௧௨௫)

ஈண்டொருவருடங்காறுமேந்தலுக்கேவன்முற்றி
மாண்டகவியங்கிப்பின்னர்மாதவத்துறுதிவாய்ப்பப்
பூண்டபேருருவினோடுபுகுந்துமீண்டுலாவுகின்றான்
வேண்டினோடுனருமீசன்வெறியைமேற்கொண்டவர்போல். (௧௨௬)

இருந்திடினிருக்கும்நீங்கியேகினுமேகுநன்னீ
ரருந்தினுமருந்துமோர்சொல்லறையினுமறையுமேனி
வருந்தினும்வருந்தும்வானின்மறையினுமறையுமென்னே
பொருந்திடவுரைத்தல்கூடாதவன்செயல்புலவுவேலோய். (௧௨௭)

என்றவனுரைத்தலோடுமன்பினுக்கெல்லையானோன்
மன்றலந்தோள்கள்வாடமரைவிழியாலிசோர
வொன்றியசிந்தையோடுங்காண்டுமோவவனைக்கண்ணா
லென்றனலுயிர்ப்புநீடியாவருமிரங்கினாரே. (௧௨௮)

மாத்தவமுறுதிகொண்டதாதையுமயக்கநீக்கி
வாய்த்திடுமவனைக்கண்டால்வருந்தலீர்வம்மினென்று
பூத்துணர்கமழுஞ்சாலைப்புக்கனவிருந்தபின்னர்
காத்திரவனப்போர்பாங்கர்கைதொழுதியல்பிற்சூழ்ந்தார். (௧௨௯)

வேறு.

கோமுனியடைந்தசெயல்கேட்டுமகிழ்கொண்டே
மாமுனிவரெண்ணிலர்கண்மங்கையரனேகர்
தாமுறையிடங்கடவிர்வுற்றருகுசார்ந்தார்
காமுறுகருத்தினர்கள்காணும்விழைவாலே. (௧௩௦)

அண்ணலெதிர்கொண்டவருங்கடனியற்றி
மண்ணியலுந்தவிசின்வைத்தடிவணங்கி
புண்ணியருட்கொடுபுரிந்தருகிருந்தார்
தண்ணுலவுதாதையைவணங்குபுடைதக்கோர். (௧௩௧)

வந்தமுனிவோர்திரிதராட்டிரன்மகாரை
யுந்துமடவாரையுமுணர்த்துமினெமக்கென்
றந்தணர்பணிப்பவவர்க்கஞ்சலியினோடுஞ்
சந்ததமியற்றுநெறிசஞ்சயனுரைத்தான். (௧௩௨)

சாம்புநதவேமநிகர்மேனிதடமார்பு
மேம்பலுயர்நாசிகுழையேறுமிருகண்க
ளோம்பவமைநீள்கரமுலாவுகளரேகை
யாம்பரிசுளானறனளித்தமகவாமால். (௧௩௩)

செம்மைதருமேனியடல்சேருமிருநின்றோன்
வெம்மைவிழிவல்லுரம்விளங்குதரமுள்ளோன்
விம்முமுரசார்த்தகொடியோனிளையவீமன்
கைம்மலைகளோரயுதமெய்வலிகலந்தோன். (௧௩௪)

காமருபசும்புயல்கடுக்குமுடலஞ்செந்
தாமரையலர்ந்தவிழிதண்மொழிகடந்தோன்
வாமமிருசெந்துவர்செய்வாயிதழுமுள்ளோ
னாமமதுபற்குனனெனப்புகனலத்தோன். (௧௩௫)

இந்திரனுமானுநிகரென்னவிருபாலுங்
குந்தியருகிற்றிகழ்குமாரரிளையோராஞ்
சுந்தரமதற்கொருவர்நேரறுதுவக்கோ
ரெந்தவுலகும்புகழிரட்டையர்களென்போர். (௧௩௬)

நீலவிழிசெய்யவுடனேரறுவனப்பிற்
கோலவிதழ்வெள்ளிடைமருங்குலிருகொங்கை
வாலவயதன்றிமுதிராதமடமங்கை
சீலமுறுநற்றுருபதேயன்மகளம்மா. (௧௩௭)

நீரசமலர்ந்ததெனமாமுகநிறைப்ப
காருலவுநீலநிகர்கண்ணழகெறிப்ப
வேருலவுறும்பரிதியென்னவருகேசேர்
நாரிமணியாதவர்கணங்கையுணர்வீரால். (௧௩௮)

பொற்பிருவரைத்தனிபுரைந்ததிருமேனி
யற்புதமுறத்திகழணங்கனையசீரார்
பற்குனனருட்குரியபன்னியருளாகி
நற்செழியன்மங்கையிவரென்றறிமினுமம். (௧௩௯)

ஆடகநிகர்க்குமிளமேனியழகாலே
பீடமர்தருங்கொடிபெருந்தகைபிராட்டி
நாடவரிதானவெழினங்கையிருவோரிச்
சேடனிகர்வீமன்மனைமாதர்மதிசேர்மின். (௧௪௦)

அஞ்சுகமுநாணுமொழியம்பரவின்மேனி
வஞ்சியரிரட்டையர்மணந்தவர்களேனு
மிஞ்சொலுடையக்கொடிமுதற்குமரனில்லாள்
செஞ்சுடநிகர்க்குமிவடேவன்மனையாளே. (௧௪௧)

வெண்கலைபுனைந்துடல்விளக்கமறமேவும்
வண்மைமடவார்விழியின்மன்மருகிமாரா
முண்மைகொள்சுபத்திரையிடத்தவரையொப்ப
நண்ணுமவளுத்தரையெனும்பெயர்நலத்தாள். (௧௪௨)

மன்னுமுனிவோர்பலருமாதர்பலர்சாலி
யன்னநெறியோருமறியக்கடவதென்றே
பன்னினனுயர்ந்தறிவுபற்றியகுணத்தா
னுன்னிமகிழ்வுற்றனர்களாசியொலியோடும். (௧௪௩)

அந்தன்முதன்மைந்தனெதிரானனமுறுத்தி
யுந்தனரசும்படையுமுற்றமுளதேயோ
சந்ததமுநின்றுணைவர்நின்சொறவருமை
ஓந்துவர்கொலோதருமவாழிமுறையோடும். (௧௪௪)

நண்புடையாருநலமோநகரிலுள்ளோர்
பண்புடையரோதொழில்செய்பான்மையுடையோர்க
டிண்மையுளரோபலதிசைக்கவிகைவேந்தர்
வண்மைகுறையாதுனைவணங்கியெதிர்வாரோ. (௧௪௫)

சுற்றமிகுமன்பினொடுசுற்றியகலாவோ
கற்றவர்மகிழ்ந்துறுகருத்தினகலாரோ
பற்றலர்களஞ்சியடிபற்றியுறுவாரோ
கொற்றமுடைநால்வருணமுங்குலவுறுமோ. (௧௪௬)

மாமறைவலோர்க்குதவுமாநகரனைத்துங்
கோமுறைவழாதுநெறியிற்குலவுமாறே
பாமரமறுத்தறிவுபற்றியெவரேனு
மாமுறையறங்கடையளித்தறவறின்றே. (௧௪௭)

தேவதைகளுக்குமதிதிக்குபூவினுக்கு
மேவுகுரவர்க்குமுளமேன்மைகள்வழாதே
தாவுமுயர்பூசையொடுசத்திரமனேக
மோவறுதருப்பணமிகுத்துலகினுண்டோ. (௧௪௮)

வாலவயதுள்ளவர்விருத்தர்பலமாதர்
சாலவலியற்றவர்தமக்கினியசிந்தை
ஞாலமதிலச்சமறநாடுமுறையுண்டோ
சீலமறைவேள்விவலிதோசிறவவென்றார். (௧௪௯)

இத்தகையபெற்றியினவக்கரமிணைத்துப்
பத்தியினறத்திறையளித்தபடைவேந்த
னுத்தமவனைத்துநினதாணைவழியுண்டென்
றத்தகையுரைத்தபினெடுத்தறையலானுன். (௧௫௦)

வேறு.

பழுத்தவிருத்தத்திருமேனிபயிலுந்தவத்திற்காயினதோ
வழுத்திநின்றுவழிபடுதற்கென்றுங்குந்திவருந்தினளோ
விழுக்கொன்றுணராப்பெரியதாயலசாதாற்றமியல்பென்றே
குழுக்கொண்மடவாரிளமேனிதவஞ்செய்தொடுங்கல்கொடிதன்றே. (௧௫௧)

தண்ணார்மொழிசேர்சஞ்சயனுஞ்சாலத்தளர்ந்தகனியாக்கை
யென்னாதுமக்குவழிபாடுமியற்றுதவமும்பொறுத்தானுற்
கண்ணாற்காணேன்விதுரனையான்சுழிந்தெங்குளனேகருத்தென்னே
விண்ணோர்க்கெனினுமூழ்வலியைவிலக்கற்கமையாதெனவுரைத்தான். (௧௫௨)

அருளுக்கொருவனுயிர்த்துயிர்த்தாங்கறையக்கேட்டுப்பெருந்தாதை
மருளுற்றிரங்கேலெனதுடலந்தவத்திற்காற்றவலத்துளதாம்
பொருளிற்சிறந்தபேரறிவுபூண்டகுந்திவழிபடலாற்
றெருளிற்சுபலன்றரும்பாவைசெயலாற்குறையொன்றிலையாமால். (௧௫௩)

எக்காலத்துமிவரிருவரியல்பார்தன்மைச்சஞ்சயனு
முக்காதலசாதொடுங்கியுளமொதுங்காரிருந்துவழிபடுவர்
முக்காலத்துமுறையாகமுனிவரருளாலுடலணங்கற்
றிக்கானகமேயினிமையெனவிருந்தேமெமக்கோரிடரிலையே. (௧௫௪)

மதுரமொழியும்பேரறிவுமாண்புமடையக்கைவிட்டு
விதுரன்வெறிமேற்கொண்டகன்றுபயிலானின்றானினிமீண்டு
கதிர்வேலரசேநினைக்கண்ணாற்காணப்புகுவன்கலங்கலென
முதிருங்குரவன்மொழிந்திடலுமுரசமுயர்த்தோன்மகிழ்ந்திருந்தான். (௧௫௫)

காதற்பயிலவிவரிருந்தகனிமென்சோலைக்கணித்தாக
வேதக்குரவனொருவனிதோவிதுரனடைந்தானெனமொழியச்
சோதித்திருமாமணிமுடியோன்றுணைவருடனுமாதரொடும்
போதத்தெழுந்தாங்கெதிர்சென்றான்பொறைக்குநிறைக்கும்பொருவில்லான்

நீறுபூத்தநெருப்பென்னநெடியவுடலந்துகளடைப
வேறுபடுத்துந்திருமுகமுஞ்சடையும்விரிந்துவெறிகாட்ட
மாறுபடுத்துமயிர்ப்பாசம்வயங்கச்சாத்தித்திகம்பரனா
யாறுதரித்தோனெனவிவர்நேரானானறிவுக்கடங்காதோன். (௧௫௭)

சோலைப்புறத்திலிவர்பலராய்த்தோற்றுமுறையாற்றுணுக்குற்று
ஞாலத்தகன்றுவிரைந்தோடாநம்பியுணர்ந்தாங்குடன்வந்தோர்
சீலத்துடனேயவணிறுவிச்செங்கோலரசனொருதமியாய்
மாலுற்றடைந்துபின்சென்றுவந்தேனென்தாய்வருகென்றான். (௧௫௮)

தருமன்மதலைமொழிகேட்டுத்திருகியொருபூந்தருநிழலி
லிருகண்முகிழ்த்துநின்றிடலாலிறைவனருகிலிசைந்தெய்தித்
தெருமந்தையாயானறத்தின்செம்மலடைந்தேன்றிருநோக்க
மருளவேண்டுமிவனென்றான்விழித்தான்விதுரனம்பகங்கள். (௧௫௯)

காணுங்கருத்தரிருவருமாக்கலந்தபாங்கர்தவவிதுரன்
மாணுந்தனதுகருணைவிழிமலர்ந்திநோக்கிமைந்தன்முகம்
பேணும்புலனுமாருயிரும்பிரியாவுடலிற்பிரித்தகற்றிப்
பூணும்புகழானுடலகத்துட்புகுந்தொன்றானான்புலப்படவே. (௧௬௦)

வாசக்கமலமுகமலர்ந்துவலியுமறிவுந்தழைத்தோங்கித்
தேசிற்சிறந்தானுதிட்டிரனச்செய்கையுணர்ந்தானவனுடல
மாசற்றிருக்குஞ்சமாதிநிலையிருப்போர்போலவயங்குதலா
லாசற்றடைந்தானுயிரொன்றேயானேனறவும்வியந்தானே. (௧௬௧)

வே று.

காணாதகண்டுகருதாமலன்றுகவினானமேனிதழலிற்
கோணாதபெய்யுமுறைநசிந்தையூடுகொளுமுன்னெழுந்ததொருசொன்
மாணாதசெய்கைவினையேயெரிக்கவலியுள்ளவன்கொறழலோ
னேனாதகற்றுகெனவேகடுங்கியிருகைமுகிழ்ந்துவெருவி. (௧௬௨)

அச்சார்புநீங்கிவருதம்பிமாருமணிவிஞ்சுமாதர்பலரு
மெச்சாவிளங்கவுயர்தாதைமேவுவிபினத்தடைந்துமொழிய
பொய்ச்சார்பிலாதமுனிவோர்மகிழ்ந்துபுனிதன்செயற்கையிதுவென்
றச்சாயமாகமுகமன்கள்கோடியுரைசெய்திருந்தபொழுதில். (௧௬௩)

தன்றம்பிசெய்கையுணரத்தளர்ந்துதவகாரதன்சொனினையா
முன்றந்தமைத்தபடியென்றுதேறிமுதன்மைந்தனைப்பரவியே
பொன்றங்குமேனிமுனிவோரிருக்கைபுகுவித்தபின்னர்புலனைக்
கொன்றந்திடாதவிழியானிருந்துகுமரற்கொர்வாய்மைபுகல்வான். (௧௬௪)

நெறிவந்தபான்மையதனாலுமுண்டிநிகழாமையானுமுடலம்
பொறிதங்கணங்குசெறிவிர்கடன்கள்புரிவீர்கிழங்குகனிகாய்
முறையெங்களோடுமுசியாதருந்தன்முதலாமறங்களெனவே
யிறைதந்தவாய்மைநலமீதுருடியிசைநீர்துளைந்துவரவே. (௧௬௫)

பல்லோர்திரண்டுகனிகாய்கிழங்குபலருக்கருந்தவிறையோ
டெல்லாருமொன்றியினிதாகமாந்தியலைநீரருந்தியிதுவே
நல்லோரியற்கையெனவங்கைபூசிஞாலத்தின்மீதுதுயில்வுற்
றல்லாங்குநீங்கவதன்முன்னர்நீங்கியலரிக்கிணைக்கைகுவியா. (௧௬௬)

மீண்டெய்திவேந்தனடிதாழ்ந்துதாயரடிமீதுவீழ்ந்துவிறலாற்
பாண்டென்றுதந்தவுரவோர்கண்மாதர்பலரோடுசூழ்ந்தபொழுதிற்
காண்டுங்கருத்தர்பலரோடுமன்றுசதயூபர்வந்துகலவா
வாண்டின்சொல்கூறியவர்செல்லவைவரகலாதிருக்குமளவில். (௧௬௭)

உச்சத்தினெய்துகதிர்கண்டுதாதையுரவோரையன்னமுடனே
விச்சித்தயாவுமினிதோடருந்தியிசைமஞ்சமீதுதுயில்வீ
ரச்சம்பயிர்ப்புமடநாணுயர்ந்தவணிமாதரோடுமெனவே
நிச்சித்தகற்றுமியல்பாயொர்திங்களிங்காதிருந்தனர்களே. (௧௬௮)

ஒருநாளணைந்தகதிர்கண்டுமுற்றியுயிர்போலவிகர்த்தகருமம்
வருமாதரோடுமினையோர்களோடுவயவேலெடுத்தபெருமான்
றருதாதையோடுமடமாதர்வைகுசாலைக்கண்ணெய்திமுறையே
திருவார்பதங்கடொழுதன்பினோடுதிறலோடிருக்குமளவில். (௧௬௯)

வனம்புகுசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௯௧.

௨

புத்திரசோகந்தீர்த்தசருக்கம்.

காலையுமுச்சியுங்கதிர்மறைத்தெழு
மாலையும்நிசியும்வைகறையும்யாமமும்
சிலநற்கடிகையுந்துடியுஞ்செப்புதன்
மாலுடையசைவலான்மற்றொன்றில்லையே. (௧)

செஞ்சடைசெக்கரிற்பொலியச்செங்கையின்
மஞ்சனக்கமண்டலந்தண்டமல்குற
விஞ்சியவாரணம்விரித்தமாமுனி
பஞ்சவர்மேவுமப்பழுவத்தெய்தினான். (௨)

தாதையுமைந்தருந்தகுதிமாதரு
மாதரம்பெருகிடவணுகித்தாழ்ந்தெழா
மாதவத்தரசினைவழுத்தியாதன
மீதுறவைத்தருச்சனைவிதித்தபின். (௩)

பற்பலமுனிவர்கள்பருதிசூழ்தர
முற்படுகுணத்தவனாசிமொய்ம்புடை
நற்குணத்தவர்க்கெலாம்நல்கிநன்மொழி
வற்கலையுடையினான்வைகியோதுவான். (௪)

மூப்பிடையொருவனீமுனிவர்சீரினிற்
காப்புடையவனிவிட்டடவிகைக்கொளா
வாய்ப்புறத்தவத்தினில்வைகினாயன்றே
சாய்ப்புறவினையெலாந்தாழத்தாழவே. (௫)

மாற்றமொன்றுரைக்கமெய்வலியிலாய்தவத்
தாற்றலுண்டாயதேமிகவுமற்புதந்
தோற்றமுமொடுக்கமுந்தொலையுநாள்வரி
னேற்றநற்செயன்மனத்தெய்துவிக்குமே. (௬)

ஐயநீயருந்தவமாற்றநாடொறுஞ்
செய்யகாந்தாரிநின்றியற்றுஞ்சீரெலா
மொய்யெனவுணர்ந்தனமுடலணங்குறு
துய்யுமாறுனைவழிபடுதலாற்றமே. (௭)

வணங்கிவாய்புதைத்துநின்மருங்கிற்குந்திமெய்
யணங்குறுதற்பகற்றொழில்செய்தாற்றினா
ளிணங்கியமுன்றவமிருந்துளோர்க்கலா
லுணங்கியவிச்செயனெய்திற்கூடுமோ. (௮)

வஞ்சமெள்ளளவிலாத்தூயமானதச்
சஞ்சயன்முன்னரிற்றவஞ்செய்தான்கொலோ
விஞ்சுநின்பதமலர்விரும்பியாற்றிய
நெஞ்சினிற்கருத்தையார்நிகழ்த்தற்பாலரே. (௯)

மதித்திகழ்மாநகர்விடுத்துன்வாஞ்சையா
லுதிட்டிரனாதியோருற்றவைகினார்
விதித்தவக்குமரர்நூற்றுவரின்மேம்பட
வுதித்தவனாரவனென்றுணர்தியுண்மையோய். (௧௦)

ஆண்டவர்தீமைசெய்தமரின்மாண்டனர்
பாண்டவருன்வழிபடுதற்காயினார்
காண்டியதியவரைக்கருதன்மைந்தரென்
றீண்டிவர்புதல்வருன்னிசைவளர்க்கலால். (௧௧)

இத்தகையுலகினிலின்றவற்கொரு
புத்திரரிவர்நிகர்புகலக்கூடுமோ
வித்தகநின்னுடைமேலைநாட்டவ
முத்தமரைவராவுதித்ததன்றியே. (௧௨)

ஆயினுமடிந்தநின்றனையர்க்காகநீ
நேயமுற்றிராப்பகனெட்டுயிர்த்தநீ
தூயவித்தவத்தினுஞ்சுமந்துளாய்கொலோ
மாயமற்றிதுவெனமறந்துளாய்கொலோ. (௧௩)

நீமறந்திருப்பினும்நினைவினாயினுந்
தாய்மறந்திருப்பதுசாலவற்புதந்
திமனைப்புதல்வரைச்சிந்தைசெய்தொரு
மாமனுநீதியுமறையுமஞ்சுமே. (௧௪)

ஆதலானுந்தவமழியுமாங்கவர்
காதலான்மறப்பதேகருமமாகுமா
லோதலாமுறுதியீதென்னவோதினான்
சாதலும்பிறத்தலுந்தவிர்ந்ததன்மையான். (௧௫)

தந்தவன்கூறியசால்பெலாமுணர்ந்
துந்துகட்புலனிலாவிருகையுச்சிமேற்
புந்தியார்ந்தேத்தியேபுகறன்மேயினா
னிந்திரன்பிரமனுக்கிறைஞ்சியோதல்போல். (௧௬)

ஆற்றலிவிடைந்துழப்படைந்தமேனிநிற்
போற்றியுன்னருட்கொடுபுகுந்தபான்மையாற்
சாற்றருமெய்வலிதவத்திற்காயதா
லேற்றநின்னருளலாதிசைத்தற்கில்லையே. (௧௭)

பைங்கொடிசுபலன்முன்னளித்தபாவையு
மந்தியும்பகலும்நின்றுற்றுமேவல்கள்
சிந்தையினற்புதஞ்செறியுங்குந்தியார்
முந்துறமுயற்சியார்மொழியப்பாலரே. (௧௮)

காமருசஞ்சயனவனையகாட்சியான்
மாமுனிநின்னருள்வளமிதாகுமா
லேமுறுபொருளறவிழைத்துளேன்றவ
மாமுறையறிகிலேனையகேட்டியால். (கக)

புத்திரரைவர்செய்யமரிற்பொன்றினோர்
சத்துருவருக்கமென்றுளத்திற்றுங்கினே
னுத்தமசோகமொன்றுறுதலில்லையா
லத்தநின்பொருட்கொலோதெளிவிதாங்கொலோ. (உ0)

தோன்றியதில்லைபிச்சுபலன்பாவையா
லின்றவக்குமரர்போயிறந்துதுன்பமீண்
டேன்றியபொழுதுதொட்டுளத்திலாற்றின
ளான்றபேரறிவுடையாரிலையனே. (உக)

கருத்துமென்னாற்றலும்நினைப்புங்காட்சியு
மருத்தியுமுதிட்டிரனிடத்துண்டாயதாற்
றிருத்தகவவனினதருளிற்செய்யகோற்
பொருத்திடநெடிதுநாட்புரக்கமன்னெலாம். (உஉ)

அன்றியும்யான்பிறப்பலசினேனெனக்
கொன்றுநின்னருட்கதியுறுத்தல்வேண்டுமா
லென்றுபற்பலமுறையியம்புமாயிடை
குன்றிளமுலைமினார்குழுக்கொண்டெய்தினார். (உங)

துருபதன்மகள்சுபத்திரையுமூகிநன்
னிருபர்கோன்பாண்டியனளித்தநேரிழை
திருவனாரேமையர்சேர்ந்துதாழ்ந்தெழுந்
தருள்சிரம்புனைந்தகன்றன்பின்வைகினார். (உச)

பின்னரும்வியாதன்றன்மகனைப்பேரரு
டுன்னிடநோக்கியேதூய்மைமிக்குளா
யுன்னியபடியுனக்குதவவெய்தினே
னென்னுனக்கபிமதமியம்புகென்னவே. (உரு)

வீரியன்றருசுதன்மிகமகிழ்ந்தினிப்
பாரிலேதெனக்கரிதென்றுபற்பல
காரியமுகமனுங்கழறிப்பின்னரும்
நேரிலானோர்மொழிநிரப்பலாயினான். (உசு)

ஆண்டகைநின்னருளன்றியாருமென்
மாண்டகுசிந்தையினில்லைநின்மனம்
பூண்டவர்தாமெனக்கமையும்போதவென்
றீண்டிருகரமெடுத்திறைஞ்சியோதினான். (உஎ)

மாதவர்திலதனவ்வாய்மைகேட்டபின்
காதலன்மலர்முகங்கவினோக்கியே
யீதலநின்மனத்திருத்தலுண்டது
போதுறவுரைத்தியிப்பொழுதினல்குவேன். (௨௮)

வானவர்க்கரியதேயெனினுமண்ணுடை
மானவர்க்கரியதேயெனினுமாதவ
மோனியர்க்கரியதேயெனினுமுற்றுவன்
றூனகத்துளபடிசாற்றுகென்னவே. (௨௯)

அம்பகம்புலன்செயாவரசுமாங்கவ
னிம்பரிற்புகன்றசொற்செவியினேற்குமுன்
கம்பமுற்றுடலிதுகழறன்மேயினு
னும்பருக்கரியவனெக்கும்வேதன்முன். (௩௦)

எந்தைநின்னடிகள்சான்றாகவேழையேன்
சிந்தையிற்றங்கியதேவுமாற்றலு
முந்துறுவிருப்பமுமுடிபும்யாவது
முந்துநின்னடிமலரன்பொன்றுன்னுவேன். (௩௧)

தேவராசியக்காற்சிறந்தபேருடை
மூவரான்முனிவரான்முற்றெருணப்பொருள்
யாவதோவெனினுனதிணையடித்துணைத்
தாவியவன்புடைத்தாதல்சாற்றினேன். (௩௨)

இனிப்பிறவாமலிவ்வெடுத்தவாக்கையும்
புனிதமுற்றிருவினைபோக்கவல்லதுன்
றனித்திருவடிமலர்ச்சார்பலாற்பொலா
மனத்துறுகருமமேதுதவவல்லதே. (௩௩)

ஆயினுநாட்பலவாகவையுறும்
நாயினேனெண்ணமொன்றுண்டுநண்ணிநீ
தாயினுமன்பினாற்சாற்றுகென்றலாற்
றீயதேயெனினும்யான்செப்பக்கேண்மினோ. (௩௪)

வெய்யசொற்சிறுவர்நூற்றுவர்கண்மேவியென்
மையலைப்பெருக்கிமாநிலப்பொருட்டினு
லைவரைமாறுகொண்டரசெலாமொழித்
தொய்யெனமாண்டனர்விஞ்சையொப்பவே. (௩௫)

வீடுமன்சிலைக்குருவிபாகரன்மகன்
பாடுறுபெருந்திறல்படைத்துளோரெலா
மீடுகொண்டவன்மொழியுடனிறந்தனர்
நாடுமுக்காலமுமுணருஞானியர். (௩௬)

உடனிறந்தவர்க்கெலாமுறுவதென்கொலோ
மடவரும்பாவியர்வாழ்வதெங்ஙனே
கடமுலைமடந்தையர்தன்மையென்கொலோ
திடனுறவுணர்துமென்றிருக்குஞ்சிந்தையே. (௩௭)

என்றனன்விருத்தனுமருகிருந்துள
துன்றியகுழலுடைச்சுபலன்பாவையு
மொன்றியகவைநெஞ்சுணர்ந்துகைகுவித்
தன்றிதுபுகன்றனளறிவினேரிலாள். (௩௮)

வேறு.

பணைகொடிண்புயப்பார்த்திபர்பற்பலரளித்த
கணைகொள்வாள்விழிக்கன்னியரனைவரைவாழ்க்கைத்
துணைசெய்தாருயிர்தொலைந்தனர்தோன்றறன்சிறுவ
ரிணையிலாவனப்புடற்சுமந்திருந்தனரிரங்கி. (௩௯)

அணியுமாரமுமுடிகளுமழகொளியெறிப்பத்
துணிவினாலமர்தொடுத்தனன்றிவரெதிர்தோற்றிப்
பிணையினார்வயின்விடைபெற்றுப்பெயர்ந்தவண்முடிந்தார்
தனியரோக்கிடமீள்கலர்ச்சஞ்சலமிவர்க்கே. (௪௦)

எங்கைவெங்கனல்வந்தவள்யாதவர்கோனை
தங்குமுத்தரைசுபத்திரைநன்மணிதனக்குப்
புங்கமாமிமற்றவட்குயர்மாமியும்போரின்
மங்கினோர்முகங்காண்டுறுவேட்கையேவரித்தார். (௪௧)

நாயினேனுளக்கருத்துமஃதேநரபதிதன்
றூயசிந்தையினிருப்பதுமன்னதேதொடர்ந்த
மாயிரும்புவிபிலங்கண்மேலுலகையும்வருவித்
தேயுமுன்னருய்த்திடவலாயிவையுனக்கரிதோ. (௪௨)

உலகினுள்ளவரற்புதமெய்திடவும்பர்
நலனுலாமுனிவரரெலாம்நற்சிரந்துளக்க
வலகிலாத்துயரெமக்கெலாமகன்றிடவருள்செய்
திலகவிவ்வரமுதவுகென்றிணையடிதொழுதாள். (௪௩)

படத்தினாற்பொதிந்துளவிழிப்பாவையைநோக்கித்
திடத்தினாலுயரருந்தவன்சிந்தனைமகிழ்ந்து
கடத்திருந்துயரென்றனன்கன்னனைநினைந்தாள்
வடத்தினாற்புரளிளமுலைத்துரௌபதிமாமி. (௪௪)

அனையபான்மைதன்னறிவினாலுணர்ந்தரிநிகர்வோன்
வினையமோடுநற்கவுந்தியைமேதகநோக்கி
நினைவினுள்ளதேதுணர்த்துகநேயமோடென்றுன்
மனையறந்துறந்தெய்தினாள்வணங்கியீதுரைப்பாள். (௪௫)

சாலித்தேவர்கடேவனியெம்முடைத்தவத்தான்
ஞாலத்தேவுமாய்மாதுலனாயதுநலமோ
காலத்தேநிகழ்கட்டுரைகழறுவன்கருணை
யாலித்திமையுமகலுமாறாயெனவெடுத்தாள். (௪௬)

உரைக்குஞ்சொற்றருவாதமாமுனிவரனொருநாட்
டரைக்குளென்னுடைத்தந்தைவாழ்மனையிடைச்சார்ந்தா
னிரைத்தபேரருளெந்தையார்சொற்படிநேர்ந்தேன்
வரைப்படாமுனமம்முனிக்குயர்வழிபாடு. (௪௭)

நிறையமாதவனேரிலையிவட்கெனமகிழ்ந்து
முறையினால்வரமுதவிதுங்கேளெனமொழிய
வறையவொன்றிலையையநின்னருளால்வேண்டேன்
குறைவென்னோவெனக்குறித்திடக்கலைமுனிகுறிக்கும். (௪௮)

நாட்டிலாரெனைமனம்வரநடந்தவர்வரதங்
கேட்டநிவதென்விரதநீங்கிப்படன்முறையோ
வாட்டடங்கணாய்வேண்டுதிமனக்கருத்தெனவு
மீட்டுமைந்தரையீகுதியியற்கையினென்றேன். (௪௯)

அந்தமாமுனியருகழைத்தருமறையம்பி
மைந்தர்வேண்டுஞான்றுரைநீமதிக்கினும்வானோர்
தந்துபோவரென்றுரைத்தறந்தன்னையுமுயிர்த்துச்
சிந்தையேம்பலிற்சிறக்குதியெனவவன்சென்றான். (௫௦)

மீண்டென்னிச்சையிற்பயிலுநாட்கன்னிகைவிரதம்
பூண்டுமேடையிற்பூவணைத்துயில்பொருந்தியபின்
றாண்டுமேழ்பரித்தேர்ச்சுடர்தோற்றியமயக்கா
லாண்டுமாமறைபுகன்றனனாதவனடைந்தான். (௫௧)

நடுநடுங்கியானகன்றிடவிரவியுநகைத்துக்
கடுவெனும்படிகட்பொறியாற்றிசைகலக்கி
யடுதுறங்குலமாற்றவுமாறியன்றனையு
மிடுஞ்சாபமென்றுரைத்திடவிருகரமுகிழ்த்து. (௫௨)

கன்னியானருங்கற்புநீயுணர்குவையன்றோ
வென்னைமேற்செயலிசைத்தவாறொழுகுவனென்ன
மன்னினியானின்றுமகன்றனைவிதிவழியுதவப்
பொன்னனாய்நிறைகன்னியாம்விரதமும்போகா. (௫௩)

ஈண்டுவாழுகென்றிசைமொழிந்தகன்றபினோர்தா
யாண்டுவந்துதித்திடுமொருகுழவியையஞ்சி
மாண்டபெட்டகத்தாற்றிடைப்படுத்தினன்மனையிற்
பூண்டகன்னியாயிருந்தனன்புகுந்ததித்துணையே. (௫௪)

அனையகாலையென்றங்கர்கோன்றன்னையானறியேன்
முனைமிருந்தபின்மாதவன்மொழியினுலுணர்ந்தேன்
றனையரைத்தரைகிடத்தியபாவிநான்றவத்தைப்
புனையினுங்கதியுளகொலோபுகன்றிடிலையா. (௫௫)

காதன்மைந்தனையறன்மகனறிவுறக்காட்டா
தேதம்பூண்டனனிரும்பினுங்கொடியநெஞ்சுடையே
னேதுபான்மையாலெவ்வணமுய்வன்யானென்பாற்
றீதுநீக்கியச்சிறுவனைநோக்கவுஞ்செய்வாய். (௫௬)

என்றுகூறிடவிரக்கமுமின்சொலும்விளங்க
மன்றலஞ்சடைமாமுனிமருகியைநோக்கி
யின்றுநீபுகன்றவையெலாஞ்சரதமேயிரங்கே
லொன்றுநின்செயலன்றுமேலுமெனவுணர்வாய். (௫௭)

சதுரரைவருமிருப்பதுந்தனையன்மற்றொருவன்
முதுநிலத்திடைசாய்வதுமுன்வினையானுல்
மதியினலவைவிலக்கவும்வல்லவருண்டோ
விதிவழிப்படும்புத்திரீவெருவலைமாதோ. (௫௮)

மாசுதீர்த்திடவேண்டுமென்றுரைத்தனைமண்ணிற்
பேசிநின்பெயருரைத்தவர்பெரும்பவந்தொலையு
மாசுநீக்கியமைந்தரைப்பயந்தமையாலே
தேசுறுத்தினைமரபினைத்திங்களில்விளங்க. (௫௯)

உனக்குவேறொருமாசிலைக்குலத்தையுத்தரித்தோய்
மனத்திலையமென்மறுவிலாய்நின்மகன்வரவு
தினத்திலேக்குவைசிறப்புடனிருத்தியென்றருகிற்
கனக்குழற்செறிசகுனிசோதரிக்கிதுகழறும். (௬௦)

நினதுமைந்தரும்நின்பெருந்துணைவனுங்கிளையு
மனதுபோலியநண்பரும்வாகினியுடன்மீண்
டுனதுமுன்வரப்புரிகுவனுனுற்றியதவத்தா
லினிதுகன்னனைவருவிப்பனிளையவன்பொருட்டா. (௬௧)

குன்றுதாங்கினேன்மருகனுங்குமரர்கள்பலருந்
துன்றுமச்சநாட்டரசனுந்துருபதன்கிளையு
மின்றழைக்குதுந்திரௌபதிசுபத்திரையேனை
மன்றலங்குழலாரெலாமகிழ்சிறந்திடவே. (௬௨)

இறந்துளார்சிறுரேனையோரெனமனதிரங்கே
லறந்தவாதமரினிலுயிரகன்றவர்க்கம்மா
சிறந்தநற்கதிசேர்ந்திடுஞ்செய்கையாற்சிந்தை
மறந்துநீக்குதன்மையுந்திண்மையுமாதோ. (௬௩)

மானமன்னராவந்தவர்வானவர்குழுவுந்
தானவர்க்கருந்தலைவருமென்றுளந்தரித்தாற்
போனதுன்பங்கள்பொருந்துமோவுறலெனமதித்தா
லீனமேதருமிடைவிடாதிரங்கியசோகம். (௬௪)

அனையபான்மைகளறைகுவன்கேண்மினோயாருங்
கலைபொலன்கழற்கந்தருவாதிபன்கண்டாய்
புனைகருந்திரிதராட்டிரப்பெயரினோன்புகுந்தா
னினையவேந்தனாப்பெயரொடுநிலத்திடையே. (௬௫)

மருத்துநாமமாங்கணமுயர்பாண்டுவாய்வந்தான்
றிருத்தகுந்திறலுதிட்டிரன்றருமதேவதையா
முருத்தவாயுவேவீமனாயுற்பவஞ்செய்தான்
கருத்துணர்ந்தவர்கண்டுணர்ந்ததிசயங்கலப்பார். (௬௬)

அருச்சுனப்பெயரண்ணலேயமரரைக்காக்கு
முருத்தரித்தெழுநரனெனயர்வருமுணர்வர்
கருச்சுடர்க்கிணைகடுக்குஞ்செந்தாமரைக்கண்ணன்
றிருப்பொலிந்தநாராயணனெனவுளந்தெளிமின். (௬௭)

இருவராயுள்வேதியரெனயாவருமிசைப்பர்
தருதுவாபரக்கலியினாற்சகுனிவந்துதித்தா
னொருசுயோதனன்கலியுடைக்கலையினுற்பவித்தான்
விருதர்பற்பலதம்பியராய்நிலத்தெழுந்தார். (௬௮)

அருணனென்கலைகன்னனென்றுருவவதரித்தான்
பொருவில்சோமனேயபிமனாம்புதல்வனாப்புகுந்தான்
றருணவெங்கனலுருவினிற்சிகண்டியுந்தக்க
பொருவிதிட்டத்துய்மனுந்துரௌபதியுமாப்புகல்வார். (௬௯)

அசுரர்தேசிகன்சிலைக்குருவான்மிசையேறு
மிசையுருத்திரர்கலைகிருபாரியனிவுளி
வசையிருமனும்வசுக்கலைவீடுமன்வந்தான்
நிசிசரிப்பவர்பற்பலர்நிருபராயுதித்தார். (௭௦)

அனையர்தேவியரவரவர்வனிதையரானார்
நினையினெம்பிரானுடலினீர்மையென்றுணர்வீர்
முனியில்வீரியன்விதுரன்முன்முனிவர்கடலைவன்
புனையுஞ்சாபத்தாற்றருமன்வந்துதித்தனன்புவிமேல். (௭௧)

அதற்குச்சான்றிவனறப்பெருங்கடவுளாகையினால்
விதிர்த்துத்தன்னுடலுதிட்டிரன்மெய்யிடைக்கலந்தான்
கதிர்க்கடத்தினிற்காட்டியவொளிகடஞ்சாய
லுதிக்கும்பேரொளியோடொன்றாயுற்றவாபோன்றே. (௭௨)

இவையெலாந்தெரிதரவுமக்கெடுத்தெடுத்திசைத்தே
னவைதரும்பலசிந்தைநோய்நனுகுறுவண்ணங்
குவைசேர்நற்குணங்கொண்டுளீர்தேறுமின்குறித்த
சுவைதருஞ்சொலாலென்றுபின்னொருமொழிசொன்னான். (௭௩)

வேறு.

ஆராதபெருங்காதலமரின்மடிந்தோரையெதிராகுமாறு
பேராதுபிடித்திருந்தீரத்துயரும்பறித்தெறிவன்பிறவிதீரக்
காராரும்பெருஞ்சோலையிருபுடையுங்குளிர்விளைக்குங்கங்கைநன்னீர்
நேராகயாவருமங்கெழுகவென்றான்றவத்தொருவர்நிகரிலாதான். (௭௪)
ஆற்றரியபெரும்பாசந்தமையீர்ப்பவுடறரியாராகியாரும்
போற்றிமறையுரைசெய்தபுண்ணியன்பின்னண்ணினரற்புதங்களோங்கச்
சாற்றரியநெறிகடந்துசிகரங்கடிசைவிளக்குஞ்சானவிப்பேர்
தோற்றுநதிமருங்கடைந்தாரத்தகிரிபோயடைந்தான்சுடரோனம்மா. (௭௫)
அக்காலக்கடனாற்றியவணிருந்தாரிரவகன்றேயகிலமெல்லாந்
திக்கேறக்கரங்குவித்துச்சிரந்தாழக்கதிர்குணக்கினுதையஞ்செய்யத்
தக்கோருமிக்கோருந்தையலருமையலறக்கங்கைசார்ந்து
புக்காடிநீர்காலைக்கடன்கழித்தோர்பொதும்பரிடைபுகுந்திருந்தார். (௭௬)
இத்தன்மைதேர்ந்துபலதவமுனிவரற்புதராயெய்திச்சூழ்ந்தார்
வித்தகராம்வேந்தர்பலர்வந்தடைந்தார்புவியினுளோர்வியந்துநோக்கப்
புத்திமருளொடும்வந்தார்விண்ணவரும்வான்முழுதும்புகுந்துநின்றார்
நித்தனடியிணைவணங்கிச்சூழ்ந்திருந்தார்மதிவளைமீனிகரினம்மா. (௭௭)
அவ்விடையில்வாதராயணப்பெயரோன்கரநீட்டிவிரலைச்சுட்டி
யெவ்வமகலப்பலருமெதிர்ந்திடுமினிறந்தவரையென்னுமுன்னர்
பௌவமெனவொலியெழுந்துதிசைகளெலாஞ்செவிடுபடப்பணைகள்காளஞ்
செவ்வியபேரிகைநாதம்வலம்புரிகள்கறங்கியதாற்றிண்மையோடும். (௭௮)
கொடியாடைவானளவக்குடைகள்பலபலநிழற்றக்குளிருங்கற்றைப்
புடைகவரிபணிமாறப்புழைக்கைமதக்கரியினங்கள்பொம்மல்காட்ட
முடியுறுதேர்த்திரளனந்தமொய்த்துவரப்பாய்பரிகள்முகிலைத்தாவப்
படிமுழுதும்பதாதிகளாப்பரந்தெழுந்ததன்மையெவர்பகரற்பாலார். (௭௯)

வேறு.

கொண்டலளவுங்கொடிகொடிஞ்சிதிகழ்தேர்மே
லெண்டிசைவிளங்குகதிரென்னமுடிமல்கத்
தண்டரளமாலையொடுசந்தனுகுமாரன்
விண்டலமதிப்பவெதிர்மேவினன்விருப்பால். (௮௰)
வேதமெழுதுந்தனிவிலோதனமியங்கக்
கோதில்முடிபூணொடுகொடுஞ்சிலைவயங்க
வாதபமெறிக்குமணியாரிரதமீது
சீதளமிகுஞ்சொலொடுதேசிகனெழுந்தான். (௮௧)

செய்யமுடிவெண்கலைசெழுஞ்சுடர்செய்யார
மையலறுசந்தனமருக்குலவுமாலை
பொய்யறவிளங்கவொருதேர்மிசைபொலிந்தான்
வையமுழுதுந்தனிசெய்மன்னர்பெருமானே. (௮௨)

நீடுசிலையாடைபணிநீண்முடிகளோடும்
பீடுபெறுமைந்தர்கள்பெருங்கிளைஞரோடு
மாடகவயம்புனையனேகரதமேறி
மாடுறநெருங்கினர்கண்மன்னவிளையோரே. (௮௩)

செங்கதிரவன்புடவிசேர்ந்ததெனமானும்
புங்கவடிவம்புனைமதாணிகள்பொருந்தச்
சங்கையறுநன்னிதிதருங்கரமிலங்க
வங்கர்பெருமானிரதமீதிலெதிரானான். (௮௪)

கொங்குறுமலங்கலொடுகுண்டலமிலங்க
வங்கணிகளெண்டிசையினாதபமெறிப்ப
முண்டகமலர்த்தமுகமுகிழ்நகைவிளைப்ப
மண்டிரதமீதிலபிமன்னுமெதிர்வந்தான். (௮௫)

நாகபடமங்கைதருநந்தனனுமின்சொற்
பாகனைதருஞ்சிறியபாண்டவருநேரார்
சோகமுறவென்றசுதனுங்குமரனுந்தூ
யாகமுடனேயிரதமேறியுடனானார். (௮௬)

கற்றகலையிற்கொடியகைதவமதிற்பேர்
பெற்றசகுனிக்குரியமைந்தர்பலர்பேணக்
கொற்றமுடிபூண்களிசைகொள்ளவொருதேர்மேற்
சற்றுமசையாதமனனோடருகுசார்ந்தான். (௮௭)

கைம்மலைநிகர்த்துளசிகண்டிகனறிட்டத்
துய்மனவன்மைந்தனொடுசூழ்துருபதேயன்
மைம்மலையெனத்தகையவான்சிலையினோடுஞ்
செம்மணியிழைத்தவொருதேரினருகானான். (௮௮)

உத்தரனுமுற்படுமொருத்தனுமொழிந்த
புத்திரருமித்திரருந்துணைபொருந்தச்
சத்திரநிழற்றவிருசாமரையிரட்ட
வித்தகவிராடனிரதத்திலெதிர்வந்தான். (௮௯)

முத்தமிடுவெண்கவிகைமுழுமதிநிகர்ப்பக்
கைத்தலமெடுத்தபடையிற்பொறிகலிப்ப
வுத்தரநெடுங்கிரியையொத்தொளிசெய்தேர்மேன்
மத்திரருமித்திரரும்புத்திரரும்வந்தார். (௯0)

கந்தனெனவைங்கணைகலந்தகரனென்ன
முந்தமுகெறிப்பவிருமொய்ம்புயரவோங்கச்
சுந்தரமணிப்பணியணிந்தசுடர்காலச்
சிந்துபதிமைந்தனெருதேரின்மிசைவந்தான். (சுக)

அத்தனெடுமைந்தனெடுமாரமொளிர்சோம
தத்தனிரதத்தின்மிசைசார்ந்தனனருட்சேர்
கைத்திறல்வல்சோழனெடுபாண்டியர்கலந்தார்
மெய்த்திறல்செய்காசிபதியாதியர்விரைந்தார். (சுஉ)

இன்னவர்வராதவரெனுஞ்சொலிலையாக
மன்னவர்கள்வந்தெழுலும்வந்தூனிநோக்கி
யென்னையிகலுண்டுகொலிலைகொலெனவேறு
பன்னினர்வளைந்தனர்கள்பாங்கரெதிர்வோரே. (சுஈ)

வேறு.

அருந்ததிகணவனன்மரபினுணையோ
பொருந்துறுபராசரன்புண்ணியங்கொலோ
விருங்குலமுனிவரரியற்றுறுமுறை
தருந்தவவலியையென்சாற்றுகிற்பதே. (சுச)

ஆயவன்முனிவரினடங்கவைகினு
மாயவனவனெனமதிப்பர்வானுளோர்
தேயமுமுலகமுஞ்செய்யவல்லவர்க்
கேயவிக்கருமமோபெரிதென்றெண்ணுவார். (சுரு)

இறந்தவர்மீள்கலாரென்னுமாற்றினைத்
திறம்பிடமுற்றியிச்செய்கையாற்றின
னறம்படுமறைகளாறங்கமாதியா
நிறம்பெறசிறுவினோர்க்கரியசீர்மையே. (சுசு)

சுகன்றனையுதவியதூயமாதவ
னிகம்பரநமக்கெலாமெளிதுண்டாக்குவான்
புகலுதுமவன்கழற்புனைந்தென்றேவரா
நிகரறநெருக்கினுலுயிர்த்துநீங்குவார். (சுஎ)

ஒருவன்மாற்கண்டனையுய்வித்தாற்றிட
லருமையினிகழ்ந்ததிவ்வகிலநாயகர்
பொருபடையொடுமவர்புரிவித்தான்றவந்
தருமுனிவரரிவர்தரவல்லார்களே. (சுஅ)

கடலையோர்குடங்கையிற்கவர்ந்தமாமுனி
யடவினுங்கங்கைநீரருந்துசன்னுவின்
றொடர்பினுமுயர்ந்தவித்தூயன்மாதவ
மிடரிலையினிப்புவிக்கென்றகூறுவார். (சுகூ)

இற்றைநாளெவணிவிருந்துளாரென்பர்
நற்றவனழைத்திடநண்ணினாரென்பர்
சுற்றமாயொழுகுவர்தூயரைவரும்
பற்றிடார்முனம்பயில்பான்மையென்பரால். (௧௦௦)

நாடிருகூறதாப்புரக்கநற்றவ
நீடியவாய்மொழிநேருமோவென்பார்
வாடியமன்னவர்மங்கைமார்முகங்
கூடியவனப்பினைக்குறிக்கிலீரென்பார். (௧௦௧)

வேந்துடைச்சோகமும்விடுமேயென்பார்
பூந்தொடிகண்டுயில்பொருந்துமேயென்பார்
நாந்தகவபிமனைக்கண்டுநன்னர
னேர்துமோதழுவுமோமெதிர்ந்துமாண்டென்பார். (௧௦௨)

மன்னர்மன்னவனினிவஞ்சகஞ்செயா
துன்னிறச்செய்கையினொழுகுமோவென்பார்
கன்னனிங்கிவர்க்குமுன்னுதித்தகாட்சியா
லன்னவர்க்குடன்படானறிதுமென்பரால். (௧௦௩)

வாசகமிவ்வணம்புகலமாசறு
தேசிகர்சிந்தைதகடியக்கமெய்திடத்
தேசடனெய்தினர்செருவின்மாய்ந்தவர்
பாசிழையல்குலார்பார்வைவீழவே. (௧௦௪)

விஞ்சையர்வீணைகள்பாடமேலுல
கஞ்சொலினரம்பையரலர்சொரிந்திடச்
சஞ்சரிகம்படுதாமமல்குற
வெஞ்சியமன்னர்வந்தெதிருமாயிடை. (௧௦௫)

சிற்குணன்மைந்தனைத்திருந்தநோக்கியே
வெற்படுதோளினாய்மமரில்வீழ்ந்துளோர்
முற்படவந்தனர்முசிப்பகற்றுதி
பற்பலர்நோக்கியம்பகமுநல்கினேன். (௧௦௬)

என்றுகூறிடுமுனமரசனேம்பலோ
டொன்றியவிழிப்புலன்செய்யவோங்கினான்
மன்றலங்குழலிகண்மறைப்புநீக்கினார்
குன்றனவிளமுலைக்கோதைமார்களே. (௧௦௭)

அருளுடையைவருமணங்கனார்களுந்
தெருளுடைமுனிவருஞ்சிறந்ததாதையு
மருளுறுசனனியுமருகிமார்களு
மிருளறுசஞ்சயனெவருநோக்கினார். (௧௦௮)

அத்தகைதேரிழிந்தன்பினவ்வரியே
வித்தகரிருவரும்வியாதனைத்தொழா
சத்திரபீடமிற்றவிசில்வைகினர்
முத்தனுமருஞ்சிலைமுனியுமென்பவே. (கOசு)

வணங்கினர்வீழ்ந்தனர்மலர்செய்தாள்கண்மீ
தணிந்தனரார்த்தனராசிருட்டினர்
கணந்தருகுரவனுதியருங்காமரு
மணங்கனர்பலருமற்புதங்களாகியே. (கக0)

வாகுலீகனுமவன்மகனுமைந்தனு
மாகமோடாகமொன்றாயிருந்தபின்
றுகமார்சுயோதனன்சார்ந்துதாழ்ந்தனன்
சோகமொன்றுணர்கலாத்தூயன்றாளினே. (ககக)

தந்தைதாள்வணங்கினனிருவர்தாயரை
முந்துறவணங்கினன்முகமலர்ந்தடற்
கந்தனையெதிர்ந்தமுக்கண்ணனுமெனச்
சிந்தையிற்சோகநீத்தனனச்செம்மலே. (ககஉ)

ஈன்றவடன்மனத்திருந்தபாசமு
மான்றநற்றுயரமுமகற்றினளொளி
கான்றிடுமினைஞருங்கலந்துதாழ்ந்தனர்
மான்றடந்தாளினுமன்னன்றாளினும். (ககங)

ஐவருநூற்றுவர்தம்மையன்பினுன்
மெய்வரத்தழுவினர்மின்னும்வேற்படைக்
கைவருமங்கர்கோன்கலந்துமாமுனி
மெய்வருகுரவர்தாள்வீழ்ந்துபுல்லினன். (ககச)

குந்திதாள்பணிந்தனன்குளிர்ந்துசிந்தையு
மைந்தனையெடுத்தணைத்துயிர்த்துவாழ்த்தினள்
சிந்தையிற்றங்கியசேறுபோலிய
முந்துறுதுயரெலாமுடியநீக்கினள். (ககரு)

பாண்டவரைவரும்பாதபங்கயம்
பூண்டனர்புலம்பினர்பொருமனீக்கியே
தூண்டகுதோளுறத்தழுவித்தூயரை
யாண்டவனிருந்தனனுதனத்தின்மேல். (ககசு)

முன்னவர்தமக்கெலாமிறைஞ்சிமுந்தபி
மன்னுவந்தைவரைவணங்கிநிற்றலுங்
கன்னவிரேறனையர்கருணையாதரந்
துன்னிடப்புல்கினர்சோகமேகவே. (ககஎ)

தோகையர் தமக்கெலாந்தொழுதுபின்னரிப்
பாகைநேர்மொழிசுபத்திரைபதந்தொழா
வாகமுமுயிருமொன்றாகப்புல்கினாள்
சோகமும்பிரிவுந்தன் றுயருந்தள்ளியே. (கக அ)

முன்பெழுதந்தையர்வடிவமுற்றிளம்
பாண்டவர்தொழத்தொழப்பரிவிலேவரு
காண்டருமற்புதங்கலந்துபுல்கினார்
மீண்டபொஞ்சாலிதாள்வீழ்ந்திறைஞ்சினார். (கககூ)

அக்கொடியாதரம்பெருகவம்மவோ
தொக்கநற்சுதரெனத்துணைக்கரங்களா
லொக்கவினுருகிந்தன் றுயிர்ப்புமீடினாள்
மைக்கருங்கண்வழிவாரிபாயவே. (கஉ0)

நாகமின்சுதனொடுநற்கடோற்கசன்
மாகநன்மைந்தனும்வந்துதந்தையர்
சோகநீத்திடப்பதந்தொழுதபின்னவ
ராகமுடுறத்தழீஇயன்புகூரவே. (கஉக)

மங்கையர்பலரையும்வணங்கிப்பின்னரிற்
றங்கடாய்மாரடித்தலத்தில்வீழ்தலும்
புங்கமாரிடிம்பியும்புயங்கக்கன்னியு
மங்கமுங்கருத்துமொன்றாகப்புல்லினார். (கஉஉ)

ஏனையவரசெலாமெய்திக்கைதொழ
மானவரைவருமகிழ்ந்துபுல்லினார்
மானனேதுரௌபதிவணங்கினாளரோ
தானுயர்பிதாவையுந்துணைவன் றன்னையும். (கஉ௩)

உத்தரைசித்திராங்கனையுமொய்யென
வத்தனையடிதொழுதன்புகூறினார்
வித்தகமடந்தைகாந்தாரிமீளவுஞ்
சத்தடைந்தனள்சகோதரனைநோக்கியே. (கஉ௪)

சிந்துபூபதிமகன்சிறப்புநோக்கியே
பைந்தொடிதுச்சளைபரிவிலாழ்ந்தனள்
கந்தரநாணிலாமடமினார்களுக்
கந்தரமங்கலமெய்திக்காக்குமே. (கஉ௫)

வேறு.

தொழுவாரும்விழுவாருமுற்பட்டசெயலைத்தொடர்ந்தோதியே
யழுவாருமகிழ்வாருமணைவாருமசையாமலிசைகூறியே
குழுவாகவொளிர்வாருமுயர்வானுறுஞ்சிர்குதிப்பாருமாய்
வழுவார்பயின்றார்படங்கொண்டவினைமுற்றுமனைதோறுமே. (கஉ௬)

நல்லார்பெருஞ்சீர்பெரும்பான்மையணியோடுநறுமாமலர்
சொல்லானிகற்கப்படுஞ்சந்தனத்தோடுதொடர்பாகியே
யெல்லாருமெதிரெய்தியன்பான்மனைக்கோனையெழிலாகவே
மல்லார்புயங்கொங்கைபுதையத்துளைந்தின்பமயலாடினர். (௧௨௭)

உண்டுஞ்சுகித்தும்புலந்துங்கலந்துந்தனுயர்கண்களாற்
கண்டுங்களித்துங்கவின்சேரரும்பாடல்கன்னங்களிற்
கொண்டுங்குளித்துங்குலப்பாவைமாரோடுகுறைநீரவே
பண்டும்பொருந்தாநலங்கூடினர்வந்தபடைமைந்தரே. (௧௨௮)

வீறாகவிவ்வண்ணமல்லோடுபகலும்விலங்காவணம்
பேறானபின்மற்றைஞான்றிற்றுறக்கம்பெயர்ந்தெய்தவே
மாறார்நினைந்தன்பினோடுதாதைதாய்சுற்றம்வந்தோர்க்கெலாந்
தேறாகவோதிக்கடந்தேகினர்கங்கைநதிசேரவே. (௧௨௯)

வாசத்தினும்நின்றுவந்தோர்கண்மீண்டேகமதிவண்மையாற்
பாசத்திலலையாதுடன்பட்டுளார்மன்னர்பலராயினோர்
நேசத்தின்மடமாதர்பிரிவாற்றலாராகிநிகரற்றவன்
றேசுற்றபதமீதுதாழ்ந்தெம்மையுடனேசெலுத்தென்னவே. (௧௩௦)

வேட்டோனையின்றிப்பெருங்காதலலைமூழ்கிமிடியெய்திலோங்
கூட்டாயெமக்கந்தமணவாளனுடனேகுறும்பான்மையென்
றாட்டாவரக்குண்டசெந்தாமரைத்தாளினுரைசிந்தினர்
நீட்டாகவலர்நீலநறையுய்த்ததெனவெள்ளநிறைகண்ணினர். (௧௩௧)

அற்கொண்டனிகராகவருண்மாரிபொழிமேகமஞ்சன்மினென்
றெற்கொண்டகரமுங்கவித்தாருமுயர்கங்கையினிலெய்தியே
பொற்பொன்றிலாவாக்கைவிடுமின்கண்வடிவம்பொலன்சேரவே
சொற்கந்தலைப்பெய்துடன்போதுவீருங்கடுயர்மாறவே. (௧௩௨)

என்றோதுமுன்னாகநின்றோர்கடந்தேகியிசையோடுயர்
குன்றாதநதிதாள்வணங்கிப்புகுந்தெங்கொழுநற்பெற
வன்றாசையுடனீர்படிந்தாடிவிட்டங்கமரமாதராய்ச்
சென்றார்விமானத்தின்மிசைகாந்தனோடுஞ்சிறப்பெய்தியே. (௧௩௩)

தந்தத்தமடமாதராருந்துறந்தாக்கைதனைநீக்கியே
முந்திப்புகுந்தம்பதிக்கோர்புறத்தேமுனந்தங்கினர்
சிந்தைக்குமெட்டாதமுனிநாதனொடுமுள்ளதிறலோரெலாம்
வந்தித்துளஞ்சாலமகிழ்வோங்கினர்மாதர்வளநோக்கியே. (௧௩௪)

கண்காணமடமாதர்ககனத்துடன்சென்றகவினாடியே
பண்பாடுமலர்மார்பரடலைவரைத்தந்தபைங்கோதையும்
விண்காணவிழைவெய்தவிழியாற்றடுத்தான்வியாதப்பெயர்
மண்காணமறைகாணநீடூழிவாழ்வெய்துவயமாமுனி. (௧௩௫)

வேறு.

தாதையுஞ்சுபலன்முன் றந்தபாவையு
மேதமில்குந்தியுமெய்த் துமைந்தருங்
காதலாழ்மாதருங்கருதுஞ்சஞ்சய
ஞதியாமறிஞருமாங்குத்தங்கினர். (௧௩௬)

வேறு.

மாதவனகலத்துள்ளமன் னுயிர்பலவும்வானி
லோதியவமராருமுனிவருமுவப்பச்செய்த
காதையைப்புகன்றேர்கேட்டோர்கருதினேர்திருவிலாழ்ந்து
மீதுலகடைவரென் றுவிளக்கினன் றுளக்கிலாதோன். (௧௩௭)

இம்முறைபுரிவோர்யாரேமுனிவரிலிருந்தோர்தம்மின்
மைம்மலேபுரையுமேனிமாயனென் றுரைக்கும்வாய்மைச்
செம்மையேயென் றுதேறிமேற்செயறெளித்தியென்றான்
கைம்மலேயனையவாற்றலுடன்புவிகாவல்பூண்டோன். (௧௩௮)

அற்புதநோக்கியாருமந்தணர்பெருமான்போற்று
ளுற்பவமொழிக்குமென்றேயுளங்கொடுதிரண்டோர்மீண்டார்
நற்பயனடைந்தேனென்னேயினிப்பெருநன்மையென்று
கற்பனேகடந்தோன்றளிவீழ்ந்தனன்கண்கள்பெற்றான். (௧௩௯)

மைந்தனுக்காசிகூறிமருகியர்க்கினிமைபேசி
கந்தடர்களிற்றுவேந்தரைவர்க்குங்கருணேநல்கி
யுந்துநிகரின்மைந்தர்தமையெலாமுற்றபாங்கர்
தந்திடுந்தவத்தைச்சின்னுடனிற்கதிசார்வீரென்றான். (௧௪0)

அம்முறைபுரிவேனென்றுங்கமைந்தபின்மறைகளெல்லா
மும்முறையுருவமென்னுமுழுவருமொருவனுன
செம்மலுங்கருணேசெய்துசேயிழையார்களெல்லாங்
கைம்மலர்குவிப்பமேனிமறைந்துபோயிருக்கைகண்டான். (௧௪௧)

ஆங்கவனகன் றபின்னரைவருங்குரவனேடு
மாங்குரலளகத்தோருமுடன்வரமற்றுமுள்ளோர்
பாங்குறவேகிமுன்னரிருந்துளபழுவம்புக்கார்
தாங்கினன்றவத்தைமுன்போற்றிரிதராட்டிரனென்போனே. (௧௪௨)

யாதவர்மாதுநன்மைபணிநிகழியற்காந்தாரி
நீதிமன்றருமனுளும்பிகரிலசஞ்சயனும்போற்றி
மாதவவேந்தையன்பால்வழிபடவிருந்தபின்னர்
காதலர்தம்மைநோக்கியிவ்வுரைகழறினனே. (௧௪௩)

நீவிரிங்கடைந்தோர்திங்கணிகழ்ந்தனநகரிற்சென்று
பாவலருரையின்வண்ணம்பார்புரந்திடாமைநன்றே
காவியங்கண்ணரோடுமேகுமின்கடிதினென்ன
வாவியையனையசோர்க்கறைந்தனனத்தனம்மா. (௧௪௪)

நாட்டினைப்பொருளாவுன்னிநற்றுணையிகழ்ந்துவைக
வேட்டிலனிவரையேவியான்வழிபடுவன்வேந்தே
தாட்டுணையன்றியின்பஞ்சற்கதிவேறொன்றின்றாற்
கூட்டுகதவத்திலென்றானறன்முதற்றந்தகோமான். (கசரு)

என்றசொற்செவிபொறாமலிருபுயமணைத்துமைந்தா
வொன்றியானுரைப்பக்கேட்டியுலகினையோம்புமாற்ற
லன்றியுந்தவமுமுண்டோவருந்தவமுளவேயென்னிற்
சென்றிடுகாலமுண்டுதெளிவுளாயறியாதுண்டோ. (கசசா)

உன்னைவிட்டொருவர்மீளாருற்றவர்பற்றிநின்று
லென்னுடைத்தவமுமல்காதெந்தைநீமீண்டுசேறி
மன்னுடைக்குலமுமெங்கண்மரபுஞ்சீர்சிறக்கமுத்தி
நின்னைவாழ்த்தினருக்குண்டாமென்றனனேயமிக்கான். (கசஎ)

ஆற்றவுமறிவனேதமறுத்திலனுகியஞ்சொற்
கோற்றொடிபதத்தில்வீழ்ந்துவிழிப்புனற்கொள்ளைகொள்ள
வேற்றவுந்தொழவும்பாலிதையநெக்குருகவேவற்
போற்றவும்விழைந்தேன்வெஃகேன்புவியருள்செய்வாயென்றான். ()

அருளுயர்சுபலன்பாவைமைந்தனையன்பில்வாரித்
திருவுறமருங்கிற்சேர்த்துசெங்கரங்கண்ணீர்மாற்ற
வொருவருநிகராநன்மையுடையபாவனனேயுன்னாற்
கருவுறுவாழ்விலாழக்கருதினேங்கசடுநீங்கி. (கசகூ)

உத்தமனுனநின்னையுயிர்த்தலாலொருவர்க்கேகாப்
புத்திரசோகம்போக்கிப்புதல்வரைக்கண்ணிற்கண்டோ
மித்தகைநன்மையினுமெமக்குளவாகவேண்டி
யத்தனின்னுரைவழாதுசேறலேயழகாமென்றாள். (கரு௦)

ஈன்றவள்செய்யபாதத்திருவிழிசொரிநீராட்டி
யான்றநல்லறிவனெம்மாலருட்செயலெந்தைதாளி
லூன்றியசிறுகுற்றேவலுஞற்றுதலுமக்குமென்னச்
சான்றுலகதனுக்கொப்பாடருமனுக்குரைக்கலுற்றாள். (கருக)

இறந்தநல்லிரவிசேயையபிமனையென்கண்காட்டி
மறந்திடத்துயரந்தீர்த்தமாமுனிகருணைநின்பாற்
சிறந்துடையருளாலன்றோவான்கதியெமக்குச்சேர
நிறந்தருநகரின்மேவிநிகழ்த்துதிதருமச்செங்கோல். (கருஉ)

தவத்தினையாற்றினோர்கடாம்பெறும்பான்மையுண்டாஞ்
சிவத்தினையடையுநாடுநகரமுமரபுஞ்செங்கோற்
கவித்தபார்த்திபர்க்குத்தாமுங்கதியினைப்பெறுவரெந்தா
யவத்தொழிலன்றுஞாலமளிப்பதுசேறியென்றாள். (கருங)

மூவருமுரைத்தமாற்றங்கடக்கொணாமுறையாத்தோன்றத்
தேவரும்பரவநின்றோன்றிருவடிமலர்கள்சூடி
யேவலின்வழியேநாயேனியற்றுதல்கருமமென்றான்
காவலன்வரவழைத்துப்பற்பலகழறலுற்றான். (௧௫௪)

தம்பியான்புநாளூர்ந்தவறிலைக்கற்புநாட்டுங்
கொம்பனைமார்கள்பாங்கர்க்குழைருதலொழிகொணாதா
லம்புவியோர்கட்கன்பான்முறைபுரிந்தவித்தலெல்லா
லும்பரும்விருந்துமேலைக்குரவருமுவக்கவாற்றல். (௧௫௫)

தக்கவருணர்தற்பொல்லார்தமையகற்றுதல்சால்பாய்ந்து
மிக்கவரிடுக்கண்டீர்த்தலாதியாம்விளக்கமெல்லா
மொக்கலினுணர்த்திமாய்ந்தான்வீடுமனோதலென்றோ
சக்கரகடத்துமாற்றலுடையைநீசாருகென்றான். (௧௫௬)

தன்னைச்சொற்றலைமேற்சூடித்தாயினையிறைஞ்சியாசி
முந்துறப்புனைந்துநின்றானுதிட்டிரன்மொய்ம்பின்மிக்க
செந்தழற்சகாயன்மைந்தன்றிருவடிபணிந்துநின்றான்
வந்தெடுத்தணைத்துவாழ்த்திவிடைதந்தான்மன்னர்கோமான். (௧௫௭)

அருச்சுனன்பரிவிற்றாழவாசியோடவனைப்புல்கி
விருத்தனன்மொழிபுகன்றுமேவுகநகரிலென்றான்
குருச்சுடர்மணிசெய்பூணாரிருவருங்குலப்பூந்தாதை
திருச்சுடர்பதத்திற்றாழ்ந்துதிறலொடும்விடைபெற்றாரே. (௧௫௮)

பாவையர்வேறுவேறுபதந்தொழுதாசிபெற்றார்
மேவியாவரும்வணங்கிமின்னனையருள்கைக்கொண்டார்
தேவியாங்குந்திதாளிற்சிரம்படச்சாய்த்துமாழ்கி
யாவியைவிட்டுநீங்குமங்கமொத்திரங்கிநின்றார். (௧௫௯)

அன்னவள்கண்ணீர்சோராதடங்கியாங்கவர்கட்கெல்லாம்
பன்னுதன்முறையாற்கூறித்தழுவியம்பகநீர்மாற்றி
நன்னலந்துய்த்துவாழ்ந்துநன்மையிற்செறிவீர்சென்மின்
பொன்னகர்க்கென்றுகூறிப்போக்கினாளாக்கம்போல்வாள். (௧௬௦)

சஞ்சயன்றனக்குக்கூறுமியல்பெலாஞ்சாற்றித்தக்கோர்க்
கிஞ்சொலுமன்புமுறவிறைஞ்சிமற்றவர்விடுப்பக்
கஞ்சவான்முகத்துமாதர்கணத்தொடும்பதாதியோடும்
பஞ்சவர்மீண்டுபோந்துதம்பெரும்பதியைச்சார்ந்தார். (௧௬௧)

புத்திரசோகந்தீர்த்தசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௫௫௨.

௨

திரிதராட்டிரன் காந்தாரிகுந்தி

முத்திபெற்றசருக்கம்.

சங்கமுந்திகிரியுந்தனுவுந்தண்டமுஞ்
செங்கைவாளுடனருட்செலுத்துஞ்சிரியோன்
மங்குனேர்வடிவமும்வனசவுந்தியும்
பங்கயப்பதமும்பான்பார்க்கும்பாங்கெலாம். (௧)

மாதுநற்கவுந்திதன்மைந்தர்மாநகர்
பூதமோரைந்தையும்போன்றுபுக்கிடக் .
காதலாற்புரசனர்மறுகுகாசிசெய்
தேதமற்றியாவருமெதிர்கொண்டாரரோ. (௨)

கிருபனுமுயுச்சனுங்கிளருஞ்சேனையு
நிருபருமெதிருறநேயமெய்தியே
தருநிகர்கரமுளார்சார்ந்துதம்புரத்
தருகடைந்திரதநீத்தரசினெய்தினர். (௩)

மாதரைக்கோவிலினுய்த்துமன்னவர்
பாதமேற்றுழ்ந்திடத்தவிசிற்பண்படு
போதலுநிகழ்வுமீண்டதுவும்புக்கிலார்க்
கோதினரிருந்துபின்னுறையுளெய்தினர். (௪)

கேட்டவரற்புதங்கிளரத்தாமுறை
வீட்டினிலேகினரிந்தமேன்மையி
னட்டினைப்புரந்தவரிருக்குநாளையிற்
கோட்டமின்னாரதன்குறுகினனரோ. (௫)

ஆதனமிழிந்தெதிரனுகியைவரு
மாதருந்தொழுதுதாள்வழுத்தியாசன
மீதினிலருச்சனைவிதித்துப்போற்றலுங்
கோதிலானுசிதந்திதனைக்கூறினன். (௬)

ஒருப்படுமனத்தினுலுன்னிநீர்படி
விருப்பினுற்கானகமேவியாடினேன்
திருப்பொலிதருமுமைநோக்குஞ்சிறினுற்
பொருப்படுபுயமுளீர்புரத்தினண்ணினேன். (௭)

கங்கைநீர்வையின்றெருருந்துளையுங்கானகத்
துங்கடந்தையுமுரியவளுங்குந்தியுந்
தங்கியதவத்தினினிகழ்ந்ததன்மைக
ளங்குணர்ந்தடைந்தனனென்றரற்றினன். (௮)

கேட்டலுமுத்தமன்கேழ்கரங்குவித்
தீட்டியதவத்தினர்வலியரேயெனக்
காட்டுவனிகழ்ந்தமைகருதிக்கேளென
வீட்டியவெகுளியான்விளம்பன்மேயினன். (௯)

நீவிர்போய்மீண்டபினினதுதந்தையு
மூவருமுடனுறமுனிவர்வைகிய
காவினைநீத்தகற்கருதுவேதியர்
பாவகங்கொடுசெலப்பரிந்துபோயினான். (௧௦)

வெள்ளிடைவாசமும்விரும்பிலாச்சரு
குள்ளுறுபசிக்கனற்குணவுமாக்கியே
தள்ளினர்சிலபகற்சருகுமாந்திடா
தள்ளிநீருந்தினராற்றலாற்றியே. (௧௧)

உதகமுந்தினம்விடுத்துண்டிநீக்கியு
மிதமுறச்சரித்தனரும்மையின்றவள்
கதமறத்திங்களுக்கொருதினங்கையா
லதிற்புனன்முகந்துகொண்டருந்தலாயினாள். (௧௨)

இவ்வணமருந்தவமியற்றிக்கங்கையா
மெவ்வமின்மாநதிக்துவாரத்தேகியே
செவ்வையிற்பயிலுநாள்கானிற்சேர்ந்துமீண்
டிவ்வையினடைகுவராகிமேவலும். (௧௩)

வானகமலிபுகைவளரவெண்டிசை
கானழலோசையாற்கலங்கப்பல்லுயிர்
மீனெடுபல்லுயிர்வேலினாற்கடற்
றனனிகுலைந்தவத்தழலையெய்பவே. (௧௪)

புதர்களைநீத்தவெம்புலிங்கசாலங்க
ளெதிர்பரந்துலகெலாமெரிக்குமென்னவே
கதர்கொடுங்காற்றெடுங்கலந்துகவிந்த
முதிர்குரவனையுமூவரையுமூடியே. (௧௫)

மாகமோங்கியகனல்வளைந்துசூழ்தரப்
போகவோர்நெறியிலாப்புணர்ப்புநோக்கியே
சோகவான்கடலெலாந்தொலைந்ததூயவ
னாகம்வீழ்தினமெனவறிந்துகூறுவான். (௧௬)

மாதரைவெருவலீர்மயங்கலீர்நம
தேதமோங்கியவுடலிலத்திடுந்தினஞ்
சாதனமாயநித்தழலைத்தாழுமின்
கோதறக்கிழ்த்திசைகுறித்துவைகுமின். (௧௭)

மனத்துளவேட்கையைமதித்துமாதவ
முனிக்கடியிறைஞ்சுமின்முளரியாசனந்
தனிற்சிறந்திருமினற்சமாதிகூட்டியென்
றனற்கருமுன்னர்சொற்றுறுதியெய்தினான். (௧௮)

பின்னரிற்சஞ்சயன்வதனம்பெட்புற
மன்னவனேக்கிநீமருவவேற்பதே
முன்னரினுரதமுனிசொற்றேறினேய்
மன்னுநியோகத்தால்வானிலேகியே. (௧௯)

கடந்துநீபோதுதல்கருமமாமென
மடந்தவிரறிவுளான்பிரியமாறிலான்
தொடர்ந்தவூழ்வினைமுறைதுணிந்துநீங்கினு
னிடந்தருபனிவரையேறினனரோ. (௨௦)

ஏனையர்மூவருமெம்பிரானடி.
ஞானநல்லறிவொடுவைகநங்கனற்
போனகமாகவப்புனிதயாக்கையுண்
டேகியதவர்கதியெய்தினர்களே. (௨௧)

இச்செயலாங்குளோர்புகலவெய்தியே
யச்சமுமன்புமொன்ருகவாங்கக
விச்சைசேர்வேதியரிவர்தம்மாக்கையை
முச்சகமுணர்தரத்தீமுருக்கினர். (௨௨)

வழிபடுகனலுணவாகவேதியர்
மொழியுடன்மூன்றையுமுற்றுவித்தபின்
கழுவுறவகன்றனர்கண்டுவந்தனன்
பழியறுநெறியுளீரெனப்பகர்ந்தனன். (௨௩)

வே று.

கேளாமுன்னடலைவர்கைசோரமெய்சோரக்கிளர்த்துமுண்மை
மாளாதமனஞ்சோரமுடிசோரநிலஞ்சோர்ந்தாகுலத்தின்மாழ்கிக்
கோளாகாவிழிபொழிநீர்க்கொண்டலெனக்குரலெடுத்துக்குமுறியந்தோ
வாளாநீதனிக்கிடந்துமாய்ந்தனையோவெனப்புலம்பிமறுகலுற்றார். (௨௪)

எத்திசையுங்கவித்தகுடைமதிமரபினுதித்தகுலக்கிறைவனுகி
யுத்தமமாங்குலகற்புக்கொருத்தியுயிர்த்துணையாகவொருநூறென்னும்
புத்திரரையுயிர்த்துமரும்புறவத்திற்றழன்மாய்ப்பப்புரண்டுமேனி
கொத்தியலகினிற்பருந்துவிருந்துண்ணக்கிடந்தனையோகோதிலானே. (௨௫)

ஊரிருந்துமகமிருந்துந்தொழிலியற்றற்கெம்போல்வாரிருந்துமுன்றன்
பேரிருந்துஞ்சீரிருந்தும்பேணுமனூழ்வலியாற்பெய்துற்ருயே
காரிருக்தகாட்டகத்திற்றனிக்கிடந்துவிண்கலந்தகாவல்வேந்தே
யாரிருந்துஞ்செய்தவினைதன்னைவிடாதெனும்பான்மையறிவுற்றேனே. (௨௬)

காட்டகத்தி லுழன்றிருந்த வெமையழைத்து நாடளித்துக் கவலைநீக்கித், தாட்டிகமும் பெருவாழ்வுந் தந்தளித்தோ யுனைக்கானிற் றமிகைவிட்டு, கூட்டுண்டோ முயிர்வாழ்ந்தோங் கோதையர்க ணலம்விழைந்தோம் புவிகைக்கொண்டோம், வீட்டினடை செயல்கேட்கி னிரும்பிழைத்த நெஞ்சுடையோ மெலிவெய்தோமே. (௨௭)

வெண்மதியூர்புகுந்தாயோவிபாகரனோடெதிர்ந்தாயோவிண்ணோர்யாருங்
கண்மலராயிரந்தோனுமெதிர்கொள்ளத்துறக்கநகர்க்கண்ணுற்றாயோ
தண்மதிசேரியக்கர்நகர்கந்தருவத்தினர்நகரிற்றலைப்பட்டாயோ
வுண்மைபுகல்விரிஞ்சிபதமுற்றாயோபெற்றதெமக்குரைக்கலாயே. (௨௮)

மாநிலமேலிறந்தவரையெதிர்நோக்குமாதவத்தோய்வானினூடுந்
தானவரைநோக்கினையோவெமதுழைவைத்துளபாசந்தளர்த்தினாயோ
கானிலுனைத்தனிவிடுத்தோமெனவேகொலெமைமனத்திற்கருதாயாகி
ஞானவனற்படிந்துடலம்விட்டகன்றாயாங்கிடந்தோம்ஞாலத்தம்மா. (௨௯)

கண்ணிலாதவனுனதுகணவனெனத்தாயகத்திற்காதுருமுன் [யே
மண்ணிலொருவரைநோக்கேன் வாள்விழியாலெனப்படத்தான் மறைசெய்தா
விண்ணிலருந்ததிகிராங்கற்புடையோயுனைத்தழலோன்வெருவிலாம
வன்னியெரித்தனன்கொல்லோவவனுடலம்வேவாதநலமென்னேயோ. (௩௦)

வித்தகமாமடமாதராற்றரியபெருந்தவங்கள்விருத்தன்பாங்கர்
பத்தினியின்றாளியற்றியெமைமறந்தாங்குடன்போந்தபாவையாயே
எத்தகைசிந்தித்தாயோவெரியெதிர்மேவுறும்போதிலென்சொற்றாயோ
வித்தகையோயிருந்துமுனக்குதவிலமாயினமென்றாயென்செய்தோமே. (௩௧)

தீண்டரியபெருங்கற்பைவென்றாலுந்தனக்குமுனந்தேவர்கோமான்
காண்டவனம்பசிக்களித்தகாளையையின்றவளென்றுங்கருதிலானோ
பூண்டழலோனுனையெரித்தபடியென்னோவெமையுரைத்துப்புரந்துநீங்கி
மாண்டகன்றயாதவர்கள்குலக்கொடியேயாம்வருந்தவருகிலாயோ. (௩௨)

கண்களாயிரத்தோற்குக்கவசமொடுகுண்டலங்கள்கரவாதிந்த
வண்மைவலான்றனையளித்தாய்வருகின்றாயெனவிமையோரெதிர்வந்தாரோ
பெண்மைநிறைதவறுதபெருந்திருவேயெமதுயிரேபேதமில்லாக்
கொண்கனுடன்கூட்டினரோநெடிதுநாட்பிரிந்ததுயர்குறையற்றாயோ. (௩௩)

அத்தாவோவன்னையரோவேதிலர்போலருங்கானிலகன்றுமாளப்
புத்திரரோயாமிருந்துபுலம்புகின்றோமிருந்திடத்தேபுகழேயன்றோ
வெத்தகையோயாம்புரிவதெனப்புரண்டாரழுதரற்றவிருந்தோர்யாரு
மொய்த்தழுதார்மாதரெலாமொலியெழுந்ததுகாந்தமதின்முன்னீர்போன்றே.

நாரதமாமுனியெழுந்துநரபதியையெடுத்தணைத்துநறுநீர்விசிப்
பாரதவங்கியத்தோனேயுலகியற்கைநீயுணராப்பரிசொன்றுண்டோ
நீரதமாநெறிகடந்துசெல்வதுவேன்புலம்புவதேனுணராநீர்மைத்
தாரதனைவிலக்கவலாரினிப்புரியுமாறுகடனாவதென்றான். (௩௫)

வே று.

தாவுபுகழ்மிக்குடையாய்தம்பியருநீயுமினி
மேவுமுயர்கங்கைநதியின்பால்விரைந்தேகித்
தேவர்புகழுலகியற்கைச்செய்வதுவேசிரென்றான்
மூவுலகினிகழ்வெல்லாம்புந்திநிகழ்புனிதமுனி. (௩௬)

ஆங்கவன்சொன்முறைதேறினவரும்பொன்னனைமாரும்
பூங்குலமாமறையோரும்புக்குயர்சானவிதோய்ந்து
தாங்கியருமாசூசந்தப்பாதுகடன்முறைக
ளோங்குதினமீராறுமுனுற்றினுருலகியற்கை. (ருஎ)

பன்னிரண்டுதினங்கடக்கப்பசுக்கோடிபாரனந்த
மன்னியவாடைகள்பூண்கன்மாமணிகளாடகங்க
ளன்னவர்க்குவெவ்வேறுவளித்தமுதுநுகர்வித்தார்
பொன்னனையமுனிவரர்க்கும்பூசுரர்க்கும்புகழோங்க. (ருஅ)

வாருதிசூழுலகின்மன்னரெலாம்வந்தணுகி
நேருமியல்பினைவினவிநெட்டுயிர்த்தித்தகையினிய
லாருலகிற்புரிந்தவரென்றகமகிழ்ந்தாரவரவர்க்குச்
சீருதவிமீட்டுய்த்துத்திருநகரமன்னினர். (ருகூ)

அத்தகையுமருகிருந்துநோக்கியமுதரும்பாடற்
கைத்தலவீணைக்குரியகடவுண்முனிகளித்தன்பா
லுத்தமருக்கினிதாசியுதவவவன்வழிக்கொண்டான்
மெய்த்திருவிற்போலிருந்தார்வேந்தர்மணியாசனத்தில். (சo)

என்றுபலமுறையியம்பியாசிரமவிப்பருவ
மொன்றுபடநிறைந்ததெனவுரைத்தமுனிபதமிறைஞ்சி
நன்றிதெரிசுடர்வேலானன்மையெலாம்பெற்றவனிற்
சென்றுதொழுதுரைக்கின்றான்பெயர்சனமேசயனென்போன். (சக)

திரிதராட்டிரன் காந்தாரி குந்தி

முத்திபெற்றசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ருகூங.

ஆசிரமவாசபருவம் முற்றிற்று.

உ

பதினொருவது,

மௌசலபருவம்.

கிருட்டிணபலராமநிரியாணசருக்கம்.

மிருதியுஞ்சுலபமும்வெம்மைதண்மையுங்
கருதியின்றுமலரநிகஞ்சார்ந்திட
பருதியோர்விகுதியிற்பற்றிலார்பெருந்
தொகுதியுள்ளுவப்பதேதுணையெமக்கரோ. (க)

குருகுலமாமணிகேட்டிகொற்றவர்
நிருகர்தன்னில்வாழ்சிறந்தபின்னரின்
வருடமேழுடனிரண்டைக்குமல்கின
பருணிதர்புகழவாழ்ந்திருந்தபான்மையே. (உ)

ஆயவன்முடிபுனைந்தவனியாண்டநாட்
போயதுமுதலவேழைந்துபுக்கதாற்
றாயவற்சரமதன்மீதிற்சூழ்வுடை
மாயவன்சரிதம்யான்வகுப்பன்கேண்மினோ. (ங)

துவரையிலிராமனுந்தூயதந்தையும்
நவமுறுதாயரும்நவிமின்னார்களுங்
கவலைதீர்மைந்தருங்கனிதமற்றயா
தவர்களுஞ்சூதமாதவன்விளங்குநாள். (ச)

புண்டரீகாக்கனைப்பொருந்திநோக்கவே
விண்டலக்கோசிகன்வீணைமாமுனி
புண்டரக்கண்ணுவரென்னும்புங்கவர்
வண்டுவரையிற்றிருமருகினெய்தினார். (ரு)

யாதவர்குமாரர்களிவரைநோக்கியே
பாதகஞ்சூழ்வினைப்பயன்றொடர்ந்திட
மேதகுசாம்பனைமின்னனார்களிற்
சாதனமுறும்படிசமைத்தமைத்தபின். (சு)

எய்திமாதவர்முனமிருத்தியிண்டிவள்
மையறுபப்புருவாகன்மனைக்கொடிச்
செய்தவச்சிறுர்கனையுயிர்த்தல்சேருமோ
பொய்தவிர்முனிவர்காள்புகலுமென்னவே. (எ)

ஆங்கவரிவனிலேயாய்ந்துரிந்தபின்
றீங்குறுசீற்றவெந்திமலிந்திடப்
பூங்குலத்தவராகசியம்புணர்த்தினீ
ரிங்கிவனுயிர்க்குமாறிசைத்துங்கேண்மினோ. (அ)

செங்கண்மாறருமொருசிறுவன்சாம்பனும்
பைங்கொடியுதரத்தின்முசலம்பற்றிவக்
தங்கண்மாநிலத்திடையாகும்யாதவர்
தங்குலமழிந்திடத்தக்கதாகியே. (க)

மாலுநல்லிராமனுந்தவிரமற்றுளோர்
ஞாலமீததனினாலுயிர்நலிந்துற
மூலமாமிராமனுமுடித்துத்தன்னுட
லோலமார்வாரியினொளிப்பதாகவே. (க0)

வாரிசநாபனும்வனத்தைநண்ணியிப்
பாரின்மேற்சயனனாயிருக்கும்பாங்கரிற்
கூரியவேடுவன்கணையிற்கொன்றலே
நேரியவுடற்சுமைநீக்கியேகவே. (கக)

என்றுசாபக்கனலிறைத்துவேதிய
ரன்றுமாலருகுபோதாமலாங்கனஞ்
சென்றுதம்மிருக்கையிற்சேர்ந்துளாரவை
யன்றுணர்ந்தனனடலாழியேந்தினோன். (கஉ)

ஊழ்முறையாவையுமுணர்ந்துமாதவன்
றூழ்வுறுகாலமுந்தேர்ந்துதக்கதே
சூழ்வினையென்றுளந்தொகுத்துமீளவும்
வாழ்வலிமைந்தரைவெறுத்துவைகினான். (கங)

மற்றைஞான்றொருபெருவரைதிரண்டென
கற்றதென்புலத்தமன்கரத்திற்றண்டென
மற்றவச்சாம்பனல்வயிற்றுதித்ததா
லுற்றவருரைப்படிமுசலமோங்கியே. (கச)

யாதவர்குலமெலாங்கலங்கியேங்கியே
சீதரன்றந்தையார்திருமுன்னேதலும்
போதவுமச்சத்தாற்புலம்பிமாழ்கியே
காதலாலோர்மொழிகரைப்பதாயினான். (கடு)

அரங்கொடுபொருததைப்பொடிகளரக்கியே
திரம்பெறுகருங்கடற்செறிமின்சேர்ந்தென
வுரம்பெறுமுலக்கைமாட்டேவவோடியே
யிரங்குவோர்யாவரும்பொடியியக்கினர். (கசு)

விட்டனர்வேலையுள்வேதமாதவ
ரிட்டசாபங்கடந்திருத்தலுன்னியே
துட்டரில்யாதவகுமரர்துன்னினர்
மட்டிலாவலிமெனமயக்கஞ்சேரவே. (கஎ)

இவ்வணம்பயிலுநாளெடுத்ததண்டமு
மைவணமேனியுமுருக்கின்மாமலர்ச்
செவ்வணவிழியுமாத்திரிவன்மாநகர்
கைவருமிடத்தெலாமுருவங்காட்டியே. (கஅ)

அற்புதமெய்துறயாதவர்க்கெலாம்
பற்பலவாய்வுறபாதங்காட்டுமாற்
சொற்படவரியதேயெனினுஞ்சொல்வனாற்
சிற்சிலதகைமைகடெரியுமாற்றினால். (கசு)

ஒலிகளுங்கூகையுங்கிளர்த்துந்தங்குலத்
தொளிபடுகுரலலாதோர்குரற்கொடு
மிளிர்தரவாற்றிடுமேடகங்கள்பூந்
தளிர்படுகரிக்குரற்குழக்கூயதால். (உ0)

வேறு.

ஆன்களும்வேசரியுயிர்க்குமாகுவைக்கிரிகளளிக்குஞ்சுணங்கினுகும்
வான்கிளர்மாற்சாவங்கண்மற்றுமுயர்வன்சரக்கனொருவனன்றி
பூன்கிளர்வேல்யாதவர்கள்பூசுரர்மாட்டினிவிடர்செய்துவப்பதானார்
மான்பொருகண்மடநல்லார்மைந்தருமானநவழியேமருவலுற்றார். (உக)

அங்கிகொழுந்தழற்சிகைகளுளூதங்கள்வருணங்களாற்றி
பெங்குமிடத்தினிற்றுவுமிருக்கருந்துமடிசிலகத்தெய்தாநிற்கு
பங்குபலபலகிருமியிவைமுதலாமுற்பாதமயக்கினோக்கிச்
செங்கண்மான்மனங்கொண்டான்காந்தாரிமுனஞ்சபித்தசெயலேமாதோ. (உஉ)

ஆண்டுமுப்பத்தைந்தகலவாறுமாண்டெய்தியதிவ்வாண்டிற்கோதை
மூண்டழற்சிற்றத்தாலேமொழிந்தபடிதவிர்ந்திடுமோமுடியுமாறு
பூண்டடைந்ததினியென்றேபோக்கவொருவருக்கெளிதோபுவியிலென்று
நீண்டமாலுளங்கொண்டான்பேரவையினிருந்திதனைநிகழ்த்தலுற்றான். (உங)

வாருதியாக்கெய்வதத்துக்கியாமடைந்துவழிபட்டுமாறில்பூசை
சேருநலேமடனகரிலுள்ளோர்கள்பலருமிந்தநீர்மைதேர்ந்து
சாருமெனமுரசறைந்துசாற்றுவித்தானசாத்திரையத்தன்மைகேட்டுச்
சீருடையோர்மனநூக்கமெழமகிழ்ந்தார்மேற்செய்கைதேர்கலாதார். (உச)

அவ்விரவிலிருகோதையெயிறுடனுங்கறுத்தவெறியங்கத்தோடும்
பௌவமெறுளுசெய்பவிழிப்பார்வையொடுமொருபாவைகனவிற்றோற்றி
நவ்விபரைமீர்த்தேகநலமணிப்பூண்குடைகொடிகளுமவேந்தர் [ம்.
திவ்வியவான்படைகளெல்லாமரக்கர்கொளக்கண்டெழுந்தார்செனங்களெல்லா

மற்றைஞான்றுச்சியினன்மாதவன்கைச்சுடராழிமன்னர்காண
நிச்சயமாமகல்வானினுயர்ந்தெழுந்துமறைந்ததருணமிப்பொற்றே
ரச்சுவங்கணான்கினொடுமணிகெருடகேதனத்தோடண்ணலானோன் [ம்மா.
பொற்றடந்தேர்ப்பனைக்கொடியோடெழுந்தகன்று போய்த்தண்டர்புணர்ப்பால
இன்னபரிசுணர்ந்துமனத்தெட்டுணையுமச்சமறவிருக்கும்பாங்கர்
மன்னியகலம்பரத்திற்றீர்த்தயாத்திரைக்கெழுமின்மன்னர்யாரு
முன்னிவிரைவினிலென்னவொருசொல்லேபலமுறையாவுரைப்பக்கேட்டுத்
தன்னிலதிசயமெய்திமாதர்களுமாந்தர்களுந்தருக்கினாரே. (உஎ)
தனதுதேர்வானடையமற்றொருதேர்தாருகன்கொண்டெய்தமாயோன்
மனதிலொருமகிட்சியுமெய்வாட்டமுமற்றதன்மிசையேமன்னர்சூழப்
புனிதமுறுபடைசூழநகர்கடந்துபோதரலுமயங்களோங்க
வினிதினலாயுதனடைந்தான்வாகனமும்படையுமிலாதெழிலினோடும். (உஅ)
முற்பட்டபெருஞ்சேனைமுன்னீர்வைப்பினையடையமுதல்வர்க்காங்குப்
பிற்பட்டபெருஞ்சேனைபெருங்கடலினார்த்தெய்தப்பேரியோதை
சொற்பட்டதிசைகளெல்லாஞ்செவிடுபடப்பலசுவைசேரமுதுந்துய்க்கு
மிற்பட்டமாமதுவுந்தசையுணவுஞ்சகடுறக்கொண்டேகினாரே. (உகூ)
பொற்பலவுபந்தரிட்டுப்புதுமலர்மாலிகைநீபம்புகைகணல்கி
நற்பலபண்டமும்முழுதும்நறுந்தேனுந்தசைச்சுவையுநைவேதித்து
வெற்புறுதோள்விடலையருமின்னாருமருந்திவிழாநடத்தலானார்
நற்பகலுந்தெரியாமலாதரத்தர்கடன்மருங்கினழகாய்மன்னோ. (௩௦)

வேறு.

நோக்கமுடையபலராமனொடிக்குமுன்னரெழுந்தகன்றே
யாக்குமுத்தமன்றவத்தைநோக்கற்கடைவேனெனச்செல்ல
ஆக்கமுடையநிகழ்வனைத்துமுணர்ந்தமாயன்மறுத்துரையான்
வாக்கற்றிருந்தானவனந்தவனத்திலொருபாதவமடைந்தான். (௩௧)
வெள்ளையுடலமொளிசெய்பமண்மேற்பதுமாசனம்விளக்கி
வள்ளற்பிராணாயாமநெறிமருவச்சமாதியடைந்திருந்தான்
கள்ளிற்களித்தேயாதவர்களகன்றுசினங்கண்மேற்கதுவப்
பொள்ளென்றிரைத்துப்பலபேசிப்புகுந்தார்கொடும்போர்புரிவதற்கே. (௩௨)

வேறு.

சாத்தகிசிவந்தவிழியிற்பொறிதயங்கத்
தாத்திரிபுரக்குமிதன்மன்னர்சமுதாயம்
பார்த்தருகினிற்கிருதவன்மன்புகம்பாரா
வாய்த்தபடிகூறிமருளாலிகழலுற்றான். (௩௩)

தாமனொடுகூடிமனையிற்றுயிறரித்த
கோமதலையைவருயிர்கொண்டகொடியோனீ
தேமருவுமன்னர்புரியார்சிறியநீசந்
தாமுமிகலாருனதுதன்மையெனவைதான். (௩௪)

அன்னவனுமீண்டிவனையாரமுனிநோக்கி
நின்னையுணராய்கொனரனின்கரமறுத்த
பின்னர்தலைகொய்துயிர்பிழைத்ததைமறந்தோ
வென்னையிகழ்ந்தாயெனவெடுத்தெதிருரைத்தான். (௩௫)

அவ்விடையுருக்குமணிமைந்தனருகாகி
வெவ்வழல்செய்கண்ணொடுவெருண்டுகிருதப்பேர்ச்
செவ்வியுடையோனைமிகுதிமைபலபேசி
யெவ்வமறுசாத்தகிதனக்கிதவுசெய்தான். (௩௬)

கண்ணனுமிவர்க்கினியகண்ணருள்புரிந்தா
னண்ணியிவர்தம்படையினுலவனையோச்ச
புண்ணியர்சொலின்படிபொருங்கிருதவன்மன்
மண்ணிலிருதுண்டமுறவீழ்ந்துயிர்மடிந்தான். (௩௭)

ஆயவனிறந்துமிகலாகியவர்சேனை
நேயமுடையார்கண்மிசைநேரவவர்கூடி
மாயமதுவான்மதிமயங்கியிகலானார்
தூயரிடுசாபமெவரேதொலைதல்செய்வோர். (௩௮)

வான்பொடியுறுத்திமுசலங்கடலின்மாற்றித்
தானிகலுருவகைதடுத்தனர்கரைப்பாற்
கான்படமுளைத்ததுகைவாணிகர்செய்கோரை
கோன்முறையகழ்ந்தனர்கள்கொண்டனர்கரத்தில். (௩௯)

தந்தைதமையன்றனதுதம்பிதனிமாமன்
மைந்தனெனவுன்னலிரண்டுவருக்கத்தோர்
முந்தமர்செய்தாருமுறையாயுலகின்மாய்ந்தா
ருந்திமலரோனிலைதுணர்ந்தகலநின்றான். (௪௦)

தாரகனுமப்புருவெனும்பெயர்தரித்த
மாரகனும்வந்திருமருங்கினுமிருப்ப
வேரகமுநின்றதிருமானுமினிதேகிப்
பாரகமுறுந்தவமடைந்தினிதுபற்றா. (௪௧)

முன்னவனிருந்திடமடைந்துமுறையாலே
யன்னவர்படுஞ்செயலனைத்துமுரைசெய்த
பின்னரினடுத்தபடிபேசிநரனைக்கொண்
டுன்னுமுனம்வம்மினெனதாரகனையுய்த்தான். (௪௨)

ஆங்கவனகன்றபினரப்புருவையாங்கு
நீங்கலறுமாதரொடுதேர்கரிகணீடும்
பாங்கர்நகர்சேர்த்துவருகென்றுரைபணிப்ப
விங்குபுனன்றெனவிரைந்தனனடைந்தே. (௪௩)

செல்லுநெறிவேடனொருகோரைகைதெறிப்ப
மல்லுலவுமார்பினுறமாய்ந்தவனும்வீழ்ந்தான்
கல்லைமுதலிற்குடைகவித்தவனைத்தே
வல்லவர்தவத்தரெனவேமனம்வலித்தான். (௪௪)

வேறு.

முன்னவனைமுகநோக்கிமுகுந்தனிதுமொழிகின்றான்
நன்னரும்போசக்குலத்தோர்நங்குலத்தோர்பற்பலருந்
தன்னின்மடிந்தாரொருவன்றப்பியுமுய்ந்தகலாமே
என்னையவனுந்துறந்தானுயரருளின்செயலென்றே. (௪௫)

யானேகிமாதரையுமிகும்பரியுமத்திகளுந்
தானேகிமானகரிற்சரிக்கும்வகைநிலைப்படுத்தி
யூனேறுசுடர்வேலோயுனதருகுசார்வனென
வானோர்கட்கரிதானோன்வந்துநகர்த்தலைசார்ந்தான். (௪௬)

தந்தையடிவணங்கித்தாயருக்குங்கைமுகிழ்த்து
வந்துநிகழ்ந்தபடியனைத்துமாறுமன்
முந்தவுரைத்தினிநானிங்கிரேன்முன்னவன்பாற்
சிந்தையறவிருந்துசேர்வேன்றவமென்றான். (௪௭)

அத்திநகருக்கருட்டாரகனடைந்தான்
மெய்த்துணையாம்பற்குனனுமேவுமவனோடு
மித்தரணியும்பேரிருந்ததிருமானகருங்
கைத்தலத்திற்பொன்போலக்காத்திருமின்றண்ணருளால். (௪௮)

மாளுந்தரத்தோர்வருவரோமாழ்காம
லாளுங்கரிபரிகளாமவையும்வான்பொருளுங்
காளம்பிறந்தகடைக்கண்ணாருநீங்காம
லாளிநிகர்வீரனொடுமேவலறனுமென்றான். (௪௯)

என்னவசுதேவனிருவிழியினீருகுத்து
முன்னவனுநீயுந்தவத்தையினிமுற்றினாற்
பின்னரிருந்துலகிலென்னோபெறும்பேறு
முன்னியவண்ணமுடித்திருத்தியென்றுரைத்தான். (௫௦)

தேங்குபரியுந்திறலுடையகைமாவுந்
தாங்குமடமாதர்குழுவுநகர்சார்வித்து
நீங்கிப்பலராமனின்றவிடம்போயடைந்தா
னோங்குபதமொன்றுலகையளந்தோனே. (௫௧)

வையமுண்டமாயனெதிர்வந்துநிற்பமுன்னவன்றன்
செய்யவிழிகாட்டுந்திருமுகத்திலுற்பவித்துப்
பையிருநூறைந்துபன்மணியுஞ்சோதிவிட
மெய்யுயருங்குன்றமெனவியாளமகல்வுற்றதுவே. (௫௨)

நன்னாகமேகவனல்னுடலம்விழ்ந்திடலான்
முன்னாட்பிறவிமுகுந்தனுணர்ந்தாங்கிருந்து
தன்னானக்கன்றானிகழ்பனைத்துந்தன்மனத்தி
னுன்னாவிருந்தானுயர்நாகம்போயதுவே. (௫௩)

வாருதியிற்செல்லவருணனெதிர்கொண்டுபல
சேருங்கடனியற்றிச்சிங்காதனத்திருத்தக்
காருடையநாகக்கணங்களெலாந்தாழ்ந்திறைஞ்சிக்
கூருமிறையாகக்கொண்டகன்றார்பாதலத்தில். (௫௪)

அன்னபரிசனைத்துமாய்த்துவசுதேவன்மகன்
றன்னுடலுநீக்கித்தனியேருவான்சமைந்து
முன்னம்பரமமுனியுள்ளங்காற்புறத்திற்
சின்னமுறுமென்றமொழிதேறினான்வினாக. (௫௫)

அவ்விடத்தைநீங்கியகன்றுபலகாத
மெவ்வமற்றகாட்டகத்தின்வோர்தருவினீழலிடை
செவ்வியுடன்வைகியரும்புலன்செலாதடக்கிப்
பௌவமெனவோர்நிலத்திற்பள்ளிகொண்டான்பாரளந்தோன். (௫௬)

உய்யுஞ்சமாதியுறவறிவுபூதலத்தின்
மெய்யுங்கிடப்பவிளங்குபதந்தானீட்டி.
மையலறத்தனுடலம்மாற்றநினைந்தேயிருப்பக்
கையிற்சிலையுடனோர்கானவர்கோன்மேவினனே. (௫௭)

நாடாமேதோன்றும்பதங்கடமைநற்புரவென்
றேடார்சிலைமின்முகமிட்டகணைபோக்குதலுந்
தோடார்நறுமென்றுளவினான்காலுருவி
விடாவகன்றதுயிர்வேடனிதுகண்டானே. (௫௮)

புருடனெனவறியேன்புங்கவமுய்த்தேனென்று
மருடரவேதாள்விழ்ந்துமாழ்கினான்மாதவனு
மருடருந்தன்பேரொளியாமங்கமுடன்றன்பதத்திற்
பெருமையுடனேகினான்பேராயிரமுடையான். (௫௯)

மாதவரும்வானவருமெண்டிசைக்குமன்னவரு
மோதுமியக்கர்சித்தர்விஞ்சையரும்பொற்புடைய
வேதமிலாப்பன்னிருவர்பதினொருவரெண்ம
ராதிமுதலையடைந்துதொழுதஞ்சலித்தார். (௬௦)

கண்ணாமுகுந்தாகருணாகராகடனேர்
வண்ணாபடையைந்துடையமலர்க்கையனே
எண்ணாலடங்காவுயிர்த்தோரிருப்போனே
தண்ணாரளியாலுங்காக்குந்தன்மையனே. (௬௧)

அம்புவியெலாமோரடியாவளந்தோனே
கம்பமதவானையொடுகஞ்சனுயிர்கொண்டோனே
நம்புமடலைவர்திருநாடாள நூற்றுவர்க
ளிம்பரழியமுடித்தெய்தும்பெருமானே. (௬௨)

நாராயணனேநான்மறைக்குமெட்டாத
பாராயணனேபரஞ்சுடரேபாவனனே
தாராத்துளவந்தரித்ததாமோதரனே
யாராகிலுன்னையறிந்தோராருலகிலையே. (௬௩)

என்றுமகவானிறைஞ்சியிசையெடுப்ப
வென்றிமலரவனுமேவித்தொழுதிறைஞ்சி
யொன்றுபடுசிந்தையொடுமுள்ளந்தளிர்ப்பெய்த
வென்றிமழைகாத்தவனையேத்தினார்வீறுக. (௬௪)

வானவர்கடுன்னிமலர்மாமழைபொழியத்
தேனவிழுந்தாமரையான்சிந்தைகளிகூர
ஞானமுனிவர்கணம்நான்மறையால்வாழ்த்தெடுப்பத்
தானுமரியாதனமீதினிதிருந்தான்றகைமையொடும். (௬௫)

கைகாட்டியார்க்குங்கருணையொடுவாய்திறந்து
மெய்காட்டுந்தூயருணர்மினோமேதினிமேல்
பொய்காட்டிவாழ்ந்தகதையாரார்புகன்றாலு
முய்காட்டிமேவவுறுவிப்பனெம்பதமே. (௬௬)

நெஞ்சிற்கருத்தொன்றுடையராய்நீணிலத்தோர்
தஞ்சமுறவெஞ்சரிதஞ்சாற்றிநினைத்தாரே
லெஞ்சலறவக்கருமமெய்தியிணைத்தாளடைவார்
பஞ்சிற்பொறிபோற்கழியுமவர்பாவமெலாம். (௬௭)

என்றுபலவுமெடுத்துரைத்தேயாவரையுஞ்
சென்றிருக்கைதோறுந்திகழச்செலவளித்து
மன்றல்கமழுமணியாசனத்திருந்தான்
றுன்றுமடியார்தொகுதியிடையிற்றுளவோன். (௬௮)

ஏகிப்பெருமானிமையோர்த்தொழுதேத்த
வாகைப்பரமபதம்வைகியவாகூறினனாற்
பாகிற்சிறந்தோன்படர்ந்துரைக்கப்பாண்டவர்கள்
சோகத்தடைந்தபடியனைத்துஞ்சொல்லுதுமால். (௬௯)

கிருட்டிணபலராமநிரியாணசருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௬௯.

உ

அருச்சுனன்றுவரைபோய்

மீண்டசருக்கம்.

பொற்கடந்திகழ்முலைப்பூவையொடுந்தாய்
சொற்கடவாத்துணையோடுங்காணுறீஇ
மற்கடங்கொடுகடலடைத்துவாளரக்
கற்கடந்தவனடிக்கமலமேத்துவாம். (௧)

வேறு.

வாயுவேகமுமானதவேகமுமயங்கத்
தூயதாரகனத்தினபுரிகர்துன்னி
கேயமன்னவர்பேரவைகண்டுதன்னிலத்திற்
காயமொன்றிடத்தொழுதெழுந்திவ்வுரைகழறும். (௨)

வேலைத்தெய்வதமருடராச்சாத்திரைவிழைந்து
மாலைப்போதினில்யாதவர்மதுவினையருந்திக்
கோலத்தேயவாட்கோரைகைக்கொண்டமர்முற்றி
ஞாலத்தேமடிந்தாருயிர்நாகமேறிடவே. (௩)

தாலகேதனன்கெருடகேதனனிவர்தவிர
மூலவேந்தொடுமொய்குழன்மார்களுந்தவிர
ஞாலத்தேயுளரிவரெனநாமமோதிடவோர்
பாலராயினுங்காண்கிலன்யாதவர்பரப்பில். (௪)

வீரர்மற்றிருவோர்களுந்துவரையைவெறுத்து
தாருநீழலிற்றவம்புரிந்திருந்தனர்சார்ந்து
சேரவோதியேதனஞ்சயனொடுமொருதேர்மேற்
போகவென்றனைவிடுத்தனன்பேய்முலையுண்டோன். (௫)

என்றுகூறுமுனிருவிழியாலிகள்சொரிய
வென்றிமன்னவரைவருமண்மிசைவீழ்ந்து
குன்றுபோலியவுபர்புயங்கோதறவாடி
நின்றுசோகமுற்றாரென்கொனிகழ்த்துதலம்மா. (௬)

அனையபான்மைகேட்டாயிழைமாரந்தப்புரத்திற்
கனைபெருங்கடலாமெனவரற்றினர்கருதி
வினைவல்பற்குனன்யாரையும்விலக்கிவிற்றாங்கி
தனைமறந்துநற்றருமனைவிடைகொண்டுசார்ந்தான். (௭)

கொடிஞ்சியந்தனித்தேர்மிசைக்குப்புறமுன்னே
கடிகொடாரகன்கடவினன்வாயுநற்கதியும்
மிடையடைந்திடவின்னவரற்புதமடையப்
படிநெளித்திடவந்ததுசுவேதவாம்பரிமா. (௮)

துவரைமாநகர்சேர்ந்துதன்றேரினைத்தொலைந்து
கவினழிந்தமாமறுகெலாங்கண்டுகண்முடித்
தவமுல வசுதேவன்வாழ்கோவிலிற்சார்ந்தான்
குவலயங்கொடைநிழலிற்புரந்தபற்குனனே. (௯)

முந்துபோந்திவன்வரவினைமொழிந்திடவாவி
வந்தெழுந்தொருமண்டபமருங்கினில்வந்தான்
சந்தகம்புகழ்முராரியைத்தவத்தினாலளித்தோ
னிந்திரன்மகனிணையடிவணங்கினனேகி. (௧௦)

மருகனைத்திருமார்பிடைத்தழுவிவாள்விழிகள்
பெருகுநித்திலமழையினால்பேருடல்விளக்கி
யுருகிமைந்தரைநினைதொறுமுயிர்த்துயிர்த்திரங்கி
யருகின்மாதர்களிரங்கிடவம்புவிசாய்ந்தான். (௧௧)

சாய்ந்தமாதுலன்றனையிருகரங்கொடுசாயா
தேந்திவாள்விழிபொழிதருமினியநீர்மாற்றி
யாய்ந்தநல்லறிவுகுப்பதோவருந்துயர்பொருட்டார்
சாந்தமோங்குதிதனிமனமென்றிதுசாற்றும். (௧௨)

கிருதவன்மனற்சாத்தகிகிளர்மதிச்சாம்பன்
திருவுலாவனுருத்தன்மற்றவன்றந்தைசிற்றம்
பொருவிலாவிருடிக்குலம்போசநற்குலத்தோர்
கருதுதற்கரியார்விதியாவரேகடப்போர். (௧௩)

ஊழ்முறைச்செயலாலவருடன்றுயிர்தொலைந்தார்
காழ்வினைப்பயன்யாவருங்கடக்கரிதையா
மாழ்கியுட்கினையென்றுரைதரவுமாறுமற்
றாழ்வுபற்றியேமருகனுக்கிவ்வுரைதந்தான். (௧௪)

வினையின்மாண்பதுவென்னினுமுராரிபால்வெறுப்பான்
மனதுமெய்தினன்மைந்தரைவாட்டியதல்லாற்
கனைபொலன்கழற்காளைகேள்கண்ணனால்விலக்கிற்
பினையுமுண்டுகொலாமமர்பிழைபடாதென்றான். (௧௫)

அபிமன்மைந்தனுக்காருயிரளித்தவனன்றோ
விபுதமாமறையோன்மகன்வேலையில்மூழ்கத்
தபுதலன்றியேமீட்டவன்றனக்களித்திலனோ
குபிதமாய்மடிந்தோருயிர்கொடுத்தன்மாற்கரிதோ. (௧௬)

மனத்திற்கொண்டசங்கற்பமவ்வண்ணமாகையினா
லெனத்துபேட்சையாலிருக்குமானுடன்படானென்றோ
கனத்தைப்போனுடல்கலந்தவினெனவுளங்கலங்கி
நினைத்திரங்கிடுகுரவனுக்கருச்சுனனிகழ்த்தும். (௧௭)

ஐயகேண்முனம்பாரதவமரினிலயர்ந்த
செய்யவாயுடைத்திருவனுள்சகபதிமனையாள்
பொய்யிலாக்கொடுஞ்சாபமும்புனிதர்கூறுரையு
மெய்யர்யாரையும்வேண்டினும்விலக்குதலரிதே. (௧௮)

விரைபோக்கியவெம்பொடிவேலையிற்படைவாட்
கோரையாயுடலழித்தவாறுளத்தினிற்கொண்டு
மாறாமினிவெருப்பதாக்கியவுயிரழியும்
போரைநீக்கினுமிருப்பரோபொறியிலாப்பொருநர். (௧௯)

ஆழ்ந்தபோறிவான்மயக்காற்றலைவென்று
தாழ்ந்துரைத்திடத்தனஞ்சயன்றன்மனந்தேறி
வீழ்ந்தமாதுலனிருந்துமான்மீட்டுமிங்கெய்தி
வாழ்ந்திடும்படிசொன்னசொற்செவியுறவகுத்தான். (௨௦)

முற்றமைந்தருந்துணைவருமுனையினிற்சாய
வற்றிநீரிலாவான்கடனிகர்த்தமாநகர
முற்றிடேனினிமுன்னவனொடுந்தவத்துறுவேன்
கற்றநேர்மையன்பற்குனன்வருவனிக்கணத்தில். (௨௧)

உலகமூன்றினுமொருவருநிகரிலாவுரவோ
னலகிலாவலியானுடனவனிகாத்திடுமின்
பலருமாய்ந்தவர்களேபரம்படுகனற்படுத்தி
சலசவாண்முகத்தையலாருடனகர்நயங்கி. (௨௨)

இந்தமாநகரேழுநாளிருப்பதாமினிமே
லந்தமெய்திடும்வாரியிலதர்க்குமுன்னேகி
முந்துநற்புரநிறுவியேவேறொன்றுமுற்றி
யுந்திவைகுமென்றுரைத்தெமக்குனைத்துணைசெய்தான். (௨௩)

என்னவோதலுமிந்திரன்மாமகனிரங்கித்
தன்னைநீத்தியான்றரிப்பனோதாரணியிடத்தி
லன்னவாசகஞ்செவியுகாதாயினுமடியேன்
முன்னியோதுதல்கேண்மினேனெனவிதுமொழிந்தான். (௨௪)

அடுத்தகாரியம்பலவெலாமாற்றுவனன்றி
விடுத்திங்கைவரையிருக்கிலன்வேந்துரைத்ததுவுந்
தடுத்திருந்தவரிந்திரப்பிரத்தமேசார
மடுத்தழைத்துடன்வருகவென்றேவினன்வந்தேன். (௨௫)

அன்னநன்னகரானுகிநீர்யாவருமிருமி
னென்னநன்றிதேயென்றனன்மாதுலனிப்பாற்
பன்னுதாரகன்றனைமுகம்பார்த்தினித்திருமா
லுன்னுபாங்கர்போய்நீள்வனீயுடனெழுகென்றான். (௨௬)

அனையசாரதியன்னதேயாதவர்குலத்தின்
மனையின்மாதரும்மாநகர்ச்சனங்களும்வருந்தா
தினையபான்மைசெற்றிரங்குதலொழிந்தபின்பேசி
நினையுமுன்னரின்மீளுதுநிருபரேறென்றான். (௨௭)

கேட்டுநன்றிதேயாரையுங்கொணர்கெனக்கிளத்தி
நாட்டமாயிரமுடையவனந்தனனிருப்ப
கோட்டமற்றநற்குணனுடையமைச்சரைக்கொணர்ந்து
காட்டினானவர்க்கிம்மொழிபகர்ந்தனன்கருதி. (௨௮)

விதிவசத்தினால்வேந்தர்தங்குலமழிந்தனவாற்
பதியினிற்றிகழ்நால்வகைகருணைமாம்பரப்பிற்
கெதிர்கரைத்திடுசெயலுளவெவருமிங்கெய்த
மதிவலத்துளீரனைமினேமாண்புறவென்றான். (௨௯)

தூதுபோக்கினால்வருணமும்வரும்படிதூரப்ப
மாதுயர்க்கடலழுந்தினோர்வந்தவைநிறைந்தார்
மூதுணர்ந்தநல்லுழையர்தமுடன்முகநோக்கி
யோதலாயினனோர்மொழியுவரிநீர்வண்ணன். (௩௦)

மாயனும்பலராமனுமாதவமடைந்தார்
தூயயாதவர்குலமெலாந்தொலைந்ததுன்பதத்தா
லாயதன்றிவானவர்மொழிந்தனரணிநகருஞ்
சாயும்வேலையிலேழனுந்தினம்வந்துசாரில். (௩௧)

என்றுபற்பலவென்கொலோவினிநகரிருத்தற்
கொன்றிடாதுமையிந்திரப்பிரத்தத்தினுய்ப்பன்
வென்றிமான்மகன்மைந்தனும்வச்சிரன்வேந்த
னின்றுமல்குதிர்யாவருமெய்துமினிசைவால். (௩௨)

இறந்தவேந்தரைமீட்பதேவொருவருக்கிசையா
வறந்தவாதவனருளினாலுமையெலாமளிப்பன்
சிறந்திருத்திராண்டெய்தியுந்திருவெலாஞ்சகட்டிற்
கறங்குபாரதிற்புரியுமின்கலங்கலீர்சிந்தை. (௩௩)

பாலர்மாதர்கள்விருந்தர்வாகனங்களிற்படர்மின்
காலினேகவல்லார்களவ்வகைகலந்திடுமின்
ஞாலமெய்தலீர்சூக்குமமுணர்ந்தவசரத்திற்
சாலவூக்கத்திற்படர்வதேநெறியென்றுசாற்ற. (௩௪)

கேட்டியாவருமவ்வணமுடன்பட்டுக்கிளர்ந்து
வீட்டினேகினருழையருமவ்வணம்விழைந்தார்
பூட்டுவெஞ்சிலைக்கரத்தினான்புனிதமாலகத்தி
லாட்டிமார்க்கெலாமருந்துயரகற்றிநின்றனனே. (௩௫)

தரணிமேற்றிசைமறைத்துமிழ்த்திசைதருமுன்னர்
பாணிபெற்றமாதவன்றனைதவத்தினுற்பயந்தோன்
கரணமற்றுயிர்வான்கதிகலந்தனன்கலித்த
துரைசெய்மாமனைவாரிதியோசையிரேங்க. (௩௬)

வேறு.

அன்னகாரணமறிந்தருச்சுனன்
முன்னியோடியேநோக்கிமுன்வினை
தன்னைநாடியேதளர்வுதேறினன்
மின்னனார்க்கெலாம்விம்மனீக்கினன். (௩எ)

முச்சகம்புகழ்முகுந்தன்பேரனும்
வச்சிரன்றனைமாழ்கனீக்கியே
யச்சமம்புனலாட்டிமாலிகை
மெச்சுபூண்களான்மெய்ம்மறைத்தபின். (௩அ)

இரவிபொன்மணியிழைவிமானமேற்
பரிவினுற்கொடுபலர்திரண்டிட
விரவுமாமறைவிரித்தபான்மையாற்
புரிசடங்கெலாம்பேரன்போற்றவே. (௩௯)

வனத்தினேர்புடையகிலும்வாசமா
புனித்தசந்தனத்தருவும்பூட்டிய
வினத்தவான்கதையிட்டருங்கனற்
கனத்தினல்கினார்கடன்களாற்றியே. (௪0)

தேறுதேவகிதிருவுரோகணி
மாறில்பத்திரைமதுரையென்றுபேர்
கூறுநால்வராங்கோதைமார்களும்
வீறுமேம்படத்துணிவின்மேவியே. (௪௧)

இருந்தவர்க்கெலாமின்சொலாற்றியே
பொருந்துசோடசதானம்போற்றினர்
வருந்திடாதனுமரணஞ்செய்தனர்
கருந்தடங்கணார்கற்புகாட்டியே. (௪௨)

புரியுமாறெலாம்புரிந்துமீண்டபின்
பரியபாதவரெவர்க்குமாரழற்
குரியர்யாவருமுனுற்றிமுற்றினர்
தெரியும்வான்கடன்செலுத்தினர்களே. (௪௩)

வையங்காவல்செய்மன்னவர்க்கெலாம்
செய்யும்வான்கடன்செலுத்துவித்தபின்
பொய்யிலாகரன்புனிதமால்செய
லுய்யகாடுவாலுன்வியேகினன். (௪௪)

மாதராரையுமறுத்திருத்தியே
காதல்வச்சிரனுழையர்கைவா
வேதிலார்பலரெய்தவேகினான்
சூதன்றேர்விடச்சனங்கள்சூழவே. (௪௫)

மாலிருந்திடமேவிமற்றிவர்
சாலநோக்கினர்தளர்வுநோக்கலாற்
கோலங்காண்கிலர்குறைந்துமாழ்கியே
ஞாலமெங்கணும்நாடியோடினார். (௪௬)

எங்குங்காண்கிலரிளைத்துவாடுமுன்
றங்கும்வேடனார்தனுவுந்தானுமா
யங்கடைந்தவரெண்ணமாய்ந்தபின்
புங்கவன்பயின்றிருந்தபொங்கர்வாய். (௪எ)

எகினான்முனமேறநோக்கினேன்
மேகமேனியன்மிளிர்ந்தபாங்கரிற்
சோகநீங்கயான்றுணையிற்போதுவன்
வாகுளோருடன்வம்மினென்னவே. (௪அ)

அன்பினாலவனுடனடைந்தனர்
முன்பிருந்திடனெய்திமாமுகி
லென்பதாமுடலேறநோக்கினார்
துன்புதாங்கியேபுவியிற்சோர்ந்தனர். (௪௯)

ஐயநின்னுடலவனிசேர்வதோ
மெய்யினீங்கியுன்னுயிர்விலங்குமோ
செய்யதாமரையிருந்தவேதியன்
வெய்யனிவ்வணம்விதித்துளான்கொலோ. (௫௦)

என்றுபன்னியேயிரங்கியாவரு
மன்றன்மானுடன்மார்பின்மீதினுந்
துன்றுதாளினுஞ்சோர்ந்துவீழ்ந்தனர்
கன்றுதாய்படக்கவலுமாறுபோல். (௫௧)

ஆயகாலையிலரிகுமாரனுந்
தூயசிந்தையிற்றுணிபுண்டாகியே
மேயமானுயிர்நீங்குந்தன்மையை
மேயவாய்ந்தனன்மேனியெங்கணும். (௫௨)

உள்ளங்காற்புறத்துருவுமம்புகண்
டள்ளல்வேலைசூழவனிநாயகன்
வள்ளனற்றுருவாதமாமுனி
யுள்ளிக்கூறுசொல்லுணர்வினுன்னினான். (௫௩)

வேறு.

பகிர்பாயதமெய்தாவிருபதமுறுறுமிறுநான்
மகிழ்வாலுணர்கெனவோதியமறையோன்மொழியுளவா
லகிலேசனுமடிபூறுறவகலாவுயிர்துறந்தான்
புகுமேமுறையலதோநெறிபுனிதர்க்கெனப்புகலா. (௫௪)

இத்தன்மையினுனெனமையிகலுடுயிர்காத்தோன்
வைத்தென்பயனினியென்னனிமயக்காற்சிலருடலஞ்
சுத்தம்பெறுதேர்மிசைமங்கேகுதுநகர்வா
யுத்தம்புகவினியென்றனருடனேவருமுரவோர். (௫௫)

நாளேழுகடந்தாலலிநகர்கொள்வதுசாதம்
வாளாவறுநாள்புக்கதுமறுநாளுளதொன்றே
கோளாவதிலரமாதர்குழாமிங்கிவைதேர்ந்தாற்
றுளார்தடநீர்பாய்வதுபோலாந்தமுன்மலிவே. (௫௬)

இதனுலடனகருள்ளவிரைவருஞ்செலமாட்டார்
பதமாமுறையுயிருள்ளனபலவும்பொடிபடு மா
லதுகாரியமுறையன்றிவணனன்மூட்டியடைந்திவ்
விதமோதலமுளனென்றுவிளம்பித்துணிவுறவே. (௫௭)

புரமுள்ளவர்தமையிந்திரபுரமேநிகர்புரிவாய்
திரமெய்திடவுறவித்திதுதெரிவித்திடலறனென்
றரியோர்தமிலிசைவெய்தியுழன்றோடியுறுத்தி
யெரியாற்றினர்மகன்மைந்தனிருக்காமுறைசெயவே. (௫௮)

பச்சைத்திருமான்மேனியுறக்கம்பயில்போதி
னிச்சைப்படியுளவாற்றினிருப்பத்தடமகிழா
வுச்சிக்கதிருறுகாலையுநூற்றிக்கடன்முறையு
மச்சத்தினியற்றிப்பினரவணிங்கிடந்தார். (௫௯)

அலமங்கையெடுத்தோனையுமறிந்தேகுதுமென்றே
னிலனெங்குமிகந்தோடிநெறிப்பாலுடல்கண்டார்
கலசம்புனறரலென்றிருவிழியாலிகலுழ்ந்து
நலமன்னிடவவன்மேனியுமனலுண்முறைநாடி. (௬௦)

செய்யுங்கடன்முறைவச்சிரதேவன்புரிதரவே
மையென்றிருள்வருமுன்னரினவணிங்கினர்வந்தார்
பெய்யுங்குலமுகினேர்விழியுடையார்பிழைநகர்வாய்ப்
பொய்யாநகரெனுநாளுமிங்கிவரெய்துமுன்புகல்வே. (௬௧)

திருமாதொடுபலமாதர்கள்சென்றாயினர்பலரும்
வருவாரையெதிர்ந்தேதிருமால்வாறுவினவ
வொருநாவினுமுளவாறுரையார்நற்றவமுற்றான்
பெருமானெனவறிவித்தனர்நகர்நீக்குதல்பேசி. (௬௨)

பலபொற்பணிநிதிபொற்றுகின் முதலாம்பலபண்ட
மலகற்றனசகடங்களுமணிபொட்டகமுதலா
முலகிற்பரமுறுபான்மையுறுத்திச்செலவுய்த்தே
நலனிற்றிகழ்கரிவாம்பரிதேர்மீதுநடந்தார். (சாங)

மடமாதர்கள்பலகோடிமணிக்கார்சிவிகையினுங்
கடமாநிரையினுமாந்தர்களித்தேகிடவிசயன்
றிடமோங்கியசிலையோடுயர்தேர்மீதுநடந்தான்
படைவீரரிருந்தோருடன்வரவேபதிநீங்கி. (சாச)

மாலுக்குரியவர்சோடசமெனுமாயிரமாதர்
பாலிற்பயின்மொழியெண்மர்பரித்தேர்சிவிகையின்மேற்
சாலத்திரண்டனர்முன்னவன்மனைமாதர்தனித்த
கோலத்துறுபலயாதவர்குலமங்கையருடனே. (சாரு)

சென்றார்சிவிகையின்மேனகருளசெல்வமனைத்துங்
குன்றாதுபுறம்போந்தகுறிப்பாலுததியுணி
ரன்றாயிரமலைநீட்டியகன்றாரையழிக்க
நின்றாரிதுகண்டார்நிமலன்செய்கைநினைந்தார். (சாசா)

வீறாலுயர்விசயன்பலரறியும்படிவிளக்கித்
தேறாகியபின்வாங்கியசிலையோடுநடப்ப
நூறாயிரசகடங்களுந்நவல்சாவுநெருங்கப்
பேறுநெறிசென்றார்கடல்பெருகும்புனல்போன்றே. (சாஎ)

வேறு.

நனிவானவர்கோனருளுலகிற்
றனியாமடல்சேர்தனுவுக்கொருவன்
கனிவாய்மடவார்கடல்சூழ்ந்திடவே
பனிமாமதியிற்படரும்பொழுதில். (சாஅ)

துவரைப்பதிவிட்டனர்துன்னியபின்
றிவளத்துயர்பஞ்சவடஞ்செலவே
தவனக்கடவுட்டகுகோமறையப்
புவனிக்கிருண்மேவியதப்பொழுதே. (சாகூ)

தங்கிப்பலருந்தளர்நீக்குறவா
னங்குற்றனர்கண்டருகார்மறவர்
துங்கச்சிலையார்தொகைகோட்டியராய்த்
தங்கட்கிதமேதரவந்தனரால். (எ௦)

நிதியின்குழுவும்வருநேரிழையார்
மதியின்குழுவும்வயமெய்துறவே
விதியின்செயல்போன்மிளிர்வெம்படையார்
கதியின்புடைவந்தனர்கைக்கணையார். (எக)

கண்டான்மதிவச்சிரனுங்கடிபோன்
கொண்டான்சிலைதங்குலமுள்ளவெலாம்
பண்டேயழியும்படிசெய்வனெனு
விண்டானுரைமேவலர்காதுறவே. (௭௨)

ஒழியாரதையுன்னிமருண்டிலராய்
மொழியாதிடைமொய்த்துமினார்கலையும்
பழியார்தனமும்பறிசெய்திடல்கண்
டழியாவிறலானெதிராயினனே. (௭௩)

சிலைகோலினன்வாளிசெலுத்தினன்மற்
றலையாமறைவல்லபமாகிலையாற்
றலைபோலுளமுள்ளதுரந்தரிக
விலைமுட்டியிறெண்கணைநீண்டிலவே. (௭௪)

ஓயாதுலகெங்குமுலாவுகணை
போயாரையும்வெட்டுதல்பொய்த்திடலாற்
றீயாரணிவிஞ்சியெதிர்ந்துசெயன்
மாயாதுபறித்தனர்வாய்த்தவெலாம். (௭௫)

புட்டிற்கணையுஞ்சிலையும்புயமும்
பட்டப்பெயரும்பயமேதரலான்
மட்டிற்றிருமான்மனைமாதருடன்
செட்டிற்றனமுங்கொடுசென்றனனே. (௭௬)

பலமாதர்கள்பற்பலவாஞ்சகடம்
நிலயிதினில்வேடர்நிகழ்ந்துகொளத்
தலைசாய்ந்துகுறைந்துதனிச்சிலையான்
வலிதேய்ந்தவமானமுமல்கினனே. (௭௭)

சென்றேகுருகேத்திரஞ்சேர்ந்தவனிற்
றன்றுமுனிவோர்பலர்சூழவவர்
நின்றாற்றியவாற்றினினின்றுபல
குன்றுமுறைசெய்திதுகூறினனால். (௭௮)

வேறு.

கிருதவன்மன்மகன்றனக்கோர்நகர்கொடுத்துமாதருடன்கிட்டிவாழ்மின்
பொருதிறல்சேரணித்தாயநாடுபுரந்தெனவிடுத்துப்பொற்பினோடு
சரச்சவதியெனும்நகரிற்சாத்தகிதன்னிளஞ்சேயைத்தாய்மாரோடு
மருகுறநாடதுபுரப்பதாயமைத்தானிமைப்பிலாக்கோவளித்தபெம்மான். ()

வச்சிரதேவனுமெட்டுமங்கையருமேனையரும்வடிவம்வெள்ளை
யிச்சையுடன்பெற்றிருந்தோனில்லினருமானகரத்திருந்தோர்யாரும்
புச்சமறக்கொண்டிந்திரப்பிரத்தமாம்புரத்ததனிற்புகுவித்தந்தக்
கைச்சிலையான்முடிகவித்தானடுத்தாடனுளக்காலைக்கம்மா. (௮0)

மூன்றரசுமுறையாலேமுடித்தபினர்முகுந்தனிறந்தகன்றசெய்கை
யான்றவறிவினையுடையவுருக்குமணிமுதலானோர்க்கறியுமாறு
தோன்றுவித்துத்தொழுதிறைஞ்சித்துன்படையாதிருவிழிநீர்சோரச்சோர
யின்றபசுவினையிழந்தகன்றேபோலுயிர்த்துரைத்தானிமையோர்க்கொப்பான்.

அவ்வாய்மைசெவியெய்தாமுன்னுருக்குமணிமுதலாவானமாதர்
செவ்வனலின்றடம்பாய்ந்துதிருமாலினிடஞ்சார்ந்துதீர்ந்தார்துன்பம்
பௌவமெனப்பலர்சரதபான்மையொடுமருந்தவத்திற்பயின்றுபின்னர்
கைவருமெய்விடுத்தகன்றுகண்ணனுறைநகர்சார்ந்துகலந்திருந்தார். (அஉ)

பலராமன்மனைமாதர்பாய்ந்தனலிற்கேள்வனிடம்பற்றிநின்று
ரிலகுமிவர்தமக்கெலாங்கடன்முறையும்புரிவித்தேயிமையோர்கோமான்
வலியனையான்வச்சிரனைவாழ்த்திநகர்க்கிறையாகவைத்துமீண்டு
புலனறவேதவமியற்றும்வியாதமுனிசூழலிற்போய்ப்புகுந்தான்மன்னோ. ()

வெயிலினுடலிளைத்தோர்கனிழலைக்கண்டதுபோலமேவித்தாழ்ந்து
பயிலுமறைவியாதனடிபற்றுதலுமுற்றுமுணர்பரமமூர்த்தி
செயலொன்றுமுணரான்போற்சிலைவிசயன்றனைக்கருணைசெய்துநோக்கி
யயிலுலவுகரத்தரசேவந்தவாவேதுணரவறைதிமன்னோ. (அச)

உத்தமனைவதைத்தனையோவொருவர்வயினிகலழிவுற்றுளநொந்தாயோ
வெத்தகையோநினதுமலர்போலுமுகமெழில்வாடியிருப்பதென்னோ
புத்தியினாலன்றியுனைப்புலன்வழியாலுணர்வரியபொற்போடெய்துங்
கைத்தலவிற்காளையினிப்புகுந்தவாறுரையென்றான்கவலைதீர்ப்பான். (அரு)

மாமுனியேயாதவர்கள்குலமடங்கக்கொடும்போரின்மாய்ந்துதீர்ந்தார்
காமருசீரலாயுதனுங்கண்ணனுமாதவத்திலுயிர்கழிந்துசென்றார்
நாமநகர்வேலைகொளமடமாதர்குழுவுடனேநகருளோரைக்
கோமுறையிற்கொண்டகன்றேன்வேடுவராற்பட்டதென்னோகுறிப்பதையா.

அஞ்சாமல்வேடுவர்வந்தரிவையரைநவநிதியையடர்த்துக்கொள்ள
மஞ்சாருஞ்சிலையிருந்துமௌலியிருந்துமறையிருந்துமாற்றலாரைப்
பஞ்சாகப்படுத்தகற்றிப்பயனடையமாட்டாமற்பார்த்துநின்றேன்
செஞ்சாலிவிளைபழனத்திருநாடர்தமைவென்றதிரடோள்வாடி. (அஎ)

கண்ணனுடன்முன்னவன்றன்கற்புடையமனைவியருங்காதலோடும்
நண்ணுநகரிற்பலருநன்னிதியுமொருவாற்றானகரிற்சேர்த்திவ்
வண்ணமுனக்கறிவிப்பான்வந்தனனென்வாறிருந்ததிதுவேயிப்பா
லெண்ணமிலோஞ்செய்புமுறையியம்பென்றானம்முனிவனிதனைச்சொன்னான்.

தூயதவமுனிவரர்கள்சாபத்தால்யாதவர்கடொலைந்தாரிப்பான்
மாயவனும்பூபாரந்தீர்க்கவுதித்தக்கருமம்வழுவிலாமன்
மேயமுடித்தனன்பழையபதிலைசேர்ந்தானவர்க்கிரங்கிமெலிவதென்னோ
காயமவையொருகணமுன்பின்வீழுமோகற்பனையார்கடப்போர்மன்னோ. ()

வேறு.

கண்ணனீதுணர்ந்துவேதமுனிவரர்களன்றுசொற்ற
வண்ணமேயுடன்பட்டானிம்மாற்றத்தைவிலக்கவேண்டி
லண்ணலுக்கரியதாமோவருள்வழியதுவேயாக
வென்னுமிதுயரினாலாழிந்திரனின்றசேயே. (௬௦)

பாரதமுடித்தவீரம்பகழிமெய்வலிகள்சிந்தி
சாரதையதிபனல்குதனுமறைப்பொலிவோடெல்லாங்
காரதிர்மடலின்மேனிகண்ணனோடகன்றதென்று
மாரதர்வணங்குந்தாளாய்மதிக்கொள்வாய்மயக்குறாதே. (௬௧)

ஆதலிற்கொதர்க்காற்றலடங்கினையினிமேலென்னும்
போதன்மின்னுத்தரத்தைநோக்கிநீர்பொருமலின்றிக்
காதலுமவனியாளுங்கருத்துமைம்புலனுங்காதி
மாதவஞ்செய்மினென்றானவனவைமனத்திற்கொண்டான். (௬௨)

பெருந்தகையுரைத்தசொல்லாற்பிறப்புடனிறப்புநீங்கி
யருங்கதிகண்டான்போலவானந்தமளப்பிருங்கி
வருந்தியவருத்தந்தீர்ந்துவதனமண்டபம்விளங்கி
யிருந்தவனிணைத்தாள்பல்காலிறைஞ்சினன்விடைகொண்டானே. ()

தாண்டியபிறவிவேலைத்தனஞ்சயன்றேரிற்போந்து
மாண்டபேருடையவத்திமாநகரடைந்துவாசி
தூண்டுதேரிழிந்துசென்றுதுணைவனைத்தாழ்ந்துசொற்றான்
பாண்டுவென்றுரைக்கும்பேரோன்பாக்கியம்பலித்ததொப்பான். (௬௪)

காண்டருமிருவர்போந்ததன்மையுங்கவினிற்றந்தை
மாண்டதுமனையின்மாதருடன்சென்றவாறுமவ்வூர்
தாண்டிநற்சலதிகொள்ளவிந்திரப்பிரத்தந்தன்னி
லீண்டவிருந்தவாறுநிகழ்ந்ததுமெடுத்துரைத்தான். (௬௫)

அருச்சுனன்றுவரைபோய்மீண்டசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௬௪.

மௌசலபருவம் முற்றிற்று.

உ

பதினேழாவது,

மகப்பிரத்தானிகபருவம்.

பாண்டவர்துறவெய்தியசருக்கம்.

அண்டமுட்டையினகத்தினும்புறத்தினுமாகிக்
கண்டவன்பர்கள்கண்ணினுநெஞ்சினுங்கலந்தோன்
பண்டைவேதங்கள்பழிச்சியுமறிகொணாப்பழையோன்
முண்டகாசனனாதியர்மூவர்கண்முதல்வன். (க)

என்றுமாமுனிகூறிடநரபதியியல்பாற்
றன்றுமன்பொடுகேட்டபினிகழ்பெலாந்தொடர
வின்றுநாயினேற்கிசைத்திடவேண்டுமென்றேற்ப
மன்றலஞ்சடைமறைமுனிமீளவும்வகுத்தான். (உ)

கேட்டவாறெலாமுதிட்டிரன்கேள்வியிற்சுடலா
ணாட்டநீருகமெய்ந்நடுநடுங்கிநின்றுயிர்த்து
வீட்டியத்துயரொருவணங்கேறிவேறிருந்து
பூட்டுவிற்கையார்தம்முடனுசாவியேபுகல்வான். (ங)

மையிலாமனமாதவன்மானிலமொருவி
மெய்யர்போற்றிடத்தன்பரபதத்தைமேவினனா
லுய்யுமாறினியென்கொலோவினியிவணுறுதல்
வையமாளுதல்வசையலாதிசைமருவாதே. (ச)

பூதமைந்துமைம்புலன்களும்யாமதைப்புரக்குங்
கோதிலாருயிர்மனமவனென்றுளங்கொள்வீர்
சீதரன்செழுந்துளபமாறிருவடிமலர்மேற்
காதலாலுயர்வடதிசைசெல்வதேகருத்து. (ரு)

அவரவர்க்குளவபிமதமறைந்திடுமென்னப்
பவனனொப்பவனன்னெறிபகர்ந்ததேயையா
கவினுறத்திகழ்கானலைப்புனலெனக்கருதி
லெவர்விலக்குவோரேழையர்செய்கையாமின்றே. (சா)

வாழ்வுமங்கவன்வாய்மையாலனுபவமானோந்
தாழ்வுமன்னவன்றன்னுடனாதலேதகுதி
யூழ்வினைச்செயலுளபடிமுடிவதாமெதுவு
மேழ்புவிக்குமிப்புதல்வனையிறைவனாவமைத்து. (எ)

இன்றுநீங்குதுமாநகரினியிருந்திடுவ
தொன்றுநன்றலவெனவவனுறுதியையியந்து
மன்றமாலிகைமகபதிமைந்தனைநோக்கித்
துன்றுதாதவிழ்முரல்பசுந்தொடையலான்புகல்வான். (அ)

செய்கையாவதுந்தேர்ந்தனைசிந்தனையுளவா
றுய்கைவேறெனவாங்கவனுலகினையளந்தோன்
வைகிவாழ்வுறுநகரெலாம்வளம்பலதுய்த்தோ
மெய்தினனவனிருப்பதோமயக்கினிலிவணில். (௯)

பிறந்திறந்துழல்பேதையர்நீர்மையிற்பெற்றி
மறந்துவைகினுமாந்தியமிச்சிலேயன்றோ
சிறந்தமாந்துதலிக்கணமிவ்விடத்திரத்
துறந்துபோதலேதுணிபென்றான்மகபதிதோன்றல். (௧௦)

மற்றுங்கூறுவான்மாமறைவியாதனாருளும்
பெற்றுவந்தனன்பெயருதற்கெனவவன்மொழியக்
குற்றம்விந்தவனிருபுயங்கொட்புறவோங்கி
யுற்றதம்பியரிருவரைநோக்கினனுரைப்பார். (௧௧)

ஆடல்வெஞ்சிலைவல்லபனாருட்குரியோம்
பீடில்வைகினோமவனுளஞான்றெலாம்பிரிவிற்
கூடமேவுறுதிருப்பதோசால்புடன்குறுகி
விடினும்பரகெதியுளவென்றனர்விருப்பால். (௧௨)

ஐவர்சிந்தையுமொருமையினமைந்தபின்பாங்கு
மைவருங்குழற்றுரௌபதிவாண்முகநோக்கி
மைவரும்படிறகலுதிவிரும்புமாறென்றான்
பொய்வராமொழிப்புண்ணியன்பூவையும்புகல்வாள். (௧௩)

ஆம்பனீருறவோங்குறுமந்தரீரகன்றாற்
சாம்பினீருடன்மாண்டிடுந்தன்மையாமன்றோ
வேம்பனீர்புகும்பான்மையேயேழையேற்கன்றி
யோம்பவேறிலையென்னினியுரைக்குவதென்றாள். (௧௪)

அண்ணலவ்வணமாகவென்றாருளளித்து
வண்ணவார்குழற்சுபத்திரைமதிமுகநோக்கி
யெண்ணலாயொன்றுமிருத்திநீயிருகுடிவிளக்கி
மண்ணெலாம்புகழபிமன்சேய்வணங்குநற்றுணையாய். (௧௫)

யாதவக்குலமாமணியிந்திரப்பிரத்த
மோதுநற்பெயர்மாநகருடனுலகளிக்கு
மோதுவச்சிரதேவனிவ்வுலகெலாம்புரப்போன்
காதலிற்பரிட்சித்துநின்காலைதன்காலை. (௧௬)

இரண்டுபோங்கரினிருவருந்தமியினெய்தாமன்
முரண்டெறும்படிமொழிவனவாய்ந்துநீமொழிந்து
திரண்டசேனையுமடியருஞ்சிறப்பினையெய்தச்
சுருண்டிடாதிவணிருந்திநீதோகையர்விளக்கே. (௧௭)

என்றுகூறவுமிருகணீராலிகள்சொரிய
நின்றுயிர்த்தனளவடியரொருவணைநீக்கி
யன்றுமாதர்கள்பலரையுமாதரத்திருத்தித்
துன்றுதார்ப்பரிட்சித்துவாந்தோன்றலுக்குரைத்தான். (௧௮)

சான்றுநீதிநூற்றருமநூலிரண்டுமத்தகையாற்
றோன்றுதங்குலமரபினிற்றூயவனாகி
யேன்றநற்செயற்கிரியைதீதென்மனனென்று
கான்றமாமணிமாமுடிகவித்தனன்கனத்தில். (௧௯)

அரியணைப்புறத்திருத்தியாவரையுமன்புறுத்திக்
கிருபவாசிரியன்றனைக்கேண்மையிற்படுத்தி
யுரியமைந்தனைக்கையடையாக்கிநல்லுயுச்சன்
புரியமைச்சனிற்பொருத்தினன்புகழெலாம்பூண்டோன். (௨௦)

எந்தவேந்தருக்கெத்திறநிகழ்ந்தவோவவையு
மந்தவண்ணமேயாக்குகநாட்டினல்லறத்தான்
முந்தவாறிலொன்றிறைப்பொருள்கவர்கவிம்முறையே
நந்தமானகர்ச்சனங்களைநடத்துகநாளும். (௨௧)

வாழிமைந்தவென்றிவனுரைபற்பலவழங்கி
யாழிநீருலகவன்வயமாக்கியபின்னர்
தாழ்விலாதநற்றவத்தினராதுலர்தமக்குச்
சூழுமாநிதியான்களோடளித்தனன்றொடர்ந்து. (௨௨)

ஒழிந்தமாநிதிக்குப்பையைமைந்தனுக்குறுத்தி
யழிந்தசிந்தையராகியசனங்களுக்கன்பான்
மொழிந்துநன்மொழியவர்வயின்விடைகொண்டுமுடிபூண்
கழிந்தவாடைகணீக்கிவற்கலைமருங்குடுத்து. (௨௩)

வேறு.

ஆசையுடனேபுலனவித்தருணினைந்து
பாசமறவேதுணைவர்பாவையொடுநீங்கி
மாசகலுதிட்டிரனடப்பவெதிர்வந்து
பூசுரர்களிவ்வுரைபுகன்றனர்புகுந்தே. (௨௪)

நீதியொடுமாநகர்புரந்துநிலமீதிற்
காதலறவாழ்ந்தகவிகைக்குரியவேந்தே
யோதுமனைகொண்டகழவுற்றநிதிகொண்டேன்
றீதுபுகல்வான்மனையெனக்குவிலைசெய்தோன். (௨௫)

என்னவனுக்குமுனொன்மனையைவிற்றே
னன்னிதிகொடுத்தநிலைநாணுரியனென்று
வன்னவன்விவாதமறையத்தவறறிந்தே
முன்னவனைநோக்கியிளையோனிதுமொழிந்தான். (௨௬)

றென்னலவனினிதியபிகொளெனவேண்டான்
பன்னுமிவனுந்தொடுதல்பற்றடையுமென்றான்
றன்னிவரின்றிதுசலத்தினுரைசெய்வா
ரென்னைகலிவந்ததுகொலென்றுநகைசெய்தான். (௨௭)

தம்பியைமகிழ்ந்துநகைதந்துதருமன்சே
யிம்பரினிநின்றாசனுக்குரைமினென்று
தம்பநிகர்தோளுடையதாபதனடைந்தான்
வம்பலர்துறந்ததிருமாநிலைஞரோடும். (௨௮)

அறுவருங்கடக்கவவரோடொருசுணங்கு
மறுவறநடந்தபினர்வந்ததகலாமற்
பெறுவதுகருத்தினினையார்நெறிபிடித்தே
யுறுதியுடையார்நகர்கடந்தனருவப்பால். (௨௯)

அந்நகர்மேவுவருணாசிரமநான்கு
முந்துமடவாரொடுசிறார்பலருமுந்தி
வந்துயிரிலாதவுடன்மானுநகரென்றே
சிந்தைபலம்வந்துதுயரக்கடல்செறிந்தார். (௩௦)

நேசமதனாலுமிவனீதியருளாலும்
பாசமுடறீர்ப்பவுடனேபயிறல்பற்றி
யீசனனையானையிருபாலுமகலாதே
வாசியொடுமேவினர்கண்மானகரிலுள்ளோர். (௩௧)

அன்னபரிசோர்ந்தவர்தமக்கினிமையாக
முன்னவனுரைத்தனிநகர்ச்செலமுடித்து
மன்னுகனலைத்தவுமியர்க்குறவழங்கி
யன்னவனடித்துணைபணிந்தருடரித்தே. (௩௨)

ஆசிரியனுந்தவுமியப்பெயரினானுந்
தேசிகருனக்கவர்செலுத்துவர்களாழி
மாசகலவேமருவிவாழ்குகவென்மைந்தன்
றேசறவுரைத்தவரைமாநகர்செலுத்தி. (௩௩)

ஒக்கலுறவுள்ளவர்பலர்க்குமுளமாறத்
தக்கபடிகூறிமடவார்க்கினிமைசாற்றி
மிக்கநகரிற்செலவிடுப்பவலம்வந்து
புக்கினர்நகர்த்தலைபொருந்தினர்களன்றே. (௩௪)

நாகமடமங்கைதவர்நாகர்நகர்புக்காள்
வாகைமதுரைக்கிறைமடந்தைமகவின்பா
லேகினளிருந்தனர்களேனைமடமாதர்
சோகமுணராதவகைதூய்மையைவிளக்கி. (௯௫)

வேறு.

பொருப்படுகிரணவயிரவாட்படையோன்றிகழ்தரப்புவிதருநிருப
ரொருப்படப்பணிந்துதிரையளந்தெஞ்சியொதுங்கிடத்திகிரியையோச்சி
கருப்படுநெறியிற்கலக்குருவண்ணங்கலிகடிந்துலகெலாங்காத்தான்
றிருப்படுபுயஞ்சேர்நந்தைநற்குலத்தோர்செய்தவச்சிறப்பினைவிளக்கி. (௯௬)

வேதியரிருவர்தேசிகராகவுயுச்சனேவிறலமைச்சாக
வாதியசாவாமொழிவரம்பாகவறம்பகாநால்விழியாக
மாதர்கள்பலருஞ்சுபத்திரையணங்கும்வழிபடுகடவுளேயாக
நீதியிற்புரந்தானிலமெலாமுந்தைநெடுதுநாண்மொழிதிறம்பாதே. (௯௭)

பாண்டவர்துறவெய்தியசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௯௭.

உத்தரதிசையடைந்தசருக்கம்.

நாலிதழிடையினிருந்தவீரியனும்நாலிரண்டிதழிருந்தவனுங்
கோலமாரீரைந்திதழிருப்பவனுந்துவாதசக்கோணம்வைகினனுந்
தாலுமூலத்திற்சோடசவிதழ்மேற்றரித்திரண்டிதழ்பொருந்தினனு
மேலுமாயிரப்பொற்கமலம்வைகினனுமெவனவனிருபதம்விழைவாம். (௧)

மரவுரிவுடையுமானுரிநிலையுமாதவவுருவமுமருளுங்
கரம்விடாவிசயன்சிலையலாதேந்தாக்கைப்படைதுறந்தகைத்தலமும்
விரவுமேற்கதிசெல்லூக்கமுமுறுதியியற்கையும்வனப்பினைவிளக்க
குரைதருஞமலிதொடர்ந்திடவணங்குங்கொற்றவரைவரும்நடந்தார். (௨)

அன்னையாயுலகுக்கிடரெலாந்தவிர்க்குமருணதிக்கங்கையைத்தொழுது
மன்னுநீர்துளைந்துவழிபடுகடவுண்மலரடிதனைநினைந்துருகித்
தன்னிலாகாரமுதலியநான்குஞ்சங்கற்பவிகற்பமுந்தவிர்த்து
பன்னுகீழ்த்திசையேபோந்துகீழ்ப்பரவைபார்த்தனர்மற்றொன்றும்பாரார். ()

ஆங்கனற்கடவுள்வதனமூன்றிலங்கவருணவாகனமழலெறிப்பப்
பாங்குடைக்கிரணத்திசைதிசைபோர்ப்பப்பலமணிக்கோர்வைகடயங்கத்
தாங்கியகருணைவழிவழியொழுகச்சிறுநகைதண்ணிலாவிரிப்பத்
தேங்கமழ்மாலைத்திருமுடியொளிரச்சிறந்தெதிர்சேர்ந்துநின்றிடலும். (௪)

கண்டனர்கருத்துஞ்சிறக்கமாமகிழ்வாற்கமலவான்பதங்களின்வணங்கி,
யண்டிநின்றேத்தியெம்முடைத்தவமேயையநின்றோற்றமிங்கென்ன, முண்டக
முகத்தானகையொடுந்தவத்தைமையலுமாறுவமைந்தகன்றாங், கொண்டதென்
விசயன்கொடுமரமென்றுன்காண்டவங்கொழுந்துநாட்கொடுத்தோன். (௫)

மீளவும்புகல்வான்றேவகாரியத்தைமேம்படப்புரியுமாறுக
நீளுருவருணன்சிலையுனக்களித்தேனிகழ்வினியாவதோநெறியாற்
கோளறமீளக்கொடுத்தவற்கெய்தக்கொடுஞ்சிலைகடலிடுகென்றான்
றுளதாமரைத்தாள்வீழ்ந்தவன்குறித்தசார்பினிற்சிலையினிற்றணந்தான். (௬)

மாயைபோன்மறைந்துதழலவனகலமன்னவரைவருமாதுஞ்
சாயையிற்றொடருஞ் * சாரமேயனுமித்தலத்தினைவலம்புரிதகையா
லோய்வறத்தென்பானெடிதுதூரம்போந்தொருதனிப்பச்சிமமுகராய்
வேய்படுகானும்வெற்புமாழ்சரமும்விடுத்துமேற்கடலைவந்தடுத்தார். (௭)

ஆங்குவந்துவரிகண்டபின்பாகவணிகொளுத்தரதிசைநோக்கி
வீங்குதோளினராய்வாயுவின்கதியும்வென்னிடமுன்னடந்தேகி
நீங்கியகண்ணன்றுவரையையுவரிநெருக்கியபடியுணர்ந்தெழில்சேர்
பாங்கரிற்சென்றேயயுதயோசனைமேற்படுபனிமால்வரைகண்டார். (௮)

வேறு.

காற்றினாற்பனியினாற்கனகநன்மலர்
மாற்றிடாநறையினாலருவிவந்திழி
தூற்றினாலுடலணங்கொழிந்துதுன்னினோர்
பேற்றினையடைதல்போற்பிறங்கிற்றவ்வரை. (௯)

தேசினிற்பொலிவினிற்சிறப்பிற்சீரியர்
மாசினையகற்றிடுவளனில்வண்மையில்
கோசரத்துட்படர்குறிப்பில்வேதன்மா
லீசனோடொத்ததவ்விமையமால்வரை. (௧௦)

அப்பெருங்குவட்டினிலனுகியோங்கன்மீ
தொப்புறவுயர்ந்ததன்னுச்சிமீதராய்த்
தப்பறவுத்தரந்தன்னைநோக்கியே
செப்புவனறன்மகன்றுணைவர்க்கித்திறம். (௧௧)

வாயுவினியற்கையாம்வழிகண்மாற்றிநின்
றோயுறுபோகத்தினுண்மைமேற்கொளிப்
பாயுதும்வானமேற்படர்துமவ்வணந்
தூயநீர்தொடருமென்றுறுதிசொற்றபின். (௧௨)

மந்தரந்தென்றிசைவந்துமீண்டெனச்
சுந்தரத்தோளிணைச்சுமந்துகொற்றத்தா
லந்தரநெறியறனளித்தகான்முளை
யுந்தினன்மனகதிக்குவமையென்னவே. (௧௩)

அருளினாற்றுணைவருமணங்குமவ்வண
மருளறவியோகமானத்தராகியே
தெருளுடன்பின்றொடர்ந்துவப்பிற்சென்றனர்
பொருளுணர்சுணங்குமப்புணர்ப்பிற்போந்ததே. (௧௪)

---

* சாரமேயன் - நாய்.

ஏழ்பெரும்பிறவியையெய்திடாதவ
ரேழ்பெருங்கடலையுமிருங்குலோச்சிம
மேழ்வரும்புவியையுமிரவிசூழ்ந்ததேர்க்
கேழ்பசும்புரவிநாளையந்தவேகினர். (கடு)

விஞ்சையர்கின்னரரியக்கர்விண்ணவர்
வஞ்சியர்கேசரர்மருங்கினோக்கினோ
ரஞ்சிடவூர்திகளகற்றவங்கரம்
பஞ்சவரேகினர்பாவையோடுமே. (கசு)

மண்ணகநோக்கிலர்மருங்குநோக்கிலர்
விண்ணகநோக்கிலர்வெற்புநோக்கிலர்
தண்ணிலாமதிவளர்சடையினனுறை
கண்ணகல்கயிலையுங்கருதிப்போயினர். (கள)

ஏமகூடப்பெயரிசைக்குங்கோத்திர
மாமெனக்கருதியாங்கதனைநீங்கியே
காமருநிடதமுங்கடந்துபோயினர்
தேமருவுத்தரத்திசையைநாடியே. (கஅ)

பையராவுமிழ்மணிப்பஃறலைக்குநேர்
செய்யவாயிரமணிச்சிகரந்தாங்கியே
மெய்யராம்விபுதர்சூழ்மேருமால்வரை
பொய்யிலார்நோக்கினர்பொருமனீங்கவே. (கசு)

அவ்வரைமேற்புறத்தாகியுத்தரஞ்
செவ்வியோர்சென்றுசென்றுயருஞ்சேணிடை
நவ்விநேர்துரௌபதிஞானமேலிடக்
கொவ்வைவாயுலர்ந்துடற்கதிகுறைந்ததே. (௨௰)

ஆதரவின்றியாகாயமின்றனி
மாதலமீதிடைவழுவிவீழ்தல்போற்
சேதனவுயிருயர்துறக்கஞ்சேர்ந்திடக்
காதறீர்களேபரங்கழிந்துவீழ்ந்ததே. (௨க)

நோக்கினர்நால்வருநவலுமுன்னவ
னூக்கமோடேகுமாறுணர்ந்துவேள்வியிற்
றூக்கணங்கெனவருதையறன்கதி
யூக்கிவீழ்ந்தனளெனவுரைசெய்காலையில். (௨௨)

கேட்டவப்பெருந்தகைகிளருஞ்சிந்தையில்
வாட்டமுமகிழ்வுமொன்றின்றிவம்பினோ
ஆட்டிடாதகலுமோவூழ்முறைச்செயற்
கோட்டமெனென்றனனிகழுங்கொள்கையான், (௨௩)

செய்யவாள்விழியினளிதனைச்செப்பலு
மையவேயிவளிடத்தறிகிலோம்புகர்
தையலுக்கித்தகைசார்ந்தவாறென்றே
வுய்யுமாறுரைக்கெனவீமனோதவே. (உச)

முன்னவன்பகருவான்மொய்குழற்குளம்
பன்னுபற்குனன்மிசையதிகம்பற்றுமா
லன்னபான்மையினவட்கடுத்ததாகுமீர்
துன்னுதிர்விரைந்தெனச்சொல்லிமுந்தவே. (உரு)

பின்னரும்விரைந்திவர்பெயர்க்குபோதரத்
துன்னுசாதேவனுந்தோற்றமிக்குளோன்
றன்னிலேகதிதடுமாறிச்சாய்ந்துயிர்
மன்னியகளேபரமண்ணிலாயதே. (உசு)

வாயுவின்மதலையவ்வாறுநோக்கியே
தாயனுணர்வுறச்சாற்றியாரினுந்
தூயனுக்கேனிதுற்றதென்னவே
யாயவற்கடுத்தவாறறையலாயினன். (உஎ)

கற்றவான்கலையினுமறிவின்காட்டினு
மற்றுநேரிலைதனக்கென்னமானதம்
பற்றியபுகரினாற்பாவனன்றனக்
குற்றதிவ்வாறெனவுரைத்துமுந்தினன். (உஅ)

ஆயவருள்ளழிந்தறிவின்மாண்பினாற்
போயினர்தேறிமுன்னவனிற்பொற்பொடு
மேயவுத்தரந்தனைநோக்கிமேவுபோ
தேயமாகுலனேய்ந்திளைப்புவிஞ்சினன். (உகூ)

ஆண்டவர்கதிக்கிளைத்தாவிநீங்குற
மாண்டவனியற்களேபரமடுத்தலாற்
பாண்டவர்நடுவனும்பவனன்செம்மலும்
பூண்டமுன்னவனொடும்பொருமிக்கூறினர் (௩0)

தேங்கமழிளைஞர்சொற்செவிமடுத்தலு
மோங்கியவனப்பினுக்குலகிலொப்பிலாப்
பாங்கவன்சிந்தையிற்பரித்தபண்பினா
லீங்கினனவனெனநிகழ்த்திமுந்தினன். (௩க)

அற்றிதேயெனமனந்தேறியண்ணல்பின்
பற்றினர்வல்விரைந்தேகிப்பண்பெலாங்
கற்றவருத்தரங்காணவேகினர்
மற்றினிநிகழ்ந்தமைவழங்குவாமரோ. (௩உ)

வேறு.

சாயல்கொண்டதடங்கணாருடங்குசிக்கையொடுர்
தூயரும்பரகன்றுயேனையர்தொடாருங்கதியான்
மேயவிண்வழிபோதலங்கும்வியர்ப்பவில்விசயன்
மாயமென்னவலங்குறைந்துயிர்வானடைந்ததுவே. (௩௩)

குடம்பையுட்செறிபுள்ளுயர்ந்துகுலாவவீழ்ந்துவிடும்
படம்பையென்னவவன்றனுந்தரைபற்றநோக்கினனு
லிடும்பனைப்பலியிட்டகானையிரங்கியோதினன்முன்
றொடர்ந்துபோநெறிமுன்னவற்கொருசொல்லினுலுணர. (௩௪)

நீதியிற்கலைகற்றதிற்பலநேயநற்குணனி
லூதியத்திலுதாரசித்தமுகாமையிற்றவரு
வாதரித்துளவாய்மையிற்பலமாண்பினேரிலியித்
தீதினுக்கிடனனதேதுதெரித்தியையவெனு. (௩௫)

எம்பிகேளொருநாளிலாரையுமேற்றுவேனெமனூர்
பம்புபோரினிலென்றசொற்பலநாளியங்கிடலா
லும்பிசொற்பழுதுற்றவற்கதொருப்படாமுறையா
லிம்பருற்றதுகுற்றமென்றனனேரகன்றுணர்வான். (௩௬)

ஆகுலத்துறனன்மையன்றடைவாய்விரைந்தெனவே
யேகலுற்றனர்வானெறிக்கணிரண்டுகோளெனவே
மாகமுற்றவராருமற்புதவாரியிற்படியச்
சோகமுற்றிலர்தேறிவுற்றதிதூரமுற்றனரே. (௩௭)

வேறு.

அங்கவர்செலும்பொழுதரும்பவனன்மைந்த
னிங்கிதமிகுந்தனதியற்கையுமுணர்ந்தே
சங்கையுறுமென்றனுழைசார்ந்தபுகரேதோ
புங்கவுறவோதுகெனவேயிவைபுகன்றான். (௩௮)

தோள்வலியினுலெவரையுந்தொலையவென்ற
கோளுமலதொன்றுளதுகூறுதல்கடுஞ்சொற்
காள்வலியினுயசனகாதகனுமன்றே
நீள்வினையடைந்ததெனநீதிமுனிசொன்னன். (௩௯)

அவ்வுரைகள்கன்னமுறவாளுயிரகன்று
செவ்வியுடலம்புவிசெறிந்ததநோக்கான்
வெளவுகதிர்சூழுமொருமால்வரைகடந்தான்
வெவ்வியசுணங்கொடுதனித்ததவவேந்தன். (௪௦)

ஐவரகலத்தனிமையாகிநெறிபோது
மெய்வரதனுக்கெதிர்விரைந்தனர்கள்விண்ணோர்
கொய்வருமலர்த்தனிவிமானமதுகொண்டே
கைவயிரமுற்றககனத்திறைவனேடும். (௪௧)

நாடியவரம்பையர்நடித்துவரநல்லோர்
பாடிவரவீணைகளிபக்கர்பலகோடி.
கோடியர்நெருங்கவெதிர்கொண்டனரிதிக்கோ
நீடியவலாரிதனிநிழலினைமான. (சஉ)

வாயுவருணன்கனலிமாநிருதியோடுந்
தூயவடதிக்கிறைவனுமெதிர்துன்னி
மேயமலர்மாரியொடுவேந்தனெதிர்நின்றார்
தாயனையரெண்மர்மறையாதியொடுசார்ந்தார். (சங)

பன்னிருவரொன்றுகுறைபன்னிருவர்வந்தார்
மன்னியமருத்துவர்மருத்துகளும்வந்தார்
துன்னுபலகற்றருவர்விஞ்சையர்தொடர்ந்தார்
பின்னுநிகர்மேனிமடவார்பலர்மிளிர்ந்தார். (சச)

ஓசனையகன்றொருபதுன்னதமிலங்கித்
தேசுலவுமாமணிவடங்கள்பலசேர்ந்து
வாசமலரானமுகுவாய்த்துளவிமான
நேசமுடையார்பலர்கொணர்ந்தனர்நெருங்கி. (சரு)

வேறு.

சாமகானங்கடிசைதொறுமொலிப்பத்தாளமத்தளமொலிதழைப்ப
வாமமங்கையர்கணடமிடுபரதசாலசச்சதியொலிவயங்கப்
பூமலர்மாரியடிக்கடிசொரிந்துமுனிவரராசிகள்புகலக்
காமதேனுக்கள்கற்பகத்தருக்களமரர்போற்கலந்தெதிர்காண. (சசு)

நறும்புகையாசையெட்டினுமோங்கநவமணிக்கவிகைகளிலங்க
வுறுதிசேர்பிச்சமாலவட்டங்களுயர்நவக்கோள்களைமறைப்பத்
தொறுந்தொறுநீராஞ்சனம்பலர்சுமந்துதோகையர்செய்திடவனந்த
மிறுங்கொடியிடையார்கவரிகளேந்தவேமகும்பங்கணீரிறைப்ப. (சஎ)

துதிக்கைநீளயிராவதமொலியெடுப்பத்துந்துபியெங்கணுந்துவைப்ப
நிதிக்குடமுழாவுமுடுக்கையும்பரமநிகரிலாவலம்புரியரற்ற
மதித்தமாதரும்வந்திகர்குழுவும்வாரமாங்கட்டியமியம்பத்
துதித்திடவானோர்வந்துமுன்னின்றான்றும்பிமேற்கொளுஞ்சுரராசன். (சஅ)

ஆயிரம்விழிசெந்தாமரையலர்ந்ததாமெனக்காட்டவான்களிறு
மாயிரும்பாலின்வேலையைமானமந்தரமொத்ததோள்வயங்க
நேயமுமருளுஞ்சிறுநகைப்பொலிவுநிகழ்ந்தவாண்முகத்தனாய்நின்றான்
ஆயவன்வலதுபாங்கரின்றன்சேய்தன்னெனக்கண்டுகண்களித்தான். (சகூ)

என்னைகொலடியேன்செய்தவான்றவமென்றெதிருறவணங்கியாவருக்கு
மன்னியமகிழ்வுந்துன்பமுநீக்கிவரன்முறைதுதித்துளமடங்கி
முன்னையூழ்முறையாலெடுத்தவிப்பிறவிமுடிவிலாரியரெலாமுறையாற் [ன்.
றன்னையோர்பொருள்செய் தடைந்தனரென்னத் தருக்கினின்றனனறந்தந்தோ

நகுமணிச்சிரங்களாயிரமடுத்தநாகர்கோவுடற்பொறையாற்றத்
தகுதியினுலகம்புரந்தறநிறுவித்தணந்தெமைக்காணியவந்தோய்
பகுதியினீகொல்கால்வழிநடந்தபடருவைபன்மணிவிமானம்
புகுதிவந்தென்றார்கருணையாரொழுகும்புரந்தரனுதியாம்புலவோர். (௫௧)

கண்ணிமிகவுழிபோழ்தாவிரண்டுகரங்குவித்தறன்றருகாளை
யண்ணலேயுலகிற்பூதமைந்திவரென்றியாவருமறைந்திடவாழ்ந்த
வென்னுடைத்துணைவர்நால்வருமனம்போன்றிருந்தவேழையும்பிரிந்தேக
நண்ணிநான்விமானம்புகுவனோவென்றான்ஞாலமுள்ளளவுளநாமன். (௫௨)

உத்தமனினதுதம்பியருனைப்போலுடலுடனுறற்குரியவரோ
மெய்த்திருமாதுமிவளுருமுடலம்விடுத்துமேவினருயர்விண்பா
லத்தலத்தவரைக்காண்குவைநீவந்தணிமணிவிமானமெய்துகவென்
றொத்தவின்னரசனுரைத்திடமீட்டுமுரைத்தனன்றுலைநிகருளத்தான். (௫௩)

மானகர்நீங்காமுன்னரெம்முடனேவந்தருநெறிந்துணையாகித்
தானகலாமற்றிசைநெறிநீந்திச்சாரமேயன்படர்ந்தனவா
லானநின்னருளாற்பெற்றபேறதற்குமாகநீயாரருள்புரிதல்
வானநாயகனேமானதங்குறித்தேனவ்வரம்வழங்குகவென்றான். (௫௪)

குறித்ததுலனன்றிமையவருலகங்குக்கனுக்கேனுளதாகு
மறுத்துநீபுகறன்மாண்புகொலறங்கொல்வரம்புகொலறிவுகொல்வழங்காத்
திறத்திணைப்புகறலென்கொலோவாளாத்திறம்பலையெளியவேதுறக்க
மறுத்தவிருளத்தோயூர்திவந்தடைதிமடக்கியேசுணங்கினையென்றான். (௫௫)

அரியதிலரியதையவித்துறக்கமதனினுமரியராரியரோ
புரியுமங்கவரிலரியனீயென்பொருட்டினிற்பொருந்தினையன்றோ
தெரியிலென்பக்கலடைந்தவர்நீங்கச்சேர்ந்தியானுகர்ந்திடேனின்ப
முரியபேறதனோடுகந்துகொண்டனுகக்குறைத்தியென்றனனுதிட்டிரனே. ()

நம்பிகேளுலகின்மனிதருக்கன்றி...யுமித்துறக்கநண்ணுறுமே
லும்பருமறமுமாறுகொண்டிகலிநெறிமுறையொன்றுமாகாவாஞ்
செம்பொருளுணர்ந்துமஃதிணைக்கென்னோதிறம்புதலதன்வினைதீர்ந்தா
லம்புவியிடத்தின்மனிதராயுதித்தாங்கடையுநீயடைகுதியென்றான். (௫எ)

வச்சிரக்கரத்தோனிவ்வணங்கூறக்குருகுலம்புகழ்பெறவந்தோ
னச்சினோர்தம்மைகைவிடுமவர்க்குமறையவனுயிர்கவிந்தவர்க்கு
மிச்சையிற்கதியொன்றெனக்கலையுணர்ந்தோரிசைத்திடயானுணர்ந்திருப்ப
னச்சமுற்றனன்யான்குளிக்கவந்தவராரளரிடைவிழல்போன்றதுவே. (௫அ)

என்னையேதுணையென்றகத்திடைதேறியெட்டுணைக்காலமும்பிரியாத்
தன்னுடல்வருத்தமோர்ந்திடாதடைந்தசாரமேயன்றனைவிடுத்துப்
பொன்னுலகடைவன்யான்கொலோவேனைப்போற்புனிதரார்புகுந்திடிலந்த
நன்னிலநீர்மைகுறைவுறாதந்தோநவிலுதிநாயகாவென்றான். (௫௯)

சொற்றசொற்குரியர்மாந்தரேநினக்குத்துணைகொலோகணங்கொருபொ
ருளோ, குற்றமேயுடையதிமைசேரியாக்கைக்குரைதருஞமலிபோலுண்டோ,
பற்றியாங்கதனைத்தொடிலவர்விரதம்பயிற்றியதவங்களுநீங்குஞ், சற்றுநீயுண
ரார்போலுரைத்தனைநின்றன்மதிக்கேற்பதோசாற்றாய். (௬௰)

தீயினத்துடனேசேர்த்தபுண்ணியருந்திறம்புவர்நன்மையென்றுரைப்பர்
மாயிருங்குரவாம்மொழிசரதமல்லியநின்றுணர்த்தனமாற்
றாயநீயுற்றநதியினைத்தொடரும்வேலையிற்றன்னியகுரைவாய்
நாயினாற்றவறுற்றிடுவதோவிடுதிநண்ணுதிவிமானமீதென்றான். (௬௧)

பின்னருமுரைப்பான்மகபதியொருவர்க்கெய்தொணாப்பெருங்கதியுனக்கு
மன்னியுமடையாதென்கொலிபெரியோர்வாய்மையுமறுத்துரைத்திடுத
லுன்னுடன்றொடர்ந்ததுணைவருமாதுநீங்கியுமுளம்படரடையா
யென்னினியிதனுக்குறுகுதலென்றானிமையவர்தொழுகழலிறைவன். (௬௨)

அஞ்சலித்திருகைசிரத்திடையேந்தியாண்டகையத்தனைநோக்கி
விஞ்சுறமறத்தினுருவநீவிண்ணோர்வேந்துநீமேம்படுகதிநீ
பஞ்சரித்துன்சொன்மறுத்துரைத்திடநான்பற்றுவேனெனிலதேபழியாம்
வஞ்சமற்றறத்தின்வழியலாதெய்தேன்வான்கதியேதினுமதியேன். (௬௩)

நின்னுரைமறுத்துப்புகலவுமறியேனீயுணராவறமிலையாற்
றன்னைவந்தடைந்தோர்மனிதரேயாகத்தக்கநல்லுயிர்களேயாக
மன்னிவாழ்வுறத்தாமனனுடையவருமித்திரவஞ்சகமியற்று
மன்னபாதகருமருவையைவதைத்தோரந்தணர்பொருள்கவர்ந்தவரும். (௬௪)

எய்துறுகதியொன்றெனவறந்தெளிந்தோரிசைத்திடத்தேறினேனெந்தை
பொய்தவிர்மொழியிலஃதினைக்கென்னேபுழுங்குவதெனவெடுத்துரைத்தாய்
மெய்தருமறத்தைவழுவிலன்விகங்கமேவநற்சிவியுடலரிந்தான்
கைதவமேகொலுண்மைகொலுடனேயடைதரக்கருணைசெய்யாயேல். (௬௫)

அறுகிலனடியேன்பொன்னுலகதினுமதிகமொன்றுளதெனக்கதுநின்
விணைமலரடிகளெஞ்சினும்விழிகளிரண்டினுமிடைவிடேனாகித் [ம்
துணையெனக்கொண்டோர்நலத்திடையிருந்து தூய்மையிற்றவமிழைப்பதுவா
பணைவிறற்புயத்தோய்சுணங்குடனெய்தாப்பரிசெனிற்பணித்தியோர்பாங்கர்.

இளைஞருமணங்குமுழ்வினைச்செயலாலிறந்தகன்றனரவர்க்கிரங்கி
யளவறுகாலமரற்றினும்வீந்தோரடைவரோவாதலாலயர்த்தே
னுளவருசுணங்கென்னுயிர்த்துணையாகவுடனுறவொருவியானடைந்தால்
வளமலிபதமென்னாகும்யானென்னேவானிடைப்பெறுந்தரம்வகுப்பாய். ()

ஐயநீகருணைபொய்ப்பினுமிருந்தவாரியர்வெருளினுமினிமே
லுய்யலாமுறைகளெய்திடாதெனினுமுதியமிழந்துளேனெனினு
மையலான்வசையேமருவினுஞ்சுணங்கோடன்றியான்வான்வழிமருவேன்
செய்யுமாறிதுவேயலதிலையென்றனமாரும்பெருநலஞ்சேர்வோன். (௬௮)

கண்களாயிரமுங்களித்தனன்மகவான்களித்தனநான்மறைக்குலங்கள்
விண்கொளாரியர்கள்சொரிந்தனர்கடும்பூவிழிகளுழ்ந்தனர்முனிவரர்க
டண்கிளருஞ்சவஞ்சுணங்கெனவடுத்தகருமதெய்வதந்தலைதுளக்கி
யெண்கடந்தொலித்தவ்வுருவொழிந்தியற்கையுருவொடுமெதிரடைந்ததுவே.

பயந்ததன்றாதையெதிர்வரநோக்கிப்பணிந்திடவிருகையாற்றழுவி
யயர்ந்திடாவொழுக்கமுதல்வனையேத்தினதருட்டிறமுலகறிய
வியந்திடுமாறுச்சுணங்குருவோடுமேவினேன்யானுனைமேலோர்
நயந்திடாதவராரென்றனன்பின்னுமிம்மொழிநவையறமொழிவான். (௭௦)

வனத்தினீயிளைஞருடன்சிலகாலமருவுநாளுமையடுமாறு
நினைத்தொருபூதம்வரவிடக்கொடியோனேர்ந்தனதிளைஞரைநச்சு
வனத்துயிர்தொலைத்துக்குறளிணைமடக்கிவைகுறுகாலைநீயெய்திப்
புனற்றடமடுத்தபோதுநாளொளித்துப்புகன்றனனேர்மொழிபொருந்த. (௭௧)

இளைஞரையிழந்துவாடுமன்னவனேயினியுனக்குறுதுணையாக
வுளமுறவொருவன்றனக்குயிர்தருதுமுகந்துநீயெழுப்புகென்றுரைப்ப
வளமலிவீமன்விசயனையொழிந்துமத்திரைக்கொருவனையுன்னித்
தளிருறநகுலன்றனையெழுப்பினைநின்றகுதியன்றேமனந்தரித்தேன். (௭௨)

வேறு.

கருதுமிக்ககனவாணரியாவருங்களிக்குமாறு
வருதுணையாகவந்துன்மனந்தனைத்தெரிதல்செய்தேன்
விருதணிகுருகுலத்துக்கொருவனீவிண்ணுளோர்க்கு
மொருதனித்துணையாவந்தாயாருனையொக்குஞ்சீரார். (௭௩)

என்றறக்கடவுள்கூறவிமையவர்பெருமான்சால
நன்றியினுயர்ந்தசிந்தைநினக்குநேர்நவிறலாற்றோந்
துன்றுதிவிமானத்தென்னமகிழ்ந்தடிதொழுதுபுக்கான்
வன்றிறலமரர்யாருமலர்மழைபொழிந்துவாழ்த்த. (௭௪)

ஆடினரரம்பைமாதரரியகந்தருவர்வீணை
பாடினர்பரவிநின்றார்முனிவரர்பலருஞ்சூழ
நீடியவிமானமேறிநிகரிலார்நடுவட்போந்தான்
கோடியரிசைகளேத்தக்குன்றெனக்குவவுத்தோளான். (௭௫)

இருமருங்கிறைவரெய்தாப்பணிலேகும்போதிற்
பெருவரைநிகர்விமானங்ககனமேற்பெயர்ந்துசெல்ல
திருமலிகின்னரேசர்சித்தர்விஞ்சையர்கள்வாழுந்
தருநகரங்கள்காட்டத்தருமனுமகிழ்ந்துகண்டான். (௭௬)

உத்தரதிசையடைந்தசருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௧௩.

மகப்பிரத்தானிகபருவமுற்றிற்று.

உ

பதினெட்டாவது,

சொர்க்காரோகணபருவம்.

சொர்க்கதெரிசனச்சருக்கம்.

மண்ணுடன்புனலுந்தேயுவாயுவுமாகாயமென்னு
மெண்ணெடுமிரவிதிங்களியமானனெனுமோரெட்டு
வண்ணமுமாகியெல்லாவடிவினுஞ்சிறந்துநின்ற
கண்ணருளுடையகோவைக்கருதினோர்பிறவிதீர்ந்தோர். (௧)

வையமேழுடையாயாவுமனங்கொளென்றுரைப்பவேந்துந்
தையலுமன்புமிக்குத்தவமுனிதாள்கள்சூடிப்
பொய்யிலாமெய்யனான்போய்ப்பொருந்தியசிறப்பையாங்க
ளுய்யுமாறுரைத்தியென்னமுனிவரனுரைக்கலுற்றான். (௨)

இரவிதேருலவாநிற்குமெல்லையுமதிபோந்தெய்து
முரனுடைக்கதியுமேனைக்கோட்களின்முடியும்விண்மீன்
பரவியகதியுமாழிபரித்தநற்றுருவன்வைகும்
புரிகளுங்காட்டக்கண்டான்பொறையலாற்பிறிதுபோற்றான். (௩)

வாமத்தேருயர்ந்துசெல்லவானவர்நெருங்கிச்சூழத்
தாமத்தோள்புளகமேறச்சாமரைக்கற்றைவீச
வேமத்தேரிறைவர்சூழவின்னிசைச்செவியினூற்ற
காமத்தானுயர்ந்தகோமானுகர்தமிருக்கைகண்டான். (௪)

செஞ்சுடரனந்தமொன்றாத்திகழ்வதுபோலவாகி
விஞ்சியவகன்றகாறுமேலுயர்சிகரிபோக்கி
யஞ்சுடர்வாயினான்குமரதனமொளிவிளக்க
விஞ்சிசூழ்ந்திருப்பக்கண்டானிமையவர்நகருக்கம்மா. (௫)

நூபுரமடவார்பாடகில்லொதாறுநவலுஞ்சோதி
யாபுரம்விளக்கவண்டராலயத்திசைகணான்கின்
மாபுரநான்குமேருமாமுடிகவித்ததென்னக்
கோபுரநான்குங்கண்டான்குற்றமேகண்டிலாதான். (௬)

அற்பகதேற்றுவாரிபயிர்தருநகரினோர்சார்
பொற்புறுகனகத்தாற்றும்பொதுளியமதிலகத்து
ளெற்படுகுறையும்பூவுமிளந்தளிர்முகையுநல்குங்
கற்பகச்சோலைகண்டானிவிப்புமிகாண்கலாதான். (௭)

வாமதேவர்க்குமேனைமுனிவர்க்குமற்றுள்ளோர்க்கு
மோமதேவுக்குங்காலந்தொறுந்தொறுமுதவுதிம்பா
லேமதேகத்தோடொன்பதெழின்மணிப்பொலிவுகாட்டுங்
காமதேனுக்கள்கண்டான்மனைதொறுங்கருணைக்கண்ணான். (அ)

வேதிகண்மணிகண்மின்னமகரதோரணம்விளங்க
நீதியிற்கொடிகள்வானநெருங்கி..விரண்டுபாலுங்
தீதகன்மாடமேசங்குந்தெளிமணித்தெற்றிகாட்டும்
வீதிகள்பலவுங்கண்டான்விதியினிலினிப்படாதான். (கூ)

வேறு.

அயமேதமுதலாகமகங்கள்பலவாற்றினருமன்னதானம்
நியமமுடனேதினமும்நல்கினரும்பலதானநிகழ்த்தினோரும்
வயமாகவறியவர்க்குச்சொன்னதானங்கள்பலவழங்கினோரு
மியல்பாகவிற்றிருக்குமண்டபங்கள்பலகண்டானிசையேகண்டான். (க0)

உத்தராயணமதனினெறிதோறுஞ்சாலைகள்செய்துறுத்திநன்னீர்
பத்தியினீந்தோர்பாரம்பரிப்பித்தோர்மரங்கள்வைத்துப்பயிர்செய்வித்தோர்
சத்திரஞ்செய்தோர்செருப்புத்தனிக்கவிகைதருவித்தோர்சந்தனாதி
யுத்தமதானங்கொடுத்தோர்நவமணியாதனத்தின்மிசையுறுதல்கண்டான். ()

நன்னாளில்புனல்படிந்தோர்கங்கைமுதனதிதோய்ந்தோர்நன்மையாற்றி
யின்னாசையாதொழிந்தோர்மொழிவழுவாதொழுகியிசையெடுத்தோர்போரிற்
றன்னாரைப்புரங்கண்டோர்புரந்தவர்க்காருயிரளித்தோர்சுற்றமொக்கன்
மின்னார்நற்புதல்வருளம்வெறுப்பெய்தாவகைபுரந்தோர்மிளிர்தல்கண்டான். ()

செய்ந்நன்றிமறவாதோர்தீவினைக்கஞ்சினரொருவர்திமைசொல்லார்
மெய்ந்நலனாற்கல்வியினால்வெறுக்கையினாலுயர்ந்திலரைவெறுத்துசொல்லார்
பொய்சென்றுபுகலாதார்புகழ்பெற்றார்நடுவுநிலைபோற்றிவீழ்ந்தார்
தெய்வமிகழார்முதலாப்பலகோடிமண்டபத்திற்றிகழக்கண்டான். (கங)

தன்கணவன்மொழிகடவார்கடவுளவனெனநினைவாரவனைநாளும்
வன்மொழியினெதிர்த்துரையார்வசையொருவருடன்புகலார்வழிபாடன்பா
லென்புருகச்செய்திருப்பாரெழிலயலார்முகநோக்காரிறந்தனான்றி
லன்பினொடுமனுமரணஞ்செய்வார்தம்பதியருகிலிருப்பதாய்ந்தான். (கச)

இவ்வண்ணம்பலகோடிப்புதுமையெலாமிமையவர்கள்சுட்டிக்காட்டச்
செவ்வண்ணத்திருமேனியறன்புதல்வனுளமகிழ்ந்துசென்றுசேர்ந்தான்
மைவண்ணமணிமேனிமகபதிவாழ்பேரவையின்மருங்கினூர்தி
மெய்வண்ணம்போலொளிரவாங்கதனையெடுத்துரைத்தான்வீணைவல்லோன்.

வேறு.

எத்தனைவேந்தரிந்தவிருநிலத்துதித்திறந்தோ
ரெத்தனைவேந்தர்வானோரெதிர்கொளவீண்டுவந்தோ
ருத்தமநினைப்போன்மெய்யோடுற்றவரொருவர்காணேன்
சுத்தனீயானாயென்றுந்தொலைவிலாப்புகழ்பெற்றாயே. (கரு)

ஆகத்தைவனப்பைநில்லாதாயசெல்வத்தைமின்னார்
மோகத்தைச்சினத்தைமெய்யாமுயன்றிருவினைக்கீடாகித்
தாகத்தில்யோனிதோறுஞ்சார்ந்திடாதொருவித்தக்கோர்
நாகத்தேயெதிர்கொண்டேத்தவுடலொடுநண்ணினாயால். (கஎ)

மற்றினியுதிப்போர்தம்மின்மடங்கினோர்தம்மிலெங்கு
முற்றபேருடையானாகியுற்றவனீயேயாமாற்
கற்றநீர்மையருந்தூயகடவுளர்பலருமேத்தப்
பெற்றதேபெரும்பேறென்றானறன்மகன்பேசலுற்றான். (கஅ)

அரியபேறெனினுமையாவடியனேன்மனதுட்கொண்ட
துரியதொன்றுளதுதன்னோடுதித்தவர்நால்வரோடுங்
கரியவார்குழலினாளுங்காதலினென்னோடெய்திப்
புரியுடலகன்றுபோந்தபுணர்ப்பெலாம்புகல்வதென்னோ. (கக)

ஆங்கவர்தம்மைக்காணுமளவுநீயருள்செய்பான்மை
தாங்கலனுளத்திலென்னத்தருமனைமகவானோக்கி
யீங்குநீயுணர்வையாதுமுனக்கடுத்திடுதல்வேறும்
பாங்கவர்தமக்குவேறுமென்கொனீபகருந்தன்மை. (உ0)

அனையவர்நின்னைநேருமறிவுடையவரோவாங்கோர்
புனையிழிகதியிலாழ்ந்தாரவரொடுபுணர்வதெங்ஙன்
றனையுணர்பெரியோர்க்கெட்டாவுயர்கதிசார்ந்தாயன்றோ
நினைகலையவரையென்றானிருபன்மற்றிதனைச்சொல்வான். (உக)

ஐயநீயடியேன்சிந்தையாகுலந்தவிர்க்கவேண்டி
யுய்யவென்னிளைஞர்மைந்தருரியவளொக்கல்சுற்றம்
வெய்யபோரகத்தில்வீந்தவேந்தரானவரையெல்லாஞ்
செய்யகண்ணாரநோக்கச்செய்வதேயரியசெய்கை. (உஉ)

அன்னவர்தம்மைநோக்காதரும்பெறலின்பமொன்று
மென்னுளம்விரும்பாதன்னாரெக்கதியடைந்துற்றாலு
மன்னிலத்தென்னையேவிற்கண்டபின்படைவன்மீண்டு
பின்னெனக்குதவுமாறிங்குளவெலாம்பெறுவன்மன்னோ. (உங)

மைந்தருமடமினாருந்துணைவருமற்றுமுள்ள
சிந்தைமித்திரருநீங்கவவரையான்சேரேனாகி
யிந்திரதிருவினின்பந்துய்க்கினுமிழிபேயன்றோ
சந்ததமவரோடொன்றித்தழைப்பதிற்பேறுமுண்டோ. (உச)

ஆதலாலவரைக்காணுமாசையேதவிராவாசை
காதலைத்தவிர்த்துநல்கலுனக்கென்பாற்கருணைநீரா
மீதலர்க்கரசேயென்னைவிடுத்திமற்றவர்பாலென்று
கோதிலான்வருந்தவானோர்கோனகைபுரிந்துசொல்வான். (உரு)

தம்பியர் குழுவுமற்றுஞ்சார்ந்தவர்பலருமேவும்
வெம்பதங்தொறுங்கொண்டேகிவேந்தனுக்கறிவித்தின்னே
நம்பதங்கொணர்மினென்றுநாரதனுறியான
செம்பதமுணர்ந்தோர்பல்லோருடனுறச்செலுத்திவிட்டான். (உசு)

உடன்வருபெரியோராருமாங்கிருந்துநிட்டிரற்கு
விடைதரமுனிவரோடும்விண்ணவர்தூதரோடு
மடமயற்பாசமீர்ப்பமருங்ககன்றப்பாலேகி
நடைபயிறருமமொக்கும்நாரதற்குரைக்கலுற்றான். (உஎ)

எத்தகையிழிபினேனுமெம்பியரிருந்தபாங்கா
முத்தனீரெனைக்கொண்டேகிக்காட்டுதன்முறைமையென்ன
வத்தகைபுரிவதேயென்றோரிடத்தனுகவுய்த்தார்
புத்தியின்மயக்கங்கொள்ளாப்பொறையனைமறைகளாய்ந்தோர். (உஅ)

நாடகமடவாராடகன்மலர்மாரிதூவ
மாடகமுறுக்கிவீணைவல்லவர்கீதம்பாட
வாடகமணியாற்செய்தவரியணைமீதிருந்தான்
கோடகவமுதுண்டெல்லாவின்பமுங்குழையுங்கோவே. (உகூ)

இளையவரோடும்வைகுஞ்சுயோதனனிருக்கைகண்ணுற்
றளவறுவிந்தைநோக்கமளித்ததிவ்வாறென்றுன்னிக்
களியொடுவெறுப்புமின்றிக்கடிதினிற்றிருகிமீண்டு
வளமலிமுனிவரோடுவெகுத்தனன்மறுவிலாதான். (௩0)

காதகனுலகிலுள்ளகாவலர்சேனையானை
மேதகுபரிகளெல்லாம்வீட்டினேனென்றுருபதேயன்
மாதகம்வெருவவேந்தரவையினிலவமானித்த
பாதகனவனுக்கென்னேபாக்கியம்பலித்ததம்மா. (௩க)

படமிட்டபுவிமேற்றேற்றும்பார்த்திபர்பலருங்காண
விடமிட்டானமுதினூடுவெங்கழுவிட்டானீரில்
வடமிட்டும்பிணித்துவிட்டான்வீமனைவஞ்சவில்லி
லிடமிட்டுக்கனலுக்கட்டானிற்றிதோவிவன்செய்தீமை. (௩௨)

வில்லினலடர்க்கலாற்றுமுறையினல்வெகுண்டுவஞ்ச
வல்லினலடர்த்தானாடுவௌவினன்மனம்வேருக்கிக்
கல்லினலியங்குங்கானம்புகுவித்தான்குரவர்காட்டுஞ்
சொல்லினைப்பிழைத்தானின்னுந்தொலையுமோவிவன்செய்தீமை. (௩௩)

காளமாமுனியையெம்மைக்காதுதற்கமைத்தபூத
மீளவந்துயிரையுண்ணவவன்பழிமீதுகொண்டான்
றாளதாமரையோனன்னதேசிகன்றனையுமாயக்
கோளிலான்றனையும்போரிற்கொன்றரும்பழிசுமந்தான். (௩ச)

இன்னனதீமையெல்லாமிவன்புரிந்திறந்தபாவி
மன்னினன்கதியினென்றலென்கொலோவகுக்குமாறு
தன்னிகரிலாதீரென்னேதருமத்தினியல்புதேர்வீர்
பன்னுதிர்தெரியவென்றானவரிதுபகரலுற்றார். (௩௫)
கருமத்திற்கணக்கிலாதபாதகங்கலந்தாரேனும்
நிருமித்தபோரின்மாய்ந்தாலுய்கதிசேர்தலின்னந்
தருமத்தினுருவேயாருஞ்சமரினிலிறத்தற்குன்னி
யொருமித்ததிதனாலென்றாருதிட்டிரனிதனைச்சொன்னான். (௩௬)
புல்லியவாழ்வினூழ்ந்ததீமையேபுரிந்தபாவி
யெல்லுறழ்கதியினுதலியற்கையாமென்னினன்றே
சொல்லியகாலம்வாழியவனிடைதுன்னிவாழே
னல்லுறற்குழலினுள்பாற்றுணைவர்பாலாக்கவென்றான். (௩௭)
நாரதமுனிவன்மீளநகையொடுமரசைநோக்கிப்
பாரதவமரினூடுபற்றியசெயல்களெல்லாம்
வீரதந்திரமாமொன்றாம்விளம்பலேமனதுட்கொள்ளேற்
சிருதவியதுறக்கஞ்சேர்துமென்றியங்கலென்றான். (௩௮)
அற்றிதேயாகமுன்னமாதித்தன்புதல்வன்றன்னை
யுற்றமுன்னவனென்றுன்னாதுட்பகையாகக்கொண்டு
வெற்றிகொண்டன்பிற்கூறமெலிவுற்றோமவனைநோக்கப்
பற்றுளதையாவென்னமுனிவரர்பகரலுற்றார். (௩௯)
மற்புயமன்னகேண்மோமகபதிமானதத்தி
லுற்பவித்திட்டவண்ணங்காட்டுகென்றேதிவிட்டா
னற்புரையுனதுசுற்றத்துணைவர்பாலடைந்துமீண்டு
நற்புரமடைதியென்றானவின்றபின்னிதனைச்செய்தார். (௪௦)
தேவர்கடூதர்தம்மைநோக்கியிச்செம்மலுக்கு
மேவுறுமிளைஞர்தம்மைக்காட்டுகவிரைவினென்னக்
காவலனுடன்செலுத்திக்கடந்தவர்கருணைமிக்கோன்
றாவுறுமவாவினோடுந்தூதர்பின்சார்ந்தான்மன்னே. (௪௧)

சொர்க்கதெரிசனச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௪௧.

நரகதெரிசனச்சருக்கம்.

நாளநாபனைநாராயணன்றனை
காளமாமுகில்கண்டன்னமெய்யனை
வாளிநேர்விழிமாமலர்மங்கைபா
ளாளுமன்பனைநெஞ்சிடைசேர்த்துவாம். (௧)

ஆதன்முன்செலத்தோன்றலுடன்புகுந்
தாதரத்தொடருநெறிநீந்தலும்
போதரும்பல்பொருட்டிறக்கந்தங்க
மதிலானெதிர்வீசினசேர்ந்தரோ. (௨)

அத்திகேசங்களேபரமானன
முத்தநாடியிரத்தமுலாவுநாள்
கைத்தலங்கள்குவிந்தனகண்ணெலாம்
வைத்தமால்வரைபோன்றுவயங்கிற்றே. (௩)

காகஞ்சிச்சிலிகூகைகழுகுகள்
மாகம்பற்றிவருஞ்செம்பருந்துகள்
வேகம்பற்றியவெஞ்சிறைகாற்றொலி
பூகம்பம்பிறந்தாலெனப்போர்க்குமே. (௪)

கிருமிகீடம்பிபீலிகைகீறிய
கருகினுண்ணிகொசுகுதவிர்ந்தவு
மிருமருங்குமிடைவிடுதற்கிலா
வுருவினெங்குமுலாயதருஞ்சுரம். (௫)

முண்டகங்கைதைகாரைமூட்டுறுடன்
பண்டையட்டைமுதலைப்பரப்புடன்
விண்டவாமணக்கெண்ணைவிளக்குநீர்
மண்டித்தவ்வழிவைதரணிநதி. (௬)

ஆயபாங்கரிலாயிரங்கோடியர்
தீயசிந்தையர்செங்கனற்கண்ணினர்
கூயசொல்லர்கொடும்படைக்கையினர்
மேயகிங்கரரார்வமிகுந்ததே. (௭)

வேறு.

எற்றுமின்குத்துமினெறிந்தபாசத்தாற்
பற்றுமின்சுற்றுமின்பாரிற்றாக்குமின்
றெற்றுமின்பிளவுமின்றின்மினென்றசொ
லுற்றதாலுதிட்டிரன்செவியினோடியே. (௮)

கண்டனன்பற்பலர்தம்மைக்காய்ந்தெழு
தண்டினாற்றாக்கலுஞ்செக்கிற்சாய்த்தலும்
விண்டிடவம்மிவைத்தரைத்துவீசலுந்
திண்டிறலரத்தினாற்பிளவுசெய்தலும். (௯)

மூக்கினிற்சலாகைகண்முனியிற்சேர்த்தலும்
நாக்கினைத்தீய்த்தலும்வாச்சிநாட்டியே
தாக்குடல்வகிர்தலுங்கரந்தறித்தலும்
போக்குயர்நெருப்பினிற்புரட்டித்தள்ளலும். (௧௦)

மாதரையிருப்புலக்கைகளின்மாட்டலுங்
கோதறத்தூண்டிலிற்குத்திவிக்கலுஞ்
சாதகநரகினிற்றள்ளியாழ்த்தலும்
போதுறநோக்கினன்பொய்மைநோக்கலான். (கக)

ஆரியர்தூதனையன்பினோக்கியே
பாரிடையிவர்புரிபாவமென்கொலோ
காரியமுணர்ந்துநீர்கழறுவீரெனச்
சீரியன்றனக்கிதுதெரிக்கலாயினார். (க௨)

வேறு.

அந்தணர்தம்பொருள்கவர்ந்தோரகமழித்தோரவர்மனையிலருந்தியிட்டோர்
தந்தசனம்விடமிட்டோர்வழியடித்துப்பறித்தோர்சந்ததியைக்கொன்றோ
ருந்துமனையில்லாளைவதைத்தோர்வேதியர்களுயிருண்டோர்மற்றும்
யந்திபடுமுயர்கொலைகள்புரிந்தோர்மற்றிவராகும்பாரில்வேந்தே. (க௩)

தெய்வமிகழ்ந்தோர்குரவர்தங்களைநிந்தித்தோர்செய்ந்நன்றிபோற்று
துய்யமறந்தோர்பக்கபாதத்தால்வழக்குரைத்தோருண்மைபோலப் [னோர்
பொய்வசனமெடுத்துரைத்தோர் புறம்பழித்துமுன்னிதவு பொருந்தச்சொன்
கைதவஞ்செய்தோரடைந்தோர்கைவிட்டோரிவரெனவுங்காட்டினரே. (க௪)

பொருவிலனல்சான்றுவேட்டமடக்கொடிதனியேபுழுங்கித்துஞ்ச
வொருவன்மனைதனைவிரும்பியுழன்றகொடும்பாவியிவனுகந்துதாங்கிக்
கருவுயிர்த்ததாய்ப்பசியைக்கண்டிருந்துமுண்டகொடுங்கடியபாவி
வெருவனிவன்றந்தைதாயர்தமையுதைத்தவனும்வேந்தேயென்றார். (க௫)

பொய்க்கரிசொற்றவர்தேவர்பொருள்கவர்ந்தோர்விருந்திருக்கப்புசித்தோர்தங்க, ளொக்கலுடன்மருவாதோர்கற்றோரையிகழ்ந்துரைக்குமூற்றமிக்கோர், சக்கரநன்னெறிகடந்தோர் துறந்தின்பந்தான்றுய்த்தோர்தடிந்தான்கொன்றோர், மிக்கவிழிவிலைவிசுவேசியராசையிலழிந்தோரிவர்காண்வேந்தே. (க௬)

என்றுபலபாதகத்தினியல்பனைத்துமொழிந்தபினரேழைமார்க
டென்றுகுழுவினைக்காட்டியவரவர்செய்கொடும்பாவந்தோன்றச்சொன்னார்
நன்றிபுகழ்வானவர்களுடன்செலுத்தநன்னயத்தாலடைந்ததூதர்
வென்றிபெறுகுருகுலத்துவேந்தர்மணிவிளக்கனையான்விரும்பிக்கேட்டான்.()

கன்னிநிலைகைவிட்டாள்கணவனெறியினும்பிறர்மேற்காதல்கூர்ந்தாள்
மன்னியகைம்மையில்விரதமாறியொருவரைப்புணர்ந்தாள்வனப்பைநோக்கி
யுன்னிமனதினிற்கவன்றுளுரியவன்சொற்கெதிருரைத்தாளோகையோடு
பின்னுமுளமாதர்நலமெய்தாமற்றன்வயஞ்செய்பேதைநீராள். (க௮)

மாதுலனைமாமிதனைவைதாளன்படியவர்க்குவறுமைசெய்தாள்
காதுமிளங்கருவழித்தாள்பூப்புடையதினமொழித்துக்கலந்தாளன்ன
மாதுலருக்களித்தியென்னக்காதலன்சொற்கடந்தொருவர்க்களித்திடாதாள்
வேதனையிலகப்பட்டமின்னாரென்றவரவரைவிளக்கிச்சொன்னார். (க௯)

இவ்வியல்பாற்றூதரெடுத்தியம்புதலுமுதிட்டிரன்கேட்டிருகையாலும்
திவ்வியகற்செவிபுதைத்துமறுமாற்றம்புகலாநித்தியதான
மவ்வியநீத்தவருலகமாமோமத்தியமோவென்றறையக்கேட்டுச்
செவ்வழல்சேர்தருவேலோய்விட்பாலேயமபுரத்தின்றென்பாலென்றார். (௨௦)

அன்னதேலினியாமும்புகுநிலமிங்கணித்தோதூரத்தினாமோ
சொன்னவிந்தத்தலத்தேயோவெனக்கேட்பத்திறம்பாதர்தோன்றலோடு
மின்னவிடத்தேயின்னுஞ்சிறிதுபுடைபெயர்ந்தமைந்தாலெதிர்வதென்ன
மன்னவனுற்றலன்வருதற்கெனத்திருகினான்விரைந்தேமாசிலாதான். (௨௧)

வேறு.

கதிர்வேலரசேகடவேல்கடவே
லெதிர்வாயெமைநீயினியாருரியார்
சதிராயருகேவருதன்மையினாற்
பிதிரன்றெமர்செய்பிழைபொன்றினவால். (௨௨)

பொன்மேனியிலேபொதுளும்வரிவர்
தென்மேனியிலேயெறியுந்தகையால்
வன்மேனியினார்பொறையாவருவா
ருன்மேனிகழுங்கருணைக்குரியார். (௨௩)

இன்னுஞ்சிலபோதிவனுற்றனையேற்
பன்னும்யமவாதனைபிற்படியோம்
நன்னயகமேயெனஞாலமிசை
யென்னேபலசொற்செவியெய்துதலும். (௨௪)

கேட்டானதனைக்கிளரும்படியே
தாட்டாமரைசேர்தருமன்றிருகாப்
பூட்டாலிவைதான்புகல்வாரெவரே
மீட்டானுரைமின்வினையேற்கெனவே. (௨௫)

வேறு.

கன்னன்யான்வீமன்யானேகாண்டிபக்கரத்தோன்யானே
பன்னியநகுலன்யானேசகதேவன்யானேபார்மேற்
றுன்னுபாஞ்சாலியானேசுதரைவர்யாமேதிட்ட
மன்னுபரபிமனானேயெனக்குரல்வழங்கிற்றன்றே. (௨௬)

வேறுவேறெடுத்துக்கூறவிரகனுமுருகிமாழ்கி
யாறிழிபுனலிற்கண்ணீருகுத்திவர்க்கடுத்தபான்மை
தேறுதலரிதுமுன்னர்செய்ததீவினையோசெய்யு
மாறினியென்னேவென்னமலர்முகம்வாடிநின்றான். (௨௭)

தன்மையேதிவர்கட்குபகரகினிற்றயரந்தாங்க
வன்மைசேர்விதியையாவர்விலக்கினோர்மறையினோதும்
நன்மையுந்தீமைதானுஞாலமேற்பொய்த்ததேகொல்
கன்மியாமாயையேகொல்கனவுகொல்கண்டதெல்லாம். (௨௮)

வேள்விகளாற்றிவேதவேதியர்துணைத்தாள்சூடிக்
காழ்வலித்தவங்களாற்றிக்கண்ணுதலருள்கைக்கொண்டு
வாழ்வலர்க்கொடிமணாளன்மனதுபோன்றியங்கினோர்க்கு
சூழ்வினையிதுவேயானாலினியென்னோவுயிர்கட்கூற்றம். (௨௯)

ஒருசெயலானுநன்மையுறுமெனக்கொளாத
நிருபனிவ்வுலகிலார்க்கும்நேர்வருங்கதியினெய்திப்
பொருவிலாதுயர்ந்தான்சூழ்ந்தாரிங்கிவர்புதுமையென்னோ
கருதிநுமாரைநோவதெனவுளங்கவலைசார்ந்தான். (௩0)

இத்தகைதுயரங்கூரவுள்ளமிக்கிரங்கியாது
முத்தரமுரையானாகியுயிர்த்துயிர்த்தும்பர்கோமான்
வைத்தபேரருளின்றன்மையிலைகொலோவென்றுமாழ்கி
முத்தனும்நிலத்தைநோக்கிமுடிகவிழ்ந்திருந்தான்மன்னோ. (௩௧)

நோக்கினனும்பர்தூதர்நவலுவார்மன்னவவென்னோ
ஊக்கமற்றிருப்பநிங்கனுனக்குரியாரைக்காண
விக்கியவிடங்கடோறுமேவுதுமெய்துகென்ன
வாக்குடன்மனமொன்றானோனவர்க்கிதுவகுக்கலுற்றான். (௩௨)

எம்பியர்மனைவிசுற்றமினியநன்மைந்தராரு
மும்பர்கோனருளினாலிங்குற்றனருணர்ந்தேனன்னார்
தம்பதம்விழைந்தேன்யானுமவரொடுசார்வனிங்கே
யிம்பர்நீயேகியுங்களிறைவனுக்குரைமினென்றான். (௩௩)

சாதநீர்மையினான்கூறச்சாரணர்கடிதினோடி.
விரதமாதவர்கள்சூழவேள்விகாத்தளிக்குமாற்றல்
வரதனுக்குரைப்பவானோர்மதிமுகநோக்கிநக்குச்
சுரதமங்கையர்கள்பாடத்தோன்றினான்றும்பிமீது. (௩௪)

புட்பகவிமானமூர்ந்துகுபேரனோர்புறத்திலானு
னட்பினல்வருணனங்கிமுதலினோர்நாடிச்சூழ்ந்தார்
கட்பொறிநூற்றுஞ்சிற்றக்கடாவின்மேற்றருமன்சென்றான்
விட்புலத்துள்ளோர்யாரேவந்திலார்விமானமூர்ந்து. (௩௫)

விஞ்சையர்சித்தர்கின்னரேசர்சாத்தியர்விளக்குஞ்
மிஞ்சொல்கந்தருவர்பன்னகேசரோடியக்கராதி
சஞ்சரிகங்களார்க்குங்கருங்குழற்றையன்மாரும்
வஞ்சமிலானைநோக்கமகிழ்நரும்வந்துசேர்ந்தார். (௩௬)

வசக்களென்மருமாதித்தர்வருக்கமும்பதினொன்றாய
பசுக்கண்மேற்பயிலுவோருமிருவரும்பாடல்வல்ல
வசிட்டநாரதனையாதிமுனிவரும்விரைந்துசார்ந்தார்
கசட்டரும்புலனைவென்றகாட்சியைக்காணவேண்டி. (௩௭)

எண்டிசாமுகமும்பாடலின்னிசைவிளங்கவெண்ணின்
மண்டலமதிரத்தேவதுந்துபிவலாரிகொட்ட
முண்டகவதனமின்னார்கூடித்திடமுழவுவிம்ம
வண்டர்நாயகன்வந்துற்றனனன்மகனிருக்குஞ்சூழல். (௩௮)

குற்றமெய்க்குறைபாற்சேர்ந்தகுன்றங்கள்பலவும்பாசம்
பற்றிவாதித்ததியோர்துயருமும்பற்பல்கோடி
யுற்றகிங்கரருமார்வமோவாதையுமுருகுகந்தம்
பெற்றவைதரணியாரும்மாவிகைப்பொலிவும்பின்னும். (௩௯)

வெஞ்சிறைப்பறவைசுற்றிமிளிர்தருபொலிவும்வெம்மை
நஞ்சினுங்கொடியகாற்றுநரகவாதனையுமெல்லாஞ்
செஞ்சுடரெழுந்தபாங்கரிருட்குலந்தீர்ந்ததேபோல்
விஞ்சைபோன்மறைந்ததந்தோவென்கொலோவிபுதர்மாயை. (௪0)

ஓடியநதியுநன்னீரும்பரோபியக்கமோதை
நீடியமழையேநல்லநெறிகளேபெயர்வதெல்லாம்
பாடியவிசையேயெங்கும்பவனமுனறையேவீசக்
கூடியதிசைகள்பத்தும்நோக்கினன்குருகுலேசன். (௪௧)

அற்புதரீரனாகியெதிர்ந்தவர்க்கன்பினோடு
பொற்புறத்தொழுதுபோற்றிப்புகழ்ந்தெதிர்கொண்டுநிற்பக்
முற்புகுமுனிவரோடுமுதிட்டிரன்முறைமையெல்லாம்
வெற்படுவயிரக்கையான்வியந்துரைத்திதனைச்சொன்னான். (௪௨)

ஐயகேளிருத்தலீண்டென்றறைந்தனையாதலாலே
பொய்யறுமிமையோராரும்புகுந்தனர்பொறுக்கலாராய்
மெய்யநின்றன்னையுற்றகதியினில்விடுப்பவேண்டி
மையனுமகமுமில்லாய்வாழிநீயூழிகாலம். (௪௩)

நின்னுடைப்பொறையுஞ்சீரும்நிலையும்நின்னெறியுஞ்சிந்தை
மன்னியமதமிலாதவடக்கமும்வானோர்நோக்கிப்
பொன்னுலகோர்க்குமெட்டாப்புனிதனவ்வியேயநாட்டி
லுன்னையுய்த்திடவந்துற்றாருன்குணவியற்கையாலே. (௪௪)

சீர்பெற்றூர்பலரும்வந்துசேருதற்கரியதாய
பேர்பெற்றவச்சுதானந்தபதம்பெற்றாயன்றோ
தார்பெற்றமகுடமன்னர்வணங்குதாட்டராதிபர்க்கு
ளார்பெற்றார்நீபெற்றாப்போலரியதேபெரிதுன்செல்வம். (௪௫)

ஒருதனிச்செங்கோலோச்சியுலகெலாம்புரந்தோரேனுந்
திருநெறிதவராராகிச்செயம்புகழ்செயலரேனு
மருநரகதனைநோக்காதின்பத்தையடையமாட்டார்
சுருதியின்வரம்பிதாகக்கோடிநீதுன்புறுதே. (௪௬)

புண்ணியம்பாவமென்பதிருவகைப்பொலிவதாகும்
பண்ணியவறத்தாற்சேரும்பண்ணவர்நாட்டினின்பம்
நண்ணியபாவத்தாலேநரகவாதனையுண்டாகு
மெண்ணரும்புகழோயின்னுங்கேட்டியிவ்விடத்தியற்கை. (௪௭)

முந்துறநரகினூடுதுன்பத்தான்மூடப்பட்டோ
ரிந்தவிண்ணவர்நாடெய்திப்பின்னரினின்பந்துய்க்கும்
வந்துமுன்றுறக்கநாட்டின்மருவினோர்நரகில்வீழ்ந்து
பிந்தையிற்றுன்பமுற்றுஞ்சேர்வரொன்றுணர்தியன்றே. (௪௮)

ருக்குமமதனிலொன்றுண்டதையினிதொகுத்துச்சொல்வன்
றேக்குளர்தெளிதியற்பநல்வினைசெய்தோன்முன்னர்
பாக்கியமடைவனிந்தப்பண்ணவருலகிற்பின்னு
னீக்கியேநரகினுய்க்குந்தீவினைநிறைந்துளோரை. (௪௯)

நல்வினைநிறைந்துதீவினைசற்றேநவிலநின்றோர்
சொல்லருநரகநோக்கியவ்வினைதொலைத்தபின்னர்
செல்வமார்துறக்கநாடுசேர்ந்துயர்காலமெல்லா
மல்கியவளங்கடுய்ப்பரிதுவன்றேவழக்கமன்றே. (௫௦)

ஆதலாலுன்னையிங்ஙனுய்த்ததுன்மாட்டிலற்ப
மோதுதீவினையைநீக்கியுயர்கதியுதவற்கன்றோ
போதரவின்பந்துய்க்குமவரினிநிரையம்புக்கு
மாதுயருழத்தற்குள்ளாரானவைநீக்குமான்போர். (௫௧)

கன்னனுதியராமுன்றன்றுணைவரைக்காணுமாறு
வுன்னினையவர்களிங்ஙனுறுவரோவொருவற்கெய்தா
நன்னிலையடைந்துதேசிற்பொலிகுவர்நயந்துகாண்டி
மின்னெடுமைந்தர்சுற்றம்வேந்தராமவரையெல்லாம். (௫௨)

காட்டுதுமவரைநின்பொற்கண்ணினாற்காண்கவிங்குக்
காட்டியபுணர்ப்பனைத்துமாயையினலமதாமா
லாட்டாக்குண்டசெந்தாமரைமலர்வதனத்தொப்பாய்
விட்டிடுதுயரமெல்லாம்விளங்குதிகளங்கிலாதோய். (௫௩)

அஞ்சனவண்ணனாதியாதவர்குழுவுமுங்கள்
விஞ்சியகுரவராதிவிதுமரபுதித்தோர்யாருஞ்
செஞ்சுடர்மரபினோருமமரிடையாவிநீர்த்த
தஞ்சநற்குழுவுங்காண்பாய்சாருதிவிமானமூர்ந்து. (௫௪)

ஊழ்வினைபொருவர்க்கேனுமனுபவத்தொருவலின்றி
வாழ்வினாலறிவானன்பான்மாற்றுறுந்தகையுமுண்டோ
சூழ்வினைகளைப்போதிங்ஙன்றுயருழந்தநன்முன்னைத்
தாழ்வினைச்சேடமின்றித்தணந்ததுவருந்தலையா. (௫௫)

இனிமனுமாந்தாதாபகிரதன்றிலீபனேத்துந்
தனியரிச்சந்திரன்சீர்தயங்கியசகன்யயாதி
முனிவிலாப்பரதனாதிமுடிபுனைவேந்தர்வாழ்த்த
நனியுயருலகிலின்பநலம்பெறவருகமன்னே. (௫௬)

இராயசூயப்பேர்வேள்விபரிமேதமியற்றிவின்னி
னிராமயர்மகிழச்செய்தநினக்கொருதாழ்வுண்டாமோ
பராசயப்படாமல்வென்றபண்ணைவரிடுக்கண்மாற்ற
சராசனத்தம்பிமாரோபுன்கதிசார்வர்தக்கோய். (௫௭)

எனக்கிமையவர்கள்காணக்கவசகுண்டலங்களீந்தோன்
றனக்குயிரென்றுநோக்கானாதபன்றந்தசெம்மல்
மனக்களியெய்திவற்றுவாழ்வினிலன்றிவைகான்
புனர்ச்சனனங்கடோர்ந்தோரவரென்றுபுந்திகொள்வாய். (௫௮)

என்றுபற்பலவுங்கூறிப்பின்னுமொன்றெடுத்துரைத்தா
னன்றிதேயெனினும்வான்மேற்கங்கைநீர்நாடவேண்டு
மின்றவணடைதுநின்னோடிவரெலாமுன்னைநோக்கத்
துன்றினரென்றுகாட்டத்தொழுதனனவர்க்குத்தூயோன். (௫௯)

ஏர்வருமாசிகூறவிறைவனுமனமகிழ்ந்து
தேவர்கண்மாயையென்றுசிந்தையிற்கலக்கந்தேறித்
தாவலர்வதனமோங்கத்தன்புயம்புளகரும்ப
மேவியவிமானமூர்ந்துவிண்ணவரோடுசென்றான். (௬0)

நரகதெரிசனச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - க0க.

பரமபதத்தெரிசனச்சருக்கம்.

அருவமாகியுமுருவமாகியுமிரண்டாயு
மரிவையாயரும்புருடனாயிரண்டலதாயுந்
தருவதாய்தருவிப்பவனேற்பவன்றானாய்த்
தருவின்வண்ணமாமொருவனைச்சரணடைகுதுமே. (௧)

வலாரியோடளவற்றவானவரொடுமன்னன்
சுலாபவார்த்தையோர்திமேல்கொண்டுடன்றுன்னிக்
கலாதிதேர்ந்தவர்காணரும்வரநதிகண்டான்
புலாலுடம்பினிற்புகுந்திடாமெய்ந்நெறிபூண்டோன். (௨)

அனையபாங்கரிற்றருமன்வந்தருகினிலடுத்துத்
தனையன்மாமுகநோக்கியேநின்னுடைத்தகுதி
முனைவனாந்தனிற்சுணங்கெனுமுகத்திலிம்முடிபி
னினையமேலவருணர்ந்தனர்நிகருனக்கெவரே. (௩)

புவிபரித்தவர்நிரையச்சார்போர்க்குமீளாக்கா
லவிவியப்பவர்வியந்திடார்மேற்கதிக்கலக்கண்
கவினும்வானவர்நாதனும்யானுமேகருதி
யிவைதெரித்தனநிகழ்வெலாமெம்முடைப்புணர்ப்பே. (௪)

உனநரம்பியர்மாதுநற்கதிதனிலுற்று
றினிதுகாண்குவையாரையுமிவைமனங்கோடி
புனிதமானவான்கங்கைநீர்புகுந்துநீதுளைந்தான்
மனதிலுள்ளபூவாசனைநிவர்த்தியாமைந்தா. (ரு)

துறக்கமெய்தினோர்தொந்தபாசங்களிற்றொடரார்
மறக்கவேண்டியதிதனின்மூழ்கிடினன்றிமறவார்
சிறப்பினார்திதிர்ந்தடைகுதிசெழும்புனற்றுறையத்
திறந்திருலெனச்சொற்றனனவ்வணஞ்சென்றான். (சு)

வணங்கிக்கங்கையைமாமுனிவரர்மறைமொழிய
விணங்கியன்பினீர்துளைந்தனனிருவினைக்கிடாக்
குணங்கொளாக்கையைவிடுத்தொருகுறைவிலாஞான
மணங்கமழ்ந்தபொற்பாக்கையோடெழுந்தனன்மன்னே. (எ)

செய்யபாற்கரனுதித்தெனத்தோன்றியசெம்மன்
மையல்வாஞ்சைகண்மானிலனிகழ்புகழ்மயக்கம்
பொய்யதாயுளம்போழ்ந்தபாசங்களும்நீங்கி
மெய்யிலோங்கினன்பாவகனென்னமீமிசையே. (அ)

அடுத்தவானவர்பூமழைபொழிதரவாசி
யெடுத்தகையினர்முனிவரரியம்பிடவிரதந்
தொடுத்தநற்றொடைகமழ்தரமீளவுந்தோற்றி
விடுத்திடாமகபதியொடும்விண்மிசைப்படர்ந்தான். (கூ)

சென்றுசேணிகந்தேகலும்பேரொளிசிறந்து
மன்றனுற்றிசைமாமதின்மறுகுகளனந்தங்
குன்றமொத்துயர்கோபுரமேடைகள்குலாவி
யொன்றிநின்றதுபுராந்தகனுற்றமாநகரம். (க0)

அளவிலாவளனுடையதாயாதனநிலையா
யிளகுதேன்பொழிமலரெங்கனும்வாசங்
கிளரும்பான்மையாய்விளங்கினுங்கேழ்விளர்நகரந்
துளவுநாலுமிங்காயிரயோசனைசூழ. (கக)

வலத்தவான்கலைமாமறையாதியாய்வேலா
மொலித்ததவ்விடையென்னினுமுறுதிசேரடியார்
குலத்தினுகியகோளிலரன்பொடுகுறிக்க
நலத்தொலித்ததுசிதரனுயிரநாமம். (கஉ)

அனையமாநகர்சென்றுநாப்பணிலழகுடனே
புனையுமாமணிமண்டபத்தெய்தலும்புலவோர்
கனைகழற்பொலியுதிட்டிரன்றனக்குயர்கண்ணன்
றனையுணர்த்தினர்தன்குறைதீர்தரக்கண்டான். (கங)

வேறு.

பச்சைப்புயலினிறத்தானைப்பவளத்துவர்வாயிதழானை
நச்சினவர்க்காம்பதத்தானைநளினவிலஞ்சிப்பொகுட்டானை
யுச்சிக்கதிர்மாமுடியானையொளிருங்குழைகளொளிர்வானை
பிச்சைப்பீதாம்பரத்தானைச்செந்தாமரைக்கணிணையானை. (கச)

மலைபோற்கதையுஞ்சுடர்வாளுமல்குநனுவும்வலம்புரியும்
மிலைசேர்நிகிரிப்பெரும்படையுமுருவோடிறைஞ்சவிருப்பானை
யலைமேலுதித்ததிருமாதுமவனிமாதுமிருபுறத்துங்
கலையானிரம்புபதம்வருடக்கண்டுமுறுவல்விளைப்பானை. (கரு)

பரிதியனந்தமெனமார்பிற்பதுமராகமணியானைச்
சுருதியுணராத்தோண்மீதுதுயன்முப்புரிநூற்சுமந்தானைக்
கருதவரியவுத்தரிகங்கலந்துதுளவங்கமழ்வானை
விருதுபெறநாற்கரமொளிர்ந்துமேன்மேல்விளங்கும்புயத்தானை. (கசு)

பேராயிரங்களுடையானைப்பெண்ணொலியாய்மிடைவானை
யாராவமுதாவிருப்பானையடியார்குலத்தையளிப்பானை
நேரார்க்ககலநின்றானைநினைந்தார்க்களிக்குங்கரத்தானை
நாராயணனைக்கண்ணுற்றானரியாதனமேனலமோங்க. (கஎ)

கண்டான்கவலைக்கடல்கடந்தான்கழற்றாள்பணிந்தான்மெய்புளகங்
கொண்டான்குழைந்தானறனளித்தோனவனையருளாற்குடியிருந்த
தண்டாமரைநேர்விழிபுரட்டிநோக்கிச்சாலத்தளர்வகற்றிப்
பண்டாதரத்திற்பதின்மடங்குபரிந்தான்பச்சாதுயின்றானே. (கஅ)

நீங்கிவேறுவேறாகியடைந்திரிங்குநிலனீங்கி
யாங்குநிகழ்ந்தமையவெலாமிகன்றாயின்னுஞ்சிறுதுளத்திற்
றாங்கியிருந்தாயவைமகவான்றவிர்ப்பன்றணந்துவருதியெனப்
பாங்காவிடுத்தான்மீண்டிமையோரரசன்பக்கற்படர்ந்தானே. (ககூ)

வே று.

அருள்வளர்செவ்விமுகத்தனைமீளவருண்மணிவிமானமீதிருந்தி
மருளறமகத்தின்வேந்துமீண்டவனுமருங்கிரண்டினுமருகடுத்துப்
பொருள்வளர்கலைகளனைத்தையுமுணர்ந்தபுனிதனேநுங்குலத்தவரைத்
தெருளுறப்புகல்வேங்காண்குதியென்றுசெங்கரநீட்டியேதெரித்தார். (உ௦)

தரளவானிலவுவிரித்தெழுநகையுந்தண்ணளிப்பார்வையுஞ்சால்பு
முரலளிமாலைமொய்ம்புமுந்நூலுமுதன்மையுமிதமறத்தாங்கிச்
சுரர்தொழவிரதமீதினிலெட்டாந்தொகைப்படுவசுவெனத்தோன்றும்
வரதனேமந்தாகினிதருபுதல்வன்மனனுறவணங்குதிமன்னே. (உக)

கமலமாலையும்வெண்பட்டுடைமருங்குங்கவித்தவுத்தரியமுங்குழையும்
நிமலமுப்புரிநூன்மார்பமுந்தருப்பைநிகழ்பவித்திரவிரலழகு
மமலவான்பூணுமுடியுமாய்விளங்கியமரர்தேசிகனருகிருந்தோன்
சமரினிலிறந்தசாபவாசிரியன்சரணடைகுதியருந்தவத்தோய். (உஉ)

பொற்கலைப்பொலிவும்பூண்களுமுடியும்புதுமலர்மாலையும்பொறுத்து
நற்குணவதியாமாதுடனுயர்கந்தருவர்நாயகனெனநவிலிச்
சிற்குணத்தவனேதிரிதராட்டிரப்பேர்ச்செம்மல்காந்தாரியத்தெரிவை
யுற்பவங்கடத்தோயுணர்குதியென்றேவிரல்கொடுசுட்டினருறவோர். (உங)

சுந்தரவதனத்தெரிவையரிருவரிருபுறந்துன்னிடமுடிப்பூ
ணந்தரவிரவியொளியொடுமலையவெனக்கருகடுத்திருப்பவன்காண்
சந்திரன்மரபுதழைக்கவந்துதித்தபாண்டுநுந்தந்தைநுந்தாய்மார்
குந்திமத்துருவையெனும்பெயருடையோரிவரெனமானதங்கூறிப்பாய். (உச)

பன்னிரண்டிரவியொடுபதின்மூன்றுப்பகர்தருதொகையுளதாக்கி
மன்னியதேசாலுலகெலாம்விளங்கிமாதொடுஞ்சிருரொடுமெதிரிற்
றுன்னியபெருமான்கன்னனாயுனக்குத்துணைவனாயிரவிதன்சுதனாய்க்
கன்னியாம்பிரதைவயிற்றுதித்திராதைவளர்த்திடக்காசினிபுரந்தோன். (உரு)

தேபுவைச்செறப்பரீண்டசெவ்விழியுந்திரண்டுயர்புயங்களுந்தேசு
மீயுயர்முடிபூண்விளக்கமுந்திகழவிறன்மருத்துக்கணங்கடனின்
மேயவித்தோன்றலுனக்கிளையவனாயரக்கர்தங்குலத்தைவேரறுத்த
வாயுவின்மதலைவீமனென்றுணர்திமயக்கெலாந்தவிர்த்தமானதத்தோய். (உசு)

தாமரைமுகமும்பசும்புயலுடலிற்சாயலுந்தண்ணிலாநகையு
மேமவான்கலையுமகுடமுங்குழையுமெழிறரவின்சொலோடளாவி
நாமமுநரனென்றிமையவர்வணங்கநாரணனருகிருப்பவன்காண்
காமருகாலகேயரைவதைத்தகாண்டிவக்கரதலக்காளை. (உஎ)

முந்தையவனப்புமேனியுஞ்சற்றேதெரிதாமுகிழ்நகையோடுந்
தந்தையருகின்மருத்துவர்கால்வரெனும்படிதரித்திருப்பவர்கா
ணுந்தமக்கிளையநகுலசாதேவரெனும்பெயருலகெலாந்துவல
வந்துதித்தவர்கண்மத்திரையிடத்தின்மனங்கொணிபுலன்களைமறுத்தோய். ()

செய்யவாயிதழுமுற்பலவிழியுஞ்சிறுநகைப்பொலிவுமாருளும்
பையராமணியின்பணிகளுங்கலையுமாலையும்பலதிசைவிளக்கக்
கையினாலரிதாள்வருடிவீற்றிருந்தகமலையேகனலினிற்றோற்றித்
துய்யபாரதத்தைமுடிக்குமாறுமக்குத்துணைவியாந்துருபதன்பாவை. (உகூ)

சிறுபிறைக்கொழுந்துநிலவுமிழ்கற்றைச்செஞ்சடையெம்பிரான்முதனாட்
குறுமுனிக்கருள்செய்குழவியைப்பயந்தகோமளமரகதக்கொடியோ
டுறுதியினியற்றுதவத்தில்வந்தைவர்க்கொருத்தியாகெனவமைத்தனனான்
மறுவிலாள்யோனிசம்பவத்துதித்துமனைக்கொடியாயினளுமக்கே. (௩0)

இத்திறற்குமரரைவர்க்கக்கருவருமக்கவள்வயிற்றுதித்தனரான்
மொய்த்தசிரமரிற்புரவியந்தாமன்மோதியவாளினாலிறந்து
மெய்த்தமதிருக்கைமேவினரிப்பான்மின்னனைத்தன்னுடலொழித்துச்
சத்துவைக்குணத்தோன்மருங்கினிலடைந்தாடன்னிழறன்னையேயுறல்போல்.

ஆதலாலினியதுரெளபதிதானேயலைகடற்றந்தவளென்று
நீதியாயுணர்திமைந்தரைவரையும்நோக்கினைநிகழ்த்துதுங்கேண்மோ
பூதலம்புகழுமபிமனையின்னும்நோக்கலைக்கலையெலாம்புணர்ந்த
சீதமாமதியினருகுறத்திகழ்ந்தசிரியோன்சுபத்திரைச்சிறுவன். (௩௨)

விஞ்சையர்சித்தர்சாத்தியர்கணத்தில்விளங்கியவிவர்தமையுணர்தி
வஞ்சமிலரவான்கடோற்கசனேனைமைந்தர்கள்யாதவர்குலத்தோர்
சஞ்சலந்தவிர்க்கிருதவன்மப்பேர்தங்கவன்சாத்தகிமுதலோர்
செஞ்சுடரனையாய்கனலருகிருப்போன்றிட்டத்துய்மப்பெயர்சிறந்தோன். ()

வேறு.

இயக்கர்கந்தருவாதிபர்குப்பவரிடத்திற்
பயிற்றுபல்படைத்துருபதன்விராடனப்பன்சேர்
மயக்கநீத்துளபாண்டியன்கேகயன்மற்று
முயக்குதங்குலக்கிளையொடுங்காட்டினான்முறைபால். (௩௪)

இன்னும்போரினின்மடிந்தவரெவருளாவர்கள்
மன்னுநல்லுலகங்களின்மாந்தினரின்பம்
பன்னுமாதினியொன்றிலேபார்த்தனையன்றே
வென்னைநின்மனமிசைத்திடென்றனனும்பரிறைவன். (கூஞு)

ஐயகேட்டியானடையவேண்டியபுருடார்த்தம்
எய்தினேனினியுமதருளன்றிவேறிலையாற்
பொய்யினேனையோர்பொருளெனப்புராதனர்பலரும்
முய்யவெய்தினீர்காட்டினிர்யாரையுமுனைா. (கூசு)

என்னைப்போலெவர்பெற்றவர்பேறெனவிசைக்கு
மன்னையாங்கணோர்மாமணிமண்டபத்திருத்தித்
துன்னிச்சாரணர்பலரொடுந்தோகையர்துதிப்ப
முன்னிற்றந்தபினிமையவர்மீண்டனர்முறையால். (கூஎ)

அச்சுதப்பெயரண்ணல்வாழாலயத்திடையிற்
புச்சமற்றதீவினையினன்பொருந்தினனென்று
கச்சவாமுலைவபுட்டைதன்கணவனுக்குரைத்தான்
முச்சகம்புகழ்பெயருடையருந்தவமுனிவன். (கூஅ)

திருந்துதெள்ளமுதிருபெருஞ்செவிவழிதேக்க
வருந்திறனெனவகம்புறமொருங்குறமகிழ்ந்து
தருந்திறற்கலைகற்றவருடன்மனந்தருக்கி
யிருந்தவத்தனுக்கிணையடியிறைஞ்சியீதுரைப்பான். (கூகூ)

கற்றவான்கலைவலியினாற்கேள்வியாலறிவா
லுற்றஞானத்தாலுனைநிகருரைக்கொணுப்பொருளே
சொற்றபண்பெலாஞ்சரதமேயோர்மொழிதொகுப்பன்
கொற்றமோங்கிடக்கேட்டதற்கெதிருரைகுறிப்பாய். (சo)

என்னக்கூறலுமனத்துளதெடுத்துரையென்னப்
பின்னர்க்கூறினனிப்பெரும்பேற்றினையடைந்தோர்
துன்னிப்பற்பகன்மீளவும்நிலந்தொடர்குவரோ
மன்னித்தங்குவரோமயலறப்புகலென்றான். (சக)

கேட்டமாமுனிரகசியப்பொருளிதுகிளர்த்திக்
கோட்டமாமனத்திதயரீக்குவன்முன்னங்குறித்த
நாட்டநல்லருள்வியாதன்வாய்மொழிப்படிநானென்
றேட்டலர்ந்ததாரிறைவனுக்கெடுத்திதையறைந்தான். (ச௨)

பரமபததெரிசனச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - கசா.

உ

முத்தியடைந்தசருக்கம்.

தாயாகியுற்பவகாரணனாகித்தமராகிச்சான்றுமாகி
மாயாவிப்பிரபஞ்சமய்க்கற்றுங்குருவாகிவானோராகி
நீயாகிநானாயவனாயகம்புறமாய்நிமிர்ந்தமூர்த்தி
தேயாநல்லருள்பொழியுந்திருவடியென்கருவிடியத்தெரிசித்தேனே. (௧)

திருவுலவுமுயர்வசுக்களெண்மரிலாங்கொருவனிலஞ்சேர்ந்துமீண்டு
மருவினன்முன்போலெட்டாம்வசுவாகிவீடுமநாமத்தைப்பெற்றோன்
கருதிமுறையுணர்வெள்ளிகலைபுவியிற்சிலைமுனியாத்தோற்றிமீண்டு
பொருவறவேயவனுடலிற்புகுந்தொன்றாப்புலவரெலாம்புகழவாழ்ந்தான். (௨)

அளகைமாநகர்க்கிறைவனருகிருந்துபலபோகவளக்கர்மூழ்கிப்
புளகமுறுதிரிதராட்டிரனெனப்பேர்பூண்டுளகந்தருவர்கோமான்
வளமுறவப்பெயரொடுந்தன்மனைக்கிழத்தியொடுமுலகின்மருவிமீண்டு
தெளிதருதன்னிலையமதின்முன்போலத்தேவியுடன்சிறந்திருந்தான். (௩)

வானவர்கோனருகாகவியக்கர்பதிபாண்டுவிருமாதரோடுந்
தானகலாதிருப்பவனித்தாரணியிற்சிலபகல்போய்த்தங்கிமீண்டு
தேனவிழுமலர்த்தொடைசேர்திருவனைமாரிருவரொடுந்தேவர்நாட்டி
னூனமறவின்பநுகர்ந்துடனிருந்தானும்பர்பிரானுடனேயம்மா. (௪)

பன்னிருவர்தமிலொருவன்பயந்திடவித்தாரணிமேற்பரந்தகன்னன்
மன்னினனின்றவனுடலிற்சிலநாட்பின்புயவலிசேர்வாயுமைந்தன்
உன்னுமருத்துக்களுடனொன்றானானரன்றிருமாலுடனேநீங்கான்
முன்னிருந்தபடியிருந்தானிரட்டையர்தந்தையர்முதிராவுடல்புக்காரே. (௫)

சந்திரனிலெழுந்தவபிமன்னுவுமங்கவனுருவிற்சார்ந்தானிப்பா
லுந்துபிரத்துய்மனெனுமொருகுமரன்சனற்குமரனுடலத்தானான்
பந்தமுறவனுமரணஞ்செய்தவுருக்குமணிமுதற்பாவைமார்கள்
வந்தலர்மாதுடைக்கலையிலொன்றானார்தவத்தடைந்தமாதராரும். (௬)

ஆக்கைவிடுத்தலர்மாதோடவனிமாதுடனடைந்தாரவனிமீது
பாக்கியத்தாற்பதினாறாயிரமடவார்சரச்சுவதிபடர்ந்துமூழ்கி
நீக்கியுடலினையரம்பைமடவாராயிவரருகினின்றநாளும்
போக்கரியதொழிலாற்றிப்புகுந்தனராண்டினியிதனைப்புகலக்கேண்மோ. (௭)

மதுரமொழியறன்குமரனுடற்கலந்துதெளிவித்தியாமயலாய்நின்ற
விதுரனொடுபலநாட்பின்மெய்மையறக்கடவுளுடன்மேவிவாழ்ந்த
சதுரனுயர்திட்டத்துய்மனுஞ்சிகண்டியெனும்பெயரைச்சார்ந்துளோனு
முதுதழலோனுடலடைந்தார்முன்பதங்கொண்டனரேனைமுதல்வரெல்லாம்.()

இப்பாலாண்டிமையவர்நாட்டின்பமனுபவித்திருந்தவிராசராசன்
பொய்ப்பாலோர்செல்வமெனப்போய்த்துவிடவிளைஞரொடுநிரையத்தாழ்ந்து
வெப்பாருஞ்சிந்துபதிசகுனியொடுதுன்பமெலாமேவிமேவி
யப்பான்மற்றவனொருவன்கலியுடலம்புகுந்தடைந்தானலக்கணுற்றே. (௯)

சிந்துபதியிர.க்கதரிற்சேர்ந்தான்மன்னுடையிளைஞர்விளைத்ததீமை
யுந்திடத்தம்பெடர்பிடித்தேயாதுதானவர்குலத்திலுதித்தார்பின்னர்
சுந்தரஞ்சேர்துவாபரத்திலுடற்கலந்தான்காந்தாரச்சுபலன்றந்தோன்
முந்துபகதத்தன்முதன்முடிமன்னராசுரரின்முந்தினாரே. (௧0)

துருபதன்சீர்விராடனவன்சுதர்களருங்கடோர்க்கசன்மற்றுள்ளோர்தோற்றம்
பொருவிலாவிச்சுவதேவகணத்திற்பொருந்தினர்கள்புகழான்மிக்க
நிருடனும்பலதேவனனந்தனாயினனெனமேவிநிகழ்த்தினோமா [கி.
லொருபதுநூறெளிமணிச்செஞ்சிரங்களொடும்பணிக்குலத்தோர்க்கொருவனா

மற்றுறையாதவரென்னையாயினரோவெனமறுகேன்மன்னர்மன்னன்
குற்றேவற்றலைநின்றோர்சுரர்தங்கள்குலத்தடைந்தார்குந்திமைந்தர்
பற்றுடையோர்வானவரிற்பயனடைந்தார்செய்தவினைப்பழுதுபோமோ
பெற்றவுடற்பிரிந்தாலும்நன்மைதீமைகளவரைப்பிரிந்திடாவே. (௧௨)

நீவினவியபான்மைக்கிதுவிடையெனமொழிந்துநிருபரேறே
மேவிவானவருரைராவியாதமுனிபகர்ந்தபடியைத்தாம்வேதங்
காவியமாமிதிகாசமுழுதுமுனக்கெடுத்துரைத்தேன்கருதுகென்று
பூவினான்முகனாதிமூவருமொத்திருந்தமுனிபுகலலுற்றான். (௧௩)

வாதராயணனெந்தைவியாகரணத்துடன்மறைகள்வகுத்தமூர்த்தி
பாததாமரையெனதுசிரமீதுகொண்டிருந்தபான்மையாலே
மாதராதலம்புகழுமாபாரதக்காதைவழக்கமெல்லாம்
போதராவுனக்கெடுத்துக்கசடறயான்புகன்றதெனப்புந்திகொண்மோ. (௧௪)

திருகாமன்மனம்புலனிற்செலுத்தாமலறிவைமனஞ்செறித்திடாமற்
கருதாமற்பிரபஞ்சங்கலங்காமலசையாமற்காதலோடு
முருகார்மெய்புளகரும்பவொருநாள்போற்பாரதங்கேட்டுணர்ந்தாயன்றோ
முருகார்பூந்தொடையானேபவித்திரனாயினையென்னோமொழிவதம்மா. (௧௫)

சிதரற்குந்திருமகட்கும்விளையாடற்குப்பானந்தேவர்தேவும்
பாதியுடலம்பிகையும்பகிர்கருணைக்கொடிதழைக்கும்பாரிசாத
மோதியநான்முகத்தொருவற்குதித்தவுந்திப்பொற்கமலமும்பர்க்கெல்லா
மாதரவாம்பொன்னசலமைந்தாமரணமெனவேயகங்கொள்வாயே. (௧௬)

கலைமகட்குவெண்கமலங்கரிமுகத்தோன்கரத்தெழுதுகலைக்கியானஞ்
சிலைமகட்குமறத்திருத்துஞ்செழுஞ்சாலையறுமுகப்புத்தேளுக்காறு
நிலையமரிவையர்தமக்குக்கற்புவளர்கொழுகொம்புநிலத்தோர்க்கெல்லா
மலைகடலிற்கரையேற்றுமருந்தோணிபாரதமென்றறிவைமன்னோ. (௧௭)

நான்மறையிற்சொற்றபொருணலமாய்ந்துசித்தாந்தநாட்டுந்தானம்
வான்முனிவர்மனத்தையமகற்றுமிடமறஞ்செனித்துவளருஞ்சூழ
லூன்கிளருஞ்சுடர்வேலோய்குயர்மகுடமணிமீதிலொளிர்பூமாலைத்
தானுலகுக்கிருளகற்றுமிரவிமகாபாரதப்பேர்சாற்றுநூலே. (௧௮)

படர்பிறவிப்பிணிக்கரியசஞ்சீவிமடமையெனும்பசிதீர்த்தற்குக்
கடலெழாத்தெள்ளமுதம்புருடார்த்தம்நான்கையுங்காட்டியகண்ணாடி
தொடர்மிடிபோக்கிருநிதியஞ்சுத்தர்களைமுத்திமடத்துய்க்குமேணி
யடர்பலபாதகவரவுக்கசனிமகாபாரதமென்றகங்கொள்வாயே. (௧௯)

எத்தனைய நாளிடத்துமிசைத்தபொருளிதிலுளவாமிதிலிலாதா
யுத்தமமாம்பொருளொன்றிலுளதாகாவாதலினு லனதுமேலை
மெய்த்தவத்தன்முழுதுணர்த்துசெனமாறுதிகளைவிட்டிச்சிவ
முத்தனுகினையென்றுன்வைசம்பாயனனென்னுமுனிவர்கோமான். (௨௦)

வேறு.

ஞாலநாயகனவ்வுரைநற்சிரமேந்தி
மாறிலாமுனிவார்மொழிப்படிவழிபட்டு
மேலவன்புகழ்வியாதனைப்பூசனைவிளக்கிக்
கோலவான்களும்நிதிகளுங்கொடுத்தனன்குழைந்து. (௨௧)

மாசிலாமுனிவரன்மகிழ்வெய்துறும்படியாப்
பூசையாற்றியாங்கவனுறைநகர்மறிப்போக்கித்
தேசினோங்கியமனையவன்சிறுவனோடெழுந்து
காசிலாமதியமைச்சரோடகத்தினுட்கலந்தான். (௨௨)

என்றுரைத்தமாமுனிவரனிருடியர்குழுவாத்
துன்றுநைமிசாரணியத்திற்றோற்றியாங்கவர்க்கு
நன்றிவாய்த்திடக்கூறினனவர்மிகநயந்து
வென்றரும்புலன்விடடைந்தோரினும்விழைந்தார். (௨௩)

ஐயகேண்மினேயாவதுமுணர்ந்தயேறிந்தோ
முய்யுமாறுளம்பூண்டவர்க்குறுதியிங்கிதுவே
மையறீர்ந்தனமடமையுந்தவிர்ந்தனமென்று
மெய்யரோதிடச்சூதமாமுனிவரன்விளம்பும். (௨௪)

வேதகாரணன்விமலவேதாந்தமெய்ஞ்ஞான
போதகாரணன்பாலலோசனமிலாப்புராரி
சோதிமாமுடிபடைகள்பூணிலாதபைந்துளவோன்
நாதவோசையுங்காதலுங்கடந்தமெய்ஞ்ஞானி. (௨௫)

வாதமிக்குளசாங்கியயோகநிர்வாகி
விரதபூடணன்பாராசரன்றருமணிவிளக்கு
சரதபாடிதன்சத்தியவதிதவத்தனையன்
காதலஞ்செறிகலியின்முக்காலமுமுணர்ந்தோன். (௨௬)

அருள்விளக்கியென்சிரமிசையடிமலர்புனைந்து
மருளகற்றினேனுலகெலாம்வழுத்தியவியாதன்
தெருளுறப்பிரபஞ்சமுன்றவினைதீரப்
பொருள்விளக்கியபாரதம்புனைந்தனனம்மா. (௨௭)

தேவர்தோற்றமுமுனிவரருற்பவச்செயலு
மூவராற்றலுமறம்பொருளின்பமுத்திகமு
மேவுபாண்டவர்சரிதமும்வேந்தர்கள்சிறப்புங்
காவியப்படப்புகன்றனன்கருதருந்தகையான். (௨௮)

எடுத்தநற்பருவங்களீரொன்பதாவிலக்க
மடுத்தநற்சுலோகங்களாவாரியர்க்கமுதாத்
தொடுத்தபஞ்சமவேதத்தையருளொடுசொன்னோர்
மடுத்துக்கேள்வியாலருந்தினோர்மாசகன்றவரே. (௨௯)

ஆதியந்தமாமம்முனிமொழிப்படியறைந்த
நீதிசேர்கதைகேட்டவர்நீங்குவர்சாதம்
வேதவேதியருயிர்க்கொலைபசுக்கொலைவெறியோர்
மாதர்மைந்தர்மற்றுள்ளனமன்னுயிர்க்கொலைகள். (௩0)

அனையவான்கதையோர்மொழிகாதில்வந்தடுத்தாற்
புனையுமைம்புலன்மானதமயக்கினாற்பொருந்து
வினையநீங்கிடுமேவிடுநல்வினையெல்லாந்
தனையுணர்ந்தவராகுவர்சரதமீதம்மா. (௩௧)

சுருதிவேதியர்கேட்டனரெனிற்பவந்தொலைத்துச்
சுருபநிச்சயமுணர்குவர்சுடர்மணிமௌலி
நிருபர்கேட்டிடினீண்முனைமாற்றலர்கடந்து
பொருவிலாதுலகாண்டபின்புகுவர்நற்கதியே. (௩௨)

இன்னவான்கதையேனையோர்கேட்கினற்றிருவும்
பன்னுமாயுவும்விஞ்சையும்புதல்வரும்பாரிற்
றன்னுசிர்த்தியுந்தேசுமுண்டாவரித்தூய்மை
பன்னுமிக்கதைபடித்தவர்க்கெய்துமப்பரிசே. (௩௩)

கன்னிபாரதங்கேட்கினற்காதலனடுப்பான்
மன்னுவந்தியர்கேட்கினன்மகன்றனையுயிர்ப்பார்
மின்னனாரிதுகேட்கினற்சுமங்கலமிகுவர்
துன்னுகைம்மையர்கேட்கினற்கதியினிற்றுணைவார். (௩௪)

வேறு.

எத்தனையெத்தனைசனனத்தியற்றும்பாவமெத்தனையுண்டெனினுமொரு
விருக்கத்துற்ற, மொய்த்தபலபறவையெலாங்கல்லொன்றாலேமுகமாகியகன்
றோடுமுறைமையேபோ, லுத்தமமாம்பாரதங்கேட்டதனாற்றீருமுளத்திலெ
தைக்குறித்தாலும்பொருத்திவிக்கும், சுத்தபவித்திரமாகுமனமுமெல்லாச்சுக
முமவர்க்கலதொன்றாற்சொல்லொணாதே. (௩௫)

வேள்விபுரிசாலைகளிற்கடவுளோர்கள்விழாவினுயர்தென்புலத்தோர்விழை
யச்செய்யும், தாழ்வறுபாங்கரிற்புனிதர்கன்னஞ்சோரத்தவருதிப்பாரதநூற்சா
ற்றுவித்தோர், வாழ்வயருமாயுமிகவிருத்தியாகுமைந்தர்வளஞ்சுரக்குமுடற்
றேசுண்டாகுஞ், சூழ்வினைசேர்பிணிநீங்குமருளுண்டாகுந்துறக்கநாட்டவரிவ
ரைத்துதிசெய்வாரே. (௩௬)

என்றுமகாபாரதத்தினியற்கையெல்லாமெடுத்துரைப்பச்சூதமுனிமுனி
வரேத்தி, யின்றிதுகேட்டுய்ந்தனமென்றெவரும்போற்றியிருக்குமுறையால
வரைப்பூசையாற்றி, யொன்றுபடுசிந்தையுடனிலயத்துய்த்தேயுகந்துபரமான
ந்தமோங்கவோங்கத், துன்றினரைம்புலன்வென்றவிரதசிலர்நைமிசாரணியமெ
னுஞ்சூழலூடு. (௩௭)

இத்தகையபாரதமுன் றமிழ்வெண்பாவாலெடுத்துரைத்தார்பெருந்தேவ ரிதனைவில்லி, புத்தூர்வேதியன்விருத்தமாக்கவுன்னிப்புகன் றனன்மூவாயிரமே ற்பிலகுசெய்யு, ளத்தகையகாப்பியத்தைமறைவியாதனுரருளான்முற்றுமவரி சைத்தவண்ண, முத்தமமாம்வடமொழியைத்தென்சொலாகவுரைத்தனன்மு த்தமிழ்ப்புலவருவகையோங்க. (௩௮)

வடமொழியுந்தென்மொழியும்வல்லோனீ திவகுத்தநூற் றருமநூலிரண் டுந்தேர்ந்தோ, னிடாறுதொல்காப்பியமேமுதலாவுள்ளவிலக்கணமுமிலக்கிய முமெல்லாமாய்ந்தோன், கடனிகராமுதலைபூராளிநல்லகவிராசனுவளர்வெண் கமலமங்கை, புடவியுளஞானமெல்லாந்தழைத்துமேன்மேற்பொலியமகாபார தத்தைப்புகன்றுன்மாதோ. (௩௯)

சீர்பெறுநற்கலைமகடன்னருளாற்செவ்விசெகம்புகழ்பாரதம்வடசொற்ற மிழாற்செப்பக், கார்பிணையாய்வருமுல்லைக்குடையனென்னுங்கருதுபெயர்மு ருகனுயங்கவியுளானை, நாரமர்நல்லயன்றெளிவினயஞ்சல்லாபநடத்தியிதிற்சில தொடைகணவில்வதாக்கி, யேர்பெறச்செய்கவிதைகளுமுடனேகூட்டியியம்பி னுன்முழுதுமெனவிளம்புவாமே. (௪௰)

ஆதலினிப்பாரதமாமைந்தாம்வேதமச்சுதனைப்பச்சைவருணத்தினனை,மா தவனைச்சிதானையரிமுராரிவாரிசநாபனைச்செய்யான்மார்புளானை, யோதருசெ ந்தாமரைசேர்விழியினுனையுரனுடனேதவழ்ந்தானையுன்னிநாளுங், காதலுடன் படித்தோர்கள்செல்வத்தாழ்ந்துகண்ணனிணையடிப்போதிற்கலப்பர்மன்னே.()

செந்தமிழாலெடுத்துரைத்தவைந்தாம்வேதச்செழும்பொருளையன்பினெ டுசிந்தைதேறிக், கந்தனையின் றவனையபிராமிபாதிகலந்தவனைப்பரஞ்சுடரைப் புரங்கண்மூன்று, முந்தைநகையாலெரித்தகடவுடன்னைமுத்தலைவேலெடுத்தா னைமுறையினேத்தி, வந்தனஞ்செய்திருந்திதனைப்படித்தோர்கேட்டோர்வாழ் வுயர்ந்துசிவகதியுமருவுவாரே. (௪௨)

ஞாலமெலாமநுநீதிநடத்தச்செங்கோனரபதியுமவிவேள்விநல்கவிண்ணினி ன், மாலுதவுமாரியினுற்பைங்கூழ்மல்கமறைவிளங்கத்தென்கலையின்வன்மை யோங்கச், சாலவறந்தழைக்கவகமேறவின்பந்தருங்கவிஞர்கிளைமலியத்தவத் தோர்வாழச், சிலமுளவைதிகசைவந்துலங்கச்சிவகதியும்பெறவிந்நூல்செப்பு வோரே. (௪௩)

முத்தியடைந்தசருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௮௬.

ஆ சருக்கம் ௧௩௨-க்குச் செய்யுள்-௧௫௩௦௦.

சொர்க்காரோகணபருவம் முற்றிற்று.

மகாபாரதம் முற்றுப்பெற்றது.

சருக்க அட்டவணை.

சருக்க அட்டவணை முற்றிற்று.